தலைசிறந்த மூன்றாண்டு... தலைநிமிர்ந்த தமிழ்நாடு



மு.க. ஸ்டாலின்
தமிழ்நாடு முதலமைச்சர்

தலைமைச் செயலகம்
சென்னை – 600 009.

21.06.2024

வாழ்த்துச் செய்தி

2021–ஆம் ஆண்டு மே மாதம் தமிழ்நாட்டில் ஆட்சி மாற்றம் நடைபெற்றது. திராவிட முன்னேற்றக் கழகம் ஆறாவது முறையாக ஆட்சியை அமைத்தது. எனது தலைமையிலான அரசை, 'நமது அரசு' என்றே நான் அடையாளப்படுத்தினேன். ஒரு கட்சியின் அரசாக அல்ல, ஒரு இனத்தின் – கொள்கையின் அரசாக வடிவமைத்தேன். 'திராவிட மாடல்' என்று, இந்த ஆட்சி நெறிமுறைக்கு அடையாளச் சொல்லையும் தீட்டினேன். சமூகநீதி – சமத்துவம் – சமதர்மம் – மாநில சுயாட்சி – மொழி உரிமை ஆகிய உன்னதமான கருத்தியல்களை மொத்தமாகக் கொண்டதுதான் திராவிட மாடல் ஆட்சியின் உள்ளடக்கமாகும்.

கடந்த மூன்றாண்டு காலத்தில் நிறைவேற்றப்பட்ட பெரிதும் சிறிதுமான திட்டங்களைத் துறைவாரியாகத் தொகுத்து 400 பக்கங்களுக்கு மேல் தமிழ்நாடு செய்தி மக்கள் தொடர்புத் துறையின்கீழ் செயல்படும் 'தமிழரசு' இதழின் சார்பில் வழங்கி இருக்கிறார்கள். முக்கியமான திட்டங்களை முழுமையாக இல்லாமல், தலைப்புச் செய்தியாகத் தொகுத்து வழங்கி இருக்கிறார்கள். இதனை வரிசையாக வாசித்தால், திராவிடவியல் கோட்பாட்டின் அனைத்து இலக்கணங்களும் அனைத்துத் திட்டங்களிலும் மிளிர்வதை நீங்கள் பார்க்கலாம்.

'எல்லார்க்கும் எல்லாம்' என்ற இலக்கை நோக்கிய பயணத்தில் "மூன்றாண்டு ஆண்டுகளுக்குள் இத்தனை திட்டங்களையா நிறைவேற்றித் தந்திருக்கிறோம்!" என்ற மலைப்பை எனக்கே உருவாக்கியது இந்த தொகுப்பு.

சட்டமன்றத் தேர்தலுக்கு முன்னதாக நாங்கள் தேர்தல் அறிக்கையாகக் கொடுத்த வாக்குறுதிகளில் 90 விழுக்காடு நிறைவேற்றப்பட்டுள்ளது என்பது மட்டுமல்ல, சொல்லாத பல்வேறு திட்டங்கள் செயல்வடிவம் பெற்றுள்ளதையும் நீங்கள் அறிவீர்கள்.

ஒவ்வொரு திட்டமும் எந்தளவுக்கு மக்களுக்குப் பயனுள்ளவையாக அமைந்துள்ளன என்பதை சிறப்புக் கட்டுரைகள் மூலமாகத் தெரிந்து கொள்ளலாம். சிறப்புக் கட்டுரைகளை வழங்கி உள்ள தமிழ்நாடு திட்டக்குழுத் துணைத் தலைவர் பேராசிரியர் ஜெயரஞ்சன், திட்டக்குழு உறுப்பினர் மருத்துவர் எழிலன், இலக்கிய ஆளுமை எஸ்.ராமகிருஷ்ணன்,

பேராசிரியர் ராஜன்குறை, வழக்கறிஞர் அ.அருள்மொழி, கல்வி ஆலோசகர் ஜெயப்பிரகாஷ் காந்தி, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி செயற்குழு உறுப்பினர் தோழர் கனகராஜ், பத்திரிகையாளர்கள் திலீப் மண்டல், சங்கீதா கந்தவேல், டி.அருள் எழிலன் ஆகிய அனைவருக்கும் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த பத்துக் கட்டுரைகளும் மூன்றாண்டு கால ஆட்சியின் மொத்தப் படப்பிடிப்புகளாக அமைந்துள்ளன.

சிறப்புக் கட்டுரைகள், திட்டங்களின் தொகுப்புகள் ஆகியவை அடங்கிய அழகிய ஆவணமாகத் தொகுத்து வழங்கிய செய்தி மற்றும் மக்கள் தொடர்புத் துறை அமைச்சர் மு.பெ.சுவாமிநாதன் அவர்களைப் பாராட்டுகிறேன்.

செய்தி மக்கள் தொடர்புத் துறையின் இயக்குநர் இரா.வைத்திநாதன் இ.ஆ.ப., அவர்களுக்கும், தமிழரசு நிர்வாக ஆசிரியர் அண்ணா அவர்களுக்கும், ஆசிரியர் குழுவுக்கும், இம்மலர்க் குழுவுக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

விடியும் ஒவ்வொரு நாளும் புதுப்புது திட்டங்களின் விடியலாக அமைந்திருப்பதால்தான் இது 'விடியல் ஆட்சி'யாக அமைந்துள்ளது. திட்டங்களின் எண்ணிக்கை ஆயிரக்கணக்கில் இருக்கலாம். ஆனால் பயனடைந்தவர் எண்ணிக்கை கோடிக் கணக்கில் என்பதால் இவை அனைத்தும் கோடிக்கணக்கான மக்களின் வாழ்வைப் பாதுகாத்து வருகின்றன. இன்னும் பல திட்டங்கள் அடுத்தடுத்த ஆண்டுகளில் வர இருக்கின்றன. பல திட்டங்களை உருவாக்கும் ஆர்வத்தைத் தூண்டிவிடும் தொகுப்பாகவும் இந்தச் சாதனை மலர் அமைந்துள்ளது.

மாநிலம் பயனுற நல்லாட்சி நான்காவது ஆண்டிலும் தொடர்கிறது.

அன்புடன்,



(மு.க.ஸ்டாலின்)

மு.பெ. சாமிநாதன்
தமிழ் வளர்ச்சி மற்றும்
செய்தித் துறை அமைச்சர்

தலைமைச் செயலகம்,
சென்னை-600 009

நுழைவாயில்

கல்வி அறிவும், சுயமரியாதை எண்ணமும்,
பகுத்தறிவுத் தன்மையுமே தாழ்ந்து கிடக்கும் மக்களை உயர்த்தும்
– என்றார் தந்தை பெரியார் அவர்கள்

மக்களிடம் செல், மக்களோடு சேர்ந்து வாழ், மக்களுக்கு பணியாற்று,
மக்களுக்காக திட்டங்களைத் தீட்டு
– என்றார் பேரறிஞர் அண்ணா அவர்கள்

உழைப்பே வெற்றிக்கு வித்து, வியர்வையே வெற்றியின் அடையாளம்,
உன்திறமையே உன் கழுத்தில் வீற்றிருக்கும் வாகை மாலை
– என்றார் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள்

மக்களுக்கான இரக்க சிந்தனை, அறிவாற்றல், திறமையுடன் கூடிய கடின உழைப்பு ஆகிய நற்பண்புகளைப் பெற்று தனது ஆற்றல் மிகுந்த நிருவாகத் திறமையினால் ஏழை, எளிய மக்களுக்காக எண்ணற்ற பல புதிய திட்டங்களைத் தீட்டி இடைவிடாது செயல்படுத்தி வரும் மனிதநேயப் பண்பாளர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான அரசு, மூன்று ஆண்டுகளில் தமிழ்நாட்டு மக்களுக்காக படைத்த பல புரட்சிகரமான திட்டங்களை தொகுத்து "மூன்றாண்டு சாதனை" மலரினை தயாரித்து உங்கள் கரங்களில் தவழவிட்டுள்ளது.

உலகமே வியந்து பாராட்டும் வகையில், வரலாற்றில் இதுவரை கண்டிராத திட்டங்களை வாரி வழங்கும் "திராவிட மாடல்" ஆட்சியானது பார் போற்றும் கலைஞர் மகளிர் திட்டம், முதலமைச்சரின் காலை உணவுத்திட்டம், மக்களுடன் முதல்வர் திட்டம், புதுமைப்பெண் திட்டம், நான் முதல்வன் திட்டம், மக்களைத்தேடி மருத்துவம் திட்டம், இல்லம் தேடி கல்வித் திட்டம் என தொழிலாளர்கள், உழவர்கள், ஏழை, எளிய, நடுத்தர மக்கள், மகளிர், மாற்றுத்திறனாளி, இளைஞர்கள், மாணவ, மாணவியர்கள் என அனைத்துப் பிரிவினருக்குமான மக்கள் நலத்திட்டங்களை அறிவித்து பயன்பெற வேண்டிய பயனாளிகள் இந்த நலத்திட்டங்களை பெற்று மகிழ்ச்சியுடன் வாழ்வதற்கு ஒரு உகந்த சூழ்நிலையை உருவாக்கி தந்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுடைய அரசின் மூன்றாண்டு சாதனைகளை மக்களுக்கு எடுத்துச் சொல்லும் இம்மலரினை உங்கள் முன் படைத்திருக்கிறது.

மு.பெ. சாமிநாதன்
தமிழ் வளர்ச்சி மற்றும்
செய்தித் துறை அமைச்சர்

தலைமைச் செயலகம்,
சென்னை-600 009

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பொறுப்பேற்ற நாளிலிருந்து செயல்படுத்தப்பட்ட மக்கள் நலத்திட்டங்களை 'தமிழரசு' அச்சகத்தின் சார்பாக தொகுத்து "தலை நிமிரும் தமிழகம் – நூற்றாண்டின் திசையில் நூறு நாட்கள்" என்ற நூறு நாட்கள் சாதனை மலர், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சட்டமன்றப் பேரவையில் ஆற்றிய உரைகள், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பல்வேறு நிகழ்ச்சிகளில் ஆற்றிய உரைகள், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சட்டமன்றப் பேரவையில் விதி 110-ன் கீழ் அறிவித்த அறிவிப்புகள், "நிறைவான வளர்ச்சியில் நிலையான பயணம்" என்ற ஓராண்டு சாதனை மலர், "கடைக்கோடி தமிழரின் கனவுகளைத் தாங்கி" என்ற காலப்பேழை, அறிஞர் ஆளுமைகள் பார்வையில் திராவிட மாடல் அரசு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் பொன்மொழிகள்,

மேலும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் வெளியிடப்பட்ட சிறப்பு மலர்களான 1) தமிழ்நாடு நாள் ஜீலை-18, 2) நூற்றாண்டு கண்ட கல்விப் புரட்சி, 3) வ.உ.சி. 150 பிறந்த ஆண்டு சிறப்பு மலர், 4) பாரதி நினைவு நூற்றாண்டு சிறப்பு மலர், 5) இலக்கிய மலர், 6) விடுதலைப் போராட்டத்தில் தமிழ்நாட்டின் பங்களிப்பு, 7) வைக்கம் போராட்டம் நூற்றாண்டு மலர், 8) இதழாளர் கலைஞர் போன்ற சிறப்பு மலர்கள் ஆகிய 38 சிறப்பு வெளியீடுகள் செய்தி மக்கள் தொடர்புத்துறையின் "தமிழரசு" அச்சகத்தின் சார்பில் தயாரிக்கப்பட்டு மக்களுக்கு கொண்டு சேர்க்கும் பணியினை திறம்பட ஆற்றிவரும் 'தமிழரசு' மாத இதழானது கடந்த 2021-ஆம் ஆண்டு வரை முப்பதாயிரத்திற்கும் கீழ் இருந்த சந்தாதாரர்களின் எண்ணிக்கையினை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையின் கீழ் தற்பொழுது ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்ட சந்தாதாரர்களை உயர்த்தி தமிழரசின் தரம் மேம்படுத்தப்பட்டுள்ளது.

அவ்வகையில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான அரசு பொறுப்பேற்று மூன்றாண்டு நிறைவடைந்ததையொட்டி செய்தி மக்கள் தொடர்புத் துறை தமிழரசு அச்சகத்தின் வாயிலாக படைக்கப்பட்டிருக்கும் இந்த "மூன்றாண்டுச் சாதனை மலரினை" கடைகோடி மக்களும் படித்து பயன்பெற அன்புடன் வேண்டுகிறேன்.

நன்றி! வணக்கம்.

அன்புடன்

22/5/24.

(மு.பெ.சாமிநாதன்)

சிவ் தாஸ் மீனா
தலைமைச் செயலாளர்

தலைமைச் செயலகம்,
சென்னை–600 009.

வாழ்த்துரை

ஏழை, எளிய, விளிம்பு நிலை மக்களின் வாழ்க்கையில் ஏற்றங்களைக் கொண்டு வரும் உயரிய நோக்கில், தமிழ்நாடு அரசு நல்ல பல திட்டங்களை நாளும் திறம்படச் செயல்படுத்தி வருகிறது. கடந்த மூன்றாண்டுகளில் அனைவருக்குமான வளர்ச்சி, சமூக மேம்பாடு, தொழில் வளர்ச்சி, மக்கள் நலத் திட்டங்கள் எனப் பல்வேறு கோட்பாடுகளை வெளியிட்டு மக்களுக்குப் பணியாற்றுகிற மகத்தான அரசாகத் தொடர்ந்து செயல்பட்டு வருகிறது.

வெளியிடப்பட்ட அறிவிப்புகளையும், சீர்மிகு திட்டங்களையும், அவற்றை மக்களுக்குக் கொண்டுசேர்க்கும் வண்ணம் செயல்படுத்திய சிறப்பான முறைகளையும் தொகுத்துப் பாதுகாப்பது மிகுந்த அவசியமான ஒன்றாகும்.

"எல்லோர்க்கும் எல்லாம் என்றிருப்ப தான
இடம்நோக்கி நடக்கின்ற திந்த வையம்"

- எனப் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்கள் பாடிய வழியில் சென்று பொற்காலத்தை உருவாக்கிவரும் தமிழ்நாடு அரசு கடந்த மூன்று ஆண்டுகளாக நிறைவேற்றியுள்ள நலத்திட்டங்களைத் தொகுத்து **மூன்றாண்டு சாதனை மலராக** வழங்கியுள்ளது.

இச்சாதனை மலரினைத் தொகுத்து வெளியிட்ட செய்தி – மக்கள் தொடர்புத்துறை அலுவலர்களுக்கும், **"தமிழரசு"** அச்சகத்தின் அலுவலர்களுக்கும் என்னுடைய மனமார்ந்த நல்வாழ்த்துகளையும் பாராட்டுகளையும் தெரிவித்து மகிழ்கிறேன்.

சிவ் தாஸ் மீனா

தொலைபேசி: 044–25671555 நிகரி: 044–25672304 மின்அஞ்சல்: cs@tn.gov.in

வே. ராஜாராமன், இ.ஆ.ப.,
அரசுச் செயலாளர்

தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை,
தலைமைச் செயலகம்,
சென்னை – 600 009.

வாழ்த்துச் செய்தி

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அனைத்து வளமும் நலமும் கொண்ட தமிழ்நாட்டை உருவாக்கிடும் உன்னதமான எண்ணங்களுடன் தன்னிகரற்ற பல திட்டங்களை ஒவ்வொரு துறையிலும் உருவாக்கி நிறைவேற்றி வருகிறார்கள். இத்திட்டங்கள் வாயிலாக தமிழ்நாடு இந்தியாவில் முன்னணி மாநிலம் எனப் போற்றப்படும் வகையில் நிறைவேற்றியுள்ள மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான தமிழ்நாடு அரசின் புகழ்பாடும் திட்டங்கள் குறித்த விவரங்களைத் துறைவாரியாக தொகுத்து மூன்றாண்டு சாதனை மலர் ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது கண்டு பெரிதும் மகிழ்கிறேன்.

"உறுபசியும் ஓவாப் பிணியும் செறுபகையும்

சேரா தியல்வது நாடு." – (குறள் 734)

என்னும் உலகப் பொதுமறை திருக்குறளின் வரிகளுக்கேற்ப ஏழை,எளிய மக்களின் நலம் ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு, அரசுப் பொருளாதாரத்துடன் தனிமனிதப் பொருளாதாரமும் தன்னிறைவு பெற்றதாக வளர வேண்டும். நம்முடைய தமிழ்ச் சமூகமானது சிந்தனையால், செயல்பாட்டால், பண்பாட்டால், பழக்கவழக்கங்களால் உயர்வடைய வேண்டும். ஏற்றத் தாழ்வற்ற ஒரு மனித உரிமைச் சமூகமாகத் தமிழ்ச் சமுதாயம் உயர வேண்டும் என்ற உயரிய எண்ணங்களுடன் தன் சிந்தையில் உருவான திட்டங்களை மக்களுக்கு எளிதில் கொண்டுசேர்த்து, அவர்கள் அடையும் நன்மைகளைப் பார்த்துப் பூரிப்படைபவராக நமது மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திகழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் திட்டங்களையெல்லாம் தொகுத்து "மூன்றாண்டு சாதனை மலர்" ஒன்றினை உருவாக்கித் தந்திருக்கும் மாநில அரசின் செய்தித்துறை அலுவலர்களுக்கு எனது பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த மூன்றாண்டு சாதனை மலரினை மக்கள் அனைவரும் தவறாது படித்துப் பயன்பெற வேண்டுகிறேன்.

(வே.ராஜாராமன்)

தொலைபேசி : 044–25672887, நிகரி : 044–25672021, மின்னஞ்சல் : tdinfosec@tn.gov.in

மரு. இரா. வைத்திநாதன், இ.ஆ.ப.,
இயக்குநர், செய்தி–மக்கள் தொடர்பு மற்றும்
அலுவலால் அரசு துணைச் செயலாளர்

தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை,
நாமக்கல் கவிஞர் மாளிகை (9–வது தளம்)
தலைமைச் செயலகம், சென்னை–600 009.
தொலைபேசி : 044–25671300
நிகரி : 044–25677777
மின்னஞ்சல் : dipr@tn.gov.in

ஆசிரியர் உரை

தமிழ்நாட்டில் வாழும் மக்கள் அனைவர் நலனையும் பாதுகாக்கும் வகையில், அனைத்துத் துறைகளையும் ஒருங்கிணைத்துச் செயல்படுத்தி, சமச்சீரான வளர்ச்சியைச் சாதித்துக் காட்டிவரும் **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான அரசு** கடந்த மூன்றாண்டுகளாக நடைமுறைப்படுத்திவரும் பல்வேறு திட்டங்களின் சாதனைகளைத் தொகுத்து, **"மூன்றாண்டு சாதனை மலரினை"** "தமிழரசு" அச்சகத்தின் வாயிலாகச் செய்தி மற்றும் மக்கள் தொடர்புத்துறை வெளியிடுவது கண்டு மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

"கொடையளி செங்கோல் குடியோம்பல் நான்கும்
உடையானாம் வேந்தர்க் கொளி".

- என்னும் வான்புகழ் வள்ளுவன் சுற்றின்படி, மக்கள் நலன் வேண்டி அவர்களின் தேவை மற்றும் நிலையுணர்ந்து எண்ணற்ற மக்கள் நலத் திட்டங்களால் அவர்களைப் பேணிப் பாதுகாத்து மக்கள் நெஞ்சங்களில் நீக்கமற நிறைந்து நிற்கும் தன்னிகரில்லா முதல்வராகத் திகழ்கிறார் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள்.

நாட்டின் கடைக்கோடி மக்களும் பயன்பெற வேண்டும் எனும் உயரிய குறிக்கோளுடன் நடத்தப்பட்டு வருகின்ற இந்த ஆட்சியின் நாடு போற்றும் கடல் போல் விரிந்த நலத்திட்டங்களை மக்களிடம் கொண்டு சேர்க்கும் வகையில், செய்தித்துறை அனைத்துத் துறைகளின் சாதனைகளையும் தொகுத்து ஒரு வரலாற்றுப் பேழையாக இம்மலரைத் தயாரித்துள்ளது பாராட்டுக்குரியது.

வருங்கால வரலாற்றில் நினைவுகூறப்படும் வகையில் தமிழ்நாடு சார்பில் இம்மூன்றாண்டுச் சாதனை மலரினைத் தொகுத்து வழங்கும் பணிகளில் அர்ப்பணிப்போடு ஈடுபட்டுள்ள அனைத்துச் செய்தித்துறை அலுவலர்களுக்கும் எனது பாராட்டுகளைக்கூறி வாழ்த்துகிறேன்..

அன்புடன்,

(மரு.இரா.வைத்திநாதன்).

கட்டுரைகள்

★ தமிழ்நாட்டின் நலன்கள் உறுதி செய்யப்பட்டுவிட்டது!.....14
கோபாலகிருஷ்ண காந்தி, மேற்குவங்க முன்னாள் ஆளுநர்

★ விடியல் பயணம் : ஒரு சமூக நீதித் திட்டம்.....18
ஜெ ஜெயரஞ்சன், தமிழ்நாடு திட்டக்குழு துணைத்தலைவர்

★ திராவிட மாடல் தத்துவமும், தனித்துவமும்.....22
மருத்துவர் எழிலன் நாகநாதன், ஆயிரம் விளக்கு சட்டமன்ற உறுப்பினர்
மாநில திட்டக்குழு உறுப்பினர்

★ அறிவுசார் அடையாளங்கள்.....28
எழுத்தாளர் ராமகிருஷ்ணன்

★ மூன்றாண்டுக் காலத்தில் முதன்மை சாதனைகள்.....32
பேராசிரியர் ராஜன் குறை

★ "வினைத்திட்பம்" கொண்ட முதலமைச்சர் 36
வழக்கறிஞர் அ. அருள்மொழி

★ கல்விக் கட்டமைப்பில் உயரம் தொட்ட முதலமைச்சர்.....42
ஜெயபிரகாஷ் காந்தி, கல்வி ஆலோசகர்

★ முற்றுகைக்கு மத்தியிலும் மூன்றாண்டு சாதனைகள்.....46
க. கனகராஜ், மாநில செயற்குழு உறுப்பினர்
இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்)

★ ஒருங்கிணைந்த வளர்ச்சியும் சமூக நீதியும்:
தமிழ்நாட்டின் திராவிட மாடல்!.....50
திலீப் மண்டல், பத்திரிகையாளர்

★ பெண்களுக்கான மேம்பாட்டுக்கு
வழிகோலும் திராவிட மாடல்! 56
சங்கீதா கந்தவேல், பத்திரிகையாளர்

★ தமிழ்நாட்டை பின்தொடரும் இந்தியா.....60
அருள் எழிலன், பத்திரிகையாளர்

❖ ❖ ❖

தமிழரசு

தமிழ்நாடு அரசு
செய்தித்துறையின் வெளியீடு

திருவள்ளுவர் ஆண்டு 2055
குரோதி வருடம் – ஆடி – ஆவணி
ஆகஸ்ட் 2024
தலைசிறந்தமூன்றாண்டு!தலைநிமிர்ந்ததமிழ்நாடு!
மூன்றாண்டு சாதனை மலர்
சிறப்பு வெளியீடு
(07.05.2021 முதல் 31.07.2024 வரை)

ஆசிரியர் - வெளியிடுபவர்
மரு. **இரா. வைத்திநாதன், இ.ஆ.ப.,**
இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்பு மற்றும்
அலுவலால் அரசு துணைச் செயலாளர்

நிருவாக ஆசிரியர்
இரா. அண்ணா
இணை இயக்குநர் (வெளியீடுகள்)

முதன்மைப் பொறுப்பாசிரியர்
க.அ. முகம்மது ரசூல்
உதவி இயக்குநர்

பொறுப்பாசிரியர்கள்
எஸ். உதயா கதிரவன்
ப. கருணாகரன்
ச. மஞ்சுளா
செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்கள்

உதவி ஆசிரியர்கள்
மு. மணிமேகலை
சி. சுஜிதா
இரா. பாலாஜி
கு. சுபாஷ்
நிருபர்கள்
எஸ்.ஆர்.எஸ்.ஸ்ரீந்தர்
ஜெ.ஜெயசிம்ஹன்

ஓவியர்
இரா. உமாமகேஸ்வரி

இதழ் உதவியாளர்
நி. ஷீலா

கணினி வடிவமைப்பு
தி. ஜெய்சங்கர்
க.இரா. உமாமகேஸ்வரி

முதுநிலை அச்சுப்பிழைத் திருத்துபவர்
கோ. சந்திரசேகர்

தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
தமிழரசு அலுவலகம்,
எண்.5, இராஜீவ் காந்தி சாலை,
கானகம், தரமணி, சென்னை–600 113.
தொலைபேசி : 22542221/22542224
மின்னஞ்சல் : ddpub.tamilarasu@tn.gov.in
இணையதளம் : www.tndipr.gov.in

தமிழரசு இதழுக்கு
www.tamilarasu.org என்ற இணையதளத்தில்
சந்தாதொகையினைநேரடியாகச்செலுத்தலாம்.



"அரசைத்தேடிமக்கள்வந்தகாலம்இருந்தது, இப்போது அதை மாற்றி, மக்களைத்தேடி அரசு செல்லும் காலமாக இந்த ஆட்சி உருவாக்கி இருக்கிறது."

மு.க.ஸ்டாலின்
மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்

மூன்றாண்டில் துறைவாரியான சாதனைகள்...

1. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்.....69

2. மாண்புமிகு நீர்வளத்துறை அமைச்சர்
திரு. துரைமுருகன் அவர்கள்.....81

3. மாண்புமிகு நகராட்சி நிருவாகத்துறை அமைச்சர்
திரு. கே.என்.நேரு அவர்கள்.....95

4. மாண்புமிகு ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர்
திரு. இ.பெரியசாமி அவர்கள்.....123

5. மாண்புமிகு உயர்கல்வித்துறை அமைச்சர்
முனைவர் க.பொன்முடி அவர்கள்.....133

6. மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர்
திரு. எ.வ.வேலு அவர்கள்.....137

7. மாண்புமிகு வேளாண்மை - உழவர் நலத்துறை அமைச்சர்
திரு. எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் அவர்கள்.....165

8. மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர்
திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன் அவர்கள்.....193

9. மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர்
திரு. தங்கம் தென்னரசு அவர்கள்.....209

10. மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர்
திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள்.....243

11. மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர்
திரு. எஸ்.ரகுபதி அவர்கள் 259

12. மாண்புமிகு வீட்டுவசதி மற்றும்
நகர்ப்புர வளர்ச்சித்துறை அமைச்சர்
திரு. சு.முத்துசாமி அவர்கள் 265

13. மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர்
திரு. கே.ஆர்.பெரியகருப்பன் அவர்கள் 267

14. மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத்தொழில்
நிறுவனங்கள் துறை அமைச்சர்
திரு. தா.மோ.அன்பரசன் அவர்கள் 275

15. மாண்புமிகு தமிழ் வளர்ச்சி மற்றும்
செய்தித்துறை அமைச்சர்
திரு. மு.பெ.சாமிநாதன் அவர்கள் 281

16. மாண்புமிகு சமூக நலன் மற்றும்
மகளிர் உரிமைத்துறை அமைச்சர்
திருமதி பி.கீதா ஜீவன் அவர்கள் 337

17. மாண்புமிகு மீன்வளம் - மீனவர் நலத்துறை மற்றும்
கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர்
திரு. அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன்
அவர்கள் 347

18. மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர்
நலத்துறை அமைச்சர்
திரு. ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன்
அவர்கள் 367

19. மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர்
திரு. கா.ராமச்சந்திரன் அவர்கள் 373

20. மாண்புமிகு உணவு மற்றும்
உணவுப்பொருள் வழங்கல்துறை அமைச்சர்
திரு. அர.சக்கரபாணி அவர்கள் 381

21. மாண்புமிகு கைத்தறி மற்றும்
துணிநூல்துறை அமைச்சர்
திரு. ஆர்.காந்தி அவர்கள் 389

22. மாண்புமிகு மருத்துவம் மற்றும்
மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்
திரு. மா.சுப்பிரமணியன் அவர்கள் 401

23. மாண்புமிகு வணிகவரி மற்றும்
பதிவுத்துறை அமைச்சர்
திரு. பி.மூர்த்தி அவர்கள் 429

24. மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர்
திரு. எஸ்.எஸ்.சிவசங்கர் அவர்கள் 435

25. மாண்புமிகு இந்து சமயம் மற்றும்
அறநிலையத்துறை அமைச்சர்
திரு. பி.கே.சேகர்பாபு அவர்கள் 447

26. மாண்புமிகு தகவல் தொழில்நுட்பவியல்
மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர்
முனைவர் பழனிவேல் தியாக ராஜன்
அவர்கள் 455

27. மாண்புமிகு சிறுபான்மையினர் நலன் மற்றும்
வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர்
திரு. செஞ்சி கே.எஸ்.மஸ்தான்
அவர்கள் 469

28. மாண்புமிகு பள்ளிக்கல்வித்துறை அமைச்சர்
திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி
அவர்கள் 481

29. மாண்புமிகு சுற்றுச்சூழல் மற்றும்
காலநிலை மாற்றத்துறை அமைச்சர்
திரு. சிவ.வீ.மெய்யநாதன் அவர்கள் 491

30. மாண்புமிகு தொழிலாளர் நலன் மற்றும்
திறன் மேம்பாட்டுத்துறை அமைச்சர்
திரு. சி.வி.கணேசன் அவர்கள் 499

31. மாண்புமிகு பால்வளத்துறை அமைச்சர்
திரு. த.மனோ தங்கராஜ் அவர்கள் 503

32. மாண்புமிகு தொழில்துறை அமைச்சர்
முனைவர் டி.ஆர்.பி.ராஜா அவர்கள் 507

33. மாண்புமிகு வனத்துறை அமைச்சர்
டாக்டர் மா.மதிவேந்தன் அவர்கள் 513

34. மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர்
திருமதி என்.கயல்விழி செல்வராஜ்
அவர்கள் 517


முதலமைச்சர்

மூன்றாண்டு சாதனை மலர்

சிறப்புக் கட்டுரைகள்



தமிழ்நாட்டின் நலன்கள் உறுதி செய்யப்பட்டுவிட்டது!



கோபாலகிருஷ்ண காந்தி
மேற்கு வங்க முன்னாள் ஆளுநர்

சென்னை கலைவாணர் அரங்கத்தில் 02.06.2023 அன்று நடைபெற்ற முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழா இலச்சினையை வெளியிடும் நிகழ்ச்சியில் மேற்கு வங்க முன்னாள் ஆளுநர் கோபாலகிருஷ்ண காந்தி அவர்கள் ஆற்றிய உரை:

"பேரன்களுக்கு பெயர் உண்டு. அந்தப் பெயரை காப்பாற்றுகிற வேலையே மிகவும் பெரிய வேலை. அதை நான் முயற்சி செய்யவில்லை. காந்தி என்ற பெயர் எனக்கு வந்தது ஒரு விபத்து என்றே நான் குறிப்பிட்டாக வேண்டும். உண்மையில் நான் காந்தியவாதி என்று யாரும் கருத வேண்டாம். நான் இந்தியாவில் வசிக்கும் அதன் சாதாரணமான குடிமகன் மட்டுமே.



நம்முடைய முத்தமிழறிஞர் கலைஞரின் புதல்வர், நமது தமிழ்நாட்டின் முதல்வர், அடக்கமும் அமைதியும் உருவான அவர், இந்த ஒரு நிகழ்வில் ஒரு பதக்கத்தைப் போல் அமர்ந்துள்ளார் மு.க.ஸ்டாலின் அவர்கள்.

இந்த இந்திய அமைப்பு, அரசு செயல்பாடு ஆகும். அரசியல் செயல்பாடு அல்ல. அதனால்தான் நான் நினைக்கிறேன் நம்முடைய முதல்வர் பல பட்டியல்களை எல்லாம் பார்த்து பல யோசனைகளை எல்லாம் கேட்டு என்னைப் போல் அரசியலில் ஆனா, ஆவன்னா தெரியாத ஒருவனை இங்கு கூப்பிட்டிருக்கார்.

தலைமைச் செயலாளர் அவர்கள் சொல்லும் போது, அவர் பணியில் இணைந்த போது கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்தார். அப்போது இன்றைய முதலமைச்சர் அவர்களுக்கு 15 வயது. இன்று கலைஞர் அவர்களுக்கு நூற்றாண்டு விழா. இப்போது அவர் முதலமைச்சர். அந்த வகையில் இந்த விழாவில் கலந்து கொள்ள முதலமைச்சர் அவர்கள் எனக்கு அழைப்பு விடுத்ததை நான் பெருமையாக கருதுகிறேன்.

பொதுவாழ்வில் கலைஞர் அவர்கள் பக்குவத்தின் அடையாளமாகவே திகழ்ந்தார். இங்கு பல்வேறு காவல்துறை அதிகாரிகளும் அரசு நிர்வாகத்தில் உள்ள அதிகாரிகளும் பல்வேறு உயர் அலுவலர்களும் இந்த விழாவில் கலந்து கொண்டிருக்கிறார்கள். ஆட்சி நிர்வாகத்தில் கலைஞர் அவர்கள் நிதானம், சமநிலை, எதிலும் ஒரு வரையறை வகுத்துக் கொண்டு, எப்போது என்ன செய்ய வேண்டும், எப்போது என்ன செய்யக் கூடாது என்ற அளவுகோலை நிர்ண



யித்து நிர்வாகப் பணிகளை மேற்கொண்டார். அது எப்படி..? ஏன்...? அவருக்கு அப்படிப்பட்ட மனச்சமநிலை எப்படி எங்கிருந்து வந்தது?

கலைஞர் அவர்கள் திறமையான அரசியல்வாதி மட்டுமல்ல, மாபெரும் நிர்வாகியாகவும் இருந்தார். அந்த வகையில் இங்கே உள்ள இளம் தலைமுறை அமைச்சர்களுக்கு குறிப்பாக மேடையில் அமர்ந்துள்ள அவரது பேரனுக்கு குறிப்பாக நான் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். அரசியல்வாதி என்ற அவருக்குள் தேர்ந்த நிர்வாகி என்பவரும் இருந்தார். அதையும் கடந்து அவர் ராஜதந்திரியாகவும் இருந்தார். அதுவும் மிகச்சிறந்த ராஜதந்திரியாக இருந்தார். அந்த ராஜதந்திர இயல்பை அதை ஒரு மகளாக தன் தந்தையின் இயல்பை அறிய முடியும். அம்மா, அப்பா ஆகியோரை மகள்கள் தங்களுக்கான சிறப்பு வழியில் அறிந்து கொள்கிறார்கள். அவர் மாபெரும் கலைஞர். நிர்வாக திறமை அறிந்த கலைஞர். கலைஞர் என்பதற்கு என்ன அர்த்தம்..? முதலில் சொன்னதையே மீண்டும் சொல்கிறேன். அதாவது, அளவு, பகுத்தறிவு, நுணுக்கம் ஆகியவையே கலைஞர் என்பதற்கான அர்த்தம். இங்கு உள்ள யாராலுமே அதை புரிந்து கொள்ள இயலாது என்பதை நான் இங்கு குறிப்பிட்டாக வேண்டும்.

ஒரு சாதாரண இந்திய குடிமகனாக இந்தியாவின் தலையெழுத்தை நிர்மாணிக்கும் அந்த உந்து சக்தியிடம் நான் வேண்டுகிறேன். உங்கள் பொதுவாழ்க்கையில் நலம் பெற வேண்டும். இன்னும் ஒரு சில வார்த்தைகளை பேசிவிட்டு எனது உரையை நான் நிறைவு செய்ய விரும்புகிறேன். அதற்காக முதலமைச்சர் எனக்கு 5 நிமிடம் கால அவகாசம் அளிக்க வேண்டுகிறேன். மக்கள் அளித்திருக்கும் வாக்கு கடமையை ஆற்றுவதற்கே அன்றி அதிகாரத்தை பகட்டுக்காட்சிப்பொருளாக ஆக்குவதற்கு அல்ல. ஆட்சியில் இருக்கும் ஒவ்வொரு நொடியும் புனிதமான நேரம் என்று நினைக்க வேண்டும்.

நான் ஏற்கனவே சொன்னதையொட்டி இன்னொன்றையும் சொல்கிறேன். முன்னாள் ஆளுநர் என்று சொன்னார்கள். முன்னாள் அதிகாரி நான். அரசியல் பற்றி எனக்கு ஒன்றே ஒன்றுதான் தெரியும். அதாவது இருவகையான அரசியல்வாதிகள் இருக்கிறார்கள். யோசித்து பேசுகிறவர்கள். பேசிய பிறகு யோசிக்கிறவர்கள். எனக்கு அப்படிப்பட்ட நெருக்கடிகள் எதுவும் இல்லை. ஆனால், பொதுவாழ்க்கையில் நோயாக உள்ள ஊழல் பற்றி இங்கு சொல்ல வேண்டும். ஊழல் என்றால் அது ஊழல்தான். அதை யார் செய்தார்கள் என்று பார்க்காமல் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அதேபோல வன்முறை என்றால் வன்முறைதான். அதில் யார் ஈடுபட்டாலும் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். ஒன்று தீவிரவாதம்.



மற்றொன்று பெண்களுக்கு எதிரானது. மூன்றாவது குழந்தைகளுக்கு எதிரானது. இந்த மூன்றையும் எவ்வித பாரபட்சமும் காட்டாமல் ஒடுக்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும். அதுதான் கலைஞர் வழியிலான நிர்வாக நெறிமுறையாகும். அந்த ஆட்சி நெறிமுறையைத்தான் இன்றைய முதலமைச்சர் அவர்களும் கடைபிடித்து இன்றைய ஆட்சியை நடத்தி வருகிறார்.

அரசியல் அமைப்பு என்பது நமக்கு வழிகாட்டும் விளக்கு. இருந்தாலும் சில சமயங்களில் அது மூடப்பட்டு விடுகிறது. உதாரணம், 1975 முதல் 1977. அந்த மாதிரி நேரங்களில் அந்த அமைப்பு படபடத்து பதுங்குகிறது. மூச்சு திணறுகிறது. ஆனால், நமது அரசியல் நிர்ணய சபையால் ஏற்றப்பட்ட தீபம், நித்ய விளக்கு என்பதில் நாம் உறுதியாக இருக்க வேண்டும். நித்ய விளக்கு அது. அதை நமது முதலமைச்சர் நன்றாக அறிவார். ஏனென்றால் அந்த பாரம்பரியம் அவரது ரத்தத்திலேயே இருக்கிறது. இந்தியா தனது பாரபட்சமற்ற நீதித்துறை, சிறந்த நிர்வாகிகள், எச்சரிக்கையான எதிர்கட்சி மற்றும் விழிப்புடன் கூடிய பொதுமக்கள் துணையுடன் அந்த பாரம்பரியத்தை காப்பாற்றிக் கொண்டிருக்கிறது.

பாரபட்சமற்ற நீதித்துறை, சிறந்த நிர்வாகிகள், விழிப்புணர்வுகொண்ட எதிர்க்கட்சிகள் ஆகிய நிலைகளில் தமிழ்நாடு முன்னேறியுள்ளது. அவ்வகையில் கலைஞர் அவர்கள் தனிப்பட்ட முன்னுதாரணமாக இருக்கிறார். அதற்கும் அசராத கவலை கொள்ளாத தலைவர் அவர். கடமை, கண்ணியம், கட்டுப்பாடு ஆகிய விழுமியங்களே அவருக்கு மிக முக்கியம். அவ்வகையில் பெருந்தலைவர் காமராஜர், அவருக்கு முன்னால் ஓமந்தூரார் மற்றும் ராஜாஜி ஆகியோர்களை நான் இங்கு குறிப்பிடும் போது அவர்களுக்கு மதிப்பளித்த கலைஞர் பற்றியும் குறிப்பிட்டாக வேண்டும்.

நமது முதலமைச்சர் அவர்கள் ஓர் லட்சியவாதி. அவர், எதிர்கட்சிகளுக்கும் தகுந்த மதிப்பு, முக்கியத்துவம் அளிக்கிறார். அந்த வகையில் எதிர்கட்சிகள் கருத்துகளில் மட்டுமே மாற்றாக இருக்க வேண்டும். எண்ணங்களில் மற்றும் கருத்துகளில் புண்படுத்தும் அர்த்தங்களை வெளிப்படுத்தக்கூடாது. இதை தமிழ்நாட்டில் உள்ள எதிர்க்கட்சிக்கு மட்டும் சொல்லாமல், இந்தியாவில் உள்ள எல்லா எதிர்க்கட்சிகளுக்குமான எனது கருத்தாக முன்வைக்கிறேன். நல்ல நிர்வாகிகள், காவல் துறை அதிகாரிகள் உள்ளதால் நமது தமிழ்நாடு அதிஷ்டம் பெற்றுள்ளது. நிர்வாக மாண்புக்கு விளக்கமாக உள்ள முதல்வர் அவர்களே, உங்கள் தலைமையில் தமிழகத்தின் நலன்கள் உறுதி செய்யப்பட்டு விட்டது.''

★★★

விடியல் பயணம்: ஒரு சமூக நீதித் திட்டம்



ஜெ.ஜெயரஞ்சன்

தமிழ்நாடு திட்டக் குழு துணைத்தலைவர்

திராவிட மாடல் ஆட்சி இது என்று நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தொடர்ந்து எழுதியும் பேசியும் வருவது நாம் அறிந்ததே. கடந்த மூன்றாண்டுகளில் இந்த அரசால் செயல்படுத்தப்பட்ட திட்டங்களை ஆராய்ந்து பார்த்தால் முதலமைச்சரின் இந்த சொல்லாடலின் பின்னிருக்கும் வளர்ச்சி அரசியலின் தன்மை தெளிவாகும்.

திராவிட இயக்கத்தின் நூற்றாண்டு பயணம் என்பது சமத்துவத்திற்கான பயணமாகும். நமது இந்தியச் சமுதாயம் கட்டமைக்கப்பட்டுள்ள முறையென்பது சமத்துவத்திற்கு முற்றிலும் எதிரான அடுக்குமுறையில் இயங்கும் அல்லது இயக்கப்படும் ஓர் அமைப்பாகும். மேலடுக்கில் இருப்போர் பொறுப்புகள் ஏதுமின்றி அனைத்து நலன்களையும் அனுபவிக்கவும் கீழடுக்கிலுள்ளோர் எந்த நலனும் அடையாது அனைத்து பொறுப்புகளையும் சுமக்கும் ஒரு மாபெரும் அவலமே இங்கு நிலவிய சமுதாய அமைப்பு முறை. இதன் அநீதியை எதிர்த்தும் மாற்றவும் தோன்றியதே திராவிட இயக்கம். இந்த இயக்கத்தின் அரசியல் வாரிசாகத் திகழும் இன்றைய





மகளிர் கட்டணமில்லா பேருந்து பயணம் அறிவித்த நாள் : 07.05.2021

நாளொன்றுக்கு கட்டணமில்லா இலவச பயணம் செய்யும் மகளிர் எண்ணிக்கை (சராசரியாக)

37.41 இலட்சம்

கட்டணமில்லா பயணங்கள்
மே 2024 வரை



தமிழ்நாடு அரசின்
கட்டணமில்லா பேருந்து பயண திட்டம்
மகளிர் | திருநங்கைகள் | மாற்றுத்திறனாளிகள்

மாற்றுத்திறனாளிகள் மற்றும்

திருநங்கைகள் உட்பட

மொத்த பயணிகளில் நாளொன்றுக்கு பயணம் செய்யும் மகளிர் (சதவிகிதத்தில்)

அரசு பேருந்துகளில் மகளிர் 445 கோடி

கட்டணமில்லா பயணங்களை மேற்கொண்டுள்ளனர்



65%

தமிழ்நாடு அரசு அதே சமூகநீதிப் பார்வையிலேயே பல புதிய திட்டங்களை செயல்படுத்தி வருகின்றது. மானுட விடுதலை என்பதே இந்நூற்றாண்டுப் பயணத்தின் நோக்கமாக இந்த இயக்கத்திற்கு இருந்து வந்துள்ளது. இப்போதும் அதுவே அடிப்படை அரசியல் செயல்பாடு ஆகும்.

சமூகநீதி என்ற அரசியல் செயல்பாடு கல்வியிலும் வேலை வாய்ப்பிலும் இட ஒதுக்கீடு என்று தான் பலரும் குறுகலாக புரிந்து கொள்கிறார்கள். சமூகநீதி என்ற அரசியல் சமத்துவத்திற்கான அரசியலில். எவ்வகையிலெல்லாம் சமத்துவமின்மை செயல்படுகிறதோ அவற்றை இனம்கண்டு களைவதற்கு முன்னெடுக்கப்படும் திட்டங்கள் அனைத்துமே சமூகநீதிக்கான திட்டங்களே.

இந்தியச் சமூகக் கட்டமைப்பு சமத்துவத்திற்கு எதிரானது என்பதை எடுத்துக் கூறினோம். அதன் ஒரு கூறுதான் ஆண் பெண் என்ற பாலினப் பாகுபாட்டின் வழியாக பெண்கள் சமமற்று நடத்தப்பட்டதும், படுவதுமாகும். சமூகநீதி அரசியலை உயிர் மூச்சாகக் கொண்டு செயல்படும் நமது அரசு செயல்படுத்தியுள்ள "விடியல் பயணம்" எனும் திட்டம் ஆண் பெண் சமத்துவத்தை உருவாக்குவதற்கான ஒரு திட்டமாகும். ஆணும் பெண்ணும் ஏறத்தாழ சம எண்ணிக்கையில் இருந்தாலும் கல்வி மற்றும் வேலைவாய்ப்புகளில்










பெண்கள் பங்குபெறும் எண்ணிக்கை வெகு குறைவாக இருந்து தற்போது சற்று முன்னேற்றம் கண்டுள்ளது. சமுதாயத்தின் அனைத்துப் பகுதி பெண்களும் பயண விடுதலை பெற வேண்டுமாயின் "விடியல் பயணம்" அதனை ஏதுவாக்குகிறது. பெண்கள் வீட்டை விட்டு புறஉலகில் கல்வி கற்கவும், சுய தொழில் புரியவும், ஊதியம் பெறும் வேலைகளை தேடிப் பெறவும் பயணச் செலவு ஒரு தடையாக இருக்கக் கூடாது என்ற சமூகநீதிப் பார்வையினால் விளைந்தது தான் "விடியல் பயணம்" எனும் திட்டம். கோடிக்கணக்கான பெண்கள் கோடிக்கணக்கான பயணங்களை மேற்கொண்டு சமூக/பொருளாதார நடவடிக்கைகளில் தங்கள் பங்களிப்பை உயர்த்தியுள்ளனர். இதன் வழியே புதிய திறப்புகள் சாத்தியமாகின்றன. ஆண்/பெண் இடையே நிலவிய சமத்துவமின்மையை இத்திட்டம் ஓரளவிற்கு களைந்திடும். திராவிட இயக்க சமூகநீதிப் பயணத்தில் விடியல் பயணம் திட்டம் ஒரு மைல்கல் என்பது திண்ணம்.

★★★



திராவிட மாடல் தத்துவமும், தனித்துவமும்



மருத்துவர்
எழிலன் நாகநாதன்,
ஆயிரம்விளக்கு
சட்டமன்ற உறுப்பினர்,
மாநில திட்டக்குழு உறுப்பினர்.

'தமிழ் மானம் காப்போம்' என்கிற முழக்கத்தோடு மக்களை சந்தித்து, அவர்களின் பேராதரவை பெற்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்று மூன்று ஆண்டுகள் நிறைவடைந்துள்ளது.

மக்கள் நல ஆட்சி என்பதற்கு உதாரணமாக, 'திராவிட மாடல்' அரசின் முதல் மூன்று ஆண்டுகள் வரலாற்றில் அழுத்தமான தடங்களை பதித்துள்ளது.

2022–2023 நிதியாண்டில் இந்திய ரிசர்வ் வங்கி, மாநிலங்களின் நிதிநிலை உள்ளிட்ட பல்வேறு காரணிகள் குறித்து விரிவாக ஆய்வு செய்து வெளியிட்ட கையேட்டின் அடிப்படையிலும், தமிழ்நாட்டின் நிதிநிலை அறிக்கைகள் அடிப்படையிலும், தமிழ்நாட்டின் வளர்ச்சி முந்தைய 10 ஆண்டுகளில் இல்லாத அளவிற்கு, 2021க்கு பிறகான மூன்று ஆண்டுகளில் ஏற்பட்டுள்ளது தெளிவாகிறது.

உதாரணமாக தமிழ்நாட்டின் மொத்த மாநில உற்பத்தி அளவு 2017–2018 (14.65 லட்சம் கோடி), 2020–2021 (17.8 லட்சம் கோடி), 2021–2022 (20.71 லட்சம் கோடி), 2022–2023 (23.46 லட்சம் கோடி). அதாவது 2017 முதல் 2021 வரையிலான நான்கு ஆண்டுகளில் 3.23 இலட்சம் கோடி அளவே மாநிலத்தின் உற்பத்தி அளவு உயர்ந்துள்ளது. ஆனால் திராவிட மாடல் அரசில், அதே அளவு வளர்ச்சியை இரண்டு ஆண்டுகளிலேயே எட்டியுள்ளோம்.

கொரோனா காரணமாக பொருளாதாரம் மந்த நிலை நிலவியதால் இந்த மாறுபாடு இருப்பதாக சிலர் கருதலாம். ஆனால் 2011–2012 நிதியாண்டு தொடங்கி, கோவிட் பெருந்தொற்று பொது முடக்கம் ஏற்படும் வரையில் தமிழ்நாட்டின் சராசரி வளர்ச்சி விகிதம் 5.87% மட்டுமே, கோவிட்டுக்கு பின்பு திராவிட மாடல் அரசில் சராசரி வளர்ச்சி வீதம் 8% வரை உயர்ந்துள்ளது.

இதே காலகட்டத்தில் இந்தியாவின் ஒட்டுமொத்த வளர்ச்சியை விட தமிழ்நாட்டின் வளர்ச்சி கூடுதலாக இருந்துள்ளதை புள்ளி விவரங்கள் எடுத்துரைக்கின்றன.

அதேபோல விலைவாசி உயர்வுக்கு அடிப்படையாக உள்ள பண வீக்கம், 2020–2021 நிதி ஆண்டில் தேசிய அளவில் 6.16%, தமிழ்நாட்டில் 7.52% என மோசமான நிலையில் இருந்தது. தற்போது 2022–2023 நிதியாண்டில் தேசிய அளவிலான பணவீக்கம் 6.65%, தமிழ்நாட்டில் தேசிய சராசரிக்கும் குறைவாக 5.96% என குறைந்துள்ளது.

உற்பத்தி, சேவை, கட்டுமானம், விவசாயம் உள்ளிட்ட அனைத்து துறைகளிலும் சமச்சீரான வளர்ச்சியை மூன்று ஆண்டுகளில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் உறுதி செய்துள்ளார்கள்.

வளர்ச்சியும் வளங்களும் ஒரு சிலரிடம் குவியாமல், தமிழ்நாட்டின் அனைத்து தரப்பு மக்களுக்கும் வளர்ச்சியில் பங்கு வழங்கப்பட்டு, பல்வேறு திட்டங்களின் வழியாக வளர்ச்சியின் விளைவுகள் அவர்களுடன் பகிரப்பட்டுள்ளது.

வளர்ச்சியின் விகிதம் அதிகமானதும், பண வீக்கம் குறைந்ததும் தன்னியல்பாக நடந்தவை அல்ல. மாறாக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் சீரிய திட்டங்களின் விளைவால் ஏற்பட்டவை.

உதாரணமாக மகளிர்க்கான கட்டணமில்லா பேருந்து சேவை வழங்கும் விடியல் பயணம் திட்டம்.

ஜூலை 2021ல் இத்திட்டம் தொடங்கப்பட்டது முதல் 2024 மார்ச் 18 வரை ஏறக்குறைய 440 கோடி பயணங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. 2023–2024 நிதியாண்டில் பயண எண்ணிக்கை, குறிப்பாக பெண்களின் எண்ணிக்கை, ஒரு நாளைக்கு சராசரியாக 45 லட்சம் பெண்களில் இருந்து 51 லட்சமாக அதிகரித்துள்ளது. இத்திட்டத்தின் மூலமாக தமிழ்நாட்டு பெண்கள் ஒவ்வொரு மாதமும் சராசரியாக 800 முதல் 1000 ரூபாய் வரை சேமிக்கிறார்கள்.

உலகம் முழுவதும் குறைந்தபட்ச வருவாய் உறுதித் திட்டம் குறித்து நூற்றாண்டுகளாக பேசிக் கொண்டே இருக்கிறார்கள். அவற்றின் சாத்தியங்கள் குறித்து பல்வேறு சோதனை முயற்சிகள் பல பகுதிகளில் நடந்துள்ளன. அவற்றுக்கெல்லாம் முத்தாய்ப்பாக, மாபெரும் நிதி உதவி திட்டமாக, கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டம் வெற்றிகரமாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. கூடக் குறைய 1,07,00,000 குடும்பங்கள் பயன்பெறும் வகையில் மாதம் தோறும் ஆயிரம் ரூபாய் நேரடியாக அவர்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது. முடியாது,சாத்தியமற்றது, நடக்கவே நடக்காது என்றெல்லாம் சொல்லப்பட்ட திட்டத்தை வெற்றிகரமாக செயல்படுத்தி, இந்தியாவில் பிற மாநிலங்கள் பின்பற்ற வேண்டிய, சமூக நோக்கில் சாதகமான நெருக்கடியை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஏற்படுத்தியுள்ளார்கள்.

புதுமைப் பெண், தமிழ் புதல்வன், தாயுமானவர் திட்டம் என வளங்களில் பங்கு வழங்கப்படாத மக்களுக்கு, அரசின் திட்டங்களின் மூலமாக நிதியையும் வளத்தையும் கொண்டு போய் சேர்த்துள்ளார் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.





இந்தியா முழுவதும் குடும்பங்களின் சேமிப்பு மூன்றே ஆண்டுகளில், 9 லட்சம் கோடி அளவுக்கு சரிந்து, வரலாறு காணாத வீழ்ச்சி அடைந்திருந்த காலத்தில், சேமிப்புக்கு உகந்த சூழலை உருவாக்கும் வகையில் நேரடி நிதி அளிக்கும் பல திட்டங்கள் இங்கே செயல்படுத்தப்படுகின்றன.

பணவீக்கம் தமிழ்நாட்டில் கட்டுப்படுத்தப் பட்டுள்ளதின் பின்னணியில் மேற்கண்ட திட்டங்களின் பங்கு உள்ளன. நீண்ட கால நோக்கில் தமிழ்நாட்டின் குடும்ப பொருளாதாரத்தை உயர்த்தும் திட்டங்கள் இவை.

இதன் அடுத்த நிலை வளர்ச்சியாக, அரசின் அனைத்து திட்டங்களையும் ஜனநாயகப்படுத்தி, எளிமைப்படுத்தி மக்களிடம் எளிதில் கொண்டு போய் சேர்ப்பதற்கான வலுவான கட்டமைப்பை மூன்று ஆண்டுகளில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உருவாக்கியுள்ளார்கள்.

அதற்கு மிகச் சிறந்த உதாரணமாக கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டத்தை குறிப்பிடலாம். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் சீரிய வழிகாட்டுதலோடு, மாண்புமிகு இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாடு மற்றும் சிறப்பு திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்களின் தலைமையில் ஒழுங்கமைக்கப்பட்ட வகையில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டது. திட்டத்தின் பயனாளர்கள் விண்ணப்பம் வழங்குவதற்கு ஒரே ஒரு முறை மட்டுமே அரசை அணுகினால் போதும் என்கிற அளவிற்கு அனைத்து நிலைகளிலும் சீராக ஒழுங்கமைக்கப்பட்டு மகளிர் உரிமைத் தொகை அவர்களது வங்கிக் கணக்கிற்கு அனுப்பப்பட்டது. சாதாரண சான்றிதழ் தொடங்கி அரசின் பல சேவைகளை பெறுவதற்கு, நாள் கணக்கில் அரசு அலுவலகங்களுக்கு அலைந்த நிலை மாறி, விண்ணப்பம் வழங்க மட்டும் அரசு அலுவலகங்களை நாடினால் போதும் என்கிற அளவிற்கு திட்டங்கள் எளிமைப்படுத்தப்பட்டுள்ளன.

இல்லம் தேடி கல்வி மூலம் அறிவு, இல்லம் தேடி மருத்துவம் மூலம் சுகாதாரம், நேரடி நிதி உதவி திட்டங்களின் மூலம் பொருளாதாரம் எனத் தொடங்கி, மக்களுடன் முதல்வர் திட்டத்தின் மூலம் அரசே வீடுகளுக்கு வரும் என்று கனவுக்கு அப்பாற்பட்ட ஒன்றை நிகழ்த்தி வருகிறது திராவிட மாடல்.

வாழ்க்கை முறை மாற்றத்தின் விளைவாக அதிகரித்து வரும் தொற்றுநோய்களை கட்டுப்படுத்துவது தொடர்பாக அறிமுகப்படுத்தப்பட்டது மக்களைத் தேடி மருத்துவம் திட்டம். 10,969 சுகாதார பெண் தன்னார்வலர்கள், 4,848 சுகாதாரப் பணியாளர்கள், 2,448 பல்வகை சுகாதாரப் பணியாளர்கள் ஆகியோரைக் கொண்டு



தொடங்கப்பட்டது இத்திட்டம். 45 வயதுக்கு மேற்பட்டோருக்கு வீடுகளுக்கே சென்று சுகாதார சேவைகளை வழங்கும் வகையில் இத்திட்டம் வடிவமைக்கப்பட்டது.

2024 ஜனவரி மாதம் கணக்கீட்டின்படி ஒரு கோடியே 72 ஆயிரம் பயனாளர்கள் இத்திட்டத்தின் மூலம் பலனடைந்துள்ளனர். அவர்களில் 73.6% பேர் நீரிழிவு பரிசோதனை மற்றும் ரத்த அழுத்த பரிசோதனையை தங்கள் வாழ்நாளில் முதல் முறை மேற்கொண்டனர். அனைத்து பகுதிகளிலும் வலுவான சுகாதார கட்டமைப்பை கொண்ட தமிழ்நாட்டில், வீடுகளுக்கு சென்று சுகாதார சேவைகளை வழங்குவதன் மூலமாக தொற்றாநோய்களை தொடக்க நிலையிலேயே கண்டறிந்து, சிகிச்சை அளித்து முதுநிலை மருத்துவ சிகிச்சைக்கான தேவையையும், செலவையும் குறைக்கும் பணியையும் இத்திட்டம் மேற்கொண்டு வருகிறது.

தமிழ்நாட்டின் சுகாதாரத்தின் மீதும், தமிழ்நாட்டு மக்களின் உடல் நலனின் மீதும், தமிழ்நாடு சுகாதார செலவுகளின் மீதும் நிகழ்த்தப்படும் மிகப்பெரிய முதலீடாக இத்திட்டம் அமைந்துள்ளது.

இவை அனைத்தையும் ஏதோ ஒரு பொற்காலத்தில் ஆட்சிப் பொறுப்பேற்று செய்து முடிக்கவில்லை. மாறாக பொருளாதாரம், சமூக அரசியல் சூழல் என எல்லாவற்றிலும் நெருக்கடிகள் மிகுந்து, வீழ்ச்சியை சந்தித்துக் கொண்டிருந்த காலத்தில் தமிழ்நாட்டின் முதலமைச்சராக பொறுப்பேற்று, கொரோனா என்கிற கொடிய பேரிடர், மூன்று பெரிய பேரிடர்கள், வரலாறு காணாத வகையில் ஒன்றிய அரசின் நிதிப் பகிர்வில் நெருக்கடி என சவால்களை மட்டுமே எதிர்கொண்டு, நெருக்கடிகளை மட்டுமே எதிர்கொண்டு, எல்லாவற்றையும் சாதகங்களாக மாற்றி, கடுமையான உழைப்பின் விளைவாகவும், தீர்க்கமான திட்டங்களின் விளைவாகவும், தொலைநோக்கான பார்வையின் விளைவாகவும் தமிழ்நாட்டை வளர்ச்சிப் பாதைக்கும், தமிழ்நாட்டு மக்களை சமூக பாதுகாப்பான சூழலுக்கும் நகர்த்தியுள்ளார் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள்.

நம்பிக்கைகள், கேள்விக்கு அப்பாற்பட்ட முன் தீர்மானிக்கப்பட்ட கட்டமைப்புகள் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டது மனுதர்மம். அதற்கு எதிரான மக்கள் இயக்கமாக, கேள்விகளை முன் வைக்கவும், தரவுகளின் அடிப்படையிலான அரசியலை மேற்கொள்ளவும் வழிவகை செய்தது திராவிட இயக்கம். அதன் வரலாற்று தொடர்ச்சியாக மட்டுமல்லாமல், அதன் வரலாற்றில் உச்சமாக தரவுகள் அடிப்படையிலான சீரிய நிர்வாகத்தை வழங்கி வருகிறார் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள்.



தமிழ்நாட்டின், திராவிட அரசியலின் மையப்புள்ளி சமூக நீதி. மருத்துவக் கல்விக்கான அகில இந்திய தொகுப்பில், இதர பிற்படுத்தப்பட்ட சமூகங்களுக்கு இட ஒதுக்கீடு மறுக்கப்பட்டு வந்த சூழலில், நாடாளுமன்றத்தில் குரல் எழுப்பி, நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்து, இந்தியா முழுவதும் சமூக நீதியை உறுதி செய்தார் நம்முடைய முதலமைச்சர் அவர்கள். அதன் தொடர்ச்சியாக தமிழ்நாட்டின் அரசியலை, கொள்கை அளவிலும் திட்டங்கள் அளவிலும் இந்தியா முழுமைக்கும் ஒன்று சேர்க்கும் முயற்சியை தற்போது மேற்கொண்டு வருகிறார்.

இந்திய அரசியலில் 'திராவிட மாடல்' என்பது தவிர்க்க முடியாததாக மாறி உள்ளது. மக்கள் மயப்பட்ட அரசியல் என்பது திராவிட மாடலை பின் தொடர்வது தான் என்கிற புதிய விதி படைக்கப்பட்டு வருகிறது. காலை சிற்றுண்டி திட்டம் தொடங்கி, மகளிருக்கான இலவச பேருந்து பயணத்திட்டம், கலைஞர் மகளிர் உரிமை தொகை திட்டம், தொழில்துறையின் மீதான மிகப்பெரும் முதலீடுகள், தமிழ் நாட்டின் இளைஞர்களின் அறிவு மீது நிகழ்த்தப்படும் மாபெரும் முதலீடான நான் முதல்வன் திட்டம் உள்ளிட்ட பல்வேறு திட்டங்கள் இந்தியாவில் பிற மாநிலங்களால் பின்பற்றப்படுகின்றன.

தனக்கு முந்தைய தலைவர்களை விஞ்சி, மக்கள் பணியாற்றுவதை இலக்காக கொண்டு பயணிப்பது, திராவிட அரசியல் தலைவர்களின் இயல்பாக இருந்து வருகிறது. அந்த வகையில் தொடர்ச்சியான உழைப்பின் மூலமாகவும், திட்டங்களின் மூலமாகவும், தமிழ்நாட்டின் முந்தைய தலைவர்களை விஞ்சக் கூடிய இடத்தை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அடைந்துள்ளார்கள். அதற்கு மூன்று ஆண்டு கால ஆட்சியே சாட்சி.

திராவிடம் என்கிற சொல் இனத்தைக் குறிக்க, மொழியை குறிக்க, அரசியலைக் குறிக்க என ஒவ்வொரு காலகட்டத்திலும் அது பல்வேறு பொருள்களை குறித்துள்ளது. நம்முடைய முதலமைச்சர் அவர்களின் காலத்தில் 'திராவிட மாடல்' என்பது மக்களின் வாழ்வியலை குறிக்கவும், அரசு நிர்வாகத்திற்கான சூத்திரத்தை (Formula) குறிக்கவும் பயன்படுகிறது.

மறுபுறம் மனுதர்மத்தின் வடிவமாக பல்வேறு அரசியலை கிண்டி மாளிகைகள் முன்னெடுத்து வரும்பொழுது, அவற்றை சட்டரீதியாக நேரடியாக எதிர்கொண்டு முறியடித்து, தமிழ்நாட்டின் மானத்தை காப்பாற்றி வருவதாகவும் திராவிட மாடல் அரசு விளங்குகிறது. அதிலும் நாகரிகத்தை கடைபிடித்து, நாகரிக அரசியல் பொற்காலமாக தமிழ்நாட்டை மாற்றியுள்ளார் நம்முடைய முதலமைச்சர் அவர்கள். அரசியல் காழ்ப்புணர்ச்சியின் காரணமாக பெரும் திட்டங்கள் கிடப்பில் போடப்பட்டதும், முடிக்கப்பட்ட



திட்டங்கள் வீணடிக்கப்பட்டதும் தமிழ்நாட்டின் கடந்த கால வரலாறு. ஆனால் முன்னாள் முதலமைச்சர் படம் இருந்தாலும் பரவாயில்லை, மக்கள் வரிப்பணம் வீணாக கூடாது என பள்ளி மாணவர்களுக்கு ஏற்கனவே அச்சடிக்கப்பட்ட புத்தகப்பையை வழங்க உத்தரவிட்டு, நாகரிக அரசியலின் உச்சத்தை தொட்டவர் நம்முடைய முதலமைச்சர் அவர்கள்.

விளிம்பு நிலை மக்களை அதிகாரப்படுத்துவதற்காக பல்வேறு மக்கள் நலப் பணிகளை இந்த அரசு மேற்கொண்டு வருகிறது. பழங்குடியின, பட்டியலின, மிகவும் பிற்படுத்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்கள் பெருமளவு பயன்பெறும் வகையில், தமிழ்நாட்டின் அரசு பள்ளிகள் கட்டமைப்பு ரீதியாகவும், செயல்பாட்டு ரீதியாகவும், அரசு பள்ளி மாணவர்களுக்கான உயர்கல்வி வாய்ப்புகளை உறுதி செய்வதிலும் பல்வேறு முதலீடுகளை இந்த அரசு மேற்கொண்டு வருகிறது.

அண்ணல் அம்பேத்கரின் பிறந்தநாளை சமத்துவ நாள் என்று கொண்டாடுவதோடு மட்டும் அல்லாமல், 'அண்ணல் அம்பேத்கர் தொழில் முன்னோடிகள் திட்டம்' என்கிற பெயரில் பட்டியலின, பழங்குடியின தொழில் முனைவோருக்கான சிறப்பு தொழில் முனைவு திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இது போன்ற முயற்சிகளின் விளைவாக நாட்டிலேயே பட்டியலின தொழில் முனைவோர் பெருமளவு உள்ள மாநிலமாக தமிழ்நாடு உள்ளது.

மகளிரை அதிகாரப்படுத்த பல்வேறு திட்டங்களை செயல்படுத்தும் அரசு, தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் குடியிருப்புகளை மகளிரின் பெயரில் மட்டுமே வழங்கப்படும் என்கிற தீவிர முடிவையும் எடுத்தது.

A Man of Few Words, But a Man of Action என்னும் வகையில், சிறந்த பண்புகளோடு தமிழ்நாட்டின் அரசியலை தமிழ்நாட்டின் வளர்ச்சியை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் செதுக்கி வருகிறார்கள்.

அதன் தொடக்க நிலை அடித்தளமாக மூன்று ஆண்டுகால திராவிட மாடல் ஆட்சி அமைந்துள்ளது. தமிழ்நாட்டின் சமூகநீதி தத்துவத்தை, மாநில உரிமை முழக்கத்தை, விளிம்பு நிலை மக்களை அதிகாரப்படுத்தும் சமநீதி கோட்பாட்டை, இந்தியாவிற்கு எடுத்துச் சொல்லி, அதனை இந்தியாவின் அரசியலாக மாற்றுவதற்கு அடிப்படைகளை அமைத்துள்ளது.

எதிர்காலத்தில் இந்திய அரசியலின் சமூக நீதியையும், மாநில உரிமையையும் முன்னெடுத்துச் செல்லும் தலைமையாக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாட்டை செதுக்கியுள்ளார்கள்.

★★★




கலைஞர் நூற்றாண்டு நூலகம்





அறிவுசார் அடையாளங்கள்



எழுத்தாளர்
எஸ்.ராமகிருஷ்ணன்

மாண்புமிகு தமிழக முதல்வர் ஸ்டாலின் அவர்களின் திராவிட மாடல் அரசு கடந்த மூன்று ஆண்டுகளில் பல்வேறு சிறப்புத் திட்டங்களைச் செயல்படுத்திவருகிறது. குறிப்பாகக் கல்வி, தமிழ் மொழி மற்றும் இலக்கிய வளர்ச்சிக்குச் செயல்படுத்தி வரும் திட்டங்கள் நிகரற்றவை.

ஒன்றாம் வகுப்பு முதல் ஐந்தாம் வகுப்பு வரை பயிலக் கூடிய தொடக்கப்பள்ளி மாணவர்களுக்குச் சத்தான சிற்றுண்டி வழங்கப்படும் என்ற முதலமைச்சரின் காலை உணவு வழங்கும் திட்டம் இந்திய அளவில் முன் மாதிரியானது. தனித்த பெருமைக்குரியது. நாளை இந்தத் திட்டம் இந்தியாவின் பிற மாநிலங்களில் செயல்படுத்தப்படும் போது தமிழக அரசு இதற்கான வழிகாட்டியாக விளங்கியது என்று வரலாறு பேசும்.

மாவட்டம் தோறும் புத்தகத் திருவிழாக்கள், இலக்கியத் திருவிழாக்கள், பன்னாட்டுப் புத்தகக் கண்காட்சி, எழுத்தாளர்களுக்கான கனவு இல்லம், இலக்கிய மாமணி விருது, கல்லூரி தோறும் நடைபெறும் மாபெரும் தமிழ் கனவுத் திட்டம், முத்தமிழறிஞர் மொழிபெயர்ப்புத் திட்டம், நூலகங்களுக்கான புதிய கொள்முதல் கொள்கை, இளைஞர்களின் திறன்களை மேம்படுத்தும் நான் முதல்வன் திட்டம் எனத் தொடரும் வெற்றிகரமான செயல்பாடுகள் தமிழக அரசின் சாதனைகள் என்பேன்.

இந்தியாவின் வேறு எந்த மாநிலத்திலும் தமிழகத்தில் நடைபெறுவது போல அரசே மாவட்டம் தோறும் புத்தகத்திருவிழாவை



ஏற்பாடு செய்வதில்லை. புத்தகத் திருவிழாவை மாபெரும் பண்பாட்டு இயக்கமாக மாற்றிக் காட்டியிருக்கிறது தமிழக அரசு. இதன் மூலம் பதிப்புத்துறை வளர்ச்சி அடைந்துள்ளதோடு வாசிப்பவர்களின் எண்ணிக்கையும் பல மடங்கு உயர்ந்துள்ளது.

தமிழ் இலக்கியத்தைச் சர்வதேச அளவில் கொண்டு செல்வதற்காகப் பன்னாட்டுப் புத்தகக் கண்காட்சியைத் தமிழக அரசு ஏற்பாடு செய்து சிறப்பாக நடத்தி வருகிறது. கடந்த இரண்டு ஆண்டுகளுக்குள் ஆயிரத்திற்கும் மேற்பட்ட தமிழ் நூல்கள் இந்திய மற்றும் அயல்நாட்டு மொழிகளுக்குக் கொண்டு செல்ல ஒப்பந்தம் செய்யப்பட்டிருக்கின்றன. தமிழக வரலாற்றில் இது போன்ற ஒரு நிகழ்வு எப்போதும் நடந்ததில்லை.

சாகித்திய அகாதமி விருது, ஞானபீடம் போன்ற உயரிய விருது பெற்ற தமிழ் எழுத்தாளர்களுக்கும், செம்மொழி விருது பெற்ற தமிழ் அறிஞர்களுக்கும் அவர்கள் விரும்பும் இடத்தில் வீடு வழங்கும் கனவு இல்லம் திட்டத்தைச் செயல்படுத்தி எழுத்தாளர்களின் நீண்டகாலக் கனவை நிறைவேற்றியுள்ளது தமிழக அரசு.

கரிசல் இலக்கியத்தின் பிதாமகனாக விளங்கிய எழுத்தாளர் கி.ராஜநாராயணன் மறைவை ஒட்டி அவருக்கு அரசு சார்பில் அஞ்சலி





செலுத்தப்பட்டதோடு கோவில்பட்டியில் அவருக்கு பிரம்மாண்டமான நினைவு மண்டபத்தையும் உருவாக்கியிருக்கிறார்கள். தமிழ் எழுத்தாளர்களின் மீது அரசு கொண்டுள்ள பேரன்பின் அடையாளமாகவே இதனைக் கருதுகிறேன்.

சென்னையில் அண்ணா நூற்றாண்டு நினைவு நூலகமும், மதுரையில் கலைஞர் நூற்றாண்டு நினைவு நூலகமும் தமிழகத்தின் அறிவுப்பெட்டகமாக அமைக்கப்பட்டிருக்கின்றன.

மதுரையில் சென்ற ஆண்டு புதிதாகத் துவங்கப்பட்டுள்ள கலைஞர் நூற்றாண்டு நூலகம் 3.56 ஏக்கர் பரப்பளவில், ஆறு தளங்களுடன் உருவாக்கப்பட்டுள்ளது. இதில் ஐந்து லட்சத்துக்கும் மேற்பட்ட புத்தகங்கள் இடம்பெற்றுள்ளன.

நூலகம் என்பது புத்தகம் இரவல் தரும் இடம் மட்டுமில்லை. அது மாணவர்கள் மற்றும் இளைஞர்களின் ஆளுமையை வளர்க்கவும், போட்டி தேர்வுகளில் அவர்கள் வென்று வேலை வாய்ப்பு பெறவும், கதை, கவிதை, நாடகம் என இலக்கிய முயற்சிகளில் ஈடுபடவும், தமிழ் பண்பாட்டினையும் வரலாற்றையும் அனைவரும் அறிந்து கொள்ளும் அறிவுசார் மையமாகவும் செயல்பட வேண்டும்.

இந்த எண்ணத்தின் செயல்வடிவம் போலவே கலைஞர் நூற்றாண்டு நூலகம் செயல்பட்டு வருகிறது. தென் தமிழக மக்களின் அறிவுக் கோயிலாக இந்த நூலகத்தை உருவாக்கியது அரசின் பெருமைமிகு சாதனை என்றே சொல்வேன்.

கீழடி அகழ்வாய்வின் மூலம் தமிழர்களின் தொன்மையும் நாகரீகமும் புதிய உச்சத்தைக் கண்டிருக்கிறது. இங்கே கண்டறியப்பட்டுள்ள கட்டிடங்கள், பவளமணிகள், மட்கல ஓடுகள் மூலம் தமிழகத்தில் நகர நாகரீகம் இருந்ததற்கான அடிப்படை ஆதாரங்கள் கிடைத்துள்ளன. இந்த ஆய்வில் கிடைத்துள்ள அரிய பொருட்களைப் பாதுகாக்க கீழடி அருங்காட்சியகம் அமைத்துச் சிறப்பித்துள்ளது தமிழக அரசின் சாதனையாகும்.

உலகெங்கும் வாழும் தமிழர்களுக்கு இணைய வழியில் தமிழ் கற்றுக்கொடுத்தல், தமிழ் நூல்களையும் இதழ்களையும் அரிய ஆவணங்களையும் மின்னுருவாக்கம் செய்தல், கணினித் தமிழை மேம்படுத்துதல், செயற்கை நுண்ணறிவினை பயன்படுத்துதல். எனத் தொழில்நுட்பத் துறையில் தமிழைப் பயன்படுத்த தமிழக அரசு பல்வேறு புதிய முயற்சிகளை எடுத்து வருகிறது. அதன் ஒரு பகுதியாக, அண்மையில் பன்னாட்டுக் கணித்தமிழ் மாநாட்டினை சிறப்பாக நடத்தி சாதனை செய்துள்ளது.

இந்தியாவின் வேறெந்த மொழியிலும் இப்படியான ஒரு முயற்சி நடைபெறவில்லை. அந்த வகையில் எந்த மாநிலமும் முன்னெடுக்காத ஒரு திட்டத்தை முன்னோடியாகத் தமிழக அரசு செயல்படுத்திக் காட்டியுள்ளது.

வெற்றி என்பது குறிக்கோள் அன்று, அது ஒரு பயணமே ஆகும். பயணம் தொடர்ந்து கொண்டே இருக்க வேண்டும் என்பார் இங்கர்சால். அந்த வகையில் தமிழக அரசின் செயல்பாடுகளும் துறைதோறுமான புதிய வளர்ச்சியை, புதிய கனவுகளை, புதிய உயரங்களை நோக்கியதாக இருக்கும் என்பதே உண்மை.

★★★



மூன்றாண்டுக் காலத்தில் முதன்மை சாதனைகள்



பேராசிரியர்
ராஜன் குறை

ஒரு அரசின் செயல்பாடுகளில் பொருளாதார வளர்ச்சி, உள்கட்டுமான வளர்ச்சி, தொழில் விவசாயத் துறைகளின் வளர்ச்சி, சட்டம் ஒழுங்கு பராமரிப்பு என்று பல்வேறு அம்சங்கள் அடங்கியிருக்கும். முதல்வர் ஸ்டாலினின் மூன்றாண்டுக் கால ஆட்சியில் ஒவ்வொரு துறையிலும் சிறப்பாக எடுத்துக்கூற பல்வேறு முயற்சிகள், மேம்பாடுகள், சாதனைகள் இருக்கும் என்பதை நாள்தோறும் தொலைக்காட்சியினை பார்ப்பவர்கள், நாளேடுகளை படிப்பவர்கள் அறிவார்கள். என்னுடைய இந்த கட்டுரையில் கல்வி, கலாசாரம் தொடர்பான பணிகளை மட்டும் கவனப்படுத்த விரும்புகிறேன். ஏனெனில் ஒரு சமூகத்தின் நீண்ட கால வளர்ச்சிக்கு, சமூக உளவியல் ஆரோக்கியத்திற்கு கல்வியும், பண்பாட்டு வளமும் மிக முக்கியமானவை.



எளிய மக்களின் கல்வி என்று வரும்போது மிகப்பெரிய திருப்புமுனை, வரலாற்றுச் சாதனை என்றால் அது அரசுப் பள்ளிகளில் காலை சிற்றுண்டித் திட்டம் என்பதுதான். சாதாரணமாக யாரும் செயல்படுத்தத் தயங்கும் திட்டம் அது. ஏனெனில் துவங்கிவிட்டால் பின்னர் கைவிட முடியாது. விரிவான திட்டமிடுதலையும், தொடர்ந்த பொருட்செலவையும், நிர்வாக ஒழுங்கையும் கோரும் ஒரு கனவுத்திட்டம் அது என்றால் மிகையாகாது. ஒரு ஆட்சியாளர் மிகுந்த மன உறுதியும், தன் ஆளுமைத் திறனில் நம்பிக்கையும் இருந்தால் அன்றி இவ்வளவு பெரிய திட்டத்தை செயல்படுத்தத் துணிய முடியாது. முதல்வர் ஸ்டாலின் இதனை செயல்படுத்தியுள்ளார் என்பது மிகப்பெரிய சாதனையாகும்.

இந்த திட்டத்தினை செயல்படுத்தியது ஏதோ இலவசமாக மக்களுக்கு உணவளிப்பது என்பதல்ல. இது கல்வியின் முக்கியத்துவத்தை கருதியது என்பதே நாம் கவனத்தில் கொள்ள வேண்டியது. சிறுவர்களின் உடல் நலம். அவர்களுக்குத் தேவையான புரதச் சத்துக்கள் கிடைப்பது என்பது அவர்கள் கற்கும் ஆற்றலுடன் நேரடியாகத் தொடர்புடையது என்பதை மருத்துவத் துறை நிபுணர்கள் தொடர்ந்து விளக்கி வருகிறார்கள். பள்ளி மாணவர்களுக்கு





காலை, மதிய உணவை உறுதி செய்வது என்பது அவர்களது கற்கும் ஆற்றலை மேம்படுத்துவது என்பதை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். எதிர்கால சமூக நலனுக்காக நாம் செய்யும் மிகப்பெரிய முதலீடு இது. இதனை மன உறுதியுடன் செயல்படுத்திய முதல்வரை வரலாறு நிச்சயம் பொன்னெழுத்துக்களில் பதிவு செய்யும்.

பள்ளி இறுதிவரை படித்தவர்கள் உயர்கல்வி பெறுவதன் விகிதாசாரம் இந்திய அளவில் தமிழகத்தில் அதிகம். ஆனாலும் இதனை மேலும் அதிகரிக்கும் விதத்தில் அரசுப் பள்ளிகளில் படித்த பெண்கள் உயர்கல்விக்கு கல்லூரிகளுக்குச் சென்றால் மாதம் ஆயிரம் ரூபாய் உதவித்தொகை என்ற திட்டத்தை அறிவித்தார் முதல்வர். பெண்கள் என்றால் திருமண சந்தைக்கு செல்பவர்கள், அதனால் தாலிக்கு தங்கம் வழங்குவது என்பது போன்ற பத்தாம்பசலி திட்டங்களுடன் ஒப்பிட்டால், பெண்களை கல்லூரிச்சாலைக்கு அனுப்பும் இந்த திட்டம் எவ்வளவு முற்போக்கானது என்பது புரியும். தற்போது அந்த திட்டத்தை மாணவர்களுக்கும் விரிவாக்கம் செய்துள்ளார்கள். இது கல்லூரிக்குச் செல்லும் எளிய பின்னணி கொண்ட மாணவர்களுக்கு பெரும் ஊக்கமாக அமையும் என்று சொல்லத் தேவையில்லை. ஏனெனில் அவர்கள் பொருள் ஈட்டாமல் படிப்பது மட்டுமல்லாமல், அவர்கள் செலவுகளுக்கும் பெற்றோரை எதிர்பார்க்கும் நிலை குறையும்போது அவர்கள் ஊக்கத்துடன் கல்லூரிக்குச் செல்வது சாத்தியமாகும்.

இது போன்ற திட்டங்கள் மட்டுமல்லாமல் "நான் முதல்வன்" என்று புதுமையான திட்டத்தையும் செயல்படுத்தி வருகிறது தமிழ்நாடு அரசு. இந்த திட்டத்தின் மூலம் மாணவர்களின் திறன்கள் கண்டறியப்பட்டு பல்வேறு திறன் மேம்பாட்டு பயிற்சிகள் வழங்கப்படுகின்றன. இந்த திட்டத்தால் பல்வேறு பயிற்சிகள் பெற்று வேலை வாய்ப்பு பெறுபவர்கள் எண்ணிக்கை பெருகத் துவங்கியுள்ளது. இந்த திட்டத்தின் கீழ் பல்வேறு விதமான முயற்சிகள் எடுக்கப்பட்டு வருவதைக் காண முடிகிறது. உதாரணமாக வங்கித்துறை, ரயில்வே மற்றும் அரசுப் பணிகளில் சேர்வதற்கான தேர்வுகளை எழுத உண்டு உறைவிடப் பயிற்சி ஆறு மாதங்களுக்கு ஆயிரம் மாணவர்களுக்கு





வழங்கப்படுகிறது. மற்றொருபுறம் இருபத்தைந்து பொறியியல் மற்றும் அறிவியல் மாணவர்கள் இலண்டனிலுள்ள துர்ஹாம் பல்கலைகழகத்திற்கு ஒரு வார திறன் மேம்பாட்டுப் பயிற்சிக்குச் செல்கின்றனர். இவர்கள் இந்த திட்டத்தில் ஏற்கனவே பயிற்சி பெற்று சிறப்புப் பயிற்சி முகாமில் தேர்வு பெற்றவர்கள்.

கல்வியுடன் இணைந்துதான் கலாசார, பண்பாட்டு நடிவடிக்கைகள், நூலகங்கள் மேம்படுத்தப் படுகின்றன. மதுரையில் பிரம்மாண்டமான கலைஞர் நூற்றாண்டு நூலகம் குறுகிய காலத்தில் சிறப்புற கட்டப்பட்டு செயல்பட்டு வருகிறது. சென்னை மாநகர நூலக ஆணைக்குழு கல்லூரி மாணவர்களுக்கான பல்வேறு பயிற்சி முகாம்களை நடத்தி வருகிறது. கவிஞர் மனுஷ்யபுத்திரனை ஆணைக்குழு இயக்குனராக நியமித்ததினால், இது போன்ற பல புதிய முயற்சிகள் மாணவர்கள் திறன்களை மேம்படுத்தும் வண்ணம் நடக்கிறது.

புத்தகக் கண்காட்சிகள் மாவட்டம்தோறும் சிறப்பாக நடந்தேறுகின்றன. நூல்களை மக்களிடம் கொண்டு சேர்ப்பதில் முயற்சிகள் பரவலாகின்றன. நூலகங்களுக்கு நூல்கள் வாங்கவும் நெறிமுறைகள் சிறப்பாக வகுக்கப்பட்டுள்ளது. இது தவிர தமிழ்நாட்டில் மண்டல வாரியாக இலக்கியத் திருவிழாக்கள் பள்ளிக் கல்வித் துறை, பொது நூலகத்துறை ஆகியவற்றின் மூலம் நடந்தேறுகின்றன. பொதுமக்களுக்கு சிறுகதைப் போட்டிகள் போன்றவையும் நடத்தப்படுகின்றன. மாணவர்களுக்கும் பல்வேறு போட்டிகள் நடத்தப்படுகின்றன.

முன்னணி எழுத்தாளர்கள் கனவு இல்லம் திட்டத்தின் மூலம் வீடுகள் வழங்கப்படுகின்றன. புகழ் பெற்ற மூத்த எழுத்தாளர் கி.ராஜநாராயணன் மறைந்த பொழுது அவருக்கு அரசு மரியாதையுடன் இறுதிச் சடங்குகள் நடைபெற்றன. முன்னணி எழுத்தாளர்கள் இவ்விதம் அங்கீகரிக்கப்படுவது பண்பாட்டு விழுமியங்களை மேம்படச் செய்கிறது. திராவிட இயக்கம் அறிவார்ந்த இயக்கம். அறிஞர் அண்ணா, கலைஞர் கருணாநிதி முதலிய பல ஆற்றல் மிக்க எழுத்தாளர்களின் இலக்கிய, சிந்தனை வெளிப்பாடுகளால் செதுக்கப்பட்ட இயக்கம். முதல்வர் ஸ்டாலின் ஆட்சியில் அந்த செழுமையான பாரம்பரியம் கல்வி, அறிவுச் செயல்பாடுகளை பெருக்குவது என்பது பாராட்டிற்குரிய வரலாற்று விளைபொருள்.

★★★

தோழி





தோழி,
பணிபுரியும்
மகளிர் விடுதிகள்...

இது முன்னேறும்
மகளிர்க்கான முகவரி

24x7 பாதுகாப்பு வசதியுடன் கூடிய
விசாலமான தங்கும் விடுதிகள்.

‘வினைத்திட்பம்’ கொண்ட முதலமைச்சர்



வழக்கறிஞர்
அ.அருள்மொழி

நீண்ட அரசியல் அனுபவம் கொண்ட தமிழ்நாடு முதல்வர் மாண்புமிகு மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் திராவிட முன்னேற்றக் கழக அரசு 2021 மே மாதம் 6ஆம் நாள் பதவியேற்றது. இந்த மூன்றாண்டுகளில் முதல்வரின் கனவுத் திட்டங்களால் இன்று தமிழ்நாட்டின் இளம் தலைமுறையும் வளரும் குழந்தைகளும் மிகச்சிறந்த எதிர்காலத்தை நோக்கி முன்னேறுகிறார்கள்.

பெண்களுக்கான கல்வி, வேலைவாய்ப்பு, பொருளாதாரம், சுகாதாரம், மற்றும் உரிமைத் திட்டங்கள் மூலம் வலிமையற்றோர்’ ‘Weaker Sex’ என்று ஆணாதிக்க சமூகத்தால் உருவாக்கப்பட்ட கற்பிதங்களை உடைத்து அவர்களை ஆற்றல் மிக்கவர்களாக உணரச் செய்யும் பெரும் சாதனையை அரசு நிகழ்த்தியுள்ளது.

பெண்ணுரிமைக்கான திராவிட முன்னேற்றக் கழக அரசின் சாதனைகள் ஆழ்ந்த தத்துவப் பின்புலமும் வரலாற்றுப் பின்னணியும் கொண்டவையாகும். பெண் என்பவள் ஆணைப்போன்ற ஒரு மனிதப்பிறவி. ஆணுக்கான பணிப்பெண்ணாகப் படைக்கப்பட்டவள் அல்ல. ஆணுக்கு என்னென்ன உரிமைகள் உண்டோ அவை அனைத்தும் பெண்ணுக்கும் உரிமையாகும் என்றார் தந்தை பெரியார். அவர் தொடங்கிய ‘சுயமரியாதை’ இயக்கம் மேற்கொண்ட பெண்ணுரிமைக்கான போராட்டங்கள் சமூக மாற்றத்தின் அடித்தளமாயின. அதேபோல் பெண்களின் சட்ட உரிமைகளுக்கான முதல் வித்தாக 1920 ஆம் ஆண்டு பெண்களுக்கு வாக்குரிமை அளிக்கும் சட்டத்தை நிறைவேற்றியது நீதிக்கட்சி ஆட்சி.

‘சுயமரியாதை சமூகநீதி’ எனும் தத்துவங்களின் முழுமையான பரிமாணம்தான் ‘திராவிட மாடல்’ என்பதை உணர்த்தியுள்ளது முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் தலைமையில் செயல்படும் திமுக ஆட்சியின் மூன்றாண்டுச் சாதனைகள்.

ஆட்சியின் மூலம் செயல்படுத்த வேண்டிய பெண்ணுரிமை முழக்கங்களை 1925 ஆம் ஆண்டு முதலே ‘குடி அரசு’ ஏட்டில் எழுதிவந்தார் தந்தை பெரியார். அவை ஒரு சட்ட முன்வரைவுபோல வடிவம் பெற்று 1929 ஆம் ஆண்டு நடைபெற்ற சுயமரியாதை இயக்க முதல் மாநில மாநாட்டின் தீர்மானங்கள் ஆயின. அவை நாடு முழுவதும் பிரச்சாரம் செய்யப்பட்டன.

திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சி அமைத்த ஒவ்வொரு முறையும் செங்கல்பட்டு சுயமரியாதை மாநாட்டுத் தீர்மானங்கள்

ஒவ்வொன்றாக சட்டமாக்கப்பட்டன. வேலை வாய்ப்பில் 30 % இட ஒதுக்கீடு சட்டமும், பரம்பரை சொத்தில் பெண்களுக்கு சம உரிமை உண்டு என்ற 1989 ஆம் ஆண்டு இந்து வாரிசுரிமை திருத்தச்சட்டமும் அந்த வரலாற்றை நினைவூட்டிக் கொண்டே இருக்கும்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் செயல்படுத்தியுள்ள பெண்களுக்கான உரிமைத் திட்டங்கள் பல வளர்ந்த நாடுகள் கூட நடைமுறைப்படுத்த முயலாத ஒன்றாகும். முயலாதவை எல்லாம் முடியாதவை என்று பொருளல்ல. அதனை செய்முறைக்குக் கொண்டுவருவதற்கு, உள்ளத்தில் உறுதியும் முயற்சியும்தான் தேவை. வள்ளுவர் கூறும் 'வினைத்திட்பம்' வாய்ந்த நம் முதல்வரால்தான் அதனை சாதிக்க முடிந்தது.

பேருந்துப் பயணத்திற்குக் கட்டணமில்லை, பெண்களின் குடும்ப உழைப்பிற்கு மாதம் ஆயிரம் ரூபாய் உரிமைத்தொகை, கல்லூரியில் பயிலும் அரசுப்பள்ளி மாணவிக்கு மாதம் ஆயிரம் ரூபாய் ஊக்கத்தொகை, வெளியூர் செல்லும் பெண்களின் பாதுகாப்பிற்காக 'தோழி தங்கும் விடுதிகள்', சுய உதவிக் குழுக்கள் (Self Help Groups), பெண் தொழில் முனைவோர் (Entrepreneur) ஆகியோருக்கு வங்கிகள் மூலம் பொருளாதார உதவிகள் என விரிவடைந்து கொண்டே செல்லும் தாய்ப்பறவையின் சிறகுகள்போல் அரவணைக்கிறது பெண்களுக்கான சமூகப் பாதுகாப்பையும் வளர்ச்சியையும் உறுதி செய்கிறது மூன்றாண்டு கால ஆட்சி.

இத்தனையும் இலவசமா? எங்கள் வரிப்பணத்திலா? என்று வன்மத்தை விதைக்கும் சிலருக்கு அவை "இலவசங்களல்ல: உரிமைகள்" என்றும் வாங்கும் ஒவ்வொரு பொருளுக்கும் நேர்முகமாகவும் மறைமுகமாகவும் வரிகட்டும் எல்லோரும் குடிமக்களே என்றும் புரியவைத்து நல்லரசு என்பது பணக்காரர்களின் தேவைக்கானது மட்டுமல்ல; அனைத்து மக்களுக்குமானது என்பதை தனது செயல்பாட்டால் உணர்த்துகிறார் நம் முதல்வர்.

இதனை தெளிவாகப் புரிந்துகொள்ள 1979ஆம் ஆண்டு ஐ.நா. அவையில் நிறைவேற்றப்பட்ட





பெண்களின் சமத்துவ வாழ்வுக்கான அனைத்து நாடுகளின் சட்டப் பிரகடனத்தைப் படிக்க வேண்டும்.

பெண்களுக்கெதிரான பாகுபாடுகள் உலகம் முழுவதும் இருக்கின்றன. அவற்றை நீக்குவதற்கு அந்தந்த நாட்டின் அரசுகள் முன்வரவேண்டும் என்ற முன்னெடுப்பால் நிறைவேறிய அந்த அறிக்கை "பெண்களுக்கெதிரான அனைத்து வகைப் பாகுபாடுகளையும் நீக்குவதற்கான ஐ.நா. பிரகடனம்" என்று அழைக்கப்பட்டது. (Convention For Elimination of All Forms of Discrimination Against Women)

இந்த அறிக்கையை பெரும்பாலான நாடுகள் 1982ஆம் ஆண்டு ஏற்றுக்கொண்டு கையெழுத்திட்டன. இந்திய ஒன்றிய அரசு 1993ஆம் ஆண்டுதான் அப்பிரகடனத்தில் கையெழுத்திட்டது.

1979ஆம் ஆண்டு உருவான இப்பிரகடனத்தின் கூறுகள் யாவும் 1929ஆம் ஆண்டின் சுயமரியாதை மாநாட்டுத் தீர்மானங்களின் மறு வடிவம் போலவே அமைந்தன என்பது குறிப்பிடத் தக்கது.

அந்தப் பெண்ணுரிமைப் பிரகடனத்தில் கையெழுத்திட்ட அரசுகள் 'State Parties' பெண்களின் சுதந்திரம், வளர்ச்சி, சமூகப் பொருளாதார உரிமை, ஆகியவற்றுக்கெதிரான சமூகம், மதம், பண்பாடு, மொழி, சட்டம், நீதி உள்ளிட்ட அனைத்துத் துறைகளிலும் அனைத்துவிதமான பாகுபாடுகளையும் நீக்குவோம் என்று உறுதியளித்தன. அதற்கான சட்டங்களை இயற்றுவோம், திட்டங்களை உருவாக்குவோம் என்று இந்திய அரசு உட்பட அனைத்து நாடுகளும் ஏற்றுக்கொண்ட பொறுப்பினை, முழுமையாக நிறைவேற்ற வேண்டும் என்ற முனைப்பும் முயற்சியும் தமிழக அரசின் பெண்ணுரிமைத் திட்டங்களில் பரிணமித்து வருவதன் சான்றே 2021இல் தொடங்கி இன்று வரை தொடரும் தமிழ்நாடு செயல்படுத்தி வரும் பெண்களுக்கான நலத்திட்டங்களும் சட்டங்களுமாகும்.

அந்த வளர்ச்சியின் தொடர்ச்சியாக திருநர் எனும் மூன்றாம் பாலினத்தோர், மாற்றுத் திறனாளிகள் என அனைத்துப் பிரிவு மக்களையும் அரசின் அமைப்புக்குள் இணைத்துக்கொள்ளும் செயல் திட்டங்கள் நிறைவேற்றப்படுகின்றன. தமிழ்நாடு அரசின் பொருளாதாரக் கொள்கை



வழிபாட்டுக் குழுவில் ஒரு திருநங்கை நர்த்தகி நடராஜ் என்பவரை உறுப்பினராக நியமித்த தமிழக முதல்வரின் முடிவானது, திராவிட இயக்கத்தின் தொலைநோக்குப் பார்வையின் விளைவாகும்.

பெண்கள் நலனைப் போலவே போற்றத்தக்க வளர்ச்சியைப் பெற்று வருவது கல்வித்துறை.

வளர்ந்த நாடுகளில் கல்வி அளிப்பதில் அரசுப் பள்ளிகள்தான் முதலிடம் வகிக்கின்றன. Public schools என்பதுதான் பெருமைவாய்ந்தது. இந்தியாவில் அப்படியல்ல. தமிழ்நாட்டிலும் பொருளாதார வலிமையற்ற மக்கள்தான் தங்கள் குழந்தைகளை அரசுப்பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் படிக்க வைக்கிறார்கள். அங்கு படிக்கும் மாணவர்களுக்கு, கலைஞர் அவர்கள் முதல்வராக இருந்த காலத்தில் இருந்தே பல்வேறு நலத்திட்டங்களும் ஊக்கத்தொகை உதவிகளும் வழங்கப்படுகின்றன. ஆயினும் தனியார் பள்ளிகளில் படிக்கும் குழந்தைகளைப் பார்க்கும் போதெல்லாம் தங்கள் குழந்தைகளுக்கு அத்தகைய உடை, சூழல், உயர்கல்விக்கான வாய்ப்பு, ஆங்கிலக் கல்வி ஆகியவை கிடைக்காதா என்ற ஏக்கம் அரசுப் பள்ளிக் குழந்தைகளின் பெற்றோருக்கு ஏற்படுவது இயற்கை. இந்த மூன்றாண்டு ஆட்சியில் அப்பெற்றோரின் ஏக்கத்தைத் தீர்த்து அரசுப்பள்ளிக் குழந்தைகளின் கல்விச் சூழலில் பெரும் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

அரசுப்பள்ளிகளின் புதிய பொலிவும் கட்டமைப்பும் ஆசிரியர்களின் கடின உழைப்பும் தங்கள் பிள்ளைகளை தனியார் பள்ளிகளில் இருந்து விடுவித்து அரசுப்பள்ளிகளில் சேர்க்க பெற்றோர் பலர் முன்வந்திருப்பதும் பள்ளிச் சேர்க்கையில் அரசுப்பள்ளிகள் முதலிடம் பிடித்திருப்பதும் மூன்றாண்டு ஆட்சியின் பெருமைக்குரிய சாதனை.





மேல்நிலைக் கல்விவரை தமிழ் வழியில் படித்தவர்களுக்கு அனைத்து அரசுப்பணிகளிலும் வேலை வாய்ப்பில் 20% இட ஒதுக்கீடு வழங்கும் ஆணையை கலைஞர் அவர்கள் 2010ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தினார்.

அதன் தொடர்ச்சியாக 2021ஆம் ஆண்டு ஆட்சி அமைத்த மூன்றாம் மாதம் அரசுப் பள்ளி மாணவர்களுக்கு மருத்துவக்கல்லூரிகள், பொறியியல் கல்லூரிகள் உள்ளிட்ட உயர்கல்வி அமைப்புகளில் 7.5% இட ஒதுக்கீடு வழங்க ஆணையிட்டார் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள்.

அரசுப்பள்ளி மாணவர்களின் உயர்கல்விச் செலவை தமிழக அரசே ஏற்கிறது. அது மட்டுமல்ல, முதல்வரின் கனவுத்திட்டமான 'நான் முதல்வன்' திட்டத்தின் கீழ் ஒவ்வொரு சிற்றூரிலும் வாழும் மாணவிக்கும் மாணவனுக்கும் கல்லூரிக் கல்விக்கான தேர்வு பற்றி நேரில் அழைத்து ஆலோசனை (Counselling) வழங்கப்படுகிறது.



வெளிநாடுகளில் சென்றுபடிக்க விரும்பும் அரசுப்பள்ளி மாணவர்கள் அதற்கான ஆங்கிலத் தேர்வில் (IELTS) வெற்றி பெறுவதற்கு தமிழக அரசின் செலவில் விடுமுறைக்கால பயிற்சி வகுப்புகள் நடைபெற்று வருகின்றன.

இந்திய ஒன்றிய அரசு நடத்தும் குடிமைப் பணிகளுக்கான UPSC தேர்வுகளுக்குப் படிக்கும் மாணவர்களுக்குப் பயிற்சியும் உதவித்தொகையும் வழங்கியதன் மூலம் 2024ஆம் ஆண்டில் UPSC தேர்வில் 42 தமிழ்நாட்டு மாணவர்கள் வெற்றி பெற்றதும் அவர்களில் 35 பேர் தமிழக அரசின் நான் முதல்வன்திட்ட உதவித்தொகை பெற்றவர்கள் என்பதும் மூன்றாண்டு ஆட்சிக்கான முத்திரையானது.

ஒருநாடு நல்லரசால் ஆளப்பட்டால் அதன் பயன் அடுத்த தலைமுறைக்கும் தொடரும். அந்த ஆட்சியாளரின் பெயரும் புகழும் என்றும் நிலைத்து நிற்கும். இதனை நம் தமிழ்நாட்டின் வருங்காலத் தலைமுறைகள் உணரும்படி பாடத்திட்டங்களின் பகுதியாக கற்பிக்க வேண்டும்.

★★★



ஒவ்வொரு குழந்தையின் எதிர்காலத்தையும் தீர்மானிப்பதில் இரண்டு கல்விகள் முக்கியப் பங்காற்றுகின்றன. ஒன்று அடிப்படைக் கல்வியான ஆரம்பக் கல்வி அடுத்து உயர்கல்வி. ஆரம்பக்கல்வி செம்மையாக அமைந்தால்தான் உயர்கல்வி பிரகாசமான அறிவு வளத்தையும் செழிப்பையும் கொடுக்கும். இந்த இரண்டிலும் முழு கவனத்தோடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் 'திராவிட மாடல்' அரசு மூன்றாண்டுகளில் மிகச்சிறப்பாக செயலாற்றியுள்ளது.



ஜெயபிரகாஷ் காந்தி
கல்வி ஆலோசகர்

திமுகவின் நீண்ட அரசியல் மரபில் அதன் முதன் முக்கியத்துவம் எப்போதும் கல்விக்குத்தான். இதை கலைஞரின் ஆட்சியிலும் அதன் தொடர்ச்சியாக இன்று ஆட்சி செய்யும் முதலமைச்சர் ஸ்டாலின் அவர்களின் ஆட்சியிலும் பார்க்க முடியும். கல்விக்கு தனி முக்கியத்துவம் கொடுத்தாலும் மகளிர் நலன் என்ற அடிப்படையில் இந்த இரண்டையும் இணைத்துப் பார்க்க முடியும்.

பள்ளிக்குழந்தைகள், கல்லூரி மாணவிகள், பெண்கள் என இந்த மூன்று அடிப்படையான பிரிவினருக்கும் பல நல்ல திட்டங்கள் செயல்படுத்தினாலும் நான் புரட்சிகரமான திட்டமாகப் பார்ப்பது 'நான் முதல்வன்' திட்டத்தைத்தான். பள்ளி இறுதியாண்டை நிறைவு செய்யும் மாணவ மாணவிகளுக்கு அடுத்த

கல்விக் கட்டமைப்பில் உயரம் தொட்ட முதலமைச்சர்



என்ன செய்யப் போகிறோம் என்ற குழப்பம் இருக்கும். பெற்றோர்களால் அவர்களை வழி நடத்துவதில் குழப்பம் இருக்கும். இது போன்ற குழப்பங்கள் கிராமப்புற பின் தங்கிய நகர்ப்புற பகுதி மாணவர்களிடம் அதிகம் இருக்கும். இப்படிப்பட்ட மாணவர்களுக்கு நான் முதல்வன் திட்டம் விடிவெள்ளியாக இருக்கிறது. என்ன படிக்க வேண்டும், எப்படி படிக்க வேண்டும் என்பதை நம்பிக்கையூட்டும் விதமாக வழி காட்டி அவர்களை உயர் கல்வி நோக்கி உந்தித் தள்ளுகிறது நான் முதல்வன் திட்டம்.

பொறியியல் பயிலும் மாணவர்களுக்கு பாடத்திட்டங்கள் பற்றிய தெளிவும் அறிவும் நான் முதல்வன் திட்டம் மூலம் கிடைக்கிறது. இந்த ஆண்டு பிளஸ் டூ தேர்ச்சி விகிதம் 94.56 சதவிகிதத்துக்கு மேல் சென்றிருக்கிறது. அரசுப்பள்ளிகளில் பயின்ற மாணவர்கள் மருத்துவ படிப்புகளில் சேர 7.5 சதவிகித இடஒதுக்கீட்டை மிகச்சிறப்பாக செயல்படுத்தியுள்ளது. இதே ஒதுக்கீட்டை பொறியியல் கல்லூரி மாணவர்களுக்கும் கொண்டு வந்துள்ளதோடு அந்த மாணவர்கள் நான் முதல்வன் திட்டத்தை பயன்படுத்தினால் மிகச்சிறந்த பொறியியல் கல்லூரிகளில் சேரும் சூழல் உருவாகி விடுகிறது. நான் முதல்வன் திட்டம் மிக அழகாக 7.5 சதவிகித அரசுப்பள்ளி மாணவர் ஒதுக்கீட்டோடு இணைந்து நிற்பதுதான் அதன் சிறப்புகளில் ஒன்று.



இதே போன்று மகளிருக்கான திட்டங்களில் புதுமைப்பெண் திட்டம். ஆறாம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு வரை பயின்ற அரசுப்பள்ளி மாணவிகள் உயர் கல்விக்குச் செல்லும் போது மாதம் ஆயிரம் ரூபாய் பெறும் திட்டம் அவர்களை வெகுவாக உயர் கல்வி நோக்கி ஈர்க்கிறது. இந்த புதுமைப்பெண் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்ட மிகக் குறுகிய கல்வியாண்டுகளில் 20 முதல் 25 சதவிகிதம் வரை பெண்களின் உயர்கல்வி ஆர்வம் அதிகரித்திருக்கிறது. ஏற்கனவே நாம் உயர்கல்வி சேர்க்கை விகிதத்தில் முன்னேறியிருக்கிறோம் புதுமைப்பெண் திட்டம் அதில் பெண் கல்வியை உச்சம் பெற வைக்கும்.

இந்தத் திட்டத்தின் தொடர்ச்சியாக 6 முதல் 12ஆம் வகுப்பு வரை அரசுப்பள்ளிகளில் பயிலும் ஆண் மாணவர்களுக்கு 'தமிழ் புதல்வன்' திட்டமும் தொடங்கப்பட இருக்கிறது. இந்த திட்டமும் நடைமுறைக்கு வந்து விட்டால் நமது உயர்கல்வி கட்டமைப்பு மிகப்பெரிய அளவில் எட்ட முடியா உயரம் தொடும்.

இதே திட்டங்களை அரசுப் பள்ளிகளுக்கு மட்டுமில்லாமல் அரசு உதவி பெறும் பள்ளிகளுக்கும் விரிவு படுத்த வேண்டும் என்பது என் ஆசை.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையிலான அரசு பள்ளிகளின் உட்கட்டமைப்பை வலுப்படுத்த அதிக நிதி ஒதுக்கீடு செய்வதோடு ஒன்றாம்



வகுப்பு முதல் ஐந்தாம் வகுப்பு வரை காலை உணவுத் திட்டத்தை 31ஆயிரம் அரசுப்பள்ளிகள் நடைமுறைப்படுத்துகிறது அரசு. இதனால் அன்றாடம் 16 லட்சம் மாணவர்கள் பயன்பெறுகிறார்கள் என்பதோடு ஆரம்பக்கல்வியில் தொய்வில்லாமல் குழந்தைகள் பயணிக்க இந்த திட்டம் அஸ்திவாரமாக ஒரு தாய் போல இருக்கிறது என்பேன்.

இதே போன்று பல திட்டங்களைச் சொல்ல முடியும். 'முதல்வரின் திறனறிவுத் திட்டம்' என மூன்றே ஆண்டுகளில் கல்வி கட்டமைப்புக்காக செயல்படுத்தப்பட்ட பல திட்டங்களைச் சொல்ல முடியும். புதிய கல்லூரிகள் புதிய பார்வைகளோடு நமது கல்விக்கட்டமைப்பை மிகச்சிறந்த முறையில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் உயர்த்தியுள்ளார்.

தமிழ் சமூகத்தின் வளர்ச்சிப் போக்கில் கல்விதான் மிக முக்கியப் பங்காற்றியுள்ளது. அதில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் மூன்றாண்டுகால ஆட்சி உச்சம் தொட்டிருக்கிறது. எதிர்கால தமிழ்நாட்டின் கட்டமைப்புக்கு மிக மிக வலுவான அடித்தளத்தை வலுப்படுத்தியுள்ளார் நம் முதலமைச்சர்.

★★★







முற்றுகைக்கு மத்தியிலும் மூன்றாண்டு சாதனைகள்



க.கனகராஜ்
மாநில செயற்குழு உறுப்பினர்
இந்திய கம்யூனிஸ்ட் கட்சி – மார்க்சிஸ்ட்

முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையிலான திமுக அரசு மூன்று ஆண்டுகளை நிறைவு செய்திருக்கும் இந்தச் சூழலில் திட்டங்களைத் தாண்டி அரசின் அணுகுமுறைகள் பாராட்டுக்குரியவை.

முதலாவதாக, கனமழை, பெருவெள்ளம், உயிர்ச்சேதம், பொருட்சேதம், கட்டுமானங்கள் பாதிப்பு, உணவுக்கும் குடிநீருக்கும் பற்றாக்குறை என்ற நிலையில் நெல்லை, தூத்துக்குடி மாவட்ட மக்கள் தத்தளித்த போது மாநில அரசு அமைச்சர்களையும், அதிகாரிகளையும், தன்னார்வலர்களையும் இணைத்து எதிர்கொண்ட முறை சமீபகால தமிழ்நாட்டின் வரலாற்றில் முன்னுதாரணம் இல்லாதது ஆகும்.

நாடாளுமன்ற உறுப்பினர்கள், அமைச்சர்கள் உள்ளிட்டோர் தண்ணீரில் தத்தளித்த மக்களை தங்களில் ஒருவராக உணரும்படி பணியாற்றிய மாண்பு சிறப்பான அணுகுமுறை. உதவியாக அவர்கள் பொருட்கள் அளித்தார்கள் என்பதை விட தங்கள் துயரத்தில் பங்கு கொள்ள, துயர் துடைக்க ஒரு அரசு இருக்கிறது என்கிற நம்பிக்கையை அளித்தார்கள். அந்த அணுகுமுறை, அதற்கான திட்டமிடல், அதை நிறைவேற்றிய பாங்கு, நிதிப்பிரச்சனைகள் பல இருந்தும் நிவாரண உதவிகள் அளித்தது ஒரு ஒருங்கிணைந்த அணுகுமுறை.

மாநில உரிமைகளுக்கான போர்க்குரல் என்பதையும் தாண்டி, மதச்சார்பின்மை, கூட்டாட்சியின் குரலாக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களது குரல் இருந்தது. மக்களவைத் தேர்தல் களத்தில் பரப்புரை என்பதையும் தாண்டி ஒரு சித்தாந்த போர்க்களத்தில் முன்னணிப் படை வீரனாக அவரின் பணி இருந்தது.

வைக்கம் போராட்டத்தின் 100ஆவது ஆண்டை கேரளத்திலும், தமிழகத்திலும் இரு மாநில அரசுகளும் இணைந்து நடத்தியதும், குமரி மண்ணில் தோல் சீலை



போராட்டத்தின் 200ஆவது ஆண்டில் இரு மாநில முதல்வர்களும் இணைந்து பங்கேற்றதும், வர்ணாசிரம மற்றும் மனுஅநீதிக்கு எதிரான சீர்திருத்தச் செம்மல் வள்ளலாரின் 200ஆவது ஆண்டை ஆண்டு முழுவதும் தமிழ்நாடு அரசு கொண்டாடியதும் சமூக சீர்திருத்த துறையில் எடுக்கப்பட்ட மிகச் சிறந்த முன்னெடுப்பாகும்.

தொழிற்சாலைகள் சட்டத்தில் வேலை நேரத்தை நெகிழ்வுத் தன்மையுடையதாக மாற்றுவதற்கு ஒரு சட்டத்தை திமுக அரசு சட்டமன்றத்தில் நிறைவேற்றியிருந்தது. மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி உள்ளிட்ட தோழமைக் கட்சிகளும், தொழிற்சங்க அமைப்புகளும், தொழிலாளர்களும் இது கடும் பாதிப்பை ஏற்படுத்தும் என்று சுட்டிக்காட்டிய நிலையில் தமிழ்நாடு அரசாங்கம் அதைக் கைவிடுவது என்று முடிவு செய்தது.

மாற்றுக் கருத்துக்கள் வரும் போது அவற்றை பரிசீலிப்பதும், ஏற்றுக்கொள்வதுமான அணுகுமுறை பொருத்தமான ஒன்றாகும்.

“உறுபசியும், ஓவாப் பிணியும், செறுபகையும் சேரா தியல்வது நாடு” என்று வரையறுக்கிறார் வள்ளுவர்.

‘பிச்சைப்புகினும் கற்கே நன்றே’ என்பது ஔவை வாக்கு. ஆனால், பள்ளிக்குச் செல்லும் குழந்தைகள் பசியோடு செல்வது மிகப்பெரும் கொடுமை. நான் பள்ளியில் படித்துக் கொண்டிருந்த காலத்தில் காலை மாணவர் கூடுகையில் மயங்கி விழும் மாணவர்களை பார்த்திருக்கிறேன். தண்ணீர் கொடுத்து எழுப்பி உட்கார வைத்துக் கேட்டால் காலையில் சாப்பிடவில்லை என்கிற பதில் வரும். சாப்பிடாமல் இருப்பதை விட சாப்பிடுவதற்கு உணவில்லை என்கிற நிலை இன்னும் கொடூரமானது. தமிழ்நாடு அரசு காலைச்சிற்றுண்டித் திட்டத்தை அறிவித்த போது உணவளிப்பது என்பதை விட உணவு உட்கொள்ள வாய்ப்பில்லாத ஏழை மாணவர்களின் உணர்வைப் புரிந்து கொண்ட அந்த அணுகுமுறை உண்மையில் நெகிழச் செய்தது.

விடியல் பயணம் என்கிற திட்டம் ஒருவகையில் ஏழை பெண்களை பொறுத்தமட்டில் வருமானத்திற்கான ஏற்பாடே. வீட்டு வேலை செய்வோர், கூலித் தொழிலுக்கு போவோர் என்று சமூகத்தின் கீழ் அடுக்கில் உள்ள பெண்களுக்கு இது ஒரு வரப்பிரசாதம் என்றே சொல்ல வேண்டும். வீட்டு வேலைக்கு ஏன் தாமதமாக வந்தீர்கள் என்ற கேள்விக்கு டிக்கெட் எடுக்க



பணம் இல்லை, வாங்கிக் கொண்டு வருவதற்கு தாமதமாகி விட்டது என்கிற செய்தியைக் கேட்கும் போதெல்லாம் மிகவும் வருத்தமாக இருக்கும். அதே போன்று சம்பளத்தில் முன்பணம் தாருங்கள்; பயணச் செலவுக்கு கூட அது பயன்படும் என்று சொன்னதையும் கேட்டிருக்கிறேன். இந்தப் பின்னணியில் சராசரியாக ஒரு நாளைக்கு 30 ரூபாய் செலவு குறைவு என்பதே கூட ஏழை குடும்பங்களுக்கு மிகப்பெரும் உதவியாக இருக்கும். அது பணம் சார்ந்தது மட்டுமல்ல; சுயமரியாதையை இழக்காமல் இருப்பதற்கான ஒரு உதவியும் ஆகும்.

அதிமுக அரசாங்கத்தால் ஒருமுறை மாணவர் இலவச பஸ் பயணம் நிறுத்தப்பட்டது. அந்த ஆண்டில் மாணவிகள் விடுபடும் விகிதம் அதிகரித்ததாக சொல்லப்பட்டு மீண்டும் அது தொடர்ந்தது. குடும்பத்தில் ஏதாவது ஒரு செலவு அதிகரித்தால் உடனடியாக பெண் குழந்தைகள் கல்வியில் கை வைப்பது நடைமுறையாக உள்ளது. இந்தப் பின்னணியில் தான் புதுமைப்பெண் திட்டம் கல்வி உதவி என்பதை தாண்டி பெண் குழந்தைகளின் மேம்பாட்டிற்கான மிக முக்கியமான ஒரு முன்னெடுப்பு என்று சொல்ல முடியும். இந்தாண்டு முதல் மாணவர்களுக்கும் இந்தத் திட்டம் விரிவுபடுத்தப்படுவது பாராட்டத்தக்க ஒன்று.

இந்த அணுகுமுறையின் தொடர்ச்சியை நிதிநிலை அறிக்கையிலும் காண முடியும். தமிழ்நாட்டில் வறிய நிலையில் உள்ள சுமார் 5 லட்சம் ஏழைக் குடும்பத்தினருக்கு அடுத்த இரண்டு ஆண்டுகளில் அரசின் உதவிகள் அனைத்தையும் ஒருங்கிணைத்து அவர்களை வறுமையிலிருந்து மீட்டெடுக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என்கிற அறிவிப்பு, தனித்தனி திட்டங்களாக உருவாக்குவது என்பதிலிருந்து ஏழைக்குடும்பத்தை குறி வைத்து எல்லா திட்டங்களையும் இணைத்து அவர்களை வறுமையிலிருந்து மீளச் செய்வதாகும். இது திட்டம் என்பதை விட ஏழைகளின் பால் ஒரு அரசு என்ன விதமான கொள்கைகளைக் கடைபிடிக்கிறது என்பதோடு இணைந்ததாகும்.

மக்களுக்கான நலத்திட்டங்களையும் சமூக நீதி அடிப்படையிலான அணுகுமுறையையும் பின்பற்றி செயல்படும் மாநில திமுக அரசின் மூன்றாண்டு சாதனைகள் தொடரட்டும். சிறக்கட்டும்.

குறைகள் குறையட்டும், நிறைகள் நிறையட்டும்

★★★



ஒருங்கிணைந்த வளர்ச்சியும் சமூகநீதியும்: தமிழ்நாட்டின் திராவிட மாடல்!



திலீப் மண்டல்
பத்திரிகையாளர்

இந்தியாவின் பிற பகுதிகளில் தென்படும் வழக்கமான அரசியல் பாணி தமிழ்நாட்டில் இல்லை. தமிழ்நாட்டின் அரசியல் சமூகப் பொருளாதாரத்துக்கு என ஒரு தனித்துவம் உண்டு. மு.க.ஸ்டாலினின் தலைமையிலான ஆட்சியில், சந்தைப் பொருளாதாரமும் சமூக பாலின நீதி மற்றும் பண்பாடு மொழியியல் தளங்களும் ஒருங்கே வளர்த்தெடுக்கப்படுகிறது. திராவிட மாடல் என அழைக்கப்படும் இந்த அணுகுமுறை கடந்த மூன்று வருடங்களில் (2021–2024) பல வெற்றிக் கதைகளை உருவாக்கியிருக்கிறது.

நல்ல பொருளாதாரம்

இந்தியாவின் இரண்டாவது பெரிய பொருளாதாரம் தமிழ்நாடு ஆகும். 2023ம் நிதி ஆண்டில் மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தி ரூ. 23.64 லட்சம் கோடி. தனி நபர் வருமானமோ, தேசிய சராசரியை விட 1.75 மடங்கு அதிகம். நகரமயமாக்கலும் 48% தமிழ்நாட்டில் அமலாகி இருக்கிறது.

ஏற்றுமதி தயார் குறியீட்டில் (Export Preparedness Index) நாட்டிலேயே முன்னணி வகிக்கும் தமிழ்நாடு, வணிகம் செய்வதற்கு உவப்பான சூழல் குறியீட்டில் (Ease Of Doing Business Index) இரண்டாம் இடம் வகிக்கிறது.



மின்சாதனம் மற்றும் வாகன உற்பத்தியிலும் ஏற்றுமதியிலும் தமிழ்நாடு சிறந்திருப்பதன் மூலம் தமிழ்நாட்டின் தொழில்துறை வலிமையையும் அங்கு நிலவும் உவப்பான வணிகச் சூழலையும் நாம் புரிந்து கொள்ளலாம்.

ஜனவரி 2024ல் நடந்த உலக முதலீட்டாளர்கள் மாநாட்டில் ரூ.6.64 லட்சம் கோடி முதலீடுகளை தமிழ்நாடு ஈர்த்துள்ளது. கிட்டத்தட்ட 27 லட்சம் வேலைவாய்ப்பு உருவாகுமென எதிர்பார்க்கப்படுகிறது. மேலும் டாடா, பெகட்ரான், ஹுண்டாய் உள்ளிட்ட நிறுவனங்களுடன் 4.39 பில்லியன் டாலர் மதிப்பிலான முதலீடுகளுக்கான ஒப்பந்தங்களையும் தமிழ்நாடு பெற்றிருக்கிறது. உள்நாடு மட்டுமின்றி சர்வதேச அளவிலும் தமிழ்நாடு கொண்டிருக்கும் மதிப்புக்கு இது ஒரு சான்று.

2022–2023ஆம் ஆண்டில் தமிழ்நாட்டின் பொருளாதாரம் 8.19 சதவிகிதம் உயர்ந்து, தேசிய சராசரியான 7.24 சதவிகிதத்தை தாண்டியிருக்கிறது. நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 8.8 சதவிகித அளவுக்கு தமிழ்நாடு பங்களித்திருக்கிறது.

சமூகம் மற்றும் பாலின நீதி

தமிழ்நாடு வளர்ச்சிக்கான அடிப்படையாக சமூகநீதி மற்றும் சமவாய்ப்பு ஆகியவை இருக்கின்றன. திராவிட இயக்கத்தின் கொள்கைகள் இவை. திமுகவின் அரசியலுமே கூட மறுவிநியோக கொள்கைகளையும் கல்வி சீர்திருத்தங்களையும் மருத்துவ மேம்பாடுகளையும் முன் வைத்தே முன்னெடுக்கப்படுகிறது. பொருளாதார வளர்ச்சியின் பலன்கள் மக்களுக்கு பரவலாக கிடைப்பதை இது உறுதிப்படுத்துகிறது. இந்த அரசியல் அணுகுமுறை, கணிசமான அளவுக்கு வறுமையை தமிழ்நாட்டில் குறைத்து, வாழ்க்கை தரத்தை உயர்த்தியிருக்கிறது.

தமிழ்நாட்டின் SC/ST புத்தொழில் நிதித் திட்டம், விளிம்புநிலை சமூகங்களுக்கான கடன் வழங்க வழிவகை செய்கிறது. 2022–2023ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில், தமிழ்நாடு அரசாங்கம் 30 கோடி ரூபாயை இத்திட்டத்துக்காக ஒதுக்கியது. நிறைய



வெற்றிக் கதைகளை உருவாக்கி, SC/ST தொழில்முனைவோரால் இன்னும் பல புத்தொழில்களை உருவாக்கும் ஊக்கத்தை தருவதே இந்த திட்டத்தின் நோக்கம் ஆகும்.

இந்தியாவிலேயே அதிக கற்றல் விகிதமும் தமிழ்நாட்டில்தான் இருக்கிறது. குழந்தை இறப்பு விகிதமும் 1,000 குழந்தைகளுக்கு 8.2 ஆக குறைந்து, தாய் நலமும் அதிகரித்திருக்கிறது. பாலின விகிதம் (1,000 ஆண்களுக்கு 996 பெண்கள் விகிதம். தேசிய சராசரி 940) மற்றும் பிறப்பு விகிதம் (75.29) போன்றவை பாலின சம வாய்ப்பு மற்றும் பொது சுகாதாரம் ஆகியவற்றில் மாநிலம் அடைந்திருக்கும் வெற்றியை எடுத்துக் காட்டுவதாக இருக்கின்றன.

நாட்டுக்கே மதிய உணவு திட்டத்தை அறிமுகப்படுத்திய தமிழ்நாடு, தற்போது காலை உணவு திட்டத்தையும் சேர்த்திருக்கிறது. மாநிலத்தின் எல்லா ஆரம்பப் பள்ளிகளுக்கும் காலை உணவு திட்டம் விரிவுபடுத்தப்பட்டிருக்கிறது.

திமுக அரசாங்கத்தின் இன்னொரு முக்கியமான முன்னெடுப்பு புதுமைப் பெண் திட்டமாகும். 2022ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட இத்திட்டம், பொருளாதார ரீதியாக பின்தங்கிய குடும்பங்களின் பெண் குழந்தைகளுக்கு, வங்கிக் கணக்குகள் வழியாக மாதந்தோறும் 1,000 ரூபாயை வழங்குகிறது. அரசுப் பள்ளிகளில் 6 முதல் 12ஆம் வகுப்பு வரை படித்த மாணவிகளுக்கு இத்தொகை இளங்கலை பட்டப்படிப்பு முடிக்கும் வரை கொடுக்கப்படுகிறது. இந்த நிதி உதவி, குழந்தை மற்றும் இளைய வயது திருமணங்களை வெற்றிகரமாக குறைத்து, பள்ளிக்கல்வியை பெண் குழந்தைகள் தொடர்வதை உறுதி செய்திருக்கிறது.

இலவசப் பேருந்து பயணத் திட்டம், திமுக அரசாங்கத்தால் 2021ஆம் ஆண்டு தொடங்கப்பட்டு, மாநிலப் பொருளாதாரத்தில் பெண்களின் பங்களிப்பை அதிகரித்திருக்கிறது. தமிழ்நாடு திட்டக் கமிஷனின் அறிக்கையின்படி, இத்திட்டத்தின்



70 சதவிகித பயனாளிகள் 40 வயதுக்குள் இருப்பவர்கள். அதிலும் 46 சதவிகித பேர் பட்டியல் சாதி மற்றும் பழங்குடி சமூகங்களை சேர்ந்தவர்கள். இத்திட்டத்தால், மாத வருமானத்தில் 812 சதவிகிதம் வரை பயனாளிகள் சேமிக்க முடிகிறது. பெண்களின் வாழ்வில் இத்திட்டம் ஏற்படுத்தியிருக்கும் நேர்மறை தாக்கம் கண்கூடு.

இவற்றுக்கிடையில் தமிழ்மொழிக்கான முக்கியத்துவத்தையும் தி.மு.க. அளித்து வருகிறது. அரசுப் பள்ளிகளில் தமிழ் வழிக் கல்வி பயின்றவர்களுக்கு தொழிற்படிப்புகளில் 7.5 சதவிகித இட ஒதுக்கீடு தரும் தமிழ்நாட்டின் முன்னெடுப்பு, ஏழைத் தமிழர்களுக்கு உதவுவதாக இருக்கிறது. கடைகளிலும் நிறுவனங்களிலும் பணிபுரியும் ஊழியர்கள், உட்காருவதற்கான உரிமைச் சட்டத்தை கூட தமிழ்நாடு நிறைவேற்றியிருக்கிறது.

இலவசங்கள் அல்ல

மக்களுக்கு தமிழ்நாடு அரசாங்கம் இலவசங்களை கொடுப்பதாக சில அறிஞர்கள் விமர்சிப்பதுண்டு. நான் அதை ஒப்புக் கொள்ளவில்லை. அரசியல் சாசனம் வலியுறுத்தும் ஒருங்கிணைந்த வளர்ச்சி என்பது அரசின் தலையீடு இல்லாமல் நேர முடியாது. இது மார்க்சியம் பின்பற்றப்படும் நாடு அல்ல. முதலாளித்துவத்தை பின்பற்றும் நாடு. 'இலவசம் கொடுக்கிறார்கள்' என்கிற விவாதம் மொத்தமும் ஒரு முதலாளித்துவ ஜனநாயக நாட்டில்தான் நடந்து கொண்டிருக்கிறது என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும். இது அடிப்படையில் 'பணக்காரர்களுக்கு சலுகை அளிக்கும்' அணுகுமுறைக்கும் பயன் தந்து திறன்களை உருவாக்கும் அணுகுமுறைக்கும் இடையில் நடக்கும் போட்டி. இத்தகைய விவாதம், இந்தியாவில் ஜக்தீஷ் பக்வதி, அர்விந்த் பனகாரியா மற்றும் அமார்த்யா சென், ஜீன் ட்ரெஸே ஆகியோருக்கு இடையே நடப்பதை நாம் பார்க்க முடியும்.

சுவாரஸ்யம் என்னவென்றால், திறன் வளர்க்கும் அணுகுமுறையை பேசும் அமார்த்யா சென், மார்த்தா நுஸ்பாம், எஸ்தர் டுஃப்லோ மற்றும் அபிஜித் பேனர்ஜீ போன்ற



கோட்பாட்டாளர்கள் மார்க்சியவாதிகள் என்பதுதான். அவர்களில் எவரும் சந்தை வகிக்கும் பங்கை நிராகரிக்கவில்லை. திறன் சார் அணுகுமுறை என்பது வாழ்க்கையின் தரம் மற்றும் நீதி சார்ந்தது என்கிறார் மார்த்தா நுஸ்பாம். மனித வாழ்க்கை, அதன் முழுமையை எட்ட, திறமைகளை கைகொள்ள வேண்டுமென அவர் வாதிடுகிறார். அதாவது, ஒருவரது வாழ்க்கையில் ஒருவரால் சாத்தியப்படும் யாவும் அவருக்கான திறமைகள்தான். இதில் 'மதிப்புக்குரிய வாழ்க்கை' வாழ்வதற்கான திறமையும் அடக்கம். தமிழ்நாடு இதைத்தான் செய்து கொண்டிருக்கிறது.

சாதிக்கு எதிரான பகுத்தறிவு

அதே போல, சாதிக்கு எதிரான நடவடிக்கைகளை முழு வேகத்தில் தி.மு.க. அரசு முன்னெடுக்கிறது. இரண்டு வருடங்களுக்கு முன்பு ஒரு நரிக்குறவப் பெண்ணுக்கு, மாமல்லபுர பெருமாள் கோவிலில் அன்னதானம் மறுக்கப்பட்டது. முதலமைச்சரின் அலுவலகம் அச்சம்பவத்தை இந்து அறநிலையத்துறை அமைச்சர் சேகர்பாபுவின் கவனத்துக்கு கொண்டு சென்றது. உடனே கோவிலில் ஒரு விருந்து ஏற்பாடு செய்யப்பட்டு, ஆணையருக்கும் அமைச்சருக்கும் இடையே அமர்ந்து அப்பெண் முழு உணவையும் உண்ண வழிவகை செய்யப்பட்டது. உண்மையில் அது முக்கியமான நடவடிக்கை.

தமிழ்நாட்டில் ஒரு முற்போக்கான கோவில் இயக்கத்தை தி.மு.க. அரசு செய்து வருகிறது. தி.மு.க.வின் தத்துவத் தலைவரான பெரியாருக்கு ஒரு முக்கியமான



கனவு இருந்தது. சூத்திரர்களும் பெண்களும் கோவில்களில் அர்ச்சகர்களாக நியமிக்கப்பட வேண்டும் என்கிற கனவு. கலைஞர் கருணாநிதி அக்கனவை நிறைவேற்ற எல்லா முயற்சிகளையும் முன்னெடுத்தார். நீதிமன்றத்தின் குறுக்கீட்டாலும் பிற இடையூறுகளாலும் அவரால் அக்கனவை நினைவாக்க முடியவில்லை. இறுதியில், முதல்வர் ஸ்டாலின்தான் அக்கனவை நினைவாக்கி, எல்லா சாதியினரையும் பாலினத்தவரையும் அர்ச்சகர்களாக்கினார்.

திராவிட மாடல்

கடந்த மூன்று வருடங்களில் மு.க.ஸ்டாலினின் அரசாங்கக் கொள்கைகள், வளர்ச்சி என்பது பொருளாதாரம் மட்டுமல்ல என்பதையும், சமூக பண்பாட்டு பரிமாணங்களையும் உள்ளடங்கியது என்பதையும் கொண்ட நுட்பமான புரிதலுடன் வகுக்கப்பட்டிருக்கின்றன. தமிழ்நாட்டின் அனுபவம், சம வாய்ப்பு மற்றும் சமூகநீதி ஆகியவற்றை உள்ளடக்கிய ஒருங்கிணைந்த கொள்கைகள் மற்றும் நிர்வாக பாணிகளின் முக்கியத்துவத்தை முன்வைக்கிறது. உலகமயமாக்கப்படும் தற்காலச் சூழலில் முக்கியமான பாடங்கள் இவை.

இதுதான் தமிழ்நாட்டின் கதை. தனித்துவமான ஒரு பாணியை இந்தியாவுக்கு தமிழ்நாடு வழங்கியிருக்கிறது. இலவச நலத்திட்டங்களை வகுத்து மக்களுக்கு அளிப்பதும் சந்தைகளை கொண்டு பொருளாதார வளர்ச்சியை ஈட்டுவதும் ஒரே நேரத்தில் சாத்தியம் என்பதை மாநிலம் காட்டியிருக்கிறது.

★★★


தொழிலணங்கு


StartupTN
தமிழ்நாடு புத்தொழில் நிறுவனங்கள் மற்றும்
தொழில் காய்பகங்கள் சந்திப்பு
TAMILNADU STARTUPS & INCUBATORS MEET
கண்காட்சி மற்றும் கருத்தரங்கம்

தமிழ்நாடு Startup



பெண்களுக்கான மேம்பாட்டுக்கு வழிகோலும் திராவிட மாடல்!



சங்கீதா கந்தவேல்
பத்திரிகையாளர்

ஒன்றிய புள்ளியியல் மற்றும் திட்ட அமலாக்க அமைச்சகத்தால் எடுக்கப்பட்ட வருடாந்திரக் கணக்கெடுப்பில் ஒரு முக்கியமான செய்தி வெளியானது. இந்தியாவின் தொழில்துறையில் 15.8 லட்சம் பெண்கள் பணிபுரிவதாக கணக்கெடுப்பு குறிப்பிட்டிருந்தது. முக்கியமான தரவு, அவர்களில் 6.79 லட்சம் அதாவது 43 சதவிகித தமிழ்நாட்டை சேர்ந்தவர்கள் என்பதுதான். தமிழ்நாட்டில் அதிகமான எண்ணிக்கையில் பெண்கள் பணிக்கு செல்வதற்கு காரணம் ஒன்றுதான். தமிழ்நாட்டு பெண்கள் தைரியமாக இருக்கிறார்கள். அவர்கள் வெளியே சென்று வேலை செல்வதற்கு குடும்பங்களும் அனுமதிக்கின்றன.

தமிழ்நாட்டில் எல்லா பகுதிகளும் இணையக் கூடிய சிறந்த உள்கட்டமைப்பு இருக்கிறது. பாதுகாப்பான போக்குவரத்து, நல்ல கல்வி வசதிகள், குழந்தைகளைக் கவனித்துக் கொள்வதற்கான மையங்கள், பாதுகாப்பான தங்குமிடங்கள், மருத்துவ வசதிகள் என பெண்களுக்கான வேலைவாய்ப்பு சிறந்திருக்கத் தேவையான எல்லாவற்றையும் தமிழ்நாடு கொண்டிருக்கிறது.



தமிழ்நாட்டின் அரசியலும் சமூகமும் பெண்களை சமூக வளர்ச்சியின் முக்கியமான கண்ணியாகவே அணுகி வந்திருக்கின்றன. தமிழ்நாட்டின் பொருளாதார மற்றும் சமூக வளர்ச்சித் திட்டங்கள் பெண்களை உள்ளடக்கியே திட்டமிடப்பட்டிருக்கிறது. பாலின வேறுபாடு களையப்பட்ட இத்தகைய சமூகப் பொருளாதார முறைக்கான அடித்தளமாக திராவிட அரசியல் அமைந்திருக்கிறது. 2021ஆம் ஆண்டு தமிழ்நாட்டில் ஆட்சியமைத்த மு.க.ஸ்டாலின் தலைமையிலான அரசாங்கம் பெண்களுக்கான வளர்ச்சி மற்றும் நீதியையும் உள்ளடக்கிய இந்த சமூகப் பொருளாதார வளர்ச்சி முறையை திராவிட மாடல் வளர்ச்சி எனக் குறிப்பிடுகிறது.

வேலைவாய்ப்பில் இருக்கும் பாலின இடைவெளியை குறைக்க முதலமைச்சர் மு.க.ஸ்டாலினின் அரசாங்கம் பல முயற்சிகளை முன்னெடுத்திருக்கிறது. ஏழை பெண் குழந்தைகளுக்கு விடுதி, பள்ளிகள், பெண் குழந்தை பாதுகாப்பு, பல பெண் குழந்தைகள் பெற்ற குடும்பத்துக்கு நிதியுதவி, உயர்கல்வி படிக்கும் பெண் குழந்தைகளுக்கான மாதாந்திர உதவி போன்றவை அவற்றில் சில. பெண்கள் பயணச்சீட்டு இன்றி பயணிக்க வழிவகை செய்யும் 'விடியல் பயணத் திட்டம்' பற்றி எம்.விஜயபாஸ்கர் நடத்திய ஆய்வின்படி, பல்வேறு தொழில்களில் இயங்கும் பெண் பயணிகளின் செலவில் ரூ.756 முதல் ரூ.1,012 வரை மாதத்துக்கு சேமிக்க முடிகிறது.

இந்த ஆய்வுக்காக மூன்று மாவட்டங்கள் கணக்கில் எடுத்துக் கொள்ளப்பட்டன. விவசாயம் சார்ந்த நாகப்பட்டினம், தொழில்துறை சார்ந்த திருப்பூர் மற்றும் வணிகம் மற்றும் சுற்றுலா சார்ந்த மதுரை ஆகியவை. இத்திட்டத்தை பயன்படுத்தும் பெண்களில் 39 சதவிகித பேர் பட்டியல் சாதிகளையும், 21 சதவிகித பேர் மிகவும் பிற்படுத்தப்பட்ட சமூகங்களையும் சேர்ந்தவர்கள் என்கிறது ஆய்வு. பேருந்தில் பயணிக்கும் பெண்களில் 50 சதவிகிதத்திற்கும் மேலானோர் 40 வயதுக்குக் கீழ் வயதுகளை கொண்டவர்கள்.

ஆய்வுக்காக பேட்டி கொடுத்த பெண்கள் பலரும், இத்திட்டத்தால் குடும்ப உறுப்பினர்களைப் பணத்துக்கு சார்ந்திருக்க வேண்டிய தேவை குறைந்திருப்பதாக கூறியிருக்கிறார்கள். பெண்கள், தங்களுக்கான மதிப்பையும் அதிகாரத்தையும் பெற்றுக் கொள்வதற்கான சூழலை இத்திட்டம் உருவாக்கியிருக்கிறது.

விடியல் பயணத் திட்டம் பெண்களுக்கான போக்குவரத்தை இலகுவாக்குகிறது என்றால் மறுபக்கத்தில் பெண்களுக்கான கல்வியை



உறுதிப்படுத்தும் வகையில் பல திட்டங்களை முதலமைச்சர் மு.க.ஸ்டாலினின் தலைமை யிலான அரசாங்கம் முன்னெடுத்திருக்கிறது.

சத்துணவும் காலை உணவுத் திட்டமும் பெண் குழந்தைகளுக்கான கல்வியை உறுதி செய்யும் நிலையில், திருமணம் அல்லது வறுமை போன்ற காரணங்களுக்காக கல்வி நிறுத்தப்பட்டு விடக் கூடாது என்கிற எண்ணத்தில் புதுமைப் பெண் திட்டத்தை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அறிவித்திருக்கிறார்.

வறுமைக்கோட்டுக்கு கீழ் இருக்கும் குடும்பங்களைச் சேர்ந்த பெண் குழந்தைகளின் கல்வி நிறுத்தப்பட்டுவிடக் கூடாது என்பதற்காக இளங்கலை படிப்பு வரை மாதாந்திர உதவித் தொகையாக ரூ.1,000 நிதியை இத்திட்டம் வழங்குகிறது.

கல்வியோடும் நின்றிடாமல் பெண்கள் தொழில் முனைவதற்கான வாய்ப்பையும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் உருவாக்கி தந்திருக்கிறார். Start Up எனப்படும் புத்தொழிலை ஊக்குவிப்பதற்காக தமிழ்நாடு அரசாங்கம் மானிய நிதி அளிக்கும் TANSEED (Tamil Nadu Startup Seed Grant Fund) என்கிற திட்டத்தை செயல்படுத்தி வருகிறது. இத்திட்டத்தின் வாயிலாக, பெண் தொழில் முனைவோரை ஊக்குவிக்கும் வகையில் சிறப்பு தொகுப்புகளும் அளிக்கப்படுகின்றன.

இத்தொகுப்புகளின் கீழ், பெண்களின் புத்தொழில்களுக்கென அலுவலக தளங்கள் வழங்கப்படுகின்றன. இவற்றுக்கு வாடகையோ உறுப்பினர் கட்டணமோ முதல் ஒரு ஆண்டுக்கு இருக்காது.

இது மட்டுமின்றி வருடாந்திர தொழில் ஊக்குவிப்பு பயிற்சிகளும் வழங்கப்படுகிறது. இத்தொகுப்பை பெற புத்தொழில் உரிமையாளராக பெண் இருக்க வேண்டும். அல்லது 75 சதவிகித பங்குகளை பெண்கள் அந்த நிறுவனத்தில் கொண்டிருக்க வேண்டும். பெண் தொழில் முனைவோரின் புத்தொழில்களுக்கு 15 லட்சம் ரூபாய் வரை மானிய நிதி வழங்கப்படுகிறது.

பெண் பிறப்பது தொடங்கி, கல்வி, போக்குவரத்து, உயர்கல்வி, சுயதொழில் என படிப்படியாக பெண்ணுக்கான மேம்பாட்டை அரசு நின்று செய்து தரும் பாலின நீதிக்கான தனித்துவம், திராவிட மாடலுக்கான அடையாளம் என்று கூட சொல்லலாம்.

★★★



தமிழ்நாட்டை பின்தொடரும் இந்தியா!



அருள் எழிலன்
பத்திரிகையாளர்

1967 ஆம் ஆண்டு முதன் முதலாக ஒரு மாநிலக் கட்சி ஒன்றியத்தில் ஆட்சியைப் பிடித்த போது அது வேறுபட்ட பண்பாட்டு மறுமலர்ச்சியை சமூக தளத்தில் உருவாக்கும் என யாருமே எதிர்பார்க்கவில்லை. முத்தமிழறிஞர் கலைஞரின் நூற்றாண்டு விழா கொண்டாடும் இந்த ஆண்டில் திராவிட இயக்கம் ஆட்சியைப் பிடித்து 57 ஆண்டுகளை நிறைவு செய்திருக்கிறது. அரை நூற்றாண்டுகாலம் ஒரு சமூக இயக்கம் தாக்குப் பிடித்து நிற்க அதன் வேர்கள் ஆழமாக ஊன்றி நிற்கும் சிந்தனையும் அது தன்னை வெளிப்படுத்திக் கொள்ளும் விதமும் முக்கியம். இந்த அரைநூற்றாண்டில் ஐந்து முறை முதலமைச்சராக இருந்த கலைஞர் 1969ஆம் ஆண்டு பிப்ரவரி 10ஆம் நாள் முதல்வராக பதவியேற்ற போது சமூக சீர்திருத்தத்தையே முதன் நோக்கமாகக் கொண்டு ஆட்சி செய்தார்.

அப்போது அவர் செய்த சீர்திருத்தங்களுக்கு பெயர் எதனையும் வைத்துக் கொள்ளவில்லை. விவசாய தொழிலாளர் ஊதியச்சட்டம், நில உச்ச வரம்புச் சட்டம் என வேளாண் சமுதாயங்களுக்கிடையில்





நிலவும் பாரபட்சங்களை சரி செய்வதே அவர் நோக்கமாக இருந்தது. குளித்தலை சட்டமன்ற தொகுதியில் இருந்து முதன்முதலாக தெரிவாகி சட்டமன்றம் சென்ற போது அவரது முதல் உரையில் மையம் நங்கவரம் விவசாயிகள் பிரச்சனை அதன் அடிநாதமே நிலச் சீர்திருத்தம்தான். 1969 முதல் 1976 வரை வேளாண் குடிகளுக்கான நீதிக்காகவே அவர் ஆட்சி செய்தார். குடிசைகள் ஒழிப்பு, கை ரிக்ஷா ஒழிப்பு, நிலப்பகிர்வு என ஒவ்வொரு திட்டங்களும் சீர்திருத்தங்களின் பெரும் பாய்ச்சல் எனச் சொல்லலாம். ஆட்சிக்கு வந்ததும் ராஜமன்னார் கமிட்டி அமைத்து அதன் அடுத்த பாய்ச்சலை தொடங்கிவைத்தார். பிறபடுத்தப்பட்டோருக்கு 31 சதமும், பட்டியல் சாதி மக்களுக்கு 18 சதம் என கல்வி வேலைவாய்ப்புகளில் இட ஒதுக்கீடு முறையை தொடங்கி வைத்தார் அதுவே இன்று 69 சத இட ஒதுகீடாக வளர்ந்து நிற்கிறது. 57 ஆண்டுகால திராவிட ஆட்சிமுறை படிப்படியாக தன்னை நவீன மாற்றங்களுக்கு உட்படுத்தி வந்துள்ளதை நாம் மிக மிக துல்லியமாக கவனிக்க முடியும். அதையும் 1970களில் தொடங்கி வைத்தவர் கலைஞர். 1970களில் சிட்கோவையும், 1971ஆம் ஆண்டு சிப்காட்டும் தொடங்கப்பட்ட போது தமிழ்நாடு தனது சமூக சீர்திருத்தப்பயணத்தை தொழில் வளர்ச்சியோடு இணைத்துக் கொண்டது.

இன்று முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் 'திராவிட மாடல்' என பெயரிட்டு மூன்றாண்டுகளை நிறைவு செய்திருக்கும் போது, ஒட்டு மொத்த இந்தியாவும் இன்று தமிழ்நாட்டை பின் தொடரவும் சமூக நலத்திட்டங்களில் தமிழ்நாட்டின் சாயலை உள்வாங்கி அறிவிக்கும் போக்கையும் நாம் பார்க்கிறோம். இந்த இடத்துக்கு வந்து சேர 50 ஆண்டுகள் அஸ்திவாரம் இடப்பட்டு வலுவான அடித்தளத்தோடு



எழுந்து நிற்கிறது 'திராவிட மாடல்' ஆட்சி. இந்த மூன்றாண்டுகளில் சமூகம், பொருளாதாரம், நவீனம் என்ற மூன்று முனைகளில் பெரும்பாய்ச்சலை நிகழ்த்தியுள்ளது.

'கலைஞர் நூற்றாண்டு உயர் சிறப்பு மருத்துவமனை'

தமிழ்நாட்டின் அனைத்து மக்களுக்கும் திராவிட மாடல் அரசு தரமான இலவச மருத்துவத்தை மாவட்டம் தோறும் வழங்கினாலும், உயர் சிறப்பு மருத்துவத்தின் தேவை சென்னை மக்களுக்கு போதுமான அளவுக்கு இல்லாமல் இருந்தது. கலைஞர் ஆட்சியில் கட்டி திறக்கப்பட்ட புதிய தலைமைச் செயலகத்தை பன்னோக்கு மருத்துவமனையாக மாற்றிய முந்தைய அரசால் அதை முழுமையான மருத்துவமனையாக பயன்படுத்த முடியாமல் இருந்தது. காரணம் அது மருத்துவமனை கட்டடம் அல்ல, தலைமைச் செயலகக் கட்டமைப்பை மருத்துவமனையாக மாற்றியதால் பெரிய பயனில்லாமல் போனது. உயர் சிறப்பு மருத்துவமனையின் தேவையை கலைஞர் நூற்றாண்டு விழாவில் வெறும் 15 மாதங்களில் கட்டி முடித்து மக்களுக்கும் அர்ப்பணித்தார் முதலமைச்சர் ஸ்டாலின் அவர்கள்.

ரூ 230 கோடி செலவில் 51,429 சதுர மீட்டர் பரப்பளவில் 6 தளங்களுடன் ஆயிரம் படுக்கை வசதிகளுடன் உருவாக்கப்பட்டது. தமிழ்நாட்டின் அதி நவீன மருத்துவமனையாக உருவாகியுள்ள இந்த மருத்துவமனையில் சிறுநீரகவியல், இருதயவியல், கதிரியக்கவியல், நரம்பியல், நுண்ணுயிரியல், மயக்கவியல் மற்றும் அறுவை சிகிச்சை, அவரச சிகிச்சை, பல்வேறு ஆய்வகம் என்று மொத்தம் 20 உயர் சிறப்பு பிரிவுகள் அமைக்கப்பட்டுள்ளது. இதயம், நரம்பு, இரைப்பை, சிறுநீரகம், ரத்தநாளம், புற்றுநோய், ரத்த மாற்று தொடர்பான உயர் சிகிச்சைகள் என நவீன 20 துறைகள் சிகிச்சை நோக்கில் உருவாக்கப்பட்டுள்ளது. சென்ற ஆண்டு ஜூன் மாதம் தமிழ்நாட்டு மக்களுக்கு முதலமைச்சர் ஸ்டாலின் அவர்களால் அர்ப்பணிக்கப்பட்ட இந்த மருத்துவமனை ஓராண்டை நிறைவு செய்த போது இந்த ஓராண்டில் இரண்டரை லட்சம் பேர் தமிழ்நாடு முழுவதிலும் இருந்து உயர் சிகிச்சை பெற்றுள்ளார்கள்.

நடுத்தர ஏழை மக்களுக்கு உயர் சிகிச்சை என்பது எட்டாக் கனியாக இருந்ததை கலைஞர் காப்பீட்டுத் திட்டம் எளிதாக்கியது. முதலமைச்சரின் இந்த சிறப்பு உயர் மருத்துவமனையோ உயர்



சிகிச்சையில் முன்னோடியாக தமிழ்நாட்டை மாற்றியதன் சென்னை அடையாளமாக 'கலைஞர் நூற்றாண்டு உயர் சிறப்பு மருத்துவமனை' எழுந்து நிற்கிறது.

கலைஞர் நூற்றாண்டு நூலகம்

மதுரைக்கு பெருமை மிகு அடையாளங்கள் பல உண்டு. அதில் அறிவார்ந்த அடையாளமாக மாறியிருப்பது கலைஞர் நூற்றாண்டு நூலகம். கலைஞர் நூற்றாண்டு விழாவின் ஒரு பகுதியாக இந்திய அளவில் கவனம் ஈர்த்திருக்கிறது மதுரையில் பிரம்மாண்டமாக கட்டப்பட்டுள்ள மதுரை கலைஞர் நூலகம். கடந்த ஆண்டு ஜூலை 15ஆம் தேதி திறந்த முதல் ஒரு மாத காலத்தில் ஒரு லட்சம் பேருக்கு மேல் வந்து சென்றுள்ளனர்.

ஆறு தளங்களைக் கொண்ட இந்த நூலகம் தெற்காசியாவின் பெரிய நூலகம் என்ற தனிச்சிறப்போடு கம்பீரம் காட்டுகிறது. தரைத் தளத்தில் மாற்றுத் திறனாளிகள் பிரிவு, மாநாட்டுக் கூடம், குழந்தைகளைக் கவரும் அறிவியல் அரங்கமும், இரண்டாம் தளத்தில் சங்க காலம் முதல் சமகாலம் வரையிலான தமிழ் படைப்புகளும், மூன்றாம் தளத்தில் ஆங்கில நூல்களும், நான்காம் தளத்தில் போட்டி தேர்வுகளுக்கு தயாராக 30 ஆயிரம் நூல்களோடு உலகத் தரமான தேர்வுகளுக்குக் கூட வழியமைத்துக் கொடுத்திருக்கிறது. ஐந்தாம் தளம் டிஜிட்டல் துறை இங்கே அரிய வகை நூல்கள் அனைத்தும் டிஜிட்டல் மயமாக்கப்பட்டு முழுமையாக கணிப்பொறி வசதிகளோடு உருவாக்கப்பட்டுள்ளது.

3.56 ஏக்கர் பரப்பில் 2 லட்சத்து 13 ஆயிரம் சதுர அடியில் விசாலமான பார்வையை மக்களிடம் உருவாக்க எழுந்து நிற்கிறது கலைஞர் நூற்றாண்டு நூலகம்

கலைஞர் நூற்றாண்டு ஏறுதழுவுதல் அரங்கம்

தமிழர்களின் பண்பாட்டு அடையாளங்களுள் முதன்மையானது ஜல்லிக்கட்டு. திராவிட இயக்கம் தமிழ்நாட்டு மண்ணில் வேர் விட்ட பின்னர்தான் பொங்கலும் ஜல்லிக்கட்டும் தமிழர்களின் தலையான விழாவாக மாற்றம் பெற்றது. உழவர் குடிகளின் பெரும்பண்பாட்டு நிகழ்வு அடையாளங்களில் ஏறுதழுவுவதை அடையாள நினைவாக மாற்றியதில் கலைஞருக்கு பெரும் பங்குண்டு. அவரது உரைகள், எழுத்துக்கள், கவிதைகள் என ஒட்டு



மொத்த கலை, இலக்கிய அரசியல் செயல்பாடுகள் முழுக்க ஏறுதழுவுவதல் பெரும் தாக்கத்தை செலுத்தியதை நாம் பார்க்க முடியும். கலைஞரின் இந்த நூற்றாண்டில் அவருக்கு செய்யும் பெரிய அஞ்சலிகளில் இதுவும் ஒன்று. கலைஞர் பெயரிலேயே கலைஞர் நூற்றாண்டு ஏறுதழுவுதல் அரங்கம் அமைந்துள்ளது கலைஞருக்கு மட்டுமல்ல தமிழ் சமூகத்துக்கும் வேளாண் குடிகளுக்கும் வழங்கப்பட்டுள்ள மாபெரும் அங்கீகாரம் ஆகும்.

மதுரை கீழக்கரையில் 66.80 ஏக்கர் பரப்பில், 77,683 சதுரஅடி பரப்பளவில் 62.78 கோடி ரூபாய் செலவில் உருவாக்கப்பட்டுள்ள இந்த அரங்கம் விளையாடுவதற்கு மட்டுமின்றி முல்லை நில மக்களின் பண்பாட்டு அடையாளமாக இருந்த ஏறுதழுவும் வரலாற்றை எடுத்துக் காட்டும் அருங்காட்சியகமும் அமைக்கப்பட்டுள்ளது. இதில் கல்வெட்டுகள், புகைப்படங்கள் தமிழர்களின் வீரவரலாற்றைப் பேசுகிறது.

இந்த ஆண்டு ஜனவரி 24ஆம் தேதி அரங்கத்தை திறந்து வைத்து உரையாற்றிய முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் ‘‘மதுரையை தூங்கா நகரம் என்பர். போட்டி என்று வந்துவிட்டால் தோல்வியை தூள் தூளாக்கும் நகரம் மதுரை என்பதை வாடிவாசல் ஆண்டுதோறும் மெய்ப்பித்துக்கொண்டிருக்கிறது. இங்கு அமைந்துள்ள இந்த பண்பாட்டு சின்னம், தமிழ்நாட்டுடைய பண்பாட்டின் மரபின் தொடர்ச்சி. சிந்து சமவெளி காலத்து முத்திரைகளிலேயே திமிலுள்ள காளைகள் உள்ளன. அதில் காளைகளின் நேர்கொண்ட பார்வையை நாம் பார்க்கலாம்... பல்லாயிரமாண்டுக்கு முன்பிருந்த ஓவியங்கள் திரண்டு தொங்கும் தாடை, அகன்று வளைந்த கொம்பு கொண்ட காளைகள் உள்ளன. கீழடியில் திமிலுள்ள காளையின் முழு எலும்புகூட கிடைத்துள்ளது. முல்லை நில மக்களின் வீர விளையாட்டாக காளையை மையப்படுத்திய ஜல்லிக்கட்டு இருந்துள்ளது’’ என பல்லாயிரம் ஆண்டுகால ஏறுதழுவும் பண்பாட்டை எடுத்துரைத்தார்.

கலைஞர் பெயரில் அமைந்த இந்த அரங்கில் நடந்த முதல் போட்டியில் 478 காளைகளும் அதை அடக்க வீரர்கள் என 250 பேரும், அதை பார்க்க பல்லாயிரம் பேரும் வந்திருந்தனர். முடிவில் அதிக மாடுகளை பிடித்த அபிசித்தருக்கு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஒரு காரும், தமிழ்நாடு அரசு ஒரு லட்சம் ரூபாய் பரிசும் கொடுத்தது. இந்த போட்டியில் பங்கேற்ற சிறந்த காளைக்கு முதலமைச்சரின் பரிசாக ஒரு காரும், தமிழ்நாடு அரசின் பரிசாக ஒரு லட்சமும் வழங்கப்பட்டது.

ஏறுதழுவுதல் என்ற பண்பாட்டு அசைவில் கீழக்கரை கலைஞர் நூற்றாண்டு ஏறுதழுவுதல் அரங்கம் மகுடமாக அமைந்து விட்டது.

கலைஞர் நூற்றாண்டு பேருந்து முனையம் - கிளாம்பாக்கம்

கடந்த டிசம்பர் மாதம் கிளாம்பாக்கம் பேருந்து நிலையம் திறக்கப்பட்ட போது அந்த முனையத்தின்





முன் வாசலில் கலைஞர் கம்பீரமாக வீற்றிருந்தார். காரணம் சென்னை கலைஞரின் கனவு நகரங்களில் ஒன்று தமிழ்நாட்டையே தொழில் வளர்ச்சி மிக்க நகரமாக மாற்ற அவர் கண்ட முயற்சியில் ஒரு விளைவுதான் கோயம்பேடு பேருந்து நிலையம். சென்னையில் அடுத்தக் கட்ட வளர்ச்சிக்கு ஏற்ப கிளாம்பாக்கம் பேருந்து நிலையத்தை கலைஞர் நூற்றாண்டு விழா ஆண்டில் திறந்து வைத்தார். முதலமைச்சர் மு.க.ஸ்டாலின்.

தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறையின் பங்களிப்பில் சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் சார்பில் ரூ.393.74 கோடி செலவில், 88.52 ஏக்கர் பரப்பளவில் உருவாக்கப்பட்டுள்ள இந்த பேருந்து நிலையம் சென்னை நகரின் போக்குவரத்து நெருக்கடிகளைக் குறைக்க 3,500 பேருந்துகள் வந்து செல்லும் வசதியோடு ஐ விரல் அமைப்பில் உருவாக்கப்பட்டுள்ளது. ஒரே நேரத்தில் 130 அரசுப் பேருந்துகளையும் 85 தனியார் பேருந்துகளையும் நிறுத்த முடியும். வெளியூர் பயணிகள் பெரும்பாலும் மாலை நேர பயணங்களை மேற்கொள்வர். அன்றாடம் அவர்கள் போக்குவரத்து நெருக்கடியில் சிக்குவதும் பண்டிகைக் காலங்களில் பல மணி நேர தாமதம் ஏற்படுவதையும் மனதில் கொண்டு வளர்ச்சியடைந்து வரும் சென்னையின் ஒரு முனையமாக கிளாம்பாக்கத்தை மாற்றுகிறது இந்த பேருந்து நிலையம்.

தூய்மையான குடிநீர், கழிப்பிட வசதிகள், வடிகால் வசதிகள், மாற்றுத் திறனாளிகள் வந்து செல்வதை மனதில் கொண்டு வடிவமைக்கப்பட்டுள்ள கட்டமைப்பு என கிளாம்பாக்கம் பேருந்து நிலையத்தை அன்றாடம் லட்சக்கணக்கான மக்கள் பயன்படுத்த தொடங்கி விட்டனர். கலைஞர் நூற்றாண்டு பேருந்து முனையத்தை சென்னை நகரத்தோடு நெருக்கமாக இணைக்க ஒரு புதிய புறநகர் ரயில் நிலையப் பணிகளை தமிழ்நாடு அரசு தொடங்கியுள்ளது. பேருந்து நிலையத்தையும் புதிய ரயில் நிலையத்தையும் இணைக்க ஆகாய நடைபாதை மூலம் இணைக்க திட்டமிட்டு பணிகளும் தொடங்கியுள்ளது.

கிளாம்பாக்கம் புதிய பேருந்து முனையம் கலைஞர் நூற்றாண்டில் அவருக்கு சூட்டிய மகுடம் எனலாம்.



முத்தமிழறிஞர் கலைஞர் நினைவிடம்

அண்ணாவும், தம்பி கலைஞரும் துயில் கொள்ளும் சதுக்கம் அண்ணா கலைஞர் நினைவில்லம் என இப்போது மக்களால் அழைக்கப்படுகிறது. பேரறிஞர் அண்ணா தமிழ்நாடு என்ற நிலப்பரப்புக்கு பெயரிட்டுச் சென்றார். கலைஞரோ தனது அரசியல் ஆளுமைத் திறத்தாலும் நிர்வாகத் திறமையாலும் தமிழ்நாடு என்ற நிலப்பரப்பை கட்டமைத்தார். தமிழ் சமூகம் இன்று எத்தனையோ இடர்களைக் கடந்து எழுந்து நிற்கிறது இந்த சமுதாயம் ஆக்கப் பெற்ற வரலாற்றில் பொன்னெழுத்துக்களில் பொறிக்க வேண்டிய பெயர்தான் முத்தமிழறிஞர் கலைஞரின் பெயர். அவர் வாழ்ந்த காலத்திலேயே அண்ணாவுக்கு அருகில் இடம் கேட்டவர். ஆட்சியில் இல்லாத போதே அதை போராடி சாதித்தவர் இன்றைய முதலமைச்சர்.

அண்ணாவும் கலைஞரும் துயில் கொள்ளும் நினைவிடங்களை 8.57 ஏக்கர் பரப்பளவுக்கு விரிவு படுத்தி அதை சென்னையின் முதன்மை அடையாளங்களுள் ஒன்றாக திராவிட மாடல் அரசு மாற்றியுள்ளது. இந்த சதுக்கத்தின் கீழே நிலவறைப் பகுதியில், "கலைஞர் உலகம்" எனும் பெயரில் 20 ஆயிரம் சதுர அடியில் உருவாக்கப்பட்டுள்ள விர்ச்சுவல் வரலாறுதான் இந்த நினைவில்லத்தின் சிறப்பு. செயற்கை நுண்ணறி தொழில்நுட்ப உதவியுடன் உருவாக்கப்பட்டுள்ள அருங்காட்சியத்துக்கான சுரங்கப்பாதை ஈர்க்கிறது. உள்ளே சென்றால் கலைஞர் எழுதிய புத்தகங்களின் பெயர்கள் 'க' என்ற ஒற்றை எழுத்தை உள்ளடக்கி பொறிக்கப்பட்டுள்ளது.

கலைஞர் எழிலோவியங்கள் என்ற பெயரில் ஒரு அறை. கலைஞரின் இளமைக்காலம் முதல் முதுமைக்காலம் வரையிலான அரிய புகைப்படங்கள் அலங்கரிக்கின்றன. அத்தோடு "அப்பா என்று அழைத்துக் கொள்ளட்டுமா தலைவரே" என்று எழுதிய உருக்கமான வரிகளும் வியப்பையும் கண்ணீரையும் ஒரே சேர வரவைக்கிறது.

உரிமைவீரர் கலைஞர் என்ற பெயரிலான அறையில் சுதந்திர தினத்தன்று தேசியக் கொடியை மாநில முதலமைச்சர்களே ஏற்றிடும் உரிமையை பெற்றுத் தந்து சென்னை




கோட்டையில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் உரையாற்றுவது போன்ற காட்சியமைப்பு செயற்கை நுண்ணறிவு AI (Artificial Intelligence) உதவியுடன் உருவாக்கப்பட்டுள்ளது. கம்பீரமாக நின்றபடி முத்தமிழறிஞர் கலைஞர் உரையாற்றுவது அவர் நேரடியாக உரையாற்றுவது போன்ற உணர்ச்சியைக் கொடுக்கிறது.

கலைஞரின் வாழ்க்கைக் காவியமான நெஞ்சுக்கு நீதி உட்பட 8 புத்தகங்களின் தலைப்புடன் டிஜிட்டல் திரை உருவாக்கப்பட்டுள்ளது. அதில் எந்த புத்தகத்தைத் தொட்டாலும் அந்த புத்தகம் பற்றிய விளக்கம் விடியோவாக விரிகிறது. எண்பது ஆண்டு பொதுவாழ்க்கை, எழுபது ஆண்டுகள் திரைத்துறை, எழுபது ஆண்டுகள் பத்திரிகையாளர், 60 ஆண்டுகள் சட்டமன்ற உறுப்பினர், 50 ஆண்டுகள் திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர் என கலைஞர் ஒரு வரலாறு. இது இரு தனி மனிதனின் வரலாறு அல்ல ஒரு சமூகத்தின் வரலாறு தென்னிந்தியாவின் வரலாறும் கூட. அவரது ஒட்டு மொத்த வாழ்வும் பணிகளும் அவர் பிறந்து வாழ்ந்த இந்த தமிழ் சமூகத்தின் விளைவுதான். கடற்கரையில் அதி நவீனமாக உருவாகியிருக்கும் கலைஞர் நினைவில்லமும் அந்த விளைவுகளைத் தாங்கி நிற்கிறது.

அண்ணா நினைவிட வளாகத்தில் கிழக்குப் பகுதியில் உருவாக்கப்பட்ட இந்த நினைவில்லம் தமிழ்நாடு முதலமைச்சரின் நேரடிப் பார்வையில் உருவானது. பிரதான அரங்கத்தில் அமைக்கப்பட்டுள்ள வளைவுகளின் வெளிப்புறமானது வியட்நாம் பளிங்கு கற்களால் அமைக்கப்பட்டுள்ளது. இந்த பளிங்கு கற்பலகைகளில் வரையப்பட்டுள்ள கலைஞரின் உருவ ஓவியங்கள் இரவிலும் ஒளிரும் தன்மையைக் கொண்டது. பல தலைவர்களின் நினைவில்லங்கள் மெரினா சதுக்கத்தில் உள்ளது ஆனால் முத்தமிழறிஞர் கலைஞரின் நினைவில்லம் மட்டுமே தமிழ்நாட்டின் நவீன வரலாற்றைச் சுமந்திருக்கிறது.

கலைஞர் நினைவில்லத்தை திராவிட அரசியல் பண்பாட்டின் தொடர்ச்சியாகவும் பார்க்கலாம். மாபெரும் இரண்டு ஆளுமைகளின் அருங்காட்சியகமாகவும் பார்க்கலாம். தமிழ்நாட்டின் அரை நூற்றாண்டுகால பண்பாட்டு அசைவின் அஸ்திவாரமாகவும் பார்க்கலாம்.

★★★



பொதுத்துறை, பொது நிருவாகம், இந்திய ஆட்சிப் பணி, இந்தியக் காவல் பணி, இந்திய வனப்பணி, மற்ற அகில இந்தியப் பணி, மாவட்ட வருவாய் அலுவலர்கள், காவல், உள்துறை, சிறப்பு முயற்சிகள் மற்றும் மாற்றுத் திறனாளிகள் நலன்



திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள்
மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்

பொதுத்துறை

ஓய்வூதியம்

- விடுதலைப் போராட்ட வீரர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினருக்கு மாநில அரசால் வழங்கப்பட்டு வரும் மாதாந்திர ஓய்வூதியத் தொகை 2021ஆம் ஆண்டு முதல் ரூ.17,000லிருந்து படிப்படியாக உயர்த்தப்பட்டு, தற்போது ரூ.20,000ஆகவும், குடும்ப ஓய்வூதியம் ரூ.8,500லிருந்து ரூ.11,000ஆகவும் வழங்கப்பட்டு வருகிறது.
- வீரபாண்டிய கட்டபொம்மன் வழித்தோன்றல்கள், மருதுபாண்டியர் சகோதரர்களின் வழித்தோன்றல்கள், முன்னாள் இராமநாதபுர மன்னர் முத்துராமலிங்க விசயரகுநாத சேதுபதியின் வழித்தோன்றல்கள் மற்றும் சுதந்திரப் போராட்ட தியாகி செக்கிழுத்த செம்மல் வ.உ.சிதம்பரனார் அவர்களின் வழித்தோன்றல் ஆகியோருக்கு வழங்கப்பட்டு வரும் சிறப்பு ஓய்வூதியம் 2021ஆம் ஆண்டு முதல் ரூ.8,500லிருந்து படிப்படியாக உயர்த்தப்பட்டு, தற்போது ரூ.10,000ஆக வழங்கப்பட்டு வருகிறது.

காவல்துறை

- கொரோனா தடுப்புப் பணிகளில் ஈடுபட்ட காவல் துறையினருக்குப் பாதுகாப்பு உபகரணங்கள் வாங்க ரூ.5 கோடி நிதி ஒதுக்கீடு.
- கொரோனா தொற்று தடுப்பில் களப்பணியாற்றிய 1.17 இலட்சம் காவல் துறையினருக்கு ஊக்கத்தொகையாக ரூ.5,000 வழங்கப்பட்டது.
- காவல் துறை மற்றும் பொதுமக்களிடையே உள்ள நல்லுறவை மேம்படுத்த ஐந்தாவது காவல் ஆணையம் அமைக்கப்பட்டது.



- மெரினாக் கடற்கரையில் பொதுமக்கள் நீரில் மூழ்கி இறக்கும் நிகழ்வுகளைத் தடுக்க மெரினாக் கடற்கரை உயிர்க்காப்புப் பிரிவு (Marina Beach Life Guard Unit) துவங்கப்பட்டது.
- காவலர்களுக்கு வழங்கப்படும் இடர்படி ரூ.800லிருந்து ரூ.1,000ஆக உயர்வு.
- காவல் ஆளிநர்களின் தற்செயல் விடுப்பிற்கு ஒப்புதல் அளிக்கும் மென்பொருள் (CLAPP APP) ஒன்று ரூ.10 இலட்சம் செலவில் உருவாக்கப்பட்டது.
- உங்கள்தொகுதியில்முதலமைச்சர்திட்டத்தின் ஒருபகுதியாகசிறப்புகுறைதீர்க்கும்முகாம்கள் நடத்தப்படுகின்றன.
- ஆவடி மற்றும் தாம்பரம் என இரு புதிய ஆணையரகங்கள் உருவாக்கப்பட்டது.
- புதியதாக உருவாக்கப்பட்ட ஆவடி மற்றும் தாம்பரம்ஆணையரகங்களுக்குரூ.44.46கோடிச் செலவில் 352 நான்கு சக்கர வாகனங்கள், 396இரண்டுசக்கரவாகனங்கள்வழங்கப்பட்டன.
- ரூ.25இலட்சம்செலவில்தனிச்செயலிமூலம் காவலர்கள் குறை தீர்க்கும் வசதி.
- மாநிலஇணையவழிகுற்றப்புலனாய்வுமையம் உருவாக்கப்பட்டது.
- பெண்களுக்கு எதிரான குற்றங்களைத் தடுக்க 39 புதிய மகளிர் காவல் நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.
- கோயம்பேடு, கோட்டூர்புரம், புழல் உள்ளிட்ட 19இடங்களில்புதியமகளிர்காவல்நிலையங்கள் அமைப்பதற்கான ஆணை.
- தமிழ்நாடுகாவல்துறையில்மகளிர்காவலர்கள் இணைந்து50ஆண்டுநிறைவுபெற்றதையடுத்து, நடைபெற்ற பொன் விழா நிகழ்ச்சியில் சிறப்பு தபால் உறை வெளியிடப்பட்டு, பெண்கள் பாதுகாப்பைஉறுதிசெய்யும்வகையில்'அவள்' (AVAL – Avoid Violence Through Awareness and Learning) திட்டம் அறிமுகம்.
- மாநில நுண்ணறிவுப் பிரிவில் புதியதாக தீவிரவாத தடுப்புப் பிரிவு உருவாக்கம்.
- 62காவலர்குடியிருப்புகள்,2காவல்நிலையங்கள், திருநெல்வேலி மாநகர் மற்றும் மாவட்ட ஆயுதப்படைகளுக்கு 2 ஒருங்கிணைந்த நிருவாகக் கட்டடங்கள் திறப்பு.
- சென்னை பெருநகரக் காவல் துறையின் பயன்பாட்டுக்காக 25 ஹூண்டாய் கிரெட்டா, 8இன்னோவாகிரிஸ்டாமற்றும்20பொலிரோ ஜீப் ஆகிய வாகனங்கள் வழங்கப்பட்டன.

தமிழ்நாடு காவலர் வீட்டுவசதிக் கழகம்

- ரூ.481.92கோடிச்செலவில்2,882காவல்துறை வாடகை குடியிருப்புகள், ரூ.42.88 கோடிச் செலவில் 42 காவல் நிலையங்கள் மற்றும் ரூ.84.53கோடிச்செலவில்14இதரகாவல்துறை கட்டடங்கள்.



- ரூ.30.94 கோடிச் செலவில் 181 தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை குடியிருப்புகள், ரூ.34.61 கோடிச் செலவில் 21 தீயணைப்பு மற்றும் மீட்புப் பணி நிலையக் கட்டடங்கள் மற்றும் ரூ.2.45 கோடிச் செலவில் 2 இதர தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை கட்டடங்கள்.
- ரூ.12.03 கோடிச் செலவில் 64 சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் துறை குடியிருப்புகள், ரூ.33.23 கோடிச் செலவில் 30 சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் இதர கட்டடங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை

- தமிழ்நாடு தீயணைப்புத் துறை பணியாளர்கள் 61,288 தீ விபத்து அழைப்புகளிலும், 2,57,209 மீட்பு அழைப்புகளிலும் பணியாற்றி 42,224 மனித உயிர்களையும், ரூ.605.06 கோடி மதிப்புள்ள உடைமைகளையும் காப்பாற்றி உள்ளனர்.

பணியாளர் நலன்

- தீயணைப்புப் பணியாளர்களின் பாதுகாப்பிற்காக ரூ.55.62 கோடிச் செலவில் தலைக்கவசம் மற்றும் காலணியுடன் கூடிய 1,850 தீபாதுகாப்பு உடைகள், 650 மூச்சுக் கருவிகள், பாதுகாப்பு உபகரணங்களுடன் கூடிய 3,500 மீட்பு உடைகள் வாங்க ஆணை.
- தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை பணியாளர்களுக்குகட்டப்படும்குடியிருப்புகளின் கட்டடப் பரப்பளவு மற்றும் காப்பீட்டு இடர் பாதுகாப்புத் தொகை காவல் துறைப் பணியாளர்களுக்கு இணையாக அதிகரிக்கப்பட்டுள்ளது.
- தீயணைப்பு மற்றும் மீட்புப் பணியாளர்களின் சேமநல நிதிக்கான மானியம் ரூ.20 இலட்சத்திலிருந்து ரூ.40 இலட்சமாக உயர்வு.
- மண்டல மற்றும் மாநில அளவில் நடத்தப்படும் விளையாட்டுப் போட்டிகளுக்கான செலவினத் தொகையின் உச்சவரம்பு ரூ.3 இலட்சத்திலிருந்து ரூ.6 இலட்சமாக உயர்வு.

நவீன வாகனங்கள் மற்றும் உபகரணங்கள் கொள்முதல்

- ரூ.72.82 கோடிச் செலவினத்தில் 75 புதிய நீர்தாங்கி வண்டிகள், 12 அவசரகால சிறிய மீட்பூர்திகள், 44 பெருமதண்ணீர்லாரிகள், ஒரு வான்நோக்கி நகரும் ஏணி கொண்ட ஊர்தி, 7 அதிஉயரழுத்தநீர்தாங்கிவண்டி மற்றும் 1 சிறிய நுரைநகர்வுஊர்தி ஆகியன கொள்முதல் செய்ய ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது.



- ரூ.14.01 கோடிச் செலவில் 50 ட்ரோன்கள், 4 புகை வெளியேற்றும் கருவி, 21 கோம்பி கருவிகள், ஆட்களை ஏற்றிச் செல்லும் ஊர்திகள் 4, காற்று அழுத்தும் கருவி 5, புகை வெளியேற்றும்கருவி5,நீரியியல்அழுத்தத்தில் இயங்கும் கருவிகள் 10, காற்று பிடிக்கும் கருவி1ஆகியனவும்தீயணைப்புசேவைக்காக ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது.
- ரூ.3.54 கோடிச் செலவினத்தில் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை இயக்ககத்தில் உள்ள அவசரகால கட்டளை மையம் (Incident Command Centre) வலுப்படுத்தப்படவுள்ளது. ரூ.76.35 இலட்சம் செலவினத்தில், தன்னார்வலர்களுக்கு அடையாள வில்லை (Badge) மற்றும் மதிப்பூதியம் (Honororium) வழங்கப்படவுள்ளது.

தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையங்களுக்கு புதிய கட்டடம்

- ரூ.51.58கோடிச்செலவினத்தில்10இடங்களில் தீயணைப்பு – மீட்புப் பணி நிலையங்களும், காஞ்சிபுரம் மற்றும் அம்பத்தூரில் சென்னை புறநகர் மாவட்ட அலுவலகத்திற்கு புதிய கட்டடங்களும், மேலும், ரூ.44.67 கோடிச் செலவில்6இடங்களில்அலுவலர்கள்மற்றும் பணியாளர்களுக்கு 173 குடியிருப்புகளும், ரூ.5.95 கோடிச் செலவினத்தில் திருவல்லிக்கேணியில் தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள்நிலையங்களுக்குபுதியகட்டடம்.
- 21இடங்களில்ரூ.71.01கோடிச்செலவினத்தில் புதிய தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையங்களும் மற்றும் 6 இடங்களில் தரம் உயர்த்தப்பட்ட தீயணைப்பு நிலையங்களும் துவக்கி வைக்கப்பட்டுள்ளன.

மாநில பயிற்சிக் கழகம் அமைத்தல்

- ரூ.39.30கோடிச்செலவினத்தில்மாநிலபயிற்சிக் கழகம் மற்றும் உலகத்தரத்திலான நிகழ்நேர மாதிரிக் கூடம் காலவாக்கத்தில் அமைக்க ஆணை.

தமிழ்நாடு தடய அறிவியல் துறை

- தமிழ்நாடு தடய அறிவியல் துறையில் 62 இளநிலை அறிவியல் அலுவலர்கள் பணி நியமனம்.
- சென்னையில்அமைந்துள்ளதடயஅறிவியல் துறையின் தலைமை ஆய்வகத்தை உலகத் தரம்வாய்ந்த ஆய்வகமாகமேம்படுத்துவதற்கு ரூ.8.45 கோடி ஒப்பளிப்பு.
- ரூ.2.18 கோடிச் செலவில் அரியலூர் மற்றும் 6 புதியதாக உருவாக்கப்பட்ட காவல் மாவட்டங்களுக்குத்தலாஒருஇயங்கும்தடய அறிவியல் ஆய்வகம் உருவாக்கம்.
- தஞ்சாவூர்வட்டாரதடயஅறிவியல்ஆய்வகத்தில் ரூ.7.80 கோடிச் செலவில் புதியதாக மரபணு ஆய்வுப் பிரிவு.
- திருச்சிமற்றும்மதுரைவட்டாரதடயஅறிவியல் ஆய்வகங்களில் ரூ.4.46 கோடிச் செலவில் புதியதாக கணினி தடயவியல் பிரிவுகள்.
- "தடய மரபணு தேடல் மென்பொருள்" என்ற புதியவகை மென்பொருள் உருவாக்கம்.
- ரூ.1.2 கோடிச் செலவில் புதியதாக உருவாக்கப்பட்டுள்ள தாம்பரம் மற்றும் ஆவடியில் இரண்டு இயங்கும் தடய அறிவியல் ஆய்வகங்கள் அமைக்க ஆணை.
- மதுரை வட்டார தடய அறிவியல் ஆய்வகத்திற்கு ரூ.1.20 கோடிச் செலவில் அதிநவீன மரபியல் ஆய்வுக் கருவி.

- சென்னை தலைமை ஆய்வகத்திற்கு அதிநவீன LC–MS எனும் கருவி ரூ.2.50 கோடிச் செலவில் வாங்க அரசு ஒப்புதல்.
- மதுரை, தஞ்சாவூர் மற்றும் வேலூர் வட்டார தடய அறிவியல் ஆய்வகங்களை ரூ.3.10 கோடிச் செலவில் ISO/IEC 17025:2017 சர்வதேச தரத்திற்கு மேம்படுத்தப்பட உள்ளது.
- ரூ.3.92 கோடிச் செலவில் குற்ற நிகழ்விட ஆய்வை திறம்பட மேற்கொள்ள ஏதுவாக பிரத்தியேகமாக உருவாக்கப்பட்ட 14 இயங்கும் தடய அறிவியல் வாகனங்கள்.

சிறப்பு முயற்சிகள் துறை

சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம்

- ரூ.63,246 கோடிச் செலவில் 3 வழித்தடங்களுடன் மொத்தம் 118.9 கி.மீ. நீளத்திலான சென்னை மெட்ரோ இரயில் திட்டம் கட்டம்–IIஇன் கட்டுமானப் பணிகள்.
- ரூ.4,625கோடிமதிப்பீட்டில்,15.46கி.மீ.நீளத்தில், விமான நிலையத்திலிருந்து கிளாம்பாக்கம் கலைஞர் நூற்றாண்டு பேருந்து முனையம் வரையிலானசென்னைமெட்ரோஇரயிலின் நீட்டிப்புத்திட்டத்திற்கானஒப்புதல்,அரசின்தீவிர பரிசீலனையில் உள்ளது.
- 34.8கி.மீ.நீளத்திலானகோயம்புத்தூர்மெட்ரோ இரயில் திட்டத்தின் கட்டம்–I, ரூ.10,740 கோடிச் செலவில் செயல்படுத்துவதற்காக ஒன்றிய அரசின் ஒப்புதல் மற்றும் நிதியுதவிக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.
- 31.93 கி.மீ. நீளத்திலான மதுரை மெட்ரோ இரயில்திட்டத்தைரூ.11,368கோடிச்செலவில் செயல்படுத்துவதற்காக ஒன்றிய அரசின் ஒப்புதல் மற்றும் நிதியுதவிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.
- ரூ.14.50 கோடி மதிப்பீட்டில் பன்முக போக்குவரத்துஒருங்கிணைப்புபொதுமக்கள் மற்றும் பயணிகளுக்கான வசதிகளுடன், கத்திப்பாராமேம்பாலத்திற்குஅடியில்கத்திப்பாரா நகர்ப்புற சதுக்கம் 2021 இல் துவக்கம்.
- ரூ.34.22 கோடி மதிப்பீட்டில் உலகத் தரத்திற்கு இணையான பொதுமக்கள் பயன்படுத்தும்



வசதிகள்அடங்கியமத்தியசதுக்கத்திட்டத்தின் ஒரு பகுதி மார்ச் 2022இல் பயன்பாட்டிற்குத் திறப்பு.

- சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் தலைமையகக்கட்டடம்(மெட்ரோஸ்)அக்டோபர் 2022இல் துவக்கம்.
- மெட்ரோ இரயில் கட்டுமானத்தினால் பாதிக்கப்பட்ட செனாய் நகர், திரு.வி.க.பூங்கா ரூ.18கோடிச்செலவில்புதுப்பிக்கப்பட்டு,ஏப்ரல் 2023இல்பொதுமக்கள்பயன்பாட்டிற்குத்திறப்பு.
- திருச்சிராப்பள்ளிமற்றும்சேலத்தில்பெருந்திரள் துரிதப் போக்குவரத்து அமைப்புகளைச் செயல்படுத்துவதற்கான விரிவான சாத்தியக்கூறு ஆய்வு அறிக்கைகள் அரசின் தீவிர பரிசீலனையில் உள்ளது.
- பூந்தமல்லிபுறவழிச்சாலையிலிருந்துபரந்தூர் வரை கோயம்பேடு முதல் ஆவடி வரை மற்றும் சிறுசேரி முதல் கிளாம்பாக்கம் வரையிலான சென்னை மெட்ரோ இரயில் கட்டம்–IIஇன் நீட்டிப்புகளுக்கான விரிவான திட்ட அறிக்கைகள் தயாரிப்பு பணி துவக்கம்.
- அரசு அமைப்புகளின் நிலங்களில் வணிக ரீதியான திட்டங்களைச் செயல்படுத்துவதற்காக, சென்னை மெட்ரோ இரயில்நிறுவனம்மற்றும்தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனங்களுக்கிடையேயான ஒரு கூட்டு முயற்சி நிறுவனமாக சென்னை மெட்ரோ சொத்து மேலாண்மை நிறுவனம் அமைப்பு.



மாற்றுத்திறனாளிகள் நலன்

- 2023–2024ஆம்நிதியாண்டில்ரூ.1,106கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
- உதவிஉபகரணங்கள்வழங்கும்திட்டத்தின்கீழ் காத்திருப்போர் பட்டியலில் இடம்பெற்ற 9,185பயனாளிகளுக்குஉதவிஉபகரணங்கள் வழங்கிடரூ.50.66கோடிகூடுதல்நிதிஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
- மாற்றுத்திறனாளிகள் உரிமைகள் திட்டம் உலகவங்கிஉதவியுடன்6வருடகாலத்திற்கு ரூ.1,773.20 கோடிச் செலவில் மேற்கொள்ள அறிவிக்கப்பட்டு,10சிறப்புப்பள்ளிகளில்பணிகள் மற்றும் 1 மறுவாழ்வு இல்லத்தில் சீரமைப்புப் பணிகள் துவங்கப்பட்டுள்ளது.
- தென் மாவட்டங்களில் செவி மற்றும் பேச்சுத்திறன் குறைபாடுடைய மாணவர்கள் பயன்பெறும் வகையில் உயர்கல்விக்காக இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடியில் செயல்பட்டு வரும்அரசுகலைக்கல்லூரியில் பி.காம்.,பி.சி.ஏ.,வகுப்புகள்தொடங்குவதற்காக சேர்க்கை நடைபெற்று வருகிறது.
- சென்னைமாவட்டத்தில்ரூ.1.51கோடிச்செலவில் கூடுதலாகஒருமாவட்டமாற்றுத்திறனாளிகள் நல அலுவலகம் (வட சென்னை) அமைக்க அரசாணை வெள்யிடப்பட்டுள்ளது.
- மாற்றுத்திறனாளிகளுக்கு வழங்கப்படும் சுயதொழில் கடன் உதவி திட்டத்தின் மூலம் அளிக்கப்படும் தொகை ரூ.25,000–யினை அறிவுசார் குறைபாடுடையோர், புறஉலக சிந்தனையற்றோர் மற்றும் தசைச்சிதைவு நோயினால் பாதிக்கப்பட்டவர்களின் பெற்றோருக்கும் ரூ.15,000–என நீட்டித்து 400 பயனாளிகளுக்கு வழங்கும் வகையில் ஆணைவெளியிடப்பட்டுநாளதுதேதிவரையில் 94 நபர்கள் பயன்டைந்துள்ளனர்.
- மாற்றுத்திறனாளிகளுக்கு வழங்கப்படும் திருமண நிதியுதவி பரிசுத்தொகை ரொக்கமாகவும் மீதமுள்ள தொகையினை தேசிய சேமிப்பு பத்திரமாகவும் வழங்கும் முறையினை மாற்றி முழுத்தொகையும் ரொக்கமாகவழங்கஅரசாணைவெளியிடப்பட்டு 680பயனாளிகளுக்குவழங்கிடசம்பந்தப்பட்ட மாவட்டங்களுக்குநிதிஒதுக்கீடுசெய்யப்பட்டு



பயனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. அதில் 281 மாற்றுத்திறனாளிகளுக்கு நிதி பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது.

- மாற்றுத்திறனாளிகள் சுயதொழில் புரிந்து வாழ்வில்முன்னேறுவதற்கு,தையல்இயந்திரம் வழங்கப்படுவதற்கானவயதுஉச்சவரம்பினை 60-ஆக நீட்டித்து ரூ.1.48 கோடிச் செலவில் 3,764பயனாளிகளுக்குமோட்டார்பொருத்திய தையல் இயந்திரங்கள் வழங்கப்பட்டுள்ளது. இதில்18-45வயதுள்ள3,302பயனாளிகளுக்கும் 46-60 வயதுள்ள 462 பயனாளிகளுக்கும் தையல் இயந்திரம் வழங்கப்பட்டுள்ளது. 2023-2024ஆம் நிதியாண்டில் நாளது தேதி வரையில்ரூ.2.52கோடிமதிப்பில்3,680மோட்டார் பொருத்திய தையல் இயந்திரங்கள் வழங்கப்பட்டுள்ளது.
- மாநிலம் முழுவதும் உள்ள 62 விளையாட்டு அரங்கங்களில் ரூ.37.20 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் தணிக்கை மேற்கொள்ள தகுதியானநிறுவனங்கள்தெரிவுசெய்யப்பட்டு ரூ.28.15இலட்சம்செலவில்6நிறுவனங்கள் மூலம் தணிக்கை மேற்கொண்டு தணிக்கை அறிக்கைகள் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இங்கு, தடையற்ற சூழல் ஏற்படுத்திட உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.
- முதுகுத் தண்டுவடம் பாதிக்கப்பட்ட மாற்றுத்திறனாளிகளுக்காக முதற்கட்டமாக திருப்பூர், கோயம்புத்தூர், திருவண்ணாமலை மாவட்டங்களில்ரூபாய்ஒருகோடிச்செலவில் 75 நபர்கள் பயன்பெறும் வகையில் 3 சிறப்பு இல்லங்கள்தன்னார்வத்தொண்டுநிறுவனங்கள் மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.
- அரசு, அரசு உதவி பெறும், தொண்டு நிறுவனங்கள் மூலம் செயல்படுத்தப்படும் 235 இல்லங்கள், சிறப்பு பள்ளிகளில் உள்ள மாற்றுத்திறனாளிகளுக்குவழங்கும்உணவூட்டு மானியம்ரூ.900லிருந்துரூ.1,200ஆகஉயர்த்தி. ரூ.3.92 கோடி கூடுதல் (28.06.2022 முதல்) செலவில் இத்திட்டத்தை செயல்படுத்திட அனுமதி வழங்கப்பட்டுள்ளது.
- 22 அரசுப் பள்ளி விடுதிகளில் தங்கிப்பயிலும் 1,053 மாணாக்கர்களுக்கு தன்சுத்தம், உடல்நலம்பராமரிப்பதற்காகவழங்கும்சோப்பு, தேங்காய்எண்ணெய்வழங்குவதற்கானஇதர செலவீனம்ரூ.30லிருந்துரூ.50ஆகஉயர்த்திட ரூ.2.52இலட்சம்நிதிஒதுக்கப்பட்டுசெலவினம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.
- உலக மாற்றுத்திறனாளிகள் தினத்தன்று பொதுகட்டடங்களில்மாற்றுத்திறனாளிகளால் எளிதாக பயன்படுத்தப்படும் வகையில்



தடைகளற்ற சூழலை ஏற்படுத்தியுள்ள சிறந்த அரசு நிறுவனம், தனியார் நிறுவனத்திற்கு ரூ.1.60 இலட்சம் செலவில் 2 மாநிலவிருதுகள் வழங்கப்பட்டது.

- புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள செவித்திறன் குறைபாடுடையோருக்கான நடுநிலைப் பள்ளியினை உயர்நிலைப் பள்ளியாகவும், விருதுநகர், ஈரோடு மாவட்டங்களில் உள்ள இரண்டு செவித்திறன் குறைபாடுடையோருக்கான உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகவும் ரூ.36.43 இலட்சம் செலவில் 128 மாணாக்கர்கள் பயன்பெறும் வகையில் தரம் உயர்த்த நிருவாக அனுமதியும் நடப்பாண்டில் ரூ.6.07 இலட்சம் நிதி ஒப்பளிப்பும் செய்து ஆணை வெளியிடப்பட்டுள்ளது. 2023-2024 ஆம் ஆண்டு முதல் மாணவர் சேர்க்கையின்படி, 27 மாணாக்கர்கள் பயனடைந்துள்ளனர்.
- பொதுப்பணித்துறை, வருவாய்த்துறை ஆகிய துறைகளுடன் மாற்றுத்திறனாளிகள் ஆவின் நிறுவனம் இணைந்து ஆவின் பாலகம் அமைத்திட அரசாணை வெளியிடப்பட்டு இதுவரை 169 மாற்றுத்திறனாளிகள் பயனடைந்துள்ளனர்.
- நகர விற்பனை குழுவின் விதிமுறையின் அடிப்படையில் மாற்றுத்திறனாளிகள் முக்கிய நிகழ்வுகளின்போது செவித்திறன் பாதிக்கப்பட்டோர் பயன்பெறும் வகையில் சாலையோரங்களில் தள்ளுவண்டி கடை நடத்த அனுமதி வழங்கப்பட்டு இதுவரை 18 மாற்றுத்திறனாளிகள் பயனடைந்துள்ளனர்.
- அனைத்து மாவட்ட ஆட்சியர் அலுவலகங்களின் சைகை மொழி பெயர்ப்பாளர் நியமனம் செய்ய ஒரு மாவட்டத்திற்கு ரூ.15,600 வீதம் நிதி பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது.
- மாற்றுத்திறனாளிகளுக்கான உரிமைகள் சட்டம் 2016-இல் வலியுறுத்தப்பட்டுள்ளவாறு அரசு வேலைவாய்ப்பில் 4 சதவிகிதம் இட ஒதுக்கீட்டினை மாற்றுத்திறனாளிகளுக்கு வழங்க ஏதுவாக உகந்த பதவியிடங்கள் கண்டறியப்பட்டு பணி நியமனம் செய்வதை கண்காணிக்கும் பொருட்டு உயர்மட்டக்குழு அமைக்க அரசாணை வெளியிடப்பட்டு உயர்மட்டக்குழுக்கூட்டம் நடத்தப்பட்டதுடன்



4சதவிகிதம்இடஒதுக்கீட்டின்அடிப்படையில் வேலைவாய்ப்பு வழங்கிட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

- வறுமைக் கோட்டிற்குக் கீழ் உள்ள மாற்றுத்திறனாளிகளுக்கு முன்னுரிமை அடிப்படையில் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறையின் மூலம் வீட்டு மனைப்பட்டாவழங்கஅரசாணைவெளியிடப்பட்டு தற்போதுநடைமுறைப்படுத்தப்பட்டதால்598 பயனாளிகள்பயனடைந்துள்ளனர்.அரசாணை வெளியிடப்பட்ட நாள் முதல் தற்போதுவரை 2,751 பயனாளிகள் பயனடைந்துள்ளனர்.
- தனியார்நிறுவனங்களில்மாற்றுத்திறனாளிகளுக்கு தகுந்த வேலைவாய்ப்பினைக் கண்டறிய தொழில்நிறுவனங்களின்கூட்டமைப்புகளை உள்ளடக்கியஉயர்மட்டக்குழுஅமைக்கப்பட்டு வேலைவாய்ப்பு வழங்க அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.
- கிராமங்களில் வறுமைக்கோட்டிற்குக் கீழ் தகுதியுள்ள மாற்றுத்திறனாளிகளுக்கு வீடு வழங்கக்கோரி,நகரங்களில்தமிழ்நாடுநகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம் மூலம் வீடு வழங்க அரசாணை வெளியிடப்பட்டு இதன் மூலம்1,364நபர்களும்ஊரகவளர்ச்சிமற்றும் ஊராட்சித்துறையின் மூலம் 175 நபர்களும் பயனடைந்துள்ளனர்.
- அறிவுசார் குறைபாடுடையோர், மனநலம் பாதிக்கப்பட்டோருக்கான 8 இல்லங்கள் தென்காசி,சேலம்,திருச்சிராப்பள்ளி,காஞ்சிபுரம், செங்கல்பட்டு, நாமக்கல், தஞ்சாவூர் மற்றும் தூத்துக்குடிஆகியமாவட்டங்களில்தன்னார்வத் தொண்டுநிறுவனம்மூலம்ரூ.91.72இலட்சம் செலவில்அமைக்கஅரசாணைவெளியிடப்பட்டு அதன்அடிப்படையில்செயல்பட்டுவருகின்றன.
- பிற்படுத்தப்பட்டோர்,மிகவும்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறையின் மூலம் ஏற்படுத்தப்பட்ட உலாமாக்கள் மற்றும் பணியாளர் நலவாரியத்தில் பயன்பெறும் மாற்றுத்திறனாளிகளின் ஓய்வூதியம் பெறும் வயது50லிருந்து40ஆககுறைக்கஅரசாணை

வெளியிடப்பட்டுஇத்திட்டம்செயல்படுத்தப்பட்டு வருகிறது.

- தன்னார்வத் தொண்டு நிறுவனங்களால் நடத்தப்படும் மாற்றுத்திறனாளிகளுக்கான கல்வி நிறுவனங்களில் பணியாற்றும் தசைப் பயிற்சியாளர்கள் மற்றும் சிறப்பு கல்வியாளர்களுக்கு வழங்கப்படும் மாத மதிப்பூதியம்ரூ.14,000லிருந்துரூ.18,000ஆக உயர்த்தி வழங்கப்பட்டுள்ளது.
- கடுமையானஇயலாமை,அறிவுசார்குறைபாடு, தசைச்சிதைவுகள் மற்றும் தொழுநோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கான பராமரிப்புத் தொகைரூ.1,500லிருந்துரூ.2,000ஆகஉயர்த்தி, இதுவரையில் 2,36,456 பயனாளிகள் பயனடைந்துள்ளனர்.
- மாற்றுத்திறனாளிகளுக்கு அரசால் ஒதுக்கீடு செய்யப்பட்டவீடுகளுக்குபயனாளியின்பங்குத் தொகையினைசெலுத்துவதற்காகவட்டியில்லா வங்கிக்கடனுதவிவழங்கும்திட்டத்தின்மூலம் 1,000நபர்களுக்குபயன்அளிக்கும்வகையில் ரூ.120 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் திட்டம் செயல்படுத்தஅரசாணைவெளியிடப்பட்டுள்ளது.
- உயர்கல்விபயிலும்1,000பார்வைமாற்றுத்திறன் மாணவர்களுக்குத் தலா ரூ.14,000 மதிப்பில் நவீன வாசிக்கும் கருவி வழங்கும் வகையில் ரூ.1.40கோடிநிதிஒதுக்கீடுசெய்யப்பட்டுள்ளது.
- ஒருகால்பாதிப்படைந்தமாற்றுத்திறனாளிகளும் பயன்பெறும்வகையில்இணைப்புச்சக்கரங்கள் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர் வழங்கும் திட்டம் விரிவுபடுத்தப்பட்டு, 500 பயனாளிகளுக்குவழங்கிடரூ.450இலட்சம்நிதி ஒதுக்கீடுசெய்யப்பட்டுதற்போதுவழங்கப்பட்டு வருகிறது.
- உள்ளாட்சிஅமைப்புகளின்மூலம்கட்டப்படும் வணிகவளாகங்களில்மாற்றுத்திறனாளிகளுக்கு ஐந்துசதவிகிதம்ஒதுக்கீடுசெய்திடஅரசாணை வெளியிடப்பட்டுள்ளது.
- தமிழ்நாடுமாற்றுத்திறனாளிகள்நலவாரியத்தின் வாயிலாகவழங்கப்பட்டுவரும்விபத்துநிவாரணம், மருத்துவம்மற்றும்கல்விஉதவித்தொகையினை உயர்த்திவழங்கிடகூடுதலாகரூ.200இலட்சம் நிதிஒதுக்கீடுசெய்யப்பட்டுபயனாளிகளுக்கு வழங்கப்பட்டு வருகிறது.
- தமிழ்நாடு மாற்றுத்திறனாளிகள் நல வாரியத்தின் வாயிலாக வழங்கப்பட்டு வரும் விபத்துநிவாரணம்,மருத்துவம்,மற்றும்கல்வி உதவித்தொகையினைஉயர்த்திடகூடுதலாக ரூ.2கோடிநிதிஒதுக்கீடுசெய்யப்பட்டுள்ளது.
- செவி மாற்றுத்திறனாளிகள் பயனடையும் வகையில் ஒரு தன்னார்வ தொண்டு நிறுவனத்தின் வாயிலாக சைகை மொழி பெயர்ப்பாளர் பயிற்சி அளிக்க ரூ.15 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
- மாற்றுத்திறனாளிகளின் சேவையில் ஈடுபட்டுள்ள அரசு நிதியுதவி பெறும் ஆரம்ப நிலை பயிற்சி மையங்கள் மற்றும் மறுவாழ்வு இல்லங்களில்பணிபுரியும்பணியாளர்களுக்கு வழங்கப்பட்டுவரும்மதிப்பூதியத்தினைஉயர்த்தி வழங்குவதற்காகரூ.5.34கோடிநிதிஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
- அரசு நிதியுதவியுடன் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களால் நடத்தப்படும் 326 சிறப்புப் பள்ளிகளில் பயிலும் மாற்றுத்திறன் குழந்தைகளைப் பராமரிக்க ஏதுவாக மாதந்தோறும் ரூ.4,500 மதிப்பூதியத்தில் பராமரிப்புஉதவியாளர்களைநியமனம்செய்ய ரூ.1.76 கோடி நிதி பகிர்ந்தளிக்கப்பட்டு, தற்போதுவரை309பராமரிப்புஉதவியாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.
- பத்து அரசு மறுவாழ்வு இல்லங்களில் தொழுநோயினால்பாதிக்கப்பட்டுகுணமடைந்து, தங்கியுள்ள 592 மாற்றுத்திறனாளிகள் பயனடையும் வகையில் உணவூட்டு மானியத்தினை ரூ.42லிருந்து ரூ.100ஆக உயர்த்திவழங்கிட ஆண்டுக்கு ரூ.1.24கோடி கூடுதல் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
- மனநலம்பாதிக்கப்பட்டுகுணமடைந்தவர்களை சமுதாயத்தில் ஒருங்கிணைக்கும் பொருட்டு "மீண்டும் இல்லம் (Home Again)" எனும் புதிய திட்டத்தினை முதற்கட்டமாக ஐந்து மாவட்டங்களில் அறிமுகப்படுத்தி, ஒரு மாவட்டத்திற்குஇரண்டுஇல்லங்கள்வீதம்பத்து இல்லங்கள்40நபர்கள்பயன்பெறும்வகையில் ரூ.50 இலட்சம் அமைத்திட நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

- மாற்றுத்திறனாளிகளுக்கு நான்கு சதவிகித இடஒதுக்கீட்டின் கீழ், அரசுத் துறைகளில் உள்ள பின்னடைவு காலிப்பணியிடங்களை ஓராண்டிற்குள் நிரப்புவதற்கு அந்தந்தத் துறைகள் மூலம் பணியிடங்களை நிர்ணயம் செய்து,சிறப்புஆட்சேர்ப்புதேர்வுநடத்தப்பட்டு 2,010பின்னடைவுகாலிப்பணியிடங்கள்குறித்த அறிக்கை பெறப்பட்டு தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.
- மாற்றுத்திறன்மாணவர்களுக்குவழங்கப்பட்டு வரும் கல்வி உதவித் தொகையினை இருமடங்காக உயர்த்தி, 22,300 மாணவர்கள் பயன்பெறும்வகையில்ரூ.7கோடிகூடுதல்நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
- மனநலம் சார் மற்றும் அறிவுசார் மாற்றுத்திறனாளிகளின்நலனுக்காகதிருவாரூர் மற்றும் மயிலாடுதுறை மாவட்டங்களில் 150 பயனாளிகள் பயன்பெறும் வகையில், நான்கு ஏக்கர் நிலப்பரப்பில் மூன்று இல்லங்கள் கட்டுவதற்காக ரூ.14 கோடி நிதி ஒதுக்கீட்டிற்கான நிருவாக அனுமதி மற்றும் ரூ.2கோடிக்குநிதிஒப்பளிப்புசெய்யப்பட்டுள்ளது.
- அரசு நிதியுதவியுடன் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களால்நடத்தப்படும்சிறப்புப்பள்ளிகள் மற்றும் ஆரம்பநிலை பயிற்சி மையங்களில் பயிலும்மாற்றுத்திறன்குழந்தைகளுக்குஇணை உணவுமற்றும்மதியஉணவுவழங்கும்திட்டம் விரிவுபடுத்தஅரசாணைவெளியிடப்பட்டுதொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

முதல்வரின் முகவரித்துறை

- மாண்புமிகுதமிழ்நாடுமுதலமைச்சர்அவர்கள், ஆட்சிப் பொறுப்பேற்ற நூறு நாட்களில் தீர்வு காணப்படும் என்ற வாக்குறுதியோடு தமது தேர்தல் பரப்புரையின் போது பெறப்பட்ட மனுக்கள்மீதுஉரியதீர்வுஅளிக்கும்வகையில், 07.05.2021இல் தாம் பொறுப்பேற்ற உடன் கையொப்பமிட்ட முதல் ஐந்து கோப்புகளில் ஒன்றாக பொதுமக்களின் குறைகள் மீது விரைந்து தீர்வு காணும் பொருட்டு "உங்கள் தொகுதியில் முதலமைச்சர் துறை" என்ற தனித்துறையைஉருவாக்கஉத்தரவிட்டார்கள்.
- கொரோனா போன்ற பெருந்தொற்றுக் காலத்திலும், அரசு செயலர்கள் முதல் அனைத்துத்துறை அலுவலர்களின் கூட்டு முயற்சியாலும், ஒத்துழைப்பாலும் அனைத்து மனுக்களும்உரியமுறையில்பரிசீலிக்கப்பட்டு 100 நாட்கள் முடிவில் 2.29 இலட்சம் மனுக்கள் ஏற்பளிக்கப்பட்டு உரிய பயன்கள் பயனாளிகளுக்கு சென்று சேர்ந்துள்ளன. பல்லாண்டுகளாக தீர்த்து வைக்கப்படாமல் இருந்த பல குறைகள் குறுகிய காலத்தில் தீர்த்து வைக்கப்பட்டுள்ளது.
- பொதுமக்கள்குறைகளைக்களைவதில்மிகுந்த முக்கியத்துவம் அளித்துவரும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் முதலமைச்சர் தனிப்பிரிவு, ஒருங்கிணைந்த குறை தீர்வு மையம், உங்கள் தொகுதியில் முதலமைச்சர் ஆகியவற்றைஒருங்கிணைத்து"முதல்வரின் முகவரி" என்ற தனித்துறையை உருவாக்கி தனதுநேரடிகட்டுப்பாட்டில்வைத்துள்ளார்கள்.
- மாநிலத்தில்உள்ளஅனைத்துமுறைகளிலும் பெறப்படும் மனுக்கள் ஒரே குடையின்கீழ் கொண்டு வரப்பட்டுள்ளன. இதன் மூலம் தலைமைச்செயலகத்தில்இருந்தேமாவட்டம் வாரியாக பெறப்படும் மனுக்கள் நிலவரம் மற்றும்அனைத்துத்துறைச்செயலர்கள்முதல் வட்டாட்சியர் / வட்டார வளர்ச்சி அலுவலர் நிலையிலானஅலுவலர்கள்பெற்றமனுக்கள் வரை நேரடியாக கண்காணிக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.
- முதலமைச்சர்உதவிமையம்மற்றும்மாவட்ட அளவில் மாவட்ட ஆட்சியரகங்களில் தரக் கண்காணிப்புப் பிரிவுகள் உருவாக்கப்பட்டு அனைத்து மனுக்களும் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டுஅம்மனுக்களுக்குA,Bமற்றும் C என தரமதிப்பீடுகள் வழங்கப்படுகின்றன.
- "முதல்வரின் முகவரி" என்ற துறையின் கீழ் 07.05.2021முதல்31.07.2024வரைமொத்தம்28.47 இலட்சம்மனுக்கள் பெறப்பட்டு,தகுதிகளின் அடிப்படையில்27.87இலட்சம்மனுக்களுக்கு வெற்றிகரமாகத்தீர்வுகள்காணப்பட்டுள்ளன.

'மக்களுடன் முதல்வர் திட்டம்'

- பொதுமக்கள்அரசுஅலுவலகங்களுக்குச்செல்ல வேண்டிய அவசியமின்றி பெரும்பாலான அடிப்படைசேவைகள்இணையதளம்வழியாக வழங்கப்பட்டு வந்தாலும் சில அரசாங்க சேவைகளைப் பெறும் போது மற்றும் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவதில் உள்ள சிரமங்களை எதிர்கொள்வது



தெரிய வந்ததால் அவற்றை சரி செய்யவும் சேவைகளை எளிதில் கிடைக்கப் பெறவும் 'மக்களுடன் முதல்வர்' என்ற புதிய திட்டம் தொடங்கப்பட்டு அதன் வாயிலாக பொதுமக்கள் அதிகமாக அணுகும் 13 அரசுத் துறைகள் சார்ந்த கோரிக்கைகளைப் பெற்று 30 தினங்களுக்குள் தீர்வு காணும் வகையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் நேரடி கண்காணிப்பில் அனைத்து நகர்ப்புற மற்றும் கிராமப்புற உள்ளாட்சி அமைப்புகளில் வார்டு மற்றும் கிராம ஊராட்சி அளவில், அனைத்து மாவட்டங்களிலும் சிறப்பு முகாம்கள் நடத்தப்படுகின்றன.

❖ முதற்கட்டமாக, அனைத்து மாநகராட்சிகள், நகராட்சிகள், பேரூராட்சிகள் மற்றும் நகர்புறங்களை ஒட்டியுள்ள கிராம ஊராட்சிகளில் 2,058 முகாம்கள் நடத்தப்பட்டுள்ளன. 18.12.2023 முதல் 'மக்களுடன் முதல்வர்' திட்டத்தில், 8.74 இலட்சம் மனுக்களுக்கு மனநிறைவுடன் தீர்வு காணப்பட்டுள்ளது. அடுத்தகட்டமாக, அனைத்து மாவட்டங்களில் உள்ள ஊரகப் பகுதிகளில் மக்கள் அதிகமாக அணுகும் 15 அரசுத் துறைகள் கண்டறியப்பட்டு 11.07.2024 முதல் 31.07.2024 வரை நடைமுறைப்படுத்தப்பட்டு 1,068 முகாம்கள் நடைபெற்றுள்ளன.

"நீங்கள் நலமா" திட்டம்

❖ மக்கள் நலத்திட்டங்கள் அனைத்தும் உரியவர்களுக்கு சென்று சேர்வதை உறுதி செய்யும் நோக்குடன், மக்கள் மற்றும் அரசிற்கிடையேயான இடைவெளியை குறைத்திடும் வகையில் மக்களின் கருத்துக்கள் மற்றும் பின்னூட்டத்தை பெற "நீங்கள் நலமா" என்ற புதியதொரு திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில்நலத்திட்டங்களின்பயன்கள் மக்களுக்குச் சென்று சேர்வதை உறுதி செய்வது மட்டுமல்லாமல் சேவைகளின் தரத்தினை மேம்படுத்த வழிவகைகள் மேற்கொள்ளப்படும். இவ்வலைதளம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், அரசு தலைமைச் செயலாளர் உள்ளிட்ட அனைத்து அரசு துறை செயலாளர்கள், காவல் துறைத் தலைமை இயக்குநர், துறைத் தலைவர்கள் மற்றும் கூடுதல் காவல் துறை இயக்குநர்கள், மாவட்ட ஆட்சியர்கள், மாவட்ட காவல் கண்காணிப்பாளர்கள், மாநகர காவல் ஆணையர்களால் பயன்படுத்தும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. மேலும், இவ்வலைதளத்தில் பொதுமக்கள் பயன்பெறும் வகையில் அனைத்து அரசு திட்டங்கள் குறித்த கையேடு தொகுப்பு பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது.

❖ அரசின் நலத்திட்டங்கள் குறித்த கருத்துக்களைக் கேட்டறியும் புதுமை திட்டமான "நீங்கள் நலமா" திட்டத்தினை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 06.03.2024 அன்று தொடங்கி வைத்து பயனாளிகளிடம் நேரடியாக தொலைபேசியில் தொடர்பு கொண்டு மக்கள் நலத்திட்டங்கள் குறித்து அவர்களின் கருத்துக்களை கேட்டறிந்தார்கள்.

❖ மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவுரைக்கிணங்க இத்துறை பொதுமக்களிடம் இருந்து பெறப்படுகின்ற அனைத்து மனுக்களையும் அக்கறையோடு பரிசீலித்து அவர்களுக்கு சட்டபூர்வமாக சேர வேண்டியதை சேர்த்தும் நிராகரிக்கப்படின் உரிய காரணங்கள் கூறி நிராகரித்தும் விரைவாகவும், தரமாகவும் உரிய முறையில் தேர்வு செய்ய தேவையான அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டு வருகிறது.

❖ ❖ ❖

சிறுபாசனம் உள்ளிட்ட பாசனத் திட்டங்கள், சட்டமன்றம், ஆளுநர் மற்றும் அமைச்சரவை, தேர்தல்கள் மற்றும் கடவுச்சீட்டுகள், கனிமங்கள் மற்றும் சுரங்கங்கள்



திரு. துரைமுருகன் அவர்கள்
மாண்புமிகு நீர்வளத்துறை அமைச்சர்

நீர்வளத்துறை

மேட்டூர் அணை

- 2021–ஆம் ஆண்டு காவிரி டெல்டாவில் குறுவை பாசனம் மேற்கொள்வதற்காக மேட்டூர் அணை திறக்கப்பட்டு பாசனத்திற்கு முழுமையாக நீர் வழங்கப்பட்டது.
- ஜூன், 2022 ஆரம்பத்திலேயே மேட்டூர் அணையில் 87.42 டி.எம்.சி. நீருடன், நீர்ப்பாசன ஆண்டு 2022–2023–இன் ஆரம்பம் சிறப்பாக அமைந்தது. எனவே, வானிலை முன்னறிவிப்பிற்கேற்ப, அணை முன்கூட்டியே குறுவை பாசனத்திற்காக திறக்கப்பட்டது.
- 2023–ஆம் ஆண்டு காவிரி டெல்டா குறுவை பயிர்கள் பாசனத்திற்காக மேட்டூர் அணையிலிருந்து 31.05.2023 நிலவரப்படி 69.828 டி.எம்.சி. கொள்ளளவு அடிப்படையில் திட்டமிட்டபடி தண்ணீர் 12.06.2023 அன்று திறந்து விடப்பட்டது.
- 2021–2022–இல், தமிழ்நாட்டிற்கு அளிக்கப்பட வேண்டிய காவிரி ஆற்று நீர் 177.25 டி.எம்.சிக்கு பதிலாக 281.08 டி.எம்.சி நீர் பில்லிகுண்டுலுவில் பெறப்பட்டது.
- 2023–2024–இல் நிருணயிக்கப்பட்ட அளவு 167.25 டி.எம்.சி எதிராக பில்லிகுண்டுலுவில் 76.73 டி.எம்.சி நீர் கிடைக்கப்பெற்றது.
- 2021–2022–இல், 219 நாட்களுக்கு மேட்டூர் அணையின் நீர் மட்டம் 100 அடிக்கு மேலாகவும், 41 நாட்களுக்கு 120 அடிக்கு மேலாகவும் இருந்தது.



- 2022–2023–ஆம் ஆண்டு காவிரி படுகை முழுவதும் இரண்டு பருவமழை காலங்களிலும் நல்ல மழை பெய்தது. ஒரு அரிய நிகழ்வாக மேட்டூர் அணையின் நீர்மட்டம் 01.06.2022 முதல் 12.01.2023 வரை மொத்தம் 125 நாட்களுக்கு 120 அடியில் இருந்தது,
- இதில் தொடர்ச்சியாக 17.07.2022 முதல் 23.09.2022 வரை 69 நாட்களுக்கு 120 அடியில் இருந்தது. 2023–2024 நீர்பாசன ஆண்டில் தக்க முறையில் பயன்படுத்தும் வகையில், மேட்டூர் அணையில் போதுமான நீர் இருப்பை தக்க வைத்து கொண்டதுடன், காவிரி படுகையில் உள்ள மொத்த ஆயக்கட்டிற்கு பாசன பருவம் முடிவடையும் வரை நீர் அளிக்கப்பட்டுள்ளது.

முல்லை பெரியாறு அணை

- உச்சநீதிமன்றம் 07.05.2014 அன்று வழங்கிய தீர்ப்பிற்கு பிறகு, முல்லைப் பெரியாறு அணை நான்காவது முறையாக, அனுமதிக்கப்பட்ட அளவான 142 அடியை, 30.11.2021 அன்று எட்டியது. அன்றிலிருந்து தொடர்ந்து 18 நாட்கள் 142 அடியில் இருந்தது.
- முல்லைப் பெரியாறு அணையின் நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் 2022–2023–ஆம் ஆண்டிலும் பருவமழை இயல்பான அளவில் பெய்துள்ளதால், 2014 முதல் ஐந்தாவது முறையாக அனுமதிக்கப்பட்ட 142 அடியை 27.12.2022 அன்று எட்டியது. அணை அனைத்து வகையிலும் பாதுகாப்பாக இருந்து வருகிறது.
- மாண்புமிகு உச்சநீதிமன்றத்தின் 27.02.2006 மற்றும் 07.05.2014 நாளிட்ட உத்தரவின்படி, தேனி, திண்டுக்கல், மதுரை, சிவகங்கை, ராமநாதபுரம் ஆகிய 5 வறண்ட மாவட்டங்களில் வசிக்கும் மக்களின் நலன் கருதி, முல்லைப் பெரியாறு அணையின் முழுகொள்ளளவான 152 அடிவரை தண்ணீரை தேக்குவதற்கு அணை வலுப்படுத்தும் பணிகள் மேற்கொள்ள தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் இந்த அரசு தொடர்ந்து எடுத்து வருகிறது.
- நீர்ப்பாசன ஆண்டு 2021–2022–இல், முல்லை பெரியார் நீர்தேக்கத்தில் இருந்து 31.64 டி.எம்.சி. தமிழ்நாட்டிற்கு திருப்பி விடப்பட்டுள்ளது.
- நீர்ப்பாசன ஆண்டு 2022–2023 முல்லை பெரியாறு நீர்தேக்கத்தில் இருந்து 27.46 டி.எம்.சி. தமிழ்நாட்டிற்கு திருப்பி விடப்பட்டுள்ளது.
- நீர்ப்பாசன ஆண்டு 2023–2024 முல்லை பெரியாறு நீர்தேக்கத்தில் இருந்து 18.697 டி.எம்.சி. தமிழ்நாட்டிற்கு திருப்பி விடப்பட்டுள்ளது.

தடுப்பணைகள் மற்றும் அணைக்கட்டுகள்

- 2021–22 முதல் 2023–24 வரை மூன்றாண்டுகளில் 84 தடுப்பணைகள் ரூ.490 கோடியில் செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டு 53 தடுப்பணைகள் கட்டிமுடிக்கப்பட்டு, 31 தடுப்பணைகள் முன்னேற்றத்தில் உள்ளன.

❖ 2021–2022 முதல் 2023–2024 வரை மூன்றாண்டுகளில் 42 அணைக்கட்டுகள் ரூ.268.4 கோடியில் செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டு 28 அணைக்கட்டுகள் கட்டி முடிக்கப்பட்டு, 14 அணைக்கட்டுகள் முன்னேற்றத்தில் உள்ளன.

கொள்ளிடம் ஆற்றின் குறுக்கே முக்கொம்பில் புதிய நீரொழுங்கி (மேலணை)

❖ திருச்சிராப்பள்ளி மாவட்டம், கொள்ளிடம் ஆற்றின் குறுக்கே முக்கொம்பில் ஒரு புதிய நீரொழுங்கி ரூ.414 கோடி திருத்திய மதிப்பீட்டில் 12,58,460 ஏக்கர் பாசனப்பரப்பு பயனடையும் வகையில் பணிகள் முடிக்கப்பட்டுள்ளது.

அத்திக்கடவு – அவிநாசி நீரேற்றும் திட்டம்

❖ ரூ.1,916.417 கோடி திருத்திய மதிப்பீட்டில், கோயம்புத்தூர், ஈரோடு மற்றும் திருப்பூர் மாவட்டங்களில் அத்திக்கடவு–அவிநாசி திட்டம் நீர்ப்பாசனம், நிலத்தடி நீர் செறிவூட்டுதல் மற்றும் குடிநீர் வழங்கும் திட்டமாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதன் மூலம் 24,468 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும்.

❖ காலிங்கராயன் அணைக்கட்டின் கீழ்புறத்திலிருந்து 1.5 டி.எம்.சி அடி உபரிநீரை நீரேற்று முறையில் குழாய்களின் மூலம் கோயம்புத்தூர், திருப்பூர் மற்றும் ஈரோடு மாவட்டங்களிலுள்ள 32 நீர்வளத்துறை குளங்களையும், 42 ஊராட்சி ஒன்றிய குளங்களையும், 971 குட்டைகளையும் நிரப்பும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. 99 சதவிகிதப் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

❖ சோதனை ஓட்டம் நடத்தப்பட்டு 1,045 குளம் குட்டைகளுக்கும் நீர் செல்வது உறுதி செய்யப்பட்டுள்ளது.

மருதையாற்றின் குறுக்கே புதிய நீர்த்தேக்கம்

❖ ரூ.149.40 கோடி திருத்திய மதிப்பீட்டில் பெரம்பலூர் மாவட்டம், ஆலத்தூர் வட்டம், கொட்டரை கிராமத்தின் அருகே, மருதையாற்றின் குறுக்கே புதிய நீர்த்தேக்கம் அமைக்கும் பணி 4,194 ஏக்கர் பாசன நிலங்கள் பயனடையும் வகையில் துவங்கப்பட்டு 97 விழுக்காடு பணிகள் நிறைவடைந்துள்ளன.

❖ 2021–2022–ஆம் ஆண்டு மருதையாறு நீர்த்தேக்கமானது 2021 வடகிழக்கு பருவமழையின் காரணமாக தண்ணீர் தேக்க ஆரம்பித்து முழு கொள்ளளவை எட்டிய பிறகு உபரி நீர் வழிந்தோடியின் மூலமாக 108 நாட்களுக்கு உபரிநீர் வெளியேற்றப்பட்டது. அதிகபட்சமாக விநாடிக்கு 4,069 க.அடி தண்ணீர் மருதையாற்றில் கலந்தோடியது.

❖ 2022–2023–ஆம் ஆண்டு மருதையாறு நீர்த்தேக்கமானது 2022 வடகிழக்கு பருவமழையின் காரணமாக தண்ணீர் தேக்க ஆரம்பித்து முழு கொள்ளளவை எட்டிய பிறகு 80 நாட்களுக்கு உபரிநீர் வெளியேற்றப்பட்டுள்ளது. அதிகபட்சமாக வினாடிக்கு 1,041.26 கன அடி தண்ணீர் மருதையாற்றில் கலந்தோடியது. 6,915.28 கன அடி மிகை நீர் வெளியேற்றப்பட்டது.

காவேரி கழிமுகப் பகுதியில் பருவநிலை மாறுதலைத் தழுவல் திட்டம்

❖ ரூ.1,110.17 கோடி திருத்திய மதிப்பீட்டில் காவிரி கழிமுகப் பகுதியில் பருவநிலை மாறுதலைத் தழுவல் திட்டம் திருவாரூர் மற்றும் நாகப்பட்டினம் மாவட்டங்களுக்கு உட்பட்ட காவிரி கழிமுகத்தின் கீழ் வெண்ணாறு உபவடி நிலத்திலுள்ள அரிச்சந்திரா நதி, அடப்பாறு, வெள்ளையாறு, பாண்டவையாறு, வளவனாறு வடிகால், வேதாரண்யம் கால்வாய் மற்றும் உப்பனாறு வடிகால் மற்றும் 13 நீரேற்று திட்டப் பணிகள் 78,000 ஹெக்டேர் பாசனபரப்பு நிலங்கள் பயன்பெறும் வகையில் 2022–ஆம் ஆண்டு முடிக்கப்பட்டுள்ளன.

காட்டூர் தத்தமஞ்ச புதிய நீர்த்தேக்கம்

❖ ரூ.62.36 கோடி மதிப்பீட்டில் திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி வட்டம், காட்டூர் தத்தமஞ்சி இரட்டை ஏரிகளை இணைத்து கொள்ளளவினை மேம்படுத்தி நீர்த்தேக்கம் உருவாக்கம் திட்டம் 5,804 ஏக்கர் பாசன நிலம் பயனடையும் வகையில் 2023–ஆம் ஆண்டு நிறைவடைந்துள்ளது.



மேட்டூர் சரபங்கா நீரேற்றும் திட்டம்

❖ ரூ.673.88கோடிதிருத்தியமதிப்பீட்டில்மேட்டூர் அணையின் மழைக்கால வெள்ள உபரிநீரை சேலம் மாவட்டம், சரபங்கா வடிநிலத்தில் உள்ளவறண்டஏரிகளுக்குவழங்கும்நீரேற்று திட்டம் பணிகளுக்கு ஒப்புதல் வழங்கப்பட்டு, பணிகள் செயலாக்கப்பட்டு வருகின்றன. இத்திட்டத்தினால், 4,238 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும். 96 சதவிகிதப்பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

❖ 2021–2022–ஆம்ஆண்டுதிப்பம்பட்டிநீரேற்று நிலையத்திலிருந்துதிப்பம்பட்டி–கள்ளிப்பட்டி குழு ஏரிகளுக்கு நீரேற்றம் மூலம் நீர் வழங்கப்பட்டு மேட்டூர் அணையில் இருந்து மொத்தம்79.70மி.கனஅடி உபரிநீர்நீரேற்றம் செய்யப்பட்டு7ஏரிகளுக்குநீர்வழங்கப்பட்டு648 ஏக்கர் பாசன நிலங்கள் பயனடைந்தது.

❖ 2022–2023–ஆம்ஆண்டில்,மேட்டூர்நீர்த்தேக்கம் முழு கொள்ளவு அடைந்த போது மேட்டூர், எடப்பாடி மற்றும் ஓமலூர் வட்டத்திலுள்ள திப்பம்பட்டி–காளிப்பட்டிகுழுவினைசேர்ந்த20 ஏரிகளுக்குதண்ணீர்நிரப்பப்பட்டு,2,066ஏக்கர் பாசன நிலங்கள் பயனடைந்தது.

கொள்ளிடம் ஆற்றின் குறுக்கே ஆதனூர் குமாரமங்கலம் கிராமங்களுக்கிடையே புதிய கதவணை அமைத்தல்

❖ ரூ..465.4262 கோடி மதிப்பீட்டில் கடலூர்மற்றும்மயிலாடுதுறைமாவட்டங்களில் ஆதனூர் மற்றும் குமாரமங்கலம் கிராமங்களுக்கிடையேகொள்ளிடம்ஆற்றின் குறுக்கே தலை மதகுடன் கூடிய புதிய கதவணை அமைக்கும் பணி எடுத்துக்கொள்ளப்பட்டு98சதவிகிதப்பணிகள் முடிவடைந்துள்ளன. இதன்மூலம் கடலூர் மற்றும் மயிலாடுதுறை மாவட்டங்களில் உள்ள 31,221 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும்.

தாமிரபரணி – கருமேனியாறு – நம்பியாறு இணைப்பு கால்வாய் திட்டம்

❖ ரூ.1,060.76 கோடி திருத்திய மதிப்பீட்டில் திருநெல்வேலி மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களில் 56,933 ஏக்கர் பாசனபரப்பு பயனடையும் வகையில் தாமிரபரணி–கருமேனியாறு–நம்பியாறுநதிகள் இணைப்பு திட்டம் செயலாக்கத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு98சதவிகிதப்பணிகள் பணிகள் நிறைவடைந்துள்ளன.

காவிரி வடிநிலத்திலுள்ள பாசன அமைப்புகளை நீட்டித்தல், புனரமைத்தல் மற்றும் நவீனமயமாக்குதல் திட்டம் (ERM)

❖ ரூ.230 கோடி மதிப்பீட்டில் நொய்யல் உபவடிநிலத்தில் நீட்டித்தல், புனரமைத்தல் மற்றும் நவீனமயமாக்குதல் திட்டப்பணிகள் முடிவடைந்துள்ளன.கோயம்புத்தூர்,திருப்பூர், ஈரோடு மற்றும் கரூர் ஆகிய மாவட்டங்களில் உள்ள 7,000 ஏக்கர் பாசன நிலம் மற்றும் 11,000ஏக்கர்மறைமுகபாசனநிலம்பயனடையும்.

❖ ரூ.335.50கோடிமதிப்பீட்டில்கட்டளைஉயர்மட்ட கால்வாய் பாசன அமைப்பில், நீட்டித்தல், புனரமைத்தல் மற்றும் நவீனமயமாக்குதல் திட்டப்பணிகள் முடிவடைந்துள்ளன. கரூர் மாவட்டத்தில்20,185ஏக்கர்பாசனநிலம்மற்றும் திருச்சிராப்பள்ளிமாவட்டத்தில்3,589ஏக்கர் பாசன நிலம் பயன்பெறும்.



- ரூ.184 கோடி மதிப்பீட்டில் ராஜவாய்க்கால் பாசன அமைப்பில் நீட்டித்தல், புனரமைத்தல் மற்றும் நவீனமயமாக்குதல் திட்டப்பணிகள் முடிவடைந்துள்ளன.நாமக்கல்மாவட்டத்தில் 12,786 ஏக்கர் பாசன நிலம் பயன்பெறும்.

- ரூ.706.15கோடிதிருத்தியமதிப்பீட்டில்,கீழ்பவானி திட்ட அமைப்பில் நீட்டித்தல், புனரமைத்தல் மற்றும் நவீனமயமாக்குதல் திட்டப்பணிகள் செயலாக்கத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டு 65 சதவிகிதப்பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. ஈரோடு,கரூர்மற்றும்திருப்பூர்மாவட்டங்களில் 2,47,247 ஏக்கர் பாசன நிலம் பயன்பெறும்.

- ரூ.3,607.3கோடிதிருத்தியமதிப்பீட்டில்காவிரி உபவடிநிலம் நீட்டித்தல், புனரமைத்தல் மற்றும் நவீனமயமாக்குதல் திட்டப்பணிகள் செயலாக்கத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டு 85 சதவிகிதப்பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. தஞ்சாவூர், நாகப்பட்டினம், புதுக்கோட்டை, மயிலாடுதுறை மற்றும் திருவாரூர் மாவட்டங்களில்உள்ள3,54,147ஏக்கர்பாசன நிலம் பயன்பெறும்.

- ரூ.2,639.15கோடி மதிப்பீட்டில்கல்லணைக் கால்வாய்திட்டத்தில்நீட்டித்தல்,புனரமைத்தல் மற்றும் நவீனமயமாக்குதல் திட்டப்பணிகள் 16தொகுப்புகளுக்குஒப்புதல்அளிக்கப்பட்டது. தஞ்சாவூர் மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்களில்உள்ள2,27,472ஏக்கர்பாசன நிலம் பயன்பெறும். இதில் ரூ.1,082.31 கோடி திருத்திய மதிப்பீட்டில் 5 தொகுப்புகள் செயலாக்கத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டு 99 சதவிகிதப் பணிகள் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

சிறப்பு தூர்வாரும் பணிகள்

காவிரி டெல்டா மாவட்டங்கள்

- காவிரி டெல்டா பகுதிகளான கரூர், திருச்சி, அரியலூர்,பெரம்பலூர்,தஞ்சாவூர்,திருவாரூர், நாகப்பட்டினம்,மயிலாடுதுறை,புதுக்கோட்டை மற்றும் கடலூர் மாவட்டங்களில் ஆறுகள், கால்வாய்கள்மற்றும்வடிகால்களில்தூர்வாரும் பணிகள்மேற்கொள்ளப்பட்டுகாவிரிகடைமடை பகுதிகளின் அனைத்து இடங்களுக்கும் தண்ணீர் உரிய காலத்தில் சென்றடைந்தது.



- 2021–2022–ஆம் ஆண்டில், ரூ.65.11 கோடி மதிப்பீட்டில் காவிரி டெல்டா பகுதிகளில் ஆறுகள், கால்வாய்கள் மற்றும் வடிகால்களில் 4,061.44 கி.மீ நீளத்திற்கு தூர்வாரும் 647 பணிகள் முடிவடைந்துள்ளன.
- 2022–2023–ஆம் ஆண்டில், ரூ.80 கோடி மதிப்பீட்டில் காவிரி டெல்டா பகுதிகளில் ஆறுகள், கால்வாய்கள் மற்றும் வடிகால்களில் 4,964.11 கி.மீ நீளத்திற்கு தூர்வாரும் 683 பணிகள் முடிவடைந்துள்ளன.
- 2023–2024–ஆம் ஆண்டில், ரூ.90 கோடி மதிப்பீட்டில் காவிரி டெல்டா பகுதிகளில் ஆறுகள், கால்வாய்கள் மற்றும் வடிகால்களில் 4,773.13 கி.மீ நீளத்திற்கு தூர்வாரும் 691 பணிகள் முடிவடைந்துள்ளன.
- 2024–2025–ஆம் ஆண்டில், ரூ.110 கோடி மதிப்பீட்டில் காவிரி டெல்டா பகுதிகளில் ஆறுகள், கால்வாய்கள் மற்றும் வடிகால்களில் 5,338.68 கி.மீ நீளத்திற்கு தூர்வாரும் 919 பணிகள் முடிவடைந்துள்ளன.
- காவிரி டெல்டா பகுதிகளில் நீர்நிலைகளை வடிவமைக்கப்பட்ட படுகை நிலைக்கு தூர்வாருதல், கால்வாய்கள் / வாய்க்கால்கள் / கிளை கால்வாய்கள் / வடிகால்கள் / வழங்கு கால்வாய்களில் படிந்துள்ள மண் திட்டுகள் மற்றும் புதர்களை அகற்றுதல் போன்ற பணிகள் உழவர் குழுக்களின் ஒத்துழைப்புடன் போர்க்கால அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

பரம்பிக்குளம் – ஆழியாறு திட்ட பாசன வாய்க்கால்கள்

- 2022–2023–ஆம் ஆண்டில், ரூ.3 கோடி மதிப்பீட்டில் திருப்பூர், ஈரோடு மற்றும் கரூர் மாவட்டங்களில் உள்ள பவானி, அமராவதி மற்றும் பரம்பிக்குளம் ஆழியாறு உபவடி நிலங்களில் 56 தூர்வாரும் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன மற்றும் ரூ.4 கோடி மதிப்பீட்டில் கோயம்புத்தூர் மற்றும் திருப்பூர் மாவட்டங்களில் பரம்பிக்குளம் ஆழியாறு திட்ட பாசன வாய்க்கால்களில் 125 தூர்வாரும் பணிகள் முடிக்கப்பட்டன.
- 2023–2024–ஆம் ஆண்டில், ரூ.4 கோடி மதிப்பீட்டில் கோவை, ஈரோடு, கரூர் மற்றும் திருப்பூர் மாவட்டங்களில் உள்ள வாய்க்கால்களில் 94 தூர்வாரும் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.
- 2024–2025–ஆம் ஆண்டில், ஒரு கோடி ரூபாய் மதிப்பீட்டில் பரம்பிக்குளம் ஆழியாறு வடிநிலம், அமராவதி மற்றும் கீழ்பவானி உபவடிநிலத்தில் உள்ள வாய்க்கால்களில் 26 தூர்வாரும் பணிகள் திட்டமிடப்பட்டு செயல்பாட்டில் உள்ளன.

தாமிரபரணி, கோதையாறு மற்றும் வைகை வடிநிலம்

- 2022–2023–ஆம் ஆண்டில், திருநெல்வேலி, தூத்துக்குடி, மதுரை மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் ரூ.2.96 கோடி மதிப்பீட்டில் கால்வாய்களில் 16 தூர்வாரும் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.
- 2023–2024–ஆம் ஆண்டில், தேனி, திண்டுக்கல், மதுரை, ராமநாதபுரம், சிவகங்கை, திருநெல்வேலி, தூத்துக்குடி, தென்காசி மற்றும் விருதுநகர் மாவட்டங்களில் ரூ.4 கோடி மதிப்பீட்டில் 41 தூர்வாரும் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.
- 2024–2025–ஆம் ஆண்டில், தேனி, திண்டுக்கல், மதுரை, ராமநாதபுரம், சிவகங்கை, திருநெல்வேலி,

தூத்துக்குடி, தென்காசி, கன்னியாகுமரி மற்றும் விருதுநகர் மாவட்டங்களில் ரூ.4 கோடி மதிப்பீட்டில் 59 தூர்வாரும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

பருவமழை முன்னெச்சரிக்கை பணிகள்

- 2021–ஆம் ஆண்டில் சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம், செங்கல்பட்டு மற்றும் கடலூர் மாவட்டங்களில் ரூ.14.212 கோடி மதிப்பீட்டில் 106 பருவமழை முன்னெச்சரிக்கை பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.
- 2022–ஆம் ஆண்டில் சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம், செங்கல்பட்டு மற்றும் கடலூர் மாவட்டங்களில் ரூ.20 கோடி மதிப்பீட்டில் 122 பருவமழை முன்னெச்சரிக்கை பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.
- 2023–ஆம் ஆண்டில் சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம், செங்கல்பட்டு மற்றும் கடலூர் மாவட்டங்களில் ரூ.20 கோடி மதிப்பீட்டில் 103 பருவமழை முன்னெச்சரிக்கை பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.
- 2023–ஆம் ஆண்டில் சென்னை, காஞ்சிபுரம். செங்கல்பட்டு மற்றும் திருவள்ளூர் மாவட்டங்களில் ரூ.4.89 கோடி மதிப்பீட்டில் 25 பருவமழை முன்னெச்சரிக்கை பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.
- 2023–ஆம் ஆண்டில் கூவம் மற்றும் அடையாறு ஆறுகளில் ரூ.3.15 கோடி மதிப்பீட்டில் 12 பருவமழை முன்னெச்சரிக்கை பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

வெள்ளத் தணிப்பு பணிகள்

- 2022–2023–ஆம் ஆண்டில் ரூ.250 கோடி மதிப்பீட்டில் காஞ்சிபுரம் மற்றும் சென்னை மாவட்டங்களில் வரதராஜபுரம், பழைய பெருங்களத்தூர், முடிச்சூர், பள்ளிக்கரணை, ராயப்பா நகர், நந்திவரம், கூடுவாஞ்சேரி, மணலி, வெள்ளிவாயல், கொளத்தூர் மற்றும் மாதவரம் ஆகிய பகுதிகளில் வெள்ள பாதிப்புகள் ஏற்படாமல் தடுக்க அடையாறு மற்றும் கொசஸ்தலையாறுகளை அகலப்படுத்துதல், நீர்வழித்தடங்களை மேம்படுத்துதல் மற்றும் வடிகால்கள் அமைத்தல் போன்ற 8 பணிகளை மேற்கொள்ள ஒப்புதல் வழங்கப்பட்டு 7 பணிகள் முடிவுற்றும் 1 பணி நடைபெற்றும் வருகிறது.
- 2022–2023–ஆம் ஆண்டில் ரூ.184.22 கோடி மதிப்பீட்டில் சென்னை மற்றும் செங்கல்பட்டு மாவட்டங்களில் மிகவும் வெள்ள பாதிப்புக்குள்ளாகும் பகுதிகளில் 8 பணிகளை மேற்கொள்ள ஒப்புதல் வழங்கப்பட்டு அனைத்து பணிகளும் முடிவுற்றுள்ளன.
- 2023–2024–ஆம் ஆண்டில் சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர், செங்கல்பட்டு, வேலூர், மயிலாடுதுறை, திருச்சி, திருநெல்வேலி, விருதுநகர் மற்றும் கடலூர் மாவட்டங்களில் 30 அவசிய வெள்ள தணிப்பு பணிகள் ரூ.506.304 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ள ஒப்புதல் வழங்கப்பட்டு பணிகள் வெவ்வேறு நிலைகளில் செயலாக்கத்தில் உள்ளன.
- 2023–2024–ஆம் ஆண்டில் ரூ.350 கோடி மதிப்பீட்டில், 2021 மற்றும் 2023–ஆம் ஆண்டுகளில் வெள்ளத்தினால் ஏற்பட்ட பாதிப்புகளில் அடிப்படையில் முன்மொழியப்பட்ட சென்னை, செங்கல்பட்டு, காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளூர் மாவட்டங்களில் கூடுதல் 22 வெள்ள தணிப்பு பணிகள் மேற்கொள்ள ஒப்புதல் வழங்கப்பட்டு பணிகள் வெவ்வேறு நிலைகளில் செயலாக்கத்தில் உள்ளன.
- 2023–2024–ஆம் ஆண்டில் ரூ.280 கோடி மதிப்பீட்டில், 2023–ஆம் ஆண்டில் அதிக கனமழையால் ஏற்பட்ட வெள்ள பாதிப்புகளின் அடிப்படையில் முன்மொழியப்பட்ட கன்னியாகுமரி, திருநெல்வேலி, தென்காசி, தூத்துக்குடி, ராமநாதபுரம், மற்றும் விருதுநகர் மாவட்டங்களில் 480 நிரந்தர மறுசீரமைப்பு பணிகள் மேற்கொள்ள ஒப்புதல் வழங்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.

தமிழ்நாடு பாசன வேளாண்மை நவீனமயமாக்கல் திட்டம் (TNIAMP)

- ரூ.3,249.12 கோடி திருத்திய மதிப்பீட்டில் தமிழ்நாடு பாசன வேளாண்மை நவீனமயமாக்கல் திட்டம் வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்ட

நீர்வள நிலவளத் திட்டத்தின் (TN IAMWARM) தொடர் திட்டமாகும். இத்திட்டத்தை, மாநிலத்திலுள்ள 66 உபவடிநிலங்களில் 5.43 இலட்சம் ஹெக்டேர் பாசனப் பரப்பு பயன்பெறும்வகையில்2018–ஆம்ஆண்டுமுதல் 7ஆண்டுகளில்செயல்படுத்ததிட்டமிடப்பட்டது.

- ரூ.2,131.34கோடிமதிப்பீட்டில்4கட்டங்களாக நீர்வளத்துறையின்மூலம்4,778ஏரிகள்மற்றும் 477 அணைக்கட்டுகளை புனரமைத்தல், ஏரியின்நீர்ப்பரப்புபகுதியில்செயற்கைமுறைநீர் செறிவூட்டும்கிணறுகளைஅமைத்தல்,காவிரி கழிமுகப்பகுதிமற்றும்பிறஉபவடிநிலங்களில் அமைந்துள்ள வடிகால்கள் மற்றும் பாசன வாய்க்கால்களை மேம்படுத்துதல் போன்ற பணிகளைமேற்கொள்ளதிட்டமிடப்பட்டுள்ளது.
- வெள்ளத்தினால்பாதிக்கப்பட்ட57ஏரிகள்மற்றும் 2 பிரதான பாசன வாய்க்கால் புனரமைத்தல் ஆகிய பணிகள் ரூ.43.63 கோடி மதிப்பீட்டில் முடிவுற்றன.

கட்டம் I

- ரூ.743.56 கோடி மதிப்பீட்டில் 18 உபவடி நிலங்களில்1,325ஏரிகள்,107அணைக்கட்டுகள் புனரமைத்தல்மற்றும்42செயற்கைமுறைநீர் செறிவூட்டும் கிணறுகள் அமைத்தல் ஆகிய பணிகள்எடுத்துக்கொள்ளப்பட்டு100சதவிகிதப் புனரமைப்பு பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

கட்டம் II

- ரூ.649.55 கோடி மதிப்பீட்டில் 16 உபவடி நிலங்களில்903ஏரிகள்,181அணைக்கட்டுகள் ஆகியவற்றை புனரமைத்தல் மற்றும் 37 செயற்கை முறை நீர் செறிவூட்டும் கிணறுகள் அமைத்தல் ஆகிய பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டு, 99.6 சதவிகிதப் புனரமைப்பு பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

கட்டம் III

- ரூ.189.81கோடிமதிப்பீட்டில்9உபவடிநிலங்களில் 329ஏரிகள்,56அணைக்கட்டுகள்ஆகியவற்றை புனரமைக்கவும், 16 செயற்கை முறை நீர் செறிவூட்டும் கிணறுகள் அமைத்தல் ஆகிய பணிகள்எடுத்துக்கொள்ளப்பட்டு,86சதவிகிதப் புனரமைப்பு பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

கட்டம் IV

- ரூ.346.48 கோடி மதிப்பீட்டில் 9 உப வடிநிலங்களில்12ஏரிகள்,11அணைக்கட்டுகள்/ படுகை அணை,332கி.மீ.வழங்கு வாய்க்கால் /வாய்க்கால்மற்றும் 202கி.மீ.கால்வாய்களை புனரமைக்கும்பணிகள்எடுத்துக்கொள்ளப்பட்டு, 82 சதவிகிதப் புனரமைப்பு பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

நீர்நிலைகளை செப்பனிடுதல், புதுப்பித்தல் மற்றும் புனரமைத்தல் திட்டம் (RRR–PMKSY–HKKP)

- மத்திய அரசின் நிதியுதவியுடன் (60% மத்திய அரசு நிதி மற்றும் 40% மாநில அரசு நிதி) 457 ஏரிகளை (கட்டம் IV, V, VI, VII, VIII & IX) ரூ.404.83 கோடி மதிப்பீட்டில்புனரமைக்கும் பணிகள் செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன. 217 பணிகள் முடிக்கப்பட்டு, 240 பணிகள் பல்வேறு நிலைகளில் செயலாக்கத்தில் உள்ளன.

விருது

தேசிய நீர் விருது

- 2022–இல் ஒன்றிய அரசின் ஜல் சக்தி அமைச்சகத்தால், நீர் மேலாண்மையில் நாட்டிலேயே மூன்றாவது சிறந்த மாநிலமாக தமிழ்நாடு அறிவிக்கப்பட்டு விருது வழங்கப்பட்டது.

உலக பாரம்பரிய நீர்ப்பாசன கட்டமைப்பு (WHIS) விருதுகள்

- 2022–இல் சர்வதேச நீர்ப்பாசனம் மற்றும் வடிகால் ஆணையம் (ICID), காலிங்கராயன் அணைக்கட்டு மற்றும் வாய்க்கால் அமைப்பு, கல்லணை, வீராணம் ஏரி மற்றும் கொள்ளிடம்கீழ்அணைக்கட்டுஆகியநான்கு கட்டமைப்புகளுக்குஉலகளாவியஅங்கீகாரம் அளித்து தமிழ்நாடு நீர்வளத்துறைக்கு உலக பாரம்பரிய நீர்ப்பாசன கட்டமைப்பு விருதுகள் வழங்கப்பட்டன.



❖ 2023–இல் சர்வதேச நீர்ப்பாசனம் மற்றும் வடிகால் ஆணையம் (ICID), திருவைகுண்டம் அணைக்கட்டிற்கு உலகளாவிய அங்கீகாரம் அளித்து தமிழ்நாடு நீர்வளத்துறைக்கு உலக பாரம்பரிய நீர்ப்பாசன கட்டமைப்பு விருது வழங்கப்பட்டது.

மத்திய நீர்ப்பாசன மற்றும் எரிசக்தி வாரிய (CBIP) விருது

❖ 2022–இல் கட்சமங்கலம் அணைக்கட்டிற்கு சிறந்த திட்டம் / கட்டுமான பராமரிப்பிற்கான (50 ஆண்டுகள் குறையாமல்) விருது மத்திய நீர்ப்பாசனமற்றும் எரிசக்தி வாரியத்திலிருந்து வழங்கப்பட்டது.

Water Digest இதழின் உலக நீர் விருது

❖ 2023–2024–இல், தேசிய அளவில் முன்னணி நீர் மேலாண்மை இதழான Water Digest, அணைகளின் பாதுகாப்பில் சிறப்பான நிறுவன வலுப்படுத்தும் முயற்சிக்கான விருது தமிழ்நாடு நீர்வள துறைக்கு வழங்கப்பட்டது. இவ்விருதானது, தமிழ்நாடு நீர்வள துறையின் புதுமைத்திறனையும், சிறப்பான நீர்மேலாண்மை முயற்சிகளையும் அங்கீகரிப்பதாகும்.

சட்டமன்றம்

❖ தமிழ்நாடு சட்டமன்ற நூற்றாண்டு விழாவை முன்னிட்டு முன்னாள் முதலமைச்சர் முத்தமிழறிஞர் கலைஞர் மு.கருணாநிதி அவர்களின் திருவுருவப்படம் மற்றும் 02.08.2021 அன்று திறந்து வைக்கப்பட்டது.

❖ தமிழ்நாடு சட்டமன்ற நூற்றாண்டு விழாவினை நினைவுகூரும் வகையில் அச்சிடப்பட்ட விழா சிறப்பு மலரினை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வெளியிட, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் பெற்றுக்கொண்டார்கள்.

❖ 2021–2022ஆம் ஆண்டிற்கான திருத்திய நிதிநிலை அறிக்கை மற்றும் முதன்முறையாக சமர்ப்பிக்கப்பட்ட வேளாண்மை நிதிநிலை அறிக்கை ஆகியவை தமிழக வரலாற்றில் முதன் முறையாக மின் நிதிநிலை அறிக்கைகளாக, (e–Budget) பேரவைக்கு அளிக்கப்பட்டன.

❖ ஒவ்வொரு உறுப்பினரின் மேசைகளிலும் All–in–One PC–க்களும், கையடக்க கணினியும் பொருத்தப்பட்டு நிதிநிலை அறிக்கைகள் அளிக்கப்பட்டன.

❖ "காகிதமில்லா சட்டமன்றம்" என்னும் திட்டத்தினைச் செயல்படுத்திடும் நடவடிக்கைகளின் ஒரு பகுதியாக மாண்புமிகு உறுப்பினர்களுக்கு கையடக்க தொடுதிரை கணினி (Samsung S7+ Tablet) மற்றும் அதில் பொருத்தக்கூடிய சிம்கார்டுகள் வழங்கப்பட்டன.

❖ தமிழ்நாட்டின் 234 சட்டப் பேரவை உறுப்பினர் அலுவலகங்களில் இ–சேவை மையங்களைத் தொடங்கி வைத்து, அம்மையங்களுக்கான நவீன மேசைக் கணினிகள் வழங்கும் திட்டத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்தார்கள்.

❖ தூர்தர்ஷன் மற்றும் தமிழ்நாடு அரசு கேபிள் டி.வி. நிறுவனத்தின் முதல் சேனல் மூலமாக 2022இல் பேரவை நிகழ்வுகளை நேரடி ஒளிபரப்பு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டது.

❖ Youtube, Twitter, Facebook போன்ற சமூக ஊடகங்களுக்கும் செய்தி மக்கள் தொடர்புத்

துறை மூலமாக வீடியோ தொகுப்பும் வழங்கப்பட்டது.

- 08.02.2022 அன்று நடைபெற்ற NEET தேர்வு விலக்கு தொடர்பான சிறப்புக் கூட்ட நிகழ்வுகள் முழுவதும் நேரடி ஒளிபரப்பு செய்யப்பட்டன.
- தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்கென பிரத்தியேகமாகத் தொடங்கப்பட்ட Youtube Channel-லிலும் 04.05.2022 முதல் பேரவை நிகழ்வுகள் நேரடி ஒளிபரப்பு செய்யப்பட்டு வருகின்றன.
- 23.03.2023 அன்று தமிழ்நாடு இணையவழி சூதாட்டத்தைத் தடை செய்தல் மற்றும் இணையவழி விளையாட்டுக்களை ஒழுங்கு முறைப்படுத்துதல் சட்டமுன்வடிவு, 2022 மறு ஆய்வு செய்தல் தொடர்பான நிகழ்வுகள் முழுவதும் நேரடி ஒளிபரப்பு செய்யப்பட்டன. 18.11.2023 அன்று நடைபெற்ற சிறப்புக் கூட்டத் தொடரில் ஆளுநர் அவர்களால் திருப்பி அனுப்பிவைக்கப்பட்ட சட்டமுன்வடிவுகளை மறு ஆய்வு செய்தல் தொடர்பான பேரவை நிகழ்வுகள் முழுவதும் நேரடி ஒளிபரப்பு செய்யப்பட்டன.
- அன்றாட சட்டமன்ற நிகழ்வுகளின் தொகுப்பினை செவித்திறன் பாதிக்கப்பட்டவர்கள் புரிந்துகொள்ளும் வகையில் சைகை மொழி பெயர்ப்பாளர்கள் (Sign Language Interpreters) மூலமாக சைகை மொழியில் பத்து நிமிடங்கள் கொண்டதாக செய்தி மற்றும் விளம்பரத்துறை மூலம் ஒளிப்பதிவு செய்து YouTube channal மூலமாக ஒளிபரப்பு செய்யப்பட்டது.
- தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் 2023-2024ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கை மற்றும் வேளாண்மை நிதிநிலை அறிக்கை அளித்தல் ஆகியவை தேசிய இ-விதான் திட்ட செயலியின் இணையமுகப்பில் (Portal) நிகழ்நேர ஒளிபரப்பு (Live streaming) செய்யப்பட்டது. மேலும், வினாக்கள்-விடைகள் நேரமும் Live streaming முறையில் ஒளிபரப்பு செய்யப்பட்டு வருகிறது.
- டிஜிட்டல் ஹவுஸ் திட்டத்தின் கீழ் மாண்புமிகு உறுப்பினர்களின் மேசைகளின் மேல் பொருத்தப்பட்டுள்ள தொடுதிரை சிறு கணினிகளில் மின்-புத்தகம் (e-Book) என்ற செயலி உருவாக்கப்பட்டு, இதனைப் பயன்படுத்துவதற்கான பயனாளர் குறியீடு (User ID) மற்றும் கடவுச் சொல் (Password) அனைத்து மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் உருவாக்கப்பட்டு, உள்ளீடு செய்யப்பட்டுள்ளது.
- "சட்டமன்றத்தின் நூற்றாண்டைக் குறிக்கும் வகையில் வரலாற்றுச் சிறப்புமிக்க இந்த மன்றத்தில் 1921ஆம் ஆண்டிலிருந்து நடைபெற்ற நிகழ்வுகள் குறித்த ஆவணங்கள் அனைத்தையும் கணினிமயமாக்கும்" பணிகள் தமிழ்நாடு மின் ஆளுமை முகமையின் மூலம் மேற்கொள்ளப்பட்டு, சுமார் 10 இலட்சம் பக்க ஆவணங்கள் இதுவரை மின்னுருவாக்கம் செய்யப்பட்டுள்ளன.
- கலைஞர் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு, சட்டமன்றப் பேரவை/மேலவை முன்னாள் உறுப்பினர்களுக்கு ரூ.25,000 ஆக வழங்கப்பட்டு வந்த மாத ஓய்வூதியம் ரூ.30,000 ஆக உயர்த்தப்பட்டு, வழங்கப்பட்டு வருகிறது. மேலும், மருத்துவப்படி நிதியாண்டிற்கு ரூ.50,000 லிருந்து ரூ.75,000 ஆக உயர்த்தப்பட்டு வழங்கப்பட்டுள்ளது.
- சட்டமன்றப் பேரவை / மேலவை முன்னாள் உறுப்பினர்களின் குடும்ப ஓய்வூதியமும் மேற்கூறிய ஓய்வூதியத்தில் பாதி என்றவாறு உயர்த்தப்படும்.
- சட்டமன்ற உறுப்பினர்கள் குடியிருப்பு வளாகத்தை ஒட்டியுள்ள பகுதியில் சட்டமன்ற உறுப்பினர்களின் பயன்பாட்டிற்காக ரூ.4.29 கோடி செலவினத்தில் பொதுப்பணித் துறையால் புதியதாக அமைக்கப்பட்ட இறகுப்பந்து விளையாட்டுக் கூடம், புதிய பூங்காக்கள், புதிய மழைநீர் கால்வாயுடன் கூடிய நடைபாதை, சுவாமி சிவானந்தா சாலை மற்றும் வாலாஜா சாலைகளை இணைக்கும் புதிய உட்புறச் சாலை ஆகியவை திறந்து வைக்கப்பட்டுள்ளன.

❖ சட்டமன்ற உறுப்பினர்கள் குடியிருப்பு புதிய இருக்கைகள் (Sofas), புதிய மெத்தைகள், புதிய தலையணைகள், தலையணை உறைகளுடன் கூடிய படுக்கைவிரிப்புகள் ஆகியவை அனைத்து குடியிருப்புகளுக்கும் வழங்குவதற்காகவும், பழுதடைந்த அறைகலன்கள் பழுதுநீக்கம் செய்யவும், ரூ.99.48 இலட்சம் செலவினத்தில் மேற்கொள்ள அரசாணை வெளியிடப்பட்டு தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் மூலம் பணிகள் மேற்கொள்ளப்பட்டு. சட்டமன்ற உறுப்பினர்கள் குடியிருப்பு வளாகத்தின் உபவசதிக் கட்டடத்தில் புதிய மின்தூக்கி அமைப்பதற்கு ரூ.1.83 கோடி செலவினத்தில் மேற்கொள்ளப்பட்டு பணிகள் முடிவுற்றது.

❖ சட்டமன்ற உறுப்பினர்கள் குடியிருப்பு வளாகத்திலுள்ள சட்டமன்ற உறுப்பினர்களின் பாதுகாப்புக்காக 30 நாட்கள் பதிவு வசதியுடன் கூடிய 84 கடுங்கண்காணிப்பு ஒளிப்படக் கருவிகள் (CCTV) ரூ.64.92 இலட்சம் செலவினத்தில் தமிழ்நாடு மின்னணு நிறுவனம் மூலம் பொருத்தப்பட்டுள்ளன.

❖ சுவாமி சிவானந்தா சாலை நுழைவு வாயிலின் முகப்பினை அழகுபடுத்தும் விதமாகவும், சட்டமன்றப் பேரவை அமைப்பு எல்லையினை வரையறுக்கும் விதத்திலும் நுழைவாயிலில் "கலைஞர் நூற்றாண்டு வளைவு (Kalaignar Centenary Arch)" என்னும் வாசகத்துடன் கம்பீர அலங்கார வளைவினை ரூ.11 இலட்சம் செலவினத்தில் பணிகள் நடைபெற்றுவருகிறது.

❖ சட்டமன்ற உறுப்பினர்கள் குடியிருப்பு வளாகம் மற்றும் சட்டமன்ற முன்னாள் உறுப்பினர்கள் விடுதி ஆகியவற்றில் இயங்கி வரும் 6 மின் மாற்றிகளை (Transformers) இடமாற்றம் செய்வதற்கு ரூ.94.80 இலட்சம் செலவினத்தில் மேற்கொள்ளப்பட்டு பணிகள் முடிவுற்றது.

❖ "சட்டமன்ற நாயகர்–கலைஞர்" விழாக் குழு சார்பில் அமைக்கப்பெற்ற நான்கு துணைக் குழுக்கள் மூலம் தமிழகத்தில் 37 மாவட்டங்களில் 120 பள்ளிகள் மற்றும் கல்லூரிகளில், 602 மாணவ/மாணவியர் பங்கேற்ற கருத்தரங்கங்கள், நடத்தப்பட்டு அனைத்து மாணவர்களுக்கும் பாராட்டுச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

கனிமங்கள் மற்றும் சுரங்கங்கள்

❖ கனிம வளங்கள் மூலம் 2021–2022 ஆம் நிதியாண்டில் ரூ.1,212.87 கோடி, 2022–2023 ஆம் நிதியாண்டில் ரூ.1,679.83 கோடி வருவாய் ஈட்டப்பட்டுள்ளது. 2023–2024 ஆம் நிதியாண்டில் ரூ.1,835.93 கோடி வருவாய் ஈட்டப்பட்டுள்ளது.

❖ தமிழ்நாடு அரசு அனுமதியின்றி கனிமம் எடுத்தல், கடத்தல் மற்றும் இருப்பு வைத்தலைத் தடுத்தல் மற்றும் கனிம வர்த்தகர் விதிகள், 2011 இல் அரசால் திருத்தம் செய்து. விதி 9A சேர்க்கப்பட்டு அனுமதியின்றி சட்டவிரோதமாகக் கனிமங்கள் கடத்தப்படுவதைத் தடுக்கும் நோக்கில் மாநிலம் முழுவதும் மற்றும் மாவட்ட எல்லைகளிலும் மறைகாணிக்கைகள் (சிசிடிவி கேமராக்கள்) நிறுவ வழிவகை செய்யப்பட்டு, 2021–2022 ஆம் நிதியாண்டில் அனுமதியின்றி கனிமங்கள் எடுத்துச் சென்ற 7,454 வாகனங்கள் கைப்பற்றப்பட்டுள்ளன. மேலும், 2022–2023 மற்றும் 2023 – 2024 ஆம் ஆண்டுகளில் முறையே 4,952 மற்றும் 5,245 வாகனங்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

❖ சாகுபடிக்கு ஏற்றதாக இல்லாத விவசாய நிலங்களை மேம்படுத்தும் பொருட்டு ரயத்வாரி நிலங்களில் சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சியர்களால் 3 மாதங்களுக்கு மிகாமல் 1.5 மீ ஆழம் வரை மண் எடுக்க அனுமதி வழங்க ஏதுவாக தமிழ்நாடு சிறுகனிம சலுகை விதிகள் 1959 இல் விதி 44 ஐ சேர்த்து, அரசால் திருத்தம் செய்யப்பட்டது. இந்த விதியின் கீழ் செங்கல் மண்ணை உரிமக்கட்டணம் செலுத்தி செங்கல் சூளைகளுக்கு பயன்படுத்தவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

❖ 436 பயனற்ற பழைய சுரங்கங்கள் மற்றும் குவாரிகளை பொதுப் பயன்பாட்டுக்காக மீட்டெடுத்தல் – காலாவதியான மற்றும் கைவிடப்பட்ட சுரங்கங்கள் மற்றும் குவாரிகள் பொதுமக்களுக்கும் மற்ற உயிரினங்களுக்கும் அச்சுறுத்தலாக உள்ளது. எனவே, ஆபத்தின் அளவைக் கருத்தில் கொண்டு கைவிடப்பட்ட சுரங்கங்கள் மற்றும் குவாரிகளை மீட்டெடுப்பதும்

மறுசீரமைப்பதும் மிக முக்கியமானது. எனவே, தமிழ்நாடு அரசின் தலைமைச் செயலாளர் மாநிலத்தில் கைவிடப்பட்ட அனைத்து குவாரிகள் / சுரங்கங்களையும் பயன்பாட்டுக்கு கொண்டு வருமாறு அனைத்து மாவட்ட ஆட்சியர்களுக்கும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. இது தொடர்பாக செங்கல்பட்டு மற்றும் காஞ்சிபுரம் மாவட்டங்களில் முன்னோடி ஆய்வு நடத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

- தமிழ்நாடு சிறுகனிம சலுகை விதிகள் 1959 இல் புதிய விதி 35-ஐ சேர்க்கப்பட்டுள்ளது. இதன்படி, கைவிடப்பட்ட குவாரிகள் மற்றும் சுரங்கங்களைப் பாதுகாக்கவும், மீட்டெடுக்கவும், மறுசீரமைக்கவும் மற்றும் புதுப்பிக்கவும். பசுமை நிதிக்குழு 37 மாவட்டங்களில் உருவாக்கப்பட்டுள்ளது.
- அனைத்து சிறுகனிம குத்தகைதாரர்களும் கனிமங்களை எடுத்துச் செல்வதற்கு செலுத்தப்படும் உரிமத் தொகையுடன் சேர்த்து உள்ளூர் கனிம உபயோகத்திற்கு 10 சதவிகித தொகையும், வெளி மாநிலங்களுக்கு எடுத்து செல்லும் கனிமங்களுக்கு 23.02.2022 முதல் 04.09.2023 வரை உரிமக் கட்டணத்தில் 20 சதவிகித தொகையும், 05.09.2023 முதல் உரிமக்கட்டணத்தில் 50 சதவிகித தொகையைக் கூடுதலாகப் பங்களிப்பு செய்கின்றனர். 23.02.2022 முதல் 31.03.2024 வரை ரூ.125.01 கோடி பசுமை நிதியாக வசூல் செய்யப்பட்டுள்ளது.
- தமிழ்நாடு மாவட்ட கனிம அறக்கட்டளை விதிகள், 2017, விதி 3இல் பாராளுமன்ற உறுப்பினர்களையும் மற்றும் சட்டமன்ற உறுப்பினர்களையும் மாவட்ட கனிம அறக்கட்டளை ஆளும் குழு உறுப்பினர்களாக சேர்க்கப்பட்டு மாற்றம் செய்யப்பட்டுள்ளது.
- ஆளில்லா விமான தொழில்நுட்பத்தை செயல்படுத்துவதற்காக ரூ.25 கோடியினை புவியியல் மற்றும் சுரங்கத்துறைக்கு ஒதுக்கீடு செய்துள்ளது. இத்திட்டம் ஆண்டொன்றுக்கு ரூ.25 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும். ஆளில்லா விமானத் தொழில்நுட்பம் (Drone Technology) சுரங்கம் மற்றும் குவாரிகளை மூலம் ஆறுமாதத்திற்கு ஒருமுறை அவற்றின் செயல்பாடுகளை ஒழுங்குப்படுத்துதல், கண்காணித்தல், வெட்டி எடுக்கப்பட்டக் கனிமங்களின் அளவினை துல்லியமாக அளவீடு செய்தல், குவாரி எல்லைகளை ஆய்வு செய்தல் ஆகியவற்றின் மூலம் சட்ட விரோதமாக கனிமங்கள் கடத்துவதை தடுக்க பயன்படுத்தப்படுகிறது.
- இதுவரை பதிமூன்று ஆளில்லா விமானத் தொழில்நுட்பமுகமைகளை தேர்வுசெய்யப்பட்டு அவர்களுக்கான பணி ஆணைகளும் வழங்கப்பட்டுள்ளது. முகவர்கள் தங்களுக்கு ஒதுக்கப்பட்ட மாவட்டங்களில் ஆளில்லா விமானம் மூலம் ஆய்வு நடத்தி அறிக்கைகளை மாவட்ட. அலுவலர்களுக்கு சமர்ப்பித்துள்ளனர். அவ்வறிக்கைகள் தமிழ்நாடு ஆளில்லா விமான கழகத்திடம் ஆய்வுக்காக அனுப்பப்பட்டுள்ளது. ஆளில்லா விமான தொழில்நுட்பம் மூலம் குவாரிகள் / சுரங்கங்கள் அளவீடு செய்வதன் மூலம் அனுமதியின்றி செயல்படும் குவாரிகளுக்கு அபராதம் விதிப்பதால் அரசு வருவாய் இழப்பினை தடுக்க இயலும்.
- குவாரிகளில் பல ஆண்டுகளாகக் குவிந்து கிடக்கும் கிராணைட் கழிவுகற்களை அரசுக்கு வருவாய் பெருகும் வகையில் அகற்றப்படும். தமிழ்நாடு சிறுகனிம சலுகை விதிகளில் விதி 8-A இல் துணை விதி (13) மற்றும் விதி 2 இல் துணை விதி 5-AA சேர்க்கப்பட்டு கிராணைட் கழிவுகற்களை அகற்றுவதற்காக ஒருடன்னுக்கு ரூ.100 உரிமக்கட்டணம் நிர்ணயித்து திருத்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.
- தமிழ்நாடு சிறு கனிமச் சலுகை விதிகள், 1959 இன் கீழ், வழங்கப்பட்ட அரசு நிலங்களில் ஏற்கெனவே உள்ள மற்றும் காலாவதியான குத்தகைகளில் இருந்து கிராணைட் கழிவுகளை அகற்றுவதற்கான நிலையான செயல்பாட்டு நடைமுறைகளை வெளியிட்டுள்ளது. 15.12.2023 அன்று தமிழ்நாடு கனிம நிறுவனத்துடன் பூர்வாங்கக் கூட்டம் நடத்தப்பட்டு, காலாவதியான குவாரிகளில் கிடைக்கும் கிராணைட் கழிவுகளை ட்ரோன் மூலம் அளவிட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு கனிம நிறுவனம் உதவியுடன் கிராணைட் கழிவுகளை மின்னணு

ஏல தளம் tender.tn.gov.in–இல் ஏலம் விடவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.இந்தஏலத்தின்மூலம் அரசுக்கு கணிசமான வருவாய் கிடைக்கும்.

❖ தமிழ்நாடு சிறு கனிம சலுகை விதிகள், 1959இன் விதி12(2–A)(f)இல் இந்திய தேசிய நெடுஞ்சாலைகள் ஆணையம் அல்லது மாநில நெடுஞ்சாலைகள் அல்லது இரயில்வே திட்டங்கள் உட்பட எந்த ஒரு நேர்மையான பொது நோக்கத்திற்காகவும் வண்டல் மற்றும் கிராவல் எடுப்பதற்கு ஒரு வருடத்திற்கு மிகாமல் அனுமதிகாலத்தைநீட்டித்துஅரசால் திருத்தம் செய்யப்பட்டுள்ளது.பொதுமக்களின் பயன்பாட்டிற்காக நெடுஞ்சாலைகள் மற்றும் இரும்புப்பாதைகள் அமைத்திடதேவைப்படும் கனிமங்களை இதன் மூலம் அனுமதிக்கவும் விரைவில்பயன்பாட்டிற்குக்கொண்டுவரவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

❖ பெரம்பலூர் மாவட்டத்தில் உள்ள புதைபடிவங்களைப் பாதுகாக்க புவியியல் புதைபடிவப் பூங்கா ரூ.10 கோடிச் செலவில் அமைக்கப்படும். பெரம்பலூர் பகுதிகளில் கிடைக்கும் அரிய தொல்லுயிர் படிமங்கள் உலகில் வேறெங்கும் கிடைக்கக்கூடிய படிமங்களைவிட மிகவும் அரிதான ஒன்றாக கருதப்படுகிறது. வருங்கால கல்வி மற்றும் ஆராய்ச்சிமாணவர்களுக்காகதொன்மையான தொல்லுயில் படிமங்கள் கொண்ட இப்பகுதிகளை ரூ.8.57 கோடிச் செலவில் பாதுகாக்கப்படும். ரூ.8.52 கோடி நிதியினை புவியியல் மற்றும் சுரங்கத்துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ரூ.7.89 கோடி பொதுப்பணித்துறைக்கு புவியியல் பூங்கா அமைச்ச மாற்றம் செய்யப்பட்டுள்ளது. அரசு தனது 9.72.0 ஹெக்டேர் இடைப்பட்டப் பட்டா நிலங்களை கையகப்படுத்த மாவட்ட நிருவாகத்திற்கும்,402.430ஹெக்டேர் அரசு நிலங்களை புவியியல் மற்றும் சுரங்கத்துறை பெயரில்மாற்றம்செய்வதற்கும்நிருவாகஒப்புதல் வழங்கியுள்ளது.புவியியல்புதைப்படிவப்பூங்கா அமைக்கும்பணிநடைபெற்றுவருகிறதுமற்றும் ஜுலை 2024இல் பணி முடிவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

❖ தமிழ்நாடுசிறுகனிமச்சலுகைவிதிகள்,1959இன் விதி36(1–A)(e)இல்,காப்புக்காடுகளில்இருந்து ஒரு கிலோமீட்டர் சுற்றளவில் குவாரி/சுரங்க நடவடிக்கையைத்தடைசெய்ததைரத்துசெய்து திருத்தம்செய்யப்பட்டுள்ளது.மேற்கூறியவிதி 36இல்,குவாரிகள்/சுரங்ககுத்தகைதாரர்களின் நலன்களைப் பாதுகாப்பதற்காகவும்,அரசுக்கு வருவாயைப் பெருக்குவதற்காகவும் துணை விதி(1–ஏ)பிரிவு(இ)இல்"தேசியப்பூங்காக்கள், வனவிலங்கு சரணாலயங்கள், புலிகள் காப்பகங்கள், யானை வழித்தடங்கள் மற்றும் காப்புக் காடுகளுக்கு" பதிலாக "தேசியப் பூங்காக்கள், வனவிலங்கு சரணாலயங்கள், புலிகள் காப்பகங்கள் மற்றும் யானைகள் வழித்தடங்கள்" என்று மாற்றப்பட்டுள்ளது.

❖ தமிழ்நாடு சிறுகனிமச் சலுகை விதிகள்,1959 விதி 12(2)(அ)–இல் சென்னை, காஞ்சிபுரம் மற்றும்திருவள்ளூர்மாவட்டஆட்சியர்களை அனுமதிக்கும் வகையில், தொட்டிகள், கால்வாய்கள் மற்றும் நீர்த்தேக்கங்களின் பாத்திகளில்இருந்துகளிமண்,வண்டல்மற்றும் கிராவல் மண் அகற்றுவதற்கு ஏற்ப திருத்தம் செய்யப்பட்டுள்ளது.

❖ ஆற்றுப் படுகைகளில் மணல் குறைந்து வருவதால், எம்–சாண்ட் பயன்பாட்டை ஊக்குவிக்கவும், உயர்தர எம்–சாண்ட் / நொறுக்கப்பட்ட மணலை பொதுமக்களுக்கு வழங்கவும், எம்–சாண்ட் கொள்கை, 2023 மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் வெளியிடப்பட்டது.

❖ தமிழ்நாடு சிறு கனிமச் சலுகை விதிகள், 1959இல் விதி 43–க்குப் பிறகு விதி 43–A சேர்க்கப்பட்டு 05.09.2023 அன்று முதல் சிறு கனிமங்களுக்கான உரிமக் கட்டண விகிதங்களைத் திருத்தியுள்ளது. மேலும், அரசுச் செயலாளர், இயற்கை வளங்கள் துறை தலைமையில் புவியியல் மற்றும் சுரங்கத் துறை இயக்குநர் அவர்களை உறுப்பினர்–அழைப்பாளராகவும் அமைத்து ஆறு பேர் கொண்டகுழுஅமைக்கப்பட்டுள்ளது.மூன்று ஆண்டுகளுக்குஒருமுறைஉரிமக்கட்டணம்,

பரப்புத் தீர்வை, முடக்கு வரி மற்றும் கனிம ஆய்வுக்கட்டணம்ஆகியவற்றின்விகிதங்களை மாற்றியமைக்க மாநில அரசுக்கு குழு பரிந்துரைக்கும்.

❖ புவியியல் மற்றும் சுரங்கத் துறையானது சிறு கனிமங்களுக்கான கனிம மேலாண்மை அமைப்பை உருவாக்கும் பணியை தி/ள்.தமிழ்நாடுமின்ஆளுமைநிறுவனத்திற்கு என்.இ.ஜி.ஏக்கு ஒதுக்கி குவாரி குத்தகை விண்ணப்பங்களை இணையம் மூலமாகப் பெறுவதற்கும்,குத்தகைவிண்ணப்பங்களை ஆய்வு செய்து குத்தகை வழங்குவது தொடர்பாகவும்16கனிமச்சலுகைதொகுதிகளை உருவாக்கியுள்ளது.

❖ கடற்கரை தாது மணல் கனிமங்களைப் பிரித்தெடுக்கும்தொழிற்சாலைகள்இரண்டை அமைக்க திட்டமிட்டு ஆண்டுக்கு ரூ.3,000 கோடி விற்பனை வருவாய் ஈட்ட திட்டமிடப்பட்டுள்ளது. தூத்துக்குடி மாவட்டத்தில்இரண்டு தேரிமணல்பகுதிகள் கண்டறியப்பட்டுஆய்வுபணிகள்நடைபெற்று வருகின்றன.

❖ ரூ.460 கோடி மதிப்பீட்டில் கிராபைட் செதில்களின் உற்பத்தியை தற்போதைய செயல்திறனான 6,000 மெட்ரிக் டன்னில் இருந்து 25,000 மெட்ரிக் டன்னாக உயர்த்தி கிராபைட் வணிகத்தை விரிவுபடுத்துவதற்கு டாமின் நிறுவனம் திட்டமிட்டுள்ளது.

❖ தமிழ்நாடு கனிம நிறுவனம் தலைமை அலுவலகத்திலும். அனைத்து கோட்ட அலுவலகங்கள்மற்றும்தொழிற்சாலைகளிலும் மின்னாளுமை அலுவலக (e-office) நடைமுறையினைமுழுமையாகசெயல்பாட்டில் கொண்டு வந்துள்ளது.

சுரங்க விருதுகள்

❖ 2022-2023ஆம் ஆண்டில் மாசு இல்லாத, தூய்மையானசுற்றுச்சூழல்மற்றும்அறிவியல் ரீதியான பராமரிப்பு போன்ற பல்வேறு அம்சங்களுக்காக தமிழ்நாடு கனிம நிறுவனத்திற்குமுதல்பரிசுகளும்10இரண்டாம் பரிசுகளும்.ஒட்டுமொத்தசெயல்திறனுக்கான ஒருபரிசும்வழங்கப்பட்டுள்ளன2023-2024ஆம் ஆண்டில் 4 முதல் பரிசுகளும் 5 இரண்டாம் பரிசுகளும் தமிழ்நாடு கனிம நிறுவனம் பெற்றுள்ளது

❖ தமிழ்நாடு கனிம நிறுவனம் 2022-2023ஆம் ஆண்டில்ரூ.112இலட்சங்களும்,2023-2024ஆம் ஆண்டில் ரூ.17.5 இலட்சங்கள் செலவழித்து சுற்றுச்சூழல் மேம்பாட்டு பணிகளை மேற்கொண்டது. மேலும் மாண்புமிகு நீர்வளத்துறைஅமைச்சர்அவர்கள்28.09.2022 அன்று வேலூர் மாவட்டம் மகிமண்டலம் குவாரியில் 5,000 மரக்கன்றுகள் நடும் நிகழ்ச்சியினைதொடங்கிவைத்தார்தற்சமயம் 7,000மரக்கன்றுகள்நடப்பட்டுபராமரிக்கப்பட்டு வருகிறது.

❖ ❖ ❖

> தமிழ்நாட்டின் காவிரி உரிமையை தமிழ்நாட்டு உழவர்களின் நலனை இந்த அரசு நிச்சயம் பாதுகாக்கும். தமிழ்நாட்டு உரிமையில் நாம் அனைவரும் ஒன்றுபட்டு நிற்போம், நிச்சயம் வெற்றிப் பெறுவோம்.
>
> **மு.க.ஸ்டாலின்**
> மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்

நகராட்சி நிருவாகம், நகர்ப்பகுதி மற்றும் குடிநீர் வழங்கல்



திரு. **கே.என்.நேரு** அவர்கள்

மாண்புமிகு நகராட்சி நிருவாகத்துறை அமைச்சர்

நகராட்சி நிருவாக இயக்குநரகம்

கலைஞர் நகர்ப்புர மேம்பாட்டுத் திட்டம்

- 138 நகராட்சிகள், 490 பேரூராட்சிகள் மற்றும் நகராட்சிகளாக இருந்து புதியதாக மாநகராட்சிகளாக உருவாக்கப்பட்ட 6 மாநகராட்சிகள் ஆகியவற்றிற்கு ஆண்டுதோறும் ரூ.1,000 கோடி நிதி ஒதுக்கீட்டில் "கலைஞர் நகர்ப்புர மேம்பாட்டுத் திட்டம் துவக்கம்.

நகராட்சிகள்

- ரூ.3,000 கோடி நகராட்சிகளுக்கும் மற்றும் பேரூராட்சிகளுக்கும் ஒதுக்கீடு செய்யப்பட்டு, அதில் நகராட்சிகளுக்கு ரூ.1,785.19 கோடி மதிப்பீட்டில் 1,116 பணிகள் அனுமதிக்கப்பட்டு, அவற்றில் 710 பணிகள் முடிவுற்றும் மீதமுள்ள பணிகள் முடிவுபெறும் நிலையில் உள்ளன.

நமக்கு நாமே திட்டம் (நகர்ப்புரம்)

- தமிழ்நாடு அரசு, சமுதாய உட்கட்டமைப்புகளை உருவாக்குவதிலும், பராமரிப்பதிலும் பொதுமக்களின் பங்கேற்பினை அதிகரிக்கும் நோக்கத்துடன் நமக்கு நாமே திட்டம் அறிமுகம் செய்யப்பட்டு, அனைத்து மாநகராட்சிகள், நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளுக்கு ரூ.550 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு, மாநகராட்சிகளில் (சென்னை தவிர) ரூ.109.55 கோடி மதிப்பீட்டில் 696 பணிகள் மற்றும் நகராட்சிகளில் ரூ.169.52 கோடி மதிப்பீட்டில் 1,378 பணிகளும் மொத்தம் ரூ.146.03 கோடி பொதுமக்கள் பங்களிப்புடன் அனுமதிக்கப்பட்டுள்ளன.



நகர்ப்புர வேலைவாய்ப்புத் திட்டம்

- நகர்ப்புர வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் 2,04,860நபர்களுக்குவேலைக்கானஅடையாள அட்டைவழங்கப்பட்டுள்ளது.2021–2022ஆம் நிதி ஆண்டிற்கு ரூ.75 கோடி பெறப்பட்டு, 2022–2023ஆம்நிதிஆண்டிற்குரூ.25கோடி ஒதுக்கீடு.

முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம்

- 1ஆம்வகுப்புமுதல்5ஆம்வகுப்புவரைபயிலும் அனைத்து மாணவர்களும் பயன்பெறும் வகையில்மாணவர்களுக்கு"காலைச்சிற்றுண்டி வழங்கும்சிறப்புத்திட்டம்"220உள்ளாட்சிகளில் (மாநகராட்சிகள், நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகள்)உள்ள2,256பள்ளிகளில்2,48,041 மாணவர்கள்பயன்பெறும்வகையில்ரூ.65.26 கோடி நிதி ஒதுக்கீடு.

தூய்மை இந்தியா திட்டம் 2.0 (நகர்ப்புரம்)

- தூய்மைஇந்தியாதிட்டத்தின்கீழ்,100சதவிகித திடக்கழிவுகளை அறிவியல் முறையில் செயலாக்கம் செய்தல், திடக்கழிவுகள் உருவாகும் இடத்திலேயே தரம் பிரித்தல், கட்டுமானம் மற்றும் கட்டட இடிபாட்டுக் கழிவுகள்ஆகியவற்றைதிறம்படமேலாண்மை செய்தல்,நெகிழிகழிவுமேலாண்மை மற்றும் அனைத்து தேக்க திடக் கழிவுகள் கொட்டும் இடங்களையும் மீட்டெடுத்தல் இதை சாத்தியப்படுத்துவதற்காக தகவல் கல்வி தொடர்புவிழிப்புணர்வுஉருவாக்குதல்மற்றும் திறன் மேம்பாடு உருவாக்குதல் ஆகியவை இதர நோக்கங்கள் ஆகும்.

சுகாதாரம்

- சுகாதாரம் மற்றும் திடக்கழிவு மேலாண்மைக்கானசெயல்திட்டம்,அனைத்து நகரங்களிலும் திறந்த வெளியில் மலம் கழித்தல்இல்லாதநிலையைஏற்படுத்த,43,099 தனிநபர் வீட்டுக் கழிப்பறைகள் (IHHL) கட்ட அனுமதிக்கப்பட்டு34,293கழிப்பறைகள்கட்டி முடிக்கப்பட்டு உள்ளது.
- ரூ.2.80 கோடி மதிப்பீட்டில் சென்னை அரசு இசைக் கல்லூரியில் உள்ள பாரம்பரிய பிராடி கேசில்கட்டடத்தினைப்புனரமைத்தல்பணிகள் நடைபெற்று வருகின்றன.
- ரூ.1.54 கோடி மதிப்பீட்டில் சென்னை அடையாறில் உள்ள இயல் இசை நாடக மன்றத்தினை புனரமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.
- ரூ.1.60 கோடிக்கு கடலூர் மாவட்டத்தில் மாவட்டஇசைப்பள்ளிகட்டும்பணிநடைபெற்று வருகின்றது.
- ரூ.1.43 கோடி மதிப்பீட்டில் சென்னை, அடையாறில்தமிழ்நாடுடாக்டர்ஜெ.ஜெயலலிதா இசை மற்றும் கவின்கலைப் பல்கலைக் கழகத்தின் புனரமைத்தல் பணி நடைபெற்று வருகின்றது.
- ரூ.3 கோடி மதிப்பீட்டில் சென்னை அரசு அருங்காட்சியகத்தில்உள்ளஅருங்காட்சியக கலையரங்கத்தினை புனரமைத்தல் பணி நடைபெற்று வருகிறது.
- ரூ.5 கோடி மதிப்பீட்டில் சேலம் மாவட்டம், அஸ்தம்பட்டி கிராமத்தில் புதிய அரசு அருங்காட்சியக கட்டடம் அமைக்கும் பணி நடைபெற்று வருகின்றன.
- ரூ.3.49 கோடி மதிப்பீட்டில் மதுரை மாவட்டத்தில் அமைந்துள்ள காந்தி நினைவு அருங்காட்சியத்தினைபராமரிப்பு,சீரமைத்தல் மற்றும் மேம்படுத்தும் பணி நடைபெற்று வருகின்றன.
- ரூ.3.63 கோடி மதிப்பீட்டில் மயிலாடுதுறை மாவட்டம், தரங்கம்பாடியில் அமைந்துள்ள டேனிஷ்கோட்டையினைசீரமைத்தல்மற்றும் மேம்படுத்தும்பணிநடைபெற்றுவருகின்றன.
- ரூ.3.73கோடிமதிப்பீட்டில்மதுரைமாவட்டத்தில் அமைந்துள்ளபாரம்பரியகட்டடமானதிருமலை நாயக்கர் மஹாலினை மேம்படுத்திடும் பணி நடைபெற்று வருகின்றது.
- ரூ.6.78 கோடி மதிப்பீட்டில் தஞ்சாவூர் மாவட்டத்தில்அமைந்துள்ளதர்பார்ஹாலினை பராமரித்தல் மற்றும் சீரமைப்புப் பணிகள் நடைபெற்று வருகின்றன.
- ரூ.33.02 கோடி மதிப்பீட்டில் திருநெல்வேலி மாவட்டம், பாளையங்கோட்டை தாலுகா, குலவணிகர் கிராமத்தில்நவீனவசதிகளுடன் ஆதிச்சநல்லூர், சிவகலை, கொற்கை ஆகிய இடங்களில்தொல்லியல்துறை அகழாய்வில் கண்டெடுக்கப்பட்ட தொல்பொருட்களை பாதுகாக்க புதிய பொருநை அருங்காட்சியக கட்டடவளாகம்அமைக்கும்பணிநடைபெற்று வருகின்றன.
- ரூ.2.70 கோடி மதிப்பீட்டில் திருவள்ளூர் மாவட்டம், பட்டறை பெரும்புதூரில் புதிய தொல்லியல்அருங்காட்சியகம்அமைக்கும்பணி நடைபெற்று வருகின்றன.
- ரூ.4.33 கோடி மதிப்பீட்டில் மயிலாடுதுறை மாவட்டம் தரங்கம்பாடியில் அமைந்துள்ள கவர்னர்மாளிகையினைப்பராமரித்தல்மற்றும் சீரமைத்தல் பணி நடைபெற்று வருகின்றன.
- ரூ.9.12 கோடி மதிப்பீட்டில் தஞ்சாவூர் மாவட்டத்தில் அமைந்துள்ள சார்ஜா மாடி புராதானகட்டடத்தினைசீரமைத்துமேம்படுத்தும் பணி நடைபெற்று வருகிறது.
- ரூ.1.39 கோடி மதிப்பீட்டில் நாகப்பட்டினம் மாவட்டம்,அரசுஅருங்காட்சியகத்தைஅரசுக்கு சொந்தமான பாரம்பரிய கட்டடத்தை (பழைய கோட்டாட்சியர் அலுவலகம்) மீட்டுருவாக்கி மாற்றியமைப்பதற்கு பணிகள் தொடங்கப்படவுள்ளன.
- ரூ.5.60 கோடி மதிப்பீட்டில் விழுப்புரம் மாவட்டத்தில் உள்ள முதன்மைத் திட்ட வளாகத்தில் புதிய அரசு அருங்காட்சியகம் அமைத்திட பணிகள் தொடங்கப்படவுள்ளன.
- ரூ.10கோடிமதிப்பீட்டில்அரியலூர்மாவட்டத்தில் உள்ள புதையுயிரி படிம அருங்காட்சியக வளாகத்தில்கருப்பொருள்பூங்காஅமைத்தல் பணிகள் தொடங்கப்படவுள்ளது.
- ரூ.6.81கோடிமதிப்பீட்டில்விருதுநகர்மாவட்ட அரசு அருங்காட்சியகத்தினை சொந்த கட்டடத்திற்கு இடம்மாற்றிஅமைக்கும்பணி தொடங்கப்படவுள்ளது.
- ரூ.36கோடிமதிப்பீட்டில்சென்னைகிண்டியில் போக்குவரத்துஆணையர்அலுவலகத்திற்கான கட்டடம் கட்டுதல் பணி முடிவுற்றது.

- ரூ.1.62 கோடி மதிப்பீட்டில் சேலம்மாவட்டம் வாழப்பாடி தாலுகாவில்உள்ளவாழப்பட்டியில் மோட்டார் வாகன ஆய்வாளர் பிரிவு வாகன ஆய்வாளர்அலுவலகக்கட்டடம்கட்டுதல்பணி முடிவுற்றது.

- ரூ.4.17கோடிமதிப்பீட்டில்நாமக்கல்மாவட்டம் நாமக்கல்லில்(தெற்கு)வட்டாரபோக்குவரத்து அலுவலகத்திற்கு ஓட்டுநர் சோதனை தடத்துடன் சொந்தக் கட்டடம் கட்டுதல்.பணி முடிவுற்றது.

- ரூ.1.97கோடிமதிப்பீட்டில்சிவகங்கைமாவட்டம் காரைக்குடியில்சோதனைதடத்துடன்கூடிய மோட்டார்வாகனஆய்வாளர்அலுவலகம்(அலகு அலுவலகம்)கட்டடம்கட்டுதல்பணிமுடிவுற்றது.

- ரூ.3.78 கோடி மதிப்பீட்டில் மதுரை (தெற்கு) மதுரைமாவட்டத்தில்R.T.O.பிரிவு அலுவலகக் கட்டடம் மற்றும் மோட்டார் சோதனை தடம் கட்டுதல் பணி முடிவுற்றது.

- ரூ.1.41 கோடி மதிப்பீட்டில் திருச்சி மாவட்டம், தொட்டியத்தில்சார்கருவூலஅலுவலகத்திற்கு சொந்தக் கட்டடம் கட்டும் பணி முடிவுற்றது.

- ரூ.1.02 கோடி மதிப்பீட்டில் தூத்துக்குடி மாவட்டம் – விளாத்திகுளத்தில் சார்கருவூல அலுவலக கட்டடம் கட்டும் பணி முடிவுற்றது.

- ரூ.12 இலட்சம் மதிப்பீட்டில் தேனி மாவட்டம் தேனியில் சார்கருவூல அலுவலக கட்டட சுற்றுச்சுவர் கட்டும் பணிகள் முடிவுற்றது.

- ரூ.88 இலட்சம் மதிப்பீட்டில் சிவகங்கை மாவட்டம் – திருபுவனத்தில் சார்கருவூல அலுவலகக்கட்டடம்கட்டும்பணிமுடிவுற்றது.

- ரூ.98இலட்சம்மதிப்பீட்டில்நாமக்கல்மாவட்டம் –கொல்லிமலையில்சார்கருவூலஅலுவலகக் கட்டடம் கட்டும் பணி முடிவுற்றது.

- ரூ.1.27கோடிமதிப்பீட்டில்திருவண்ணாமலை மாவட்டம், ஆரணியில் சார்கருவூல அலுவலகத்திற்குசொந்தக்கட்டடம்கட்டும்பணி நடைபெற்று வருகின்றன.

நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை

சாலைப் பணிகள்

ஒருங்கிணைந்த சாலை உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம்

- முதலமைச்சர் சாலை மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், ரூ.2,714.45 கோடி மதிப்பில் 232.62 கி.மீ. நீளமுள்ள நான்கு வழித்தட சாலைகள்மற்றும்ரூ.1,879.88கோடிமதிப்பில் 1,418.54கி.மீ.நீளமுள்ளஇருவழித்தடசாலைகள்.

- நகரப்பகுதி மேம்பாடு திட்டத்தின்கீழ், ரூ.626.58 கோடி மதிப்பில் 131.70 கி.மீ. நீளத்திற்கு மேம்பாட்டுப் பணிகள்.

- ரூ.14,393.57 கோடி மதிப்பில் 8,533.76 கி.மீ. நீளமுள்ளசாலைப்பணிகள்மற்றும்ரூ.907.87 கோடிமதிப்பில்1,841பாலம்/சிறுபாலப்பணிகள்.

- ரூ.1,735.37கோடிமதிப்பில்சாலைஓடுதளப்பாதை மேம்பாட்டுத்திட்டத்தின்கீழ்6,265.37கி.மீ.நீள சாலைகளில்ஓடுதளப்பரப்பினைமேம்படுத்தும் பணிகள்.

- ரூ.517.70கோடிமதிப்பில்1,154சாலைபாதுகாப்புப் பணிகள்.

- ரூ.136.98 கோடி மதிப்பில் ஐந்து புறவழிச் சாலைகளான இலுப்பூர், பார்திபனூர், ராசிபுரம்கட்டம்–1–பிரிவு–2,பவானி–IIமற்றும் திருத்துறைப்பூண்டிகட்டம்–1.ரூ.20.85கோடி மதிப்பில் ஈரோடு மாவட்டம் வில்லரசம்பட்டி வழியாக திண்டல் சந்திப்பிலிருந்து – கனிராவுத்தர்குளம் செல்லும் சாலை மற்றும் ரூ.1.97கோடிமதிப்பில்ஜவான்ஸ்பவன்சாலை மேம்பாடு.

ஊராட்சி / ஊராட்சி ஒன்றிய சாலைகள் மாவட்ட இதர சாலைகளாக தரம் உயர்த்துதல்

- ரூ.3,884கோடிமதிப்பில்4,129கி.மீ.நீளமுள்ள ஊராட்சி/ஊராட்சிஒன்றியசாலைகள்மாவட்ட இதர சாலைகளாக தரம் உயர்வு.

பன்னாட்டு நிதி உதவித் திட்டங்கள்

- சென்னை–கன்னியாகுமரி தொழிற்தட திட்டத்தின்கீழ்,5பணிகளானரூ.209.68கோடி மதிப்பில் நக்கசேலம் மற்றும் குரும்பலூர் புறவழிச்சாலைகளுடன் கூடிய துறையூர் –

பெரம்பலூர் சாலை, ரூ.280.73 கோடி மதிப்பில் மோகனூர் – நாமக்கல் – சேந்தமங்கலம் – ராசிபுரம் சாலை, ரூ.219.47 கோடி மதிப்பில் விருத்தாச்சலம் – உளுந்தூர்பேட்டை சாலை, ரூ.198.65 கோடி மதிப்பில் தஞ்சாவூர் – மன்னார்குடி சாலை மற்றும் ரூ.204.07 கோடி மதிப்பில் மேலூர் – திருப்பத்தூர் சாலை மேம்பாடு.

- தமிழ்நாடு சாலை மேம்பாடு திட்டம் – II இன் கீழ், ரூ.129.94 கோடி மதிப்பில் விருத்தாச்சலம் பரங்கிப்பேட்டை சாலை, ரூ144.63 கோடி மதிப்பில் ஓமலூர் – மேச்சேரி சாலை, ரூ104.70 கோடி மதிப்பில் சித்தோடு – ஈரோடு சாலை மற்றும் ரூ.176.58 கோடி மதிப்பில் திருநெல்வேலி – செங்கோட்டை – கொல்லம் சாலை மேம்பாடு.

தரைப்பாலங்களை உயர்மட்டப் பாலங்களாக மாற்றுதல்

- ரூ.802.33 கோடி மதிப்பில் 810 தரைப்பாலங்களை உயர்மட்டப் பாலங்களாக மாற்றும் பணிகள்.

உயர்மட்டப் பாலங்கள்

278 உயர்மட்டப் பாலங்கள் ரூ.1,251.81 கோடியில் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. இதன் விவரங்கள் கீழ்கண்டவாறு:

- ரூ.17.04 கோடி மதிப்பில் திருவண்ணாமலை மாவட்டம், தண்டரை எரையூர் சாலை, செய்யார் ஆற்றின் குறுக்கே உயர்மட்டப் பாலம்.
- ரூ.90.96 கோடி மதிப்பில் கொள்ளிடம் ஆற்றின் குறுக்கே கல்லணையில் உயர்மட்டப் பாலம்.
- ரூ.27.92 கோடி மதிப்பில் பெண்ணையாற்றின் குறுக்கே உயர்மட்டப் பாலம் மற்றும் ரூ.7.98 கோடி மதிப்பில் பவானி ஆற்றின் குறுக்கே உயர்மட்டப் பாலம்.
- ரூ.58.64 கோடி மதிப்பில் சென்னையில், திருவொற்றியூர் – பொன்னேரி – பஞ்செட்டி சாலையில் பக்கிங்காம் கால்வாயின் குறுக்கே உயர்மட்டப் பாலம்.
- ரூ.10.05 கோடி மதிப்பில் கடலூர் மாவட்டம், அருங்குறுக்கை அருகே கெடிலம் ஆற்றின் குறுக்கே உயர்மட்டப் பாலம்.
- ரூ.11.85 கோடி மதிப்பில் கடலூர் மாவட்டம், திட்டக்குடி – சிறுப்பாக்கம் சாலையில் வெலிங்டன் தேக்கம் குறுக்கே உயர்மட்டப் பாலம்.
- ரூ.6.10 கோடி மதிப்பில் விழுப்புரம் மாவட்டம், செஞ்சி – வடபாலை சாலையில் வராக நதியின் குறுக்கே உயர்மட்டப் பாலம்.
- ரூ.16.51 கோடி மதிப்பில் விழுப்புரம் மாவட்டம், விழுப்புரம் – காவணிப்பாக்கம் சாலையில் மலட்டாற்றின் குறுக்கே உயர்மட்டப் பாலம்.
- ரூ.9.58 கோடி மதிப்பில் சேலம் மாவட்டம், முள்ளுவாடியில் வசிஷ்டா நதியின் குறுக்கே உயர்மட்டப் பாலம்.
- ரூ.21.56 கோடி மதிப்பில் காஞ்சிபுரம் மாவட்டம், உத்திரமேரூர் – காஞ்சிபுரம் சாலையில் செய்யாறு ஆற்றின் குறுக்கே உயர்மட்டப் பாலம்.
- ரூ.33.76 கோடி மதிப்பில் ஈரோடு மாவட்டம், கீழ்பவானி கால்வாயின் குறுக்கே 8 உயர்மட்டப் பாலங்கள்.
- ரூ.18.57 கோடி மதிப்பில் திருத்தணி – நாகலாபுரம் சாலையில் கொசஸ்தலையார் ஆற்றின் குறுக்கே உயர்மட்டப் பாலம்.
- ரூ.6.04 கோடி மதிப்பில் வல்லம் காலபெரம்பூர் சாலையில் முதலமுத்துவாரி கால்வாய் குறுக்கே உயர்மட்டப் பாலம்.
- ரூ.9.64 கோடி மதிப்பில் காலகம் – ஆவுடையார்கோவில் சாலையில் அம்புலியார் ஆற்றின் குறுக்கே உயர்மட்டப் பாலம்.
- ரூ.8.05 கோடி மதிப்பில் காலகம் – ஆவுடையார்கோவில் சாலையில் அம்புலியார் கிளை ஆற்றின் குறுக்கே உயர்மட்டப் பாலம்.
- ரூ.3.35 கோடி மதிப்பில் பேரமங்கலம் – கீழவாடி சாலையில் உப்பார் ஆற்றின் குறுக்கே உயர்மட்டப் பாலம்.
- ரூ.2.36 கோடி மதிப்பில் அவிநாசி – திருப்பூர் – பல்லடம் – பொள்ளாச்சி – கொச்சி (வழியாக) மீன்கரை சாலையில் உயர்மட்டப் பாலம்.
- ரூ.11.06 கோடி மதிப்பில் காலகம் – ஆவுடையார் கோவில் சாலையில் மருந்தங்குடி ஆற்றின் குறுக்கே உயர்மட்டப் பாலம்.
- நபார்டு கடனுதவி மற்றும் மாநில நிதியுதவித் திட்டத்தின் கீழ் நபார்டு அலகின் மூலம் ரூ.880.79 கோடி மதிப்பில் 252 பாலங்கள்.

சாலை மேம்பாலங்கள்

- ரூ.93.50 கோடி மதிப்பில் கோயம்பேடு ஜவஹர்லால் நேரு சாலையில் காளியம்மன் கோயில் தெரு மற்றும் சென்னை புறநகரப் பேருந்துநுழைவுவாயில்சந்திப்பில்மேம்பாலம்.
- ரூ.67 கோடி மதிப்பில் வேளச்சேரி விஜயநகரம் சந்திப்பில்தரமணி இணைப்புசாலையிலிருந்து வேளச்சேரிபுறவழிச்சாலைசெல்லும்இரண்டாம் அடுக்குபாலப்பகுதிப்பணிமற்றும்ரூ.78.49கோடி மதிப்பில்வேளச்சேரிபுறவழிச்சாலையிலிருந்து வேளச்சேரி–தாம்பரம்சாலையைஇணைக்கும் முதல் அடுக்கு பாலப் பகுதிப்பணி.
- ரூ.95.21 கோடி மதிப்பில் மேடவாக்கம் சாலை சந்திப்புகளை இணைக்கும் வகையில் மேம்பாலம் தாம்பரத்திலிருந்து வேளச்சேரி செல்லும் பாலப்பகுதி.
- ரூ.53.12 கோடி மதிப்பில் மதுரை – தொண்டி சாலை மற்றும் மதுரை சுற்றுச் சாலை சந்திப்பு பல்வழிச்சாலையில் மேம்பாலம்.
- ரூ.18 கோடியில் சென்னையில் இந்திரா நகர் சந்திப்பில் 'யு' வடிவிலான மேம்பாலம்.

இரயில்வே மேம்பாலங்கள் / இரயில்வே கீழ்ப்பாலம்

ரூ.897.95 கோடிச் செலவில் 23 இரயில்வே மேம்பாலம் / இரயில்வே கீழ்ப்பாலங்கள் கட்டி முடிக்கப்பட்டன. இதன் விவரங்கள் கீழ்கண்டவாறு:

- ரூ.52.98கோடிமதிப்பில்அண்ணனூர்அருகில் இரயில்வே மேம்பாலம்.
- ரூ.25.74 கோடி மதிப்பில் கடம்பத்தூர் இரயில் நிலையம்அருகில்கடம்பத்தூர்–திருவாலங்காடு இரயில்நிலையங்களுக்கிடையில்இரயில்வே மேம்பாலம்.
- சென்னை – பொன்னேரிக்கரை காஞ்சிபுரம் சாலையில்ரூ.59.63கோடிமதிப்பில்காஞ்சிபுரம் இரயில் நிலையம் அருகில் இரயில்வே மேம்பாலம்.
- ரூ.37.12கோடி மதிப்பில்ஊரப்பாக்கம்அருகில் வண்டலூர் – கூடுவாஞ்சேரி இரயில் நிலையங்களுக்கு இடையில் இரயில்வே மேம்பாலம்.
- ரூ.20.96 கோடி மதிப்பில் ஒலக்கூர் பீடர் இரயில்வே மேம்பாலம்.
- கடலூர் – சித்தூர் சாலையில் ரூ.22.63 கோடி மதிப்பில்,திருவெண்ணைநல்லூர் – பரிக்கல் இரயில்நிலையங்களுக்குஇடையேஇரயில்வே மேம்பாலம்.
- ரூ.22.27 கோடி மதிப்பில் டி.கே.வி.கோட்டா சாலையிலிருந்து விரிஞ்சிபுரம் செல்லும் சாலையில் இரயில்வே மேம்பாலம்.
- பாண்டி–கிருஷ்ணகிரிசாலையில்ரூ.38.74கோடி மதிப்பில்தண்டரை–திருவண்ணாமலைஇரயில் நிலையங்களுக்கிடையேஇரயில்வேமேம்பாலம்.
- பொள்ளாச்சி–பாலக்காடு சாலையில்ரூ.48.48 கோடி மதிப்பில்பொள்ளாச்சி–கிணத்துக்கடவு இரயில்நிலையங்களுக்கிடையே இரயில்வே மேம்பாலம்.
- ரூ.37 கோடி மதிப்பில்பெருங்களத்தூர் இரயில் நிலையம் அருகில் இரயில்வே மேம்பாலம் அமைக்கும் பணியில் செங்கல்பட்டிலிருந்து சென்னை செல்லும் பாலப்பகுதி பணி மற்றும் ரூ.24.80 கோடி மதிப்பில் பெருங்களத்தூரில் இரயில்வேமேம்பாலம்(சீனிவாசராகவன்தெரு பாலப்பகுதி).
- தொளசம்பட்டி சாலையில் ரூ.24.81 கோடி மதிப்பில்ஓமலூர்மற்றும்மேச்சேரி இரயில்வே நிலையங்களுக்கு இடையில் இரயில்வே மேம்பாலம். (கடவு எண்–15)
- பழைய NH–7 சாலையில் ரூ.12.08 கோடி மதிப்பில் சிவாடி மற்றும் தருமபுரி இரயில்வே நிலையங்களுக்கு இடையில் இரயில்வே மேம்பாலம்.
- சங்ககிரி–மேச்சேரிசாலையில்ரூ.30.13கோடி மதிப்பில் ஓமலூர் – மேச்சேரி இரயில் நிலையங்களுக்கு இடையில் இரயில்வே மேம்பாலம். (கடவு எண்–18).
- ரூ.33.09 கோடி மதிப்பில் புட்லூர் இரயில் நிலையம் அருகில் இரயில்வே மேம்பாலம்.
- ரூ.48.26கோடிமதிப்பில்திருப்பூர்–ஊத்துக்குளி இரயில்நிலையங்களுக்குஇடையில்இரயில்வே மேம்பாலம்.
- சூரமங்கலம்–ஓமலூர்சாலையில்ரூ.23.28கோடி மதிப்பில் மேக்னசைட் – ஓமலூர் இரயில்

நிலையங்களுக்கு இடையில் இரயில்வே மேம்பாலம்.

- ரூ.124.89 கோடி மதிப்பில் சேலம் அஸ்தம்பட்டி – செர்ரி சாலையில் இரயில்வே மேம்பாலம்.
- ரூ.22.17 கோடி மதிப்பில் சோழவந்தான் – வலையப்பட்டி சாலை (வழி ஆண்டிப்பட்டி) இரயில்வே மேம்பாலம்.
- திண்டுக்கல் மணக்காட்டூர் சாலையில் ரூ.87.98 கோடி மதிப்பில் திண்டுக்கல் – அக்கரைப்பட்டி, எரியோடு – திண்டுக்கல் மற்றும் தாமரைப்பாடி – திண்டுக்கல் இரயில் நிலையங்களுக்கு இடையில் இரயில்வே மேம்பாலம்.
- ரூ.23.91 கோடி மதிப்பில் பாளையங்கோட்டை – சிவந்திப்பட்டி சாலையில் பாளையங்கோட்டை மற்றும் செய்துங்கநல்லூர் இரயில் நிலையங்களுக்கு இடையில் இரயில்வே மேம்பாலம்.
- இராஜபாளையம் – வெம்பக்கோட்டை சாலையில் ரூ.41.90 கோடி மதிப்பில் இராஜபாளையம் இரயில் நிலையம் அருகில் இரயில்வே மேம்பாலம் மற்றும் நாங்குநேரி – ஏர்வாடி – வள்ளியூர் – விஜயாபதி சாலையில் ரூ.14.52 கோடி மதிப்பில் நாங்குநேரி – வள்ளியூர் இரயில்வே நிலையங்களுக்கு இடையில் இரயில்வே கீழ்ப்பாலம்.
- ரூ.20.58 கோடி மதிப்பில் ஆவடி – பட்டாபிராம் இரயில் நிலையங்களுக்கு இடையில் இந்து கல்லூரி இரயில் நிலையத்திற்கு அருகில் இரயில்வே கீழ்ப்பாலம்.

நடை மேம்பாலம்

- தாம்பரத்தில் ரூ.6 கோடி மதிப்பில் நகரும் படிக்கட்டுகளுடன் கூடிய நடை மேம்பாலம்.

ஒன்றிய அரசின் சாலை போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சக நிதி பணிகள்

- ரூ.3,333.68 கோடி மதிப்பில் தேசிய நெடுஞ்சாலைகளில் ஆண்டு திட்டத்தின் கீழ் 83 சாலை மற்றும் 12 பாலப்பணிகள்.
- ரூ.102.46 கோடி மதிப்பில் கால முறை புதுப்பித்தல் திட்டத்தின் கீழ் தேசிய நெடுஞ்சாலையில் 7 சாலைப் பணிகள்.

இதர பணிகள்

- பள்ளம் இல்லாத சாலைகள் என்ற இலக்கை உருவாக்குவதன் மூலம் "விபத்து இல்லாத தமிழ்நாடு" என்ற மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சரின் தொலைநோக்குப் பார்வை நிறைவேற்ற "நம்ம சாலை செயலி" சாலைகளில் கண்டறியப்படும் பள்ளங்களை பொதுமக்கள் உதவியுடன் கண்டறிய உருவாக்கப்பட்டுள்ளது. இதனடிப்படையில் பள்ளங்கள் குறிப்பிட்ட நேரத்திற்குள் சரி செய்யப்படுகிறது.
- தமிழ்நாடு புத்தாக்க முன் முயற்சிகள் (TANII) திட்டத்தின் கீழ் உறுதி செய்யப்பட்ட துணைத் தளத்தின் (Sub Base) மீது அமைக்கப்பட்ட தார்ச்சாலையின் தன்மை குறித்த ஆய்வு, பாலத்தின் செயல்திறனை கருவிகள் மூலம் கண்காணித்தல், கற்கலவை சாலைகளில் நீராற்றும் சேர்மங்களின் செயல்திறன் குறித்த ஆய்வு, சணல் இழை வலுவூட்டப்பட்ட குளிர் நிலக்கீல் கலவைகளின் செயல்திறன் குறித்த ஆய்வு நிறைவடைந்துள்ளன.
- 379 பொறியாளர்கள் மற்றும் 112 தொழில்நுட்பம் சாரா அலுவலர்களுக்கும், விரிவான பயிற்சித் திட்டத்தின் (CTP) கீழ் 1,727 பொறியாளர்கள் மற்றும் 673 தொழில்நுட்பம் சாரா அலுவலர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. இதுதவிர, பெருநகர சென்னை மாநகராட்சியின் 368 பொறியாளர்களுக்கும், 40 மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை பொறியாளர்களுக்கும், 41 துணை ஆட்சியர்கள் (பயிற்சி) மற்றும் தலைமைச் செயலகத்தின் 134 பிரிவு அதிகாரிகளுக்கும் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.
- நாமக்கல், செங்கல்பட்டு, நீலகிரி, தேனி, மதுரை, தூத்துக்குடி, சிவகங்கை, ராமநாதபுரம், ஈரோடு, கோயம்புத்தூர், விருதுநகர், கரூர், திருப்பூர், திருவாரூர், நாகப்பட்டினம், தென்காசி, திருநெல்வேலி, கன்னியாகுமரி, கடலூர், திண்டுக்கல், திருச்சி மற்றும் மயிலாடுதுறை ஆகிய 22 மாவட்டங்களில் சாலை பாதுகாப்பு விழிப்புணர்வு கூட்டங்கள் மற்றும் 236 சாலைப் பாதுகாப்பு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் பள்ளி மற்றும் கல்லூரிகளில் நடத்தப்பட்டன.

பணி நியமனங்கள்

- 32 உதவிப் பொறியாளர்கள், 413 இளநிலை வரைதொழில் அலுவலர்கள், 67 இளநிலை உதவியாளர்கள், 6 சுருக்கெழுத்துத் தட்டச்சர்கள்

நிலை–3 மற்றும் 49 தட்டச்சர்கள், தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம் மூலமாகவும், 3 உதவி வரைவாளர், 45 இளநிலை உதவியாளர்கள், 9 தட்டச்சர்கள், 15 பதிவுரு எழுத்தர் மற்றும் 36 அலுவலக உதவியாளர்கள் கருணை அடிப்படையிலும் பணியமர்த்தப்பட்டு உள்ளனர்.

நடைபெற்று வரும் முக்கியப் பணிகள்

- முதலமைச்சர் சாலை மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் ரூ.2,269.77 கோடி மதிப்பில் 344.32 கி.மீ. நீளமுள்ள நான்கு வழித்தட சாலைகள் மற்றும் ரூ.584.94 கோடி மதிப்பில் 291.44 கி.மீ. நீளமுள்ள இருவழித்தட சாலைகள்.
- நகரப்பகுதி மேம்பாட்டு திட்டத்தின்கீழ், ரூ.188.49 கோடி மதிப்பில் 38.45 கி.மீ. நீளத்திற்கு மேம்பாட்டுப் பணிகள்.
- அம்பாசமுத்திரம், பவானி (கட்டம்–I), குன்னூர், பொள்ளாச்சி, திருச்செங்கோடு, திருத்தணி, அருப்புக்கோட்டை மேற்கு புறவழிச் சாலை, கோயம்புத்தூர் மேற்கு வட்டச் சாலை, கமுதி, கேளம்பாக்கம்/திருப்போரூர், நாமக்கல்–I, துறையூர், முதுகுளத்தூர், சிவகங்கை–I, ஜலகண்டபுரம் மற்றும் தாம்பரம் கிழக்கு புறவழிச்சாலை ஆகிய பகுதிகளில் புறவழிச்சாலைகள் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன. ரூ.1,292.75 கோடி மதிப்பில் 1,143.62 கி.மீ. நீளமுள்ள ஊராட்சி / ஊராட்சி ஒன்றிய சாலைகள் மாவட்ட இதர சாலைகளாக தரம் உயர்த்தும் பணிகள்.
- ரூ.268.46 கோடி மதிப்பில் ஒருங்கிணைந்த சாலை உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், 571 சாலை பாதுகாப்புப் பணிகள்.
- ஒருங்கிணைந்த சாலைகள் உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், ரூ.6,476.24 கோடி மதிப்பில் 1,403.81 கி.மீ. நீளமுள்ள சாலைப் பணிகள் மற்றும் ரூ.732.23 கோடி மதிப்பில் 173 பாலம் / சிறுபாலப் பணிகள்.
- ரூ.1,203.64 கோடி மதிப்பில் 303 தரைப் பாலங்களை உயர்மட்டப் பாலங்களாக மாற்றும் பணிகள்.
- ரூ.632.15 கோடி மதிப்பில் நபார்டு கடனுதவி திட்டத்தின்கீழ், 58 உயர்மட்டப் பாலங்கள் மற்றும் ரூ.584.77 கோடி மதிப்பில் மாநில நிதி திட்டத்தின்கீழ் 26 உயர்மட்டப் பாலங்கள்.
- ரூ.140.49 கோடி மதிப்பில் கோயம்புத்தூர் உக்கடம்–ஆத்துப்பாலத்தில் சாலை மேம்பாலம் முடிவுற்றது. மேலும், ரூ.265.44 கோடி மதிப்பில் உக்கடம் – ஆத்துப்பாலம் விரிவாக்கம் நடைபெற்று வருகிறது.
- ரூ.1,621.30 கோடி மதிப்பில் கோயம்புத்தூரில் கோல்டுவின்ஸ் முதல் உப்பிலிப்பாளையம் வரை உயர்மட்ட சாலை அமைக்கும் பணி.
- ரூ.621 கோடி மதிப்பில் சென்னையில் தேனாம்பேட்டை முதல் சைதாப்பேட்டை வரை உயர்மட்ட சாலை.
- ரூ.26.65 கோடி மதிப்பில் படப்பையில் சாலை மேம்பாலம்.
- ரூ.190.40 கோடி மதிப்பில் மதுரையில் கோரிப்பாளையம் சந்திப்பில் சாலை மேம்பாலம் ரூ.150.28 கோடி மதிப்பில் மதுரையில் மதுரை–தொண்டி சாலையில் சாலை மேம்பாலம்.
- ரூ.1,638.99 கோடி மதிப்பில் 34 இரயில்வே மேம்பாலங்கள்/இரயில்வே கீழ்பாலங்கள் கட்டும் பணிகள்.

சென்னை பெருநகர வளர்ச்சி திட்டப் பணிகள்

- ரூ.18.37 கோடி மதிப்பில் பருத்திப்பட்டில் கூவம் ஆற்றின் குறுக்கே உயர்மட்டப் பாலம்.
- ரூ.60.69 கோடி மதிப்பில் சென்னையில் சர்தார் வல்லபாய் படேல் சாலையுடன் ராஜீவ்காந்தி சாலை இணையும் மத்திய கைலாஷ் சந்திப்பில் சாலை மேம்பாலம்.
- ரூ.314.48 கோடி மதிப்பில் மியாட் மருத்துவமனை முதல் முகலிவாக்கம் வரை மேம்பாலம் அமைக்கும் பணி மற்றும் ரூ.45.50 கோடி மதிப்பில் மடிப்பாக்கம் அருகே வாகன சுரங்கப்பாதை.
- ரூ.30.67 கோடி மதிப்பில் 2 நடைமேம்பாலம் (நெல்சன் மாணிக்கம் சாலை சந்திப்பு மற்றும் செந்தில் நகர் சந்திப்பு)
- சென்னை உள்வட்டச் சாலையில் ரூ.139.17 கோடி மதிப்பில் இரயில்வே மேம்பாலத்தினை அகலப்படுத்துதல்.

❖ ❖ ❖

வேளாண்மை, வேளாண்மை பொறியியல், வேளாண் பணிக் கூட்டுறவு சங்கங்கள், தோட்டக்கலை, சர்க்கரை, கரும்புத் தீர்வை, கரும்புப் பயிர் மேம்பாடு மற்றும் தரிசு நில மேம்பாடு



திரு. எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் அவர்கள்

மாண்புமிகு வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர்

வேளாண்மைத்துறை

உணவு தானிய உற்பத்தி

- 341.73 இலட்சம் மெட்ரிக் டன் உணவு தானிய உற்பத்தி செய்யப்பட்டுள்ளது.

நெல் சாகுபடி

- 64.80 இலட்சம் எக்டர் பரப்பில் நெல் சாகுபடி செய்யப்பட்டுள்ளது.
- குறுவைப்பருவத்தில்2023–2024ஆம்ஆண்டில்5.596இலட்சம்ஏக்கர்சாகுபடி மேற்கொள்ளப்பட்டு,கடந்த48ஆண்டுகளில்இல்லாதவரலாற்றுசாதனையாகும்.
- ரூ.186.50மதிப்பில்குறுவைசிறப்புத்தொகுப்புத்திட்டம்செயல்படுத்தப்பட்டுகுறுவைப் பருவத்தில்15.85 இலட்சம் ஏக்கரில் குறுவை நெல் சாகுபடி என்ற வரலாற்றுச் சிறப்புமிக்க சாதனை அடையப்பட்டுள்ளது.
- ரூ.13.52கோடிசெலவில்7,709மெ.டன்நெல்விதைகளும்,ரூ.148.87கோடிசெலவில் 83,501மெ.டன்உரங்களும்,விவசாயிகளுக்குவிநியோகம்செய்யப்பட்டுள்ளது.
- அறுவடைக்குப்பிந்தையஇழப்புகளைக்குறைப்பதற்காக1.15இலட்சம்தார்ப்பாய்கள், ரூ.9.96 கோடி செலவில் வழங்கப்பட்டுள்ளன.
- 2023–2024ஆம்ஆண்டில்தானியங்களில்அறுவடைக்குபிந்தையஇழப்புகளைக் குறைப்பதற்கு60,000தார்ப்பாய்கள்ரூ.4.98கோடிசெலவில்கொள்முதல்செய்யப்பட்டு



விவசாயிகளுக்கு விநியோகிக்கப்பட்டு வருகிறது.

நெற்பயிரில் உற்பத்தித் திறனை அதிகரிப்பதற்காக துத்தநாக சல்பேட் மற்றும் ஜிப்சம் வழங்குதல்

- ரூ.2.41 இலட்சம் ஏக்கருக்கு துத்தநாக சல்பேட் மற்றும் ஜிப்சம் வழங்குவதற்கு ரூ.7.96 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு சுமார் 2.41 இலட்சம் விவசாயிகள் பயன்.
- 2023-2024 ஆம் ஆண்டில் 2,00,000 ஏக்கருக்கு துத்தநாக சல்பேட் மற்றும் ஜிப்சம் வழங்குவதற்கு ரூ.5 கோடி செலவில் கொள்முதல் செய்யப்பட்டு விவசாயிகளுக்கு விநியோகம்.

சிறுதானியங்கள்

- சிறுதானியங்கள் பரப்பு, உற்பத்தி மற்றும் உற்பத்தித்திறனை அதிகரிக்க ரூ.26.26 கோடி மதிப்பீட்டில் 9.55 இலட்சம் ஏக்கர் பரப்பளவில் சிறுதானியங்கள் பயிரிடப்பட்டு 3.66 இலட்சம் விவசாயிகள் பயன் பெற்றுள்ளனர்.
- 2022-2023 ஆம் நிதி ஆண்டில் உணவு மற்றும் ஊட்டச்சத்து பாதுகாப்புத் திட்டத்திற்கு ரூ.30.34 கோடி நிதி ஒதுக்கீடு.
- 25 மாவட்டங்களை ஒருங்கிணைத்து 2 சிறுதானிய சிறப்பு மண்டலங்கள் அமைக்கப்பட்டுள்ளன.
- 2023-2024 ஆம் நிதி ஆண்டில் உணவு மற்றும் ஊட்டச்சத்து பாதுகாப்புத் திட்டத்திற்கு ரூ.31.14 கோடி செலவினம் மேற்கொள்ளப்பட்டது.
- தேசிய வேளாண் வளர்ச்சி திட்டத்தின் கீழ் சிறுதானியசாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு உழவுமானியம் ரூ.2.79 கோடி செலவினம் மேற்கொள்ளப்பட்டது.
- 25 மாவட்டங்களில் 2023 ஆம் ஆண்டில் பல்வேறு ஒன்றிய மற்றும் மாநில அரசு திட்டங்களை ஒருங்கிணைத்து ரூ.65.04 கோடி ஒதுக்கீட்டில் தமிழ்நாடு சிறுதானிய இயக்கம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

பயறுவகைப் பயிர்கள்

- பயறுவகைப் பயிர்கள் 16.18 இலட்சம் எக்டரில் பயிரிடப்பட்டது. பயறுவகைப் பயிர்களின் பரப்பு, உற்பத்தியை அதிகரிப்பதற்காக ரூ.107.86 கோடி நிதி ஒதுக்கீட்டில் பயறு பெருக்குத் திட்டம் செயல்படுத்தப்பட்டு 4.06 இலட்சம் விவசாயிகள் பயன்.
- 2023-2024 ஆம் ஆண்டு பயறுவகை பயிர்கள் 7.4 இலட்சம் எக்டரில் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. பயறுவகை உற்பத்தியில் தன்னிறைவு அடையும் நோக்கில் ரூ.30.18 கோடி நிதி ஒதுக்கீட்டில் "பயறு பெருக்குத் திட்டம்" செயல்படுத்தப்பட்டு 1,79,996 விவசாயிகள் பயன் பெற்றுள்ளனர்.



எண்ணெய்வித்துக்கள்

- எண்ணெய்வித்துப் பயிர்கள் 11.80 இலட்சம் எக்டரில்பயிரிடப்பட்டுள்ளது.எண்ணெய்வித்துப் பயிர்களின் உற்பத்தியில் தன்னிறைவு அடைவதற்காகரூ.83.46கோடிநிதிஒதுக்கீட்டில் செயல்படுத்தப்பட்டு4.03இலட்சம்விவசாயிகள் பயன் பெற்றுள்ளனர்.
- ரூ.1.20 கோடி செலவில் சோயாமொச்சை 2,384 எக்டர் பரப்பளவில் செயல்விளக்கத் திடல்கள்அமைக்கப்பட்டு2,380விவசாயிகள் பயன்.

பருத்தி

- 4.51 இலட்சம் எக்டரில் பருத்தி சாகுபடி செய்யப்பட்டு8.99இலட்சம்பேல்கள்உற்பத்தி செய்யப்பட்டது.
- பருத்திப்பயிரின்உற்பத்தித்திறனைஅதிகரிக்க ரூ.37.075கோடிநிதிஒதுக்கீட்டில்திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு;1,44,647விவசாயிகள்பயன்.

தென்னை

- தென்னை சாகுபடி பரப்பை அதிகரிக்க ரூ.40.59 கோடி திட்ட நிதியில் ஒதுக்கீடு செய்யப்பட்டு, 19,922 விவசாயிகள் பயன்.

தமிழ்நாடு மாநில விதை மேம்பாட்டு முகமை (டான்சிடா)

- 51,972 மெட்ரிக் டன் நெல் விதைகளும், 2,577மெட்ரிக்டன்சிறுதானியவிதைகளும், 15,565மெட்ரிக்டன்பயறுவகைவிதைகளும், 12,794 மெட்ரிக் டன் எண்ணெய்வித்து விதைகளும், 67 மெட்ரிக் டன் பருத்தி விதைகளும்மொத்தமாக84,675மெட்ரிக்டன் விதைகள்வேளாண்விரிவாக்கமையங்களின் மூலம் விநியோகம்.

நெல் ஜெயராமன் அவர்களின் மரபுசார் நெல் இரகங்கள் பாதுகாப்பு இயக்கம்

- 33அரசுவிதைப்பண்ணைகளில்16வகையான பாரம்பரியநெல்இரகங்கள்200ஏக்கர்பரப்பளவில் பயிரிடப்பட்டு,உற்பத்திசெய்யப்பட்டவிதைகள் வட்டார ஒருங்கிணைந்த வேளாண்மை விரிவாக்கமையங்கள்மூலம்50சதவீதமானிய விலையில் விவசாயிகளுக்கு விநியோகம் செய்யப்பட்டது.
- 479 மெட்ரிக்டன் பாரம்பரிய நெல் விதைகள் ரூ.120.23 இலட்சம் மாணியத்தில் 36,103 விவசாயிகளுக்கு விநியோகம்.
- மேலும்2024–2025ஆம்ஆண்டில்200மெட்ரிக் டன் பாரம்பரிய நெல் விதைகள் 50 சதவீத மானியத்தில்விநியோகித்திட ரூ.50இலட்சம் நிதிஒதுக்கீடுபெறப்பட்டு,200ஏக்கரில்மாநில அரசு விதை பண்ணைகளில்பாரம்பரிய நெல் விதைப்பண்ணை அமைக்கப்பட்டுள்ளது.

வேளாண் கருவிகள் வழங்குதல்

- 2021–2022ஆம்ஆண்டில்ரூ.14.89கோடிநிதி செலவில்65,734வேளாண்கருவிதொகுப்புகள்

65,734 சிறு, குறு விவசாயிகள் பயன்பெறும் வகையில் பொது விவசாயிகளுக்கு 75 சதவீத மானியத்திலும், ஆதிதிராவிட, பழங்குடி விவசாயிகளுக்கு 90 சதவீத மானியத்திலும் வழங்கப்பட்டுள்ளன.

❖ 2022-2023ஆம் ஆண்டில் 1.02 இலட்சம் வேளாண்கருவி தொகுப்புகள் ரூ.14.88 கோடி பெறப்பட்டு 1.02 இலட்சம் சிறு, குறு விவசாயிகளுக்கு 50 சதவீத மானியத்தில் விநியோகம் செய்யப்பட்டுள்ளது.

❖ 2023-2024ஆம்ஆண்டில்சிறுகுறுவிவசாயிகள் மற்றும் நிலமற்ற வேளாண் தொழிலாளர்கள் பயன்பெறும்வகையில்67,918வேளாண்கருவி தொகுப்புகள் ரூ.9.94 கோடி நிதி செலவில் 67,918பயனாளிகளுக்கு50சதவீதமானியத்தில் விநியோகம் செய்யப்பட்டுள்ளது.

பயிர்ப் பாதுகாப்பு

❖ தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டத்தின் கீழ் மக்காச்சோளப்பயிரில்,அமெரிக்கன்படைப்புழு தாக்குதலைக் கட்டுப்படுத்திட, 20 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, 80,000 எக்டர்பரப்பளவில்,77,399விவசாயிகளுக்கு இடுபொருட்கள் மானிய விலையில் வழங்கப்பட்டுள்ளது.

❖ தென்னையில், வெள்ளை சுருள் ஈயைக் கட்டுப்படுத்திட,சுமார்20,000எக்டர்பரப்பளவில், ரூ.2கோடிநிதிஒதுக்கீட்டில்மஞ்சள்வண்ண ஒட்டுப்பொறி அமைத்தல், கிரைசோபெர்லா இரைவிழுங்கிகள் ஆகிய இனங்கள் 15,366 விவசாயிகளுக்குமானியவிலையில்விநியோகம் செய்யப்பட்டு,தாக்குதல்கட்டுப்படுத்தப்பட்டது.

❖ அரியலூர் மாவட்டத்திற்கு கரும்பு பயிரில் ஏற்பட்ட"நுனிசிறுத்தல்(பொக்காபோங்)நோய் மற்றும்மாவுப்பூச்சி"தாக்குதலைக்கட்டுப்படுத்த ரூ.25 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

உயிரியல் கட்டுப்பாட்டுக் காரணிகள்

❖ உயிரியல் கட்டுப்பாட்டுக் காரணிகளான சூடோமோனாஸ்ப்ளோரசன்ஸ்9,52,367கிகி, டிரைக்கோடெர்மாவிரிடி8,88,309கிகிபச்சைநிற மஸ்கார்டின்பூஞ்சாணமானமெட்டாரைசியம் அனிசோபிலே3,22,434கிகி,என்.பி.வி14,672 லிட்டர், பெவேரியா பேஸியானா 74,763 கிகி என்றஅளவில்உயிரியல்காரணிகள்உயிரியல் கட்டுப்பாட்டுஆய்வகங்கள்வாயிலாகஉற்பத்தி செய்யப்பட்டுவேளாண்விரிவாக்கமையங்கள் மூலம் மானிய விலையில் விவசாயிகளுக்கு பல்வேறுத் திட்டங்களின் கீழ் விநியோகம் செய்யப்பட்டுள்ளது.

கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டம்

❖ கலைஞரின்அனைத்துகிராமஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டம், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டத்துடன் ஒருங்கிணைத்து2021-2022ஆம்ஆண்டுமுதல் ஐந்துஆண்டுகளுக்குமாநிலநிதிஒதுக்கீட்டில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

❖ 7,705கிராமபஞ்சாயத்துகளில்ரூ.691.018கோடி நிதிஒதுக்கீட்டில்,1,791தரிசுநிலத்தொகுப்புகள் உருவாக்கப்பட்டு, 809 ஆழ்துளை / குழாய் கிணறுகளும்112திறந்தவெளிகிணறுகளும் அமைக்கப்பட்டு, 606 கிணறுகளுக்கு மின் இணைப்பும், 97 கிணறுகளுக்கு சூரிய சக்தி பம்புசெட்டுகளும் நிறுவப்பட்டுள்ளன.

❖ மேலும், 1,759 பண்ணைக் குட்டைகள் அமைக்கப்பட்டு 1,306 ஆதிதிராவிட / பழங்குடியினவிவசாயிகளுக்கு ஆழ்துளை/ குழாய் கிணறுகள் நிறுவப்பட்டுள்ளன. 383 தரிசுநிலத் தொகுப்புகளில் நுண்ணீர் பாசன அமைப்புகள் நிறுவப்பட்டு, 321 தரிசு நிலத் தொகுப்புகளில் 3,820 ஏக்கர் பரப்பளவில் பழமரக்கன்றுகளும்நடவுசெய்யப்பட்டுள்ளது.

❖ மேலும்,46.08இலட்சம்தென்னங்கன்றுகள், 0.3 இலட்சம் எக்டர் பரப்பளவில் வரப்பு பயிருக்கானபயறுவிதைகள்,3.53இலட்சம்எக்டர் பரப்பளவிற்குதிரவஉயிர்உரங்கள்,1.01இலட்சம் விசைத்தெளிப்பான்கள்,21,086தார்ப்பாய்கள், 20,412பண்ணைக்கருவிகளின்தொகுப்புகள், 2.5இலட்சம்வீட்டுத்தோட்டதளைகள்,11,460 பிளாஸ்டிக் பழக்கூடைகள், ட்ரம்கள், ஒரு இலட்சம் பழ மரக்கன்றுகள், 11.05 இலட்சம் 5 வகையான பழச்செடிகள் அடங்கிய தொகுப்புகள்விநியோகம்செய்யப்பட்டுள்ளன.

❖ மேலும்,200காளான்வளர்ப்புகூடங்கள்மற்றும் 185பல்நோக்குஉலர்களங்கள்அமைக்கப்பட்டு 44.37இலட்சம்பயனாளிகள்பயன்பெற்றுள்ளனர். மேலும், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் கட்டுப்பாட்டிலுள்ள 5,725



குளங்கள்/வரத்துக்கால்வாய்கள்/ஊருணிகள் தூர்வாரப்பட்டு மேம்படுத்தப்பட்டுள்ளன.

முதலமைச்சரின் மானாவாரி நில மேம்பாட்டு இயக்கம்

- 15இலட்சம்ஏக்கர்பரப்பளவில்,ரூ.195.24கோடி மதிப்பீட்டில்செயல்படுத்தப்பட்டு5.90இலட்சம் விவசாயிகள் பயன் பெற்றுள்ளனர்.
- 8.02 இலட்சம் ஏக்கரில் சிறுதானியங்கள், 5.10 இலட்சம் ஏக்கரில் பயறு வகைகள், 1.22 இலட்சம்ஏக்கரில்எண்ணெய்வித்து பயிர்கள், 66,000 ஏக்கரில் பருத்தி சாகுபடி செய்யப்பட்டுள்ளது.

"தமிழ்நாடு விவசாய நிலங்களில் நீடித்த பசுமைப் போர்வைக்கான இயக்கம்"

- விவசாயநிலங்களில்"தமிழ்நாடுநீடித்தபசுமைப் போர்வைக்கானஇயக்கம்"36மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டு,ரூ.23கோடிமதிப்பீட்டில் 83,406விவசாயிகளுக்கு1.97கோடிமரக்கன்றுகள் இலவசமாகவழங்கப்பட்டுவிளைநிலங்களில் நடவு செய்யப்பட்டுள்ளன.
- வேளாண் காடு வளர்ப்புத் திட்டத்தின் கீழ், சிறிய, பெரிய, உயர் தொழில்நுட்ப (Hi-Tech) நாற்றங்கால்கள்அமைத்தல்,ஏற்கெனவேஉள்ள நாற்றங்கால்களில் மரக்கன்றுகள் உற்பத்தி செய்தல்மற்றும்திசுவளர்ப்புநாற்றங்கால்கள் அமைத்தல் ஆகிய இனங்களுக்கு ரூ.14.98 கோடிநிதிஒதுக்கீட்டில்வேளாண்மைதுறை, தோட்டக்கலைமற்றும்மலைப்பயிர்கள்துறை, வனத்துறை, வனவியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சிநிலையம்,மேட்டுப்பாளையம்மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.
- மேலும், வனத்துறையின் பசுமை தமிழ்நாடு இயக்கம் திட்டத்திலிருந்து 75 இலட்சம் மரக்கன்றுகள் பெற்று வேளாண்மை துறை மூலமாக இலவசமாக விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு விளைநிலங்களில் நடவு செய்யப்பட்டு வருகிறது.

தமிழ்நாடு பாசன வேளாண்மை நவீன மயமாக்கல் திட்டம்

- தமிழ்நாடுபாசனவேளாண்மைநவீனமயமாக்கல் திட்டத்தின்கீழ், ரூ.42.17 கோடி சாதனை அடையப்பட்டு1.31இலட்சம்விவசாயிகள்பயன்.
- மாதிரிகிராமதிட்டத்திற்குரூ.74.77இலட்சம் செலவிடப்பட்டு,2,50,014விவசாயிகள்பயன்.

வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமை (அட்மா)

- அட்மா திட்டத்தில் நவீன வேளாண் தொழில்நுட்பங்கள்குறித்த23,421பயிற்சிகள், 6,380 கண்டுணர் சுற்றுலா, 1,438 பண்ணைப்பள்ளிகள்,35,014செயல்விளக்கத்

திடல்கள்ரூ.71.86கோடிசெலவில்நடத்தப்பட்டு 13.09இலட்சம்விவசாயிகள்பயன்பெற்றுள்ளனர்.

பிரதம மந்திரி பயிர்காப்பீட்டுத்திட்டம்

- இவ்வரசு பொறுப்பேற்ற நாள் முதல் இதுவரை 26.32 இலட்சம் விவசாயிகளுக்கு ரூ.4,525 கோடி இழப்பீட்டுத் தொகையாக வழங்கப்பட்டுள்ளது. இதில், 2020–2021ஆம் ஆண்டில் 13.21 இலட்சம் விவசாயிகளுக்கு ரூ.2,685கோடியும்,2021–2022ஆம்ஆண்டில்6.88 இலட்சம்விவசாயிகளுக்குரூ.836கோடியும், 2022–2023ஆம் ஆண்டில் 5.14 இலட்சம் விவசாயிகளுக்கு904கோடியும்,2023–2024ஆம் ஆண்டிற்கு1.09 இலட்சம் விவசாயிகளுக்கு 100 கோடியும் பயிர் காப்பீட்டு இழப்பீட்டுத் தொகையாக வழங்கப்பட்டுள்ளது.

மண்வள மேலாண்மை

- 11.65இலட்சம்மண்மாதிரிகள்சேகரிக்கப்பட்டு, ஆய்வு செய்யப்பட்டு, மண் வள அட்டைகள் விவசாயிகளுக்குவிநியோகம்செய்யப்பட்டன.
- "விவசாயிகள்புலஎண்கள்வாரியாகமண்வளம் மற்றும்மண்பரிசோதனைஅடிப்படையிலான பயிர்பரிந்துரைஆகியவற்றைத்தெரிந்துகொள்ள "தமிழ் மண் வளம்" எனும் இணைய முகப்பு தொடங்கி வைக்கப்பட்டது.
- இந்த இணைய முகப்பில் 40 இலட்சம் புல எண்களின்மண்பரிசோதனைமுடிவுதரவுகள் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது.
- இதுவரை தமிழ் மண்வளம் இணைய முகப்புமூலம்,1,78,830மண்வளஅட்டைகள் பதிவிறக்கம் செய்யப்பட்டு விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.
- தேசியவேளாண்வளர்ச்சித்திட்டம்–மண்நலம் மற்றும் மண்வளம் 2023–2024 திட்டத்தின் கீழ் ரூ.26.70கோடி நிதி ஒதுக்கீடு பெறப்பட்டு, கலைஞரின்அனைத்துக்கிராமஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்ட கிராமங்களில் 2.5 இலட்சம்மண்மாதிரிசேகரிக்கப்பட்டு,மண்வள அட்டைவிநியோகம்செய்யப்பட்டுள்ளது.மேலும், மயிலாடுதுறையில் புதிய மண் பரிசோதனை ஆய்வகம்அமைத்தல்மற்றும்5புதியநடமாடும் மண்பரிசோதனைஆய்வகங்கள்கொள்முதல் செய்தல் ஆகிய பணிகள் நடைபெற்று முடிவடையும் தருவாயில் உள்ளன.

இளைஞர்களை தொழில்முனைவோராக்குதல்

- 2021மற்றும்2022ஆம்ஆண்டுகளில்ரூ.2.68 கோடிசெலவில்268பட்டதாரிஇளைஞர்கள் தேர்வுசெய்யப்பட்டுஅக்ரிகிளினிக்/வேளாண் சார்ந்த தொழில்களை துவங்கியுள்ளனர். 2023–2024ஆம்ஆண்டில்88இளைஞர்கள் தேர்வு செய்யப்பட்டு, வேளாண் சார்ந்த தொழில்துவங்கஏதுவாகரூ.88இலட்சம்நிதி விடுவிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் தேர்வு செய்யப்பட்ட பயனாளிகள் வேளாண் ஆலோசனைமற்றும்சேவைமையம்,ஆளில்லா வானூர்திசேவை,மதிப்புக்கூட்டுபொருட்கள் தயாரித்துவிற்பனைசெய்தல்போன்றபல்வேறு வேளாண்சார்ந்ததொழில்கள்துவங்கியுள்ளனர்.

வேளாண் மண்டல குழுக்கள் அமைத்தல்

- வேளாண்மை இயக்குநர் / தோட்டக்கலை மற்றும்மலைப்பயிர்கள்இயக்குநர்தலைமையில் மாவட்ட ஆட்சியர்களை உள்ளடக்கி வேளாண்மைத்துறை,தோட்டக்கலைத்துறை, வேளாண்மை பொறியியல் துறை, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், பொதுப்பணித்துறை/நீர்வளஆதாரத்துறை,மாசுக் கட்டுப்பாட்டுவாரியம்மற்றும்வனத்துறையைச் சேர்ந்தஅலுவலர்கள்,முன்னோடிவிவசாயிகள் மற்றும் சுற்றுச்சூழல் வல்லுநர்களை உறுப்பினர்களாகக் கொண்டு 7 மண்டல குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

இயற்கை பேரிடர்களால் ஏற்பட்ட வேளாண் பயிர் சேதத்திற்கு நிவாரணம் வழங்கப்பட்ட விபரம்

- தமிழ்நாட்டில், கடந்த மூன்று ஆண்டுகளில் கனமழை,வெள்ளம்,புயல்,ஆலங்கட்டிமழை, வறட்சி போன்ற இயற்கை பேரிடர்களால் 11.95இலட்சம்பாதிக்கப்பட்டவிவசாயிகளுக்கு 19.84 இலட்சம் ஏக்கர் பரப்பில் ஏற்பட்ட பயிர் சேதத்திற்குரூ.833.88கோடிநிவாரணத்தொகை வழங்கப்பட்டுள்ளது.

கூட்டுப்பண்ணையம்

- உழவர் உற்பத்தியாளர் குழுக்கள் (Farmers Producer Group) விவசாயம் செய்வதற்கு தேவையானபண்ணைஇயந்திரங்கள்(டிராக்டர்,



சுழற்கலப்பை, விதைக்கும் கருவி, பவர் வீடர் போன்றவை) கொள்முதல் செய்திட மூலதன நிதியாக ரூ.55 கோடி வழங்கப்பட்டுள்ளது.

ஒருங்கிணைந்த பண்ணையம்

- 42,686 ஒருங்கிணைந்த பண்ணைய அமைப்புகள் 50 சதவீத மானியத்தில் ரூ.168.01 கோடி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்பட்டது.

பாரம்பரிய வேளாண் வளர்ச்சி திட்டம்

- 2023–2024 ஆம் நிதி ஆண்டில், ரூ.26 கோடி மதிப்பீட்டில், 35,815 ஏக்கர் பரப்பளவில் 725 உயிர்ம வேளாண் குழுக்கள் உருவாக்கப்பட்டு, பயிற்சிகள், உயிர்ம வேளாண்மையில் ஈடுபட நிதி ஆதரவு ஆகியவை அளிக்கப்பட்டு சான்றிதழுடன் கூடிய உயிர்ம வேளாண்மை ஊக்குவிக்கப்பட்டுள்ளது.

வேளாண்மைத் துறையில் உள்ள மின்னணு செயல்பாடுகள்

- வேளாண் சார்ந்த திட்டப் பயன் பெற மின்னணு முறையில் பதிவு செய்ய வசதி ஏற்படுத்தப்பட்டு, 10.67 இலட்சம் பயனாளிகள் பதிவு செய்து தகுதியான பயனாளிகளுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது.
- மின்னணு முறையில் பூச்சிக்கொல்லி உரிமம் பெறு பூச்சிக்கொல்லி உற்பத்தி மற்றும் விற்பனை உரிமம் மேலாண்மை (PEMIS) என்ற இணைய முகப்பு உருவாக்கப்பட்டு, பழைய உரிமங்கள் பதிவேற்றம், புதிய உரிமம் பெற மற்றும் உரிமம் புதுப்பிக்க மின்னணு முறையில் பதிவு செய்ய வழிவகை செய்யப்பட்டுள்ளது.
- குட்டை x நெட்டை தென்னை நாற்றுகளை பெற முன்பதிவு வசதி ஏற்படுத்தப்பட்டு, 6,338 பயனாளிகள் பதிவு செய்துள்ளனர்.
- விவசாயிகளிடம் கொள்முதல் செய்யப்பட்ட விதைகளுக்கு, கொள்முதல் விலையைத் தமிழ்நாடு மாநில விதை மேம்பாட்டு முகமை நேரடி பணப் பரிமாற்றம் மூலம், ரூ.248 கோடி விவசாயிகளின் வங்கி கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டுள்ளது.
- வேளாண் விரிவாக்க மையங்களில் விவசாயிகள் பெறும் இடுபொருட்களுக்கான தொகையை பணமில்லா பரிவர்த்தனை (Cashless Transaction) (டெபிட்/கிரெடிட் கார்ட்/UPI) மூலமாக செலுத்த வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

சர்க்கரைத் துறை

சர்க்கரை ஆலைகளுக்கான கரும்பு சாகுபடி பரப்பு

❖ 2019–2020நடவுப்பருவத்தில்0.95இலட்சம் எக்டராக இருந்த கரும்பு பதிவு பரப்பு 2022–23 நடவுப் பருவத்தில் 1.37 இலட்சம் எக்டராக அதிகரித்துள்ளது.

கரும்பு அரவை

❖ 2020–2021அரவைப்பருவத்தில்98.67இலட்சம் மெ.டன்களாகஇருந்தகரும்புஅரவை2022–2023 அரவைப் பருவத்தில்160.54 இலட்சம் மெ.டன்னாக அதிகரித்துள்ளது.

சர்க்கரைக் கட்டுமானம்

❖ பதினோரு ஆண்டுகளுக்குப் பிறகு 2022–2023 அரவைப் பருவத்தில் 9.27 சதவிகிதம் என்ற அதிகபட்ச சர்க்கரை கட்டுமானம் பெறப்பட்டுள்ளது.

கரும்பு விலை

❖ 2015–2016ஆம்ஆண்டுமுதல்கரும்புவிவசாயிகள் பெற்று வந்த நிலையான கரும்பு விலையான டன்ஒன்றுக்குரூ.2750என்பதுரூ.3134.75ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

வழிவகைக்கடன்

❖ கரும்பு விவசாயிகளுக்கு கரும்பு விலையை வழங்குவதற்கு ஏதுவாக சர்க்கரை ஆலைகளுக்குவழிவகைக்கடனாகரூ.600.37 கோடி வழங்கப்பட்டுள்ளது.

தானியங்கி எடைமேடை

❖ 15கூட்டுறவுமற்றும்பொதுத்துறைசர்க்கரை ஆலைகளில் ரூ.1.50 கோடி மதிப்பீட்டில் தானியங்கிஎடைமேடைஅமைக்கப்பட்டுள்ளது.

ஆய்வகங்கள் நவீனமயமாக்கல்

❖ 15கூட்டுறவுமற்றும்பொதுத்துறைசர்க்கரை ஆலைகளில் ரூ. 3.00 கோடி மதிப்பீட்டில் ஆய்வகங்கள் நவீனமயமாக்கப்பட்டு பயன்பாட்டில்உள்ளது.இதனால்ஆய்வுகளின் முடிவுகள்துல்லியமாகபெறப்பட்டுதேவையான நடவடிக்கைகள்உடனுக்குடன்ஆலைகளால் எடுக்கப்பட்டு வருகிறது.

கரும்பு அறுவடை இயந்திரங்கள்

❖ கரும்புவிவசாயிகளுக்கு77கரும்புஅறுவடை இயந்திரங்கள்வேளாண்இயந்திரமயமாக்கல் உபதிட்டத்தின்கீழ்,வேளாண்மைபொறியியல் துறையின் மூலம் மானிய விலையில் வழங்கப்பட்டுள்ளது.

கரும்பு விவசாயிகளுக்கு உற்பத்தி ஊக்கத்தொகை மற்றும் சிறப்பு ஊக்கத்தொகை நேரடியாக வழங்கியது

❖ கரும்பு விவசாயிகளுக்கு உற்பத்தி ஊக்கத்தொகை மற்றும் சிறப்பு ஊக்கத் தொகையாக ரூ.623.99 கோடி, சுமார் 3,53,587விவசாயிகளின்வங்கிக்கணக்கிற்கு நேரடியாக வழங்கப்பட்டுள்ளது.

❖ 2023–2024அரவைப்பருத்திற்குடன்ஒன்றுக்கு ரூ.215/–சிறப்புஊக்கத்தொகைஅறிவிக்கப்பட்டு ரூ.250கோடிநிதிஒதுக்கீடுசெய்யப்பட்டுள்ளது.

கரும்பு உற்பத்திக்கான சிறப்புத் திட்டம்

❖ ரூ.2கோடிமானியத்தில்கரும்புஉற்பத்திக்கான சிறப்புத் திட்டத்தின் மூலம் அதிக மகசூல், அதிகசர்க்கரைகட்டுமானம்கொண்டகரும்பு இரகங்களின்வல்லுநர்விதைகரும்புதிசுவளர்ப்பு நாற்றுக்கள்,பருசீவல்நாற்றுக்கள்ஆகியவை 2,037விவசாயிகளுக்குவழங்கப்பட்டுள்ளது.

கரும்பில் நுண்ணீர்ப்பாசனத்திட்டம்

❖ நுண்ணீர்ப்பாசன திட்டத்தின் மூலம் கரும்பு சாகுபடியில் 11,572 எக்டர் பரப்பளவில் நுண்ணீர்ப்பாசனம் 100 சதவீத மானியத்தில் அமைக்கப்பட்டுள்ளது.

தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் செயல்படுத்தப்பட்ட திட்டங்கள்

❖ ரூ.8.40கோடிமானியத்தில்கரும்புஅபிவிருத்தி திட்டங்கள்

❖ ரூ.1.92கோடி செலவில்சிமெண்ட்தளங்கள்

❖ ரூ.1.28கோடி செலவில்சுழல்கவிழ்பான்கள்



கலைஞரின் அனைத்துக் கிராம ஒருங்கிணைந்த வேளாண்மை வளர்ச்சித் திட்டம்

❖ கலைஞரின்அனைத்துகிராமஒருங்கிணைந்த வேளாண்வளர்ச்சிதிட்டத்தின்கீழ்ரூ.1.67கோடி மானியத்தில்கரும்புஅபிவிருத்தித்திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளது.

காட்டுப்பன்றி விரட்டி திரவம்

❖ கூட்டுறவு மற்றும் பொதுத்துறை சர்க்கரை ஆலைகளில் கரும்பு பதிவு செய்துள்ள விவசாயிகளுக்குகாட்டுபன்றியின்சேதங்களை கட்டுப்படுத்த தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தின் மூலம் உற்பத்தி செய்யப்படும்"காட்டுப்பன்றிவிரட்டி"திரவத்தை எக்டர்ஒன்றுக்குரூ.2,250மானியத்தில்2000 எக்டர் பரப்பளவில் மொத்தம் ரூ.45 இலட்சம் ஒதுக்கீடு செய்து செயல்படுத்தப்பட்டுள்ளது.

இணைமின்திட்டம்

❖ தருமபுரிமாவட்டகூட்டுறவுசர்க்கரைஆலையில் 12மெ.வாட்இணைமின்உற்பத்திநிலையத்தின் பணிகள்முடிக்கப்பட்டு13.12.2021அன்றுமுதல் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

❖ கூட்டுறவு மற்றும் பொதுத் துறை சர்க்கரை ஆலைகளில் இணைமின் திட்டப் பணிகள் நடைபெறாமல் இருந்த 6 ஆலைகளில் முதற்கட்டமாகஎம்.ஆர்.கே,கள்ளக்குறிச்சி–1 மற்றும் கள்ளக்குறிச்சி –2 ஆகிய கூட்டுறவு சர்க்கரைஆலைகளில்மீண்டும்பணிகள்துவங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

❖ இவற்றில் எம்.ஆர்.கே கூட்டுறவு சர்க்கரை ஆலையில்15மெ.வாட் இணைமின்உற்பத்தி திட்டம் முடிக்கப் பெற்று 31.12.2023 முதல் சோதனை ஓட்டம் நடைபெற்று வருகிறது.

❖ சர்க்கரை ஆலைக் கழிவு மண்ணை ஊட்டம் ஏற்றிய உரமாக மாற்றும் திட்டம்

❖ சேலம்கூட்டுறவுசர்க்கரைஆலையில்ரூ.1.50 கோடி மதிப்பீட்டில் சர்க்கரை ஆலையில் உற்பத்தியாகும்கழிவுமண்ணைஊட்டம்ஏற்றிய உரமாகதரம்உயர்த்திகரும்புவிவசாயிகளுக்கு நியாயமான விலையில் விநியோகம் செய்யும் திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது.

சர்க்கரை ஆலைத் தொழிலாளர்களுக்கு ஊதிய உயர்வு

❖ கூட்டுறவு மற்றும் பொதுத் துறை சர்க்கரை ஆலைகளில் பணிபுரியும் பணியாளர்கள்

மற்றும்தொழிலாளர்களுக்கு01.10.2018முதல் வழங்கப்படவேண்டியஊதியஉயர்வுநிலுவையில் இருந்துவந்தநிலையில்,35விழுக்காடுஊதிய உயர்வு வழங்கி ஆணையிடப்பட்டுள்ளது.

இலாபம் ஈட்டிய சர்க்கரை ஆலைகள்

- கள்ளக்குறிச்சி, சுப்ரமணிய சிவா, தருமபுரி, பெரம்பலூர்மற்றும்செங்கல்ராயன்ஆகியஐந்து ஆலைகள் இலாபம் ஈட்டியுள்ளது.

தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை

துளிநீரில் அதிக பயிர்

- கடந்தமூன்றுஆண்டுகளில்(2021–2022–2023–2024)நுண்ணீர்பாசனம்3.02இலட்சம்எக்டர் பரப்பளவில்3.03இலட்சம்விவசாயிகளுக்கு ரூ.2,325 கோடி நிதியில் நிறுவப்பட்டுள்ளது.
- 2024–2025ஆம்ஆண்டில்888.694கோடிநிதியில் 1,17,738விவசாயிகள்பயனடையும்வகையில் 1,02,748 எக்டர் பரப்பில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

தேசிய தோட்டக்கலை இயக்கம் (NHM)

- தேசியதோட்டக்கலைஇயக்கம்ஒருங்கிணைந்த தோட்டக்கலைஅபிவிருத்திஇயக்கதிட்டத்தின் கீழ் ஒரு உபதிட்டமாக செயல்படுத்தப்பட்டு வருகிறது.
- தோட்டக்கலை பயிர்களின் முழுமையான வளர்ச்சிக்காகஇத்திட்டம்ரூ.495.67கோடியில் செயல்படுத்தப்பட்டுள்ளது.
- நடவு செடிகள் உற்பத்தி இனத்தின் கீழ் 275 எக்டர் பரப்பளவில் தோட்டக்கலைப் பயிர்களுக்கான விதை உற்பத்தி திடல்கள் அமைக்கப்பட்டுரூ.96.25இலட்சம்நிதிசாதனை அடையப்பட்டுள்ளது.71,316எக்டர்பரப்பளவில் தோட்டக்கலை பயிர்களுக்கான புதிய பரப்பு விரிவாக்கம்மேற்கொள்ளப்பட்டுரூ.135.73கோடி சாதனை அடையப்பட்டுள்ளது. மா, முந்திரி, மல்லிகைமற்றும்கறிவேப்பிலைபயிர்களின் பழையதோட்டங்களைபுதுப்பித்தல்இனத்தின் கீழ்3,145எக்டர்பரப்பில்ரூ.6.27கோடிசாதனை அடையப்பட்டுள்ளது.1,918தனிநபர்களுக்கான நீர் சேமிப்பு அமைப்புகள் ரூ.13.97 கோடி நிதி ஒதுக்கீட்டில்அமைக்கப்பட்டுள்ளது.
- 9.23 இலட்சம் ச.மீ பரப்பளவில் பசுமைக் குடில், 4.61 இலட்சம் ச.மீ பரப்பளவில் நிழல் வலைகுடில்மற்றும்7855எக்டர்பரப்பளவில் நிலப்போர்வைரூ.67.02கோடிநிதிஒதுக்கீட்டில் அமைக்கப்பட்டுள்ளது.ஒருங்கிணைந்தஉரம் மற்றும்பூச்சிமேலாண்மையினைஊக்குவிக்க 19,585எக்டர்பரப்பிற்குரூ.2.34கோடிமானியம் வழங்கப்பட்டுள்ளது.
- இயற்கை முறையில் பயிர் சாகுபடி 46,550 எக்டர் பரப்பளவில் ரூ.14.82 கோடி நிதியில் ஊக்குவிக்கப்பட்டுள்ளது.1111நிரந்தரமண்புழு உர கூடம் மற்றும் 3,200 HDPE மண்புழு உர படுக்கைகள்ரூ.8.10கோடியில்விவசாயிகளின் விளை நிலங்களில் அமைக்கப்பட்டுள்ளது. 2,512பண்ணைஇயந்திரங்கள்விவசாயிகளுக்கு ரூ.5.88 கோடியில் வழங்கப்பட்டுள்ளது.
- அறுவடைக்குபின்செய்இழப்புகளைகுறைக்க 2,269சிப்பம்கட்டும்அறைகள்,6,833குறைந்த செலவிலான வெங்காய சேமிப்பு கிடங்குகள் அமைக்கப்பட்டு,ரூ.103.75கோடிநிதிமானியமாக விடுவிப்பு.
- சந்தை உட்கட்டமைப்பு வசதிகள் அமைத்தல் இனத்தின் கீழ், 5,583 நடமாடும் விற்பனைவண்டிகள் ரூ.8.37கோடி நிதியில் பயனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.

தேசிய வேளாண்மை வளர்ச்சி திட்டம் (NADP)

- 2021–2022ஆம்ஆண்டில்விவசாயிகள்தங்கள் விருப்பத்திற்கேற்பதோட்டக்கலைபயிர்களை சாகுபடி செய்வதற்காக ரூ.12 கோடியும், வாழைதார்களுக்கு,உறைகள்மற்றும்பந்தல் அமைத்துசாகுபடி செய்வதற்காகரூ.14கோடி செலவிடப்பட்டது.
- அங்ககவேளாண்மைமுறைகாய்கறிசாகுபடி, ரூ.20 கோடியில் செயல்படுத்தப்பட்டது. தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம் வெளியிட்டகத்திரி,பப்பாளி,கீரை,கொடிவகை காய்கறிகள்போன்றபயிர்களின்புதுரகங்களை விவசாயிகளிடம்கொண்டுசேர்ப்பதற்குரூ.1.92 கோடிநிதிசெலவிடப்பட்டது.காய்கறிசாகுபடி செய்யப்படாத கிராமங்களில் மண்வளத்தை அதிகரிக்கவும், காய்கறி சாகுபடியை ஊக்குவிப்பதற்கும் ரூ.4 கோடியில் திட்டம் செயல்படுத்தப்பட்டது.
- 2022–2023ஆம் ஆண்டில் நெற்பயிருக்கு மாற்றாக தோட்டக்கலைப் பயிர்களை



பயிரிடுதல்: நெற்பயிருக்கு மாற்றாக தோட்டக்கலைப் பயிர்களை பயிரிடுவதை ஊக்குவிப்பதற்கு ரூ.12 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு,செயல்படுத்தப்பட்டு வருகிறது.

❖ **பாரம்பரிய காய்கறி இரகங்களை மீட்டெடுத்தல்:**பாரம்பரியகாய்கறிஇரகங்களை மீட்டெடுத்தல் இனத்தை ஊக்குவிப்பதற்கு ரூ.2 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு, செயல்படுத்தப்பட்டு வருகிறது.

தோட்டக்கலைப் பயிர்களில் IIHR & TNAU வீரிய இரகங்களை ஊக்குவித்தல்

❖ தோட்டக்கலைப் பயிர்களில் IIHR & TNAU வீரியஇரகங்களைஊக்குவித்தல்இனத்தை ஊக்குவிப்பதற்கு ரூ.1.50 கோடியில் திட்டம் செயல்படுத்தப்பட்டது.

அங்கக பண்ணையம்

❖ 1000 எக்டர் பரப்பளவில் அங்கக பண்ணைய முறையில் காய்கறிகள் சாகுபடியை ஊக்குவிப்பதற்கு ரூ.50 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு, திட்டம் செயல்படுத்தப்பட்டது.

துல்லிய பண்ணையம்

❖ துல்லிய பண்ணையம் இனத்திற்காக ரூ.7 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு, திட்டம் செயல்படுத்தப்பட்டது.

❖ நிரந்தரப்பந்தல்/கல்பந்தல்அமைத்தல்ரூ.4கோடி நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்பட்டது.

2023–2024ஆம் ஆண்டில் நிரந்தரப் பந்தல் / கல் பந்தல் மற்றும் தற்காலிக பந்தல் அமைத்தல்

❖ நிரந்தரபந்தல்/கல்பந்தல்மற்றும்தற்காலிகபந்தல் அமைப்பதைஊக்குவிப்பதற்குரூ.5.25கோடி நிதிஒதுக்கீடுசெய்யப்பட்டு,செயல்படுத்தப்பட்டு வருகிறது.

நிலப்போர்வை

❖ நிலப்போர்வை இடுவதை ஊக்குவிப்பதற்கு ரூ.2.50 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, செயல்படுத்தப்பட்டு வருகிறது.

❖ தோட்டக்கலைப்பயிர்களில்பரப்புவிரிவாக்கம் ரூ.4.75கோடிநிதியில்செயல்படுத்தப்பட்டது.

மானாவாரி பகுதி மேம்பாடு (RAD)

❖ 2021–20222022–2023ஆகியஇரண்டாண்டுகளில் விவசாயிகளுக்கு நிலையான மற்றும் அதிக வருமானம்பெறஏதுவாக,தோட்டக்கலைசார்ந்த பண்ணையம்,கறவைமாடுமற்றும்ஆடுவளர்ப்பு அடங்கியஒருங்கிணைந்த7,300பண்ணைய முறை அலகுகள் ரூ.34.30 கோடி நிதியில் செயல்படுத்தப்பட்டது'



- 2023–2024ஆம்ஆண்டில்விவசாயிகளுக்கு நிலையான மற்றும் அதிக வருமானம் பெற கறவைமாடு/ஆடுவளர்ப்பு,காய்கறிவிதைகள், தோட்டக்கலை பழ செடிகள், தேனீ பெட்டி மற்றும் மண்புழு உரக் கூடம் அடங்கிய 9,695ஒருங்கிணைந்தபண்ணையஅலகுகள், ரூ.29.08 கோடி நிதியில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

தென்னை வளர்ச்சி வாரியத்திட்டம் 2021–2022

- மாநில தென்னை நாற்று மையம் நிறுவுதல், செயல்விளக்கத்திடல் அமைத்தல் மறுநடவு மற்றும்புத்தாக்கம்இனத்தின்கீழ்ரூ.1012.328 இலட்சம் நிதி இனத்தில் 6,764 பயனாளிகள் பயடைந்துள்ளனர்.

தென்னை வளர்ச்சி வாரியத்திட்டம் 2022–2023

- மாநில தென்னை நாற்று மையம் நிறுவுதல், செயல்விளக்கத்திடல் அமைத்தல், மறுநடவு மற்றும் புத்தாக்கம் இனத்தின்கீழ் ரூ.923.115 இலட்சம் நிதி இனத்தில் 8,367 பயனாளிகள் பயடைந்துள்ளனர்.

தென்னை வளர்ச்சி வாரியத் திட்டம் 2023–2024

- மாநில தென்னை நாற்று மையம் நிறுவுதல், இயற்கை உரக்கூடம் அமைத்தல், செயல்விளக்கத்திடல் அமைத்தல், மறுநடவு மற்றும்புத்தாக்கம்இனத்தின்கீழ்ரூ.1,236.94 இலட்சம் நிதி இனத்தில் 8,270 பயனாளிகள் பயடைந்துள்ளனர்.

தென்னை வேர்வாடல் நோய் மீட்புத் திட்டம் – 2023–2024 & 2024–2025

- இத்திட்டத்தின்கீழ்3553ஹெக்டேர்பரப்பிற்கு ரூ.1,485.319இலட்சம்நிதிசாதனைஅடையப்பட்டு, 5,107 பயனாளிகள் பயனடைந்து திட்டம் செயலாக்கத்தில் உள்ளது.

தமிழ்நாடு பாசன வேளாண்மை நவீனமயமாக்கல் திட்டம் (TN–IAMP)

- 19,380எக்டர்பரப்பில்ரூ.39.92கோடிசெலவில் பயிர் செயல் விளக்கங்கள்.
- 6,395எக்டர்பரப்பில்ரூ.51.49கோடிசெலவில் நுண்ணீர்ப்பாசனம்.
- 3,664எக்டர்பரப்பில்ரூ.0.44கோடிசெலவில் குறைந்தபூச்சிக்கொல்லிபயன்பாடு359எக்டர் பரப்பில்ரூ.0.57கோடிசெலவில்நிலப்போர்வை.
- 20,000சதுரமீட்டரில்ரூ.0.71கோடிசெலவில் நிழல்வலைக்குடில்.
- ரூ.0.30கோடிசெலவில்1,516கண்டுணர்சுற்றுலா.
- 107மாதிரிகிராமங்களில்ரூ.1.89கோடிசெலவில் இத்திட்டத்தில்சாதனைஅடையப்பட்டுள்ளது.

தேசிய மூங்கில் இயக்கம் (NBM)

- தேசிய மூங்கில் இயக்கம், கடந்த மூன்று ஆண்டுகளில்,ரூ.6.04கோடிநிதியில்1391எக்டர் பரப்பில் செயல்படுத்தப்பட்டது.
- 2024–2025ஆம்ஆண்டில்,925எக்டர்பரப்பளவில் ரூ.2.26 கோடி நிதியில் இத்திட்டத்தினை செயல்படுத்த,ஆண்டுசெயல்திட்டம்ஒப்புதல் பெறப்பட்டு நிதியினை எதிர்நோக்கி பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

தேசிய சமையல் எண்ணெய் இயக்கம் – எண்ணெய்ப் பனைத் திட்டம் (NMEO – OP)

- இத்திட்டம் ரூ.5.41 கோடியில் 1196 எக்டர் பரப்பளவில் எண்ணெய்ப் பனை சாகுபடி மேற்கொள்ளப்பட்டது.



❖ 2024–2025ஆம் ஆண்டில், ரூ.6.58 கோடி நிதிக்கான ஆண்டு செயல்திட்டம் ஒப்புதல் பெறப்பட்டுநிதியினைஎதிர்நோக்கிஇத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

தோட்டக்கலைப் பயிர்களில் பிரதம மந்திரியின் பயிர் காப்பீடுத் திட்டம் (PMFBY)

❖ 3.79இலட்சம்விவசாயிகள்1.15இலட்சம்எக்டர் பரப்பளவில்தோட்டக்கலைப்பயிர்களில்பயிர் காப்பீடு செய்துள்ளனர்.

❖ 2021–2022ஆம் ஆண்டு பயிர் காப்பீட்டுத் திட்டத்தில்தோட்டக்கலைப்பயிர்களில்சிறப்பு பருவத்தில்காப்பீடுசெய்தவிவசாயிகளில்,7,910 விவசாயிகளுக்கு இழப்பீட்டு தொகையாக ரூ.39.27கோடிவழங்கப்பட்டுள்ளது.2021–2022 ஆம் ஆண்டு பயிர் காப்பீட்டுத் திட்டத்தில்ராபி பருவத்தில்காப்பீடுசெய்தவிவசாயிகளில்,19,790 விவசாயிகளுக்கு இழப்பீட்டு தொகையாக ரூ.31.66 கோடி வழங்கப்பட்டுள்ளது. மேலும் 2022–2023ஆம் ஆண்டில் ராபி பருவத்தில் 7,996விவசாயிகளுக்கு7.62கோடியும்,சிறப்பு பருவத்தில்1,956விவசாயிகளுக்கு4.97கோடியும் இழப்பீட்டு தொகையாக வழங்கப்பட்டுள்ளது. 2023–2024ஆம்ஆண்டில்21.96கோடி26,382 விவசாயிகளுக்கு இழப்பீட்டு தொகையாக இதுவரை வழங்கப்பட்டுள்ளது.

மாநில தோட்டக்கலை வளர்ச்சி திட்டம் (SHDS)

❖ கடந்த2021–2022,2022–2023,2023–2024ஆகிய மூன்றுஆண்டுகளில்ரூ.103.12கோடிநிதியில் மாநில தோட்டக்கலை வளர்ச்சி திட்டம் செயல்படுத்தப்பட்டது.

❖ நடப்பு2024–2025ஆம்ஆண்டில்ரூ.24.05கோடி நிதிஒதுக்கீட்டில்மாநிலதோட்டக்கலைவளர்ச்சி திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சி திட்டம் (KAVIADP)

❖ கடந்த2021–2022,2022–2023,2023–2024ஆகிய மூன்றுஆண்டுகளில்ரூ.71.89கோடிநிதியில் கலைஞரின்அனைத்துகிராமஒருங்கிணைந்த வேளாண்வளர்ச்சிதிட்டம்செயல்படுத்தப்பட்டது.

❖ நடப்பு2024–2025ஆம்ஆண்டில்ரூ.15.20கோடி நிதிஒதுக்கீட்டில்கலைஞரின்அனைத்துகிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சி திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

பனை மேம்பாட்டு இயக்கம் (PDM)

❖ கடந்த2021–2022,2022–2023,2023–2024ஆகிய மூன்று ஆண்டுகளில் பனை மேம்பாட்டு இயக்கம்ரூ.6.15கோடிநிதியில்(தோட்டக்கலை துறை–ரூ.4.55கோடிமற்றும்தமிழ்நாடுபனை பொருள் வளர்ச்சி வாரியம் – ரூ.1.60 கோடி) செயல்படுத்தப்பட்டது.

❖ நடப்பு 2024–2025ஆம் ஆண்டில் பனை மேம்பாட்டு இயக்கம் ரூ.1.21 கோடி நிதியில் தோட்டக்கலை துறை மற்றும் தமிழ்நாடு பனை பொருள் வளர்ச்சி வாரியத்தின் மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

தோட்டக்கலை பயிர்களில் கூட்டுப் பண்ணையம் (Collective Farming)

❖ 500 உழவர் உற்பத்தியாளர் குழுக்கள் அமைக்கப்பட்டு,ரூ.25கோடிதொகுப்புநிதியில் இத்திட்டம்செயல்படுத்தப்பட்டு,50,000சிறு,குறு விவசாயிகள் பயன்.

அரசு தோட்டக்கலைப் பண்ணைகள், பூங்கா மற்றும் தோட்டங்கள்

❖ 2021–2022,2022–2023,2023–2024ஆகிய மூன்றாண்டுகளில்,93.50கோடிநடவுச்செடிகள் உற்பத்தி செய்யப்பட்டு விவசாயிகளுக்கு விநியோகிக்கப்படுகிறது.

❖ 2024–2025ஆம் ஆண்டில் 19.55 கோடி நடவுச்செடிகள்உற்பத்திசெய்யதிட்டமிடப்பட்டு உற்பத்தி பணிகள் நடைபெற்று வருகின்றன. இதுவரை,47இலட்சம்நடவுச்செடிகள்உற்பத்தி செய்யப்பட்டு விநியோகிக்கப்படுகிறது.

❖ 858.688 மெட்ரிக் டன் காய்கறி விதைகள், உற்பத்தி செய்யப்பட்டு ஆடி மற்றும் தைப்பட்டங்களில் வீட்டு காய்கறித் தோட்ட தளைகளாகவும், விதைகளாகவும் விநியோகிக்கப்பட்டது.

❖ 2024–2025ஆம்ஆண்டில்117.81மெட்ரிக்டன் அளவிலான காய்கறி விதைகள் உற்பத்தி செய்ய திட்டமிடப்பட்டு, உற்பத்தி பணிகள் துவங்கப்பட்டுள்ளன.

❖ தோட்டக்கலைத்துறைமூலம்சென்னையில் மலர் கண்காட்சி நடத்தப்பட்டது .

❖ விழுப்புரம்மாவட்டத்தில்எளவலப்பாக்கத்தில் புதிய அரசு தோட்டக்கலை பண்ணை அமைக்கப்பட்டு வருகிறது.

❖ மா, கொய்யா, தென்னை, வாழை, பலா, மித வெப்பமண்டலபழப்பயிர்கள்மற்றும்பிறவெப்ப மண்டலபாரம்பரியகாய்கறிகள்,சுவைதாளிதப் பயிர்கள்ஆகியவற்றிற்குமரபணுவங்கிகள்அரசு தோட்டக்கலைபண்ணைகளில்அமைக்கப்பட்டு வருகிறது.

❖ ஒவ்வொரு ஆண்டும் கோடைக்காலத்தில் பூங்காக்கள்மற்றும்தோட்டங்களில்கண்கவரும் மலர் கண்காட்சி, பழக் கண்காட்சி, காய்கறி கண்காட்சி,சுவைதாளிதக்கண்காட்சி,ரோஜா கண்காட்சி, சாரல் விழா போன்ற பல்வேறு நிகழ்ச்சிகள் நடத்தப்படுகின்றன.

❖ வடலூரில்மூலிகைபூங்காவும்,நாகூரில்நெய்தல் பூங்காவும், தஞ்சாவூரில் மருதம் பூங்காவும் அமைக்கபணிகள்மேற்கொள்ளப்பட்டுவருகிறது.

❖ பூங்காக்களைமேலும்எழிலூட்டும்வகையில் ஏற்காட்டில் தாவர அலங்கார வடிவங்கள் அமைக்கவும், மாதவரத்தில் இசைக்கேற்ப அசைந்தாடும்நீரூற்றுஅமைக்கவும்பணிகள் நடைபெற்று வருகிறது.

❖ செம்மொழி பூங்காவிற்கு எதிரில் கலைஞர் நூற்றாண்டுபூங்காஅமைக்கஆயத்தப்பணிகள் நடைபெற்று வருகிறது.

கலைஞரின் நூற்றாண்டு மலர்க் கண்காட்சி

❖ முத்தமிழறிஞர் கலைஞரின் நூற்றாண்டு விழாவைமுன்னிட்டுசெம்மொழிப்பூங்காவில் பிரத்தியேகமலர்க்கண்காட்சிநடத்தப்பட்டது. முதன்முறையாக,28வகையான12இலட்சம் செடிகளைக் கொண்டு, தனித்துவமான முறையில்மலர்கண்காட்சிநடத்தப்பட்டு,சுமார் 1.5 இலட்சம் பார்வையாளர்களை ஈர்த்தது.

தோட்டக்கலை பயிர்களின் சேதத்திற்கான இழப்பீட்டு நிவாரணம்

❖ **தோட்டக்கலை பயிர் பாதிப்பு – வட கிழக்கு பருவமழை2021:**சேதமடைந்ததோட்டக்கலை பயிர்களுக்கு இடுபொருள் நிவாரணமாக, மாநிலபேரிடர்நிவாரணநிதியின்கீழ்,ரூ.40.23 கோடிபாதிக்கப்பட்ட40,033விவசாயிகளுக்கு வழங்கப்பட்டது.

❖ **தோட்டக்கலை பயிர் பாதிப்பு – வட கிழக்கு பருவமழை 2022 :** சேதமடைந்த தோட்டக்கலை பயிர்களுக்கு இடுபொருள் நிவாரணமாக, மாநில பேரிடர் நிவாரண நிதியின்கீழ்,ரூ.0.53கோடிபாதிக்கப்பட்ட1,088 விவசாயிகளுக்கு வழங்கப்பட்டது.

❖ **தோட்டக்கலை பயிர் பாதிப்பு – தென் மேற்கு பருவ மழை 2022 :** சேதமடைந்த தோட்டக்கலை பயிர்களுக்கு இடுபொருள் நிவாரணமாக, மாநில பேரிடர் நிவாரண நிதியின்கீழ்,ரூ.0.86கோடிபாதிக்கப்பட்ட2,040 விவசாயிகளுக்கு வழங்கப்பட்டது.

❖ **தோட்டக்கலை பயிர் பாதிப்பு – மாண்டஸ் புயல் 2022 :** சேதமடைந்த தோட்டக்கலை பயிர்களுக்கு இடுபொருள் நிவாரணமாக, மாநில பேரிடர் நிவாரண நிதியின் கீழ், ரூ.1.75 கோடி பாதிக்கப்பட்ட 3,716 விவசாயிகளுக்கு வழங்கப்பட்டது.

❖ **தோட்டக்கலை பயிர் பாதிப்பு – சூறைக்காற்று 2023 :** சேதமடைந்த தோட்டக்கலை பயிர்களுக்கு இடுபொருள் நிவாரணமாக, மாநில பேரிடர் நிவாரண நிதியின்கீழ், ரூ.3.77 கோடி பாதிக்கப்பட்ட 5,596 விவசாயிகளுக்கு வழங்கப்பட்டது.

❖ **தோட்டக்கலை பயிர் பாதிப்பு – மிக்ஜாம் புயல் 2023 :** சேதமடைந்த தோட்டக்கலை பயிர்களுக்கு இடுபொருள் நிவாரணமாக, மாநில பேரிடர் நிவாரண நிதியின்கீழ், ரூ.2.69 கோடி பாதிக்கப்பட்ட 4,311 விவசாயிகளுக்கு வழங்கப்பட்டது.

❖ **தோட்டக்கலை பயிர் பாதிப்பு – வடகிழக்கு பருவ மழை மழையின் போது தென்மாவட்டங்களில் ஏற்பட்ட அதிகனமழை 2023 :** சேதமடைந்த தோட்டக்கலை பயிர்களுக்கு இடுபொருள் நிவாரணமாக, மாநிலபேரிடர் நிவாரண நிதியின்கீழ், ரூ.41.24 கோடி பாதிக்கப்பட்ட 62,735 விவசாயிகளுக்கு வழங்கப்பட்டது.

தூத்துக்குடி மாவட்டத்தில் ஏற்பட்ட மழை மற்றும் வெள்ள பாதிப்பில் தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை மூலம் மேற்கொள்ளப்பட்ட நிவாரண பணிகள்

❖ தோட்டக்கலை,வேளாண்மைமற்றும்வேளாண் விற்பனைத் துறையின் களப் பணியாளர்கள் மூலம் மொத்தம் ரூ.25 இலட்சம் மதிப்பிலான 90டன்காய்கறிகள்விற்பனைசெய்யப்பட்டன.

தோட்டக்கலைப் பயிர்களின் சாகுபடி பரப்பு :

❖ 8.26 இலட்சம் ஏக்கர் பரப்பளவில் பழங்கள், 8.96இலட்சம்ஏக்கர்பரப்பளவில்காய்கறிகள், 18.76 இலட்சம் ஏக்கர் பரப்பளவில் தோட்டப் பயிர்கள், 2.74 இலட்சம் ஏக்கர் பரப்பளவில் சுவைதாளித மணம்கூட்டும் பயிர்கள், 0.40 இலட்சம் ஏக்கர் பரப்பளவில் மூலிகை வாசனைப்பயிர்கள்மற்றும்1.15இலட்சம்ஏக்கர் பரப்பளவில்மலர்கள்உள்ளிட்டதோட்டக்கலை பயிர்கள்பயிரிடப்பட்டுள்ளன.2023–2024ஆம் ஆண்டின்மொத்ததோட்டக்கலைப்பயிர்களின் சாகுபடிபரப்பு 40.27 இலட்சம் ஏக்கர் ஆகும்.

வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை

❖ கோவிட்–19 பெருந்தொற்று காலத்தில் 284 ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள் தடையின்றி செயல்பட்டு, ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்களில்விவசாயிகள்மற்றும் வியாபாரிகளுக்கிடையேரூ.325கோடிமதிப்பில் 1.15இலட்சம்மெட்ரிக்டன்விளைபொருட்கள் பரிவர்த்தனை மேற்கொள்ளப்பட்டு, 510 கிடங்குகளில்77,766மெடன்விளைபொருட்கள் இருப்புவைக்கப்பட்டது.பொருளீட்டுக்கடனாக ரூ.3.73கோடிவழங்கப்பட்டு225விவசாயிகள் பயன் .

❖ உழவர் சந்தை விவசாயிகள் மற்றும் உழவர் உற்பத்தியாளர்நிறுவனங்களால்48,388மெடன் காய்கறிகள்மற்றும்பழங்கள்,74,415வாகனங்கள் மூலம்நுகர்வோர்களுக்குநேரடியாகவிற்பனை செய்யப்பட்டன.

❖ ஊரடங்கு காலத்தில் மாநில அளவிலும், மாவட்ட அளவிலும் விவசாயிகளுக்கான உதவி மையத்துடன் கூடிய கட்டுப்பாட்டு அறைகள் ஏற்படுத்தப்பட்டு விவசாயிகள் மற்றும்நுகர்வோர்கள்எதிர்கொண்டசிரமங்கள் உடனுக்குடன் களையப்பட்டன.

ஒழுங்குமுறை விற்பனை கூடங்கள்

❖ அதிகபட்சமாக 85.96 இலட்சம் மெ.டன் வேளாண்விளைப்பொருட்கள்ஒழுங்குமுறை



விற்பனைக் கூடங்களில் பரிவர்த்தனை செய்யப்பட்டு, ரூ.428.28 கோடி வருவாய் ஈட்டப்பட்டுள்ளது.

- தேசியஅளவில்தமிழ்நாட்டில்முதன்முறையாக 169கிடங்குகளுக்கு,கிட்டங்கிமேலாண்மை ஒழுங்கு முறை ஆணையத்திடம் (WDRA) ஒப்புதல் பெறப்பட்டு ஒன்றிய அரசின் அங்கீகாரமும் பாராட்டும் பெறப்பட்டு,16,635 மெ.டன் அளவிலான விளை பொருட்கள் இருப்பு வைக்கப்பட்டு மின்னணு மாற்றத்தகு கிடங்கு இரசீது(eNWR)முறையில்விவசாயிகள் மற்றும் வர்த்தகர்கள் ரூ.90கோடி கடன் வசதி பெறவழிவகைசெய்யப்பட்டது.இந்தியஅளவில் ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்களில் கட்டப்பட்டுள்ளகிடங்குகளுக்கு அதிகளவில் கிடங்கு மேம்பாடு மற்றும் ஒழுங்குமுறை ஆணையத்தின் அங்கீகாரம் பெற்றதற்காக தொடர்ந்து இரண்டு ஆண்டுகளாக தமிழ்நாட்டிற்குஒன்றியஅரசிடமிருந்துவிருது பெறப்பட்டுள்ளது.
- திருவாரூர் மாவட்டத்தில், திருவாரூர், திருத்துறைப்பூண்டி,பூந்தோட்டம்,மன்னார்குடி கோட்டூர், நீடாமங்கலம், வலங்கைமான் மற்றும் முத்துப்பேட்டை ஆகிய இடங்களில் 14,000 மெ.டன் கொள்ளளவு கொண்ட 9 சேமிப்புகிடங்குகள்ரூ.21.10கோடிமதிப்பீட்டில் ஏற்படுத்தப்பட்டு விவசாயிகள் பயன்பாட்டில் உள்ளன.இதுதவிர50உலர்களங்கள்,4தானிய உலர்விப்பான்கள்ரூ.6.20கோடிமதிப்பீட்டில் நிறுவப்பட்டுள்ளன.
- நாகப்பட்டினம்மாவட்டத்தில்–நாகப்பட்டினம், ஈரோடுமாவட்டத்தில்–சித்தோடுமற்றும்நம்பியூர், சிவகங்கை மாவட்டத்தில் – இளையான்குடி, தேனிமாவட்டத்தில்–பெரியகுளம்,கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் – திருநாவலூர், சேலம் மாவட்டத்தில்–சங்ககிரிமற்றும்காடையம்பட்டி, நாமக்கல் மாவட்டத்தில் – நாமக்கல் மற்றும் ராசிபுரம் ஆகிய ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களுக்கு10கட்டமைப்புவசதிகளுடன் கூடியசொந்தகட்டடம்ரூ.49.62கோடிமதிப்பில் கட்டப்பட்டு வருகின்றன.
- ஈரோடு மாவட்டம் தாளவாடி ஒழுங்குமுறை விற்பனை கூடத்திற்கு ரூ.5 கோடி மதிப்பில் கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்த கட்டுமானப்பணிகளும்,தென்காசிமாவட்டம் ஆலங்குளத்தில்ரூ.5.17கோடிமதிப்பில்புதியதாக ஒழுங்குமுறை விற்பனைக்கூடம் ஏற்படுத்த கட்டுமானப்பணிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.
- திருவண்ணாமலை மாவட்டத்தில் ஆதமங்களம்புதூர் மற்றும் நாய்டுமங்கலம், தஞ்சாவூர் மாவட்டம் – பாபநாசம், விழுப்புரம் மாவட்டம்–செஞ்சி,திருவெண்ணெய்நல்லூர் மற்றும் கடலூர் மாவட்டம் – வேப்பூர் ஆகிய 6 ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்களுக்கு சொந்தக் கட்டடம் கட்ட ரூ.17.60 கோடி ஒன்றிய மற்றும் மாநில அரசு நிதியுதவியுடன் ஏற்படுத்தப்பட்டு வருகின்றது.
- 100 ஒழுங்குமுறை விற்பனை கூடங்களில் ரூ.47.30கோடிமதிப்பில்கட்டமைப்புவசதிகளை மேம்படுத்த பணிகள் நடைபெற்றுவருகிறது.
- வரத்துஅதிகமுள்ளஒழுங்குமுறைவிற்பனைக் கூடங்களுக்கு அருகில், ரூ.7.52 கோடி மதிப்பீட்டில் தலா 500 மெ.டன் கொள்ளளவு கொண்டசேமிப்புகிடங்குவசதியுடன்கூடிய8 துணைவிற்பனைக்கூடங்கள்ஈரோடுமாவட்டம் பர்கூர், கள்ளக்குறிச்சி மாவட்டம் அரியூர், விழுப்புரம் மாவட்டம் சிறுவந்தாடு, தஞ்சாவூர் மாவட்டம் தென்னூர், திருவாரூர் மாவட்டம் பெருந்தாரக்குடி,நாகப்பட்டினம்மாவட்டத்தில் மாணிக்கபங்கு, திருவண்ணாமலை மாவட்டத்தில் கீழூர் மற்றும் கொளப்பலூர் ஆகிய இடங்களில் ஏற்படுத்தப்பட்டுள்ளன.
- தலா 250 மெ.டன் கொள்ளளவு கொண்ட 4 சேமிப்பு கிடங்குகள் பூளவாடி, பர்கூர், சிதம்பரவிடுதி,எருமபட்டி ஆகியஇடங்களில் ரூ.2 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்பட்டு விவசாயிகளின் பயன்பாட்டில் உள்ளன.
- ஈரோடு மாவட்டத்தில் சிவகிரி, புஞ்சை காளமங்கலம் மற்றும் கோயம்புத்தூர் மாவட்டத்தில்மலையடிப்பாளையம்,நெகமம், காரமடை மற்றும் ஆனைமலை ஆகிய 6 ஒழுங்குமுறைவிற்பனைக்கூடங்களில்தலா 1,000மெ.டன்கொள்ளளவுகொண்டகூடுதல் சேமிப்புக்கிடங்குகள் ரூ.12 கோடி மதிப்பில் கட்டப்பட்டு வருகிறது.
- 22 ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்களில் 34,500 மெ.டன் கொள்ளளவு கொண்ட 27 சேதமடைந்த கிடங்குகளுக்கு பதிலாக புதிய கிடங்குகள்ரூ.53.50கோடிமதிப்பில்கட்டப்பட்டு வருகிறது.



- ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்களில் 28 இடங்களில் ரூ.3.50 கோடி மதிப்பீட்டில் உலர்களங்கள்ஏற்படுத்தப்பட்டுசெயல்பாட்டில் உள்ளன.
- தமிழகத்தில் டெல்டா மாவட்டங்களில் வாரம் இருமுறை பருத்தி விற்பனை வசதியை ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் ஏற்படுத்தி 1.45 இலட்சம் மெ.டன் பருத்தி விற்பனை நடைபெற்றது.
- தமிழ்நாடுவேளாண்விளைபொருள்விற்பனை (முறைப்படுத்துதல்)சட்டம்1987மற்றும்அதன் விதிகள்1991–ஐபரிசீலனைசெய்துதிருத்தங்கள் கொண்டு வருவதற்கான உயர்நிலை குழு அமைக்க அரசாணை வெளிடப்பட்டு உயர்நிலைக் குழுவின் பரிந்துரைகளின்படி, உரிய சட்ட திருத்தம் மேற்கொள்ளப்பட்டது.
- திண்டுக்கல்மற்றும்திருப்பூர்மாவட்டங்களில் கண்வலிகிழங்குவர்த்தகத்தைமுறைப்படுத்தும் பொருட்டுதமிழ்நாடுவேளாண்விளைபொருள் விற்பனை(முறைப்படுத்துதல்)சட்டம்1987இன் அட்டவணையில்இணைக்கப்பட்டுஅறிவிக்கை செய்யப்பட்டு வேளாண் விளைபொருளாக அறிவிக்கப்பட்டுள்ளது
- 157 ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்கள் மின்னணுதேசியவேளாண்இணையதளத்தில் இணைக்கப்பட்டு,ரூ.4,875.33கோடிமதிப்பிலான 16.75 இலட்சம் மெ.டன் வேளாண் விளை பொருட்கள் பரிவர்த்தனை செய்யப்பட்டு, 10.83இலட்சம்விவசாயிகள்பயனடைந்துள்ளனர்.
- தமிழ்நாடு முழுவதும் வர்த்தகம் மேற்கொள்ள ஏதுவாக ஒன்றுபட்ட ஒற்றை உரிமம் 7,166 வணிகர்களுக்கும்,510உழவர்உற்பத்தியாளர் நிறுவனங்களுக்கும் வழங்கப்பட்டுள்ளது.

மதிப்புக் கூட்டும் மையங்கள் மற்றும் கட்டமைப்பு வசதிகள்

- நீலகிரி மாவட்டத்தில் விவசாயிகள் பயன்பாட்டிற்காகசிறுதானியங்கள்பதப்படுத்தும் நிலையமானது ரூ.35 இலட்சம் மதிப்பீட்டில் தேசியவேளாண் வளர்ச்சிதிட்டத்தின்(NADP) கீழ் அமைக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளது. மேலும், நீலகிரி மாவட்டம், எடப்பள்ளியில் ஒருங்கிணைந்த கிராம வேளாண் சந்தை வளாகம் ரூ.2 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ளது.
- நாமக்கல் மாவட்டம், கொல்லிமலை பகுதியில்விளையும்மிளகினைவிவசாயிகள் பதப்படுத்தும் வகையில், மிளகிற்கான பதப்படுத்தும்மையம்ரூ.50இலட்சம்மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ளது.
- தஞ்சாவூர் மாவட்டத்தில், தேசிய வேளாண் வளர்ச்சித்திட்டத்தின்கீழ்,தென்னைமதிப்புக் கூட்டும் மையம், ரூ.5.20 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ளது.
- திருநெல்வேலி மாவட்டம், களக்காட்டில், தரம் பிரிப்பு கூடம் மற்றும் மதிப்பு கூட்டும் இயந்திரங்களுடன்கூடியவாழைஏலமையம் ரூ.6.47கோடிமதிப்பீட்டில்சிறப்புபகுதிமேம்பாட்டு



திட்டத்தின்(Special Area development programme) கீழ் அமைக்கப்பட்டுள்ளது.

- திருவண்ணாமலைமாவட்டம்தெள்ளானந்தல் பகுதியில்சமையல்எண்ணெய்க்கானநவீன சிப்பம் கட்டும் வசதியுடன் கூடிய சந்தை ஊக்குவிக்கும்மையம்ரூ.3.20கோடிமதிப்பீட்டில் தேசியவேளாண்வளர்ச்சிதிட்டத்தின்(NADP) கீழ் அமைக்கப்பட்டுள்ளது.
- தாளவாடி மற்றும் பர்கூரில் காய்கறி மற்றும் பழங்களைசேமிக்க500மெ.டன்கொள்ளளவு கொண்ட குளிர்பதன கிடங்குகள் ரூ.5.64 கோடிமதிப்பீட்டில்சிறப்புப்பகுதிமேம்பாட்டுத் திட்டத்தின் (Special Area development programme) கீழ் ஏற்படுத்தப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.
- திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரம் மற்றும்கடலூர்மாவட்டம்பண்ருட்டியில்தலா 1000மெ.டன்கொள்ளளவுகொண்டகுளிர்ப்பதன கிடங்குகள் ரூ.10 கோடி மதிப்பீட்டில் மாநில நிதியில் அமைக்கப்பட்டுள்ளன.
- கரும்பு விவசாயிகளின் வருமானத்தை அதிகரிக்கமாநிலவேளாண்வளர்ச்சிநிதியின் கீழ் உயர்தர வெல்லம் தயாரிக்கும் மையம் சேலம், ஈரோடு, நாமக்கல், தருமபுரி, திருப்பூர், கோயம்புத்தூர், தேனி மற்றும் திண்டுக்கல் மாவட்டங்களில் அமைப்பதற்கு ரூ.1 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, கரும்பிலிருந்து உயர்தர வெல்லம் தயாரிக்கும் மையங்கள் அமைக்கப்பட்டுள்ளது.
- சந்தை நுண்ணறிவு பற்றிய விழிப்புணர்வு, தொழில்முனைவோர்கள்,உழவர்உற்பத்தியாளர் அமைப்புகளுக்கான பயிற்சி கூடத்துடன் கூடிய, வேளாண் சந்தை நுண்ணறிவு மற்றும் உழவர் ஆலோசனை மையம், தேசிய வேளாண் வளர்ச்சி திட்டத்தின் (NADP) கீழ் ரூ.11.76கோடிமதிப்பீட்டில்14மாவட்டங்களில் அமைக்கப்பட்டுள்ளன.
- விரிவாக்கத் தொடர் மேலாண்மைத் திட்டம், இரண்டாம் கட்டத்தில் நபார்டு வங்கி ஊரக உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதி மூலம் ரூ.102.47 கோடி மதிப்பீட்டில் சேலம், ஈரோடு, திருவள்ளூர், காஞ்சிபுரம், செங்கல்பட்டு, திருவண்ணாமலை,கடலூர்,விழுப்புரம்மற்றும் கரூர் ஆகிய 9மாவட்டங்களில் 20முதன்மை பதப்படுத்தும் மையங்கள் அமைக்கப்பட்டு சந்தை ஒருங்கிணைப்பு பங்குதாரர்களை (Market Integration Partner) தேர்வு செய்து செயல்பாட்டிற்கு கொண்டுவரும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

உழவர் சந்தை

- உழவர்சந்தைகளில்நாள்ஒன்றுக்குசராசரியாக ரூ.8.5 கோடி மதிப்புள்ள 2,300 மெட்ரிக் டன் காய், கனிகள் 8,000 விவசாயிகளால் 3 இலட்சம் நுகர்வோர்களுக்கு விற்பனை செய்யப்படுகின்றன.
- 100உழவர்சந்தைகள்ரூ.27.5கோடிமதிப்பீட்டில் நவீன வசதிகளுடன் புனரமைக்கப்பட்டு, 25உழவர்சந்தைகள்ரூ.8.18கோடிமதிப்பீட்டில் புனரமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.
- உழவர் சந்தைகளின் காய்கறி கழிவுகளை உரமாக்குவதற்கு 25 உழவர் சந்தைகளில் ரூ.2.75 கோடி மதிப்பீட்டில் உரம் தயாரிக்கும் இயந்திரங்கள் நிறுவப்பட்டு உரம் தயாரிக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.
- 14 புதிய உழவர் சந்தைகள் அமைப்பதற்கும், திருவாரூரில்உள்ளஒருஉழவர்சந்தையினை புதுப்பொலிவுடன்மறுகட்டமைப்புசெய்வதற்கும் ரூ.8.28கோடிஒதுக்கீடுசெய்யப்பட்டு,அவற்றுள் 14உழவர்சந்தைகள்திறக்கப்பட்டுசிறப்பாகச் செயல்பட்டுவருகின்றன.தஞ்சாவூர்மாவட்டம் பேராவூரணியில் உழவர் சந்தை அமைக்கும் பணிகள் முடிவுறும் தருவாயில் உள்ளன.
- திருச்சி, கோயம்புத்தூர், திருப்பூர், சேலம், செங்கல்பட்டு, கடலூர் ஆகிய ஆறு

மாவட்டங்களில் விவசாயிகள், நுகர்வோர்கள், படித்த இளைஞர்கள் ஆகியோர் பயனடையும் வகையில் 30 நடமாடும் காய்கனி விற்பனை வாகனங்கள் வாங்கத் திட்டமிடப்பட்டு (வாகனம் ஒன்றிற்கு மானியமாக ரூ.2 இலட்சம் வழங்கப்படுகிறது) இதுவரை 29 வாகனங்களுக்கு ரூ.51.50 இலட்சம் மானியமாக வழங்கப்பட்டுள்ளது.

- விவசாயிகள், நுகர்வோர் மற்றும் வியாபாரிகள் விளைபொருள்களின் தினசரி விலை விவரங்களை தெரிந்து கொள்ளும் வண்ணம், 50 உழவர் சந்தைகள் மற்றும் 50 ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் மின்னணு விலை பலகைகள் ரூ.2.30 கோடி மதிப்பீட்டில் நிறுவப்பட்டுள்ளன.
- உழவர் சந்தைகளில் விற்பனை செய்யப்படும் காய்கனிகளின் தரத்தினை உறுதி செய்திடும் பொருட்டு இந்திய உணவு பாதுகாப்பு மற்றும் தரநிர்ணய ஆணையத்தின் (FSSAI) தரமதிப்பீடு சான்று 50 உழவர் சந்தைகளுக்கு ரூ.25 இலட்சம் ஒதுக்கீட்டில் தரமதிப்பீட்டுச் சான்று (FSSAI) பெறப்பட்டுள்ளது.
- UPI போன்ற மின்னணு பரிவர்த்தனைகள் உழவர் சந்தைகளில் ஊக்குவிக்கப்படுகிறது.
- உழவர் சந்தைகளில் உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள்/தோட்டக்கலை துறைக்கு 50 கடைகள் ஒதுக்கீடு செய்யப்பட்டு, மதிப்புக் கூட்டப்பட்ட விளை பொருட்கள் மற்றும் தோட்டக்கலைத் துறையின் பொருட்கள் விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள்

- 397 உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களுக்கு பதிவு செய்தல், வணிகம் மேற்கொள்ள தொடக்கமானியம், ஆதார நிறுவனத்திற்கான ஊக்கத்தொகை, முதன்மை செயல் அலுவலருக்கான ஊதியம், அலுவலக தளவாடம் மற்றும் நிருவாக செலவினங்கள், விதைச்சுத்திகரிப்பு நிலையத்திற்கான மானியம் போன்றவை வழங்கப்பட்டுள்ளது.
- 375 உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களுக்கு ரூ.32.38 கோடி மூலதன உதவி, கடன் உத்தரவாதம் திட்டத்தின் கீழ், 47 உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களுக்கு ரூ.6.73 கோடி கடன் உத்தரவாதம் மற்றும் சலுகையுடன் கூடிய சுழல் நிதி திட்டத்தின் கீழ், 201 உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களுக்கு ரூ.26.55 கோடி நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.
- உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களின் பொருட்களை விற்பனை செய்ய மாநகராட்சிகளில் 50 சிறப்பு அங்காடிகள் ரூ.5 கோடி செலவில் ஏற்படுத்தப்பட்டு வருகிறது.
- 310 உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களுக்கு ரூ.2 கோடி செலவில் சிறந்த வேளாண் நடைமுறைகள், நிறுவன நிருவாகம், வணிக மேலாண்மை, கணக்கு பராமரிப்பு, ஏற்றுமதி சந்தை, போன்றவற்றில் பயிற்சி மற்றும் பட்டறிவுப் பயணங்கள் ஆகியவை தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம் மூலமாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது.
- உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களின் விளைபொருட்களை மதிப்புக்கூட்டி, சிப்பமிட்டு, முத்திரையிட்டு விற்பனை செய்வதற்கு ஏதுவாக Indian Institute of Packaging மூலமாக சிப்பமிடுதல் மற்றும் முத்திரையிடுதல் பயிற்சி 290 உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.
- உழவர் வேளாண் வணிகத் திருவிழா, சென்னை வர்த்தக மையத்தில் நடத்தப்பட்டு, 176 அரங்குகள் அமைக்கப்பட்டு உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களின் பொருட்கள் காட்சிப்படுத்தப்பட்டன. 1.83 இலட்சம் பொதுமக்கள் கலந்து கொண்டனர். ரூ.2.40 கோடி மதிப்பிலான வர்த்தகம் நடைபெற்றது.
- ஆன்லைன் வர்த்தகத்தை ஊக்குவிக்கும் விதமாக 183 உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள் ONDC தளத்திலும், GEM இணையத்தில் 89 உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களும், அப்பிடா இணையத்தில் 91 உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களும் இணைக்கப்பட்டுள்ளனர்.
- உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களுக்கான வாட்ஸ்ஆப் சேவை இணைப்பு எண் 7200818155 பெறப்பட்டு செயல்பட்டு வருகிறது.
- உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களின் விளைபொருட்களை விற்பனை செய்வதற்கு 13 உழவர் உற்பத்தியாளர் நிறுவன கூட்டமைப்புகள் (FPO Consortium) ஏற்படுத்தப்பட்டுள்ளன.

வேளாண் உட்கட்டமைப்பு நிதி (AIF)

- வேளாண் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த விவசாயிகள், உழவர் உற்பத்தியாளர்

நிறுவனங்கள், தொடக்க வேளாண்மை கூட்டுறவுவங்கிகள்மற்றும்வேளாண்தொழில் முனைவோர்களுக்கு இந்த கடன் உதவி திட்டத்தில் 3 சதவிகித வட்டி மானியத்தில் ரூ.2 கோடிவரை கடன் உத்தரவாதம் வழங்கப்பட்டு,6,854கடன்விண்ணப்பங்கள் மூலம்ரூ.1,950கோடிஒப்பளிக்கப்பட்டுள்ளது.

- தலா ரூ.2 கோடி மொத்த மதிப்பீட்டில், ரூ.1.60 கோடிவேளாண்உட்கட்டமைப்புநிதியுதவியுடன் 1,000மெ. டன்இ–நாம்பரிவர்த்தனைகூடங்கள் ஈரோடு விற்பனை குழுவின் கட்டுப்பாட்டில் இயங்கும் தாளவாடி, நம்பியூர் ஒழுங்கு முறை விற்பனை கூடங்களில் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.
- தலா ரூ.1.96 கோடி மொத்த மதிப்பீட்டில், ரூ.1.56 கோடி வேளாண் உட்கட்டமைப்பு நிதியுதவியுடன் 250 மெ. டன் குளிர் பதன கிடங்குகளின்கட்டுமானப்பணிகள்சித்தோடு, வெள்ளாங்கோயில்ஒழுங்குமுறைவிற்பனை கூடங்களிலும்,வெப்பிலிதுணைஒழுங்குமுறை விற்பனைகூடத்திலும்நடைபெற்றுவருகிறது.

விலை ஆதரவு திட்டம்

- 13,907 மெ.டன் பயறு வகைகள், 12,098 விவசாயிகளிடமிருந்தும்,1.47இலட்சம்மெ.டன் கொப்பரை 1,11,492 விவசாயிகளிடமிருந்தும் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது.

உணவுப் பூங்காக்கள் அமைத்தல்

- திருநெல்வேலிமாவட்டம்கங்கைகொண்டான் சிப்காட் தொழிற்பூங்காவில் சுமார் 50 ஏக்கர் பரப்பளவில்ரூ.77.02கோடிதிட்டமதிப்பீட்டில் பெரிய அளவிலான உணவுப் பூங்கா அமைக்கப்பட்டு,உணவுப்பதப்படுத்தும்தொழில் முனைவோர்கள்தொழிற்சாலைகள்அமைக்கும் பொருட்டுநிலம்குத்தகைக்குவிடும்பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.
- கடலூர், தேனி, திண்டுக்கல், கிருஷ்ணகிரி, திருவண்ணாமலை,சேலம்,மதுரைஆகியஏழு இடங்களில்,தலா10ஏக்கர்பரப்பளவில்வேளாண் பதப்படுத்தும்தொகுப்புகள்ஒன்றியஅரசின்நிதி உதவியுடன்ரூ.189.98கோடிதிட்டமதிப்பீட்டில் அமைக்கப்பட்டு நிலம் குத்தகைக்கு விடும் பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளன.

வேளாண் ஏற்றுமதி வளர்ச்சி

- சென்னை, கிண்டியில் உள்ள வேளாண் பசுமை பூங்கா வளாகத்தில் தேவையான உட்கட்டமைப்புகளுடன் கூடிய வேளாண் ஏற்றுமதி சேவை மையம் ஒரு கோடி ரூபாய் மதிப்பீட்டில்நிறுவப்பட்டுபயன்பாட்டில்உள்ளது.
- மாநிலத்தின்தனித்துவமானபொருட்களுக்கு புவிசார் குறியீடு பெறுவதற்கான நடவடிக்கைகள்மேற்கொள்ளப்பட்டுவருகிறது. 25விளைபொருட்களுக்கு புவிசார்குறியீடு பெற விண்ணப்பிக்கப்பட்டு சோழவந்தான் வெற்றிலைக்கு புவிசார் குறியீடு பெறப்பட்டுள்ளது.இந்தஆண்டில்(2024–2025) மேலும் 10 விளைப்பொருட்களுக்கு புவிசார் குறியீடுபெறநடவடிக்கைமேற்கொள்ளப்பட்டு வருகிறது.
- வேளாண்மை விற்பனை வாரிய பயிற்சி மையம் மூலம், ரூ.51.01 இலட்சம் மதிப்பில் 3,101 தொழில்நுட்ப அலுவலர்கள் மற்றும் விவசாயிகள் பயன்பெறும்வகையில் 112 பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளது.

வேளாண்மைப் பொறியியல் துறை

- வேளாண் இயந்திரமயமாக்குதலுக்கான துணை இயக்கத் திட்டத்தின்கீழ், ரூ.303.12 கோடிமானியத்தில்39,376விவசாயிகளுக்கு வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகள் வழங்கப்பட்டுள்ளன.
- கிராம அளவிலான 907 வேளாண் இயந்திர வாடகை மையங்கள் அமைக்க விவசாய குழுக்கள்மற்றும்தொடக்கவேளாண்கூட்டுறவு சங்கங்களுக்கு ரூ.70.79 கோடி மானியம் வழங்கப்பட்டுள்ளது.
- வட்டாரஅளவிலான106வேளாண்இயந்திரங்கள் வாடகை மையங்கள் அமைக்க விவசாயக் குழுக்கள், தொழில் முனைவோர் மற்றும் தொடக்கவேளாண்கூட்டுறவுசங்கங்களுக்கு ரூ.10.15 கோடி மானியம் வழங்கப்பட்டுள்ளது.
- கரும்புசாகுபடிக்கானவேளாண்இயந்திரங்களை குறைந்த வாடகைக்கு விவசாயிகளுக்கு வழங்கிடரூ.37.33கோடிமானியஉதவியுடன் 84 கரும்பு சாகுபடிக்கான வேளாண் இயந்திர வாடகை மையங்கள் அமைக்கப்பட்டுள்ளது.
- விவசாயிகள் தாங்கள் விளைவித்த வேளாண் விளைபொருட்களின்சேமிப்புகாலஅளவினை அதிகரித்து,அவற்றின்மதிப்பைக்கூட்டிட1,638 வேளாண்விளைபொருட்கள்மதிப்புக்கூட்டும்



இயந்திரங்கள் ரூ.6.99 கோடி மானியத்தில் தனிப்பட்டவிவசாயிகள்,உழவர்உற்பத்தியாளர் அமைப்புகள்,சுயஉதவிக்குழுக்கள்,தொழில் முனைவோர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

- உழவர் உற்பத்தியாளர் குழுக்கள் மற்றும் விவசாய குழுக்களுக்கு 37 வேளாண் விளைபொருட்களைமதிப்புக்கூட்டும்இயந்திர சேவைமையங்கள்ரூ.1.82கோடிமானியத்தில் அமைத்துத் தரப்பட்டுள்ளது.
- வேளாண்மையில்சூரியசக்திஉபயோகத்தினை பிரபலப்படுத்தும் வகையில் நீர்ப்பாசன வசதிக்காகவிவசாயிகளுக்குரூ.46.98கோடி மானியஉதவியில்சூரியசக்தியால்இயங்கும் 2,174பம்புசெட்டுகள்அமைத்துத்தரப்பட்டுள்ளது.
- விவசாயிகளுக்குரூ.5.64கோடிமானியத்தில் 279பாலிகார்பனேட்பசுமைக்குடில்போன்ற சூரிய கூடார உலர்த்திகள் அமைத்துத் தரப்பட்டுள்ளது.
- தமிழ்நாட்டின்பல்வேறுபகுதிகளில்விவசாய நிலங்களைசேதப்படுத்தும்விலங்குகளிடமிருந்து, தங்களது பயிர்களை பாதுகாத்திட 268 விவசாயிகளுக்குரூ.2.51கோடிமானியத்தில் சூரியமின்வேலிஅமைத்துத்தரப்பட்டுள்ளது.
- வேளாண்மைப் பொறியியல் துறையின் இயந்திரங்களைப் பாதுகாப்பாக வைத்திட வேளாண் இயந்திரங்களுக்கான 67 பாதுகாப்புக்கூடங்கள்ரூ.13.75கோடிசெலவில் அமைக்கப்பட்டுள்ளது.
- வேளாண்இயந்திரங்கள்பழுதுநீக்கும்பராமரிப்பு மையங்கள் 24 எண்கள், ரூ.95 இலட்சம் மானியத்தில் அமைத்துத் தரப்பட்டுள்ளது.
- தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்தின் நிதிஉதவியுடன்வேளாண்மைப்பொறியியல் துறையில் உள்ள 6 பணிமனைகளில் 34 பயிற்சிகள் 467 ஊரக இளைஞர்களுக்கு வேளாண்இயந்திரங்கள்மற்றும்சூரியசக்திபம்பு செட்டுகள்கையாளுதல்,பராமரித்தல்மற்றும் இயக்குதல் தொடர்பான திறன் மேம்பாட்டு பயிற்சி வழங்கப்பட்டுள்ளது.

கலைஞரின் அனைத்துக் கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டத்தின் கீழ்

- ★ ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை மூலம்செயல்படுத்தப்படும்அனைத்துக்கிராம அண்ணாமறுமலர்ச்சிதிட்டத்தின்கீழ்தெரிவு செய்யப்பட்ட கிராமப்
- ★ பஞ்சாயத்துகளில்வேளாண்மைப்பொறியியல் துறை மூலம் பாசன பரப்பு இல்லாத தேர்ந்தெடுக்கப்பட்டதரிசுநிலதொகுப்பிற்கு 811 ஆழ்துளைக் / குழாய்க் கிணறுகள், மின்/சூரியசக்திபம்புசெட்டுடன்ரூ.62.98 கோடி செலவில் உருவாக்கப்பட்டுள்ளது. மேலும், நிலநீர் ஆய்வில் அடிப்படையில் திறந்தவெளிக்கிணறுகள்உத்தேசிக்கப்பட்ட இடங்களில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறையின்மூலம்112திறந்தவெளிக்

கிணறுகள் அமைக்கப்பட்டு வேளாண்மைப் பொறியியல் துறையின் மூலம் மின்/சூரிய சக்தி பம்புசெட்டுகள் அமைக்க ரூ.3.71 கோடி செலவினம் மேற்கொள்ளப்படுகிறது.

★ தனிப்பட்ட ஆதிதிராவிட மற்றும் பழங்குடியின விவசாயிகளுக்கு 100 சதவீத மானியத்தில், 1,307 கிணறுகள் (ஆழ்துளை அல்லது குழாய்க் கிணறுகள்) மின்/சூரியசக்தி பம்புசெட்டுடன் ரூ.72.31 கோடி செலவில் அமைத்து கொடுக்கப்பட்டுள்ளது.

★ விவசாயிகளுக்கு 100 சதவீத மானியத்தில், 1,825 பண்ணைக்குட்டைகள் ரூ.20.53 கோடி செலவில் அமைத்துக்கொடுக்கப்பட்டுள்ளது.

★ ஊரகவளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறையின் கட்டுப்பாட்டில் உள்ள 5,922 சிறுபாசனக் குளங்கள், ஊரணிகள், குளங்கள், வரத்துக் கால்வாய்கள் மற்றும் இதர நீர் சேகரிப்பு கட்டுமானங்கள் ரூ.34.99 கோடி செலவில் தூர்வாரி மேம்படுத்தப்பட்டுள்ளது.

★ விசை உழுவை இயந்திரங்கள் (பவர்டில்லர்) 1,526 விவசாயிகளுக்கு ரூ.12.748 கோடி மானியத்தில் வழங்கப்பட்டுள்ளது.

❖ நீர்வடிப்பகுதிகளில் ஏற்படுத்தப்பட்டுள்ள நீர் சேகரிப்பு கட்டமைப்புகளுக்கு வரும் நீரோட்டத்தை அதிகரிக்க, நீர் சேகரிப்பு கட்டமைப்புகளைத் தூர்வாரி, ஆழப்படுத்தி அவற்றின் கொள்ளளவை அதிகரித்திட வேளாண்மைப் பொறியியல் துறையில் உள்ள இயந்திரங்கள் மூலம் 2,654 கட்டமைப்புகளில் ரூ.5.71 கோடி செலவில் தூர்வாரும் பணிகள் முடிக்கப்பட்டுள்ளது.

❖ நதிப்பள்ளத்தாக்கு திட்டத்தின் கீழ், கிருஷ்ணகிரி மற்றும் ஈரோடு மாவட்டங்களில் உள்ள தென்பெண்ணையாறு மற்றும் மேட்டூர் நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் ரூ.3.17 கோடி செலவில் மண் மற்றும் நீர்வளப் பாதுகாப்பு கட்டமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

❖ சிறப்புப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், ரூ.43.13 கோடி செலவில் நீலகிரி, கோயம்புத்தூர், ஈரோடு, திருப்பூர், தேனி, திண்டுக்கல், மதுரை, விருதுநகர், திருநெல்வேலி, தென்காசி மற்றும் கன்னியாகுமரி ஆகிய 11 மாவட்டங்களில் பல்வேறு வகையான 463 எண்கள் மண் மற்றும் நீர் வளப்பாதுகாப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

❖ மயிலாடுதுறை மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்களில் உள்ள 573 எக்டர் உவர் நிலங்கள் வேளாண் உற்பத்திக்கு பயன்படும் வகையில் ரூ.3.41 கோடி செலவில் சீரமைப்பு.

❖ பிரதம மந்திரி வேளாண் பாசனத் திட்டம் – ஒவ்வொரு வயலுக்கும் நீர் என்ற உபகூறின் கீழ், நிலத்தடி நீர்ப்பாசன வசதி சிறுகுறு, ஆதிதிராவிட விவசாயக் குழுக்களுக்கு 166 கிணறுகள் ரூ.8.92 கோடி மானியத்தில் அமைத்துத் தரப்பட்டுள்ளது.

❖ உலக வங்கி நிதி உதவியுடன் செயல்படுத்தப்படும் தமிழ்நாடு நீர்ப்பாசன நவீனமயமாக்குதல் திட்டத்தின் கீழ், ரூ.522.73 இலட்சம் மானியத்தில் 556 பண்ணைக்குட்டைகள் அமைக்கப்பட்டுள்ளது.

❖ காவிரி, வெண்ணாறு வடிநிலப் பகுதியில் உள்ள தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை மற்றும் கடலூர் ஆகிய 5 மாவட்டங்களில் இதுவரை 2,946.48 கிலோமீட்டர் நீளத்திற்கு "சி, "டி" பிரிவு வாய்க்கால்களில் தூர்வாரும் பணிகள் ரூ.9.97 கோடி செலவில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. நடப்பு 2024–2025 ஆம் ஆண்டில் 2,235 கிலோமீட்டர் நீளத்திற்கு ரூ.10 கோடி நிதி ஒதுக்கப்பட்டு தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை, திருச்சி, அரியலூர் மற்றும் கடலூர் ஆகிய 7 மாவட்டங்களில் இதுவரை 2641 கிலோமீட்டர் நீளத்திற்கு "சி, "டி" பிரிவு வாய்க்கால்களில் தூர்வாரும் பணிகள் ரூ.3.94 கோடி செலவில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

❖ விவசாயிகள் பாசன நீரை இறைத்திட உதவும் வகையில் 3,320 புதிய மின்மோட்டார் பம்புசெட்டுகள் ரூ.387.10 இலட்சம் மானியத்தில் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.

இ–வாடகை ஆன்லைன் செயலி

❖ வேளாண்மைப் பொறியியல் துறையின் இயந்திரங்கள் மற்றும் கருவிகளை விவசாயிகள் வேளாண்மைப் பொறியியல் துறை அலுவலகங்களுக்கு செல்லாமலே தங்கள் வீடு அல்லது வயல்களிலிருந்தே முன்பதிவு செய்து வாடகைக்கு பெற்றுக் கொள்வதற்காக

"இ–வாடகை கைப்பேசி செயலி" மாண்புமிகு தமிழ்நாடுமுதலமைச்சர்அவர்களால்08.01.2022 அன்றுஅறிமுகப்படுத்தப்பட்டது.விவசாயிகள் உழவன் செயலி மூலம் தமிழ்நாட்டின் எப்பகுதிகளிலிருந்தும் வேளாண்மைப் பொறியியல்துறையின்இயந்திரங்கள்மற்றும் கருவிகளைமுன்பதிவுசெய்துகொள்ளலாம். தற்பொழுது இச்செயலி விவசாயிகளால் மிகவும்சிறப்பாகபயன்படுத்தப்பட்டுவருகிறது. இந்தஇ–வாடகைகைப்பேசிசெயலிமூலமாக 08.01.2022முதல்01.08.2024வரை1,46,720 முன்பதிவுகள்செய்ததில்54,243விவசாயிகள் பயன்பெற்றுள்ளனர்.மேலும்,ரூ.96.33கோடி வாடகையாக பெறப்பட்டுள்ளது.



- விவசாயிகளுக்குமிகவும்பயனளிக்கக்கூடிய உழவுப் பணிகள் மற்றும் இதர பணிகளை மேற்கொள்வதற்கு 275 டிராக்டர்கள், 325 ரோட்டவேட்டர்கள்,385கொத்துக்கலப்பைகள், 120 கேஜ்வீல்கள், 32 நெல் அறுவடை இயந்திரங்கள் மற்றும் அவற்றை சுமந்து செல்வதற்காக15கனரகவாகனங்கள்,5கரும்பு அறுவடைசெய்யும்இயந்திரங்கள்,அவற்றிற்கான இன்பீல்டர்கள்,20நிலம்சமன்செய்யும்லேசர் கருவிகள்,15நிலநீர்ஆய்வுக்கருவிதொகுப்புகள் மற்றும்துறையில்உள்ள இயந்திரங்களையும், கருவிகளையும்பழுதுபார்த்திட3நடமாடும்பழுது நீக்கும்வாகனங்கள்வேளாண்மைப்பொறியியல் துறையில்ரூ.52.25கோடிசெலவில்கொள்முதல் செய்யப்பட்டுவிவசாயிகளின்பயன்பாட்டிற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டு, அரசு நிர்ணயித்த குறைந்தவாடகைக்குஇ–வாடகைசெயலியின் மூலம் வழங்கப்பட்டு வருகிறது.
- கடந்த2023ஆம்ஆண்டில்ஏற்பட்டமிக்ஜாம் புயலின்போது, வேளாண்மைப் பொறியியல் துறையின்பேரிடர்மேலாண்மைஇயந்திரங்கள் 10,465மணிநேரத்திற்கும்,2023ஆம்ஆண்டு டிசம்பர் மாதம் தூத்துக்குடி மாவட்டத்தில் கனமழையின்காரணமாக ஏற்பட்ட வெள்ளப் பெருக்கின்போது, 7,490 மணி நேரத்திற்கும் நிவாரணப் பணிகளில் ஈடுபடுத்தப்பட்டன. மேலும் தூத்துக்குடி, திருநெல்வேலி மற்றும் தென்காசிமாவட்டங்களில்கனமழையினால் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கின் காரணமாக வேளாண் நிலங்களில் படிந்துள்ள மணல் படிவங்களை அகற்றும் பணியில் இதுவரை 1,164எக்டர்நிலப்பரப்பளவிற்குமணல்திட்டுக்கள் அகற்றப்பட்டு,தொடர்ந்துபணிகள்நடைபெற்று வருகிறது. இதுவரை, இதன்மூலம் 2,069 விவசாயிகள் பயனடைந்துள்ளனர்.
- தனியாருக்குச் சொந்தமான நெல், மக்காச்சோளம், பயறு, தானிய வகைகள் அறுவடை செய்யும் 4,456 இயந்திரங்களின் உரிமையாளர்கள்,தனியாருக்கு சொந்தமான 45,849டிராக்டர்உரிமையாளர்கள்மற்றும்4,322 மெக்கானிக்குகளின்பெயர்,அலைபேசிஎண் போன்றவிபரங்கள்வட்டாரம்மற்றும்மாவட்ட வாரியாக உழவர் செயலியில் வேளாண்மைப் பொறியியல் துறையின் மூலம் பதிவேற்றம் செய்யப்பட்டு,விவசாயிகள்நேரடியாகதொடர்பு கொண்டு பயன்பெறலாம்.
- நவீன வேளாண் இயந்திரங்கள் மற்றும் வேளாண்பொறியியல்தொழில்நுட்பங்கள்பற்றிய 118செயல்விளக்கங்கள்விவசாயிகளுக்காக நடத்தப்பட்டுள்ளது.
- இதுவரை, 2,125 ஆதி திராவிட சிறு, குறு விவசாயிகளுக்கு ரூ.14.45 கோடியும், 248 பழங்குடியின சிறு, குறு விவசாயிகளுக்கு ரூ.1.506கோடியும்ஆகமொத்தம்2,373ஆதி திராவிடசிறு,குறுவிவசாயிகளுக்குரூ.15.956 கோடி,20சதவிகிதகூடுதல்மானியஉதவியாக வழங்கப்பட்டுள்ளது.

விதைச்சான்றளிப்பு மற்றும் உயிர்மச்சான்றளிப்புத்துறை

- விதைப்பண்ணைகள் 2.15 இலட்சம் எக்டர் பரப்பளவில், பல்வேறு பயிர்களில் பதிவு செய்யப்பட்டு,4.36இலட்சம்மெட்ரிக்டன்அளவு விதைகளுக்குசான்றளிப்புசெய்யப்பட்டுள்ளது.
- விதைவிற்பனைமையங்களில்2.67இலட்சம் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு, விதைத் தரங்களை உறுதி செய்திட 1.95 இலட்சம் விதை மாதிரிகள் சேகரிக்கப்பட்டு பகுப்பாய்வு மேற்கொள்ளப்பட்டு,ஆய்வுகளின்போது,தரம் குறைந்த விதை மற்றும் விதை விதிகளை மீறிய செயல்கள் கண்டறியப்பட்டு 7,568 மெட்ரிக்டன்விதைகளுக்குவிற்பனைதடை செய்யப்பட்டுள்ளது.
- தரமானவிதைகள்விவசாயிகளுக்குகிடைப்பதை உறுதிசெய்வதற்காகமாநிலத்தில்செயல்பட்டு வரும் 34 அறிவிக்கை செய்யப்பட்ட விதைப் பரிசோதனைநிலையங்களில் 3.72 இலட்சம் விதைமாதிரிகளின்தரங்கள்பரிசோதிக்கப்பட்டு முடிவுகள் அறிவிக்கப்பட்டுள்ளது.
- விதை உற்பத்தி, விதைச்சான்று மற்றும் விதைச்சட்ட அமலாக்கத்தில் உள்ள நவீன உத்திகள்குறித்து1,45,201நபர்களுக்குபயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.
- 1,243தனிவிவசாயிகளும்,3,330விவசாயிகளைக் கொண்ட 69குழுக்களும்இணைந்து24,776 ஏக்கர் நிலப்பரப்பு உயிர்மச் சான்றிதழின்கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.
- விதைச்சான்றளிப்புமற்றும்உயிர்ச்சான்றளிப்பு துறையில்மின்ஆளுமையைசெயல்படுத்தும் பொருட்டு ரூ.40 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு திட்டம் செயல்படுத்தப்பட்டது.
- திருப்பூர்மாவட்டத்தில்புதியவிதைபரிசோதனை நிலையம் செயல்பட்டு வருகிறது.
- தலைமையகம் சென்னைக்கு மாற்றப்பட்டு செயல்பட்டுவருகிறது .
- ரூ.13.40கோடிநிதிஒதுக்கீட்டில்ஒருங்கிணைந்த விதைச்சான்றளிப்புமற்றும்உயிர்மச்சான்றளிப்பு வளாகம் திருப்பூர், திருச்சி, திருநெல்வேலி, நாகப்பட்டினம்மற்றும்ஈரோடுமாவட்டங்களில் அமைக்க அரசாணை பெறப்பட்டு, தற்போது திருப்பூர்,திருநெல்வேலி,நாகப்பட்டினம்மற்றும் ஈரோடு மாவட்டங்களில்கட்டுமானப்பணிகள் நடைபெற்றுவருகின்றது.திருச்சிமாவட்டத்தில் கட்டுமானப்பணிகள்நிறைவுற்று,12.07.2024 அன்று திறப்பு விழா நடத்தப்பட்டது.
- பங்கேற்புஉத்திரவாதசான்றளிப்புதிட்டம்மூலம் எவ்விதகட்டணமின்றி12,547விவசாயிகளைக் கொண்ட 1,069 விவசாயக் குழுக்கள் 99,061 ஏக்கர்உயிர்மசான்றுபெறபதிவுசெய்யப்பட்டு நடப்பாண்டில்செயல்படுத்தப்பட்டுவருகின்றது.
- உயிர்ம விளைபொருட்களின் தரத்தை உறுதிப்படுத்திடமாநிலஅரசுநிதிஉதவியுடன்100 சதவிதமானியத்தில்265விவசாயிகளிடமிருந்து 265 மாதிரிகள் பெறப்பட்டு பூச்சிக்கொல்லி எஞ்சிய நஞ்சு பகுப்பாய்வுத் திட்டம் ரூ.12.50 இலட்சத்தில்முழுமையாகநிறைவேற்றப்பட்டது.
- உயிர்ம விளைபொருட்களின் தரத்தை உறுதிப்படுத்திட 2023-2024ஆம் ஆண்டில் மாநில அரசு உதவியுடன் 50 சதவிகித மானியத்தில் பூச்சிக்கொல்லி எஞ்சிய நஞ்சு பகுப்பாய்வுத்திட்டம்374விவசாயிகளிடமிருந்து 374 மாதிரிகள் பெறப்பட்டு பூச்சிக்கொல்லி எஞ்சியநஞ்சுபகுப்பாய்வுத்திட்டம்ரூ.20இலட்சம் ஒதுக்கீட்டில்,ரூ.19.24இலட்சம்செலவினம் செய்யப்பட்டு திட்டம் நிறைவேற்றப்பட்டது.
- விதைச் சான்று மற்றும் அங்ககச் சான்று துறையின்பெயரைவிதைச்சான்றளிப்புமற்றும் உயிர்மச் சான்றளிப்பு என பெயர் மாற்றப்பட்டு அரசாணை பெறப்பட்டது.

தமிழ்நாடு நீர்வடிப்பகுதி மேம்பாட்டு முகமை

- புதிய நீர்வடிப்பகுதி மேம்பாட்டு திட்டமான நீர்வடிப்பகுதி மேம்பாடு – பிரதம மந்திரியின் விவசாய பாசனத்திட்டம் 2.0 தமிழ்நாட்டில் பெரம்பலூர், தூத்துக்குடி, கிருஷ்ணகிரி, இராமநாதபுரம், திண்டுக்கல், தருமபுரி, விருதுநகர் ஆகியஏழுமாவட்டங்களில்கடந்த மூன்றாண்டுகளில் ஒன்றிய மற்றும் மாநில அரசுகளின் 60:40 நிதி பங்கீட்டு முறையில் மொத்தம் ரூ.283.76 கோடி மதிப்பீட்டில் 1.30 இலட்சம்எக்டர்பரப்பில்275நீர்வடிப்பகுதிகளில் செயல்படுத்தப்பட்டு, ரூ.222.68 கோடி விடுவிக்கப்பட்டுதிட்டம்செயல்படுத்தப்பட்டு வருகிறது.



- நுழைவுக்கட்டப் பணிகள், இயற்கைவள மேம்பாடு, உற்பத்திப் பணிகள், வாழ்வாதாரப் பணிகள், திறன்மேம்பாட்டுப் பயிற்சி ஆகிய திட்டக்கூறுகளின்கீழ்,மொத்தம்50,090பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.
- தருமபுரி மாவட்டத்தில் உள்ள சிட்டிலிங் மற்றும்பிக்கிலிமலைப்பகுதிகளில்சுனைநீர் வடிப்பகுதிகளைமேம்படுத்தரூ.14கோடிமதிப்பில் ஒன்றிய மற்றும் மாநில அரசுகளின் (60:40) பங்களிப்பில்சுனைநீர்வடிப்பகுதிமேம்பாட்டுத் திட்டம் ஒப்பளிக்கப்பட்டு நுழைவுக்கட்டப் பணிகள் நடைபெற்று வருகிறது.

தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம்.

- 50ஆவது நிறுவன நாள் மற்றும் பொன்விழா ஆண்டு துவக்க விழா.
- 4,717 இளங்கலை மாணவர்களுக்கும், 2,027 முதுகலைமாணவர்களுக்கும்,744முனைவர் பட்டதாரிகளுக்கும்,668வேளாண்மைமற்றும் தோட்டக்கலைபட்டயப்படிப்புமாணவர்களுக்கும் விவசாயம்மற்றும்விவசாயம்சார்ந்ததுறைகளில் கல்வியை சிறப்பாக வழங்கியுள்ளது.
- 164 இளங்கலை மற்றும் முதுகலை பட்டதாரி மாணவர்கள் தங்கள் உயர் படிப்புகளைப் படிக்க சர்வதேச ஆய்வகங்கள் மற்றும் நிறுவனங்களுக்கு அனுப்பப்பட்டனர். 40 ஆசிரியர்கள்பல்வேறுதுறைகளின்கீழ்திறன் மேம்பாட்டிற்காக 10 வளர்ந்த நாடுகளுக்குப் பயணம் செய்தனர்.
- 1,437முதுகலைப்பட்டதாரிமற்றும்முனைவர் பட்டப்படிப்புமாணவர்களுக்கு வேளாண்மை மற்றும்அதைச்சார்ந்ததுறைகளில்ஆராய்ச்சி மேற்கொள்வதற்காக உதவித்தொகை வழங்கப்பட்டுள்ளது.
- மூவலூர்இராமாமிர்தம்அம்மையார்உயர்கல்வி உறுதித் திட்டத்தில், 1,300க்கும் மேற்பட்ட மாணவிகள்7.5சதவிகிதம்இடஒதுக்கீட்டின் கீழ்1,031மாணவர்கள்தமிழ்நாடுவேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் சேர்க்கப்பட்டு பயன் பெற்றுள்ளனர்.
- கரூர், நாகப்பட்டினம், சிவகங்கை மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களில் முறையே ரூ.40 கோடி மதிப்பீட்டில் மூன்று புதிய அரசுவேளாண்மைக் கல்லூரிகளும் ஒரு தோட்டக்கலைக் கல்லூரியும் 2021இல் நிறுவப்பட்டன.
- தமிழ்வழிகல்விதிட்டத்தின்கீழ்வேளாண்மை மற்றும்தோட்டக்கலைபட்டப்படிப்புகள்2021இல் தமிழ்நாடுவேளாண்மைப்பல்கலைக்கழகத்தில் தொடங்கப்பட்டது.193மாணவர்கள்தமிழ்வழியில் வேளாண்மை,தோட்டக்கலைபடிப்புபயின்று வருகின்றனர்.
- திருச்சிமாவட்டம்குமுளூரில்உள்ளவேளாண் பொறியியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தில் 2021ஆம் ஆண்டில், இரண்டு ஆண்டு வேளாண் பொறியியல் பட்டயப் படிப்பிற்கானபண்ணைஇயந்திரமயமாக்கலில் மனிதவளமேம்பாட்டுக்கானநிதிச்செலவுஒரு கோடி ரூபாய் அளிக்கப்பட்டது.

ஆராய்ச்சி

- 51 புதிய பயிர் வகைகள், 21 மேலாண்மை தொழில்நுட்பங்கள் மற்றும் 11 பண்ணை செயலாக்கங்களை வெளியிட்டுள்ளது.
- ஈரோடு மாவட்டம், பவானிசாகரில் உள்ள வேளாண் ஆராய்ச்சி மையத்தில் ரூ.2 கோடி மதிப்பீட்டில் புதிய மஞ்சள் ஆராய்ச்சி மையம் நிறுவப்பட்டது.
- இயற்கை வேளாண்மை ஆராய்ச்சியை மேம்படுத்தும் வகையில், 2021ஆம் ஆண்டு நம்மாழ்வார் இயற்கை வேளாண்மை ஆராய்ச்சி மையம் ரூ.3 கோடி செலவில் மேம்படுத்தப்பட்டுள்ளது.
- தூத்துக்குடிமாவட்டம்,கிள்ளிகுளத்தில்உள்ள வ.உ.சி. வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தில் பனையக் குட்டை இரகங்களின்ஆராய்ச்சி,மேம்பாடுமற்றும்மதிப்பு கூட்டப்பட்ட பொருட்களின் வளர்ச்சிக்காக புதிய பனை ஆராய்ச்சி நிலையம் அமைக்க ரூ.15 கோடி மதிப்பீட்டில் திட்டம்.
- கிள்ளிகுளம்வ.உ.சி,வேளாண்மைக்கல்லூரி மற்றும்ஆராய்ச்சிநிறுவனத்தில்புதியவாழை ஆராய்ச்சிநிலையம்ரூ.15கோடிமதிப்பீட்டில் நிறுவப்பட்டுள்ளது.
- செட்டிநாட்டில்மானாவாரிவேளாண்ஆராய்ச்சி நிலையத்தில்மானாவாரிப்பயிர்களின்ஆராய்ச்சி ரூ.50இலட்சம்செலவில்மேம்படுத்தப்பட்டுள்ளது.
- வேளாண்மையில் தொலையுணர்வு தொழில்நுட்பம்மூலம்,இயற்கைவளங்களை ஆராய்ந்து பயிர், மண் மற்றும் நீர் குறித்ததகவல்கள் ரூ.72 இலட்சம் செலவில் கணினிமயமாக்கப்பட்டுள்ளது.
- பழஉற்பத்தியைஅதிகரிப்பதற்கும்,சேதத்தைக் குறைப்பதற்கும் நானோ தொழில்நுட்பங்கள் ரூ.2கோடிசெலவில்மேற்கொள்ளப்பட்டுள்ளது.
- ரூ.2கோடிசெலவில்தமிழ்நாடுவேளாண்மைப் பல்கலைக்கழகத்தில்டிஜிட்டல்விவசாயத்தை ஊக்குவிக்கவும், உற்பத்தித் திறனை மேம்படுத்துவதற்காகவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.
- தமிழ்நாடு பாதுகாக்கப்பட்ட வேளாண்மை மண்டல மேம்பாட்டின்கீழ் தமிழ்நாட்டில் களர் மற்றும் உவர் நிலங்களுக்கு ஏற்ற பயிர் இரகங்களைக்கண்டறிந்து,மேம்படுத்தப்பட்ட வேளாண் தொழில்நுட்பங்கள் ரூ.5 இலட்சம் செலவில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.
- காவிரிப்படுகைமண்டலத்தில்சிக்கனமாக நீர் உபயோகித்தல்மற்றும்சிறந்தபயிர்சுழற்சிகளின் மூலம்உற்பத்தித்திறனைமேம்படுத்துவதற்கான ஆராய்ச்சித்திட்டங்கள்ரூ.5இலட்சம்செலவில் தமிழ்நாடுவேளாண்மைப்பல்கலைக்கழகத்தால் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

விரிவாக்கம்

- 24மாவட்டங்களில்தமிழ்நாடுவேளாண்மைப் பல்கலைக்கழகத்தின்கீழ் செயல்படும் ஆராய்ச்சிநிலையங்கள்மற்றும்கல்லூரிகளில் பல்கலைக்கழக பயிற்சி மையங்கள் ரூ.50 இலட்சம் மதிப்பீட்டில் நிறுவப்பட்டுள்ளது.
- வேளாண்தொழில்நுட்பஇணையதளம்மற்றும் சமூகஊடகங்கள்ரூ.40இலட்சம்மதிப்பீட்டில் மறுசீரமைக்கப்பட்டுள்ளது.
- வேளாண்மை அறிவியல் நிலையங்களில் ஒற்றை சாளர விற்பனை மையங்கள் ரூ.25 இலட்சம் மதிப்பீட்டில் நிறுவப்பட்டுள்ளது.
- ஆளில்லா வானூர்திக் கழகம் UAVC சேவையைப் பயன்படுத்தி, வேளாண்மை அறிவியல் நிலையங்களில் ATMA மூலம் தமிழ்நாடுவேளாண்மைப்பல்கலைக்கழகத்தால் உருவாக்கப்பட்டு நானோ தயாரிப்புகளை பிரபலப்படுத்துதல் மற்றும் செயல்விளக்கம் செய்தல்ஆகியவைமேற்கொள்ளப்பட்டுள்ளன.
- உழவர்உற்பத்தியாளர்அமைப்புகளின்(FPOs) முக்கியத்துவத்தையும், சிறு மற்றும் குறு விவசாயிகளை மேம்படுத்தவும் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தால்–(TFL) ஒருஅலகு–ஒருFPOதிட்டம்தொடங்கப்பட்டு. தமிழ்நாடுவேளாண்மைப்பல்கலைக்கழகத்துடன் 120 FPO க்கள் இணைக்கப்பட்டுள்ளன.
- தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் மாநிலத்தில் விரிவாக்க சேவைகளை வலுப்படுத்துவதற்கு, மண்டல அளவில் 389 வேளாண் விஞ்ஞானிகள் நியமனம்.

வேளாண் வணிக மேம்பாட்டு மையம்

- வேளாண் வணிகத்தில் மாணவர்களை தொழில் முனைவோராக ஊக்குவிப்பதற்கு நடவடிக்கைகள் ரூ.130 கோடி செலவில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

- விவசாயம்மற்றும்அதைச்சார்ந்ததுறைகளில் மாணவர்தொழில்முனைவோர்களைஉருவாக்க 49 தொழில் முனைவோர் திறன் மேம்பாட்டுப் பாடங்கள் தொடங்கப்பட்டு 54 தொழில் முனைவோர்கள் உருவாக்கம்.

திறந்தவெளி மற்றும் தொலைதூரக் கல்வி

- தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் வழங்கும் 63 பட்டய / சான்றிதழ் படிப்புகள் மூலம், திறந்தவெளி மற்றும் தொலைதூரக் கற்றல் திட்டத்தின் வாயிலாக 1,134 பல்வேறு துறைகளைச் சார்ந்த பங்குதாரர்களும் விவசாயத்தில் பட்டம் பெற்றுள்ளனர்.

வசதிகள் மற்றும் உள்கட்டமைப்பு

- தமிழ்நாடுவேளாண்மைப்பல்கலைக்கழகத்தின் ஆராய்ச்சிமற்றும்மேம்பாட்டுநடவடிக்கைகள், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக வைப்பு நிதியான ரூ.100 கோடி வாயிலாக மேற்கொள்ளப்பட்டுள்ளது.

- கிள்ளிகுளத்தில் குறு விவசாயிகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்காக, பனைமரம் பற்றிய புதுமையான ஆராய்ச்சி மற்றும்மதிப்பு கூட்டல் திட்டம் 2021ஆம் ஆண்டில், ரூ.50 இலட்சம் செலவில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

- தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் வெளியிட்ட புதிய இரகங்களை விவசாயிகளிடையே பிரபலப்படுத்தும் நடவடிக்கைகள்ரூ.5.57கோடிநிதிஒதுக்கீட்டில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

- புதியதாகவெளியிடப்பட்டஇரகங்களின்தரமான விதை உற்பத்தி தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தால் ரூ.1 கோடி செலவில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

- தமிழ்நாடுவேளாண்மைப்பல்கலைக்கழகத்தில் உள்ள பூச்சி அருங்காட்சியகத்திற்கு வேளாண்மை முக்கியத்துவம் வாய்ந்த பூச்சிகளைக் கண்டறிந்து டிஜிட்டல் மயமாக்கும் திட்டம் ரூ.3 கோடி செலவில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

- தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக தாவரவியல் பூங்காவில் சிறப்பு வகைத் தோட்டங்களைஉருவாக்குதல்,பலப்படுத்துதல் மற்றும்நிறுவுதல்போன்றவைரூ.5கோடிநிதி ஒதுக்கீட்டில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

தரவரிசை

- 2023ஆம் ஆண்டிற்கான தேசிய நிறுவன தரவரிசை கட்டமைப்பின் (NIRF) பட்டியலில் 2ஆவது சிறந்த மாநில வேளாண் பல்கலைக்கழகமாகவும், இந்தியாவில் 5ஆவது சிறந்த நிறுவனமாகவும் தரவரிசைப்படுத்தப்பட்டுள்ளது.

- இந்தியா டுடே – எம்.டி.ஆர்.ஏவின் கல்வி, ஆராய்ச்சி, உள்கட்டமைப்பு, தலைமைத்துவ மேம்பாடு, தொழில் முன்னேற்றம் மற்றும் வேலை வாய்ப்பு குறித்த ஆய்வின்படி, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் வேளாண்பல்கலைக்கழகங்களின்பட்டியலில் முதலிடத்தில் உள்ளது.

- 2023இல்புகழ்பெற்ற'கியூஎஸ்வேர்ல்ட்ராக்கிங் சிஸ்டம்' பட்டியலிடப்பட்ட தரவரிசையில் ஆசியப்பல்கலைக்கழகங்களில்ஒட்டுமொத்த தரவரிசைப்பட்டியலில்301–350இடத்தையும் தெற்கு ஆசியப் பல்கலைக்கழகங்களில் 73ஆவது இடத்தையும் பிடித்துள்ளது.

- 2023இல்,உலகப்பல்கலைக்கழகதரவரிசைப் பட்டியலில் ஆசியப் பல்கலைக்கழகங்களில் 601 மற்றும் உலகப் பல்கலைக்கழகங்களில் 1,501 இடத்தைப் பெற்றுள்ளது.

- 2023ஆம் ஆண்டிற்கான தொழில்துறை பயன்பாட்டில்புதுமைகளைப்புகுத்தியமைக்காக உலகப் பல்கலைக்கழக தரவரிசையில் 51–100 இடத்தைப் பெற்றுள்ளது.

விருதுகள்

- 2021ஆம் ஆண்டில் கற்பித்தல், ஆராய்ச்சி மற்றும்விரிவாக்கநடவடிக்கைகளில்சிறந்து விளங்கியமைக்காக இந்திய வேளாண் ஆராய்ச்சிக்கழகம்,புதுதில்லியில்'சர்தார்படேல் சிறந்தICARநிறுவனம்விருதுவழங்கப்பட்டது.

- 2021ஆம்ஆண்டில்புதுதில்லியில்உள்ளஇந்திய வேளாண்ஆராய்ச்சிக்கழகத்தால்பசுமைமற்றும் தூய்மையான வளாக விருது வழங்கப்பட்டது.

- புது தில்லியில் உள்ள இந்திய வேளாண் ஆராய்ச்சிக்கழகத்தால்(ICAR)தோட்டக்கலை

மற்றும் வனத்துறைக்கான மூதறிவியல் பெல்லோஷிப் விருது வழங்கப்பட்டது.

- 2021ஆம் ஆண்டில் புது தில்லியில் உள்ள இந்திய வேளாண் ஆராய்ச்சி கவுன்சிலால் (ICAR) வேளாண் பொறியியலில் மூதறிவியல் பெல்லோஷிப் விருது வழங்கப்பட்டது.
- 2021ஆம் ஆண்டில், அகில இந்திய வேளாண்மை மாணவர் சங்கத்தால் ஆண்டுதோறும் 6,000க்கும் மேற்பட்ட மாணவர்களுக்கு வேளாண்மை மற்றும் அதனுடன் தொடர்புடைய துறைகளில் கல்வி அளித்ததற்கும், மாநிலத்தின் உணவு தானிய உற்பத்தியை அதிகரிக்க 850 இரகங்கள் மற்றும் 1,500 தொழில்நுட்பங்களை உருவாக்கியதற்கும் 'சிறந்த நிறுவன விருது' வழங்கப்பட்டது.
- 2021ஆம் ஆண்டில், இந்திய வர்த்தக மற்றும் தொழில்துறை கூட்டமைப்பு (FICCI) தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்திற்கு 'ஆண்டின் சிறந்த பல்கலைக்கழகம் (30 ஆண்டுகளுக்கும் மேலாக) விருது' வழங்கப்பட்டது.
- 2022ஆம் ஆண்டில் இந்திய அரசு – தோட்டக்கலையின் ஒருங்கிணைந்த மேம்பாட்டுக்கானத் திட்டத்தை (MIDH) வெற்றிகரமாக செயல்படுத்தியதற்காக 'சிறந்த செயல்திறன் கொண்ட பல்கலைக்கழக விருது' வழங்கப்பட்டது.
- 2022ஆம் ஆண்டிற்கான 'விவசாயத்துறையில் நீர் பயன்பாட்டுத் திறனில் சிறந்து விளங்குதல்' TERI – IWA – UNDP நீர் நிலைத்தன்மை விருது நிறுவனத்தால் வழங்கப்பட்டது.
- 2022ஆம் ஆண்டில் திண்டுக்கல் மாவட்ட நிருவாகத்துடன் இணைந்து ஒரு குழு ஒரே இடத்தில் 4 மணி நேரத்தில் 6.03 இலட்சம் மரங்களை வெற்றிகரமாக நட்டு முடித்தமைக்காக எலைட் உலக சாதனை புத்தகத்தில் இடம் பிடித்துள்ளது.
- 2023ஆம் ஆண்டில், தமிழ்நாட்டில் மக்காச்சோள வீழ்ச்சி படைப் புழுவுக்கான ஒருங்கிணைந்த பூச்சி மேலாண்மை தொகுதி, கந்தகம் மற்றும் நுண்ணூட்டச்சத்துக்கள் மீதான மண் வளத்தை வரைபடமாக்குதல் போன்ற சிறந்த ஆராய்ச்சித் திட்டங்களை வெற்றிகரமாக செயல்படுத்தியதற்காக தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் அங்கீகரிக்கப்பட்டு 'SKOCH ஆர்டர் ஆஃப் மெரிட்' விருது வழங்கப்பட்டது.
- 2023ஆம் ஆண்டில், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் தொழில்முனைவோர் கல்வியை ஊக்குவித்தமைக்காக 'சிறந்த தென்னிந்திய நிறுவனம்' என்ற விருதை, குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களின் வர்த்தக அமைச்சகத்தால் வழங்கப்பட்டது.
- திருவண்ணாமலை மாவட்டத்தில் அத்தியந்தலில் இயங்கும் சிறுதானிய மகத்துவ மையம் 2023ஆம் ஆண்டிற்கான இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் கழகத்தால் வழங்கப்படும் சிறந்த சிறுதானிய மையத்திற்கான விருதினைப் பெற்றுள்ளது .
- KVK விருதுநகர் மாவட்டத்தில் இயங்கும் வேளாண்மை அறிவியல் நிலையம், 2023ஆம் ஆண்டில் அதிக கட்டுரைகளை வெளியிட்டதற்காகவும், அதிகமான விவசாயிகளை தரவு தரத்தில் கொண்டிருப்பதற்காகவும், அதிக அளவு விதைகளை விதை மையம் வாயிலாக விநியோகம் செய்ததற்காகவும், இந்திய வேளாண்மை ஆராய்ச்சி கழகத்தின் வேளாண் தொழில்நுட்ப பயன்பாட்டு ஆராய்ச்சி நிறுவனத்தால் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளது.
- நுண்ணிய இரண்டாம் நிலை ஊட்டச்சத்துக்கள் மற்றும் மாசுபடுத்தும் கூறுகள் குறித்த அகில இந்திய ஒருங்கிணைந்த ஆராய்ச்சித் திட்டம், 2023ஆம் ஆண்டுக்கான இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகத்தால் வழங்கப்படும் சிறந்த நுண்ணூட்டச் சத்து மையத்திற்கான விருதினைப் பெற்றுள்ளது.
- ஏத்தாப்பூரில் உள்ள மரவள்ளிக்கிழங்கு மற்றும் ஆமணக்கு ஆராய்ச்சி மையம், இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகத்தால் 2023ஆம் ஆண்டிற்கான சிறந்த அகில இந்திய ஒருங்கிணைந்த ஆராய்ச்சி திட்ட மையம் விருதைப் பெற்றுள்ளது.

❖ ❖ ❖

வருவாய், மாவட்ட வருவாய் பணியமைப்பு, துணை ஆட்சியர்கள், பேரிடர் மேலாண்மை



திரு. **கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன்** அவர்கள்
மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர்
மேலாண்மைத்துறை அமைச்சர்

வருவாய் நிருவாக ஆணையரகம்

சமூகப் பாதுகாப்புத் திட்டம்

- சமூகப்பாதுகாப்புஓய்வூதியத்திட்டங்களின்கீழ்தகுதியுள்ள7,76,172பயனாளிகளுக்கு புதியதாக ஓய்வூதிய ஆணைகள் வழங்கப்பட்டுள்ளது.
- மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பின்படி, வருவாய்த்துறை மூலம் ஓய்வூதியம் பெற்றுவரும் கண் பார்வையற்ற மாற்றுத்திறனாளிகள் உள்ளிட்ட மாற்றுத்திறனாளிபயனாளிகளுக்குரூ.1,000லிருந்துரூ.1,500ஆகஅரசால்உயர்த்தி வழங்கப்பட்டுள்ளது.
- மேலும்,இதரஓய்வூதியத்திட்டங்களின்(மாற்றுத்திறனாளிகள்ஓய்வூதியத்திட்டங்கள் தவிர்த்து)கீழ்பயன்பெறும்பயனாளிகளுக்கானமாதாந்திரஓய்வூதியமானதுரூ.1,200 ஆக உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது.
- சமூகப்பாதுகாப்புஓய்வூதியத்திட்டங்களின்கீழ்பயனாளிகளின்எண்ணிக்கையை உயர்த்தி, 1,74,073 நபர்கள் கூடுதலாக பயன் பெறும் வகையில் ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளது.

புதியதாக மாவட்டங்கள் / வருவாய் கோட்டங்கள்/ வருவாய் வட்டங்கள் / குறுவட்டங்கள் / வருவாய் கிராமங்கள் உருவாக்குதல் / சீரமைத்தல்

புதிய வட்டங்கள்

- திருவாரூர் மாவட்டம் திருத்துறைப்பூண்டி வருவாய் வட்டத்தினைப் பிரித்து முத்துப்பேட்டையை தலைமையிடமாகக் கொண்டுபுதியமுத்துப்பேட்டைவருவாய்வட்டம் உருவாக்கம்.
- கள்ளக்குறிச்சி மாவட்டம் சங்கராபுரம் மற்றும் திருக்கோவிலூர் வருவாய் வட்டங்களை சீரமைத்துவாணாபுரத்தைதலைமையிடமாகக் கொண்டு ரூ.7.56 கோடி செலவில் புதிய வாணாபுரம் வட்டம் உருவாக்கப்பட்டது. இதனால்அப்பகுதியைசார்ந்தபொதுமக்களுக்கு வருவாய்த் துறை சார்ந்த சேவைகள் மற்றும் அரசின் நலத்திட்டங்கள் எளிதில் சென்றடைகிறது.
- 2023–2024நிதியாண்டில்தஞ்சாவூர்மாவட்டம் ஒரத்தநாடு மற்றும்பட்டுக்கோட்டை வருவாய் வட்டங்களை சீரமைத்து திருவோணத்தை தலைமையிடமாகக் கொண்டு திருவோணம் வருவாய் வட்டம் உருவாக்கப்பட்டுள்ளது.
- 2023–2024 நிதியாண்டில் விழுப்புரம் மாவட்டம்,திருவெண்ணெய்நல்லூர்வட்டம், சித்தலிங்கமடம்குறுவட்டம்,சித்தலிங்கமடம் (மேற்கு) வருவாய் கிராமத்தினை சீரமைத்து T.எடப்பாளையம்எனும்புதியவருவாய்கிராமம் உருவாக்கப்பட்டுள்ளது.

வருவாய்த் துறை அரசு அலுவலர்களுக்கு புதிய வாகனங்கள் வழங்குதல்

- வருவாய்த் துறையில் வட்டாட்சியர்கள் முதல் உயர் அலுவலர்கள் வரையிலான அலுவலர்களால்பயன்படுத்தப்பட்டுவந்தகழிவு செய்யப்படவேண்டியவாகனங்களுக்குபதிலாக 114புதியவாகனங்கள் கொள்முதல் செய்யரூ. 10 கோடியானது நிருவாக அனுமதியளித்து ஆணை.

வருவாய்த் துறை (கட்டடங்கள்)

- ஒருங்கிணைந்தநாகப்பட்டினம்மாவட்டத்தை இரண்டாக பிரித்து புதிதாக உருவாக்கப்பட்ட மயிலாடுதுறைமாவட்டத்திற்கு,மயிலாடுதுறை மாவட்ட ஆட்சியர் அலுவலக பெருந்திட்ட வளாகம்அமைத்திடமயிலாடுதுறைமாவட்டம், மன்னம்பந்தல் கிராமத்தில் தருமபுரம் ஆதினத்திற்கு சொந்தமான8.57.0ஹெக்டேர் நிலத்தினை கிரயம் செய்திட ஏதுவாக ரூ.10,32,53,522/–நிதிஒதுக்கீடுசெய்துஅரசு ஆணையிட்டுள்ளது.
- மயிலாடுதுறை மாவட்டத்திற்கு, மாவட்ட ஆட்சியர் அலுவலக பெருந்திட்ட வளாகம் கட்டுவதற்குரூ.114.48கோடிநிதிஒதுக்கீடுசெய்து அரசு ஆணையிட்டுள்ளது. தற்போதுமாவட்ட பெருந்திட்டவளாககட்டுமானப்பணிகள்நடை பெற்றுவருகிறது.
- விருதுநகர் மாவட்ட ஆட்சியர் பெருந்திட்ட வளாகத்தில்புதியமாவட்டஆட்சியர்அலுவலக கட்டடம்கட்டரூ.7,057இலட்சம்நிதிஒதுக்கீடு செய்து அரசு ஆணையிட்டுள்ளது.
- மயிலாடுதுறை மாவட்டம், சீர்காழி வருவாய் கோட்டாட்சியர்அலுவலகம்மற்றும்குடியிருப்பு மற்றும்நாகப்பட்டினம்மாவட்டம்,வேதாரண்யம் வருவாய்கோட்டாட்சியர் அலுவலகம்மற்றும் குடியிருப்புகட்டடம்கட்டரூ.739/–இலட்சங்கள் நிதிஒதுக்கீடுசெய்துஅரசுஆணையிட்டுள்ளது.
- தருமபுரி மாவட்ட ஆட்சியரக வளாகத்தில், கூடுதல்கட்டடம்(தரைதளம்+5தளங்கள்)கட்ட ரூ.36,62,00,016/–நிதிஒதுக்கீடுசெய்துஅரசு ஆணையிட்டுள்ளது.
- திருவண்ணாமலை மாவட்ட ஆட்சியர் அலுவலக பெருந்திட்ட வளாகத்தில் மக்கள் குறை தீர்வு கூட்டரங்கம் மற்றும் கூடுதல் அலுவலககட்டடங்கள்கட்டரூ.12,17,94,738/–நிதி ஒதுக்கீடு செய்து அரசு ஆணையிட்டுள்ளது.
- விருதுநகர்மாவட்டத்தில்ஹெலிபேட்அமைக்க ரூ.48,94,306/– நிதி ஒதுக்கீடு செய்து அரசு ஆணையிட்டுள்ளது.
- ஐந்துவட்டாட்சியர்அலுவலகம்கட்டுவதற்கு ரூ.2,179இலட்சம்நிதிஒதுக்கீடுசெய்யப்பட்டும் தஞ்சாவூர் மாவட்ட ஒரத்தநாடு வட்டாட்சியர் அலுவலகம்திறக்கப்பட்டுமக்கள்பயன்பாட்டில் உள்ளது. மீதமுள்ள கட்டடங்களுக்கான கட்டுமானபணிகள்நடைபெற்றுவருகின்றன மற்றும் எட்டு வட்டாட்சியர் குடியிருப்புகள்



கட்டுவதற்கு ரூ.323.51 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு அவற்றில் ஏழு வட்டாட்சியர் குடியிருப்பு கட்டடங்கள் கட்டி முடிக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளது. சேலம் தலைவாசல் வட்டாட்சியர் குடியிருப்பு மற்றும் கட்டுமான பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

- திண்டுக்கல் (மேற்கு), மதுரை (வடக்கு) மற்றும் மேலூர், போளூர், ஸ்ரீவில்லிபுத்தூர், திண்டிவனம், பென்னாகரம், ஒட்டபிடாரம், சென்னை பெரம்பூர் மற்றும் லால்குடி ஆகிய 10 வட்டாட்சியர் அலுவலக கட்டடங்கள் கட்ட ரூ.48,70,47,173/- அரசால் நிருவாக மற்றும் நிதி அனுமதி வழங்கப்பட்டுள்ளது.
- பாளையம், அலங்காநல்லூர் மற்றும் திருமங்கலம், அய்யலூர் மற்றும் கள்ளிமந்தயம், அரவக்குறிச்சி, பெருங்காட்டூர், வேளாங்கண்ணி, கோடாங்கிபட்டி, கோட்டூர், திமிரி, செம்மண்டப்பட்டி, புதூர், மல்லாங்கிணறு மண்டபசாலை மற்றும் இராஜபாளையம், நெமிலி, V.பெரியபட்டி மற்றும் காட்டுப்புதூர், சுங்குவார்சத்திரம், சூளகிரி மற்றும் கல்லாவி, தக்கலை, துவரங்குறிச்சி மற்றும் தேவணாம்சேரி, துத்திப்பட்டு, செங்குறிச்சி, சலவார்பட்டி, மழையூர், வல்லநாடு மற்றும் கள்ளக்கோட்டை, திருவெண்காடு, திருவலம், திருமானூர், மறவமங்கலம் மற்றும் சிங்கம்புணரி, மதுரவாயில், மணியாச்சி மற்றும் பள்ளக்குறிச்சி, முக்கூடல் மற்றும் தாழையூத்து, வாரப்பட்டி, கரடிவாவி, கூடலூர், வேளகாபுரம், சாயல்குடி, திருவாடனை மற்றும் திருப்புல்லாணி, வேதாரண்யம் மற்றும் திருப்போரூர் ஆகிய இடங்களில் கட்டடங்கள் கட்ட ரூ.15,25,59,367/- அரசால் நிருவாக மற்றும் நிதி அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

கிராம நிருவாக அலுவலர்களுக்கான மாவட்ட மாறுதல்

- கிராம நிருவாக அலுவலர்களுக்கான மாவட்டங்களுக்கு இடையேயான ஒருவழி / மனமொத்த இருவழி மாறுதல்கள் இணையதளம் வாயிலாக மேற்கொள்ள புதியதொரு மென்பொருள் உருவாக்கப்படும் என்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் தெரிவிக்கப்பட்டதை தொடர்ந்து, மாவட்ட மாறுதல்களுக்கான மென்பொருள் உருவாக்கப்பட்டு 419 கிராம நிருவாக அலுவலர்களுக்கு ஒருவழி மாவட்ட மாறுதல் வழங்கியும், 172 கிராம நிருவாக அலுவலர்களுக்கு மனமொத்த இரு வழி மாவட்ட மாறுதல் வழங்கியும் இணையதளம் மூலம் ஆணை வழங்கப்பட்டுள்ளது.

இணையம் மூலம் பொதுமக்களுக்கு பல்வேறு சேவைகளை வழங்கப்படுதல்

- விவசாய வருமான சான்றிதழ், சிறு, குறு விவசாயி சான்றிதழ், கலப்புத் திருமணச் சான்றிதழ், விதவைச் சான்றிதழ், வேலையில்லாதவர் என்பதற்கான சான்றிதழ்,



குடிபெயர்வு சான்றிதழ், ஆண் குழந்தை இல்லை என்பதற்கான சான்றிதழ், திருமணம் ஆகாதவர் என்பதற்கான சான்றிதழ், வாரிசு சான்றிதழ், வசிப்பிடச் சான்றிதழ், சொத்து மதிப்பு சான்றிதழ், அடகு பிடிப்போர் உரிமம் சான்றிதழ், கடன்கொடுப்போர் உரிமம், இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் வகுப்புச் சான்றிதழ் தற்காலிகபட்டாசு உரிமம், ஆதரவற்ற விதவை சான்று, பொருளாதாரத்தில் நலிந்தோருக்கான சான்று, ஜெயின் மத சிறுபான்மையினர் சான்று, பொதுகட்டட உரிமம், சாதிச் சான்றிதழ், வருமானச் சான்றிதழ், இருப்பிடச் சான்றிதழ், முதல் தலைமுறை பட்டதாரி சான்றிதழ், கணவனால்கைவிடப்பட்டசான்றிதழ், இயற்கை இடர்பாடுகளினால் மாணவர்கள் பள்ளி (ம) கல்லூரி சான்றிதழ்களை இழந்தமையை உறுதிசெய்யும்சான்றிதழ்கள் பொதுமக்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது.

- கடந்த மூன்றாண்டுகளில் (07.05.2023 முதல் 31.07.2024 வரை) மின் ஆளுமைத்திட்டத்தின் கீழ் மொத்தம் 3,26,56,356 சான்றிதழ்கள் பொதுமக்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது.

நில நிருவாகத்துறை

நில குத்தகை

- 951 மொத்த குத்தகை இனங்களில், சென்னை மாநகராட்சிக்குட்பட்ட மாநகராட்சி (பொது) என வகைப்படுத்தப்பட்ட 380 குத்தகை இனங்கள் பிரிக்கப்பட்டு, அதில் புதுப்பிக்கப்படாத 261 குத்தகை இனங்கள் ஆக்கிரமிப்புகளாக கருதி குத்தகைரத்துசெய்து ஆணையிடப்பட்டுள்ளது. மீதமுள்ள 571 குத்தகை இனங்களில், நடப்புக் குத்தகையில் ரூ.52.45 கோடியும், நிலுவைக் குத்தகையில் ரூ.44.67 கோடி என மொத்தம் ரூ.97.13 கோடி 2021 முதல் 2024 வரையிலான காலத்திற்கு குத்தகை தொகையாக தனியார்களிடமிருந்து வசூல்செய்யப்பட்டுள்ளது.
- அரசு நிலங்களை குத்தகை அடிப்படையில் வழங்குவதற்கான நடைமுறைகளை எளிமைப்படுத்தும் பொருட்டு, அரசின் கூடுதல் தலைமைச் செயலர் / வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அவர்களின் தலைமையில் குழு உருவாக்கப்பட்டுள்ளது. இக்குழுவின் பரிந்துரையின் அடிப்படையில், வரைவு புதிய நில குத்தகை கொள்கை உருவாக்கப்பட்டு, அரசின் பரிசீலனையில் உள்ளது.

இலவசவீட்டுமனைப்பட்டா

- வீடற்ற ஏழைகள் அனைவருக்கும் இலவச வீட்டுமனை வழங்கி மக்களின் வாழ்வாதாரத்தை பெருக்குவதே அரசின் கொள்கையாகும். "காலிநத்தம்" என வகைப்படுத்தப்பட்ட, கிடைக்கக் கூடிய அரசு நிலங்களை ஒதுக்கீடு செய்து வீடு இல்லாத ஏழைகளுக்கு இலவச வீட்டுமனை பட்டா வழங்கப்படுகிறது. நத்தம் என வகைப்படுத்தப்பட்ட போதிய நிலங்கள் இல்லாத சூழ்நிலையில் பல்வேறு வகையான ஆட்சேபனையற்ற அரசுப் புறம்போக்கு நிலங்களை வகைப்பாடு மாற்றம் செய்து, வீடற்ற ஏழைகளுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கப்படுகிறது.
- பெண்கள் நலனை உறுதி செய்வதற்காக, குடும்பத்தில் உள்ள பெண் உறுப்பினர்கள் பெயரில் இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கப்படுகின்றன. தற்போதுள்ள விதிகளின்படி, தகுதியுடைய ஒவ்வொரு குடும்பத்திற்கும் பிற நிபந்தனைகளுக்கு



உட்பட்டு,கிராமப்புறங்களில்மூன்றுசென்ட்டும், நகராட்சிப் பகுதிகளில் ஒன்றரை சென்ட்டும், மாநகராட்சிப் பகுதிகளில் ஒரு சென்ட்டும் எனஒதுக்கீடு செய்து வீட்டுமனைப்பட்டா வழங்கப்படுகிறது.இதன்அடிப்படையில்07.05.2021 முதல்,வருவாய் நிலையாணை எண்.21,ன் கீழ் வீட்டுமனைப்பட்டாவழங்குதல்,ஆதிதிராவிடர்/ பிற்படுத்தப்பட்டோர் நலத்திட்டத்தின் கீழ் இலவச வீட்டுமனைப்பட்டா வழங்குதல், சிறப்பு வரன்முறைப்படுத்தும் திட்டத்தின் கீழ் ஆட்சேபகரமற்றஅரசுபுறம்போக்கில்குடியிருந்து வரும் தகுதியுள்ள நபர்களுக்கு இலவச வீட்டுமனைப்பட்டாவழங்குதல்மற்றும்நகரளவை திட்டத்தின்கீழ்வீட்டுமனைபட்டாவழங்குதல் எனமொத்தம்7,97,804பட்டாக்கள்/இ-பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன.

❖ இலவச வீட்டு மனைபட்டா வழங்குவதில் குறிப்பாக இருளர், நரிக்குறவர்கள் போன்ற விளிம்புநிலைசமூகத்தைச்சேர்ந்தவர்களுக்கு வழங்கும் நடவடிக்கைகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சரால் நேரடியாகக் கண்காணிக்கப்பட்டு வருகிறது. அரசுப் புறம்போக்கு நிலங்களில் உள்ள குடியிருப்பு ஆக்கிரமிப்புகள் குறித்த விரிவான தரவுத்தளத்தைப் பெறுவதற்கும், சிறப்புத் திட்டத்தைச்செயல்படுத்துவதில்ஏற்பட்டுள்ள முன்னேற்றத்தைக் கண்காணிப்பதற்கும், அரசுநிலங்கள் மற்றும் ஆக்கிரமிப்புகளின் நிலையை அறியவும் தேசிய தகவல் மையம் மூலம் அரசு நிலப் பதிவேட்டுடன் தமிழ்நிலதரவுத்தளம்இணைக்கப்பட்டுள்ளது.

❖ மேலும், சென்னை மாவட்டத்தில், சிறப்பு செயலாக்கத் திட்டத்துறை அரசாணை (நிலை)எண்.12,நாள்01.03.2024-ன்படிஜீலை 2024-ல் 28,848 வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன.

ஆக்கிரமணங்களை அகற்றுதல்

❖ அரசு நிலங்களில் ஏற்படுத்தப்பட்டுள்ள அனுமதியற்ற கைப்பற்றுதல்கள், ஆக்கிரமணங்கள் எனக் கருதப்படும். அரசு நிலங்களில்உள்ளஆக்கிரமணங்களை,கிராம கணக்குகளின்படி அளப்பதும் மற்றும் ஆக்கிரமணத்தின்தன்மைமற்றும்வசிப்போர் விபரம் போன்றவற்றை மதிப்பீடு செய்வதும் வருவாய்த்துறையின் பணிகளாகும்.

❖ ஆக்கிரமிப்பு அகற்றும் செயல் முறைகள் மேற்கொள்ளப்பட்டு, நீர்நிலை புறம்போக்கு-10069.012ஹெக்டர்ஸ்இதரஅரசுபுறம்போக்கு நிலத்தின்வகையில்-4908.7171ஹெக்டர்ஸ்ஆக மொத்தம்=15049.7491ஹெக்டர்ஸ்நிலத்தின் அளவுகளின்ஆக்கிரமிப்பைஅகற்றியுள்ளது.

நில மாற்றம்

❖ மாநில அரசுத் துறைகளான சுகாதாரம், கல்வி, உள்துறை, மற்றும் பிற., இவற்றிற்கு ஆட்சேபனையற்றபுறம்போக்கு நிலங்களை நிலமதிப்பு உச்சவரம்பின்றிநிலமாற்றம்செய்ய மாவட்ட ஆட்சியர் அதிகாரம் பெற்றுள்ளார்.



தமிழ்நாடு வாணிபக் கழகத்திற்கு தேவைப்படும் நேரடி கொள்முதல் நிலையம், சேமிப்பு கிடங்குகள் மற்றும் நியாயவிலைக் கடைகள் தொடக்கத்தில் நிலக்கிரயமாக கொண்டு நில உரிமை மாற்றம் செய்யப்பட்டது. ஆனால் தற்போது கூட்டுறவு,உணவுமற்றும்நுகர்வோர் பாதுகாப்பு துறைக்கு நிலக்கிரயமின்றி அரசு நிலங்கள் நிலமாற்றம் செய்யப்படுகின்றன.

- மூன்றாண்டுகளில் 178 இனங்களில் 1,254 ஏக்கர் அரசு நிலங்கள் நிலமாற்றம் செய்ய அரசாணைகள் வழங்கப்பட்டுள்ளன.

நில உரிமை மாற்றம்

- அரசு நிலங்களை ஒன்றிய & மாநில அரசு நிறுவனங்கள் /கழகங்கள் /வாரியங்கள் / உள்ளாட்சி அமைப்புகள் ஆகியவற்றிற்கு பொதுப் பயன்பாட்டிற்காகவும், அவற்றின் திட்டங்களுக்காகவும் நில உரிமை மாற்றம் செய்யப்படுகிறது. சில நேர்வுகளில் தனியார் நிறுவனங்களுக்கும் அவற்றின் தேவை, அவசியம் போன்றவற்றினை ஆய்வு செய்து, அரசின் வசம் போதுமான நிலம் இருக்கும்பட்சத்தில் அவர்களுக்கு நில உரிமைமாற்றம்செய்யப்படுகிறது.நிலஉரிமை மாற்றத்தின்போது வணிக நோக்கமில்லாத பயன்பாட்டிற்காகநிலஉரிமைமாற்றம்செய்யும் நேர்வுகளில் ஒரு மடங்கு சந்தை நில மதிப்பு வசூல் செய்தும்,வணிக நோக்கத்திற்காக நில உரிமை மாற்றம் செய்யும் நேர்வுகளில் இரு மடங்குசந்தைநிலமதிப்புவசூல்செய்தும்,உள்ள நிபந்தனைகளுக்குட்பட்டுநிலஉரிமைமாற்றம் செய்யப்படுகிறது.

- தமிழ்நாடுவீட்டுவசதிவாரியத்திற்குநிலஉரிமை மாற்றம் செய்யப்பட்டுள்ள அரசு நிலங்களை ரயத்துவாரிமனைஎனவகைபாடுமாற்றம்செய்து தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் பெயரில் பட்டாவழங்கமாவட்டஆட்சித்தலைவர்களுக்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது. மேலும், தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்திற்கு ஏற்கனவேநிலஉரிமைமாற்றம் செய்யப்பட்ட நிலங்களை ரயத்துவாரி மனை எனவகைபாடுமாற்றம்செய்துபட்டாவழங்கவும் மாவட்டஆட்சித்தலைவர்களுக்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது,
- அரசு மற்றும் தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி நிறுவன (TANSIDCO) தொழிற்பேட்டைகளில் உள்ள நிலங்களுக்கு உரிய நில உரிமை மாற்ற அரசாணை பெற்றிடவும் இரயத்துவாரி மனை என வகைபாடு மாற்றம் செய்யயும், தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனம் (சிப்காட்) தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி நிறுவனம்(சிட்கோ)மற்றும்தமிழ்நாடுதொழில் வளர்ச்சி நிறுவனம் (டிட்கோ) தொடர்பான நிலப்பிரச்சினைகளைஆய்வுசெய்வதற்காகவும், தொழில் முனைவோருக்கு பட்டா வழங்கிட வருவாய்மற்றும்பேரிடர்மேலாண்மைத்துறை மூலம் தக்க உத்தரவுகளை பெற்றுத் தரவும், அரசு தலைமைச் செயலாளர் அவர்களின் தலைமையில்,அதிகாரம்பெற்றக்குழுவினை அமைத்து ஆணை,
- ஏற்கனவேநிலஉரிமைமாற்றம்செய்யப்பட்ட நிலங்களை ரயத்துவாரி புஞ்சை என வகைபாடு மாற்றம் செய்ய மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்குஅறிவுரைஅளிக்கப்பட்டுள்ளது மற்றும் உரிய நில வருவாய் மாவட்ட ஆட்சித் தலைவரால் நிர்ணயம் செய்யப்பட வேண்டும்.
- மூன்றாண்டுகளில்247இனங்களில்3099ஏக்கர் அரசு நிலங்கள் நில உரிமை மாற்றம் செய்ய அரசாணைகள் வழங்கப்பட்டுள்ளன.

நிலச்சீர்திருத்தம்

பூமிதான வாரியம்

- ஸ்ரீ ஆச்சார்ய வினோபாபாவே அவர்களால் தொடங்கப்பட்டபூமிதான இயக்கத்தின் மூலம்



மாநிலத்தில் 28,050 ஏக்கர் நிலங்கள் பூமிதான இயக்கத்திற்கு தானமாக பெறப்பட்டன. அவ்வாறு தானமாக பெறப்பட்ட நிலங்கள் தமிழ்நாடு பூமிதான யக்ஞச் சட்டம், 1958–இன்படி வரன்முறை செய்யப்பட்டு நிலமற்ற ஏழைகளுக்கு விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

- இந்தபூமிதானநிலங்கள்பூமிதானவாரியத்தால் நிர்வகிக்கப்பட்டு வருகிறது. பூமிதான நிலங்களை முறைகேடான முறையில் விற்பனை செய்வதை தடுக்கும் பொருட்டு தமிழகத்தில் உள்ள பூமிதான நிலங்களின் நிலமதிப்பு '0' மதிப்பீடாகமாற்றம்செய்யப்பட்டு வருகிறது.
- பூமிதான நிலங்களை பூமிதான யக்ஞச் சட்டப்பிரிவு 19(1) மற்றும் 19(3)–ன் கீழ் வரையறுக்கப்பட்டுள்ளவழிமுறைகளின்படி மாவட்டநிர்வாகத்தின்மூலம்கருத்துருக்கள் பெறப்பட்டுபூமிதானவாரியதீர்மானத்தின்பேரில் நிலமற்றஏழைகளுக்குவிவசாயத்திற்காகவோ, வீட்டுமனைகளுக்காகவோ அல்லது பொது நோக்கத்திற்காகவோ வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.
- 07.05.2021முதல்31.07.2024வரை61.42ஏக்கர் பூமிதானநிலங்கள்தகுதியின்அடிப்படையில் 990 பயனாளிகளுக்கு விவசாயம் மற்றும் வீட்டுமனைகளுக்காகவும் பூமிதான வாரியத்தின் ஒப்புதலின் பேரில் விநியோகம் செய்யப்பட்டுள்ளது.மேலும்,அரசுதுறைமற்றும் பொதுபயன்பாட்டிற்காக206.56ஏக்கர்பூமிதான நிலங்கள் வழங்கப்பட்டுள்ளது.
- பூமிதான நிலங்களை தகுதியற்ற நபர்கள், ஆக்கிரமிப்பு செய்த நிலையில் அதனை அகற்றுவதற்கானதுரிதநடவடிக்கை அரசால் மேற்கொள்ளப்பட்டு01.05.2021முதல்31.07.2024 சுமார் 693.21 ஏக்கர் நிலங்களில் உள்ள ஆக்கிரமிப்பு அகற்றப்பட்டுள்ளது.

வருவாய் நீதிமன்றம் (01.05.2021 முதல் 30.06.2024 வரையிலான சாதனை)

- பயிரிடு குத்தகைதாரர்கள் மற்றும் நில உடமைதாரர்கள் (கோயில் நிலங்கள் உட்பட) ஆகியோர்களுக்கிடையே ஏற்படும் தகராறுகள் மாநிலத்தில் உள்ள 10 வருவாய் நீதிமன்றங்களால்தீர்த்துவைக்கப்படுகின்றன.
- மாநில சமச்சீர் வளர்ச்சி நிதி திட்டமானது, 2022–2023ஆம்நிதியாண்டில்மறுசீரமைப்பு செய்யப்பட்டது. இத்திட்டம் சுகாதாரம், ஊட்டச்சத்துமற்றும்கல்விஆகியவளர்ச்சிக் காரணிகளில்மாவட்டங்களுக்கிடையேஉள்ள வட்டார வேறுபாடுகளைக் குறைப்பதை நோக்கமாகக் கொண்டதாகும்.

- இத்திட்டத்திற்காக2022–2023ஆம்நிதியாண்டில் ரூ.50 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. இத்திட்டத்தின்கீழ், ரூ.92.53 கோடியில், 6 திட்டங்கள் ஒப்பளிக்கப்பட்டு, அவற்றை

செயல்படுத்த முதல் தவணைத் தொகையாக ரூ.48.54கோடிநிதிவிடுவிக்கப்பட்டது.தற்போது, 2023–2024ஆம்நிதியாண்டிற்கானதிருத்தப்பட்ட வரவு–செலவுமதிப்பீட்டில்,அத்திட்டங்களை செயல்படுத்த இரண்டாவது தவணைத் தொகையாக ரூ.43.98 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

வளமிகு வட்டார வளர்ச்சித் திட்டம்

- தமிழ்நாடுஅரசு2023–2024ஆம்ஆண்டிற்கான வரவு–செலவு திட்ட அறிக்கையில், வட்டார வளர்ச்சிக்காக வளமிகு வட்டாரங்கள் (முன்னுரிமைவட்டாரங்கள்மலைப்பகுதிகளை உள்ளடக்கியவை)திட்டத்தைஅறிவித்துள்ளது, அத்திட்டத்திற்காக ரூ.100கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டது.தற்போதுதிருத்தப்பட்டவரவு–செலவுமதிப்பீடு2023–2024இல்,அத்தொகை ரூ.20கோடியாக குறைக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு மாநில நிலப் பயன்பாடு ஆராய்ச்சி வாரியம்

- நிலையான வேளாண்மை, நகர்ப்புற மற்றும் கிராமப்புற மேம்பாடு, நீர் மற்றும் நிலவள மேலாண்மை, பாரம்பரியம் மற்றும் சுற்றுலா தலங்களின் மேலாண்மை ஆகியவற்றை மையமாகக் கொண்டு ரூ.2.39 கோடி செலவில் மொத்தம் 13 ஆராய்ச்சி ஆய்வுகள் அனுமதிக்கப்பட்டுள்ளன.

- தென் மாவட்டங்களில் சீமை கருவேல மரங்களை திறன்பட மேலாண்மை செய்வது குறித்தும்,மாநிலத்தின் நிலையானகடற்பாசி சாகுபடிக்காகவும், வனப்பகுதிகளில் அந்நிய களைச் செடிகளின் மேலாண்மை குறித்த பயிலரங்குகள் ரூ.27.50 இலட்சம் செலவில் நடத்தப்பட்டன.

சர்வதேச நிறுவனங்களுடன் இணைந்து செயல்படுத்தும் திட்டங்கள்

- மாநிலத் திட்டக்குழு பிரிட்டிஷ் உயர் அலுவலகத்துடன் இணைந்து தமிழ்நாடு வெப்பத் தணிப்பு உத்தி மற்றும் செயல் திட்டத்திற்கான ஒப்பந்தம் தமிழ்நாட்டின் உலகளாவிய முதலீட்டு மாநாடு 2024இல் ஐக்கிய நாடுகளின் காமன்வெல்த் மற்றும் மேம்பாட்டு விவகாரத்துறை அமைச்சர் முன்னிலையில் செய்துகொள்ளப்பட்டது. அதிகரித்து வரும் புவி வெப்பமடைதலின் தாக்கத்தைநிவர்த்திசெய்வதற்கும்,மாநிலத்தின் வெப்பத்தை எதிர்க்கும் திறன்களை மேம்படுத்துவதற்கும்,கட்டடங்கள்,இயற்கைச் சூழல்மற்றும்பாதிக்கப்படக்கூடியமக்களைப் பாதுகாக்கவும் உதவுகிறது.

- ஜெர்மன்அரசின்நிதியுதவியுடன்இயங்கிவரும் GIZ–திறந்தமற்றும்நிலையானநகரதிட்டமிடல் மற்றும் பகுப்பாய்வுக்கான ஆராய்ச்சி (TOSCA) கருவியைமாநிலநிலப்பயன்பாட்டு ஆராய்ச்சி வாரியத்திற்கு வழங்கியுள்ளது. இக்கருவி நகர்திட்டமிடல் மற்றும் பகுப்பாய்வுக்கான ஆராய்ச்சியை எளிதாக மேற்கொள்ளும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

- சர்வதேச நிறுவனமான ஜெர்மன் கூட்டமைப்புடன் இணைந்து (GIZ) நகர்ப்புற மீட்டெடுத்தலை(UrbanResilience)மேம்படுத்த "ஒருங்கிணைந்த இயற்கைசார் தீர்வு, செயல் உத்தியை தயாரித்து வருகிறது. இயற்கைசார் தீர்வுகளைஅரசுதுறைகள்செயல்படுத்துவதில் உள்ள வாய்ப்புகள் மற்றும் சவால்களைக் கண்டறிவது இதன் முக்கிய நோக்கமாகும். இதன்மூலம்ஒருங்கிணைந்தபேரிடர்தணிப்பு, காலநிலைப் பாதிப்புகளை எதிர்கொள்ளும் உத்திகள்,நிலையானபொருளாதார வளர்ச்சி மற்றும்ஐக்கியநாடுகளின்நிலையானவளர்ச்சி இலக்குகளின் படி வளர்ச்சியை எய்தல் ஆகியவற்றை அடைய இயலும்.

- ஐக்கிய நாடுகள் சுற்றுச்சூழல் திட்டத்தின் ஆதரவுடன்,நகர்ப்புரவெப்பத்தீவுபகுதிகளை கண்டறிதல் மற்றும் தமிழ்நாட்டின் நகர்ப்புர வெப்பத்தின் பாதிப்பைக் குறைப்பதற்கான தணிப்பு உத்திகள் பற்றிய ஆய்வு மாநிலத் திட்டக்குழுவால்மேற்கொள்ளப்பட்டுவருகிறது.

- INDIA–UK PACT திறன் பகிர்வு திட்டத்தின் கீழ் பிரிட்டிஷ் துணை உயர்குழு மற்றும் UK–வில் உள்ள CENEX உடன் இணைந்து சென்னையில் குறைந்த கார்பன் உமிழ்வு மண்டலங்களைஉருவாக்குவதற்கானகருவி (Low Carbon Emission Zoning – Toolkit) தயார்

செய்யப்பட்டு வருகிறது. இதன் திறன் பகிர்வு கருத்தரங்கு சென்னையில் நடைபெற்றது.

ஆய்வுகள்

- தமிழ்நாட்டில் உள்ள கடலோர சமூகங்களின் சமூகபொருளாதாரமதிப்பீடுமற்றும்சுற்றுச்சூழல் பாதிப்பு என்ற தலைப்பில்நடந்துவரும் ஆய்வு கடலோர சமூகங்களின், குறிப்பாக மீனவ சமூகத்தின்,14கடலோரமாவட்டங்களில்உள்ள சமூக,பொருளாதாரபாதிப்பைக்கண்டறிவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

- தமிழ்நாட்டில்காடுகளின்நிலைகுறித்தஆய்வு, மாவட்ட அளவில் வனப்பரப்பில் ஏற்படும் மாற்றங்களைகுறிக்கிறது.இந்தஅறிக்கையில் தரவுகளும், பகுப்பாய்வுகளும் தமிழ்நாட்டின் வனவியல் துறையில் கொள்கைகளை உருவாக்குவதற்கான முக்கியமான உள்ளீடுகளாக இருக்கிறது.

- தமிழ்நாட்டில் நிலப்பயன்பாட்டு நிலப்பரப்பில் காலநிலை மாற்றத்தின் விளைவு பற்றிய பகுப்பாய்வு, 1991 முதல் 2021 வரை 30 ஆண்டுகளுக்குதமிழ்நாட்டில்உள்ளஉள்ளூர் காலநிலைமாற்றத்தைநிலப்பயன்பாடு மற்றும் நிலப்பரப்புஎவ்வாறுபாதித்துள்ளதுஎன்பதற்கான ஆய்வு மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

- தமிழ்நாட்டில்நிலையானவளர்ச்சிஇலக்குகளில் நிலப்பயன்பாட்டின்தாக்கம்பற்றியபகுப்பாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.இதில்,17நிலையான வளர்ச்சி இலக்குகளில், 11 நிலப் பயன்பாட்டு இலக்குகள் தொடர்பான குறிகாட்டிகளை பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளது.

முக்கியமான கொள்கை முடிவுகளை எடுப்பதில் துறைகளுக்கு உள்ளீடுகளை வழங்கிய சில குறிப்பிடத்தக்க ஆய்வுகள்.

சுற்றுச்சூழல் சேவைகளின் பொருளாதார மதிப்பீடு – 80 சதுப்பு நிலங்களின் ஆய்வு

- தமிழ்நாட்டில் நடத்தப்பட்ட இவ்ஆய்வானது, 80முன்னுரிமைப்படுத்தப்பட்டஈரநிலங்களின் பொருளாதார மதிப்புகளை மதிப்பீடு செய்தல், அவற்றின் பலன்களை மதிப்பிடுதல், முடிவெடுக்கும் அமைப்புகளுக்கு உதவுதல், வாழ்வாதாரத்தின் மீதான தாக்கங்களை பகுப்பாய்வு செய்தல் மற்றும் புதுமையான அணுகுமுறைகளைக்கருத்தில்கொள்ளுதல் போன்ற நோக்கங்களைக் கொண்டது. இந்த ஆய்வுதமிழகத்தில்உள்ளசதுப்புநிலங்களுக்கு புத்துயிர்அளிக்கும்வகையில்குறிப்பிடத்தக்க தகவல்களைதுறைக்குஅளித்துள்ளது.ஜனவரி 2024நிலவரப்படிமொத்தம்16ராம்சார்தளங்கள் அறிவிக்கப்பட்டு நமது மாநிலம் அதிகபட்ச ராம்சார் தளங்களை கொண்டு முதன்மை மாநிலமாக திகழ்கிறது.

தமிழ்நாட்டில் உள்ள புனித தோப்புகளின் புவியியல் தரவுதளத்தை உருவாக்குதல் மற்றும் பல்லுயிர்களை ஆவணப்படுத்துதல்

- இந்த ஆய்வானது, வனப்பகுதிக்கு உள்ளே மற்றும் வெளியே உள்ள அனைத்து புனித தளங்களையும் அடையாளம் காணவும், தமிழ்நாட்டில் உள்ள புனித தளங்களின் இடஞ்சார்ந்த தரவுதளத்தை வரையறுத்து உருவாக்கவும், பல்லுயிர் தாவரங்கள் மற்றும் விலங்கினங்களை ஆவணப்படுத்தவும் உதவுகிறது.

நிலப்பொருத்தம் மதிப்பீடு – கள்ளக்குறிச்சி மாவட்டம்

- கள்ளக்குறிச்சிமாவட்டத்தில்பயன்படுத்தப்படாத நிலங்களைக் கண்டறிந்து, வனம், மழைநீர் சேகரிப்பு, வேளாண்மை, சூரிய ஆற்றல், வீட்டுவசதி மற்றும் தொழில் வளர்ச்சி போன்ற பல்வேறு துறை முயற்சிகளுக்கான சாத்தியக்கூறுகளை மதிப்பீடு செய்துள்ளது.

பயிலரங்குகள்

வனப் பகுதிகளில் அந்நிய களைச் செடிகளின் மேலாண்மை

- அந்நியதாவர இனங்களின்மேலாண்மைக்கு ஆய்வுகள் மற்றும் கள அனுபவங்களின் அடிப்படையில்ஆற்றல்மிக்க அணுகுமுறை தேவை. இதன் பரவல் மற்றும் மாற்றங்கள் பற்றியபுரிதல்முக்கியமானது.இதற்காகபிப்ரவரி 2023இல்நடத்தப்பட்டபயிலரங்கமானது,இதன் அடிப்படையைஅடையாளம்காணவும்,புவியியல் தொழில்நுட்பத்தைப்பயன்படுத்திநிலையான

அறிவியல் முறைகளைப் பயன்படுத்தி மதிப்பீட்டை மேற்கொள்ளவும் மற்றும் தரவு சார்ந்த முடிவுகளை எடுக்கவும் சம்பந்தப்பட்ட துறைகளுக்கு வழிகாட்டியது.

தென் மாவட்டங்களில் சீமைக்கருவேல மரங்களின் மேலாண்மை

- சீமைக்கருவேல மரங்களின் பயன்பாட்டை முறைப்படுத்துதல், வாழ்வாதார வாய்ப்புகளை வழங்குதல், பல்லுயிரியலைப் பாதுகாத்தல், கொள்கைகளை உருவாக்குதல் மற்றும் பயனுள்ள மேலாண்மை உத்திகளை வரைதல் ஆகியவற்றைப்பற்றி விவாதிக்க மார்ச் 2023இல் ஒரு பயிலரங்கம் நடத்தப்பட்டது. சுற்றுச்சூழல், சுகாதாரம், வாழ்வாதாரம், சுற்றுச்சூழல் சேவைகள் மற்றும் சமூக–பொருளாதார நடவடிக்கைகள் ஆகியவற்றில் சீமைக்கருவேல மரங்களின் நேர்மறை மற்றும் எதிர்மறை தாக்கங்கள் பற்றி விரிவாக விவாதிக்கப்பட்டது.

எதிர்காலத் திட்டங்கள்

- மாநில திட்டக்குழுவில் நிலப்பயன்பாட்டுத் தகவல் அமைப்புடன் கூடிய நிலப்பயன்பாட்டு கொள்கை ஆராய்ச்சி ஆய்வகத்தை நிறுவுதல். இது தமிழ்நாடு முழுவதும் முடிவெடுக்கும் மற்றும் வள மேலாண்மையில் புரட்சியை ஏற்படுத்தும் ஆற்றலைக் கொண்டிருக்கும். விரிவான மற்றும் அணுகக்கூடிய புவிசார் தரவுகளை வழங்குவதன் மூலம், நிலையான வளர்ச்சி, மேம்படுத்தப்பட்ட திட்டமிடல் மற்றும் மாநிலத்தின் பிரகாசமான எதிர்காலத்திற்கு பங்களிக்கும்.

அரசு திட்டங்களின் தாக்கங்கள் குறித்தான ஆய்வுகள்

விடியல் பயணத்திட்டம்

- மாநிலத் திட்டக் குழு, விடியல் பயணத்திட்டத்தினால் ஏற்பட்டுள்ள பொருளாதாரம் சார்ந்த மற்றும் சாராத விளைவுகளை மதிப்பீடு செய்யும் பொருட்டு, இரு கட்டங்களாக ஆய்வு நடத்தி, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் அறிக்கைகளை சமர்ப்பித்துள்ளது.
  - முதற்கட்ட ஆய்வு – சென்னை மாநகர பகுதி.
  - இரண்டாம் கட்ட ஆய்வு – நாகை மாவட்ட வேளாண் மண்டலம் மதுரை மாவட்ட சுற்றுலா பகுதிகள் மற்றும் திருப்பூர் மாவட்ட தொழிற்துறை மண்டலம்
  - பெண் பயணிகளின் வயது, சமூகப் பிரிவு, கல்வித் தகுதி, வருவாய், மற்றும் சராசரி சேமிப்பு ஆகிய விவரங்களின் அடிப்படையில் இவ்வாய்வுகள் மேற்கொள்ளப்பட்டன
  - இத்திட்டத்தினால் குறைந்த வருவாய் ஈட்டும் பெண்கள் பெருமளவில் பயனடைந்துள்ளதும், நகரப்பகுதிப் பெண்களைக் காட்டிலும் ஊரகப் பகுதியைச் சேர்ந்த பெண் பயணிகள் அதிகம் பயனடைந்துள்ளதும் அறியவருகிறது
  - பெண்களின் பணிப்பங்களிப்பு அதிகரிப்பு, சேமிப்பு உயர்வு, புதிய திறன் மற்றும் வேலைவாய்ப்புகளை அணுகும் வல்லமை, பயணத் தேவைகளுக்கு குடும்ப உறுப்பினர்களை அதிகம் சாராதிருத்தல் ஆகியன இவ்வாய்வுகளின் முக்கிய சமூகப் பொருளாதார வெளிப்பாடுகளாகும்
  - மேலும், பெண்களின் பயணச்செலவு சேமிப்பாவதால் (முதற்கட்ட ஆய்வு – ரூ.858/– சேமிப்பு; இரண்டாம்கட்ட ஆய்வு – ரூ.888/– சேமிப்பு), அது இதர குடும்ப செலவினங்களுக்கு பயன்பட்டு, சில்லறை பணவீக்க தாக்கத்தினை எதிர்கொள்ளவும் அவர்களுக்கு உதவுகிறது.
  - அதிகப் பணிப்பங்களிப்பு, சேமிப்பு அதிகரிப்பு, புதிய திறன் வாய்ப்புகளை அணுகும் வல்லமை, பயணத் தேவைகளுக்கு குடும்ப உறுப்பினர்களை சார்ந்திருப்பது குறைந்துள்ளது ஆகியனவாகும்
  - இத்திட்டத்தினால் குறைந்த வருவாய் ஈட்டும் பெண்கள் பெருமளவில் பயனடைந்துள்ளதோடு, ஊரகப்பகுதி பெண் பயணிகள் அதிகம் பயனடைந்துள்ளதும் அறியவருகிறது
  - பெண்கள் இத்திட்டத்தினை வாழ்வாதார மற்றும் அத்தியாவசிய தேவைகளுக்கு மட்டுமே பயன்படுத்துகின்றனர் எனவும், கட்டணமில்லா பயணச்சலுகையை அவசியமின்றி மேற்கொள்வதில்லை எனவும் தெரியவருகிறது.



பள்ளிக் கல்வித்துறையின் முதன்மை திட்டமான இல்லம் தேடி கல்வியின் (ITK) வரைவு மதிப்பீடு

❖ தமிழ்நாட்டுப் பள்ளி மாணவர்களிடையே கோவிட் 19 ஊரடங்கு காலத்தில் ஏற்பட்ட கற்றல் இழப்பை ஈடுசெய்ய இல்லம் தேடிக் கல்வி என்ற முதன்மைத் திட்டம் தொடங்கப்பட்டு, செயல்பட்டு வருகிறது. மாநிலத் திட்டக்குழு இதன் செயல்திறன் மற்றும் தாக்கத்தை அறிந்துக் கொள்ள தமிழ்நாட்டில் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆறு மாவட்டங்களில் (அரியலூர். கடலூர், நாகப்பட்டினம்,சேலம்,திருவாரூர்,விழுப்புரம்) 362பள்ளிகளில்விரைவுமதிப்பீட்டுஆய்வை மேற்கொண்டது. இதற்கான ஆய்வறிக்கை தயாரிக்கப்பட்டு அரசுக்கு அளிக்கப்பட்டது.

தமிழ்நாடு நகர்ப்புற வேலைவாய்ப்புத் திட்டத்தின் (TNUES) செயல்பாடுகள் குறித்த மதிப்பீடுகள்

❖ தமிழ்நாடு நகர்ப்புற வேலைவாய்ப்புத் திட்டத்தினை செயல்படுத்துவதில் உள்ள பல்வேறு காரணிகளை கண்டறியவும், இத்திட்டத்தின் விளைவுகளையும், அதன் பயன்களையும்கண்டறிந்துஇத்திட்டத்திற்கான இடையூறுகளை சரிசெய்யவும், விரிவாக்கம் செய்திடவும், செயல்பாடுகள் குறித்தும் மாநிலத் திட்டக்குழுவினால் ஒரு விரைவு மதிப்பீடு செய்யப்பட்டு நகராட்சி நிருவாக ஆணையருக்குமதிப்பீட்டுஅறிக்கைஅனுப்பி வைக்கப்பட்டுள்ளது.சென்னைபெருநகரத்தின் 2 மண்டலங்களையும், கோயம்புத்தூர் மற்றும் திருநெல்வேலி நகராட்சியில் இருந்து தலா ஒருமண்டலத்தையும்4மாநகராட்சிகள்மற்றும் 11 பேரூராட்சிகளை உள்ளடக்கி, மேற்கண்ட ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

தமிழ்நாட்டில் உள்ள மாநிலப் பல்கலைக்கழகங்களின் பருவ இறுதி வினாத்தாள்களின் மதிப்பீடு (கலை, அறிவியல், பொறியியல் படிப்புகள்)

❖ மாநிலப் பல்கலைக்கழகங்களிலிருந்து பெறப்பட்ட கலை, அறிவியல் மற்றும் பொறியியல் பாடங்களின் வினாத்தாள்கள், திருத்திய ப்ளூம்ஸ் டாக்ஸானாமி (Taxonomy) முறைப்படி,எதிர்பார்க்கப்படும்கல்வித்தரத்தைப் பிரதிபலிக்கின்றனவா என்பது குறித்து மாநிலத்திட்டக்குழுஆய்வுமேற்கொண்டது. ஆய்வறிக்கை நிறைவடைந்துள்ளது. இறுதி அறிக்கை 12.03.2024 அன்று அரசுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

❖ முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் வாயிலாக,குழந்தைகள்பள்ளிக்குச்செல்வதில் உள்ள முன்னேற்றம், கல்வி கற்றலில்

ஆர்வம், ஆசிரியர்கள் மற்றும் பெற்றோரின் பார்வையில் இத்திட்டம் குறித்த கருத்துகள் இவற்றை அறிவதற்காக மாநிலத் திட்டக் குழு ஓர் ஆய்வினை மேற்கொண்டது, மாநிலத்தின் ஊரக மற்றும் நகர்ப்புறப் பகுதிகளிலுள்ள 100 பள்ளிகளில் இவ்வாய்வு நடைபெற்றது. மொத்தம் 5410 தொடக்கப்பள்ளி மாணவர்களிடம் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இத்திட்டம் குறித்து மாணவர்களின் பெற்றோர் மற்றும் ஆசிரியர்களிடையேயான கருத்துருக்களும் மதிப்பீடு செய்யப்பட்டது.

- இவ்வாய்வின் முதற்கட்ட முடிவுகள் 93 விழுக்காடு மாணவர்கள் பள்ளிக்கு தவறாமல் வருவதாக தெரிவிக்கின்றன. அதுமட்டுமின்றி, மாணவர்களின் கற்கும் திறன், வகுப்புகளில் கல்வி கற்றலில் முழுமையாக ஈடுபடுதல், கல்வி இணைச் செயல்பாடுகள் மற்றும் விளையாட்டுகளில் ஆர்வமாக ஈடுபடுதல் இவை கணிசமாக மேம்பட்டு இருப்பதாக தெரியவந்துள்ளது. 85 விழுக்காடு குழந்தைகள் பள்ளிகளில் உணவருந்துவதை விரும்புகின்றனர். தங்கள் குழந்தைகள் தங்கள் நண்பர்களுடன் மகிழ்ச்சியாக பிறர் ஊட்ட வேண்டிய தேவையின்றி, தாங்களாகவே உணவருந்துவது மகிழ்ச்சியளிப்பதாகவும், தங்கள் குழந்தைகளின் காலையுணவுப் பற்றிய கவலையின்றி இருப்பதாகவும் பெற்றோர்கள் தெரிவித்துள்ளனர்.

தமிழ்நாட்டில் மக்களைத் தேடி மருத்துவம் திட்டத்தின் கீழ் தொற்றா நோய்களுக்கான பராமரிப்பு குறித்த மதிப்பீட்டாய்வு

- மக்களைத் தேடி மருத்துவம் திட்டத்தின் தாக்கம் குறித்த ஒரு மதிப்பீட்டு ஆய்வினை மாநிலத் திட்டக் குழு மேற்கொண்டது. ஏழைக் குடும்பங்கள் தங்கள் மருத்துவத்திற்காக மேற்கொள்ளும் கைச்செலவினம் இத்திட்டத்தால் பாதியாக குறைந்துள்ளது என கண்டறியப்பட்டுள்ளது. மேலும் இத்திட்டத்திற்கு முன்பாக ஏழை மக்களில் மூன்றில் ஒரு பங்கினரே சர்க்கரை நோய், இரத்த அழுத்தம் இவற்றிற்காகப் பரிசோதிக்கப்பட்ட நிலையில் இருந்து, ஏறக்குறைய 50 விழுக்காட்டிற்கும் மேலான ஏழைக் குடும்பங்களைச் சார்ந்த மக்கள் பரிசோதிக்கப்பட்டுள்ளார்கள் என இவ்வாய்வு தெரிவிக்கின்றது. இதன் மூலம் மக்களைத் நோய்த் தாக்கத்திலிருந்து பாதுகாக்க முடியும்.

- மேலும், கடந்த ஓராண்டில் சர்க்கரை நோய் கண்டறியப்பட்டுள்ள மக்கள் மூன்றில் இரண்டு பங்கினர் மற்றும் இரத்த அழுத்த நோய் கண்டறியப்பட்ட மக்கள் நான்கில் மூன்று பங்கினரும் இத்திட்டத்தின் வாயிலாகக் கண்டறியப்பட்டனர் என இவ்வாய்வு கூறுகின்றது. 50 விழுக்காட்டிற்கு மேலான சர்க்கரை நோயாளிகள் இத்திட்டத்தின் வாயிலாக மருத்துவர்களைப் பெற்றுக் கொள்கிறார்கள். இது போலவே, 63 விழுக்காடு இரத்த அழுத்த நோயாளிகள் இத்திட்டத்தின் வாயிலாக மருந்துகள் பெற்றுக்கொள்கிறார்கள். இத்திட்டம் மக்களின் வீடுகளுக்கே சென்று மருந்துகளை விநியோகிப்பதால், மருந்துகளை தவறாமல் எடுத்துக்கொள்ளும் பழக்கமும், நோயின் அளவு கட்டுக்குள் இருப்பதையும் இந்த ஆய்வு உறுதி செய்துள்ளது. தன்னார்வலர்கள் தொடர்ந்து மக்களின் வீடுகளுக்குச் சென்று மருந்துகள் வழங்குவதும், கண்காணிப்பதும் அவர்களுடன் நோய் குறித்து உரையாடுவதும் இதற்கான காரணங்களாக அறியப்படுகிறது.

- புற்றுநோய் குறித்த தகவல்கள் இவ்வாய்வில் நமக்கு அளிக்கும் முக்கியமான தகவல்களாகும். ஆய்வில் கலந்து கொண்ட மக்களுள் குறிப்பாக பெண்களுக்கு 14.2 விழுக்காட்டினர் மார்பகப் புற்று நோய்க்கும் 11.06 விழுக்காட்டினர் கருப்பைவாய்ப் புற்றுநோய்க்கும் மற்றும் 3.7 விழுக்காட்டினர் வாய்ப்பகுதிகளில் ஏற்படும் புற்றுநோய்களுக்கும் பரிசோதிக்கப்பட்டிருக்கின்றனர். இத்திட்டம் இல்லையென்றால், மிகப் பெரிய அளவில் புற்றுநோயிற்கான பரிசோதனைகள் நடந்து இருக்க இயலாது என ஆய்வு முடிவுகள் தெரிவிக்கின்றது.

தமிழ்நாட்டின் பழங்குடி கிராமங்களில் அரசு திட்டங்களின் செயல்படுத்தல் திறன் மீதான மதிப்பீட்டு ஆய்வு

- தமிழ்நாடு அரசின் முக்கிய கொள்கை நோக்கங்களில் ஒன்று பழங்குடி மக்களின்

வளர்ச்சிஆகும்.இதற்காகஒவ்வொருஆண்டும் கணிசமான நிதி ஒதுக்கப்படுகிறது. பழங்குடி சமூகத்தின் சமூக–பொருளாதார நிலையை உயர்த்துவதற்காகபல்வேறுவளர்ச்சிதிட்டங்கள் மற்றும் நலத்திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

❖ இந்த ஆய்வு, "மலையாளி" என்ற பழங்குடி இனத்தவர் பெரும்பான்மையாக உள்ள கள்ளக்குறிச்சி, சேலம் மற்றும் திருவண்ணாமலை ஆகிய மூன்று மாதிரி மாவட்டங்களில் அரசு திட்டங்கள் செயல்படுத்தப்படுவதன் திறனை மதிப்பீடு செய்வதாகும்.இந்தஆய்வுஇம்மாவட்டங்களைச் சேர்ந்த 1,177 பழங்குடி இல்லங்களில் மேற்கொள்ளப்பட்டது.

தமிழ்நாட்டில் குழந்தைகளின் முதல் 1,000 நாட்களில் ஏற்படும் வளர்ச்சிக் குறைபாடு பிரச்சனைகள் – ஒருங்கிணைந்த அரசுத் திட்டங்கள் வாயிலாக தீர்வு காண்பது குறித்து ஒரு ஆய்வறிக்கை.

❖ பன்முகப் பிரச்சனையான ஊட்டச்சத்து குறைபாட்டிற்குநிரந்தரதீர்வுகாணும்வகையில் அரசாங்கத்தின் அனைத்து திட்டங்களும் ஒன்றிணைக்கப்பட வேண்டியுள்ளது. தாய்மார்கள்மற்றும்இரண்டுவயதுக்குஉட்பட்ட குழந்தைகளுக்கு கிடைக்கும் சேவைகளை ஒன்றிணைத்தல்,இதுபோன்றசேவைகளை வழங்கும்பல்வேறுதுறைகளைஅடையாளம் காணுதல்,சேவைவழங்குவதில்ஒத்துழைப்பு மற்றும் ஒருங்கிணைப்பு பற்றி ஆய்வு செய்தல்மற்றும்ஊட்டச்சத்துகுறைபாட்டை கையாளுவதில் அனைத்து தரப்பினரின் கருத்துக்களையும்புரிந்துகொள்வதுபற்றியும் இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இந்த ஆய்வுக்காக நகர்ப்புற மாதிரி பகுதியாக சென்னை மாநகரத்தில் சோளிங்கநல்லூர் மண்டலத்தில்உள்ளசெம்மஞ்சேரியும்மற்றும் ஊரகமாதிரிபகுதியாகதிருவள்ளூர்மாவட்டம் பூண்டி தாலுக்காவும் தேர்ந்தெடுக்கப்பட்டது. அங்கன்வாடி ஊழியர்கள், கிராமப்புற மற்றும் கிராம சுகாதார செவிலியர்கள் மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட அங்கன்வாடி குழந்தைகளின் தாய், தந்தையர்கள் ஆகியோரைக்கொண்டுஅரைநாள்பயிலரங்கம் மற்றும் குழு விவாதம் ஆகியன இரு ஆய்வு பகுதிகளிலும்நடத்தப்பட்டது.அரசுஅதிகாரிகள், சிறப்புகவனம்தேவைப்படும்குழந்தைகளின் பெற்றோர்கள் மற்றும் சிறு குழந்தைகளைக் கொண்டபுலம்பெயர்தாய்மார்கள்ஆகியோரிடம் நேர்காணல்நடத்தப்பட்டன.இக்குழந்தைகளின் உடல்நலம்மற்றும்ஊட்டச்சத்துநிலைகுறித்து தரவுகள் சேகரிக்கப்பட்டன.தமிழ்நாட்டில் குழந்தைகளின் முதல் 1000 நாட்களில் ஏற்படும்வளர்ச்சிக்குறைபாடுபிரச்சனைகள்– ஒருங்கிணைந்தஅரசுத்திட்டங்கள்வாயிலாக தீர்வு காண்பது குறித்து ஒரு ஆய்வறிக்கை தயாரிக்கப்பட்டு நடவடிக்கைக்காக சம்மபந்தப்பட்ட துறைகளுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

District Cooling System (DCS)

❖ விரைவான தொழில்துறை வளர்ச்சி மற்றும் புவி வெப்பமடைதல் காரணமாக குளிர் சாதனங்களுக்கான தேவை அதிகரித்து வருவதாலும் மின்சார பயன்பாட்டை திறம்பட குறைத்து பசுமை இல்லவாயு வெளியேற்றம் குறைப்பதன் மூலம் நிலையான நீடித்த வளர்ச்சியைஅடையபசுமைதொழில்நுட்பத்தின் மூலம் "District Cooling Solution" குறித்து UNEP உடன் இணைந்து அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது.

கொள்கைத் தயாரிப்பு

தமிழ்நாடு சுகாதார உரிமைக்கான நலக்கொள்கை

❖ மாநிலதிட்டக்குழுவினால்தமிழ்நாடுசுகாதார உரிமைக்கான நலக்கொள்கையினைத் தயார் செய்வதற்காக 23 உறுப்பினர்களைக் கொண்டபணிக்குழுஒன்றுஅமைக்கப்பட்டது. அப்பணிக் குழுவானது, பலமுறைக் கூடி விவாதித்து,தமிழ்நாடுசுகாதாரஉரிமைக்கான நலக்கொள்கை வரைவினைத் தயார் செய்து 27.10.2022 அன்று சமர்ப்பிக்கப்பட்டது.

திருநர் + கொள்கை

❖ இக்கொள்கை தொடர்புடைய மாநில திட்டக் குழுஉறுப்பினர்கள்(ம)இத்துறைவல்லுநர்கள்,

திருநர்+கொள்கையைத்தயார்செய்வதுகுறித்து விவாதங்களைமேற்கொண்டு,இக்கொள்கை மீதான சமூக நலம் (ம) மகளிர் உரிமைத் துறையின் கருத்துரைகளையும் இணைத்து இந்தக் கொள்கை வரைவு தயாரிக்கப்பட்டு 27.10.2022 அன்று சமர்ப்பிக்கப்பட்டது.

தொழில்மயமாக்கல் கொள்கை

- மாநிலத் திட்டக் குழு, தமிழ்நாட்டினை 2030க்குள் ஒரு டிரில்லியன் டாலர் பொருளாதாரமாக்குவதுஎன்றதொலைநோக்கு பார்வையுடன், தொழில்மயமாக்கல் கொள்கையினைத் தயாரித்து மாண்புமிகு தமிழ்நாடுமுதலமைச்சர்அவர்களிடம்அக்டோபர் 2022இல் சமர்ப்பித்துள்ளது.

- தொழில்வளர்ச்சியைவலுப்படுத்துவதற்கான உத்திசார் முன்னெடுப்புகளுடன், சந்தை நிலவரம்,தற்போதையநிலை,தொழில்பிரிவின் போக்குகள்,வாய்ப்புகள்உள்ளபகுதிகள்,சிறந்த தரத்திற்கானஅளவுகோல்கள்போன்றமுக்கிய கூறுகளின்அடிப்படையில்,தயாரிக்கப்பட்டுள்ள குறு,சிறு(ம)நடுத்தரத்தொழில்நிறுவனங்கள், மின்வாகனம்,தொழில்4.0,துணிநூல்,கைத்தறி, சுற்றுலாஎனஆறுகொள்கைஆவணங்களை உள்ளடக்கியதாகும் :

- இந்தமுன்னெடுப்புகள்மற்றும்பரிந்துரைகளின் அடிப்படையில், சம்பந்தப்பட்ட துறைகள் கொள்கைகளைத் தயாரித்து வெளியிட்டு வருகின்றன.

தமிழ்நாட்டிற்கான நிலையான நிலப்பயன்பாட்டுக் கொள்கை

- மாநிலத்திட்டக்குழு"தமிழ்நாட்டின்நிலையான நிலப்பயன்பாட்டு கொள்கையை"உருவாக்கி உள்ளது. இது நிலையான நிலம் மற்றும் நிருவாகத்தை சமரசம் செய்யாமல் உற்பத்தி நோக்கங்களுக்காகதரிசுநிலங்கள்மற்றும்பிற பயன்படுத்தப்படாதநிலங்களைமீட்டெடுப்பதில் கவனம் செலுத்துகிறது.

தமிழ்நாடு ஊரக மற்றும் நகர்புர வீட்டு வசதிக்கொள்கை

- தமிழ்நாட்டில் உள்ள ஊரக மற்றும் நகர்ப்புற பகுதிகளில் வீட்டு வசதி துறையில் உள்ள வாய்ப்புகள், சட்டப்பூர்வ மற்றும் நிறுவன கட்டமைப்பு,நகர்ப்புறவீட்டுவசதி,குடிசைப்பகுதி மேம்பாடு, வாடகை குடியிருப்புகள், எரிசக்தி பயன்பாடுபோன்றவற்றில்உள்ளவாய்ப்புகளை பரந்தஅளவில்பயன்படுத்திஅனைவருக்குமான வீட்டு வசதியை உறுதி செய்திட ஓர் ஒருங்கிணைந்தகொள்கையைஉருவாக்கிடும் நோக்கில் தமிழ்நாடு ஊரக மற்றும் நகர்ப்புற வீட்டு வசதிக் கொள்கை வரைவு மற்றும் தமிழ்நாடு ஒருங்கிணைந்த நகர வளர்ச்சிக் கொள்கைதயாரிக்கப்பட்டுள்ளது.அவ்வரைவுக் கொள்கை தக்க மேல்நடவடிக்கைக்காக அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

விவசாயம் மற்றும் குடிநீர் தேவைகளுக்கான நீர் ஆதார வளத்தை மேம்படுத்துவதற்கான கொள்கை

- நீர் வழங்கல் மற்றும் தேவை, நீர் பயன்பாடு ஆகியவற்றின் தற்போதைய சிக்கல்களை விரிவாகக் கருத்தில் கொண்டு செயல் திட்டத்தினை உருவாக்குவதே இக்கொள்கையின்முழுநோக்கமாகும்.மேலும், அனைத்துத் துறைகளிலும் (குடிநீர் மற்றும் வீட்டுத்தேவைகள்,விவசாயம்,தொழில்துறை போன்றவை) அதிகரித்து வரும் நீர்த்தேவை, சுற்றுச்சூழல்சீர்கேடுகள்,காலநிலைமாற்றம் போன்றதீவிரநிகழ்வுகளானவெள்ளம்மற்றும் வறட்சிபோன்றவைஅதிகரித்துவரும்சூழலில் இக்கொள்கைவரைவுதயாரிக்கப்பட்டுஅரசிற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

கிராமப்புற மற்றும் நகர்ப்புறங்களுக்கான கழிவு மேலாண்மைக்கான கொள்கை

- கழிவுகளை உற்பத்தி நிலையிலேயே குறைப்பதும், கழிவுகளை குறைத்தல், மறுபயன்பாடு மற்றும் மறுசுழற்சி செய்வதற்கான வசதிகளை ஏற்படுத்துதல் மற்றும் கழிவு மேலாண்மையின் ஒவ்வொரு செயல்பாடுகளையும் கண்டறிந்து ஒருங்கிணைக்கதெளிவாகவரையறுக்கப்பட்ட விதிகள் மற்றும் பொறுப்புகளை வழங்குவதே கொள்கையின் முக்கிய நோக்கமாகும். இப்பொருள் தொடர்பான வரைவு கொள்கை தயாரிக்கப்பட்டு இறுதி செய்யும் தருவாயில் உள்ளது.

தெருநாய்கள் மேலாண்மை மற்றும் கட்டுப்பாட்டுக் கொள்கை

- தெருநாய்கள் மற்றும் உரிமையாளரால் கைவிடப்பட்ட நாய்களின் பெருக்கத்தால் சாலையோரங்கள் மற்றும் பொது இடங்களில், நாய்கள் காயப்படுத்தப்படுதல், கொல்லப்படுதல் நாய்களால் மற்றும் இதர விலங்குகளால் விபத்து மற்றும் வெறிநாய்க்கடி போன்ற மனித விலங்குகளுக்கிடையேயான மோதல்கள் அதிகரித்துவருகின்றது. இப்பிரச்சினைகளுக்கு தீர்வு காண விலங்குகள் பிறப்பினை கட்டுப்படுத்துதல் திட்டம் மற்றும் விலங்கு காப்பகங்கள் அமைத்தல் போன்ற பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற போதிலும் சமீபகாலமாக இப்பிரச்சினை அதிகரித்து வருகின்றது. இவ்வகையான பிரச்சினைகளை சரியான முறையில் எதிர்கொள்ள வழிகாட்டுதலே இக்கொள்கையின் நோக்கம் ஆகும். இதற்கான கொள்கை வரைவு இறுதி செய்யும் தருவாயில் உள்ளது.

நீடித்த வளர்ச்சி இலக்குகள்

நீடித்த வளர்ச்சி இலக்குகள் தொடர்பாக தமிழ்நாட்டில் மேற்கொள்ளப்பட்ட பணிகள்

திறன் வளர்ப்பு

- அண்ணா நிருவாக பணியாளர்கள் பயிற்சி கல்லூரியில் ஐதராபாத்தைச் சார்ந்த இந்திய நிருவாகப் பணியாளர்கள் கல்லூரி நீடித்த வளர்ச்சி இலக்கு அலகுகளுடன் தொடர்புடைய துறைகளின் முகமை அலுவலர்களுக்கு நீடித்த வளர்ச்சி இலக்குகள் மற்றும் நல் ஆளுமை ஆகியவை குறித்து நான்கு நாட்கள் பயிற்சியானது, இரண்டு நாட்கள் காணொலிக் காட்சி வாயிலாகவும் இரண்டு நாட்கள் நேரடி பயிற்சியாகவும் நடத்தப்பட்டது.
- மாநிலத்திற்கெனதயாரிக்கப்பட்டுள்ளமாவட்ட நல் ஆளுமை குறியீடு வாயிலாக, துறை அலுவலர்களுக்கும் மாவட்ட அளவிலான அலுவலர்களுக்கும் தரவுகளை எளிதாக சேகரிப்பதன் பயன் குறித்தும், அதற்கான குறிகாட்டிகளை உருவாக்குவது குறித்தும் புத்தாக்கப் பயிற்சியானது அளிக்கப்பட்டுள்ளது.
- நித்தி ஆயோக் அமைப்பின் ஒரு அலுவலகமான Development Monitoring and Evaluation Office (DMEO) உடன் இணைந்து, திட்டங்களின் வெளிப்பாடு மற்றும் அவற்றின் விளைவுகள் குறித்த வரையறை குறித்த 2 நாட்கள் பயிற்சியில் புள்ளியியல் பயிற்சி நிறுவனத்தால் அண்ணா நிருவாகப் பணியாளர் கல்லூரியில் நடத்தப்பட்ட பயிற்சியில் மாநில அளவில் அலுவலர்கள் பங்கேற்றனர்.
- நீடித்த வளர்ச்சி இலக்குகள் உள்ளூர் மயமாக்கலுக்காக சிறந்த செயல்பாடுகளை கண்டறிவதற்காக, 55 ஊராட்சிகளின் தலைவர்கள், பல்வேறு துறைகளின் அலுவலர்கள் மற்றும் நீடித்த வளர்ச்சி இலக்கு ஒருங்கிணைப்பு மைய அலுவலர்கள் அடங்கிய குழுவினர் நீடித்த வளர்ச்சி இலக்குகளை திட்டங்கள் மூலம் எவ்வாறு உள்ளூர்மயமாக்கலாம் என்பது குறித்து உணர்த்தும் பொருட்டு கேரளாவில் 3 நாட்கள் பயிற்சி பெற்றனர்.
- திறன் மற்றும் வேலைவாய்ப்பு, போக்குவரத்து மற்றும் இயக்கம் ஆகியவற்றை உள்ளடக்கிய மாற்றுத்திறனாளிகளின் நலனுக்கான பல்துறை வரையறையை உருவாக்கும் பொருட்டு பணிப்பட்டறை நடத்தப்பட்டது.
- ரைட்ஸ் திட்டத்திற்காக (Rights Projects) பல்துறை வரையறையை இறுதி செய்வதற்காகவும், மாற்றுத்திறனாளிகள் நலனை உள்ளடக்கிய பல்வேறு திட்டங்களை ஒருங்கிணைத்தல் மற்றும் அவற்றின் விளைவுகளில் கவனம் செலுத்துவதற்கான உதவிகளையும் திட்டம் வளர்ச்சித் துறை, நீடித்த வளர்ச்சி இலக்குகள் ஒருங்கிணைப்பு மையமும் இணைந்து மேற்கொண்டது.
- இந்திய ஆட்சிப்பணி, இந்திய அயற்பணி மற்றும் இந்திய பொருளாதாரப் பணிகளின் புதிய அலுவலர்களுக்கானப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

- மேலும் நீடித்த வளர்ச்சி இலக்குகளில் மாநிலத்தின் செயல்பாடுகள் மற்றும் கண்காணிப்பு வரையறை எவ்வாறு நாளது வரையில் அவ்வப்போது புதுப்பிக்கப்பட்டது ஆகியவற்றை இரண்டு முதல் மூன்று தொகுதி இ.ஆ.ப., இ.அ.ப. மற்றும் இ.பொ.ப. அலுவலர்கள் மதிப்பீடு செய்தனர்.

- அரியானா மாநிலத்தின் நீடித்த வளர்ச்சி இலக்கு ஒருங்கிணைப்புமையத்தின் சிறந்த செயல்பாடு முறைமைகளை அறிந்துக் கொள்வதற்கும், அம்மாநிலத்தில் கடைபிடிக்கப்படும் விளைவுகள் சார்ந்த வரவு செலவு திட்ட மதிப்பீட்டிற்கான (Outcome Budgeting) பல்வேறு வழிமுறைகளை அறிவதற்காகவும், கூ.த.செ. திட்டம் மற்றும் வளர்ச்சித் துறை அவர்களின் தலைமையில் 10 துறைத் தலைமை அலுவலர்களுடன் கூடிய அலுவல் பயணம் மேற்கொள்ளப்பட்டது.

- நீடித்த வளர்ச்சி இலக்குகளை உள்ளூர் மயமாக்குதலின் ஒரு பகுதியாக ஊராட்சி அளவில் தொடர் பயிற்சிகள் நடைபெற்று வருகின்றன.

- ஒன்பது கருப்பொருள்களுடன் கூடிய பஞ்சாயத்து அளவிலான நீடித்த வளர்ச்சி இலக்குகளை உள்ளூர்மயமாக்கலுக்கான பயிற்சி மற்றும் பல்வேறு திட்டங்களுக்கான இணைப்புமற்றும் ஒட்டுமொத்த நீடித்தவளர்ச்சி இலக்குகளுக்கான வரையறை ஆகியவை குறித்து கிராம ஊராட்சிகளுக்கு விளக்கப்பட்டது.

- நீடித்த வளர்ச்சி இலக்குகள் வரையறை மற்றும் துறைகளின் திட்டங்கள் மூலமாக குழந்தைகளின் நலனை எவ்வாறு முன்னேற்றுவது என்பது குறித்த குழந்தைகள் வறுமை குறித்த அரசியல் பொருளாதார பகுப்பாய்வு பணிப்பட்டறையு னிசெஃப் அமைப்பு ஆதரவுடன் இணைந்து நடத்தப்பட்டது.

தொகுப்பு மாவட்ட கூட்டங்கள் வாயிலாக மாவட்ட அளவில் திட்டமிடுதல் மற்றும் உள்ளூர்மயமாக்கல் முயற்சிகள்

- தொகுப்பு மாவட்ட கூட்டங்கள் என்பது நீடித்த வளர்ச்சி இலக்குகளை ஊரக அளவில் உள்ளூர்மயமாக்கும் பொருட்டு மாவட்ட அளவில் உள்ள அலுவலர்கள் மாவட்ட மற்றும் மாவட்டத்திற்குட்பட்ட நிலைகளில் ஒருங்கிணைந்து வடிவமைத்தல் மற்றும் திட்டமிடலின் அவசியத்தை உணர்த்துவதையும், அவற்றினை அறிந்து கொள்ள செய்வதையும் நோக்கமாகக் கொண்டுள்ளன.

- இதன் தொடர்பாக 100 நாட்களில் அனைத்து மாவட்டங்களையும் உள்ளடக்கிய 8 தொகுப்பு மாவட்ட கூட்டங்கள் மாவட்ட ஆட்சியர்கள் தலைமையில் முதல்நிலை அலுவலர்களுக்கு நீடித்தவளர்ச்சி இலக்குகளை உள்ளூர்மயமாக்கலுக்கான முக்கியமான குறிகாட்டிகள் மற்றும் திட்டங்கள் குறித்து நடத்தப்பட்டன. இத்தொகுப்பு மாவட்ட கூட்டங்கள் கன்னியாகுமரி, காஞ்சிபுரம், திருவண்ணாமலை, விருதுநகர், புதுக்கோட்டை, கோயம்புத்தூர், சேலம் மற்றும் மயிலாடுதுறை ஆகிய மாவட்டங்களில் நடத்தப்பட்டன.

- மாவட்ட அளவில் பயிற்சி பெற்ற அலுவலர்கள் வாயிலாக அம்மாவட்டத்தில் உள்ள வட்டார அளவிலான அலுவலர்களுக்கு இதேபோன்ற தொரு பயிற்சிக் கூட்டங்கள் நடத்தப்பட்டுள்ளன.

- கேரளா மாநிலத்தில் நீடித்தவளர்ச்சி இலக்குகள் உள்ளூர் மயமாக்கல் செயற்படுத்தப்படுவது குறித்து களப் பார்வையுடன் கூடிய 2 நாட்கள் பயிற்சியானது கேரளா இன்ஸ்டிடியுட் ஆஃப் லோக்கல் அட்மினிஸ்ட்ரேஷன்–இல் நடத்தப்பட்டது.

மாவட்ட நல் ஆளுமை குறியீடு மாவட்ட அளவில் முன்னேற்றத்தை கண்காணித்தல்

- இந்திய நல்லாட்சி குறியீடு 2021–னை பின்பற்றி மாவட்ட நல்லாட்சி குறியீடு உருவாக்கப்பட்டுள்ளது. இதற்கான ஒரு அடிப்படை அறிக்கை தயாரிப்பில் உள்ளது. மாவட்டங்களிலிருந்து இதற்காக பெறப்படும் தரவுகளை பதிவேற்றம் செய்திட இணைய கண்காணிப்புப் பலகை வடிவமைத்திடும் பொறுப்பு தமிழ்நாடு மின் ஆளுமை முகமை வசம் அளிக்கப்பட்டுள்ளது.

தகவல் தொடர்பு மற்றும் தகவல் பரப்புகை

- சமூக ஊடகங்களின் தாக்கம், பல்வேறு தகவல் தொடர்புகளுக்கு வழிவகுத்துள்ளது.. இதன் வாயிலாக, உரையாடல்கள் விரைவாகவும் தகவல்கள் எளிதில் சேர்ப்பிக்கப்படுகிறது என்பதால், நீடித்த வளர்ச்சி இலக்குகள் தொடர்பான தகவல்களை பரப்புவதற்கும் பயன்படுத்தப்படுகிறது. நீடித்த வளர்ச்சி இலக்கு இலச்சினை உருவாக்கப்பட்டு மற்றும் #tnsdggoalkeepers எனும் சமூக ஊடகங்களின் கணக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் துவக்கி வைக்கப்பட்டுள்ளது.
- இன்ஸ்ட்ராகிராம் கணக்கு https://instagram.com/tamilnadusdg?igshid=MWI4MTIyMDE=, லிங்க்டுன் https:///www/linkedin.com/company/tamilnadusdg/; முகநூல் கணக்கு https://www.facebook.com/profile.php?id=100089661429180&sk=about; மற்றும் டிவிட்டர் கணக்கு https://twitter.com/tamilnadusdg?s=mkPi9vbm4sE4x1Sy i9Yg வாயிலாக நிறுவப்பட்டுள்ளது.
- நடத்தை மாற்ற தகவல் தொடர்பு செய்திகளை பரப்புவதற்கும், நீடித்த வளர்ச்சி இலக்குகளை அடைவதற்கான முக்கியமான செயல் நடவடிக்கைகளுக்கும் நீடித்த வளர்ச்சி இலக்குகளில் அச்சு மற்றும் உள்ளூர் ஊடகங்கள் மூலம் பரப்புவதற்கான கருத்துக்களை உருவாக்க ஒரு எழுத்துப் பட்டறை நடத்தப்பட்டது.
- நீடித்த வளர்ச்சி இலக்குகள் தொடர்பாக திட்டம் மற்றும் வளர்ச்சித் துறையால் வடிவமைக்கப்பட்டுள்ள புத்தகங்கள் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் வெளியிடப்பட்டன.
- நீடித்த வளர்ச்சி இலக்குகள் குறித்து பரப்புவதற்காக ஒவ்வொரு மாதமும் ஒரு நீடித்த வளர்ச்சி இலக்கில் நாம் கவனம் செலுத்தும் வகையில், மேசை நாட்காட்டியானது தயாரிக்கப்பட்டுள்ளது.
- உள்ளூர்மயமாக்கல் எனும் புத்தகத்தில் நீடித்த வளர்ச்சி இலக்குகளைப் பற்றி அறிந்து கொள்வதற்காக மாவட்ட மற்றும் மாவட்டத்திற்குட்பட்ட அளவில் மாநிலம் முழுவதும் திறன்களை உருவாக்குவதற்கான முயற்சிகள் குறித்த தகவல்கள் இடம் பெற்றுள்ளன.
- தரவுதாள் புத்தகத்தின் வாயிலாக, நீடித்த வளர்ச்சி இலக்குகளின் கீழ் வரும் பல்வேறு குறிகாட்டிகளில் மாநிலத்தின் முன்னேற்றத்தை அறிய இயலும்.
- நீடித்த வளர்ச்சி இலக்குகளுக்காக தமிழ்நாடு அரசு மேற்கொண்டுள்ள முதலீடுகள் – 100 முயற்சிகள் எனும் புத்தகம் பல்வேறுத் துறைகளில் 100 சிறப்பு முயற்சிகளைப் பற்றி தெரிவிக்கிறது.
- நீடித்த வளர்ச்சி இலக்குகளின் கருப்பொருள் சார்ந்த அணுகுமுறை – பஞ்சாயத்து அளவில் நீடித்த வளர்ச்சி இலக்குகளை அடைவதற்கு, அவற்றின் ஒன்பது கருப்பொருள் சார்ந்த அணுகுமுறையை விவரிக்கிறது.

கண்காணிப்பு வரையறை

- மாவட்ட நல்ஆளுமை தரவரிசை குறியீட்டிற்கான முதல் அடிப்படை ஆண்டு அறிக்கை பகிரப்பட்டது.
- மாவட்ட நல்ஆளுமை தரவரிசை குறியீட்டின் அடுத்த ஆண்டு அறிக்கை, வெளியீட்டிற்கான பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.
- மாவட்ட நல்ஆளுமை தரவரிசை குறியீடு ஆனது, 10 முக்கிய அளவீடுகளில் மாவட்டங்களின் செயல்பாட்டினை மதிப்பீடு செய்து மாவட்டங்களை தரவரிசைப்படுத்துகிறது. இதற்கான குறிகாட்டிகள் நேரிடையாக பயன் விளைவிப்பதாகவோ அல்லது துணை குறிகாட்டியாகவோ உள்ளது. நேரிடையாக பயன்விளைவிக்கும் குறிகாட்டிக்கு அதிகபட்ச மதிப்பெண் அளிக்கப்படுகிறது.
- மாநிலமற்றும் ஒன்றிய அரசின் திட்டங்களின் செயல்பாட்டினை கண்காணிப்பதற்காக, வளமிகுவட்டாரங்கள் மற்றும் ஊராட்சி வளர்ச்சி குறியீடு ஆகியவற்றினை முழுமையாக

கண்காணிப்பதற்கான குறிகாட்டிகள் இறுதி செய்யப்பட்டுள்ளன.

- வளமிகு வட்டாரங்கள் கண்காணிப்பு வரையறையை உருவாக்க, முன்னேற விழையும்மாவட்டங்கள்,முன்னேறவிழையும் வட்டாரங்கள் மற்றும் நீடித்த வளர்ச்சி குறிகாட்டிகளுக்கானவரையறைஉள்ளிட்ட, வெவ்வேறு கண்காணிப்பு வரையறைகளில் உள்ள குறிகாட்டிகளின் ஒப்பீடு பயன்படுத்தப்பட்டது.
- நீடித்த வளர்ச்சி இலக்குகளுக்கான மாவட்ட செயற்குழுக்கள் செயல்பட தொடங்கியது. அக்குழுக்களின் காலமுறைக் கூட்டங்கள் நடத்தப்பட்டு மாவட்ட குறிகாட்டிகளின் முன்னேற்றம் குறித்து ஆய்வு செய்யப்பட்டுள்ளது.

நீடித்த வளர்ச்சி இலக்குகளுக்காக வல்லுநர் கூட்டங்கள்

- நீடித்த வளர்ச்சி இலக்குகளை அடைவதன் பொருட்டு சில குறிகாட்டிகளில் மாற்றம் செய்தும், மாநிலத்தின் சிறப்பு திட்டங்களின் பயன்களை வெளிப்படுத்தும் வகையில்,புதிய குறிகாட்டிகளைசேர்த்தும்மாநிலகுறிகாட்டிகள் வரையறை 2.0 உருவாக்கப்பட உள்ளது.
- நீடித்த வளர்ச்சி இலக்கின் பணிகளை முன்னெடுத்துசெல்வதற்காகஐக்கியநாடுகள் வளர்ச்சி திட்டத்தின் ஆதரவுடன் நீடித்த வளர்ச்சி இலக்குகள் ஒருங்கிணைப்புமையம் உருவாக்கப்பட்டுள்ளது.
- கல்வி, தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள், ஆராய்ச்சி நிறுவனங்கள், பன்னாட்டு நிறுவனங்கள் சார்ந்த வல்லுநர்களை ஒரு பகுதியாக உள்ளடக்கிய தொழில்நுட்ப ஆலோசனைக் குழுக்கள், ஊட்டச்சத்து, பாலினம், திறன், வேலைவாய்ப்பு மற்றும் வாழ்வாதாரம்,போக்குவரத்துமற்றும்இயக்கம் ஆகியவற்றிற்காக அமைக்கப்பட்டுள்ளது.
- திறன், வேலைவாய்ப்பு மற்றும் வாழ்வாதாரம், போக்குவரத்து மற்றும் இயக்கம், சுகாதாரம் மற்றும்ஊட்டச்சத்துஆகியவற்றிற்கானமூன்று தொலைநோக்குஆவணங்களும்அவற்றுடன் தொடர்பான கருத்து குறிப்புரைகளும் தயாரிக்கப்பட்டுள்ளன. பாலினம் தொடர்பான தொலைநோக்குஆவணம்தயாரிப்பில்உள்ளது.
- நித்தி ஆயோக்,ஐக்கியநாடுகள்மகளிர் இந்திய அமைப்பு (UNWomen), யூனிசெஃப் மற்றும் மகளிர் பாதுகாப்பு முன்னெடுப்பு நிதி (WSAF) ஆகியவற்றின்பிரதிநிதிகளுடன்கூட்டங்கள் மற்றும் கலந்தாய்வுகள் நடத்தப்பட்டன.
- நித்தி ஆயோக்கின் துணைத் தலைவர் திரு. சுமன் பெரி அவர்கள் தலைமையிலான நித்தி ஆயோக் குழு,தமிழ்நாட்டிற்குவருகை புரிந்து மாண்புமிகு முதலமைச்சர் மற்றும் குழுவினர், மாநிலத் திட்டக்குழுவின் துணைத்தலைவர் மற்றும் இளம் இந்திய ஆட்சிப்பணி அலுவலர்களுடன் கலந்துரையாடினார்.

புதிய திட்டங்களை உள்ளூர் மயமாக்குதல்

- முன்னேற விழையும் வட்டாரங்கள் திட்டம், இத்துறையானது முறையான வசதி மற்றும் தேவையான மாநில வழிகாட்டுதல் மற்றும் அறிவுறுத்தல்களுடன் மாநிலத்தில் திட்டத்தினை அடையாளம் கண்டு செயல்படுத்துவதை ஊக்குவிக்கிறது.
- தேசியஅளவில்நடைபெற்றஊராட்சிவளர்ச்சி குறியீட்டின் ஆவண வெளியீடு மற்றும் இணையதுவக்கம்சார்ந்தபணிப்பட்டறையில் திட்டம்மற்றும்வளர்ச்சித்துறை,நீடித்தவளர்ச்சி இலக்குஒருங்கிணைப்புமையம்மற்றும்மாநில ஊரக வளர்ச்சி பயிற்சி நிறுவனம் ஆகியவை சார்ந்த அலுவலர்கள் உள்ளிட்ட குழுவினர் பங்கேற்றனர்.
- நீடித்த வளர்ச்சிக்கான இலக்குகளை உள்ளூர்மயமாக்குதல் மற்றும் உள்ளூர்மயமாக்குதலுக்கானசெயல்பாட்டினை தொடங்குவதற்கான வரையறை (ம) வழிமுறைகளை உருவாக்குதலின் ஒரு பகுதியாக ஊராட்சி வளர்ச்சிக் குறியீடு



(PDI) மாநில அளவில் முன்னெடுப்புகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

புதிய முயற்சிகள்

- பாலினத்தேவைக்கேற்றதிட்டமிடல்நிதிநிலை அறிக்கையை முன்னெடுத்து செல்வதற்கு, சமூகநலன்மற்றும்மகளிர்உரிமைத்துறைக்கு உரியஆதரவினைதிட்டம்மற்றும்வளர்ச்சித் துறை அளித்து வருவதுடன், இதற்கான பயிற்சிகள்முதுநிலைநீடித்தவளர்ச்சிஇலக்கு ஆலோசகரால் ஒருங்கிணைக்கப்பட்டது.
- பாலினத்தேவைக்கேற்றதிட்டமிடல்நிதிநிலை அறிக்கையை மாநில அரசின் வரவு செலவு திட்ட மதிப்பீடு பணிகளில் ஒரு பகுதியாக உருவாக்குதற்கான விவாதங்கள் மற்றும் கலந்தாய்வுகள் நடைபெற்றன.

முக்கிய நிகழ்வுகளில் பங்கு பெறுதல்

- தமிழ்நாடு அரசின் சமூக உள்ளடக்கத்தை மையமாககொண்டசமூகமுன்னேற்றத்திற்கான புதுமை முயற்சிகள் குறித்த கருத்துக்கள் வருடாந்திர நிலைத்தன்மை மாநாட்டில் முன்வைக்கப்பட்டன.
- பாலினத்தேவைக்கேற்றதிட்டமிடல்நிதிநிலை அறிக்கைதொடர்பாகநடத்தப்பட்டகூட்டத்தில் திட்டம்மற்றும்வளர்ச்சித்துறையின்வல்லுநரால் பயிற்சி மற்றும் தேவையான உதவிகள் அளிக்கப்பட்டுள்ளன.
- சிஎன்பிசி தொலைக்காட்சி மற்றும் சர்வதேச அரிமா சங்கத்தினர் இணைந்து ரோர் டு ரெஸ்டோர் (Roar to Restore) எனும் தலைப்பில் நடத்தியகூட்டத்தின் ஒருகுழுவிவாதத்தில், மாநிலத் திட்டக்குழுவின் உறுப்பினரான பேராசிரியர் சுல்தான் அகமது இஸ்மாயில் அவர்களும்நீடித்தவளர்ச்சிஇலக்குமுதுநிலை ஆலோசகரும் பங்கேற்று, நீடித்த வளர்ச்சி இலக்குகளை எட்டுவதற்காக மாநிலத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் பல்வேறு முன்னெடுப்புகள்,குடிமைசமூகஅமைப்புகள் மற்றும் பெறு நிறுவனங்களின் பங்கேற்பு ஆகியவை குறித்து விவாதித்தனர்.

மனிதவள மேலாண்மைத் துறை

- அரசுப் பணிகளுக்காக நடத்தப்படும் போட்டித் தேர்வுகள் அனைத்திலும் தமிழ்மொழிபாடத்தாள் கட்டாயமாக்கப்பட்டுள்ளது. இவ்வாணைக்கு சட்ட அங்கீகாரம் அளிக்கும்வகையில் தமிழ்நாடு அரசுப்பணியாளர்கள் (பணிநிபந்தனைகள்) சட்டம் 2016இல் பிரிவு 21A உருவாக்கப்பட்டுள்ளது.
- தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையத்தால் 12 போட்டி தேர்வுகளுக்கான அறிவிக்கைகள் வெளியீடு. 10 போட்டித் தேர்வுகள் நடத்தப்பட்டுள்ளன.
- தேர்வாணைய வரலாற்றிலேயே முதன் முறையாக துறைத் தேர்வுகளில், அனைத்து கொள்குறிவகைத் தேர்வுகளும் கணினி வழித் தேர்வாக அனைத்து மாவட்ட தேர்வு மையங்களிலும் நடத்தப்பட்டுள்ளன.
- தேர்வாணையவிண்ணப்பதாரர்களுக்குஏற்படும் சந்தேகங்களை உடனுக்குடன் தீர்வு காணும் வகையில், தேர்வாணைய அலுவலகத்தில் "குறைதீர் அழைப்பு மையம்".
- அரசுப் பணிகளில் நேரடி நியமனம் மூலம் பணி நியமனம் செய்யப்படுவதற்கான வயது உச்ச வரம்பு இரண்டு ஆண்டுகள் உயர்வு.
- கொரோனாதொற்றால்பெற்றோர் இருவரையும் இழந்த இளையோர்கள், அரசுப் பள்ளிகளில் தமிழ்மொழியில் பயின்ற நபர்கள் மற்றும் முதல் தலைமுறை பட்டதாரிகளுக்கு வேலை வாய்ப்பகங்கள் மூலம் முன்னுரிமை அடிப்படையில் பணி நியமனம்.
- பெண் அரசு ஊழியர்களுக்கு மகப்பேறுவிடுப்பு 12 மாதங்களாக உயர்வு.
- அரசுப் பணியாளர்களுக்கு அவர்களது பணித்திறனை மேம்படுத்தும் பொருட்டு பெற்றிடும் கூடுதல்கல்வித்தகுதிக்கு ஊக்கத் தொகை.
- புதியதாக தோற்றுவிக்கப்பட்ட செங்கல்பட்டு, இராணிப்பேட்டை,திருப்பத்தூர்,கள்ளக்குறிச்சி, மயிலாடுதுறை, தென்காசி ஆகிய மாவட்டங்களிலும் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு அலுவலகங்கள் உருவாக்கம்.
- ஊழல்தடுப்புஇயக்குநரகம்மாநிலம்முழுவதும் சென்னைமாநகர சரகம்,மத்தியசரகம்,வடக்கு சரகம், மேற்கு சரகம் மற்றும் தென் சரகம் என ஐந்து சரகங்களாகப் பிரிக்கப்பட்டு அவை அனைத்தும்காவல்கண்காணிப்பாளர்நிலையில் கண்காணிக்கப்படுகிறது.
- மனிதவளமேலாண்மைத்துறையில்மின்னணு அலுவலக (e-office) முறை தொடக்கம்.
- தமிழ்நாடு மாநிலப் பயிற்சிக் கொள்கை, 2022 செயல்பாட்டுக்கு கொண்டுவரப்பட்டுள்ளது. தலைமைச் செயலகத் துறைகள், அரசுத் துறைகள்,மாவட்டஆட்சியர்கள்,பொதுத்துறை நிறுவனங்கள்,வாரியங்கள்மற்றும்மாநகராட்சி அலுவலகங்களில்பணிபுரியும்பணியாளர்கள் / அலுவலர்களின் பணித்திறன் மேம்படும்.
- தமிழ்நாடு அரசின்பொதுத்துறைநிறுவனங்கள், கழகங்கள் மற்றும் தமிழ்நாடு அரசின் கட்டுப்பாட்டில் உள்ள சட்டப்பூர்வமான வாரியங்கள்மற்றும்நிறுவனங்கள்உள்ளிட்ட அமைப்புகளில் உள்ள சில பணியிடங்களை நிரப்பும்பணியினைதமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையத்திற்கு வழங்கும் விதமாக, தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய (கூடுதல் செயற்பணிகள்) சட்டம், 2022 இயற்றப்பட்டுள்ளது. அச்சட்டத்தினை நடைமுறைப்படுத்த ஏதுவாக, தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய (கூடுதல் செயற்பணிகள்) விதிகளும் இயற்றப்பட்டு, மேற்கூறியசட்டம்மட்டும்விதிகள்மாநிலத்தில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன.
- தமிழ்நாடுஅரசுப்பணியாளர்தேர்வாணையத்தால் நடத்தப்படும்தேர்வுகளில்தெரிவுப்பணிகளை தெளிவாகவும்முறையாகவும்மேற்கொள்ளவும், தேர்வுகளுக்குப்பிந்தையநடவடிக்கைகளை துரிதமாகவும் வெளிப்படையாகவும் கையாள்வதற்கும், ரூ.95 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு புதிய உயர் தொழில்நுட்பம் தேர்வாணையத்தில் அறிமுகப்படுத்தப்பட்டு செயல்பாட்டில் உள்ளது.



- தமிழ்நாடு அரசுப்பணியாளர்தேர்வாணையத்தில் முதலில்நான்குஉறுப்பினர்களும்,பின்னர்ஐந்து உறுப்பினர்களும் நியமனம்.
- கடந்தமூன்றாண்டுகளில்மாநிலத்தில்உள்ள தெரிவு முகமைகளான தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், ஆசிரியர் தேர்வு வாரியம்,மருத்துவப்பணியாளர்தேர்வுவாரியம், தமிழ்நாடு சீருடைப்பணியாளர்தேர்வுவாரியம் ஆகியவற்றின் மூலமாக வெவ்வேறு அரசுத் துறைகளிலுள்ளகாலிப்பணியிடங்களுக்காக நடத்தப்பட்ட போட்டித்தேர்வுகளின் மூலம் 27,858 அரசுப் பணியாளர்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

தொல்லியல் துறை

- ரூ.16.93 கோடியில் சர்ஜாமாடி, தஞ்சாவூர், டேனிஷ்கோட்டை,தரங்கம்பாடி மற்றும்மதுரை திருமலை நாயக்கர் அரண்மனை புனரமைப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.
- கொற்கையின்கரையோரப்பகுதிகளில்முன்கள ஆய்வு ரூ.150 இலட்சத்தில் மேற்கொள்ளத் திட்டம். இதில் தொல்லியல் துறையால் ரூ.64 இலட்சம் ஒப்பளிக்கப்பட்டது.
- தொல்லியல் அகழாய்வுகளை அறிவியல் முறைப்படி மேற்கொள்ளத் தொடரும் செலவினமாகரூ.5கோடியாகஉயர்த்திஒதுக்கீடு.
- ரூ.1.58 கோடி நிதி ஒதுக்கீட்டில் சிவகங்கை மாவட்டம்,கீழடியில்புதியஅருங்காட்சியகத்திற்கு 34 புதிய பணியிடங்கள் ஒப்பளிக்கப்பட்டு பணியாற்றி வருகிறார்கள்.
- தொல்பொருட்கள் மற்றும் கல்வெட்டுகளை மின்னணு முறையில் ஸ்கேன் செய்ய ரூ.60 இலட்சத்தில் இரண்டு உயர்நிலை கையடக்க 3D ஸ்கேனர் மற்றும் உபகரணங்கள் வழங்கப்பட்டது.
- 45ஆவது சென்னை புத்தகத் திருவிழாவில் 5,000 சதுர அடியில் அமைக்கப்பட்டுள்ளது.
- அண்ணா நூற்றாண்டு நூலகத்தில் 2022ஆம் ஆண்டில் "பண்டைய தமிழ்ப்பண்பாடும் மரபும்" என்னும் தலைப்பிலும் 2023ஆம் ஆண்டில் "தென்னிந்திய தொல்லியல் ஆய்வுகளில் தற்காலமுன்னேற்றங்கள்"என்னும்தலைப்பிலும் பன்னாட்டுக் கருத்தரங்குகள் நடைபெற்றன.



- திருநெல்வேலி நகரில் 13 ஏக்கர் பரப்பளவில் ரூ.33.02 கோடி மதிப்பீட்டில் "பொருநை அருங்காட்சியகம்" அமைக்கப்படவுள்ளது.
- சிவகங்கை மாவட்டம், கொந்தகை கிராமத்தில் ரூ.18.42 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள உலகத்தரம் வாய்ந்த புதிய அகழ்வைப்பகம் திறப்பு.
- 2024ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் "தெற்காசிய நாட்டு மட்பாண்டங்களின் வரலாறு, அறிவியல் மற்றும் தொழில்நுட்பம்" என்னும் தலைப்பிலும் பத்மஸ்ரீ ஐராவதம் மகாதேவன் அவர்களின் நினைவாக பன்னாட்டுக் கருத்தரங்கு இந்திய தொழில்நுட்பக் கழகத்தில் நடைபெற்றது.
- திருச்சுழி, புதுப்பட்டி, சேவல்பட்டி, பதினாலாம்பேர் மற்றும் மூவறை வென்றான் ஆகிய இடங்கள் பாதுகாக்கப்பட்ட சின்னங்களாக அறிவிக்கப்பட்டுள்ளன.
- 2024–ஆம் ஆண்டில் கீழடி மற்றும் கொந்தகை, சிவகங்கை மாவட்டம், வெம்பக்கோட்டை, விருதுநகர் மாவட்டம், கீழ்நமண்டி, திருவண்ணாமலை மாவட்டம், பொற்பனைக்கோட்டை, புதுக்கோட்டை மாவட்டம், திருமலாபுரம், தென்காசி மாவட்டம், சென்னானூர், கிருஷ்ணகிரி மாவட்டம், கொங்கல்நகரம், திருப்பூர் மாவட்டம், மருங்கூர், கடலூர் மாவட்டம் ஆகிய எட்டு இடங்களில் அகழாய்வுப் பணிகள் தொடங்கப்பட்டுள்ளன. இதில், சிவகங்கை மாவட்டம், கீழடி மற்றும் கொந்தகை மற்றும் விருதுநகர் மாவட்டம், வெம்பக்கோட்டை அகழாய்வுப் பணிகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 18.06.2024 அன்று காணொலி வாயிலாக தொடங்கிவைத்தார். அதே நாளில் பிற இடங்களிலும் அகழாய்வுப் பணிகள் தொடங்கப்பட்டன.
- 2022–2023ஆம் ஆண்டில் தருமபுரி மாவட்டம் பெரும்பாலையில் மேற்கொள்ளப்பட்ட அகழாய்வின் அறிக்கை 18.06.2024 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் வெளியிடப்பட்டது.
- செங்கல்பட்டு மாவட்டத்தில் உள்ள 138 கல்வெட்டுகளின் தமிழ் மற்றும் ஆங்கில விளக்க உரைகள் அடங்கிய தமிழ்நாட்டுக் கல்வெட்டுகள் தொகுதி – XXVIII 18.06.2024 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் வெளியிடப்பட்டது.
- கொற்கையில் மேற்கொள்ளப்பட்டதை போலவே அழகன்குளத்திலும் ரூ.65 இலட்சத்தில் இந்திய கடல்சார் பல்கலைக்கழகத்துடன் இணைந்து முன்கள ஆய்வு மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டு அதற்கான முதற்கட்ட பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

எரிசக்தித் துறை

தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம்

விவசாய மின் இணைப்புகள்

- 2021–2022ஆம் ஆண்டில் ரூ.803 கோடி செலவில் 2.13 இலட்சம் ஏக்கர் விவசாய நிலத்தினை உள்ளடக்கி ஒரு இலட்சம் விவசாய மின் இணைப்புகள்.
- 2022–2023ஆம் ஆண்டில், பொதுவரிசையின் கீழ், ரூ.816 கோடி செலவில் 50,000 விவசாய மின் இணைப்புகள் 86,384 ஏக்கர் விவசாய நிலத்தினை உள்ளடக்கி சிறப்புப் பிரிவின் கீழ், 902 விவசாய மின் இணைப்புகள்.
- 2023–2024ஆம் ஆண்டில் 50,000 விவசாய மின் இணைப்புகள் வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டு, இதுவரை 18,975 விவசாய மின் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன.

மின்னகம்

- "மின்னகம்" என்ற மாநில அளவிலான மையப்படுத்தப்பட்ட மின் நுகர்வோர் சேவை மையம் 9498794987 என்ற கைபேசி எண்ணுடன் தொடங்கி வைக்கப்பட்டு, நுகர்வோர்கள் மின்சாரத்துறை சார்ந்த 37 விதமான புகார்களையும் பதிவு செய்யும் வசதி.

மின் நிறுவு திறன்

- 32,595 மெகாவாட்டாக இருந்த தமிழ்நாட்டின் மொத்த மின் நிறுவுதிறன் 36,981 மெகாவாட்டாக உயர்த்தப்பட்டுள்ளது.

அதிகபட்ச மின் தேவை

- தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தின், மின்கட்டமைப்பு, 30.04.2024 அன்று ஒருநாளைக்கு அதிகபட்சமாக 454.32 மில்லியன் யூனிட் மின்சாரத்தையும் மற்றும் 20,830 மெகாவாட் உச்ச மின் தேவையை 02.05.2024 அன்றும் எவ்வித தடங்கலுமின்றி பூர்த்தி செய்துள்ளது. 24 மணி நேரமும் தடையில்லா மின்சாரம் வழங்கப்படுகிறது.
- சென்னையில் எட்டப்பட்ட அதிகபட்ச மின் தேவை 4,769 மெகாவாட் மற்றும் அதிகபட்ச ஒரு நாள்

மின்நுகர்வு101.755மில்லியன்யூனிட்ஆகியவை 31.05.2024 அன்று பூர்த்தி செய்துள்ளது.

புதுப்பிக்கத்தக்க எரிசக்தி

- 30.07.2024அன்றுகாற்றாலைமூலம்பெறப்பட்ட மின்சாரம் 5,899 மெகாவாட். 09.07.2022அன்று காற்றாலை மூலம் கிடைக்கப்பெற்ற அதிகபட்ச மின் உற்பத்தி 120.25 மில்லியன் யூனிட்டுகள்.
- 24.07.2024 அன்று சூரிய சக்தி மின் உற்பத்தி நிலையங்கள் மூலம் பெறப்பட்ட அதிகபட்ச மின்சாரம் 5,512 மெகாவாட். 23.04.2024 அன்று சூரிய சக்தி மின் உற்பத்தி நிலையங்கள் மூலம் கிடைக்கப்பெற்ற அதிகபட்ச மின் உற்பத்தி 40.50 மில்லியன் யூனிட்டுகள்.
- 4,390 மெகாவாட் சூரிய ஒளி மின் உற்பத்தி நிலையங்கள், தமிழ்நாடு மின் கட்டமைப்பில் இணைக்கப்பட்டுள்ளன. இதன்மூலம் சூரிய ஒளி மின் உற்பத்தி நிலையங்களின் மொத்த நிறுவு திறன் 8,901 மெகாவாட்டாக அதிகரிப்பு.
- 2021 – 2022ஆம் ஆண்டில் கூரை மேல் நிறுவப்பட்ட சூரிய மின் சக்தி திறனுக்காக, புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சகத்திலிருந்து (MNRE) பெறப்பட்ட ஊக்கத்தொகை ரூ. 7.9 கோடி.
- 12 மெகாவாட் தருமபுரி மற்றும் 15 மெகாவாட் எம்.ஆர்.கே. (கிருஷ்ணமூர்த்தி) கூட்டுறவு சர்க்கரை ஆலை இணை மின் திட்டம் இயக்கி வைக்கப்பட்டது.
- தமிழ்நாட்டில் தனியாருக்குச் சொந்தமான பழைய திறனற்ற 26.195 மெகாவாட் காற்றாலைகளை மீண்டும் வலுப்படுத்துதல்.

மின் உற்பத்தி

- தமிழ்நாடு மின் வாரியத்திற்குச் சொந்தமான அனல்மின் நிலையங்களின் மூலம் 2020–2021இல், உற்பத்தி செய்யப்பட்ட 15,554 மில்லியன் யூனிட்டுகள் மின்சாரம், 2021–2022ஆம் ஆண்டில் 20,391 மில்லியன் யூனிட்டுகளாக அதிகரித்தது. இது 31.1 சதவிகிதம் கூடுதலாகும். 2022–2023ஆம் ஆண்டில் 22,689 மில்லியன் யூனிட்டுகளாக அதிகரித்தது. இது



11.27 சதவிகிதம் கூடுதலாகும். மேலும், 2023–2024ஆம் ஆண்டில் 25,479 மில்லியன் யூனிட் மின்சாரம் உற்பத்தி செய்யப்பட்டது. இது 12.3 சதவிகிதம் கூடுதலாகும்.

- தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தின் புனல்நிலையங்களில் மின் உற்பத்தி 2021–2022 & 2022–2023 ஆண்டுகளில் மத்திய மின் ஆணையத்தால் நிர்ணயிக்கப்பட்ட இலக்கைவிட 1,660.36 மற்றும் 2,261.08 மில்லியன் யூனிட்டுகள் முறையே கூடுதலாக உற்பத்தி செய்யப்பட்டுள்ளது.
- கடந்த பத்து ஆண்டுகளில் 2022–2023இல் அதிகபட்ச மின் உற்பத்தியாக 6,174.08 மில்லியன் யூனிட்டுகள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது.
- 14 புனல் மின் நிலையங்களில் முந்தைய அதிகபட்ச மின் உற்பத்தியைவிட கூடுதலாக மின் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது.
- வழுதூர் எரிவாயு சுழலி மின் நிலையம், அலகு –1 தொடங்கப்பட்டதிலிருந்து அலகு சுமை காரணி (PLF) 100.83 சதவிகிதமாக 08.12.2022 அன்று சாதனை படைத்துள்ளது. மேலும் 95 மெகாவாட் என நிர்ணயிக்கப்பட்ட திறனைவிட அதிகமாக, 97 மெகாவாட் திறனில் 04.12.2022 அன்று 18 மணியளவில் அடைந்தது.

நிலக்கரி

- மகாநதி நிலக்கரி நிறுவனம் மற்றும் சிங்கரேணி நிலக்கரி நிறுவனங்களிடமிருந்து 2021–2022 ஆம் ஆண்டுகளில் முறையே 166.21 இலட்சம் டன் மற்றும் 175.13 இலட்சம் டன் நிலக்கரி கிடைக்கப் பெற்றது. இது 2023 ஆம் ஆண்டில் மேலும் அதிகரித்து 208.48 இலட்சம் டன் நிலக்கரி கிடைக்கப் பெற்றது. எனவே, கங்காவரம் மற்றும் தாம்ராதுறைமுகங்கள் மூலம் நிலக்கரி கப்பல்களில் ஏற்றி விரைவாக இறக்கு துறைமுகங்களுக்கு கொண்டு வரப்பட்டது.

மின் உற்பத்தி திட்டங்கள்

- மாநிலத்தின் சொந்த நிறுவு திறனை அதிகரிக்கும் பொருட்டு, நான்கு திட்டங்களுக்கான பணிகள் (அனல் மற்றும் புனல் மின் திட்டங்கள்) நடைபெற்று வருகின்றன.
- அதிக அளவு நிலக்கரியை குறுகிய காலத்தில் கையாள்வதற்காக, தூத்துக்குடி துறைமுகம் தளம்–1 இல் அதிக கொள்ளளவு கொண்ட புதிய இரண்டு நிலக்கரி கையாளும் இயந்திரங்கள் செயல்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டன.
- வடசென்னை அனல் மின் நிலையம் – III இல், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 07.03.2024 அன்று தொடங்கி வைக்கப்பட்டு, 800 மெகாவாட் முழு திறன் அடைந்து, 449 மில்லியன் யூனிட் உற்பத்தி செய்யப்பட்டது.
- வடசென்னை அனல் மின் நிலையம் – I இல் இருந்து கரி துகள்கள் வட சென்னை அனல் மின் திட்டம் – III ஐ பாதிக்காமல் இருப்பதற்காக, தூசித் திரை (Dust Screen) ரூ.38 கோடி செலவில் அமைப்பதற்கான பணி நிறைவு பெற்றது.

மின் தொடரமைப்பு

- 2021 ஆம் ஆண்டு முதல் 56 புதிய துணை மின் நிலையங்கள் 10,960 எம்.வி.ஏ. நிறுவுதிறனுடன் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளது.
- தற்போதுள்ள துணை மின் நிலையங்களில் 403 கூடுதல் மின்மாற்றிகள்/தரம் உயர்த்தப்பட்டு, கூடுதல் 7,938 எம்.வி.ஏ. திறனுடன் நிறுவப்பட்டுள்ளன.
- 3,120.05 சுற்று கி.மீ. மிக உயர் அழுத்த மின் பாதைகள் நிறுவப்பட்டு பயன்பாட்டிற்குக் கொண்டு வரப்பட்டன.
- மின் தொடரமைப்பு கட்டமைப்பில் தரமான மின் ஓட்டத்திற்காக மிக முக்கிய துணை மின் நிலையங்களில் 2,750 எம்.வி.ஏ.ஆர் திறனில் 17 எண்ணிக்கை எதிர்வினை கலன்கள் மற்றும் 214 எம்.வி.ஏ.ஆர் திறனில் 18 எண்ணிக்கை மின் தேக்கிகளால் இயக்கத்திற்கு கொண்டு வரப்பட்டுள்ளன.
- இரண்டு இயக்குதல் வட்டங்கள் (Operation Circle) மற்றும் இரண்டு புதிய பாதுகாத்தல் மற்றும் தகவல்தொடர்பு (Protection and Communication) வட்டங்கள் உருவாக்கப்பட்டுள்ளது.
- எவ்விதமின் தடங்கலுமின்றி உயர் மின் அழுத்த கோபுரங்கள் மற்றும் துணை மின் நிலையங்களில் மின் பராமரிப்புப் பணிகளை மேற்கொள்வதற்கு புதிய Hot lines கோட்டம் கொரட்டூரில் உருவாக்கப்பட்டுள்ளது.
- சென்னை கிண்டியில் கூடுதலாக ஒரு வளிம காப்பு உபகோட்டம் உருவாக்கப்பட்டது.

மின் விநியோகம்

- மின் பகிர்மானக் குழுமங்களின் நுகர்வோர் சேவை தர மதிப்பீடு (CSR–D) – கடந்த 2021–2022 ஆம் ஆண்டில். பொதுவகை நுகர்வோர் சேவை மதிப்பீட்டில், ஒட்டுமொத்த தரவரிசையில் 'B+' தர வரிசை பெற்றிருந்த தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம், நுகர்வோர்களுக்கு வழங்கப்பட்டு வரும் சேவைகளான மின் இணைப்பு வழங்குதல், கணக்கீடு மற்றும் வசூல் தவறுகளை சரிசெய்தல் மற்றும் குறைகளை நிவர்த்தி செய்தல் ஆகியவற்றில் மேற்கொண்ட சீரிய நடவடிக்கைகளின் பயனாக 2022–2023 ஆம் ஆண்டிற்கான நுகர்வோர் சேவை மதிப்பீட்டில், பல புள்ளிகள் முன்னேறி, ஒட்டுமொத்தத் தர வரிசையில் 'A' தரவரிசை பெற்று ஒன்றிய அரசின் பாராட்டைப் பெற்றுள்ளது.
- தஞ்சாவூர், திருவண்ணாமலை மற்றும் கரூர் ஆகிய இடங்களைத் தலைமையிடமாகக் கொண்டு மூன்று புதிய மண்டலங்கள் உருவாக்கப்பட்டுள்ளன.
- புதியதாக சேப்பாக்கம், சோழிங்கநல்லூர், பல்லாவரம், தேன்கனிக்கோட்டை, பென்னாகரம், திருவெண்ணெய்நல்லூர், ஊத்துக்குளி, வேடசந்தூர், ஜெயங்கொண்டம், சாத்தூர்



மற்றும் கெங்கவல்லி என 11 புதிய கோட்டங்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

- 29.03 இலட்சம் மின் இணைப்புகள் புதியதாக வழங்கப்பட்டன.
- ஒருங்கிணைந்த மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், அதிக மின்பளு மற்றும் குறைந்த மின்னழுத்தத்தை சரிசெய்ய நிறுவப்பட்ட மின்மாற்றிகளையும் சேர்த்து 60,930 புதிய மின்மாற்றிகள் நிறுவப்பட்டுள்ளன.
- டெல்டா மாவட்டங்களின் கடலோரம் அருகில் அமைந்துள்ள துணைமின் நிலையங்களுக்கு இடையே செல்லும் 33 கே.வி. மேனிலை உயரழுத்த மின் கம்பிகளை புதைவடங்களாக மாற்றி அமைத்து 9 ஆதார மின்னூட்டிகள் (Source Feeders) இயக்கத்திற்கு கொண்டு வரப்பட்டு தடையில்லா மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது.
- சுசீந்திரம் அருள்மிகு தாணுமாலயன் திருக்கோயில், ஸ்ரீரங்கம் அருள்மிகு ஸ்ரீரங்கநாதர் திருக்கோயில் மற்றும் கரூர் தான்தோன்றிமலை அருள்மிகு ஸ்ரீ கல்யாண வெங்கடரமண சுவாமி திருக்கோயில் ஆகிய கோயில்களின் தேரோடும் வீதிகளில் மேலே செல்லும் உயரழுத்த மின்கம்பிகள் புதைவட மின்பாதைகளாக மாற்றி அமைத்து இயக்கத்திற்கு கொண்டு வரப்பட்டன.
- 46 புதிய 33/11 கி.வோ. துணைமின் நிலையங்கள் நிறுவப்பட்டு இயக்கத்திற்கு கொண்டு வரப்பட்டிருக்கின்றன.
- 19,117 கி.மீ. உயர் அழுத்த மின் பாதைகள் நிறுவப்பட்டு பயன்பாட்டிற்குக் கொண்டு வரப்பட்டன.
- 35,762 கி.மீ. தாழ்வழுத்த மின் பாதைகள் நிறுவப்பட்டு பயன்பாட்டிற்குக் கொண்டு வரப்பட்டன.
- தற்போதுள்ள 33/11 கி.வோ துணை மின் நிலையங்களில் 29 கூடுதல் மின் மாற்றிகள் தரம் உயர்த்தப்பட்டுள்ளன.
- வடகிழக்குப் பருவமழை மற்றும் மாண்டோஸ் சூறாவளியின்போது, பாதிப்படைந்த மின் கம்பங்கள், மின் பாதைகள் மற்றும் மின் மாற்றிகளில் ஏற்பட்ட சேதங்கள் விரைந்து சரிசெய்யப்பட்டு மிகக் குறுகிய காலத்தில் மின் விநியோகம் சீர் செய்யப்பட்டது.
- மிக்ஜாம் புயல் காரணமாக ஏற்பட்ட சேதங்களை, 11,164 அதிகாரிகள் மற்றும் பணியாளர்களின் உதவியுடன் மறுசீரமைப்புப் பணிகள் 24 மணி நேரமும் இடைவேளையின்றி போர்க்கால அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டு, குறுகிய காலத்தில் மின் விநியோகம் சீரமைக்கப்பட்டது.
- தென் மாவட்டங்களில் 17.12.2023 மற்றும் 18.12.2023 ஆகிய நாட்களில் பெய்த வரலாறு காணாத அதீத கன மழையால் ஏற்பட்ட சேதங்களை, 5,920 அதிகாரிகள் மற்றும் பணியாளர்களின் உதவியுடன் மறுசீரமைப்புப் பணிகள் 24 மணி நேரமும் இடைவேளையின்றி போர்க்கால அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டு, குறுகிய காலத்தில் மின் விநியோகம் சீரமைக்கப்பட்டது.
- 61,78,023 ஒருங்கிணைந்த மற்றும் சிறப்பு பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.
- சென்னையில், மழைக்காலங்களின்போது மழை நீர் தேங்கும் இடங்களில் உள்ள மின் தூண் பெட்டிகள் (Pillar Box) கண்டறியப்பட்டு, 5,182 மின்தூண் பெட்டிகள் தரை மட்டத்திலிருந்து ஒரு மீட்டர் உயரத்திற்கு உயர்த்தப்பட்டுள்ளன.
- மழைக்காலங்களின்போதும் சீரான மின்சாரம் வழங்குவதற்காக, துணை மின் நிலையங்களில் உள்ள 41 திறன் மின் மாற்றிகளின் அடித்தளம் ஒரு மீட்டர் உயரத்திற்கு உயர்த்தப்பட்டன.

- உயரழுத்த மின் கட்டமைப்புகளில் பராமரிப்பு இல்லாமல் தடையில்லா மின்சாரம் வழங்க 5,195 வளையச் சுற்றுத்தர அமைப்புகள் (RMU) நிறுவப்பட்டுள்ளன.

தகவல் தொழில்நுட்பத் துறையின் மேம்பாட்டுப் பணிகள்

- மின் இணைப்பு எண்ணுடன் ஆதார் எண் இணைக்கும் பணி மிகக் குறுகிய காலத்தில் வெற்றிகரமாக முடிக்கப்பட்டது.
- புதிய விவசாய மின் இணைப்பு, கட்டண மாற்றம், பெயர் மாற்றம், சோலாரை சோலார் அல்லாததாக மாற்றுதல் மற்றும் மின்ரசீது பதிவிறக்கம் போன்ற அனைத்து தாழ்வழுத்த சேவைகளுக்கான வசதி ஆன்லைன் விண்ணப்ப போர்டல் உருவாக்கப்பட்டுள்ளது.
- இரத்து செய்யப்பட்ட விண்ணப்பங்களுக்கான தொகையை வங்கிப் பரிமாற்றம் மூலம் ஆன்லைனில் திரும்பப் பெறுவதற்கான மென்பொருள் செயல்படுத்தப்பட்டு வருகிறது.
- நுகர்வோருக்குப் பணம் செலுத்துவதற்காக ஒற்றைக் கட்டண நுழைவாயில் செயல்படுத்தப்பட்டுள்ளது.
- தாழ்வழுத்த தொழில்துறை நுகர்வோருக்கான விண்ணப்பங்கள் மற்றும் பெயர் பரிமாற்ற சமர்ப்பிப்பதற்கான ஒற்றைச் சாளர போர்டல்.
- நிறுவன வளத் திட்டமிடல் (ERP) செயல்படுத்தப்பட்டுள்ளது.
- மேம்படுத்தப்பட்ட TANGEDCO, TANTRANSCO, TNEB Ltd., இன் இணையதளங்கள்.
- வீட்டு உபயோக நுகர்வோருக்கான தேசிய சோலார் ரூஃப்டாப் போர்ட்டலுடன் ஒருங்கிணைப்பு.
- நுகர்வோருக்கு மறு வடிவமைப்பு செய்யப்பட்ட கைபேசி பயன்பாடு, கணக்கீட்டாளர்கள் மற்றும் உதவிப் பொறியாளர்களுக்கான மின் பயன்பாடு, மதிப்பீட்டிற்கான கைபேசி செயலி, விநியோகப் பிரிவு அலுவலகங்களுக்கான தினசரி வேலை ஒதுக்கீடு மற்றும் செயல்படுத்துதலுக்கான கைபேசி செயலி. டிஜிட்டல் லைஃப் சான்றிதழ் சமர்ப்பிப்புடன் ஓய்வூதியம் பெறுபவர்களுக்கான கைபேசி செயலி உருவாக்கப்பட்டுள்ளது.
- மின்திருட்டை ஆன்லைன் மூலம் பதிவுசெய்யும் வசதி.
- நுகர்வோருக்குத் திட்டமிடப்பட்ட மின் விநியோகத் தடைகள் பற்றிய SMS.
- தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தின் அனைத்து கள சொத்துக்களின் விவரங்கள் டிஜிட்டல் மயமாக்கப்பட்டுள்ளது. (ஜியோடேக்கிங்) இப்பணியை வெற்றிகரமாக நிறைவு செய்த இந்தியாவின் முதல் டிஸ்காம் ஆக நிலை நிறுத்தப்பட்டுள்ளது.
- பிற மென் பொருள் தகவல் தொழில்நுட்ப அமைப்புகளுடன் ஒருங்கிணைந்து கள பொறியாளர்களின் பயன்பாட்டிற்காக ஜி.ஐ.எஸ். இணைய முகப்பு செயல்படுத்தப்பட்டது.
- புதிய மின் இணைப்பு மென் பொருளுடன் ஒருங்கிணைக்கப்பட்டு, புதிய மின் நுகர்வோரின் விவரங்களை விடுபடாமல் வரைபடமாக்குவதை உறுதி செய்யப்பட்டுள்ளது.
- மின் இணைப்பு பாதிக்கப்பட்ட பகுதிகளை மின் தடம் வாரியாக வரைபடத்தில் நேரடிக் காட்சியாக மாறும் வகையில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.
- தமிழ்நாடு மின் தொடரமைப்புக் கழகத்தின் மிக உயரழுத்த சொத்துக்களை டிஜிட்டல்மயமாக்கும் பணி வெற்றிகரமாக நிறைவடைந்துள்ளது.
- நுகர்வோர் இருப்பிடத்தை மறு சரிபார்ப்பு செய்யவும், தகவல் அட்டவணைப்படுத்தவும் வாரிய பொறியாளர்களைக் கொண்டு உருவாக்கப்பட்ட "TNEB GIS" கைபேசி செயலி அறிமுகப்படுத்தப்பட்டது.
- களப்பணியாளர்களின் பாதுகாப்பை உறுதி செய்யும் முன்னோடி முயற்சியான "TNEB SAFETY" என்ற கைபேசி செயலி அறிமுகப்படுத்தப்பட்டது.
- புவியியல் தகவல் முறைமையை வாரிய பொறியாளர்களைக் கொண்டு செயல்படுத்தியதன் விளைவாக ரூ.200 கோடி செலவு சேமிப்பு ஏற்பட்டுள்ளது,
- தி.நகர் பொலிவுறு நகரம் எ.பி.டி. பகுதியில் 1.3 இலட்சம் நுகர்வோர்களுக்கு எ.எம்.ஐ.

தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி ஸ்மார்ட் மீட்டரிங்கில் முன்னோடித் திட்டம் வெற்றிகரமாக செயல்படுத்தப்பட்டது வணிகச் செயல்பாட்டை நெறிப்படுத்தியுள்ளது ஒரு புதுமையான சாதனையாகும்.

- தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தில் சமூக ஊடக மேலாண்மை செம்மையாக செயல்படுத்தப்பட்டு வருகின்றது.
- கண்ணாடி ஒளியிழை தொடர்புவலைப்பின்னல் மூலம் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தின் 120 இடங்களுக்கு மாற்றுவழி இணைப்பாக செயல்படுத்தப்பட்டு வருகின்றது.
- முக அடையாள வருகைப் பதிவேட்டு முறை செயலாக்கம் தலைமையகத்தில் செயல்படுத்தப்பட்டு வருகின்றது.

விருதுகள்

- தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம் நிறுவன வள திட்டமிடல் (ERP) செயல்படுத்தியதற்கு 2022இல் – SKOCH தங்க விருது.
- தொழில்நுட்பத்துடன் கூடிய தானியங்கி மின் அளவிகள் காற்றாலை மின் உற்பத்தி நிலையங்களில் பொருத்தியதற்கான வெள்ளி SKOCH விருது.
- தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம், இந்திய ஸ்மார்ட் கிரிட் ஃபோரம் இன்னோவேஷன் விருது 2023இல் பங்கேற்று புதுப்பிக்கத்தக்க மின் உற்பத்தி நிலையங்களில் தானியங்கி மின் அளவிகள் பொருத்தி செயல்படுத்தியமைக்கான வைர விருதைப் பெற்றுள்ளது.
- "இந்தியன் எக்ஸ்பிரஸ்" குழுமத்தின் எக்ஸ்பிரஸ் கம்ப்யூட்டர் ஐடி எக்ஸலன்ஸ் விருது மற்றும் ஜிஐஎஸ் அமலாக்கத்திற்காக ஸ்கோச் "ஆர்டர் ஆஃப் மெரிட்" விருது ஆகியவற்றைப் பெற்றது.
- பாரதீப் துறைமுகத்தில் நிலக்கரியைக் கையாள்வதில் 2021–2022ஆம் ஆண்டிற்கான "சிறந்த ஏற்றுமதியாளர்" (10.90 MMT) என தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்திற்கு விருது.
- "இந்திய விண்ட் எனர்ஜி ஃபோரம் லீடர்ஷிப் விருதுகள் 2023" என்ற அமைப்பிலிருந்து புதுப்பிக்கத்தக்க எரிசக்தி உற்பத்தியாளர்களுக்கான (RE Generators) தானியங்கி மின் அளவிகளை (AMR) பொருத்தியதற்கான "இந்த ஆண்டின் மிகவும் முற்போக்கான நிலை" என்ற வணிகச் சிறப்பு விருதைப் பெற்றது.
- தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம் வினைத்திறன்மிகு மின்னளவிகளை தியாகராயநகர் சென்னை ஸ்மார்ட் சிட்டி பகுதியில் நிறுவியதற்கு SKOCH தங்க விருது.
- 2022–2023ஆம் ஆண்டில் 15.32 மில்லியன் மெட்ரிக் டன் நிலக்கரியினை பாரதீப் துறைமுகத்தில் கையாண்டதன் பொருட்டு "சிறந்த ஏற்றுமதியாளர் விருது" – தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்திற்கு பாரதீப் துறைமுகத்தால் வழங்கப்பட்டது.
- 2022–2023ஆம் ஆண்டில் 8.02 மில்லியன் மெட்ரிக்டன் நிலக்கரியினை எண்ணூர் / காமராஜர் துறைமுகத்தில் கையாண்டதன் பொருட்டு " சிறந்த வணிக கூட்டாளர் விருது"– தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்திற்கு காமராஜர் துறைமுகத்தால் வழங்கப்பட்டது.
- கடந்த 27.12.2023 அன்று தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தால் கப்பலிலிருந்து ஒரே நாளில் 61,940 மெட்ரிக் டன் நிலக்கரியினை இறக்கி சாதனை படைத்ததற்காக தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்திற்கு "சாதனை விருது" காமராஜர் துறைமுகத்தால் வழங்கப்பட்டது.

சேமிப்பு

- 2021–2022ஆம் நிதியாண்டில் தற்போதுள்ள மின் உற்பத்தி நிலையங்களின் திறமையான செயல்பாடு, வட்டி விகிதம் குறைப்பு, உள்ளிட்ட பல்வேறு நடவடிக்கைகள் மூலம் ரூ.2,745 கோடி சேமிப்பு.
- 2022–2023ஆம் நிதியாண்டில் அனல் மின் நிலையத்தின் இயக்கம் மற்றும் பராமரிப்பு



செலவுகளைக்குறைத்தல்,நிலக்கரிகையாளும் கட்டணத்தில்சேமிப்பு,நிலக்கரிபோக்குவரத்துக் கப்பல்களைக் குறைந்த மதிப்பிலான வாடகையில் நீண்ட காலத்திற்கு ஒப்பந்தம் செய்தல், கூடுதல் கொள்ளளவு கப்பல்களை இயக்குதல்,கடன்களுக்கானவட்டிவிகிதங்கள் குறைப்பு, மத்திய மின் தொடரமைப்பு கட்டண குறைப்பு, உலர் சாம்பல் விற்பனை மூலம் வருவாய் பெருக்கம், மின் பரிமாற்ற ஏற்பாடு ஆகியவற்றின் மூலம் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம் மற்றும் தமிழ்நாடு மின் தொடரமைப்புக் கழகம், செலவினங்களில் ரூ.1,090 கோடி சேமிப்பு.

மின் கட்டண திருத்தத்திற்குப் பின் நுகர்வோர்களுக்கு வழங்கப்பட்ட சலுகைகள்

- 10.09.2022முதல்திருத்தப்பட்டமின்கட்டணத்தில், வீட்டு மின் நுகர்வோர்களுக்கு நிலைக் கட்டணம் இரு மாதங்களுக்கு ரூ.20 முதல் ரூ.50வரை செலுத்துவதிலிருந்துமுழுவிலக்கு அளிக்கப்பட்டு,நுகர்வோர்களிடம் இருந்து மின் பயன்பாட்டுகட்டணம்மட்டுமேவசூலிக்கப்பட்டு, தமிழ்நாட்டில் உள்ள 2.36 கோடி வீட்டு மின் நுகர்வோர்கள் பயன்.
- கைத்தறிநெசவாளர்களுக்குஇருமாதங்களுக்கு 200 யூனிட்டுகள் மட்டுமே இலவசம் என்ற நிலைமாற்றியமைக்கப்பட்டுஇருமாதங்களுக்கு

300 யூனிட்டுகள் இலவசம் என உயர்த்தி வழங்கப்பட்டு,தமிழ்நாட்டிலுள்ள73,642கைத்தறி நுகர்வோர்கள் பயன்.

- விசைத்தறி நெசவாளர்களுக்கு இரு மாதங்களுக்கு 750 யூனிட்டுகள் இலவசம் என்ற நிலை மாற்றப்பட்டு இரு மாதங்களுக்கு 1,000யூனிட்டுகள்இலவசம்எனஉயர்த்தப்பட்டது. மேலும், மின் கட்டண உயர்வில் 35 காசுகள் / யூனிட் இரு மாதங்களுக்கு 1,001 யூனிட் முதல் 1,500 யூனிட் வரை மற்றும் 70 காசுகள் / யூனிட் இருமாதங்களுக்கு1,500யூனிட்டுகளுக்குமேல் உள்ள மின் நுகர்வுக்கு குறைக்கப்பட்டுள்ளது. இதனால், தமிழ்நாட்டில் உள்ள 1,68,000 விசைத்தறி நுகர்வோர்கள் இந்த அரசை மனதாரப் பாராட்டி வருகின்றனர்.

- ஆரம்பத்தில் தாழ்வழுத்த குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழிற்சாலைகளுக்கு உச்ச நேர மின் நுகர்விற்கான கட்டணமானது (ToD Charges) 25 சதவிகிதத்திலிருந்து 15 சதவிகிதமாக 08.11.2022 முதல் குறைக்கப்பட்டு, கூடுதல் சலுகையாக ஸ்மார்ட் மீட்டர் (Smart meter) பொருத்தப்படும் வரை உச்ச நேர நுகர்வுக்கான மின் கட்டணம் வசூலிக்கப்படாது என 10.11.2023 முதல் அறிவித்துள்ளது. இந்த குறைக்கப்பட்ட கட்டணங்களை தமிழ்நாடு அரசு மானியமாக வழங்குகிறது. இதனால் சுமார் 3.11 இலட்சம் தாழ்வழுத்த தொழிற்சாலை நுகர்வோர்கள் பயன்.

- தமிழ்நாடு அரசு, மாண்பமை தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறைஆணையத்திற்கு2023–2024ஆம் நிதியாண்டிற்கான மின் கட்டண ஆணைக்கு ஏப்ரல் 2022 முதல் ஏப்ரல் 2023 வரையிலான நுகர்வோர் விலைக் குறியீட்டுக்கு பதிலாக ஆகஸ்ட் 2022முதல்ஏப்ரல்2023வரையிலான நுகர்வோர் விலைக் குறியீட்டைக் கருத்தில் கொள்ளுமாறு,கொள்கை உத்தரவுபிறப்பித்தது, இதன் மூலம் மின் கட்டண உயர்வு 4.7 சதவிகிதத்திலிருந்து 2.18 சதவிகிதமாக குறைக்கப்பட்டது.எனவே,இந்தகுறைக்கப்பட்ட மின் கட்டணத்தினால் அனைத்து 3.30 கோடி நுகர்வோர்களும் பயன்.

- 2.36 கோடி வீட்டு நுகர்வோர்களுக்கு, 01.07.2023முதல்2.18சதவிகிதம்மின்கட்டணம் உயர்த்தப்படவில்லை. இதனால் ஏற்பட்ட கூடுதல் மின் மானிய நிதிச் சுமையை தமிழ்நாடு அரசு ஏற்றுக்கொண்டது.

- சிறிய வீட்டு நுகர்வோர்களுக்கு பயனளிக்கும் வகையில், தமிழ்நாடு அரசு சிலவகை, அடுக்குமாடி குடியிருப்புகளுக்கு, கட்டணச் சலுகையாக தாழ்வழுத்த வீதப்பட்டி I D யின் கீழ் உள்ள பொதுவான வசதிகளுக்கான கட்டணத்தையூனிட் ஒன்றிக்குரூ.8.15லிருந்து ரூ.5.50ஆகக் குறைத்து ரூ.2.65ஐ மானியமாக வழங்குகிறது. இதற்காக புதியதாக தாழ்வழுத்த வீதப்பட்டி IE அறிமுகப்படுத்தி 01.11.2023 முதல் அமல்படுத்தப்பட்டுள்ளது. இந்த வீதப்பட்டி மின்தூக்கி வசதி இல்லாத அடுக்குமாடி குடியிருப்புகளில் பொது விநியோகம் அதாவது 10 குடியிருப்பாளர்களுக்கு குறைவாகவோ அல்லது சமமாகவோ மற்றும் பொதுவான விளக்குகள் மற்றும் நீர் விநியோகத்திற்காக மூன்றுதளங்களுக்குக்குறைவாகவோஅல்லது சமமாகவோ உள்ள சிறிய அடுக்குமாடி குடியிருப்புகளுக்குப் பொருந்தும்.

- LT III Bஇன் கீழ் உள்ள குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களை ஊக்குவிக்கும் வகையில் 10.11.2023 முதல், சூரிய ஒளி மேற்கூரை மின் உற்பத்திக்கான வலையமைப்புக்கட்டணத்தினை50சதவிகிதம் (Solar Roof top Network Charges) குறைத்துள்ளது. இந்த 50 சதவிகிதம் குறைக்கப்பட்ட வலையமைப்புக்கட்டணத்தினால்தமிழ்நாட்டில் உள்ள 3.11 இலட்சம் தொழில் நிறுவனங்கள் பயன்.

- பொதுமக்களிடம்படிக்கும்திறனைமேம்படுத்தும் விதமாக வணிக ரீதியில் இயங்காத நூலகங்களுக்கான மின் கட்டணத்தினை மானியம் இல்லா வீட்டு விகிதப்பட்டியலில் கணக்கீடு செய்வதற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டு 30 சதவிகித கட்டணம் குறைக்கப்பட்டு, பல நூலகங்கள் பயன்.

தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு முகமை

புதுப்பிக்கத்தக்க சேவை எரிசக்தி நிறுவனத்தின் மூலம் (RESCO) அரசு அலுவலகங்களில் சூரிய மேற்கூரை மின் அமைப்புகள்

- மொத்த திறனான 936.585 கிலோ வாட்டில் 33 எண்ணிக்கையில், 22 அரசு கட்டடங்களில் 622.96 கி.வா. திறன் கொண்ட சூரிய மேற்கூரை நிறுவப்பட்டுள்ளது மற்றும் 11 அரசு கட்டடங்களில் 313.625 கி.வா. திறன் கொண்ட சூரிய மேற்கூரை நிறுவும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மூலதன செலவினத்தின் மூலம் (CAPEX) அரசு அலுவலகங்களில் சூரிய மேற்கூரை மின் அமைப்புகள்

- 332 அரசு மேல்நிலை/உயர்நிலைப் பள்ளிகளில் மொத்த திறனான 1,259 கிலோ வாட்டில் 221 பள்ளிகளில் 867 கி.வா. திறன் கொண்ட சூரிய மேற்கூரை மின் அமைப்புகள் நிறுவப்பட்டு, 111 அரசு உயர்நிலை / மேல்நிலைப் பள்ளிகளில் 313.625 கி.வா. திறன் கொண்ட சூரிய மேற்கூரை அமைப்பு நிறுவும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.
- 65 கி.வாட் திறன் கொண்ட சூரிய மேற்கூரை அமைப்புகளுடன் ஒரு நாளைக்கு (3 எண்ணிக்கை) 500 லிட்டர் திறன் கொண்ட சூரிய சக்தியில் இயங்கும் சுடு நீர் அமைப்புகள் நெடுஞ்சாலை ஆராய்ச்சி மற்றும் பயிற்சி மையத்தில் அமைக்கப்பட்டுள்ளன.
- 110 கி.வாட் சூரிய மேற்கூரை அமைப்புகளுடன் 20 வாட் சூரிய திறனில் இயங்கும் தெரு விளக்குகள் 50 தமிழ்நாடு மூலிகைப் பண்ணைகள் மற்றும் மூலிகை மருந்து கழகத்தில் நிறுவப்பட்டுள்ளன.
- 300 கி.வாட் சூரிய மேற்கூரை அமைப்புகள் பெரியார் பல்கலைக்கழகத்தில் நிறுவப்பட்டுள்ளன.
- 160 கி.வாட் சூரிய மேற்கூரை அமைப்புகள் மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தில் நிறுவப்பட்டுள்ளன.
- 10,038 கி.வா திறன் கொண்ட கட்டமைப்புடன் இணைக்கப்பட்ட சூரிய மேற்கூரை அமைப்புகள் (GCRTS Phase-II) திட்டத்தில் நிறுவப்பட்டு 2,170 வீட்டு நுகர்வோர்கள் பயன்.
- சூரிய சக்தியில் இயங்கும் 20 தெரு விளக்குகள் அமலாக்கப்பிரிவின் சோதனைச் சாவடியில் நிறுவப்பட்டுள்ளன.
- 20 மெகாவாட் மொத்த திறன் கொண்ட மூலதன செலவினத்தின் மூலம் கட்டமைப்புடன் இணைக்கப்பட்ட சூரிய மேற்கூரை அமைப்புகள் அரசு கட்டடங்கள், நீதிமன்ற வளாகங்கள், அரசு நடத்தும் தொழில்துறை அலகுகள் மற்றும் அரசு நடத்தும் கல்வி நிறுவனங்களில் நிறுவுவதற்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளது.

தமிழ்நாடு மின் ஆய்வுத் துறை

- உதவி மின் ஆய்வாளர் மற்றும் இளநிலை மின் ஆய்வாளர் பதவிக்கு நேரடி நியமனம் மூலம் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் தெரிவு செய்யப்பட்டு நியமனம் செய்யப்பட்ட பன்னிரண்டு உதவி மின் ஆய்வாளர்கள் மற்றும் எட்டு இளநிலை மின் ஆய்வாளர்களுக்கு பணி அமர்வு ஆணை வழங்கப்பட்டுள்ளது.
- மின் நுகர்வோர், மின் வழங்குவோர், மின் உற்பத்தி நிறுவனங்கள் மற்றும் மின் ஒப்பந்ததாரர்கள் பயனடையும் வகையில் அரசு மின்னியல் தர நிர்ணய ஆய்வுக் கூடத்திற்கு, ஆய்வுக் கூடத்திற்கான தேசிய அங்கீகார வாரியத்தில் இருந்து ISO – 17025 சர்வதேச தரச்சான்று பெறப்பட்டுள்ளது.

❖ ❖ ❖

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை, சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறை, வறுமை ஒழிப்புத் திட்டங்கள் மற்றும் ஊரகக் கடன்கள்



திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள்

மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர்

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை

விளையாட்டு வீரர்களுக்கு உயரிய ஊக்கத் தொகை

- சர்வதேச மற்றும் தேசிய அளவிலான விளையாட்டுப் போட்டிகளில் பதக்கங்கள் வென்ற மாற்றுத்திறனாளி விளையாட்டு வீரர்- வீராங்கனைகள் உள்ளிட்ட 3,345 வீரர் - வீராங்கனைகளுக்கு ரூ.104.22 கோடி உயரிய ஊக்கத்தொகையாக வழங்கப்பட்டுள்ளது.

தலைசிறந்த விளையாட்டு வீரர்களுக்கான சிறப்பு உதவித்தொகை (Elite)

- 2023-2024ஆம் ஆண்டுக்கான பட்ஜெட் அறிவிப்பில், இத்திட்டத்தின்கீழ் விளையாட்டு வீரர்களுக்கு வழங்கப்பட்டு வந்த ஊக்கத் தொகை ரூ.25 இலட்சத்தை 30 இலட்சமாக உயர்த்தியதோடு இத்திட்டத்தில் பயன் பெறும் பயனாளிகளின் எண்ணிக்கையை மாண்புமிகு அமைச்சர் அவர்களால் 12 லிருந்து 25-ஆக இரட்டிப்பாக்கப்பட்டுள்ளது.

பன்னாட்டு அளவிலான போட்டிகளில் பதக்கங்கள் பெறுவதற்கு ஊக்குவிப்பு திட்டம் (MIMS)

- சர்வதேச அளவில் பதக்கங்களைப் பெறும் நோக்கத்துடன் விளையாட்டுத் திறமைகளை அங்கீகரித்து வளர்க்க, அரசாங்கம் 2018இல் இத்திட்டம் அறிமுகப்படுத்தியது.
- இத்திட்டத்தின்கீழ் உள்ள விளையாட்டு வீரர்களுக்கு அவர்களின் பண உதவி ரூ.10 இலட்சத்தில் இருந்து ரூ.12 இலட்சமாக உயர்த்தப்பட்டதுடன் இந்த திட்டத்தின் கீழ் 38 பயனாளிகள் பயனடைந்துள்ளனர்.



பயிற்றுநர்கள் நியமனம்

- மாநில அரசால் 76 புதிய பயிற்றுநர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். இந்த முயற்சியின் வழிவகையில், 4 உயர் செயல்திறன் கொண்ட வெளிநாட்டு பயிற்றுநர்கள் மற்றும் 5 நிபுணத்துவம் வாய்ந்த பயிற்றுநர்கள் மற்றும் 2 பாரா விளையாட்டு பயிற்றுநர்கள் சர்வதேச அளவிலான பயிற்சி அளிப்பதற்காக நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

விருதுகள் மற்றும் அங்கீகாரங்கள்

- CII விளையாட்டு வணிக விருது 2023–ற்கான "விளையாட்டு வளர்ச்சியை ஊக்குவிக்கும் சிறந்த மாநிலமாக" தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.
- தமிழக வீரர்களின் சாதனைகளை அங்கீகரிக்க இந்து ஸ்போர்ட்ஸ்டார் ஏசஸ் விருது வழங்கும் நிகழ்ச்சியில் 2023–ற்கான "விளையாட்டை ஊக்குவிப்பதில் சிறந்த மாநிலம்" என்று தமிழ்நாடு அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

முதலமைச்சர் மாநில இளைஞர் விருது

- 2022ஆம் ஆண்டு 3 ஆண்கள் மற்றும் 1 பெண் மற்றும் 2023ஆம் ஆண்டு 4 ஆண்கள் மற்றும் 3 பெண்கள் தேர்வு செய்யப்பட்டு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் ரூ.1 இலட்சம் ரொக்கப் பரிசு, பதக்கம் மற்றும் சான்றிதழ் வழங்கப்பட்டது.

கலைஞர் விளையட்டு உபகரணங்கள் வழங்கும் திட்டம்

- தமிழ்நாட்டின் 12525 கிராம பஞ்சாயத்துகளுக்கு டாக்டர் கலைஞர் விளையாட்டு உபகரணங்கள் திட்டத்தின் கீழ் ரூ.85.99 கோடி செலவில் விளையாட்டு உபகரணங்கள் வழங்கப்படுகின்றன.
- ஒவ்வொரு தொகுப்பிலும் கிரிக்கெட், கால்பந்து, கைப்பந்து, த்ரோபால், கபடி, செஸ், கேரம், பூப்பந்து, டென்னிகாய்ட் மற்றும் சிலம்பம் போன்ற பல்வேறு விளையாட்டுகளுக்கான 33 வெவ்வேறு விளையாட்டு உபகரணங்களைக் கொண்டுள்ளது.
- மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் 18.02.2024 அன்று மதுரையில் டாக்டர் கலைஞர் விளையாட்டு உபகரணத் திட்டத்தைத் தொடங்கிவைத்தார்.
- தொடர்ந்து மதுரை கோயம்பத்தூர், திருவள்ளூர் செங்கல்பட்டு, காஞ்சிபுரம். திருப்பூர் திருச்சி. அரியலூர், பெரம்பலூர் ஈரோடு மற்றும் கரூர் ஆகிய மாவட்டங்களில் பல்வேறு தேதிகளில் 3180 கிராம பஞ்சாபத்துகளுக்கு 4456 விளையாட்டு பொருட்கள் அடங்கிய தொகுப்பு வழங்கப்பட்டுள்ளது.
- மீதமுள்ள 9345 கிராம பஞ்சாயத்துக்களுக்கு 12342 தொகுப்புகள் விரைவில் வழங்கப்பட உள்ளது.

கட்டடம் பழுது பார்த்தல் மற்றும் சீரமைப்பு பணிகள்

- திருவண்ணாமலை மாவட்டம் மாணவியர்கள் விளையாட்டு விடுதி சிறப்புப் பழுது பார்க்கும் பணி மேற்கொள்ள ரூ.39.90 இலட்சம் ஒதுக்கீடு.

- திருவள்ளூர் மாவட்டம் – முகப்பேர் விளையாட்டு வளாகத்தில் பழுதுபார்க்கும் பணிகளை மேற்கொள்ள ரூ.137 இலட்சம் நிதி ஒதுக்கீடு.
- புதுக்கோட்டை, திருவாரூர், நாகப்பட்டினம் மற்றும் வேலூர் மாவட்டங்களில் உள்ள விளையாட்டு அரங்கங்களுக்கு முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் கருணாநிதி அவர்களின் பெயர் சூட்டப்பட்டது.
- தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் கட்டுப்பாட்டில் இயங்கும் அனைத்து நவீன விளையாட்டரங்கங்கள் மற்றும் மாவட்ட விளையாட்டரங்கங்களை ரூ.5.30 இலட்சத்தில் பழுதுபார்த்து புனரமைக்கப்பட்டது.
- கேலோ இந்தியா இளைஞர் விளையாட்டு போட்டிகள்–2023–ஐ சென்னை ஜவஹர்லால் நேரு விளையாட்டரங்கில் நடத்துவதற்காக செயற்கை இழை தடகளப்பாதை ரூ.8.64 கோடியில் மறுசீரமைக்கப்பட்டது.
- சென்னை ஜவஹர்லால் நேரு விளையாட்டரங்கம், ஜவஹர்லால் நேரு உள்விளையாட்டரங்கம், மேயர் இராதாகிருஷ்ணன் வளைகோல்பந்து விளையாட்டரங்கம், நுங்கம்பாக்கம் டென்னிஸ் விளையாட்டரங்கம் மற்றும் வேளச்சேரி நீச்சல் குளம் ஆகியவற்றின் விளையாட்டு உட்கட்டமைப்புகளை ரூ.25 கோடியில் புனரமைத்திட நிதி ஒதுக்கீடு.
- ஜவஹர்லால் நேரு விளையாட்டு அரங்கத்தில் தற்போதுள்ள MH மின்னொளி விளக்கிற்கு பதிலாக 6 வருட வருடாந்திரப் பராமரிப்புடன் கூடிய DMX கட்டுப்பாட்டு அமைப்பு கொண்ட ஸ்போர்ட்ஸ் LED மின்னொளி விளக்கினை நிறுவிட அரசு ரூ.9.90 கோடி ஒதுக்கீடு.
- ரூ.9.098 கோடியில் சென்னை, மேயர் இராதாகிருஷ்ணன் ஹாக்கி விளையாட்டரங்கத்தில் செயற்கை இழை ஆடுகளம் மறுசீரமைக்கப்பட்டு புதிய பயிற்சி ஹாக்கி மைதானம் அமைக்கப்பட்டது.
- சென்னை ஜவஹர்லால் நேரு விளையாட்டரங்கினை ரூ.25 கோடியில் புனரமைத்திட நிதி ஒதுக்கீடு.

புதிய உள்கட்டமைப்பு

- வேலூர் மாவட்டத்தில் உள்ள காட்பாடி கிராமத்தில் பல்நோக்கு திறந்தவெளி அரங்கம் கட்டும் பணிக்கு கூடுதல் வசதிகளை ஏற்படுத்திட ரூ.37 இலட்சம் நிதி ஒதுக்கீடு.



- நீலகிரி மாவட்டம் உதகமண்டலத்தில் உள்ள மாவட்ட விளையாட்டு அரங்க வளாகத்தில் விளையாட்டு விடுதிக் கட்டடம் கட்டி முடிக்க கூடுதல் பணிகளுக்காக ரூ.67.48 இலட்சம் நிதி ஒதுக்கீடு.
- வேலூர் மாவட்டத்தில் பல்நோக்கு திறந்தவெளி விளையாட்டு வளாகம் அமைக்க திருத்தப்பட்ட நிருவாக அனுமதி ரூ. 19.24 கோடி மற்றும் கூடுதல் நிதி அனுமதி ரூ.2.79 கோடி வழங்க ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.
- தேனி, மாவட்ட விளையாட்டு வளாகத்தில் பல்நோக்கு உள்விளையாட்டு அரங்கம் அமைப்பதற்கு ரூ.595 இலட்சம் நிதி ஒதுக்கீடு.
- கோபாலபுரத்தில் குத்துச்சண்டை அகாடமி அமைப்பதற்கு ரூ.778.80 இலட்சத்திற்கு நிருவாக அனுமதியும் ரூ.500 இலட்சம் நிதி ஒதுக்கீடு.
- மதுரையில் உள்ள எம்.ஜி.ஆர். மாவட்ட விளையாட்டு வளாகத்தில் செயற்கை இழை ஓடுதளப்பாதையை மறுசீரமைப்பதற்கு ரூ.8.25 கோடி ஒதுக்கீடு.
- இராமநாதபுரம் மாவட்டம் பரமக்குடியில் பளுதூக்கும் பயிற்சி மையம் அமைக்க ரூ.50 இலட்சம் நிதி ஒதுக்கீடு.



- கரூர் மாவட்டம், மாவட்ட விளையாட்டு அரங்கில் டென்னிஸ் மைதானம், உடற்பயிற்சிக் கூடம் அமைத்திட ரூ.85.60 இலட்சம் நிதி ஒதுக்கீடு.
- தமிழகத்தில் 10 இடங்களில் சிறு விளையாட்டு அரங்கம் அமைப்பதற்கு ரூ.30 கோடிக்கு நிருவாக அனுமதியும், ரூ.25 கோடிக்கு நிதி ஒதுக்கீடு.
- தென்காசி மாவட்டத்தில் உள்ள பட்டக்குறிச்சி கிராமத்தில் மாவட்ட விளையாட்டு வளாகம் அமைக்க ரூ.15 கோடி நிதி ஒதுக்கீடு.
- தமிழ்நாட்டில் முதற்கட்டமாக பத்து சட்டமன்றத் தொகுதிகளில் அமையவிருக்கும் சிறு விளையாட்டரங்கங்களுக்கும் மற்றும் ஏற்கெனவே 29 சட்டமன்றத் தொகுதிகளில் பயன்பாட்டில் உள்ள சிறு விளையாட்டரங்கங்களுக்கும் "முதலமைச்சர் சிறு விளையாட்டரங்கம்" என பெயர் சூட்டப்பட்டுள்ளது.
- தூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டியில் ரூ.7 கோடியில் வளைகோல்பந்து விளையாட்டு வீரர்களுக்காக முதன்மை நிலை விளையாட்டு மையம் அமைத்திட நிதி ஒதுக்கீடு.
- ஈரோடு மாவட்டம் கரட்டுப்பாளையத்தில் ரூ.1 கோடியில் சிறப்பு உடற்பயிற்சி மேம்பாட்டு மையத்தில் விளையாட்டு விடுதி மற்றும் புதிய ஜிம்னாஸ்டிக்ஸ் அரங்கம் அமைத்திட நிதி ஒதுக்கீடு.
- செங்கல்பட்டு மாவட்டத்தில், ரூ.15 கோடியில் மாவட்ட விளையாட்டு வளாகம் அமைத்திட நிதி ஒதுக்கீடு.
- சேலம் மாவட்டத்தில், ரூ.20 கோடியில் பல்நோக்கு விளையாட்டு வளாகம் அமைத்திட நிதி ஒதுக்கீடு.

44ஆவது செஸ் ஒலிம்பியாட்

- 44ஆவது செஸ் ஒலிம்பியாட் போட்டி நடத்துவதற்கு தமிழ்நாடு அரசின் சார்பில் ரூ.114.39 கோடி நிதி ஒப்பளிப்பு.
- இந்திய வரலாற்றில் முதன்முறையாக தமிழ்நாட்டில், மாமல்லபுரத்தில் மிகச் சிறப்புடன் நடைபெற்ற 44வது சர்வதேச செஸ் ஒலிம்பியாட் போட்டியில் 186 நாடுகளைச் சார்ந்த 2,000க்கும் மேற்பட்ட சதுரங்க விளையாட்டு வீரர் – வீராங்கனைகள் பங்கேற்றனர்.

சர்வதேச மகளிர் டென்னிஸ் சாம்பியன்ஷிப் போட்டி (WTA)

- மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் சென்னையில் சென்னை ஓபன் (WTA) சர்வதேச டென்னிஸ் சாம்பியன்ஷிப் 2022 போட்டியினை நடத்துவதற்காக தமிழ்நாடு டென்னிஸ் சங்கத்திற்கு ரூ.5 கோடி நிதி வழங்கப்பட்டது.

ஸ்குவாஷ் உலகக் கோப்பை 2023

- 12 ஆண்டுகளுக்கு பிறகு சர்வதேச ஸ்குவாஷ் போட்டி 2023, சென்னையில் நடைபெற்றது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி போட்டிகளை சிறப்பாக

நடத்துவதற்காக தமிழ்நாடு அரசு நிதியுதவியாக ரூ.2 கோடி நிதி தமிழ்நாடு ஸ்குவாஷ் ராக்கெட் சங்கத்திற்கு வழங்கியது.

முதலமைச்சர் கோப்பை 2023

❖ முதலமைச்சர் கோப்பை போட்டிகளை நடத்திட ரூ.50.86 கோடி நிதி ஒப்பளிக்கப்பட்டது. அனைத்து மாவட்டங்களிலும் நடைபெற்ற மாவட்ட அளவிலான விளையாட்டுப் போட்டிகளில் 3,76,000 மேற்பட்ட வீரர் மற்றும் வீராங்கனைகள் கலந்து கொண்டனர். சென்னையில் 17 இடங்களில் நடைபெற்ற முதலமைச்சர் கோப்பை மாநில அளவிலான விளையாட்டுப் போட்டிகளில் மாவட்ட மற்றும் மண்டல அளவிலான போட்டிகளில் முதலிடம் பெற்ற 27,054 வீரர்–வீராங்கனைகள் பங்கேற்றனர்.

ஆசிய ஆடவர் ஹாக்கி சாம்பியன்ஷிப் – 2023

❖ 7ஆவது "ஆசிய சாம்பியன்ஸ் டிராபி (ஆடவர்) சென்னை – 2023" போட்டிகள் 16 ஆண்டுகளுக்குப் பிறகு மீண்டும் சென்னையில் நடைபெற்றது.

❖ ஹாக்கி இந்தியாவுடன் இணைந்து தமிழ்நாடு அரசு இப்போட்டிகளை நடத்தியது.

❖ "ஆசிய ஹாக்கி சாம்பியன்ஷிப் (ஆடவர்) – சென்னை – 2023" போட்டியினை சிறப்பாக நடத்துவதற்காக ரூ.17.33 கோடி நிதி ஒதுக்கீடு.

சர்வதேச அலை சறுக்குப் போட்டி

❖ 2023–ஆம் ஆண்டு சர்வதேச அளவிலான உலக சர்ஃபிங் லீக் போட்டிகள் நடத்துவதற்காக தமிழ்நாடு அரசின் சார்பில் ரூ.2.68 கோடி நிதி ஒப்பளிக்கப்பட்டது.

HCL சைக்கிளோத்தான் (CYCLOTHON)

❖ தமிழ்நாடு அரசு மற்றும் ஹெச்.சி.எல் (HCL) நிறுவனம் இணைந்து இந்திய சைக்கிளிங் ஓட்டுதல் சம்மேளனத்தின் ஒத்துழைப்புடன் மாபெரும் சைக்ளோத்தான் போட்டி செங்கல்பட்டு மாவட்டம் ECRஇல் 3 பிரிவுகளில் நடைபெற்றது.

அறிஞர் அண்ணா மாராத்தான் போட்டி

❖ இளைஞர்களிடையே விளையாட்டு ஆர்வத்தினை வளர்த்திடும் நோக்கில் அனைத்து மாவட்ட தலைநகரங்களிலும் ரூ.38 இலட்சம் திட்ட மதிப்பீட்டில் மாராத்தான் போட்டிக்கு இணையான அறிஞர் அண்ணா நெடுந்தூர ஓட்டப்போட்டி சிறப்பாக நடத்தி முடிக்கப்பட்டது.

அறிஞர் அண்ணா மிதிவண்டிப் போட்டி

❖ பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்த நாளை சிறப்பித்திடும் வகையில் நடத்தப்பட்டு வரும் அறிஞர் அண்ணா மிதிவண்டிப் போட்டிகளுக்கு வழங்கப்படும் நிதியினை ரூ.1 இலட்சத்திலிருந்து ரூ.38 இலட்சமாக உயர்த்தி ரூ. 1 இலட்சம் வீதம் 38 மாவட்டங்களிலும் புதுப்பொலிவுடன் நடைபெறுகிறது.

தமிழ்நாடு விளையாட்டு அறிவியல் சர்வதேச கருத்தரங்கம் (TASCON 2023)

❖ விளையாட்டு அறிவியல் தொடர்பான சர்வதேச கருத்தரங்கம் நடத்துவதற்கு ரூ.25 இலட்சம் நிதி ஒப்பளிக்கப்பட்டது. தமிழ்நாடு விளையாட்டு அறிவியல் சர்வதேச கருத்தரங்கம் (TASCON2023) சென்னை தாஜ் கோரமண்டலில் 2023 நடைபெற்றது இதில் இந்தியா, பிரிட்டன், நெதர்லாந்து, மலேசியா மற்றும் கனடா ஆகிய நாடுகளிலிருந்து விளையாட்டு அறிவியல் தொடர்பான அறிஞர்கள் தலைமையில் சுமார் 250 பிரதிநிதிகள் பங்கேற்றனர்.

சென்னை செஸ் கிராண்ட் மாஸ்டர்–2023

❖ தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையமும், சதுரங்க அறக்கட்டளையும் இணைந்து உலகத்தரம் வாய்ந்த சென்னை செஸ் கிராண்ட் மாஸ்டர்–2023 சதுரங்கப் போட்டியை நடத்தினர். இப்போட்டியில் இந்தியா, நார்வே, அமெரிக்கா மற்றும் நெதர்லாந்து ஆகிய நாடுகளிலிருந்து 8 விளையாட்டு வீரர்கள் கலந்து கொண்டார்கள். இப்போட்டிகள் ரூ.1.77 கோடி செலவில் நடத்தப்பட்டது.

கேலோ இந்தியா இளைஞர் விளையாட்டுப் போட்டி

❖ தேசிய அளவிலான கேலோ இந்தியா இளைஞர் விளையாட்டுப் போட்டிகள்–2021 ஹரியானா மாநிலம் பஞ்சகுலாவில் 18 வயதிற்குட்பட்ட வீரர்கள், வீராங்கனைகளுக்கு நடைபெற்றது. இவ்விளையாட்டுப் போட்டிகளில் மொத்தம் 288 வீரர்கள், வீராங்கனைகள் கலந்து கொண்டு தேசிய அளவில் 7ஆவது இடம் பெற்று, 14 தங்கப்பதக்கம், 14 வெள்ளிப்பதக்கம் மற்றும் 24 வெண்கலப்பதக்கம் ஆக மொத்தம்

52 பதக்கங்கள் பெற்று தமிழ்நாட்டிற்கு பெருமை சேர்த்துள்ளனர்.

- மத்தியப் பிரதேசத்தில் நடைபெற்ற 5ஆவது கேலோ இந்தியா இளைஞர் விளையாட்டுப் போட்டிகள் 2022–இன் 18 வயதுக்குட்பட்டோர் பிரிவில், தமிழ்நாடு 12 தங்கம், 19 வெள்ளி மற்றும் 21 வெண்கலப் பதக்கங்கள் என மொத்தம் 52 பதக்கங்களுடன் பதக்கப் பட்டியலில் 8ஆவது இடத்தைப் பிடித்தது.
- 6ஆவது கேலோ இந்தியா இளைஞர் விளையாட்டுப் போட்டிகள் 2023 தமிழ்நாட்டில் சென்னை, திருச்சி, மதுரை மற்றும் கோயம்புத்தூர் ஆகிய மாவட்டங்களில் ரூ.189.94 கோடி செலவில் நடைபெற்றது.
- இப்போட்டியில் 18 வயதுக்குட்பட்ட பிரிவில் 36 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களைச் சேர்ந்த 5,630க்கும் மேற்பட்ட விளையாட்டு வீரர்கள், 1,600க்கும் மேற்பட்ட ஊழியர்கள், 1,000க்கும் மேற்பட்ட தொழில்நுட்பவல்லுநர்கள் மற்றும் 200க்கும் மேற்பட்ட தன்னார்வலர்கள் பங்கேற்றனர். கேலோ இந்தியா இளைஞர் விளையாட்டுப் போட்டியில் தமிழ்நாட்டின் பாரம்பரிய விளையாட்டான சிலம்பம் உட்பட 27 விளையாட்டுக்கள் இடம் பெற்றன.
- இப்போட்டியில் 38 தங்கம், 21 வெள்ளி, 39 வெண்கலம் என 98 பதக்கங்களுடன் தமிழ்நாடு ஒட்டுமொத்தப் பதக்கப் பட்டியலில் இரண்டாம் இடத்தைப் பிடித்தது.

ஏடிபி சேலஞ்சர் 100 சர்வதேச ஆண்கள் டென்னிஸ் போட்டி

- மூன்று ஆண்டுகளுக்கு ஏடிபி சேலஞ்சர் 100 சர்வதேச ஆடவர் டென்னிஸ் போட்டியை நடத்துவதற்காக ஆண்டுக்கு ரூ.1 கோடியை அரசு ஒப்பளித்துள்ளது.
- 2022–2023, 2023–2024 ஆம் ஆண்டுகளில், ஏடிபி சேலஞ்சர் 100 சர்வதேச ஆண்கள் டென்னிஸ் போட்டி வெற்றிகரமாக நடத்தப்பட்டது.

தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளை (TN Champions Foundation)

- அரசுக்கும், பல்வேறு நிறுவனங்களுக்கும் இடையே தடையற்ற ஒருங்கிணைப்பை ஏற்படுத்தவும், விளையாட்டு மற்றும் விளையாட்டு வீரர்களை மேம்படுத்துவதில் தொழில் நுட்ப நிறுவனங்கள் முனைப்புடன் செயற்படவும் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம், 'தமிழ்நாடு சாம்பியன்ஸ் பவுண்டேஷன்' என்ற நிறுவனத்தை உருவாக்கியுள்ளது.
- இந்நிறுவனத்தின் மூலம் விளையாட்டு வீரர்களுக்குத் தேவையான உபகரணங்கள் வாங்கவும், உயர்நிலைப் போட்டிகளில் பங்கேற்றல் மற்றும் மருத்துவச் செலவு உட்பட பல்வேறு செலவினங்களுக்கும் ரூ.9.26 கோடி ஒப்பளிப்பு.

திறமையான விளையாட்டு வீரர்களுக்கு அரசுத் துறைகள் மற்றும் பொதுத்துறை நிறுவனங்களில் வேலை வாய்ப்புகள்

- அரசுத் துறைகள் மற்றும் பொதுத்துறை நிறுவனங்களில் திறமையான விளையாட்டு வீரர்களுக்கு 3 சதவிகித விளையாட்டு ஒதுக்கீட்டின் கீழ் பணிநியமனம் செய்ய தமிழக அரசு ஆணை.
- சர்வதேச போட்டிகளில் பதக்கங்கள் / ஒலிம்பிக் போட்டிகளில் பங்கேற்ற 7 விளையாட்டு வீரர்கள் / வீராங்கனைகள் பல்வேறு பொதுத்துறை நிறுவனங்கள் மற்றும் அரசுத் துறைகளில் பணியமர்த்தப்பட்டுள்ளனர்.

நலிந்த நிலையிலுள்ள விளையாட்டு வீரர் / வீராங்கனைகளுக்கான ஓய்வூதியத் திட்டம்

- நலிவடைந்த நிலையில் உள்ள சிறந்த விளையாட்டு வீரர்களுக்கு வழங்கப்படும் ஓய்வூதியம் ரூ.3,000லிருந்து ரூ.6,000ஆக உயர்த்தப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் தற்போது 58 வயது நிரம்பிய 77 விளையாட்டு வீரர் / வீராங்கனைகள் பயனடைந்து வருகிறார்கள்.

விளையாட்டு விடுதி

- தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் கீழ் பள்ளி மாணவ / மாணவியர்களுக்கான 27 விளையாட்டு விடுதிகள், 6 முதன்மை நிலை விளையாட்டு மையம் மற்றும் கல்லூரி மாணவ / மாணவியர்களுக்கான சிறப்பு விளையாட்டு விடுதியும் இயங்கிவருகிறது. இதில் 2600 மாணவ / மாணவியர்கள் தங்கி பயிற்சி பெற்றுவருகிறார்கள்.

அறிவியில் மதிப்பீடு

- விளையாட்டு விடுதி மாணவர்களுக்கான உடற்தகுதி மற்றும் செயல்திறன்





அளவீடுகள் பற்றிய அறிவியல் மதிப்பீடு மேற்கொள்ளப்படுகிறது.

- முதற்கட்டமாக சென்னையில் உள்ள விடுதி மாணவர்கள் மதிப்பீடு செய்யப்பட்டனர்.

விளையாட்டு அறிவியல் மையங்கள்

- விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் தமிழ்நாடு புதுமை முயற்சி திட்டத்தின் கீழ் 18.02.2024 அன்று மதுரையில் ஒருங்கிணைந்த விளையாட்டு அறிவியல் மையம் (ISSC) திறக்கப்பட்டது.
- மதுரை மற்றும் நீலகிரி மாவட்டங்களில் துவங்கப்பட்டுள்ள இம்மையங்களில் விளையாட்டு தொடர்பான விபத்துக்களை தடுப்பது, காயங்களுக்கு மறுவாழ்வு அளிப்பது மற்றும் விளையாட்டு வீரர்களின் உடல் தகுதியை மீட்டெடுப்பது. விளையாட்டு நடவடிக்கைகளை விரைவாகத் தொடங்குவதற்கு இம்மையத்தின் முதன்மை நோக்கங்கள் ஆகும். கூடுதலாக, இந்த மையம் போதைப்பொருள் இல்லாத விளையாட்டு மற்றும் ஊக்கமருந்து எதிர்ப்பு நடவடிக்கைகளை ஊக்குவிக்கிறது.

தேசிய மாணவர் படை துறையின் சாதனைகள்

குடியரசுத் தின முகாம்

- 2023ஆம் ஆண்டு டெல்லியில் நடைபெற்ற குடியரசு தின முகாமில், தமிழ்நாடு இயக்குநரகம் ஒட்டுமொத்தமாக இரண்டாவது இடத்தைப் பெற்றது. மேலும் இந்நிகழ்வில் 6 பிரிவுகளில் தமிழ்நாடு என்.சி.சி. இயக்குநரகம் "சிறந்த என்.சி.சி. இயக்குநரகம்" என்று தேர்ந்தெடுக்கப்பட்டது.
- 2024ஆம் ஆண்டில், தமிழ்நாடு இயக்குநரகம் ஒட்டுமொத்த மூன்றாவது இடத்தைப் பெற்றது.

அகில இந்திய விளையாட்டு துப்பாக்கி சுடும் போட்டி & ஜி.வி. மாவ்லங்கர் துப்பாக்கி சுடும் சாம்பியன்ஷிப்

- ஜூலை 2022இல் சண்டிகரில் நடைபெற்ற அகில இந்திய இயக்குநரகங்களுக்கு இடையேயான விளையாட்டு துப்பாக்கி சுடும் போட்டியில் 17 தேசிய மாணவர் படை மாணவர்கள் பங்கேற்று, 04 தங்கம், 02 வெள்ளி மற்றும் 01 வெண்கலப் பதக்கங்களுடன், இரண்டாவது இடத்தைப் பிடித்தது. அகில இந்திய ஜி.வி. மாவ்லங்கர் ஷூட்டிங் சாம்பியன்ஷிப் – 2022இல் தமிழ்நாடு தேசிய மாணவர் படை இயக்குநரகம் 02 தங்கப் பதக்கங்களை வென்றது.
- 2023ஆம் ஆண்டு மத்தியப் பிரதேசத்தில் நடைபெற்ற 32ஆவது அகில இந்திய ஜி.வி.மாவ்லங்கர் துப்பாக்கி சுடுதல் சாம்பியன்ஷிப் போட்டியில் தமிழ்நாடு தேசிய மாணவர் படை இயக்குநரகம் 02 தங்கம், 02 வெள்ளி மற்றும் 04 வெண்கலப் பதக்கங்களை வென்றது.

துப்பாக்கி சுடுதல் சாம்பியன்ஷிப்

- 2022 ஆம் ஆண்டில் நடைபெற்ற 47ஆவது தமிழ்நாடு மாநில துப்பாக்கி சுடுதல் சாம்பியன்ஷிப் போட்டியில் தனி நபர் மற்றும் குழு பிரிவு இரண்டிலும் 16 தங்கம், 02 வெள்ளி மற்றும் 04 வெண்கலப் பதக்கங்களை வென்று தமிழக தேசிய மாணவர் படை மாணவர்கள் புதிய சாதனை படைத்துள்ளனர்.
- 2023 ஜூலை 17 முதல் 23 வரை மதுரையில் நடைபெற்ற 48ஆவது தமிழ்நாடு துப்பாக்கிச் சுடுதல் சாம்பியன்ஷிப் போட்டியில் தமிழ்நாடு இயக்குநரகத்தின் 30 தேசிய மாணவர் படை மாணாக்கர்கள் தனிநபர் மற்றும் குழு பிரிவுகளில் 76

பதக்கங்களை (33 தங்கம், 28 வெள்ளி & 15 வெண்கலம்) வென்று சிறந்து விளங்கினர்.

அகில இந்திய வாயு சைனிக் முகாம் (AIVSC)

- 2022ஆம் ஆண்டில் தமிழ்நாடு இயக்குநரகம் 03 தங்கம், 02 வெள்ளிப் பதக்கங்கள் வென்றது.
- 2023ஆம் ஆண்டில் தமிழ்நாடு இயக்குநரகம் 01 தங்கப் பதக்கத்துடன் ஒன்பதாவது இடத்தைப் பிடித்தது.

அகில இந்திய நவ் சைனிக் முகாம் (AINSC)

- 2022ஆம் ஆண்டில் தமிழ்நாடு இயக்குநரகத்தின் கடற்படைப் பிரிவு தேசிய மாணவர் படை மாணவர்கள் 01 தங்கம், 01 வெள்ளி மற்றும் 01 வெண்கலப் பதக்கங்களை வென்று இரண்டாவது இடத்தைப் பிடித்தனர்.
- 2023ஆம் ஆண்டில் தமிழ்நாடு இயக்குநரகத்தின் கடற்படைப் பிரிவு தேசிய மாணவர் படை மாணவர்கள் 03 தங்கம், 01 வெள்ளி மற்றும் 01 வெண்கலப் பதக்கத்தை வென்று ஆறாவது இடத்தைப் பிடித்தனர்.

பாய்மர படகு போட்டி

- 2022ஆம் ஆண்டில் தமிழ்நாடு இயக்குநரகம் 01 தங்கம் மற்றும் 01 வெண்கலப் பதக்கத்துடன் முதல் இடத்தைப் பிடித்தது.
- 2023ஆம் ஆண்டில் தமிழ்நாடு இயக்குநரகம் ஐந்தாவது இடத்தைப் பிடித்துள்ளது.

இளைஞர் பரிமாற்றத் திட்டம் (YEP) – 2023

- தமிழ்நாடு இயக்குநரகத்திலிருந்து 08 தேசிய படை மாணாக்கர்கள் இளைஞர் பரிமாற்றத் திட்டத்திற்காக தேர்ந்தெடுக்கப்பட்டு இங்கிலாந்து, வங்கதேசம், வியட்நாம், ரஷ்யா, பூட்டான் மற்றும் நேபாளம் போன்ற பல்வேறு நாடுகளுக்குச் 07 மாணாக்கர்கள் சென்று வந்தனர்.

சர்வதேச யோகா தினம்

- 2022 மற்றும் 2023ஆம் ஆண்டு மாநிலம் முழுவதும் 1,094 இடங்களில் நடத்தப்பட்ட சர்வதேச யோகா தினத்தில் தமிழ்நாடு தேசிய மாணவர் படை இயக்குநரகத்தில் சுமார் 1,10,435 மாணவர்கள் மற்றும் 1,364 தேசிய மாணவர் படை முன்னாள் மாணவர்கள் பங்கேற்றனர்.

பாதுகாப்புப் படைகளில் தேசிய மாணவர் படை மாணவர்களின் சேர்க்கை

- தமிழ்நாடு இயக்குநரகத்தில் இருந்து 16 தேசிய மாணவர் படை மாணவர்கள் பாதுகாப்புப் படையில் அதிகாரிகளாகவும், 485 மாணவர்கள் மற்ற பதவிகளிலும் சேர்ந்துள்ளனர்.

சமூக சேவை நடவடிக்கைகள்

- ஃபிட் இந்தியா பிரச்சாரத்தில் மொத்தம் 24,140 தேசிய மாணவர் படை மாணவர்கள் சுமார் 78,066 கி.மீ. தூரம் ஓட்டத்தில் பங்கேற்றனர்.

அறிவிப்புகள் 2022–2023

- தமிழ்நாடு அரசு தேசிய மாணவர் படை மாணாக்கர்களுக்கான ஒரு மணி நேர சிற்றுண்டி படித்தொகையை ரூ.10லிருந்து ரூ.25ஆக உயர்த்தி, ரூ.8.44 கோடி தொகையை கூடுதல் நிதியாக அனுமதித்துள்ளது.
- ரூ.1.10 கோடி செலவில், மேலக்கோட்டையூரில் உள்ள தமிழ்நாடு உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டுப் பல்கலைக்கழக வளாகத்தில் 50 மீட்டர் தூரம் கொண்ட துப்பாக்கிச் சுடும் மைதானம் கட்டுவதற்கு நிதி ஒதுக்கீடு.
- மதுரை மாவட்டம் இடையப்பட்டியில் உள்ள தேசிய மாணவர் படை பயிற்சி மையத்தில் கூடுதல் உள்கட்டமைப்புகளை உருவாக்க ரூ.50 இலட்சம் நிதி ஒதுக்கீடு.
- செங்கல்பட்டு மாவட்டம், மதுராந்தகம் தாலுகா, நீர்பெயர் கிராமத்தில் அமைந்துள்ள நிரந்தர முகாமில் கூடுதல் உள்கட்டமைப்பு வசதிகளை உருவாக்க ரூ.1 கோடி நிதி ஒதுக்கீடு.
- ஓலையூரில் நிரந்தரப் பயிற்சி மையத்திற்கான முதல் கட்டப் பணிகளைக் கட்டுவதற்கு ரூ.1 கோடி நிதி ஒதுக்கீடு.
- தேசிய மாணவர் படை மாணவர்களின் துப்பாக்கிச் சுடும் பயிற்சிக்காக ரூ.58.23 இலட்சத்தில் 13 விளையாட்டு துப்பாக்கிகள் கொள்முதல் செய்ய நிதி ஒதுக்கீடு.
- மாநிலத்தின் கடலோரப் பகுதிகளில் தேசிய மாணவர் படையை விரிவுபடுத்துவதற்காக ரூ.72.99 இலட்சம் தொகைக்கு நிருவாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.



- தேசிய மாணவர் படை இயக்குநரகங்களுக்கு இடையேயான மற்றும் ஜி.வி.மாவ்லங்கர் துப்பாக்கிச் சுடுதல் போட்டிகளில் உயர்ந்த தரவரிசை பெறுவதற்கு, 12,000 சுற்றுகள் 0.22mm இறக்குமதி செய்யப்பட்ட விளையாட்டு துப்பாக்கி குண்டுகள் (Eley Club) மற்றும் 8,400 ரவுண்டுகள் இறக்குமதி செய்யப்பட்ட துப்பாக்கிக் குண்டுகள் (Eley Tenex) கொள்முதல் செய்வதற்குத் தொடர் செலவினமாக ரூ.7 இலட்சம் நிதி ஒதுக்கீடு.
- குடியரசு தின முகாம் மற்றும் ஒன்றிய அரசு ஏற்பாடு செய்த முகாம்களின் செலவிற்க்காக ஆண்டுக்கு ரூ.60 இலட்சத்திலிருந்து ரூ.1 கோடி வரை நிதி ஒப்பளிப்பு.
- 2023ஆம் ஆண்டிலிருந்து பெருங்கடல் சாகசப் பயணத்திற்கான உச்சவரம்பு ஆண்டுக்கு ரூ.3 இலட்சத்திலிருந்து ரூ.4.50 இலட்சமாக உயர்வு.
- AAPDA மித்ரா திட்டத்தின் கீழ், 14 நாட்கள் முகாம்களை நடத்துவதற்காக ரூ.7.12 இலட்சம் தொகைக்கு நிருவாக அனுமதி வழங்கப்பட்டன.
- சென்னை, தேசிய மாணவர் படை இயக்குநரகத்தின் துப்பாக்கிச் சூடு குழுவினருக்கான கிட்டிங் பொருட்கள் மற்றும் பிற பாகங்கள் வாங்குவதற்கான தொகையை அரசு ரூ.1.74 இலட்சத்திலிருந்து ரூ.4 இலட்சமாக உயர்வு.
- முதலமைச்சரின் பேரணி மற்றும் மாநில பாராட்டு விழா மற்றும் தமிழ்நாடு குடியரசுத் தினப் படையணியின் வரவேற்பு நிகழ்ச்சிகளை நடத்துவதற்கான தொகை ரூ.5 இலட்சத்திலிருந்து ரூ.6 இலட்சமாக உயர்வு.

நாட்டு நலப்பணித் திட்டம்

குடியரசு தின அணிவகுப்பு

- புதுடெல்லியில் நடைபெற்ற குடியரசுத் தினவிழா அணிவகுப்பில் தமிழ்நாடு அரசின் சார்பாக 2023ஆம் ஆண்டு பல்கலைக்கழகம் மற்றும் மாநில அளவில் தெரிவு செய்யப்பட்ட 14 விருப்பார்வத் தொண்டர்கள் மற்றும் 1 திட்ட அலுவலரும், 2024ஆம் ஆண்டு 13 விருப்பார்வத் தொண்டர்கள் மற்றும் 1 திட்ட அலுவலரும் கலந்து கொண்டனர். அவர்கள் அனைவரும் முதல் முறையாக விமானத்தில் சென்று வர அரசு ஏற்பாடு செய்துள்ளது.
- மெரினாவில் நடைபெற்ற குடியரசு தினவிழா கொண்டாட்ட அணி வகுப்பில் முதல் முறையாக 140 விருப்பார்வ தொண்டர்கள் 10 திட்ட அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

மாநில சாகச முகாம்

- நாட்டு நலப்பணித் திட்ட மாநில சாகச முகாம் ஏற்காட்டில் நடத்தப்பட்டு. 300 மாணவர்கள் பயிற்சியில் கலந்து கொண்டனர்.

மாநில இளைஞர் விழா

- சென்னையில் நாட்டு நலப்பணித் திட்ட மாநில இளைஞர் விழா நடத்தப்பட்டு. 10 திட்ட ஒருங்கிணைப்பாளர்கள், 18 திட்ட அலுவலர்கள், 200 நாட்டு நலப்பணித் திட்ட தொண்டர்கள் கலந்து கொண்டனர்.

ஒரு கோடி பனை விதைகள் நடும் திட்டம்

- தமிழ்நாடு பனைமரத் தொழிலாளர்கள் நல வாரியம், கிரீன் நீடா சுற்றுச்சூழல் அமைப்பு மற்றும் நாட்டு நலப்பணித்திட்டம் இணைந்து 14 மாவட்டங்களில் 1,076 கிலோ மீட்டர் தூரத்திற்கு ஒரு கோடி பனை விதைகள் நடப்பட்டன. இதில் ஒரு இலட்சம் மாணவர்கள் கலந்து கொண்டனர். இதற்காக தமிழ்நாடு நாட்டு நலப்பணித்திட்டம்



குளோபல் உலக சாதனை விருதினைப் பெற்றுள்ளது.

தேசிய அளவிலான நாட்டு நலப்பணித்திட்ட விருதுகள்

- நாட்டு நலப்பணித்திட்ட அலகுக்கான தேசிய விருதினை தூத்துக்குடி காமராஜ் கல்லூரி, மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம், பெற்றுள்ளது.
- நாட்டு நலப்பணித்திட்ட ஒருங்கிணைப்பாளருக்கான தேசிய விருதினை முனைவர். ஆர். ரமேஷ், சென்னை அண்ணா பல்கலைக்கழகம், பெற்றுள்ளார்.
- நாட்டு நலப்பணித்திட்ட அலுவலருக்கான தேசிய விருதினை முனைவர். A. தேவராஜ், தூத்துக்குடி காமராஜ் கல்லூரி, மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம், பெற்றுள்ளார்.
- நாட்டு நலப்பணித்திட்ட தன்னார்வலர்த் தொண்டர்களுக்கான தேசிய விருதினை செல்வன் C.ஐய்யனார், பச்சையப்பாஸ் கல்லூரி, சென்னை பல்கலைக்கழகம், சென்னை மற்றும் செல்வன் G.V.நிதிஷ், ஜெருசேலம் பொறியியல் கல்லூரி, சென்னை அண்ணா பல்கலைக்கழகம், பெற்றுள்ளனர்.
- நாட்டு நலப்பணித்திட்ட ஒருங்கிணைப்பாளருக்கான தேசிய விருதினை செல்வி. ஆர். சுவேஷிகா, நாமக்கல் பாவை தொழில்நுட்பக் கல்லூரி, (அண்ணா பல்கலைக் கழகம்), பெற்றுள்ளார்.

தமிழ்நாடு உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டுப் பல்கலைக்கழகம்

- ரூ.13.33 கோடி செலவில் இறகுப்பந்து பயிற்சிக் கூடம் தமிழ்நாடு உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டுப் பல்கலைக்கழகத்தில் திறப்பு.
- ரூ.12.60 கோடி செலவில் மேசைப்பந்து பயிற்சிக் கூடம் தமிழ்நாடு உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டுப் பல்கலைக்கழகத்தில் திறப்பு.
- 400 மாணவர்கள் தங்கிப் பயிலும் வசதி கொண்ட விடுதி ரூ.14.59 கோடி செலவில் தமிழ்நாடு உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டுப் பல்கலைக்கழகத்தில் திறப்பு.
- ரூ.13.12 கோடியில் கட்டி முடிக்கப்பட்ட முதன்மை உயிர் இந்திரவியல் ஆய்வகம் தமிழ்நாடு உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டுப் பல்கலைக்கழகத்தில் திறப்பு.
- ரூ.1.60 கோடி செலவில் வடிவமைக்கப்பட்ட பாரம்பரிய களரிப்பயட்டு மற்றும் சிலம்பம் பயிற்சி மையம் தமிழ்நாடு உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டுப் பல்கலைக்கழகத்தில் திறந்து வைக்கப்பட்டது.
- தமிழ்நாடு உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டுப் பல்கலைக்கழகத்தின் முகாம் மையத்தில் பல்கலைக்கழக வளாகத்தில் உணவுக்கூடம் மற்றும் சமையலறைக்கூடம் ரூ. 51.72 இலட்சத்தில் திறப்பு.
- ரூ.73 இலட்சம் செலவில் 210 இரு சக்கர வாகனங்களும் மற்றும் 25 நான்கு சக்கர வாகனங்களும் நிறுத்தும் வசதி கொண்ட மேற்கூரையுடன் கூடிய வாகனங்கள் நிறுத்துமிடம் தமிழ்நாடு உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டுப் பல்கலைக்கழகத்தில் திறந்து வைக்கப்பட்டது.
- சென்னை, மேலக்கோட்டையூரில் அமைந்துள்ள தமிழ்நாடு உடற்கல்வி மற்றும் விளையாட்டு பல்கலைக்கழகத்தில் கூடுதல் வகுப்பறைக் கட்டடங்கள் ரூ.583.50 இலட்சம் செலவில் கட்டி முடிக்கப்பட்டது.



- தேசிய மாணவர் படை மாணவர்களுக்கான மைக்ரோலைட் பறக்கும் பயிற்சியை மேம்படுத்த கூடுதலாக ரூ.2.98 இலட்சம் ஒப்பளிக்கப்பட்டது.
- தமிழ்நாடு உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டு பல்கலைக்கழக வளாகத்தில் 400 மீட்டர் செயற்கை இழை ஓடுதளம், பல்நோக்கு பயிற்சிக் கூடம், ஆசிரியர்களுக்கான குடியிருப்பு கட்டடம் ஆகியவை திறப்பு.
- தமிழ்நாடு உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டுப் பல்கலைக்கழகத்தில் பெண்கள் விடுதிக்கு சுற்றுச்சுவர் கட்ட ரூ.2 கோடி நிதி ஒதுக்கீடு.

சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறை

கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம்

- கலைஞர் மகளிர் உரிமைத்தொகைத் திட்டத்தின் கீழ் செப்டம்பர் 2023இல் 1.06 கோடி மகளிருக்கும் அக்டோபர் மாதத்தில் 1.06 கோடி மகளிருக்கும் நவம்பர் மற்றும் டிசம்பர் 2023 மாதத்தில் 1.13 கோடி மகளிருக்கும், ஜனவரி 2024ஆம் மாதத்தில் 1.15 கோடி மகளிருக்கும், பிப்ரவரி 2024 முதல் ஜூலை 2024 வரை ரூ.1.15 கோடி மகளிருக்கும் மகளிர் உரிமைத் தொகையானது வழங்கப்பட்டுள்ளது. 2023–2024 ஆம் நிதியாண்டிற்கென ரூ.8,065 கோடி நிதி ஒதுக்கீடு.

தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம்

குறுகிய காலத் திறன் பயிற்சி (Short Term Skill Training)

- விண்வெளி மற்றும் விமான போக்குவரத்து, சுகாதாரம் மற்றும் தகவல் தொழில்நுட்பம் உள்ளிட்ட 37 துறைகளில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட தொழில் பிரிவுகளில் அங்கீகரிக்கப்பட்ட பயிற்சி நிறுவனங்கள் மூலம் கட்டணமின்றி பயிற்சி.
- 300க்கும் மேற்பட்ட அங்கீகரிக்கப்பட்ட திறன் பயிற்சி நிலையங்கள் மூலம் வேலைவாய்ப்புடன் கூடிய திறன் பயிற்சி வழங்குவதுடன் நாளொன்றுக்கு போக்குவரத்துப் படியாக ரூ.100 வங்கிக் கணக்கில் நேரடியாக வரவு.
- கடந்த மூன்றாண்டுகளில் 2,32,331 இளைஞர்கள் திறன் பயிற்சி பெற்று பயன்.
- தொழிற்சாலை திறன் பள்ளி (Factory Skill School)திறன் பயிற்சியின் தரத்தை உயர்த்தும் வகையில் முன்னணித் தொழில் நிறுவனங்கள் மூலம் பயிற்சி அளிக்கப்பட்டு 3,700 இளைஞர்கள் பயன்.

இளையதளம் (ILAYA THALAM)

- நான் முதல்வன் இளையதளம் மூலம் சாட்பாட் (Chat bot) செயற்கை நுண்ணறிவு (Artificial Intelligence) தொழில்நுட்பத்தை பயன்படுத்தி வேலைவாய்ப்பு மற்றும் திறன் பயிற்சி. 44,787இளைஞர்கள் பயன்.

கைவினை திறன் பள்ளிகள்

- மண்பாண்டங்கள் செய்தல், தஞ்சாவூர் ஓவியம், மரவேலைப்பாடு, கடல் சிப்பியில் அழகு பொருள் தயாரித்தல், பனை ஓலை முடைதல், பத்தமடை பாய் தயாரிப்பு, வெண்கல சிற்பம் மற்றும் மரபுசார் நகைகள் தயாரித்தல் போன்ற கலைகளை மீட்டு "நீயே உனக்கு ராஜா" என்ற திட்டத்தின் கீழ், 330 இளைஞர்கள் பயன்.



வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் திறன் பயிற்சி

- கட்டணமின்றி பயிற்சி வழங்குவதுடன் சான்றிதழ் மற்றும் மாதம் ரூ.10,000 வரையிலான ஊக்கத்தொகை டி.வி.எஸ்., வீல்ஸ் இந்தியா உள்ளிட்ட முன்னணி நிறுவனங்களில் வேலைவாய்ப்பு. 1,800 இளைஞர்களுக்குத் திறன் பயிற்சி.

பழங்குடியின மாணவர்களுக்குத் தொழில் திறன் பயிற்சி

- 200 நபர்களுக்கு என்டிடிஎஃப் (NTTF) நிறுவனத்துடன் இணைந்து பழங்குடியின மாணவர்களுக்கானத் திறன் மேம்பாட்டுப் பயிற்சி.

திருநங்கைகள் மற்றும் பெண்களுக்கான மூன்று சக்கர வாகன ஓட்டுநர் பயிற்சி

- 105 நபர்களுக்கு ஐஆர்டி (IRT) நிறுவனத்துடன் இணைந்து திருநங்கைகள் மற்றும் பெண்களுக்கான மூன்று சக்கர வாகன ஓட்டுநர் பயிற்சி.

அரசு விடுதி மாணவர்களுக்கான ஆங்கிலத் திறன் பயிற்சி

- அனைத்து அரசு மாணவர் விடுதிகளில் 52,334 மாணவர்களுக்குத் தகுதி வாய்ந்த பயிற்சி நிறுவனங்கள் மூலம் ஆங்கில பேச்சாற்றல் பயிற்சி.

நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரிய குடியிருப்புகளில் வசிக்கும் இளைஞர்களுக்கு திறன் பயிற்சி

- படித்த இளைஞர்கள் இளம் பெண்கள், வேலை பெறுவதற்கும் சுயதொழில் புரிய கட்டணமின்றி 2,060 நபர்களுக்கு திறன் பயிற்சி.
- பயிற்சி முடித்த 442 நபர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டது.

முகாம் வாழ் இலங்கைத் தமிழர்களுக்கு திறன் பயிற்சி

- அனைத்து மாவட்டங்களிலும் உள்ள இலங்கைத் தமிழர் முகாம்களில் வசிக்கும் 2,452 நபர்களுக்கு திறன் பயிற்சி மற்றும் வேலைவாய்ப்பு.
- கணினி அறிவியல் இளங்கலைப் பட்டம் பெற்ற 100 இளைஞர்களுக்கு நான்டி ஃபவுண்டேஷன் (Naandi Foundation) அமைப்பின் மூலம் வேலைவாய்ப்புடன் கூடிய திறன் பயிற்சி.

மதிப்பீடுதல் மற்றும் சான்றிதழ் வழங்கும் அமைப்புக்கான அங்கீகாரம்

- தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம், தொழிற்கல்வி மற்றும் பயிற்சிக்கான தேசிய ஆலோசகரால் மதிப்பீடு செய்யும் அமைப்பாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

நான் முதல்வன் திட்டம்

- தமிழக இளைஞர்களின் வேலைவாய்ப்புக்கென தொழில் சார்ந்த திறன் மேம்பாட்டுப் பயிற்சிகளை வழங்க "நான் முதல்வன்" திட்டம், ஆண்டிற்கு 10 இலட்சம் இளைஞர்களுக்குத் திறன் பயிற்சி.
- திறன் வகுப்புகளை மாணவர்கள் எளிதிலும் இலவசமாகவும் பெற ஏற்றவாறு பிரத்தியேகமாக இணையதளம் ஒன்று (www.naanmudhalvan.tn.gov.in) இயக்கப்படுகிறது.

பொறியியல் கல்லூரிகளில்...

- நான் முதல்வன் திட்டத்தின் கீழ் பயிற்சி தொடங்கப்பட்ட பொறியியல் கல்லூரிகளில் 41 கட்டாயத் திறன் பயிற்சிகள் வழங்கப்படுகின்றன.
- 22,424 ஆசிரியர்களுக்குப் பயிற்சி, 856 பொறியியல் கல்லூரிகளில் 7,83,734 மாணவர்கள் எதிர்கால வேலை வாய்ப்புக்குத் தேவையான திறன் பயிற்சி. 26 முன்னணி நிறுவனங்கள் கட்டாயப் படிப்புகளை வழங்கியுள்ளது.

கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில்...

- 34,229 ஆசிரியர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டு 1,688 கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் 17,06,623 மாணவர்கள் வேலைவாய்ப்பு பெறும் வகையில் திறன் பயிற்சி.

பாலிடெக்னிக் கல்லூரிகளில்....

- நான் முதல்வன் திட்டமானது பாலிடெக்னிக் (டிப்ளமோ) கல்லூரிகளுக்கு விரிவுபடுத்தப்பட்டு 3,950 ஆசிரியர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டு, 459 பாலிடெக்னிக் கல்லூரிகளில் (டிப்ளமோ) 1,92,784 மாணவர்களுக்குத் திறன் பயிற்சி.

தொழிற்பயிற்சி நிலையங்களில்...

- 412 தொழிற்பயிற்சி நிலையங்களில் 64,149 மாணவர்கள் வேலைவாய்ப்பு பெறும் வகையில் அடிப்படை ஆங்கிலப் பயிற்சி அளிக்கப்பட்டு பயன்.

பள்ளிகளில்...

- 12 ஆம் வகுப்புக்குப் பிறகு மாணவர்கள் இடைநிற்றல் விகிதத்தை குறைப்பதற்காக வாழ்க்கை வழிகாட்டி ஆலோசகர்கள் அடங்கிய ஒரு குழு உருவாக்கப்பட்டு எதிர்கால வாழ்க்கைக்கான உள்ளீடுகளை வழங்குகிறது.
- 30,269 மாணவர்களில் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் 7,884 பேர் பொறியியல் கல்லூரிகளில் 2,144 பேர், பாலிடெக்னிக் கல்லூரிகளில் 1,461 பேர் ஐடிஐ–யில் 1,876 மற்றும் பிற உயர்கல்விப் படிப்புகளில் 2,348 பேர் உட்பட 15,713 மாணவர்கள் தாங்கள் விரும்பும் உயர்கல்வி நிறுவனங்களில் சேர வசதி செய்யப்பட்டுள்ளது.
- தமிழ்நாட்டில் 13,000க்கும் அதிகமான அரசு பள்ளிகளில் 18 இலட்சம் மாணவர்களை சென்றடையவுள்ளது.



- நான் முதல்வன் – "கல்லூரிக் கனவு" தொழில் வழிகாட்டலுக்கான புதிய முயற்சிகள் மூலம் உயர்கல்வி நிறுவனங்களில் சேர ஊக்குவித்தது மட்டுமன்றி சுமார் 1,20,000 மாணவர்களுக்குத் தொழில் வழிகாட்டுதலை வழங்கியுள்ளது.

நான் முதல்வன் திட்டத்தின் மாநில வேலைவாய்ப்பு முகாம்

- 72.8 சதவிகித பொறியியல் மாணவர்களும், 57.7 சதவிகித கலை மற்றும் அறிவியல் மாணவர்களும் வேலைவாய்ப்பினைப் பெற்றுள்ளனர். விண்ணப்பித்த 1,84,283 மாணவர்களில் 1,19,235 மாணவர்கள் வேலைவாய்ப்பினைப் பெற்று பயன்.

உலகத் திறன் போட்டிகள் 2022

- இந்தியத் திறன் 2021 போட்டிகளில் நமது மாநிலம் 23 பதக்கங்களை வென்று தேசிய அளவில் 10ஆவது இடத்தைப் பிடித்தது.
- தமிழ் நாட்டிலிருந்து இந்தியத் திறன் போட்டிகள்–2021இல் தங்கப்பதக்கம் வென்ற 2 பேருக்கு தலா ரூ.1 இலட்சமும், வெள்ளிப் பதக்கம் வென்ற 8 பேருக்கு தலா ரூ.50,000மும், வெண்கலப் பதக்கம் வென்ற 8 பேருக்கும், சிறப்பு விருது



பெற்ற 5 நபர்களுக்கும் தலா ரூ.25,000 ரொக்கப் பரிசாக வழங்கப்பட்டது.

- ❖ இந்தியத் திறன் போட்டிகளில் வென்றவர்கள் பல்வேறு நாடுகளில் நடைபெற்ற உலகத் திறன் போட்டிகளில் பங்கு பெற்று அதில் தமிழ்நாட்டை சேர்ந்த மூவர் பதக்கங்கள் பெற்று நம் மாநிலத்திற்கு பெருமை சேர்த்துள்ளனர்.

உலகத் திறன் போட்டிகள் 2023

- ❖ 48 துறைகளை சார்ந்த 58,522 நபர்கள் தமிழகத்தில் நடைபெற்ற மாநில அளவிலான உலகத் திறன் போட்டியில் கலந்துகொள்வதற்கு இணையதளம் வாயிலாகப் பதிவு.
- ❖ முதல் நிலை போட்டித் தேர்வில் 18,518 நபர்கள் கலந்துகொண்டதில் 2,351 நபர்கள் தெரிவு செய்யப்பட்டு இரண்டாம் நிலை தேர்வுக்கு அனுமதிக்கப்பட்டனர்.
- ❖ 241 நபர்கள் மூன்றாம் நிலைத் தேர்வுக்கு தேர்வுசெய்யப்பட்டு.மூன்றாம்நிலைத்தேர்வு எழுதியவர்களில் தகுதியான 48 நபர்கள் (அதாவது துறைக்கு ஒருவர் வீதம்) மட்டும் தேசிய அளவிலான இறுதி நிலை போட்டிக்குத் தேர்வு செய்யப்படுவார்கள்.

நான் முதல்வன் – போட்டித் தேர்வு பிரிவு

- ❖ தமிழ்நாடு இளைஞர்கள் ஒன்றிய அரசின் வேலைவாய்ப்புகளுக்கான போட்டித் தேர்வுகளில் வெற்றி பெறுவதற்குப் பயிற்சி மற்றும் இதர உதவிகள் வழங்கும் நோக்கில் 'நான் முதல்வன்' திட்டத்தின் கீழ், 'போட்டித் தேர்வுகள் பிரிவு தொடங்கப்பட்டு, ஒன்றிய பணியாளர் தேர்வாணையம், இரயில்வே /வங்கிப் பணிகள் போன்ற ஒன்றிய அரசுத் தேர்வுகளுக்காக தயாராகிவந்த மாணவர்களுக்கு உதவும் வகையில் 38 மாவட்டங்களில் 46 மையங்களில் ஒருங்கிணைந்த பயிற்சித் திட்டம் செயல்படுத்தப்பட்டு, கட்டணமில்லாப் பயிற்சி வகுப்புகள், தேர்வுகள், வழிகாட்டுதல் மற்றும் பாடப் புத்தகங்கள் வழங்கப்பட்டது. 5,000 க்கும் மேற்பட்ட மாணவர்கள் பயன்.
- ❖ ஒன்றிய அரசின் குடிமைப் பணித் தேர்வுகளில் குறைந்து வரும் தமிழர்களின் விகிதத்தை அதிகரிப்பதற்காக, குடிமைப் பணிகள் முதல் நிலைத் தேர்வில் தேர்ச்சி பெறும் மாணவர்களுக்கு ரூ.25,000 வழங்கும் 'நான் முதல்வன்' முதன்மைத் தேர்வுக்கான ஊக்கத்தொகைத் திட்டமானது, 453 மாணவர்களுக்குத் தலா ரூ.25,000 வீதம், ரூ.1.13 கோடி வழங்கப்பட்டுள்ளது.
- ❖ குடிமைப் பணிகள் முதல் நிலைத் தேர்வுக்கு தயாராகுவதற்காக, 1,000 மாணவர்களுக்கு மாதந்தோறும் தலா ரூ.7,500 வீதம் பத்து மாதங்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது.

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்

சமூக ஒருங்கிணைப்பு மற்றும் நிறுவன அமைப்பு

புதிய சுய உதவிக் குழுக்கள் அமைத்தல்

- ❖ ஊரகப் பகுதிகளில் உள்ள 6,40,313 சுய உதவிக் குழு உறுப்பினர்களைக் கொண்டு 58,746 சுய உதவிக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

சமுதாய நிதி (திட்ட நிதி)

- ❖ சுழல் நிதி சமுதாய முதலீட்டு நிதி (ம) வறுமை குறைப்பு நிதியாக ரூ.703.23 கோடி விடுவிப்பு.

நிதி உள்ளாக்கம்

- 14,88,858 மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு 12.5 வங்கிகள் மூலம் கடனாக ரூ.86,878 கோடி வழங்கப்பட்டுள்ளது.

கூடுகை மற்றும் கூட்டாண்மை

- சமூக பொருளாதார விளிம்பு நிலையில் வாழும் நபர்களை கண்டறிந்து அவர்களின் வாழ்க்கை முறையை மேம்படுத்தவும் அவர்களை தேசிய நீரோட்டத்தில் சேர்ப்பதற்காக இதுவரை 81,630 சிறப்பு சுய உதவிக் குழுக்கள் மூலமாக உருவாக்கப்பட்டு, 6,41,230 நபர்கள் பயனடைந்துள்ளனர்.
- 81,630 சிறப்பு சுய உதவிக் குழுக்களில் 40,997 மாற்றுத்திறனாளிகள் குழுக்கள் அமைக்கப்பட்டு, ரூ.18.496 கோடி சுழல் நிதியாகவும் வழங்கப்பட்டுள்ளது.
- விளிம்பு நிலையிலுள்ளோரின் ஆரோக்கியத்தினை மேம்படுத்தும் பொருட்டு பாரம்பரிய உணவு திருவிழாக்களை கிராம, வட்டார மற்றும் மாவட்டம் அளவில் நடத்தப்பட்டு வெற்றிப் பெற்றவர்களுக்கு பரிசுகள் வழங்கி பாராட்டப்பட்டது. மேலும், பாரம்பரிய சிறுதானிய மற்றும் உணவு வகைகளை ஊக்குவிக்கும் பொருட்டு மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகிறது.
- இரத்தசோகை மற்றும் ஊட்டச்சத்து குறைபாடுள்ள மகளிருக்குத் தேவையான விழிப்புணர்வை ஏற்படுத்தி வீடுகள் தோறும் ஊட்டச்சத்து தோட்டம் அமைத்திட FNHW திட்டத்தில் இருந்து விதைகள் மற்றும் மரக்கன்றுகள் வழங்கப்பட்டு வருகிறது.
- பெண்கள் மற்றும் பெண் குழந்தைகள் மீதான வன்கொடுமைகளுக்கு எதிராக குறல் எழுப்புவதற்காக ஒவ்வொரு மகளிர் சுய உதவி குழுக்களிலும் ஒரு நம் தோழியர் நியமிக்கப்பட்டு வட்டார அளவில் பாலின பாகுபாடு நீக்கும் மன்றம் உருவாக்கப்பட்டுள்ளது. இவர்கள் வட்டாரம் மற்றும் மாவட்ட அளவில் தடுப்பு நடவடிக்கை மேற்கொள்வதற்காக அமைப்பில் சேர்ந்து குரல் எழுப்புவர். அனைத்து மாவட்டங்களிலும் வட்டார அளவில் 47 பாலின வள மையங்கள் "வானவில் மையம்" என்ற பெயரில் துவக்கப்பட்டு பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான பாலின வன்கொடுமை, குடும்ப வன்முறை உள்ளிட்ட பிரச்சனைகளுக்கு தீர்வு காணும் மையங்களாக செயல்பட்டு வருகின்றன.



- அனைத்து வட்டாரங்களிலும் மாதாந்திரம் ஒருங்கிணைப்பு குழு கூட்டங்களையும் நடத்தி அரசின் அனைத்து துறைகளின் திட்டங்களும் இச்சிறப்பு குழுக்களுக்கு கிடைத்திட மண்டல அளவில் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மேற்படி முகாம்கள் மூலம் முதியோர் உதவித்தொகை, விதவை ஓய்வு ஊதியம், நலவாரிய உறுப்பினர் அட்டைகள், உதவி உபகரணங்கள், தொகுப்பு வீடுகள், ஓட்டுநர் உரிமம், இரு சக்கர வாகனங்கள் என இதுவரை 23,601 பயனாளிகள் பயனடைந்துள்ளனர்.

பண்ணை வாழ்வாதாரம்

- 224 உற்பத்தியாளர் குழுக்கள் சான்றளிக்கப்பட்ட விதை உற்பத்தி நடவடிக்கைகளுக்காக ரூ.448 இலட்சம் நிதி விடுவிப்பு.
- கிராமப்புற வீடுகளில் 8,00,000 ஊட்டச்சத்து தோட்டம்.
- 50 இயற்கை விவசாய தொகுப்புகள் உருவாக்கப்பட்டு ரூ.300 இலட்சம் நிதி விடுவிக்கப்பட்டது.
- ரூ.3,980 இலட்சம் நிதியுதவியுடன் 185 ஒருங்கிணைந்த பண்ணையத் தொகுப்புகள் உருவாக்கம்.

- 6,235 உற்பத்தியாளர் குழுக்கள் உருவாக்கப்பட்டு பொருளாதார நடவடிக்கை மேற்கொள்வதற்காக ரூ.12,470 இலட்சம் சுழல் நிதி.

பண்ணை சாராத வாழ்வாதாரம்

- 4,210 நிறுவனங்களுக்கு சுழல் நிதியாக ரூ.1,967 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.
- 30,216 குறு மற்றும் சிறு நிறுவனங்களுக்கு ரூ.12,334 இலட்சம் கடனுதவி.
- 248 தொழில் தொகுப்புகள் உருவாக்கப்பட்டு, சுழல் நிதியாக ரூ.620 இலட்சம்.
- பிரதமமந்திரிகுறு,சிறுஉணவுஉற்பத்திமற்றும் பதப்படுத்தும் 7,735 நிறுவனங்களுக்கான முறைப்படுத்தும் திட்டம் (PMFME) 7,622 நிறுவனங்களுக்கு தமிழ்நாடு ஊரக வாழ்வாதார இயக்கம் பரிந்துரைத்ததன் அடிப்படையில் விதை மூலதன நிதி (Seed Captial) ரூ.2,853.14 இலட்சம் நிதி விடுவிப்பு.

தேசிய ஊரகப் பொருளாதார புத்தாக்கத்திட்டம்

- 7,692 குறு மற்றும் சிறு நிறுவனங்களுக்கு ரூ.7,714 இலட்சம் கடன் இணைப்பு.

சமூக ஒருங்கிணைப்பு மற்றும் நிறுவன மேம்பாடு (SM&ID)

- தமிழ்நாடு முழுவதும் நகர்ப்புற ஏழை மக்களின் சமூக மற்றும் பொருளாதார மேம்பாட்டிற்காக 63,551 புதிய சுய உதவிக்குழுக்கள்.
- 54,424 சுய உதவிக்குழுக்களுக்கு ரூ.54.42 கோடி சுழல் நிதி வழங்கப்பட்டுள்ளது.
- சுய உதவிக்குழுக்களின் செயல்பாடுகளை ஒருங்கிணைக்க புதியதாக 1,964 பகுதி அளவிலான மற்றும் 20 நகர அளவிலான கூட்டமைப்புகள்.
- 1,152 பகுதி அளவிலான கூட்டமைப்புகளுக்கு ரூ. 5.76 கோடி சுழல் நிதி.

சுய வேலைவாய்ப்புத் திட்டம் (SEP)

- சுயவேலைவாய்ப்புத் தனிநபர் தொழில் முனைவு திட்டத்தின் கீழ் 25,805 தனி நபர்களுக்கு ரூ.146.54 கோடி வட்டி மானியத்துடன் கூடிய வங்கிக் கடன்.
- சுய வேலைவாய்ப்புக் குழு தொழில் முனைவு திட்டத்தின் கீழ், 14,205 குழுக்களுக்கு ரூ.533.31 கோடி வட்டி மானியத்துடன் கூடிய வங்கிக் கடன்.

சுய வேலைவாய்ப்புத் திட்டம் (சுய உதவிக் குழுக்களுக்கு வங்கி இணைப்பு) (SEP–BL)

- நகர்ப்புறங்களில் செயல்படும் 1,17,289 சுய உதவிக் குழுக்களுக்கு ரூ.7,060.68 கோடி வட்டி மானியத்துடன் கூடிய வங்கி கடன் சுய வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்டுள்ளது.

தீன் தயாள் உபாத்தியாய கிராமின் கௌசல்ய யோஜனா (DDU–GKY)

திறன் வளர்ப்புப் பயிற்சி பணியமர்வு

- 18 முதல் 35 வரை உள்ள கிராமப்புற ஏழை இளைஞர்களுக்கு ரூ.376.45 கோடி செலவில் 62,742 இளைஞர்களுக்குத் திறன் வளர்ப்புப் பயிற்சி அளிக்கப்பட்டு 34,391 இளைஞர்கள் பல்வேறு நிறுவனங்களில் பணியமர்த்தப்பட்டுள்ளனர்.

வேலை வாய்ப்பு முகாம் 2021–2022

- 511 வேலைவாய்ப்பு முகாம்கள் இளைஞர் திறன் விழாக்கள் ரூ.4.01 கோடி செலவில் மாவட்ட அளவில் நடத்தப்பட்டு 92,003 இளைஞர்கள் பல்வேறு நிறுவனங்களில் பணியமர்த்தப்பட்டுள்ளனர்.

வாழ்ந்து காட்டுவோம் திட்டம்

- 5,000 உற்பத்தியாளர் குழுக்கள் உருவாக்கப்பட்டு 5,000 உற்பத்தியாளர் குழுக்களுக்கு ரூ.50.73 கோடி துவக்க நிதி வழங்கப்பட்டுள்ளது.
- 1,000 தொழில் குழுக்கள் உருவாக்கப்பட்டு, 1,000 தொழில் குழுக்களுக்கு ரூ. 9.30 கோடி துவக்க நிதி வழங்கப்பட்டுள்ளது.
- 53 உற்பத்தியாளர் கூட்டமைப்புகள், நிறுவனங்கள் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டு ரூ.14.68 கோடி துவக்க நிதி வழங்கப்பட்டுள்ளது.
- 2,526 சமுதாய திறன் பள்ளிகளை (CSS) அமைக்கப்பட்டு அதில் 51,193 இளைஞர்களுக்கு ரூ.19.30 கோடி செலவில் திறன் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.
- 6,000 சமுதாய பண்ணைப் பள்ளிகள் (CFS) அமைக்கப்பட்டு அதில் 1,82,337 உற்பத்தியாளர்களுக்கு ரூ.51.01 கோடி செலவில் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.
- 10,893 தொழில் முனைவோர்களுக்கு தொழில்முனைவோர் மேம்பாட்டுத் திட்டத்தின் மூலம் ரூ.2.61 கோடி செலவில் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

❖ ❖ ❖

சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலை மற்றும் ஊழல் தடுப்புச் சட்டம்



திரு. எஸ்.ரகுபதி அவர்கள்
மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர்

- ஆசிரியர் தேர்வு வாரியம் மூலம் தெரிவு செய்யப்பட்ட 11 நபர்களை அரசு சட்டக் கல்லூரிகளில் உதவிப் பேராசிரியர்களாக தற்காலிகமாக நியமனம்.
- அரசு சட்டக்கல்லூரிகளின் நூலகங்களில் மாணவர்களின் பயன்பாட்டிற்கென சட்டப்புத்தகங்கள், சட்ட இதழ்கள் மற்றும் சட்ட தரவுதளங்கள் வாங்குவதற்கென ரூ.1 கோடி நிதி ஆணை.
- சிவகங்கை மாவட்டம் காரைக்குடி நகரத்தில் 3 ஆண்டு மற்றும் 5 ஆண்டு சட்டப் படிப்பில் முதலாமாண்டில் தலா 80 மாணவர்களுடனும் ஒரு அரசு சட்டக் கல்லூரியினை துவங்கிட தொடரும் மற்றும் தொடராச் செலவினங்களாக ரூ.92.01 இலட்சம் நிதி ஒப்பளிப்பு செய்தும், ஆசிரியர் மற்றும் ஆசிரியரல்லாப் பணியிடங்கள் தோற்றுவித்தும் அக்கல்லூரிக்கென மாணவ, மாணவியர் விடுதிகளுடன் கூடிய நிரந்தரக் கட்டடம் கட்டுவதற்கு ரூ.100.45 கோடி நிதி ஒப்பளிப்பு செய்தும், மேலும், அக்கல்லூரிக்கென தற்காலிகமாக தெரிவு செய்யப்பட்டுள்ள கட்டடத்தில் புனரமைப்புப் பணிகள் மேற்கொள்வதற்கு ரூ.10.14 இலட்சமும் ஆணை.
- திருச்சிராப்பள்ளி, கோயம்புத்தூர் மற்றும் திருநெல்வேலி அரசு சட்டக்கல்லூரிகளில் அதிவேக இணைய வசதியுடன் கூடிய கம்பியில்லா மண்டலம் (Wi-Fi Zone) அமைத்திடும் பணிகளுக்கென ரூ.30 இலட்சம் ஆணை.
- அரசு சட்டக் கல்லூரிகளில் பணிபுரியும் உதவிப் பேராசிரியர்களுக்கு, ஆசிரியர் மேம்பாட்டுத் திட்டம் மற்றும் புத்தாக்கப் பயிற்சியினை நடத்திட ரூ.14 இலட்சம் ஆணை.



- 14 அரசு சட்டக் கல்லூரிகளில் இறுதியாண்டு பயிலும் மாணவர்களுக்கு சர்வதேச பயிற்சிப் பட்டறைகள், கருத்தரங்குகள் மற்றும் சட்ட மாநாடுகள் நடத்திட ஆண்டொன்றுக்கு ரூ.28 இலட்சம் ஒப்பளிப்பு.
- திருச்சிராப்பள்ளி,கோயம்புத்தூர்,திருநெல்வேலி, செங்கல்பட்டு மற்றும் வேலூர் அரசு சட்டக் கல்லூரிகளில்உள்ளரங்குவிளையாட்டுத்திடல் மற்றும் உடற்பயிற்சிக் கூடம் நிறுவுவதற்கு ரூ.28 இலட்சம் ஒப்பளிப்பு.
- நாமக்கல்அரசுசட்டக்கல்லூரிக்கெனமாணவ, மாணவியர் விடுதிகளுடன் கூடிய நிரந்தரக் கட்டடம் கட்ட ரூ.92.31 கோடி ஒப்பளிப்பு.
- சென்னை டாக்டர் அம்பேத்கர் அரசு சட்டக் கல்லூரி, புதுப்பாக்கம், செங்கல்பட்டு மற்றும் திருநெல்வேலி அரசு சட்டக் கல்லூரிகளில் கூடுதலாகமுதுநிலைசட்டப்படிப்பு(எல்.எல்.எம்.) தொடக்கம்.
- 15 அரசு சட்டக் கல்லூரி நூலகங்களுக்குப் புத்தகங்கள்வாங்கிடரூ.3கோடிநிதிஒப்பளிப்பு.
- தமிழ்நாட்டிலுள்ள14அரசுசட்டக்கல்லூரிகளிலும் மாதிரிநீதிமன்றபோட்டிகளைகல்லூரிஅளவிலும், அரசுசட்டக்கல்லூரிகளுக்கிடையேயும்,மாநில அளவிலும்,தேசியஅளவிலும்நடத்துவதற்கும் மற்றும்சர்வதேசஅளவிலானமாதிரிநீதிமன்ற போட்டிகளில்மாணவர்கள்கலந்துகொள்ளவும் மொத்தம் ரூ.1.40 கோடி ஒப்பளிப்பு.
- வேலூர் மற்றும் திருநெல்வேலி அரசு சட்டக் கல்லூரிகளுக்கு நூலகக்கட்டடம் கட்டும் பணிக்காக ரூ.13.03 கோடி நிருவாக அனுமதி மற்றும் நிதி ஒப்பளிப்பு.
- திருச்சிராப்பள்ளி,கோயம்புத்தூர்,திருநெல்வேலி, செங்கல்பட்டு மற்றும் வேலூர் ஆகிய அரசு சட்டக் கல்லூரிகளில் குடிநீர் சுத்திகரிப்பு இயந்திரம்(ROSystem)நிறுவிடும்பொருட்டுரூ.25 இலட்சம் ஆணை.
- பட்டறைப்பெரும்புதூர், சென்னை டாக்டர் அம்பேத்கர்அரசுசட்டக்கல்லூரியில்கால்பந்து மற்றும் மட்டைப் பந்து விளையாட்டுத்திடல் நிறுவப்படும்பொருட்டுரூ.1.58கோடிஆணை.
- தமிழ்நாட்டில்உள்ளஅரசுசட்டக்கல்லூரிகள் மற்றும் தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகத்தின்சீர்மிகுசட்டப்பள்ளியில் 5ஆண்டுஒருங்கிணைந்தசட்டப்பட்டப்படிப்பு



அல்லது 3 ஆண்டு சட்டப்பட்டப்படிப்பு முடித்த 17 சட்டப் பட்டதாரிகளை தேர்வு செய்து தன்னார்வப் பயிற்சித் திட்டம் ரூ. 40.80 இலட்சத்தில் தொடங்க ஆணை.

- சேலம், நாமக்கல் மற்றும் தேனி அரசு சட்டக் கல்லூரிகளுக்கென இயந்திரமும் சாதனமும் மற்றும் கணினியும் அதன் துணைப்பாகங்களும் வாங்கிடும் பொருட்டு, ரூ.35.92 இலட்சம் நிதி ஒப்பளிப்பு ஆணை.
- கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி மற்றும் திருநெல்வேலி அரசு சட்டக்கல்லூரிகளுக்கு தேவையான அறைகலன்கள் மற்றும் மர இரும்புத் தளவாடங்கள் வாங்கிடும் பொருட்டு ரூ.1.57 கோடி நிதி ஒப்பளிப்பு.
- தேனி அரசு சட்டக் கல்லூரியில் 500 KVA மின்மாற்றி மற்றும் MV Panel Board & Room & Cable Trench arrangements ஆகியவற்றை நிறுவிடும் பொருட்டு ரூ.1.83 கோடி நிதி ஆணை.
- தேனி அரசு சட்டக் கல்லூரி மற்றும் மாணவ, மாணவியர் விடுதிகளுக்கு முல்லைப் பெரியாறு நதியிலிருந்து தமிழ்நாடு குடிநீர் வழங்கல் மற்றும் வடிகால் வாரியம் வாயிலாக புதிய குடிநீர் இணைப்பு பெறுவதற்கு ரூ.3.50 கோடி நிதி ஆணை.
- அரசு சட்டக்கல்லூரிகளில் ஐந்தாண்டு சட்டப் படிப்பிற்கு 7.5 விழுக்காடு சிறப்பு உள்ஒதுக்கீட்டின் அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டு சேர்க்கைப் பெற்ற மாணவர்களுக்கு ரூ.70.19 இலட்சம் நிதி ஒப்பளிப்பு ஆணை.
- தமிழ்நாடு தேசிய சட்டப்பல்கலைக்கழகத்தில் இணைய வழியில் சட்ட வரலாற்று மாநாடு நடத்துவதற்கென ஏற்பட்ட தொகை ரூ.4.40 இலட்சம் மீள் ஆணை.
- தமிழ்நாடு தேசிய சட்டப்பல்கலைக்கழகத்தில் இளநிலை சட்டப்படிப்பு பயின்ற தமிழகத்தைச் சேர்ந்த முதல் தலைமுறைப் பட்டதாரி மாணவர்களுக்கு அவர்கள் கல்விக்கட்டணமாக செலுத்தியுள்ள ரூ.18 இலட்சம் மீள் ஆணை.
- திருச்சிராப்பள்ளியிலுள்ள தமிழ்நாடு தேசிய சட்டப் பல்கலைக்கழகத்தில், சட்டம் மற்றும் வேளாண்மைக்கான மையம் மற்றும் முதலீடுகளுக்கான சட்டங்கள் மையம் ஆகிய இரு புதிய சட்ட ஆராய்ச்சி மையங்களை நிறுவிட ரூ.20 இலட்சம் ஆணை.
- தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகத்தின் பெருங்குடி வளாகத்தில் செயல்பட்டு வரும் சீர்மிகு சட்டப் பள்ளியில்



செவியுணர்காணொளிஊடகமையம்நிறுவிட ரூ.44.27இலட்சம் ஒப்பளிப்பு.

- தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகத்தின்பெருங்குடிவளாகத்தில் செயல்பட்டு வரும் சீர்மிகு சட்டப் பள்ளியில் சூரியமின்சக்திஉற்பத்திநிலையம்நிறுவிடும் பணிகளுக்கென ரூ.1.67 கோடிக்கு ஆணை.
- தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகத்தில்இணையவெளி–சட்டம் மற்றும்நீதிஎன்றபுதியபாடப்பிரிவில்முதுநிலை சட்டப்படிப்பு(எல்எல்.எம்)ரூ.1.18கோடிசெலவில் தொடக்கம்.
- தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகத்தின் கீழ் செயல்பட்டு வரும் சட்ட ஆராய்ச்சித் துறையின் திறனை சர்வதேச அளவில் மேம்படுத்தும் திட்டம் ரூ.15இலட்சம்செலவில்தொடங்கநடவடிக்கை எடுக்க ஆணை.
- அரசு சட்டக்கல்லூரிகளில் எல்.எல்.எம் சட்ட முதுநிலைப்படிப்புமாணவர்சேர்க்கையினை இணைய வழியில் நடத்திட அனுமதி.
- தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகத்தின்நூலகத்திற்குகூடுதலாக சட்டப் புத்தகங்கள் வழங்கிட ரூ.65 இலட்சம் ஆணை.
- அரசு சட்டக்கல்லூரிகள் மற்றும் சீர்மிகு சட்டப் பள்ளியில் இளநிலை சட்டப்படிப்பு பயிலும்மாணவர்களுக்கு 'வழக்காடுதல்கலை' என்ற தலைப்பில் பயிலரங்கம் நடத்திட ரூ.32.25இலட்சம்நிதிஒப்பளிப்புசெய்துஆணை.

- திருச்சிராப்பள்ளியிலுள்ள தமிழ்நாடு தேசிய சட்டப் பல்கலைக்கழகத்தில், இணைய சட்டங்கள் மற்றும் இணையப் பாதுகாப்பு ஆகியவை தொடர்பான ஆராய்ச்சி, மேம்பாடு மற்றும்பயிற்சிமையம்மற்றும்வணிகம்மற்றும் மனித உரிமைகள் மையம் ஆகிய இரு புதிய சட்ட ஆராய்ச்சி மையங்கள் நிறுவுவதற்காக ரூ.20 இலட்சத்திற்கு ஆணை.
- தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகத்திற்கு தொகுப்பு நல்கை நிதியாக(BlockGrant–I)ரூ.16.29கோடி ஆணை.
- திருச்சிராப்பள்ளி, தமிழ்நாடு தேசிய சட்டப் பல்கலைக்கழகத்தில்இளநிலைசட்டப்படிப்பில் முதலாம்ஆண்டுபயிலும்தமிழகத்தைச்சேர்ந்த முதல்தலைமுறைப்பட்டதாரிமாணவர்களுக்கு கல்விக்கட்டணச்சலுகையாகரூ.27இலட்சம் வழங்கி ஆணை.
- தமிழ்நாடுதேசியசட்டப்பல்கலைக்கழகத்தின் இளநிலை,முதுநிலைமற்றும்ஆராய்ச்சிசட்டப் படிப்புகளுக்கானமாணவர்சேர்க்கையில்அகில இந்திய இட ஒதுக்கீட்டுக்கான 50 சதவிகித இடங்களையும், தமிழ்நாடு அரசின் இட ஒதுக்கீட்டுக் கொள்கையான 69 சதவிகிதம் (பட்டியலினத்தவர்–18சதவிகிதம்,பழங்குடியினர்–1 சதவிகிதம் மற்றும் இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் – 50 சதவிகிதம்)ஐ போன்றே பின்பற்றிடஅரசுஆணைபிறப்பித்துநாட்டிற்கே முன்மாதிரி மாநிலமாக தமிழ்நாடு திகழ்கிறது.
- தமிழ்நாடுதேசியசட்டப்பல்கலைக்கழகத்தின் மாணவர்கள் சர்வதேச மாதிரி நீதிமன்றப் போட்டிகளில்கலந்துகொள்ளரூ.5.12இலட்சம் நிதி.
- தமிழ்நாடுதேசியசட்டப்பல்கலைக்கழகத்தில் ஐந்தாண்டு சட்டப்படிப்பிற்கு 7.5 விழுக்காடு சிறப்புஉள்ஒதுக்கீட்டின்அடிப்படையில்தெரிவு செய்யப்பட்டுசேர்க்கைபெற்றமாணவர்களுக்கு ரூ.23.96 இலட்சத்திற்கு ஆணை.
- வாஷிங்டனில் நடைபெற்ற மாதிரி நீதிமன்ற போட்டியில் பங்கேற்ற தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர்பல்கலைக்கழகம்சீர்மிகுசட்டப்பள்ளி மாணவர்களுக்குரூ.8.80இலட்சம்ஒப்பளிப்பு ஆணை.
- ஆறு அரசு சட்டக்கல்லூரிகளில் 5 ஆண்டு மற்றும் 3 ஆண்டு சட்டப்படிப்புகளில் தலா 40 மாணவர்கள் வீதம் மொத்தம் 480மாணவர்களைகூடுதலாகஅனுமதித்தல்.
- முன்னாள் முதல்வர் முத்தமிழறிஞர் டாக்டர் மு.கருணாநிதி அவர்களின் நூற்றாண்டு விழாவினைமுன்னிட்டுமாநிலசட்டஆட்சி மொழி ஆணையம் 100 சட்டங்களை (37 மையச்சட்டங்கள்(தமிழ்மொழிப்பெயர்ப்பு)+63 தமிழ்நாடு அரசு சட்டங்கள்) புத்தக வடிவில் அச்சிட்டு வெளியிடப்பட்டுள்ளன.
- 37மையச்சட்டங்களின்தமிழ்மொழிபெயர்ப்பு இந்திய அரசிதழில் வெளியிடப்பட்டு, இருமொழிப்பதிப்பாக புத்தக வடிவில் வெளியிடப்பட்டுள்ளன. 63 தமிழ்நாடு அரசு சட்டங்களில்,43சட்டங்கள்மறுபதிப்பாகவும், 20சட்டங்கள்புதியபதிப்பாகவும்புத்தகவடிவில் அச்சிட்டுவெளியிடப்பட்டுள்ளன.மேற்கண்ட சட்டங்கள் www.tn.gov.in/acts/dept/19 என்ற இணையதள முகவரியில் கிடைக்கப்பெறும்.

சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் துறை

- ரூ.180 இலட்சம் செலவினத்தில் பழைய இயந்திரங்களுக்கு மாற்றீடாக அனைத்து மத்தியசிறைகளுக்கும்9ஊடுகதிர்அலகிடல் கருவிகள் நிறுவப்பட்டு நல்ல முறையில் இயங்கி வருகிறது.
- சிறைவாசிகளின் தேநீர் விடுதியில், வாரம் ஒன்றிற்கு சிறைவாசிகள் செலவு செய்யும் தொகையின்உச்சவரம்பினை,"அ"மற்றும் "ஆ" வகுப்பு சிறைவாசிகளுக்கு முறையே ரூ.750/–லிருந்துரூ.1,000/–ஆகவும்,மற்றும் ரூ.450/–லிருந்துரூ.750/–ஆகவும்உயர்வு.
- ரூ.28.80இலட்சம்தொடர்செலவினத்தில்24 மனநல ஆலோசகர்களுக்கு (Counsellors) தற்போது வழங்கப்பட்டு வரும் ரூ.15,000/– மதிப்பூதியம் ரூ.25,000/– ஆக உயர்வு
- அனைத்து மத்திய சிறைகள், பெண்கள் தனிச் சிறைகள் புழல், வேலூர். திருச்சி மற்றும்மாவட்டச்சிறை(ம)பார்ஸ்டல்பள்ளி

புதுக்கோட்டைஆகியவற்றில்உள்ளபழைய EPBAX இயந்திரங்களுக்குபதிலாக,13புதிய EPBAX இயந்திரங்களும்மற்றும்பழையபடிப் பெருக்கிஇயந்திரங்களுக்குபதிலாக,11படிப் பெருக்கி (Digital Duplicator) இயந்திரங்கள் ரூ.124.75 இலட்சம் செலவினத்தில் கொள்முதல்.

- சிறைவாசிகள் ஈட்டும் ஊதியத்திலிருந்து (Prisoners Wages), பங்கீடு செய்யப்படும் தொகையின் விகிதத்தை 50 விழுக்காட்டிலிருந்து80விழுக்காடாகஉயர்வு.
- ரூ.82.92 இலட்சம் செலவினத்தில் நவீனமயமாக்க 63 கணினிகள், 45 டாட் மேட்ரிக்ஸ்பிரிண்டர்கள்,18லேசர்பிரிண்டர்கள் மற்றும் 21 ஜெராக்ஸ் இயந்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

சிறைகளில் உள்ள நூலகங்களை ரூ.208.74 இலட்சம் செலவில் மேம்படுத்திட ஆணை

அ. சிறைகள்மற்றும்சீர்த்திருத்தப்பணிகள்துறை புத்தகக்கண்காட்சியில்100,000க்கும்மேற்பட்ட புத்தகங்கள்சிறைவாசிகளின்பயன்பாட்டிற்காக நன்கொடையாக சேகரிக்கப்பட்டன

ஆ. சிறைவாசிகளின் மறுவாழ்வு மற்றும் மறுசீரமைப்பை கருதி,மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் சிறை நூலகங்களுக்கு 1,500 புத்தகங்களை நன்கொடையாக வழங்கியுள்ளார்.

- களப்பணியாளர்களின் நலனுக்காக இடர்படி ரூ.900–லிருந்துரூ.1,000/–ஆகசிறைஅலுவலர் முதல் சிறை கண்காணிப்பாளர் வரை மற்றும் ரூ.800–லிருந்துரூ.1,000/–ஆகஇரண்டாம்நிலைக் காவலர் முதல் துணைச் சிறை அலுவலர் வரைஆண்டுக்குரூ.83.48இலட்சம்உயர்த்தி வழங்கப்பட்டுள்ளது.3,526களப்பணியாளர்கள் பயன்.
- ஆண்டுக்கு ரூ.26 கோடி கூடுதல் செலவில் சிறைவாசிகளுக்கானஉணவுமுறையானது மாற்றியமைப்பு.
- சிறைவாசிகள் தமது குடும்ப உறுப்பினர்கள் நண்பர்கள் வழக்குரைஞர்கள் ஆகியோரிடம் தொலைபேசிமூலம் தொடர்பு கொள்ள சிறைகளில் பொதுத்துறை நிறுவனங்களின் உதவியுடன்குரல்மற்றும்காணொளி(voiceand video)தொலைபேசிவசதிஅமைக்கஅனுமதியும், தற்போது வழங்கப்பட்டு வரும் தொலைபேசி வசதிக்கான(ஆடியோ)காலஅளவைமாதத்திற்கு 8–லிருந்து 10 முறை என 3 நாட்களுக்கு ஒரு முறை பயன்படுத்தவும், அதிகபட்சம் பேசுவதற்கான கால அளவை மாதத்திற்கு 5நிமிடங்களிலிருந்து120நிமிடங்களாகவும்ஒரு அழைப்பிற்கு12நிமிடங்கள்வீதம்எனஉயர்த்தி ஆணை.
- சிறைவாசிகளால்தயாரிக்கப்படும்சிறைசந்தை பொருட்களை "Freedom" என்ற குறியீட்டு பெயரில் தமிழ்நாடு காவலர் அங்காடிகளில் விற்பனை.
- பொது மன்னிப்பில் சிறையிலிருந்து முன்விடுதலை செய்யப்பட்ட 660முன்னாள் சிறைவாசிகளுக்குதமிழ்நாடுசிறைமீண்டோர் நலச்சங்கத்தின்சார்பில்சுயதொழில்தொடங்கிட ரூ.3.30கோடிமாண்புமிகுதமிழ்நாடுமுதலமைச்சர் அவர்கள் வழங்கினார்.

குற்ற வழக்குத் தொடர்வு இயக்ககம்

- புதியதாகதிருவள்ளூர்குற்றவழக்குதொடர்வு உதவிஇயக்குநர்அலுவலகத்தைஒருஉதவி இயக்குநர், ஒரு உதவியாளர், ஒரு தட்டச்சர் மற்றும் ஒரு அலுவலக உதவியாளர் ஆகியோருடன் அமைத்திட அரசு ஆணை.
- கிருஷ்ணகிரிமற்றும்திருப்பூர்மாவட்டங்களில் குற்ற வழக்குத் தொடர்வு உதவி இயக்குநர் அலுவலகங்கள், தலா ஒரு உதவி இயக்குநர், ஒரு உதவியாளர், ஒரு தட்டச்சர் மற்றும் ஒரு அலுவலக உதவியாளர் ஆகியோருடன் உருவாக்க அரசு ஆணை.
- தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் மூலம் பல்வேறு பதவிகளுக்கு தெரிவு செய்யப்பட்ட 70 நபர்கள் பணி நியமனம்.

❖ ❖ ❖

வீட்டுவசதி, ஊரக வீட்டுவசதி, நகரமைப்புத் திட்டமிடல் மற்றும் வீட்டுவசதி மேம்பாடு, இடவசதி கட்டுப்பாடு, நகரத்திட்டமிடல் மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சி, மதுவிலக்கு ஆயத்தீர்வை மற்றும் கருப்பஞ்சாற்றுக் கசண்டு (மொலாசஸ்)



திரு. **சு.முத்துசாமி** அவர்கள்
மாண்புமிகு வீட்டுவசதி மற்றும்
நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர்

வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை

தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம்

- 5,843 ஒதுக்கீட்டு ஆணைகள் மற்றும் 8,454 விற்பனைப் பத்திரங்கள் தமிழில் வழங்கப்பட்டுள்ளது.
- 98 நபர்களுக்கு கருணை அடிப்படையிலும் மற்றும் 43 நபர்களுக்கு தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் மூலம் பணி நியமனம்.
- வட்டி தள்ளுபடி திட்டத்தின் கீழ் 650 ஒதுக்கீடுதாரர்கள் ரூ.8.91 கோடிக்கு பயன்.
- முதலில் வருவோருக்கு முதலில் முன்னுரிமைத் திட்டத்தின் கீழ் ரூ.217.95 கோடி மதிப்பீட்டில் 402 குடியிருப்புகள் விற்பனை.

கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் (வீட்டுவசதி)

- ஒருமுறை கடன் தீர்வு தள்ளுபடித் திட்டத்தின் கீழ் ரூ.192.73 கோடித் தள்ளுபடி.

நகர் மற்றும் ஊரமைப்பு இயக்ககம்

- ரூ.33.87 கோடி மதிப்பீட்டில் மதுரை, கோயம்புத்தூர், சேலம் மற்றும் ஈரோடு மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகங்கள் திறப்பு.
- நகர் ஊரமைப்புத் துறையின் அதிகார வரம்பிற்கு உட்பட்ட 10 மண்டலங்களுக்கான மண்டலத் திட்டங்கள் தயாரிப்புப் பணிகள்.
- பொதுமக்கள் பயன்பெறும் வகையில் திட்ட அனுமதிக்கான கால அவகாசம் 5 ஆண்டுகளிலிருந்து 8 ஆண்டுகளாக கால நீட்டிப்பு.
- மாநிலத்தின் 7 சதவிகிதமாக உள்ள திட்டப் பகுதியை 22 சதவிகிதமாக உயர்த்திட 111 முழுமைத்திட்டங்கள் மறுஆய்வுக்கும், 24 நகரங்களுக்கு புதிய முழுமைத் திட்டங்கள் தயாரிக்கும் பணிகள்.





- ஒற்றைச்சாளர முறை தொடங்கியது முதல் இதுநாள் வரை கட்டட அனுமதி கோரி மொத்தம் 8,555 விண்ணப்பங்கள் பெறப்பட்டு, 3,841 விண்ணப்பங்களுக்குத் தீர்வுகாணப்பட்டுள்ளன. மேலும், மனைப்பிரிவு அனுமதி கோரி மொத்தம் 17,794 விண்ணப்பங்கள் இணையதளத்தில் பெறப்பட்டு, 11,781 விண்ணப்பங்களுக்குத் தீர்வு காணப்பட்டுள்ளன.
- ஒற்றைச்சாளர முறையில் குறு, சிறு, நடுத்தரத் தொழிற்சாலைகளுக்கான (MSME) மற்றும் Guidance Bureau மூலம் 448 விண்ணப்பங்களுக்குத் திட்ட அனுமதி.
- மனைப்பிரிவு விண்ணப்பங்கள், திட்ட அனுமதி மற்றும் நில உபயோக விண்ணப்பங்கள் இணையதளம் மூலமாக பெறப்பட்டு பரிசீலனை.
- B–Plan–க்கு AICTE ஒப்புதல் பெறப்பட்டு சென்னை அண்ணா பல்கலைக்கழகத்தில் வகுப்புகள்.
- உட்கட்டமைப்பு மற்றும் வசதி நிதியின் கீழ் ரூ.2,915.54 கோடி மதிப்பீட்டிலான 50 திட்டங்களுக்குப்பல்வேறுத்துறைகளின்மூலம் பணிகள் மேற்கொள்ள ஒப்புதல்.
- கோயம்புத்தூர், ஈரோடு, மதுரை, சேலம், திருப்பூர், திருநெல்வேலி, திருச்சிராப்பள்ளி மற்றும்வேலூர்ஆகியநகரங்களில்1ஏக்கருக்கு மேல் நகர்ப்புர காடுகள் உருவாக்கம்.



கருப்பஞ்சாற்றுக் கசண்டு (மொலாசஸ்)

- பிஹெவிமொலாசஸ்மற்றும்கரும்புச்சாலிருந்து எத்தனால் உற்பத்திக்கு சான்றளிக்கும் அதிகாரம் எளிமைப்படுத்தப்பட்டு வடிப்பாலை அலுவலர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.
- நீர் ஆதராங்களிலிருந்து 1 கிலோ மீட்டர் முதல் 5 கிலோ மீட்டர் தூரம் வரை தொழிற்சாலைகள் நிறுவப்படுவதைத்தடுக்கும்1989மற்றும்1998ஆம் ஆண்டுவெளியிடப்பட்டஅரசாணைகளிலிருந்து ஏற்கெனவே நிறுவப்பட்டுள்ள சர்க்கரை ஆலைகளுக்கு கழிவுநீர் வெளியேற்றமில்லா தொழில்நுட்பத்துடன்கூடியஎத்தனால்ஆலை அமைக்கவிலக்களித்துபுதியஎத்தனால்ஆலை அமைக்க அரசு நடவடிக்கை எடுத்துள்ளது.
- எம்.ஆர்.கே கூட்டுறவு சர்க்கரை ஆலை, சேத்தியாத்தோப்பு மற்றும் கள்ளக்குறிச்சி–1 கூட்டுறவுசர்க்கரைஆலைமூங்கில்துறைப்பட்டு ஆகியஇரண்டுஆலைகளில்60KLPDஎத்தனால் உற்பத்தி துவங்கிட அரசால் அறிவிக்கப்பட்டு ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. மேலும், சுற்றுச் சூழல் அனுமதியும் பெறப்பட்டுள்ளது.

❖ ❖ ❖

கூட்டுறவுத் துறை



திரு. கே.ஆர்.பெரியகருப்பன் அவர்கள்
மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர்

கூட்டுறவுத் துறை

கூட்டுறவு பொது நகைக்கடன் தள்ளுபடி 2021

- கூட்டுறவுநிறுவனங்களில்குடும்பஅட்டையின்படி ஒருகுடும்பத்தில் 5பவுனுக்கு உட்பட்டு (மொத்த எடை 40 கிராமுக்கு உட்பட்டு) பொது நகைக் கடன் பெற்று 31.03.2021ஆம் நாள் வரை நிலுவையிலிருந்த பொது நகைக் கடன் தொகை ரூ.6,000 கோடியை (தோராயமாக) தள்ளுபடி செய்து அரசு ஆணையிட்டுள்ளது.
- 13,12,717 பயனாளிகளுக்கு ரூ.4,818.88 கோடி அளவிற்கு தள்ளுபடி சான்றிதழுடன், அவர்கள் அடமானம் வைத்த நகைகளும் திருப்பி வழங்கப்பட்டுள்ளன.
- தள்ளுபடித் தொகையில் 2021–2022ஆம் ஆண்டில் ரூ.1,215.58 கோடியும், 2022–2023ஆம் ஆண்டில் ரூ.2,000 கோடியும், 2023–2024ஆம் ஆண்டில் ரூ.1,000 கோடியும் என ஆக மொத்தம் இதுவரை ரூ.4,215.58 கோடி அரசால் கூட்டுறவு நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.
- 2024–2025ஆம் ஆண்டிற்கானவரவுசெலவுதிட்டத்தில், இதற்கெனரூ.730கோடி நிதியொதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

சுயஉதவிக்குழுகடன்தள்ளுபடி 2021

- கூட்டுறவு நிறுவனங்கள் மூலம் வழங்கப்பட்ட மகளிர் சுய உதவிக் குழுக் கடன்களில், 31.03.2021 அன்றைய தேதியில் நிலுவையில் உள்ள கடன் தொகை



ரூ.2,755.99 கோடியை தள்ளுபடி செய்து அரசு ஆணையிட்டுள்ளது. இத்திட்டத்தின் மூலம் கோவிட்–19 பெருந்தொற்றால் இயல்புவாழ்க்கை பாதிக்கப்பட்டு கடனை திருப்பிசெலுத்த இயலாத 1,17,617 மகளிர் சுயஉதவிக்குழுக்களைச் சார்ந்த 15,88,309 மகளிர் பயன்பெறுவர்.

❖ 2021–2022ஆம் ஆண்டில் ரூ.600 கோடியும், 2022–2023ஆம் ஆண்டில் ரூ.600 கோடியும், 2023–2024ஆம் ஆண்டில் ரூ.600 கோடியும் என ஆக மொத்தம் ரூ.1,800 கோடி அரசால் கூட்டுறவு நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

❖ எஞ்சிய தொகை நடப்பாண்டில் (2024 – 2025) கூட்டுறவுகளுக்கு வழங்கப்படும்.

பயிர்க்கடன்

❖ பயிர்க் கடனை உரிய கெடு தேதிக்குள் திரும்ப செலுத்தும் விவசாயிகளுக்கு வட்டியில்லா பயிர்க் கடன்களை கூட்டுறவுச் சங்கங்கள் வழங்கி வழங்குகின்றன. 07.05.2021 முதல் 31.12.2023 வரை 46,72,849 விவசாயிகளுக்கு ரூ.35,852.48 கோடி பயிர்க்கடன் வழங்கப்பட்டுள்ளது.

கால்நடை வளர்ப்பு மற்றும் அவை சார்ந்த இதர பணிகளுக்கு கடன்கள்

❖ 2021–2022ஆம் ஆண்டு முதல் கால்நடை வளர்ப்பு மற்றும் அவை சார்ந்த இதர பணிகளுக்கு பராமரிப்புக் கடன் வழங்குவது உழவர் கடன் அட்டை (KCC) திட்டத்தின்கீழ் கொண்டுவரப்பட்டுள்ளது. இதனால் உரிய காலத்தில் கடனை திருப்பி செலுத்தும் கால்நடை வளர்ப்பு சார்ந்த பணிகளில் ஈடுபட்டுள்ள விவசாயிகளிடம் வட்டி ஏதும் வசூலிக்கப்படுவதில்லை. 6,52,110 விவசாயிகளுக்கு கால்நடை வளர்ப்பு மற்றும் அதன்தொடர்புடையபணிகளுக்காக ரூ.3,233.92 கோடி கடன் வழங்கப்பட்டுள்ளது.

மகளிர்சுய உதவிக் குழுக் கடன்

❖ மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கான கடன் உச்சவரம்பு ரூ.12 இலட்சத்திலிருந்து ரூ.20 இலட்சமாக உயர்த்தப்பட்டுள்ளது. 1,25,167 சுயஉதவிக்குழுக்களுக்கு ரூ.6,265.41 கோடி கடன் வழங்கப்பட்டுள்ளது.

கைம்பெண்கள் மற்றும் கணவனால் கைவிடப்பட்ட பெண்களுக்கான கடன்கள்

❖ 13,003 கைம்பெண்கள் மற்றும் கணவனால் கைவிடப்பட்ட பெண்களுக்கு 5 சதவீதவட்டியில் ரூ.35.35 கோடி கடன் வழங்கப்பட்டுள்ளது.

மாற்றுத்திறனாளிகளுக்கான கடன்கள்

❖ மாற்றுத்திறனாளிகளை சுயசார்புடையவர்களாக மாற்றவும், நிதி சுதந்திரத்தை வளர்க்கவும், 32,448 பயனாளிகளுக்கு ரூ.151.66 கோடி கடன் வழங்கப்பட்டுள்ளது.

பணிபுரியும் பெண்கள் மற்றும் மகளிர் தொழில் முனைவோர் கடன்கள்

❖ சமூகநீதியை மேம்படுத்த 11,906 பணிபுரியும் பெண்களுக்கு ரூ.331.13 கோடியும், 32,338 மகளிர் தொழில்முனைவோருக்கு ரூ.191.23 கோடியும் கடன் வழங்கப்பட்டுள்ளது.

தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களை பல்சேவை மையங்களாக மாற்றுதல்

❖ தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியிலிருந்து வேளாண் உட்கட்டமைப்பு நிதியின் கீழ் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள் நிதியுதவி பெற்று, பல்சேவை மையங்களாக மாற்றப்பட்டு வருகின்றன.



ரூ.542.01 கோடி மதிப்பிலான 5,278 திட்டப் பணிகள் 3,023 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கங்களில் நிறைவேற்றப்பட்டு அவை பல்சேவை மையங்களாக மாற்றப்பட்டுள்ளன.

Coop e-வாடகை' செயலி

❖ விவசாயபெருமக்களுக்குதேவைப்படும்விவசாய இயந்திரங்கள்மற்றும்கருவிகளைவாடகைக்கு பதிவு செய்யும் பொருட்டு 'Coop e-வாடகை' செயலிஉருவாக்கப்பட்டுள்ளது.இதனைwww.rcs.tn.gov.in என்ற இணையதளத்தில் பதிவு செய்துபெற்றுக்கொள்ளலாம்.மேலும்,'உழவர் செயலி'மூலமும்தங்கள் வட்டாரத்தில்உள்ள கூட்டுறவுச் சங்கங்களிலிருந்து வாடகைக்கு பெற்றுக்கொள்ளலாம்.

வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள்

வேளாண் விளைபொருள் விற்பனை

❖ தமிழகத்தில் செயல்படும் 115 வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள்மூலம்ரூ.3,966.76கோடிஅளவிற்கு வேளாண் விளைபொருட்கள் விற்பனை செய்யப்பட்டுள்ளன.

நுகர்வோர் கூட்டுறவுடன் இணைந்த விற்பனை திட்டம்.

❖ நுகர்வோர் கூட்டுறவுடன் இணைந்த கடன்திட்டத்தில்,ரூ.429.59கோடிஅளவிற்கு வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களால் முன்னேற்றம் எய்தப்பட்டுள்ளது.

தாணிய ஈட்டுக்கடன்

❖ வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள், ரூ.444.71 கோடி அளவிற்கு தாணிய ஈட்டுக்கடன்கள் வழங்கியுள்ளன.

நகைக்கடன்

❖ வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள், ரூ.2,145.07 கோடி அளவிற்கு நகைக்கடன்கள் வழங்கியுள்ளன.

மொத்த புரள் வணிகம்

❖ வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள், ரூ.10,788.15 கோடி அளவிற்கு வணிகம் செய்துள்ளன.

வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களில் உட்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்துதல்

❖ தேசியவேளாண்மைஅபிவிருத்திதிட்டத்தின்கீழ் ராசிபுரம் வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தில் உள்ள ஏல கூடத்திற்கு ரூ.150 இலட்சம் மதிப்பீட்டில் கூரை அமைக்கும் பணிகள் ஜனவரி 2023இல் முடிவடைந்து, பயன்பாட்டில் உள்ளது.



- தேசியவேளாண்மைஅபிவிருத்திதிட்டத்தின்கீழ் நாமக்கல் வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கத்திற்கு புதிய ஏலக்கூடமும்மற்றும்அதற்கானஅணுகுபாலம் ரூ.95 இலட்சம்மதிப்பீட்டில்கட்டப்பட்டுமார்ச் 2022 முதல் பயன்பாட்டில் உள்ளது.

புதிய முயற்சிகள்

- கூட்டுறவுச் சங்கங்களின் அனைத்து தயாரிப்புகளையும்விற்பனைசெய்வதற்கு ஒரு பொதுவான கைப்பேசி செயலி (Mobile App) 06.07.2023 அன்று துவங்கப்பட்டுள்ளது.

புதிய வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் அமைத்தல்

- விவசாயஉறுப்பினர்களின்நலன்கருதி,2023–2024ஆம் ஆண்டில் 3 புதிய வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் துவங்கப்பட்டுள்ளன.

பெரும்பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள்

பயிர் கடன்

- தமிழகத்தில்செயல்படும்39பெரும்பலநோக்குக் கூட்டுறவுச்சங்கங்கள்மூலம்ரூ.691.39கோடி அளவிற்குபயிர்க்கடன்கள்வழங்கப்பட்டுள்ளன.

மத்தியக்காலக்கடன்

- ரூ.47.63கோடிஅளவிற்குபெரும்பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்களால் மத்தியக்காலக் கடன்கள் வழங்கப்பட்டுள்ளன.

நகைக்கடன்

- பெரும்பலநோக்குகூட்டுறவுச்சங்கங்களால் ரூ.353.49கோடிஅளவிற்குநகைக்கடன்கள் வழங்கப்பட்டுள்ளன.

கட்டுப்பாட்டு மற்றும் கட்டுப்பாடற்ற பொருள் விற்பனை

- ரூ.31.42 கோடி அளவிற்கு கட்டுப்பாட்டு பொருட்களும், ரூ.20.46 கோடி அளவிற்கு கட்டுப்பாடற்ற பொருட்களும் பெரும்பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்களால் விற்பனைசெய்யப்பட்டுள்ளன.



விவசாய இடுபொருள் விற்பனை

❖ பெரும்பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்களால் ரூ.35.27 கோடி அளவிற்கு விவசாய இடுபொருட்கள் விற்பனைசெய்யப்பட்டுள்ளன.

புதிய பெரும் பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்கள் அமைத்தல்

❖ மலைவாழ் மக்கள் மற்றும் பழங்குடியினரின் மேம்பாட்டிற்காக, 2023–2024ஆம் ஆண்டில் 14 புதிய பெரும்பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்கள் துவங்கப்பட்டுள்ளன.

மாநில அளவிலான பெரும்பல நோக்கு கூட்டுறவுச் சங்கங்களின் இணையம்

❖ தமிழகத்திலுள்ள பழங்குடியின மக்களின் வளர்ச்சி மற்றும் மேம்பாட்டிற்கு திட்டமிடவும், அதிக வருமானம் மற்றும் அதிக வேலை வாய்ப்புகளை உறுதி செய்யவும், சிறுவனப் பொருட்களின் விற்பனையை மேம்படுத்தவும், பெரும்பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்களின் பல்வேறுசெயல்பாடுகளைஒருங்கிணைக்கவும், 39 பெரும்பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்களை உறுப்பினர்களாகக்கொண்டமாநிலஅளவிலான பெரும்பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்களின் இணையம் துவக்கப்பட்டது. இவ்விணையம் 03.08.2022அன்றுபதிவுசெய்யப்பட்டு,01.11.2022 முதல் செயல்பட்டுவருகிறது.

குறுவைதொகுப்புதிட்டம் –2023

❖ குறுவைபருவத்தில்டெல்டாபகுதிவிவசாயிகள் மற்றும் விவசாய தொழிலாளர்களின் வாழ்வாதாரத்தை காக்கும் பொருட்டு குறுவை சிறப்பு தொகுப்புதிட்டம் செயல்படுத்தப்பட்டது. 2023ஆம்ஆண்டில்இத்திட்டத்தின்கீழ்2,34,875 விவசாயிகளுக்கு 11,148.41 மெ.டன் யூரியா, 12,387.12மெடன்டி.ஏ.பிமற்றும்6,193.56மெடன் பொட்டாஷ் வழங்கப்பட்டுள்ளது.

இரு கூட்டுறவு தொழிற்பயிற்சி நிலையங்களில் பயிலும் மாணவர்களின் கல்விக் கட்டணத்தை தள்ளுபடி செய்தல்.

❖ தருமபுரி மாவட்டம், பர்கூர் மற்றும் தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை ஆகிய இரு இடங்களில்தமிழ்நாடு கூட்டுறவுஒன்றியத்தால் நடத்தப்படும் கூட்டுறவு தொழிற்பயிற்சி நிலையங்களில் பயிலும் ஏழை, எளிய மாணவர்களுக்கு இலவசமாக தொழிற்கல்வி வழங்குவதற்காக2021–2022ஆம்ஆண்டில்அரசு ரூ.19.05லட்சமும்2022–2023ஆம்ஆண்டில் ரூ.19.45இலட்சமும்நிதிஉதவிவழங்கிஉள்ளது.

திண்டுக்கல்லில் கூட்டுறவு கலை மற்றும் அறிவியல் கல்லூரி (இருபாலரும்) ஆரம்பித்தல்.

❖ திண்டுக்கல் மாவட்டம், ஆத்தூர் தொகுதியில் 2022–2023கல்வியாண்டில்ஒருபுதியகூட்டுறவு கலைமற்றும்அறிவியல்கல்லூரி02.09.2022இல் தொடங்கப்பட்டு,5பிரிவுகளில்263மாணவர்களும் 2023–2024ஆம்கல்வியாண்டில்7பிரிவுகளில் 294 மாணவர்களும் சேர்க்கப்பட்டுள்ளனர்.

புதிய மாவட்ட கூட்டுறவு ஒன்றியம்

❖ மயிலாடுதுறை மாவட்டத்தில் புதிய மாவட்ட கூட்டுறவுஒன்றியம்துவங்கப்பட்டு11.07.2023 முதல் செயல்பட்டு வருகிறது.

புதிய கூட்டுறவு மேலாண்மை நிலையம்

❖ இராமநாதபுரம் மாவட்டத்தில்புதிய கூட்டுறவு மேலாண்மை நிலையம்துவக்கப்பட்டு 2023–2024ஆம் கல்வியாண்டு முதல் செயல்பட்டு வருகிறது.

கூட்டுறவுத் துறைக்கானஒருங்கிணைந்த பயிற்சிக் கொள்கை

❖ கூட்டுறவுத் துறைக்கான ஒருங்கிணைந்த பயிற்சிக் கொள்கை கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளரால் 23.08.2023 அன்று ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

கூட்டுறவு மருந்தகங்கள்

❖ 2021–2022ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிவிப்பில், ஆண்டுக்கு 60 மருந்தகங்கள் என அடுத்த ஐந்து ஆண்டுகளில் 300 புதிய மருந்தகங்கள் திறக்கப்படும் என்று மாண்புமிகு கூட்டுறவு அமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்டது. அதன்படி, 16.12.2021 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால்மாநிலம்முழுவதும்ஒரேவிதமான வண்ணம் மற்றும் தனித்துவமான பெயர் பலகைகளுடனான70புதியமாதிரிகூட்டுறவு மருத்தகங்கள் திறந்து வைக்கப்பட்டன. இந்த

70 கூட்டுறவு மருந்தகங்கள் மூலம் 30.06.2024 வரை ரூ.30.52 கோடி மதிப்பிலான மருந்துகள் விற்பனை செய்யப்பட்டுள்ளன.

❖ தற்போது தமிழ்நாட்டில் 380 கூட்டுறவு மருந்தகங்கள் தரமான மருந்துகளை, குறைவான விலையில் பொதுமக்களுக்கு வழங்குவதை நோக்கமாகக் கொண்டு சிறப்பாக செயல்பட்டு வருகின்றன. கூட்டுறவு நிறுவனங்கள், இம்மருந்தகங்களில் 20 விழுக்காடு வரை தள்ளுபடி அளித்து மருந்துகளை விற்பனை செய்வதன் மூலம் ஏழை, எளிய, அடித்தட்டு மக்கள் பயனடைகின்றனர். 2023–2024 ஆம் ஆண்டு 29,30,860 பயனாளர்கள் ரூ.24.98 கோடி அளவிற்கு தள்ளுபடியின் பயனை பெற்றுள்ளனர். கூட்டுறவு மருந்தகங்கள் வழங்கும் தள்ளுபடியால் தனியார் மருந்தகங்களும் தள்ளுபடி வழங்க வேண்டிய நிலை ஏற்பட்டு, அதனால் பொதுமக்கள் பயன் பெறும் நிலை ஏற்பட்டுள்ளது.

❖ 2023–2024 ஆம் ஆண்டில் கூட்டுறவு நிறுவனங்களால் நடத்தப்படும் 380 மருந்தகங்கள் மூலம் ரூ.162.74 கோடி மதிப்பிலான மருந்துகள் விற்பனை செய்யப்பட்டுள்ளது.

❖ 2024–2025 ஆம் ஆண்டில் 30.06.2024 வரை ரூ.38.82 கோடி மதிப்பிலான மருந்துகள் விற்பனை செய்யப்பட்டுள்ளது.

மையமருந்து கொள்முதல்

❖ முன்னதாக கூட்டுறவு நிறுவனங்களால் நடத்தப்படும் மருந்தகங்களுக்கு, தனித்தனியே மருந்து நிறுவனங்களின் உள்ளூர் விநியோகஸ்தர்களிடமிருந்து மருந்துப் பொருட்கள் கொள்முதல் செய்யப்பட்டு வந்தன. கூட்டுறவு நிறுவனங்களால் வழங்கப்பட்ட மருந்துப் பொருட்களின் தேவைப்பட்டியல் தனித்தனியே வழங்கப்பட்டதால், மருந்து நிறுவனங்களிடமிருந்து அதிகமான விளிம்பினை பெற இயலவில்லை.

❖ இவ்விடர்பாட்டினை களையும் விதமாக, கூட்டுறவு மருந்தகங்களுக்கு மருந்து கொள்முதலுக்கென மையமருந்து கொள்முதல் தொடங்கப்பட்டது. அனைத்து கூட்டுறவு மருந்தகங்களின் மருந்துப் பொருட்களின் தேவைப்பட்டியலைப் பெற்று, அவற்றை ஒருங்கிணைத்து, இடைத்தரகர்களின்றி, மருந்து நிறுவனங்களிடமிருந்து நேரடியாக மைய மருந்து கொள்முதல் செய்வதன் மூலம், கூட்டுறவு நிறுவனங்கள் அதிக விளிம்பு பெறுவதற்கு வழிவகுக்கும். மைய மருந்து கொள்முதல் 18.02.2022 முதல் மாநிலம் முழுவதும் அமல்படுத்தப்பட்டுள்ளது.

❖ தமிழ்நாடு நுகர்வோர் கூட்டுறவு இணையம் மைய மருந்து கொள்முதலுக்கு தலைமை (Nodal) நிறுவனமாக செயல்பட்டு வருகிறது. தமிழ்நாடு நுகர்வோர் கூட்டுறவு இணையமானது 21 மருந்து நிறுவனங்களுடன் ஒப்பந்தம் மேற்கொண்டுள்ளது. தமிழ்நாடு நுகர்வோர் கூட்டுறவு இணையம், அனைத்து கூட்டுறவு மருந்தகங்களிலிருந்தும் தேவைப்பட்டியலைப் பெற்று, ஒருங்கிணைத்து, அதனடிப்படையில் மருந்து உற்பத்தி நிறுவனங்களுக்கு தேவைபட்டியல் அளிக்கும்.

❖ மைய மருந்து கொள்முதலைச் செயல்படுத்துவதன் மூலம், 380 கூட்டுறவு மருந்தகங்களிலும் பிராண்டட் மருந்துகள் மற்றும் ஜெனரிக் மருந்துகள் பொதுமக்களுக்கு குறைவான விலையில் விற்பனைக்கு கிடைப்பது உறுதி செய்யப்படுகிறது.

❖ மைய மருந்து கொள்முதல் திட்டத்தின் மூலம் 30.06.2024 வரை, தமிழ்நாடு நுகர்வோர் கூட்டுறவு இணையத்தால் ரூ.98.02 இலட்சம் மதிப்பிற்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது.

சந்தை குறுக்கீடு நடவடிக்கை

❖ அத்தியாவசியப் பொருட்களின் விலை உயர்வைக் கட்டுப்படுத்த, தேவையின் அடிப்படையில், நுகர்வோர் கூட்டுறவுகள் சந்தை குறுக்கீடு நடவடிக்கையில் ஈடுபடுகின்றன. நவம்பர் 2021 இல் பெய்த வடகிழக்கு பருவமழை மற்றும் வெள்ளத்தின் போது, தக்காளி உள்ளிட்ட காய்கறிகளின் விலை வானளாவ உயர்ந்தது. பண்ணை பசுமை நுகர்வோர் கடைகள் (நகரும் பண்ணை பசுமை நுகர்வோர் கடைகள் உட்பட) மூலம் 150 மெட்ரிக் டன் தக்காளி மற்றும் 1100 மெட்ரிக் டன் காய்கறிகள் ரூ.4 கோடி மதிப்பிற்கு நுகர்வோருக்கு விற்கப்பட்டு, அதன் மூலம் வெளிச்சந்தையில் ஒரு கிலோவுக்கு ரூ.120–150 ஆக இருந்த தக்காளியின் விற்பனை

விலை வெகுவாகக் குறைந்து ஒரு கிலோவுக்கு ரூ.40–50 ஆக கட்டுப்படுத்தப்பட்டது.

- மே மற்றும் ஜூன் 2022 மாதங்களில் ஆந்திரா மற்றும் கர்நாடகாவில் பெய்த கனமழையால் தக்காளி வரத்து குறைந்து வெளிச்சந்தையில் விலை அதிகரித்தது. இதன் தொடர்ச்சியாக சந்தை குறுக்கீட்டு நடவடிக்கை மூலம் 89 மெட்ரிக் டன் தக்காளி ரூ.0.64 கோடிக்கு விற்பனை செய்யப்பட்டது.
- செப்டம்பர் 2022 ஆம் ஆண்டு பெய்த தென்மேற்கு பருவமழை காரணமாக அண்டை மாநிலங்களில் இருந்து தக்காளி வரத்து குறைந்து விலை அதிகரித்தது. சந்தை குறுக்கீட்டு நடவடிக்கை மூலம் ரூ.0.13 கோடி அளவுக்கு 37 மெட்ரிக் டன் தக்காளி 65 பண்ணைபசுமை நுகர்வோர் கடைகள் மூலம் விற்பனை செய்யப்பட்டது.
- 2023 ஜூலை மற்றும் ஆகஸ்டு மாதங்களில் கோடையில் கடும் வெப்பம் நிலவியதால் விவசாயிகள் தக்காளி பயிரிடுவது கணிசமாக குறைந்தது. இதனால் அண்டை மாநிலங்களிலிருந்து தக்காளி வரத்து குறைந்து, தக்காளியின் விலை கிலோ ரூ.160 வரை உயர்ந்தது. தக்காளியின் விலை உயர்வை கட்டுப்படுத்தும் விதமாக, கூட்டுறவுத் துறை நடத்தும் 65 பண்ணைபசுமை நுகர்வோர் கடைகள் மற்றும் நியாயவிலைக் கடைகள் மூலம் சந்தை குறுக்கீட்டு நடவடிக்கையாக, 472 மெட்ரிக் டன் தக்காளி கொள்முதல் செய்யப்பட்டு ரூ.3.35 கோடி மதிப்பிற்கு விற்பனை செய்யப்பட்டது.
- 2023 நவம்பர் மற்றும் டிசம்பர் மாதங்களில் தமிழ்நாட்டின் அண்டை மாநிலங்களிலிருந்து வெங்காயத்தின் வரத்து குறைந்ததால் வெளிச்சந்தையில் வெங்காயத்தின் விலை உயர்ந்து காணப்பட்டது. சந்தை குறுக்கீட்டு நடவடிக்கையாக வெளிச்சந்தையில் நிலவும் வெங்காயத்தின் விலை உயர்வை கட்டுப்படுத்தும் விதமாக NAFED–இடமிருந்து தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம் (TANFED), வெங்காயத்தை கொள்முதல் செய்து கூட்டுறவு துறையின் கீழ் செயல்படும் பண்ணைப்பசுமை நுகர்வோர் கடைகள் மூலம் 53 மெட்ரிக் டன் வெங்காயம் கொள்முதல் செய்யப்பட்டு ஒரு கிலோ ரூ.30/– என்ற விலையில் ரூ.0.16 கோடி மதிப்பிற்கு பொதுமக்களுக்கு விற்பனை செய்யப்பட்டது.

மாண்புமிகு தமிழக முதலமைச்சரின் காலை உணவு திட்டம்

- ஒன்றாம் வகுப்பு முதல் ஐந்தாம் வகுப்பு வரை அரசு தொடக்கப்பள்ளிகளில் பயிலும் குழந்தைகளுக்கு சத்தான காலை உணவு வழங்கும் திட்டம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 15.09.2022 அன்று தொடங்கி வைக்கப்பட்டது.
- இத்திட்டத்தின் கீழ் 2023–2024 ஆம் ஆண்டு வரை ரூ.35.65 கோடி மதிப்பிலான 2,366 மெ.டன் இருமுறை வறுக்கப்பட்ட ரவை, 1,604 மெ.டன் சம்பா ரவை மற்றும் 1,948 மெ.டன் சேமியா உள்ளிட்ட பொருட்கள் கூட்டுறவு சங்கங்களால் நடத்தப்படும் நியாயவிலைக்கடைகள் மூலமாக 28,397 அரசு தொடக்க பள்ளிகளில் பயிலும் 15,40,658 மாணவ மாணவியருக்கு காலை உணவு தயாரிக்க மதிய உணவு மையங்களுக்கு நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலைகள் மூலம் வழங்கப்பட்டு வருகின்றது. தற்போது ஊரகப் பகுதிகளிலுள்ள அரசு நிதியுதவி பெறும் பள்ளிகளில் பயிலும் குழந்தைகளுக்கு விரிவுபடுத்தப்பட்டும் மிகச்சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகிறது.

பொது விநியோகத் திட்டம்

- 2,08,24,176 அரிசி அட்டைதாரர்களுக்கு ரூ.4,000 வீதம் கொரோனா நிவாரண உதவித் தொகை இரண்டு தவணையாக மே மற்றும் ஜூன் 2021 மாதங்களில் வழங்கப்பட்டது.
- 2,07,70,332 அரிசி அட்டைதாரர்களுக்கு, 14 மளிகை பொருட்கள் அடங்கிய கொரோனா நிவாரணத் தொகுப்பு வழங்கப்பட்டது.
- 2022 ஆம் ஆண்டில் 2,12,17,756 அரிசி அட்டைதாரர்கள் மற்றும் இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாம்களில் வசிக்கும் குடும்பங்களுக்கு, 20 பொருட்கள் மற்றும் ஒரு முழுக்கரும்பு அடங்கிய பொங்கல் பரிசுத் தொகுப்பு வழங்கப்பட்டது.
- காதி மற்றும் கிராமத் தொழில் வாரியத்தால் கொள்முதல் செய்யப்படும் பனைவெல்லம் கூட்டுறவுத் துறையின் கீழ் செயல்பட்டு நியாயவிலைக் கடைகளில் விற்பனை செய்யப்படுகின்றது. அக்டோபர் 2021 ஜூன் 2024 வரை ரூ.1.07 கோடி மதிப்பிலான பனைவெல்லம்

நியாயவிலைக் கடைகளின் மூலம் விற்பனை செய்யப்பட்டுள்ளது.

❖ உழவர்உற்பத்தியாளர்கள்அமைப்புகளிடமிருந்து (FPOs) கொள்முதல் செய்யப்படும் கேழ்வரகு, கம்பு,தினை,குதிரைவாலி,சாமைமற்றும்வரகு ஆகிய சிறுதானியங்கள், சென்னை மற்றும் கோயம்புத்தூர் மாநகரங்களில் கூட்டுறவுகள் / தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் மூலம்நடத்தப்படும்தேர்ந்தெடுக்கப்பட்டநியாய விலைக் கடைகள் / சில்லறை விற்பனை நிலையங்களில், விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.ஜீன் 2022முதல்ஜீன் 2024வரை ரூ.1.54 கோடி மதிப்பிலான சிறுதானியங்கள் நியாயவிலைக் கடைகளின் மூலம் விற்பனை செய்யப்பட்டுள்ளன.

❖ நியாயவிலைக் கடைகளில் முழுமையான தர மேலாண்மையை உறுதி செய்வதற்காக கூட்டுறவுத் துறையின் கீழ் செயல்படும் நியாயவிலைக்கடைகளுக்குISOதரச்சான்றிதழ் பெறப்பட்டுவருகின்றன.இதுவரை10,046நியாய விலைக்கடைகளுக்குISO:9001சான்றிதழும், 2,059நியாயவிலைக்கடைகளுக்குISO:28000 சான்றிதழும் பெறப்பட்டுள்ளன.

❖ மாநிலம் முழுவதிலும் உள்ள நியாயவிலைக் கடைகளை மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் அவர்களின் அறிவிப்பின்படி பொலிவுறச் செய்யும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன, இதுவரை 4,657 நியாயவிலைக் கடைகள் புதுப்பிக்கப்பட்டுள்ளன.

❖ 2023–ஆம் ஆண்டில் 2,14,67,500 அரிசி அட்டைதாரர்கள் மற்றும் இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாம்களில் வசிக்கும் குடும்பங்களுக்கு தலா ஒரு கிலோ பச்சரிசி, ஒருகிலோசர்க்கரை,ஒருமுழுக்கரும்புமற்றும் ரூ.1,000/– ரொக்கம் அடங்கிய பொங்கல்பரிசுத் தொகுப்பு வழங்கப்பட்டது.

❖ மாநிலம் முழுவதும் மே 2021 முதல் ஜீன் 2024 வரை 523 முழு நேர நியாய விலைக் கடைகள் மற்றும்1,015பகுதிநேரநியாயவிலைக்கடைகள் உட்பட மொத்தம் 1,538 புதிய நியாயவிலைக் கடைகள் திறக்கப்பட்டுள்ளன.

❖ மாநிலம்முழுவதும்,மே 2021முதல்ஜீன் 2024 வரை,316முழுநேரநியாயவிலைக்கடைகள் மற்றும்180பகுதிநேரநியாயவிலைக்கடைகள் ஆகமொத்தம்496நியாயவிலைக்கடைகளுக்கு சொந்த கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளன.

❖ ரொக்கமில்லா பணப்பரிவர்த்தனையின் முக்கியத்துவத்தை கருத்தில் கொண்டு, கூட்டுறவு நியாய விலைக் கடைகளில் UPI முறையைப் பயன்படுத்தி ரொக்கமில்லா பணப்பரிவர்த்தனை அறிமுகப்படுத்த நடவடிக்கைமேற்கொள்ளப்பட்டுவருகின்றன. இதுவரை,10,834நியாயவிலைக்கடைகளில் UPI முறையைப் பயன்படுத்தி ரொக்கமில்லா பணப்பரிவர்த்தனை மேற்கொள்ளும் வசதி அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

❖ மிக்ஜாம்புயல்வெள்ளநிவாரணத்தொகையாக ஒருகுடும்பத்திற்குரூ.6,000/–வீதம்சென்னை, காஞ்சிபுரம்,செங்கல்பட்டுமற்றும்திருவள்ளூர் மாவட்டங்களிலுள்ளவாழ்வாதாரம்பாதிக்கப்பட்ட 23,18,200குடும்பங்களுக்கு வழங்கப்பட்டது.

❖ தென் மாவட்டங்களில் வெள்ள நிவாரணத் தொகையாக ஒரு குடும்பத்திற்கு ரூ.6,000/– வீதம் தூத்துக்குடி மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களில் அதிகனமழையால் வெள்ள பாதிப்பு ஏற்பட்ட வட்டங்களில் உள்ள வாழ்வாதாரம் பாதிக்கப்பட்ட 6,36,970 குடும்பங்களுக்கும் மற்றும் ரூ.1,000/– வீதம் தூத்துக்குடி மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களில் உள்ள இதர வட்டங்கள், தென்காசி, கன்னியாகுமரி மாவட்டங்களில் கனமழையால் வெள்ள பாதிப்பு ஏற்பட்டுள்ள வாழ்வாதாரம் பாதிக்கப்பட்ட 13,38,269 குடும்பங்களுக்கும் வழங்கப்பட்டது.

❖ 2024ஆம் ஆண்டு பொங்கல் பண்டிகையை முன்னிட்டு, ஒரு கிலோ பச்சரிசி, ஒரு கிலோ சர்க்கரை,ஒருமுழுக்கரும்புமற்றும்ரூ.1,000/– ரொக்கம் அடங்கிய பொங்கல் பரிசுத் தொகுப்பு 2,08,11,842அட்டைதாரர்கள்மற்றும்இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாம்களில் வசிக்கும் குடும்பங்களுக்குநியாயவிலைக்கடைகள்மூலம் வழங்கப்பட்டது.

❖ ❖ ❖

குடிசைத் தொழில்கள், சிறுதொழில்கள் உள்ளிட்ட ஊரகத்தொழில்கள், தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம்



திரு. தா.மோ.அன்பரசன் அவர்கள்

மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர்

- ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் தொழில்முனைவோரின் பொருளாதார வளர்ச்சியை ஊக்குவிக்கும் வண்ணம், உற்பத்தி, சேவை மற்றும் வியாபாரம் சார்ந்த தொழில்களைத் தொடங்கிடவும், விரிவுபடுத்தவும் மானியத்துடன் கூடிய கடனுதவி.
- அண்ணல் அம்பேத்கர் தொழில் முன்னோடிகள் திட்டத்தின் கீழ், 1,612 திட்டங்களுக்கு ரூ.187 கோடி மானியமாக நிதி நிறுவனங்களால் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. மேலும், ரூ.82.89 கோடி தனி நபர் மானியமாக விடுவிப்பு.
- பிரதம மந்திரி உணவு பதப்படுத்தும் குறு நிறுவனங்களை முறைப்படுத்தும் திட்டத்தின் கீழ், 10,548 பயனாளிகளுக்கு ரூ.627.65 கோடி கடனாகவும் ரூ.196.89 கோடி மானியமாக விடுவிக்கப்பட்டு இந்திய அளவில் தமிழ்நாடு சிறந்த செயல்பாட்டாளராக அறிவிப்பு.
- தமிழ்நாடு கடன் உத்திரவாதத் திட்டத்தின் கீழ் 31,761 குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கு ரூ.4,679.38 கோடி மதிப்புள்ள கடன்கள் வழங்கப்பட்டு ரூ.431.18 கோடிக்கு இத்திட்டத்தின் கீழ் உத்திரவாதம்.
- தமிழ்நாட்டில் 21 இலட்சம் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் உத்யம் தளத்தில் பதிவு செய்து சுமார் 1.57 கோடி நபர்களுக்கு வேலைவாய்ப்பினை வழங்கி இந்திய அளவில் உத்யம் பதிவில் தமிழ்நாடு இரண்டாவது இடத்தில் உள்ளது. மூலதன மானியமாக 6,927 பயனாளிகளுக்கு ரூ.812.45 கோடி அரசால் வழங்கப்பட்டுள்ளது.
- படித்த இளைஞர்களை முதல் தலைமுறை தொழில்முனைவோர்களாக உருவாக்கும் புதிய தொழில்முனைவோர் மற்றும் தொழில் நிறுவனங்கள்



மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், ரூ437.62 கோடி மானியம் 2,725 திட்டங்களுக்கு நிதி நிறுவனங்களால் இறுதிஒப்பளிப்புவழங்கப்பட்டு தனிநபர்முதலீட்டு மானியம்ரூ.302.72கோடியும், 3 சதவிகித பின்முனை வட்டி மானியம் ரூ.26.80 கோடியும் வழங்கப்பட்டுள்ளது.

- படித்த வேலையில்லா இளைஞர்களுக்கான, வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டத்தின் கீழ், 8,906பயனாளிகளுக்குரூ.90.58கோடிமானியம்.
- பிரதமரின் வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டத்தின்கீழ்,12,310பயனாளிகளுக்குரூ.304.16 கோடி, விளிம்புத் தொகை மானியம்.
- மாநிலநிதியுதவித்திட்டத்தின்கீழ் செயல்பட்டு வரும் குறுந்தொழில் குழும மேம்பாட்டு திட்டத்திற்காக (MCDP) ரூ.50 கோடி ஒதுக்கப்பட்டு, திருநெல்வேலி மாவட்டத்தில் பாத்திரங்கள் செய்யும் குழுமம், காஞ்சிபுரம் மாவட்டத்தில்நரிக்குறவர் செய்யும் செயற்கை நகைகள்குழுமம்,கடலூர்மாவட்டத்தில்முந்திரி பதப்படுத்தும் குழுமம், மதுரை மாவட்டத்தில் பொம்மை செய்யும்குழுமம்உள்ளிட்ட 20குறு நிறுவனக் குழுமங்களுக்கு ஒப்புதல்.



- கோயம்புத்தூர் மாவட்டம், கிட்டாம்பாளையம் கிராமத்தில் 316.04 ஏக்கர் பரப்பில் அறிஞர் அண்ணா தொழிற் கூட்டுறவு தொழிற் பேட்டையில் ரூ.24.61 கோடி திட்ட மதிப்பில் ரூ.10கோடி அரசுமானியத்துடன்உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த நடவடிக்கை.
- கோவிட்–19 பெருந்தொற்றுகாலத்தில்சிட்கோ நிறுவனத்திற்கு தவணைத் தொகை மற்றும் வாடகைத்தொகையைச்செலுத்துவதற்குஆறு மாத கால அவகாசம்.
- கோவிட்–19 பெருந்தொற்றினைக் கருத்தில் கொண்டு மருத்துவ ஆக்சிஜன் சிலிண்டர் மற்றும் மருத்துவ உற்பத்தி செய்யும் 4 நிறுவனங்களுக்கு 7 தொழில்மனைகள் விண்ணப்பித்தஒருவாரகாலத்திற்குள்ஒதுக்கீடு.
- அனைத்து விண்ணப்பங்களையும் ஆன்லைனில் பதிவு செய்வதற்கும் கண்காணிப்பதற்கும் ஒற்றைச் சாளர தகவு (www.tnswp.com) உருவாக்கப்பட்டு இணையதளத்தில் பெறப்பட்ட 34,473 விண்ணப்பங்களில், 32,388 விண்ணப்பங்களுக்குத் தீர்வு.
- குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் தாமதமாக பணம் செலுத்தும் சிக்கலைத் தீர்க்க, விரைவான பட்டியல் தள்ளுபடியைப் பெற உதவும் வகையில் TN TREDS இயங்குதளம் உருவாக்கப்பட்டு அதில் 98 தமிழ்நாடு அரசு நிறுவனங்களுடன்



தொடர்புடைய 1,392 குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவன விற்பனையாளர்கள் TNTReDS தளத்தில் பதிவு செய்து 817 குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு ரூ.1,692 கோடி மதிப்பிலான பட்டியல்கள் மிகவும் குறைந்த வட்டி விகிதத்தில் தள்ளுபடி.

- கோயம்புத்தூரை தலைமையிடமாகக் கொண்ட தமிழ்நாடு கயிறு வணிக மேம்பாட்டு நிறுவனம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் தொடங்கிவைக்கப்பட்டது. தென்னைநார் சார்ந்த தொழில்களின் வளர்ச்சிக்கெனபிரத்தியேகமாக தமிழ்நாடு தென்னை நார் கொள்கை 2024 வெளியீடு.
- தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனத்தால் ரூ.485.08 கோடி மதிப்பிலான 1,656 தொழில்மனைகள் மற்றும் 36 தொழிற்கூட அலகுகள் தொழில் முனைவோர்களுக்கு ஒதுக்கீடு.
- குறு, சிறு நிறுவனங்களின் குழும வளர்ச்சி திட்டத்தின் கீழ், ஒப்புதல் பெறப்பட்ட ரூ.163.59 கோடி மொத்த திட்ட மதிப்பீட்டிலான 45 திட்டங்களில், 29 திட்டங்களுக்கானப் பணிகள் முடிக்கப்பட்டும், 16 புதிய பொது வசதி மைய திட்டங்கள் ரூ.221.54 கோடி திட்ட மதிப்பில் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.
- திருமுடிவாக்கம் தொழிற்பேட்டையில் துல்லிய உற்பத்தி பெருங்குழுமம் மற்றும் திண்டிவனம் சிப்காட் தொழிற்பூங்காவில் மருந்துப் பொருட்களுக்கான பெருங்குழுமம் ரூ.202.63 கோடி மதிப்பில் அமைப்பதற்காக தமிழ்நாடு அரசால் ஒப்புதல்.
- 549 தொழில்மனைகளில் உள்ள குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் பயன் பெறும் வகையில், 5 மாவட்டத்தில் உள்ள 186.04 ஏக்கர் நிலபரப்பைக் கொண்ட 5 புதிய தொழிற்பேட்டைகள்.
- சிட்கோ தொழிற்பேட்டைகளில் 371 ஏக்கர் நிலப்பரப்பில் 1,341 தொழில் மனைகள் ஒதுக்கீட்டிற்குத் தீர்வுகாண திருத்திய மனை மதிப்பீட்டுக் கொள்கை உருவாக்கப்பட்டு இத்திருத்தியமனைக்கொள்கைமதிப்பீட்டின்படி, தொழிற்பேட்டைகளில்மனைமதிப்பு5சதவிகிதம் முதல் 75 சதவிகிதம் வரை குறைக்கப்பட்டு 539 தொழில் மனைகள் ஒதுக்கீடு.



- சிட்கோ தொழிற்பேட்டைகளில் அரசு புறம்போக்கு வகைப்பாட்டில் உள்ள நிலங்களுக்குப் பட்டா வழங்க ஏதுவாக 44 தொழிற்பேட்டைகளின் 1,937.25 ஏக்கர் நிலத்திற்கு இரயத்துவாரி மனையாக மாற்றம் செய்யப்பட்டு தொழில் முனைவோர்கள் பயன்பெறும் பொருட்டு கிண்டி மற்றும் அம்பத்தூர் தொழிற்பேட்டை சார்ந்த 5 தொழில் முனைவோர்களுக்குத் தனிப்பட்டா வழங்கப்பட்டது.மேலும்,9தொழிற்பேட்டைகளில் உள்ள 205 தொழில் முனைவோர்களுக்குப் பட்டா வழங்கப்பட்டது.

- அம்பத்தூர்தொழிற்பேட்டையில்ரூ.29.47கோடி மதிப்பில் 810 பணியாளர்கள் தங்குவதற்காக பணியாளர் தங்கும் விடுதி 1.212 ஏக்கர் நிலப்பரப்பில்கட்டி முடிக்கப்பட்டு மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டுள்ளது.

- கோயம்புத்தூர் குறிச்சி தொழிற்பேட்டையில் ரூ.22கோடி மதிப்பில்,1.49ஏக்கர்நிலப்பரப்பில், 510தொழிலாளர்கள்தங்குவதற்காகப்பணியாளர் தங்கும் விடுதி கட்டும் பணிகள் நடைபெற்று வருகிறது.

- தமிழ்நாடு புத்தொழில் விதை நிலை மானிய நிதி திட்டத்தின் கீழ், 132 நிறுவனங்கள் பயனடைந்துள்ளன.

- தமிழ்நாடு புத்தொழில் மற்றும் புத்தாக்கக் கொள்கை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் வெளியிடப்பட்டது.

- 2022ஆம் ஆண்டிற்கான மாநிலங்களின் புத்தொழில்தரவரிசைப்பட்டியலில்சிறந்தசெயல் திறன் கொண்ட மாநிலமாகத் தமிழ்நாடு தேர்வு.

- மதுரை,ஈரோடு மற்றும் திருநெல்வேலி ஆகிய நகரங்களில் வட்டார புத்தொழில் மையங்கள் நிறுவப்பட்டு மாநிலத்தின் அனைத்து பகுதிகளிலும் புத்தொழில் நிறுவனங்களை ஊக்குவிக்கும் விதமாக பல செயல்பாடுகள் நடைபெற்றுநடப்புநிதிஆண்டில்,ஓசூர்,சேலம், கடலூர் மற்றும்தஞ்சாவூர் ஆகியநகரங்களிலும் கூடுதல் வட்டார புத்தொழில் மையங்கள்.

- புத்தொழில் மற்றும் தொழில்முனைவு குறித்த எவ்வித கேள்விகளுக்கும் தொலைபேசி வழியேபதில்அளிக்கும் விதமாக தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய இரு மொழிகளிலும் பதில் அளிக்கும்குழுவினரைக்கொண்டஇருமொழி தொலைபேசி சேவை மையம் அமைக்கப்பட்டு, 155343–என்றஎண்ணுக்குஅழைத்துதங்களுக்கு தேவையான தகவல்களை புத்தொழில் முனைவோர்கள் பெற்றுக்கொள்ளலாம்.

- முதலீடுகள் தேவைப்படும் புத்தொழில் நிறுவனங்களையும், முதலீட்டாளர்களையும் இணைக்கும் நோக்கத்தில் "முதலீட்டாளர் இணைப்புத்தளம் – TANFUND" மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் உலக முதலீட்டாளர் மாநாடு–2024இல் தொடங்கி வைக்கப்பட்டு இதுவரை 230துணிகர முதலீட்டு நிறுவனங்களும் 3,389 புத்தொழில் நிறுவனங்களும் இதில் பதிவு செய்துள்ளனர்.

❖ புத்தொழில் நிறுவனங்களுக்கு தகுந்த வழிகாட்டுதல்களை வழங்கும் நோக்கத்தில்வழிகாட்டி மென்பொருள்– Mentor TN தளமானது தொடங்கப்பட்டு இதுவரை 256 துறை சார் வல்லுநர்கள் வழிகாட்டுநர்களாக இணைந்துள்ளனர். மேலும், 656 புத்தொழில் நிறுவனங்கள் பதிவு செய்து இத்தளத்தின் வழியாக இதுவரை 165 மணி நேரம் பயிற்சி வகுப்புகள் நடைபெற்றுள்ளன.

❖ நாட்டிலேயே முதல் முறையாக "தமிழ்நாடு பட்டியலினத்தவர் பழங்குடியினர் புத்தொழில் நிதி" என்ற திட்டத்தினை 2022ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசு தொடங்கியது. இத்திட்டத்தின் வழியே இப்பிரிவு சேர்ந்தவர்களால் நடத்தப்படும் புத்தொழில் நிறுவனங்களுக்கு பங்கு முதலீடு வழங்கப்பட்டு வருகின்றது. இதுவரை, 30 புத்தொழில் நிறுவனங்களுக்கு மொத்தம் ரூ.43.65 கோடி பங்கு முதலீடு வழங்குவதற்கான ஒப்புதல் ஆணைகள் வழங்கப்பட்டுள்ளது.

❖ தமிழ்நாட்டினை சேர்ந்த 32 புத்தாக்க நிறுவனங்களை, உலகளாவிய சந்தை வாய்ப்புகளை ஏற்படுத்தி தரும் வகையில், துபாயில் நடைபெற்ற ஜைடெக்ஸ் (Gitex) நிகழ்வில் பங்கேற்க தமிழ்நாடு புத்தொழில் மற்றும் புத்தாக்க இயக்கம் அழைத்து சென்றது.

❖ தொழில்முனைவோர் விழிப்புணர்வு முகாம்களில் 7,025 உறுப்பினர்கள் பங்கேற்று தொழில்முனைவோர் மேம்பாட்டுத் திட்டத்தின் (EDP) திட்டத்தின் கீழ் 6,722 தொழில்முனைவோர் பயிற்சி. அண்ணல் அம்பேத்கர் தொழில் முன்னோடிகள் திட்ட (AABCS) பயிற்சியின் முதல் தொகுதியில் 146 தொழில்முனைவோர்களுக்குப் பயிற்சி நடத்தப்பட்டுள்ளது.

❖ வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தின் கீழ், 2,171 மகளிர் சுயஉதவிக் குழு உறுப்பினர்களுக்கு தொழில்முனைவோர் மேம்பாட்டுப் பயிற்சிகள்.

❖ உத்திசார் திட்டத்தின் கீழ் புத்தாக்கம் மற்றும் தொழில்முனைவோர் மேம்பாட்டுத் திட்டத்தை (IEDP) செயல்படுத்தி வருகிறது. நடப்பு ஆண்டு முதல், தொழில்முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனமானது, தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்துடன் இணைந்து நான் முதல்வன் திட்டத்தின் கீழ் நிரல் திருவிழா என்கிற பெயரில் செயல்படுத்திவருகிறது.



❖ 2,346 நிறுவனங்களுக்கு ரூ.20.97 கோடி குறைந்தழுத்த மின் மானியம்.

❖ 132 குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு ரூ.2.86 கோடி ஊதியப் பட்டியல் மானியம்.

❖ குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு ரூ.8.59 கோடி பின் முனை வட்டி மானியம்.

❖ 715 நிறுவனங்களுக்கு ரூ.6.96 கோடி ஆற்றல் தணிக்கை, ஆற்றல் சேமிப்பை மேம்படுத்துதல் திட்ட மானியம்.

❖ 516 நிறுவனங்களுக்கு ரூ.4.90 கோடி தரச் சான்றிதழ் பெறுவதற்கான மானியம்.

❖ 6 சிறு தொழில் நிறுவனங்களுக்கு மூலதன சந்தைகளிலிருந்து நிதி திரட்டுவதற்காக அவர்கள் செலவிட்ட ரூ.135.08 இலட்சம் மானியம்.

❖ 104 நிறுவனங்களுக்குக் காப்புரிமைப் பதிவு, வர்த்தக முத்திரை பதிவுக்காகவும் ரூ.28.50 இலட்சம் மானியம்.



- 170 வசதியாக்கக் குழுக் கூட்டம் நடத்தப்பட்டு 1,956 குறு மற்றும் சிறு தொழில் நிறுவனங்களுக்கு வரவேண்டிய நிலுவைத் தொகை ரூ.366.99 கோடி பெற்றுத்தரப்பட்டுள்ளது.
- கொலுசு உற்பத்தியாளர்கள் பயன்பெறும் வகையில் சேலம் மாவட்டம், அரியகவுண்டம் பட்டியில் 1.20 ஏக்கர் நிலப்பரப்பில் ரூ.25 கோடி மதிப்பீட்டில் அடுக்குமாடி தொழில் வளாகம்.
- டான்சியின் உற்பத்திப் பொருட்களை அறிந்து கொள்ள மின் வணிக இணைய முகப்பு.
- RIDF பாகம்–1 திட்டத்தின்கீழ், நீலகிரி மாவட்டத்தில் 5 கூட்டுறவுத் தேயிலைத் தொழிற்சாலைகள் ரூ.17.68 கோடி மதிப்பீட்டில் நவீனமயமாக்கல்.
- RIDF பாகம்–2 திட்டத்தின்கீழ், நீலகிரி மாவட்டத்தில் 10 கூட்டுறவுத் தேயிலைத் தொழிற்சாலைகள் ரூ.50.06 கோடி மதிப்பீட்டில் நவீனமயமாக்கல்.

தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியம்

- நகரஏழைகுடும்பங்களுக்காக 73,127 தனிவீடுகள் ரூ.2,204.89 கோடி திட்ட மதிப்பீட்டில் கட்ட ஒன்றிய அரசின் ஒப்புதல் பெறப்பட்டுள்ளதும் 1,70,502 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.
- ரூ.7,030.83 கோடி செலவில் 34,111 அடுக்குமாடிக் குடியிருப்புகளுக்கான கட்டுமானப் பணிகள் மற்றும் 69,199 அடுக்குமாடிக் குடியிருப்புகளுக்கானப் பணிகள்.
- ஆசிய மேம்பாட்டு வங்கி நிதியுதவியுடன் நகர்ப்புர ஏழை மக்களுக்கு பேரிடர்களை எதிர்கொள்ளும்நிலைத்திருக்கக்கூடியவீடுகள் கட்டும் திட்டத்தின்கீழ் சென்னை தவிர இதர நகர்புரங்களில் நதிக்கரைகளில் வாழும் ஏழை குடும்பங்களுக்கு 2,745 வீடுகள் கட்டும்பணிகள் தொடக்கம், 520 வீடுகள் திட்டப்பகுதிக்கான மதிப்பீடு செய்யும் பணி நடைபெற்று வருகிறது.
- 7,582 சிதிலமடைந்த அடுக்குமாடிக் குடியிருப்புகள், மறுகட்டுமானம் செய்யும் திட்டத்தின் கீழ் அதே இடத்தில் 9,522 புதிய அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்டும் பணிகள்.
- ரூ.59.80 கோடி செலவில் 117 திட்டப்பகுதிகளில் 76,434 அடுக்குமாடிக் குடியிருப்புகளுக்கான பழுது நீக்குதல் மற்றும் புதுப்பித்தல் பணிகள்.
- 41,878 அடுக்குமாடிக்குடியிருப்புக்கானஒதுக்கீடு ஆணைகள் வழங்கப்பட்டுள்ளன.
- 3,047 அடுக்குமாடிக்குடியிருப்புகளுக்கும், 1,733 மேம்படுத்தப்பட்டமனைகளுக்கும் விற்பனைப் பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன.
- சமுதாயமேம்பாட்டுத்திட்டத்தின் ஒருபகுதியாக, 7,633 நபர்களுக்குத் திறன் மேம்பாட்டுப் பயிற்சிகள்.

❖ ❖ ❖

தமிழ் ஆட்சிமொழி மற்றும் தமிழ்ப்பண்பாடு, செய்தி மற்றும் விளம்பரம், திரைப்படத் தொழில்நுட்பவியல் மற்றும் திரைப்படச் சட்டம், பத்திரிகை அச்சுக் காகிதக் கட்டுப்பாடு, எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறை மற்றும் அரசு அச்சகம்



திரு. **மு.பெ.சாமிநாதன்** அவர்கள்

மாண்புமிகு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர்

தமிழ் வளர்ச்சித் துறை

தமிழ் வளர்ச்சி இயக்ககம்

விருதுகள்

❖ முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் 1971ஆம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்ட தமிழ் வளர்ச்சி இயக்ககம் வாயிலாக தமிழுக்கு அருந்தொண்டாற்றி வரும் தமிழறிஞர்களை அடையாளம் கண்டு அவர்களைப் பெருமைப்படுத்திடும் வகையில், ஆண்டுதோறும் தைத்திங்கள் 2ஆம் நாள் திருவள்ளுவர் திருநாளன்று வழங்கப்படும் திருவள்ளுவர் விருது. பேரறிஞர் அண்ணா விருது, பெருந்தலைவர் காமராசர் விருது, மகாகவி பாரதியார் விருது, பாவேந்தர் பாரதிதாசன் விருது, தமிழ்த்தென்றல் திரு.வி.க. விருது, முத்தமிழ் காவலர் கி.ஆ.பெ. விசுவநாதம் விருது ஆகிய விருது பெறும் அறிஞர்களுக்கு வழங்கப்பட்டு வந்த விருதுத் தொகை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க ரூபாய் ஒரு இலட்சத்திலிருந்து ரூபாய் இரண்டு இலட்சமாக உயர்த்தப்பட்டு கடந்த மூன்றாண்டுகளில் 21 அறிஞர்களுக்கு விருது வழங்கிட மொத்தம் ரூபாய் 59.75 இலட்சம் செலவினம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.



- ஆண்டுதோறும் கபிலர் விருது, கம்பர் விருது, உ.வே.சா. விருது, சொல்லின் செல்வர் விருது, ஜியு போப் விருது, உமறுப்புலவர் விருது, இளங்கோவடிகள் விருது, முதலமைச்சர் கணினித் தமிழ் விருது, அம்மா இலக்கிய விருது, காரைக்கால் அம்மையார் விருது, சிறந்த மொழிபெயர்ப்பாளர் விருது (10), சிந்தனைச் சிற்பி சிங்காரவேலர் விருது, அயோத்திதாசப் பண்டிதர் விருது, மறைமலை அடிகளார் விருது, அருட்பெருஞ்சோதி வள்ளலார் விருது, தமிழர் தந்தை சி.பா. ஆதித்தனார் திங்களிதழ் விருது,உலகத் தமிழ்ச் சங்கத்தின் வாயிலாக வழங்கப்படும் இலக்கிய விருது, இலக்கண விருது, மொழியியல் விருது ஆகிய விருது பெறும் அறிஞர்களுக்கு வழங்கப்பட்டுவந்த விருதுத்தொகை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க ரூபாய் ஒரு இலட்சத்திலிருந்து ரூபாய் இரண்டு இலட்சமாக உயர்த்தப்பட்டு கடந்த மூன்றாண்டுகளில் 56 அறிஞர்களுக்கு விருது வழங்கிட மொத்த தொகையாக ரூபாய் ஒரு கோடியே 46 இலட்சத்து 06 ஆயிரம் செலவினம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

- தமிழ்நாட்டில் தமிழ் வளர்ச்சிக்காக ஆண்டுதோறும் 38 மாவட்டங்களிலும் உள்ள தமிழ் ஆர்வலர்களுக்கு தமிழ்ச்செம்மல் விருதுகள் நாளிதுவரை 76 அறிஞர்களுக்கு வழங்கிட ரூபாய் 22 இலட்சத்து 80 ஆயிரம் வழங்கப்பட்டுள்ளது.

- தமிழ்நாட்டிலும், இந்தியாவின் பிற மாநிலங்களிலும், வெளி நாடுகளிலும் தமிழமைப்புகளை நிறுவி தமிழ்த்தொண்டாற்றும் சீரிய அமைப்புகளுக்கு தமிழ்த்தாய் விருது ஆண்டுதோறும் வழங்கப்பட்டு வருகிறது. மூன்றாண்டுகளில் ரூபாய் 12 இலட்சம் வழங்கப்பட்டது.

- திராவிட மாடல் ஆட்சியின் சிறப்பாக, கடந்த மூன்றாண்டுகளில் 35 இனங்களில் 254 விருதாளர்களுக்கு விருது வழங்கி சிறப்பிக்கப்பட்டுள்ளது.

சிறப்பு விருது

❖ மகாகவி பாரதி நினைவு நூற்றாண்டினை முன்னிட்டு அவரது வாழ்க்கை குறித்தும், அவரின் படைப்புகள் குறித்தும் ஆய்வு செய்த 6 அறிஞர்களுக்கு 2021ஆம் ஆண்டில் சிறப்பு நேர்வாக வழங்கப்பட்ட பாரதி நினைவு நூற்றாண்டு விருதுக்கென ரூ.18.60 இலட்சம் வழங்கப்பட்டது.

புதிய விருதுகள்

❖ முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 97ஆம் பிறந்தநாளை முன்னிட்டு 03.06.2021 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால், தமிழின் இலக்கியத்திற்கு வளம் சேர்க்கும் மூன்று அறிஞர்களுக்கு இலக்கிய மாமணி என்ற பெயரில் ஆண்டுதோறும் விருது வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டு விருதாளர் ஒவ்வொருவருக்கும் விருதுத்தொகை ரூ. 5 இலட்சம் மற்றும் ஒரு சவரன் தங்கப்பதக்கம் வழங்கப்பட்டு வருகிறது. 2023ஆம் ஆண்டு மேனாள் தமிழ்நாடு முதலமைச்சர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டினைச் சிறப்பிக்கும் வகையில் சிறப்பு நேர்வாக கூடுதலாக மூன்று அறிஞர்கள் தெரிவு செய்யப்பெற்ற வகையில் மூன்றாண்டுகளில் 12 அறிஞர்களுக்கு விருது வழங்கிட ரூபாய் 61.30 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

❖ கப்பலோட்டிய தமிழன் வ.உ.சி. அவர்களின் 150ஆம் பிறந்த நாளை முன்னிட்டு அவரது பெயரில் புதிய விருது தோற்றுவிக்கப்பட்டு முதன் முறையாக திரு. எண்ணரசு கருநேசன் அவர்களுக்கு விருதுத் தொகையாக ரூ. 5 இலட்சம் வழங்கப்பட்டது.

❖ மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 2021ஆம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்ட தகைசால் தமிழர் விருது திரு. ந.சங்கரய்யா, திரு. இரா.நல்லகண்ணு மற்றும் திரு. கி.வீரமணி ஆகியோருக்கு வழங்கப்பெற்றது. பொதுத் துறை வாயிலாக வழங்கப்பட்ட இவ்விருது 2024ஆம் ஆண்டுமுதல் தமிழ் வளர்ச்சித் துறையால் வழங்கிடவும் விருதுத்தொகையாக ரூபாய் 10 இலட்சம் நிதியொப்பளிப்பு செய்தும் ஆணையிடப்பட்டு 2024ஆம் ஆண்டுக்கு இலக்கியச் செல்வர் திரு. குமரி ஆனந்தன் அவர்களுக்கு விடுதலைத் திருநாள் அன்று வழங்கப்படவுள்ளது.

ஆட்சிமொழித் திட்டச் செயலாக்கம்

❖ அரசு அலுவலகங்களில் தமிழ்மொழியை முழுமையாகப் பயன்படுத்திட அரசுப் பணியாளர்களுக்கு அறிஞர்கள் குழுவால் ஆட்சிமொழி வரலாறு, சட்டம், ஆட்சிமொழிச் செயலாக்க அரசாணைகள் மற்றும் ஆட்சிமொழித் திட்டச் செயற்பாட்டில் ஏற்படும் இடர்ப்பாடுகளைக் களைதல், கணினியில் தமிழ் ஒருங்குறிப்பயன்பாடு என அனைத்துப் பொருண்மைகளிலும் ஆண்டுதோறும் பயிற்சி வகுப்புகள், ஆட்சிமொழிக் கருத்தரங்குகள் அனைத்து மாவட்டங்களிலும் நடத்திட மூன்றாண்டுகளில் ரூபாய் 84 இலட்சத்து 30 ஆயிரம் வழங்கப்பட்டுள்ளது.

❖ தமிழ் ஆட்சிமொழிச் சட்டம் இயற்றப்பட்ட 27.12.1956–ஆம் நாளை நினைவுகூரும் வகையில் தமிழ் ஆட்சிமொழிச் சட்டத்தை நினைவூட்டி நடைமுறைப்படுத்த வலியுறுத்தவும் விழிப்புணர்வூட்டவும் மாவட்டங்கள் தோறும் ஆட்சிமொழிச் சட்ட வாரம் டிசம்பர் திங்கள் 21 முதல் 27 வரை ஒரு வாரக் காலத்திற்கு அனைத்து மாவட்டங்களிலும் நடத்தப்பட்டு வருகிறது. இதற்கென ஒரு மாவட்டத்திற்கு ரூபாய் ஒரு இலட்சம் வீதம் ரூபாய் 38 இலட்சம் செலவில் ஆண்டுதோறும் நடத்திட மூன்றாண்டுகளில் ரூபாய் ஒரு கோடியே 14 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

நூல்கள் நாட்டுடைமை

❖ தமிழறிஞர்களின் படைப்புகள் உலக மக்கள் அனைவரிடமும் சென்று சேர வேண்டும் என்ற உயரிய நோக்கில் கடந்த மூன்றாண்டுகளில் 22 அறிஞர்களின் நூல்கள் நாட்டுடைமை செய்யப்பட்டு நூலுரிமைத் தொகையாக ரூபாய் 2 கோடியே 85 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

சிறந்த நூல் பரிசு

❖ தனித்துவமிக்க தமிழ்மொழியில் சிறந்த நூல்கள் வெளிவருவதை ஊக்குவிக்கும் வகையில் ஆண்டுதோறும் 33 வகைப்பாடுகளில் சிறந்த படைப்புகளைப் படைத்த நூலாசிரியர்களுக்கும் பரிசுத் தொகையாக ரூ.30,000/–மும் அவற்றை வெளியிடும் பதிப்பகத்தாரர்களுக்கு பரிசுத் தொகையாக ரூ.10,000/–மும் வழங்கப்படுகின்றன. கடந்த மூன்றாண்டுகளில் 137 நூலாசிரியர்களுக்கு ரூபாய் 39 இலட்சத்து 60 ஆயிரம் 132 பதிப்பகத்தார்களுக்கு ரூபாய் 13 இலட்சத்து 20 ஆயிரம் பரிசுத்தொகையாக வழங்கப்பட்டுள்ளது.

கனவு இல்லம்

❖ முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 97வது பிறந்த நாளை முன்னிட்டு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் தோற்றுவிக்கப்பட்ட கனவு இல்லம் திட்டம் வாயிலாக சாகித்திய அகாதெமி, ஞானபீட, தொல்காப்பியர், கலைஞர் மு.கருணாநிதி செம்மொழித் தமிழ் விருது (தமிழ்நாட்டைச் சேர்ந்தவருக்கு மட்டும்) மற்றும் நோபல் பரிசு இலக்கியம் (தமிழ் மொழி மற்றும் தமிழ் இலக்கியப் பணிகளுக்கு பெற்றிருப்பின்) ஆகிய விருதுகளைப் பெற்ற விருதாளர்களுக்கு கனவு இல்லம் வழங்கப்படுகிறது.

❖ 2021–2022 ஆம் நிதியாண்டிற்கு 9 விருதாளர்களுக்கு 10 கோடியே 56 இலட்சத்து 19 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டிலும், 2022–2023 ஆம் நிதியாண்டிற்கு 8 விருதாளர்களுக்கு 11 கோடியே 75 இலட்சத்து 18 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டிலும் கனவு இல்லங்கள் வழங்கப்பட்டுள்ளன.

மாணவர்களுக்கான நலத்திட்டங்கள்

திருக்குறள் பரிசு

❖ ஆண்டுதோறும் திருக்குறள் முற்றோதல் (மனப்பாடம்) செய்யும் மாணவர்களில் 70 மாணவர்களுக்கு மட்டும் பரிசுத் தொகை வழங்குதல் என்ற உச்சவரம்பு நீக்கப்பட்டு முற்றோதல் செய்யும் அனைவருக்கும் பரிசுத் தொகை ரூ.10,000/–லிருந்து ரூ.15,000/–ஆக உயர்த்தி கடந்த மூன்றாண்டுகளில் 451 மாணவச் செல்வங்களுக்கு ரூபாய் 63 இலட்சத்து 47 ஆயிரம் பரிசுத்தொகையாக வழங்கப்பட்டுள்ளது.

போட்டிகள்

❖ நாட்டிற்காகப் பாடுபட்ட தலைவர்களான மகாத்மா காந்தி, ஜவகர்லால் நேரு,



அண்ணல் அம்பேத்கர், தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோரின் கருத்துகளையும் சமூகச் சிந்தனைகளையும் இளைய தலைமுறையினரிடம் கொண்டு சேர்க்கும் வண்ணம் ஆண்டுதோறும் அவர்களது பிறந்த நாளன்று பள்ளி / கல்லூரி மாணவர்களுக்கு பேச்சுப்போட்டிகள் நடத்திட ஆணையிடப்பட்டு, கடந்த மூன்றாண்டுகளில் போட்டிகள் நடத்தி பரிசுத்தொகை வழங்கிட ரூபாய் ஒரு கோடியே 90 இலட்சத்து 40 ஆயிரம் வழங்கப்பட்டுள்ளது.

❖ பள்ளி மாணவர்களிடையே தமிழ் இலக்கியத் திறனை மேம்படுத்தும் வகையில் 11ஆம் வகுப்புப் பயிலும் மாணவர்களுக்கு 10ஆம் வகுப்பு தமிழ்ப் பாடத்தில் திறனறித் தேர்வு நடத்திட ஆணையிடப்பட்டு, தெரிவு செய்யப்படும் 1500 மாணவர்களுக்கு ஊக்கத்தொகையாக திங்கள்தோறும் ரூ.1,500/- வீதம் 22 திங்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்திற்கென ஒவ்வோர் ஆண்டும் தேர்வு நடத்திடவும், ஊக்கத்தொகை வழங்கிடவும் கடந்த மூன்றாண்டுகளில் ரூபாய் 8 கோடியே 78 இலட்சத்து 50 ஆயிரம் வழங்கப்பட்டுள்ளது.

❖ கல்லூரி மாணவர்களிடையே தமிழ் ஆர்வத்தை அதிகரிக்க, அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, பொறியியல் கல்லூரி மற்றும் மருத்துவக் கல்லூரி ஆகியவற்றில் முத்தமிழறிஞர் கலைஞர் தமிழ் மன்றங்கள் புதியதாக தோற்றுவித்து மாணவர்களிடையே தமிழ் சார்ந்த போட்டிகள் ஆண்டுதோறும் நடத்தவும் ஒவ்வொரு கல்லூரிக்கும் வைப்புத்தொகையாக ரூபாய் 5 இலட்சம் வீதம் 100 கல்லூரிகளுக்கு ரூபாய் 5 கோடி வழங்கப்பட்டுள்ளது.

❖ கவிஞர் தமிழ்ஒளி பாரதியாரின் வழித்தோன்றலாகவும், பாரதிதாசனின் மாணவராகவும் விளங்கி கவிதைகளைப் படைத்தவர். கவிதைகள் மட்டுமல்லாது கதைகள், கட்டுரைகள், இலக்கியத் திறனாய்வுகள், மேடைநாடகங்கள், குழந்தைப் பாடல்கள் எனப் பல இயற்றியவர். அவரின் கவிதைகள் தனித் தன்மை வாய்ந்தவை. 41 வயதில் இயற்கை எய்தியகவிஞர் தமிழ்ஒளி அவர்களின் நூற்றாண்டை முன்னிட்டு பள்ளி மாணவர்களின் தமிழ் ஆர்வத்தினை ஊக்குவிக்கும் வகையில் ரூபாய் 50 இலட்சம் வைப்பு நிதியிலிருந்து கவிஞர் தமிழ்ஒளியின் தெரிவு செய்யப்பட்ட கவிதைகளை ஒப்பித்தல் மற்றும் பேச்சுப்போட்டிகள் ஆண்டுதோறும் சுழற்சிமுறையில் ஒவ்வொரு மாவட்டத்திலும் நடத்திட ஆணையிடப்பட்டு முதன்முறையாக கடலூரில் 27.07.2024 அன்று ரூ.3,25,000/- செலவில் நடத்தப்பெற்ற போட்டியில் 247 மாணவர்கள் கலந்துகொண்டு வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன.

உதவித் தொகை

❖ அகவை முதிர்ந்த தமிழறிஞர்கள், எல்லைக் காவலர்கள், தமிழறிஞர்கள் மற்றும் அவர்களின் மரபுரிமையர்களுக்கு திங்கள்தோறும் வாழ்நாள் முழுவதும் உதவித்தொகை வழங்கப்பட்டு வருகிறது. அவ்வகையில் கடந்த மூன்றாண்டுகளில் 300 அகவை முதிர்ந்த தமிழறிஞர்கள், 1 எல்லைக்காவலர், 1 தமிழறிஞர், 48 எல்லைக் காவலர்களின் மரபுரிமையர்கள் மற்றும் 97 தமிழறிஞர்களின் மரபுரிமையர்கள் என மொத்தம் 447 பேருக்கு உதவித்தொகை ஒப்பளிப்பு செய்து ஆணையிடப்பட்டுள்ளது.

பேருந்துப் பயணச் சலுகை

❖ 691 அகவை முதிர்ந்த தமிழறிஞர்களுக்கு பேருந்துகளில் கட்டணமில்லாப் பயணச்சலுகை வழங்கிட ரூபாய் ஒரு கோடியே 44 இலட்சத்து 9 ஆயிரம் வழங்கப்பட்டுள்ளது.

பயிற்சிகள்

❖ கல்லூரி மாணவர்கள் பயனுறும் வகையில் பல்வேறு துறையைச் சார்ந்த அறிஞர்களை அழைத்து ஒருவார காலம் இளந்தமிழர் இலக்கியப் பயிற்சிப் பட்டறையும் இப்பயிற்சியில் கலந்து கொள்ளும்

மாணவர்களுக்கு இலக்கிய வினாடி வினா போட்டியும் நடத்தப்பட்டுவருகிறது. அவ்வகையில் 2022-2023 ஆம் ஆண்டுக்கானபயிற்சிமாண்புமிகுதொழில்கள், தமிழ்ஆட்சிமொழி மற்றும் தமிழ்ப்பண்பாடு, தொல்லியல் துறை அமைச்சர் திரு. தங்கம் தென்னரசு அவர்களின் தலைமையிலும், 2023-2024ஆம் ஆண்டுக்கான பயிற்சி மாண்புமிகு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் திரு. மு.பெ.சாமிநாதன் அவர்களின்தலைமையிலும்நடத்தப்பெற்றன. இதற்கென மொத்தம் ரூபாய் 40 இலட்சத்து 60 ஆயிரம் வழங்கப்பட்டது.

❖ அனைத்து மாவட்டங்களிலும் கல்லூரி மாணவர்கள் பயனுறும் வகையில் 2023ஆம் ஆண்டில் இளையோர் இலக்கியப் பயிற்சிப் பாசறை புதியதாகத் தொடங்கப்பட்டுள்ளது. இதற்கென 38 மாவட்டத்திற்கு ரூபாய் ஒரு இலட்சம் வீதம் ரூபாய் 38 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

❖ தமிழ்நாடு முழுவதிலும் உள்ள 6,218 அரசு உயர்நிலைப் பள்ளி மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் உள்ள தமிழ் மன்றங்களை மேம்படுத்தி முத்தமிழறிஞர் கலைஞர் தமிழ் மன்றம் எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டு ஆண்டுக்கு மூன்று தமிழ்க்கூடல் நிகழ்ச்சிகள் ஆண்டுதோறும் நடத்திட ஒவ்வொரு பள்ளிக்கும் ரூபாய் 9,000/- வீதம் இதுவரை ரூபாய் 11 கோடியே 19 இலட்சத்து 24 ஆயிரம் வழங்கப்பட்டுள்ளது.

❖ தமிழ்நாட்டில் கல்லூரிகள் மற்றும் பல்கலைக்கழகங்களில் தமிழ் இலக்கியம் மற்றும் பிற பாடங்களைத் தமிழ் வழியில் பயிலும் மாணவர்களுக்குத் தமிழால் முடியும் என்ற தலைப்பில் 200 மாணவர்களுக்கு 24 அறிஞர்களை அழைத்து 3 நாட்கள் நடத்தப்படும் வாழ்க்கை வழிகாட்டிப் பயிற்சி நடத்திட ரூபாய் 31 இலட்சத்து 10 ஆயிரம் வழங்கப்பட்டு 2022,2023ஆம் ஆண்டுகளில் நடந்தேறியது.

இலக்கிய விழாக்கள் / கூட்டங்கள்

❖ தாய்த் தமிழ்நாட்டிற்கு "தமிழ்நாடு" என பேரறிஞர் அண்ணா அவர்களால் பெயர் சூட்டிய ஜூலை 18-ஆம் நாளினை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் "தமிழ்நாடு நாளாகக்" கொண்டாடப்படும் என அறிவிக்கப்பட்டதற்கிணங்க ஆண்டுதோறும் கொண்டாடப்பட்டு வருகிறது. அவ்வகையில் 2022ஆம் ஆண்டு சென்னை, கலைவாணர் அரங்கில் நடைபெற்ற நிகழ்ச்சியில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் காணொலி வாயிலாக கலந்து கொண்டு விழாப் பேருரையாற்றினார். 2023ஆம் ஆண்டு சென்னை மாநிலக் கல்லூரியிலும், 2024ஆம் ஆண்டு பேரறிஞர் அண்ணா பிறந்த காஞ்சிபுரத்திலும் மாண்புமிகு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் தலைமையில் நடத்தப்பெற்றன.

❖ தமிழ்நாடு நாள் விழாவின் ஓர் அங்கமாக அறிஞர்களை அழைத்து கருத்தரங்கம் நடத்தப்பட்டன. மேலும், தமிழ்நாடு நாள் விழா தொடர்பில் 38 மாவட்டங்களிலும் பள்ளி மாணவர்களுக்கு மாவட்ட / மாநில அளவில் நடத்தப்பெற்ற கட்டுரை மற்றும் பேச்சுப்போட்டிகளில் வெற்றி பெற்ற பள்ளி மாணவர்களுக்கு ரூபாய் 28 இலட்சத்து 55 ஆயிரம்மதிப்பீட்டில்பரிசுகள்வழங்கப்பட்டன. அவ்வகையில், இதுவரை ரூபாய் 85 இலட்சத்து 65 ஆயிரம் வழங்கப்பட்டுள்ளது.

❖ தமிழறிஞர்கள், எழுத்தாளர்கள் பிறந்த நாளன்று உள்ளூர் இலக்கிய அமைப்புகளுடன் இணைந்து இலக்கியக் கூட்டங்கள் கடந்த மூன்றாண்டுகளில் 19 மாவட்டங்களில் ரூபாய் 23 இலட்சத்து 75 ஆயிரம் செலவில் நடத்தப்பட்டன.

பிற மாநிலம் / அயல்நாடுகளுக்கு நிதியுதவி வழங்குதல்

❖ அமெரிக்காவிலுள்ள ஹார்வர்டு பல்கலைக்கழகத்தில் தமிழ் இருக்கை நிறுவிட தமிழ்நாடு அரசின் நிதியுதவியாக ரூபாய் 4 கோடி வழங்கப்பட்டது.

❖ ஜெர்மனி நாட்டிலுள்ள கொலோன்

பல்கலைக்கழகத்தில் உள்ள தமிழ்த்துறை தொடர்ந்து செயற்படுவதற்கு ரூபாய் ஒரு கோடியே 25 இலட்சம் வழங்கப்பட்டது.

❖ புதுதில்லி, ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழகத்தில், 'தமிழ் இலக்கியவியல்' என்ற தனித்துறை உருவாக்க 2022இல் ரூபாய் ஐந்து கோடியும். 2024இல் 38,99,896/–ம் வழங்கப்பட்டுள்ளது.

❖ நவி மும்பைத் தமிழ்ச் சங்கக் கட்டட மேம்பாட்டிற்கு ரூபாய் 75 இலட்சம் வழங்கப்பட்டது.

❖ ஒரிசா மாநிலத்தில் இயங்கி வரும் புவனேஸ்வர் தமிழ்ச் சங்கக் கட்டட விரிவாக்கப் பணிகளுக்கு ரூபாய் 15 இலட்சம் வழங்கப்பட்டது.



பிற பணிகள்

❖ மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 01.11.2021 அன்று எல்லைப் போராட்டத் தியாகிகள் 76 பேருக்கு சிறப்பு நேர்வாக ரூபாய் ஒரு இலட்சம் வீதம் ரூ. 76 இலட்சம் வழங்கப்பட்டது.

❖ தீராக் காதல் திருக்குறள் என்ற பெயரில் தீந்தமிழ் நிகழ்ச்சிகள் நடத்துவதற்கு தமிழ் இணையக் கல்விக் கழகத்திற்கு ரூபாய் 25 இலட்சம் வழங்கப்பட்டது. முதல் நிகழ்வாக தமிழ் இணையக் கல்விக் கழகம் வாயிலாக உலகப் பொதுமறையான திருக்குறளில் குறளோவியம் என்ற தலைப்பில் இணைய வழியிலான ஓவியப் போட்டி மாண்புமிகு தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் அவர்களால் 22.12.2021 அன்று தொடங்கி வைக்கப்பட்டது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் திருக்கரங்களால் 15.01.2022 அன்று வெற்றி பெற்ற மாணவர்களுக்குப் பரிசுகள் வழங்கப்பட்டன. மேலும், ஓவியப் போட்டிக்கு வரப்பெற்ற ஓவியங்களுள் 365 ஓவியங்கள் தெரிவு செய்து தயாரிக்கப்பட்ட திருக்குறள் நாட்காட்டியும் வெளியிடப்பட்டது.

❖ மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் தமிழ் இணையக் கல்விக் கழகத்தின் வாயிலாக செயல்படுத்திடும் வகையில் தொடங்கி வைக்கப்பட்ட தமிழ் பரப்புரைக் கழகம் தமிழ் இணையக் கல்விக் கழகத்துடன் இணைந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது. 2022–2023ஆம் நிதியாண்டில் ரூ.1.00 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு தமிழ் இணையக் கல்விக் கழகத்தின் வாயிலாக தமிழ்மொழியின் பண்பாடு மற்றும் கலாச்சாரப் பரப்புரைப் பணிகள், ஒலி–ஒளி உச்சரிப்புடன் பாடப்புத்தகத்தை வடிவமைத்தல், தமிழ்க் கற்பதற்கான வசதிகள் ஏற்படுத்துதல், இணையத்தில் தமிழ் ஆசிரியர்கள் மூலம் கற்றுத்தருதல், தமிழை வெளிநாடுகள் மற்றும் வெளிமாநிலங்களில் கற்பிக்கும் அமைப்புகளுக்கு நிதியுதவி வழங்குதல், தமிழாசிரியர்களுக்கான பயிற்சி அளித்தல், பயிற்சி பெற்ற ஆசிரியர்களை தமிழ் கற்பிக்க அனுப்பிவைத்தல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

❖ 2023–2024ஆம் நிதியாண்டிற்கு ரூ.1.00 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு தமிழ் இணையக் கல்விக் கழகத்தின் வாயிலாக கணினி மற்றும் கைப்பேசிக்கேற்றவாறு பாடங்களை இணையதளப்படுத்துதல், ஒலிப்புத்தகம் உருவாக்குதல், காணொலிகள் உருவாக்கம், இணையவழிப் பல்லூடகப் பயிற்சி, ஒலி–ஒளி உச்சரிப்புடன் கூடிய

பாடப்புத்தகம், கற்றல் மேலாண்மை செயலி உருவாக்கம், தமிழ் கற்பிக்கும் அமைப்புகளுக்கு நிதியுதவி வழங்குதல், கலை–பண்பாடு மற்றும் மரபிசைப் பயிற்சிகள் அளித்தல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

- சங்க இலக்கிய நூல்களிலுள்ள வாழ்வியல் தத்துவங்கள், கருத்துகளை எழிலேடாக வெளியிட ரூபாய்15 இலட்சம் வழங்கப்பட்டது.
- புகழ்பெற்ற தலைவர்கள், தமிழறிஞர்கள் ஆகியோரின் அரிய ஒலி/ஒளிப் பொழிவுகளை இணைய தளத்தில் பதிவேற்றிட தமிழ் இணையக் கல்விக் கழகத்திற்கு ரூ.10 இலட்சத்து 40 ஆயிரம் வழங்கப்பட்டது.
- சங்க இலக்கிய நூல்களைச் சந்திப் பிரித்து உரையுடன் தொகுப்பு நூலாக வெளியிட தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் நிறுவனத்திற்கு ரூபாய் 10 இலட்சமும் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்திற்கு ரூபாய் 10 இலட்சமும் வழங்கப்பட்டது. முதற்கட்டமாக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் பத்துப்பாட்டு நூல்கள் 06.01.2023 அன்றும் மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்களால் குறுந்தொகை, பதிற்றுப்பத்து மற்றும் இறையனார் அகப்பொருள் நூல்கள் 18.01.2024 அன்றும் வெளியிடப்பட்டன.
- தந்தை பெரியார் சிந்தனைகள் அடங்கிய தொகுப்பு–21 இந்திய, உலக மொழிகளில் அச்சு மற்றும் மின்னூல் பதிப்புகளைத் தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம் வாயிலாக வெளியிட ரூபாய் 29.05 இலட்சம் வழங்கப்பட்டு, முதற்கட்டமாக 10 மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்ட நூல்கள் மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்களால் 18.01.2024 அன்று வெளியிடப்பட்டன.
- பாரீசு பன்னாட்டு உயர்கல்வி நிறுவனம் மற்றும் செருமனி மூன்சென் தமிழ்ச் சங்கத்தில் நூலகங்களை அமைப்பதற்கு ரூபாய் 13 இலட்சத்து 40 ஆயிரம் வழங்கப்பட்டது.
- அண்ணல் அம்பேத்கர் அவர்களின் படைப்புகள் தமிழ் மொழியில் மொழிபெயர்ப்பு செய்து முதல் பத்து தொகுதிகள் வெளியிட ரூபாய் 51 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.
- தஞ்சாவூர், தமிழ்ப் பல்கலைக்கழக வளாகத்தில் தமிழ்ப் பல்கலைக்கழகம், உத்தம்ம் நிறுவனம் மற்றும் பெரியார் மணியம்மை அறிவியல் மற்றும் தொழில்நுட்ப நிறுவனம் இணைந்து 15.12.2022 முதல் 17.12.2022 வரை நடத்திய 21ஆவது தமிழ் இணைய மாநாட்டிற்கு ரூ.5,00,000/– வழங்கப்பட்டது.
- முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு பிறந்தநாள் விழாவினை முன்னிட்டு தமிழ்நாட்டில் வாழும் 275 தமிழறிஞர்களை சிறப்பிக்கும் வகையில் ஒவ்வொருவருக்கும் சிறப்பு உதவித் தொகையாக ரூ.10,000 வீதம் வழங்கும் நிகழ்வு மாண்புமிகு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் அவர்களால் 31.01.2024 அன்று திருப்பூர் மாவட்டம், செங்கப்பள்ளியில் தொடங்கி வைக்கப்பட்டு 275 பேருக்கு ஒருமுறை சிறப்பு உதவித்தொகை வழங்கிட ரூ.27,50,000/– வழங்கப்பட்டது.
- தாய்த் தமிழைக் காக்க இந்தி எதிர்ப்பு போராட்டத்தில் இன்னுயிர் நீத்த மொழிப்போர் தியாகிகளான திருவாளர்கள் தாளமுத்து மற்றும் நடராசன் ஆகியோரின் பங்களிப்பைப் போற்றும் வகையில் சென்னை, மூலக்கொத்தளத்தில் ஏற்கனவே அமைந்துள்ள நினைவு மண்டபத்தினை மேம்படுத்தி பொலிவேற்றம் செய்திட ரூபாய் 34 இலட்சத்து 30 ஆயிரம் வழங்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.
- சங்கப்பெரும் புலவர் கணியன் பூங்குன்றனார் அவர்களின் நினைவாக சிவகங்கை மாவட்டம் திருப்பத்தூர் வட்டம் மகிபாலன்பட்டியில் 276.75 சதுர அடி பரப்பளவில் ரூ.23.26 இலட்சம் மதிப்பீட்டில்

நிறுவப்பட்ட நினைவுத்தூண் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 22.01.2024 அன்று காணொலி காட்சி வாயிலாக திறந்து வைக்கப்பட்டது.

- கவிஞர் தமிழ்ஒளி அவர்களின் நூற்றாண்டை முன்னிட்டு தஞ்சாவூரிலுள்ள தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் ரூபாய் 7 இலட்சத்து 63 ஆயிரம் மதிப்பீட்டில் மார்பளவு சிலை நிறுவப்பட்டு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 27.02.2024 அன்று காணொலிக் காட்சி வாயிலாக திறந்து வைக்கப்பட்டது.
- சங்கப் பெரும்புலவர் கபிலர் நினைவாக கள்ளக்குறிச்சி மாவட்டம் திருக்கோவிலூரில் ரூபாய் 13 இலட்சத்து 24 ஆயிரம் மதிப்பீட்டில் நிறுவப்பட்ட நினைவுத்தூண் மாண்புமிகு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் அவர்களால் 07.03.2024 அன்று காணொலிக் காட்சி வாயிலாக திறந்து வைக்கப்பட்டது.
- கடந்த மூன்றாண்டுகளில் தமிழ் வளர்ச்சித் துறையின் 3 கண்காணிப்பாளர்களுக்கு உதவி இயக்குநர்களாகவும் 8 உதவி இயக்குநர்களுக்கு துணை இயக்குநர்களாகவும் பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது.
- தமிழ் வளர்ச்சித் துறையில் நேரடி நியமனம் மூலம் நிறைவு செய்யப்படும் 13 உதவி இயக்குநர் பணியிடங்கள் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் வாயிலாக தேர்வுகள் நடத்தி நிறைவு செய்திட ஆணையிடப்பட்டுள்ளது.

நிருவாக சீரமைப்பு

- தமிழ் வளர்ச்சித் துறையில் தற்போது சேலம் மற்றும் திருநெல்வேலி என இரண்டு மண்டலங்கள் செயற்பட்டு வருகின்றன. நிருவாக வசதிக்காக மேலும் ஆறு மண்டலங்கள் துணை இயக்குநர்கள் பொறுப்பில் செயல்படும் வகையில் பிரிக்கப்பட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

விரைவுத் துலங்கல் குறியீடு

- தமிழ் வளர்ச்சித் துறையால் மாலை அணிவித்து மலர்வணக்கம் செய்யப்படும் திருவள்ளுவர் (மெரினா மற்றும் வள்ளுவர் கோட்டம்) (தை 2), உ.வே.சா (பிப்ரவரி 19), ஔவையார் (மார்ச் 8), கம்பர் (மார்ச் 24), இளங்கோவடிகள் (ஏப்ரல் 24), இராபர்ட் கால்டுவெல் (மே 7), மறைமலை அடிகள் (ஜூலை 15), திரு.வி.க.(ஆகஸ்ட் 26), தொல்காப்பியர் (சென்னை மற்றும் கன்னியாகுமரி) (சித்திரை முழுமதி நாள்), தமிழ்த்தாய் (நாள்தோறும் மாலையும் 15 நாட்களுக்கு ஒரு முறை நூல் புடைவையும்) ஆகிய 12 திருவுருவச் சிலைகளுக்கு விரைவுத் துலங்கள் குறியீடு (QR Code) அமைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

அறிவியல் தமிழ் மன்றம்

- முன்னாள் தமிழ்நாடு முதலமைச்சர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் தொடங்கப்பெற்று 2011ஆம் ஆண்டு வரை செயற்பட்ட அறிவியல் தமிழ் மன்றத்தை மீள புதுப்பொலிவுடன் செயற்படுத்திட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம்

- முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பெரு முயற்சியால் இந்தியாவில் முதல் முறையாகத் தமிழ் மொழியானது 2004–ம் ஆண்டு செம்மொழியாக அறிவிக்கப்பட்டது.
- 2008–ம் ஆண்டில் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம் எனத் தன்னாட்சி பெற்ற நிறுவனமாக சென்னையில் அமைக்கப்பட்டு, முன்னாள் முதலமைச்சர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் 5.11.2007 அன்று ரூ.42.66 கோடி மதிப்பிலான 16.586 ஏக்கர் நிலம் ஒதுக்கீடு செய்யப்பட்டு, அந்நிலத்தினைச் சமன் செய்ய ரூ.1.45 கோடி நிதியும் வழங்கப்பட்டது.
- மாண்புமிகு தமிழ்நாடு மேனாள் முதல்வர் கலைஞர் அவர்கள் 24.07.2008 அன்று தம்

சொந்த நிதியிலிருந்து அறக்கட்டளையை நிறுவி அவரின் பிறந்தநாளான சூன் 3 அன்று ஒவ்வோராண்டும் கலைஞர் மு.கருணாநிதி செம்மொழித் தமிழ் விருது வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டது. இவ்விருது 2010 முதல் 2019 வரையிலான பத்து ஆண்டுகளுக்கு வழங்கப்படாமல் இருந்தது. 2021ஆம் ஆண்டு ஆட்சிப் பொறுப்பேற்றவுடன் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 10 ஆண்டுகளுக்குரிய விருதாளர்களாக முறையே முனைவர் வீ.எஸ்.ராஜம், பேராசிரியர் பொன்.கோதண்டராமன், பேராசிரியர் இ.சுந்தரமூர்த்தி, பேராசிரியர் ப.மருதநாயகம், பேராசிரியர் கு.மோகனராசு, பேராசிரியர் மறைமலை இலக்குவனார், பேராசிரியர் கா.ராஜன், பேராசிரியர் உல்ரிக் நிக்லாஸ், கவிஞர் ஈரோடு தமிழன்பன் பேராசிரியர் கு.சிவமணி ஆகியோர் தெரிவு செய்யப்பெற்று முனைவர் வீ.எஸ்.ராஜம், பேராசிரியர் உல்ரிக் நிக்லாஸ் நீங்கலாக ஏனையோருக்கு 22.01.2022 அன்று விருதுகள் வழங்கப்பட்டன. இதனைத் தொடர்ந்து ஆண்டுதோறும் விருதுகள் வழங்கப்பட்டு வருகின்றன.

- 2020ஆம் ஆண்டுக்கு முனைவர் ம.இராஜேந்திரன் அவர்களும் 2021ஆம் ஆண்டுக்கு முனைவர் க.நெடுஞ்செழியன் அவர்களும், 2022ஆம் ஆண்டுக்கு பிரான்சு நாட்டைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர் முனைவர் ழான் லூயிக் அவர்களும் தெரிவு செய்யப்பெற்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 22.08.2022 அன்று முனைவர் ம.இராஜேந்திரன் அவர்களுக்கும் முனைவர் க.நெடுஞ்செழியன் அவர்களுக்கும் வழங்கப்பட்டது.

- 2023ஆம் ஆண்டுக்கான விருது திரு. கா.இராமசாமி அவர்களுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 5.09.2023 அன்று வழங்கப்பட்டது.

- கடந்த மூன்றாண்டுகளில் 15 அறிஞர்களுக்கு ரூ.1,50,00,000/- மதிப்பில் இவ்விருது வழங்கப்பட்டது.

- செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம் அமைந்துள்ள சாலைக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் செம்மொழிச் சாலை எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககம்

- முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் அகராதிப்பணி வழியாக அருந்தமிழின் சொல்வளத்தைப் பாதுகாப்பதற்காக 1974ஆம் ஆண்டு தொடக்கி வைக்கப்பெற்ற செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககத்தால், அரசு அலுவலகங்களுக்கான ஆட்சிச் சொல்லகராதி இக்காலத்திற்கேற்ப மேம்படுத்தப்பட்டு வெளியிடப்பட்டது.

- தமிழ்நாட்டிலுள்ள 48 அரசுத் துறைகளுக்கான கலைச்சொல் குறுநூல்கள் அச்சிடப்பட்டு உரிய அலுவலகங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

- செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் பேரகரமுதலியின் 31 தொகுதிகள் இக்காலத்திற்கேற்ப மேம்படுத்தம் செய்யப்பெற்று 7 தொகுதிகளைக் கொண்ட திருந்திய பதிப்பு மற்றும் மருத்துவக் கலைச்சொல் அகராதி, பிறமொழியினருக்குப் பயன்படும் வகையில் பன்மொழி அகராதியுடன் கூடிய "தமிழ்ப்பேசி" குறுஞ்செயலி ஆகியன மாண்புமிகு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் அவர்களால் 'தமிழ் அகராதியியல் நாள் விழா'வில் வெளியிடப்பட்டன.

சொற்குவை வலைத்தளம்

- அகரமுதலி இயக்ககத்திற்கென உருவாக்கப்பட்ட 'சொற்குவை' வலைத்தளத்தில் (sorkuvai.tn.gov.in / sorkuvai.com) இவ்வியக்ககப் பேரகரமுதலி, சென்னைப் பல்கலைக்கழகப் பேரகராதி, தமிழ் இணையக் கல்விக்கழக கலைச்சொல் அகராதி மற்றும் தமிழ்நாடு அரசின்

ஆட்சிச்சொல் அகராதி உள்ளிட்ட அகராதிகளிலிருந்து தொகுக்கப்பெற்ற சொற்களையும் சேர்த்து 2024 சூலை திங்கள் வரை 15,32,717 சொற்கள் பதிவேற்றம் செய்யப்பெற்றுள்ளன.

தமிழ்க் கலைக்கழகம்

❖ கடந்த மூன்று ஆண்டுகளில் மாதம் இரு கூட்டங்கள் என்ற வகையில் 68 கூட்டங்கள் நடத்தப்பெற்று,16,935 கலைச்சொற்களுக்கு வல்லுநர்குழு ஏற்பளித்து 'சொற்குவை' வலைத்தளம் வழியாக மக்களின் பயன்பாட்டுக்கு வழங்கப்பட்டுள்ளன.

இந்தோ – ஐரோப்பிய வேர்ச்சொல் ஒப்பீட்டு அகராதி

❖ இந்தோ – ஐரோப்பிய வேர்ச்சொல் ஒப்பீட்டு அகராதி தமிழ்நாடு பாடநூல் கல்வியியல் பணிகள் கழகம் மூலம் உருவாக்கி வெளியிட ஆணையிடப்பட்டு, மொத்தம் ரூ.5,47,20,000/– வழங்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.

தமிழ் அகராதியியல் நாள் விழா

❖ 'தமிழ் அகராதியியலின் தந்தை' என்று போற்றப்படும் வீரமாமுனிவரின் பிறந்தநாளான நவம்பர் 08ஆம் நாள் ஆண்டுதோறும் "தமிழ் அகராதியியல் நாள் விழாவாக"க் கொண்டாடப்பட்டு வருகிறது.

❖ தூயதமிழ் பேசும் தனித்தமிழ்ப் பற்றாளர்களுக்குத் தொகை ரூ.5,000/– வீதம் மூவருக்கு ரூ.15,000/– வழங்கப்பட்டு வருகிறது. கடந்த மூன்றாண்டுகளில் 9 அறிஞர்களுக்குத் தொகை ரூ.45,000/– வழங்கப்பட்டுள்ளது.

❖ பள்ளி மாணவர்களுக்கு மாநில அளவில் நடைபெறும் ஓவியப்போட்டி மற்றும் கலைச்சொல்லாக்கப் போட்டிகளில் வெற்றிபெற்றவர்களுக்கு முதற்பரிசாக ரூ.10,000/– இரண்டாம் பரிசாக ரூ. 5,000/– என கடந்த மூன்றாண்டுகளில் 12 மாணவர்களுக்குத் தொகை 90,000/– வழங்கப்பட்டுள்ளது.



விருதுகள்

❖ அகராதித் துறையில் சிறந்த பங்களிப்பை வழங்கிவரும் தகுதிவாய்ந்த உள்நாட்டு அகராதியியல் அறிஞர் ஒருவருக்குத் 'தேவநேயப் பாவாணர் விருதும்', விருதுத் தொகையாக ரூ.2 இலட்சமும்,1 சவரன் தங்கப் பதக்கமும், வழங்கப்பட்டுவருகிறது. கடந்த மூன்றாண்டுகளில் 3 அறிஞர்களுக்குத் தொகை ரூ. 7,50,000/– வழங்கப்பட்டுள்ளது.

❖ வீரமாமுனிவர் நெறியில் அவர்தம் படைப்பு நடையில் சிற்றிலக்கியங்கள், மொழிபெயர்ப்புகள் உருவாக்கி, தமிழ் அகராதித்துறையில் சிறந்து விளங்கி, தமிழ் அகராதிகளையும் வெளியிட்டுள்ள வெளிநாடு (அ) உள்நாட்டைச் சார்ந்த அகராதியியல் அறிஞர் ஒருவருக்கு 'வீரமாமுனிவர் விருதும்', விருதுத் தொகையாக ரூ.2 இலட்சமும், 1 சவரன் தங்கப் பதக்கமும் வழங்கப்பட்டுவருகிறது. கடந்த மூன்றாண்டுகளில் ஓர் அறிஞருக்குத் தொகை ரூ. 2,50,000/– வழங்கப்பட்டுள்ளது.

❖ தூயதமிழ்ச் சொற்களைக் கொண்டு செய்திகளை வெளியிடும் ஊடகங்களை ஊக்குவிக்கும் வகையில், அச்சு மற்றும் காட்சி என இரு ஊடகங்களுக்குத் 'தூயதமிழ் ஊடக விருதும்', விருதுத் தொகையாக ரூ.50 ஆயிரமும், ரூ.25 ஆயிரம்

மதிப்பிலான தங்கப் பதக்கமும், வழங்கப்பட்டு வருகின்றன. கடந்த மூன்றாண்டுகளில் 2 அச்சு ஊடகங்களுக்கும், ஒரு காட்சி ஊடகத்திற்கும் சேர்த்து தொகை ரூ. 2,25,000/- வழங்கப்பட்டுள்ளது.

❖ தூயதமிழ்ச் சொற்களைக் கொண்டு கவிதை இயற்றும் பாவலர்களை ஊக்குவிக்கும் வகையில் மரபுக்கவிஞர் மற்றும் புதுக்கவிஞர் என இரண்டுபேருக்கு 'நற்றமிழ்ப் பாவலர் விருதும்', விருதுத் தொகையாக ரூ.50 ஆயிரமும், ரூ. 25ஆயிரம் மதிப்பிலான தங்கப் பதக்கமும் வழங்கப்பட்டு வருகின்றன. கடந்த மூன்றாண்டுகளில் 6 அறிஞர்களுக்குத் தொகை ரூ. 4,50,000/- வழங்கப்பட்டுள்ளது.

❖ நடைமுறை வாழ்க்கையில் பிறமொழிக் கலப்பின்றித் தூயதமிழில் பேசுவோரை ஊக்கப்படுத்தும் வகையில் மாவட்டந்தோறும் ஒருவருக்குத் "தூயதமிழ்ப் பற்றாளர் விருதும்" விருதுத்தொகையாக ஒவ்வொருவருக்கும் ரூ.20 ஆயிரம் வழங்கப்படுகிறது. கடந்த மூன்றாண்டுகளில் 69 அறிஞர்களுக்குத் தொகை ரூ. 13,80,000/-வழங்கப்பட்டுள்ளது.

சொல்வயல் – திங்கள் மின்னிதழ்

❖ அகராதியியல், மொழியியல் சார்ந்த கட்டுரைகள், வெளிநாடு மற்றும் உள்நாட்டு அறிஞர்களின் சொல்லாய்வுகள், சொல்லாக்கங்கள், இயக்கக நிகழ்வுகள் உள்ளிட்ட செய்திகளைக் கொண்ட "சொல்வயல்" மின்னிதழ் 2024 சூலை வரை 50 இதழ்கள் வெளியிடப்பட்டுள்ளன.

படைப்பாக்கப் பொது உரிமத்தில் வெளியிடல்

❖ சொற்குவையின் சொற்கள், தமிழ் மின் நூல்கள், அரசுத் தளங்களின் உள்ளடக்கங்கள், அகரமுதலி இயக்கக வெளியீடுகள் போன்றவை விக்கிப்பீடியா (Wikipedia), விக்கிமூலத்தில் (Wikisource) படைப்பாக்கப் பொது உரிமத்தின்கீழ் தரவேற்றம் செய்யப்பட்டு வருகின்றன. மேலும், சொல்வயல் மின்னிதழில் மாதந்தோறும் இடம்பெறும் கலைச்சொற்கள் "விகாஸ்பீடியா" (Vikaspedia) இணையதளம் வழியாக மக்களின் பயன்பாட்டுக்கு வழங்கப்பட்டுள்ளன.

சொற்குவை மாணவத் தூதுவர் பயிற்சித் திட்டம்

❖ கல்லூரி மாணவர்களிடையே சொல்லாக்கத் திறனை வளர்த்தெடுத்து அவர்களின் தனித்தமிழ்ப் பற்றினை ஊக்குவிக்கும் நோக்கில் 'சொற்குவை மாணவத் தூதுவர் பயிற்சித் திட்டம்' செயற்படுத்தப்பட்டுவருகிறது. கடந்த மூன்றாண்டுகளில் 600 மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, பல துறைசார்ந்த சொற்களுக்கு இணையான தமிழ்க் கலைச்சொற்களை உருவாக்க, தேர்ந்த அறிஞர்களைக் கொண்டு பயிற்சி அளித்து அவர்களை பேச்சிலும் எழுத்திலும் தனித்தமிழைப் பயன்படுத்த ஊக்குவிக்க ரூ. 6,13,800/- வழங்கப்பட்டது.

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

❖ பேரறிஞர் அண்ணா அவர்கள் பிரெஞ்சு மொழிக் கலைக் கழகத்தைப் போல தமிழுக்கு ஓர் உயராய்வு நிறுவனம் தொடங்கப்பட வேண்டும் என்ற கருத்திற்கிணங்க, 1970-ஆம் ஆண்டு அப்போதைய முதலமைச்சர் மாண்புமிகு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் தொடங்கப்பெற்ற உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்திற்கு கடந்த மூன்றாண்டுகளில் ஊதியம், திட்டப்பணிகள் மற்றும் ஓய்வூதியத்திற்கென நல்கை மானியமாக ரூபாய் 12 கோடியே 67 இலட்சத்து 23 ஆயிரம் வழங்கப்பட்டுள்ளது.

❖ முத்தமிழறிஞர் மொழிபெயர்ப்புத் திட்டத்தின் முதல் நூலாக அயல்நாட்டு அறிஞர் டாக்டர் இராபர்ட் கால்டுவெல் அவர்கள் எழுதிய "A Comparative Grammar of the Dravidian or South Indian Family of Languages" என்னும் நூல் பேராசிரியர் பா.ரா. சுப்பிரமணியன் அவர்களால் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டு உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் மற்றும்

தமிழ்நாடு பாடநூல் கழகம் வாயிலாக அச்சிடப்பெற்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 16.02.2022 அன்று வெளியிடப்பட்டது.

❖ மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கினங்க பாரதியின் வாழ்வைச் சிறுவர்கள் அறியும் வண்ணம் சித்திரக் கதை நூல், பாரதியாரின் சிறந்த நூறு பாடல்களைத் தெரிவு செய்து தமிழ்நாட்டின் புகழ்பெற்ற ஓவியர்களின் வண்ண ஓவிய நூல், மற்றும் பாரதியாரின் படைப்புகள் மற்றும் பாரதியார் குறித்த முக்கிய ஆய்வு நூல்களின் ஆங்கில மொழிபெயப்பு நூல்கள் வெளியிடப்பட்டன.

❖ திருக்குறள் நெறிபோற்றும் ஓவியப் போட்டி நடத்தப்பட்டு, அதில் வெற்றி பெற்ற 15 ஓவியர்கள் ஒவ்வொருவருக்கும் பரிசாக ரூ.40 ஆயிரமும் வழங்கிட ரூபாய் 6 இலட்சமும் ஓவியங்களைக் காட்சிப்படுத்திட ரூபாய் 4 இலட்சமும் என மொத்தம் ரூபாய் 10 இலட்சம் வழங்கப்பட்டன.

❖ ஓமரின் 'இலியட்' மற்றும் 'ஒடிசி' ஆகிய கிரேக்கக் காப்பியங்கள் ரூ.9.10 இலட்சம் நிதி நல்கையில் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டு மாண்புமிகு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் அவர்களால் 12.07.2023 அன்று வெளியிடப்பட்டன.

❖ மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கினங்க உலகத் தமிழாராய்ச்சி நிறுவன ஆய்வு நூலகம் ரூபாய் 50 இலட்சம் செலவில் கணினிமயமாக்கி மேம்படுத்தப்பட்டுள்ளது.

❖ பெருநகரச் சென்னை மாநகராட்சி தொடக்கப் பள்ளி (ம) நடுநிலைப் பள்ளித் தமிழ் ஆசிரியர்களுக்கான "மொழியியல் நுணுக்கப் பயிற்சி அளிக்க ரூபாய் 2.95 இலட்சம் வழங்கப்பட்டது.

❖ பழந்தமிழ் இலக்கியங்கள், நவீன இலக்கியங்கள் மற்றும் சிறார் இலக்கியங்களில் தெரிவு செய்யப்பட்ட நூல்களை ஒலி நூல்களாக மாற்றம் செய்து ரூபாய் 10 இலட்சம் செலவில் வெளியிடப்பட்டது.

❖ கவிஞர் தமிழ்ஒளி அவர்களின் நூற்றாண்டினை சிறப்பிக்கும் வகையில் மாண்புமிகு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலுக்கிணங்க, நிறுவனத்தில் 'கவிஞர் தமிழ்ஒளி படைப்புவெளி' எனும் பொருண்மையில் கவிஞர் தமிழ்ஒளி நூற்றாண்டுப் பன்னாட்டுக் கருத்தரங்கம் நடத்தப்பட்டு 35 கட்டுரையாளர்களின் கட்டுரைத் தொகுப்பு நூலாக வெளியிடப்பட்டது.

❖ பேரறிஞர் அண்ணாவால் தொடங்கப்பெற்று முத்தமிழறிஞர் கலைஞருடைய ஆட்சிக்காலங்களில் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்திற்கென்று பேராசிரியர் ஒருவரை இயக்குநராக நியமிக்கின்ற மரபு கடைபிடிக்கப்பட்டுவந்தது. அதற்குப் பிறகு அம்மரபு பின்பற்றப்படவில்லை. தற்போது கழக அரசால் மீண்டும் இயக்குநர் பதவிக்கு பேராசிரியர் நிலையில் நிரப்புவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

உலகத் தமிழ்ச் சங்கம்

❖ உலகத் தமிழர்களையும், தமிழ் அமைப்புகளையும் ஒன்றிணைக்கும் வகையில் 1986ஆம் ஆண்டு தொடங்கப்பெற்ற உலகத் தமிழ்ச் சங்கத்தின் பணிகள் சிறப்பாக நடைபெறும் வகையில், கடந்த மூன்றாண்டுகளில் நல்கை மானியமாக ரூபாய் 3 கோடியே 62 இலட்சத்து 12 ஆயிரம் வழங்கப்பட்டுள்ளது.

❖ சங்க கால இலக்கியங்கள் முதல் நவீன இலக்கியங்கள் வரை தமிழாய்ந்து பேசும் அறிஞர்கள் ஒன்று கூடும் நிகழ்வு வாரந்தோறும் 'தமிழ்க்கூடல்' என்னும் பெயரில் நடத்தப்பட்டு வருகின்றது. கடந்த மூன்றாண்டுகளில் ரூபாய் 8 இலட்சத்து 13 ஆயிரம் செலவில் 65 தமிழ்க்கூடல் நிகழ்வுகள் நடைபெற்றுள்ளன.

- திங்கள்தோறும் தமிழ்மொழிக்கு வளம் சேர்க்கும் விதமாக, தமிழ் நூல்கள் அரங்கேற்றம் செய்யப்பட்டு வருகின்றன. கடந்த மூன்றாண்டுகளில் ரூபாய் ஒரு இலட்சத்து 28 ஆயிரம் செலவில் 16 நூல் அரங்கேற்ற நிகழ்வுகள் நடத்தப்பெற்று, 81 நூல்கள் அரங்கேற்றம் செய்யப் பெற்றுள்ளன.

- உலகத் தமிழ்ச் சங்கம் தமிழ் அமைப்புகளுடன் இணைந்து பன்னாட்டுக் கருத்தரங்கங்களை நடத்தி வருகின்றன. அவ்வகையில், குறிஞ்சித் தமிழ்ப் பண்பாட்டு ஆய்வு மையத்துடன் இணைந்து 'சிங்கப்பூர்த் தமிழறிஞர் மு.தங்கராசனின் படைப்புகள்' என்ற பன்னாட்டுக் கருத்தரங்கமும் ஐயை உலகத் தமிழ் மகளிர் மன்றத்துடன் இணைந்து 'புலம்பெயர் தமிழர்களின் வாழ்வியல்' என்ற பன்னாட்டுக் கருத்தரங்கமும் நடத்தப்பெற்றன.

- இரண்டு தேசியக் கருத்தரங்கங்களும் நடத்தப்பெற்று இருக்கின்றன. திருவனந்தபுரம் தமிழ்ச் சங்கத்துடன் இணைந்து 'செந்தமிழும் சேரநாடும்' என்ற தேசியக் கருத்தரங்கமும் கேரள தமிழ்ப் பண்பாட்டு ஆய்வு மன்றத்துடன் இணைந்து 'வானவில் கே. ரவியின் படைப்புலகம் – ஒரு பன்முகப் பார்வை' என்ற தேசியக் கருத்தரங்கமும் நடத்தப்பெற்றன.

- உலகத் தமிழ்ச் சங்கத்தில் ஐந்து அறக்கட்டளைகள் நிறுவப்பெற்றுள்ளன. அந்த அறக்கட்டளைகளின் சார்பில் கடந்த மூன்றாண்டுகளில் 5 சொற்பொழிவுகள் நடத்தப்பட்டுள்ளன.

- கடந்த மூன்றாண்டுகளில் புலம்பெயர் தமிழர்களிடமிருந்து பெறப்பட்ட 350க்கும் மேற்பட்ட இதழ்கள் மற்றும் 1200க்கும் மேற்பட்ட அயலகத் தமிழ் நூல்கள் உலகத் தமிழ்ச் சங்க நூலகத்தில் 'அயலகத் தமிழ்ப் புத்தகப் பூங்கா' என்ற தனிப்பிரிவில் ஆவணப்படுத்தப்பட்டுள்ளன.

- உலகத் தமிழ்ச் சங்கத்தில் 30,000க்கும் மேற்பட்ட நூல்களுடன் குளிரூட்டப்பட்ட வசதியுடன் 200 பேர் அமர்ந்து படிக்கும் வகையில் நூலகம் இயங்கி வருகிறது. நூலகத்தினைப் புனரமைக்க ரூபாய் 21 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

- உலகத் தமிழ்ச் சங்கத்தில் 119 அயலகத் தமிழ் அமைப்புகளும், 26 வெளி மாநிலத் தமிழ் அமைப்புகளும் 145 தமிழகத் தமிழ் அமைப்புகளும் என மொத்தம் 290 தமிழ் அமைப்புகள் உறுப்பினர்களாக கடந்த மூன்றாண்டுகளில் இணைந்துள்ளன.

- தமிழ் மொழியின் இலக்கிய, இலக்கணச் செழுமையை எடுத்துரைக்கும் வகையில், 100 பேர் பங்கேற்ற 'இலக்கியம், இலக்கணம் அறிவோம்' கட்டணமில்லாப் பயிற்சி வகுப்பு 15 நாள்கள் நடத்தப்பெற்றது.

- உலகத் தமிழ்ச் சங்கத்தின் சார்பில் மூன்றாண்டுகளில் 'பன்முக நோக்கில் மக்கள்திலகம்', 'புலம்பெயர் தமிழர்களின் வாழ்வியல்', 'பொன்மனச் செம்மல் – ஒரு பன்முகப் பார்வை', 'செந்தமிழும் சேரநாடும்', 'பாரெங்கும் பாரதி', 'சமுதாய மாற்றத்திற்குத் தமிழ்த் திரையுலகின் பங்களிப்பு' உள்ளிட்ட 7 நூல்கள் வெளியிடப்பெற்றுள்ளன.

- மதுரை உலகத் தமிழ்ச் சங்கத்தின் கீழ் செயல்பட்டு வரும் சங்கத் தமிழ்க் காட்சிக் கூடத்தினைப் புனரமைக்கும் பணிகள் ரூபாய் 12.50 இலட்சம் செலவில் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

- சங்கத் தமிழ்க் காட்சிக்கூடத்தை பலர் அறியும்வண்ணம் கொண்டு செல்லும் நோக்கத்தில் திங்கள்தோறும் சிறப்புச் சொற்பொழிவுகள் நடத்தப்பட்டு வருகின்றன. பள்ளி மாணவர்கள் பங்குபெற்ற ஓவியப் பயிற்சிப் பட்டறை நடத்தப்பெற்று மாணவர்களுக்குச் சான்றிதழ் வழங்கிச் சிறப்பிக்கப்பட்டது.

தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்

தொகுப்பு நல்கை

❖ தமிழ்நாட்டின் நெற்களஞ்சியமான தஞ்சாவூரில் 1981ஆம் ஆண்டில் பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்த நாளான செப்டம்பர் 15ஆம் நாளில் உருவாக்கப்பட்ட தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் பணியாற்றும் கல்விநிலை மற்றும் அலுவல்நிலைப் பணியாளர்களுக்கு ஊதியம் வழங்குவதற்காகவும், ஓய்வூதியதாரர்களுக்கு ஓய்வூதியப் பலன்களை வழங்குவதற்காகவும் கடந்த மூன்று ஆண்டுகளில் தொகுப்பு நல்கையாக ரூ. 115 கோடியே 05 இலட்சத்து 99 ஆயிரம் வழங்கப்பட்டுள்ளது.

மாணவர் சேர்க்கை

❖ கடந்த மூன்று ஆண்டுகளில், 249 முனைவர் பட்ட மாணவர்களும், 45 ஆய்வியல் நிறைஞர் மாணவர்களும், முதுநிலைப் பட்டப்படிப்பில் 450 மாணவர்களும் ஒருங்கிணைந்த முதுநிலைப் பட்டப்படிப்பில் 326 மாணவர்களும் இளங்கல்வியியல் பட்டப்படிப்பில் 282 மாணவர்களும் கல்வியியல் நிறைஞர் பட்டப்படிப்பில் 4 மாணவர்களும் சேர்க்கைப் பெற்றுள்ளனர்.

கல்வி உதவித்தொகை

❖ முதுகலைத் தமிழ் இலக்கியம் பயிலும் மாணவர்கள் 20 பேர் மற்றும் ஐந்தாண்டு ஒருங்கிணைந்த தமிழ் இலக்கியம் பயிலும் மாணவர்கள் 25 பேருக்கும் திங்கள்தோறும் ரூ.2,000/- (ரூபாய் இரண்டாயிரம் மட்டும்) உதவித்தொகை வழங்குவதற்காக கடந்த மூன்றாண்டுகளில் ரூபாய் 88 இலட்சத்து 70 ஆயிரம் வழங்கப்பட்டுள்ளன.

தமிழ்ப் பண்பாட்டு மையம்

❖ தமிழ்ப் பண்பாட்டைப் பாதுகாத்து உலகெங்கும் பரப்புவதற்குத் தமிழ்ப் பண்பாட்டு மையம் அமைத்து அதன்வழியாக இசை, நாட்டியம் மற்றும் மரபுக்கலையில் படிநிலை வகுப்புகள் நடத்துவதற்காக வெளிநாடு மற்றும் உள்நாட்டில் கடந்த மூன்றாண்டுகளில் 30 நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மூலம் சுமார் 3563 மாணவர்கள் சேர்க்கை செய்யப்பெற்று பயின்றுவருகின்றனர்.

தமிழ் வளர் மையம்

❖ உலகளவில் தமிழ் மொழியினைப் பரப்புவதற்காகவும், அதனைப் பாதுகாக்கவும் தமிழ் வளர் மையம் அமைக்கப்பட்டுள்ளது. இம்மையத்தின்வழி இளங்கலை, முதுகலை, பட்டய மற்றும் சான்றிதழ் வகுப்புகள் நடத்துவதற்கு கடந்த மூன்றாண்டுகளில் 10 நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் செய்யப்பட்டதன் மூலம் சுமார் 780 மாணவர்கள் சேர்க்கை செய்யப்பெற்றுள்ளனர்.

தமிழ்ப் பல்கலைக்கழகத்தால் மேற்கொள்ளப்படும் திட்டப்பணிகள்

வ.உ.சிதம்பரனார் இணையவழிக் கருத்தரங்கம்

❖ தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் வாயிலாக வ.உ.சிதம்பரனார் அவர்கள் குறித்த இணையவழிக் கருத்தரங்கம் ரூ.2,00,000/- செலவில் 30 நாட்கள் நடத்தப்பெற்றன.

தமிழ் இலக்கியங்கள் உலக மொழிகளில் மொழிபெயர்த்தல்

❖ முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் சங்கத்தமிழ் நூலினைப் பிரெஞ்சு மற்றும் ஜெர்மன் மொழிகளில் மொழிபெயர்க்க ரூ.12 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

தமிழ்ப் பண்பாட்டு மரபுகளை ஆவணப்படுத்துதல்

❖ தமிழ்ப் பண்பாட்டு மரபுகள், தமிழ் மண்ணின் மரபுக்கலைகளை மீட்டெடுத்தல், நாட்டுப்புறவியல் அருங்காட்சியகம் அமைத்தல், கல்வெட்டுகள் காட்டும் தமிழ்க் கலைப் பண்பாடுக் குறித்த ஆய்வுகள் மேற்கொள்ளுதல், கைவினைப் பொருட்கள் தயாரித்திடப் பயிற்சிகள் அளித்தல் ஆகிய திட்டப் பணிகள் மூன்று ஆண்டுகளில் மேற்கொள்வதற்கு ரூ.2.11 கோடிக்கு நிருவாக அனுமதி அளித்து ரூ.91,33,500/- வழங்கப்பட்டுள்ளது.

தமிழ்ப் பல்கலைக்கழகத்திற்குத் தேசியத் தரமதிப்பீட்டுப் புள்ளிகள் பெறுதல்

❖ தேசியத் தர மதிப்பீட்டுக் குழுவின் மறு மதிப்பீட்டிற்கு உட்படுத்தி உயர்புள்ளிகளைப் பெறும் வகையில் கட்டடங்கள் மேம்பாட்டுப்

பணிகள், அலுவலகக் கட்டடம், நூலகக் கட்டடம், கூத்துக்களரி வளாகம், 'த' மற்றும் 'நா' வடிவக் கட்டடங்கள் சிறப்புச் சீர்காப்புப் பணிகளுக்கான ரூ.1.50/– கோடியும், ஆய்வுத்திட்டம் மேற்கொள்வதற்காக ரூ.50.00 இலட்சமும் என மொத்தம் ரூ.2.00 கோடி வழங்கப்பட்டுள்ளது.

யோகாப் பயிற்சி மையம்

❖ தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் யோகா மையம் அமைக்கப்பட்டு அதன்வழி அருகில் உள்ள அரசுப் பள்ளிகள், மாற்றுத்திறனாளிகளுக்குரிய அரசுப் பள்ளிகள், தமிழ்ப் பல்கலைக்கழக ஆசிரியர்கள், பணியாளர்கள், சுமார் 400 மாணவர்களுக்கு யோகாப் பயிற்சிகள் அளிக்க ரூ.1,50,000/– வழங்கப்பட்டுள்ளது.

புதிய கட்டடங்கள்

❖ தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் ரூ.5,03,57,000/– (ரூபாய் ஐந்து கோடியே மூன்று இலட்சத்து ஐம்பத்தேழாயிரம் மட்டும்) மதிப்பீட்டில் கட்டப்பட்ட மாமன்னன் இராசராசச் சோழன் பன்னோக்குக் கூடம், உள்விளையாட்டு அரங்கம், கூடுதல் மகளிர் விடுதி, பழைய ஆடவர் விடுதி முதல் தளம் மற்றும் குறளோவியம் என்ற பெயரில் உருவாக்கப்பட்ட ஒலி–ஒளிப் பதிவுக்கூடம் ஆகியவை மாண்புமிகு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் அவர்களால் 07.03.2024 அன்று காணொலி வாயிலாகத் திறந்து வைக்கப்பட்டன.

வருங்கால சாதனைப் பணிகள் 2024–2025

❖ 2025 ஆம் ஆண்டு முதல் ஜனவரித் திங்கள் 25–ஆம் நாளினை "தமிழ்மொழித் தியாகிகள் நாளாக" கடைபிடிக்கப்படும்.

❖ 2025ஆம் ஆண்டு முதல் ஜூன் 3ஆம் நாளினை 'செம்மொழிநாள் விழா'–வாகக் கொண்டாடப்படும்.

❖ முனைவர் ஆறு. அழகப்பன், முனைவர் இராமலிங்கம் (எ) எழில் முதல்வன் மற்றும் நினைவில் வாழும் தமிழறிஞர்களான முனைவர் சோ.சத்தியசீலன், முனைவர் மா.ரா.அரசு, பாவலர் ச.பாலசுந்தரம், முனைவர் க.ப.அறவாணன், முனைவர் க.த.திருநாவுக்கரசு, முனைவர் இரா.குமரவேலன், கவிஞர் கா.வேழவேந்தன் ஆகியோரின் நூல்கள் ரூ. 91 இலட்சத்து 35 ஆயிரம் மதிப்பீட்டில் நாட்டுடைமையாக்கப்படும்.

❖ சிறந்த நூல்களுக்கு பரிசு வழங்கும் திட்டத்தின்கீழ் தெரிவு செய்யப்பெற்ற சிறந்த நூல்களை எழுதிய நூலாசிரியருக்கு ரூ.30 ஆயிரத்திலிருந்து ரூ.50 ஆயிரமாகவும் அந்நூலைப் பதிப்பித்த பதிப்பகத்தாருக்கு ரூ.10 ஆயிரத்திலிருந்து ரூ.25 ஆயிரமாகவும் பரிசுத் தொகை உயர்த்தி வழங்கப்படும்.

❖ கவிஞர் முடியரசன் அவர்களுக்கு சிவகங்கை மாவட்டத்தில் ரூபாய் 50 இலட்சம் செலவில் திருவுருவச் சிலை நிறுவப்படும்.

❖ தமிழினத் தலைவர் என்று தமிழ்நாடு மட்டுமன்றி உலகெங்கிலும் உள்ள தமிழர்களால் அன்பாக அழைக்கப்படும் தமிழ்நாடு அரசின் முன்னாள் முதலமைச்சர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் தமிழ்த் தொண்டினைப் போற்றும் வகையில் புதிய விருது ஆண்டுதோறும் வழங்கப்படும்.

❖ சண்டிகர் தமிழ் மன்றத்தின் கட்டட விரிவாக்கப் பணிகளுக்கு ரூபாய் 50 இலட்சம் நிதியுதவி வழங்கப்படும்.

❖ டெல்லி தமிழ்ச் சங்கத்தின் கலையரங்கத்தினைப் புனரமைக்க ரூ. 50 இலட்சம் வழங்கப்படும்.

❖ உலக மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்ட தமிழின் மிகச்சிறந்த நூல்களை உலகின் தலைசிறந்த 100 பல்கலைக் கழகங்களிலும், புகழ்பெற்ற நூலகங்களிலும் இடம்பெறச் செய்ய இவ்வாண்டு முதல் நடவடிக்கை எடுக்கப்படும். இம்முயற்சிக்கு ரூபாய் 2 கோடி நிதி ஒதுக்கப்படும்.

❖ கனவு இல்லம் திட்டத்தின் நீட்சியாக, தமிழில் சிறந்த மொழி பெயர்ப்பு நூலுக்கான சாகித்திய அகாதெமி மொழிபெயர்ப்பாளர் விருது பெற்ற தமிழ்நாட்டில் வசிக்கும் விருதாளர்களுக்கு தமிழ்நாடு அரசால் வீடு வழங்கிட ஆணையிடப்பட்டுள்ளது.

செய்தி மக்கள் தொடர்புத்துறை

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் செயல்படுத்தும் திட்டங்கள், அறிவிப்புகள், ஆணைகள், செய்தி வெளியீடுகள், அறிக்கைகள், கடிதங்கள், வேண்டுகோள்கள் முதலிய அனைத்தையும் மக்களுக்கு உடனுக்குடன் கொண்டுசென்று சேர்த்திடும் அரும்பணியைத் தமிழ்நாடு அரசின் செய்தி மற்றும் விளம்பரத் துறை சிறப்பாக நிறைவேற்றி வருகிறது.

பணிகளை துரிதப்படுத்திட மண்டலம் வாரியாக இணை இயக்குநர்கள் நியமனம்

செய்தி மக்கள் தொடர்புத் துறையின் சார்பில் மாவட்டங்களில் அரசின் பல்வேறு நலத்திட்டங்களை மக்களிடம் துரிதமாக கொண்டு சேர்க்கவும், மாவட்டங்களில் மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகளை கண்காணிக்கவும் 6 மண்டலங்களாக (சென்னை, கோயம்புத்தூர், திருச்சி, திருநெல்வேலி, மதுரை மற்றும் தஞ்சாவூர்) பிரிக்கப்பட்டு, அவற்றை சுற்றியுள்ள மாவட்டங்களை ஒருங்கிணைத்து செயல்பட ஏதுவாக செய்தி மக்கள் தொடர்புத் துறையில் பணிபுரியும் 6 இணை இயக்குநர்களை கூடுதலாக மண்டல இணை இயக்குநர் பணிகளை மேற்கொள்ள ஆணையிடப்பட்டதை தொடர்ந்து, பணிகள் கண்காணிக்கப்பட்டு துரிதப்பட்டு வருகின்றன.

நினைவகங்கள்

- இந்தியாவில் வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத வகையில், விடுதலைப் போராட்ட தியாகிகள், மொழிப்போர் தியாகிகள், மிகச்சிறந்த ஆளுமை மிக்க தலைவர்கள், தமிழ் வளர்ச்சிக்கு அரும்பாடுபட்ட அறிஞர் பெருமக்கள், இசை மேதைகள் ஆகியோர்களின் நினைவுகளை போற்றிப் பெருமைப் படுத்துகின்ற வகையில், அரசின் சார்பில் நினைவகங்கள், அரங்கங்கள், நினைவுத் தூண்கள் ஆகியன அமைக்கப்பட்டுள்ளன.



- தமிழ்நாடு முழுவதும் 88 நினைவகங்கள், 4 அரங்கங்கள், 5 நினைவுத் தூண்கள், 1 நினைவுச் சின்னம் ஆகியன அமைக்கப்பட்டு, சிறந்த முறையில் பராமரிக்கப்பட்டும் வருகின்றன.
- கடந்த 3 ஆண்டுகளில் 9 புதிய மணி மண்டபங்கள் / அரங்கங்களும், 22 புதிய திருவுருவச் சிலைகளும் 121 கோடியே 77 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ளன.
- தமிழ்நாட்டின் ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள விடுதலைப்போர் தியாகிகளுக்கும் மொழிப்போர் தியாகிகளுக்கும் செய்தி மக்கள் தொடர்புத்துறையால் அமைக்கப்பட்ட நினைவகங்கள், அரங்கங்கள், நினைவுத் தூண்கள், நினைவுச் சின்னங்கள் பற்றிய மாவட்ட அளவிலான காலப்பேழை புத்தகம் தயார் செய்யப்பட்டு அந்தந்த மாவட்ட நினைவகங்களில் வைக்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்புகள்

- உலகமே வியந்து போற்றுகின்ற வகையில், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுக்கு சென்னை மெரினா கடற்கரையில் அமைந்துள்ள அண்ணா நினைவிட வளாகத்தில் 2.21 ஏக்கர் பரப்பளவில்நவீன விளக்கப்படங்களுடன் கூடிய நினைவிடம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டு, பொதுமக்களைப் பெரிதும் கவர்ந்துள்ளது. நாளது வரையில், அந்நினைவிடத்தினை 21,55,406 எண்ணிக்கையிலான பொதுமக்கள் கண்டு களித்துள்ளனர்.
- முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுக்குப் பெருமை சேர்க்கின்ற வகையில், சென்னை அண்ணா சாலையில், அரசினர் தோட்டம், ஓமந்தூரார் மருத்துவமனை வளாகத்தில் 1 கோடியே 70 இலட்சம் ரூபாய் செலவில் பிரம்மாண்டமான திருவுருவச் சிலை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.
- கரிசல் இலக்கியத்தை உலகறியச் செய்த பிதாமகர் மறைந்த எழுத்தாளர் கி.ராஜநாராயணன் அவர்களுக்கு, தூத்துக்குடி மாவட்டம் கோவில்பட்டியில்1கோடியே 51 இலட்சம் ரூபாய் செலவில் திருவுருவச்சிலையும், நூலகத்துடன் கூடிய நினைவரங்கமும் அமைக்கப்பட்டுள்ளன.
- மகாகவி பாரதியாரின் நூற்றாண்டு நினைவாக,உத்தரப்பிரதேச மாநிலம் காசியில் பாரதியார் வாழ்ந்த வீடு தமிழக அரசின் சார்பில் 18 இலட்சம் ரூபாய் செலவில் புனரமைக்கப்பட்டு அன்னாரின் மார்பளவு சிலையும் அமைக்கப்பட்டுள்ளது.
- நவீன தூத்துக்குடியின் தந்தை எனப் போற்றப்படும் ராவ்பகதூர் குரூஸ் பர்னாந்தீஸ் அவர்களுக்கு தூத்துக்குடி மாவட்டம், எம்.ஜி,ஆர். பூங்காவில் 77 இலட்சத்து 87 ஆயிரம்ரூபாய் செலவில் குவிமாடத்துடன் கூடியதிருவுருவச்சிலை அமைக்கப்பட்டுள்ளது.
- கப்பலோட்டிய தமிழன் வ.உ.சிதம்பரனார் வாழ்ந்த தூத்துக்குடி மாவட்டம் ஒட்டப்பிடாரத்தில் அமைந்துள்ள நினைவு இல்லம் 2 இலட்சத்து 50 ஆயிரம்ரூபாய் செலவில் புனரமைக்கப்பட்டுள்ளது.
- திருநெல்வேலியில் உள்ள வ.உ.சிதம்பரனார் மணிமண்டபத்தில் புனரமைப்பு பணிகளும், அன்னாரின் வாழ்க்கை வரலாற்றை அனைவரும் அறிந்து பயனடையும் வகையில், ஒலி–ஒளிக் காட்சி அமைப்புகள் 73 இலட்சத்து 20 ஆயிரம்ரூபாய் செலவில் ஏற்படுத்தப்பட்டுள்ளன.
- கோயம்புத்தூர் வ.உ.சிதம்பரனார் பூங்காவில், கப்பலோட்டிய தமிழன் வ.உ.சிதம்பரனார் அவர்களுக்கு 40 இலட்சம் செலவில் ரூபாய் திருவுருவச் சிலை அமைக்கப்பட்டுள்ளது.
- முல்லை பெரியாறு அணை அமைத்திட தன் வாழ்வை அர்ப்பணித்த கர்னல் ஜான் பென்னிகுயிக் அவர்களுக்கு பெருமை சேர்க்கும் வகையில் இங்கிலாந்து நாட்டில்அவர் பிறந்த ஊரான கேம்பர்ளி நகரில் அன்னாருக்கு மார்பளவுச் சிலை 33 இலட்சத்து 66 ஆயிரம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ளது.
- முன்னாள் இந்தியப் பிரதமரும், சமூகநீதிக்காவலருமான திரு. வி.பி.சிங் அவர்களுக்கு சென்னை மாநிலக் கல்லூரி வளாகத்தில் 52இலட்சத்து 20 ஆயிரம் ரூபாய் செலவில் திருவுருவச் சிலை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.



- ஆங்கிலேயர்களின் எதேச்சதிகார சட்டத்தை எதிர்த்து போராடியதால் 1920ஆம் ஆண்டு மதுரை மாவட்டம் உசிலம்பட்டி, பெருங்காமநல்லூரில் ஆங்கிலேயர்களால் சுட்டுக் கொல்லப்பட்ட 16 தியாகிகளை கௌரவிக்கும் வகையிலும், அந்நிகழ்வு நடந்து 100 ஆண்டுகள் ஆனதைக் குறிக்கும் வகையிலும், மதுரை மாவட்டம் உசிலம்பட்டி, பெருங்காமநல்லூரில் 1 கோடியே 47 இலட்சம் ரூபாய் செலவில் தியாகிகள் நினைவு மண்டபம் அமைக்கப்பட்டுள்ளது.

- தூத்துக்குடி மாவட்டம், கவர்னகிரியி வீரன் சுந்தரலிங்கம்அவர்கள் நினைவாகக் கட்டப்பட்டுள்ள மணிமண்டபத்தில், ஏற்கனவே நிறுவப்பட்டுள்ள மார்பளவு சிலையை மாற்றி, குதிரையில் அமர்ந்து போர்புரிவது போன்று கம்பீர தோற்றத்துடன்கூடியபுதிய சிலை 48 இலட்சத்து 66 ஆயிரம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ளது.

- தமிழ் அகராதியின் தந்தை என போற்றப்படும் வீரமாமுனிவருக்கு தூத்துக்குடி மாவட்டம், காமநாயக்கன்பட்டி கிராமம், புனித பரலோக மாதா ஆலய வளாகத்தில் 1 கோடி ரூபாய் செலவில் திருவுருவச் சிலையுடன் கூடிய மணிமண்டபம் அமைக்கப்பட்டுள்ளது.

- பேரரசர் பெரும்பிடுகு முத்தரையர், நீதிக்கட்சியின் வைரத்தூண் என்று அழைக்கப்பட்ட சர்.ஏ.டி. பன்னீர்செல்வம், எம்.கே. தியாகராஜ பாகவதர் ஆகியோருக்கு திருச்சிராப்பள்ளி மாநகரின் மத்திய பேருந்து நிலையம் அருகில் 4 கோடியே 3 இலட்சம்ரூபாய் செலவில் திருவுருவச் சிலையுடன் கூடிய மணிமண்டபங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

- திவான் பகதூர் திராவிடமணி இரட்டைமலை சீனிவாசன் அவர்களுக்கு செங்கல்பட்டு மாவட்டம், அச்சிரப்பாக்கத்தில் 2 கோடியே 18 இலட்சம்ரூபாய் செலவில்

திருவுருவச் சிலையுடன் கூடிய மணிமண்டபம் அமைக்கப்பட்டுள்ளது.

- விழுப்புரம் மாவட்டம், வழுதரெட்டி கிராமத்தில் 1987ஆம் ஆண்டு இடஒதுக்கீட்டுப் போராட்டத்தில் காவல்துறையின் துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியான 21 சமூகநீதிப் போராளிகளுக்கு 5 கோடியே 70 இலட்சம்ரூபாய்செலவில் மணிமண்டபமும், ஏழை எளியோரின் வாழ்க்கை முன்னேற்றத்திற்குப் பெரும் பங்காற்றி மறைந்த தனிப்பெரும் தலைவரும், முன்னாள் அமைச்சருமான திரு.ஏ.கோவிந்தசாமி அவர்களுக்கு 4 கோடி ரூபாய் மதிப்பீட்டில்திருவுருவச் சிலையுடன் கூடிய அரங்கமும் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

- புதுக்கோட்டை மன்னர் ராஜகோபால தொண்டைமான் அவர்களின் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு புதுக்கோட்டை நகரில்மன்னர் ராஜகோபால தொண்டைமான் அவர்களுக்கு 3 கோடியே 2 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அருங்காட்சியகத்துடன் கூடிய நினைவு மணிமண்டபம் அமைத்திட பூர்வாங்கப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

- திருவிதாங்கூர் சமஸ்தானத்தில் உள்ள வைக்கம் என்ற ஊரில் தீண்டாமைக்கு எதிராக உத்தமர் காந்தியடிகளின் அழைப்பினை ஏற்று, தந்தை பெரியார் அவர்களால் தலைமையேற்று நடத்தப்பட்டவைக்கம் போராட்டத்தின் நூற்றாண்டு விழாவினைச் சிறப்பிக்கும் வகையில் கேரள மாநிலம் வைக்கத்தில் உள்ள தந்தை பெரியார் நினைவிடத்தினை 8 கோடியே 14 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில்மிகப்பிரம்மாண்டமான அளவில் மேம்படுத்திடும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

- ஒடுக்கப்பட்ட சமூக மக்களின் ஒளி விளக்காக மட்டுமல்ல, நெறிசார்ந்த அரசியலின் அடையாளமாகவும் விளங்கிய அய்யா இளையபெருமாள் அவர்களின் நூற்றாண்டினைப் போற்றும் வகையில், கடலூர் மாவட்டம், சிதம்பரத்தில் 5 கோடியே 70 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் சிலையுடன் கூடிய நினைவரங்கம் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

- சிங்கப்பூரின்முதல்பிரதமர்மறைந்தலீகுவான் யூ அவர்களுக்கு திருவாரூர்மாவட்டம், மன்னார்குடியில் 50 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் திருவுருவச்சிலை அமைத்திடபூர்வாங்கப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

- தியாகி இம்மானுவேல் சேகரனார் அவர்களுக்கு இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடியில் 3 கோடி ரூபாய் மதிப்பீட்டில்திருவுருவச் சிலையுடன் கூடிய அரங்கம் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

- இராமநாதபுரம் மாவட்டம் பசும்பொன் கிராமத்தில் அமைந்துள்ள பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் நினைவிடத்தில் 1கோடியே 55 இலட்சம்ரூபாய் மதிப்பீட்டில் பொதுமக்களுக்கான காத்திருப்புக் கூடம் மற்றும் வழித்தடத்தில் நிரந்தரக் கொட்டகைஅமைக்கும்ப ணிகள் நடைபெற்று வருகின்றன.

- சுதந்திரப் போராட்ட காலத்தில் உத்தமர் காந்தியடிகள், பொதுவுடைமை வீரர் ஜீவாவுடன் சந்தித்து பேசிய சிவகங்கை மாவட்டம், சிராவயல் கிராமத்தில் அச்சந்திப்பு நினைவாக 3 கோடி ரூபாய் மதிப்பீட்டில்அரங்கம் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

- பேராசிரியர் க.அன்பழகனார் அவர்களுக்குப் பெருமைச் சேர்க்கின்ற வகையில், தமிழ்நாடு அரசின் பள்ளிக் கல்வித் துறை செயல்படும் சென்னை நுங்கம்பாக்கத்தில் உள்ள பேராசிரியர் அன்பழகனார் வளாகத்தில் 37 இலட்சத்து 20 ஆயிரம் ரூபாய் செலவில் திருவுருவச்சிலை அமைக்கப்பட்டுள்ளது.

- தமிழக அரசின் முதல் அரசவைக் கவிஞரும் தேசியப் போராட்டத் தியாகி, உப்புச் சத்தியாகிரகப் போராட்டத்தின் வழிநடைப்



பாடல் ஆசிரியருமான நாமக்கல் கவிஞர் இராமலிங்கம் பிள்ளை அவர்களுக்கு நாமக்கல் நகரில் உள்ள அன்னாரது நினைவு இல்லத்தில் 20 இலட்சம் ரூபாய் செலவில் மார்பளவு சிலை அமைக்கப்பட்டுள்ளது.

கடந்த 3 ஆண்டுகளில் முடிவுற்ற மற்றும் பணிகள் நடைபெற்று வரும் அறிவிப்புகள்

- இருபதாம் நூற்றாண்டின் புகழ்பெற்ற தமிழறிஞர்களில் ஒருவரும், பன்முக ஆற்றல் கொண்ட தமிழறிஞர்டாக்டர் மு.வரதராசனார் அவர்களுக்கு இராணிப்பேட்டை மாவட்டத்தில் 65 இலட்சத்து 76 ஆயிரம்ரூபாய் செலவில் திருவுருவச் சிலையுடன் கூடிய குவிமாட அரங்கம் அமைக்கப்பட்டுள்ளது.

- செய்தி மக்கள் தொடர்புத் துறையின் கட்டுப்பாட்டிலுள்ள மணிமண்டபங்களில் அமர்ந்து போட்டித் தேர்வுக்கு தயார் செய்யும் மாணவர்களின் வசதிக்காக முதற்கட்டமாக 10 மணிமண்டபங்களில் (தியாகி சுப்பிரமணிய சிவா மணிமண்டபம், தருமபுரி, மொழிஞாயிறு தேவநேயபாவாணர் மணிமண்டபம், மதுரை, தமிழிசை மூவர் மணிமண்டபம், மயிலாடுதுறை, பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் மணிமண்டபம், தஞ்சாவூர், தமிழ்த்தாத்தா டாக்டர் உ.வே.சா.நினைவு இல்லம், திருவாரூர், மகாகவி பாரதியார் மணிமண்டபம், தூத்துக்குடி, கப்பலோட்டிய தமிழன் வ.உ.சி.மணிமண்டபம், திருநெல்வேலி, இராமசாமி படையாச்சியார் மணிமண்டபம், கடலூர், பகுத்தறிவுக் கவிராயர் உடுமலை நாராயணகவி மண்டபம், உடுமலைப்பேட்டை திருப்பூர், சுவாமி சகஜானந்தா மண்டபம், சிதம்பரம்) அடிப்படை வசதிகள் 1 கோடி ரூபாய் செலவில் மேம்படுத்தப்பட்டுள்ளன.

- சென்னை இராஜா அண்ணாமலைபுரம், டாக்டர் டி.ஜி.எஸ். தினகரன் சாலையில் உள்ள பொதுப்பணித்துறையின் கட்டுப்பாட்டில் உள்ள அண்ணல் அம்பேத்கர் மணிமண்டபத்தினையும், அம்மணிமண்டப வளாகத்தில் உள்ள நூலகத்தையும் 13.10.2023 அன்று செய்தி மக்கள் தொடர்புத் துறையின் வசம் ஒப்படைக்கப்பட்டு, அவ்வளாகத்தில் அன்னாருடைய திருவுருவச் சிலை அமைக்கப்பட்டுள்ளது.

- சென்னை காந்தி மண்டபத்தில் உள்ள கப்பலோட்டிய தமிழன் வ.உ.சிதம்பரனார் கோயம்புத்தூர் சிறையில் இழுத்த செக்கு வைக்கப்பட்டுள்ள மண்டபம் 43 இலட்சத்து 42 ஆயிரம் ரூபாய் செலவில் பொலிவூட்டப்பட்டு, அங்கு அன்னாரது மார்பளவு சிலையும் அமைக்கப்பட்டுள்ளது.

- தமிழ்நாட்டில் ஆங்கிலேயர்களின் ஆட்சியினை எதிர்த்து தீரமாய்ப் போரிட்டு தூக்குக் கயிற்றினை ஏற்றுக்கொண்ட விடுதலைப் போராட்ட மாவீரர் வீரபாண்டிய கட்டபொம்மன் அவர்களுக்கு சென்னை கிண்டி காந்தி மண்டப வளாகத்தில்

18 இலட்சம் ரூபாய் செலவில் திருவுருவச் சிலை அமைக்கப்பட்டுள்ளது.

❖ தாய்நாட்டின் விடுதலைக்காக ஆங்கிலேயர்களை எதிர்த்து விடுதலை வேள்வியில் தீர்க்கமாய்ப் போரிட்ட சிவகங்கைச் சீமையை ஆண்ட மருது சகோதரர்களுக்குசென்னை கிண்டி காந்தி மண்டப வளாகத்தில் 34 இலட்சம் ரூபாய்செலவில் திருவுருவச் சிலை அமைக்கப்பட்டுள்ளது.

❖ தென்னிந்தியாவின் ஜான்சிராணி என்று அழைக்கப்பட்ட சுதந்திரப் போராட்ட வீராங்கனை அஞ்சலை அம்மாள்அவர்களுக்கு கடலூர் மாவட்டம், மாநகராட்சி முதுநகர் காந்தி பூங்காவில் 25 இலட்சம் ரூபாய் செலவில் திருவுருவச் சிலை அமைக்கப்பட்டுள்ளது.

❖ இந்தியாவின் தலைசிறந்த விஞ்ஞானியாகவும், இளைஞர்கள் மற்றும் மாணவர்களின் எழுச்சி நாயகனாகவும் திகழ்ந்த முன்னாள் குடியரசுத் தலைவர் டாக்டர் ஏ.பி.ஜே.அப்துல் கலாம் அவர்களுக்கு, சென்னை அண்ணா பல்கலைக்கழக வளாகத்தில் 21 இலட்சத்து 95 ஆயிரம் ரூபாய் செலவில் திருவுருவச் சிலை அமைக்கப்பட்டுள்ளது.

❖ இலக்கியத்திற்கான நோபல் பரிசு பெற்றவரும், இந்தியத் திருநாட்டின் தேசிய கீதத்தை இயற்றியவருமான வங்கக் கவி இரவீந்திரநாத் தாகூர் அவர்களுக்கு சென்னை இராணி மேரி கல்லூரி வளாகத்தில் 29 இலட்சத்து 62 ஆயிரம் ரூபாய் செலவில் திருவுருவச் சிலை அமைக்கப்பட்டுள்ளது.

❖ பெண் சமூகச் சீர்திருத்தவாதியும், எழுத்தாளர், தேவதாசி ஒழிப்பு இயக்க மற்றும் திராவிட இயக்கத்தின் அரசியல் முன்னோடியுமான மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் அவர்களுக்கு மயிலாடுதுறையில் 15 இலட்சத்து 97 ஆயிரம் ரூபாய் செலவில் வெண்கல திருவுருவச் சிலை அமைக்கப்பட்டுள்ளது.



❖ இந்தியாவின் முதல் பெண் சட்டப்பேரவை உறுப்பினரும், இந்தியப் பெண்கள் சங்கத்தின் முதல் தலைவரும் தமிழ்நாட்டின் சமூக சீர்திருத்தப் பெண் மருத்துவருமான டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி அம்மையாருக்கு புதுக்கோட்டையில் 9இலட்சத்து 84 ஆயிரம் ரூபாய் செலவில் திருவுருவச் சிலை அமைக்கப்பட்டுள்ளது.

❖ திராவிட இயக்கத் தளகர்த்தர்களில் முன்னோடியாகவும், தலைசிறந்த இலக்கியவாதியும் முன்னாள் நிதி அமைச்சருமான நடமாடும் பல்கலைக்கழகம் மறைந்த நாவலர் இரா.நெடுஞ்செழியன் அவர்களைச் சிறப்பிக்கும் வகையில் சென்னை, சேப்பாக்கம் அரசு விருந்தினர் மாளிகை வளாகத்தில், 9இலட்சத்து 50 ஆயிரம்ரூபாய் செலவில் மார்பளவு வெண்கலச் சிலை அமைக்கப்பட்டுள்ளது.

❖ பிரபல பின்னணிப் பாடகர்பத்மஸ்ரீ டி.எம். சௌந்தரராஜன் அவர்களின் 100–வது பிறந்த தினத்தை முன்னிட்டு, அன்னாருக்கு மதுரை மாநகரில் 46 இலட்சத்து 68 ஆயிரம்ரூபாய் செலவில் திருவுருவச் சிலை அமைக்கப்பட்டுள்ளது.

❖ திராவிடப் பேரொளி பண்டிதர் அயோத்திதாசர் அவர்களின் 175வது ஆண்டு விழாவின்

நினைவாக, அன்னாருக்கு சென்னை கிண்டி காந்தி மண்டப வளாகத்தில் 2 கோடியே 48 இலட்சம் ரூபாய் செலவில் திருவுருவச் சிலையுடன் கூடிய மணிமண்டபம் அமைக்கப்பட்டுள்ளது.

❖ சுதந்திரப் போரட்ட வீரர்கள், மொழிப்போர்த் தியாகிகள், தமிழ் அறிஞர்கள், முக்கியத் தலைவர்களின் மணிமண்டபங்கள், நினைவகங்கள், அரங்கங்களில் 1 கோடியே 25 இலட்சம் ரூபாய் செலவில் 360 டிகிரி புகைப்படம் எடுக்கப்பட்டு வலைதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது. விரைவுத் துலங்கல் குறியீடும் (QR Code) பொருத்தப்பட்டுள்ளது, அத்தலைவர்களின் வாழ்க்கை வரலாறு, ஒளிப்படத்தொகுப்புகள் (Photo Album) புத்தகங்கள் காட்சியகப்படுத்தப்பட்டும், 15 மணிமண்டபங்களில் அகண்ட திரைத் தொலைக்காட்சி அமைக்கப்பட்டு குறும்படங்கள் ஒளிபரப்பபட்டு வருகிறது. அப்பணிகளில் முதற்கட்டமாக சென்னை மெரினா கடற்கரைச் சாலையில் அமைந்துள்ள அய்யன் திருவள்ளுவர் சிலையில்விரைவுத் துலங்கல் குறியீடு (QR Code) பொருத்தப்பட்டு மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்களால்தொடக்க விழா சிறப்பாக நடத்தப்பட்டது.

❖ தமிழ் மொழி மீது தீராத பற்று கொண்டு, வடமொழிப் பெயர்களைத் தமிழ்ப்படுத்தியவரும், சுதந்திரப் போராட்ட வீரருமான கு.மு.அண்ணல் தங்கோ அவர்களுக்கு வேலூர் மாவட்டம், குடியாத்தத்தில் 50 இலட்சம்ரூபாய்செலவில் திருவுருவச் சிலை அமைக்கப்பட்டுள்ளது.

❖ இந்தியத் திருநாட்டின் 75ஆவது சுதந்திர திருநாள் அமுதப் பெருவிழாவினை முன்னிட்டு விடுதலைப் போராட்ட வீரர்களின் நினைவிடங்களை மேம்படுத்தி, 6 நினைவிடங்களில் (தியாகி சுப்பிரமணிய சிவா மணிமண்டபம், தருமபுரி, சுதந்திரப் போராட்ட தியாகி கொடிகாத்த குமரன் நினைவகம், திருப்பூர், வீரமங்கை வேலுநாச்சியார் நினைவு மண்டபம், சிவகங்கை, மகாகவி பாரதியார் மணிமண்டபம், தூத்துக்குடி, இராமசாமி படையாட்சியர் மணிமண்டபம், கடலூர், காமராஜர் நூற்றாண்டு மணிமண்டபம், விருதுநகர்)ஒலி–ஒளிக்காட்சி அமைப்புகள் 33இலட்சத்து 45 ஆயிரம்ரூபாய் செலவில் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

❖ சென்னை காந்தி மண்டப வளாகத்தில் அமைந்துள்ள காந்தி அருங்காட்சியகம், பெருந்தலைவர் காமராஜர் நினைவுமண்டபம், பெரியவர் பக்தவத்சலம் நினைவுமண்டபம், மூதறிஞர் இராஜாஜி நினைவுமண்டபம் ஆகியவை 3கோடியே 36 இலட்சம்ரூபாய் செலவில் மேம்படுத்தப்பட்டுள்ளன.

❖ தருமபுரி மாவட்டத்தில் உள்ள வள்ளல் அதியமான் கோட்டம் 98 இலட்சத்து 75 ஆயிரம் ரூபாய் செலவில் நவீன முறையில் புனரமைக்கப்பட்டுள்ளது.

❖ தமிழில் முதல் நாவல் எழுதிய மாயூரம் முன்சீப் வேதநாயகம் அவர்களுக்கு மயிலாடுதுறையில் 3 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சிலையுடன் கூடிய அரங்கம் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

❖ சுதந்திரப் போராட்ட வீரர் தளி பாளையக்காரர் மலையாண்டி வெங்கிடுபதி எத்தலப்ப நாயக்கர் அவர்களுக்கு திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை நகராட்சி அலுவலக வளாகத்தில் திருவுருவச் சிலையும், திருமூர்த்தி அணை அருகில் அரங்கமும் அமைத்திட 2 கோடியே 53 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் பணிகள் நடைபெற்று வருகின்றன.

❖ பரம்பிக்குளம் ஆழியாறு பாசனத் திட்டப்பணிகளின்போது (P.A.P–Parambikulam Aliyar Project) எதிர்பாராமல் ஏற்பட்ட விபத்தில் உயிர்நீத்தவர்களுக்கான நினைவு மண்டபம்கோயம்புத்தூர் மாவட்டம், ஆழியார் நகரில் 2 கோடியே 30 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

- பொள்ளாச்சியில் செயல்படும் நீர்வளத்துறையின் தலைமைப் பொறியாளர் அலுவலக வளாகத்தில் விவசாயப் பெருமக்களுக்குப் பயிற்சிகள் கருத்தரங்கங்கள் போன்ற நிகழ்ச்சிகள் நடத்திட உதவிடும் வகையில் இரண்டு அடுக்குகள் கொண்ட புதிய அரங்கமும், மேனாள் சட்டமன்ற உறுப்பினர், வி.கே.பழனிசாமி கவுண்டர், மேனாள் அமைச்சர் சி.சுப்பிரமணியம், மேனாள் சட்டமன்ற உறுப்பினர் தொழிலதிபர் பொள்ளாச்சி நா.மகாலிங்கம், ஆகியோருக்குத் திருவுருவச் சிலைகள் நிறுவிடும் பணிகளும்4கோடியே 28 இலட்சம் ரூபாய் செலவில் நடைபெற்று வருகின்றன.

- தமிழுக்கும், தமிழக மக்களுக்கும் அயராது உழைத்தவரும், சமூகநீதிக் கோட்பாடுகளுக்காகச் சட்டவடிவம் கொடுத்தவருமான, சென்னை மாகாணத்தின் முன்னாள் முதலமைச்சர் டாக்டர் ப.சுப்பராயன் அவர்களுக்கு சென்னை காந்தி மண்டபத்தில்17 இலட்சத்து 50 ஆயிரம்ரூபாய் செலவில் திருவுருவச் சிலை அமைக்கப்பட்டுள்ளது. மேலும், நாமக்கல் நகரில் அன்னாரின் பெயரில் 2 கோடியே 50 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் சிலையுடன் கூடிய அரங்கம் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

- கீழ்பவானி பாசனத் திட்டம் கொண்டுவர முக்கியக் காரணகர்த்தாவாக இருந்த ஈரோடு தொகுதியின் மேனாள்சட்டமன்ற உறுப்பினரும், சுதந்திரப் போராட்ட வீரருமான உத்தமத் தியாகி ஐயா திரு.ஈஸ்வரன்அவர்களுக்கு 2 கோடியே 60 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் ஈரோடு மாவட்டம் சத்தியமங்கலத்தில் திருவுருவச் சிலையுடன் கூடிய அரங்கம் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

- வள்ளுவத்தையும், வள்ளுவரையும் பொதுமக்களுக்கு கொண்டு செல்லும் விதமாக,முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் கை வண்ணத்தில் உருவான சென்னைவள்ளுவர் கோட்டத்தினை இக்காலச்சூழலுக்கு ஏற்றவாறு அதிநவீன முறையில் காட்சிப்படுத்திட 80 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புனரமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

- மன்னர் பூலித்தேவர் படையின் முக்கியத் தளபதியாக இருந்தவரும், சுதந்திரப் போராட்ட வீரருமான வெண்ணி காலாடி அவர்களுக்கு தென்காசி மாவட்டத்தில் 50 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் திருவுருவச் சிலை அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

- சுதந்திரப் போராட்ட வீராங்கனை வீரமங்கை வேலுநாச்சியாருக்குப் பெருந்துணையாக நின்று தன் உடலில் வெடிகுண்டுகளைக் கட்டிக் கொண்டு வெள்ளையர்களின் ஆயுதக் கிடங்கில் குதித்து அதைத் தகர்த்துத் தன்னுயிரைத் தியாகம் செய்த வீராங்கனை குயிலி அவர்களுக்குச் சிவகங்கை மாவட்டத்தில் திருவுருவச் சிலை 50 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது.

- இந்தியச் சுதந்திரத்திற்காக ஆங்கிலேயரை எதிர்த்துப் போராடி தன் உயிரைத் துறந்தவருமான தியாகிகொடிகாத்த குமரன் அவர்களுக்கு ஈரோடு மாவட்டம், சென்னிமலையில் திருவுருவச் சிலையுடன் கூடிய அரங்கம் 3 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைத்திட பூர்வாங்க பணிகள் நடைபெற்று வருகின்றன.

- தமிழ் மொழிமீது தீராத பற்று கொண்டு, இந்தித் திணிப்பினை எதிர்த்துப் போராடி முதன் முதலில் உயிர்த் தியாகம் செய்த கீழப்பழுவூர் சின்னச்சாமி அவர்களுக்கு அரியலூர் மாவட்டத்தில் திருவுருவச் சிலையுடன் கூடிய அரங்கம் 3 கோடிரூபாய்மதிப்பீட்டில் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

- வீரமங்கை வேலுநாச்சியார் மற்றும் மாமன்னர் மருது சகோதரர்களுடன் சேர்ந்து ஆங்கிலேயருக்கு எதிராகப் போராடிய சுதந்திரப் போராட்ட வீரர் "வாளுக்குவேலி

அம்பலம்" அவர்களுக்குச் சிவகங்கை மாவட்டத்தில் திருவுருவச் சிலை 50 இலட்சம் ரூபாய்மதிப்பீட்டில் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

பிற பணிகள்

- முத்தமிழ் கலைஞர் அவர்களால் கடந்த 2000ஆம் ஆண்டு அறிவிக்கப்பட்டு, 2010ஆம் ஆண்டு திறந்து வைக்கப்பட்ட தமிழிசை மும்மூர்த்திகளான முத்துத் தாண்டவர், அருணாசலக் கவிராயர் மற்றும் மாரிமுத்தாப் பிள்ளை ஆகியோரின் நினைவினை போற்றிடும் வகையில் மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழியில் அமைக்கப்பட்டுள்ள தமிழிசை மூவர் மணிமண்டபம் 47 இலட்சம் ரூபாய் செலவில் புதுப்பிக்கப்பட்டுள்ளன.
- சென்னை காமராஜர் சாலையில் உள்ளடாக்டர் ஜெ ஜெயலலிதா வளாகத்தில் நிறுவப்பட்டுள்ள மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் ஜெ.ஜெயலலிதா அவர்களின் திருவுருவச்சிலை 04.02.2022 அன்று செய்தி மக்கள் தொடர்புத் துறை வசம் ஒப்படைக்கப்பட்டது.
- செய்தி மக்கள் தொடர்புத் துறையின் வரலாற்றில்முதன் முறையாக, துறையால் பராமரிக்கப்பட்டு வரும் மணிமண்டபங்கள், நினைவகங்கள், அரங்கங்கள், நினைவுத்தூண்கள் மற்றும் நினைவுச் சின்னங்கள் ஆகியவை குறித்த விவரங்கள் மற்றும் புகைப்படங்களுடன் அடங்கிய நவீன முறையில் வடிவமைக்கப்பட்ட காலப்பேழை புத்தகமானது மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர், மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மற்றும் முக்கியப் பிரமுகர்களுக்கு வழங்கி சிறப்பிக்கப்பட்ட இந்த காலப்பேழை புத்தகமானது மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் பெரிதும் பாராட்டப்பட்டது.
- சென்னை இராஜா அண்ணாமலைபுரத்தில் அமைந்துள்ள நடிகர் திலகம் சிவாஜி கணேசன் மணிமண்டபத்தின் கிழக்கு முன்வாயில் பகுதியில், அன்னாருக்கு 39 இலட்சத்து 75 ஆயிரம் ரூபாய் செலவில் புதிய திருவுருவச் சிலை அமைக்கப்பட்டது.
- நம் நாட்டு விடுதலைக்கு வித்திட்ட சுதந்திரப் போராட்ட வீரர்கள்,தமிழ்நாட்டின் மிகச் சிறந்த ஆளுமைகள், தமிழ் மொழியின் வளர்ச்சிக்கு அரும்பாடுபட்டுப் பெருமையினைத் தேடித் தந்த அறிஞர் பெருமக்கள், சமூக நீதிக் கருத்துகளை வளர்த்த தலைவர்களின் திருவுருவச் சிலைகள் செய்தி மக்கள் தொடர்புத் துறையால் அமைக்கப்பட்டு வருகின்றன. கருப்பு வண்ணத்தில் அமைந்துள்ள அச்சிலைகள் பறவைகளால் அசுத்தம் செய்யப்பட்டு, பொலிவிழந்ததை சரிசெய்யும் பொருட்டு முதற்கட்டமாக, சென்னை மெரினா கடற்கரை காமராஜர் சாலையில் நிறுவப்பட்டுள்ள தலைவர்கள் மற்றும் தமிழறிஞர்களின் 20 திருவுருவச்சிலைகளானது 20 இலட்சத்து 72 ஆயிரம் ரூபாய் செலவில் பொன்நிறம் பூசப்பட்டு புதுபொலிவுடன் காட்சியளிக்கிறது. இது பொதுமக்களிடம் மிகுந்த வரவேற்பை பெற்றுள்ளது.
- சுதந்திரப் போராட்ட வீரர் தீரன் சின்னமலையின் படைத்தளபதி வீரன் பொல்லான் அவர்களுக்கு ஈரோடு மாவட்டத்தில் திருவுருவச் சிலையுடன் கூடிய அரங்கம் அமைத்திட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.
- அனைத்து மாவட்டங்களிலும் பொதுமக்கள் அதிகம் கூடும் இடங்களில் அந்தந்த மாவட்டங்களில் உள்ள மறைந்த சுதந்திரப் போராட்ட தியாகிகள் மற்றும் தமிழ்மொழி பாதுகாவலர்களின் புகைப்படங்கள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

அரசு விழாக்கள்

- விடுதலைப் போராட்ட வீரர்கள், தமிழ் வளர்ச்சிக்காக உழைத்த அறிஞர் பெருமக்கள் மற்றும் சான்றோர் ஆகியோரின் அருமை பெருமைகளைப் போற்றிப் பாராட்டுகின்ற வகையில், அவர்களின் பிறந்த நாட்கள் ஆண்டுதோறும் அரசு விழாக்களாகக் கொண்டாடப்பட்டு வருகின்றன.
- மாநில அளவில் 43 விழாக்களும், மாவட்ட அளவில் 90 விழாக்களும் சிறப்பாகக் கொண்டாடப்பட்டு வருகின்றன.

- கடந்த 3 ஆண்டுகளில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்பேரில், சுதந்திரப் போராட்டத் தியாகிகள், தமிழறிஞர்கள், முன்னாள் பிரதமர்கள், முன்னாள் முதலமைச்சர்கள் ஆகியோரின் பிறந்த நாட்கள் ஆண்டுதோறும் மாநில அளவில் 4 அரசு விழாக்களும், மாவட்டஅளவில் 11 அரசு விழாக்களும் கொண்டாட ஆணையிடப்பட்டுள்ளது.
- கடந்த 3 ஆண்டுகளில் மாநில அளவில், மாண்புமிகு முதலமைச்சர் பங்கேற்கும் விழா ஒன்றிற்குச் செலவினமாக 30,000 ரூபாயிலிருந்து 50,000 ரூபாயாகவும், மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் பங்கேற்கும் விழா ஒன்றிற்குச் செலவினமாக 20,000 ரூபாயிலிருந்து 40,000 ரூபாயாகவும் உயர்த்தி வழங்கப்பட்டுள்ளது.
- மாவட்ட அளவில் நடைபெறும் விழா ஒன்றிற்குச் செலவினமாக 25,000 ரூபாய் உயர்த்தி வழங்கப்பட்டுள்ளது.
- வீரமங்கை வேலுநாச்சியார் அவர்களின் வாழ்க்கை வரலாற்றினை அனைத்து தரப்பு மக்களும் அறிந்து பயனடைகின்ற வகையில், வரலாற்றில் முதன்முறையாக வீரமங்கை வேலுநாச்சியாரின் இசையார்ந்தநாட்டிய நாடகம் செய்தித்துறை, கலைப்பண்பாட்டுத் துறை, இயல்இசை நாடக மன்றம் ஆகிய துறைகளால் ஒருங்கிணைப்பட்டு நடத்தப்பட்டது.
- மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சென்னை கலைவாணர் அரங்கத்தில் 13.08.2022 அன்று நடைபெற்ற விழாவில், இலச்சியினை வெளியிட்டு நாடகத்தை தொடங்கி வைத்து பார்வையிட்டார். மேலும் ஈரோடு, மதுரை, திருச்சிராப்பள்ளி ஆகிய மாவட்டங்களிலும் இந்நாடகம் நடத்தப்பட்டு பொதுமக்களின் பாராட்டுகளைப் பெற்றது.
- திராவிடப் பேரொளி "அயோத்திதாச பண்டிதர்" பிறந்த நாளான மே 20–ஆம் நாள் ஆண்டுதோறும் அரசு விழாவாக கொண்டாடப்பட்டு வருகிறது.
- முன்னாள் பிரதமரும் சமூகநீதிக் காவலருமான மறைந்த வி.பி.சிங் அவர்களின் பிறந்த நாளான ஜூன் 25ஆம் நாள் சென்னையில் ஆண்டுதோறும் அரசு விழாவாகக் கொண்டாடப்பட்டு வருகிறது.
- முத்தமிழறிஞர் கலைஞர் பிறந்துதித்த நாளான ஜூன் 3ஆம் நாள் அரசு விழாவாகக் கொண்டாப்பட்டு வருகிறது.
- ஆங்கிலேயரை எதிர்த்துப் போரிட்ட மாவீரன் "வாளுக்குவேலி அம்பலம்" அவர்களது வீரத்தையும், நினைவையும் போற்றும் வகையில் அன்னாரது பிறந்த நாளான ஜீன் 10–ஆம் நாள் அரசு விழாவாக ஆண்டுதோறும் கொண்டாடப்பட்டு வருகிறது.
- முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழாவில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் வரலாற்று நிகழ்வுகள் குறித்த புகைப்படக் கண்காட்சிகள், கலைநிகழ்ச்சிகள், மேடைநிகழ்ச்சிகள், பட்டிமன்றங்கள், கருத்தரங்கங்கள், கவியரங்கங்கள் ஆகியவை தமிழ்நாடு முழுவதும் சிறப்புற நடத்தப்பட்டன.
- மேலும், மாவட்ட அளவிலான நிகழ்ச்சிகளில் பள்ளிகளில் பேச்சுப்போட்டி, கட்டுரைப் போட்டி, வினாடி–வினா போட்டி, ஓவியப்போட்டி போன்ற நிகழ்ச்சிகளும், இளைஞர்களுக்கான குழுவிளையாட்டுப் போட்டி (கபடி, கால்பந்து, கைப்பந்து) தொடர்ந்து நடத்தப்பட்டு வருகின்றன.
- 75–வது சுதந்திர தின அமுதப் பெருவிழாவினை முன்னிட்டு, சென்னையில் அரசின் பல துறைகளை ஒருங்கிணைத்து மாரத்தான் ஓட்டம், கவிதைப் போட்டி, கட்டுரைப் போட்டி, ஓவியப் போட்டி ஆகிய போட்டிகள் நடத்தப்பட்டு, வெற்றி பெற்ற மாணவர்களுக்குப் பரிசுகளும் வழங்கிச் சிறப்பிக்கப்பட்டன.
- பரம்பிக்குளம் ஆழியாறு பாசனத் திட்டத்தை அன்றைய இந்தியப் பிரதமர் பண்டித ஜவகர்லால் நேரு அவர்கள் தொடங்கி வைத்த நாளான 7.10.1961–ஆம் நாளை "பரம்பிக்குளம் ஆழியாறு பாசனத் திட்ட தினம்" என அறிவித்து, ஆண்டுதோறும்,



இந்நாளில் மேனாள் சட்டமன்ற உறுப்பினர் வி.கே.பழனிசாமி கவுண்டர், முன்னாள் அமைச்சர் சி.சுப்பிரமணியம், மேனாள் சட்டமன்ற உறுப்பினர் தொழிலதிபர் பொள்ளாச்சி நா.மகாலிங்கம் ஆகியோர்களுக்கு இந்நாளில் அரசின் சார்பில் மரியாதை செலுத்தப்பட்டு வருகிறது.

❖ பரம்பிக்குளம் ஆழியாறு அணையினை சிறப்பாகக் கட்டி முடித்த தலைமைப் பொறியாளரான திரு. ஆனந்தராவ் அவர்களுக்கு வால்பாறையில் அமைந்துள்ள திருவுருவச் சிலைக்கு அதே நாளில் மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்படுகிறது.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 03.09.2021 அன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் கப்பலோட்டிய தமிழன் வ.உ.சிதம்பரனார் அவர்களின் 150ஆவது பிறந்த நாள் விழாவினையொட்டி பின்வரும் 14 அறிவிப்புகளின் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டது

❖ சென்னை காந்தி மண்டபத்தில் உள்ள வ.உ.சிதம்பரனார் அவர்கள் சிறையில் இழுத்த செக்கு வைக்கப்பட்டிருக்கக்கூடிய மண்டபம் பொலிவூட்டப்பட்டு அங்கு அன்னாரது மார்பளவு சிலை திறந்து வைக்கப்பட்டது.

❖ தூத்துக்குடி மாநகரில், முதன்மைச் சாலையான மேலபெரிய காட்டன் சாலை, இனி "வ.உ.சிதம்பரனார் சாலை" என அழைக்கப்படும். "வ.உ.சிதம்பரனார் சாலை" என பெயர் சூட்டப்பட்டது.

❖ தனது வாழ்நாளின் முக்கிய நாட்களைக் கோவைச் சிறையிலே வாழ்ந்த கப்பலோட்டிய தமிழன் வ.உ.சிதம்பரனார் அவர்களுடைய திருவுருவச் சிலையானது, கோயம்புத்தூர் வ.உ.சிதம்பரனார் பூங்காவில் அமைக்கப்பட்டுள்ளது.

❖ செய்தித் துறையின் பராமரிப்பிலுள்ள தூத்துக்குடி மாவட்டம் ஒட்டப்பிடாரத்தில் கப்பலோட்டிய தமிழன் வ.உ.சிதம்பரனார் அவர்கள் வாழ்ந்த நினைவு இல்லமும், திருநெல்வேலியில் உள்ள வ.உ.சிதம்பரனார் அவர்களுடைய மணிமண்டபமும் புனரமைக்கப்பட்டு, அவ்விடங்களில் அன்னாரின் வாழ்க்கை வரலாற்றை

அனைவரும் அறிந்து பயனடையும் வகையில் ஒலி–ஒளி காட்சி அமைக்கப்பட்டுள்ளது.

- கப்பலோட்டிய தமிழன் வ.உ.சிதம்பரனார் அவர்கள் வாழ்க்கை வரலாற்றினைச் சித்தரிக்கும் திரைப்படத்தினை இன்றைய இளைய தலைமுறையினர் அறிந்து கொள்ளும் வகையில், நவீன டிஜிட்டல் முறையிலே திரையிடப்பட்டது.
- திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைகழகத்தில் கப்பலோட்டிய தமிழன் வ.உ.சிதம்பரனார் அவர்களின் பெயரில் புதிய ஆய்விருக்கை ஒன்று அமைக்கப்பட உயர்கல்வித் துறையால் நடவடிக்கை எடுக்கப்பட்டது.
- கப்பலோட்டிய தமிழன் வ.உ.சிதம்பரனார் அவர்கள் எழுதியுள்ள அனைத்து புத்தகங்களும் புதுப்பொலிவுடன் புதுப்பிக்கப்பட்டு தமிழ்நாடு பாடநூல் கழகத்தின் மூலம் குறைந்த விலையில் மக்களுக்கு கிடைத்திட பள்ளிக்கல்வித் துறையால் ஏற்பாடு செய்யப்பட்டது.
- திருநெல்வேலியில் கப்பலோட்டிய தமிழன் வ.உ.சிதம்பரனார் மற்றும் மகாகவி பாரதியார் படித்த பள்ளிக்குத் தேவையான கூடுதல் வகுப்பறைகள், கலையரங்கம் மற்றும் நினைவு நுழைவு வாயில் 1.05 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பள்ளிக்கல்வித் துறை / பொதுப்பணித்துறையால் நடவடிக்கை எடுக்கப்பட்டது.
- கப்பல் கட்டுமானம், தொழில்நுட்பம், போக்குவரத்து ஆகிய கப்பல் தொடர்பான துறைகளில் ஈடுபட்டு சிறந்த பங்காற்றிவரும் தமிழர் ஒருவருக்கு "கப்பலோட்டிய தமிழன் வ.உ.சி. விருது" ஆண்டுதோறும் வழங்கப்படும் விருதுத் தொகையாக 5 இலட்சம் ரூபாய் மற்றும் பாராட்டுச் சான்றிதழ்கள் வழங்கிட தொழில் துறையால் நடவடிக்கை எடுக்கப்பட்டது.
- கப்பலோட்டியத் தமிழன்" வ.உ.சிதம்பரனார் அவர்கள் மறைந்த நவம்பர் 18ஆம் தேதி தியாகத் திருநாளாக கடைப்பிடிக்கப்படுகிறது.
- இந்த ஆண்டு செப்டம்பர் 5, 2021 முதல் செப்டம்பர் 5 2022 வரை தூத்துக்குடியிலும், திருநெல்வேலியிலும் உருவாகும் அரசு கட்டடங்களுக்கு கப்பலோட்டிய தமிழன் வ.உ.சிதம்பரனார் அவர்கள் பெயர் சூட்டப்பட்டது.
- கப்பலோட்டிய தமிழன் வ.உ.சிதம்பரனார் அவர்களின் 150ஆவது பிறந்த நாளைச் சிறப்பிக்கின்ற வகையில் அன்னாரின் வாழ்க்கை வரலாறு குறித்த புகைப்படங்கள் மற்றும் காணொலிகளைக் கொண்ட நடமாடும் பேருந்து மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் சென்னையில் கொடியசைத்துத் தொடங்கி வைக்கப்பட்டு, தமிழ்நாடு முழுவதும் அனுப்பப்பட்டு இலட்சக்கணக்கான மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் கண்டுகளித்தனர்.
- தமிழ் பல்கலைக்கழகத்தின் வாயிலாக வ.உ.சிதம்பரனார் அவர்கள் குறித்த இணைய வழி கருத்தரங்கம் தமிழ் வளர்ச்சித் துறை வழியாக நடைபெற்றது.
- தமிழ் நிகர் நிலை கல்விக் கழகத்தின் வாயிலாக கப்பலோட்டிய தமிழன் வ.உ.சிதம்பரனார் அவர்கள் எழுதிய நூல்கள் மற்றும் கையெழுத்துப் பிரதிகள் ஆகியவை முழுவதும் இணையத்திலேயே மின்மயப்படுத்திட தகவல் தொழில்நுட்பவியல் துறையால் வெளியிடப்பட்டது.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 10.09.2021 அன்று மகாகவி பாரதியார் நினைவைப் போற்றும் வகையில் அவர் மறைந்த நூற்றாண்டின் நினைவாக வெளியிடப்பட்ட பின்வரும் 14 அறிவிப்புகளின் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டது.

- மகாகவி பாரதியாரின் நினைவு நாளான செப்டம்பர் 11ஆம் நாள், அரசின் சார்பில் ஆண்டுதோறும் 'மகாகவி நாளாகக்' கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது.

- பாரதியாரின் தேர்ந்தெடுக்கப்பட்ட பாடல்கள், கட்டுரைகளைத் தொகுத்து 'மனதில் உறுதி வேண்டும்' என்ற புத்தகமாக, அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளி மாணவர்கள் சுமார் 37 இலட்சம் பேருக்கு 10 கோடி ரூபாய் செலவில் பள்ளிக்கல்வித் துறையால் வழங்கப்பட்டது.
- மகாகவி பாரதியின் வாழ்க்கை குறித்தும், அவரின் படைப்புகள் குறித்தும் ஆய்வாளர்கள் பலர் குறிப்பிடத்தக்க ஆய்வுகளைச் செய்துள்ளனர். அவர்களில் முக்கியப் பங்காற்றிய பாரதி ஆய்வாளர்களான, மறைந்த பெ.தூரன், ரா.அ.பத்மநாபன், தொ.மு.சி.ரகுநாதன், இளசை மணியன் ஆகியோர்களின் நினைவாக அவர்தம் குடும்பத்தாருக்கும் மூத்த ஆய்வாளர் திரு.சீனி.விசுவநாதன் அவர்களுக்கும், பேராசிரியர் ய.மணிகண்டன் அவர்களுக்கும் தலா 3 இலட்சம் ரூபாயும், விருதும், பாராட்டுச் சான்றிதழும் தமிழ் வளர்ச்சித் துறையால் வழங்கி கௌரவிக்கப்பட்டது.
- மகாகவி பாரதியின் உருவச் சிலைகள், உருவம் பொறித்தக் கலைப்பொருட்களைப் பூம்புகார் நிறுவனத்தின் மூலம் உற்பத்தி செய்து குறைந்த விலையில் பொதுமக்களுக்கு விற்பனை செய்வதற்கு பூம்புகார் நிறுவனத்தினரால் ஏற்பாடு செய்யப்பட்டது.
- மகாகவிபாரதியின் கையெழுத்துப் பிரதிகள் தேடித் தொகுக்கப்பட்டு, அவை வடிவம் மாறாமல் செம்பதிப்பாக வெளியிடப்படும். பாரதியின் வாழ்வைச் சிறுவர்கள் அறியும் வண்ணம் சித்திரக்கதை நூலாகவும், பாரதியாரின் சிறந்த நூறு பாடல்களைத் தேர்வு செய்து தமிழ்நாட்டின் புகழ்பெற்ற ஓவியர்களின் வண்ண ஓவியங்களுடன் நூல் ஒன்றாகவும் வெளியிடப்படும். மேலும் பாரதியாரின் படைப்புகள், பாரதியார் குறித்த முக்கிய ஆய்வு நூல்களும் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து தமிழ் வளர்ச்சித் துறையால் வெளியிடப்பட்டது.
- மகாகவிபாரதியாரின் நூல்கள், அவரைப் பற்றிய ஆய்வு நூல்கள் அனைத்தையும் தொகுத்து, எட்டையபுரம், திருவல்லிக்கேணியில் உள்ள பாரதியார் நினைவு இல்லங்களிலும், சென்னை அண்ணா நூற்றாண்டு நூலகத்திலும், மதுரையில் அமைய உள்ள கலைஞர் நினைவு நூலகத்திலும் வைப்பதற்கு 'பாரதியியல்' என்ற தனிப்பிரிவு பள்ளிக்கல்வித்துறையால் ஏற்படுத்தப்பட்டது.
- உலகத் தமிழ்ச் சங்கங்களை ஒருங்கிணைத்து மகாகவிபாரதி குறித்த நிகழ்வுகள் 'பாரெங்கும் பாரதி'என்ற தலைப்பில் தமிழ் வளர்ச்சித் துறையால் நடத்தப்பட்டது.
- 2022ஆம் ஆண்டு திரைப்படங்களில் இடம்பெற்ற மகாகவி பாரதியாரின் பாடல்கள் மட்டுமே இடம் பெறும் இசைக் கச்சேரி **"திரையில் பாரதி"** என்ற நிகழ்வாக 60 இலட்சம் ரூபாய் செலவில் சென்னையில் நடைபெற்றது.
- திருச்சி பாரதிதாசன் பல்கலைக்கழகத்தில் மகாகவிபாரதியார் பெயரில் ஆய்விருக்கை உயர்கல்வித் துறையால் அமைக்கப்பட்டது.
- உத்திரப்பிரதேச மாநிலம் காசியில்மகாகவி பாரதியார் வாழ்ந்த வீடு அரசின் சார்பில் 18 இலட்சம் ரூபாய் செலவில் புனரமைக்கப்பட்டு, மார்பளவுச் சிலையும் அமைக்கப்பட்டுள்ளது.
- மகாகவி பாரதியார் அவர்களின் நினைவு நூற்றாண்டினைச் சிறப்பிக்கின்ற வகையில், அன்னாரின் வாழ்க்கை வரலாறு குறித்த நாடகங்கள் சென்னை, செங்கல்பட்டு, திருவண்ணாமலை, திருச்சி, சேலம் ஆகிய மாவட்டங்களில் சிறப்பாக நடத்தப்பட்டு இலட்சக்கணக்கான பொதுமக்கள் கண்டு களித்துள்ளனர். அவை அனைத்தும் tndipr youtube channel மற்றும் அரசு கேபிள் டிவியிலும் நேரடியாக ஒளிபரப்பப்பட்டன.
- மகாகவி பாரதியாரின் உணர்வுமிக்க பாடல் வரிகளை பள்ளிகள், கல்லூரிகள், பேருந்து நிலையங்கள் மற்றும் பேருந்துகளில் எழுதியும் வரைந்தும் விளம்பரப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

❖ பெண் கல்வியையும், பெண்களிடம் துணிச்சலையும் வலியுறுத்திய மகாகவி பாரதியின் பெயர், ஊரக வளர்ச்சித்துறையில் செயல்படுத்தப்படவுள்ள மகளிர் சுயஉதவிக் குழுக்கள் வாழ்வாதாரப் பூங்காவிற்கு **'மகாகவி பாரதியார் வாழ்வாதாரப் பூங்கா'** என ஊரக வளர்ச்சித் துறையால் பெயர் சூட்டப்பட்டது.

❖ மகாகவி பாரதியாரின் நினைவு நூற்றாண்டை முன்னிட்டு சென்னை, பாரதியார் நினைவு இல்லத்தில் வாரந்தோறும் நிகழ்ச்சியொன்று அக்டோபர் 2021 முதல் ஆகஸ்டு 2022 வரை ஓராண்டிற்கு வெகு சிறப்பாக நடத்தப்பட்டது.

செய்தித்துறையில் முதன்முறையாக சமூக ஊடகப் பிரிவு

❖ மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர், மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் மற்றும் தமிழ்நாடு அரசின் செய்தி வெளியீடுகள், சாதனைகள் மற்றும் நிகழ்ச்சிகள் தொடர்பான செய்திகள், புகைப்படங்கள் மற்றும் குறும்படங்களை சமூக ஊடகங்களான எக்ஸ் தளம் (X), இன்ஸ்டாகிராம் (Instagram), முகநூல் (Facebook), வலையொளி (Youtube) மற்றும் புதிய வாட்ஸ்ஆப் சேனல் (Whatsapp Channel) ஆகியவற்றிலும் உடனுக்குடன் பதிவேற்றம் செய்து பொதுமக்கள் அறிந்திட ஏதுவாக, புதிதாக "சமூக ஊடகப்பிரிவு" என்கிற தனிப்பிரிவு உருவாக்கப்பட்டுச் சிறப்புடன் செயல்பட்டு வருகிறது.

இணையதளம் (Website)

❖ தமிழ்நாடு அரசினுடைய அனைத்துச் சாதனைகளையும் பொதுமக்கள் உடனடியாகக் கண்டு பயனடைகின்ற வகையில், சமூக ஊடகங்களில் TNDIPR என்ற இணைய தளத்தில் தகவல்கள் உடனுக்குடன் பதிவேற்றம் செய்யப்படுகின்றன.

தகவல் சரிபார்ப்பகம் (TN FACT CHECK)

❖ செய்தி மக்கள் தொடர்புத் துறையின் கட்டுப்பாட்டில் சென்னை கலைவாணர் அரங்கத்தில் புதிதாக தமிழ்நாடு தகவல் சரிபார்ப்பகம் (TN FACT CHECK) என்ற சமூக ஊடகப் பிரிவு தோற்றுவிக்கப்பட்டு சமூக வலைதளங்களில் பரப்பப்படும் வெறுப்புப் பிரச்சாரங்கள் மற்றும் போலி செய்திகளைக் கண்டறிந்து மக்களுக்கு உண்மையான தகவல்களைத் தரவுகளோடு பதிவிட்டு வருகிறது.

புலனம் சேனல் (Whatsapp Channel)

❖ புதிய முன்னெடுப்பாக புலனம் (Whatsapp) சேனல் TNDIPR Govt. of Tamil Nadu என்ற பெயரில் 10.6.2024 அன்று தொடங்கப்பட்டு அதில் பொதுமக்கள் இணைந்து அரசின் திட்டங்கள் மற்றும் செய்திகளை அறிந்து கொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது. இதுநாள் வரை 70,329 நபர்கள் இச்சேனலை பின்பற்றுபவர்களாக (Followers) பதிவு செய்துள்ளனர்.

❖ நடப்பாண்டில் தமிழ்நாடு அரசின் நிதித்துறையின் நிதிநிலை அறிக்கை குறித்த தகவல்களை 7,70,70,743 நபர்களும், வேளாண் துறையின் நிதி நிலை அறிக்கை குறித்த விவரங்களை 4,30,40,688 நபர்களும் கண்டு பயனடையும் வகையில்குறுஞ்செய்தியாக (SMS) தமிழ்நாடு மின்னாளுமை முகமை மூலம் கொண்டு சேர்த்தது சமூக ஊடகப் பிரிவின் ஒரு மைல்கல் என்று கூறலாம்.

தமிழ்நாடு திரைப்படப் பிரிவு

❖ தமிழ்நாடு திரைப்படப் பிரிவு திறம்படச் செயல்பட ஏதுவாக, 14 இலட்சம் ரூபாய் செலவில் புதிய நவீன தொழில்நுட்பக் கருவிகள், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பங்கேற்கும் நிகழ்ச்சிகளை உடனுக்குடன் நேரலை செய்திட ஏதுவாக 21 இலட்சம் ரூபாய் செலவில் புதிய Live U 600 கருவி வாங்கப்பட்டுப் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

❖ முதன்முறையாக தமிழ்நாடு திரைப்படப்பிரிவில் உள்ள முன்னாள் முதலமைச்சர்கள் பங்கேற்ற அரசு

நிகழ்ச்சிகளும்பிற முக்கிய நிகழ்ச்சிகளும் கொண்ட 7,700 ஒளிநாடாதொகுப்புகள் 1 கோடியே 48 இலட்சம்ரூபாய் செலவில் எண்மியமாக்கப்பட்டுள்ளன. (Digitalization of Video Cassettes)

❖ சமூக வலைதளங்கள் வாயிலாக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் நிகழ்ச்சிகள் மற்றும் அரசு நிகழ்ச்சிகள் அனைத்துப்பொதுமக்களையும் எளிதாகச் சென்றடையும் வகையில், தமிழ்நாடு திரைப்படப்பிரிவில் புதிதாக Youtube Channel தொடங்கப்பட்டுப் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

❖ கடந்த 3 ஆண்டுகளில் அரசு நிகழ்வுகள் தொடர்பான 3,400 காணொலி நறுக்குகள் (Video Clippings) பதிவேற்றம் செய்யப்பட்டு, 11,100சந்தாதாரர்களுடன்60இலட்சத்திற்கும் மேலான பார்வையாளர்களைக் கொண்டு, அரசின் திட்டங்கள் அனைத்தும் மிக விரைவாகவும், சிறப்பாகவும் மக்களைச் சென்றடைகின்றன.

❖ கடந்த 3 ஆண்டுகளில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பங்கேற்ற விழாக்கள், மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் பங்கேற்ற நிகழ்ச்சிகள் அனைத்தும் 5 நிமிடச் செய்திமலராகத் தொகுக்கப்பட்டு, 137 வாரச் செய்தி மலர்களாக அனைத்துத் திரையரங்குகள், சமூக ஊடகங்கள், அரசு கேபிள் டிவி, மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகங்கள், மின் சுவர்கள் (LED Walls) மற்றும் மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலக விளம்பர வாகனங்கள் ஆகியவற்றில் உடனுக்குடன் பதிவேற்றம் செய்யப்பட்டு ஒளிப்பரப்பப்படுகின்றன.

புகைப்படப் பிரிவு

❖ மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் நிகழ்ச்சிகளை நவீன முறையில் புகைப்படம் மற்றும் காணொலிகளைப் பதிவு செய்திட 48 இலட்சம் ரூபாய் செலவில் 6 அதிநவீன புகைப்படக் கருவிகள் (Digital Still Camera/ ஒளிப்பதிவு கருவி (Digital Video Camera) ஆகியவை வாங்கப்பட்டுப் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

❖ இப்பிரிவில் 50 இலட்சம் ரூபாய் செலவில், முன்னாள் முதலமைச்சர்கள் மற்றும் அரசு நிகழ்ச்சிகள் தொடர்பான ஆண்டு வாரியான அனைத்துப் பழமையான புகைப்படச் சுருள்களும் எண்மியமாக்கப்பட்டு (Digitalization) பாதுகாக்கப்பட்டுள்ளன.

பொருட்காட்சி

❖ அரசின் சாதனைகளை, திட்டங்களை அனைத்துத் தரப்பு மக்களும் அறிந்து பயனடைகின்ற வகையில், மாவட்ட மக்கள் தொடர்பு அலுவலகங்களின் வாயிலாக அனைத்துத் துறைகளையும் ஒருங்கிணைத்து ஒவ்வொரு ஆண்டும் மாவட்ட அளவில் புகைப்படக் கண்காட்சிகள் நடத்தப்பட்டு வருகின்றன.

❖ கடந்த 3 ஆண்டுகளில் 5 கோடியே 27 இலட்சம் ரூபாய் செலவில் ஆண்டு தோறும் அனைத்து மாவட்டங்களிலும் அரசின் சாதனை விளக்கப் புகைப்படக் கண்காட்சிகள் மற்றும் கலைநிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு இலட்சக்கணக்கான பொதுமக்கள் கண்டு பயனடைந்துள்ளனர்.

❖ கடந்த 3 ஆண்டுகளில் பெருநகரங்கள் மற்றும் மாவட்டங்களில் நடத்தப்பட்ட அரசுப் பொருட்காட்சிகளின் வாயிலாக 8 கோடியே 76 இலட்சம் ரூபாய் வருவாய் அரசிற்கு ஈட்டப்பட்டதோடு, 15,53,372 பேர் கண்டு பயனடைந்துள்ளனர்.

❖ மேலும், தனியார் பொருட்காட்சிகள் வாயிலாக 9 கோடியே 51 இலட்சம் ரூபாய் முதலமைச்சர் பொது நிவாரண நிதியாகச் செலுத்தப்பட்டுள்ளது.

❖ அரசுத் துறைகளின் சாதனைகள் மற்றும் திட்டங்களை அனைத்து மாவட்ட மக்களும் கண்டு பயன் பெறுகின்ற வகையில், **"ஓயா உழைப்பின் ஓராண்டு"** என்ற தலைப்பில் 3 கோடியே 80 இலட்சம் ரூபாய் செலவில் அனைத்து மாவட்டங்களிலும் புகைப்படக் கண்காட்சி மற்றும் விழிப்புணர்வு கலைநிகழ்ச்சிகள் சிறப்புடன் நடத்தப்பட்டன.

❖ இந்திய விடுதலைக்காக அரும்பாடுபட்ட தேசத் தலைவர்களைப் போற்றும் வகையிலும், அவர்களைச் சிறப்பிக்கும் வகையிலும் "விடுதலைப் போரில் தமிழகம்" என்ற தலைப்பில், சென்னை, கோயம்பேடு பேருந்து நிலையத்தில், 16 இலட்சம் ரூபாய் செலவில் புகைப்படக் கண்காட்சி சிறப்புடன் நடத்தப்பட்டது. மேலும், அப்புகைப்படக் கண்காட்சியை அனைத்துத் தரப்பினரும் கண்டு பயனடைந்தனர். குறிப்பாக, மாநில மக்களின் கவனத்தைப் பெரிதும் ஈர்த்தது.

அலங்கார ஊர்திகள்

❖ புதுடெல்லியில், இந்த ஆண்டு (2024) ஜனவரியில் நடைபெற்ற குடியரசு தின விழாவில், தமிழ்நாடு அரசின் சார்பில் குடவோலை முறைத் தேர்தலை முன்னிலைப்படுத்திய தமிழ்நாடு அலங்கார ஊர்திக்கு மூன்றாம் பரிசும் மற்றும் கலைநிகழ்ச்சிக்கு முதல் பரிசும் வழங்கி சிறப்பிக்கப்பட்டது.

❖ புதுடெல்லியில் 2023ஆம் ஆண்டு நடைபெற்ற குடியரசு தின விழாவில் தமிழ்நாடு அரசின் சார்பில் பெண்கள் முன்னேற்றம் மற்றும் கலாச்சாரம் என்கிற கருப்பொருளின் அடிப்படையில் தமிழகத்தின் 7 பெண் சாதனையாளர்களை முன்னிலைப்படுத்திய அலங்கார ஊர்தி தேச அளவில் அனைவரின் கவனத்தையும் ஈர்த்தது.

❖ சென்னையில் நடைபெற்ற 2024ஆம் ஆண்டுக்கான குடியரசு தின விழாவில் செய்தி மக்கள் தொடர்புத் துறையின் அலங்கார ஊர்தியில் மதுரையில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்ட கலைஞர் நூற்றாண்டு ஏறு தழுவுதல் அரங்கம் அமைப்பில் வடிவமைக்கப்பட்ட அலங்கார ஊர்தி பொதுமக்களைப் பெரிதும் கவர்ந்தது.

❖ சென்னையில் நடைபெற்ற 2023ஆம் ஆண்டுக்கான குடியரசு தின விழாவில் செய்தி மக்கள்தொடர்புத் துறையின் அலங்கார ஊர்தி மூன்றாம் பரிசினைப் பெற்றது.

❖ 2022ஆம் ஆண்டு புதுடெல்லியில் நடைபெற்ற குடியரசு தின விழா அணிவகுப்பில், விடுதலைப் போரில் தமிழ்நாட்டின் பங்களிப்பினைப் பறைசாற்றும் விதமாக தமிழ்நாடு அரசு சார்பில் வடிவமைக்கப்பட்ட 3 அலங்கார ஊர்திகளையும் ஒன்றிய அரசு நிராகரித்ததால், அந்த அலங்கார ஊர்திகள் மூன்றையும் அனைத்து மாவட்ட மக்களும் கண்டு பயன்பெற மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டதைத் தொடர்ந்து, பெரும்பான்மையான மாவட்டங்களுக்கு அனுப்பப்பட்டு, மாவட்ட நிர்வாகத்தின் சார்பில் கலைநிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு, அதனை இலட்சக்கணக்கான பொதுமக்களும், மாணவர்களும் பார்வையிட்டு பயனடைந்தனர்.

❖ சென்னை தீவுத்திடலில் 2023ஆம் ஆண்டு நடைபெற்ற 47வது இந்திய சுற்றுலா மற்றும் தொழில் பொருட்காட்சியில் செய்தி மக்கள் தொடர்புத்துறை அரங்கத்திற்கு இரண்டாம் பரிசு வழங்கி சிறப்பிக்கப்பட்டது.

❖ நாட்டுக்கு உழைத்த நல்லோர்களின் நினைவைப் போற்றும் வகையில், சுதந்திரப் போராட்டத் தலைவர்கள்/தியாகிகள் குறித்த முப்பரிமாண ஒலி/ஒளி கண்காட்சி சென்னை, கலைவாணர் அரங்கத்தில் 18நாட்கள்நடத்தப்பட்டுபள்ளிமாணவர்களும், பொதுமக்களும் பார்வையிட்டு மகிழ்ந்தனர்.

❖ பிரபல பின்னணிப் பாடகர் டி.எம்.சௌந்தரராஜன் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு, சென்னை கலைவாணர் அரங்கத்தில் 12 இலட்சம் ரூபாய் செலவில் இன்னிசைக் கச்சேரி நடத்தப்பட்டு அன்னாருக்குப் பெருமை சேர்க்கப்பட்டது.

❖ முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுக்குப் பெருமை சேர்க்கின்ற வகையில், சென்னை கலைவாணர் அரங்கில் நடைபெற்ற

கலைஞர் நூற்றாண்டு நினைவு இலச்சினை வெளியிடப்பட்டு புகைப்படக் கண்காட்சியும் 41 இலட்சத்து 4 ஆயிரம் ரூபாய் செலவில் சிறப்பாக நடத்தப்பட்டது.

மாநிலச் செய்தி நிலையம்

- செய்தி மக்கள் தொடர்புத் துறையின் கட்டுப்பாட்டின் கீழ், சென்னை கலைவாணர் அரங்கத்தில் மாநிலச் செய்தி நிலையம் செயல்பட்டு வருகிறது. இம்மாநில செய்தி நிலையத்தில் அனைவரும் படித்துப் பயன்பெறும் வகையில் ஏறத்தாழ 73,042 நூல்கள் அடங்கிய நூலகம் ஒன்றும் செயல்பட்டு வருகிறது.
- இந்நூலகம், பொதுமக்கள், கலைஞர்கள், சமூக ஆர்வலர்கள், கல்லூரிப் பேராசிரியர்கள், போட்டித் தேர்வுக்கு தயாராகும் மாணவர்கள் என அனைத்துத் தரப்பினரும் e-grathalaya என்ற தேசிய தகவல் மையத்தின் மூலம் உருவாக்கப்பட்ட மென்பொருள் வாயிலாகத் தேவையான நூல்களை உடனடியாகக் கண்டறிந்து படித்துப் பயன்பெறும் வகையில் உருவாக்கப்பட்டுள்ளது.
- இந்நூலகம் போட்டித் தேர்வுகளுக்கு ஆயத்தமாகும் மாணவர்களுக்கு பெரிதும் பயன்பட்டு வருகிறது.
- மேலும், தமிழ்நாடு அரசின் மின்நூலகம் அமைத்தல் என்ற திட்டத்தின்படி, பொது நூலக இயக்கத்தின் சார்பில் அண்ணா நூற்றாண்டு நூலகத்தின் வாயிலாக மாநிலச் செய்தி நிலையத்தில் உள்ள சுமார் 2,500 நூல்கள் காப்புரிமைச் சட்டத்திற்கு உட்படாத வகையில் மின்னுருவாக்கம் செய்யப்பட்டுள்ளன.

தமிழரசு அச்சகம்

- கடந்த மூன்று ஆண்டுகளில் 42 சிறப்பு வெளியீடுகளை 'தமிழரசு' அச்சகத்தின் வாயிலாக வெளியிடப்பட்டுள்ளது. அதன் விவரம் பின்வருமாறு;

1	மாண்புமிகு தமிழ்நாடு ஆளுநர் அவர்களின் உரை மீதான விவாதத்திற்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் பதிலுரை
2	'தலைநிமிரும் தமிழகம் –நூற்றாண்டின் திசையில் நூறு நாட்கள்' எனும் 100 நாள் சாதனை மலர்
3	மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் விதி 110இன் கீழ் அறிவித்த அறிவிப்புகள் (24.08.2021 முதல் 13.09.2021 வரை)
4	தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் மானியக் கோரிக்கைகள் மீதான விவாதத்தின்போது அறிவிக்கப்பட்ட துறைவாரியான அறிவிப்புகள் (13.08.2021 முதல் 13.09.2021 வரை)
5	நாவலர் டாக்டர் இரா.நெடுஞ்செழியன் அவர்கள் – நூற்றாண்டு நிறைவு விழா சிலைத் திறப்பு சிறப்பு மலர்
6	மக்களுக்குத் தேவையெனில் மக்கள் நலனை முன்னிறுத்தி கடந்த அ.தி.மு.க. ஆட்சியில் செயல்படுத்தப்படாத அறிவிப்புகளையும் சேர்த்து நிறைவேற்றுவோம் – மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் சட்டமன்ற பதிலுரை.
7	நிறைவான வளர்ச்சியில் நிலையான பயணம் – ஓராண்டு சாதனை மலர் (தமிழ்)
8	Sustained Journey towards all round growth (one year achievements– English)
9	"முதலாண்டு முத்தான தொடக்கம் இரண்டாமாண்டு இணையற்ற ஆண்டாக இருக்கும்" – மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், ஆட்சிப் பொறுப்பேற்று ஓராண்டு நிறைவுப் பெறுவதையொட்டி, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில்விதி 110இன் கீழ் ஆற்றிய உரை (07.05.2022).
10	கடைக்கோடித் தமிழரின் கனவுகளைத் தாங்கி – காலப்பேழை

11	அறிஞர்கள் ஆளுமைகள் பார்வையில் திராவிடமாடல் அரசு
12	மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பல்வேறு நிகழ்ச்சிகளில் ஆற்றிய உரைகள் (13.05.2021 முதல் 30.12.2021 வரை) – தொகுப்பு–1
13	மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பல்வேறு நிகழ்ச்சிகளில் ஆற்றிய உரைகள் (30.12.2021 முதல் 05.04.2022 வரை) – தொகுப்பு–2
14	மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் ஆற்றிய உரைகள் (12.05.2021 முதல் 10.05.2022 வரை)
15	மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாடு சட்டமன்ற பேரவையில் விதி 110இன் கீழ் அறிவித்த அறிவிப்புகள் (24.08.2021 முதல் 09.05.2022 வரை)
16	இதயம் திறந்து இதழ்கள் பாராட்டு – தொகுப்பு–1
17	இதயம் திறந்து இதழ்கள் பாராட்டு – தொகுப்பு–2
18	இதயம் திறந்து இதழ்கள் பாராட்டு – தொகுப்பு–3
19	தமிழ்நாடு நாள் ஜீலை 18 சிறப்பு மலர் 2022
20	நூற்றாண்டு கண்ட கல்விப் புரட்சி2022
21	வ.உ.சி. 150 பிறந்த ஆண்டு சிறப்பு மலர் 2022
22	பாரதி நினைவு நூற்றாண்டு மலர் 2022
23	இலக்கியமலர் – 2023
24	ஈடில்லா ஆட்சி ஈராண்டே சாட்சி – சாதனை மலர் (தமிழ்)
25	ஈடில்லா ஆட்சி ஈராண்டே சாட்சி – சாதனை மலர் (ஆங்கிலம்)
26	மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உதிர்த்த முத்துக்கள்
27	மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பல்வேறு நிகழ்ச்சிகளில் ஆற்றிய உரைகள் (11.05.2022 முதல் 28.07.2022 வரை) தொகுப்பு – 3
28	மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பல்வேறு நிகழ்ச்சிகளில் ஆற்றிய உரைகள் (29.07.2022 முதல் 30.09.2022 வரை) தொகுப்பு – 4
29	மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பல்வேறு நிகழ்ச்சிகளில் ஆற்றிய உரைகள் (05.10.2022 முதல் 09.02.2023 வரை) தொகுப்பு – 5
30	மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பல்வேறு நிகழ்ச்சிகளில் ஆற்றிய உரைகள் (18.02.2023 முதல் 27.04.2023 வரை) தொகுப்பு – 6
31	மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் ஆற்றிய உரை (18.10.2022 முதல் 21.04.2023)
32	மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாடு சட்டமன்ற பேரவையில் விதி 110இன் கீழ் அறிவித்த அறிவிப்புகள் (24.08.2021 முதல் 21.04.2023)
33	விடுதலைப் போராட்டத்தில் தமிழ்நாட்டின் பங்களிப்பு (தமிழ்)
34	Tamil Nadu's Contribution To The Freedom Struggle (English)
35	இதழாளர் கலைஞர் – நூற்றாண்டு மலர்
36	வைக்கம் போராட்டம் (1924 – 2023) நூற்றாண்டு மலர் (தமிழ்)
37	வைக்கம் போராட்டம் (1924 – 2023) நூற்றாண்டு மலர் (ஆங்கிலம்)
38	வைக்கம் போராட்டம் (1924 – 2023) நூற்றாண்டு மலர் (மலையாளம்)
39	கலைஞர் நூற்றாண்டு நிறைவு மலர் ஜூன் – 2024 தொகுதி – 1
40	கலைஞர் நூற்றாண்டு நிறைவு மலர் ஜூன் – 2024 தொகுதி – 2
41	கலைஞர் நூற்றாண்டு நிறைவு மலர் ஜூன் – 2024 தொகுதி – 3
42	காலப்பேழை – நினைவகங்களின் தொகுப்பு 2023

மடிப்பேடுகள்

- விடுதலைப் போராட்ட வீரர்கள், தமிழ்ச் சான்றோர்கள், அரசியல் தலைவர்கள் ஆகியோரின் வாழ்க்கைக் குறிப்புகள் அடங்கிய இலட்சம் மடிப்பேடுகள் தயாரித்து அச்சடிக்கப்பட்டு, பொதுமக்கள் தெரிந்து கொள்ள ஏதுவாக விநியோகிக்கப்பட்டுள்ளன.

- கப்பலோட்டிய தமிழன் வ.உ.சிதம்பரனார், மகாகவி சுப்பிரமணிய பாரதியார், நடிகர் திலகம் செவாலியே சிவாஜி கணேசன் ஆகியோரின் வாழ்க்கைக் குறிப்புகள், வள்ளுவர் கோட்டம் பற்றிய குறிப்புகள், செய்தி மக்கள் தொடர்பு துறையின் கட்டுப்பாட்டில் உள்ள 82 நினைவகங்கள் பற்றிய குறிப்புகளை விரைவுதுலங்கல் குறியீட்டை (QR Code) ஸ்கேன் செய்து படித்து தெரிந்து கொள்ளும் வசதி துவக்கி வைக்கப்பட்டு, இந்தியப் பன்னாட்டு வர்த்தகக் கண்காட்சி 2021 (India International Trade Fair 2021) மற்றும் 53ஆவது இந்திய சர்வதேச திரைப்பட விழா (Film Bazaar 2022 Goa) ஆகியவை பற்றிய குறிப்புகள் 50,000 எண்ணிக்கையில் அச்சிடப்பட்டு பார்வையாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

சுவரொட்டிகள்

- 'தமிழரசு' அச்சகத்தின் வாயிலாக, "தலை நிமிரும் தமிழகம் பேரு சொல்லும் நூறு நாட்கள்" என்ற தலைப்பில் அரசின் சாதனைகளை விளக்கும் ஐந்து வகையான சுவரொட்டிகள் 50,000 அச்சடிக்கப்பட்டு அனைத்து மாவட்டங்களுக்கும் வழங்கப்பட்டு பொதுமக்கள் பார்வைக்கு முக்கிய இடங்களில் விளம்பரப் படுத்தப்பட்டன.

இதர வெளியீட்டுப் பணிகள்

- 'தமிழரசு' மாத இதழ் பணிகளைத் தவிர்த்து, சிறுதொலைபேசிக் கையேடு, நினைவகங்கள் பிரிவு, பொருட்காட்சிப் பிரிவு, பத்திரிகையாளர் நலவாரியம், திரைப்படத் துறையினர் நலவாரியம் போன்ற இதரப் பிரிவுகளுக்குரிய மடிப்பேடுகள், சுவரொட்டிகள் மற்றும் விண்ணப்பப் படிவங்கள் ஒவ்வொரு ஆண்டும் தலா 25,000 அச்சிடப்பட்டு வழங்கப்பட்டு வருகின்றன.

இணையதளம் மற்றும் அரசு இ–சேவை மையங்களில் பதிவு செய்தால் இல்லம் தேடி வரும் 'தமிழரசு' மாத இதழ்

- 'தமிழரசு' மாத இதழினை பொதுமக்கள், அரசு அலுவலகங்கள், அரசு நூலகங்களின் வாசகர்கள், இளைய தலைமுறையினர் போட்டித் தேர்வுக்கு தயாராகும் பள்ளி மாணவ, மாணவியர் அதிக அளவில் வாசிக்கின்றனர். புதிய வாசகர்களுக்காகவும், சந்தாதாரர்கள் சந்தாவினைப் புதுப்பித்துக்கொள்ள ஏதுவாகவும் www.tamilarasu.org என்ற இணையதளம் மற்றும் அரசு இ–சேவை மையங்கள் வாயிலாகப் பதிவு செய்து 'தமிழரசு' மாத இதழினை அஞ்சல் வழியாகப் பெற்றுக்கொள்ளவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

'தமிழரசு' மாத இதழின் வெற்றிப் பயணம்

- 54 ஆண்டுகளைக் கடந்து தனது வெற்றிப் பயணத்தைத் தொடர்ந்து வரும் 'தமிழரசு' (தமிழ் மற்றும் ஆங்கிலம்) மாத இதழானது, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், பொறுப்பேற்ற 3 ஆண்டுகளில் மொத்த சந்தாதாரர்களின் எண்ணிக்கை 1,23,897ஆக உயர்ந்து சாதனை படைக்கப்பட்டுள்ளது.

- மாண்புமிகு இளைஞர் நலன் (ம) விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள், தமிழரசு இதழின் 1 இலட்சத்து 1ஆவது சந்தாதாரருக்கு தமிழரசு இதழினை 11.05.2023 அன்று வழங்கிச் சிறப்பித்தார்.

முதன்முறையாக 'தமிழரசு' சிறப்பு மலர்கள் புத்தகக் கண்காட்சியில் விற்பனை

- 'தமிழரசு' அச்சகத்தின் 53 ஆண்டுகால வரலாற்றில் முதன்முறையாக, 'தமிழரசு' அச்சகத்தின் வாயிலாக தொகுத்து வெளியிடப்பட்ட சிறப்பு மலர்களில் விற்பனைக்கானவற்றை சலுகை விலையில் அனைவரும் வாங்கிப் படித்து பயன்பெறும் நோக்கத்தில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 06.01.2023 அன்று சென்னையில் நடைபெற்ற புத்தகக்



கண்காட்சியில் பங்கேற்ற 'தமிழரசு' அரங்கில் முதல் சிறப்பு மலர் விற்பனையினைத் தொடங்கி வைத்தார்கள்.

❖ இனிவரும் காலங்களிலும், இளைய தலைமுறையினர் தங்களின் படிக்கும் திறனை அதிகரிக்கும் நோக்கத்தில், சிறப்பு மலர்களை குறைந்த கட்டணத்தில் விற்பனை செய்யும் பணியினைத் தொடர்ந்து 'தமிழரசு' அச்சகம் மேற்கொண்டு வருகிறது.

தமிழரசு அச்சகத்திற்கு வாங்கப்பட்ட புதிய இயந்திரங்கள்

❖ புதிய காகிதம் வெட்டும் இயந்திரம் (Paper Cutting Machine), புதிய மடிப்பு இயந்திரம் (Folding Machine), எண்மிய உற்பத்தி அச்சுப்பொறி (Digital Production Printer) ஆகியவை ரூ.1.80 கோடியில் கொள்முதல் செய்யப்பட்டு நவீன முறையில் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

பத்திரிகையாளர் நல வாரியம்

❖ பத்திரிகையாளர்கள் நலன் காக்கும் வகையில், பத்திரிகையாளர் நல வாரியம் 2021ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டு, நாளது வரையில் 3,300 நபர்கள் உறுப்பினர்களாக சேர்க்கப்பட்டுள்ளனர்.

❖ நலவாரிய உறுப்பினர்களுக்கு அரசின் சார்பில் கல்வி உதவித் தொகை, திருமண உதவித் தொகை, மகப்பேறு உதவி உள்ளிட்ட 21 வகையான நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன

❖ பத்திரிகையாளர் நல வாரியக்குழுவின் பரிந்துரையின் அடிப்படையில், கடந்த 3 ஆண்டுகளில் 97 பத்திரிகையாளர்களுக்கு புதிதாக ஓய்வூதியமும், 35 மறைந்த பத்திரிகையாளர்களின் வாரிசுதாரர்களுக்கு குடும்ப உதவி நிதியாக 1 கோடியே 12 இலட்சம் ரூபாயும் வழங்கப்பட்டுள்ளது.

பத்திரிகையாளர் நலன்

❖ 329 பத்திரிகையாளர்களுக்கு மாதம் ஒன்றுக்கு 10,000 ரூபாயாக வழங்கப்பட்டு வந்த ஓய்வூதியத்தினை 12,000 ரூபாயாக உயர்த்தியும், 64 பத்திரிகையாளர்களின் குடும்பங்களுக்கு மாதம் ஒன்றுக்கு 5 ஆயிரம் ரூபாயாக வழங்கப்பட்டு வந்த குடும்ப ஓய்வூதியத்தினை 6 ஆயிரம் ரூபாயாக உயர்த்தியும் வழங்கப்பட்டு வருகிறது.

❖ பத்திரிகைத் துறையில் ஆசிரியர், உதவி ஆசிரியர், செய்தியாளர், புகைப்படக்காரர்,



பிழைத்திருத்துபவர் ஆகியோர் பணிக்காலத்தில் இயற்கை எய்தும் பத்திரிகையாளர்களின் குடும்பத்தினருக்கு வழங்கப்படும் குடும்ப உதவி நிதி 3 இலட்சம் ரூபாயிலிருந்து 5 இலட்சம் ரூபாயாகவும், பத்திரிகையாளர்களின் நலனில் இதுவரையில் இல்லாத வகையில், பத்திரிகையாளர் ஓய்வூதியம் வழங்கும் திட்டத்தில் நிர்ணயிக்கப்பட்ட பணிக்கொடை மற்றும் பணிக்கால ஆண்டு வருமான உச்சவரம்பானது 3 இலட்சம் ரூபாயிலிருந்து 4 இலட்சம் ரூபாயாகவும்,

- பத்திரிகையாளர் நல நிதியத்திலிருந்து வழங்கப்பட்டுவரும் மருத்துவ உதவித் தொகை 2 இலட்சம் ரூபாயிலிருந்து 2.50 இலட்சம் ரூபாயாகவும்,
- பத்திரிகையாளர் ஓய்வூதியம் 10,000 ரூபாயிலிருந்து 12,000 ரூபாயாகவும்,
- பத்திரிகையாளர் குடும்ப ஓய்வூதியம் 5,000 ரூபாயிலிருந்து 6,000 ரூபாயாகவும், உயர்த்தப்பட்டுள்ளதன் பயனாக, பத்திரிகையாளர்கள் அதிக அளவில் பயனடைகின்றனர்.
- முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து சிறப்பு நிகழ்வாக 6 பத்திரிகையாளர்களின் குடும்பத்தினருக்கு 27 இலட்சம் ரூபாய் நிவாரண உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன.
- பத்திரிகையாளர் குடும்பநலநிதியத்திலிருந்து 7 பத்திரிகையாளர்களுக்கு 15 இலட்சம் ரூபாய் நிவாரண உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.
- கொரோனா வைரஸ் நோய்த் தொற்று (Covid–19) தடுப்பு நடவடிக்கையாக அச்சு, காட்சி ஊடகங்கள் மற்றும் காலமுறை இதழ்களில் பணிபுரியும் செய்தியாளர்கள், புகைப்படக்காரர்கள், ஒளிப்பதிவாளர்கள் ஆகியோருக்கு தலா 5,000 ரூபாய் வீதம் 5,784 பேருக்குச் சிறப்பு ஊக்கத் தொகையாக 2 கோடியே 89 இலட்சம் ரூபாய் வழங்கப்பட்டுள்ளது.
- கொரோனா நோய்த் தொற்றினால் இறந்த 27 பத்திரிகையாளர்களின் குடும்பத்தினருக்கு வழங்கப்படும் இழப்பீட்டுத் தொகை 5 இலட்சம் ரூபாயிலிருந்து 10 இலட்சம் ரூபாயாக உயர்த்தப்பட்டு 2 கோடியே 45 இலட்சம் ரூபாய் நிவாரண உதவிகள் வழங்கப்பட்டுள்ளது.



- பத்திரிகையாளர்கள் தங்களின் துறை சார்ந்த தொழில்தகுதியை மேம்படுத்திக் கொள்வதற்கும் திறன்மேம்பாட்டினை அதிகரிக்கவும், மொழித்திறன் மற்றும் நவீனத் தொழில்நுட்பத்தில் சிறந்து விளங்கவும் ஆண்டுதோறும் உரிய பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருகின்றன.
- தலைமைச் செயலகத்தில் செயல்பட்டு வரும் பத்திரிகையாளர் அறையினை 17 இலட்சம் ரூபாய் செலவில் மேம்படுத்திட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.
- புதிதாக உருவாக்கப்பட்ட "கலைஞர் எழுதுகோல் விருதானது" ஆண்டு தோறும் ரூ.5 இலட்சம் பரிசுத் தொகையுடன் சிறந்த இதழியலாளருக்கு வழங்கப்படுகிறது. அந்த வகையில் 2021ஆம் ஆண்டிற்கு திரு. ஐ.சண்முகநாதன் அவர்களுக்கும், 2022ஆம் ஆண்டிற்கு திரு. வி.எம்.சாமி அவர்களுக்கும் வழங்கிச் சிறப்பிக்கப்பட்டுள்ளது.
- பத்திரிகையாளர் நலன் பேணுகின்ற வகையில், முதன்முறையாக செய்தி மக்கள் தொடர்புத் துறையும், மருத்துவம் மக்கள் நல்வாழ்வுத் துறையும் இணைந்து சென்னை கலைவாணர் அரங்கில் நடைபெற்ற இலவச மருத்துவ முகாமில் அதிக அளவிலான பத்திரிகையாளர்கள் கலந்து கொண்டு பயன் அடைந்தனர்.

திரைப்பட நல வாரியம்

- திரைப்படத் துறையில் பல்வேறு நிலைகளில் பணியாற்றக்கூடிய தொழிலாளர்களின் நலன்களைப் பேணிடும் வகையில், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் உருவாக்கப்பட்ட திரைப்படத் துறையினர் நலவாரியத்தில் 27,091 உறுப்பினர்கள் சேர்க்கப்பட்டுள்ளனர்.
- நலவாரிய உறுப்பினர்களுக்கு அரசின் சார்பில் கல்வி உதவித் தொகை, திருமண உதவித் தொகை, மகப்பேறு உதவி, விபத்து



ஈட்டுறுதித் திட்டம் உள்ளிட்ட 22 வகையான நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

❖ கடந்த 3 ஆண்டுகளில் 500 உறுப்பினர்களுக்கு ஏறத்தாழ 28 இலட்சம் ரூபாய் நிதியுதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

அரசு விருதுகள்

கலைஞர் நினைவு கலைத்துறை வித்தகர் விருது

❖ தமிழ்த் திரைப்படத் துறையில் வாழ்நாள் சாதனை புரிந்துள்ளவர்களைப் போற்றிப் பாராட்டுகின்ற வகையில், 2022ஆம் ஆண்டு முதல் கலைஞர் நினைவு கலைத்துறை வித்தகர் விருது வழங்கிச் சிறப்பிக்கப்படுகிறது. 2022ஆம் ஆண்டுக்கான விருது திரு.ஆரூர்தாஸ் அவர்களுக்கு 10 இலட்சம் ரூபாய் பரிசுத்தொகையுடன், பாராட்டுச் சான்றிதழ் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் வழங்கிச் சிறப்பிக்கப்பட்டது.

திரைப்பட விருதுகள்

❖ கடந்த 2009ஆம் ஆண்டு முதல் 2015ஆம் ஆண்டுகள் வரை வழங்கப்படாமல் இருந்த அரசு திரைப்பட விருதுகள் அனைத்தும் மாண்புமிகு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் அவர்களின் தலைமையில் நடைபெற்ற விழாக்களில் 218 விருதாளர்களுக்கு தலா 5 பவுன் தங்கப்பதக்கம், சிறந்த திரைப்படங்களின் தயாரிப்பாளர்களுக்கு காசோலை, நினைவுப்பரிசு மற்றும் சான்றிதழ்களும் வழங்கிச் சிறப்பிக்கப்பட்டன.

❖ 2016 ஆம் ஆண்டு முதல் 2022ஆம் ஆண்டு வரையிலான திரைப்பட விருதுகள் வழங்கும் பொருட்டு, ஓய்வுப் பெற்ற மாண்புமிகு நீதியரசர் தலைமையில் தேர்வுக்குழு அமைக்கப்பட்டு, திரைப்படங்கள் பார்வையிடும் பணி நடைபெற்று வருகிறது.

சின்னத்திரை விருதுகள்

❖ 2009–ஆம் ஆண்டு முதல் 2013–ஆம் ஆண்டுகள் வரை சின்னத்திரை விருதுகள், மாண்புமிகு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் அவர்கள் தலைமையில் நடைபெற்றவிழாவில்101விருதாளர்களுக்கு தலா 3 பவுன் தங்கப்பதக்கம், சிறந்த நெடுந்தொடர்களின் தயாரிப்பாளர்களுக்கு காசோலைகள், நினைவுப்பரிசுகள், சான்றிதழ்கள் ஆகியவை வழங்கப்பட்டன.

❖ 2014ஆம் ஆண்டு முதல் 2022ஆம் ஆண்டு வரையிலான சின்னத்திரை விருதுகள் வழங்கும் பொருட்டு, ஓய்வுப் பெற்ற மாண்புமிகு நீதியரசர் தலைமையில் தேர்வுக்குழு அமைக்கப்பட்டு நெடுந்தொடர்கள் பார்வையிடும் பணி நடைபெற்று வருகிறது.

அரசு திரைப்பட மானியம்

❖ குறைந்த செலவில் தயாரித்து வெளியிடப்பட்ட தரமான தமிழ்த் திரைப்படங்களுக்கு அரசு மானியம்தலா

7 இலட்சம் ரூபாய் வழங்கப்படுகிறது.

❖ 2015ஆம் ஆண்டு முதல் 2022ஆம் ஆண்டு வரையிலான குறைந்த செலவில் தயாரித்து வெளியிடப்பட்ட தரமான தமிழ்த் திரைப்படங்களுக்கு அரசு மானியம் வழங்கிடும் பொருட்டு, ஓய்வுப் பெற்ற மாண்புமிகு நீதியரசர் தலைமையில் தேர்வுக்குழு அமைக்கப்பட்டு திரைப்படங்கள் பார்வையிடும் பணி நடைபெற்று வருகிறது

தமிழ்நாடு அரசு எம்.ஜி.ஆர். திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி பயிற்சி நிறுவனம்

❖ இந்தியாவிலேயே ஒரு மாநில அரசால் தொடங்கப்பட்டு சிறப்பாக இயங்கி வரும் திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிக்கான கல்லூரி, "தமிழ்நாடு அரசு எம்.ஜி.ஆர். திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவனம்" என்கிற பெருமைக்குரியது. இந்நிறுவனத்தில் திரைப்படங்கள் மற்றும் தொலைக்காட்சிநிகழ்ச்சிகள் தயாரிப்பதற்குத் தேவையான தொழில்நுட்பங்களையும் பிற துணைப்பாடங்களையும் மாணவர்களுக்கு கற்பிக்கப்படுகிறது. 1945ஆம் ஆண்டு முதல் மத்திய பல்தொழில்நுட்பப் பயிற்சி மையத்தில் ஓர் அங்கமாக இருந்து, 1960ஆம் ஆண்டு ஒரு தனிப் பயிற்சி நிறுவனமாக மாற்றப்பட்டது.



❖ தமிழக அரசின் செய்தித்துறை கட்டுப்பாட்டின் கீழ் இயங்கும் இந்நிறுவனம் 15.25 ஏக்கர் நிலப்பரப்பில் செயல்பட்டு வருகிறது. இந்நிறுவனத்தில்பயிற்றுவிக்கப்பட்டுவந்தபட்டயக்கல்விகள் 2016–2017ஆம்கல்வி ஆண்டு முதல் தமிழ்நாடு டாக்டர் ஜெ ஜெயலலிதா இசை மற்றும் கவின் கலை பல்கலைக்கழக அங்கீகாரத்துடன் இந்தியாவிலேயே முதன் முறையாக இளங்கலை–காட்சிக்கலை (ஒளிப்பதிவு / எண்மிய இடைநிலை / ஒலிப்பதிவு / இயக்குதல் மற்றும் திரைக்கதை எழுதுதல் / படத்தொகுப்பு / உயிர்ப்பூட்டல் மற்றும் காட்சிப் பயன்) எனும் பட்டப்படிப்புகளாகத் தரம் உயர்த்தப்பட்டுள்ளது.

❖ மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் இந்த நிறுவனம் "தமிழ்நாடு அரசு எம்.ஜி.ஆர். திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவனம்" என 09.08.2021 அன்று பெயர் மாற்றம் செய்யப்பட்டது.

❖ இந்நிறுவனத்தின் பயன்பாட்டிலுள்ள குளிர்சாதன வசதியுடன் கூடிய படப்பிடிப்புத் தளம், மாணவர் விடுதி, நீதிமன்றம், சிறைச்சாலை ஆகியன 5 கோடியே 9 இலட்சம் ரூபாய் செலவில்நவீன முறையில் புனரமைக்கப்பட்டுள்ளன.

❖ இந்நிறுவனத்தின் கூட்ட அரங்கம் சீரமைக்கப்பட்டு பழுதடைந்த கட்டடங்கள், மின்கலங்கள் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள் 1 கோடியே 58 இலட்சம் ரூபாய் செலவில் மேம்படுத்தப்பட்டுள்ளன.

❖ மாணவர்கள் மற்றும் பணியாளர்கள் உணவருந்தும் அறை 25 இலட்சம் ரூபாய் செலவில் புதுப்பிக்கப்பட்டுள்ளது.

❖ இந்நிறுவனத்தில் ஒளிப்பதிவு, ஒலிப்பதிவு, எண்மிய இடைநிலை, திரைக்கதை மற்றும் இயக்கம், படத்தொகுப்பு மற்றும் காட்சிக்கலை ஆகிய 6 பிரிவுகளின் பாடத்திட்டங்களும் உலகத் தரத்திற்கு இணையாக உயர்த்தப்பட்டுள்ளதன் பயனாக, இந்நிறுவனத்தில் பயிலும்



மாணவர்களின் திறன் மேம்பட வழிவகை ஏற்படுத்தப்பட்டுள்ளது.

- இந்நிறுவனத்தில் நான்காம் ஆண்டு பயிலும் மாணவர்களின் இறுதித் திட்ட குறும்படப் படப்பிடிப்பு தயாரிப்புச் செலவினமானது ஒவ்வொரு குழுவிற்கும் 50 ஆயிரம் ரூபாயிலிருந்து 1 இலட்சம் ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது.
- 2008–2009ஆம் கல்வியாண்டு முதல் 2014–2015ஆம் கல்வியாண்டுகள் வரையிலான மாணவர் விருதுகளானது, மாண்புமிகு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் அவர்கள் தலைமையில் நடைபெற்ற விழாவில் 35 மாணவர்களுக்கு தலா 1 பவுன் தங்கப்பதக்கம், ரொக்கம் 5 ஆயிரம் ரூபாய், நினைவுப்பரிசு மற்றும் சான்றிதழ் ஆகியவை வழங்கிச் சிறப்பிக்கப்பட்டன.
- 21.11.2023 அன்று நடைபெற்ற தமிழ்நாடு டாக்டர் ஜெ.ஜெயலலிதா இசை மற்றும் கவின் கலை பல்கலைக்கழகத்தின் இரண்டாம் பட்டமளிப்பு விழாவில் பல்கலைக்கழகத்தின் வேந்தருமான மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் மற்றும் பல்கலைக்கழக இணை வேந்தருமான மாண்புமிகு தமிழ் வளர்ச்சி, கலை, பண்பாடு மற்றும் செய்தித்துறை அமைச்சர் ஆகியோர்களால் தமிழ்நாடு அரசு எம்.ஜி.ஆர் திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவனத்தில் 2016–2020, 2017–2021, 2018–2022 மற்றும் 2019–2023 ஆகிய பருவ ஆண்டுகளில் பயின்ற 300 மாணவ / மாணவியர்களுக்கு பட்டங்கள்வழங்கி சிறப்பிக்கப்பட்டது.
- அதிநவீன தொழில்நுட்பத்துடன் கூடிய வர்த்தக ரீதியிலான 3 புதிய படப்பிடிப்புத் தளங்கள் 39 கோடியே 33 இலட்சம் ரூபாய்மதிப்பீட்டில் அமைத்திட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.
- மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாட்டிலேயே முதன்முறையாக உலகத்தரம் வாய்ந்த அதிநவீன திரைப்பட நகரம் திருவள்ளூர் மாவட்டம் குத்தம்பாக்கத்தில் 152 ஏக்கர் நிலப்பரப்பில் அமைக்கப்படும் என்று அறிவித்ததைத் தொடர்ந்து, அதற்கான பூர்வாங்கப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

வருங்கால சாதனைப் பணிகள் 2024–2025

- சிவகங்கை பகுதியின் இராணியும் ஆங்கிலேயர்களை வெற்றிகண்ட சுதந்திரப் போராட்ட வீராங்கனையுமான இராணி வேலுநாச்சியார் அவர்களுக்கு சென்னை காந்தி மண்டப வளாகத்தில் 50 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில்திருவுரு வச்சிலைஅமைத்திட பூர்வாங்கப் பணிகள் நடைபெற்று வருகிறது.
- தாய்நாட்டின் விடுதலைக்காக ஆங்கிலேயர்களை எதிர்த்து விடுதலை வேள்வியில் தீர்க்கமாய்ப் போரிட்ட சிவகங்கைச் சீமையை ஆண்ட மருது சகோதரர்களுக்கு சிவகங்கை மாவட்டத்தில் 50 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் திருவுருவச்சிலை அமைத்திட பூர்வாங்கப் பணிகள் நடைபெற்று வருகிறது.
- தமிழ்நாட்டில் முதன் முதலில் அச்சு இயந்திரத்தை நிறுவி தமிழுக்குப் பெருமை சேர்த்த சீகன் பால்கு அவர்களுக்கு மயிலாடுதுறை மாவட்டத்தில் சிலையுடன் கூடிய அரங்கம் அமைத்திட பூர்வாங்கப் பணிகள் நடைபெற்று வருகிறது
- சிந்துவெளி நாகரிகத்தை வெளிபடுத்திய தொல்லியல் துறையின் தலைமை இயக்குநராகப்பணிபுரிந்தசர்.ஜான்ஹூபர்ட் மார்ஷல் அவர்களுக்குச் சென்னையில் 50 இலட்சம்ரூபாய் மதிப்பீட்டில் திருவுருவச்சிலை அமைத்திட பூர்வாங்கப் பணிகள் நடைபெற்று வருகிறது.
- அறிவியல் விஞ்ஞானி ஜி.டி நாயுடு அவர்களுக்குக்கோயம்புத்தூரில்50இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் திருவுருவச்சிலை அமைத்திட பூர்வாங்கப் பணிகள் நடைபெற்று வருகிறது.
- மேனாள் குடியரசுத் தலைவர் பாரத ரத்னா டாக்டர் சர்வ பள்ளி இராதாகிருஷ்ணன் அவர்களுக்கு திருவள்ளூர் மாவட்டம், திருத்தணியில் 50 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் திருவுருவச்சிலை அமைத்திட பூர்வாங்கப் பணிகள் நடைபெற்று வருகிறது.
- இந்தியாவின் இரும்பு பெண்மணி என போற்றப்படும் ஒரே பெண் பிரதமரும், தீர்க்கமான வெளியுறவுக் கொள்கையை கொண்டவரும், பசுமைப் புரட்சிக்கு வித்திட்டவருமான இந்திராகாந்தி அம்மையாருக்கு சென்னையில் 50 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் திருவுருவச்சிலை அமைத்திட பூர்வாங்கப் பணிகள் நடைபெற்று வருகிறது.
- இந்திய விடுதலைப் போராட்டத்தில் பங்குகொண்டு சிறை சென்றவரும், பொதுமக்களால்"தென்னாட்டு ஜவகர்"என்று அழைக்கப்பட்ட வருமான பட்டுக்கோட்டை தியாகி வை. நாடிமுத்துப்பிள்ளை அவர்களுக்கு தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டையில் 50 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் திருவுருவச்சிலை அமைத்திட பூர்வாங்கப் பணிகள் நடைபெற்று வருகிறது.
- காவேரி மீட்புக் குழுவில் இணைந்து போராடியவரும், விவசாயிகளின் நலன்களுக்காகப் பாடுபட்டவருமான கரூர் நாடாளுமன்ற உறுப்பினராகவும் செயல்பட்டசி. முத்துசாமி அவர்களுக்கு கரூர் மாவட்டத்தில் 50 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் திருவுருவச்சிலை அமைத்திட பூர்வாங்கப் பணிகள் நடைபெற்று வருகிறது.
- செய்தி மக்கள் தொடர்புத்துறையின் நிர்வாகக் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள 31 மணிமண்டபங்கள் / அரங்கங்களில் பாதுகாப்பு மற்றும் தூய்மைப்பணிகள் உள்ளிட்ட மேலாண்மைப் பணிகள் தொடர் செலவினமாக ஆண்டுதோறும் 3 கோடியே 25 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.
- செய்தி மக்கள் தொடர்புத்துறையின் நிருவாகக் கட்டுப்பாட்டின்கீழ் உள்ள மணிமண்டபங்கள் / அரங்கங்களில் பராமரிப்புப் பணிகள் முதற்கட்டமாக 5 கோடி ரூபாய்மதிப்பீட்டில்மேற்கொள்ளப்பட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.
- "திவான்பகதூர் திராவிடமணி இரட்டைமலை சீனிவாசன் பிறந்த நாளான ஜூலை திங்கள் 7ஆம் நாள் செங்கல்பட்டு மாவட்டத்தில்



ஆண்டுதோறும் அரசு விழாவாக கொண்டாடப்பட்டு வருகிறது.

- "சுதந்திரப் போராட்டத் தியாகி அஞ்சலை அம்மாள் பிறந்த நாளான ஜூன் திங்கள் 1ஆம் நாள் கடலூர் மாவட்டத்தில் ஆண்டுதோறும் அரசு விழாவாக கொண்டாடப்பட்டு வருகிறது.
- மதுரை மாவட்டம், உசிலம்பட்டி, பெருங்காமநல்லூரில் ஆங்கிலேய ஆட்சியாளர்களை எதிர்த்துப் போராடி தங்கள் இன்னுயிரை ஈந்த 16 வீர தியாகிகளுக்கு ஏப்ரல் திங்கள் 3–ஆம் நாள் மதுரை மாவட்டத்தில் ஆண்டுதோறும் நினைவு நாளாக அனுசரிக்கப்பட்டு வருகிறது.
- "சுதந்திரப் போராட்ட வீரர் தியாகி இம்மானுவேல் சேகரனார் பிறந்த நாளான அக்டோபர் திங்கள் 9ஆம் நாள் இராமநாதபுரம் மாவட்டத்தில் ஆண்டுதோறும் அரசு விழாவாகக் கொண்டாடப்படவுள்ளது".
- "அல்லாள இளைய நாயக்கர் பிறந்த நாளான தைத் திங்கள் 1ஆம் நாள் நாமக்கல் மாவட்டத்தில் அரசு விழாவாகக் கொண்டாடப்படவுள்ளது.
- "சுதந்திரப்போராட்டத்தியாகிகு.மு.அண்ணல் தங்கோ பிறந்த நாளான ஏப்ரல் திங்கள் 13ஆம் நாள் வேலூர் மாவட்டத்தில் ஆண்டுதோறும் அரசு விழாவாகக் கொண்டாடப்படவுள்ளது.
- "ஏழிசை மன்னர் எம்.கே.தியாகராஜ பாகவதர் பிறந்த நாளான மார்ச் திங்கள் 1ஆம் நாள் திருச்சி மாவட்டத்தில் ஆண்டுதோறும் அரசு விழாவாகக் கொண்டாடப்படவுள்ளது.
- "சர்.ஏ.டி.பன்னீர்செல்வம் பிறந்த நாளான ஜூன் திங்கள் 1ஆம் நாள் திருச்சி மாவட்டத்தில் ஆண்டுதோறும் அரசு விழாவாகக் கொண்டாடப்படவுள்ளது.
- "தமிழறிஞர் டாக்டர் மு.வரதராசனார் பிறந்த நாளான ஏப்ரல் திங்கள் 25ஆம் நாள் இராணிப்பேட்டை மாவட்டத்தில் ஆண்டுதோறும் அரசு விழாவாகக் கொண்டாடப்படவுள்ளது.
- "எழுத்தாளர் கி.ராஜநாராயணன் பிறந்த நாளான செப்டம்பர் திங்கள் 19ஆம் நாள் தூத்துக்குடி மாவட்டத்தில் ஆண்டுதோறும் அரசு விழாவாகக் கொண்டாடப்படவுள்ளது.
- 2024–2025ஆம் ஆண்டிற்கான செய்தித் துறை மானியக்கோரிக்கை அறிவிப்புகளான மேனாள் குடியரசுத் தலைவர் டாக்டர் ஏ.பி.ஜெ.அப்துல் கலாம் பிறந்த நாளான அக்டோபர் திங்கள் 15–ஆம் நாள் சென்னையில் ஆண்டுதோறும் அரசு விழாவாகவும் மற்றும் மேனாள் சென்னை மாகாண முதலமைச்சர் ப.சுப்பராயன் பிறந்த நாளான செப்டம்பர் திங்கள் 11ஆம் நாள் சென்னையில் ஆண்டுதோறும் அரசு விழாவாகவும்கொண்டாடப்படவுள்ளது.
- "டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி அவர்களின் பிறந்த நாளான ஜூலை திங்கள் 7ஆம் நாள் புதுக்கோட்டை மாவட்டத்தில் ஆண்டுதோறும் அரசு விழாவாக கொண்டாடப்படும்.

எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறை



- எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறையில் கடந்த மூன்றாண்டுகளில் பல்கலைக்கழகங்களுக்கான விடைத்தாட்கள் அச்சிடும் பணி, பிற அரசுத்துறை மற்றும் அரசு நிறுவனங்களுக்கான அச்சுப்பணி செயலாக்கத்தின் மூலம் ரூ.69.78 கோடி மற்றும் பெயர் மாற்ற அறிவிக்கைகள் மற்றும் அரசிதழ்கள் வெளியீடு விற்பனை மூலம் ரூ.4.85 கோடி என ஆக மொத்தம் ரூ.74.63 கோடி அரசுக்கு வருவாயாக ஈட்டப்பட்டுள்ளது.

- பழுதடைந்துள்ள சேலம் அரசு கிளை அச்சகக் கட்டடம், சென்னை, அரசு மைய அச்சகத்தில் பிரதான அச்சு இயந்திரம் அமைந்துள்ள கட்டடம், திருச்சி அரசு கிளை அச்சகக் கட்டடம், மதுரை அரசு கிளை அச்சகக் கட்டடம் மற்றும் விருத்தாசலம் அரசு கிளை அச்சகக் கட்டடம் ஆகியவை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, ரூ.4.55 கோடி மதிப்பில் 100 சதவீத புனரமைப்புப் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. இதில் அரசு கிளை அச்சகம், விருத்தாசலம் அலகில் கட்டடப் பராமரிப்புப் பணிக்காக ரூ.19.83 இலட்சம் மதிப்பீட்டில் மின் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

- சென்னை அரசு மைய அச்சகத்திற்கு 2021–2022ஆம் நிதியாண்டில் ரூ.18,00,000/– மதிப்பீட்டில் சுமை ஊர்தி கொள்முதல் செய்யப்பட்டுள்ளது.

- சென்னை அரசு மைய அச்சகத்திற்கு ரூ.5,00,000/– செலவில் சிப்பம் கட்டும் இயந்திரம் (Paper Bailing Machine) கொள்முதல் செய்யப்பட்டு நிறுவப்பட்டுள்ளது.

- சென்னை, தண்டையார்பேட்டையில் ரூ.34.54 கோடிச் செலவில் அரசு அச்சக ஊழியர்களுக்கு நவீன வசதிகளுடன் கூடிய 96 குடியிருப்புகள் கட்டுவதற்கு அடிக்கல்



நாட்டப்பட்டு, பொதுப்பணித்துறையினரால் பணி நடைபெற்று வருகிறது.

- ❖ எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறைக்கு முதல் முறையாக தரக்கட்டுப்பாடு ஆய்வகம் ரூ.1.09 கோடி மதிப்பீட்டில் அமைக்க
- ❖ அறிவிப்பு வெளியிடப்பட்டு ஆய்வகம் அமைத்திட ரூ.55,00,000/- நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு பொதுப்பணித்துறையினரால் கட்டடம் கட்டும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.
- ❖ சென்னை, அரசு எழுதுபொருள் அலுவலகம் புனரமைப்பதற்கு ரூ.1.25 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு, புனரமைப்புப் பணி நடைபெற்று வருகிறது.
- ❖ சென்னை, அரசு மைய அச்சகத்திற்கு 2022-2023ஆம் நிதியாண்டில் ரூ.1.15 கோடி மதிப்பில் நான்கு வண்ண எண்ணிம உற்பத்தி அச்சுப்பொறி (Four Colour Toner Based Digital Production Printer) இயந்திரம் கொள்முதல் செய்யப்பட்டு, நிறுவப்பட்டு பயன்படுத்தப்பட்டு வருகிறது.
- ❖ சென்னை, அரசு மைய அச்சகம் மற்றும் 5 கிளை அச்சகங்களுக்கு ரூ.95.89 இலட்சம் மதிப்பில் ஆறு எண்ணிக்கை கருப்பு வெள்ளை எண்ணிம மை தெளிப்பு உற்பத்தி அச்சுப்பொறி இயந்திரங்கள் (Black and White Inkjet Digital Production Printer), கொள்முதல் செய்து நிறுவப்பட்டு பயன்பாட்டில் உள்ளது.
- ❖ சென்னை, அரசு மைய அச்சகத்திற்கு ரூ.59.35 இலட்சம் மதிப்பில் இரண்டு எண்ணிக்கை நான்கு வண்ண எண்ணிம மை தெளிப்பு உற்பத்தி அச்சுப்பொறி இயந்திரங்கள் (Four Colour Digital Inkjet Production Printer) கொள்முதல் செய்து நிறுவப்பட்டு பயன்பாட்டில் உள்ளது.
- ❖ சென்னை, அரசு மைய அச்சகம் மற்றும் அனைத்து கிளை அச்சகங்களுக்கும் ரூ.20.59 இலட்சம் மதிப்பில் நெகிழி அடித்தட்டுகள் (Plastic Pallets), கொள்முதல் செய்யப்பட்டு பயன்பாட்டில் உள்ளது.
- ❖ சென்னை, அரசு மைய அச்சகத்திற்கு 2023-2024ஆம் நிதியாண்டில் ரூ.2.50 கோடி மதிப்பீட்டில் ஒரு Thermal CTP இயந்திரம் கொள்முதல் செய்து நிறுவப்பட்டுள்ளது.
- ❖ சேலம் மற்றும் விருத்தாசலம் அரசு கிளை அச்சகங்களில் 2023-2024ஆம் நிதியாண்டில் ரூ.13.27 இலட்சம் மதிப்பில், 2 எண்ணிக்கை காகித உருளையை ஏற்றும் தள்ளுவண்டிகள் (Hydraulic Reel Loading Trolley) நிறுவப்பட்டு பயன்பாட்டில் உள்ளன.
- ❖ சேலம் மற்றும் மதுரை அரசு கிளை அச்சகங்களில் 8 எண்ணிக்கை நியூமேடிக் தண்டுகள் (Pneumatic Shaft) தலா 4 எண்ணிக்கை நிறுவப்பட்டு பயன்பாட்டில் உள்ளன.
- ❖ சேலம், மதுரை, திருச்சி மற்றும் புதுக்கோட்டை அரசு கிளை அச்சகங்களில் 8 எண்ணிக்கை ஹைட்ராலிக் நகர்

அடிமேடைகள் (Hydraulic Pallet Trolley) தலா இரண்டு எண்ணிக்கை நிறுவப்பட்டு பயன்பாட்டில் உள்ளன.

- மதுரை அரசு கிளை அச்சகத்தில் 15 எண்ணிக்கை கையினால் எண்களிடும் இயந்திரங்கள் (Hand Numbering Machine) நிறுவப்பட்டு பயன்பாட்டில் உள்ளன.
- அரசு கிளை அச்சகங்கள் விருத்தாசலம், சேலம் மற்றும் புதுக்கோட்டை ஆகிய அலகுகளில் பொதுமக்களின் பெயர் திருத்தம் / மாற்றம் செய்வதற்கு உரிய பிரிவுகள் துவங்கப்பட்டு பொதுமக்கள் பெரிதும் பயன் பெறுகின்றனர்.
- எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறையில் கருணை அடிப்படையிலான பணிநியமன ஆணைகள் 14 நபர்களுக்கு வழங்கப்பட்டன.

வருங்கால சாதனைப் பணிகள் 2024 – 2025

- சென்னை அரசு மைய அச்சகத்திற்கு புதிய Sheetfed CPC 4 Colour இயந்திரம் ஒன்று ரூ.9,00,00,000/– மதிப்பில் கொள்முதல் செய்யப்பட்டு உட்கட்டமைப்பு மற்றும் மின் பராமரிப்பு வசதிகள் ஏற்படுத்தப்படும்.
- திருச்சி அரசு கிளை அச்சகத்திற்கு நிரலாக்க வெட்டும் இயந்திரம் (Programme Cutting Machine) ஒன்று ரூ. 85,00,000/– மதிப்பில் கொள்முதல் செய்யப்படும்.
- சென்னை அரசு மைய அச்சகம், அரசு கிளை அச்சகம் மதுரை, சேலம் மற்றும் புதுக்கோட்டை அலகுகளில் உள்ள முன் அச்சுப் பிரிவிற்கு தேவைப்படும் கணினிகள், பிரிண்டர்கள் மற்றும் UPS ரூ.37,33,358/– மதிப்பில் கொள்முதல் செய்யப்படும்.
- சென்னை அரசு மைய அச்சக முன் அச்சுப் பிரிவிற்கு தேவையான Adobe CC மென் பொருள் ரூ.14,51,400/– மதிப்பிலும் மற்றும் CorelDRAW மென் பொருள் ரூ. 6,23,040/– மதிப்பிலும் கொள்முதல் செய்யப்படும்.
- சென்னை அரசு மைய அச்சக பயன்பாட்டிற்கு Spot UV Machine ஒன்று ரூ.15,40,000/– மதிப்பில் கொள்முதல் செய்யப்படும்.
- சென்னை அரசு மைய அச்சகம், மற்றும் அரசு எழுதுபொருள் அலுவலகத்திற்கு RO Water Plant 3 எண்கள் ரூ.10,44,000/– மதிப்பில் கொள்முதல் செய்யப்பட்டு நிறுவப்படும்.
- ஆணையரகம் மற்றும் அரசு அச்சகங்களுக்கு அலுமினியம் ஏணி – 4 எண்ணிக்கைகள் மற்றும் அரசு எழுது பொருள் அலுவலகத்திற்கு ஹைட்ராலிக் ஏணி (Hydraulic Ladder) – 2 எண்ணிக்கைகள் ரூ.5,40,000/– மதிப்பில் கொள்முதல் செய்யப்படும்.
- திருச்சி அரசு கிளை அச்சகத்திற்கு Envelope Punching Machine ஒன்று ரூ.4,72,000/– மதிப்பில் கொள்முதல் செய்யப்படும்.
- சென்னை அரசு மைய அச்சக முன் அச்சுப் பிரிவில் வெள்ளை காகிதத்தில் பார்வைப் படிகளை அச்சிடுதல் மற்றும் நகலெடுத்தல் பணிக்காக A3 Monochrome Laser Printer இரண்டு எண்ணிக்கைகள் ரூ.3,60,000/– மதிப்பில் கொள்முதல் செய்யப்படும்.
- சென்னை அரசு எழுதுபொருள் அலுவலகத்திற்கு, CCTV Camera–கள் ரூ.3,13,585/– மதிப்பில் கொள்முதல் செய்யப்படும்.
- சென்னை அரசு மைய அச்சகத்தில் பெரிய அளவிலான வண்ண பார்வைப் படிகள் அச்சிடுதல் பணிக்காக Large Format Plotter Type Printer ஒன்று ரூ.2,24,200/– மதிப்பில் கொள்முதல் செய்யப்படும்.
- சென்னை அரசு மைய அச்சக பயன்பாட்டிற்கு Polymer Rubber Stamp Making Machine (Chemical Free) ஒன்று ரூ.2,06,500/– மதிப்பில் கொள்முதல் செய்யப்படும்.
- எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறை ஆணையரக வளாகத்தில் உள்ள பாரம்பரியம் மிக்க லாரன்ஸ் கட்டடம் புதுப்பிக்கப்படும்.
- திருப்பூர் மாவட்டத்தில் புதியதாக ஒரு அரசு கிளை அச்சகம் துவங்கப்படும்.

கலை, பண்பாட்டுத் துறை



- துபாயில் 25.03.2022 முதல் 31.03.2022 வரை நடைபெற்றஉலக கண்காட்சியில் (World Expo) கலை பண்பாட்டுத்துறையின் கலை நிகழ்ச்சிகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 25.03.2022 அன்று தொடங்கி வைத்தார்கள்.
- 75வது சுதந்திர தின விழாவையொட்டி, விடுதலைப் போராட்ட வீராங்கனை வீரமங்கை வேலு நாச்சியாரின் நினைவாக, சென்னை கலைவாணர் அரங்கில் 13.08.2022 அன்று வரலாற்று நாட்டிய நாடகம் ரூ. 12 இலட்சம் செலவில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் முன்னிலையில் நடத்தப்பட்டதைத் தொடர்ந்து கோயம்புத்தூர், மதுரை ஆகிய நகரங்களிலும் நடத்தப்பட்டன.
- 'சென்னை சங்கமம் – நம்ம ஊரு திருவிழா' என்ற பிரம்மாண்டமான நாட்டுப்புற கலை விழா மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 13.01.2023 அன்று தொடங்கி வைக்கப்பட்டு,சென்னையின்18இடங்களில் 14.01.2023 முதல் 17.01.2023 வரை சுமார் 1,000 நாட்டுப்புறக் கலைஞர்களைக் கொண்டு கலை நிகழ்ச்சிகள் ரூ.5.62 கோடி செலவில் நடத்தப்பட்டன.
- 'சென்னை சங்கமம்–நம்ம ஊரு திருவிழா' நிகழ்ச்சியின் வெற்றியைத் தொடர்ந்து இவ்விழாவினை சென்னையிலும் தமிழ்நாட்டின் 8நகரங்களிலும்நடத்துவதற்கு ரூ.11.00 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டது. 13.01.2024 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் சென்னையில் தொடங்கி வைக்கப்பட்டதைத் தொடர்ந்து, சென்னையில் 18 இடங்களில் 14.01.2024 முதல் 17.01.2024 வரை 1,500 கலைஞர்களைக் கொண்டு நடத்தப்பட்டன. கோயமுத்தூர், மதுரை, சேலம், தஞ்சாவூர் மற்றும் திருச்சிராப்பள்ளி ஆகிய இடங்களிலும் 1,720 கலைஞர்கள் பங்குபெற்ற சங்கமம் – நம்ம ஊரு திருவிழா கலை நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன.
- தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தின் வாயிலாக தேர்ந்தெடுக்கப்பட்ட 1,000 கலைஞர்களுக்குநலிந்தகலைஞர்களுக்கான மாதாந்திர ஓய்வூதியநிதியுதவி பெறுதவற்கான ஆணை,08.06.2021 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் வழங்கப்பட்டது.
- புகழ்பெற்ற கலைஞரான திரு.எம்.கே.தியாகராஜ பாகவதரின் பேரன் திரு.சாய்ராம் என்பவர் வறுமையில் வாழ்ந்து வருவதை அறிந்து முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து ரூபாய் 5 இலட்சம் நிதியுதவியினை 02.07.2021 அன்று

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வழங்கினார்கள்.

- நாட்டுப்புறக் கலைஞர்கள் நலவாரியத்தின் உறுப்பினர்களில் ஆண்டுதோறும் 500 கலைஞர்களை தேர்வு செய்து ரூ.10,000/- மதிப்பீட்டில்தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தின் வாயிலாக இசைக்கருவிகள், ஆடை, ஆபரணங்கள் வாங்குவற்கு நிதியுதவி வழங்கும் திட்டத்தினைமாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 14.10.2022 அன்று தொடங்கி வைத்தார்கள்.
- கலைமாமணி விருது பெற்ற கலைஞர்களில் நலிந்த நிலையில் வாழும் கலைஞர்களுக்கு ஒருமுறை வழங்கப்படும் பொற்கிழி தொகை ரூ. 50 ஆயிரத்திலிருந்து ரூ.1.00 இலட்சமாக உயர்த்தி 10 கலைஞர்களுக்கு ரூ.10.00 இலட்சம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 14.10.2022 அன்று வழங்கப்பட்டது.
- தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் சார்பில் மறைந்த புகழ் பெற்ற கலைஞர்களின் குடும்பத்தினருக்கு ஒருமுறை வழங்கப்படும் குடும்ப பாரமரிப்பு நிதி ரூ.25,000/- ற்கான காசோலைகளை 18 பயனாளிகளுக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 20.01.2023 அன்று வழங்கினார்கள்.
- சென்னையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 05.09.2022 அன்று தொடங்கி வைக்கப்பட்ட 'புதுமை பெண் திட்டம்' விழாவில் 90 பெண் கலைஞர்கள் மற்றும் மாணவிகளின் கலை நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன.
- தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தின் வாயிலாக கலைமாமணி விருது பெற்று வறிய நிலையில் வாழும் 10 கலைஞர்களுக்கு 29.09.2023 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் பொற்கிழி விருதுத் தொகை ரூ.1 இலட்சம் வீதம், ரூ.10 இலட்சம் நிதியுதவி வழங்கப்பட்டது.
- தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தின் வாயிலாக தேர்ந்தெடுக்கப்பட்ட 500 நாட்டுப்புறக் கலைஞர்களுக்கு 29.10.2023 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் இசைக்கருவிகள், ஆடை ஆபரணங்கள் வாங்குவதற்கு ஒரு கலைஞருக்கு ரூ.10,000/- வீதம் ரூ.50 இலட்சம் நிதியுதவி வழங்கப்பட்டது.
- தமிழ்நாடு டாக்டர் ஜெ.ஜெயலலிதா இசை மற்றும் கவின் கலைப் பல்கலைக்கழகம் மற்றும் அதன் இணைவு பெற்ற கல்லூரிகளில் 2019-2020 முதல் 2022-2023 வரையிலான கல்வியாண்டுகளில் பயின்ற 3448 மாணாக்கர்களுக்கு வழங்கப்படாமலிருந்த பட்டங்கள் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 21.11.2023 அன்று நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில் வழங்கப்பட்டன.
- தமிழ்நாடு டாக்டர் ஜெ.ஜெயலலிதா இசை மற்றும் கவின்கலைப் பல்கலைக் கழகத்தின் புதிய கட்டடம் ரூ.14.83 கோடிச் செலவில் கட்டப்பட்டு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 08.03.2024 அன்று திறந்து வைக்கப்பட்டது.
- புதுக்கோட்டை மாவட்ட அரசு இசைப்பள்ளியின் புதிய கட்டடம் ரூ.1.00 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 08.06.2023 அன்று திறந்து வைக்கப்பட்டது.
- மயிலாடுதுறை மாவட்டம், சீர்காழி அரசு இசைப்பள்ளியின் புதிய கட்டடம் ரூ.1.10 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 04.03.2024 அன்று திறந்து வைக்கப்பட்டது.
- தமிழ்நாடு நாட்டுப்புறக் கலைஞர்கள் நலவாரியத்தின் சார்பில் 941 நாட்டுப்புறக் கலைஞர்களுக்கு ரூ. 50 இலட்சம் மதிப்பீட்டிலான நலத்திட்ட உதவிகளை வழங்கிடும் அடையாளமாக 10 நாட்டுப்புறக் கலைஞர்கள் மற்றும் அவர்களது மரபுரிமையினருக்கு காசோலைகள் 24.07.2024 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் வழங்கப்பட்டது.
- கடலூர் மாவட்ட அரசு இசைப்பள்ளியின் புதிய கட்டடம் ரூ.1.60 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் மற்றும் மாண்புமிகு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் அவர்களால் 27.11.2023 அன்று திறந்து வைக்கப்பட்டது.
- தமிழ்நாடு டாக்டர் ஜெ. ஜெயலலிதா இசை மற்றும் கவின்கலைப் பல்கலைக்கழகத்தில் உள்ள திறந்த வெளி கலையரங்கம் ரூ. 1.43 கோடி செலவில் புதுப்பிக்கப்பட்டு மாண்புமிகு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் அவர்களால் 08.03.2024 அன்று திறந்து வைக்கப்பட்டது.

❖ நுண்கலைகளை வளர்க்கும் வகையில் மாநில அளவிலான ஓவியம் மற்றும் சிற்பக்கலைகாட்சி அருங்காட்சிய வளாகத்தில் 10.10.2023 அன்று மாண்புமிகு தமிழ்வளர்ச்சி மற்றும் செய்தித்துறைஅமைச்சர் அவர்களால்வழங்கப்பட்டது.

விவரம்	பரிசுத் தொகை	பரிசு எண்ணிக்கை	மொத்த தொகை
மூத்த கலைஞர்கள்	ரூ.15000/-	30	4,50,000
இளம் கலைஞர்கள்	ரூ 10000/-	20	2,00,000

❖ கவின் கலைகளில் சிறந்து விளங்கும் கலைஞர்களுக்கு வழங்கப்படும் கலைச்செம்மல் விருது மாண்புமிகு தமிழ்வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் அவர்களால் வழங்கப்பட்டது.

நாள்	கலைச்செம்மல் விருது ஆண்டு	விருதாளர்கள் எண்ணிக்கை
10.10.2023	2020-2021	6
05.02.2024	2021-2022 முதல் 2023-2024 வரை	18

❖ யுனஸ்கோ சென்னையை இசை நகரமாக அறிவித்தமையைக் கொண்டாடும் விதமாக இசை விழா ரூ.10.00 இலட்சம் செலவில் 05.02.2024 அன்று மாண்புமிகு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் அவர்கள் தலைமையில் நடத்தப்பட்டது.

❖ இந்திய அளவில் சிறந்த கலைக்கல்வி அளிக்கும் கல்லூரிகள் குறித்த ஆய்வு செய்த அவுட் லுக் செய்தி நிறுவனம் தரவரிசைப் பட்டியல் வெளியிட்டுள்ளது. இப்பட்டியலில் தமிழ்நாடு அரசு இசைக்கல்லூரி,திருவையாறு முதல் இடத்தையும், தமிழ்நாடு அரசு இசைக்கல்லூரி, சென்னை பனிரெண்டாவது இடத்தையும், அரசினர் கட்டடக்கலை மற்றும் சிற்பக்கல்லூரி, மாமல்லபுரம் தங்க தரவரிசைப் பிரிவில் இடம் பெற்றுள்ளது.

❖ 75வது சுதந்திர ஆண்டையொட்டி ரூ.164 இலட்சம் செலவில் 75 நாட்டுப்புறக் கலை வடிவங்கள் 75 ஒளிப்படங்களாக தயாரிக்கப்பட்டு இணைய வழியில் வெளியிடப்பட்டன.

❖ மகாகவி பாரதியாரின் 100-வது நினைவு நாளினை கொண்டாடும் வகையில் ஓவியப்போட்டிகள் நடத்தப்பட்டன.

❖ ஒன்றிய அரசால் அனுமதி வழங்கப்படாத 'விடுதலைப் போரில் தமிழகம்' என்ற தலைப்பிலான அலங்கார ஊர்திகள் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி செய்தித்துறையின் சார்பில் வடிவமைக்கப்பட்டு தமிழ்நாட்டின் பல மாவட்டங்களுக்கும் அனுப்பப்பட்ட போது கலை பண்பாட்டுத்துறையின் சார்பாக கலை நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன.

❖ சென்னை, மயிலாப்பூரில் 01.03.2022 அன்று நடைபெற்ற மகா சிவராத்திரி விழாவில் 70 க்கும் மேற்பட்ட அரிய இசைக்கருவிகளின் கண்காட்சி மற்றும் இசைத்தல் நிகழ்ச்சி நடத்தப்பட்டது.

❖ 'நம்ம ஊரு திருவிழா' என்ற பெயரில் பிரமாண்டமான நாட்டுப்புறக் கலை விழா 500 நாட்டுப்புறக் கலைஞர்களைக் கொண்டு ரூ.91 இலட்சம் செலவில் 21.03.2022 அன்று சென்னையில் நடத்தப்பட்டது.

❖ இளங்கலைஞர்களின் கலைத் திறமைகளை வெளிக்கொணர குரலிசை, ஓவியம், பரதநாட்டியம், கிராமிய நடனம், கருவியிசை ஆகிய கலைகளில் மாவட்ட / மாநிலக் கலைப்போட்டிகள் நடத்துவதற்கும் இளம் கலைஞர்களுக்கான மாநிலக் கலை விழாநடத்தவும் தொடர் திட்டமாக 2021-2022 ஆம் ஆண்டு முதல் ஆண்டுதோறும் ரூ.75.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்படுகிறது. இத்திட்டத்தின்படி அனைத்து மாவட்ட/ மாநில அளவிலான போட்டிகள் நடத்தப்பட்டு பரிசுகள் வழங்கப்பட்டு வருகின்றன.

❖ 'கால் கொண்ட கவிதைகள்' என்ற பெயரில் விரைவுத் துவங்கல் குறியீட்டு முறையுடன் (Q R Code) நாள்காட்டி வெளியிடப்பட்டது.

❖ மாவட்டக்கலைமன்றம்வாயிலாகவழங்கப்படும் விருதுகளின் எண்ணிக்கை 5 லிருந்து 15 ஆக உயர்த்தியும், புதிதாக உருவாக்கப்பட்ட மாவட்டங்களுக்கும் இத்திட்டத்தினை விரிவுப் படுத்துவதற்கும் கூடுதலாக ரூ.53.70 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டது. இவ்வகையில் ரூ.71 இலட்சத்தில் ஆண்டுதோறும் தமிழ்நாட்டில் 525 கலைஞர்களுக்கு மாவட்டக்கலை விருதுகள் வழங்கப்படுகின்றன.

❖ 2021-2022 ஆம் நிதியாண்டில் மண்டலக் கலை பண்பாட்டு மையங்கள் வாயிலாக கோவிட் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள், தமிழிசை

விழா, நாட்டிய விழா, நாடக விழா, கிராமியக் கலை விழாக்கள் உள்ளிட்ட பல்வேறு கலை நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு, கலைஞர்களுக்கு ரூ.44.30 இலட்சம் செலவில் மதிப்பூதியமாக வழங்கப்பட்டது.

- தென்னக பண்பாட்டு மையத்துடன் இணைந்து கோயம்புத்தூரில் நவராத்திரி கலை விழா, சேலத்தில் கூத்து திருவிழா, ஸ்ரீரங்கம் வைகுண்ட ஏகாதசி விழா, திருநெல்வேலியில் கணியான் கூத்து கலை விழா, ஸ்ரீவில்லிபுத்தூரில் திருப்பாவை விழா, தஞ்சாவூரில் மார்கழி இசை விழா, எட்டயபுரத்தில் பாரதியார் பிறந்த நாள் விழா, திண்டுக்கல்லில் மாசி பெருந்திருவிழா, சிவகங்கையில் நாட்டுப்புறக்கலை விழா மற்றும் 75 வது சுதந்திர திருநாள் அமுத பெருவிழாக்கள் 2022ஆம் நிதியாண்டில் நடத்தப்பட்டன.
- பூங்காக்கள், கடற்கரைகள், அருங்காட்சியகங்கள் மற்றும் தமிழ்நாட்டில் மக்கள் கூடும் இடங்களில் கலை நிகழ்ச்சிகள் நடத்திட ரூ1.00கோடி ஒதுக்கீடு அளிக்கப்பட்டு 'கலை சங்கமம்' என்னும் கலை விழா சென்னை அரசு அருங்காட்சியகத்தில் 17.09.2022 அன்று தொடங்கி வைக்கப்பட்டு, 30.07.2023 வரை அனைத்து வார இறுதி நாட்களிலும் தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் கலை நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன.
- கும்பகோணம், அரசு கவின் கலைக் கல்லூரியில் அகில இந்தியத் தொழில்நுட்ப கல்விக் கழகத்தின் விதிமுறைகளின்படி உரிய வசதிகளுடன் கூடிய புதிய கட்டடங்கள் ரூ.15.68 கோடி மதிப்பீட்டில் கட்டடங்கள் கட்டப்படுகின்றன.
- சென்னையில் அமைந்துள்ள தமிழ்நாடு அரசு இசைக் கல்லூரியில் உள்ள பாரம்பரியக் கட்டடமான 'பிராடி கேசில்' ரூ.2.80 கோடி மதிப்பீட்டில் மீட்டுருவாக்கம் செய்து புதுப்பிக்கப்பட்டது.
- சென்னை, அரசு கவின்கலைக் கல்லூரியின் பாரம்பரிய கட்டடம் மற்றும் இதர கட்டடங்கள் ரூ.7.33 கோடி மதிப்பீட்டிலும்,கும்பகோணம், அரசு கவின்கலைக் கல்லூரியில் உள்ள கட்டடங்கள் ரூ.1.00 கோடி மதிப்பீட்டிலும் புதுப்பிக்கப்பட்டு வருகின்றன.
- மாமல்லபுரம் அரசு கட்டடக்கலை மற்றும் சிற்பக்கலை கல்லூரியின் சிற்பக்கலை அருங்காட்சியகம் புதுப்பிக்கப்பட்டு மற்றும் விற்பனைக்கூடம் அமைக்கும் பணி ரூ.50.00 இலட்சம் மதிப்பீட்டில் செய்யப்பட்டது.
- கலை பண்பாட்டுத் துறையின் கீழ் செயல்படும் அனைத்து இசைக் கல்லூரிகள், இசைப்பள்ளிகள் மற்றும் ஜவகர் சிறுவர் மன்றங்களில் கற்பித்தலின் தரம் நவீனப்படுத்தப்பட்டு மேம்படுத்தப்படுத்தும் வகையில், ரூ.6.00 கோடி மதிப்பீட்டில் இசைக் கருவிகள், மின்னணுக் கருவிகள், துணைக் கருவிகள், மென்பொருட்கள், தளவாடங்கள், கொள்முதல் செய்யப்பட்டு வழங்கப்பட்டுள்ளன. கணினிக் கூடங்கள், ஒலிப்பதிவுக் கூடங்கள், மற்றும் பிற வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.
- சென்னை மற்றும் மாமல்லபுரத்தில் 31.01.2023 முதல் 02.02.2023 வரை நடைபெற்ற 'ஜி 20 கல்வி பணிக்குழுக் கூட்டம்' மற்றும் 23.03.2023 மற்றும் 24.03.2023 ஆகிய நாட்களில் நடைபெற்ற 'ஜி–20நிதிபணிக்குழுகூட்டம்'ஆகியவற்றில் கண்கவர் கலை நிகழ்ச்சிகள் ரூ.21 இலட்சம் மதிப்பீட்டில் நடத்தப்பட்டன.
- உதகை, கோத்தகிரி, கொடைகானல், ஏற்காடு கோடை விழாக்களிலும், கிருஷ்ணகிரி மாங்கனி விழா, திருத்தணி ஆடிக்கிருத்திகை விழா, ஒகனேக்கல் ஆடிப்பெருக்கு விழா, தீரன் சின்னமலை விழா, கொல்லி மலை வல்வில் ஓரி விழா, திண்டுக்கல் தைப்பூச விழா, குற்றாலம் சாரல் விழா, பழனி தண்டாயுதபாணி ஆலய விழா, ராஜராஜன் சதய விழா, மாமல்லபுரம் இந்திய நாட்டிய விழா, செஸ் ஒலிம்பியாட் வரவேற்பு கலை நிகழ்ச்சிகள் உள்ளிட்ட நிகழ்ச்சிகள் 2022–2023 ஆம் நிதியாண்டில் ரூ.94.61 இலட்சம் செலவில் நடத்தப்பட்டன.
- தென்னக பண்பாட்டு மையத்துடன் இணைந்து, ஸ்ரீரங்கம் வைகுண்ட ஏகாதசி விழா,திருச்சிராப்பள்ளியில்களியூரன் காவேரி, காஞ்சிபுரம் வயலூர் விழா, திருநெடுங்குடி மகா சிவராத்திரி விழா, கன்யாகுமரி சங்கமம், சென்னையில் வசந்த விழா ஆகிய விழாக்கள் மற்றும் சென்னை சங்கமம்– நம்ம ஊரு திருவிழாவில் அயல் மாநிலக்கலைஞர்கள் கலை நிகழ்ச்சிகள் என 2022–2023 ஆம் நிதியாண்டில் ரூ 26.93 இலட்சம் செலவில் நடத்தப்பட்டன.

- புதுடெல்லி, சென்னை மற்றும் தமிழ்நாட்டின் 20 நகரங்களில் 'தமிழ்நாடு நாள்' விழா கொண்டாட்டங்களில் கலை நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன.
- சென்னையில் அமைந்துள்ள அண்ணா மேலாண்மைபயிற்சிநிலையத்தில்அரசுகவின் கலை மற்றும் கட்டடக்கலை சிற்பக்கலை கல்லூரி விரிவுரையாளர்களுக்குத் திறன் மேம்பாட்டு பயிற்சிகள் நடத்தப்பட்டன.
- சிறந்தவல்லுநர்கள் மூலம் அரசு இசைக் கல்லூரிகள் மற்றும் இசைப் பள்ளிகளின் விரிவுரையாளர்கள் மற்றும் ஆசிரியர்களுக்குத் திறன் மேம்பாட்டுப் பயிற்சிகள் நடத்தப்பட்டன.
- சென்னை, கும்பகோணம் அரசு கவின் கலைக் கல்லூரிகள் மற்றும் மாமல்லபுரம் அரசுக் கட்டிடக்கலை மற்றும் சிற்பக் கல்லூரியில் மாணவர்களின் திறன்களை மேம்படுத்த 33 பயிலரங்குகளும், 6 கலை கண்காட்சிகளும் நடத்தப்பட்டன.
- அரசு இசை, கவின் கலை மற்றும் கட்டிடக்கலை & சிற்பக் கல்லூரிகளில் முதன்முறையாக வளாக நேர்காணல் நடத்தப்பட்டு 173 மாணவர்களுக்கு வேலைவாய்ப்புகள் ஏற்பாடு செய்யப்பட்டன.
- கலை பண்பாட்டுத்துறையின் ஏழு மண்டல கலை பண்பாட்டு மையங்களின் வாயிலாக மார்கழி இசைவிழாகலை நிகழ்ச்சிகள் நடத்தப்படுகின்றன.
- சென்னையில் 11.01.2023 மற்றும் 12.01.2023 ஆகிய நாட்களில் சென்னை கலைவாணர் அரங்கில் நடைபெற்ற 'உலகத் தமிழர் திருநாள்' கொண்டாட்டத்தின் போது கலை நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன.
- 2022–2023 ஆம் நிதியாண்டில் சண்டிகர் தமிழ்ச் சங்கத்தின் சித்திரை திருவிழா, முசோரியில் உள்ள லால் பகதூர் சாஸ்திரி தேசிய நிருவாக அகாடமி, இராஜஸ்தான் மாநிலம், ஜெய்பூரில் தேசிய லோங்ரங் கலை விழாவில் ஜம்மு–காஷ்மீர் மாநிலத்தில் ஒன்றிய அரசின் 'ஒன்றே பாரதம், ஒப்பிலா பாரதம்' நிகழ்ச்சி, புதுதில்லியில் உள்ள தமிழ்நாடு இல்லத்தில் பொங்கல் கலைவிழா, புதுதில்லி சட்டமன்றப் பேரவையில் விழா ஆகிய நிகழ்வுகளில் மாநிலங்களிடையே கலைப்பரிமாற்ற திட்டத்தின் கீழ்ரூ.33 இலட்சம் மதிப்பீட்டில் கலை நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன.
- மலேசியாவில் இந்திய புலம்பெயர் சங்கங்கள் நிறுவப்பட்டு 75 ஆண்டுகள் நிறைவடைந்ததை நினைவு கூறும் வகையில் மலேசியாவின் சபா, சரவாக் ஆகிய நகரங்களில் நாட்டிய நிகழ்ச்சிகளும், துபாயில் நடைபெற்ற ஒன்பதாவது உலகத் தமிழர் பொருளாதார மாநாட்டில் பரதநாட்டியம் மற்றும் பெரியமேளம் நிகழ்ச்சிகள் அயல்நாடுகளுக்கிடையே கலைப்பரிமாற்றம் திட்டத்தின் கீழ் 2022–2023 ஆம் நிதியாண்டில் ரூ.25 இலட்சம் செலவில் நடத்தப்பட்டன.
- 7 தனியார் கலை அமைப்புகளுக்கு கலை நிகழ்ச்சிகள் நடத்திட ரூ.11.90 இலட்சம் நிதியுதவி 2022–2023 ஆம் நிதியாண்டில் வழங்கப்பட்டது.
- நாட்டுப்புறக் கலைகளைப் பாதுகாக்கவும், இப்பண்பாடு தொடர்ந்து வருங்காலங்களிலும் செழித்தோங்கவும், மாநிலம் முழுவதும் 25 இடங்களில் பகுதி நேர நாட்டுப்புறக் கலைப்பயிற்சி மையங்கள் அமைப்பதற்கு ரூ 2.00 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஒவ்வொரு மையத்திலும் 4 கலைஞர்கள் என 100 கலைஞர்கள் மற்றும் 25 ஒருங்கிணைப்பாளர்கள் பகுதி நேரமாக மாதம் ரூ.7,000/– மதிப்பூதியத்தில் நியமிக்கப்பட்டுள்ளனர்.
- தமிழ்நாட்டின் நிகழ்த்துக்கலைகள் மற்றும் கவின் கலைகளை இளம் தலைமுறையினருக்கு கொண்டு செல்லும் வகையில் 100 அரசு கல்லூரிகளில் மாணாக்கர்களுக்கு கலைப் பயிற்சிகள் வழங்கும் திட்டத்தின் கீழ் ரூ.85 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்து அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. 100 கலைஞர்கள் பகுதி நேரமாக மாதம் ரூ.6,000/– மதிப்பூதியத்தில்நியமிக்கப்பட உள்ளனர். அரசு கல்லூரிகளில் வாரம் இரண்டு நாள் இரண்டு மணி நேரங்கள் கல்லூரி மாணாக்கர்களுக்கு கலைப் பயிற்சி அளிக்கப்படும்.
- சென்னை மற்றும் திருவையாறு அரசு இசைக் கல்லூரிகளில் தவில் மற்றும் நாதசுரம் பிரிவுகளில் பட்டப்படிப்புகள் தொடங்கப்பட்டுள்ளன.
- தமிழ்நாட்டில் பள்ளி செல்லும் சிறார்களுக்கு பகுதி நேர கலைப்பயிற்சிகள் வழங்கும் 40 ஜவகர் சிறுவர் மன்றங்களுடன் புதிதாக

20 கூடுதல் ஜவகர் சிறுவர் மன்றங்கள் தொடங்கப்பட்டுள்ளன. இம்மன்றங்களில் தலா நான்கு கலையாசிரியர்கள் வீதம்80 கலையாசிரியர்கள் மாதம் ரூ.4,000/- தொகுப்பூதியத்தில் நியமிக்கப்பட்டுள்ளனர்.

❖ முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழாவினைச் சிறப்பான வகையில் கொண்டாடும் பொருட்டு, 7 மண்டல கலை பண்பாட்டு மையங்களின் வாயிலாக மாவட்டங்கள் தோறும் கலை நிகழ்ச்சிகளும், கவின் கலைக் கல்லூரிகள், அரசுக் கட்டட மற்றும் சிற்பக் கலைக் கல்லூரிகளில் கண்காட்சிகளும், அரசு இசைக்கல்லூரிகள், மாவட்ட அரசு இசைப்பள்ளிகளில் இசைவிழாக்களும் நடத்தப்பட்டன.

❖ முத்தமிழறிஞர்கலைஞர் நுற்றாண்டு விழாவின் மாநில அளவிலான 'பண்பாட்டுப் பாசறை' கலை நிகழ்ச்சிகள் கடலூரில் 10.02.2024 அன்று நடத்தப்பட்டன. இந்நிகழ்ச்சியில் முத்தமிழறிஞர்கலைஞர் அவர்களின் 100 ஒளிப்படங்கள் மற்றும் ஓவியக்கண்காட்சியும், கலை நிகழ்ச்சிகளும் ரூ.29.75 இலட்சம் செலவில் நடத்தப்பட்டன.

❖ 2023-2024 ஆம் நிதியாண்டில் மண்டலக் கலை பண்பாட்டு மையங்கள் வாயிலாக உதகமண்டலம், கொடைகானல், ஏற்காடு வால்பாறை, நாகப்பட்டினம், கடலூர், ஜமுனாமரத்தூர் (திருவண்ணாமலை), கோடை விழாக்களிலும்,பூம்புகார் இந்திர விழா, கிருஷ்ணகிரி மாங்கனி விழா, திருத்தணி ஆடிக்கிருத்திகை விழா, ஒகனேக்கல் ஆடிப்பெருக்கு விழா, தீரன் சின்னமலை விழா, கங்கைக் கொண்டசோழபுரம் ஆடித்திருவாதிரை விழா, தஞ்சாவூர், அரியலூர், உதக மண்டலம், விருதுநகர் , தென்காசி, திருவாரூர், விழுப்புரம் ஆகிய இடங்களில் புத்தகத்திருவிழாக்கள், பொங்கல் கலை விழாக்கள், திருப்பரங்குன்றம் தைப்பூசத்திருவிழா, திருவாரூர் ஆழித்தேரோட்டம் உள்ளிட்ட பல்வேறு கலை நிகழ்ச்சிகள் ரூ.55.86 இலட்சம் மதிப்பீட்டில் நடத்தப்பட்டு 2773 கலைஞர்களுக்கு வாய்ப்புகள் வழங்கப்பட்டன.

❖ மாநிலங்களுகிடையிலான கலை பரிமாற்றத்திட்டத்தின் கீழ் இமாச்சலபிரதேசம் குல்லு தசரா கலை விழா, ராஜஸ்தான் ஜெய்பூர் லோக்ரங் திருவிழா, ஐதராபாத் மற்றும் செகந்திராபாத்தில் தெலுங்கானா தமிழ்ச்சங்கம் ஆண்டு விழா, புதுடெல்லி தமிழ்நாடு இல்லம் பொங்கல் கலை விழாக்கள் 2023-2024 ஆம் நிதியாண்டில் ரூ .18.23 இலட்சம் செலவில் நடத்தப்பட்டு 100 கலைஞர்களுக்கு வாய்ப்புகள் வழங்கப்பட்டுள்ளன.

❖ தென்னக பண்பாட்டு மையத்துடன் இணைந்து 2023-2024 ஆம் நிதியாண்டில்திருநெல்வேலி வில்லிசை விழா, ஸ்ரீரங்கம் வைகுண்ட ஏகாதசி விழா, திருவில்லிபுத்தூர் பாவை விழா, கன்னியாகுமரியில் குமரி விழா நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு 186 கலைஞர்களுக்கு கலை நிகழ்ச்சி வாய்ப்புகள் வழங்கப்பட்டன.

❖ மாமல்லபுரத்தில் நடைபெற்ற ஜி-20 மகளிர் உச்சி மாநாடு (Women Summit), சென்னையில் நிதிப் பணிக்குழு கூட்டங்கள் ஆகியவற்றில் 150-க்கும் மேற்பட்ட கலைஞர்களைக் கொண்டு கலை நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன.

❖ ஜி-20 மாநாட்டின் பேரிடர் மேலாண்மை பணிக்குழு கூட்டம் மற்றும்நீடித்த எரிசக்தி சுற்றுப்புற சூழ தட்ப வெட்ப மாற்றம் குறித்த கூட்ட நிகழ்ச்சிகளில் 200-க்கும் மேற்பட்ட கலைஞர்களைக் கொண்டு பரதநாட்டியம், கருவியிசை, நாட்டுப்புறக் கலை நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன.

❖ மலேசியா தலைநகர் கோலாலம்பூர் ஸ்ரீமகா மாரியம்மன் கோயில் குடமுழுக்கு விழாவில் கலை பண்பாட்டுத்துறையின் சார்பில் 23.06.2023 முதல் 25.06.2023 வரை 13 கலைஞர்களைக் கொண்டு மங்கல இசை, தேவாரம் பாடல் நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன.

❖ தனியார் கலை அமைப்புகளுக்கு நிதியுதவி வழங்கும் திட்டத்தின் கீழ் 2023-2024 ஆம் நிதியாண்டில் 7 கலையமைப்புகளுக்கு ரூ 13.00 இலட்சம் நிதியுதவி அளிக்கப்பட்டது.

❖ உலகளாவிய முதலீட்டாளர்கள் சந்திப்பு - 2024 நிகழ்ச்சியில் 07.01.2024 அன்று சென்னையில் 23 இடங்களில், 300-க்கும் மேற்பட்ட நாட்டுப்புறக் கலைஞர்களைக் கொண்டு வரவேற்பு கலை நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன.

தமிழ்நாடு டாக்டர் ஜெ ஜெயலலிதா இசை மற்றும் கவின் கலைப் பல்கலைக்கழகம்

- பல்கலைக்கழகத்தின் நல்கைத்தொகை ரூ.2.03 கோடியிலிருந்து ரூ.3 கோடியாக உயர்த்தப்பட்டது.
- சென்னை, மதுரை, ஸ்ரீவில்லிபுத்தூர், பழனி ஆகிய இடங்களில் உள்ள கோயில்திருவிழாக்களில் பல்கலைக்கழகம் மற்றும் அரசு இசைக் கல்லூரிகளைச் சேர்ந்த 108 மாணவர்கள் குழுவினரால் பாரம்பரிய குரலிசை நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன.
- 'தமிழ்நாடு புதுமை முயற்சிகள்' திட்டத்தின் கீழ் ஒருங்கிணைந்த வளர்ச்சிக்கான இந்திய நாடகக் கலையின் திட்டத்தினை செயல்படுத்திட ரூ.2.67 கோடி நிதி ஒப்பளிப்பு வழங்கப்பட்டது.
- கிராமியக் கலை மற்றும் வில்லுப்பாட்டுப் பிரிவில் ஓராண்டு பட்டயப்படிப்பிற்கு ரூ.47.76 இலட்சம்நிதி ஒதுக்கீட்டில் தொடங்கப்பட்டது.
- ஆராய்ச்சி மையம், நூலகம் மற்றும் கற்றல் மேலாண்மை அமைப்பு முறை அமைத்திட ரூ.1.00 கோடி ஒதுக்கீடு செய்து நிருவாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம்

- தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தின் ஆண்டுக்கான அரசு நல்கை ரூ.1.00 கோடியிலிருந்து ரூ.3.00 கோடியாக உயர்த்தப்பட்டது.
- 2022–2023 ஆம் நிதியாண்டில் பொங்கல் விழாக்கள் நடத்திட ரூ. 50.00 இலட்சம் மதிப்பீட்டில் நடத்தப்பட்டன.
- அலுவலகக் கட்டடம், கலைஞர்கள் விடுதி, படங்கள் காட்சிக்கூடம் மற்றும் கலையரங்கம் ஆகியவை ரூ.1.54 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்தப்பட்டன.
- மாநிலங்களுக்களுக்கிடையேயான கலைப் பரிமாற்ற திட்டத்தின்படி புதுடெல்லி, ஐதராபாத், புவனேஸ்வர், திருவனந்தபுரம் ஆகிய இடங்களில் 2023–2024 ஆம் நிதியாண்டில்133 கலைஞர்கள் பங்கு பெற்ற கலை நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன.
- 30.06.2023 முதல் 02.07.2023 வரை நடைபெற்ற வட அமெரிக்கா தமிழ் சங்க பேரவையின் விழாவில் 11 கலைஞர்கள் பங்குபெற்ற கலை நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன.

தமிழ்நாடு நாட்டுப்புறக் கலைஞர்கள் நல வாரியம்

- இவ்வாரியத்தின் உறுப்பினர்களான நாட்டுப்புறக் கலைஞர்களுக்குபல்வேறு நலத் திட்டங்களுக்காக 2021–2022 ஆம் நிதியாண்டில் 684 பயனாளிகளுக்கு ரூ.28.03இலட்சமும், 2022–2023 ஆம் நிதியாண்டில் 733 பயனாளிகளுக்கு ரூ.31.19 இலட்சமும், 2023–2024 ஆம் நிதியாண்டில், 1,023 பயனாளிகளுக்கு ரூ.51.58 இலட்சம் நிதி வழங்கப்பட்டது.
- இவ்வாரியத்தின் ஆண்டு நல்கைத் தொகையினை ரூ.35.00 இலட்சத்திலிருந்து ரூ.90.00 இலட்சமாக உயர்த்தியும் தளவாடங்கள் மற்றும் இயந்திரங்கள் கொள்முதல் செய்ய ரூ.9.00 இலட்சமும் ஒதுக்கீடு செய்யப்பட்டது.

வருங்கால சாதனைப் பணிகள் 2024 – 2025

- மதுரையில் பாரம்பரியமிக்க கவின் கலைகளைப் பயிற்றுவிக்கும் புதிய அரசு கவின் கலைக்கல்லூரி ரூ 4.79 கோடி செலவில் அமைக்கப்படும்.
- மாமல்லபுரம் அரசினர் கட்டடக் கலை மற்றும் சிற்பக் கலைக் கல்லூரியின் பழதடைந்த பழைய கட்டடங்கள் ரூ 1.00 கோடி செலவில் புனரமைக்கப்படும்.
- கணினிகள்,அச்சு இயந்திரங்கள் கொள்முதல் செய்திட ரூ 45.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்படும்.
- மாணவர்களுக்கு தேவையான உட்கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்துவதற்கும் வளாகத்தில் உள்ள சிலைகளைப் புதுப்பித்தலுக்குக்கும் ரூ 17.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்படும்.
- 'கலைமாமணி' விருது பெற்ற கலைஞர்கள் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில் கட்டணமின்றி பயணம் மேற்கொள்ள அனுமதிக்கப்படுவார்கள்.

அருங்காட்சியகங்கள் துறை

❖ சென்னை அரசு அருங்காட்சியகம் 1851 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. இது இந்தியாவில் இரண்டாவது பழமையான அருங்காட்சியகமாகத் திகழ்கிறது. இங்கு 76,848 அரும்பொருட்கள் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன. அருங்காட்சியகத் துறையின் கட்டுப்பாட்டின் கீழ் 23 மாவட்ட அருங்காட்சியங்கள் செயல்பட்டு வருகின்றன. ஆண்டுதோறும் ஐந்து இலட்சத்திற்கும் மேற்பட்ட பார்வையாளர்கள் அருங்காட்சியகத்தைப் பார்வையிடுகின்றனர். இங்கு மாணவர்களின் நலனுக்காக 3000க்கும் மேற்பட்ட கல்லூரி மாணவர்களுக்கு உள்விளக்கப் பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன. மாநிலத்தில் புதையலாக கிடைக்கின்ற நாணயங்கள், கற்சிலைகள், படிமங்கள் ஆகியவற்றை சேகரித்து பாதுகாக்கின்ற மகத்தான பணியை அருங்காட்சியகங்கள் செய்து வருகின்றன. அருங்காட்சியகத் துறை மென்மேலும் வளர்ச்சி அடைய வேண்டும் என்கின்ற நோக்கத்துடன், தமிழர்களின் கலை மற்றும் பண்பாட்டினை பாதுகாத்து வரும் தமிழ்நாடு அரசு இந்தத் துறையை மேம்படுத்தும் விதமாக மாபெரும் "சோழர் அருங்காட்சியகம்" ஒன்று அமைக்க உள்ளது.

❖ சங்ககாலம் முதல் மிக நீண்ட காலத்திற்கு தமிழ்நாட்டை ஆட்சி செய்த மரபு சோழர்களுடைய மரபு. சங்க கால சோழர்கள் நீர் மேலாண்மை, போர், இலக்கியம் போன்ற பல்வேறு துறைகளில் சிறப்பு பெற்றிருந்தனர். தொடர்ந்து வந்த பிற்கால சோழர்கள் காலத்தில் சோழர்கள் ஆட்சி தென்னிந்தியா முழுவதும் பரவி இலங்கை, தூரக்கிழக்கு நாடுகள் போன்ற கடல் கடந்த நாடுகளையும் சென்றடைந்திருந்தது. இராஜராஜனுக்கு பின் வந்த இராஜேந்திர சோழன் கங்கையின் மீது படை எடுத்து வடபுலத்தையும் தன் வசப்படுத்தினார்.

❖ தமிழர்கள் பெருமை சோழர்கள் காலத்தில் தலை நிமிர்ந்தது. வானுயர்ந்த கோயில் கோபுரங்கள், அணைக்கட்டுகள், பெரிய ஏரிகள் இவை அனைத்தும் சோழர்கால சிறப்புக்கு சான்றாக இன்றும் விளங்கி வருகின்றன. சோழர்களுடைய ஆட்சியில் நீர் மேலாண்மை, உள்ளாட்சி, வாணிபம், கலை, கட்டடக்கலை, இலக்கியம், இசை, நாட்டியம் போன்ற அனைத்துத் துறைகளும் சிறப்புடன் இருந்தது. தஞ்சாவூர் சோழர்களின் தலைநகராக நீண்ட காலம் விளங்கி வந்தபடியால் அங்கு மாபெரும் சோழர் அருங்காட்சியகம் அமைக்கப்படும் என்று தமிழக அரசால் 2023-2024 ஆண்டில் அறிவிக்கப்பட்டது.

❖ இந்த இந்த மாபெரும் சோழர்கள் அருங்காட்சியகம் அமைக்க தஞ்சாவூர் பெரிய கோயில் அருகில் 400 மீட்டர் தொலைவில் நீலகிரி தெற்குத் தோட்டம் கிராமம், நகர் புல எண்:4 என்ற நிலப்பரப்பில் 6.39 ஏக்கர் நிலம் அடையாளம் காணப்பட்டுள்ளது. மாபெரும் சோழர் அருங்காட்சியகம் அமைக்க விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

❖ மேலும் தமிழகத்தில் விடுதலைக்காக பாடுபட்டவர்களின் தியாகங்களை நினைவுகூறுகின்ற வகையில் "சுதந்திர தின அருங்காட்சியம்" ஒன்று சென்னை ஹுமாயுன் மகாலில் அமைக்கப்படவுள்ளது. சேலம் மற்றும் விருதுநகர் மாவட்டங்களில் அருங்காட்சியகத்திற்கு புதிய கட்டடங்கள் கட்டப்பட்டு வருகின்றன. திருச்சி, இராமநாதபுரம் விழுப்புரம் போன்ற இடங்களில் ஐந்து ஏக்கர் நிலம் அடையாளம்



காணப்பட்டு அருங்காட்சியத்தில் புதிய கட்டடங்கள் கட்டப்பட உள்ளன.

- மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் 2021–2022 ஆம் ஆண்டு அறிவிப்பில், மதுரை காந்தி நினைவு அருங்காட்சியக பாரம்பரிய கட்டடத்தை மீட்டுருவாக்கி மேம்படுத்துவதற்கு ரூ.6 கோடி ஒதுக்கீடு செய்து பணிகள் நடைபெற்று வருகிறது.
- சென்னை அரசு அருங்காட்சியக வளாகத்தில் உள்ள தேசிய கலைக்கூடம் பொது மக்கள் பார்வைக்காக மாண்புமிகு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் அவர்களால் 06.02.2024 அன்று திறந்து வைக்கப்பட்டது.
- தேசியக் கலைக்கூடத்தின் முகப்பில் ரூ. 3.82 கோடி செலவில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சி கழகம் மூலம் முப்பரிணாம லேசர் ஒலி ஒளி அமைக்க 2021–22 ஆம் ஆண்டு அறிவிப்பில் அறிவிக்கப்பட்டு, பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.
- விழுப்புரம், இராமநாதபுரத்தில் புதிய அருங்காட்சியகங்கள் அமைத்திட ரூ. 10 கோடி செலவில் 2022–2023 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்டு, முதற்கட்டமாக விழுப்புரம் அருங்காட்சியகத்திற்கு ரூ. 5.6 கோடி செலவில் அரசாணை பெறப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது.
- சென்னை அரசு அருங்காட்சியக வளாகத்தில் உள்ள பாரம்பரிய அருங்காட்சியகக் கலையரங்கம் ரூ. 3 கோடி செலவில் மேம்படுத்தப்பட்டு, பணிகள் முழுவதும் முடிவடைந்து, மாண்புமிகு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் அவர்களால் 06.02.2024 அன்று திறந்து வைக்கப்பட்டது.
- சென்னை அரசு அருங்காட்சியக வளாகத்தில், உள்ள பாரம்பரிய கட்டடத்தில், உணவகம் அமைக்க ரூ. 3 கோடி செலவில் மேம்படுத்தப்பட்டு, பணிகள் முழுவதும் முடிவடைந்து, மாண்புமிகு தமிழ்வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் அவர்களால் 06.02.2024 அன்று திறந்து வைக்கப்பட்டது.

- காஞ்சிபுரம் மாவட்ட அருங்காட்சியகத்தை புதுப்பிக்கும் பணிக்காக ரூ.2 கோடி அறிவிக்கப்பட்டு, பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.
- நாகப்பட்டினம் மாவட்ட அருங்காட்சியகத்தை புதுப்பிக்கும் பணிக்காக ரூ. 1.4 கோடி அறிவிக்கப்பட்டு, பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.
- சென்னை அரசு அருங்காட்சியக வளாகத்தில் உள்ள வேதியியப் பாதுகாப்புப் பிரிவை நவீனப்படுத்த ரூ. 50 இலட்சம் அறிவிக்கப்பட்டு, பணிகள் மேற்கொள்ளப்பட்டு நிறைவுற்றுள்ளது.
- ரூ. 45 இலட்சம் செலவில், சென்னை அரசு அருங்காட்சியக வளாக சுற்றுச் சுவர் பழுது பார்க்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு, நிறைவுற்றுள்ளது.
- தஞ்சாவூரில் "மாபெரும் சோழர் அருங்காட்சியகம்" அமைக்க 2023-2024 ஆம் ஆண்டு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்டு, விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கும் பணி நடைபெற்று வருகிறது.
- வேலூர் மாவட்ட அரசு அருங்காட்சியகத்தை மேம்படுத்த ரூ.1 கோடிக்கு அறிவிக்கப்பட்டு, பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.
- கடலூர் மாவட்ட அரசு அருங்காட்சியகத்தை மேம்படுத்த ரூ.50 இலட்சம் அறிவிக்கப்பட்டு, பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.
- சென்னை, சேப்பாக்கத்தில் உள்ள "ஹுமாயூன் மகாலில்" சுதந்திர தின அருங்காட்சியகம் அமைக்க அறிவிக்கப்பட்டு, ஒப்பந்தப் புள்ளி கோரப்பட்டு விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கும் பணி நடைபெற்று வருகிறது.
- டாக்டர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு, 23 மாவட்ட அருங்காட்சியகங்களிலும் 100க்கும் மேற்பட்ட நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன. முத்தாய்ப்பாக, சென்னை அரசு அருங்காட்சியக வளாகத்தில் உள்ள வளர்கலைக்கூடத்தில், கலைஞர் அவர்களின் புகைப்படங்கள் மற்றும் ஓவியங்கள் கண்காட்சி மாண்புமிகு தமிழ்வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் அவர்களால் பொதுமக்கள் பார்வைக்கு 06.02.2024 அன்று திறந்து வைக்கப்பட்டது.
- சென்னை அரசு அருங்காட்சியக வளாக அலுவலகத்தின் புதிய நிருவாகக் கட்டடம், ரூ. 4.8 கோடி செலவில் பணிகள் மேற்கொள்ளப்பட்டு, நிறைவுறும் தருவாயில் உள்ளது.

வருங்கால சாதனைப் பணிகள் 2024 – 2025

- சென்னை அரசு அருங்காட்சியக வளாகத்தில் கருப்பொருள் சார்ந்த படிமக் கூடங்கள் (Galleries on Bronze Icons) அமைப்பதற்கான விரிவான திட்ட அறிக்கை தயாரிக்க ரூ.1 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படும்
- திருச்சிராப்பள்ளி மாவட்ட அரசு அருங்காட்சியகத்திற்கு புதிய கட்டடம் கட்டுவதற்கு ரூ.75 இலட்சம் நிதி மதிப்பீட்டில் விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்படும்
- வேலூர் மாவட்ட அரசு அருங்காட்சியகம் ரூ.2.5 கோடி செலவில் விரிவாக்கம் செய்து மேம்படுத்தப்படும்
- நாகப்பட்டினம் அரசு அருங்காட்சியகம் நவீன தொழில் நுட்பத்துடனும் காட்சியமைப்புகளுடனும் ரூ.1.5 கோடி செலவில் விரிவாக்கம் செய்யப்படும்
- கடலூர் மாவட்ட அரசு அருங்காட்சியகம் அமைந்துள்ள பாரம்பரியக் கட்டடத்தினை நவீன தொழில் நுட்பத்துடனும் காட்சியமைப்புகளுடனும் ரூ.1 கோடி செலவில் விரிவாக்கம் செய்யப்படும்
- வாடகைக் கட்டடத்தில் இயங்கிவரும் இராமநாதபுரம் மாவட்ட அரசு அருங்காட்சியகத்தை வேறுகட்டடத்திற்கு மாற்றி ரூ.1 கோடி செலவில் காட்சியமைக்கப்படும்
- அரிய அரும்பொருட்களை சேகரித்து அரசு அருங்காட்சியகங்கள் எதிர்கால சந்ததியினருக்கான ஒரு களஞ்சியமாக்க ஆண்டு தோறும் ரூ.10 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

★★★

மகளிர் மற்றும் குழந்தைகள் நலம் உள்ளிட்ட சமூக நலம், ஆதரவற்றோர் இல்லங்கள் மற்றும் குற்றவாளிகள் சீர்திருத்த நிருவாகம், ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி மற்றும் இரவலர் காப்பு இல்லங்கள் மற்றும் சமூகச் சீர்திருத்தம் மற்றும் சத்துணவுத் திட்டம்



திருமதி **பி.கீதா ஜீவன்** அவர்கள்

மாண்புமிகு சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சர்

சமூக நல ஆணையரகம்

குழந்தை நலம்

- முதலமைச்சரின் பெண் குழந்தை பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் ரூ.218.88 கோடிச் செலவில் 87,601 பெண் குழந்தைகள் பயனடைந்துள்ளனர்.
- முதலமைச்சரின் பெண் குழந்தைப் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ், தமிழ்நாடு மின்விசை நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனத்தின் மூலம் 1,43,908 பெண் குழந்தைகளுக்கு ரூ.341.30 கோடி முதிர்வுத்தொகை வழங்கப்பட்டுள்ளது.
- தொட்டில் குழந்தைத் திட்டத்தின் கீழ் 446 குழந்தைகள் (ஆண்–200, பெண்–246) மீட்கப்பட்டு, 7,343 குழந்தைத் திருமணங்கள் தடுத்து நிறுத்தப்பட்டுள்ளன.

மகளிர் விடுதி

- 18 மாவட்டங்களில் பணிபுரியும் மகளிர் விடுதிகள் சமூகநலத்துறை மூலம் செயல்பட்டு வருகின்றன.
- தமிழ்நாடு பணிபுரியும் மகளிர் விடுதி நிறுவனம் (TNWWHCL) உருவாக்கப்பட்டுள்ளது.
- முதற்கட்டமாக, திருச்சி, கூடுவாஞ்சேரி மற்றும் தாம்பரம் ஆகிய மூன்று இடங்களில் 687 பணிபுரியும் மகளிர் பயன்பெறும் வகையில் ரூ.31.07 கோடிச்



செலவில் பணிபுரியும் மகளிர் விடுதிகளில் 415 பணிபுரியும் மகளிர் பயனடைந்து வருகின்றனர்.

- இரண்டாம் கட்டமாக, ஓசூர், திருவண்ணாமலை மற்றும் செயின்ட் தாமஸ் மவுண்ட் (செங்கல்பட்டு) ஆகிய 3 இடங்களில் 432 பணிபுரியும் மகளிர் பயன்பெறும் வகையில் ரூ.35.86 கோடிச் செலவில் கட்டப்பட்டு வருகின்றன.
- சேலம், தஞ்சாவூர், பெரம்பலூர், வேலூர், விழுப்புரம், திருநெல்வேலி மற்றும் அடையாறு (சென்னை) ஆகிய 7 இடங்களில் 458 படுக்கை வசதிகள் கொண்ட விடுதிகளை புதுப்பித்தல் மற்றும் சீரமைப்புப் பணிகள் ரூ.4.21 கோடி திட்ட மதிப்பீட்டில் கட்டப்பட்டு, செயல்பட்டு வருகிறது.
- இவ்விடுதிகள் கண்காணிப்புக் கேமரா, பயோமெட்ரிக் அணுகல், இலவச வைஃபை, இன்வெர்ட்டர், கீசர், 24x7 பாதுகாப்பு சேவைகள், விடுதி பராமரிப்பு, இணையதளம் முன்பதிவு போன்ற வசதிகளுடன் செயல்பட்டு வருகின்றன.
- தமிழ்நாடு மாநில மகளிர் கொள்கை ஆங்கிலம் மற்றும் தமிழ் ஆகிய இரு மொழிகளிலும் தயாரிக்கப்பட்டு, பொதுமக்களிடமிருந்து கருத்துக்கள் மற்றும் ஆலோசனைகளைப் பெற்று 21.02.2024 அன்று வெளியிடப்பட்டது.

மதிய உணவுத் திட்டம்

- சத்துணவு மையங்களில் பணிபுரியும் சமையலர் மற்றும் சமையல் உதவியாளர் பணி ஓய்வு வயதினை 58லிருந்து 60 ஆக உயர்வு.
- பள்ளி சத்துணவு மையங்களின் தரத்தினை உயர்த்துவதற்கு 100 பள்ளி சத்துணவு மையங்களுக்கு ISO சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளது.
- சத்துணவு மையங்களில் வைப்பறையுடன் கூடிய சமையலறைகள் கட்டுவதற்காக ரூ.69.70 கோடிச் செலவில் 1,291 சமையலறைகள் கட்ட ஆணைகள் பிறப்பிக்கப்பட்டு, 1,285 பணிகள் முடிவுற்றுள்ளன.
- 1,000 சத்துணவு மையங்களில் மாணவ, மாணவியர்களுக்கு சுத்தமான குடிநீர் வழங்குவதற்கு ரூ.80 இலட்சம் செலவில் தண்ணீர் சுத்திகரிப்பு இயந்திரம் பொருத்தப்பட்டுள்ளது.
- 29,000 பள்ளி சத்துணவு மையங்களில் சுகாதாரமான முறையில் உணவு சமைத்திட இரண்டு நீள அங்கிகள், ஒரு தலைக் கவசம்,



ஒரு நகவெட்டி, 5 கைதுடைக்கும் துண்டுகள் 6 கிருமி நாசினி சோப்புகள் ஆகியவை ரூ.1.81 கோடியில் வழங்கப்பட்டுள்ளது.

- 17,312 சத்துணவு மையங்களுக்குப் புதிய சமையல் உபகரணங்கள் ரூ.25.41 கோடியில் வழங்கப்பட்டு வருகிறது.
- 4,000 சத்துணவு மையங்களுக்கு ரூ.1.64 கோடியில் பொருட்களின் எடை அளவுகோல் வழங்கப்பட்டுள்ளது.
- அனைத்து சத்துணவு மையங்களுக்கும் ரூ.82.76 இலட்சத்தில் பதிவேடுகள் வழங்கப்பட்டுள்ளன.

❖ முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள் பிறந்தநாளன்று இனிப்பு பொங்கல் அனைத்து குழந்தைகளுக்கும் வழங்கப்பட்டுள்ளது.

முதலமைச்சரின் காலை உணவுத்திட்டம்

❖ முதலமைச்சரின்காலைஉணவுத்திட்டம்,1968 அரசு தொடக்கப்பள்ளிகளில் முன்னோடி திட்டமாக அறிமுகப்படுத்தப்பட்டு, பின்னர் 30,992 பள்ளிகளில் 18.5 இலட்சம் மாணவர்கள் பயனடையும் வகையில் ரூ.404 கோடியில் அனைத்து அரசு தொடக்கப் பள்ளிகளுக்கும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

❖ மேலும், முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் 15.07.2024 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் வெற்றிகரமாகத் தொடங்கி வைக்கப்பட்டது மற்றும் 3,990 பள்ளிகளில் உள்ள 2,20,543 குழந்தைகளை உள்ளடக்கிய கிராமப்புறங்களில் உள்ள அனைத்து அரசு உதவி பெறும் பள்ளிகளின் தொடக்கப் பள்ளி மாணவர்களுக்கும் விரிவுபடுத்தப்பட்டது.

சிறப்புத்திட்டம்

❖ சத்தியவாணிமுத்துஅம்மையார்நினைவுஇலவச தையல் இயந்திரம் வழங்கும் திட்டத்தின் கீழ் ரூ.2.7கோடிசெலவில்,4,500பயனாளிகளுக்கு இலவசதையல்இயந்திரங்கள்வழங்கப்பட்டது. 2023–2024 ஆம் ஆண்டில் மாண்புமிகு அமைச்சர் அவர்களின் அறிவிப்பின் கீழ்1,406 பயனாளிகளுக்கு மோட்டார் பொருந்திய தையல் இயந்திரங்களும், 1,406 பயனாளிகளுக்கு நவீன உயர் ரக தையல் இயந்திரங்களும் ரூ. 2.01 கோடி செலவில் பயனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.

முதியோர் நலம்

❖ முதியோர்இல்லங்களுக்குரூ.321.56இலட்சம் அரசுமானியம் விடுவிக்கப்பட்டு, 2,240 முதியோர்கள் பயனடைந்துள்ளனர்.

❖ ஆதரவற்றகுழந்தைகள்மற்றும்ஒருங்கிணைந்த வளாகங்களில்உள்ளபயனாளிகளுக்குரூ.1,731.9 இலட்சம் அரசு மானியம் விடுவிக்கப்பட்டு, 3,069முதியோர்கள்மற்றும்2,742குழந்தைகள் பயனடைந்துள்ளனர்.

❖ முதியோர்களுக்கெதிரான கொடுஞ்செயல் எதிர்ப்பு தினமாக ஜூன்–15 அனுசரிக்கப்பட்டு ரூ.10.98 இலட்சம் செலவில் முதியோர் வன்கொடுமை குறித்த விழிப்புணர்வுகள் நடத்தப்பட்டுள்ளது.

❖ மாநிலமற்றும்மாவட்டஅளவில்சர்வதேசமுதியோர் தினம்'ரூ.15.8இலட்சம்செலவில்திருச்சியில் முதியோர்களைகௌரவித்துபரிசுபொருட்கள் வழங்கப்பட்டது. மாநில மூத்தகுடிமக்கள் கொள்கை–2023 வெளியிடப்பட்டது.

❖ மூத்த குடிமக்கள் நலனுக்கான தேசிய செயல் திட்டத்தினைசெயல்படுத்தமுதல்தவணையாக ரூ.1.18 கோடி நிதி ஒப்பளிப்பு.

புதுமைப் பெண் திட்டம்

❖ மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் உயர் கல்வி புதுமைப் பெண் திட்டத்தின் கீழ் அரசுப் பள்ளிகளில்6–ஆம்வகுப்புமுதல்12–ஆம்வகுப்பு வரைபயின்றுதடையில்லாமல்உயர்கல்வியை தொடரும் பொருட்டு, மாதம் தோறும் ரூ.1,000 ஊக்கத் தொகையாக 3,28,280 மாணவிகள் பயனடைந்த வகையில் ரூ.467.38 கோடி செலவினம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

தமிழ்ப்புதல்வன் திட்டம்

❖ புதுமைப் பெண் திட்டத்தின் வெற்றியினைத் தொடர்ந்து, தமிழ்நாட்டில் 6–ஆம் வகுப்பு முதல்12ஆம்வகுப்புவரை அரசுப்பள்ளிகளில் பயின்று மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் தமிழ் வழிக் கல்வியில் பயின்ற மாணவர்களின் உயர்கல்வித் தேவையினை பூர்த்தி செய்ய அறிவிக்கப்பட்டுள்ள

தமிழ்ப்புதல்வன் – திட்டமானது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 09.08.2024 அன்று கோயம்புத்தூர் மாவட்டத்திலும், அதே நாளில் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகளால் இதர மாவட்டங்களிலும் துவக்கப்பட உள்ளது.

❖ தமிழ்ப்புதல்வன் திட்டத்திற்கென 2024–2025–ஆம் நிதியாண்டிற்கு ரூ.360 கோடி நிதி ஒதுக்கீடு செய்து வழங்கப்பட்டுள்ளது தோராயமாக மூன்று இலட்சம் கல்லூரி மாணவர்கள் பயனடைய உள்ளனர்.

திருமண நிதியுதவித் திட்டம்

❖ திருமண நிதியுதவி திட்டங்களின் கீழ், 2021–2022ஆம் நிதியாண்டிற்கு ஒதுக்கப்பட்டுள்ள ரூ.762.22 கோடி நிதியில் 53,599 பட்டதாரிகள் மற்றும் 41,101 பட்டதாரி அல்லாதோருக்கு ரூ.379 கோடி மதிப்பில் 8 கிராம், 22 கேரட் தங்க நாணயம் மற்றும் ரூ.383 கோடி நிதியுதவியாக வழங்கப்பட்டதில், 94,700 பயனாளிகள் பயனடைந்துள்ளனர்.

❖ 2022–2023 ஆம் ஆண்டிற்கு திருமண நிதியுதவித் திட்டங்களான, விதவைகளின் பெண் குழந்தைகள் திருமண உதவித்திட்டம், ஆதரவற்ற பெண் குழந்தைகள் திருமண உதவித்திட்டம், விதவை மறுமணம் திருமண உதவித்திட்டம், கலப்பு திருமண உதவி திட்டங்களின் மூலம் தங்க நாணயம் மற்றும் நிதியுதவி வழங்கும் வகையில் ரூ.64.69 கோடி நிதி ஒதுக்கப்பட்டு 7,012 பயனாளிகள் பயனடைந்துள்ளனர்.

❖ 2023–2024ஆம் நிதியாண்டிற்கு திருமண நிதியுதவித் திட்டங்களின் கீழ், தங்க நாணயம் (ரூ.119 கோடி) மற்றும் நிதியுதவி (ரூ.100.67 கோடி) வழங்கும் வகையில் ரூ.219.67 கோடி நிதி ஒதுக்கீடு



செய்யப்பட்டுள்ளது. இதில் 24,935 பயனாளிகளுக்கு (15,328 பட்டதாரிகள் மற்றும் 9,607 பட்டதாரி அல்லாதோர்) 8 கிராம் (22 காரட்) தங்க நாணயத்துடன் நிதியுதவித் தொகை பெற்று பயனடைய உள்ளனர்.

பெண்கள் மற்றும் திருநங்கைகளுக்கு அரசு பேருந்தில் கட்டணமில்லா விடியல் பயணம்

❖ சாதாரண கட்டண நகரப் பேருந்துகளில், மகளிருக்குக் கட்டணமில்லாப் பயணத் திட்டத்தின் கீழ், ரூ.7,720.39 கோடிச் செலவினத்தில் 482.34 கோடி பாதுகாப்பான பயணங்களை மகளிர் மேற்கொண்டுள்ளனர்.

❖ தமிழ்நாட்டிலுள்ள திருநங்கைகளுக்கு அரசு பேருந்துகளில் கட்டணமில்லா பயண சலுகையை நீட்டித்த வகையில் ரூ.465.86 இலட்சம் செலவினத்தில் 29.12 இலட்சம் கட்டணமில்லா பயணங்களை மேற்கொண்டுள்ளனர்.

கோவிட்–19 நிவாரண உதவித் தொகை

❖ கோவிட்–19 பெருந்தொற்று காலத்தில் முதற் கட்ட நிவாரண உதவித்தொகையாக குடும்ப



அட்டை இல்லாத 8,493 திருநங்கைகளுக்கு தலா ரூ.2,000-மும், இரண்டாம் கட்ட நிவாரண உதவித் தொகையாக 8,591 திருநங்கைகளுக்கு தலா ரூ.2000-மும்வீதம்ரூ.3.40கோடிச்செலவினத்தில் வழங்கப்பட்டுள்ளது.

திருநங்கைகள் நலன்

- 40 வயதிற்கு மேற்பட்ட ஆதரவற்ற திருநங்கைகளுக்கு ரூ.1,000 வீதம் மாதாந்திர ஓய்வூதியம்வழங்கும்திட்டத்தின்கீழ்ரூ.3.13கோடி நிதிஒதுக்கீடுசெய்யப்பட்டு2,382திருநங்கைகள் பயனடைந்துள்ளனர்.
- திருநங்கைகளுக்கு வழங்கப்பட்டு வந்த மாதாந்திர ஓய்வூதியத் தொகை ரூ.1,000 லிருந்து ரூ.1,500 மார்ச் 2023 முதல் உயர்த்தப்பட்டு ரூ.2.36 கோடி நிதி ஒதுக்கீடு செய்துவழங்கப்பட்டுள்ளதில்1,482திருநங்கைகள் பயனடைந்து வருகின்றனர்.
- திருநங்கைகளுக்கு சொந்த தொழில் துவங்க மானியம் வழங்கும் திட்டத்தின் கீழ், ரூ.3 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு 617திருநங்கைகள்சுயதொழில்மானியம்பெற்று பயனடைந்துள்ளனர்.

ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி திட்டப்பணிகள் துறை

- முதன்மை அங்கன்வாடி பணியாளர், குறு அங்கன்வாடி பணியாளர் மற்றும் அங்கன்வாடி உதவியாளர் பணியிடங்களில் 25 சதவிகித பணியிடங்களை விதவைகள்/ கணவனால் கைவிடப்பட்டோரைக்கொண்டு முன்னுரிமையின்அடிப்படையில்நிரப்பஆணை.
- குழந்தைகள் மைய உதவியாளர்களுக்கு ஓய்வுபெறும் வயது 60.
- குழந்தை மையங்களில் பணிபுரிந்து வருகையில் பணியிடையே காலமான குறு அங்கன்வாடிப் பணியாளர்/அங்கன்வாடி உதவியாளர்களின் தகுதி பெற்ற பெண் வாரிசுதாரர்களுக்கு கருணை அடிப்படையில் அங்கன்வாடிப் பணியாளராக பணி நியமனம்.

❖ 5 வருடம் பணி முடித்த குறு அங்கன்வாடி பணியாளர்களுக்கு அங்கன்வாடி பணியாளராக பதவி உயர்வு.

❖ அங்கன்வாடி ஊழியர்களுக்கு இணையதள சந்தை (GeM) மூலமாக 2022–2023 நிதியாண்டிற்கான 2 சீருடை சேலைகளுடன் கையில்லாத மேல் அங்கிகளுக்காக (Sleeveless Coat) ரூ.500 வீதம் வழங்கப்பட்டது.

❖ பிரதான் மந்திரி ஜீவன் ஜோதி பீமா யோஜனா மற்றும் பிரதான் மந்திரி சுரக்ஷா பீமா யோஜனா ஆகியவற்றின் கீழ் ஒன்றிய அரசால் ரூ.2,31,53,400 (60%) நிதியும் மாநில அரசால் ரூ.1,54,35,600 (40%) ஆக மொத்தம் ரூ.3,85,89,000 நிதி ஒதுக்கீடு.

❖ சத்துமாவு இரண்டு வெவ்வேறு கலவைகளில் வருடத்தில் 300 நாட்களுக்கு 22 இலட்சம் 6 மாதம் முதல் 6 வயது வரையிலான குழந்தைகளும், சுமார் 6 இலட்சம் கர்ப்பிணி பெண்கள் மற்றும் பாலூட்டும் தாய்மார்களுக்கும் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி திட்டத்தின் கீழ் சத்துமாவு வழங்கப்பட்டு வருகிறது. குழந்தைகளுக்கு வழங்கப்பட்டு வரும் சத்துமாவு BIS 11536:2022 தரத்திலானது.

❖ விருதுநகர் மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்களில்42,000வளரிளம்பெண்களுக்கு சத்துமாவு ஒரு வருடத்தில் 300 நாட்களுக்கு வழங்கப்படுகிறது.

❖ 6மாதம்முதல்6வயதுவரையிலானகடுமையான ஊட்டச்சத்து குறைபாடுள்ள சுமார் 56,000 குழந்தைகளுக்குசத்துமாவுடன்செறிவூட்டப்பட்ட பிஸ்கெட்டு வழங்கப்பட்டு வருகிறது.



❖ ரூ.7.76 கோடிச் செலவில் 7,757 குழந்தைகள் மையங்களுக்கு தலா ரூ.10,000 வீதத்தில் மின்வசதி.

❖ வாடகை கட்டடங்களில் செயல்படும் 7,228 குழந்தைகள் மையங்களின் வாடகையினை உயர்த்தி ரூ.18.17 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது.

❖ அரசு சொந்தக் கட்டடங்களில் செயல்படும் குழந்தைகள் மையங்களுக்கு வருடாந்திர பராமரிப்பு தொகையாக தலா ரூ.3,000/– வீதம் ரூ.38.05 கோடி நிதி ஒதுக்கீடு.

❖ ரூ.58.88 கோடிச் செலவில் அனைத்து மாவட்டங்களில் உள்ள குழந்தைகள் மையங்களில் முன்பருவக் கல்வி பயிலும் 2 முதல் 6 வயது வரையிலான குழந்தைகளுக்கு இரண்டு இணை வண்ண சீருடைகள் வழங்கப்பட்டது.

❖ ரூ.6.59 கோடிச் செலவில் இராமநாதபுரம் மற்றும் விருதுநகர் மாவட்டங்களில் தேர்ந்தெடுக்கப்பட்ட குழந்தை மையங்களில்

காய்கறித் தோட்டம் அமைத்தல், எல்.இ.டி. டிவி, மழைநீர் வடிகால் அமைப்பு, குடிநீர் வடிகட்டி/நீர் சுத்திகரிப்பான், மற்றும் இதர உட்கட்டமைப்பு வசதிகள் மேற்கொள்ளப்பட்டு 800 குழந்தைகள் மையங்களும் எழுச்சிமிகு குழந்தைகள் மையங்களாக (சாக்ஷம் அங்கன்வாடிகளாக) தரம் உயர்த்தப்பட்டன.



- ரூ.53.76 கோடிச் செலவில் அனைத்து குழந்தைகள் மையங்களுக்கும் முன்பருவக் கல்வி விளையாட்டு உபகரணங்கள்.
- குழந்தைகள் மையங்களில் பயனடைந்து வரும் 2 முதல் 6 வயதுடைய சத்துணவுத் திட்ட குழந்தைகளுக்கு தினசரி சூடான மதிய உணவு சமைப்பதற்குத் தேவையான காய்கறிகள், உப்பு உள்ளிட்ட மளிகைப் பொருட்கள் மற்றும் எரிபொருட்களுக்குண்டான உணவூட்டுச் செலவினம் ரூ.2.39ஆக உயர்வு.
- அங்கன்வாடி மையங்களில் பயன்பெறும் 8,35,246 (0-2 வயதுடைய) குழந்தைகளின் பெற்றோர் மற்றும் குழந்தைகளை பேணுவோருக்கு, இளஞ்சிறார்களுக்கு மற்றும் பச்சிளம் குழந்தைகளுக்கு உணவூட்டும் முறைகளை மேம்படுத்துதல் குறித்த சுய மதிப்பீட்டுத் தாள்கள் வழங்கப்பட்டுள்ளன.
- விளையாட்டின் மூலம் கற்றல் என்ற புத்தகம் புதியதாக வடிவமைக்கப்பட்டு, அங்கன்வாடி மையங்களில் பயன்பெறும் 9,79,902 (0-3 வயதுடைய) குழந்தைகளின் பெற்றோர் மற்றும் பேணுவோருக்கு வழங்கப்பட்டுள்ளது.
- ரூ.4,80,38,590 செலவில் (2-6 வயதுடைய) குழந்தைகளின் பெற்றோர் மற்றும் பேணுவோருக்கு முன்பருவக் கல்வி ஆய்வுத்தாள் அட்டைகள், செயல்பாட்டுப் புத்தகங்கள் (2-3,3-4(ம)4-5வயதிற்கானது),முன்பருவக் கல்வி நிறைவுச் சான்றிதழ்கள், குழந்தை விவரத் தொகுப்பு புத்தகங்கள் மற்றும் விளையாட்டின் மூலம் கற்றல் புத்தகங்கள் அச்சிட்டு வழங்கப்பட்டுள்ளன.
- வட்டாரஅளவில்ஆரம்பகாலகுழந்தைபராமரிப்புத் தொடர்பான பயிற்சி 1,422 அங்கன்வாடிப் பணியாளர்களுக்கு37குழுக்களாகநடத்துவதற்கு ரூ.25.16 இலட்சம் நிதி ஒதுக்கீடு.
- ஊட்டச்சத்தை உறுதிசெய் திட்டத்தின் கீழ் முகாம் தொடங்கப்பட்டு 6 மாதங்கள் முதல் 6

வயது வரையிலான கடுமையான ஊட்டச்சத்து குறைபாடுடைய குழந்தைகளுக்கு ரூ.18.68 கோடிச் செலவில் சிறப்பு ஊட்டச்சத்து உணவு (RUTF) வழங்கப்பட்டது.

- ரூ.1.5 கோடிச் செலவில் கர்ப்பிணிப் பெண்கள், பாலூட்டும் தாய்மார்கள், 6 வயதுக்குட்பட்ட குழந்தைகளின் பெற்றோர் ஆகியோருக்கு ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி பணிகள் திட்ட சேவைகள் பற்றிய ஆலோசனை தகவல் வழங்கிட ஒரு பயணாளி சேவை மையம் அமைக்கப்பட்டுள்ளது.
- 434 வட்டாரங்களுக்கு ரூ.85 இலட்சம் செலவில் குறைந்த எடையுள்ள குழந்தைகளைக் கண்காணிக்கும் பொருட்டு, செயலியுடன் இணைக்கப்பட்ட எடை, உயரம் அளவீட்டு 1,000 ICT அடிப்படையிலான ஸ்மார்ட் எடை கருவிகள்.
- மாநில முன்னெடுப்புத் திட்டமாக, TN–ICDS என்ற புதிய செயலி தமிழ்நாடு மின்னணு ஆளுமை நிறுவனம் ஒருங்கிணைப்புடன் உருவாக்கம்.
- ரூ.6.91 இலட்சம் ஒதுக்கீட்டில் மின்சார இரயில் வண்டியில் ஊட்டச்சத்து மற்றும் சுகாதாரம் விளம்பரம்.
- ரூ.4.75 கோடி நிதி ஒதுக்கீட்டில் குழந்தைகளிடையே ஏற்படும் இரத்த சோகையை தவிர்த்திட 20 மாவட்டங்களில் கை கழுவுதல் மற்றும் தன் சுத்தம் குறித்த விழிப்புணர்வினை நடமாடும் ஊர்திகள், தெருமுறை விழிப்புணர்வு நாடகங்கள், பொம்மலாட்டம், குறும்படங்கள் போன்ற தகவல் தொடர்பு நடவடிக்கைகள்.
- ரூ.5.08 கோடிச் செலவில் ஆறு வயதிற்குட்பட்ட குழந்தைகள் மற்றும் தாய்மார்களின் விபரங்களை பதியவும், அவர்களின் ஊட்டச்சத்து வளர்ச்சியினை நிகழ் நேர கண்காணிப்பதற்காகவும் அங்கன்வாடி பணியாளர்களுக்கு 6,640 திறன் கைபேசிகள்.
- ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டத்தின் கீழ் செயல்பட்டு வரும் குழந்தைகள் மையங்கள் மூலம், பிறந்த சில நாட்களே ஆன குழந்தைகளின் நீளத்தை அளவிடும் கருவி (Infantometer) 18,573 மையங்களுக்கும், குழந்தைகள் (ம) பெண்களின் உயரத்தை அளவிடும் கருவி (Stadiometer) 40,241 மையங்களுக்கும், தாய் மற்றும் குழந்தையை எடை எடுக்கும் கருவி, (Mother & Child Digital Weighing Scale) 41,789 மையங்களுக்கும், மற்றும் குழந்தைகளின் எடையை அளவிடும் கருவி (Infant Weighing Scale) 18,573 மையங்களுக்கும், எனமொத்தம் ரூ.25.63 கோடிச் செலவீனத்தில் வளர்ச்சி கண்காணிக்கும் கருவிகள் வழங்கப்பட்டது.

குழந்தைகள் நலன் மற்றும் சிறப்புச் சேவைகள் துறை

- கொரோனா நோய் தொற்றினால் பாதிக்கப்பட்டு பெற்றோர் இருவரையும் இழந்த அல்லது ஏற்கெனவே தாய் அல்லது தந்தையை இழந்து, கொரோனா நோய் தொற்றினால் மற்றொரு பெற்றோரையும் இழந்த 382 குழந்தைகளின் பெயரில் தலா ரூ.5 இலட்சம் வீதம் ரூ.19.10 கோடி வைப்பீடு பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கு 18 வயது நிறைவு செய்யும் போது வட்டியுடன் வழங்கப்படும்.
- கொரோனா நோய் தொற்றினால் பாதிக்கப்பட்டு தாய் அல்லது தந்தையை இழந்த 18 வயதுக்குட்பட்ட 13,740 குழந்தைகளின் பெற்றோர்களுக்கு தலா ரூ.3 இலட்சம் வீதம் ரூ.412.20 கோடி மற்றும் இலங்கைத் தமிழ் அகதிகளின் 9 குழந்தைகளுக்கு தலா ரூ.3 இலட்சம் வீதம் ரூ.0.27 கோடி என கூடுதல் ரூ.412.50 கோடி நிவாரணத் தொகை வழங்கப்பட்டுள்ளது.
- கொரோனா நோய் தொற்றினால் பாதிக்கப்பட்டு பெற்றோர் இருவரையும் இழந்து உறவினர் அல்லது பாதுகாவலரின் அரவணைப்பில் வளர்ந்து

வரும் 368 குழந்தைகளுக்கு மாத பராமரிப்புத் தொகையாக ரூ.3,000 வீதம் ரூ.294.81 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

❖ பாலியல் குற்றங்களால் பாதிக்கப்பட்ட 2,445 குழந்தைகளுக்கு ரூ.44.99 கோடி இழப்பீட்டு தொகை வழங்கப்பட்டுள்ளது.

❖ நிதி ஆதரவு திட்டத்தின் கீழ் மாநில நிதியிலிருந்து 3 ஆண்டுகளுக்கு நிதி ஆதரவு வழங்கப்பட்டு வருகிறது. 2021–2022 முதல் 2023–2024 ஆம் நிதி ஆண்டு வரை 3,272 குழந்தைகளுக்கு மாதம் ரூ.2,000 வீதம் ரூ.6.19 கோடி வழங்கப்பட்டுள்ளது.

❖ குழந்தைகளின் பாதுகாப்பு சேவைகள் குறித்து "சமூக மேம்பாட்டுக்கான ஒருங்கிணைந்த பயிற்சி மையம்" செங்கல்பட்டு மாவட்டம், ஆத்தூரில் உருவாக்க ரூ.27 கோடி ஒதுக்கீடு.

❖ குழந்தைகளின் ஒட்டுமொத்த நல்வாழ்வினை மேம்படுத்தும் நோக்கில் "தமிழ்நாடு மாநில குழந்தைகள் பாதுகாப்புக் கொள்கை 2021" வெளியிடப்பட்டது.

❖ சென்னை, திருநெல்வேலி, கோயம்புத்தூர் மற்றும் திருச்சி மாவட்டங்களில் சிறுவர்களிடையே உள்ள போதைப்பழக்கத்தை கட்டுப்படுத்துவதற்கு ரூ.90.41 இலட்சம் மதிப்பீட்டில் போதைத் தடுப்பு மையங்கள் அமைக்கப்பட்டுள்ளது. 427 குழந்தைகள் பயனடைந்துள்ளனர்.

❖ 6 புதிய மாவட்டங்களில் மாவட்ட குழந்தை பாதுகாப்பு அலகுகள் ஏற்படுத்தப்பட்டு செயல்பட்டு வருகின்றன செங்கல்பட்டு மற்றும் கள்ளக்குறிச்சியில் குழந்தை நலக் குழுவும், மயிலாடுதுறையில் இளைஞர் நிதிக் குழுமம் ஆகியவை அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன.

❖ செங்கல்பட்டு மாவட்டம் ஆத்தூரில் "பாதுகாப்பு இடம்" புதிய கட்டடம் கட்டுவதற்கு ரூ.15.95 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு 90 சதவிகிதப் பணி முடிவடைந்துள்ளது.

❖ சென்னை மாவட்டத்தில் ரூ.68.53 இலட்சம் செலவில் கூடுதலாக ஒரு மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலகு அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது.

❖ குழந்தைகள் இல்லங்கள் அதிகளவில் உள்ள 6 மாவட்டங்களில் வாழ்வியல் வழிகாட்டு மையங்கள் அமைக்க ரூ.48.24 இலட்சம் நிதி ஒதுக்கீடு.

❖ மாற்று கருவறை தாய் மூலம் குழந்தைகள் பெற்று பராமரிக்கும் அரசு பெண் பணியாளர் மற்றும் ஆசிரியர்களுக்கு 270 நாட்கள் குழந்தை பராமரிப்பு விடுப்பு அளிக்கப்பட்டுள்ளது.

❖ தஞ்சாவூர், அரசினர் கூர்நோக்கு இல்லத்திற்கு கூடுதல் பாதுகாப்பு வசதியுடன் கூடிய சுற்றுச்சுவர் அமைப்பதற்கு ரூ.63,52,175 நிதி ஒப்பளிப்பு.

❖ சமூகப் பாதுகாப்புத் துறையின் கீழ் இயங்கும் 34 அரசு குழந்தைகள் இல்லத்திற்கு திறன் பலகைகள் வழங்குவதற்கு ரூ.55 இலட்சம் நிதி ஒப்பளிப்பு.

❖ தமிழ்நாட்டின் 12 மாவட்டங்களில் செயல்படும் 12 வளமையங்களுக்கு 2023–2024 ஆம் ஆண்டிற்கு ரூ.6,23,800 நிதி ஒப்பளிப்பு.

❖ தமிழ்நாடு அரசின் பொது சுகாதாரம் மற்றும் தடுப்பு மருந்து இயக்ககம் மூலம் பல்நோக்கு சுகாதாரப் பணியாளர் (ANM Training) பயிற்சியானது ஈராண்டு பயிற்சியாக வழங்கப்பட்டு, பயிற்சி பெற்ற 63 மாணவிகளில் 30 மாணவிகள் தனியார் மருத்துவமனையில் பணியில் சேர்ந்துள்ளனர்.

❖ ❖ ❖

மீன்வளம், மீன் வளர்ச்சிக் கழகம் மற்றும் கால்நடை பராமரிப்பு



திரு. **அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்** அவர்கள்

மாண்புமிகு மீன்வளம்-மீனவர் நலத்துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்

மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை

கடல் மீன்வளம்

- இலங்கை அரசால் சிறை பிடிக்கப்பட்டு பல்வேறு கடற்படைத்தளங்களில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள 158 படகுகளில் 129 விசைப்படகு உரிமையாளர்களுக்கு தலா ரூ.5 இலட்சமும், 26 நாட்டுப்படகு உரிமையாளர்களுக்கு தலா ரூ.1.50 இலட்சம் வீதம் மொத்தம் ரூ.6.84 கோடி முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து நிவாரணம் வழங்கப்பட்டுள்ளது.
- கடலில் மீன் பிடிக்கும் போது காணாமல் போகும் தமிழக மீனவர்களின் குடும்பத்திற்கு நாளொன்றுக்கு வழங்கப்படும் உதவித்தொகையை ரூ.250லிருந்து ரூ.350 ஆக உயர்த்தி (மாதத்திற்கு ரூ.10,500க்கு மிகாமல்) வழங்கப்படுகிறது.
- காப்பீடு இல்லாத காலத்தில் இறந்த 205 மீனவர் குடும்பங்களுக்கு விபத்து காப்பீடு நிவாரணத்தொகை தலா ரூ.2 இலட்சம் வீதம் ரூ.4.10 கோடி நிவாரணத் தொகையாக பெறப்பட்டது. இதில் தகுதியுள்ள 173 கருத்துருக்களில், 172 இறந்த மீனவர்களின் வாரிசுதாரர்களுக்கு தலா ரூ.2 இலட்சமும் மற்றும் ஒரு நிரந்தர ஊனமடைந்த மீனவருக்கு ஒரு இலட்சமும் ஆக மொத்தம் ரூ.3.45 கோடி நிவாரணமாக வழங்கப்பட்டுள்ளது.

- எதிர்பாராமல் கடலில் ஏற்படும் அசாதாரண சூழ்நிலை மற்றும் இயற்கை சீற்றங்களின் காரணமாகவிபத்தில்சிக்கிஇறந்தநிலுவையில் உள்ள 25 மீனவர்களின் குடும்பங்களுக்கு நிவாரணம் வழங்கிட தலா ரூ.2 இலட்சம் என ரூ.50இலட்சம்மற்றும்இனிவரும்காலங்களில் பாதிக்கப்படும் மீனவர்களுக்கு நிவாரணம் வழங்குவதற்காகரூ.50இலட்சம்ஆகமொத்தம் ஒரு கோடி ரூபாயை கொண்டு சுழல்நிதி உருவாக்கப்பட்டுள்ளது.

- இலங்கை கடற்படையின் ரோந்து கப்பல் மோதியதால் உயிரிழந்த புதுக்கோட்டை மாவட்டம், கோட்டைப்பட்டினம் மீனவ கிராமத்தைச்சேர்ந்தமீனவரானதிரு.ராஜ்கிரண், த/பெ.ராசு என்பவரது வாரிசுதாரர்களாகிய திருமதி பிருந்தா (மனைவி) மற்றும் திருமதி ஆரவள்ளி (தாயார்) ஆகிய இருவருக்கும் நிவாரணமாக தலா ரூ.50,000 வீதம் ஒரு இலட்சம் ரூபாய் நிவாரணத்தொகையாக வழங்கப்பட்டது.

- இந்திய கடற்படையினர் ரோந்துப் பணியின்போது துப்பாக்கியால் சுட்டதில் சிறுகாயமடைந்த மயிலாடுதுறை மாவட்டத்தைச் சேர்ந்த 5 மீனவர்கள் மற்றும் நாகப்பட்டினம் மாவட்டத்தைச் சேர்ந்த ஒரு மீனவருக்குநிவாரணமாகதலாரூ.20,000வீதம் மொத்தம் ரூ.1.20 இலட்சம் ரோந்து பணியின் போதுதுப்பாக்கியால்சுட்டதில்படுகாயமடைந்த மீனவர் திரு.கா.வீரவேல், த/பெ.காசிராஜன். என்பவருக்கு நிவாரணமாக ரூ.2 இலட்சம் மற்றும் இந்தோனேசியா கடற்படையினரால் சிறைபிடிக்கப்பட்டு,சிறையில்மரணமடைந்த கன்னியாகுமரி மாவட்டத்தைச் சேர்ந்த மீனவர் திரு. மரிய ஜெசின்தாஸ், த/பெ.ஏசுதாசன்என்பவரின்குடும்பத்தினருக்கு ரூ.3 இலட்சம் நிவாரணத் தொகையாக வழங்கப்பட்டது.

- நாகப்பட்டினம் மாவட்டம் கீச்சாங்குப்பம் கிராமத்தைச் சேர்ந்த மீனவர் திரு. முகிந்தன் (எ) சின்ராஸ் என்பவர் கடலில் மீன் பிடிக்க செல்லும்போது படகு கவிழ்ந்து நீரில் மூழ்கி உயிரிழந்தமையால் அவரின்குடும்பத்திற்குஒரு இலட்சம்ரூபாய் நிவாரணத்தொகையாக வழங்கப்பட்டது.

- மஸ்கட் நாட்டில் ஆழ்கடலில் மீன் பிடித்துக்கொண்டிருந்தபோது கடலில் தவறி விழுந்து மரணமடைந்த கன்னியாகுமரி மாவட்டம் கிள்ளியூர் வட்டம், ஏழுதேசம் கிராமம் சின்னத்துறை பகுதியைச் சேர்ந்த லிறன்ஷோ, த/பெ. கிளாரன்ஸ் என்பவரின் குடும்பத்திற்கு ரூ.2 இலட்சம் நிவாரணத் தொகையாக வழங்கப்பட்டது.

- தமிழக மீனவ இளைஞர்கள் குடிமைப் பணிகளில் சேருவதற்காக அகில இந்திய குடிமைப்பணித் தேர்வுப் பயிற்சி மையத்தில் 6 மாத கால சிறப்புப் பயிற்சி வழங்கும் திட்டத்தின் கீழ் 26 மீனவ மாணவர்களுக்கு ரூ.2.93 இலட்சம் செலவில் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

- மீனவக் குடும்பங்களுக்கு தலா ரூ.5,000 வீதம் 5,15,903 மீனவக் குடும்பங்களுக்கு மீன்பிடித்தடைக்காலநிவாரணத்தொகையாக ரூ.257.94 கோடி வழங்கப்பட்டுள்ளது.

- மீனவக் குடும்பங்களுக்கு வழங்கப்படும் மீன்பிடிக் குறைவு காலத்திற்கான சிறப்பு உதவித்தொகையினை குடும்பம் ஒன்றுக்கு ரூ.5,000லிருந்து ரூ.6,000ஆக உயர்த்தப்பட்டு 5,51,609மீனவக்குடும்பங்களுக்குரூ.330.95கோடி நிவாரணத் தொகையாக வழங்கப்பட்டுள்ளது.

- தேசிய கடல் மீனவர் சேமிப்பு மற்றும் நிவாரணத்திட்டத்தினை2022–2023ஆம்ஆண்டு முதல்மாநிலஅரசுத்திட்டமாகசெயல்படுத்திட அரசால் நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டது. 4,13,360 மீனவர்களுக்கு ரூ.123.62 கோடி நிவாரணத் தொகையாக வழங்கப்பட்டுள்ளது. 2023–2024ஆம்ஆண்டில்இத்திட்டத்தினை செயல்படுத்திட ரூ.63.39 கோடி அரசால் நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டதைத் தொடர்ந்து, இதுவரை திருவள்ளூர் முதல் இராமநாதபுரம் வரையிலான11கடலோரமாவட்டங்களைச்சேர்ந்த 1,40,256மீனவர்களுக்குரூ.42.07கோடிஅரசுப் பங்குத் தொகையாக விடுவிக்கப்பட்டுள்ளது.



- தமிழ்நாடு கடல் மீனவ மகளிர் சேமிப்பு மற்றும் நிவாரணத் திட்டத்தின் கீழ் 4,13,402 மீனவர் மகளிருக்கு ரூ.123.68 கோடி நிவாரணத் தொகையாக வழங்கப்பட்டுள்ளது. 2023–2024ஆம் ஆண்டில் இத்திட்டத்தினை செயல்படுத்திட ரூ.61.77 கோடி மாநில அரசால் நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டதைத் தொடர்ந்து, இதுவரை திருவள்ளூர் முதல் இராமநாதபுரம் வரையான 11 கடலோர மாவட்டங்களைச் சேர்ந்த 1.35 இலட்சம் மீனவர்களுக்கு ரூ.40.71 கோடி அரசுப் பங்குத் தொகையாக விடுவிக்கப்பட்டுள்ளது.

- பாரம்பரியமீன்பிடிக்கலன்களைஇயந்திரமாக்கும் திட்டத்தின்கீழ் 2022–2023ஆம் ஆண்டு 40 விழுக்காடு மானியத்தில் ரூ.9.60 கோடிச் செலவினத்தில் நாட்டுப்படகு மீனவர்களுக்கு 2,591 உட்/வெளிப்பொருத்தும் இயந்திரங்கள் வழங்கப்பட்டுள்ளது.2023–2024ஆம்ஆண்டிற்கு ரூ.12 கோடி திட்டமதிப்பீட்டில் ரூ.4.80 கோடி மானியத்தில் 1,000 உள்/வெளிப்பொருத்தும் இயந்திரங்கள் 40 விழுக்காடு மானியத்தில் வழங்கிடஅரசால்நிருவாகஒப்புதல்வழங்கப்பட்டு திட்டம் செயல்பாட்டில் உள்ளது.

- பாரம்பரிய நாட்டுப்படகு மீனவர்களுக்கு 75 விழுக்காடு மானியத்தில் ரூ.6 கோடி திட்ட மதிப்பீட்டில் 40,000 உயிர்காப்பு சட்டைகள் (Life Jackets) வழங்கிட அரசால் நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டவுடன் உயிர்காப்பு சட்டைகள் ரூ.4.50 கோடி மானியத்தில் வழங்கப்படும்.

- ஒன்றிய மற்றும் மாநில அரசின் நிதியுதவியின் மூலம் செயல்படுத்தப்படும், பிரதமமந்திரிமீன்வளமேம்பாட்டுத்திட்டத்தின் கீழ் கடலோர மாவட்டங்களான இராமநாதபுரம், தஞ்சாவூர், புதுக்கோட்டை, தூத்துக்குடி மற்றும்கன்னியாகுமரிமாவட்டங்களில்மீனவ மகளிரின் வாழ்வாதாரத்தை மேம்படுத்திட மிதவைகள் மற்றும் கயிறு மூலம் கடற்பாசி வளர்த்தல் திட்டத்தினை செயல்படுத்திட ரூ.1.42 கோடி மானியத்தொகை 1,311 மீனவ மகளிருக்கு விடுவிக்கப்பட்டுள்ளது.

- ஒன்றிய மற்றும் மாநில அரசின் நிதியுதவியின் மூலம் செயல்படுத்தப்படும், பிரதம மந்திரி மீன்வள மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் கடலோர மாவட்டங்களான இராமநாதபுரம், தூத்துக்குடி மற்றும் திருவள்ளூர் மாவட்டங்களில் மீனவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்திட மிதவை கூண்டுகளில்கடல்மீன்வளர்ப்புதிட்டத்தினை செயல்படுத்திட அரசால் ரூ.23 இலட்சம் மானியமாக வழங்கிட ஒப்புதல் அளிக்கப்பட்டு இதுவரை ரூ.21.99 இலட்சம்மானியத்தொகை 30 மீனவர்களுக்கு விடுவிக்கப்பட்டுள்ளது.

❖ ஒன்றிய மற்றும் மாநில அரசின் நிதி உதவியின் மூலம் செயல்படுத்தப்படும், பிரதம மந்திரி மீன்வள மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், மயிலாடுதுறை மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்களில் கடல் மீன் குஞ்சு வளர்த்தெடுத்தல் மையம் அமைத்திட அரசால் 2 அலகுகளுக்கு ரூ.12 இலட்சம் மானியமாக வழங்கிட ஒப்புதல் அளிக்கப்பட்டு, ரூ.5.50 இலட்சம் மானியத்தொகை ஒரு அலகிற்கு விடுவிக்கப்பட்டுள்ளது.

❖ ஒன்றிய மற்றும் மாநில அரசின் நிதி உதவியின் மூலம் செயல்படுத்தப்படும், பிரதம மந்திரி மீன்வள மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், மீனவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்திட மிதவை கூண்டுகளில் கடல் மீன் வளர்ப்பு திட்டத்திற்கு 50 அலகுகளுக்கு அரசால் ரூ.1.08 கோடி மானியமாக வழங்கிட ஒப்புதல் அளிக்கப்பட்டு, இதுவரை ரூ.15.58 இலட்சம் மானியத்தொகை 12 அலகுகளுக்கு விடுவிக்கப்பட்டுள்ளது.

❖ ஒன்றிய மற்றும் மாநில அரசின் நிதியுதவியின் மூலம் செயல்படுத்தப்படும், பிரதம மந்திரி மீன்வள மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், "நவீன உயிர் கூழ்ம (Bio – floc) குளங்களில் இறால் வளர்த்தல் மற்றும் உள்ளீட்டுக்கு மானியம் வழங்குதல் திட்டத்திற்கு 25 அலகுகளுக்கு அரசால் ரூ.1.87 கோடி மானியமாக வழங்கிட ஒப்புதல் அளிக்கப்பட்டு, இதுவரை ரூ.39.03 இலட்சம் மானியத்தொகை 6 பயனாளிகளுக்கு விடுவிக்கப்பட்டுள்ளது.

❖ ஒன்றிய மற்றும் மாநில அரசின் நிதியுதவியின் மூலம் செயல்படுத்தப்படும், பிரதமமந்திரிமீன்வளமேம்பாட்டுத்திட்டத்தின் கீழ்,"உவர்நீர்இறால்வளர்ப்பிற்குபுதியகுளங்கள் கட்டுதல்" திட்டத்திற்கு 100 ஹெக்டேருக்கு அரசால் ரூ.3.42 கோடி மானியமாக வழங்கிட ஒப்புதல் அளிக்கப்பட்டு, இதுவரை ரூ.15.61 இலட்சம்மானியத்தொகை4பயனாளிகளுக்கு விடுவிக்கப்பட்டுள்ளது.

❖ ஒன்றிய மற்றும் மாநில அரசின் நிதியுதவியின் மூலம் செயல்படுத்தப்படும்,



பிரதம மந்திரி மீன்வள மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், "புதியதாக கட்டப்பட்ட உவர்நீர் இறால் வளர்ப்பு குளங்களில் இறால் வளர்த்தலுக்கு உள்ளீடுகளுக்கு மானியம் வழங்குதல்"திட்டத்திற்கு100ஹெக்டேருக்கு அரசால் ரூ.2.56 கோடி மானியமாக வழங்கிட ஒப்புதல் அளிக்கப்பட்டு, இதுவரை ரூ.12.01 இலட்சம் மானியத்தொகை 4 பயனாளிகளுக்கு விடுவிக்கப்பட்டுள்ளது.

உள்நாட்டு மீன்வளம்

❖ மீன்வளத்துறையின்கட்டுப்பாட்டில்உள்ள10 அரசுமீன்குஞ்சுஉற்பத்திநிலையங்களிலிருந்து 194.56 கோடி நுண்மீன்குஞ்சுகள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன.

❖ மீன்வளத்துறையின்கட்டுப்பாட்டில்உள்ள39 அரசுமீன்குஞ்சுவளர்ப்புப்பண்ணைகளில்25.49 கோடிமீன்விரலிகள்வளர்த்தெடுக்கப்பட்டுள்ளன.

தேசிய வேளாண் அபிவிருத்தி திட்டம்

❖ தேசியவேளாண் அபிவிருத்தி திட்டத்தின்கீழ் பண்ணைக் குட்டைகளில் கூட்டு மீன் வளர்ப்பில் இந்தியப் பெருங்கெண்டை ரக மீன்களுடன் நன்னீர் இறால் வளர்ப்பு மேற்கொள்ள உள்ளீட்டு மானியம் வழங்கும் திட்டம் ரூ.25.25 இலட்சம் செலவில் நிறைவேற்றப்பட்டது.



- பண்ணைக்குட்டைகளில், நீர் சேமிப்புத் திறனை அதிகரித்திட ஏதுவாக பாலித்தீன் உறையிடுதல் மற்றும் மீன்வளர்த்திட உள்ளீட்டு செலவின மானியம் வழங்கும் திட்டத்திற்கென ரூ.75.75 இலட்சம் அரசால் விடுவிக்கப்பட்டுதிட்டம்நிறைவேற்றப்பட்டது.
- பண்ணைக்குட்டைகளில் விரால் மீன்வளர்ப்புமேற்கொள்ளஉள்ளீட்டுசெலவின மானியம் வழங்கும் திட்டத்திற்கென ரூ.30.30 இலட்சம்செலவில்திட்டம்நிறைவேற்றப்பட்டது.
- ரூ.4.50 கோடிச் செலவில் கிருஷ்ணகிரி மாவட்டம், பாரூர் அரசு மீன் பண்ணையில் மரபு வழி மேம்படுத்தப்பட்ட திலேப்பியா மீன்குஞ்சு வளர்ப்பு நிலையம் அமைக்கப்பட்டுள்ளது.
- ரூ.70 இலட்சம் செலவில் சேலம் மாவட்டம், ஆனைமடுவு அரசு மீன் பண்ணையினை மேம்படுத்தும் பணிகள் நிறைவடைந்துள்ளது.
- கன்னியாகுமரி மாவட்டம், சிற்றாறு–II அரசு மீன் பண்ணை ரூ.32 இலட்சம் செலவில் மேம்படுத்தப்பட்டது.
- கன்னியாகுமரி மாவட்டம், பேச்சிப்பாறை அரசு மீன் பண்ணை ரூ.20 இலட்சம் செலவில் மேம்படுத்தப்பட்டது.

பிரதம மந்திரி மீன்வள மேம்பாட்டுத்திட்டம்

- தமிழ்நாட்டில் 2 தனியார் நன்னீர் மீன்குஞ்சு பொரிப்பகங்கள் தஞ்சாவூர் மற்றும் திருவாரூர் மாவட்டங்களில் அமைக்கப்பட்டு, ரூ.25 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு மானியம் வழங்கப்பட்டுள்ளது. 8 தனியார் நன்னீர் மீன்குஞ்சு பொரிப்பகங்கள் அமைத்திட ரூ.95 இலட்சம் மானியம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
- புதியதாக தனியார் மீன்குஞ்சு வளர்ப்பு குளங்கள் 10 ஹெக்டேர் பரப்பளவில் அமைத்திட உள்ளீட்டு மானியத்தொகை ரூ.32.20 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு பயனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. 50 ஹெக்டேர் பரப்பளவில் அமைத்திட ஏதுவாக ரூ.194.40 இலட்சம் மானியம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
- புதியதாக தனியார் மீன்வளர்ப்பு குளங்கள் 100 ஹெக்டேர் பரப்பளவில் அமைத்திட உள்ளீட்டு மானியத்தொகை ரூ.5.06 கோடி வழங்கப்பட்டுள்ளது. 85 ஹெக்டேர் பரப்பளவில் அமைத்திட உள்ளீட்டு மானியத்தொகை ரூ.4.48 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
- 10 உயிர் கூழ்ம (பயோபிளாக்) குளங்கள் அமைத்து மீன் வளர்ப்பு மேற்கொள்ள



ரூ.1.32 கோடி வழங்கப்பட்டுள்ளது. 100 உயிர்கூழ்ம (பயோபிளாக்) குளங்கள் அமைத்து மீன்வளர்ப்பு மேற்கொள்ள ரூ.3.60 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது.

- நீரினை மறு சுழற்சி முறையில் (RAS) சிறிய அளவிலான தொட்டிகள் அமைத்து நன்னீர் மீன்வளர்ப்பு செய்தல் திட்டத்தின் கீழ் ரூ.69 இலட்சம் மானியம் வழங்கப்பட்டுள்ளது.
- தென்காசி மாவட்டம், இராமநதி மற்றும் கடலூர் மாவட்டம், லால்பேட்டை ஆகிய இடங்களில் ரூ.10 கோடி மதிப்பீட்டில் "சினைமீன்வங்கி" அமைக்கப்பட்டுள்ளது.
- ஒருங்கிணைந்த நீர்த்தேக்க மீன்வள மேம்பாட்டுத் திட்டத்தினை 5 நீர்த்தேக்கங்களில் செயல்படுத்திட ரூ.11.08 கோடி ஒதுக்கீடு செய்து பணிகள் நடைபெற்று வருகின்றன.
- தமிழ்நாட்டில் உள்ள காவிரி, பவானி மற்றும் தாமிரபரணி ஆறுகளில் 40 இலட்சம் நாட்டின மீன் குஞ்சு விரலிகள் ரூ.1.24 கோடி மதிப்பீட்டில் ஆறுகளில் இருப்பு செய்யப்பட்டது.
- தமிழ்நாட்டில் 3 சிறிய அளவிலான (2 டன்/தினசரி) மீன் தீவன ஆலை அமைத்திடவும், ஒரு பெரிய அளவிலான (20 டன்/தினசரி) மீன் தீவன ஆலை அமைத்திடவும் ரூ.1.22 கோடி மானியம் ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.
- தமிழ்நாட்டில் ரூ.1.20 கோடி மதிப்பீட்டில் 40 இலட்சம் நாட்டின மீன்விரலிகள் உற்பத்தி செய்யப்பட்டு ஆறுகளில் இருப்பு செய்ய ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. அதன்படி 40 இலட்சம் மீன்விரலிகள் உற்பத்தி செய்யப்பட்டு காவிரி, பவானி மற்றும் தாமிரபரணி ஆறுகளில் இருப்பு செய்யப்பட்டுள்ளது.
- புதியதாக தனியார் மீன்வளர்ப்பு குளங்கள் 20 ஹெக்டேர் பரப்பளவில் அமைத்திட மற்றும் உள்ளீட்டு மானியத்தொகை வழங்கிட ரூ.1.10 கோடி நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.
- நீரினை மறுசுழற்சி முறையில் (RAS) சிறிய அளவிலான தொட்டிகள் அமைத்து நன்னீர் மீன்வளர்ப்பு செய்தல் திட்டத்தின் கீழ் 3 அலகிற்கு ரூ.12 இலட்சம் மானியம் வழங்கிட நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.
- 25 உயிர்கூழ்ம (பயோபிளாக்) குளங்கள் அமைத்து மீன்வளர்ப்பு மேற்கொள்ள ரூ.94.50 இலட்சம் வழங்கிட நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.
- தமிழ்நாட்டில் ஒரு சிறிய அளவிலான (2 டன்/தினசரி) மீன் தீவன ஆலை அமைக்க ரூ.18 இலட்சம் மானியம் விடுவித்திட நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

அலங்கார மீன்வளர்ப்பு

- ஒன்றிய மற்றும் மாநில அரசின் நிதியுதவியின் மூலம் செயல்படுத்தப்படும், பிரதம மந்திரி மீன்வள மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் கொல்லைப்புற, நடுத்தர மற்றும் ஒருங்கிணைந்த வண்ணமீன் வளர்ப்புக்காக ரூ.7.71 கோடி மானியம் வழங்கப்பட்டுள்ளது.

மீன் விற்பனைக்கான போக்குவரத்து வசதிகள்

- ஒன்றிய மற்றும் மாநில அரசின் நிதியுதவியின் மூலம் செயல்படுத்தப்படும், பிரதம மந்திரி மீன்வள மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் குளிரூட்டப்பட்ட நான்கு சக்கர வாகனம், குளிர்காப்பிடப்பட்ட வாகனம், உயிர்



மீன் விற்பனை நிலையங்கள் அமைக்க ரூ.17.47 கோடி மானியம் வழங்கப்பட்டுள்ளது.

மாநில நிதி

- உள்நாட்டு மீனவர்களின் மீன்பிடித் திறனை அதிகரிக்கும் வகையில் மீன்பிடி உபகரணங்கள் (மீன்பிடிவலை / பரிசல்) கொள்முதல்செய்திடஒருகோடிரூபாய்மானியம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
- மாநிலத்தில் 550 அலகுகள் பல்நோக்கு பண்ணைக்குட்டைகளில் மீன்வளர்ப்பினை ஊக்குவித்திட உள்ளீட்டு மானியமாக வழங்க ஒருகோடிரூபாய்ஒதுக்கீடுசெய்யப்பட்டுதிட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

தமிழ்நாடு நீர்வள நிலவளத் திட்டம்

- உலக வங்கியின் நிதியுதவியுடன் செயல்படுத்தப்படும் தமிழ்நாடு நீர்வள நிலவளத் திட்டத்தின்கீழ் பல்வேறு உள்நாட்டு மீன்வளத் திட்டங்களை செயல்படுத்திடரூ.1.97கோடிச்செலவில்பணிகள் செயல்படுத்தப்பட்டு வருகின்றது.

உட்கட்டமைப்பு வசதிகள்

- மீன்வளம் மற்றும் நீர்வாழ் உயிரின வளர்ப்பு உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதித் (FIDF) திட்டத்தின்கீழ்–"நாகப்பட்டினம்மாவட்டத்தில், நாகப்பட்டினம் மீன்பிடி துறைமுகத்தில் கூடுதல் படகு அணையும் தளம், படகு பழுதுபார்க்கும் தளம் போன்ற கட்டமைப்பு வசதிகளுடன் மேம்படுத்தும் பணிகள்" – ரூ.81 கோடி ஒதுக்கீடு செய்து மேம்பாட்டுப்பணி நடைபெற்று வருகிறது.
- திருவள்ளூர்மாவட்டம்,அரங்கங்குப்பம்மற்றும் கூனங்குப்பம்,சென்னைமாவட்டம்,தாழங்குப்பம் மற்றும்நெட்டுக்குப்பம்,கன்னியாகுமரிமாவட்டம், குளச்சல் மீன்பிடி துறைமுகத்தை தூர்வாரி ஆழப்படுத்திசீரமைக்கும்பணிகள்மேற்கொள்ள ரூ.31 கோடிச் செலவில் பிரதம மந்திரி மீன்வள மேம்பாட்டுத் திட்டம் மூலம் மேம்பாட்டுப்பணி நடைபெற்று வருகிறது.
- மாநில அரசு திட்டத்தின்கீழ் "கன்னியாகுமரி மாவட்டம், விவேகானந்தர் பாறை படகு நிறுத்தம் முனையத்தில் புதிய படகுகள் நிறுத்திட கூடுதல் படகு அணையும் தளம் அமைக்கும்பணிகள்ரூ.7கோடிஒதுக்கீடுசெய்து பணிகள் நடைபெற்று வருகிறது.
- இராமநாதபுரம் மாவட்டம், இராமேஸ்வரம், தங்கச்சிமடத்தில் தூண்டில் வளைவு அமைக்க ஆய்வுப்பணி மேற்கொள்ள ரூ.20 இலட்சம் பாம்பன் வடக்கு மீனவர் கிராமத்தில் தூண்டில் வளைவு அமைக்க ஆய்வுப் பணி மேற்கொள்ள ரூ.20 இலட்சம், குந்தக்கால் மீன் இறங்கு தளத்தில் தூண்டில்

வளைவு அமைக்க ஆய்வுப்பணி மேற்கொள்ள ரூ.50 இலட்சம் ஆக மொத்தம் ரூ.90 இலட்சத்திற்கு நிருவாக ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.

தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகம்

- தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகம், சென்னை மீன்விற்பனைப் பிரிவிலிருந்து இணையதளம் மற்றும் கைபேசி வாயிலாக 27,130 கேட்புகளை ஏற்று 40,094 கிலோ மீன்கள் ரூ.2.39 கோடிக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது.
- நவீன மீன்விற்பனை நிலையங்கள் மற்றும் நடமாடும் விற்பனை அகங்கள் வாயிலாக 1,528.45 டன் மீன்கள் விற்பனை செய்யப்பட்டு, ரூ.45.74 கோடி வருவாய் ஈட்டப்பட்டுள்ளது.
- வரிவிலக்களிக்கப்பட்ட 1.53 இலட்சம் கிலோலிட்டர் உயர்வேக டீசல் எரிபொருள் மீனவர்களுக்கு விநியோகிக்கப்பட்டுள்ளது.
- மானிய விலையில் 3,647 கடல் மீனவ பயனாளிகளுக்கு 19,869 கிலோ லிட்டர் தொழிலக மண்ணெண்ணெய் விநியோகிக்கப்பட்டுள்ளது.
- நீர்த்தேக்கம் வாயிலாக 2,232.94 டன் மீன்கள் பிடிக்கப்பட்டு ரூ.17.34 கோடி தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகம் வாயிலாக வருவாய் ஈட்டப்பட்டது.

தமிழ்நாடு மாநில தலைமை மீன்வள கூட்டுறவு இணையம் லிட்.,

- தூத்துக்குடி மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களைச் சேர்ந்த மண்ணெண்ணெயில் இயங்கும் வெளிப்பொருத்தும் இயந்திரம் கொண்ட பதிவுபெற்ற 2,404 நாட்டுப் படகுகளுக்கு 14 மண்ணெண்ணெய் விற்பனை நிலையங்கள் மூலம் 19,322 கிலோ லிட்டர் தொழிலக மண்ணெண்ணெய் ரூ.95.06 கோடி மானியத்தில் விநியோகிக்கப்பட்டுள்ளன.
- தமிழ்நாடு மாநில தலைமை மீன்வள கூட்டுறவு இணையத்தால் கடலோர மாவட்டங்களில் நிறுவப்பட்டுள்ள 17 டீசல் விற்பனை நிலையங்கள் வாயிலாக 67,917 கிலோலிட்டர் விற்பனை வரிவிலக்களிக்கப்பட்ட டீசல், 4,348 மீன்பிடி விசைப்படகுகளுக்கும் மற்றும் 762 இயந்திரமயமாக்கப்பட்ட நாட்டுப்படகுகளுக்கும் விநியோகம் செய்யப்பட்டு ரூ.15.49 கோடி வருவாய் ஈட்டப்பட்டுள்ளது.
- தேசிய வேளாண் அபிவிருத்தித் திட்டத்தின் கீழ், 60 சதவிகித மானியத்தில் மொத்தம் ரூ.8.77 இலட்சத்தில் உலர் மீன் உற்பத்தி மற்றும் சந்தைப்படுத்தும் 100 மீனவ மகளிர் குழுக்களுக்கு மீன்விற்பனைக்குத் தேவையான அன்னக்கூடை, மீன்கள் வைக்கும் பெட்டி, எடை போடும் கருவி, குடை, மீன்கள் காயவைக்கும் பாய் ஆகியவை வழங்கப்பட்டன.
- மீன் உபபொருட்கள் தயாரித்தல் மற்றும் கடற்பாசி வளர்ப்பில் ஈடுபட்டுள்ள 955 மீனவ மகளிருக்கு நுண்கடன் தொகையாக ரூ.1.68 கோடி குறைந்த வட்டி விகிதத்தில் வழங்கப்பட்டன.
- ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சித் திட்டத்தின் கீழ், 5 இடங்களில் பனிக்கட்டி உற்பத்தி நிலையங்கள் ரூ.8.80 கோடிச் செலவில் அமைக்கப்பட்டுள்ளன.
- பிரதம மந்திரி மீன்வள மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ரூ.2.31 கோடி மானியத்தில் மீன் விற்பனை செய்ய குளிர்சாதனப் பெட்டி பொருத்தப்பட்ட இருசக்கர வாகனங்கள் 725 பயனாளிகளுக்கு மற்றும் 27 குளிர்சாதனப் பெட்டியுடன் கூடிய மூன்று சக்கர வாகனங்கள் ரூ.38.95 இலட்சம் மானியத்திலும், 3 சில்லரை மீன் விற்பனை நிலையங்கள் ரூ.12 இலட்சம் மானியத்திலும், 2 குளிரூட்டும் வசதியுடன் கூடிய வாகனங்கள் ரூ.13.53 இலட்சம் மானியத்திலும் பயனாளிகளுக்கு வழங்கப்பட்டன.
- மாநில அரசு நிதி உதவித் திட்டத்தின் கீழ் கன்னியாகுமரி மாவட்ட மீனவப் பயனாளிகளுக்கு ரூ.1.44 கோடி மானிய விலையில் 333 உள் / வெளிப்பொருத்தும் இயந்திரங்கள் இணையத்தால் வழங்கப்பட்டுள்ளன.



- மீன்பிடித் தொழிலுக்கு செல்லும் மீனவப் பயனாளிகளுக்குத் தேவையான குளிர்காப்புப்பெட்டி, உயிர்காக்கும் உடை, உயிர்காக்கும் மிதவை மற்றும் மீன்பிடி தூண்டில்முள்கள் ரூ.1.33 கோடி மதிப்பிலான பொருட்கள் கூட்டுறவு விற்பனை மையத்தின் வாயிலாக நியாயமான விலையில் விற்பனை செய்யப்பட்டுள்ளன.

தமிழ்நாடு மீனவர் நலவாரியம்

- தமிழ்நாடு மீனவர் நலவாரியம் வாயிலாக 12,312 மீனவர் நலவாரிய உறுப்பினர்களுக்கு ரூ.16.09 கோடி நிவாரணம்/உதவித்தொகைகள் வழங்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு மீன்வளப் பல்கலைக்கழகம், நாகப்பட்டினம்

மாநில அரசின் புதுமைப் பெண் திட்டம்

- 68 இளநிலை பட்டப்படிப்பு மாணவிகள் தமிழ்நாடு அரசின் "மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் உயர்கல்வி உறுதித்திட்டத்தின்" கீழ்கல்விஉதவித்தொகைபெற்றுபயனடைந்து வருகின்றனர்.

மாநில அரசின் நான் முதல்வன் திட்டம்

- தமிழ்நாடு அரசின் 'நான் முதல்வன்' திட்டத்தின் மூலம் "கல்லூரி கனவுகள்" என்ற தலைப்பில் சென்னையில் கண்காட்சி நடத்தப்பட்டு 10,000க்கும் மேற்பட்ட மாணவர்கள் கலந்து கொண்டு பயன்.

5 சதவிகித மற்றும் 15 சதவிகித மீனவ சமுதாய மாணவர்கள் ஒதுக்கீட்டின் மூலம் பயனடைந்தோர்

- மீனவர் ஒதுக்கீட்டின் மூலம் மொத்தம் 77 மாணவர்கள் பயனடைந்தார்கள்.

மாநில அரசின் நிதியின்கீழ் நிறுவப்பட்ட கட்டட வசதிகள்

- செங்கல்பட்டு மாவட்டம், முட்டுக்காட்டில் ரூ.7.31 கோடியில் மீன்வளர்ப்பு தொழில்நுட்ப தொழில்சார் கல்வி நிலையக் கட்டடம் மற்றும் திருச்சிராப்பள்ளி மாவட்டம், ஜீயபுரத்தில் ரூ.2.50 கோடியில் வளங்குன்றா நீருயிரி வளர்ப்பு மையக் கட்டடம்.

- நாகப்பட்டினம்மாவட்டம்தலைஞாயிறில்ரூ.4.20 கோடியில்டாக்டர்எம்.ஜி.ஆர்.மீன்வளக்கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம், ஆசிரியர் மற்றும் ஆசிரியர் அல்லாத பணியாளர் குடியிருப்புகள் மற்றும் நாகப்பட்டினத்தில் உள்ள தமிழ்நாடு மீன்வளப் பல்கலைக்கழக வளாகத்தில் ரூ.9 கோடியில் மீன்வளப் பொறியியல் கல்லூரியின் தற்போதைய கட்டடத்தின் முதல் தளம் திறப்பு.



- சென்னை மாதவரத்தில் தமிழ்நாடு அரசு நிதியுதவியுடன் ரூ.1.50 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள இணை தொழில்சார் மீன்வளத் தொழில்நுட்ப நிலைய முதன்மைக் கட்டடம்.
- தலைஞாயிறு கிராமத்தில் நபார்டு வங்கி நிதியுதவியுடன் ரூ.6.39 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள டாக்டர் எம்.ஜி.ஆர். மீன்வளக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் மாணவ, மாணவியர் விடுதி கட்டடத்தில் முதல் மற்றும் இரண்டாம் தளம் கூடுதல் கட்டடம் திறப்பு.
- மண்டபத்தில் தேசிய வேளாண் அபிவிருத்தித் திட்ட நிதியுதவியுடன் ரூ.1.17 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள வளங்குன்றா நீருயிரி வளர்ப்பு மையத்தில் அலுவலக மற்றும் ஆய்வகக் கட்டடம்.
- தூத்துக்குடி மாவட்டத்தில் ரூ.1.60 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள ஆழ்கடல் செவுள் வலை மற்றும் ஆயிரங்கால் தூண்டில் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி விசைப்படகு.
- தூத்துக்குடி மாவட்டத்தில் தேசிய வேளாண் அபிவிருத்தித் திட்ட நிதியுதவியுடன் ஒரு கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள மீன்வளக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையவளாகத்தில்பயிற்சிக்கூடத்துடன்கூடிய ஆய்வகக் கட்டடம்.
- பல்கலைக்கழக வளாகம் மீன்வளப் பொறியியல் கல்லூரியில் நபார்டு வங்கி நிதியுதவியுடன் ரூ.7.30 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள மாணவர் விடுதி கட்டடம் மற்றும்ரூ.7.30கோடிமதிப்பீட்டில்கட்டப்பட்டுள்ள மாணவியர் விடுதி கட்டடம் திறப்பு.

மாநில நிதியின் கீழ் ஒப்புதல் அளிக்கப்பட்ட திட்டங்கள்

- ரூ.4.76 கோடி நிதியை தேசிய விவசாய மேம்பாட்டுத்திட்டம்மூலம்பல்கலைக்கழகத்தின் 4 திட்டங்களுக்கு வழங்கியுள்ளது.
- பல்கலைக்கழகத்தின் இரண்டு வெவ்வேறு வளாகங்களில் நடந்து வரும் திட்டங்களுக்கு தமிழ்நாடு புதுமை முயற்சிகள் (TANII) மூலம் ரூ.4.14 கோடி வழங்கியுள்ளது.
- மீன் வளர்ப்பு கழிவுநீரில் அம்மோனியா மற்றும் நைட்ரைட் சுத்திகரிப்புக்கான பாக்டீரியா கூட்டமைப்பை மதிப்பீடு செய்தல் என்ற தலைப்பில் திட்ட மதிப்பு ரூ.1.75 இலட்சம் அனுமதிக்கப்பட்டது. தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மாநில மன்றம் (TNSCST) மூலம் நிதி வழங்கப்பட்டது.

நடைமுறையில் உள்ள திட்டங்கள்

- 35 நடப்பு திட்டங்கள் ரூ.31.07 கோடிச் செலவில் நடைமுறையில் உள்ளன. 13 திட்டங்களைச் செயல்படுத்த நிதி நிறுவனங்களிடமிருந்து மொத்தம் ரூ.3.46 கோடி பெறப்பட்டது.
- ஆறு தேசிய வேளாண்மை அபிவிருத்தித் திட்டங்களுக்கு ரூ.8.82 கோடி மற்றும் நபார்டு நிதியுதவி மூலம் கூடுதல் உள்கட்டமைப்பு வசதிகளுக்காக ரூ.26.09 கோடி அனுமதி அளிக்கப்பட்டது.

கல்வி

- தமிழ்நாடு மீன்வளப் பல்கலைக்கழகத்தின் ஏழாவது பட்டமளிப்பு விழாவில் 414மாணவர்களுக்குபட்டச்சான்றிதழ்பெற்றனர். அவர்களில், 23 மாணவர்கள் பதக்கங்களைப் பெற்றனர்.

- தமிழ்நாடு மீன்வளப் பல்கலைக்கழகத்தின் எட்டாவது பட்டமளிப்பு விழாவில் 383 பட்டதாரிகள் பட்டங்களைப் பெற்றனர். 15 பட்டதாரிகளுக்கு38பதக்கங்கள்வழங்கப்பட்டன.
- 2022–2023ஆம் ஆண்டில் மொத்தம் 349 இளங்கலைப் பட்டதாரிகள், 16 முதுகலைப் பட்டதாரிகள் மற்றும் 3 முனைவர் பட்டதாரி மாணவர்கள் தேர்ச்சி பெற்றனர்.
- 2023–2024ஆம் கல்வியாண்டில் 306 மாணவர்கள் இளநிலை பட்டப்படிப்பிலும், 32 மாணவர்கள் முதுகலை பட்டப்படிப்பிலும் மற்றும்9மாணவர்கள்முனைவர்பட்டப்படிப்பிலும் சேர்க்கப்பட்டு பயின்று வருகின்றனர்.

மாணவர்கள் சாதனை

- புதுதில்லியில் உள்ள இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகம் நடத்திய 2022ஆம் ஆண்டிற்கான அகில இந்திய நுழைவுத் தேர்வில் 33 மாணவர்கள் தேர்வாகி முதுநிலை மாணவர்சேர்க்கைக்கானதரவரிசைப்பட்டியலில் இடம்பெற்று,பிறமாநிலங்களில்மத்தியமற்றும் மாநில வேளாண்மை பல்கலைக்கழகங்களில் முதுநிலைமற்றும்பிஎச்டி,படிப்புகளில்சேர்க்கை பெற்றுள்ளனர்.

வெளியிடப்பட்ட புதிய தொழில்நுட்பங்கள்

- தமிழ்நாடு மீன்வளப் பல்கலைக்கழகத்தில் 14 புதிய தொழில்நுட்பங்கள் உருவாக்கப்பட்டு வெளியிடப்பட்டன.

முதனிலை முக்கிய கண்டுபிடிப்புகள்

- தமிழ்நாடு புதுமை முயற்சிகள் (TANII) திட்டத்தின் நிதியுதவியின் கீழ் செயற்கை பவளப்பாறை மற்றும் மீன் திரட்டும் செயற்கை பவளப்பாறைகளை நிறுவி அதன் தாக்கத்தின் மூலம், புலிகாட் ஏரியில் மாதத்திற்கு1.2முதல்12டன்வரைமீன்இறங்குதல் கூடுதலாக மேம்படுத்தப்பட்டது.
- ஆமை இனங்களை அடையாளம் கண்டு பாதுகாப்பதற்காக ஆன்லைன் வலைப்பதிவுகள் மற்றும் மொபைல் ஆண்ட்ராய்டு பயன்பாடுகளை வடிவமைத்து உருவாக்கியது.
- கடற்பாசி மூலம் உருவாக்கப்பட்ட குளம்பி கோப்பைகள் மற்றும் பனிக்குழை கூம்பு தயாரிப்புகளைஉள்ளடக்கியஇரண்டுதயாரிப்புகள் உருவாக்கப்பட்டன.

ஆராய்ச்சி மூலம் உருவாக்கப்பட்ட தொழில்நுட்பங்கள் / சந்தைப்படுத்துதல்

- தொழில்முனைவோர்மேம்பாடுமற்றும்புத்தாக்க மையத்தின் நிதியுதவியுடன், தூத்துக்குடியில் உள்ள மீன்வளக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் செயல்பட்டு வரும் "கடல் சார் உணவுப் பொருட்கள் வணிக மையம்" மீன் உணவுப் பொருட்கள் மற்றும் கடற்பாசி சார்ந்த அழகு சாதனப் பொருட்கள் உற்பத்தியில் 27 தொழில்முனைவோர்களைஉருவாக்கியுள்ளது.
- இருவகையான பன்னடுக்குப் பைகளில் வெப்பப்பதனம் செய்யப்பட்ட மீன் குழம்பினை தூத்துக்குடியிலுள்ள பிரிட்டோ கடலுணவு ஏற்றுமதி நிறுவனத்திற்கு ஐம்பதாயிரம் ரூபாய்க்கும், மேற்கு வங்கத்தைச் சேர்ந்த வான்டேஜ் நியூட்ரிமென்ட்ஸ் என்ற நிறுவனத்திற்குஐந்துவகையானமணங்களுடன், உலர்த்தப்பட்ட இறால்ரூபாய்ஒருஇலட்சத்திற்கும் வணிகமயமாக்கப்பட்டது.

மீனவர்கள், விவசாயிகள், களஊழியர்களுக்கான சேவைகள்

- தூத்துக்குடிதூத்தூரில்ரூ.3.82கோடியில்இரண்டு மீன்வளத்தொழில்காப்பகம்,தொழில்சார்பயிற்சி மையங்கள்துவங்கப்பட்டு,32மீனவர்கள்பயன்.
- மீனவர்களுக்கு கடலில் இயந்திரப் படகுகள் வழிசெலுத்துதல், பாதுகாப்பு, இயந்திரங்களை இயக்குதல் மற்றும் பராமரித்தல் மற்றும் கடல்சார் திறன் பயிற்சிகளின் மூலம் 150 மீனவர்கள் பயன்.
- மாவட்ட திறன் மேம்பாட்டு ஆணையத்துடன் இணைந்து 31 மீனவர்களுக்கு படகு ஓட்டுனர் உரிமம்வழங்கஏதுவாகபயிற்சிஅளிக்கப்பட்டது.

- மாநிலம் முழுவதும் நடத்தப்பட்ட 65 பயிற்சித் திட்டங்களின் மூலம் மீன்பிடித் தொழில்நுட்பங்கள்குறித்துமீனவர்கள்,மீனவப் பெண்கள், தொழில்முனைவோர் உட்பட 1,897 நபர்கள் பயன்.
- தேசிய விவசாய மேம்பாட்டுத் திட்டம் NADP திட்டத்தின் கீழ் ரூ.50 இலட்சம் செலவில் டிஜிட்டல் ப்ளூ ஹப் என்கிற மின் நீட்டிப்பு மையத்தை ரூ.33.5 இலட்சத்தில் நிறுவியது. மீன்வளம்மற்றும்மீன்வளர்ப்புதொழில்நுட்பங்கள் பற்றிய 25 டிஜிட்டல் உள்ளடக்கம் உருவாக்கப்பட்டது.
- மாநில மீன்வளத் துறையின் 47 களப் பணியாளர்களுக்கு தரமான மீன் குஞ்சுகளைக் கண்டறிவதற்கான பயிற்சி மற்றும் பல்வேறு மாவட்டங்களைச் சேர்ந்த 193 மீன் விவசாயிகளுக்கு சிறந்த மேலாண்மை நடைமுறைகள் குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சி நடத்தப்பட்டது.
- ஆழ்கடல் மீன்பிடி தொழில்நுட்பம் மற்றும் மேலாண்மையை மையமாகக் கொண்ட தேசிய விவசாய மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ஆழ்கடலில் மீன்பிடித்தல் மற்றும் தொழில்நுட்பங்கள் குறித்த நேரடி பயிற்சிகள் மூலம்இராமநாதபுரம்,புதுக்கோட்டைதூத்துக்குடி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களைச் சேர்ந்த3,759மீனவப்பயனாளிகளுக்குபயிற்சி அளிக்கப்பட்டது.
- வேளாண்மை அறிவியல் நிலையத்தின் மூலம் உள்நாட்டு நன்னீர் மீன் வளர்ப்பு மற்றும் இறால் வளர்ப்பு தொழில்நுட்பங்களில் 1,744 விவசாயிகள் பயன்.

இந்திய மீன்வளம் மற்றும் மீன்வளர்ப்பு கருத்தரங்கம்

- தமிழ்நாடு மீன்வளப் பல்கலைக்கழகம், நாகப்பட்டினம் மற்றும் ஆசிய மீன்வள சங்கம் (இந்தியக்கிளை)இணைந்துநடத்திய12ஆவது மீன்பிடி மற்றும் மீன்வளர்ப்பு கருத்தரங்கில் மீன்வள நிறுவனங்களைச் சேர்ந்த 741 பிரதிநிதிகள் பல்வேறு மாநிலங்களில் இருந்து 200 மீன் பண்ணையாளர்கள் பங்கேற்ற "மீன் விவசாயிகள் சந்திப்பு" நடத்தப்பட்டது.

கால்நடை பராமரிப்புத் துறை

- தமிழ்நாட்டில் உள்ள அனைத்துக் கால்நடை நிலையங்களிலும் கால்நடைகள் மற்றும் கோழிகளுக்கு 10.99 கோடி சிகிச்சைகள், 71.66 இலட்சம் முதலுதவிகள், 12.03 கோடி தடுப்பூசி, 11.06 கோடி குடற்புழு நீக்கம் மற்றும் 1.45 கோடி செயற்கை முறை கருவூட்டல்கள் செய்யப்பட்டுள்ளன.
- 125 விவசாயிகளின் வயல்களில், ரூ.1.17 கோடி மதிப்பீட்டில்ஊறுகாய்புல்தயாரிக்கும்அலகுகள் நிறுவப்பட்டுள்ளன.
- கோயம்புத்தூர், சேலம், திருநெல்வேலி மற்றும் திருவண்ணாமலை ஆகிய மாவட்டங்களில் வணிக ரீதியில் பசுந்தீவன உற்பத்தியை மேற்கொள்ள ஊறுகாய்புல் தயாரிக்கும் அலகுகள் நிறுவும் பொருட்டு 25 சதவிகிதம் மானியமாக ரூ.10.50 இலட்சம் வழங்கப்பட்டு, தொழில்முனைவோர்உருவாக்கப்பட்டுள்ளனர்.
- சென்னை, நீலகிரி மற்றும் நாகப்பட்டினம் நீங்கலாக அனைத்து மாவட்டங்களிலும் தோப்புகள் / பழத்தோட்டங்களில் பல்லாண்டுத் தீவனப்புற்கள் / தானிய வகைகளுடன் ஊடுபயிராக சாகுபடி செய்திட ஊக்கத்தொகையாக ஏக்கருக்கு ரூ.3,000 வழங்கப்பட்டு, மொத்தம் 4,000 ஏக்கரில் தீவன சாகுபடிமேற்கொள்ளப்பட்டு5,377விவசாயிகள் பயனடைந்துள்ளனர்.
- தீவன உற்பத்தி மற்றும் ஊட்டச்சத்து மேலாண்மை குறித்த அறிவுத்திறனை மேம்படுத்திட, 60 அலுவலர்களுக்கு 5 நாட்கள் கொண்ட பயிற்சி ஜான்சியிலுள்ள இந்திய புல்வெளி மற்றும் தீவன ஆராய்ச்சி நிலையத்தில் (IGFRI) ரூ.10 இலட்சம் செலவில் வழங்கப்பட்டுள்ளது.
- பசுந்தீவன உற்பத்தியை அதிகரிக்க 1.13 கோடி தீவனபுல் கரணைகள் துறை பண்ணைகளில் உற்பத்தி செய்யப்பட்டு, விவசாயிகளுக்கு விநியோகம் செய்யப்பட்டுள்ளது.
- கால்நடைப் பண்ணைகளின் மூலம் 1,938 செம்மறியாட்டு குட்டிகளும், 1,566 நல்மரபின ஆட்டுக்குட்டிகளும்,



2,256 பன்றிக்குட்டிகளும் மற்றும் 231 கன்றுகளும் கால்நடை வளர்ப்போருக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளன.

- 1.54 கோடி உறைவிந்து குச்சிகள் உற்பத்தி செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளன.
- 2,154 மேச்சேரி செம்மறியாட்டுக் குட்டிகள் வழங்கப்பட்டன.
- ஓசூர் மாவட்ட கால்நடைப் பண்ணையில் கருமாற்று மற்றும் ஆய்வுக்கூட கருத்தரிப்பு தொழில் நுட்பத்தின்வழி 78 கன்றுகள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன.
- ரூ.18.87 கோடிச் செலவில் 4.10 இலட்சம் கால்நடை அலகுகளுக்கு காப்பீடு செய்யப்பட்டுள்ளது.
- கிருஷ்ணகிரி மாவட்டம் ஓசூரில் உள்ள மாவட்ட கால்நடைப் பண்ணையில் ரூ.4.55 கோடியில் ஆய்வுக்கூட கருத்தரித்தல் மற்றும் கரு மாற்றும் தொழில்நுட்பத் திட்டங்கள் தொடங்கப்பட்டு, 83 கன்றுகள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன.
- தேசிய செயற்கை முறை கருவூட்டல் திட்டம், பகுதி II–இன்கீழ், அதிக உற்பத்தித் திறன் வாய்ந்த காளைகளின் உறைவிந்தினைப் பயன்படுத்தி 11.33 இலட்சம் கால்நடை வளர்ப்போரின் 15.54 இலட்சம் பசு மற்றும் எருமைகளுக்கும், பகுதி III–இன் கீழ், 13.07 இலட்சம் கால்நடை வளர்ப்போரின் 13.66 இலட்சம் பசு மற்றும் எருமைகளுக்கும், பகுதி IV–இன் கீழ், 9.55 இலட்சம் கால்நடை வளர்ப்போரின் 18.81 இலட்சம் பசு மற்றும் எருமைகளுக்கும் செயற்கை முறை கருவூட்டல்கள் செய்யப்பட்டன.
- உதகமண்டலத்தில் உள்ள மாவட்ட கால்நடைப் பண்ணையில் ரூ.47.50 கோடி மதிப்பீட்டில் மூன்று ஆண்டுகளில் 7.20 இலட்சம் பாலினம் பிரிக்கப்பட்ட விந்து உற்பத்தி மேற்கொள்ளும் வசதிகள் ஏற்படுத்தப்பட்டு,1,570 செயற்கைமுறைக் கருவூட்டல்கள் பதிவாகியுள்ளன.
- தேசியகால்நடைநோய்தடுப்புத்திட்டத்தின்கீழ் 2.57கோடிதகுதியுள்ளமாட்டினத்திற்குகோமாரி நோய்தடுப்பூசி போடப்பட்டுள்ளது.
- தேசிய கால்நடை நோய் தடுப்புத் திட்டத்தின் கீழ் 4 முதல் 8 மாத வயதுடைய 11.02 இலட்சம் கிடேரி கன்றுகளுக்கு கன்றுவீச்சு நோய்த் தடுப்பூசி போடப்பட்டுள்ளது.
- தமிழ்நாட்டில் அஸ்காட் (ASCAD) திட்டத்தின்கீழ், சுமார் 89.76 இலட்சம் கால்நடைகளுக்கு அடைப்பான், தொண்டை அடைப்பான், சப்பைநோய் மற்றும் ஆட்டம்மை நோய் தடுப்பூசி போடப்பட்டுள்ளது.

- ஆட்டுக்கொல்லி நோய் ஒழிப்புத் திட்டத்தின் கீழ் சுமார் 52.49 இலட்சம் ஆடுகளுக்கு தடுப்பூசி போடப்பட்டுள்ளது.
- நபார்டு (NABARD) வங்கி நிதியுதவியுடன் நபார்டு RIDF 25 – 29 திட்டங்களின்கீழ், 252 கால்நடைநிலையங்களுக்குரூ.142.06கோடிச் செலவில் புதிய கட்டடங்கள் கட்ட அனுமதி வழங்கப்பட்டு,162கட்டடப்பணிகள்முடிக்கப்பட்டு, எஞ்சிய பணிகள் பல்வேறு நிலைகளில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.
- ரூ.14.64கோடிச்செலவில்10களக்கண்காணிப்பு அலுவலகக்கட்டடங்கள்,2கால்நடைபன்முக மருத்துவமனைகள்கட்டிமுடிக்கப்பட்டுள்ளன.
- தேசியவேளாண்அபிவிருத்தித்திட்டத்தின்கீழ், ரூ.9.75 கோடிச் செலவில் 3 ஒருங்கிணைந்த மண்டல இணை இயக்குநர் அலுவலகங்கள் மற்றும்ஒருகால்நடைபன்முகமருத்துவமனை கட்டடம் கட்டி முடிக்கப்பட்டுள்ளது மற்றும் ஒருஒருங்கிணைந்தமண்டலஇணைஇயக்குநர் அலுவலகக்கட்டடம்ரூ.2.25கோடிச்செலவில் கட்டப்பட்டு வருகிறது.
- சிறப்புகால்நடைசுகாதாரமற்றும்விழிப்புணர்வு முகாம்கள்திட்டத்தின்கீழ்ரூ.23.28கோடிநிதி ஒதுக்கீட்டில் 22,381 முகாம்கள் நடத்தப்பட்டு 24.76 இலட்சம் விவசாயிகளின் 2.31 கோடி கால்நடைகள் / கோழியினங்கள் பயனடைந்துள்ளன.
- தேசிய வேளாண் அபிவிருத்தித் திட்டத்தின்கீழ், ரூ.14.72 கோடி நிதி ஒதுக்கீட்டில், 36 மாவட்டங்களில் உள்ள 1,983 பயனாளிகளுக்கு தலா 500/1,000 நாட்டுக்கோழிக்குஞ்சுகள், ஒரு மாதத்திற்குத் தேவையானதீவனம்மற்றும்குஞ்சுபொரிப்பான் ஆகியவை 50 சதவிகித மானியத்தில் வழங்கப்பட்டுள்ளன.
- விழுப்புரம் மற்றும் தேனி மாவட்டங்களில் தலா 200 பயனாளிகளுக்கு ரூ.2.25 கோடியில் கறிக்கோழிப்பண்ணைகள் அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது.
- புதுக்கோட்டை மற்றும் விருதுநகர் மாவட்டங்களில் தலா 200 பயனாளிகளுக்கு ஒரு கோடி ரூபாய் செலவில் குறைந்த முதலீடு தொழில்நுட்பம்கொண்டகோழிப்பண்ணைகள் அமைக்கப்பட்டன.
- ரூ.1.80 கோடிச் செலவில், சிறிய அளவிலான 100 நாட்டுக் கோழிப் பண்ணை அலகுகள், 10 மாவட்டங்களில் நிறுவப்பட்டன. மீதமுள்ள 26மாவட்டங்களில்(சென்னைமற்றும்நீலகிரி நீங்கலாக)50சதவிகிதமானியத்தில்நிறுவப்பட்டு வருகின்றன.
- திருநெல்வேலி மாவட்டத்தில், அபிசேகப்பட்டி, மாவட்ட கால்நடைப் பண்ணையில், தேசிய வேளாண் அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் 60:40 என்ற விகிதத்தில் ஒன்றிய, மாநில அரசுகளின் நிதி பங்களிப்புடன், நாட்டுக்கோழி இனப்பெருக்க வளாகம் மற்றும் கோழிக் குஞ்சு பொரிப்பகம் ரூ.9.42 கோடி நிதி ஒதுக்கீட்டில் நிறுவப்பட்டு வருகிறது.
- சிவகங்கை மாவட்டத்தில், செட்டிநாடு, மாவட்ட கால்நடைப் பண்ணையில், மாநில அரசின் நிதியில் நாட்டுக்கோழி இனப்பெருக்க வளாகம், கோழிக் குஞ்சு பொரிப்பகம் மற்றும் தீவன ஆலை ரூ.13.81 கோடிநிதிஒதுக்கீட்டில்நிறுவப்பட்டுவருகிறது.
- தேசிய வேளாண் அபிவிருத்தித் திட்டம் – ராஷ்டிரிய கிரிஷி விகாஸ் யோஜனா 2021 – 2022 திட்டத்தின்கீழ், 456 வெறிநோய் தடுப்பூசி முகாம்கள் நடத்தப்பட்டு, 60,330 நாய்களுக்கு வெறி நோய் தடுப்பூசி போடப்பட்டு பள்ளி கல்லூரி மாணவர்களுக்கு விழிப்புணர்வுபிரச்சாரம்மேற்கொள்ளப்பட்டது.
- நடமாடும் கால்நடை அவசர ஊர்தி சேவையின் மூலம், 2.63 இலட்சம் கால்நடைகளுக்கு இருப்பிடத்திற்கே சென்று சிகிச்சை வழங்கப்பட்டுள்ளது.
- கிராமப்புற ஏழ்மை நிலையில் உள்ள 38,800 கணவனைஇழந்த/கணவனால்கைவிடப்பட்ட மற்றும் ஆதரவற்ற பெண்களுக்கு தலா 5 வெள்ளாடுகள் / செம்மறி ஆடுகள் என மொத்தம் 1.94 இலட்சம் வெள்ளாடுகள் /

செம்மறி ஆடுகள் ரூ.75.63 கோடிச் செலவில் வழங்கப்பட்டுள்ளது.

- தமிழ்நாடு பிராணிகள் நல வாரியத்தின் மூலம் "வள்ளலார் பல்லுயிர் காப்பகங்கள்" திட்டத்தின்கீழ், 16.01.2023 அன்று திருவள்ளுவர் தினத்தில் ரூ.20 கோடியில் தொடங்கப்பட்டு, உணவு, மருத்துவ வசதி, ஆம்புலன்ஸ் மற்றும் உள்கட்டமைப்பு வசதிகளை வழங்குவதற்காக ரூ.9.80 கோடி நிதிஒதுக்கப்பட்டு,மாநிலஅளவிலானஒப்புதல் குழுவால்ரூ.6.18கோடி29அரசுசாராதொண்டு நிறுவனங்கள்/விலங்குகள்நலஅமைப்புகளுக்கு விடுவிக்கப்பட்டது.
- உலக வங்கி நிதியுதவியுடன் செயல்படுத்தப்படும் தமிழ்நாடு நீர்ப்பாசன வேளாண்மை நவீனமயமாக்கல் திட்டத்தின்கீழ்,47உபவடிநிலப்பகுதிகளில்,4.48 இலட்சம் உறைவிந்து குச்சிகள் பயன்படுத்தி செயற்கைமுறைகருவூட்டல்களும்,6,104பாலினம் பிரிக்கப்பட்ட உறைவிந்து கருவூட்டல்களும், 30,061 மரபணு வரையறுக்கப்பட்ட உறைவிந்து கருவூட்டல்களும் விவசாயிகளின் இருப்பிடத்திலேயே மேற்கொள்ளப்பட்டது. மேலும் 22,220கன்றுகளுக்குகுடற்புழுநீக்கம் செய்யப்பட்டது,25,476கன்றுகளுக்குதாதுஉப்புக் கட்டிகள்வழங்கப்பட்டது.30,217கால்நடைகளுக்கு மடிவீக்க நோய்த்தடுப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு,9,438கால்நடைகளுக்கு மடிநோய் சிகிச்சை அளிக்கப்பட்டது. மேலும், 3,794 மலடு நீக்க சிகிச்சை முகாம்கள் நடத்தப்பட்டு,42,639திட்டமிட்டஇனப்பெருக்க சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது. இது தவிர 3,588.5ஹெக்டேர்விவசாயிகளின்நிலத்திற்கு தீவன விதை விநியோகம் செய்து தீவன சாகுபடிக்கு கொண்டுவரப்பட்டது.
- 24 அலுவலக உதவியாளர்கள், 8 இளநிலை உதவியாளர்கள், 4 பதிவறை எழுத்தர்கள், ஒரு கால்நடை பராமரிப்பு உதவியாளர்,2தூய்மைப்பணியாளர்கள்மற்றும் 5இரவுக்காவலர்கள்கருணைஅடிப்படையில் நியமனம் செய்யப்பட்டுள்ளனர். மேலும் 157 கால்நடை பராமரிப்பு உதவியாளர்கள் நேரடி நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.
- தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம்,25கால்நடைமருத்துவப்பட்டதாரிகளுக்கு இராணிப்பேட்டை,கால்நடைநோய்தடுப்புமருந்து நிலையத்தில்ஆராய்ச்சிஉதவியாளர்களாகபணி நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.
- தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம்,1,146கால்நடைமருத்துவப்பட்டதாரிகளுக்கு கால்நடைஉதவிமருத்துவர்களாகபணிநியமனம் வழங்கப்பட்டு,தற்போது1,141கால்நடைஉதவி மருத்துவர்கள் பணியில் சேர்ந்துள்ளனர்.

தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம்

- தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம் இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகத்தின் தரவரிசைப் பட்டியல் 2020இன்படி மாநில அளவிலான கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகங்களில் முதல் இடத்தையும், அனைத்து வேளாண் பல்கலைக்கழகங்களுக்கிடையில் 12ஆவது இடத்தையும்பெற்றுள்ளது.இதனை06.12.2021 அன்றுமத்தியவிவசாயம்மற்றும்விவசாயிகள் நலத்துறை வெளியிட்டுள்ளது.
- கால்நடைமருத்துவக்கல்லூரிமற்றும்ஆராய்ச்சி நிலையம், திருநெல்வேலியில் கூடுதல் கல்விக்கூட கட்டடங்கள் மற்றும் விடுதிக் கட்டடங்கள் அமைப்பதற்கு அடிக்கல்.
- ரூ.1.49 கோடியில் கால்நடைத் தீவன விதை உற்பத்திப் பிரிவு நாமக்கல்லில் உள்ள கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் நிறுவுதல்.
- ரூ.1.80 கோடியில் தருமபுரி மாவட்டத்தில் திருச்சி கருப்பு செம்மறியாட்டின ஆராய்ச்சி நிலையம் நிறுவுதல்.
- ரூ.1.52 கோடியில் தமிழ்நாட்டின சிறுவிடை கோழியின வள மையம் நிறுவுதல்.
- ரூ.1.97 கோடியில் தமிழ்நாட்டின் பட்டணம் செம்மறியாட்டின வள மையம் கால்நடை

மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், ஒரத்தநாட்டில் நிறுவுதல்.

- ரூ.2.50 கோடியில் பல்கலைக்கழகத்தின் புதிய கண்டுபிடிப்புகள் மற்றும் கருவிமயமாக்கல்மையத்தின்வளாகவசதிகளை மேம்படுத்துதல்.
- ரூ.1.61 கோடியில் விலங்குவழி பரவும் நோயறி ஆய்வகம் மற்றும் சுகாதாரத் தளம் கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், திருநெல்வேலியில் நிறுவுதல்.
- கால்நடைத் துறையின் அறிவியல் ரீதியிலான வளர்ச்சிக்கு தமிழ் வழியில் சிறந்த பங்களிப்பினை அளித்தமைக்காக பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் க.ந.செல்வக்குமார், அவர்களுக்கு எம்.எஸ்.சுவாமிநாதன்பதக்கம்வழங்கப்பட்டது.
- கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், ஒரத்தநாட்டில் தானியங்கி மூலிகை மாத்திரை தயாரிப்பு வசதி மற்றும் ஆராய்ச்சி அபிவிருத்தி வசதி துவக்கி வைக்கப்பட்டுள்ளது.
- பொட்டனேரியில் உள்ள மேச்சேரி செம்மறி ஆடு ஆராய்ச்சி நிலையத்தில் மெகா செம்மறியாட்டின விதைத் திட்டத்தின் பயனாளிகளுக்கு மரபணு ரீதியாக தரம் உயர்த்தப்பட்ட மேச்சேரி ஆடுகள் மற்றும் உள்ளீட்டு பொருட்களான அடர்தீவனம் / தாதுப்புக்கட்டி போன்றவை வழங்கப்பட்டது.
- சேலம் கருப்பு வெள்ளாட்டினைப் பாதுகாக்கும் இலக்குடன் தேசிய வேளாண் அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் நாமக்கல் கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் ரூ.1.15 கோடி மதிப்பீட்டில்கட்டப்பட்டுள்ளபுதியபண்ணைக் கட்டடங்கள் திறந்து வைக்கப்பட்டது.
- சென்னைகால்நடைமருத்துவக்கல்லூரியில் உள்ள வெறிநோய் (ரேபிஸ்) நோயறிதல் ஆய்வகத்திற்கான ISO/IEC 17025:2017 எனும் NABL அங்கீகாரம் 2024 வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.
- தேசியவேளாண்அபிவிருத்தித்திட்டத்தின்கீழ் திருநெல்வேலி,கால்நடைமருத்துவக்கல்லூரி மற்றும்ஆராய்ச்சிநிலையத்தில்உருவாக்கப்பட்ட கால்நடைமற்றும்கோழித்தீவனத்தொழில்நுட்ப மையம்திறந்துவைக்கப்பட்டது."நவீனகால்நடைத் தீவனத்தொழில்நுட்பங்கள்"குறித்தவிவசாயிகள் கருத்தரங்கில் கால்நடை விவசாயிகளுக்கு இடுபொருட்கள் வழங்கப்பட்டது.
- தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தின் 22ஆவது பட்டமளிப்பு விழாவில் 192 மாணவர்களுக்கு பட்டங்கள் மற்றும் பட்டயங்கள், கல்வியில் சிறந்த 50மாணாக்கர்மற்றும்ஆராய்ச்சியாளர்களுக்கு 108 பதக்கங்கள் வழங்கப்பட்டது.
- தேசிய மாட்டினப்பெருக்க திட்டத்தின்கீழ் ஒன்றிய அரசு, ரூ.5.51 கோடிச் செலவில் நாட்டின மாடுகள் வளர்ப்பினைப் பிரபலப்படுத்துவதற்கென நாட்டின மாடுகள் பிரிவினை நிறுவுதல் மற்றும் நீலகிரி மலையில் அழிந்து வரும் தோடா எருமைகளின் நிலைப்புத் தன்மைக்காக பழங்குடியினருடன் கூடிய சமூகப் பங்கேற்பு அணுகுமுறை ஆகிய புதிய திட்டங்களை இப்பல்கலைக்கழகத்தில் செயல்படுத்திட அனுமதி வழங்கியுள்ளது.
- கரூர் மாவட்டத்தில் புறக்கடை கோழி ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு மையம் நிறுவுதல்,உப்பளாச்சேரிமாடுகளின்இனத்தைப் பல்துறை அணுகுமுறையின் மூலம் அதன் பூர்வீக வாழ்விடங்களில் பாதுகாத்தல், ஒரத்தநாட்டில், கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் நிறுவுதல், தென்காசி மாவட்டத்தில் தமிழ்நாட்டில்உள்ளநாட்டினநாய்களுக்கான இனப்பாதுகாப்பு மற்றும் ஆராய்ச்சி மையம் நிறுவுதல், கால்நடை அறிவியல் முதுகலை ஆராய்ச்சி நிலையத்தில் கிராமப்புற முன்னேற்றத்திற்கான வெண்பன்றி இனப்பெருக்கம் மற்றும் உள்ளீட்டு மையம் நிறுவுதல்மற்றும்கால்நடைஅறிவியல்முதுகலை ஆராய்ச்சி நிலையத்தில் நாட்டுக்குட்டை

மாடுகளுக்கான பாதுகாப்பு மையம் அமைத்தல் ஆகியஐந்துபுதியதிட்டங்களைரூ.5.48கோடியில் செயல்படுத்துகிறது.

- இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகத்தின் நிதியுதவியுடன் திருநெல்வேலி கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் நடத்தப்பட்ட "அறிவியல் தொழில்நுட்பங்கள்மூலம்நாட்டுக்கோழிகளில் உற்பத்தித் திறனை அதிகப்படுத்துதல்" குறித்த மண்டல அளவிலான கால்நடை, கோழிகள் கண்காட்சி மற்றும் கருத்தரங்கில் 319 பயனாளிகளுக்கு இடுபொருட்கள் வழங்கப்பட்டது.
- உறுப்புக் கல்லூரிகளில் வெறிநோய்த் தடுப்பு தடுப்பூசி திட்டத்தை நடத்தியதன் மூலமாக 4,388 நாய்கள் பயனடைந்தன.
- பல்கலைக்கழக ஆராய்ச்சி மாணவர்கள், பேராசிரியர்கள் மற்றும் அறிவியலாளர்களின் நன்மைக்காக சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரியில் 'என் விரல் நுனியில் என் நூலகம்' எனும் செயலி துவக்கி வைக்கப்பட்டது.
- "கால்நடைகளின் நலம் மற்றும் உற்பத்தியைப் பெருக்குவதற்கான நவீன கால்நடைமருந்தியல்மற்றும்நச்சியல்துறையின் ஆய்வுகளைப் பற்றிய உலகளாவிய பார்வை" எனும் பன்னாட்டுக் கருத்தரங்கு நாமக்கல், கால்நடைமருத்துவக்கல்லூரிமற்றும்ஆராய்ச்சி நிலையத்தில் நடத்தப்பட்டது. கருத்தரங்கில் மொத்தம்189அறிவியலறிஞர்கள்,ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் கலந்து கொண்டனர்
- இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகத்தின் நிதியுதவியில் "பண்ணை மற்றும் செல்லப் பிராணிகளில் மருத்துவ சிகிச்சை நடைமுறைகள், நகலெடுப்பு மூலம் நோயறிதல் மற்றும் எண்டோஸ்கோபி ஆகியவற்றில் முன்னேற்றங்கள்" குறித்த 51ஆவது தேசியப் பயிற்சி முகாம் சென்னை கால்நடைமருத்துவக்கல்லூரியில்நடத்தப்பட்டதில் மாநிலவேளாண் பல்கலைக்கழகங்கள் மற்றும் தேசியக்கல்விநிலையங்களின்25பேராசிரியர்கள் பங்கேற்றுப் பயனடைந்தனர்.



- இப்பல்கலைக்கழகம், இங்கிலாந்தின் பிர்பிரைட் கல்வி நிலையத்தின் தகைசால் அறிவியலாளர் பேராசிரியர் வேணுகோபால் நாயருடன் இணைந்து, இங்கிலாந்து, உலகக் கால்நடைத் தடுப்பூசி வலையமைப்பின் நிதியுதவியுடன் "கோழியில் மாரெக்ஸ் நோய் –உள்ளூர் அளவில்நோய்தீவிரத்தைக் குறைப்பதற்கானகட்டுப்பாட்டுஉத்திகள்குறித்த உலகளாவிய விவாதம்" என்ற தலைப்பில் நாமக்கல்,கால்நடைமருத்துவக்கல்லூரிமற்றும் ஆராய்ச்சிநிலையத்தில்நடத்தியபயிலரங்கில் உலகின் பல்வேறு பகுதிகளில் இருந்து 120 அறிவியலறிஞர்கள் பங்கேற்றனர்.
- புதுக்கோட்டை மாநில வேளாண் மேலாண்மை மற்றும் விரிவாக்கப் பயிற்சி நிறுவனத்தின் நிதியுதவியுடன், ஓரத்தநாடு கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் "கால்நடை இனப்பெருக்க மேலாண்மையில் நோய் கண்டறிய நகலெடுப்புத் தொழில்நுட்பப் பயன்பாடு","தீவனஉற்பத்தித்தொழில்நுட்பத்தில் அண்மைக்கால முன்னேற்றங்கள்" மற்றும் "மூலிகைகால்நடைமருத்துவம்சார்ந்தகால்நடை மருத்துவ சிகிச்சையியல்" குறித்து பயிற்சிகள் அளிக்கப்பட்டதில் 120 கால்நடை உதவி மருத்துவர்கள் பயனுற்றனர்.

- சென்னைகால்நடைமருத்துவக்கல்லூரியில் "நிலையான எதிர்காலத்திற்கான உணவு மற்றும்பானதொழில்நுட்பத்தில்புதுமைகள்"என்ற இணையவழிசர்வதேசமாநாடுநடத்தப்பட்டதில் மொத்தம்92ஆசிரியஉறுப்பினர்கள்மற்றும்620 மாணவர்கள்நேரிலும்இணையவழிமூலமாகவும் பங்கேற்றுப் பயனடைந்தனர்.
  - தேனிகால்நடைமருத்துவக்கல்லூரிமற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் ரூ.82.13 கோடி மதிப்பில்கல்விகட்டுமானங்கள்உட்படபுதிய கட்டடங்கள்,
  - உடுமலைபேட்டை,கால்நடைமருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் ரூ.82.13கோடிமதிப்பில்கல்விகட்டுமானங்கள் உட்பட புதிய கட்டடங்கள்,
  - ஒரத்தநாடு, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் ரூ.11.94 கோடிச் செலவில்கட்டப்பட்டுள்ள கால்நடைகளுக்கானமூலிகைமருத்துவப் பயிற்சிக்கூடம்விலங்குகள்வழிபரவும்நோயறி ஆய்வகம் உட்பட புதிய கட்டடங்கள்,
  - திருநெல்வேலி, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் ரூ.7.14 கோடி மதிப்பீட்டிலான மாணவர் மற்றும்மாணவியருக்கானகூடுதல்விடுதிக் கட்டடங்கள்,
  - நாமக்கல், கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் ரூ.4.15 கோடிச் செலவில் ஊரக கால்நடை பண்ணையாளர்களின் மேம்பாட்டிற்காக அமைக்கப்பட்டுள்ள நவீன சிகிச்சை வசதிகளுடன் கூடிய மண்டல கால்நடை சிறப்பு மருத்துவமனை மற்றும் சென்னை, மாதவரத்தில் தேசிய கால்நடை இயக்ககத்தின்கீழ் ரூ.2 கோடி மதிப்பீட்டிலான கால்நடை இறைச்சி உடலங்க பயன்பாட்டு ஆலை ஆகிய புதியகட்டடங்கள் திறந்துவைக்கப்பட்டன.
- கோடுவெளியில் உள்ள உணவு மற்றும் பால்தொழில்நுட்பக்கல்லூரியில்நடத்தப்பட்ட "எருமையின மேளா – 2023" மற்றும் " கிராமப்புறபெண்களுக்குஅறிவியல்பூர்வமாக எருமையின வளர்ப்புடன் கூடிய பால் தொழில் முனைதல்" குறித்த இரண்டு நாள் பயிலரங்கு நடைபெற்றது.
- ஒக்லஹாமா மாகாணப் பல்கலைக்கழகம், ஸ்டில்வாட்டர், அமெரிக்காவைச் சேர்ந்த பத்து மாணவர்கள் பல்கலைக்கழகத்தில் மருத்துவப் பயிற்சி பெற்றனர்.
- ஒரத்தநாடு, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் இறுதியாண்டு B.V.Sc. & A.H. பயிலும் மாணவர் எஸ்.லட்சுமணன், இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகம் நடத்திய முதுகலை மாணவர் சேர்க்கைக்கான 2023ஆம் ஆண்டிற்கான அகில இந்திய நுழைவுத் தேர்வில் (ICAR AIEEA PG 2023) கால்நடை உயிர்த்தொழில்நுட்பம்பாடப்பிரிவில்முதல்இடம் பெற்றுள்ளார்.
- ஒரத்தநாடு, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும்ஆராய்ச்சிநிலையத்தில்"மருந்தெச்சம் இல்லாத கால்நடைப் பொருட்களின் உற்பத்திக்கான மரபுவழி மூலிகை மருத்துவ ஆராய்ச்சிக்கானஉலகளாவியகண்ணோட்டம்" குறித்த பன்னாட்டுக் கருத்தரங்கு மற்றும் கால்நடைகளுக்கான மரபுவழி மூலிகை ஆராய்ச்சிக்கான இந்தியக் கூட்டமைப்பின் முதல்ஆண்டுக்கூட்டத்தில்அயல்நாடுகளைச் சார்ந்த அறிவியலறிஞர்கள் உட்பட மொத்தம் 174 நபர்கள் பங்கேற்றுப் பயனடைந்தனர்.
- தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம், தேசிய தரவரிசை நிறுவனத்தின் (NIRF) தரவரிசைப் பட்டியல்–2023இல் இந்தியாவின் அனைத்து வேளாண் பல்கலைக்கழகங்களில் 12ஆவது இடத்தைப் பெற்றுள்ளது.
- தேசிய தரவரிசைப் பட்டியல் (NIRF) 2023இல் 12ஆவது இடத்தினை (விவசாயம் மற்றும் அதனுடன்தொடர்புடையதுறையில்)தமிழ்நாடு கால்நடைமருத்துவஅறிவியல்பல்கலைக்கழகம் பெற்றமைக்காகபல்கலைக்கழகத்தின்வேந்தர்

மற்றும்மாண்புமிகுதமிழ்நாடுஆளுநர்அவர்கள் பாராட்டுக்களைத் தெரிவித்தார்.

- ICAR நிதியுதவியுடன் செயல்படும் பல்கலைக்கழக நிறுவன மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், 2022–2023ஆம் ஆண்டில், சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரி, நாமக்கல் கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் மற்றும் கோடுவெளிஉணவுமற்றும்பால்தொழில்நுட்பக் கல்லூரியைச்சேர்ந்தமொத்தம்28மாணவர்கள் 4–6வாரங்களுக்குஅமெரிக்காவின்ஓக்லஹாமா மாகாணப் பல்கலைக்கழகத்தில் பயிற்சி பெற்றனர்.

- கால்நடை ஒட்டுண்ணிகளின் முன்னேற்றத்திற்கான உலக சங்கத்துடன் இணைந்து, "ஒட்டுண்ணிகள்: உலகளாவிய பாதிப்புகள்,உள்ளூர்தீர்வுகள்"என்றதலைப்பில் 29ஆவது சர்வதேச மாநாடு சென்னையில் நடத்தப்பட்டதில் 56 நாடுகளில் இருந்து 350 அறிவியலறிஞர்கள் கலந்துகொண்டு பயனடைந்தனர்.

- "கால்நடை மாணவர்களுக்கான பண்ணை மற்றும் துணை விலங்கு பயிற்சி" என்ற தலைப்பில் 13ஆவது மருத்துவ மாநாடு சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரியில்நடத்தப்பட்டதில்15மாநிலங்களைச் சேர்ந்த 400 இளநிலை மற்றும் முதுகலை மாணவர்கள்கலந்துகொண்டுபயனடைந்தனர்.

- சர்வதேச சிறுதானியங்கள்–2023 ஆண்டை நினைவுகூரும் வகையில், கோடுவெளியில் உள்ள உணவு மற்றும் பால் தொழில்நுட்பக் கல்லூரியில் "உணவுப் பாதுகாப்பை உறுதி செய்வதில்சிறுதானியங்கள் ஒருஊட்டச்சத்து முன்னுதாரணம்" குறித்துநடத்தப்பட்ட தேசிய மாநாடு மற்றும் பயிலரங்கில் 600 மாணவர்கள் பங்கேற்றுப் பயனடைந்தனர்.

- தமிழ்நாடு அரசின் உதவியுடன், தென்காசி மாவட்டம், சங்கரன்கோவில் தாலுகா, சின்ன கோவிலான்குளத்தில்ஆடு ஆராய்ச்சிமையம் நிறுவப்பட்டது.

- கோடுவெளியில் உள்ள தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தின் உணவு மற்றும் பால் தொழில்நுட்பக் கல்லூரி, இந்திய அரசின் சுகாதாரம் மற்றும் குடும்ப நல அமைச்சகத்தின் FSSAIஆல் Eat Right Campus என சான்றளிக்கப்பட்டது.

- செம்மறி ஆட்டின ஆராய்ச்சி நிலையம், சாண்டிநல்லாவின் உதவியுடன் அழிந்து வரும் தோடா இனத்தைப் பாதுகாத்ததற்காக திரு. ரஞ்சித் குட்டன், தோடா விவசாயி அவர்கள் கர்னாலில் உள்ள தேசிய கால்நடை மரபணு வளப் பணியகத்திடம் இருந்து இன பாதுகாப்பு விருதைப் பெற்றார்.

- அசீல் இனக் கோழிகளைப் பாதுகாப்பதற்காக பல்கலைக்கழகத்தின் கோழியின ஆராய்ச்சி நிலையத்திற்கு கர்னாலின் தேசிய கால்நடை மரபியல் வளப் பணியகத்தால் நிறுவனம்/ சமூகப்பிரிவில்இரண்டாம்பரிசுவழங்கப்பட்டது.

- பர்கூர் இன மாடுகளைப் பாதுகாப்பதற்காக பல்கலைக்கழகத்தின்பர்கூர்மாட்டினஆராய்ச்சி நிலையத்திற்கு, கர்னாலில் உள்ள தேசிய கால்நடை மரபணு வளப் பணியகத்தால் பெரிய அசையூண்(நிறுவனம்)பிரிவில்மூன்றாம்பரிசு வழங்கப்பட்டது.

- இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகம்–வேளாண்காடு வளர்ப்புவலைத்திட்டத்தின்கீழ் மேற்கொண்ட சிறந்த வேளாண்காடு வளர்ப்பு விரிவாக்கப்பணிகளுக்காககாட்டுப்பாக்கத்தில் உள்ளகால்நடைஊட்டச்சத்துநிறுவனத்திற்கு டாக்டர்எஸ்.சின்னமணிவிருதுஇந்தியவேளாண் ஆராய்ச்சிக் கழகத்தினரால் வழங்கப்பட்டது.

- 2021ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு விஞ்ஞானி விருது, இரு பேராசிரியர்களுக்கு தமிழ்நாடுமாநிலஅறிவியல்மற்றும்தொழில்நுட்ப மன்றத்தினால் வழங்கப்பட்டுள்ளது.

- நாமக்கல் கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலைய மாணவி செல்வி எம்.துளசிமதி, சீனாவின் ஹாங்சோவில் நடைபெற்ற ஆசிய பாரா பேட்மிண்டன் போட்டியில் ஒற்றையர் பிரிவில் தங்கப்

பதக்கமும், பெண்கள் இரட்டையர் பிரிவில் வெள்ளிப் பதக்கமும், கலப்பு இரட்டையர் பிரிவில் வெண்கலப் பதக்கமும் வென்று இந்தியாவுக்கு பெருமை சேர்த்துள்ளார்.

- தமிழ்நாடுஅரசின்நிதியுதவியில்'நாட்டுக்குட்டை மாடுகளுக்கானபாதுகாப்புமையம்அமைத்தல்' எனும்திட்டத்தின்கீழ்நிறுவப்பட்டகால்நடைக் கொட்டகைகள் திறந்துவைக்கப்பட்டது. மாநில அரசின் பன்றி வளர்ப்பு திட்டம் மற்றும் ஆடுகளை மேம்படுத்துவதற்கான வலைதளத் திட்டங்களின் பயனாளிகளுக்கு இடுபொருட்களும் வழங்கப்பட்டன.
- தமிழ்நாடு அரசின் நிதியுதவியுடன் திருச்செந்தூரில் புதியதாக நிறுவப்பட உள்ள கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகப் பயிற்சிமற்றும்ஆராய்ச்சிமையத்திற்கு,அடிக்கல் நாட்டப்பட்டது.
- ரூ.9 இலட்சம் செலவில் "இலாபகரமான நாட்டின கால்நடை வளர்ப்பிற்கான மேலாண்மை மற்றும் சந்தைப்படுத்தல் உத்திகள்" எனும் திட்டத்தினை ராஷ்ட்ரிய கோகுல் மிஷன் திட்டத்தின்கீழ் பல்கலைக்கழகத்தில் செயல்படுத்திட ஒன்றிய அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது.
- ஒன்றிய அரசின் தேசிய கால்நடை இயக்ககத் திட்டத்தின்கீழ் ரூ.2.86 கோடி மதிப்பீட்டில் நான்குதிட்டங்களுக்குஅனுமதியளிக்கப்பட்டு பல்கலைக்கழகத்தில் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

தொழில்நுட்பப் பரிமாற்றம்

- பல்கலைக்கழக அறிவியலறிஞர்களால் உருவாக்கப்பட்ட தடுப்பூசிகள் தயாரிப்புத் தொழில்நுட்பங்கள் மற்றும் நோய்க்காரணிகள் தொழில்நுட்பப் பரிமாற்றம் செய்வதற்கென தனியார் நிறுவனங்களுடன் 5 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் செய்யப்பட்டுள்ளன.

புரிந்துணர்வு ஒப்பந்தம்

- கறவை மேலாண்மை நடைமுறைகளில் போதிய திறனை கறவைமாடு வளர்ப்போரிடையே ஊக்குவிக்கும் நோக்குடன் பயிற்சிகள் மற்றும் விழிப்புணர்வு திட்டங்களை செயல்படுத்திட இப்பல்கலைக்கழகம் திருமலா பால் பொருட்கள் தனியார் நிறுவனம், சென்னை மற்றும் அசிஸ்ட் டெவெலப்மெண்ட் சொல்யூஷன்ஸ்,சென்னைநிறுவனங்களுடன் முக்கூட்டு புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டது.
- தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம் தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகத்தின் (டிட்கோ) டைசெல் பயோபார்க் நிறுவனத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்துகொண்டது.
- தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்திற்கும் ஒக்லஹாமா மாகாணப் பல்கலைக்கழகத்திற்கும் இடையில் செயல்பாட்டில் உள்ள புரிந்துணர்வுஒப்பந்தம்மேலும்ஐந்தாண்டுகளுக்கு புதுப்பிக்கப்பட்டது.
- தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்திற்கும் யுனிவெர்சிடாஸ் பிரவிஜெயா, இந்தோனேசியாவிற்கும் இடையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டது.
- தமிழ்நாடு மாநிலம் முழுவதும் உள்ள 129 கோவில்களில் மூன்றாண்டுகளுக்கு கோசாலைகளை இணைந்து பராமரிக்க தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம்மற்றும்இந்துசமயஅறநிலையத் துறை புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்துள்ளது.
- கல்வி மற்றும் ஆராய்ச்சி ஒத்துழைப்பை மேம்படுத்துவதற்காக இப்பல்கலைக்கழகம் மேலும் 21 நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டுள்ளது.

காப்புரிமை

- 13 தொழில்நுட்பங்களுக்கு காப்புரிமைகள் பெறப்பட்டுள்ளன.

❖ ❖ ❖

பிற்படுத்தப்பட்டோர் நலன், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நலன் மற்றும் சீர்மரபினர் நலன், கதர் மற்றும் கிராமத் தொழில் வாரியம்



திரு. **ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன்** அவர்கள்

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர்

பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை

2021–2022ஆம் ஆண்டு

- 275 கல்லூரி விடுதிகளில் ரூ.2.74 கோடிச் செலவில் "செம்மொழி நூலகங்கள்" ஏற்படுத்தப்பட்டுள்ளன.
- பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர் நல விடுதிகளில் மாணவ, மாணவியர் சேர்க்கைக்கான பெற்றோரது ஆண்டு வருமான வரம்பு ஒரு இலட்சம் ரூபாயிலிருந்து 2 இலட்சம் ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது.
- 275 கல்லூரி விடுதிகளுக்கு ரூ.1.51 கோடிச் செலவில் உடற்பயிற்சிக் கருவிகள் மற்றும் விளையாட்டுக் கருவிகள் வழங்கப்பட்டன.
- 275 கல்லூரி விடுதிகளில் மாணவ, மாணவியருக்கு தமிழ்நாடு திறன் வளர்ச்சி மேம்பாட்டுக் கழகம் மூலம் தனித்திறன் மற்றும் ஆங்கிலப் பேச்சாற்றல் பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன.
- 40 விடுதிகளுக்கு ரூ.10 இலட்சம் செலவில் போட்டித் தேர்வுகளுக்கான புத்தகங்கள் வழங்கப்பட்டுள்ளது.
- மாவட்ட அளவில் சிறந்த விடுதிகளுக்கு ரூ.7.80 இலட்சம் செலவில் பரிசுகள் வழங்கப்பட்டன.

- அரசுப் பள்ளிகளில் பயின்று 7.5 சதவிகித இடஒதுக்கீட்டின்கீழ் மருத்துவம் மற்றும் பல்மருத்துவம் படிப்பில் சேர்ந்த 317 மாணவ, மாணவியருக்கு கல்விக் கட்டணத்தொகையாகரூ.11.51கோடிமருத்துவக் கல்வி இயக்ககத்திற்கு ஈடு செய்யப்பட்டது.
- விடுதிகளில் பணிபுரியும் காப்பாளர் / காப்பாளினிகளுக்குரூ.49.55 இலட்சம்செலவில் புத்தாக்கப் பயிற்சி வழங்கப்பட்டன.
- 20 கல்லூரி மாணவியர் விடுதிகளுக்கு ரூ.23.60 இலட்சம் செலவில் முக அங்கீகார அடிப்படையில் பயோ–மெட்ரிக் கருவிகள் பொருத்தப்பட்டன.
- 146 விடுதிகளில் சிறப்புப் பராமரிப்பு மற்றும் பழுதுபார்ப்புப்பணிகள் ரூ.13 கோடிச் செலவில் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.
- 7மாணவியர்விடுதிகளுக்குரூபாய்ஒருகோடிச் செலவில்சுற்றுச்சுவர்கள்கட்டப்பட்டுள்ளன.
- விடுதி மாணவ, மாணவியருக்கு வழங்கப்பட்டுவரும் மாதாந்திர பல்வகை செலவினத்தொகை பள்ளி விடுதி மாணவ, மாணவியருக்கு மாதம் ஒன்றுக்கு 50 ரூபாயிலிருந்து 100 ரூபாயாகவும், கல்லூரி விடுதிமாணவ,மாணவியருக்குமாதம்ஒன்றுக்கு 75ரூபாயிலிருந்து150ரூபாயாகவும்ரூ.4.90கோடி கூடுதல் செலவில் உயர்த்தப்பட்டுள்ளது.
- 2 பிற்படுத்தப்பட்டோர்/ சீர்மரபினர் பள்ளி விடுதிகள்ரூ.14.44இலட்சம்செலவில்கல்லூரி விடுதிகளாக நிலை உயர்த்தப்பட்டுள்ளது.
- 2 விடுதிகளுக்கு ரூ.6.60 கோடிச் செலவில் சொந்தக் கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளன.
- விடுதி மாணவ, மாணவியருக்கு கட்டுரைப் போட்டி, விளையாட்டுப் போட்டி போன்ற போட்டிகள் "கலைத்திருவிழா" என்றபெயரில் ரூ.3.80இலட்சம்செலவில்நடத்தப்பட்டுள்ளன.
- கல்வி உதவித்தொகை திட்டத்தின்கீழ் பயன்பெறுவதற்கானஆண்டுவருமானவரம்பு ரூ.2 இலட்சத்திலிருந்துரூ.2.50 இலட்சமாக உயர்த்தப்பட்டு, ரூ.196.72 கோடிச் செலவில் 7.14இலட்சம் மாணவ,மாணவியருக்குகல்வி உதவித்தொகைகள் வழங்கப்பட்டன.
- கல்வி உதவித்தொகை திட்டங்களின்கீழ் வழங்கப்படும் மாதாந்திர உண்டி மற்றும் உறையுள் கட்டணம், அனைவருக்கும் 400 ரூபாயாக (பட்டப்படிப்பு பயிலும் மாணவ,மாணவியருக்கு175ரூபாயிலிருந்து 400 ரூபாயாகவும், தொழிற்கல்வி பயிலும் மாணவ,மாணவியருக்கு 350ரூபாயிலிருந்து 400 ரூபாயாகவும், ஐடிஐ/பட்டயப்படிப்பு மற்றும் முதுகலை மாணவ, மாணவியருக்கு 235ரூபாயிலிருந்து400ரூபாயாகவும்)ரூ.9கோடி கூடுதல் செலவில் உயர்த்தப்பட்டுள்ளது.
- 234 கள்ளர் பள்ளிக் கட்டடங்களில் மாற்றுத்திறனாளி மாணவ, மாணவியருக்கு கழிப்பறைவசதிகள்ரூ.4.68கோடிச்செலவில் ஏற்படுத்தப்பட்டன.
- 104 கள்ளர் பள்ளிக் கட்டடங்களில் ரூ.7கோடிச்செலவில்பழுதுமற்றும்பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.
- 225 கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளில் முதலாம் வகுப்பில் ஆங்கில வழியிலான வகுப்புகள் தொடங்கப்பட்டுள்ளன.
- கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளில் 8ஆம் வகுப்பு முதல் 11ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ / மாணவியருக்கு தமிழ்நாடு திறன் வளர்ச்சி மேம்பாட்டுக்கழகம்மூலம்ஆங்கிலப்பேச்சாற்றல் மற்றும் தனித்திறன் வளர்க்கும் பயிற்சி வழங்கப்பட்டது.
- கிராமப்புற மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர்வகுப்புகளைச்சார்ந்தமாணவியருக்கு, ஊக்கத் தொகை வழங்கும் திட்டத்திற்கான ஆண்டு வருமான வரம்பு ரூ.72,000லிருந்து ரூ.1,00,000ஆக உயர்த்தப்பட்டுள்ளது.
- 11ஆம் வகுப்பு பயிலும் பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்பினைச் சார்ந்த 4,35,624 மாணவ, மாணவியருக்கு ரூ.221.26 கோடிச் செலவில் மிதிவண்டிகள் வழங்கப்பட்டுள்ளது.
- தையல் இயந்திரங்கள், சலவைப் பெட்டிகள் மற்றும் வீட்டுமனைப் பட்டாக்கள் ஆகிய உதவிகளைப்பெற பயனாளிகளின் ஆண்டு வருமான உச்சவரம்பு ரூ.72,000லிருந்து ரூ.1,00,000 ஆக உயர்த்தப்பட்டுள்ளது.
- 3,000 பித்தளை தேய்ப்புப் பெட்டிகள் ரூ.1.46கோடிச்செலவில்வழங்கப்பட்டுள்ளன.
- சீர்மரபினர் நல வாரியம் மற்றும் உலமாக்கள் மற்றும் பணியாளர்கள் நல வாரியங்களில் பதிவு செய்துள்ள உறுப்பினர் அல்லது குடும்பத்தினருக்கு வழங்கப்படும் திருமண உதவித்தொகைஆண்களுக்குரூ.2,000லிருந்து ரூ.3,000ஆகவும்,பெண்களுக்குரூ.2,000லிருந்து ரூ.5,000ஆகவும் உயர்த்தப்பட்டுள்ளது.
- "இட ஒதுக்கீடு மற்றும் சமூகநீதி" குறித்து பல்வேறு தகவல்கள் கொண்ட ஒரு புத்தகம்



ரூ.8 இலட்சம் செலவில் வெளியிட ஆணையிடப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.

- சமூகநீதிக்கான தந்தைப் பெரியார் விருதுத்தொகை ஒரு இலட்சத்திலிருந்து ரூ.5 இலட்சமாக உயர்த்தப்பட்டு, இவ்விருது பெறுபவருக்கு ஒரு சவரன் தங்கப் பதக்கமும், ரூ.5 இலட்சம் விருதுத் தொகையும் வழங்கப்பட்டுவருகிறது.2021ஆம்ஆண்டிற்கான தந்தைப்பெரியார்விருதுதிரு.க.திருநாவுக்கரசு அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.
- தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் மூலம் கடன் வழங்கும் திட்டத்தின்கீழ் பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்பைச் சார்ந்த 12,662 பயனாளிகளுக்கு ரூ.84.40 கோடி கடனாக வழங்கப்பட்டுள்ளது.

2022–2023ஆம் ஆண்டு

- 275 கல்லூரி விடுதிகளில் ரூ.2.20 கோடிச் செலவில் E–Library அமைக்கப்பட்டது.
- மாணவ,மாணவியர் குறைவாக உள்ள பள்ளி விடுதிகளை மறுசீரமைத்து, தேவைப்படும் இடங்களில் 15 கல்லூரி விடுதிகளை ரூ.1.48 கோடிச் செலவில் துவங்கப்பட்டன.
- சொந்தக்கட்டடம்முற்றிலும்பழுதடைந்ததால் வாடகைக் கட்டடத்தில் இயங்கி வரும் 2 விடுதிகளுக்கு ரூ.7.42 கோடிச் செலவில் சொந்தக் கட்டடம் கட்ட ஆணையிடப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது.
- மதுரை மற்றும் தேனி மாவட்டங்களில் ரூ.1.17 கோடிச் செலவில் 3 உண்டு உறைவிடப் பள்ளிகள் (Residential schools) துவங்கி வைக்கப்பட்டு, 160 மாணவர்கள் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.
- மதுரை மற்றும் திண்டுக்கல் மாவட்டங்களில் உள்ள 2 கள்ளர் சீரமைப்பு உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாக ரூ.1.34 கோடிச் செலவில் தரம் உயர்த்தப்பட்டுள்ளது.
- 11ஆம்வகுப்புபயிலும்கள்ளர்சீரமைப்புப்பள்ளி மாணவ, மாணவியர் மாநில அளவில் கல்வி சுற்றுலாவிற்கு ரூ.42.16 இலட்சம் செலவில் அழைத்துச்செல்லப்பட்டனர்.இத்திட்டத்தின்கீழ், 1,757மாணவ,மாணவியர்இராமநாதபுரம்,நீலகிரி மற்றும்கன்னியாகுமரிஆகியமாவட்டங்களில் உள்ளவரலாற்றுச்சிறப்புடையமற்றும்கலாச்சார பாரம்பரியமிக்க இடங்களுக்கு மாணவர்கள் அழைத்துச் செல்லப்பட்டனர்.
- விடுதிகள்மற்றும்கள்ளர்சீரமைப்புப்பள்ளிகளில் பயிலும்மாணவ,மாணவியருக்குஆண்டுதோறும் 3 முறை இலவச மருத்துவப் பரிசோதனை செய்வதற்கெனவழங்கப்பட்டுவரும்இடைநிகழ் செலவினம் ரூ.1,000–லிருந்து ரூ.3,000ஆக ரூ.32.98இலட்சம்செலவில்உயர்த்தப்பட்டுள்ளது.
- 1,085 பித்தளை தேய்ப்புப் பெட்டிகள் ரூ.71.08இலட்சம்செலவில்வழங்கப்பட்டுள்ளன.
- சலவைத் தொழிலில் ஈடுபட்டு வருகின்றவர்களை 10 நபர்களை கொண்ட குழுவாக இணைத்து 25 நவீன முறை சலவையகங்கள் ரூ.75 இலட்சம் செலவில் ஏற்படுத்த ஆணையிடப்பட்டு,ரூ.12 இலட்சம் செலவில் 4 நவீன முறை சலவையகங்கள் அமைக்க நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

- தையல்தொழிலில்ஈடுபட்டுவருகின்றவர்களை 10நபர்களைகொண்டகுழுவாகஇணைத்து25 ஆயத்தஆடைஅலகுகள்(ReadymadeGarments Units) ரூ.75 இலட்சம் செலவில் அமைக்க ஆணையிடப்பட்டு,ரூ.75இலட்சம்செலவில் 25ஆயத்தஆடைஅலகுகள்அமைக்கஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.
- 2022–2023மற்றும்2023–2024ஆம்ஆண்டிற்கு 2,000எண்ணிக்கையிலானமின்மோட்டாருடன் கூடிய தையல் இயந்திரங்கள் ரூ.1.20 கோடி செலவில் கொள்முதல் செய்து வழங்க ஆணையிடப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.
- தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் மூலம் 15,151 பயனாளிகளுக்கு ரூ.99.62 கோடி மதிப்பீட்டில் கடன்கள் வழங்கப்பட்டுள்ளது.
- 7.5 சதவிகித இடஒதுக்கீட்டின் கீழ் ரூ.23.47 கோடிச் செலவில் 683 மாணவ, மாணவியர் பயனடைந்துள்ளனர்.
- ரூ.233.81கோடிச்செலவில்7,49,410 மாணவ, மாணவியருக்கு கல்வி உதவித் தொகைகள் வழங்கப்பட்டன.
- 15 கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளில் 9ஆம் வகுப்பில் ஆங்கில வழிக்கல்வி வகுப்புகள் தொடங்கப்பட்டுள்ளன.
- 3,44,144மாணாக்கர்களுக்குமிதிவண்டிகள் வழங்குவதற்காக ரூ.165.84 கோடிச் செலவிடப்பட்டுள்ளது.
- 2022ஆம் ஆண்டிற்கான தந்தை பெரியார் விருதுகவிஞர்கலி.பூங்குன்றன்அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

2023–2024ஆம் ஆண்டு

- விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவ, மாணவியருக்கு உணவு மானியம், ரூ.1,000லிருந்து ரூ.1,400ஆக பள்ளி மாணாக்கர்களுக்கும், ரூ.1,100லிருந்து ரூ.1,500ஆக கல்லூரி மாணாக்கர்களுக்கும் உயர்த்தி வழங்கப்பட்டுள்ளது.
- விடுதிகளில்தங்கிப்பயிலும்10மற்றும்12ஆம் வகுப்புமாணவ/மாணவியருக்குரூ.25இலட்சம் செலவில் வினா வங்கி வழங்கப்பட்டது.
- 368 பள்ளி மாணவியர் விடுதிகளுக்கு ரூ.73.60 இலட்சம் மதிப்பில் விளையாட்டுப் பொருட்கள் வழங்கப்பட்டன.
- 385 பள்ளி மாணவியர் விடுதிகளுக்கு ரூ.1.63கோடிச்செலவில்LEDதொலைக்காட்சி DTH இணைப்புடன் வழங்கப்பட்டன.
- மலைப் பிரதேசங்களில் செயல்பட்டு வரும் 20விடுதிகளுக்குரூ.6.68இலட்சம்செலவில் நீர் கொதிகலன்(Geyser)வழங்கப்பட்டுள்ளது.
- 12 விடுதிகளில் மாணவியர் பாதுகாப்பிற்காக ரூ.12 இலட்சம் செலவில் CCTV Camera பொருத்தப்பட்டுள்ளது.
- 141 கல்லூரி மாணவியர் விடுதிகளில் தங்கிப்பயிலும்மாணவியருக்குரூ.45இலட்சம் மதிப்பில் சுகாதாரக் குட்டை தகளிகள் (Napkin incinerator) வழங்கப்பட்டுள்ளன.
- பிற்படுத்தப்பட்டோர் நல இயக்ககம் மற்றும் மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலஇயக்ககங்களுக்குரூ.6இலட்சம்செலவில் ஒப்பந்த அடிப்படையில் ஒரு சட்ட அலுவலர் பணியிடம் தோற்றுவிக்கப்பட்டுள்ளது.
- இயக்ககங்களில்பணிபுரியும்17அலுவலர்களுக்கு ரூ.1.30 இலட்சம் செலவில் தொலைபேசி இணைப்புகள் (CUG) வழங்கப்பட்டுள்ளன.
- 3விடுதிகளுக்கு சொந்தக்கட்டடங்கள்கட்ட ரூ.16.14கோடிச்செலவில்மேற்கொள்ளஆணை வெளியிடப்பட்டுபணிகள்மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.
- 129 விடுதிகளில் சிறப்புப் பராமரிப்பு மற்றும் பழுதுபார்ப்புப்பணிகள்ரூ.20கோடிச் செலவில் மேற்கொள்ளஆணைவெளியிடப்பட்டுபணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.
- 16மாணவியர்விடுதிகளுக்குரூ.2.05கோடிச் செலவில்சுற்றுச்சுவர்கட்டஆணையிடப்பட்டு, பணிகள் நடைபெற்று வருகின்றன.
- புதியதாக3கல்லூரிவிடுதிகள்ரூ.1.30கோடிச் செலவில் தொடங்கப்பட்டுள்ளது.
- நாமக்கல்மாவட்டம்மிகப்பிற்படுத்தப்பட்டோர் கல்லூரி மாணவியர் விடுதியில் மாணவியர் எண்ணிக்கை 100லிருந்து 150ஆக உயர்த்தப்பட்டுள்ளது.
- மதுரை மாவட்டம், செக்கானூரணி அரசு கள்ளர்தொழிற்பயிற்சிமாணவர்விடுதியினை கல்லூரி மாணவர் விடுதியாக மாற்றம் செய்யப்பட்டுள்ளது.
- திண்டுக்கல் மாவட்டம், கொண்டமநாயக்கன்பட்டியில் ஒரு உண்டு உறைவிடப்பள்ளி (Residential School) ரூ.50இலட்சம்செலவில்தொடங்கப்பட்டுள்ளது.



- 295 கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளுக்கு ரூ.75 இலட்சம் மதிப்பில் நூலகப் புத்தகங்கள், புத்தக அலமாரிகள் வழங்க ஆணையிடப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.
- கள்ளர் பள்ளிகளின் வகுப்பறைகளில் டைல்ஸ் பதித்தல் (Laying of Tiles) வெள்ளை அடித்தல், வர்ணம் பூசுதல் உள்ளிட்ட பணிகள் ரூ.5 கோடிச் செலவில் மேற்கொள்ளவும் ஆணையிடப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.
- சீர்மரபினர் நல வாரியம், மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் அவர்களை தலைவராகவும், துணைத் தலைவர் மற்றும் 13 அரசு சாரா உறுப்பினர்களை 3 ஆண்டு காலத்திற்கு நியமனம் செய்து திருத்தி அமைக்கப்பட்டுள்ளது.
- தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் மூலம் இதுவரை 16,842 பயனாளிகளுக்கு ரூ.115.50 கோடி மதிப்பீட்டில் கடன்கள் வழங்கப்பட்டுள்ளது.
- 3,81,275 பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர் மாணவ, மாணவியருக்கு ரூ.183.86 கோடி மதிப்பீட்டில் மிதிவண்டிகள் வழங்கப்பட்டன.
- 2023ஆம் ஆண்டிற்கான தந்தைப் பெரியார் விருது திரு.சுப.வீரபாண்டியன் அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.
- 977 பித்தளைத் தேய்ப்புப் பெட்டிகள் ரூ.73.13 இலட்சம் செலவில் வழங்கப்பட்டு வருகின்றன.
- புதியதாக TNeGA – ஆல் State Scholarship Portal (SSP) என்ற மென்பொருள் உருவாக்கப்பட்டு www.ssp.tn.gov.in என்ற இணையதளம் மூலம் கல்வி உதவித்தொகை வழங்கும் திட்டம் அனைத்து மாவட்டங்களிலும் செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

கதர் மற்றும் கிராமத் தொழில் வாரியம்

- சிவகங்கை மாவட்டம் காரைக்குடி அருகே கண்டனூர் கிராமத்தில் உள்ள கதர் வளாகத்தினை ரூ.45.80 இலட்சம் செலவில் புனரமைப்பு செய்து, 9 அலகுகள் துவக்கி வைக்கப்பட்டு, சுமார் 100 நபர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கப்படுகிறது.
- 02.10.2023 அன்று நடைபெற்ற காந்தி ஜெயந்தி விழாவில் சிறந்த நூற்பாளர், கதர் நெசவாளர் மற்றும் பட்டு நெசவாளர் ஆகியோருக்கு தலா ரூ.25,000 வீதம் ரொக்கப் பரிசும், பாராட்டுக் கேடயமும் வழங்கப்பட்டது.
- 02.10.2022 அன்று காந்தி ஜெயந்தி விழா மற்றும் கதர் சிறப்பு விற்பனை துவக்க விழாவில் "ஆதிரை கலெக்சன்ஸ் 2.0" எனும் பெயரில் கதர் வேட்டி மற்றும் ரெடிமேட் சட்டை (அரைக்கை, முழுக்கை) இணைத்த Combo Pack King Size மெத்தை விரிப்பு, Printed புடவைகள். எம்ப்ராய்டரி வேலைப்பாடுகள் கொண்ட பட்டுப் புடவை விற்பனைக்கு அறிமுகப்படுத்தப்பட்டது.
- கோவை பிரதானம், ஆர்.எஸ்.புரம் மற்றும் திண்டுக்கல் ஆகிய 3 கதர் அங்காடிகள் ரூ.23 இலட்சம் மதிப்பில் புதுப்பிக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது.
- கதர் உற்பத்தியில் ஈடுபட்டுள்ள 100

நெசவாளர்களுக்கு ரூ.7 இலட்சம் செலவில் தறி உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளது.

- தேங்காய் எண்ணெய்யை அடிப்படையாகக் கொண்ட நூடுல்ஸ்களைப் பயன்படுத்தி "காதி ப்ராக்ரென்ஸ்" (Khadi Fragrance) எனும் பெயரில் ரோஸ், லாவெண்டர், சந்தனம் மற்றும் செஞ்சந்தனம் எனும் 4 வகை நறுமணங்களில் புதிய வகை குளியல் சோப்புகள் அறிமுகப்படுத்தப்பட்டது.
- முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு சென்னை, குறளகம் கதரங்காடியில் நடைபெற்ற காந்தி ஜெயந்தி விழாவின் போது ஒளி ஊடுருவல் சோப்பு (Transparent Soap) மற்றும் ஜவ்வாது வாசனை திரவம் அறிமுகம் செய்யப்பட்டு விற்பனை நடைபெற்று வருகிறது.
- கண்கவரும் லேபிள்களுடன் கூடிய புதிய வடிவிலான கண்ணாடி பாட்டில்களில் "காதித் தேன்" அறிமுகப்படுத்தப்பட்டது.
- "காதி மலைத் தேன்" (Hill Honey) எனும் பெயரில் அறிமுகம் செய்யப்பட்டு, விற்பனை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.
- கன்னியாகுமரி மாவட்டம், மார்த்தாண்டம் பகுதியில் உள்ள தேனீ விவசாயிகளிடமிருந்து பச்சைத் தேனை கிலோ ஒன்றுக்கு ரூ.140 லிருந்து ரூ.155 ஆக 2023-2024 ஆம் ஆண்டு முதல் உயர்த்தி வழங்கப்பட்டுள்ளது.
- காதி கோல்டு (Khadi Gold) எனும் பெயரில் சிறுதானிய வகைகளான (Minor Millets) – தினை, சாமை, வரகு, கேழ்வரகு, குதிரைவாலி மற்றும் மூங்கில் அரிசி வகைகள் விற்பனைக்கு அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.
- வேலூர் மாவட்டம், பள்ளிகொண்டா தச்சுகருமார அலகில் ரூ.95 இலட்சம் மதிப்பீட்டில் கதர் கிராமப் பொருட்கள் மற்றும் பனைப் பொருட்களுக்கான விற்பனைக் காட்சிக் கூடம் துவக்கி வைக்கப்பட்டு, விற்பனை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.
- சென்னை, குறளகம் கதர் அங்காடியில் நவராத்திரி கொலு பொம்மை கண்காட்சியின் போது 35 கடைகள் அமைக்கப்பட்டு, ரூ.76.05 இலட்சத்திற்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது.
- காதி கிராமப் பொருட்கள் மற்றும் பனைப் பொருட்களை விற்பனை செய்திட, மண்டல வாரியாக / மாவட்ட வாரியாக 9 நிறுவனங்கள் / தனி நபர்கள் தேர்வு செய்யப்பட்டு, மொத்த விற்பனை முகவர்களுக்கான உரிமம் வழங்கப்பட்டுள்ளது.
- இணைய வழி விற்பனையை அதிகரிக்கச் செய்யும் பொருட்டு ஏற்கெனவே www.tnkvib.org மற்றும் www.tnkhadi.com எனும் இரு இணையதளங்கள் உருவாக்கப்பட்டு, ஆன்ட்ராய்டு மற்றும் iOS வழியில் செயல்படும் "tnkhadi" எனும் கைபேசி செயலி அறிமுகப்படுத்தப்பட்டது.
- அமேசான் (Amazon) மற்றும் பிளிப்கார்ட் (Flipkart), போன்ற மின் வணிகத் (e-Commerce) தளங்கள் வாயிலாக காதி கிராமப் பொருட்கள் மற்றும் பனைப்பொருட்கள் விற்பனை செய்யப்பட்டு வருகிறது.
- "பாரம்பரிய கிராமப் பல்பொருள் அங்காடி" எனும் பெயரில் மாவட்டத்திற்கு சிறப்பு சேர்க்கும் உண்ணும் மற்றும் உண்ணாப் பொருட்களை உற்பத்தி செய்யும் மகளிர் சுயஉதவிக் குழுக்கள் (SHGs), பஞ்சாயத்து அளவிலான மகளிர் குழுக்களின் கூட்டமைப்பு (PLFs), உழவர் உற்பத்தியாளர் அமைப்புகள் (FPOs), பிரதம மந்திரியின் வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டத்தின் பயனாளிகள் (PMEGP) மற்றும் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களிடமிருந்து 05.02.2023 முதல் கொள்முதல் செய்து அனைத்து கதரங்காடிகள், சர்வோதயா சங்கங்கள் மற்றும் தனியார் பல்பொருள் அங்காடிகள் ஆகியவற்றில் விற்பனை செய்யப்பட்டு வருகிறது. ரூ.4.58 கோடி மதிப்பிலான கிராமப் பொருட்கள் விற்பனை செய்யப்பட்டுள்ளது.
- பனைத் தொழிலாளர்கள் பயனடையும் வகையில் கற்பகம் என்ற பெயரில் தரமான பனை வெல்லம் கூட்டுறவுத்துறையின் நியாய விலைக் கடைகள், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் சிறப்பு அங்காடிகள் மூலம் விற்பனை செய்யப்பட்டுள்ளது.
- ரூ.8.56 கோடி மதிப்பிலான பனைப்பொருட்கள் கொள்முதல் செய்து ரூ.9.68 கோடி மதிப்பில் விற்பனை செய்யப்பட்டுள்ளது.
- பனை மேம்பாட்டு இயக்கத்தின் கீழ், ரூ.66 இலட்சம் மதிப்பில், 22 இலட்சம் தரமான பனை விதைகளை மாநில இணையத்தின் கிளைகள் மற்றும் மாவட்ட சம்மேளனங்கள் மூலம் (100 சதவிகித மானியத்தில்) கொள்முதல் செய்து, பனை வளர்க்க விரும்பும் விவசாயிகளுக்கு, தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறையின் மூலம் விநியோகம் செய்யப்பட்டுள்ளது.

❖ ❖ ❖

சுற்றுலா மற்றும்
சுற்றுலா வளர்ச்சிக் கழகம்



திரு. கா.ராமச்சந்திரன் அவர்கள்
மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர்

சுற்றுலாத்துறை

- "சுற்றுலாத்தலங்கள் வளர்ச்சித் திட்டம்" தமிழ்நாட்டில் உள்ள சுற்றுலா இடங்களை மேம்படுத்த, வழிகாட்டு நெறிமுறைகள் வெளியிடப்பட்டுள்ளன.
- தமிழ்நாட்டில் உள்ள 300 சுற்றுலாத்தலங்களில் சர்வதேசதரத்திற்கு இணையான வசதிகளை ஏற்படுத்த சுற்றுலா பெருந்திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது.
- முதலியார் குப்பம் படகு குழாம் மற்றும் அருகில் உள்ள தீவுப்பகுதியை மேம்படுத்த ரூ.50 இலட்சம் நிதி ஒப்பளிப்பு.
- தமிழ்நாட்டில் சுற்றுலா தொழில் புரியும் பல்வேறு தொழில் முனைபவர்களுக்கு மாநில சுற்றுலா விருதுகள் வழங்கப்பட்டது.
- கன்னியாகுமரியில் அய்யன் திருவள்ளுவர் சிலை ஒளிரும் வகையில், தமிழ்நாடு சுற்றுலாத்துறையின் மூலம் 3D திட்ட வரைபட அமைப்பு ரூ.11.98 கோடி மதிப்பீட்டில் நிறுவுவதற்கு பணிகள் நடைபெற்று வருகின்றன.
- அய்யன்திருவள்ளுவர்சிலைக்குஇரசாயனகலவைபூச்சுக்குரூ.1கோடிநிதிஒப்பளிப்பு செய்யப்பட்டு பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.



- கன்னியாகுமரி மாவட்டம், முட்டம் கடற்கரை மற்றும்திற்பரப்புஅருவிபகுதியைமேம்படுத்துதலுக்கு ரூ.715.06 இலட்சம் நிதி ஒதுக்கீடு.
- தென்காசி மாவட்டம், குற்றாலம் அருவிப் பகுதியில்சுற்றுலாவசதிகள்ஏற்படுத்துதலுக்காக ரூ.1,134.56 இலட்சம் நிதி ஒதுக்கீடு.
- கடலூர் மாவட்டம், பிச்சாவரம் படகு இல்லப் பகுதியினை பல்வேறு வசதிகள் கொண்ட சுற்றுலாத்தலமாக மேம்படுத்துதலுக்காக ரூ.1,407 இலட்சம்SIDBI–யிடம்கடன்பெறுவதற்கு அரசாணை வழங்கபட்டுள்ளது.
- மதுரை மாவட்டம், அலங்காநல்லூர் பகுதியில் உலகத்தரம் வாய்ந்த ஜல்லிக்கட்டு அரங்கம் கட்டுவதற்கு ரூ.6,277.47 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் முடிக்கப்பட்டு துவங்கப்பட்டுள்ளது.
- மயிலாடுதுறை மாவட்டம், பூம்புகாரை புதுப்பித்தலுக்கு ரூ.23.60 கோடி நிதி ஒதுக்கீடு.
- திருவாரூர் மாவட்டம், முத்துப்பேட்டை மாங்குரோவ் காடுகள் பகுதியினை பல்வேறு வசதிகள் கொண்ட சுற்றுலாத்தலமாக மேம்படுத்துதலுக்காக ரூ.400 இலட்சம் SIDBI–யிடம் கடன் பெறுவதற்கு அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.
- புதுக்கோட்டை மாவட்டம், முத்துக்குடா பகுதியினை பல்வேறு வசதிகள் கொண்ட சுற்றுலாத்தலமாக மேம்படுத்துதலுக்காக ரூ.306.31 இலட்சம் நிதி ஒதுக்கீடு.
- தமிழ்நாட்டிலுள்ள அணைக்கட்டுகள் மற்றும் நீர்த்தேக்கங்களை சுற்றுலாத்தலங்களாக மேம்படுத்துதலுக்கு ரூ.806 இலட்சம் நிதி.
- திருவள்ளூர் மாவட்டம்,பூண்டி அணைக்கட்டு பகுதியினைசுற்றுலாத்தலமாகமேம்படுத்துதலுக்கு ரூ.300 இலட்சம் நிதி.
- தருமபுரி மாவட்டம், ஒகேனக்கல் அருவிப் பகுதியினை பல்வேறு வசதிகள் கொண்ட சுற்றுலாத்தலமாகமேம்படுத்துதலுக்குரூ.1,757.65 இலட்சம் நிதி.
- முதன்முறையாக "தமிழ்நாடு மருத்துவ மதிப்பு பயண உச்சி மாநாடு 2023" நடத்தப்பட்டது.

இந்தியா டுடே சுற்றுலா ஆய்வு மற்றும் விருதுகள் 2021 விழாவில் வென்றது

- சிறந்த மலைப்பகுதி வகைப்பாட்டிற்கான விருதை தமிழ்நாட்டின் நீலகிரி



மாவட்டத்திலுள்ள குன்னூருக்கும், சிறந்த விழாவிற்கான விருதினை பொங்கல் விழாவிற்கும், இயற்கை எழில் கொஞ்சும் சாலை வகைப்பாட்டிற்கான விருது நாமக்கல் மாவட்டத்தில் உள்ள கொல்லிமலைக்கும் வழங்கப்பட்டது.

தமிழ்நாடு சுற்றுலாத் துறை வென்றுள்ள தேசிய விருதுகள்

- மும்பையில் நடைபெற்ற OTM சுற்றுலா சந்தையில் "சிறந்த சுற்றுலா அரங்க வடிவமைப்பு மற்றும் அலங்காரத்திற்கான" விருதை தமிழ்நாடு சுற்றுலாத் துறை பெற்றது.
- பசிபிக் பகுதி சுற்றுலா எழுத்தாளர்கள் சங்கம் (PATWA) புதுடெல்லியில் நடத்திய சஃபாரி இந்தியா தெற்காசிய சுற்றுலா விருதுகள் 2021-இல் "ஆண்மீக சுற்றுலாவிற்கான சிறந்த மாநிலம்" என்ற விருதை தமிழ்நாடு சுற்றுலாத் துறை பெற்றது.
- புதுடெல்லியில் நடைபெற்ற இந்தியா டுடே சுற்றுலா ஆய்வு மற்றும் விருதுகள் – 2022 விழாவில் சிறந்த கடற்கரைகள் மற்றும் கடற்கரைத்தலத்திற்கான விருது கன்னியாகுமரி மாவட்டத்தின் லெமூர் கடற்கரைக்கு வழங்கப்பட்டுள்ளது.
- "இந்தியாவின் சிறந்த சுற்றுலா அமைச்சர் 2023" என்ற விருது தமிழ்நாடு அரசின் மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்களுக்கு பசிபிக் பகுதி சுற்றுலா எழுத்தாளர்கள் சங்கத்தால் (PATWA) பெர்லினில் நடைபெற்ற சர்வதேசப் பயண விருதுகள் விழாவில் வழங்கப்பட்டது.

பல்வேறு பிரிவுகளின் கீழ் பெறப்பட்ட சர்வதேச விருதுகள்

- "ஆண்மீக சுற்றுலாவிற்கான சிறந்த மாநிலம்" என்ற விருதினை புதுடெல்லியில் நடைபெற்ற டிராவல்+ லீஷர் இந்தியா மற்றும் தெற்காசியாவின் 11-ஆவது பதிப்பு விழாவில் தமிழ்நாடு சுற்றுலாத் துறை பெற்றுள்ளது.
- "இந்தியாவின் சிறந்த பாரம்பரிய இடங்கள்" என்ற விருது பசிபிக் பகுதி சுற்றுலா எழுத்தாளர்கள் சங்கத்தால் பெர்லினில் நடைபெற்ற சர்வதேசப் பயண விருதுகள் விழாவில் வழங்கப்பட்டது.
- ஜப்பானின் ஒசாகாவில் நடைபெற்ற ஜப்பான் சுற்றுலா எக்ஸ்போவின் 7-ஆவது பதிப்பில் ஜப்பான் சுற்றுலா விருதுகளின் மதிப்புமிக்க "செயற்குழு விருது" என்ற விருதினை தமிழ்நாட்டின் மன்னார் சுற்றுச்சூழல் சுற்றுலாத் திட்டத்திற்காக வழங்கப்பட்டது.
- புதுதில்லியில் 29.02.2024 அன்று நடைபெற்ற இந்தியா டுடே சுற்றுலா ஆய்வு மற்றும் விருதுகள் 2023-இல் தமிழ்நாட்டின் ஏற்காடுக்கு சிறந்த இயற்கை காட்சிகளைக் கொண்ட சாலைக்கான விருது பெறப்பட்டது.
- ITB பெர்லினில் 06.03.2024 அன்று நடைபெற்ற விழாவில் பசுபிக் பகுதி சுற்றுலா எழுத்தா



ளர்கள் சங்கத்தால் (PATWA) சர்வதேசபயண விருதுகள் தமிழ்நாடு கலாச்சாரத்தலத்திற்கான விருதினைப்பெற்றுள்ளது.

❖ தமிழ்நாடு சுற்றுலாத்துறை ஹரியானாவில் உள்ள சூரஜ்குண்டில் 02.02.2024 முதல் 18.02.2024 வரைநடைபெற்ற "37வது சூரஜ்குண்ட் பன்னாட்டுகை வினைப்பொருட்கள் மேளா" வில்பங்கேற்றுள்ளது.

❖ சென்னை தீவுத்திடலில் ஜனவரி 2024 முதல் மார்ச் 2024 வரை நடைபெற்ற 48வது இந்திய சுற்றுலா மற்றும் தொழில் பொருட்காட்சி" இல் சுற்றுலாத்துறை பங்கேற்றுள்ளது. மும்பையில் 08.02.2024 முதல் 10.02.2024 வரைநடைபெற்ற "OTM–2024"ல் தமிழ்நாடு சுற்றுலா, பங்கேற்றுள்ளது.

❖ புதுதில்லியில் 29.02.2024 அன்று நடைபெற்ற இந்தியா டுடே சுற்றுலா ஆய்வு மற்றும் விருதுகள் 2023–இல் தமிழ்நாட்டின் ஏற்காடுக்கு சிறந்த இயற்கை காட்சிகளைக் கொண்ட சாலைக்கான விருது பெறப்பட்டது.

❖ ITB பெர்லினில் 06.03.2024 அன்று நடைபெற்ற விழாவில் பசுபிக்பகுதி சுற்றுலா எழுத்தாளர்கள் சங்கத்தால் (PATWA) சர்வதேச பயண விருதுகள் தமிழ்நாடு கலாச்சாரத்தலத்திற்கான விருதினைப் பெற்றுள்ளது.

❖ தமிழ்நாடு சுற்றுலாத்துறை ஹரியானாவில் உள்ள சூரஜ்குண்டில் 02.02.2024 முதல் 18.02.2024 வரைநடைபெற்ற "37வது சூரஜ்குண்ட் பன்னாட்டு கைவினைப் பொருட்கள்மேளா" வில்பங்கேற்றுள்ளது.

❖ சென்னை தீவுத்திடலில் ஜனவரி 2024 முதல்மார்ச் 2024 வரைநடை பெற்ற 48வது இந்திய சுற்றுலா மற்றும் தொழில் பொருட்காட்சி" இல் சுற்றுலாத்துறை பங்கேற்றுள்ளது.

❖ மும்பையில் 08.02.2024 முதல் 10.02.2024 வரை நடைபெற்ற "OTM–2024"ல் தமிழ்நாடு சுற்றுலா, பங்கேற்றுள்ளது.

❖ புதுதில்லியில் 22.02.2024 முதல் 24.02.2024 வரை நடைபெற்ற "SATTE–2024"ல் தமிழ்நாடு சுற்றுலா, பங்கேற்றுள்ளது.

❖ தமிழ்நாடு சுற்றுலாத்துறை 01.03.2024 அன்று சென்னையில் நடைபெற்ற "Bhart Bhog–2024"க்கு நிதியுதவி அளித்துள்ளது.

❖ தமிழ்நாடு சுற்றுலாத்துறை 05.03.2024 முதல் 07.03.2024 வரை பெர்லினில் நடைபெற்ற "ITB–2024" இல் பங்கேற்றுள்ளது.

❖ 15.03.2024 முதல் 17.03.2024 வரை சென்னையில் நடைபெற்ற "பயண மற்றும் சுற்றுலா சந்தை (TTF)" –இல் தமிழ்நாடு சுற்றுலாத்துறை பங்கேற்றுள்ளது.

❖ சென்னை வர்த்தக மையத்தில் 28.03.2024 முதல் 30.03.2024 வரை நடைபெற்ற மருத்துவச் சுற்றுலா குறித்த சர்வதேச நிகழ்வான "சஞ்சீவனி (இந்தியாஹீல்ஸ்)"



நிகழ்ச்சியில் தமிழ்நாடு சுற்றுலாத்துறை பங்கேற்றுள்ளது.

- தமிழ்நாடு சுற்றுலாத்துறை ஏப்ரல் 2024 இல் மதுரையில் நடைபெற்ற "மதுரை சித்திரை திருவிழா–2024"க்கு நிதியுதவி அளித்துள்ளது.
- சென்னையில் 30.04.2024 அன்று சென்னை மருத்துவக் கல்லூரியின் மாணவர்மன்றம் ஏற்பாட்டில் நடைபெற்ற "திகிரி–2024" நிகழ்ச்சிக்கு தமிழ்நாடு சுற்றுலாத்துறை நிதியுதவி அளித்துள்ளது.
- மயிலாப்பூரில் 01.05.2024 முதல் 11.05.2024 வரை நடைபெற்ற "வசந்த உத்சவ் திருவிழா 2024"க்கு தமிழ்நாடு சுற்றுலாத்துறை நிதியுதவி அளித்துள்ளது.
- ஏற்காட்டில் மே 2024 இல் நடைபெற்ற "கோடைவிழா–2024"க்கு தமிழ்நாடு சுற்றுலாத்துறை நிதியுதவி செய்துள்ளது.
- கொடைக்கானலில் மே 2024 இல் நடைபெற்ற "கோடைவிழா–2024"க்கு தமிழ்நாடு சுற்றுலாத்துறை நிதியுதவி செய்துள்ளது.
- தமிழ்நாடு சுற்றுலாத்துறை 01.05.2024 முதல் 05.05.2024 வரை சென்னையில் நடைபெற்ற "The UNIFI Capital Offshore Regatta 2024"க்கு நிதியுதவி அளித்துள்ளது.
- உதகமண்டலத்தில் மே 2024 இல் நடைபெற்ற "கோடைவிழா–2024"க்கு தமிழ்நாடு சுற்றுலாத்துறை நிதியுதவி செய்துள்ளது.
- தமிழ்நாடு சுற்றுலாத்துறை, பாஞ்சாலங்குறிச்சியில் 10.05.2024 & 11.05.2024 ஆகிய தேதிகளில் நடைபெற்ற "கட்டபொம்மன் திருவிழா" விற்கு நிதியுதவி அளித்துள்ளது.

- மே–ஜூன் 2024 மாதங்களில் மதுரையில் நடைபெற்ற "அரசு கண்காட்சி"க்கு தமிழ்நாடு சுற்றுலாநிதியுதவி அளித்துள்ளது.
- 15.06.2024முதல்16.06.2024வரைபெங்களூரில் நடைபெற்ற "தக்ஷின் பாரத் உத்சவ்–2024" இல் தமிழ்நாடு சுற்றுலாத்துறை பங்கேற்றுள்ளது.
- தமிழ்நாடு சுற்றுலாத்துறை கிருஷ்ணகிரியில் 05.07.2024முதல்31.07.2024வரைநடைபெற்ற "மாம்பழத் திருவிழா–2024"க்கு நிதியுதவி அளித்துள்ளது.
- ஜவ்வாது மலையில் ஜூலை 2024 இல் நடைபெற்ற"கோடைவிழா–2024"க்குதமிழ்நாடு சுற்றுலாத்துறை நிதியுதவி செய்துள்ளது.
- 12.07.2024முதல்14.07.2024வரைகொல்கத்தாவில் நடைபெற்ற "TTF–2024" இல் தமிழ்நாடு சுற்றுலாத்துறை பங்கேற்றுள்ளது.
- மத்தியசுற்றுலாஅமைச்சகம்ஸ்வதேஷ்தர்ஷன் 2.0திட்டத்தின்கீழ், தமிழ்நாட்டின்,மாமல்லபுரம் மற்றும் நீலகிரி சுற்றுலாத்தலங்கள் பல்வேறு சுற்றுலாமேம்பாட்டுப்பணிகள்மேற்கொள்ளதேர்வு செய்யப்பட்டுள்ளனமாநிலஅமலாக்கமுகமையாக (State Implementing Agency) தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக்கழகம் நியமிக்கப்பட்டுள்ளது.
- திட்டமேம்பாடுமற்றும்மேலாண்மைஆலோசகர் MoT ஆல் அடையாளம் காணப்பட்டு, தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக்கழகம் (TTDC) மற்றும் L&T இன்ஃப்ராஸ்ட்ரக்சர்பிரைவேட்லிமிடெட் (PDMC) உடன் இணைந்து ஒப்பந்தம் செய்யப்பட்டது.
- மாமல்லபுரத்திற்கு விரிவான திட்டஅறிக்கை தயார்செய்யப்பட்டுமத்தியஅரசின்ஒப்புதலுக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.
- சேலம்மாவட்டம்,ஏற்காடு நிலச்சீரமைப்பு,காட்சி முனை, உள்கட்டமைப்பு மற்றும் பிற சுற்றுலா வசதிகளுடன் மேம்படுத்த ரூ.9,70,86,000/– நிதிஒதுக்கீடுசெய்துஆணைவெளியிடப்பட்டுள்ளது.

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம்

- தமிழ்நாடுசுற்றுலாவளர்ச்சிக்கழகம்ஆன்லைன் பயண திரட்டிகள் (OTAs) மூலம் ரூ.4.13 கோடி வருவாயை மூன்றாண்டுகளில் ஈட்டியுள்ளது.
- பின்னூட்ட செயல்முறை மூலம் மூன்று ஆண்டுகளில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம்5,266வாடிக்கையாளர்களிடம்கருத்துக்கள் பெறப்பட்டு,நடவடிக்கையும்எடுக்கப்பட்டுள்ளது.
- தமிழ்நாடுசுற்றுலாவளர்ச்சிக்கழகம்முப்பரிமாண தொழில்நுட்பங்களைக் கொண்டு தமிழகத்தில் உள்ளயுனெஸ்கோஉலகபாரம்பரியதலங்களுக்கு மெய்நிகர் சுற்றுலாக்களை உருவாக்கி இணையதளம் மூலம் பயனாளிகளுக்கு பயன்படும்படி அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.
- தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் கடந்த 3ஆண்டுகளில்மொத்தவருமானமாகரூ.27,012 இலட்சமும் மற்றும் மொத்த நிகர இலாபமாக ரூ.3,305 இலட்சமும் ஈட்டிள்ளது.
- திருச்சியில் புதியதாக கட்டப்பட்ட ஓட்டல் தமிழ்நாடு, 15 அறைகள் மற்றும் பல்நோக்கு அரங்கம் கொண்ட கட்டடம் திறப்பு.
- சென்னையில் உள்ள ஓட்டல் தமிழ்நாடு, ரூ.90.10 இலட்சம் மதிப்பீட்டில் திறந்தவெளி திரையரங்கத்துடன்கூடியநவீனமயமாக்கப்பட்ட திறந்தவெளிஉணவகமாகபுனரமைக்கப்பட்டது.
- கோயம்புத்தூர், வாலாங்குளம் ஏரியில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் புதியதாக ஒர் படகு இல்லம் திறக்கப்பட்டுள்ளது.
- ஓட்டல் தமிழ்நாடு, ஊட்டியில் CCTV கேமரா பொருத்தப்பட்டு விளம்பர பலகைகள் காட்டேரி மற்றும் கல்லாறில் அமைக்கப்பட்டது.
- படகு இல்லம், முட்டுக்காடு மற்றும் முதலியார் குப்பத்திற்கு2வாட்டர்ஸ்கூட்டர்கள்வாங்கப்பட்டது.
- படகுஇல்லம்,கொடைக்கானல்மற்றும்ஊட்டியில் 2இருக்கைகள் கொண்டமிதிபடகுகள் (12 Nos) மற்றும் 4 இருக்கைகள் கொண்ட மிதிபடகுகள் (21 Nos) வாங்கப்பட்டது.

- நீலக்கொடி கடற்கரை கோவளத்தில் ரூ.25 இலட்சம் மதிப்பீட்டில் 20' x 25' அளவில் முன் கட்டமைக்கப்பட்ட வசதி மையம் அமைக்கப்பட்டது.
- வண்டலூர் உயிரியல் பூங்காவில் ரூ.25 இலட்சம் மதிப்பீட்டில் 20' x 25' அளவில் முன் கட்டமைக்கப்பட்ட வசதி மையம் அமைக்கப்பட்டது.
- முதலியார்குப்பத்தில் உள்ள படகு இல்லத்தில் உயர் தொழில்நுட்ப மிதக்கும் படகு குழாம் (தீவு ஓரம்) ரூ.10.50 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டது.
- தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் 108 திவ்ய தேச சுற்றுலாவிற்காக பிரத்தியேகமாக காபி டேபிள் புத்தகத்தினை தயாரித்துள்ளது.
- தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் அனைத்து சுற்றுலா பயணிகளுக்காக 52 வகையான தொகுப்பு சுற்றுலாக்களை இயக்கி வருகின்றது. மேலும், 11 வகையான புதிய தொகுப்பு சுற்றுலாக்களை கடந்த மூன்று ஆண்டு காலங்களில் துவங்கி இயக்கி வருகிறது.
- திருப்பதி சுற்றுலாவை சென்னை மட்டுமின்றி மதுரை, கோயம்புத்தூர், திருச்சி, சேலம், ஓசூர் மற்றும் பெங்களூர் ஆகிய இடங்களிலிருந்தும் இயக்கி வருகிறது.
- புதியதாக ஆடி மாதத்தில் ஒருநாள் அம்மன் சுற்றுலாவும், புரட்டாசி மாதத்தில் ஒருநாள் விஷ்ணு கோவில் சுற்றுலாவும் அறிமுகப்படுத்தப்பட்டது.
- தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம், M/s. Secret Temples, Rajasthan நிறுவனத்துடன் இணைந்து 4 நாட்கள் யுனெஸ்கோ ஹெரிட்டேஜ் சுற்றுலாவை செயல்படுத்தி வருகிறது.
- செஸ் ஒலிம்பியாட்–2022இல் கலந்து கொண்ட பிரதிநிதிகளுக்கு சென்னை மற்றும் மாமல்லபுரத்தின் தொன்மை மற்றும் புராதான சுற்றுலாத் தலங்களை அவர்கள் அறியும் வண்ணம் பிரத்தியேகமான சுற்றுலா இயக்கப்பட்டது.
- வலைதளங்களில் செல்வாக்கு பெற்ற 10 நபர்களை ஒருங்கிணைத்து அவர்களுக்காக "டிஸ்கவர் தமிழ்நாடு சுற்றுலா" – 3ஆவது முறையாக செயல்படுத்தப்பட்டது.
- தனியார் நிறுவனமான M/s. Fly Holidays, Coimbatore உடன் இணைந்து பொன்னியின் செல்வன் நாவலில் இடம்பெற்ற வரலாற்று நினைவிடங்களை உள்ளடக்கிய பொன்னியின் செல்வன் சுற்றுலாவை தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் செயல்படுத்தியுள்ளது.
- 2023–2024 ஆம் நிதி ஆண்டிற்கான (ஜனவரி வரை) வருவாய் ரூ.28.69 கோடியாக அதிகரித்துள்ளது.
- கள்ளர் சீரமைப்பு பள்ளி மாணவர்களுக்கு தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சி கழகத்தின் மூலம் மூன்று நாட்கள் சிறப்பு சுற்றுலா மற்றும் மாற்றுத்திறனாளி மாணவர்களுக்கு ஒரு நாள் மற்றும் மூன்று நாட்கள் சிறப்பு கல்வி சுற்றுலாக்கள் நடத்தப்பட்டு வருகின்றது.
- பெர்லின், ஜெர்மனியில் மார்ச் 7 முதல் 9 வரை நடைபெற்ற ITB–2023இல் பங்கேற்று தமிழ்நாடு சுற்றுலாவை பற்றி விளம்பரப்படுத்தப்பட்டது.
- தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம், மலேசியாவின், கோலாலம்பூரில் உள்ள மலேசியா சர்வதேச வர்த்தக மற்றும் கண்காட்சி மையத்தில் கடந்த மார்ச் மாதம் MATTA FAIR–2023 பங்கேற்று தமிழ்நாடு சுற்றுலாவை பற்றி விளம்பரப்படுத்தப்பட்டது.
- புதுதில்லியில் உள்ள பிரகத் மையத்தில் உள்ள சர்வதேசக் கண்காட்சி மாநாட்டு மையத்தில் PATTA Travel Mart 2023இல் பங்கேற்று தமிழ்நாடு சுற்றுலாவை பற்றி விளம்பரப்படுத்தப்பட்டது.
- தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம், ஜப்பானின் ஒசாகாவில் ஜடா டூரிசம் எக்ஸ்போவில் பங்கேற்று தமிழ்நாடு சுற்றுலாவை பற்றி விளம்பரப்படுத்தப்பட்டது.

போர்ச்சுகலின் லிஸ்பனில் மாட்ரிட் 2024

- FITUR–2024 மற்றும் பார்சிலோனாவில் நடைப்பெற்றசாலைநிகழ்ச்சிகள்ஜனவரி28&29,

2024 பங்கேற்று தமிழ்நாடு சுற்றுலாவை பற்றி விளம்பரப்படுத்தப்பட்டது.

- தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம், சென்னை கலைவாணர் அரங்கில் "பல்வேறு கழக நிறுவனங்களின் நாயகர்" என்ற தலைப்பில் நடைப்பெற்ற முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவில், அரங்கம் அமைக்கப்பட்டது.
- ரூ.2.92 கோடி மதிப்பீட்டில் 43 இருக்கைகள் கொண்ட 2 புதிய வால்வோ சொகுசுப் பேருந்துகள் வாங்கப்பட்டு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டது.
- தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தால் நடத்தப்படும் 26 ஓட்டல்கள் மற்றும் அனைத்துச் சுற்றுலாக்களை ஆன்லைனில் பதிவு செய்யும் சேவை மூலம் ரூ.80.56 கோடி வருவாயை கடந்த மூன்றாண்டுகளில் ஈட்டியுள்ளது.
- தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் ஊட்டி, பைக்காரா, பிச்சாவரம், ஏற்காடு, கொடைக்கானல்–I மற்றும்–II ஆகிய படகு இல்லங்களில்புதியபடகு இல்லமேலாண்மை மென்பொருளை அறிமுகப்படுத்தியுள்ளது.
- தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகமானது மேலும், M/s. Airtel மூலம் மிகைப்படியான இணையவழி தடம் (Internet leased line) 100 Mbps வேகத்தில் நிறுவி சுற்றுலாப் பயணிகளுக்கு ஓட்டல்கள் மற்றும் சுற்றுலாக்களுக்கு 24 மணி நேரமும் சிரமமின்றி முன்பதிவு செய்ய ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.
- சுற்றுலாப் பயணிகளுக்கு தமிழகத்தைப் பற்றிய பயணம் மற்றும் சுற்றுலாத் தொடர்பான தகவல்களை வழங்குவதற்காக பிரத்தியேகமான அடிப்படையில் சுற்றுலா Helpline சேவையை அறிமுகப்படுத்தியுள்ளது.
- www.ttdcfair.com என்ற இணையதளத்தை அறிமுகப்படுத்தி ஆன்லைன் மூலம் வர்த்தகக் கண்காட்சி மற்றும் மினி ரயில் டிக்கெட்டுகளை முன்பதிவு செய்வதற்காக நடைமுறை படுத்தப்பட்டுள்ளது.
- தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் OTAகள் மற்றும் google போன்ற அனைத்து கருத்துக்களையும் ஒருங்கிணைத்து மையப்படுத்தப்பட்ட கண்காணிப்பு மேலாண்மை மென்பொருள் அறிமுகப்படுத்தியுள்ளது.
- தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம், தீவுத்திடலில் நடைபெற்ற சுற்றுலா மற்றும் தொழில் பொருட்காட்சியின் மூலம் ரூ.13.61 கோடி வருவாய் ஈட்டியது.

❖ ❖ ❖

> அனைத்துத்துறையும் வளர வேண்டும், அனைத்துச் சமூகமும் மேம்பாடு அடைய வேண்டும், அனைத்துத் தொழில்களும் சிறக்க வேண்டும், அனைத்து மாவட்டங்களும் செழிக்க வேண்டும் என்பதுதான் எங்களது இலக்கு. இந்த இலக்கை அடைவதற்காக எங்களை நாங்களே ஒப்படைத்துக் கொண்டுள்ளோம்.
>
> **மு.க.ஸ்டாலின்**
> மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்

உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல், நுகர்வோர் பாதுகாப்பு, விலைக்கட்டுப்பாடு



திரு. அர.சக்கரபாணி அவர்கள்
மாண்புமிகு உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல்துறை அமைச்சர்

உணவு பொருள் வழங்கல் துறை

- அத்தியாவசியப் பொருட்கள் கடந்த ஒன்பது மாதங்களாக சராசரியாக ஒவ்வொரு மாதமும் 98.0 சதவிகிதம் முதல் 98.5 சதவிகிதம் பரிவர்த்தனைகள் கைவிரல் ரேகை அங்கீகார முறையில் நடைபெற்று வருகின்றன.
- கண்கருவிழி சரிபார்ப்பு முறை (IRIS Based Authentication) மூலம் அத்தியாவசியப் பொருட்களை வழங்க ஏதுவாக கண்கருவிழி சரிபார்ப்பு முறை தமிழ்நாட்டில் 2,700 நியாயவிலைக்கடைகளில் சோதனை அடிப்படையில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.
- கடந்த மூன்றாண்டுகளில் வட்ட அளவில் நடைபெற்ற மாதாந்திர பொது விநியோகத் திட்ட குறைதீர்க்கும் நாள் முகாம்களில் நகல் அட்டை, புதிய குடும்ப அட்டை, முகவரி மாற்றம், பெயர் சேர்த்தல், உள்ளிட்ட 1,83,610 கோரிக்கைகள் பெறப்பட்டு 1,83,610 இனங்களும் தீர்வு செய்யப்பட்டுள்ளன. இது 100 சதவிகிதம் ஆகும்.
- கொரோனா பெருந்தொற்று காலத்தில் பொது மக்களின் வாழ்வாதாரத்தை பாதுகாக்க நிவாரணத் தொகை முதல் தவணையாக தலா ரூ.2,000/- வீதம் 2,08,42,716 அரிசி பெறும் குடும்ப அட்டைதாரர்களுக்கும் மற்றும் இரண்டாவது தவணையாக தலா ரூ.2,000 வீதம் 2,08,36,259 அரிசி பெறும் குடும்ப அட்டைதாரர்களுக்கு வழங்கப்பட்டது மற்றும்

14 மளிகைப் பொருட்கள் அடங்கிய தொகுப்பு 2,07,70,726 (99.12 சதவிகிதம்) குடும்ப அட்டைதாரர்களுக்கு வழங்கப்பட்டது.

- கைவிரல் ரேகை பதிவு முறை ஏற்படுத்தப்பட்டு, ஆதார் எண் இணைக்கப்பட்டு வெற்றிகரமாக 97 சதவிகிதம் முதல் 98 சதவிகிதம்வரை நிறைவேற்றப்பட்டுள்ளது.
- கடந்த மூன்றாண்டுகளில் 633 முழு நேர நியாய விலைக்கடைகள் மற்றும் 1,033 பகுதி நேர நியாய விலைக் கடைகள் உட்பட, 1,666 புதிய நியாய விலைக் கடைகள் திறக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன.
- 8,139 நியாயவிலைக்கடைகளில் 31.12.2008வரை 5,917 கடைகள் இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டு மேம்படுத்தப்பட்டுள்ளது. மீதமுள்ள 2,222 நியாயவிலைக்கடைகளைமேம்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. 9,046 நியாயவிலைக் கடைகள் தரமேலாண்மை பராமரிப்பிற்கான ISO:9001 தரச்சான்றும், 2,059 நியாயவிலைக் கடைகள் பாதுகாப்பான உணவு சங்கிலி மற்றும் சேமிப்பு முறைக்காக ISO:28000 தரச்சான்றிதழையும் பெற்றுள்ளன.
- வடகிழக்கு பருவ மழையினால் பாதிப்படையும் குடும்பங்களுக்கு மண்ணெண்ணெய் ஒதுக்கீடு 2021 முதல் 2023வரை 648 கி.லி. வழங்கப்பட்டுள்ளது.
- வடகிழக்கு பருவ மழைக் காலத்தில் சில தேடுதல் மற்றும் மீட்பு உபகரணங்களை இயக்குவதற்கு மண்ணெண்ணெய் அவசியத் தேவைஎன்பதால்,அக்டோபர் 2021 முதல் ஜனவரி 2022வரையிலானமாதத்திற்குமாதமொன்றிற்கு 1,820 லிட்டர் வீதம் மண்ணெண்ணெயும், தென்மேற்கு பருவமழைக் காலத்திற்கும், வடகிழக்கு பருவமழை காலத்திற்கும் ஜூலை 2022 முதல் ஜனவரி 2023 வரையிலான மாதத்திற்கு 3,090 லி. மண்ணெண்ணெயும் மற்றும் ஜூலை 2023 முதல் செப்டம்பர் 2023 வரையிலான தென்மேற்கு பருவமழைக் காலத்திற்கு மாதமொன்றிற்கு முறையே 3,150 லிட்டர் வீதம் மண்ணெண்ணெய் சிறப்பு ஒதுக்கீடாக வழங்கப்பட்டுள்ளது.
- மாநிலம் முழுவதும் நுகர்வோரிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தும் பொருட்டு நுகர்வோர் பாதுகாப்பு மற்றும் விழிப்புணர்வுத் தகவல்கள் அடங்கியடிஜிட்டல்பலகையினை ரூ.1,00,00,000 (ஒரு கோடி) மதிப்பீட்டில், அனைத்து மாவட்ட ஆட்சித்தலைவர்களின் அலுவலக வளாகத்தில் பொருத்தப்பட்டுள்ளது.
- 2023ஆம் ஆண்டினை சர்வதேச சிறுதானிய ஆண்டாக ஐ.நா. சபையினால் அறிவிக்கப்பட்டது, மாநில மற்றும் மாவட்ட அளவில் சிறுதானிய உணவு திருவிழா நிகழ்ச்சியினை சிறப்பாக கொண்டாடிட ஏதுவாக ரூ.40,00,000 நிதி உப ஒதுக்கீடு செய்யப்பட்டது.
- புதிய கொளத்தூர் மண்டலம் பெரம்பூர் மற்றும் வில்லிவாக்கம் மண்டலங்களிலிருந்து சில பகுதிகளை பிரித்து, ஒருங்கிணைத்து 65 நியாய விலைக் கடைகளுடன் ரூ.ஒரு கோடி மதிப்பீட்டில் தோற்றுவிக்கப்பட்டது.
- அரவை முகவர்களுக்கு ஒரு குவிண்டால் புழுங்கல் நெல் அரவை செய்ய ஒன்றிய அரசால் வழங்கப்பட்டு வரும் அரவை கூலி ரூ.20 மற்றும் பச்சரிசி குவிண்டால் ஒன்றுக்கு வழங்கப்பட்டு வரும் அரவை கூலி ரூ.10/–உடன் மாநில அரசு 26.08.2021 முதல்ஊக்கத்தொகையாக முறையே புழுங்கல் குவிண்டால் ஒன்றுக்கு ரூ.20மும் பச்சை குவிண்டால் ஒன்றுக்கு ரூ.15மும் ஊக்கத்தொகையாக வழங்கி வருகிறது.
- நுகர்பொருள் வாணிபக் கழகத் தலைமை அலுவலகத்தில் "உழவர் உதவி மையம்" உழவர் பெருமக்கள் 1800 – 599 – 3540 (6 இணைப்புகள்) என்ற கட்டணமில்லா தொலைபேசிமூலம் இதுவரை 12,123 அழைப்புகள் பெறப்பட்டுள்ளது.



- நேரடி ராகி கொள்முதல் நிலையங்கள் திறந்து 17,000 மெ.டன். ராகியினை இந்திய அரசால் நிர்ணயிக்கப்பட்ட குறைந்தபட்ச ஆதரவு விலையான ஒரு மெ.டன்னிற்கு ரூ.38,460/– வீதம் அரசால் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதன்படி, நேரடி ராகி கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டு, 31.07.2024 வரை விவசாயிகளிடமிருந்து 1861.000 மெ.டன் ராகி கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. தமிழ்நாடு அரசின் கோரிக்கைக்கிணங்க கொள்முதல் மாதங்களை 31.08.2024வரை நீட்டித்து ஒன்றிய அரசால் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

- பொது விநியோக திட்டத்தின் கீழ் குடும்ப அட்டைதாரர்களுக்கு மாதம் ஒன்றுக்கு தோராயமாக 35,500 மெ.டன் சர்க்கரை வழங்கப்பட்டு வந்தது. ஒரு மாதத்திற்கு 10,820 மெடன்னிற்குமட்டும்கிலோஒன்றுக்குரூ18.50/– வீதம் மானியமாக 31.03.2017 வரை ஒன்றிய அரசால் வழங்கப்பட்டு வந்தது. கூடுதல் செலவினத்தை கட்டுப்படுத்த AAY குடும்ப அட்டை அல்லாதவர்களுக்கு வழங்கப்படும் சர்க்கரையின் விற்பனை விலை கிலோ ஒன்றுக்கு ரூ.25/– என 01.11.2017 முதல் மாற்றியமைக்கப்பட்டுள்ளது.

- அனைத்து அரிசி பெறும் குடும்ப அட்டைதாரர்களுக்கும் அவர்களது விருப்பத்தின்பேரில்அரிசிக்குபதிலாகோதுமை விலையில்லாமல் கடந்த மூன்றாண்டுகளில் 7,23,482 மெ.டன் வழங்கப்பட்டுள்ளது.

- தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம், மளிகை, குளிர்பானங்கள், அழகுசாதனப் பொருட்கள் மற்றும் அதிக அளவில் விற்பனையாகும் நுகர்வோர் பொருட்களை நியாயமான விலையில் தற்பொழுது 80 பல்பொருள் அங்காடிகள் மூலம் விற்பனை செய்துவருகிறது.இப்பல்பொருள்அங்காடிகளில் கடந்த மூன்றாண்டுகளில் ரூ.92,49,17,555/– மதிப்பிலான பொருட்கள் விற்பனை செய்யப்பட்டுள்ளது.

- தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் நெய்வேலி, திருப்பத்தூர் மற்றும் பட்டுக்கோட்டையில் பெட்ரோல் / டீசல் விற்பனை நிலையங்களை நடத்தி வருகிறது.

கடந்த மூன்றாண்டுகளில் நிகர இலாபம் ரூ.1.48 கோடி ஆகும்.

❖ தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் திருச்சி, திருவண்ணாமலை, இராமநாதபுரம் மற்றும் மண்டபம் ஆகிய இடங்களில் சமையல் எரிவாயு உருளை விநியோக முகவராக செயல்படுகிறது. கடந்த மூன்றாண்டுகளில் நிகர இலாபம் ரூ.4.44 கோடி ஆகும்.

❖ கடந்த மூன்றாண்டுகளில் 16,644 மெ.டன் அரிசியும், 1877 மெ.டன் கோதுமையும் மானிய விலையில் ஏழை மக்கள் பயன்பெறும் வகையில் அம்மா உணவகங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

❖ 2022–2023 மற்றும் 2023–2024 ஆம் ஆண்டுகளில் 21,111.515 மெ.டன். பச்சரிசி கிலோ ஒன்றுக்கு ரூ.1/– வீதம் ரமலான் நோன்புக்காக இஸ்லாமிய பெருமக்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

❖ கொரோனா நோய் தொற்றின் காரணமாக ரூ.8,392.76 கோடிச் செலவில், 2,09,81,900 எண்ணிக்கையிலான அனைத்து அரிசி பெறும் குடும்ப அட்டைதாரர்களுக்கு நிவாரணத் தொகையாக ரூ.4,000 வழங்கப்பட்டது.

❖ தமிழகத்தில் உள்ள அனைத்து அரிசி பெறும் குடும்ப அட்டைதாரர்கள் மற்றும் இலங்கை தமிழர் மறுவாழ்வு முகாம்களில் வசிக்கும் குடும்பங்களுக்கும் 21 மளிகைப் பொருட்கள் அடங்கிய துணிப்பையுடன் 2022 ஆம் ஆண்டிற்கான பொங்கல் பரிசுத் தொகுப்பு 2,15,67,122 குடும்பங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

❖ ரூ.2,429.05 கோடிச் செலவில் 2,19,33,342 அரிசி பெறும் குடும்ப அட்டைதாரர்கள் மற்றும் இலங்கை தமிழர் மறுவாழ்வு முகாம்களில் வசிக்கும் குடும்பங்களுக்கும் தலா ஒரு கிலோ பச்சரிசி, ஒரு கிலோ சர்க்கரையுடன் ரொக்கப்பணம் ரூ.1,000/– மற்றும் முழு நீளக் கரும்பும் பொங்கல் தொகுப்பாக 2023 ஆம் ஆண்டில் வழங்கப்பட்டது.

❖ 2024 ஆம் ஆண்டுக்கு ரூ.2,436.19 கோடி அரசால் நிதியொதுக்கீடு செய்யப்பட்டு 2,19,71,113 அரிசி பெறும் குடும்ப அட்டைதாரர்கள் மற்றும் இலங்கை தமிழர் மறுவாழ்வு முகாம்களில் வசிக்கும் குடும்பங்களுக்கும் தலா ஒரு கிலோ பச்சரிசி, ஒரு கிலோ சர்க்கரையுடன் ரொக்கப்பணம்



ரூ.1,000/– மற்றும் முழு நீளக் கரும்புடன் பொங்கல் தொகுப்பு வழங்கப்பட்டது.

❖ 2024 ஆம் ஆண்டுக்கு ரூ.134 கோடிச் செலவில் 40,000 மெடன் அரிசி கிலோ ஒன்றுக்கு ரூ.33.50 என்ற விலையில் தமிழகத்திலுள்ள அரவை ஆலைகளிலிருந்து நேரடியாக கொள்முதல் செய்து சென்னை மற்றும் தூத்துக்குடி துறைமுகங்கள் வாயிலாக இலங்கைக்கு மூன்று கட்டங்களாக 40,000 மெடன் அனுப்பப்பட்டுள்ளது.

❖ 2023 ஆம் ஆண்டில் அமுதம் மக்கள் அங்காடிகளில் 33,148 கிலோ தக்காளி ரூ.19,88,880 மதிப்பிலும், 9,396 கிலோ வெங்காயம் ரூ.2,71,776 மதிப்பிலும் பொதுமக்களுக்கு மலிவு விலையில் விற்பனை செய்யப்பட்டுள்ளது.

❖ மிக்ஜாம் புயலினால் ஏற்பட்ட கனமழையினால், சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம் மற்றும் செங்கல்பட்டு ஆகிய நான்கு மாவட்டங்களில் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு நிவாரணமாக தலா ரூ.6,000 வீதம் 24,41,069 குடும்பங்களுக்கு வழங்கப்பட்டு 98.05 சதவிகித பயனாளிகள் பயனடைந்துள்ளனர்.

❖ திருநெல்வேலி, தூத்துக்குடி, கன்னியாகுமரி மற்றும் தென்காசி ஆகிய மாவட்டங்களில் பெய்த அதிகன மழையினால், திருநெல்வேலி, தூத்துக்குடி மாவட்டங்களில், மிகக் கடுமையாக வெள்ளப் பாதிப்பு ஏற்பட்டுள்ள வட்டங்களில்



இரண்டு நாட்களுக்கு மேல் வெள்ளம் சூழ்ந்து துணிமணிகள் / பாத்திரங்கள், வீட்டு உபயோகப் பொருட்களை இழந்த 6,63,760 குடும்பங்களுக்கு ரூ.6,000/– மற்றும் 5 கிலோ அரிசி வீதம் வழங்கப்பட்டது. மேலும், இதர வட்டங்களில், வாழ்வாதாரம் பாதிக்கப்பட்ட மொத்தம் 14,31,164 குடும்பங்களுக்குத் தலா ரூ.1000/– வீதம் 92 சதவிகித பயனாளிகளுக்கு வழங்கப்பட்டது.

- சராசரியாக மாதம் தோறும் துவரம் பருப்பு / கனடா மஞ்சள் பருப்பு 20,000 (இருபதாயிரம்) மெட்ன்னும்,செறிவூட்டப்பட்ட பாமாயில்சமையல் எண்ணெய் 2,00,00,000 (இரண்டு கோடி) – 1 லிட்டர் பாக்கெட்டுகள் கொள்முதல் செய்யப்பட்டு ஒவ்வொரு குடும்ப அட்டைதாரர்களுக்கும் தலா ஒரு கிலோ துவரம் பருப்பு / கனடா மஞ்சள் பருப்பு ரூ.30/– என்ற விலையிலும் மற்றும் ஒரு லிட்டர் செறிவூட்டப்பட்ட ஆர்பிடி பாமாயில் எண்ணெய் பாக்கெட் ரூ.25/–என்றவிலையிலும்வழங்கப்பட்டு வருகிறது.இதனால்ஒருமாதத்திற்குரூ.325கோடி வீதம் வருடத்திற்கு ரூ.3,900 கோடி அரசிற்கு கூடுதலாக செலவீனம் ஏற்படுகிறது.
- தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக்கழகத்திற்கு சொந்தமான 21 நவீன அரிசி ஆலைகளின் மாதாந்திர அரவைத் திறன் 52,500 மெ.டன் ஆகும். 15 நவீன அரிசி ஆலைகளில் புழுங்கல் அரிசியும், 6 நவீன அரிசி ஆலைகளில் பச்சரிசியும் அரவை செய்யப்படுகிறது. அரிசியின் தரத்தை மேம்படுத்திட 21 ஆலைகளையும் மூன்று கட்டங்களாக நவீனமயமாக்கப்பட்டு தற்பொழுது மூன்றாம்கட்டத்தில்5நவீனஅரிசிஆலைகளில் நவீனமயமாக்கல் பணிகள் முடிவுற்று உற்பத்தி நடைபெற்று வருகிறது.
- பொது விநியோகத்திட்டத்தின் கீழ் வழங்கப்படும் அரிசியின் தரம் உயர்த்தும் உயரிய நோக்கத்தில் கருப்பு அரிசி பிரிக்கும் இயந்திரம் (கலர் சார்ட்டெர் மிஷின்) 21 நவீன அரிசி ஆலைகளுக்கு வழங்கப்பட்டு,அதில்19நவீனஅரிசிஆலைகளில் நல்ல முறையில் இயங்கிக்கொண்டுள்ளது.
- கடந்த மூன்றாண்டுகளில் 1,801 எண்ணம் ஈரப்பதமானிகளும், 50 எண்ணம் பிரிண்டருடன் கூடியஈரப்பதமானிகளும்மற்றும்1,815எண்ணம் நெல்தூற்றும் இயந்திரங்களும் கொள்முதல் செய்யப்பட்டு, நேரடி நெல் கொள்முதல் நிலையங்களுக்கு வழங்கப்பட்டு தரமான நெல் விவசாயிகளிடமிருந்து கொள்முதல் செய்யப்பட்டு வருகிறது. தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்கு சொந்தமான 21 நவீன அரிசி ஆலைகள் மற்றும் கழகத்தில் அரவை முகவர்களாக செயல்பட்டு வரும் 602 தனியார் அரவை ஆலைகளிலும் கருப்பு மற்றும் பழுப்பு அரிசி நீக்கும் இயந்திரம் பொருத்தப்பட்டு உற்பத்தி செய்யப்படும் அரிசியில் கல், குருணை

மற்றும் பழுப்புநிற அரிசி நீக்கி தரமான அரிசி பெறப்பட்டு பொது விநியோகத் திட்டத்திற்கு வழங்கப்பட்டு வருகிறது.

❖ தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தில் பணிபுரிந்து பணியின்போது இயற்கை எய்திய பணியாளர்களின் வாரிசுதாரர்களுக்கு கருணை அடிப்படையில் கடந்த மூன்றாண்டுகளில் 233 நபர்களுக்கு பணி வழங்கப்பட்டுள்ளது.

❖ தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தில் 2012ஆம் வருடம் முதல் பருவகால பணியாளர்களாக பணிபுரிந்து வந்தவர்களுக்கு 12(3) ஒப்பந்தத்தின் அடிப்படையில் 591 பணியாளர்கள் நிரந்தரப் பணியாளர்களாக பணி நியமனம் செய்யப்பட்டுள்ளனர்

❖ வட்ட அளவில் உணவுப்பாதுகாப்பினை உறுதிசெய்யும் வகையில் நிதியாண்டு 2021–2022 முதல் 2023–2024வரை இவ்வரசு 19 எண்ணிக்கையிலான 45,500 மெ.டன் கொள்ளளவு கொண்ட புதிய வட்ட செயல்முறை கிடங்குகளை ரூ.86.00 கோடி மதிப்பீட்டில் கட்ட ஆணையிடப்பட்டு இதுவரை 4 எண்ணிக்கையிலான 9,000 மெ.டன் கொள்ளளவு கொண்ட ரூ.17.60 கோடி மதிப்பீட்டிலான கிடங்குகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. மேலும், 15 எண்ணிக்கையிலான 36,500 மெ.டன் கொள்ளளவு கொண்ட ரூ.68.40 கோடி மதிப்பீட்டிலான கிடங்கு கட்டுமானப்பணிகள் பல்வேறு நிலைகளில் நடைபெற்று வருகின்றன.

❖ மேலும், நடப்பு நிதியாண்டு 2024–2025இல் 3 மாவட்டங்களில் மொத்தம் 13,000 மெ.டன் கொள்ளளவு கொண்ட ரூ.29.50 கோடி மதிப்பீட்டிலான புதிய வட்ட செயல்முறை கிடங்குகள் கட்ட நடவடிக்கையில் உள்ளது.

❖ விவசாயிகளின் நலன் கருதி தேவையின் அடிப்படையில் நேரடி கொள்முதல் நிலையங்களை அரசு படிப்படியாக கட்டி வருகிறது. 2021–2022ஆம் நிதியாண்டில் கொள்முதல் அதிகமாக உள்ள இடங்களில் தலா 250 மெ.டன் கொள்ளளவு கொண்ட 50 நேரடி கொள்முதல் நிலையங்கள் ரூ.50.00 கோடி மதிப்பீட்டில் நபார்டு நிதியுதவியுடன் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு இதுவரை 48 நேரடி கொள்முதல் நிலையங்கள் கட்டி



முடிக்கப்பட்டுள்ளன. மேலும், 28 இடங்களில் பல்வேறு நிலைகளில் பணிகள் நடைபெற்று வருகின்றன.

❖ மேலும், 50 நேரடி கொள்முதல் நிலையங்கள் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித்திட்டத்தின்கீழ் ரூ.17.00 கோடி மதிப்பீட்டில் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு இதுவரை 33 நேரடி கொள்முதல் நிலையங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. 17 இடங்களில் பல்வேறு நிலைகளில் பணிகள் நடைபெற்று வருகின்றன.

❖ நிதியாண்டு 2023–2024இல் 100 நேரடி கொள்முதல் நிலையங்கள் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித்திட்டத்தின்கீழ் ரூ.33.00 கோடி மதிப்பீட்டில் கட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு இது வரை 5 நேரடி கொள்முதல் நிலையங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. 50 இடங்களில் பல்வேறு நிலைகளில் பணிகள் நடைபெற்று வருகின்றன. ஏனைய இடங்களில் பணிகள் துவக்க ஆயத்தப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

❖ மேலும், விவசாயிகளின் நலனுக்காக நடப்பு நிதியாண்டு 2024–2025இல் 50 நேரடி கொள்முதல் நிலையங்கள் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித்திட்டத்தின்கீழ் ரூ.15.00 கோடி மதிப்பீட்டில் கட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.



- விவசாயிகளின் கடின உழைப்பில் விளைவிக்கப்பட்டு கொள்முதல் செய்யப்படும் ஒரு நெல் மணி கூட வீணாகக்கூடாது என்ற மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க முதற்கட்டமாக 2022–2023 ஆம் நிதியாண்டில் 2.86 இலட்சம் மெ.டன் கொள்ளளவு கொண்ட ரூ.238.08 கோடி மதிப்பீட்டிலான 213 எண்ணிக்கையிலான மேற்கூரை அமைப்புடன் கூடிய நவீன நெல் சேமிப்புத் தளங்கள் நிறுவப்பட்டுள்ளது. மேலும், இரண்டாம் கட்டமாக 2023 –2024ஆம் நிதியாண்டில் 1,17,000 மெ.டன் கொள்ளளவு கொண்ட ரூ.95.00 கோடி மதிப்பீட்டிலான பணிகள் 40 எண்ணிக்கையிலான மேற்கூரை அமைப்புடன் கூடிய நவீன நெல் சேமிப்புத் தளங்கள் அமைக்கும் பணிகள் பல்வேறு நிலைகளில் நடைபெற்று வருகின்றன.
- மேலும், மூன்றாம் கட்டமாக ரூ.25.70 கோடி மதிப்பீட்டிலான 18,000 மெ.டன் கொள்ளளவு கொண்ட 6 எண்ணிக்கையிலான மேற்கூரை அமைப்புடன் கூடிய நவீன நெல் சேமிப்புத் தளங்கள் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.
- பொதுமக்களின் நலன் கருதி, 2022–2023ஆம் நிதியாண்டில் சென்னையில் கோபாலபுரம் மற்றும் அண்ணாநகரில் செயல்பட்டு வரும் அமுதம் பல்பொருள்அங்காடிகளை நவீனப்படுத்த அறிவிக்கப்பட்டது. அதனை தொடர்ந்து, கோபாலபுரம் அமுதம் பல்பொருள் அங்காடி நவீனப்படுத்தப்பட்டு 08.07.2023 அன்று மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. அண்ணாநகர் அமுதம் பல்பொருள் அங்காடி நவீனப்படுத்தப்பட்டு தற்பொழுது முடிக்கப்பட்டுள்ளது.
- மொத்த கிடங்கின் இடவசதி உபயோகம் 07.05.2021 அன்று 6.08 இலட்சம் மெட்ரிக் டன்னாக (78 விழுக்காடு) இருந்தது. இன்றைய தேதியில் இடவசதி உபயோகம் 7.52 இலட்சம் மெட்ரிக் டன்னாக (99 விழுக்காடு) உயர்ந்துள்ளது.
- திருவாரூர் சேமிப்பு கிடங்கு வளாகத்தில் அலுவலகக் கட்டடம் ரூ.77 இலட்சம் மதிப்பீட்டில் கட்டி முடிக்கப்பட்டது.
- கிடங்கு மேம்பாட்டு ஒழுங்குமுறை ஆணையம், புது டெல்லி தேசிய அளவில் அதிக எண்ணிக்கையிலான சேமிப்பு கிடங்குகளை பதிவு செய்ததற்காக தமிழ்நாடு சேமிப்பு கிடங்கு நிறுவனத்திற்கு முதல் பரிசை வழங்கியது.
- கணினிமயமாக்கல் மூலம் கணக்கியல் உள்ளீடுகள் மற்றும் மின்–அலுவலகம் நடைமுறையை தலைமை அலுவலகம், மண்டல அலுவலகங்கள் மற்றும்

அனைத்து சேமிப்பு கிடங்குகள் ஆகியவற்றில் செயல்படுத்தும் பணிகள் நடைமுறைபடுத்தப்பட்டுள்ளது.

- 30 முதல் 50 மெ.டன் எடையளவுடைய 11 மின்னணு எடைமேடைகள் 60 மெ.டன் எடைமேடைகளாக தரம் உயர்த்த பணி விரைவில் தொடங்கப்படவுள்ளது.
- திருமங்கலம், இராணிப்பேட்டை மற்றும் புதுக்கோட்டை ஆகிய இடங்களில் 3,400 மெ.டன் கொள்ளளவு கொண்ட கூடுதல் கிடங்குகள் ஒவ்வொன்றும் முறையே ரூ.2.2 கோடி, ரூ.2.2 கோடி மற்றும் ரூ.2.8 கோடிச் செலவில் கட்டப்பட்டு கடந்த 08.09.2023 முதல் பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.
- அரியலூரில் புதியதாக கிடங்கு கட்டும் பணி மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளது. திருப்பத்தூரில் புதியதாக 3,400 மெ.டன் கொள்ளளவு கொண்ட புதிய கிடங்கு கட்டும் பணி விரைவில் தொடக்கம்.
- அனைத்து கிடங்குகளிலும் அத்தியாவசியமாக மேற்கொள்ளப்பட வேண்டிய பழுது பார்க்கும் மற்றும் பராமரிப்பு பணிகளுக்காக ரூ.10 கோடி ஒதுக்கப்பட்டு முன்னுரிமை அடிப்படையில் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.
- கடந்த மூன்றாண்டுகளில் குடிமைப்பொருள் வழங்கல் குற்றப்புலனாய்வுத் துறையில் மொத்தம் 28,783 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு 1,51,357 குவிண்டால் பொது விநியோகத் திட்ட அரிசி மற்றும் 46,100 லிட்டர் பொது விநியோகத் திட்ட மண்ணெண்ணெய் கைப்பற்றுகை செய்யப்பட்டுள்ளது.
- மேலும், வியாபாரத்திற்காக பயன்படுத்தப்பட்ட 5,299 வீட்டு உபயோக சமையல் எரிவாயு உருளைகள் கைப்பற்றப்பட்ட பொருட்களின் மொத்த மதிப்பு ரூ.24,67,06,913/- ஆகும். 29,469 நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.
- மேலும், பொது விநியோகத்திட்ட பொருட்கள் கடத்தலுக்கு பயன்படுத்தப்பட்ட 5,782 வாகனங்கள் பறிமுதல் செய்யப்பட்டு, 6,241 வாகனங்கள் விடுவிக்கப்பட்டு, கள்ளச்சந்தை தடுப்பு மற்றும் இன்றியமையாப் பண்டங்கள் வழங்கல் பராமரிப்புச் சட்டத்தின்கீழ் 238 நபர்கள் தடுப்புக் காவலில் கைது செய்யப்பட்டுள்ளனர்.



- கடந்த மூன்றாண்டுகளில் கலப்பட டீசல் விற்பனையை ஒழிக்க, மாநிலம் முழுவதும் தீவிர சோதனை நடத்தப்பட்டு, 109 வழக்குகள் பதிவுசெய்யப்பட்டு, அதில் 15,39,082 லிட்டர் கலப்பட டீசல் மற்றும் 110 வாகனங்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.
- குடிமைப் பொருள் வழங்கல் குற்றப்புலனாய்வுத் துறையில் புதியதாக உருவாக்கப்பட்ட 2 மண்டலங்கள், 8 சரகங்கள் மற்றும் 6 அலகுகள் செயல்படத் தொடங்கியுள்ளன. திருவள்ளூர், பொள்ளாச்சி மற்றும் உத்தமபாளையம் ஆகிய பகுதிகளில் புதியதாக 3 சிறப்பு சுற்றுக் காவல் படைகள் உருவாக்கப்பட்டு செயல்படத் தொடங்கியுள்ளது.
- 32 Body Worn Cameras M/s ELCOT பயிற்சி நிறுவனத்தின் மூலம் வாங்க அரசு அனுமதி அளித்துள்ளது. தற்போது அவற்றை வாங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.
- குடிமைப் பொருள் வழங்கல் குற்றப்புலனாய்வுத் துறையில் வெளி முகமை மூலம் பணியமர்த்தப்படும் துப்புரவுப் பணியாளர்களுக்கு மாத ஊதிய நிர்ணயித்தினை ரூ.6,000லிருந்து ரூ.15,000/- ஆக உயர்த்தி வழங்கப்பட்டுள்ளது.

❖ ❖ ❖

கைத்தறி மற்றும் துணிநூல் துறை, பூதானம் மற்றும் கிராம தானம்



திரு. **ஆர்.காந்தி** அவர்கள்

மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல்துறை அமைச்சர்

கைத்தறி மற்றும் துணிநூல்

- ஈரோடு மாவட்டம், காளிக்காவலசு தொழிலியல் நெசவாளர் கூட்டுறவு சங்கத்திற்கு ரூ.3 கோடி மதிப்பில் புதிய நெசவுக் கூடம், ஈரோடு மாவட்டம், சென்னிமலை தொழிலியல் நெசவாளர் கூட்டுறவு சங்கத்திற்கு ரூ.1.20 கோடி மதிப்பில் சங்க காட்சியறையுடன் கூடிய புதிய கிட்டங்கி மற்றும் காஞ்சிபுரம் காமாட்சியம்மன் பட்டு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கத்திற்கு ரூ.2.50 கோடி மதிப்பீட்டில் புதிய ஒருங்கிணைந்த விற்பனை வளாகம்.
- தஞ்சாவூர் மாவட்டம், திருவிடைமருதூர் பகுதியில் ரூ.58.61 இலட்சம் மதிப்பில் பொது வசதி மையம்.
- கரூர் மாவட்டத்தில் ரூ.74.11 இலட்சம் மதிப்பில் கழிவுநீர் சுத்திகரிப்பு வசதியுடன் கூடிய சாயச்சாலை.
- விருதுநகர் மாவட்டம், அருப்புக்கோட்டை மற்றும் இராமச்சந்திராபுரம் பகுதியில் முறையே ரூ.71.64 இலட்சம் மற்றும் ரூ.71.95 இலட்சம் மதிப்பில் கழிவுநீர் சுத்திகரிப்பு வசதியுடன் கூடிய சாயச்சாலைகள்.
- மதுரை மாவட்டம், ப்பி. தொட்டியப்பட்டி பகுதியில் ரூ.72.06 இலட்சம், சிவகங்கை மாவட்டம், காரைக்குடி பகுதியில் ரூ.84.37 இலட்சம், தென்காசி மாவட்டம், சங்கரன்கோவில் பகுதியில் ரூ.72.11 இலட்சம், மதிப்பீட்டில் பூஜ்ய நிலை சாயக் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்துடன் கூடிய சாயச்சாலைகள்.

- கரூர் சாயச்சாலையில், ரூ.20.40 இலட்சம் மதிப்பில் சீஸ் வடிவ நூல் சாயமிடும் இயந்திரம் நிறுவப்பட்டு, வணிக ரீதியான ஏற்றுமதி இரகங்களுக்கு சாயமிடும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.
- காஞ்சிபுரம், தமிழ்நாடு சரிகை ஆலையின் உற்பத்தித் திறனை அதிகரிக்கவும், உட்கட்டமைப்புகளை வலுப்படுத்திடவும் ரூ.1.67 கோடி மதிப்பீட்டில் தமிழ்நாடு சரிகை ஆலை புனரமைப்பு.
- பட்டுச்சேலைகளுக்குபுகழ்பெற்றுவிளங்கும் ஆரணிபகுதியில்டாக்டர்கலைஞர்கருணாநிதி நூற்றாண்டு நினைவு கைத்தறிபட்டுப்பூங்கா அமைக்க 20.53 ஏக்கர் நிலம் ரூ.2.70 கோடி மதிப்பிற்கு எஸ்.பி.வியால் கொள்முதல் செய்யப்பட்டுள்ள நிதி தேவைக்கான திட்ட அறிக்கை பெறப்பட்டு முதற்கட்டமாக நெசவுத்தறிக்கூடம்அமைப்பதற்கானவிரிவான திட்ட அறிக்கை ரூ.44.69 கோடி மதிப்பிற்கு தயாரிக்கப்பட்டு அரசின் ஒப்புதலுக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.
- கைத்தறித் தொழிலை நிலைநிறுத்தவும் இளைய தலைமுறையினை கைத்தறி தொழிலில் ஈடுபடுத்தி அவர்களை தொழில்முனைவோர்களாக மாற்றிடவும் அனைத்து வசதிகளையும் உள்ளடக்கிய 10 சிறிய அளவிலான கைத்தறி பூங்காக்கள் சிறுமுகை (கோவை), சென்னிமலை (ஈரோடு), அருப்புக்கோட்டை (விருதுநகர்), ஜெயங்கொண்டம்(பெரம்பலூர்),சின்னாளப்பட்டி மற்றும்நரிக்கல்பட்டி(திண்டுக்கல்),ஓரிக்கை (காஞ்சிபுரம்), எமனேஸ்வரம் (பரமக்குடி), அம்மையார்குப்பம்(திருவள்ளூர்),சேலம்மற்றும் குடியாத்தம், (வேலூர்) ஆகிய பகுதிகளில் அமைக்கப்படவுள்ளது.
- தமிழ்நாட்டின் பாரம்பரியம் மற்றும் கலாச்சாரத்தைப் பாதுகாத்து உலகளாவிய அளவில் முன்னிலைப்படுத்தி உலக வரைபடத்தில் இடம்பெறும் விதமாகவும், தேசிய ஒருமைப்பாட்டை ஊக்குவித்தல் மற்றும் "ஒரு மாவட்டம் ஒரு பொருள்" என்ற அடிப்படையில் "ஊரக கலைஞர்கள் தங்கள் பொருட்களை சந்தைப்படுத்தவும், வேலைவாய்ப்பை உருவாக்கும் விதமாகவும் "ஒருங்கிணைந்தவளாகம்",சென்னைஎழும்பூர் கோ–ஆப்டெக்ஸ்விற்பனையகம்அமைந்துள்ள தில்லையாடி வள்ளியம்மை வளாகத்தில் உள்ள 5.84 ஏக்கர் நிலத்தின் ஒரு பகுதியில் 4.5 இலட்சம் சதுரஅடி பரப்பளவில் பல் அடுக்குமாடிக்கட்டடம்ரூ.227கோடிமதிப்பீட்டில் ஒருகலாச்சாரதிறன்மையமாகஅமைக்கப்பட உள்ளது.இத்திட்டத்திற்கானவிரிவானதிட்ட அறிக்கைஒன்றியஅரசுக்குசமர்ப்பிக்கப்பட்டு, முதற்கட்டமாகரூ.111.50கோடிஒன்றியஅரசால் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.
- விசைத்தறிகளில் உற்பத்தி மேற்கொள்ளப்படும்போது அவ்வப்போது நூலிழைகள் அறுந்து உற்பத்தித் திறன் குறைவதால்,உற்பத்தித்திறனைஅதிகரிக்கும் வகையில்5,000விசைத்தறிகளில்மின்னணு பலகைகள் கொள்முதல் செய்ய ரூ.6 கோடி மானியத்தொகை வழங்கப்பட்டு மின்னணு பலகைகள் நிறுவப்பட்டுள்ளது.
- பட்டுகைத்தறிநெசவாளர்கூட்டுறவுசங்கங்கள் பயன்பெறும் வகையில் ரூ.10 இலட்சம் மதிப்பீட்டில்மின்னணுஜக்கார்டு இயந்திரங்கள் பராமரிப்பு சேவை மையம் காஞ்சிபுரம் காமாட்சியம்மன் நெசவாளர் காலனியில் அமைந்துள்ளநெசவாளர்சேவைமையத்தில் அமைக்கப்பட்டு, 101 மின்னணு ஜக்கார்டு இயந்திரங்கள் பராமரிப்பு சேவை மையத்தில் பழுது நீக்கப்பட்டுள்ளன.
- ஜவுளிதொழில்முனைவோர்களுக்கானஅரசு மானியம் வழங்கும் திட்டத்தின்கீழ், முதன்முறையாக 46 நிறுவனங்களுக்கு 10 விழுக்காடு கூடுதல் மூலதன மானியத் தொகை ரூ.24.52 கோடிக்கான காசோலை வழங்கப்பட்டது.
- கைத்தறிநெசவாளர்கூட்டுறவுசங்கங்களுக்கு நிலுவையிலுள்ள தள்ளுபடி மானியத் தொகையினை தீர்வு செய்ய ரூ.260.11 கோடி கூடுதலாக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு,



கோ–ஆப்டெக்ஸ்மற்றும்850க்கும்மேற்பட்ட கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் பயனடைந்துள்ளன.ரூ.760.11கோடிதள்ளுபடி மானியமாக அரசால் நிதி ஒதுக்கீடு.

- கைத்தறிகளுக்கான பிரத்தியேக சந்தைப் பிரிவை உருவாக்கி, விற்பனையை ஊக்குவிக்க,"ஹேண்ட்லூம்ஸ்ஆப்இந்தியா" என்றபெயரில்கைத்தறிவிற்பனைஇணைவு அங்காடி முதற்கட்டமாக கோயம்புத்தூரில் திறக்கப்பட்டுள்ளது.
- 9ஆவதுதேசியகைத்தறிதினம்கொண்டாட்டம் தொடர்பாக வாடிக்கையாளர்களின் கைத்தறி உபபொருட்களின் தேவையினைப் பூர்த்தி செய்வதற்கு கோ–ஆப்டெக்ஸ் மூலம் ரூ.75இலட்சம்மதிப்பீட்டில்சென்னைஎழும்பூர், கோ–ஆப்டெக்ஸ்வளாகத்தில்உபபொருட்கள் விற்பனையகம் திறந்து வைக்கப்பட்டுள்ளது.
- கைத்தறி இரகங்களை பிரபலப்படுத்தும் திட்டத்தின்கீழ், 302 கல்லூரிகள் மற்றும் பல்கலைக்கழகங்களில்'கைத்தறிஇரகங்கள் பிரபலப்படுத்தும் திட்டமானது' துறையால் நடத்தப்பட்டு,கைத்தறிஇரகங்களின்பாரம்பரியம் மற்றும் கலைநயம் குறித்த விழிப்புணர்வு மாணவர்களிடையே ஏற்படுத்தப்பட்டு, ரூ.3.72 கோடிக்கு விற்பனை மேற்கொள்ளப்பட்டுள்ளது.
- நெசவுப்பயிற்சிமற்றும்தொழில்முனைவோர் திட்டத்தின்கீழ், 3 கட்டங்களில் 300 இளைஞர்களுக்கு (நெசவு பின்னணி சார்ந்த 159 நபர்கள் மற்றும் நெசவு பின்னணி சாராத 141 நபர்கள்) நெசவு தொடர்பான பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளது.
- நெசவாளர்களின் வடிவமைப்புத் திறனை மேம்படுத்திட ஏதுவாக 300நெசவாளர்களுக்கு வடிவமைப்புத்திறன்பயிற்சிநடேசன்கூட்டுறவு மேலாண்மை நிலையம், சென்னை மற்றும் இன்ஸ்ட்டியூட் ஆப் கோ–ஆப்பரேட்டிவ் மேனேஜ்மெண்ட், மதுரை மூலம் வழங்கப்பட்டுள்ளது.
- மின் வணிகம் மூலம் கைத்தறித் தொழிலை முன்னேற்ற ஏதுவாக 300 கைத்தறி நெசவாளர்களுக்கு மின் வணிகம் பயிற்சி வழங்கப்பட்டுள்ளது.
- கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் மற்றும் கோ–ஆப்டெக்ஸ் விற்பனை நிலையப் பணியாளர்களுக்கு 350 விற்பனை

பணியாளர்களுக்கு விற்பனைத் திறன் மேம்படுத்த பயிற்சி சர்தார் வல்லபாய் படேல் பன்னாட்டு நெசவுமற்றும்மேலாண்மைப்பள்ளி, கோயம்புத்தூர் மூலம் வழங்கப்பட்டுள்ளது.

- ❖ கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களில் உள்ள 44 வடிவமைப்பாளர்களுக்கு அகமதாபாத்தில் அமைந்துள்ள தேசிய வடிவமைப்புநிறுவனம்மூலம்ஈரோடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கத்தில் பயிற்சி வழங்கப்பட்டது.
- ❖ கைத்தறி நெசவாளர்களால் உற்பத்தி செய்யப்படும் கைத்தறி இரகங்களின் விற்பனையினை அதிகரிக்க ஏதுவாக தேசிய ஆடை அலங்கார தொழில்நுட்பநிறுவனத்தின் வாயிலாக 1,000 புதிய வடிவமைப்புகள் உருவாக்கப்பட்டு, கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களுக்கு உற்பத்திக்காக வழங்கப்பட்டுள்ளது.
- ❖ வாடிக்கையாளர்கள் தங்கள் இரசனைக்கேற்ற சேலை வடிவமைப்புகளை செய்துகொள்ளும் வசதி காஞ்சிபுரம், அண்ணா பட்டு கைத்தறி நெசவாளர்கூட்டுறவுசங்கத்தில்ரூ.10இலட்சம் செலவில் நிறுவப்பட்டுள்ளது.
- ❖ வேட்டி சேலை வழங்கும் திட்டத்தின்கீழ் ஒரு உருப்படிக்கு ஏற்கனவே வழங்கப்பட்டு வந்த நெசவுக்கு முந்தைய பணிகளுக்கான கூலியில் 01.11.2021 முதல் கைத்தறி சேலை ஒன்றுக்குரூ.20.50லிருந்துரூ.26.67ஆகவும், பெடல்தறிசேலைஒன்றுக்குரூ.20.50லிருந்து ரூ.26.67ஆகவும்,கைத்தறிவேட்டி ஒன்றுக்கு ரூ.10.30லிருந்துரூ.12.36ஆகவும்,பெடல்தறி வேட்டி ஒன்றுக்கு ரூ.10.30லிருந்து ரூ.12.36ஆகவும் உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது.
- ❖ பொங்கல் 2022 பண்டிகையின்போது, பயனாளிகளுக்கு 1.79 கோடி சேலைகளும், 1.79கோடி வேட்டிகளும்வழங்கும்பொருட்டு, ரூ.493.69கோடி அரசால்விடுவிக்கப்பட்டது.
- திருநெல்வேலி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் கண் சிகிச்சைக்கான தனிப்பிரிவு ரூ.2.75 கோடி மதிப்பீட்டில் சீரமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.
- அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளின் தர மேம்பாட்டுப் பணிகளை ஒருங்கிணைக்க மருத்துவமனை மேலாண்மை அலுவலர்கள் ரூ.4.77 கோடி மதிப்பீட்டில் பணியமர்த்தப்பட்டுள்ளனர்.
- புதிய மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் ரூ.1.82 கோடி மதிப்பீட்டில் விபத்து காய பதிவேடு அமைக்கப்பட்டுள்ளது.
- ரூ.1.46 கோடி மதிப்பீட்டில் 24 மாவட்ட சுகாதாரப் பேரவை மற்றும் ஒரு மாநில சுகாதாரப் பேரவை நடத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.
- சென்னை, கிண்டி கிங் நோய்த் தடுப்பு மற்றும் ஆராய்ச்சி நிலையத்திற்கு, ஆய்வகங்களுக்கான தேசிய அங்கீகார வாரியத்தின் தரச்சான்றிதழ் பெறுவதற்காக ரூ.1.45 கோடி மதிப்பீட்டில் நவீன ஆய்வக உபகரணங்கள் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.
- 12 ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு செவிலியர் குடியிருப்பு ரூ.4.14 கோடி மதிப்பீட்டில் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.
- திண்டுக்கல் மாவட்டம், பழனி அரசு தலைமை மருத்துவமனைக்கு டிஜிட்டல் எக்ஸ்ரே கருவி ஒரு கோடி ரூபாய் மதிப்பீட்டில் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.
- உளுந்தூர்பேட்டை, அரசு மருத்துவமனையில் நவீன பிரேத பரிசோதனைக் கூடம் ரூ.95 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.
- சிவகங்கை, அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு சிறார்களுக்கான காதுவால் நரம்பு உள்வைப்பு (Cochlear Implant) அறுவை சிகிச்சைக்கான ரூ.95 இலட்சம் மதிப்பீட்டில் நவீன மருத்துவ உபகரணங்கள் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.
- வளையான்குளம், கிளியனூர் மற்றும் முருக்கேரி ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு அறுவை சிகிச்சைக்கான உபகரணங்கள் ரூ.71 இலட்சம் மதிப்பீட்டில் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.
- விருதுநகர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு நுண்துளை எலும்பு அறுவை சிகிச்சை மற்றும் தண்டுவட அறுவை சிகிச்சைக்கான நவீன மருத்துவ உபகரணங்கள் ரூ.70 இலட்சம் மதிப்பீட்டில் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.
- செங்கல்பட்டு அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு அதிநவீன லேப்ரோஸ்கோபி & ப்ரோன்கோஸ்கோபி (Bronchoscopy) மருத்துவக் கருவிகள் ரூ.65 இலட்சம் மதிப்பீட்டில் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.
- ஊத்துக்குளி அரசு மருத்துவமனைக்கு காது, மூக்கு, தொண்டை அறுவை சிகிச்சைக்கான உபகரணங்கள் ரூ.57 இலட்சம் மதிப்பீட்டில் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.
- 38 மாவட்டங்களில் நடப்போம் நலம் பெறுவோம் இதர செலவினங்கள் ரூ.57 இலட்சம் மதிப்பீட்டில் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.
- காரைக்குடி மற்றும் உசிலம்பட்டி அரசு மாவட்ட தலைமை மருத்துவமனைக்கு கண் மருத்துவ சிகிச்சைக்கான நவீன உபகரணங்கள் ரூ.50 இலட்சம் மதிப்பீட்டில் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.
- பரதராமி (வேலூர்) அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் சுற்றுச்சுவர் ரூ.47 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.
- தொழிற்சாலைகளில் பணியாற்றும் தொழிலாளர்களுக்கு தொற்றா நோய்களுக்கான பரிசோதனைகளை



ரூ.44 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

- தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் எலிக்கொல்லி மருந்தினை உட்கொள்வதால் ஏற்படும் உடல் பாதிப்பு மற்றும் இறப்பினைக் குறைக்கும் நோக்கில் அதிநவீன இரத்த சுத்திகரிப்பு உபகரணம் ரூ.33 இலட்சம் மதிப்பீட்டில் வழங்கப்பட்டுள்ளது.
- விக்கிரவாண்டி (விழுப்புரம்) அரசு மருத்துவமனையில் சுற்றுச்சுவர் ரூ.30 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.
- திண்டுக்கல் மாவட்டம், கொடைக்கானல் அரசு மருத்துவமனையில் அமைந்துள்ள பிரேதப் பரிசோதனைக் கூடத்தை ரூ.25 இலட்சம் மதிப்பீட்டில் சீரமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.
- கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறை அரசு மருத்துவமனையில் அமைந்துள்ள மருத்துவர் மற்றும் செவிலியர் குடியிருப்புக் கட்டடங்களை ரூ.24 இலட்சம் மதிப்பீட்டில் சீரமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.
- திருவள்ளூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் அமையப் பெற்ற புதிய 500 படுக்கை வசதிகள் கொண்ட பிரிவிற்கு இரத்த சேமிப்பு அலகிற்கான (Blood Storage Unit) நவீன உபகரணங்கள் ரூ.15 இலட்சம் மதிப்பீட்டில் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.
- குளச்சல் (கன்னியாகுமரி) அரசு மருத்துவமனையில் அறுவை சிகிச்சைக்கான உபகரணங்கள் ரூ.9 இலட்சம் மதிப்பீட்டில் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.
- பூதப்பாண்டி (கன்னியாகுமரி) அரசு மருத்துவமனையில் சூரிய ஒளி நீர் வெப்பகலன் ரூ.5 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.
- திண்டிவனம் அரசு மருத்துவமனையில் புற்றுநோய்க்கான மருத்துவ சிகிச்சையை ரூ.4 இலட்சம் மதிப்பீட்டில் மேம்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.
- விருத்தாச்சலம் அரசு மருத்துவமனையில் ரூ.98 இலட்சம் மதிப்பீட்டில் மருத்துவ உபகரணங்கள் மற்றும் உட்கட்டமைப்பு மேம்படுத்தப்பட்டு விபத்து மற்றும் அவசர சிகிச்சை மையமாக தரம் உயர்வு.
- செங்கம் அரசு மருத்துவமனையில் ரூ.98 இலட்சம் மதிப்பீட்டில் மருத்துவ உபகரணங்கள் மற்றும் உட்கட்டமைப்பு மேம்படுத்தப்பட்டு விபத்து மற்றும் அவசர சிகிச்சை மையமாக தரம் உயர்வு.

- பாலக்கோடு அரசு மருத்துவமனையில் ரூ.98 இலட்சம் மதிப்பீட்டில் மருத்துவ உபகரணங்கள் மற்றும் உட்கட்டமைப்பு மேம்படுத்தப்பட்டு விபத்து மற்றும் அவசர சிகிச்சை மையமாகத் தரம் உயர்வு.
- சென்னை – பெரியார் நகர் அரசு மருத்துவமனையில் ரூ.4.71 கோடி மதிப்பீட்டில் மனிதவளங்கள், மருத்துவ உபகரணங்கள் மற்றும் உட்கட்டமைப்பு மேம்படுத்தப்பட்டு விபத்து மற்றும் அவசர சிகிச்சை மையமாகத் தரம் உயர்வு.
- தஞ்சாவூர் – பட்டுக்கோட்டை அரசு மருத்துவமனையில் ரூ.98 இலட்சம் மதிப்பீட்டில் மருத்துவ உபகரணங்கள் மற்றும் உட்கட்டமைப்பு மேம்படுத்தப்பட்டு விபத்து மற்றும் அவசர சிகிச்சை மையமாக தரம் உயர்வு.
- நீலகிரி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு ரூ.30 இலட்சம் மதிப்பீட்டில் நடமாடும் இரத்த சேமிப்பு வாகனம் வழங்கப்பட்டுள்ளது.
- திருநெல்வேலி மாவட்டம், களக்காடு அரசு மருத்துவமனையில் விஷ முறிவு சிகிச்சை மையம் ரூ.40 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ளது.
- தேனி மாவட்டம், இராஜதானி அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் 24 மணி நேர இலவச சிகிச்சை வழங்கும் பொருட்டு, ரூ.30 இலட்சம் மதிப்பீட்டில் செவிலியர் குடியிருப்பு அமைக்கப்பட்டுள்ளது.
- சென்னை, கீழ்ப்பாக்கம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் ரூ.125 கோடி மதிப்பீட்டில் உயர் சிறப்பு சிகிச்சை வழங்க புதிய கட்டடம் அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது.
- காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ள அரசு அறிஞர் அண்ணா நினைவு புற்றுநோய் மருத்துவமனை மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் ரூ.100 கோடி மதிப்பீட்டில் கூடுதல் தளங்கள் அமைக்கும் கட்டடப் பணிகள் நடைபெற்று வருகிறது.
- சென்னை, பெரியார் நகர் மருத்துவமனையில் முழு உடல் பரிசோதனை, விபத்து காய சிகிச்சைப் பிரிவு, தொற்றா நோய் பிரிவு, டயாலிசிஸ், இரத்த வங்கி போன்ற சேவைகள் வழங்க ரூ.71.81 கோடி மதிப்பீட்டில் கூடுதல் கட்டடம் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகிறது.
- சென்னை, இராஜீவ்காந்தி அரசு பொது மருத்துவமனையில் நரம்பியல் சிறப்பு சிகிச்சை வழங்க ரூ.65 கோடி மதிப்பீட்டில் புதிய கட்டடம் அமைப்பதற்கான ஆயத்தப் பணிகள் நடைபெற்று வருகின்றன.
- சிவகங்கை மாவட்டம், திருப்பத்தூர், விருதுநகர் மாவட்டம், சாத்தூர், புதுக்கோட்டை மாவட்டம், திருமயம், தேனி மாவட்டம், பெரியகுளம் மற்றும் உத்தமபாளையம் ஆகிய அரசு மருத்துவமனைகளில் ரூ.30.68 கோடி மதிப்பீட்டில் விபத்து மற்றும் அவசர சிகிச்சையை மேம்படுத்த புதிய கட்டடப் பணிகள் நடைபெற்று வருகிறது.
- காஞ்சிபுரம் மாவட்டம், உத்திரமேரூர் அரசு மருத்துவமனையை மேம்படுத்தும் பொருட்டு ரூ.10 கோடி மதிப்பீட்டில் புதிய கட்டடம் அமைப்பதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன.
- திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி அரசு மருத்துவமனையில் விபத்து மற்றும் அவசரகால சிகிச்சையை மேம்படுத்தும் பொருட்டு ரூ.5 கோடி மதிப்பீட்டில் புதிய கட்டடம் அமைப்பதற்கான கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகிறது.
- தருமபுரி மாவட்டம், அரூர் அரசு மருத்துவமனைக்கு CT scan மற்றும் C arm உடன் எலும்பு முறிவு அறுவை சிகிச்சை மேசை ரூ.2.30 கோடி மதிப்பீட்டில் கொள்முதல் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.
- சிவகங்கை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் ரூ.11.74 கோடி மதிப்பீட்டில் புதியதாக CeMONC கட்டடம் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகிறது.
- சென்னை, ஸ்டான்லி மருத்துவமனையில் முழு உடல் பரிசோதனை மற்றும் பெண்களுக்கான சிறப்பு முழு உடல் பரிசோதனை போன்ற சேவைகள் வழங்க ரூ.1.65 கோடி மதிப்பீட்டில் மருத்துவ உபகரணங்கள் கொள்முதல் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
- தஞ்சாவூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு ரூ.45 கோடி மதிப்பீட்டில் புதிய புற்றுநோய் சிகிச்சைப் பிரிவு கட்டடம் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.
- இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி அரசு மருத்துவமனைக்கு C arm உடன் எலும்பு

முறிவு அறுவை சிகிச்சை மேசை ரூ.20 இலட்சம் மதிப்பீட்டில் வழங்கப்படவுள்ளது.

- சேலம் மாவட்டம், ஏற்காடு அரசு மருத்துவமனையில் ரூ.1.05 கோடி மதிப்பீட்டில் நவீன பிரேத பரிசோதனை மையத்திற்கான கட்டடம் அமைக்கப்பட்டுள்ளது.
- திருச்சி மாவட்டம், மகாத்மா காந்தி நினைவு அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் ரூ.110 கோடி மதிப்பீட்டில் பல்நோக்கு உயர்சிறப்பு சிகிச்சைப் பிரிவு கட்டடம் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.
- சேலம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு ரூ.31.08 கோடி மதிப்பீட்டில் விடுதியுடன் கூடிய செவிலியர் பயிற்சிப் பள்ளிக் கட்டடம் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.
- சென்னை – அரசு அறிஞர் அண்ணா சித்த மருத்துவமனையுடன் இணைந்த அரசினர் சித்த மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில், ரூ.5.09 கோடி மதிப்பீட்டில் நவீன மருத்துவ உபகரணங்களுடன் கூடிய பட்டமேற்படிப்பு கட்டடத்தில் கூடுதலாக ஒரு தளம் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.
- திருவண்ணாமலை மாவட்டம், செங்கம் அரசு மருத்துவமனையில் ரூ.3.50 கோடி மதிப்பீட்டில், விபத்து மற்றும் அவசர சிகிச்சைக்கான புதிய கட்டடம் அமைக்கப்பட்டு, நவீன மருத்துவ உபகரணங்கள் வழங்கப்பட உள்ளது.
- திருவாரூர் மாவட்டம், விஜயபுரம் அரசு மகப்பேறு மற்றும் குழந்தைகள் நல மருத்துவமனைக்கு ரூ.6 கோடி மதிப்பீட்டில் புதிய கட்டடம் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.
- கன்னியாகுமரி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு ரூ.2 கோடி மதிப்பீட்டில் மருத்துவமனையின் உள்கட்டமைப்பு வசதிகள் மற்றும் நவீன மருத்துவ உபகரணங்கள் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.
- கோயம்புத்தூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் ரூ.2.45 கோடி மதிப்பீட்டில் நவீனமயமாக்கப்பட்ட உபகரணங்களுடன் கூடிய நீராவி சலவை வசதிகள் ஏற்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.



- 138 அவசரகால ஊர்திகள் ரூ.58.55 கோடி மதிப்பீட்டில் மக்கள் பயன்பாட்டிற்கு அர்ப்பணிக்கப்பட்டுள்ளது.
- சென்னை – கே.கே.நகர் அரசு புனர்வாழ்வு மையத்திற்கு ரூ.11.43 கோடி மதிப்பீட்டில் அதிநவீன மருத்துவ உபகரணங்கள் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.
- NABH தர அங்கீகாரம் பெற ரூ.14.46 கோடி மதிப்பீட்டில் 5 மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள் சிறப்பு வசதிகளுடன் தரம் உயர்த்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு, 3 மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளுக்கு NABH தர அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.
- கன்னியாகுமரி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் புற்றுநோய் சிகிச்சையை மேம்படுத்த நவீன மருத்துவ உபகரணங்கள் ரூ.4 கோடி மதிப்பீட்டில் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

தமிழ்நாடு நகர்புற சுகாதாரத் திட்டம்

- 3 அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைகளுக்கு புதிய கட்டடங்கள், மற்றும் நவீன உயர் மருத்துவக் கருவிகள், 11மருத்துவக்கல்லூரிமருத்துவமனைமற்றும் 3மாவட்டதலைமைமருத்துவமனைகளுக்கு நவீன மருத்துவக் கருவிகள் வழங்கி வலுப்படுத்துதல்,4அரசுமருத்துவமனைகளுக்கு புதியகட்டடங்கள்மற்றும்நவீனஉயர்மருத்துவக் கருவிகள்,மருத்துவர்கள்,செவிலியர்கள்மற்றும்

மருத்துவப்பணியாளர்களுக்குமருத்துவமனை மேலாண்மைப்பயிற்சி,மருத்துவக்கருவிகளைக் கையாளுதல் பயிற்சி, தொற்றா நோய்கள் கண்டறிதல் மற்றும் தடுப்பு முறைகள் பற்றிய பயிற்சிவழங்குதல்,தொற்றாநோய்களில்பொது சுகாதாரத் துறைகளின் பயிற்சி மையங்களை வலுப்படுத்துதல் ஆகிய பணிகளுக்கும் என மொத்தம் ரூ.1,519.12 கோடி வழங்கப்பட்டது.

108 – அவசரகால மேலாண்மைச் சேவைகள்

- 542கோவிட்–19அர்ப்பணிப்புஆம்புலன்ஸ்கள் மூலம் 6.30 இலட்சம் பயனாளிகள் பயன்.
- கொரோனா காலகட்டத்தின்போது 108 ஆம்புலன்ஸ் பணியாளர்கள் கொரோனாத் தடுப்பு முதன்மைப் பணியாளர்களாக (Frontline Warriors) செயல்பட்டதற்கும் மற்றும் இடைவிடாத பங்களிப்புக்காக தமிழ்நாடு அரசு ரூ.15,000 சிறப்பு கொடுப்பனவாக அறிவித்துள்ளது.
- அவசரகால சேவைகளின் செயல்பாடுகளை திறம்பட செயல்படுத்த, கூடுதலாக 355 புதிய அவசர கால ஊர்திகள் மாற்று வாகனமாகவும் மற்றும் புதிய நிலைநிறுத்தும் இடமாகவும் படிப்படியாக1,303லிருந்து1,353ஆகஅதிகரிப்பு.
- மிக்ஜாங்சூறாவளியால்பாதிக்கப்பட்டபகுதிகளில் 2,342பேரையும்,தென்மாவட்டபகுதிகளில்1,323 பேரையும்108ஆம்புலன்ஸ்சேவைமூலம்மீட்பு.
- 16.03 இலட்சம் கர்ப்பிணித் தாய்மார்கள், 9.88 இலட்சம் சாலைப் போக்குவரத்து விபத்துக்குள்ளானவர்கள்மற்றும்34.36இலட்சம் இதர அவசர கால பயனாளிகள் என மொத்தம் 60.27 இலட்சம் பயனாளிகள் பயன்.
- பச்சிளங் குழந்தைகளுக்கான சேவை மூலம் 68,809,இருசக்கரமுதலுதவிவாகனங்கள்மூலம் 1.27இலட்சம்மற்றும்மலைமற்றும்நிலப்பரப்பு பகுதிகளில்3.14இலட்சம்பயனாளிகள்பயன்.
- NK48 திட்டம் மூலம் 3.59 இலட்சம் பயனாளிகள் பயன்.

104 தொலைபேசி மருத்துவ உதவி மற்றும் தகவல் மையம்

- கொரோனாதொடர்புடையஅழைப்புகள்மூலம் 6.75 இலட்சம் பயனாளிகள் பயன்.
- தற்கொலை தடுப்பு ஆலோசனை மூலமாக 3.86 இலட்சம் நீட் தேர்வு மாணவர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.
- TAEI 1.19 இலட்சம் பயனாளிகள் பயனடைந்துள்ளனர்.
- உக்ரைன் போரினால் நாடு திரும்பிய 1,524 மாணவர்களுக்கு மன அழுத்தம் நீங்க ஆலோசனை வழங்கப்பட்டது.
- இச்சேவை தொடங்கிய நாள்முதல் 31.05.2024 வரை 27.71 இலட்சம் நபர்கள் பயனடைந்துள்ளனர்.

102–இலவச தாய்சேய் நல ஊர்தி சேவை (JSSK)

- 13 புதிய ஊர்திகள் வழங்கப்பட்டது.
- தாய்சேய் நல ஊர்திகள் வாயிலாக 7.49 இலட்சம் பிரசவித்த தாய்மார்கள் பயன்.
- தற்போது 107 ஊர்திகள் மூலம் 38 மாவட்டங்களில் தாய்சேய் நல ஊர்தி சேவை செயல்படுத்தப்பட்டு வருகிறது.

155377 – இலவச அமரர் ஊர்தி சேவை

- 4.85 இலட்சம் இறந்தவர்களின் உடல்கள் இந்தச் சேவையின் மூலம் கொண்டு செல்லப்பட்டது.
- தற்போது 194 ஊர்திகள் மூலம் 38 மாவட்டங்களில் இலவச அமரர் ஊர்தி சேவை செயல்படுத்தப்பட்டு வருகிறது.

முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டம்

- ஒன்றிய அரசின் பிரதம மந்திரி ஜன் ஆரோக்யா யோஜனா திட்டம், முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்துடன் ஒருங்கிணைக்கப்பட்டு 86.50 இலட்சம் குடும்பங்கள் பிரதான் மந்திரி ஆரோக்யா யோஜனா திட்டத்தின்கீழ் பயனாளிகளாக சேர்க்கப்பட்டுள்ளனர். 8.32 இலட்சம் புதிய பயனாளிகள் சேர்க்கப்பட்டுள்ளனர்.
- முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தில் 6,513 பயனாளிகளுக்கு ரூ.698.20 கோடி காப்பீட்டுத் திட்ட தொகுப்பு நிதியில் சிறப்பு அறுவை சிகிச்சை செய்யப்பட்டது.
- சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு, தலைமைச் செயலக மகளிருக்கான சிறப்பு



மருத்துவ பரிசோதனை முகாம் தலைமைச் செயலகத்தில் நடைபெற்று, 1,056 மகளிர் பயன்.

- முன்னாள் முதலமைச்சர் முத்தமிழறிஞர் மு.கருணாநிதி அவர்களின் நூற்றாண்டு விழாவினை சிறப்பிக்கும் வகையில் மாவட்டந்தோறும் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை சார்பில், 103 இலவச பன்னோக்கு சிறப்பு மருத்துவ முகாம்கள் நடத்தப்பட்டு, 1.89 இலட்சம் பயனாளிகளும் சென்னையில், 10,083 நபர்களும் கலந்து கொண்டு பயன்.
- மாவட்டந்தோறும் சிறப்பு முகாம்கள் நடத்தப்பட்டு, 99,935 குடும்பங்கள் புதிய காப்பீட்டுத் திட்ட பயனாளிகளாக சேர்க்கப்பட்டுள்ளனர்.

இன்னுயிர் காப்போம் – நம்மைக் காக்கும் 48 திட்டம்

- 237 அரசு மருத்துவமனைகள், 455 தனியார் மருத்துவமனைகள் என மொத்தம் 692 மருத்துவமனைகள் மருத்துவ சிகிச்சைகள் வழங்க அங்கீகரிக்கப்பட்டுள்ளன. இத்திட்டத்தின் மூலம் 2.52 இலட்சம் பயனாளிகளுக்கு ரூ.238.06 கோடிச் செலவில் சிகிச்சை அளிக்கப்பட்டு அவர்களின் இன்னுயிர் காக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு உடலுறுப்பு மாற்று ஆணையம்

- தமிழ்நாடு உடலுறுப்பு மாற்று அறுவை சிகிச்சை ஆணையம் நோயாளியின் பதிவு மற்றும் உறுப்பு ஒதுக்கீட்டிற்காக ஒரு தானியங்கி இணைய தளம் மற்றும் செயலியை உருவாக்கியது. பயன்பாட்டின் பெயர் "VIDIYAL" அதாவது தமிழ் மொழியில் "விடியல்". உறுப்புப் பங்கீட்டில் நெறிமுறை அடிப்படையிலான மேம்பட்ட தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தும் முதல் மாநிலம் தமிழ்நாடு.
- அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகளில் உள்ள நோயாளிகளுக்கு உறுப்பு மாற்று அறுவை சிகிச்சைக்கு ரூ.22 இலட்சம் வரை அனுமதி அளிக்கிறது.
- கோவிட் தொற்று நோய்களின் போது கூட, 161 நன்கொடையாளர்களிடமிருந்து 1,097 உறுப்புகள் மற்றும் திசுக்கள் பயன்படுத்தப்பட்டன.

- 467 நன்கொடையாளர்களிடமிருந்து 223 இதயம், 292 நுரையீரல், 409 கல்லீரல் மற்றும் 810 சிறுநீரகம் என மொத்தம் 2,789 உறுப்புகள் மற்றும் திசுக்கள் பயன்படுத்தப்பட்டன.
- தமிழ்நாட்டில் 13 திசு வங்கிகள் உள்ளன.
- நன்கொடையாளர் பாராட்டு மற்றும் TRANSTAN ஆண்டு புத்தகம் 2021–2022 மற்றும் 2022–2023 வெளியிடப்பட்டது.
- மூளைச்சாவு அடைந்த உடல் உறுப்பு தானம் செய்பவர்களின் இறுதிச் சடங்குகளில் அரசு மரியாதை செலுத்தப்படுகிறது.
- தேசிய அளவில், தொடர்ந்து ஆறு ஆண்டுகளாக உறுப்பு தானம் மற்றும் மாற்று அறுவை சிகிச்சையில் சிறப்பாக செயல்பட்டதற்காகவும் மற்றும் 2022இல் ஏழாவது முறையாகவும், ஒன்றிய அரசின் தேசிய விருதை தமிழ்நாடு பெற்றுள்ளது.

உணவு பாதுகாப்பு மற்றும் மருந்து நிருவாகத்துறை

- 1.28 இலட்சம் உணவு வணிகர்களுக்கு உணவு உரிமம் மற்றும் 5.60 இலட்சம் உணவு வணிகர்களுக்கு பதிவுச் சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளது.
- பொதுமக்களுக்கு பாதுகாப்பான உணவு கிடைப்பதை உறுதி செய்ய 20,834 விழிப்புணர்வு நிகழ்வுகள் நடத்தப்பட்டு, 21.56 இலட்சம் உணவு வணிகர்கள் பங்கேற்றனர்.

நீதிமன்றத்தில் (Adjudication Cases) பதிவு செய்யப்பட்ட வழக்குகள்

- 10,132 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு, 9,064 வழக்குகளுக்கு தீர்ப்பு வழங்கப்பட்டு, ரூ.9.01 கோடி அபராதம் விதிக்கப்பட்டது.

நீதிமன்ற வழக்குகள் (Criminal Cases)

- 2,895 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு, 1,763 வழக்குகளுக்கு தீர்ப்பு வழங்கப்பட்டு, ரூ.4.71 கோடி அபராதம் விதிக்கப்பட்டது.

சிறு குற்ற செயல்களுக்கு தீர்வு செய்தல் (Compounding Offence)

- 36,812 குற்றங்கள் கண்டறியப்பட்டு, ரூ.31.9 கோடி அபராதம் விதிக்கப்பட்டது.

புகையிலை மற்றும் நிக்கோட்டினை சேர்மானமாகக் கொண்ட உணவுப் பொருட்களை தடையின் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் (Ban on Food Products containing Tobacco / Nicotine)

- புகையிலை மற்றும் நிக்கோட்டினை சேர்மானமாகக் கொண்ட உணவுப்பொருட்கள் தமிழ்நாட்டில் தடை செய்யப்பட்டு, 23,237 குற்றங்கள் கண்டறியப்பட்டு, ரூ.29.33 கோடி அபராதம் விதிக்கப்பட்டது.

குறை தீர்க்கும் முறை

- வாட்ஸ் ஆப் செயலி மூலமாக உணவு தொடர்பான 24,555 புகார்கள் பெறப்பட்டது.

உணவு பாதுகாப்புப் பயிற்சி மற்றும் சான்றிதழ்

- 5,371 பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டு, 2.32 இலட்சம் உணவுப் பாதுகாப்பு மேற்பார்வையாளர்கள் பயிற்சி பெற்றுள்ளனர்.

FOSCORIS (Food Safety Compliance through Regular Inspection System)

- 2.35 இலட்சம் ஆய்வுகள் நடத்தப்பட்டுள்ளன.

சுகாதார மதிப்பீடு

- FSSAI இன் வழிகாட்டுதலின் படி, உணவு விடுதி, உணவகங்கள், தங்கும் விடுதிகள், இறைச்சி கடைகள் மற்றும் இனிப்பகங்கள் "சுகாதார மதிப்பீடு" திட்டத்தின் கீழ் 8,512 சான்றிதழ் அளிக்கப்பட்டுள்ளது.

சுத்தமான தெரு உணவு மையம்

- ஈட் ரைட் சேலஞ்சிங்கில், ஈட் ரைட் இந்தியா செயல்பாட்டின் திட்டங்களில் ஒன்று சுத்தமான தெரு உணவு மையம். தெருவோர உணவு வியாபாரிகளுக்கு பயிற்சி வழங்கப்பட்டு, 102 சுத்தமான தெரு உணவு மையத்திற்கு இந்த திட்டத்தின்கீழ் சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளது.

சுத்தமான பழம் மற்றும் காய்கறிகள் விற்பனை வளாகம்

- 137 சுத்தமான பழம் மற்றும் காய்கறிகள் விற்பனை வளாகம் என்னும் சான்று உணவுப் பாதுகாப்பு மற்றும் தரநிர்ணய ஆணையத்திடமிருந்து வழங்கப்பட்டுள்ளது.

உண்ணத்தகுந்த வளாகம்

❖ இந்திய உணவுப் பாதுகாப்பு மற்றும் தரநிர்ணய ஆணையத்தால் 1,180 உண்ணத்தகுந்த வளாகங்கள் என்னும் சான்று வழங்கப்பட்டுள்ளது.

சமையல் எண்ணெய் மறுபயன்பாடு

❖ பயோடீசல் மாற்றத்திற்காக FSSAIஇல் பதிவு செய்யப்பட்ட தனியார்/ அரசு நிறுவனங்கள் மூலமாக 10366.522 கிலோ லிட்டர் பயன்படுத்தப்பட்ட சமையல் எண்ணெய் உரியதொகை (ஒரு லிட்டருக்கு ரூ.25–45) உணவு வணிகர்களுக்கு செலுத்தி சேகரிக்கப்பட்டுள்ளது.

உபரி உணவை வீணாக்காமல் பயன்படுத்துவோம்

❖ வீணாகக்கூடிய உபரி உணவை – உணவை நாடுகின்ற எளியோருக்கு சேர்க்கும் திட்டம் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களுடன் இணைந்து செயல்படுத்தப்பட்டு, இதுவரை 1.33 இலட்சம் நிகழ்வுகள் நடத்தப்பட்டுள்ளது.

❖ இந்திய உணவுப் பாதுகாப்பு மற்றும் தர நிர்ணய ஆணையம், ஐந்து குறியீடுகளின் அடிப்படையில் தர மதிப்பீடு செய்ததில், 2021–2022ஆம் ஆண்டிற்கான செயல்பாட்டில் இந்திய அளவில் தமிழ்நாடு முதல் மாநிலமாகவும், 2022–2023–ஆம் ஆண்டில் மூன்றாம் மாநிலமாகவும் தேர்வு செய்யப்பட்டு, அதற்கான விருது மற்றும் சான்றிதழ் பெற்றுள்ளது.

❖ இந்திய உணவுப் பாதுகாப்பு மற்றும் தரநிர்ணய ஆணையத்தால் நடத்தப்பட்ட உண்ணத் தகுந்த உணவு குறித்த போட்டியில் இந்தியா முழுவதும் 150 மாவட்டங்கள் பங்கேற்றதில், தமிழ்நாட்டில் திருவள்ளூர், காஞ்சிபுரம், சேலம், கோயம்புத்தூர், சென்னை, திருநெல்வேலி, ஈரோடு, மதுரை, தூத்துக்குடி, திருப்பூர், திண்டுக்கல் ஆகிய 11 மாவட்டங்கள் சிறந்த செயல்பாட்டிற்கான விருதினைப் பெற்றுள்ளது.

மருந்துகள் கட்டுப்பாட்டுத் துறை

❖ 2.23 இலட்சம் விற்பனை நிறுவனங்கள், 4,383 உற்பத்தி நிறுவனங்கள், 7,899 மருத்துவமனைகள் மற்றும் மருந்து கிடங்குகள் மற்றும் 2,840 இரத்த வங்கி மற்றும் இரத்த சேமிப்பு நிலையங்கள்



என மொத்தம் 2.38 இலட்சம் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன.

❖ மருந்துகள் மற்றும் அழகு சாதனப் பொருட்கள் சட்டம் 1940 மற்றும் அது சார்ந்த சட்டங்களின் கீழ் கண்டறியப்பட்ட விதிமீறல்களுக்காக, 364 மருந்துகள் விற்பனை உரிமங்கள் தற்காலிகமாக முடக்கமும், 17 மருந்துகள் விற்பனை உரிமங்கள் இரத்தும் செய்யப்பட்டுள்ளன.

❖ உலகத்தரம்வாய்ந்தமருந்துகள்ஆய்வுக்கூடம், ரூ.20 கோடிச் செலவில் மதுரையில் நிறுவப்பட்டுள்ளது.

❖ மருந்துகள் கட்டுப்பாட்டு இயக்குநரகம் மற்றும் சென்னையில் இயங்கும் மண்டல அலுவலகங்கள்–I, II, III மற்றும் IV ஆகிய அலுவலகங்களுக்கு மத்திய நிதியுதவி திட்டத்தின்கீழ்ரூ.14.85கோடிசெலவில்புதிய கட்டிடம் கட்ட அடிக்கல் நாட்டப்பட்டது.

மருத்துவக் கல்வி மற்றும் ஆராய்ச்சி இயக்ககம்

❖ சென்னை, பெரியார் நகர், அரசு புறநகர் மருத்துவமனை ரூ.6.52 கோடியில் 300 படுக்கைகள் கொண்ட கோவிட் மருத்துவமனையாக மாற்றப்பட்டு மக்கள் பயன்பாட்டில் உள்ளது.

❖ சென்னை ஓமந்தூரார் அரசினர் தோட்ட வளாகத்தில் உள்ள தமிழ்நாடு

அரசு பன்னோக்கு உயர் சிறப்பு மருத்துவமனையில், ரூ.34.60 கோடியில் நவீன Robotic அறுவை சிகிச்சை மையம் உருவாக்கப்பட்டு மக்களின் பயன்பாட்டில் உள்ளது.

- 7 புதிய அரசு மருத்துவக் கல்லூரிகளில் தலா 150 மருத்துவ மாணவர்கள் சேர்க்கைக்கும், 4 புதிய அரசு மருத்துவக் கல்லூரிகளில் தலா 100 மருத்துவ மாணவர் சேர்க்கைக்கும் தேசிய மருத்துவ ஆணையத்திடமிருந்து அனுமதி பெறப்பட்டு எம்.பி.பி.எஸ் இடங்களுக்கான மாணவர்கள் சேர்க்கைக்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. 11 புதிய அரசு மருத்துவக் கல்லூரிகள் திறக்கப்பட்டுள்ளது.
- அரசு கோயம்புத்தூர் மருத்துவக் கல்லூரியில் மருத்துவ மாணவர் சேர்க்கை 150 இடங்களிலிருந்து 200 இடங்கள் ஆக உயர்வு.
- 20 அரசு மருத்துவக் கல்லூரிகளில் 45 சிறப்புப் பிரிவுகளில் 243 பட்ட மேற்படிப்பு இடங்கள் (M.D./M.S.,) 9 அரசு மருத்துவ கல்லூரிகளில் 20 உயர்சிறப்பு பிரிவுகளில் 43 பட்ட மேற்படிப்பு இடங்கள் (D.M/M.Ch) கூடுதலாகத் தொடக்கம்.
- சென்னை அரசு ஓமந்தூரார் வளாகத்தில் அமைந்துள்ள தமிழ்நாடு அரசு பல் நோக்கு மருத்துவமனையில் புதியதாக 4 பிரிவுகளில் தலா 2 இடங்கள் வீதம் 8 இடங்களுடன் டி.ஆர்.என்.பி. (DrNB) உயர்சிறப்பு பிரிவு படிப்புகள் துவக்கம்.
- அனைத்து மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளிலும் ஒட்டுமொத்த சேவைகளின் தகவல்கள் குறித்த டிஜிட்டல் காட்சிப் பலகை பொருத்தப்பட்டுள்ளது.
- அனைத்து மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளிலும் உள்நோயாளிகளாக அனுமதிக்கப்பட்ட முதியோர்கள் அனைவருக்கும் புற்றுநோய் கண்டுபிடிப்புப் பரிசோதனைகள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.
- அகில இந்திய இட ஒதுக்கீட்டில் 15 சதவிகித இளநிலை மருத்துவ இடங்கள், 50 சதவிகித பட்ட மேற்படிப்பு இடங்களிலும், இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு 27 சதவிகித இட ஒதுக்கீட்டை ஒன்றிய அரசு அமல்படுத்தியது.
- 4 அரசு மருத்துவக் கல்லூரிகளில் உள்ள மருந்தியல் கல்லூரியில் எம்.பார்ம் முதுநிலை இடங்கள் 45 லிருந்து 85 ஆக உயர்வு.
- 22 அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் மனநலம் குன்றிய ஆதரவற்ற மீட்பு சேவைகள் மையம் உருவாக்கம்.
- குழந்தைகள் இணைய அடிமை நோய்க்கு ஆளாவதைத் தடுக்க அனைத்து அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளிலும் மனநல நிபுணர் குழுவால் சிறப்பு ஆலோசனை வழங்கப்பட்டது.
- அனைத்து அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் முதியோர் மற்றும் மனநலம் குன்றியவர்களுக்கு அறிவாற்றல் மறுவாழ்வுக்காக தினசரி பராமரிப்பு மையங்கள் உருவாக்கம்.
- அனைத்து அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் பிரசவத்திற்குப் பிந்தைய வார்டுகளில் பச்சிளங் குழந்தைகளுக்குக் காதுகேட்கும் திறன் பரிசோதனை சேவைகள் வழங்கப்பட்டு வருகிறது.
- தாம்பரம் அரசு நெஞ்சக மருத்துவமனையில் நுரையீரல் மறுவாழ்வு மையம் அமைக்கப்பட்டுள்ளது.
- சென்னை அரசு ஸ்டான்லி மருத்துவக் கல்லூரி, மருத்துவமனையில் அமைந்துள்ள ஸ்டெம் செல் ஆராய்ச்சி மையம் ரூ.2.44 கோடிச் செலவில் வாழ்வூட்டும் மருத்துவம் மற்றும் ஆராய்ச்சித் துறையாக மேம்படுத்தப்பட்டுள்ளது.
- அனைத்து மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் முதுகுத் தண்டு பாதிப்பு மற்றும் இதர நோய்களால் படுத்த படுக்கையாக இருக்கும் காரணத்தினால் ஏற்படும் உடல் புண் சிகிச்சைக்காக 10 பிரத்தியேக படுக்கைகளுடன் தனி சிகிச்சைப்பிரிவு உருவாக்கப்பட்டு மக்களின் பயன்பாட்டில் உள்ளது.
- தென் சென்னையில் கலைஞர் நூற்றாண்டு உயர் சிறப்பு மருத்துவமனையில் ரூ.146 கோடி மதிப்பீட்டில் உபகரணங்கள் கொள்முதல் செய்யப்பட்டு மக்கள் பயன்பாட்டிற்குக் கொண்டு வரப்பட்டுள்ளது.
- கலைஞர் நூற்றாண்டு உயர் சிறப்பு மருத்துவமனையில் ரூ.6.83 கோடி மதிப்பீட்டில் முழு உடல் பரிசோதனைக்கான உரிய மருத்துவ உபகரணங்கள் கொண்ட பகுதியை அமைக்க அரசாணை வழங்கப்பட்டுள்ளது.

- அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள் மற்றும் அரசு மருத்துவமனைகளில் ரூ.18.56 கோடி நிதியில் 70 PSA Plant அமைப்பு உருவாக்கம்.
- காரப்பேட்டை, காஞ்சிபுரம் அரசு அறிஞர் அண்ணா நினைவு புற்றுநோய் மருத்துவமனையில் புற்றுநோய்க்கான சிறப்பு மையம் ரூ.120 கோடியில் நிறுவப்பட்டு, 750 படுக்கைகளுடன் கட்டட தளங்களுக்கு ரூ.100 கோடி நிதி ஒதுக்கீடு.
- சென்னை, கலைஞர் கருணாநிதி நகர், அரசு புனர்வாழ்வு மருத்துவமனையில் ரூ.27.95 கோடியில் ஒப்புயர்வு மையம் கட்டப்பட்டு மக்கள் பயன்பாட்டில் உள்ளது.
- கலைஞர் கருணாநிதி நகர் தொகுதிக்கு மருத்துவ எரிவாயு குழாய் இணைப்பு அமைப்பு (ம) மருத்துவ உபகரணங்கள் கொள்முதல் செய்வதற்கும் (ம) நியுரோ சயின்ஸ் பிளாக் கட்டடத்திற்கும் முறையே ரூ.4.94 கோடி மற்றும் ரூ.60 கோடி அனுமதிக்கப்பட்டுள்ளது.
- பெரியார் நகர் அரசு புறநகர் மருத்துவமனையில் உட்கட்டமைப்பு விரிவாக்கத்திற்கு ரூ.71.81 கோடிக்கு கட்டடப் பணிகள் நடைபெற்று வருகிறது.
- அரிதான மரபணு நோய்களைக் கண்டறிய பிரத்தியேக சிறப்பு மரபணு ஆய்வகம் எழும்பூர் குழந்தைகள் நல மருத்துவமனையில் தொடங்கப்பட்டுள்ளது. இதற்காக ஒரு கோடி ரூபாய் ஒன்றிய அரசால் ஒதுக்கப்பட்டு தற்போது தேசிய சுகாதார திட்டம் மூலம் ரூ.87.30 இலட்சம் நிதி வழங்கப்பட்டுள்ளது.
- 17 மருத்துவக் கல்லூரிகளில் நவீன திறன் மேம்பாடு நிலையங்கள் உருவாக்கப்பட்டு, மருத்துவர்களுக்கும் மருத்துவம் சார்ந்த பணியாளர்களுக்கும் திறன் மேம்பாட்டு பயிற்சி வழங்க ரூ.50.16 கோடி ஒன்றிய அரசால் 100 சதவிகித மானியமாக வழங்கப்படுகிறது.
- ரூ.11.74 கோடியில் CeMONC சிவகங்கை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் அமைக்க நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு கட்டடப்பணிகள் நடைபெற்று வருகிறது.
- தமிழ்நாடு தேர்வுக்குழுவால் கடந்த மூன்று கல்வி ஆண்டுகளில் 23,081 மருத்துவம், 6,313 பல் மருத்துவம், 5,960 மருத்துவ பட்ட மேற்படிப்பு, 1,047 பல் மருத்துவ பட்ட மேற்படிப்பு மற்றும் 7,946 மருத்துவம் சார்ந்த பட்டப்படிப்பு மாணவர்களுக்கான சேர்க்கை வழங்கப்பட்டுள்ளது.
- மனம் திட்டம் என்பது இளைஞர்கள் தற்கொலை மேற்கொள்வதை தடுப்பதற்கான ஒரு முக்கிய திட்டமாகும்.
- 7.5 விழுக்காடு உள் ஒதுக்கீடாக இடம் பெற்ற 1,764 மாணவ, மாணவியர்களுக்கு மருத்துவம் மற்றும் பல் மருத்துவம் படிப்பதற்கு வசதியாக விடுதிக் கட்டடம் கட்ட ரூ.64.90 கோடி மதிப்பீட்டில் கட்டடப் பணிகள் தொடங்கப்பட உள்ளது.
- சென்னை, கீழ்ப்பாக்கம் அரசு மருத்துவக் கல்லூரியில், புதிய உயர் அடுக்கு கட்டடத்திற்கு ரூ.125 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது.
- சென்னை, கீழ்ப்பாக்கம் அரசு மருத்துவக் கல்லூரியில் CeMONC க்கான புதிய கட்டடம் கட்டுவதற்காக ரூ.24 கோடி ஒதுக்கப்பட்டு, (G+2) கட்டடத்துடன் மேலும் இரண்டு தளங்கள் கட்டுமானப்பணி நடைபெற்று வருகிறது.
- அனைத்து அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைகளின் புறநோயாளிகளின் பிரிவுகளின் நுழைவு வாயிலில் "வைட்டல்ஸ்பே" என்ற தனிப்பிரிவு உருவாக்கப்பட்டு, உயரம், எடை, நடுக்கை சுற்றளவு, நாடித்துடிப்பு, சுவாசவீதம், இரத்த அழுத்தம், இரத்த சோகை, இரத்த சர்க்கரை அளவு மற்றும் இரத்த உயிர்வாயு அளவீடு (SPO2) போன்றவைகள் அளவிடப்பட்டு ஆரம்ப மதிப்பீட்டு அட்டையாக மருத்துவரை பார்ப்பதற்கு முன் நோயாளிகளுக்கு வழங்கப்படுகிறது.
- "மருத்துவத்தின் எதிர்காலம்" என்ற தலைப்பில் கலைஞர் நூற்றாண்டு சர்வதேச மருத்துவ மாநாடு 2024 சென்னை நந்தம்பாக்கத்தில் உள்ள சென்னை வர்த்தக மையத்தில் 11,000 பிரதிநிதிகள், 210 புகழ்பெற்ற பேச்சாளர்கள், 28 சர்வதேசப் பேச்சாளர்கள் மற்றும் 70 நாடுகள் மற்றும் 600 அறிவியல் ஆராய்ச்சிகளின் பங்கேற்புடன் வெற்றிகரமாக நடத்தப்பட்டு, "மருத்துவத்தின் எதிர்காலம்" என்ற கருப்பொருளின் சுருக்கங்கள் விவாதிக்கப்பட்டன.

- "மருத்துவக் கல்வி இயக்ககம்" என்ற பெயர் "மருத்துவக்கல்விமற்றும்ஆராய்ச்சிஇயக்ககம்" என பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.
- புதுக்கோட்டை மாவட்டத்தில் புதிய அரசு பல் மருத்துவக்கல்லூரிமருத்துவமனைரூ.67.83 கோடிமதிப்பீட்டில்கட்டடம்கட்டப்பட்டுள்ளது. மேலும்,ரூ.5.04கோடிமதிப்பீட்டில்உபகரணங்கள் வழங்கப்பட்டுமக்களின்பயன்பாட்டில்உள்ளது.

தமிழ்நாடு மாநில பார்வை இழப்பு தடுப்பு சங்கம்

- 6.79 இலட்சம் நோயாளிகளுக்கு அவசரகால முற்றியகண்புரைஅறுவைசிகிச்சைகள்89அரசு மருத்துவமனைகள்மற்றும்61தனியார்தொண்டு நிறுவனங்கள் மூலம் மேற்கொள்ளப்பட்டு செயற்கைIOLலென்ஸ்பொருத்தப்பட்டுள்ளது.
- 20கண் வங்கிகள் மூலம் சுமார் 21,818 கண்கள் தானமாகப் பெறப்பட்டு கண் கருவிழி மாற்று அறுவைசிகிச்சைக்குபயன்படுத்தப்பட்டுள்ளது. இணைய செயலி உருவாக்கியதின் மூலம் சென்ற ஆண்டு சுமார் 10,000 கண் கொடையாளர்கள் தங்கள் கண்களை தானம் செய்வதற்கு பதிவு செய்துள்ளனர்.
- பள்ளி சிறார்களுக்கு இலவசமாக கண் பரிசோதனை செய்து சுமார் 6.26 இலட்சம் மாணவர்களுக்கு மூக்கு கண் கண்ணாடி வழங்கப்பட்டுள்ளது.
- முதியோர்களுக்கு கிட்டப் பார்வைக் குறைபாடுகளை சரி செய்வதற்கு 50,000 கண் கண்ணாடிகள் வழங்குவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டு தயார்நிலையில் உள்ளது.
- தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள அரசு இராசாமிராசுதார் மருத்துவமனையில் "மண்டல கண் சிகிச்சை மையம்" சுமார் ரூ.16.5 கோடிச் செலவில் கட்டுமானப் பணிகள் நிறைவடைந்துள்ளது.
- சென்னைமண்டலகண்சிகிச்சைநிலையத்தில் ரூ.65.60கோடிச்செலவில்இருநூறாண்டுவிழா கட்டடம் கட்டப்பட்டு, ரூ.8 கோடிச் செலவில் உயர்தர உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளது.
- திருவள்ளூர், சேலம், இராமநாதபுரம், கரூர், திருவண்ணாமலை,தஞ்சாவூர்,நாகப்பட்டினம் மற்றும்கடலூர்மாவட்டங்களில்ரூ.2.40கோடிச் செலவில்நடமாடும்கண் சிகிச்சைப்பிரிவுகள் நிறுவப்பட்டுள்ளது.
- திருவள்ளூர், தென்காசி, திருப்பத்தூர், குடியாத்தம், காஞ்சிபுரம், மயிலாடுதுறை, மன்னார்குடி, சீர்காழி, திருத்தணி மாவட்ட தலைமை மருத்துவமனைகள் மற்றும் ஆற்காடு, பெரியகுளம், ஸ்ரீரங்கம், மேட்டூர், பத்மநாபபுரம், பரமக்குடி, பட்டுக்கோட்டை, பாலக்கோடு, ஆத்தூர், இராஜபாளையம், கோபிசெட்டிபாளையம், குளித்தலை, வந்தவாசி, கம்பம், துணை மாவட்ட மருத்துவமனைகள் மற்றும் தாம்பரம், ஸ்ரீபெரும்புதூர் கண் வங்கிகள் என மொத்தம் ரூ.7.25 கோடிச் செலவில் கண் மருத்துவ உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளது.
- TN RAAB DR கணக்கெடுப்பு 2021-2022" மாவட்ட வாரியாக குருட்டுத்தன்மையின் பாதிப்பு (0.33 சதவிகிதம்) மற்றும் நீரிழிவு ரெட்டினோபதியின் பரவலை மதிப்பிடுவதற்காக கள ஆய்வுகள் முடிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு மாநில எய்ட்ஸ் கட்டுப்பாடு சங்கம்

- 2022-2023ஆம் ஆண்டில் எச்.ஐ.வி/ எய்ட்ஸ் தடுப்பு, பராமரிப்பு மற்றும் ஆதரவு சேவைகளுக்காக தேசிய எய்ட்ஸ் கட்டுப்பாடு நிறுவனத்தால்தமிழ்நாடு "சிறந்தசெயல்திறன் மாநிலம்" என விருது பெற்றுள்ளது.
- தமிழ்நாடு மாநில எய்ட்ஸ் கட்டுப்பாடு சங்கத்தின் ஒருங்கிணைக்கப்பட்ட ஆலோசனை மற்றும் பரிசோதனை மையங்களின் சேவைகள் 2023இல் கர்ப்பிணித் தாய்மார்களிடையே இருந்த எச்.ஐ.வி பாதிப்பு, 0.17 சதவிகிதமாகக் குறைந்து, இன்று வரை அதே பரவல் விகிதத்தை பராமரிக்கிறது.
- தமிழ்நாடு மாநில எய்ட்ஸ் கட்டுப்பாடு சங்கம் எச்.ஐ.வி / எய்ட்ஸால் பாதிக்கப்பட்டு அனாதையாக்கப்பட்ட 6,786 குழந்தைகளுக்கு ரூ.2.17 கோடி நிதியுதவியை 2022-2023ஆம் ஆண்டில் அளித்துள்ளது. அதனை தொடர்ந்து



2023–2024ஆம் ஆண்டில் தமிழ்நாடு எய்ட்ஸ் கட்டுப்பாடு சங்கத்தால் 7,303 குழந்தைகளுக்கு ரூ.2.29 கோடி நிதியுதவியை அளித்துள்ளது.

தமிழ்நாடு மருத்துவப் பணிகள் கழகம்

- ரூ.3,888.52 கோடி மதிப்பில் மருந்துகள் மற்றும் ரூ.1,875.26 கோடி மதிப்பில் மருத்துவ உபகரணங்களை கொள்முதல் செய்து வழங்கியுள்ளது.
- கோவிட்–19க்கு ரூ.494.89 கோடி மதிப்பில் மருந்துகள் மற்றும் ரூ.393.85 கோடி மதிப்பில் உபகரணங்களை கொள்முதல் செய்து வழங்கியுள்ளது.
- 10 அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் டெலிகோபால்ட் மையங்கள் நிறுவப்பட்டுள்ளன.
- சென்னை, ஓமந்தூரார், தமிழ்நாடு அரசு பன்னோக்கு சிறப்பு மருத்துவமனையில் பிராக்கிதெரபி மையம் நிறுவப்பட்டுள்ளது.
- 15 சி.டி.ஸ்கேனர்கள் மற்றும் 7 எம்.ஆர்.ஐ. ஸ்கேனர்களையும் வாங்கியுள்ளது.
- திருப்பத்தூர், செங்கல்பட்டு, தென்காசி, கள்ளக்குறிச்சி மற்றும் மயிலாடுதுறை ஆகிய இடங்களில் புதிய மருத்துவக் கிடங்குகள் கட்டும் பணி நடைபெற்று வருகிறது.
- 52.50 இலட்சம் நோயாளிகள் சி.டி. ஸ்கேனர்களால் பயன்.
- 4.96 இலட்சம் நோயாளிகள் எம்.ஆர்.ஐ. ஸ்கேனர்களால் பயன்.
- 5,239 நோயாளிகள் லித்தோட்ரிப்சி இயந்திரத்தால் பயன்.

தமிழ்நாடு மாநில சுகாதாரப் போக்குவரத்துத் துறை

பொது சேர்ம திட்டம்

- ஒப்புவிக்கப்படும் உபயோகப்படுத்தப்பட்ட 108 அவசர ஊர்திகளை தேவைப்படும் பிற திட்டங்களுக்கு முறையான மற்றும் வெளிப்படையான வழிமுறைகளைப் பின்பற்றி மாற்றுவதற்கும் இத்துறையினால் 'சுகாதாரத் துறை வாகன பொது சேர்ம திட்டம்' செயல்படுத்த ஒப்புதல் வழங்கப்பட்டு, செயல்படுத்தப்பட்டு வருகிறது.

குறைகளைவு திட்டம்

- ஒற்றைச்சாளர முறையில்



24x7 குறைகளைவு திட்டம் ஒன்று 'சுகாதாரத்துறை வாகன பராமரிப்பு உதவி மற்றும் தகவல் திட்டம்' என்ற பெயரில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. சம்மந்தப்பட்ட அலுவலர்கள் மற்றும் ஓட்டுநர்கள் வாகனம் தொடர்பாக எதிர்கொள்ளும் அனைத்து இடர்பாடுகளையும் திட்ட உதவி எண். 94896 21111 இல் தொடர்பு கொண்டு தீர்வு செய்து கொள்ள வழிவகை செய்யப்பட்டு, 215 புகார்கள் பெறப்பட்டு, தீர்வு செய்யப்பட்டுள்ளன.



கருத்து கேட்புத் திட்டம்

❖ கருத்து கேட்புத் திட்டத்தின் மூலம் 7,518 ஓட்டுநர்கள் தொடர்பு கொள்ளப்பட்டனர்.

கழிவு செய்யப்பட்ட வாகனங்கள் மின்னணு ஏல முறையில் உடனுக்குடன் தீர்வு செய்தல்

❖ மருத்துவம் – மக்கள் நல்வாழ்வுத்துறையைச் சார்ந்த அனைத்து இயக்குநரகங்களின் கழிவு செய்யப்பட்ட வாகனங்கள் MSTC நிறுவனம் நடத்தும் மின்னணு ஏலம் மூலம் இத்துறையினால் தாமதமின்றி உடனுக்குடன் தீர்வு செய்யப்பட்டு, 855 கழிவு வாகனங்கள் மின்னணு ஏலமுறையில் தீர்வு செய்யப்பட்டுள்ளன.

தொடங்கப்பட்ட புதிய ஏழு சிறு பணிமனைகள்

❖ வாகனங்களின் பராமரிப்புப் பணிகளை மேம்படுத்துவதற்கும், துறையினால் வழங்கப்படும் சேவைகளை தாமதமில்லாமல் வழங்குவதற்கும், ஏழு சிறு பணிமனைகள் புதியதாக தொடங்கப்பட்டு, செயல்பட்டு வருகின்றன.

வாகன தணிக்கை

❖ 3,161 வாகனங்களில் முழுமையான மற்றும் விரிவான 'வாகன தணிக்கை' மேற்கொள்ளப்பட்டு, விரிவான தணிக்கை அறிக்கைகள் சம்பந்தப்பட்ட இயக்குநர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

❖ ❖ ❖

வணிகவரிகள், பதிவு மற்றும் முத்திரைத்தாள் சட்டம், எடைகள் மற்றும் அளவைகள், கடன் கொடுத்தல் குறித்த சட்டம் உள்ளிட்ட கடன் நிவாரணம், சீட்டுகள் மற்றும் கம்பெனிகள் பதிவு



திரு. பி.மூர்த்தி அவர்கள்

மாண்புமிகு வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர்

வணிகவரித் துறை

வருவாய் விவரங்கள்

- வணிகவரித் துறையில், 2022–2023ஆம் ஆண்டில் ரூ.1,33,540.70 கோடி மொத்த வருவாய் (சரக்குகள் மற்றும் சேவைகள் வரி இழப்பீடு, தற்காலிக ஒருங்கிணைந்த சரக்குகள் மற்றும் சேவைகள் வரி தீர்வு மற்றும் இடைக்கால ஒருங்கிணைந்த சரக்குகள்மற்றும்சேவைகள்வரிதீர்வுஉட்பட)வசூலிக்கப்பட்டுள்ளது.இதுமுந்தைய ஆண்டு (2021–2022)வசூலிக்கப்பட்ட ரூ.1,04,970.06 கோடியுடன் ஒப்பிடுகையில், 27.22 சதவிகித வளர்ச்சி விகிதத்துடன் ரூ.28,570.64 கோடி வருவாய் அதிகமாக ஈட்டப்பட்டுள்ளது.2023–2024ஆம்நிதிஆண்டில்,ஜனவரி2024வரையில்மொத்தம் ரூ.1,01,234.95 கோடி வசூலிக்கப்பட்டது.

நிருவாக சீர்திருத்தங்கள்

- 2023–2024ஆம் ஆண்டில், துறையின் மறுசீரமைப்பின் ஓர் அங்கமாக, ஏழு புதிய நிருவாகக்கோட்டங்களும்மற்றும்ஆறுபுதியநுண்ணறிவுக்கோட்டங்களும்உருவாக்கம்.
- 13 புதிய வணிகவரி மாவட்டங்களை வருவாய் மாவட்டங்களுக்கு இணையாக வணிகவரித் துறையில் உருவாக்கம்.

- அரசுக்கு வருவாயைப் பெருக்கவும் துறையின் வெட்டு விளிம்பு நிலையில் மனித வளத்தை அதிகரிக்கவும் 1,000 உதவியாளர் பணியிடங்களை, 840 துணை வணிகவரி அலுவலர் பணியிடங்களாகவும் 160 வணிக வரி அலுவலர் பணியிடங்களாகவும் உயர்த்தப்பட்டுள்ளது. இதன் மூலம், வரி நிலுவைகளை வசூலித்தல், தணிக்கை மற்றும் ஆய்வு ஆகிய பணிகளை மேலும் திறம்பட செயல்படுத்த முடியும்.
- உரிய வரி செலுத்தப்படுவதை உறுதி செய்ய, சுற்றும்படைகளின் எண்ணிக்கை 53–லிருந்து 100–ஆக உயர்வு. 100 புதிய வாகனங்கள் சுற்றும் படை அலுவலர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

பெட்ரோல் மீதான வரி விகிதக் குறைப்பு

- பெட்ரோல் விலை லிட்டருக்கு ரூ.3/– குறைக்கப்பட்டது.

சமாதானத் திட்டம்

- வணிகர்கள் பயனடையும் வகையில், 16.10.2023 முதல் 15.02.2024 வரையிலான நான்கு மாதங்களுக்கு தமிழ்நாடு (வரி நிலுவைகள் தீர்வு) சட்டம், 2023 (சட்டம் 24/2023) என்னும் சமாதானத் திட்டம் அறிமுகம். இத்திட்டத்தில் 1,15,805 இனங்களில், ரூ.142.56 கோடி கேட்புத் தொகைக்கு வரி தள்ளுபடி ஆணைகள்.
- முந்தைய சட்டங்களின்கீழ் 2022–2023 மற்றும் 2023–2024. ஆம் நிதியாண்டுகளில் ரூ.171 கோடி அளவிலான வரி, தண்டத்தொகை மற்றும் ஆகியவை தள்ளுபடி. 2,233 வணிகர்கள் பயன். சமாதானத் திட்டம் 31.03.2024 வரை நீட்டிப்பு.

தமிழ்நாடு வணிகர் நல வாரியம்

- தமிழ்நாடு வணிகர் நல வாரியத்தில் உறுப்பினர் சேர்க்கை மேற்கொள்ள புதிய இணைய வழி வசதி.
- கோவிட்–19 பெருந்தொற்றின் காரணமாக, தமிழ்நாடு வணிகர் நல வாரியத்தில் வாழ்நாள் உறுப்பினராவதற்குப் பதிவுக் கட்டணம் ரூ.500 செலுத்துவதிலிருந்து 15.07.2021 முதல் 31.03.2022 வரை விலக்களிக்கப்பட்டு 40,994 வணிகர்கள் உறுப்பினர்களாக இணைந்துள்ளனர்.
- உறுப்பினர்களுக்கு, திருமண உதவி ரூ.10,000 விபத்துக்கால உதவி ரூ.25,000 ஆகிய இரு புதிய உதவி நலத் திட்டங்கள் அறிமுகம்.
- தமிழ் நாடு வணிகர் நல வாரியத்தின் மறைந்த உறுப்பினர்கள் குடும்பத்திற்கு வழங்கப்பட்டு வரும் குடும்ப நல உதவித் தொகை ரூ.1 இலட்சத்திலிருந்து ரூ.3 இலட்சமாக உயர்வு.
- தமிழ்நாடு வணிகர் நல வாரிய உறுப்பினர்களின் வணிகத் தலங்களில் ஏற்படும் தீ விபத்திற்கு வழங்கப்பட்டு வரும் இழப்பீட்டு உதவித் தொகை ரூ.5,000 லிருந்து ரூ.20,000 ஆக உயர்வு.

உள்கட்டமைப்பு – கட்டடங்கள்

- தனியார் வாடகைக் கட்டடங்களில் இயங்கி வரும் 7 வரிவிதிப்பு அலுவலகங்களுக்கு சொந்த வணிகவரிக் கட்டடங்கள் கட்ட ரூ.964.85 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு சொந்த கட்டடங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.
- ரூ.277 இலட்சம் மதிப்பீட்டில் மதுரை ஒருங்கிணைந்த வணிகவரிக் கட்டடத்தினை புதுப்பிப்பதற்கு நிதி ஒதுக்கீடு, புனரமைப்புப் பணிகள் நிறைவடைந்துவிட்டன. மைலாப்பூர் வட்டாட்சியர் அலுவலகத்தில் இயங்கி வரும் வணிகவரி அலுவலகங்களை புனரமைப்பதற்காக ரூ.908 இலட்சம் நிதி ஒதுக்கீடு.





பதிவுத்துறை

போலியான முறையில் பதிவு செய்யப்பட்ட ஆவணத்தை இரத்து செய்தல்

❖ மோசடியாக மற்றும் போலியான முறையில் பதிவு செய்யப்பட்ட ஆவணங்கள் மீதான புகார் மனுக்கள் அடிப்படையில் ஆவணத்தை இரத்து செய்வதற்கு பதிவு சட்டம் 1908இல் பிரிவு 77 உட்புகுத்தப்பட்டுள்ளது. இச்சட்டம் நடைமுறைக்கு வந்துள்ளதால் தங்கள் சொத்து மீது மோசடியாக மற்றும் போலியான முறையில் ஆவணங்கள் பதிவு செய்யப்பட்டதால் பாதிக்கப்பட்ட நபர்கள் சம்பந்தப்பட்ட மாவட்ட பதிவாளரிடம் முறையிட்டு தீர்வு பெறலாம்.

சிலவகையான ஆவணங்களை இணைய வழியாக தாக்கல் செய்திடும் வசதி –

❖ வங்கிகளுக்கு எழுதிக்கொடுக்கப்படும் உரிமை ஆவணங்களின் ஒப்படைப்பு ஆவணங்கள், உள்ளிட்ட 18 வகை ஆவணங்களை, இணைய வழியாக தாக்கல் செய்து பதிவு செய்திட ஏதுவாக பதிவு சட்ட திருத்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டதால் மேற்கண்ட ஆவணங்கள் பதிவு செய்வதற்கு பொதுமக்கள் சார்பதிவாளர் அலுவலத்திற்கு நேரடியாக வருகை தரவேண்டிய தேவை ஏதும் இல்லாமல் இணையவழியாகவே ஆவணப் பதிவு மேற்கொள்ளலாம்.

1865 லிருந்து இணையவழி சான்றளிக்கப்பட்ட நகல்

❖ கணினிமயமாக்கல் காலத்திற்கு முன்னதாக பதியப்பட்ட ஆவணங்களின் சான்றளிக்கப்பட்ட நகல்களை எளிதாகப் பெறுவதற்கு, அதாவது, துறையின் தொடக்கக் கால 1865 முதல் 05.07.2009 வரையான காலத்திற்கான சான்றளிக்கப்பட்ட நகல் பெறும் வசதி.

❖ ஆவணங்களின் விலங்கச் சான்று விவரங்களை ஆவணதாரரால் அளிக்கப்பட்ட கைபேசி எண்ணுக்குப் (Mobile No.) ஆவணம் பதிவு செய்த உடன் அனுப்புதல் திட்டம்.

பெயர் அழைக்கும் டோக்கன் கருவிகள்

❖ டோக்கன் மேலாண்மை முறையின்கீழ், பதிவு செய்பவர்களின் வரிசைக்கிரமமான பதிவு முறை மேற்கொள்ள இதனை மேலும் எளிமையான மற்றும் சிறந்த முறையில் அளித்திட பெயர் அழைக்கும் கருவிகள் அனைத்து சார்பதிவாளர் அலுவலகங்களிலும் நிறுவப்பட்டுள்ளன.

வேலைக்கு செல்வோர் பயன் பெறுவதற்காக பதிவு அலுவலகங்கள் சனிக்கிழமைகளில் செயல்படுதல்

❖ அலுவலகங்களில் பணியாற்றும் பொதுமக்களின் வசதிக்காக விடுமுறை நாளன்று பதிவுப் பணியை

மேற்கொள்ளும்வகையில்மாநிலத்தில்அதிகம் பதிவு மேற்கொள்ளப்படும் 100 சார்பதிவாளர் அலுவலகங்கள்,ஆவணபதிவிற்காகஅனைத்து சனிக்கிழமைகளிலும்முழுநாளும்செயல்பட்டு வருகின்றன.

தட்கல் டோக்கன் முறை

❖ மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் தெரிவு செய்யப்பட்ட100சார்பதிவாளர்அலுவலங்களில் தட்கல் முறையில் ஒரு தட்கல் டோக்கனுக்கு ரூ.5,000 வசூலிக்கப்பட்டு ஆவணத்தை பதிவு செய்யும் திட்டம் தொடங்கிவைக்கப்பட்டது.

பதிவின் போது மூத்த குடிமக்களுக்கு முன்னுரிமை

❖ ஆவணங்களை பதிவு செய்வதில் FIFO (First In FirstOut)முறைசார்பதிவாளர் அலுவலகங்களில் செயல்படுத்தபட்டு வருகிறது. 70 வயதைத் தாண்டிய மூத்த குடிமக்கள் அலுவலகத்தில் காத்திருக்காமல் அவர்கள் அலுவலகத்திற்கு வருகை புரிந்த உடனேயே எளிதாகப் பதிவு நடவடிக்கைகள் மேற்கொள்ள இந்தத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

இணைய வழி அட்டவணை திருத்தம் மற்றும் திருமண பதிவு திருத்தம்

❖ பொதுமக்களின் நேரத்தை சேமித்திடவும், சார்பதிவாளர் அலுவலகங்களில் தேவையற்ற அலுவலக நேரடி வருகையை தவிர்த்திடவும் இணையவழியில் வில்லங்கச் சான்று மற்றும் திருமண பதிவில் திருத்தங்கள் மேற்கொண்டு உரியசார்பதிவாளர்அலுவலகங்களுக்குஅனுப்ப வழிவகை.

அனைத்து வகை ஆவணங்களுக்கும் ஆவண சொத்து குறித்து Geo-Coordinates (புவியியல் ஆயங்கள்) உடன் புகைப்படம் இணைத்தல்

❖ போலி ஆவண பதிவினை அறவே நீக்கிடவும் அரசுக்கு ஏற்படும் வருவாய் இழப்பினை தடுத்திடவும் அனைத்து வகை ஆவணங்களுக்கும் ஆவண பதிவின்போது ஆவணசொத்துகுறித்துஅதன்Geo-Coordinates (புவியியல் ஆயங்கள்) உடன் புகைப்படம் இணைக்க அரசால் ஆணை.

அரசு நிலங்கள் பதிவு தன்னிச்சையாக தடுக்கப்படுதல்

❖ அரசு தடைசெய்யப்பட்ட நிலங்களை பதிவு செய்வதை தன்னிச்சையாக தடுப்பதற்கு மென்பொருளில்மாற்றங்கள்உருவாக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

❖ ஆவணப் பதிவின்போதேTNEB, GCC சொத்து வரி மற்றும் CMWSSB ஆகியவற்றில் இணையவழி தன்னிச்சையாக பெயர் மாற்றத்திற்கான விண்ணப்ப வசதி.

❖ ஆதார் விவரங்களுடன் ஆவணத்தை எழுதிக்கொடுப்பவர் மற்றும் எழுதிவாங்குபவர் கைவிரல் கூடிய ரேகை பதிவு/ கருவிழி சரிபார்ப்பு முறை அனைத்து சார்பதிவாளர் அலுவலங்களிலும் செயல்பட்டு வருகிறது.

❖ சார்பதிவாளர் அலுவலக பதிவறைகளில் இரண்டு ஐபி கேமராக்கள் பொருத்தும் திட்டம்.

ஒருங்கிணைந்த உதவி மையம்

❖ துறை சார்ந்த சேவைகளை எளிதாக அறிந்து கொள்ளவும் மற்றும் சந்தேகளுக்கான தெளிவுரைகளுக்கும் சமூக ஊடகங்களான வாட்ஸ்அப் செயலி, யூ டியூப் சேனல்கள் போன்றவைகள் மூலம் அளித்திட ஒருங்கிணைந்த உதவி மையம் ஏற்படுத்தி, www.tnreginet.gov.in என்ற துறை இணையதளத்தில்15வீடியோக்கள் வெளியீடு.

திங்கட்கிழமைகளில் குறைதீர்க்கும் நாள்

❖ துணை பதிவுத்துறை தலைவர்கள் மற்றும் மாவட்டப் பதிவாளர்கள் ஒவ்வொரு திங்கள் கிழமையன்றும் குறைதீர்க்கும் நாள் முகாமை தங்கள் அலுவலகத்தில் நடத்துகின்றனர். இம்முகாம்களில் பெறப்படும் மனுக்கள் மற்றும் புகார்கள் உடனடியாக பரிசீலிக்கப்பட்டு பொதுமக்களின்குறைகள்உடனுக்குடன்தீர்வு.

பதிவுத்துறை மூலம் ஈட்டப்பட்ட வருவாய்

❖ அரசுக்குவருவாய்ஈட்டிதருவதில்பதிவுத்துறை 2ஆம் இடத்தில் உள்ளது. தற்போதைய நிதியாண்டில்21.02.2024முடியரூ.16,092.95கோடி வருவாய்29,41,727ஆவணங்கள்பதிவுசெய்ததன் மூலம்ஈட்டப்பட்டுள்ளது.தற்போதுள்ளவருவாய் போக்கின்படிசென்றநிதியாண்டில்ஈட்டப்பட்ட வருவாயானரூ.17,296.84கோடியைவிடநடப்பு நிதியாண்டு முடிவில் அதிகமாக ஈட்டப்படும்.



- சொத்து பரிமாற்றம் தொடர்பான ஆவணங்களுக்கான பதிவுக் கட்டணம் 4சதவிகிதத்திலிருந்து2சதவிகிதமாககுறைப்பு.

வழிகாட்டி மதிப்பு சீரமைத்தல்

- சந்தை மதிப்பு வழிகாட்டிகளில் உள்ள முரண்பாடுகளைசரிசெய்யவும்சரியானசந்தை வழிகாட்டி மதிப்பை நிர்ணயம் செய்யவும் 'வழிகாட்டி மதிப்பு சீரமைத்தல் குழு' ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.இந்தஉயர்மட்டக்குழு, மாண்புமிகு வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சரின்தலைமையிலானவழிகாட்டுதல் குழுவின் கண்காணிப்பின் கீழ் இயங்கும். உயர்மட்டக்குழுவின்பரிந்துரைகள்ஏற்கெனவே உள்ளநடைமுறைகளின்படிமதிப்பீட்டுக்குழு மற்றும்துணைகுழுவினரால்பரிசீலிக்கப்பட்டு ஒப்புதல்பெறப்பட்டுநடைமுறைப்படுத்தப்படும்.

- கட்டடமதிப்பு மற்றும் பிரிபடாத நில மதிப்பு உள்ளடக்கிய கூட்டு மதிப்பு அடிப்படையில் முதல் விற்பனை ஆவணம் பதிவு செய்திட நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

- ஆவணப்பதிவில் அரசுக்கு ஏற்பட்ட முத்திரைத்தீர்வை மற்றும் பதிவுக்கட்டண இழப்புகளை விகிதாச்சார அடிப்படையில் வசூலித்தல்மற்றும்தொடர்ஆவணப்பதிவுகளை அனுமதித்தல்–இதன்காரணமாகபொதுமக்களின் சிரமம் குறைக்கப்பட்டு அரசின் இழப்பும் வசூலித்திட வழிவகை செய்யப்பட்டுள்ளது.

நம்பிக்கை இணையம் (பிளாக் செயின்) தொழில்நுட்பம்

- 01.05.2023 முதல் ஒளிவருடல் செய்யப்பட்ட பதிவு ஆவணங்களில் அனைத்திலும் இத்தொழில்நுட்பமுறை முதல் கட்டமாக 13.06.2023 முதல் செயல்படுத்தப்பட்டுள்ளது. இந்த முறையின் கீழ் இலக்கமயமாக்கப்பட்ட ஆவணங்கள் நேர முத்திரையைக் கொண்டிருப்பதால், பதிவு செய்யப்பட்டஆவணங்களின்உண்மைத்தன்மை மற்றும் திருத்தம் மற்றும் ஏனைய மோசடிகளுக்கு வழிவகுக்காமல் உறுதி செய்யப்படுகிறது.

- தமிழ்நாடு ஆவண எழுத்தர்கள் நல நிதியம் 2022 – பதிவுத்துறையைச் சார்ந்து பணிபுரியும் ஆவண எழுத்தர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினரின் நலனுக்காக, ஓய்வூதியம், விபத்துக்கால மரண இழப்பீடு, நிரந்தர/ பகுதி ஊனத்திற்கான இழப்பீடு, இயற்கை மரணத்திற்கான இழப்பீடு, மகப்பேறு உதவித் தொகை,ஈமச்சடங்குஉதவித்தொகைமற்றும் உறுப்பினர்களின் குழந்தைகளுக்கு கல்வி உதவித் தொகை உறுப்பினர்களுக்கு மூக்குக்கண்ணாடி உதவித் தொகை போன்ற நலத்திட்டங்களை செயல்படுத்திட ஆவண எழுத்தர் நல நிதியம் நடைமுறைபடுத்தப்பட்டுள்ளது.

இந்திய கிறித்துவ திருமண சான்று உண்மை வடிப்புகள் மண்டல துணை பதிவுத்துறை தலைவர்களால் வழங்கப்படுதல்

❖ கிறித்துவபொதுமக்களின்நலன்கருதி,இந்திய கிறித்துவ திருமண சான்று வடிப்புகளின் உண்மை நகல்களை வழங்குவதற்கான அதிகாரம்பதிவுத்துறையில்உள்ள10மண்டல துணைப்பதிவுத்துறை தலைவர்களுக்கு வழங்கபட்டு,நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

இந்திய கிறித்துவ திருமண பதிவு மேற்கொள்ள புதிய வசதி

❖ இந்தியகிறித்துவதிருமணச்சட்டம்,1872இன்படி இந்திய கிறித்துவர்களுக்கு திருமணத்தை நடத்திவைக்கும் கிறித்துவ குருமார்களும் மற்றும் திருமணத்தை நடத்தி வைக்க அரசு உரிமம் பெற்ற உரிமதாரர்களும் இணைய வழியாகவே விண்ணப்பித்து திருமணத்தைப் பதிவுசெய்துகொள்வதற்கானபுதியநடைமுறை துவக்கி வைக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது.

அதிக ஆவணப்பதிவு நடைபெறும் சார்பதிவாளர் அலுவலகங்களில் பொதுமக்களுக்கு சிறப்பு வசதிகளுடன் அடிப்படை கட்டமைப்புகளை அமைத்தல்

❖ அதிகபதிவுகள்நடைபெறும்அலுவலகங்களில் பொதுமக்களுக்கான மேம்படுத்தப்பட்ட அடிப்படை கட்டமைப்புகள் மற்றும் வசதிகள் தென் சென்னை பதிவு மாவட்டத்திலுள்ள குன்றத்தூர் மற்றும் கோயம்புத்தூர் பதிவு மாவட்டத்திலுள்ள காந்திபுரம் சார்பதிவாளர் அலுவலகங்களில் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

புதிய பதிவு மண்டலங்கள் உருவாக்கம்

❖ மதுரைமண்டலத்தைப்பிரித்துஇராமநாதபுரத்தை தலைமையிடமாகக் கொண்டு புதிய பதிவு மண்டலம் உருவாக்கப்பட்டு 29.12.2022 முதல் இயங்கி வருகிறது. சென்னை பதிவு மண்டலத்தைப் பிரித்து செங்கல்பட்டை தலைமையிடமாக கொண்டு புதிய பதிவு மண்டலம்உருவாக்கப்பட்டு27.04.2023முதல் இயங்கி வருகிறது.

புதிய பதிவு மாவட்டங்கள் உருவாக்கம்

❖ திருவள்ளூர்திருப்பத்தூர்,பெரம்பலூர்திருவாரூர் மற்றும் இராணிப்பேட்டை ஆகிய இடங்களில் புதியதாகபதிவுமாவட்டங்கள்உருவாக்கப்பட்டு 26.04.2022 முதல் செயலாக்கத்தில் உள்ளது. தென்சென்னை பதிவு மாவட்டத்தைப் பிரித்து புதியதாக தாம்பரம் பதிவு மாவட்டமும், கோயம்புத்தூர் பதிவு மாவட்டத்தைப் பிரித்து புதியதாக கோயம்புத்தூர் (வடக்கு) மற்றும் கோயம்புத்தூர் (தெற்கு) பதிவு மாவட்டமும் உருவாக்கப்பட்டு அலுவலகங்கள் 27.04.2023 முதல் செயல்பட்டு வருகிறது.

புதிய சார்பதிவாளர் அலுவலகங்கள் உருவாக்கம்

❖ பதிவுத்துறையில்கடந்தமூன்றுஆண்டுகளில் பொதுமக்களின் வசதிக்காகதிருப்பத்தூர் பதிவு மாவட்டத்தில் 2–எண் இணை சார்பதிவாளர் அலுவலகம்,மதுரை(தெற்கு)பதிவுமாவட்டத்தில் சாமநத்தம் சார்பதிவாளர் அலுவலகம், மதுரை (வடக்கு)பதிவுமாவட்டத்தில்பொதும்பு,மேலூர் கிழக்கு, செட்டிக்குளம் மற்றும் காதக்கிணறு ஆகியஇடங்களில்சார்பதிவாளர்அலுவலகங்கள் மற்றும் திருச்சிராப்பள்ளி பதிவு மாவட்டத்தில் தில்லை நகர் மற்றும் காணக்கிளியநல்லூர் ஆகிய புதிய சார்பதிவாளர் அலுவலகங்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

சார்பதிவாளர் அலுவலக எல்லைகள் சீரமைத்தல்

❖ மதுரை வருவாய் மாவட்டத்தைப் பொருத்து மதுரை (தெற்கு) மற்றும் மதுரை (வடக்கு)பதிவுமாவட்டங்களில்அமைந்துள்ள சார்பதிவாளர் அலுவலகங்களின் எல்லைகள், வருவாய் வட்டங்கள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்களின்அடிப்படையில்மறுசீரமைப்பு செய்யப்பட்டுள்ளன.

குக்கிராமங்கள் வருவாய் கிராமங்களுடன் இணைத்தல்

❖ வருவாய் கிராமங்களுக்கு உட்பட்ட குக்கிராமங்கள் ஒரே சார்பதிவாளர் அலுவலக எல்லைக்குள்அமையப்படவேண்டும்.இதனைத் தொடர்ந்து,மதுரை(வடக்கு),மதுரை(தெற்கு), கிருஷ்ணகிரி, தூத்துக்குடி, விருதுநகர், பாளையங்கோட்டை,செங்கல்பட்டு,காஞ்சிபுரம், திருவள்ளூர், இராமநாதபுரம், நாகப்பட்டினம், காரைக்குடி,புதுக்கோட்டை மற்றும் அரியலூர் பதிவு மாவட்டங்கள் சீரமைக்கப்பட்டுள்ளன.

❖ ❖ ❖

போக்குவரத்து, நாட்டுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து மற்றும் இயக்கூர்திச் சட்டம்



திரு. எஸ்.எஸ்.சிவசங்கர் அவர்கள்
மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர்

போக்குவரத்துத்துறை

விடியல் பயணம் (மகளிருக்கான கட்டணமில்லாப் பயண வசதி)

- விடியல்பயணத்திட்டம்மகளிரின்வாழ்வில்விளக்கேற்றும்திட்டம்என்றுஅனைவராலும் பாராட்டப்படுகிற திட்டம்.
- விடியல் பயணத் திட்டம் அமல்படுத்தப்பட்ட பிறகு மகளிர் தங்கள் பயணத்திற்காக குடும்பஉறுப்பினர்கள்யாரையும்எதிர்பார்க்கவேண்டியசூழ்நிலைஇல்லை. பயணக் கட்டணமில்லாமல், ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு செல்ல முடியும் என்பதால் மகளிரின் வாழ்வாதாரம் உயர்ந்துள்ளது. இதனால் சமூகத்தில் மகளிர் சுயமாகதங்களுடையகுடும்பச்சூழ்நிலைகளின்அடிப்படையில்அவர்களாகவேமுடிவு எடுக்கும்நிலைஏற்பட்டுசமூகத்தில்முன்னேற்றம்அடைந்துவருகின்றனர்என்பது இத்திட்டத்தின் முக்கிய சிறப்பம்சமாகும்.
- தமிழ்நாடு மாநிலத் திட்டக்குழு, திருப்பூர் (தொழில்), மதுரை (வர்த்தகம்) மற்றும் நாகப்பட்டினம் (வேளாண்மை) ஆகியமாவட்டங்களில்மேற்கொண்டஆய்வுகளின் மூலம், ஒவ்வொரு மகளிர் பயணியும் அவர்களது மாதாந்திர செலவில் சுமார் ரூ.888/– சேமிக்கின்றனர் என்பது தெரியவந்துள்ளது.
- 31.07.2024வரையில்514.23கோடிபயணநடைகள்மகளிரால்மேற்கொள்ளப்பட்டுள்ளது; (சமவெளி பேருந்துகளில் 513.45 கோடி, மலைப்பகுதி/ பகுதி மலைப்பகுதியில் பேருந்துகளில் 0.78 கோடி).



- சாதாரண நகரப் பேருந்துகளில் மகளிர் மற்றும் திருநங்கைகள், 40 சதவிகிதம் மற்றும் அதற்கு மேற்பட்ட ஊனமுடைய மாற்றுத்திறனாளிகள் மற்றும் அவர்களது உதவியாளர்களுக்கு கட்டணமில்லாப் பயண வசதி.
- மகளிர்க்காக சாதாரணக் கட்டணப் பேருந்துகள் இளஞ்சிகப்பு (பிங்க் நிறம்) வண்ணம் தீட்டப்பட்டுள்ளது.
- மகளிரின் எண்ணிக்கைக்கு ஏற்ப சாதாரணக் கட்டணச் சமவெளி நகரப் பேருந்துகளின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டு, தற்போது மொத்தமுள்ள 9,620 நகரப் பேருந்துகளில், 7,207 பேருந்துகள் சாதாரணக் கட்டணச் சமவெளி நகரப் பேருந்துகளாக 5,983 வழித்தடங்களில் தினசரி இயக்கப்படுகின்றன. இது மொத்த நகரப் பேருந்துகளில் 75 சதவிகிதம் ஆகும்;
- மொத்தமுள்ள 476 மலைப்பகுதி / பகுதி மலைப்பகுதி பேருந்துகளில், 155 சாதாரணக்கட்டண மலைப்பகுதி / பகுதி மலைப்பகுதி பேருந்துகளாக 257 வழித்தடங்களில் தினசரி இயக்கப்படுகின்றன. இது மொத்த மலைப்பகுதி / பகுதி மலைப்பகுதி பேருந்துகளில் 32.56 சதவிகிதம் ஆகும்;
- விடியல் பயணத்திற்கான மொத்த சேவைகளின் எண்ணிக்கை தற்போது 6240 வழித்தடங்களில் தினசரி 7,362 பேருந்துகள் இயக்கப்பட்டு தமிழ்நாடு முழுவதும் மிகவும் சிறப்பாக நடைபெற்று வருகிறது.

- ஒரு நாளைக்கு சுமார் 55.34 இலட்சம் மகளிர் பயணிக்கின்றனர்(சமவெளிபேருந்துகளில்–54.85 இலட்சம்,மலைப்பகுதி/பகுதிமலைப்பகுதியில் பேருந்துகளில்–49,000).மொத்தமுள்ளசாதாரணக் கட்டணப் பயணிகளில் மகளிர் பயணிகளின் சதவிகிதம் 65.45 ஆகும்.
- மாற்றுத்திறனாளிகள் மற்றும் அவர்களது துணையாளர்கள் சராசரியாக நாளொன்றிற்கு 51,692 நபர்கள் பயணிக்கின்றனர்.
- மூன்றாம் பாலினத்தவர்கள் 3,350 நபர்கள் பேருந்துகளில் பயணிக்கின்றனர்.

புதிய பேருந்து வழித்தடங்கள் அறிமுகம் மற்றும் நிறுத்தப்பட்ட பேருந்து வழித்தடங்கள் மீண்டும் இயக்குதல்

- 386புதியவழித்தடங்களில்,719பேருந்துகள்புதிய வழித்தடங்களிலும்/வழித்தடம்நீட்டித்தல்மூலம் பேருந்து இயக்கம்.
- 493 வழித்தடங்களில், 609 பேருந்துகள் மூலம் நிறுத்தப்பட்ட பேருந்துகள் மீண்டும் இயக்கம்.

மெட்ரோ இரயில் நிலைய இணைப்பு பேருந்து

- மெட்ரோ இரயில் பயணிகள், விரைவாக பயணம் மேற்கொள்ள மாநகர் போக்குவரத்துக் கழக இணைப்புச் சிற்றுந்துகள், சென்னையில் 30 மெட்ரோஇரயில்நிலையங்களைஇணைத்து56 சிற்றுந்து சேவைகள் தொடக்கம்.

விழாக் காலங்களில் சிறப்புப் பேருந்துகள் இயக்கம்

- விழாக் காலங்களில் சென்னையிலிருந்து, கூடுதலாக சிறப்புப் பேருந்துகள் பல்வேறு நகரங்களுக்கு இயக்கம்.
- விழாக் காலங்களில் சென்னை மற்றும் முக்கிய நகரங்களில்தற்காலிமாகபேருந்துநிலையங்களை ஏற்படுத்தி நகரின் முக்கிய இடங்களிலிருந்து கூடுதல்பேருந்துகள்காலைமுதல்நள்ளிரவுவரை இயக்கம்.
- விழாக் காலங்களில் பேருந்து மற்றும் வழித்தடம் குறித்த விவரங்களை அறிந்துகொள்ள மக்கள் அதிகம் கூடும் இடங்களில் தகவல் மையங்கள் மற்றும் 24 மணி நேர பயணிகள் குறை தீர்ப்பு மையங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

பயணிகளின் குறை தீர்க்கும் வசதி

- ஒருங்கிணைந்தகட்டணமில்லாதொலைப்பேசி எண் (149) அறிமுகபடுத்தப்பட்டுள்ளது
- தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழக முன்பதிவு செய்யும் பயணிகளின் கைபேசிக்கு Feed back இணைப்பு பயணத்தின் முன்பாக அனுப்பப்படும். இதன் மூலம் உணவகங்களில் உள்ள குறை மற்றும்நிறைகளைபதிவிட்டு அனுப்பவழிவகை செய்யப்பட்டு, புகார்கள் மீது உடனடியாக தக்க நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.
- மாணவர்கள் பேருந்து படிக்கட்டில் பயணம் செய்வதை தவிர்க்க, மாவட்ட வாரியாக பள்ளி கல்வித்துறை அலுவலர்கள், தலைமை ஆசிரியர்களுடன் WhatsappGroupஏற்படுத்தப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.
- பயணிகளின் குறைகளை கேட்டறிந்து நிவர்த்தி செய்திட மக்கள் தொடர்பு அலுவலர்களுடன் Grievance Whatsapp Group ஏற்படுத்தப்பட்டுள்ளது.

தமிழ்நாடு அரசு ஒதுக்கீடு செய்த தொகை

- 2021–2022, 2022–2023 மற்றும் 2023–2024 நிதியாண்டுகளில் மகளிர் பேருந்துகளில் கட்டணமில்லாப் பயணம் செய்ததற்கான பயணக்கட்டண இழப்பீடாக அரசு போக்குவரத்து கழகங்களுக்கு ரூ.6,945.6260 கோடியை அரசு விடுவித்துள்ளது. மேலும், 2024–2025 நிதி ஆண்டிற்கு, நிதிநிலை அறிக்கையில் ரூ.3,050 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு. அதில் ஜூன் 2024வரை ரூ.1,034.4653கோடியைஅரசு விடுவித்துள்ளது.
- தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக்கழகங்களுக்கு, டீசல் செலவு அதிகரிப்பு விலையை ஈடு செய்ய 2021–2022, 2022–2023 மற்றும் 2023–2024 நிதியாண்டுகளில் ரூ.4,683.2453 கோடியை தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகங்களுக்கு இழப்பீடாக அரசு வழங்கியுள்ளது.மேலும்,2024–2025நிதிஆண்டிற்கு,நிதிநிலைஅறிக்கையில் ரூ.1,800 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு. அதில், ஜூன் 2024 வரை ரூ.499.0053 கோடியை அரசு விடுவித்துள்ளது.
- பள்ளி கல்லூரியில் படிக்கும் மாணவர்கள் கட்டணமில்லாப்பயணத்திற்கு ஈடுசெய்வதற்கு



2021–2022, 2022–2023 மற்றும் 2023–2024 நிதியாண்டுகளில் ரூ.4,156.0879 கோடியை இழப்பீடு தொகையாக தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகங்களுக்கு வழங்கியுள்ளது. மேலும், 2024–2025 ஆம் நிதி ஆண்டிற்கு, நிதிநிலை அறிக்கையில் ரூ.1,521 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு. அதில், ஜூன் 2024 வரை ரூ.539.2044 கோடியை அரசு விடுவித்துள்ளது.

புதிய பேருந்துகள் மற்றும் பழைய பேருந்துகளை புதுப்பித்தல்

- 2022–2023 ஆம் நிதியாண்டில் 1,000 புதிய பேருந்துகள் கொள்முதல் செய்ய ரூ.420 கோடி ஒதுக்கீடு.
- 2023–2024 ஆம் நிதியாண்டில் 1,000 புதிய பேருந்துகள் கொள்முதல் செய்ய ரூ.446.60 கோடி ஒதுக்கீடு.
- 2024–2025 ஆம் நிதியாண்டில் 3,000 புதிய பேருந்துகள் கொள்முதல் செய்ய ரூ.1,535.89 கோடி ஒதுக்கீடு.
- ஜெர்மன் வளர்ச்சி வங்கி நிதி (kfw) உதவியோடு 2166 BS–VI டீசல் பேருந்துகள் மற்றும் 500 மின்சார பேருந்துகள் கொள்முதல் செய்ய நடவடிக்கை எடுத்து வருகிறது
- SADP திட்டத்தில் கொள்முதல் செய்யப்பட்ட 16 பேருந்துகள் மக்கள் பயன்பாட்டில் உள்ளது.
- மொத்தவுள்ள 7,682 பேருந்துகளில் 31.07.2024 வரை 1,287 புதிய பேருந்துகள் வழித்தடத்தில் அறிமுகப்படுத்தப்பட்டு மக்களின் பயன்பாட்டிற்கு வந்துள்ளது.
- 2022–2023 ஆம் நிதியாண்டில் 1,000 பழைய பேருந்துகளைப் புதுப்பிக்க ரூ.130 கோடி ஒதுக்கீடு.
- 2023–2024 ஆம் நிதியாண்டில் 500 பழைய பேருந்துகளைப் புதுப்பிக்க ரூ.76.34 கோடி ஒதுக்கீடு.
- மொத்தவுள்ள 1,500 பேருந்துகளில் 31.07.2024 வரை 953 பழைய பேருந்துகள் புதுப்பிக்கப்பட்டு வழித்தடத்தில் அறிமுகப்படுத்தப்பட்டு மக்களின் பயன்பாட்டிற்கு வந்துள்ளது.
- மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதல்படி , டீசல் எரிபொருளுக்கு மாற்றாக சுற்றுச்சூழலுக்கு உகந்த சுருக்கப்பட்ட இயற்கை எரிவாய்வு (CNG) மற்றும் திரவ நிலை இயற்கை எரிவாய்வு (LNG) பயன்படுத்தும் அடிப்படையில், குறைந்த கார்பன் உமிழ்வு, அதிகப்படியான கிலோமீட்டர், டீசலைவிட 7 சதவிகிதம் முதல் 20 சதவிகிதம் வரை செலவு குறைந்த பேருந்துகள் அறிமுகப்படுத்தப்பட நடவடிக்கை எடுக்கப்பட்டது.
- சுருக்கப்பட்ட இயற்கை எரிவாய்வு (CNG) ஏழு போக்குவரத்து கழகங்களில் தலா இரண்டு பேருந்துகளில் என்ஜினில் மறுசீரமைப்பு செய்து, மொத்தம் 14 பேருந்துகளும், மாநகர் போக்குவரத்துத்



கழகம் மற்றும் விழுப்புரம் போக்குவரத்துக் கழகங்களில் தலா 2 பேருந்துகளில், திரவ நிலை இயற்கை எரிவாய்வு (LNG) பயன்படுத்தி என்ஜினில் மறுசீரமைப்பு செய்து இயக்கவும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டது.

- இதில் இதுவரை 4 திரவநிலை இயற்கை எரிவாய்வு (LNG) மற்றும் 11 சுருக்கப்பட்ட இயற்கை எரிவாய்வு (CNG) பேருந்துகள் மக்களின் பயன்பாட்டிற்காக இயக்கப்பட்டுள்ளது.

புதிய முயற்சிகள்

- அரசு பேருந்துகளில் பயணிக்கும் பெண்களின் பாதுகாப்பினை உறுதி செய்ய கண்காணிப்பு கேமரா மற்றும் அவசர அழைப்பு பொத்தான் பொருத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இத்திட்டத்தின்படி, சென்னையில் பல்வேறு வழித்தடங்களில் இயக்கப்படும் 2,500 மாநகர் போக்குவரத்துக் கழகப் பேருந்துகள் இத்திட்டத்தின் கீழ் வருகிறது. தற்போது 2,330 பேருந்துகள் மற்றும் பணிமனைகள், பேருந்து நிலையங்கள் என மொத்தமாக 63 இடங்களில் இத்திட்டமானது தொடங்கிவைக்கப்பட்டு, மேலும் இத்திட்டத்தை அனைத்து போக்குவரத்துக் கழகங்களுக்கும் விரிவுபடுத்திட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.
- உணவகங்களை நடத்துவதற்கு மகளிர் சுய உதவி குழுக்களுக்கு முன்னுரிமை திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.
- அரசுவிரைவுப்போக்குவரத்துக்கழகபேருந்துகளில் பயணம் செய்யும் பெண்களுக்கென பிரத்யேக இருக்கைகள் போதுமானஅளவில்இல்லாததால் பெண்கள் தனியாக பயணம் செய்வதை தவிர்க்க பெண்களுக்கென பிரத்யேகமாக 4 இருக்கைகள் ஒதுக்கப்பட்டு 08.05.2023 முதல் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.
- அரசுபோக்குவரத்துக்கழகங்களின்வலைத்தளமான https:www.tnstc.in மூலமும், TNSTC செயலியின் மூலமும்பயணச்சீட்டு முன்பதிவுசெய்யும்திட்டம் பொதுமக்களின்வரவேற்புடன்சிறப்பாகநடைபெற்று வருகின்றது.
- நாளொன்றிற்குசராசரியாக17,000பயணச்சீட்டுகள் OTRS மூலம் முன்பதிவு செய்யப்படுகிறது.
- 200கி.மீ.தொலைவுமற்றும்அதற்குமேல்இயக்கும் அனைத்து தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகப் பேருந்துகளின் இருக்கைகள் OTRS இணையதளத்தில் முன்பதிவு செய்யும் சேவை விரிவுப்படுத்தப்பட்டது.
- வாரநாட்களில்போக்குவரத்துக்கழகபேருந்துகளில் பயணம்செய்யOTRSமூலமாகடிக்கெட்முன்பதிவு செய்யும்பயணிகளைஊக்கப்படுத்தும்வகையில்



"அதிர்ஷ்டசாலிபயணிகளை"ஒவ்வொருமாதமும் குலுக்கல்முறையில்தேர்வுசெய்துமுதல்மூன்று அதிர்ஷ்டசாலி பயணிகளுக்கு ரூ.10,000 பரிசும், அடுத்த10பயணிகளுக்குரூ2000பரிசுத்தொகையும் மொத்தமாகரூ.50,000பரிசுவழங்கப்படுகிறது.இது பயணிகளைபோக்குவரத்துக்கழகபேருந்துகளில் நீண்டதூர பயணத்திற்கு முன்பதிவு செய்யயும் முறையை ஊக்குவிக்கிறது.

- சென்னை பேருந்துச் (Chennai Bus App) செயலி அறிமுகம். தற்போது மாநகர் போக்குவரத்துக் கழகம்மற்றும்அரசுவிரைவுபோக்குவரத்துக்கழக பேருந்துகளும்இதன்கீழ்கொண்டுவரப்பட்டுள்ளது. இது பிற போக்குவரத்துக் கழகங்களுக்கு விரிவுபடுத்தநடவடிக்கைஎடுக்கப்பட்டுவருகிறது. மேலும் I–phone பயணிகளுக்கான (Chennai Bus App) செயலியின் IOS Version (Apple Mobile) அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.
- பேருந்துகளில்புவிசார்தானியங்கிஅறிவிப்பான் மூலம்(GPS)பேருந்துநிறுத்தங்களின்பெயர்களை பயணிகள்முன்னரேஅறிந்துகொள்ளும்வகையில் 612பேருந்துகளில்அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.
- போக்குவரத்துக் கழகங்களில் உள்ள கூட்டாண்மைஅலுவலகம்,மண்டலஅலுவலகம், பணிமனைகள் மற்றும் இதர இடங்களில் 71.20சதவிகிதம்கண்காணிப்புகேமராக்கள்(CCTV) பொருத்தப்பட்டுள்ளது.
- அனைத்துப் போக்குவரத்துக் கழகங்களில் உள்ள அலுலகங்கள் மற்றும் இதர இடங்களில் 99.26 சதவிகிதம் மின்னனு வருகைப்பதிவு செயல்பாடு அமல்படுத்தப்பட்டுள்ளது.
- தமிழ்நாடு மற்றும் அண்டை மாநிலங்களுக்கு இயக்கப்படும்போக்குவரத்துக்கழகபேருந்துகளின் நேரம்,சேவைகள்,பேருந்துகட்டணவிவரங்கள் மற்றும் அரசு போக்குவரத்துக் கழகங்கள் குறித்த தகவல்கள் அடங்கிய தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகங்களுக்கான பொது இணையதளம் (Common Website) பொது மக்கள் அறிந்து கொள்ளும் வகையில் அறிமுகம்.
- ஜெர்மன் வளர்ச்சி வங்கி நிதி KFW உதவியோடு சென்னையில் தேசிய பொது இயக்க அட்டை அமல்படுத்த நடவடிக்கை.
- வணிக மேலாண்மை மென்பொருள் (Enterprise Resource Planning ERP) க்கான ஒப்பந்தப்புள்ளி வெளியிடப்பட்டுமேல்நடவடிக்கைஎடுக்கப்பட்டு வருகிறது.
- ரூ.3கோடிச்செலவில்(KFWஜெர்மனிமேம்பாட்டு வங்கியின் நிதி உதவியுடன்) பேருந்துகளின் வருகை,புறப்பாடு குறித்தநிகழ்நேரத்தகவல்கள் மதுரை மற்றும் கோவை நகரங்களில் மொத்தம் 16பேருந்துமுனையங்களில்இணையவழிதகவல் அமைப்புமூலமாககாட்சிப்படுத்தும்திட்டங்களை விரைந்து முடிக்க நடவடிக்கை.
- புவிசார்தொழில்நுட்பம்மூலம்(GPS)வாகனங்களின் நகர்வுகளைஅறியும்கருவிஜப்பான்பன்னாட்டுக் கூட்டுறவு முகமையின் நிதியுதவியுடன்(JICA) சென்னை நுண்ணறிவு போக்குவரத்து மேலாண்மை அமைப்பின் கீழ் மாநகரப் போக்குவரத்துக் கழகத்தில், வாகன நகர்வைக் கண்காணித்தல், பணிமனை மேலாண்மை, பயணிகளுக்கானதகவல்அமைப்புஆகியவற்றை செயல்படுத்ததிட்ட ஒருங்கிணைப்பாளர்(System Integrator) தேர்வு செய்யப்பட்டுள்ளது. மாநகர் போக்குவரத்துக்கழகம்,பயணிகள்தகவல்அமைப்பை நிறுவுவதற்கான8பேருந்துநிறுத்தங்களைஇறுதி செய்து,கோ–ஆப்டெக்ஸ்,சிம்சன்,ஸ்டெர்லிங்ரோடு, பெரியார்சாலை,எக்ஸ்பிரஸ்அவென்யூ,எழும்பூர்

ஸ்டேஷன், பல்லவன் சாலை மற்றும் பிராட்வே ஆகிய 8 இடங்களில் பயணிகள் தகவல் பலகை நிறுவப்பட்டுள்ளது.

- பயண கட்டணச் சலுகை பெறுபவர்கள் (மாற்றுத்திறனாளிகள், புற்றுநோயாளிகள் மற்றும் இதர) பயண கட்டணச் சலுகை அனுமதிச் சீட்டுகளை பெறுவதற்கு (100% இலவசம், 75%, 50% மூன்றில் ஒரு பங்கு, இலவசம் இல்லை (Free Token) போன்றவை) அரசுப் போக்குவரத்து கழகங்களின் பயணச்சீட்டு வழங்கும் இடங்களுக்கு சென்று வாங்கி செல்கின்றனர். இதனை தவிர்க்க அரசு இ–சேவை மையம் வாயிலாக இணையதள பயணச்சீட்டு வழங்கும் ஏற்பாட்டு முறை மாநகர் போக்குவரத்துக் கழகத்தில் முதல் கட்டமாக நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.
- மாநகர் போக்குவரத்துக் கழகம் மற்றும் அரசு விரைவுப் போக்குவரத்து கழகப் பேருத்துகளில், பாரத ஸ்டேட் வங்கியுடன் இணைந்து மின்னணு பயணச்சீட்டு இயந்திரம் ETM (Electronic Ticketing Machine) வழியாக பயணச்சீட்டு வழங்கும் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டு மற்ற ஆறு போக்குவரத்துக் கழகத்திற்கு விரிவுபடுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது..
- தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழக ஓய்வூதியதாரர்கள்/குடும்ப ஓய்வூதியதாரர்களுக்கு தமிழ்நாடு அரசு இ–சேவை (e–Sevai) மையம் வழியாக உயிர்வாழ் சான்றிதழ் சமர்ப்பித்தல் வசதி நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.
- மாநகர் போக்குவரத்துக் கழக பணியாளர்களுக்கான செயலியின் வாயிலாக நிர்வாகத்தின் மூலமாக வெளியிடப்படும் சுற்றறிக்கைகள் மற்றும் பல்வேறு செய்திகளை பணியாளர்கள் அறிந்து கொள்ளவும், பணியாளர்கள் விடுப்பு எடுத்திட விண்ணப்பித்திடவும் வழிவகை செய்யப்பட்டுள்ள பணியாளர்களுக்கான செயலி அறிமுகபடுத்தப்பட்டது.
- சென்னை மாநகரில், தனி நபர் வாகனங்களை பயன்படுத்துவோர், பொது பேருந்து போக்குவரத்திற்கு மாறுவதற்கு ஏதுவாகவும், மாசுக்களை குறைக்கவும், குளிர்சாதன வசதி, வை.ஃபை (Wi–Fi), ஜி.பி.எஸ்., கண்காணிப்பு கேமரா, அவசரகால பொத்தான் மற்றும் சொகுசு இருக்கை உள்ளிட்ட வசதிகள் கொண்ட உயர்தர பேருந்து சேவைகளை அறிமுகப்படுத்துவதற்கான சாத்தியக் கூறுகள் ஆய்வு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.
- பேருந்தில் பயணம் செய்யும் பயணிகளின் பாதுகாப்பான பயணத்தை உறுதி செய்வதற்கு, தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகங்களால் இயக்கப்படும் கதவு இல்லாத அனைத்து பேருந்துகளிலும், தானியங்கி கதவுகள் பொருத்துவது அவசியமாகிறது. இந்த கதவுகள் பாதுகாப்பு அரணாக செயல்பட்டு பேருந்து இயக்கத்தின் போது, பயணிகள் படிக்கட்டிலிருந்து விழுவது மற்றும் வெளிப்புற பொருட்களால் மோதுவது போன்ற விபத்துகள் முற்றிலும் தவிர்க்கப்படும். பயணிகளின் பாதுகாப்பை அதிகரிக்க, கதவு இல்லாத அனைத்து பேருந்துகளிலும் தானியங்கி கதவுகளைப் பொருத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.
- தமிழ்நாடு அரசின் பூஜ்ஜிய விபத்துக்கள் இலக்கை அடைய, அனைத்து நகரப் பேருந்துகளின் கீழ்ப்பகுதியில் இரு பக்கவாட்டிலும் பாதுகாப்பு அரண்கள் பொருத்தப்படும். இதனால் பயணிகள், பாதசாரிகள் மற்றும் இரு சக்கர வாகனத்தில் பயணிப்பவர்கள் பேருந்தின் பின்புற சக்கரங்களில் விழாமல் தடுத்து, உயிரிழப்பு மற்றும் பெரிய காயங்கள் ஏற்படுவது பெருமளவில் குறையும். இரு சக்கர வாகன ஓட்டிகள், பாதசாரிகள் உள்ளிட்ட சாலைப் பயனாளர்களின் பாதுகாப்பை மேம்படுத்துவதற்காக, அனைத்து நகரப் பேருந்துகளிலும் பக்கவாட்டு பாதுகாப்பு அரண் பொருத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

பேருந்து பயணச்சலுகை திட்டங்கள்

- தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகங்களால் இயக்கப்படும் அனைத்து வகை பேருந்துகளிலும் 5 வயதுக்குட்பட்ட குழந்தைகள் இலவசமாகப் பயணிக்கும் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.
- விழா நாட்கள் நீங்கலாக இதர நாட்களில், இணையவழிப் பயணச்சீட்டு வாயிலாக



இருவழிப் பயணச்சீட்டுகள் முன்பதிவு செய்யும் பயணிகளுக்கு 10 % தள்ளுபடி நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது

- அரசு விரைவு போக்குவரத்துக் கழக பேருந்துகளில் ஒரு காலண்டர் மாதத்தில் ஐந்து முறைக்கு மேல் முன்பதிவு செய்து பயணம் செய்யும் பயணிகளுக்கு சிறப்பு சலுகையாக அம்மாதத்தில் அடுத்த தொடர் பயணங்களுக்கு, அதாவது ஆறாவது பயணம் முதல், 50 சதவீதம் கட்டணச் சலுகை நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.
- போக்குவரத்துக் கழக பேருந்துகளில் முன்பதிவு செய்யும் பயணிகள் ரூ.40/- மட்டும் கூடுதலாக செலுத்தி கிளாம்பாக்கம் கலைஞர் நூற்றாண்டு பேருந்துமுனையத்தில்இருந்துபிறஇடங்களுக்கும், சென்னையின் பிற இடங்களில் இருந்து கிளாம்பாக்கத்திற்கும் மாநகர் போக்குவரத்துக் கழக பேருந்துகளில் 4 மணி நேரத்திற்குள் பயணம் செய்யும் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.
- பெண்களுக்குகெனபிரத்யேகமாக4இருக்கைகள் அரசுவிரைவுப்போக்குவரத்துக்கழகபேருந்துகளில் ஒதுக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.
- மாதாந்திர விருப்பம் போல் பயணம் செய்யும் பயணச்சீட்டு, மாநகர் போக்குவரத்துக் கழகம், சென்னையில் இருப்பது போல் (Travel As You Please Ticket) அனைத்து நகரப் பேருந்துகளிலும் விரிவாக்கம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

சுற்றுலா பயணிகளுக்கு சிறப்புப் பேருந்து இயக்கம்

நவக்கிரக சிறப்புப் பேருந்து

- காலை 6 மணிக்கு திங்களூர் சந்திரன் கோவில் தரிசனம் முதல் மாலை 4.45 மணிக்கு திருநள்ளாறு சனிபகவான் தரிசனம் வரை நவக்கிரக கோவில்களுக்கு செல்ல சிறப்புப் பேருந்துக்கு பயணக் கட்டணமாக நபர் ஒன்றிற்கு ரூ.750 நிர்ணயித்து மக்களிடம் பெரும் வரவேற்பைத் தொடர்ந்து அனைத்து நாட்களிலும் நவகிரக கோவில்களுக்கு சிறப்புப் பேருந்துகள் இயக்கப்பட்டு வருகிறது.

கோடை கால சிறப்புச் சுற்றுலா பேருந்து

- உதகையில்கோடைகாலத்தில்சுற்றுலாபயணிகள் அதிக அளவில் வருவதால் போக்குவரத்து நெரிசலை தவிர்க்கும் பொருட்டு இ-பாஸ் மூலம் மட்டுமே உதகை வர முடியும் என அரசு அறிவித்த நிலையில் அரசு போக்குவரத்து கழகம் கோவைகோட்டத்தின் மூலம் கூடுதலாக சிறப்புபேருந்துகள் இயக்கப்பட்டது.இதன்மூலம் தோராயமாக12இலகுரகவாகனங்களின்பயன்பாடு சாலையில் குறைந்துள்ளது. வாகனங்களின்

எண்ணிக்கை குறைந்ததாலும், பொது மக்கள் பொது போக்குவரத்தை பயன்படுத்தியதாலும், உதகையில் போக்குவரத்து நெரிசல் குறைந்து, காற்று மாசின் அளவு கடந்த ஆண்டு 91 ஆக இருந்த காற்றின் தர குறியீடு இந்த ஆண்டில் 67 ஆக குறைந்துள்ளது. கோடை காலம் முழுவதும் உதகை சுற்றுலா தளங்களை குடும்பத்துனருடன் பாதுகாப்பாக கண்டு களிக்க பெரியவர்களுக்கு ரூ.100 கட்டணம் மற்றும் சிறியவர் ரூ.50 கட்டணத்திலும் கோவை கோட்டத்தின் மூலம் தினசரி சிறப்பு பேருந்துகள் இயக்கம்.

- கோடை காலம் முழுவதும் கொடைக்கானலில் சுற்றுலா தளங்களை குடும்பத்துனருடன் பாதுகாப்பாக கண்டுகளிக்க பெரியவர்களுக்கு ரூ.150 கட்டணம் மற்றும் சிறியவர் ரூ.75 கட்டணத்திலும் மதுரை கோட்டத்தின் மூலம் தினசரி சிறப்பு பேருந்துகள் இயக்கம்.
- 47வது ஏற்காடு கோடை விழா மற்றும் மலர் கண்காட்சியை முன்னிட்டு, 22.05.2024 முதல் 26.05.2024வரைதமிழ்நாடுஅரசுபோக்குவரத்துக் கழகம், சேலம் கோட்டத்தின் மூலமாக சுற்றுலா தளங்களைக் குடும்பத்துனருடன் பாதுகாப்பாக கண்டு களிக்க ரூ.300 கட்டணத்தில் பொது மக்களின் வசதிக்காக தினசரி சேலத்திலிருந்து ஏற்காட்டிற்கு சிறப்பு பேருந்துகள் இயக்கம்.

போக்குவரத்துக் கழகங்களில் இதர வருவாயை ஈட்டுதல்

- சென்னை, திருச்சி மற்றும் மதுரை போன்ற இடங்களில்மாதாந்திர அல்லதுதினசரிவாடகை அடிப்படையில்,பயணம்செய்யாதநபர்களின்சிப்பம் (Parcel) / மற்றும் தூதஞ்சல் (Courier) அனுப்பும் திட்டம் அறிமுகம்.
- கழிவு செய்யப்பட்ட பேருந்துகள் மற்றும் கழிவுப் பொருட்கள்மின்னணுமுறையில்தேசியதகவல் மையத்தின் (National Informatics Centre) மூலம் பொது ஏல விற்பனை.
- பேருந்துகளில்உள்ளபயணச் சுமை பெட்டிகள் ஒரு மாதத்திற்கு ரூ.6,000 வீதம் வாடகை அடிப்படையில் இளைஞர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.அரசுவிரைவுப்போக்குவரத்துக் கழக பேருந்துகளின் புறப்படும் மற்றும் சேருமிடங்களுக்குஇடைவேவிசாயபொருட்கள் அல்லது தொழில்துறை தயாரிப்புகளைச் சிப்பம் (Parcel)மூலம்அனுப்பஇந்தபயணச்சுமைபெட்டி ஒதுக்கப்பட்டுள்ளது.
- போக்குவரத்துக் கழக சொத்துகள் மூலம் வருவாயைஈட்டுதல்,சூரியஒளிமூலம்மின்சாரம் தயாரித்து மின்சார செலவைக் குறைத்தல், டீசல் மற்றும் பெட்ரோல் நிலையங்களைச் சொந்த இடங்களில்அமைத்துஇயக்கிவருவாய் ஈட்டல், பேருந்துகளின் உள்ளே மற்றும் வெளியே விளம்பரங்கள் செய்ய அனுமதித்து வருவாய் ஈட்டல், சாலை ஓர உணவகங்களில் பேருந்துகளை நிறுத்துவதன் மூலம் வருவாய் ஈட்டல்,மேலும்,நெடுஞ்சாலைபோரத்தில்உள்ள போக்குவரத்துக்கழகங்களின்காலிஇடங்களை தனியார் பங்களிப்புடன் வருவாய் ஈட்டக்கூடிய கட்டமைப்புகளை உருவாக்க நடவடிக்கை.
- அரசு போக்குவரத்துக் கழகங்களின் கூடுதல் வருவாய்க்காக டீசல் மற்றும் பெட்ரோல் சில்லறை விற்பனைநிலையங்களை அமைக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது.இதில் முதல்கட்டமாகராமநாதபுரம்மற்றும் அத்தனூரில் சில்லறைவிற்பனையில்டீசல்மற்றும்பெட்ரோல் விற்பனை தொடக்கம்.
- அரசு போக்குவரத்து நிறுவன கட்டடங்களின் கூரையில் சூரியசக்தி மின்னாற்றல் தகடுகள் 7 இடங்களில்நிறுவ பெற்று,மேலும் விரிவுபடுத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது.
- தமிழ்நாடு அரசு போக்குவரத்துக்கழகம், கோவை கழகத்தில் தயாரிக்கப்படும் வர்ணம் (சேரன் பெயிண்ட்) விற்பனை (Factory Outlet) சிட்கோ (குறிச்சி)மற்றும்தலைமையகவளாகத்தில்சில்லரை விற்பனை நிலையம் துவங்கப்பட்டுள்ளது.
- தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில், பயணக் கட்டணம் இல்லாத இதர வருவாயை அதிகரிப்பதை நோக்கமாகக் கொண்டு,கணினிமயமாக்கப்பட்டசிப்பம்மற்றும் சரக்கு அனுப்புதல் சேவையை அறிமுகப்படுத்த உள்ளது. சிப்பம் மற்றும் சரக்குகளை முன்பதிவு செய்தல், சேமித்தல், அனுப்புதல், பெறுதல், வழங்குதல், நகர்வை கண்காணித்தல் மற்றும் குறை தீர்க்கும் மையம் ஆகிய செயல்பாடுகள் உள்ளடங்கியதாக இருக்கும். பெறப்படும் சிப்பம் மற்றும்சரக்குகள்,முன்பதிவுமையத்தில்சேகரித்து, சேரும் இடத்திற்குபேருந்துகளில்அனுப்பப்பட்டு

வாடிக்கையாளர்களுக்குவழங்கப்படும்திட்டத்தை செயல்படுத்தநடவடிக்கைஎடுக்கப்பட்டுவருகிறது.

இதர திட்டங்கள்

புதிய பணிமனை மற்றும் பணிமனையை மேம்படுத்தல்

மாநகர் போக்குவரத்துக் கழகம்

- வணிக வளர்ச்சிக்காக, தமிழ்நாடு உள்கட்டமைப்பு மேம்பாட்டு வாரியத்தின் மூலமாக மாநகர் போக்குவரத்துக்கழகத்தில் உள்ள 16 பேருந்து பணிமனைகள் / பேருந்து நிலையங்கள் நவீனமயமாக்க விரிவான சாத்தியக் கூறு அறிக்கை தயாரிக்கப்பட்டு முதல்கட்டமாக 3 பணிமனைகள் வடபழனி, திருவான்மியூர் மற்றும் வியாசர்பாடி பணிமனை மேம்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.
- அண்ணா நகர் மேற்கு பேருந்து நிலையம், கே.கே.நகர் பணிமனை, வடபழனி பணிமனை மற்றும் மந்தைவெளி பணிமனை மற்றும் பேருந்து நிலையத்தை நவீனமயமாக்க சென்னை மெட்ரோ ரயில் நிறுவனம் மூலம் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.
- உங்கள் தொகுதியில் முதலமைச்சர் (UTM) திட்டத்தின் கீழ் ரூ.10.76 கோடி மதிப்பீட்டில் திருவள்ளூர் மாவட்டம், ஆவடி சட்டமன்ற தொகுதியில் உள்ள ஆவடி பணிமனை மற்றும் பேருந்து நிலையம் புதுப்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.
- உங்கள் தொகுதியில் முதலமைச்சர் (UTM) திட்டத்தின் கீழ் ரூ.5.43 கோடி மதிப்பீட்டில் திருவள்ளூர் மாவட்டம், மாதவரம் சட்டமன்ற தொகுதியில் உள்ள பாடியநல்லூர் பேருந்து பணிமனை மற்றும் பேருந்து நிலையத்தில் அலுவலகக் கட்டடம், சிமெண்ட் கான்கிரீட் தளம் மற்றும் பயணிகளுக்கான போதிய வசதிகளுடன் பாடியநல்லூர் பேருந்து பணிமனை மற்றும் பேருந்து நிலையம் அமைத்திட விரைந்து எடுக்கப்பட்டு வருகிறது.

இதர போக்குவரத்துக் கழகங்கள்

- உங்கள் தொகுதியில் முதலமைச்சர் (UTM) திட்டத்தின் கீழ் பெரம்பலூர் மாவட்டத்தில் உள்ள குன்னம் நகரில், குன்னம் நகரில் 3 ஏக்கர் பரப்பளவில் ரூ.3.55 கோடிச் செலவில் புதிய பேருந்து பணிமனை துவக்கம்.
- சிறப்பு பகுதி மேம்பாட்டு திட்ட நிதி உதவி மூலம் ரூ. 2.50 கோடி செலவில் 1.52 ஏக்கர் நிலப்பரப்பில் கோத்தகிரி பணிமனை புதிய கட்டிடம் மற்றும் தொழிலாளர் ஓய்வறை கட்டடம் துவக்கம்.
- நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்துறை மூலம் பெறப்பட்ட மூலதனமானிய நிதியிலிருந்து ரூ.5.42 கோடி செலவில் 1.57 ஏக்கர் நிலப்பரப்பில் கூடலூர் பேருந்து நிலையம் மற்றும் பணிமனை புதிய கட்டடம் துவக்கம்.
- குமுளியில் புதிய பேருந்து நிலையம் மற்றும் பணிமனை மேம்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது
- பேருந்து பணிமனைகளில் உள்ள உணவகங்களை (Canteens) நடத்துவதற்கு மகளிர் சுயஉதவிகுழுக்களுக்கு முன்னுரிமை அளித்து விரைந்து முடிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.
- குமுளியில் புதிய பேருந்து நிலையம் மற்றும் பணிமனை மேம்படுத்தி கட்டுவதற்கு ரூ.5.50 கோடி மதிப்பீட்டில், பணி ஆணை வழங்கப்பட்டுள்ளது.
- அரசு போக்குவரத்துக் கழகங்களால் இயக்கப்படும் அனைத்து பேருந்துகளிலும் புதுப்பொலிவுடன் திருவள்ளுவர் படம் மற்றும் திருக்குறள் அதன் விளக்கவுரையுடன் பொருத்தப்பட்டுள்ளது.'
- பணிமனைகளில் பணிபுரியும் பணியாளர்களின் அடிப்படை வசதிகளில் முக்கிய பங்களிக்கும் ஒப்பனை அறைகளை நவீன வசதிகளுடன் ரூ. 10 கோடியில் செலவில் மேம்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.
- நாள்தோறும் பேருந்துகளை சுத்தமாக பராமரிக்க மற்றும் பயணிகளின் சேவைத் தரத்தை மேம்படுத்த 100 பணிமனைகளில் மொத்தம் ரூ.10 கோடி செலவில் தானியங்கி பேருந்து சுத்தம் செய்யும் இயந்திரம், பேருந்துகளின் அடிச்சட்டம் சுத்தம் செய்யும் இயந்திரம் (Car Washer Unit) மற்றும் பேருந்துகளின் உட்புறம் மற்றும் பயணிகளின் இருக்கையை சுத்தம் செய்ய தூசி உறியும் இயந்திரம் (Vacuum Cleaner) நவீன வசதிகளுடன் மேம்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.
- பேருந்து பராமரிப்பில் தொழில்நுட்ப உற்பத்தித்திறனை அதிகரிக்க, அதிநவீன உபகரணங்கள் மற்றும் கருவிகளை பயன்படுத்துவதனால் செயல்திறன் மற்றும் தரம் மேம்படுவதன் மூலம் தடையற்ற பேருந்து சேவையினை அளிப்பதோடு மட்டுமல்லாமல், தொழில்நுட்பப் பணியாளர்களின் வேலை பளு

குறைவதுடன், பாதுகாப்பான பணிச் சூழலை மேம்படுத்த எட்டு பணிமனைகளை மேம்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது

காலிப் பணியிடங்களை நிரப்ப நடவடிக்கைகள்

- தமிழ்நாடு அரசுப போக்குவரத்துக் கழகங்களில் உள்ள ஓட்டுனர் மற்றும் நடத்துநர் காலிப் பணியிடங்களைநிரப்பமுதல்கட்டமாகதமிழ்நாடு அரசுபோக்குவரத்துக்கழகம்(கும்பகோணம்)–க்கு 122ஓட்டுனர்களைநியமிக்கவும்,அரசுவிரைவுப் போக்குவரத்துக்கழகத்திற்கு685ஓட்டுனர்உடன் நடத்துநர்களைநியமிக்கவும்அரசுஆணைஎண்25, நாள்14.02.2023வெளியிடப்பட்டது.அரசுவிரைவுப் போக்குவரத்துக் கழகத்தில் 684 ஓட்டுனருடன் நடத்துனர்கள் நியமிக்கப்பட்டு அவர்கள் அனைவரும் போக்குவரத்துக் கழக ஓட்டுநர் பயிற்சிபள்ளி,மத்தியதொழில்கூடம்,திருச்சியில் பயிற்சி பெறுவதற்கு பணிக்கப்பட்டவர்களில் தற்போது63நபர்கள்பயிற்சிமுடித்துஅவர்களுக்கு ஒதுக்கப்பட்ட பணிமனைகளுக்கு பணி செய்ய பணிக்கப்பட்டுள்ளார்கள்.
- இரண்டாவது கட்டமாக தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் (சேலம், கோயம்புத்தூர், கும்பகோணம், மதுரை மற்றும் திருநெல்வேலி) ஆகிய 5 போக்குவரத்துக் கழகங்களில் நடத்துநர் காலிப்பணியிடங்களைபேருந்துகளைமுழுமையாக இயக்கவசதியாகநெகிழ்வானபணியாளர்முறையாக (Flexible Staffing Pattern) 812 ஓட்டுனர் உடன் நடத்துநர்பணியிடங்களாகநியமிக்கஅரசுஆணை எண்111,நாள் 21.07.2023வெளியிடப்பட்டு அதன் அடிப்படையில் காலிப்பணியிடங்களை நிரப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

விருதுகள்

- "சென்னை பஸ்" (Chennai App) செயலிக்காக மாநகர் போக்குவரத்துக் கழகத்திற்கு ஒன்றிய அரசின் "சிறந்த நுண்ணறிவு போக்குவரத்து அமைப்பு (ITS) கொண்ட நகரம்." என்ற விருது வழங்கப்பட்டது.
- Whatsapp மூலமாகவும், இணையதளம் மூலமாகவும் குறைகளைத் தீர்வு செய்வதற்கான பொறிமுறைகளை (Mechanism) உருவாக்கி உடனுக்குடன் தீர்வு செய்வதற்காக பயணிகள் மத்தியில் செயல் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டம் பயணிகள் மத்தியில் பெரும் வரவேற்பை பெற்றமைக்காக அரசு விரைவுப் போக்குவரத்துக் கழக நிருவாகத்தை பாராட்டி 2022ஆம் ஆண்டு Urban Infra Group Publication மூலம் விருது மற்றும் பாராட்டு சான்றிதழ் புதுடில்லியில் வழங்கப்பட்டது.
- அரசு போக்குவரத்துக் கழகங்களில் விபத்தில்லாமல் பணிபுரிந்த மொத்தம் 42 ஓட்டுனர்களுக்கு ஒன்றிய அரசு விருதுகள் வழங்கப்பட்டுள்ளது. அதில் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகத்திற்கு 14 ஓட்டுநர்களுக்கு (மொத்த விருதுகளில் 33.33 சதவிகிதம்) Heros on the Road என்ற விருதுகள் வழங்கப்பட்டது.
- 2022–2023 ஆண்டிற்கான தேசிய பொது பேருந்து போக்குவரத்து செயல்திறன்களுக்கான சிறப்பு விருதுகளில், தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகத்திற்கு இந்திய மாநில சாலைப் போக்குவரத்துக் கழகங்களின் கூட்டமைப்பு 17 விருதுகள் வழங்கியுள்ளது. இதில் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (மதுரை) லிமிடெட் 6 விருதுகள்,தமிழ்நாடு அரசுப போக்குவரத்துக் கழகம் (கும்பகோணம்) லிமிடெட் 5 விருதுகள், அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகம் (தமிழ்நாடு) லிமிடெட் 3 விருதுகள், தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் (சேலம்) லிமிடெட் 2 விருதுகள் ,தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (விழுப்புரம்) லிமிடெட் ஒரு விருது பெற்றுள்ளது. மொத்தமாக இந்திய முழுவதும் வழங்கப்பட்ட விருதுகளில் 25 சதவிகிதம் விருதுகளைத் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகங்கள் பெற்றுள்ளது. முதல் பரிசுக்கான 38 பிரிவுகளில் 9 பிரிவுகளிலும், இரண்டாம் பரிசுக்கான 31 பிரிவுகளில் 8 பிரிவுகளிலும் ஆக மொத்தம் 69 –ல் 17 பிரிவுகளில் விருதுகள் வழங்கப்பட்டது. இது மொத்த விருதுகளில் 4–இல் ஒரு பங்கு ஆகும்.

பணியாளர் நலன்

- அரசு போக்குவரத்துத் தொழிலாளர்களின் அடிப்படை ஊதியத்தில் பே மேட்ரிக்ஸ் பொருத்தி, 5 சதவிகிதம் உயர்வு, 14 வது ஊதிய ஒப்பந்தத்தில் அளிக்கப்பட்டது.
- பணியின் போது இறந்த தொழிலாளர்களின் குடும்பங்களுக்கு குடும்பநல நிதி
- ரூ.3 இலட்சத்தில் இருந்து ரூ.5 இலட்சமாக உயர்த்தப்பட்டது.
- சாதாரண கட்டண பேருந்துகளின் ஓட்டுநர் மற்றும் நடத்துனர்களுக்கு வழங்கப்பட்டு வரும் வசூல்படி இரட்டிப்பாக உயர்வு.
- ஓட்டுநர் மற்றும் நடத்துநர்களின் Double Duty Wages ஓட்டுநருக்கு ரூ.700ம் நடத்துநருக்கு ரூ.690 ஆக உயர்வு.

- அரசு பேருந்துகளின் இயக்க எண்ணிக்கையை அதிகரிக்க ஓய்வுபெற்ற ஓட்டுநர்களுக்கு ரூ.700ம் நடத்துநருக்கு ரூ.690 ஆக வழங்கி பயன்படுத்துதல்.

ஓய்வு பெற்ற பணியாளர்களுக்கு பணப்பலன்கள்

- மே–2020 முதல் மார்ச்–2021 வரை பணிபுரிந்து விருப்ப ஓய்வு பெற்ற / இறந்த பணியாளர்கள் என மொத்தம் 1,241 நபர்களுக்கு வருங்கால வைப்புநிதி, பணிக்கொடை விடுப்பு ஒப்படைப்பு தொகை மற்றும் ஓய்வூதிய ஒப்படைப்புத் தொகை உள்ளிட்ட பணப் பலன்கள் ரூ.242.67 கோடியும் வழங்கப்பட்டது.
- ஏப்ரல்–2021 முதல் மார்ச்–2022 வரை பணிபுரிந்து விருப்ப ஓய்வு பெற்ற / இறந்த பணியாளர்கள் என மொத்தம் 1,626 நபர்களுக்கு வருங்கால வைப்புநிதி, பணிக்கொடை விடுப்பு ஒப்படைப்பு தொகை மற்றும் ஓய்வூதிய ஒப்படைப்புத் தொகை உள்ளிட்ட பணப் பலன்கள் ரூ.308.45 கோடி வழங்கப்பட்டது.
- ஏப்ரல்–2022 முதல் நவம்பர்–2022 வரை பணிபுரிந்து ஓய்வு பெற்ற / விருப்ப ஓய்வு பெற்ற / இறந்த பணியாளர்கள் என மொத்தம் 3,414 நபர்களுக்கு வருங்கால வைப்புநிதி, பணிக்கொடை, விடுப்பு ஒப்படைப்பு தொகை மற்றும் ஓய்வூதிய ஒப்படைப்புத் தொகை உள்ளிட்ட பணப்பலன்கள் ரூ.1,031.32 கோடி வழங்கப்பட்டது.
- டிசம்பர் 2022 முதல் மார்ச் 2023 வரை பணியில் உயிரிழந்த 210 தொழிலாளர்களுக்கு ரூ.32.84 கோடி ஓய்வூதிய பணப்பலன்கள் வழங்கப்பட்டுள்ளது. என மொத்தம் 6,491 நபர்களுக்கு ரூ.1,615.28 கோடி வழங்கப்பட்டுள்ளது.
- டிசம்பர் 2022 முதல் மார்ச் 2023 வரை பணியில் உயிரிழந்து 210 தொழிலாளர்களுக்கு ரூ.32.84 கோடி ஓய்வூதிய பணப்பலன்கள் வழங்கப்பட்டுள்ளது.
- அரசு போக்குவரத்துக் கழக 315 பணிமனைகளில் உள்ள பணியாளர்கள் ஓய்வு அறைகளுக்கு குளிர்சாதன வசதியை ஏற்படுத்துதல். இதில் முதற்கட்டமாக 82 பணிமனைகளில் பணியாளர்களுக்கு ஓய்வு அறைகளில் குளிர்சாதன வசதி நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.
- இதுவரை தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகங்களில் பணியின்போது இறந்த பணியாளர்களின் 506 வாரிசுதாரர்கள் கருணை அடிப்படையில் நியமிக்கப்பட்டுள்ளனர். இதில் 83 ஓட்டுநர், 10 ஓட்டுநருடன் நடத்துனர், 398 நடத்துநர்கள், 1 நிருவாகப் பணியாளர் மற்றும் 14 தொழிநுட்பப் பணியாளர்கள் அடங்கும்.
- பணிமனை அளவில் பணிபுரியும் தொழிலாளர்களின் குழந்தைகளுக்கு 10–ம் மற்றும் 12–ம் வகுப்பு பள்ளி இறுதித்தேர்வில் முதல் மூன்று இடங்களை பெறும் மாணவ / மாணவியருக்கு முறையே ரூ.1,500, ரூ.1,000 மற்றும் ரூ.500 என ஆண்டு தோறும் பரிசுத்தொகை வழங்கப்படுகிறது.
- 14வது ஊதிய ஒப்பந்தத்தை முழுமையாக நிறைவேற்றப்பட்டுள்ளது.
- 14வது ஊதிய நிலுவை தொகையான ரூ. 171.05 கோடி வழங்கப்பட்டது.
- தமிழ்நாடு போக்குவரத்துக் கழகங்களின் தொழிலாளர்களின் நலனில் மிகுந்த அக்கறை கொண்டு கொரோனா பெருந்தொற்று காலத்தில் முழு அடைப்பின் போது தன்னுயிரையும் கருதாமல் பணிபுரிந்த தொழிலாளர்களைச் சிறப்பிக்கும் வகையில், சிறப்பு ஊக்கத் தொகையாக ரூ.17.15 கோடி வழங்கப்பட்டுள்ளன.

முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா

- அரசு போக்குவரத்துக் கழகங்களில் 275 மருத்துவ முகாம்கள் மூலம் 29,911 நபர்களும் மற்றும் 19 இரத்த தான முகாம்கள் மூலம் 1,361 நபர்களும் பங்கேற்றனர்.
- 104 இடங்களில் மன அழுத்த நிவாரண பயிற்சிகளின் மூலம் 2,02,257 ஓட்டுநர்கள் மற்றும் நடத்துனர்கள் பயன்பெற்றனர்.
- அரசு போக்குவரத்துக் கழகங்களில் கடந்த 25 வருடங்களாக விபத்தில்லாமல் பேருந்துகள் இயக்கிய 20 ஓட்டுநர்களுக்கு தங்க நாணயமும், 10 வருடங்களாக விபத்தில்லாமல் பேருந்துகள் இயக்கிய 1,069 ஓட்டுநர்களுக்கு வெள்ளி நாணயமும் வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளது.

❖ ❖ ❖

இந்து சமயம் மற்றும் அறநிலையங்கள் மற்றும் சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமம்



திரு. பி.கே. சேகர்பாபு அவர்கள்
மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்

இந்து சமயம் மற்றும் அறநிலையங்கள் துறை

- கடந்த 07.05.2021 முதல் 31.07.2024 வரை மூன்றாண்டுகளில் 1,922 திருக்கோயில்களில் திருப்பணிகள் நிறைவுற்று திருக்குடமுழுக்கு நடைபெற்றுள்ளது.
- 9,259 திருக்கோயில்களில் 19,495 பணிகள் ரூ.5,327.87 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்வதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அவற்றில் தற்போது வரை 8,157 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.
- 2021–2022 ஆம் நிதியாண்டில் 1,250 திருக்கோயில்களுக்கு திருப்பணி நிதி தலா ரூ.2 இலட்சமாக உயர்த்தப்பட்டு ரூ.25 கோடி மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் வழங்கப்பட்டது. 2022–2023 கிராமப்புற மற்றும் ஆதிதிராவிடர் திருக்கோயில் திருப்பணிக்கான நிதி உதவி ரூ.2 இலட்சம் 10 திருக்கோயில்களுக்கு வழங்கப்பட்டு மீதமுள்ள திருக்கோயில்களுக்கும் தலா ரூ.2 இலட்சம் வீதம் (கூடுதல் ரூ. 25 கோடி) வழங்கப்பட்டுள்ளது.
- 156 திருக்கோயில்களில் உள்ள திருக்குளங்களை சீரமைப்பதற்கு 175 பணிகள் ரூ.85.79 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்வதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. 2024–2025 –இல் திருக்கோயில்களில் உள்ள திருக்குளங்களை ரூ.38.50 கோடி மதிப்பீட்டில் சீரமைக்கப்பட உள்ளது.
- 3 திருக்கோயில்களில் புதிய திருக்குளங்கள் அமைப்பதற்கு ரூ.2.71 கோடி மதிப்பீட்டில் அனுமதி வழங்கப்பட்டது.



- சமயபுரம், திருவெண்ணெய்நல்லூர், தாராபுரம், திருப்பாற்கடல், அரியலூர், சென்னை கீழ்ப்பாக்கம் ஆகிய இடங்களில் அமைந்துள்ள 6 திருக்கோயில்களில் ரூ.8 கோடி மதிப்பீட்டில் புதிய இராஜகோபுரங்கள் கட்டப்பட்டு குடமுழுக்கு நடைபெற்றுள்ளது. 2022 – 2023 இல் 6 திருக்கோயில்களுக்கு ரூ.28.78 கோடியில் புதிய இராஜகோபுரங்கள் கட்டுவதற்கு அனுமதி வழங்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது.
- 2023–2024–இல் 15 திருக்கோயில்களில் இராஜகோபுரங்கள் ரூ.46.26 கோடி மதிப்பீட்டில் கட்டப்படவுள்ளன 2024–2025 இல் 19 திருக்கோயில்களில் ரூ.32 கோடி மதிப்பீட்டில் புதிய இராஜகோபுரங்கள் கட்டப்பட உள்ளன.
- தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை வட்டம், அருள்மிகு வரகுணநாத சுவாமி திருக்கோயில், 3 நிலை இராஜகோபுரம் உபயதாரர் நிதி ரூ.50 இலட்சம்.
- 113 திருக்கோயில்களில் திருப்பணி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு 47 திருக்கோயில்களில் ரூ.100 கோடி அரசு நிதி மூலமும் 66 திருக்கோயில்களில் உபயதாரர் நிதி, திருக்கோயில் மற்றும் பொதுநலநிதி மூலமாக ரூ.57.89 கோடி மூலம் திருப்பணி நடைபெற்று வருகிறது. இவற்றில் 23 திருக்கோயில்களில் திருப்பணிகள் முடிவுற்று திருக்குடமுழுக்கு நடைபெற்றுள்ளது.
- 84 திருக்கோயில்களில் திருப்பணி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு 73 திருக்கோயில்களில் ரூ.100 கோடி அரசு நிதி மூலமும் 11 திருக்கோயில்களில் ரூ.43 கோடி உபயதாரர் நிதி மற்றும் திருக்கோயில் நிதிகளின் மூலம் திருப்பணிகள் நடைபெற்று வருகிறது.
- நாள் முழுவதும் அன்னதானம் வழங்கும் திட்டம் 8 திருக்கோயில்களில் நடைபெற்று வருகிறது. இவ்வாண்டு மேலும் 3 திருக்கோயில்களில் நாள் முழுவதும் அன்னதானத் திட்டம் தொடங்கப்பட்டு நடைபெற்று வருகிறது.
- திருக்கோயில்களுக்கு வருகை புரியும் பக்தர்கள் அனைவருக்கும் தற்போது 15 திருக்கோயில்களில் நாள் முழுவதும் பிரசாதம் வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டம் இவ்வாண்டு மேலும் 5 திருக்கோயில்களுக்கு விரிவுப்படுத்தப்பட்டது.
- அன்னதானத் திட்டம் இதுவரை 756 திருக்கோயில்களில் நடைபெற்று வருகிறது. இதன் மூலம் நாளொன்றுக்கு 82,000 நபர்கள் பயன்பெற்று வருகின்றனர். இவ்வாண்டு (2023–2024) மேலும் 7 திருக்கோயில்களில் இத்திட்டம் விரிவுப்படுத்தப்பட்டுள்ளது.
- கடந்த மூன்றாண்டுகளில் அறநிலையங்களுக்குச் சொந்தமான நிலம் / கட்டடம் / மனை ஆகியவற்றில் ஏற்பட்ட ஆக்கிரமிப்பிலிருந்து மீட்கப்பட்ட மொத்த பரப்பளவு 6,747 ஏக்கர். மற்றும் மொத்த மதிப்பு சுமார் ரூ.6,447 கோடி ஆகும்.



- கடந்த மூன்றாண்டுகளில் 1,59,507 ஏக்கர் நவீன ரோவர் கருவிகள் மூலம் நிலங்கள் அளவீடு செய்யப்பட்டுள்ளன. மேலும் 64,522 கற்கள் நடப்பட்டுள்ளன. நில அளவை பணியில் 172 உரிமம் பெற்ற நில அளவையர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.
- UDR தவறுகள் குறித்து மாவட்ட வருவாய் அலுவலரிடம் மேல்முறையீடு செய்யப்பட்டு 5,062.29 ஏக்கர் நிலம் மீண்டும் திருக்கோயில் பெயரில் பட்டா பெறப்பட்டது.
- கணினிச் சிட்டாவில் தவறுகள் திருத்தம் செய்ய வருவாய்த்துறை கோட்டாட்சியரிடம் முறையீடு செய்யப்பட்டு 4,055.47 ஏக்கர் நிலம் திருக்கோயில் பெயரில் பட்டா பெறப்பட்டது.
- மொத்தம் 73 திருமண மண்டபங்கள் ரூ.257.28 கோடியில் கட்டப்பட்டுள்ளது 2024–2025 ஆம் நிதியாண்டில் 17 திருமண மண்டபங்கள் ரூ.85 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட உள்ளது.
- பக்தர்களின் நலனுக்காக 17 தங்கும் விடுதிகள் ரூ.70.50 கோடி மதிப்பீட்டில் கட்டும் பணிகள் நடைபெற்று வருகின்றன. 2024–2025 ஆம் நிதியாண்டில் மேலும் 11 தங்கும் விடுதிகள் ரூ.109 கோடி மதிப்பீட்டில் கட்டப்படும்.
- கடந்த மூன்றாண்டுகளில் திருக்கோயில் பணிபுரியும் அர்ச்சகர்கள் மற்றும் பணியாளர்களுக்கான 48 குடியிருப்புகள் ரூ. 83.67 கோடி மதிப்பீட்டில் கட்டப்படவுள்ளது.
- ரூ.18.90 கோடி மதிப்பீட்டில், மூன்று புதிய பசுமடங்கள் ஏற்படுத்தும் பணியும், ரூ.20.66 கோடி மதிப்பீட்டில் 123 திருக்கோயில்களில் உள்ள 127 பசுமடங்களை மேம்படுத்துதல் பணியும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. 2024–2025 ஆம் நிதியாண்டில் இரண்டு திருக்கோயில்களில் ரூ.1 கோடி மதிப்பீட்டில் பசுமடங்கள் ஏற்படுத்தப்படும்.
- ஓய்வுபெற்ற மாண்பமை நீதியரசர்கள் தலைமையில் குழுக்கள் அமைக்கப்பட்டு அரசாணை பிறப்பிக்கப்பட்டது. அதன்படி 13 திருக்கோயில்களுக்கு சொந்தமான நிகர பல மாற்று பொன் இனங்கள் உருக்கப்பட்டு, 422.107 கி.கி தங்கக் கட்டிகளாக மாற்றி, ரூ.257.22 கோடி மதிப்பீட்டில் வங்கியில் முதலீடு செய்யப்பட்டு ஆண்டு ஒன்றுக்கு வட்டி வருவாய் ரூ.5.79 கோடி வரப்பெறுகிறது. மேலும், 7 கோவில்களுக்கு சொந்தமான பல மாற்று பொன் இனங்கள் பிரித்தெடுக்கப்பட்டு தங்க கட்டிகளாக மாற்ற நடவடிக்கையில் உள்ளது.
- 12,959 திருக்கோயில்களுக்கு தலா ரூ.1 இலட்சம் வீதம் கூடுதல் தொகை முதலீடு செய்யும் வகையில் ரூ.130 கோடி அரசு மானியம் விடுவிக்கப்பட்டு திருக்கோயில்களின் பெயரில் கூடுதல் முதலீடுகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. மேற்படி பெறப்பட்ட அரசு மானியம் ரூ.130 கோடியில், 20 புதிய திருக்கோயில்களின் பெயரில் ரூ.2 இலட்சம் வீதம் ரூ.40 இலட்சத்திற்கு முதலீடுகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.
- ஒரு கால பூஜைத் திட்டத்தில் திருக்கோயில் ஒன்றுக்கு தலா ரூ.2 இலட்சம் வீதம் 2,000 திருக்கோயில்களுக்கு அரசு மானியம் ரூ.40 கோடி விடுவிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் மேலும் 21 திருக்கோயில்களை சேர்க்கும் பொருட்டு, ஒரு கால பூஜை முதலீடு முன்முதிர்வு செய்து வரப்பெற்ற தொகையில், 21 புதிய திருக்கோயில்களின்



பெயரில் ரூ. 2. இலட்சம் வீதம் ரூ. 42 இலட்சத்திற்கு முதலீடுகள் ஏற்படுத்தப்பட்டு, இத்திட்டத்தின் கீழ் பயனடையும் திருக்கோயில்களின் எண்ணிக்கை 15,000 ஆக உயர்வு செய்யப்பட்டது. மேலும் 2,000 திருக்கோயில்களுக்கு இத்திட்டம் விரிவுப்படுத்தப்பட்டுள்ளது. இதற்காக அரசு மானியம் ரூ.30 கோடியும், பொதுநலநிதியிலிருந்து ரூ.10 கோடியும் விடுவிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் தற்போது 17,000 திருக்கோயில்கள் பயனடைந்து வருகின்றன.

- ஒரு திருக்கோயிலுக்கு ஒரு அர்ச்சகர் வீதம் பதிவு செய்து, மாத ஊக்கத் தொகை ரூ.1,000/- வழங்கப்பட்டு வருகிறது. ஜனவரி 2024 வரை 16,646 அர்ச்சகர்கள் பயனடைந்துள்ளனர்.
- இத்திட்டத்தின் கீழ் பயன்பெறும் திருக்கோயில்களுக்கு மின் கட்டணத்தை செலுத்த ஆண்டு ஒன்றுக்கு ஏற்படும் செலவினம் ரூ.6.00 கோடிக்கு நிதி ஒப்பளிப்பு செய்து அரசாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. அவ்வகையில், 15,000 திருக்கோயில்களுக்கு 01.03.2024 முதல் 28.02.2025 வரை ஒரு வருடத்திற்கு ரூ.5,20,42,920/- நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.
- ஒரு கால பூஜை நடைபெறும் திருக்கோயில்களில் பணியாற்றிவரும் அர்ச்சகர்களின் வாரிசுதாரர்களுக்கு உயர்கல்வி உதவித்தொகையாக தலா ரூ.10,000/- வீதம் நடப்பாண்டில் 400 மாணவர்களுக்கு கல்வித்தொகை வழங்கப்பட்டுள்ளது.
- கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள 490 திருக்கோயில்களின் நிருவாக செலவுகளுக்கு வழங்கப்பட்டு வந்த அரசு மானியம் ரூ.6 கோடியிலிருந்து ரூ.8 கோடியாக உயர்த்தப்பட்டுள்ளது.
- புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள 225 திருக்கோயில்களின் நிருவாக செலவுகளுக்கு வழங்கப்பட்ட அரசு மானியம்



ரூ.3 கோடியிலிருந்து ரூ.5 கோடியாக உயர்த்தப்பட்டுள்ளது.

- தஞ்சாவூர் அரண்மனை தேவஸ்தான நிருவாகத்தில் உள்ள 88 திருக்கோயில்களின் நிருவாக செலவுகளுக்கு முதன்முறையாக ரூ.3 கோடி அரசு மானியம் வழங்கப்பட்டது.
- பழனி திருக்கோயிலில் கம்பிவட ஊர்தி வசதி இயக்கப்பட்டு வருகிறது. பழனி மற்றும் இடும்பன் மலை இடையே கம்பிவட ஊர்தி (ரூ.34 கோடி), அனுவாவி (ரூ.16 கோடி), திருநீர்மலை (ரூ.10 கோடி) மற்றும் திருக்கழுக்குன்றம் (ரூ.20.50 கோடி) ஆகிய திருக்கோயில்களில் கம்பிவட ஊர்தி அமைத்திட சாத்தியக்கூறுகள் ஆராயப்பட்டு பெறப்பட்ட அறிக்கையின் அடிப்படையில் மதிப்பீடு தயார் செய்யப்பட்டு வருகிறது. மேலும், கும்பகோணம், சுவாமிமலை, அருள்மிகு சுவாமிநாத சுவாமி திருக்கோயிலில் ரூ.3.55 கோடி மதிப்பீட்டில் மின்தூக்கி அமைப்பதற்கான பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளது.
- திருக்கோயில்களில் பணியின்போது இறந்த 109 பணியாளர்களின் வாரிசுதாரர்களுக்கு "கருணை அடிப்படையில் பணி நியமன" ஆணைகள் வழங்கப்பட்டுள்ளன.
- அறநிலையத்துறையில் உள்ள திருக்கோயில்களில் பணியாற்றும் அனைத்து பணியாளர்களுக்கும் ரூ.1,000/- இருந்து ரூ.3,000/- ஆக உயர்த்தி பொங்கல் கருணைத் தொகை வழங்கப்பட்டு வருகிறது.
- 13,059 எண்ணிக்கையிலான நிரந்தர திருக்கோயில் பணியாளர்களுக்கு ரூ.1.71 கோடிச் செலவில் புத்தாடை/ சீருடைகள் தை பொங்கல் அன்று வழங்கப்பட்டது.
- 5 ஆண்டுகளுக்கு மேலாக தொடர்ந்து தினக்கூலி/ தொகுப்பூதிய அடிப்படையில் தற்காலிகமாக பணிபுரியும் 1,289 பணியாளர்கள் பணிவரன்முறை செய்யப்பட்டுள்ளனர்.
- திருக்கோயில்களில் நவீன தொழில்நுட்ப முறையில் திருநீறு மற்றும் குங்குமம் தயாரிக்கப்பட்டு, பிற திருக்கோயில்களின் தேவைகளுக்கும் வழங்கப்பட்டு வருகிறது.
- திருக்கோயில்கள் சார்பாக பொருளாதாரத்தில் பின்தங்கிய இணைகளுக்கு சீர்வரிசைகளுடன் திருமணங்கள் நடத்தி வைக்கும் பொருட்டு, திருவான்மியூர் அருள்மிகு மருந்தீஸ்வரர் திருக்கோயில் திருமண மண்டபத்தில் 500 திருமணங்கள் நடத்தி வைக்கப்பட்டது. 2023 ஆம் ஆண்டு 600 இணைகளுக்கு நான்கு கிராம் பொன்தாலி, பட்டுப்புடவை, பட்டுவேட்டி உள்பட ரூ.50,000/- மதிப்புள்ள சீர்வரிசைகளுடன் திருமணங்கள் இரண்டு கட்டமாக நடத்தி வைக்கப்பட்டது. இவ்வரசு பொறுப்பேற்றதிலிருந்து 1,100 இணைகளுக்குத் திருமணம் நடத்தி முடிக்கப்பட்டது.
- திருக்கோயில்களில் மாற்றுத்திறனாளிகளுக்கென இலவசத் திருமணத் திட்டத்தின் கீழ் இதுவரை 140 திருமணங்கள் நடைபெற்றுள்ளன. மேலும், நடப்பாண்டு முதல் தாலிக்கு 4 கிராம் தங்கம் வழங்கப்பட்டு வருகிறது.
- பழநி திருக்கோயில் சார்பில் நடத்தப்படும் பள்ளி கல்லூரிகளில் பயிலும் 4,000 மாணவ மாணவியருக்கு காலை சிற்றுண்டி வழங்கப்பட்டு வருகிறது.
- 500 பக்தர்கள் இராமேசுவரம், அருள்மிகு இராமநாத சுவாமி திருக்கோயிலிருந்து காசி, அருள்மிகு விஸ்வநாத சுவாமி திருக்கோயிலுக்கு ஆன்மிகப் பயணமாக அரசு நிதி ரூ.125 இலட்சம் (செலவில்) அழைத்துச் செல்லப்பட்டு வருகின்றனர். 2024 ஆம் ஆண்டில், 1,000 பக்தர்கள் அறுபடைவீடுகளுக்கு ஆன்மிகப் பயணமாக அரசு நிதி ரூ.1,50 கோடி செலவில் அழைத்துச் செல்லப்பட்டு வருகின்றனர்.



முக்திநாத் ஆன்மிகப் பயணம் 2022–2023ஆம் ஆண்டில்சென்றுவந்தவர்களுக்குதலாரூ.20,000/– வீதம் பயண செலவாக வழங்கப்பட்டு வருகிறது.

- வள்ளலாரின் 200 ஆவது ஆண்டு பிறந்தநாள், தர்மசாலைதொடங்கி156ஆவதுஆண்டுமற்றும் ஜோதி தரிசனத்தின்152ஆவது ஆண்டு ஆகிய முப்பெரும் விழா 2022 அக்டோபர் மாதம் முதல் 52 வாரங்கள் கொண்டாடப்பட்டது. முதல் வார நிகழ்ச்சி மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் தலைமையேற்று நடத்தப்பட்டு, வள்ளலார் 200 இலச்சினை,சிறப்புதபால்உறை, சிறப்புமலர்ஆகியவைவெளியிடப்பட்டன.52வார விழாவின்போதும்அன்னதானம்வழங்கப்பட்டது. இவ்விழா செலவிற்காக அரசு மானியம் ரூ.3.25கோடிவழங்கப்பட்டுள்ளது.வள்ளலார்200 ஐம்பத்து இரண்டு வார தொடர் அறநிகழ்வின் நிறைவுவிழா 05.10.2023 நடைபெற்றது. அவ்விழாவில் ரூ.99.90 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்படவுள்ள வள்ளலார் சர்வதே மையத்திற்கானஆணையினைவழங்கினார்கள்.
- கமலமுனி சித்தருக்கு திருவாரூர், அருள்மிகு தியாகராஜசுவாமி திருக்கோயில் சார்பிலும், சுந்தரானந்த சித்தருக்கு மதுரை அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயில் சார்பிலும், பாம்பாட்டிசித்தருக்குசங்கரன்கோவில்அருள்மிகு சங்கரநாராயணசுவாமி திருக்கோயில் சார்பிலும் சித்தர் விழா சிறப்புற நடத்தப்பட்டது.
- தெய்வசேக்கிழார்பிறந்தஇடமானகுன்றத்தூரில், ஆண்டுதோறும் 3 நாட்கள் அரசு விழாவாக கொண்டாடப்படுகிறது.
- செங்கல்பட்டு மாவட்டம், திருக்கழுக்குன்றம், அருள்மிகு வேதகிரீஸ்வரர் திருக்கோயிலில் திருஞானசம்பந்தர் விழா ஆண்டுதோறும் கொண்டாடப்படுகிறது.
- நாகப்பட்டினம்மாவட்டம்,அருள்மிகுவிஸ்வநாத சுவாமிதிருக்கோயில்வளாகத்தில்,தமிழ்மூதாட்டி அவ்வையாருக்கு ஆண்டுதோறும் அவ்வையார் விழா 3 நாட்கள் கொண்டாடப்படுகிறது.
- மேலும், 17 அம்மன் திருக்கோயில்களில் மாதந்தோறும் பௌர்ணமி தினங்களில் 108 திருவிளக்கு வழிபாடு நடத்தப்பட்டு வருகிறது.
- மகாசிவராத்திரி விழா கடந்த ஆண்டு 5 சிவத்திருத்தலங்கள் சார்பாக நடத்தப்பட்டது. நடப்பாண்டில் 2 சிவத்திருத்தலங்கள் நடத்தப்படவுள்ளது.
- திருக்கோயில்களில்1இலட்சம்தலமரக்கன்றுகள் நடப்பட்டுள்ளது.
- அன்னை தமிழில் அர்ச்சனை செய்யப்படும் என்றபதாகைஅனைத்துதிருக்கோயில்களிலும் வைக்கப்பட்டுள்ளது. தமிழில் அர்ச்சனை செய்யப்படுவதை ஊக்குவிக்கும் பொருட்டு அர்ச்சகர்களுக்கு அர்ச்சனைகட்டணச்சீட்டில் 60 சதவிகிதம் தொகை பங்குத் தொகையாக வழங்கப்பட்டு வருகிறது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்அவர்கள்'அன்னைத்தமிழ்போற்றிப் புத்தகங்களை வெளியிட்டார்கள்.
- கடந்த ஆண்டுகளில் 15 திருக்கோயில்களில் மருத்துவ மையம் ஏற்படுத்தப்பட்டது. இவ்வாண்டு மேலும்



2 திருக்கோயில்களில் மருத்துவமையம் ஏற்படுத்தப்படும். (1. கோவை, ஆனைமலை, 2. சென்னை, கந்தகோட்டம்).

❖ திருக்கோயில் நிருவாகம் முடிகாணிக்கை செலுத்துவதற்கான கட்டணத்தை ஏற்றுக்கொண்டு கட்டணமின்றி முடிகாணிக்கை செலுத்தும் திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது. தற்போது முடி இறக்கும் தொழிலாளிகளுக்கு ஒரு முடி காணிக்கைக்கு ரூ.30/– திருக்கோயில் சார்பாக வழங்கப்படுவதோடு, மாத ஊக்கத் தொகையாக ரூ.5,000/–மும் திருக்கோயில் நிருவாகத்தால் வழங்கப்படுகிறது.

❖ திருக்கோயில்கள் சார்பில் ஒரு பல்தொழில்நுட்ப கல்லூரி உட்பட 10 கல்லூரிகள், 25 பள்ளிகளும், திருமடங்களின் சார்பில் 7 பள்ளிகளும் நடத்தப்பட்டு வருகின்றன. மேலும், 16 பயிற்சி பள்ளிகள் நடத்தப்பட்டு வருகின்றன. 2022–2023இல் அர்ச்சகர் பயிற்சி பள்ளியில் சேர்ந்து, அர்ச்சகர் பயிற்சி முடித்த 3 பெண்கள் உட்பட 94 பயிற்சி பெற்ற அர்ச்சகர்களுக்கும், 3 ஆண்டு பயிற்சி முடித்து 4 ஓதுவார் பயிற்சி பள்ளி மாணர்வகளுக்கும் சான்றிதழ் 12.09.2023 அன்று, மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் அவர்களால் வழங்கப்பட்டது.

❖ பயிற்சி பள்ளிகளில் பயின்று வரும் மாணவர்களுக்கு வழங்கப்பட்டு வந்த மாதாந்திர ஊக்கத்தொகை ரூ.1,500–ஐ 2021–2022 நிதியாண்டில் உயர்வு செய்து ரூ.3,000 ஆக வழங்கப்பட்டு வருகிறது. நடப்பாண்டில் முழுநேரப் பயிற்சி மாணவர்களுக்கு மாதாந்திர ஊக்கத்தொகையை ரூ.4,000 ஆகவும், பகுதி நேர பயிற்சி மாணவர்களுக்கு ரூ.2,000 ஆகவும் உயர்வு செய்து அரசாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. 2023–2024 ஆம் கல்வி ஆண்டில் திருக்கோயில்கள் மூலம் நடத்தப்படும் பயிற்சிப்பள்ளிகளில் தற்போது 212 மாணவர்கள் முழுநேரமாகவும், 80 மாணவர்கள் பகுதிநேரமாகவும் பயின்று வருகின்றனர்.

❖ 42 ஓதுவார்களுக்கு பணி நியமன ஆணை வழங்கப்பட்டுள்ளது. இவர்களுள் 11 பெண் ஓதுவார்கள் பணியமர்த்தப்பட்டுள்ளனர்.

❖ 27 திருக்கோயில்களில் 29 யானைகள் பராமரிக்கப்பட்டு வருகின்றன. திருக்கோயில்களில் நீண்டகாலம் சேவைபுரிந்து முக்தி அடைந்த 10 யானைகளுக்கு மணிமண்டபம் அமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. திருக்கோயில்களுக்கு காணிக்கையாக வரப்பெறும் கால்நடைகளுக்கு மாதம் இருமுறை மருத்துவப் பரிசோதனைகள் நடத்தப்பட்டது மற்றும் உபரிகால்நடைகள் மகளிர் சுயஉதவிக்குழுக்களுக்கும், திருக்கோயில் அர்ச்சகர் / பூசாரிகளுக்கும் உரிய உத்தரவுகள் பெறப்பட்டு விலையின்றி வழங்கப்படுகிறது.

- 7,073 திருக்கோயில்களில் பரம்பரை முறைவழி சாரா அறங்காவலர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.
- இந்து சமய அறநிலையத்துறையின் தலைமை அலுவலகத்தில் ரூ.15 கோடி மதிப்பீட்டில் கூடுதல் அலுவலகக் கட்டடம் ஓராண்டில் கட்டிமுடிக்கப்பட்டு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.
- திருக்கோயில் பக்தர்களுக்கான சேவைகள் தொடர்பான விவரங்கள் மற்றும் ஒருங்கிணைக்கப்பட்ட திருக்கோயில் நிருவாக மேலாண்மைத் திட்டம் ஆகியவற்றிற்கான வலைதளம் 2021 மேம்படுத்தப்பட்டு கட்டண சேவைகள், திருக்கோயில் நிருவாகம் குறித்து பல்வேறு தனித்தனி தொகுப்புகள் (Modules) நடைமுறையில் உள்ளது.
- 48 முதுநிலை திருக்கோயில்களில் பொருத்தப்பட்டுள்ள 2,832 கண்காணிப்பு கேமராக்கள், ஆணையர் அலுவலகக் கட்டுப்பாட்டு அறையிலிருந்து 52 கணினித்திரைகள் வைத்து (24x7) கண்காணிக்கப்பட்டு உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.
- திருக்கோயில்களில் உள்ள சிலைகள் மற்றும் செப்புப் பட்டயம் குறித்து இதுவரை 297 திருக்கோயில்களில் கள ஆய்வுகள் செய்யப்பட்டன. பராமரிப்புப் பணி முடிக்கப்பட்ட இலக்கிய ஓலைச்சுவடிகளை ஒளிவருடல் செய்ய தமிழ் இணைய கல்விக்கழகம் (TVA – Tamil Virtual Academy) தொடர்புக்கொள்ளப்பட்டு, தமிழ்நாடு எல்காட் நிறுவனம் மூலம் ஒளிவருடல் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
- திருக்கோயில் நிருவாகம் குறித்து பல்வேறு தனி தன் தொகுப்புகள் (Module) நடைமுறையில் உள்ளது.
- 108 அறிய புத்தகங்கள் மறுபதிப்பு செய்யப்பட்டு 19.01.2023 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் வெளியிடப்பட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து தற்போது வரை 216 அரிய புத்தகங்கள் மறுபதிப்பு செய்யப்பட்டுள்ளன.
- 2024–2025 ஆம் நிதியாண்டில் ஆயிரம் ஆண்டுகள் பழமையான 77 திருக்கோயில்கள் ரூ.119.67 கோடி மதிப்பீட்டில் புனரமைத்துப் பாதுகாக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளன. இதற்கு அரசு நிதியாக ரூ.100 கோடி வழங்கப்பட உள்ளது.

சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமம்

- தமிழ்நாடு நகர் மற்றும் ஊரமைப்புச் சட்டம், 1971இன் கீழ் 2018ஆம் ஆண்டில் நிலச் சேகரிப்புப் பகுதி வளர்ச்சித் திட்ட விதிமுறை திருத்தப்பட்டு நிலச் சேகரிப்புப் பகுதி வளர்ச்சித் திட்ட விதிகளுக்கு அரசு ஒப்புதல்.
- ரூ.393.74 கோடி மதிப்பீட்டில் செங்கல்பட்டு மாவட்டம் கிளாம்பாக்கத்தில் 88.52 ஏக்கர் நிலப் பரப்பளவில் கலைஞர் நூற்றாண்டு பேருந்து முனையம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.
- வடசென்னை வளர்ச்சித் திட்டத்தை, பல்வேறு துறைகளின் பங்களிப்போடு சென்னை பெருநகர் வளர்ச்சி;க குழுமம் மேற்கொண்டு வருகிறது.

சென்னை ஒருங்கிணைந்த பெருநகர போக்குவரத்துக் குழுமம்

- சென்னை ஒருங்கிணைந்த பெருநகர போக்குவரத்து குழுமத்திற்கு (CUMTA) உலக வங்கியின் சென்னை நகர கூட்டமைப்புத் திட்டத்தின் கீழ் செயல்பாட்டு ஆவணம் (Operational Manual) உருவாக்கப்பட்டுள்ளது.
- சென்னைப் பெருநகரப் பகுதிக்கான ஒருங்கிணைந்த போக்குவரத்துத் திட்டம் (Comprehensive Mobility Plan – 5,904 ச. கிமீ.) தயாரிக்கும் பணி தொடக்கம்.
- சென்னை பெருநகருக்கு வாகன நிறுத்த மேலாண்மைக்கான கொள்கையை அமல்படுத்த அண்ணா நகருக்கு வாகன நிறுத்துமிட மேலாண்மைத் திட்டம் தயாரிக்கும் பணிகள் தொடக்கம்.
- ஒருங்கிணைந்த பயணச்சீட்டு மற்றும் பயணத் திட்டமிடல் செயலி உருவாக்கம். இதில் தெற்கு இரயில்வேயின் புறநகர் சேவைகளுக்கானப் பயணச்சீட்டு முறைகளும் இணைப்பு.

தமிழ்நாடு கட்டடம் மற்றும் மனை விற்பனை

- 24,167 வீட்டு மனை மற்றும் கட்டடத் திட்டங்கள் பதிவு செய்யப்பட்டு 2,352 முகவர்கள் பதிவு.

❖ ❖ ❖

தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள்



முனைவர் **பழனிவேல் தியாக ராஜன்** அவர்கள்

மாண்புமிகு தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர்

தமிழ்நாடு மின்னணு நிறுவனம் (எல்காட்)

- திருச்சி, நாவல்பட்டு தகவல் தொழில்நுட்பப் பூங்காவில் (எல்கோசெஸ்) தரை+4 தளங்கள் கொண்ட தகவல் தொழில்நுட்பக் கட்டடம்.
- யுமாஜின் சென்னை (UMAGINE CHENNAI) ஒரு முக்கிய தொழில்நுட்ப நிகழ்வாக ஆண்டுதோறும் நடத்திடத் திட்டமிடப்பட்டு, அதன் முதல் மாநாடு, மார்ச் 23, 2023 முதல் மார்ச் 25, 2023 வரை சென்னை வர்த்தக மையத்தில் வெற்றிகரமாக நடத்தப்பட்டு இதன் இரண்டாவது மாநாடு – UMAGINE 2024, பிப்ரவரி 23 முதல் 24 வரை சென்னை வர்த்தக மையத்தில் வெற்றிகரமாக நடைபெற்றது.
- தமிழ்நாடு மின்னணு நிறுவனம், 2023–2024 ஆம் நிதியாண்டில், 1,13,710 மரக்கன்றுகளை நட்டுள்ளதன் மூலம், தகவல் தொழில்நுட்பப் பூங்காக்களில் (எல்கோசெஸ்களில்) பசுமைப் பரப்பினை மேம்படுத்தியுள்ளது.
- 8 எல்கோசெஸ்களில் 579.55 ஏக்கர் நிலங்கள், குத்தகை அடிப்படையில் 40 நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டன.
- தொலைத்தொடர்பு உள்கட்டமைப்புகளை அமைப்பதற்கான வழித்தடத்திற்கு அனுமதி வழங்குதல், குறைதீர்த்தல் மற்றும் தொலைத்தொடர்பு கட்டமைப்பைக் கண்காணித்தல் ஆகியவற்றுக்காக தமிழ்நாடு தொலைத்தொடர்பு உள்கட்டமைப்புக் கொள்கை 2022 உருவாக்கப்பட்டுள்ளது.
- எல்காட் நிறுவனம், தொலைத்தொடர்புக் கோபுரம் எழுப்புதல் ஆப்டிகல் ஃபைபர் கேபிள் நிறுவுவதற்கான வழித்தட அனுமதியை தொலைத்தொடர்பு சேவை



வழங்குநர், உள்கட்டமைப்பு வழங்குநருக்கு வழங்குவதற்காக நிகழ் நிலை இணைய முகப்பினை காலக்கெடு மற்றும் வெளிப்படையானமுறையில்உருவாக்கியுள்ளது.

- சமக்ரசிக்ஷா திட்டத்தின் கீழ் பள்ளி மாணவர்களுக்கு ஆதார் தொடர்பான சேவைகளை வழங்குவதற்காக, 414 கல்வி வட்டாரங்கள் கண்டறியப்பட்டு 770 தரவு உள்ளீட்டாளர்களுடன் ஆதார் சேவை மையங்களை நிறுவுவதற்கு, பள்ளிக்கல்வித் துறை, எல்காட் நிறுவனத்தை ஒரு பதிவு முகவராகத்தேர்வுசெய்துள்ளது,முதல்கட்டமாக 120 வட்டார வள மையங்களில் 120 ஆதார் மையங்கள் அமைப்பப்பட்டுள்ளன.

- இந்தியதனித்துவஅடையாளஆணையத்தினால் (UIDAI) அங்கீகரிக்கப்பட்ட முகமைகளுள் ஒன்றாகஎல்காட்நிறுவனம்தேர்வுசெய்யப்பட்டு, ஆதார்பதிவுநடவடிக்கைகளைச்செயல்படுத்தி வருகிறது. தற்போது, எல்காட் நிறுவனம் குடிமக்களுக்குஆதார்தொடர்பானசேவைகளை வழங்குவதற்காகதமிழ்நாடுமாநிலம்முழுவதும் 262நிரந்தரப்பதிவுமையங்களைநிறுவியுள்ளது.

- இணையதள அலைவரிசையை சுற்றளவு மட்டத்தில் 1 Gbps லிருந்து 4 Gbps ஆக உயர்த்தவும்,உள்முக்கியதகவல்தொழில்நுட்ப உள்கட்டமைப்பு நெட்வொர்க்கிற்கு 10 Gbps ஆக மேம்படுத்தவும் தமிழ்நாடு மாநிலத் தரவு மையத்தால் நடவடிக்கை.

- TNSDCயில்பயன்படுத்தத்தக்கசேமிப்புத்திறன் 600 TB ஆகவும் திருச்சி TNDRCஇல் இது 200 TB ஆகவும் சேமிப்புப் பகுதி நெட்வொர்க்கின் (SAN) திறன் மேம்படுத்தப்பட்டுள்ளது.

- அரசுத் துறைகளின் பயன்பாடுகளை பதிவேற்றம் செய்வதற்கான தேவைக்கேற்ப உட்கட்டமைப்பினை அதிகரிக்கக்கூடிய அம்சங்களுடன் கணக்கீடு மற்றும் சேமிப்பு உட்கட்டமைப்புடன் மேகக் கணினியக் கட்டமைப்பு விரிவுபடுத்தப்பட்டு e-Office, TANGEDCO, TNPDS பொது விநியோகத்திட்டம் போன்ற முக்கியமான பயன்பாடுகளுக்கு மெய்நிகர் இயந்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

- அரசுத் துறைகளின் வலைப் பயன்பாட்டுச் செயலிகளின்புதியபதிவேற்றங்கள்369லிருந்து 403 ஆக அதிகரிப்பு.

- தமிழகத்திற்கான இணையப் பாதுகாப்புக் கட்டமைப்பின் (CSA-TN) பாதுகாப்பு இயக்கமையத்தில்(SOC)உள்ளகருவிகளில் சுமார் 240 முக்கியமான தரவுகள் பதிவிடப்பட்டுள்ளது.

- மாநிலஅரசுஅலுவலகங்களிலுள்ளதலைமைத் தகவல்அதிகாரிகளுக்குஇணையப்பாதுகாப்பு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் குறித்த சுமார் 40 பயிற்சி முகாம்கள் நடத்தப்பட்டுள்ளன.

தமிழ்நாடு மின் ஆளுமை முகமை (TNeGA)

தேசியமின் – ஆளுமை சேவை வழங்கல் மதிப்பீடு (NeSDA)

- தேசிய மின்-ஆளுமை சேவை வழங்கல் மதிப்பீடு(NeSDA)2019-இல்மேற்கொள்ளப்பட்ட மதிப்பீட்டில் தமிழ்நாடு 18ஆவது இடத்தில் இருந்தது.

- 2021இல் மேற்கொள்ளப்பட்ட மதிப்பீட்டில், வழங்கப்படும்சேவைகளின்தரத்தின்இணக்க விகிதத்தை85%மேம்படுத்தி,தமிழ்நாடு2ஆவது இடத்தில் உள்ளது .



தரவுத் தூய்மைத் திட்டச் சாதனைகள்

- தமிழ்நாடு மின் ஆளுமை முகமை தரவுத் தூய்மைத் திட்டத்தை மேற்கொள்வதற்கான ஒருங்கிணைப்பு முகமையாக நியமிக்கப்பட்டு கூட்டுறவு நகைக்கடன் மற்றும் சுய உதவிக்குழுக் கடன் தரவைப் பகுப்பாய்வு செய்து தகுதியான பயனாளிகளுக்குச் சேவை வழங்கியதன் மூலம் தள்ளுபடித் திட்டங்களில் ஆயிரக்கணக்கான கோடிகளைச் சேமித்தது.
- முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்ட அட்டைகள் இல்லாத வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ள குடும்பங்கள் பகுப்பாய்வு செய்யப்பட்டு, புதிய முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்ட அட்டைகள் வழங்க சுகாதாரத்துறைக்குத் தரவு பகிரப்படுகிறது.

கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம் (KUMT) – தகுதியான பயனாளிகளை அடையாளம் காணுதல் மற்றும் வங்கிக் கணக்கைச் சரிபார்த்தல்

- கலைஞர் மகளிர் உரிமை திட்டம் (KMUT) என்பது தமிழக அரசின் முதன்மையான நலத்திட்டங்களில் ஒன்றாகும். இந்தத் திட்டம், அரசாங்கத்தின் பல்வேறு தரவுத்தொகுப்புகளில் உள்ள தரவுகளின் அடிப்படையில், தகுதியான பயனாளிகளை அடையாளம் காணும் வழிமுறையை உருவாக்கியுள்ளது. மேலும், ஆதார் உள்ளீடு மற்றும் வங்கிக் கணக்குச் சரிபார்ப்பு தொடர்ந்து செய்யப்பட்டதன் விளைவாக 99.13% பயனாளிகளுக்கு வெற்றிகரமாக உரிமைத் தொகை வழங்கப்பட்டது.

மிக்ஜாம் வெள்ள நிவாரணம் – தகுதியான பயனாளிகளை அடையாளம் காண்பதற்கு உதவுதல்

- சென்னை, திருவள்ளுவர், காஞ்சிபுரம் மற்றும் செங்கல்பட்டு மாவட்டங்களில் மிக்ஜாம் வெள்ளத்தால் ஏற்பட்ட பேரழிவிற்கு இடருதவியாக பண உதவி வழங்க ஏதுவாக PDS தரவுத்தளத்தை ஆய்வு செய்து தகுதியான குடும்பங்கள் அடையாளம் காணப்பட்டன.

தமிழ்நாடு முதலமைச்சர் தகவல் பலகை

- நிருவாகத்தில் வெளிப்படைத்தன்மை மற்றும் செயல்திறனுக்கான குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தில், அரசுத்துறைச் செயலாளர்கள், ஆணையர்கள், இயக்குநர்கள் மற்றும் மாவட்ட ஆட்சியர்கள் உள்ளிட்ட தலைமைப் பணியாளர்களுக்கு தமிழ்நாடு முதலமைச்சரின் தகவல் பலகை ஒரு முக்கிய ஆதாரமாக உருவெடுத்துள்ளது. இந்த அதிநவீன தளம் தரவு சார்ந்து முடிவெடுப்பதை எளிதாக்குவது மற்றும் பல்வேறு நிருவாகத்தின் தடையற்ற தகவல் தொடர்புகளை உறுதிசெய்வதன் மூலம் மக்களின் வாழ்க்கையில் நேர்மறையான தாக்கங்களை ஏற்படுத்துகிறது.



இ–சேவை சாதனைகள்

- தமிழ்நாடு மின் ஆளுமை முகமை (TNeGA) மாநிலத்தின் அனைத்து மின் ஆளுமை தேவைகளையும் செயல்படுத்துவதில் முதன்மைநிறுவனமாகும்.இ–சேவைதிட்டம் தமிழ்நாடு மின் ஆளுமை முகமையால் (TNeGA) செயல்படுத்தப்பட்டு, சேவைகளை வழங்குவதில் வெளிப்படைத்தன்மையை உறுதிப்படுத்துகிறது. மாநிலம் முழுவதும் அமைந்துள்ள இ–சேவை மையங்கள் மூலம் இணைய வழியில் குடிமக்களுக்கு பல்வேறு அரசு துறைகளின் சேவைகளை வழங்கும் முக்கியநோக்கத்துடன்தமிழ்நாடுமின்ஆளுமை முகமை செயல்படுத்தப்படுகிறது.

- 2021ஆம்ஆண்டுவரைதமிழ்நாடுமின்ஆளுமை முகமையால் இ–சேவைதிட்டம்வழியாக132 சேவைகள்வழங்கப்பட்டது.ஜூன்2021ஆண்டு முதல்ஜூலை2024ஆண்டுவரைகூடுதலாக 277 சேவைகள் (122 G2C மற்றும் 150 B2C) தமிழ்நாடுமின்ஆளுமைமுகமையால்புதிதாக வழங்கப்பட்டுவருகிறது.https://tnesevai.tn.gov. என்றஇணையதளம்வழியாகபல்வேறுதுறைகள் சார்ந்த 409 குடிமக்களை மையப்படுத்திய சேவைகள் வழங்கப்பட்டு வருகிறது.

- மேலும்,குடிமக்களின்வீட்டிற்குஅருகிலேயே இணைய சேவைகளை வழங்கவும், தொழில் முனைவோரிடையேஊக்கத்தைமேம்படுத்தவும் "அனைவருக்கும் இ–சேவை" திட்டம் 2023 ஆண்டு ஏப்ரல் மாதம் தொடங்கப்பட்டது". இத்திட்டத்தின்கீழ்மொத்தம்"26,311"இ–சேவை பயனர்குறியீடுகள்வழங்கப்பட்டது.ஜூலை2024 வரைமேற்கொள்ளப்பட்டமொத்த1,71,55,008 பரிவர்த்தனைகளில் 58% பரிவர்த்தனைகள் (அதாவது 83,28,139 பரிவர்த்தனைகள்) EFA ஆபரேட்டர்கள் மூலம் மேற்கொள்ளப்பட்டது.

- குடிமக்களின்பிரச்சினைகளுக்குதீர்வுகாண, தமிழ்நாடு மின் ஆளுமை முகமையானது "18004256000"என்றகட்டணமில்லாஉதவி சேவைமையத்தைதுவங்கியுள்ளது.ஏப்ரல்2023 முதல்ஜூலை2024வரை1,93,074அழைப்புகள் பெறப்பட்டுள்ளது.மேலும்"90%"அழைப்புகள் வழியாகபெறப்பட்டகுறைகள்இம்மையத்தின் ஆபரேட்டர்களால் தீர்வு செய்யப்பட்டுள்ளது. மே15,2024முதல்,இ–சேவை–கட்டணமில்லா அழைப்பு மையம் தமிழ்நாடு மின் ஆளுமை முகமை வளாகத்தில் இருந்து கோட்டூர்புரம் முதல்வரின் முகவரி அழைப்பு மையத்திற்கு மாற்றப்பட்டது.முகவர்களின்எண்ணிக்கை20 ஆக அதிகரிக்கப்பட்டுள்ளது. இதன் பின்னர், தீர்வுசெய்யப்படாதஅழைப்புகளைசராசரியாக 37%(ஜனவரிமுதல்மே2024)லிருந்து6.79%ஆக ஜூலை2024வரைகுறைக்கப்பட்டுமையத்தின் செயல்திறன் மேம்படுத்தப்பட்டுள்ளது.

- மக்களுடன் முதல்வர் முகாமின் முதல் பகுதி (நகர்ப்புறபகுதிகளில்)டிசம்பர்2023முதல்ஜனவரி 2024வரைநடைபெற்றது,அப்போது,இ–சேவை ஆபரேட்டர்கள்வழியாக30,223பரிவர்த்தனைகள் மேற்கொள்ளப்பட்டது. மக்களுடன் முதல்வர் முகாமின் இரண்டாம் பகுதி (கிராமப்புற பகுதிகளில்)2024ஜூலை11ஆம்தேதிதொடங்கி நடைபெற்று வருகிறது.

❖ அனைவருக்கும் இ–சேவை என்ற திட்டத்தின் கீழ் செயல்பட்டுவரும் இ–சேவைமையங்களில்விரிவானஆய்வுகளை மேற்கொள்ள தமிழ்நாடு மின் ஆளுமை முகமையானது ஒரு தணிக்கை (TPA) நிறுவனத்தை ஈடுபடுத்தியுள்ளது. 26,311 மையங்களில்17,885மையங்கள்(45%)இ–சேவை மையங்களின் தரம் மற்றும் செயல்பட்டு திறனை உறுதி செய்வதற்காக மாநிலம் முழுவதும்தணிக்கைசெய்யப்பட்டுபகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளன.

e–Paarvai – செயற்கை நுண்ணறிவு AI அடிப்படையிலான கண்புரை கண்டறியும் செயலி

❖ செயற்கைநுண்ணறிவு(AI)அடிப்படையிலான கண்புரை கண்டறியும் செயலி என்பது ஆண்ட்ராய்டு மொபைல்மூலம்எடுக்கப்பட்ட கண்ணின் புகைப்படத்தைப் பயன்படுத்தி கண்புரையைக்கண்டறியும்மருத்துவசெயலி.

❖ தமிழ்நாடுமாநிலபார்வையற்றோர்கட்டுப்பாட்டு சங்கத்தின்கூட்டுமுயற்சியுடன்மாநிலத்தின்பல மாவட்டங்களில்இதுசெயல்படுத்தப்பட்டுள்ளது.

❖ 2021ஆம் வருட NASSCOM விருதுகள், முன்மாதிரி வகையின் கீழ் கேம் சேஞ்சர்ஸ் விருதினை இந்த செயலி பெற்றுள்ளது.

பூச்சி மற்றும் நோய் கண்டறிதல் செயலி

❖ பூச்சி மற்றும் நோய் கண்டறிதல் செயலி, செயற்கை நுண்ணறிவைப் பயன்படுத்தி தயார்செய்யப்பட்டு உழவன் செயலியுடன் ஒருங்கிணைக்கப்பட்டு 2022ஆம் வருட NASSCOM விருதுகள் முன்மாதிரி வகையின் கீழ் கேம் சேஞ்சர்ஸ் விருதை இந்தச் செயலி பெற்றுள்ளது.

முதலமைச்சர் பொது நிவாரண நிதித்தளம்

❖ முதலைமைச்சரின் நிவாரண நிதிக்குப் பொதுமக்களிடமிருந்து நன்கொடைகளைச் சேகரிக்கும் இணையதளம், பணம் செலுத்தியவுடன்வரிவிலக்குச்சான்றிதழையும் இணையதளம் பகிரும். பல்வேறு வகையான முறையில் நிகழ்நிலைக் கட்டணங்களை இந்தத்தளத்தில் செலுத்தலாம். இந்தியக் குடிமக்கள், வெளிநாட்டினர் மற்றும் வெளிநாடுவாழ்இந்தியர்கள்இந்தத்தளத்தைப் பயன்படுத்தி முதல்வரின் பொது நிவாரண நிதிக்குத்தங்கள்நன்கொடைகளைவழங்கலாம்.



தமிழ்நாடு ஐசிடிஸ் – பகுப்பாய்வுத் தளம்

❖ தமிழ்நாடுஐசிடிஸ்செயற்கைநுண்ணறிவின் அடிப்படையில் சிறார்களின் ஊட்டச்சத்துக் குறைபாடுமற்றும்மாநிலத்தில்ஊட்டச்சத்துக் குறைபாட்டைக் கண்டறிவதற்கான தரவுப் பகுப்பாய்வுச் செயலி ஆகும். இந்தச் செயலி நீலகிரியில்முதலமைச்சரால்தொடங்கப்பட்டது. இதன்மூலம்மாநிலம்முழுவதும்தரவுகளைச் சேகரித்து.0–6வயதுக்குட்பட்ட4.5இலட்சம் குழந்தைகள் கடுமையான அல்லது மிதமான ஊட்டச்சத்துக் குறைபாட்டால் பாதிக்கப்பட்டுள்ளது கண்டறியப்பட்டது.

முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்திற்கான மொபைல் செயலி மற்றும் நிகழ் நேரத் தகவல் பலகை

❖ அரசுப் பள்ளி மாணவர்களுக்கான காலை உணவுத் திட்டத்தை நிருவகிப்பதற்கும் கண்காணிப்பதற்கும் இந்தச் செயலி பயன்படுகிறது.

ஊரக வளர்ச்சித் துறைக்கான நம்ம கிராம சபா செயலி

❖ கிராமசபாக்கூட்டம்குறைந்தபட்சவரம்புடன் கூடிய எண்ணிக்கையில் நடைபெறுகிறதா என்பதைக்கண்காணிக்க,இந்தச்செயலிஉதவும். இச்செயலிமூலம்சேகரிக்கப்படும்தரவுதுறை மற்றும்அரசாங்கத்திற்குபங்கேற்புமுறைமற்றும் ஒவ்வொருபஞ்சாயத்திலும்நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் குறித்து பகுத்து ஆய்வதற்கு உதவும்.



மின் – அலுவலகம்

- தமிழ்நாடு அரசின் நிர்வாகக் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள அனைத்து அலுவலகங்களையும் மின்மயமாக்குத் திட்டத்தை TNeGA முன்னேடுத்துச் செல்கிறது. முதற் கட்டமாக, செயலகத்தின் அனைத்துத் துறைகளிலும் இ–அலுவலகம் செயல்படுத்தப்பட்டதுமற்றும் இரண்டாம் கட்டமாக, அனைத்து மாவட்ட ஆட்சியர் அலுவலகங்களிலும் (மற்றும் அவற்றின் கீழ் உள்ள அலுவலகங்கள்) மின்–அலுவலகம் செயல்படுத்தப்பட்டது. மூன்றாம்கட்டமாக,அனைத்துதுறைகளிலும் உள்ள இயக்குனரகங்கள் மற்றும் துறைத் தலைமைகளில் மின்–அலுவலகம் வெளியிடப்படுகிறதுமற்றும்இன்றுவரை243 HODகள் கட்டமைக்கப்பட்டுள்ளன.
- மொத்தத்தில்,92,236பயனர்கள்,அதாவது,மாநில அரசாங்கத்தின் ஊழியர்கள் தனிப்பட்ட பெயர் அடிப்படையிலானபயனர்உள்நுழைவுடன்மின்–அலுவலகத்தில்உள்ளமைக்கப்பட்டுள்ளனர்.
- மேலும்இன்றுவரை40,00,960இ–கோப்புகள் மாநில அரசின் அலுவலகங்கள் முழுவதும் உருவாக்கப்பட்டுள்ளன, இது அரசு அலுவலகங்களுக்குள்கோப்புமேலாண்மையில் மின்அலுவலகவிண்ணப்பத்தின்பயன்பாட்டின் செயல்திறனை நிரூபிக்கிறது.
- இந்தமின்னணுகோப்புமேலாண்மைஅமைப்பு (இ–கோப்பு) 'காகிதமற்ற' அலுவலகங்களை உருவாக்க உதவுகிறது, இது கோப்புகளை விரைவாக அகற்ற அனுமதிக்கிறது மற்றும் நிர்வாகத்தைமேம்படுத்துகிறதுமின்–அலுவலகம் வெளிப்படைத்தன்மையைமேம்படுத்துகிறது, இதன் மூலம் கோப்புகளை கண்காணிக்க முடியும்,எனவேஒவ்வொருகோப்புகையாளும் அதிகாரியின்பொறுப்பும்கண்டறியப்படுகிறது. எல்லாவற்றிற்கும்மேலாக,மின்–அலுவலகம் தரவுபாதுகாப்புமற்றும்தரவுஒருமைப்பாட்டை உறுதிசெய்கிறது.எனவே,மின்–அலுவலகம் பயனுள்ள நிர்வாகத்தை நோக்கி நமது மாநிலத்தைவழிநடத்துகிறதுமற்றும்இறுதியில் குடிமக்களுக்கு சிறந்த சேவைகளை வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

மின் ஆளுமைத் திட்டங்கள்

நகர் ஊரமைப்பு இயக்கத்தின் மாநிலம் முழுவதுக்குமான ஒற்றைச் சாளர இணையதளம்

- நகர் ஊரமைப்பு இயக்ககத்தின் மாநிலம் முழுவதுக்குமான ஒற்றைச் சாளர இணையதளத்தின்வாயிலாகஒற்றைச்சாளர முறையில்கட்டடம்கட்டுவதற்கானஅனுமதி நிறைவு சான்று மற்றும் வசித்தலுக்கான சான்று போன்ற சேவைகள் பொதுமக்கள் பெற்றுக்கொள்ளலாம்.
- அதிகபட்சமாக 3,500 சதுர அடி கட்டட பரப்பளவைக் கொண்ட 2,500 சதுர அடி வரையிலானபிளாட்அளவுகளுக்கானகட்டிட அனுமதிகளைசுய–சான்றிதழ்அடிப்படையில் உடனடியாக வழங்கும் திட்டம்.

சென்னைப் பெரு நகர வளர்ச்சிக் குழும ஒற்றைச் சாளர இணையதளம்

- கட்டடம் கட்டுதல், மனைப் பிரிவு மற்றும் வகைப்பாடுமாற்றம்உள்ளிட்டபணிகளுக்கான

திட்ட அனுமதி வழங்குவதற்காக ஒற்றைச் சாளர இணையதளத்தின் வாயிலாக ஆய்வு செய்து ஒப்புதல் வழங்கிட இணையதளம் உருவாக்கப்பட்டுள்ளது. இவ்விணையதளமானது தமிழ்நாடு ஒற்றைச் சாளர இணைய முகப்பில் ஒருங்கிணைக்கப்படவுள்ளது.

சென்னைப் பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்றல் வாரியத்தினை முழு அளவிலான கணினிமயமாக்கல்

❖ சென்னை பெருநகர நீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் வாரியத்திற்கான முழு அளவிலான கணினிமயமாக்கல் திட்டத்தில் மனிதவள மேம்பாடு (HRMS),ஊதியம்,லெட்ஜர்,பட்ஜெட், கடன்கள், ஒப்பந்ததாரர் பதிவு, நீதிமன்ற வழக்குகள், புகார் கண்காணிப்பு, பில்லிங் சேகரிப்பு,இணையதளம்,மொபைல்பயன்பாடு, புதிய நீர், கழிவுநீர் இணைப்பு, நிதி மற்றும் கணக்குகள்,கொள்முதல்மற்றும்சரக்குமற்றும் பிற ஒருங்கிணைப்பு தொகுதிகள் போன்ற 23 தொகுதிகளை உள்ளடக்கியுள்ளது.

IT பாதுகாப்புத் தணிக்கை

❖ ஒன்றிய அரசின் CERT–IN–ஆல் அங்கீகரிக்கப்பட்ட தகவல் பாதுகாப்புத் தணிக்கையாளர்கள் மூலம் அரசாங்க இணையதளங்கள்/மொபைல்செயலிகளின் பாதுகாப்புத் தணிக்கையை தமிழ்நாடு மின் ஆளுமைமுகமைமேற்கொள்கிறது.வரப்பெற்ற 501பாதுகாப்புத்தணிக்கைகோரிக்கைகளில்203 தணிக்கைகள்நிறைவுபெற்று.மீதமுள்ள298 இனங்களில் நடவடிக்கை.

மின்னஞ்சல் முகவரி உருவாக்கம்

❖ பல்வேறுஅரசுஅலகுகளில்பல்வேறுப்பதவிகளில் பணிபுரியும் அனைத்து அலுவலர்களுக்கும் tn.gov.in என்ற இணையதள முகவரி (Domain) பெயருடன் கூடிய மின்னஞ்சல் முகவரிகள் இலவசமாகவழங்கப்பட்டு1,20,000மின்னஞ்சல் முகவரிகள் உருவாக்கம்.

தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம் (TACTV)

❖ புதிய சந்தா கொள்கை (NTO2) பிப்ரவரி 2023இல் அமுலுக்கு வந்த பின் அனைத்து தனியார் கேபிள் டிவி நிறுவனங்களும்



01.02.2023 முதல் தங்களுடைய சந்தா கட்டணத்தை கணிசமாக உயர்த்திவிட்டனர். எனினும் தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனமானது சந்தா கட்டணத்தை உயர்த்தாமல் ரூ.140 வரிகள் என்ற பழைய சந்தா கட்டணத்திலேயே 82 கட்டணச் சேனல்கள் மற்றும் 147 இலவச சேனல்களை மக்களுக்கு தொடர்ந்து வழங்கி வருகிறது. தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனத்தின் சந்தா தொகை கட்டணம் நாட்டிலேயே மிகவும் குறைவானது என்பது குறிப்பிடத்தக்கது.

❖ தற்போது தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனமானது 59HD சேனல்கள் மற்றும் 301 SD சேனல்களை தொகுப்பு மற்றும் A–la–carte (பட்டியலில்உள்ளஒவ்வொருசேனல்களும்ஒரு தனிவிலை)எனஇரண்டிலும்வழங்கிவருகிறது.

தமிழ்நாடு கேபிள் டிவி ஆபரேட்டர்கள் மற்றும் தொழிலாளர்கள் நலவாரியம்

❖ தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் (அ1) துறையின் அரசாணை (நிலை) எண் 03, நாள் 13.01.2024–இன்படி கேபிள் டிவி நலவாரியம்மறுசீரமைக்கப்பட்டு தமிழ்நாடு கேபிள் டிவி ஆபரேட்டர்கள் மற்றும் தொழிலாளர்கள் நலவாரியம்எனபெயர்மாற்றம்செய்யப்பட்டுள்ளது.

❖ கேபிள் டிவி ஆபரேட்டர்கள் மற்றும் தொழிலாளர்கள்உறுப்பினர்களாகபதிவுசெய்து நலத்திட்டங்களுக்கு விண்ணப்பிக்கவும், நலத்திட்ட உதவிகளை உறுப்பினர்களின்

வங்கிக்கணக்கில்நேரடியாகப்பெறவும் www.tnctvwb.in என்ற இணையதளம் 07.03.2024 அன்றுமாண்புமிகுதகவல்தொழில்நுட்பவியல் மற்றும்டிஜிட்டல்சேவைகள்துறைஅமைச்சர் அவர்களால்தொடங்கப்பட்டது.நாளதுதேதிவரை 1932கேபிள்டிவிஆபரேட்டர்கள்உறுப்பினர்களாக பதிவு செய்ய விண்ணப்பித்துள்ளனர்.

தமிழ் இணையக் கல்விக்கழகம் (TVA)

கல்வி தொடர்பான பணிகள்

- தமிழ்இணையக்கல்விக்கழகம்,36நாடுகளில் உள்ள தனது 167 தொடர்பு மையங்கள் மூலம் இணையவழித்தமிழ்க்கல்வியை(சான்றிதழ்க் கல்விமுதல்பட்டக்கல்விநிலைவரை)வழங்கி வருகிறது. இதில் மே 2021 முதல் 57 தொடர்பு மையங்கள் புதிதாகத் தொடங்கப்பட்டுள்ளன.

மாணவர் பதிவு

- சராசரியாக ஓராண்டுக்கு 2,500 மாணவர் பதிவுகள்என்றநிலையிலிருந்துகடந்தமூன்று ஆண்டுகளாக மேற்கொள்ளப்பட்டு வரும் முன்னெடுப்புகளின்காரணமாகதற்போது18,642 மாணவர் பதிவுகளாக உயர்ந்துள்ளது.

தமிழ்ப் பரப்புரைக்கழகம்

- புலம்பெயர் தமிழர்களுக்கு தமிழ் இரண்டாம் அல்லதுமூன்றாம்மொழியாகக்கற்பிக்கப்படும் என்ற சட்டசபை அறிவிப்பின்படி, ரூ.100 கோடி நிதியுதவியின் தமிழ்ப் பரப்புரைக்கழக நடவடிக்கைகள்தமிழ்இணையக்கல்விக்கழகம் மூலம் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

பாடப்புத்தகம் மற்றும் கற்றல் துணைக்கருவிகள்

- தமிழ்இணையக்கல்விக்கழகத்தின்சான்றிதழ் மற்றும் மேற்சான்றிதழ் கல்வித்திட்டங்கள், அகரம்,இகரம்,உகரம்,ழகரம்,சிகரம்என்றஐந்து நிலைகளாகமொழிக்கற்றல்திறன்கள்(கேட்டல், பேசுதல், படித்தல், எழுதுதல்) அடிப்படையில் மாற்றியமைக்கப்பட்டுள்ளன.மாணவர்களின் பல்லூடகக்கற்றலைமேம்படுத்தும்வண்ணம் ஒலிப்புத்தகம் (Audio Books), ஒலிக்குறிப்புப் புத்தகம் (Read Along Books), அசைவூட்டுக் காணொலிகள்(AnimationVideos),காணொலிப் புத்தகங்கள் (Video Lessons), மின்னட்டைகள் (Flash Cards) உள்ளிட்ட துணைக்கருவிகள் உருவாக்கப்பட்டுள்ளன.



- நிலை–1 முதல் பருவத்திற்கான பாடநூல், அதன்மொழிபெயர்ப்பு(24மொழிகள்)மற்றும் ஒலிபெயர்ப்பு(13மொழிகள்),துணைக்கருவிகள் ஆகியவற்றின் வெளியீட்டு விழாவும், தமிழ்ப் பரப்புரைக்கழகச் செயல்பாடுகளின் தொடக்கவிழாவும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்அவர்கள்தலைமையில்24.09.2022 அன்றுநடைபெற்றது.அதனைத்தொடர்ந்து2–5 நிலைகளுக்கானபாடப்புத்தகம்உருவாக்கும் பணிகள் நிறைவடைந்துள்ளன.

பண்பாட்டுப் பரப்புரைப் பணிகள்

கலாச்சாரப் பரப்பல்

- சிலம்பாட்டம் அடிப்படைப் பயிற்சிக்கான காணொலிகள், தேவாரப் பாடல்களை நவீன இசைக்கோர்ப்புடன்காணொலிகள்உருவாக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.
- இணையம் மூலமாக பண்ணிசைப் பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன.
- சங்கஇலக்கியநாள்காட்டிஉருவாக்குவதற்கான பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

ஆசிரியர் பயிற்சி

- அயலக மாணவர்களுக்குத் தமிழ் கற்பிக்கும் தன்னார்வல ஆசிரியர்களுக்காக, ஆசிரியர் பட்டயப்பயிற்சிஎன்றகல்வித்திட்டம்,தமிழ்நாடு ஆசிரியர்கல்வியியல்பல்கலைக்கழகத்துடன்

இணைந்து ஓராண்டு பட்டயப் படிப்பாக வழங்கப்படுகிறது.

இணையவழி வகுப்புகள்

- இணையவழிதமிழ்வகுப்புகளைநடத்துவதற்கு ஆசிரியர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். மாணவர்களுக்கு இணையவழி வகுப்புகள் வழங்கப்படுகின்றன.
- இதில்சென்னைமண்டலத்திலுள்ளஅனைத்து கேந்திரியவித்யாலயாபள்ளிமாணவர்களுக்கும் இணையவழி வகுப்புகள் நடத்தப்பட்டு வருகின்றன.

பேச்சுத் தமிழ் வகுப்புகள்

- தமிழ்நாட்டுக்குப் புலம்பெயர்ந்துள்ள தொழிலாளர்கள்,மத்தியஅரசுப்பணியாளர்கள் உள்ளிட்டோருக்குஇணையவழிபேச்சுத்தமிழ் வகுப்புகள் நடத்தப்பட்டு வருகின்றன.

நிதியுதவி

- அயல்நாடுகள்மற்றும்மாநிலங்களிலுள்ளதமிழ்ச் சங்கங்கள்/பள்ளிகளுக்கு ஆசிரியர் ஊதியம், தமிழ்வகுப்பறைகளுக்கானவாடகைக்கட்டணம் உள்ளிட்ட இனங்களுக்குநிதியுதவிவழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.
- ஃபிஜிநாட்டில்தமிழ்கற்பிக்கும்மையங்களுக்கு ஆசிரியர்களைஅனுப்பிவைப்பதற்கானபணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

உயர் கல்வி

- தமிழைப்பிழையின்றிஎழுதுதல்என்றகுறுகிய காலப்பயிற்சித்திட்டத்திற்குப்பாடங்கள்எழுதும் பணிகள் நிறைவடைந்துள்ளன.
- இளநிலைத் தமிழியல் பட்டக் கல்விக்கான பாடத்திட்டம் சீராய்வு செய்யப்பட்டு,பாடங்கள் எழுதும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.
- புதியதாக முதுகலைத் தமிழியல் பட்டக் கல்விக்கான பாடத்திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது.இதற்கானபாடங்கள் எழுதும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தீராக் காதல் திருக்குறள்

- தமிழ்இணையக்கல்விக்கழகம்,திருக்குறளின் பெருமைகளைஇன்றையதலைமுறையினர் அறியும் வண்ணம் 'தீராக் காதல் திருக்குறள்' என்ற பெயரில் தீந்தமிழ் நிகழ்ச்சிகளை ஒருங்கிணைத்து நடத்துவதற்கான நடவடிக்கைகளைமேற்கொண்டுவருகின்றது.
- இதன்முதல்நிகழ்ச்சியாக,தமிழ்நாட்டில்உள்ள பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்களுக்குக் 'குறளோவியம்' என்ற தலைப்பில் ஓவியப் போட்டி நடத்தப்பட்டு, 365 சிறந்த ஓவியங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, தினசரி திருக்குறள் மேசை நாட்காட்டிப் புத்தகமாக வடிவமைக்கப்பட்டுள்ளது.மேலும்பள்ளிமற்றும் கல்லூரிமாணவர்கள்பயன்பெறும்வகையில் 'குறள் இனிது' என்றதலைப்பில்திருக்குறள் நாட்டியநாடகம்21.12.2022அன்றுநடத்தப்பட்டது.

மின் நூலகம் உருவாக்குதல்

மின் நூலகம்

- தமிழ்இணையக்கல்விக்கழகம்மின்நூலகத்தில் 64,134நூல்கள்மற்றும்பருவஇதழ்களின்உரிய மீத்தரவுகளுடன்பதிவேற்றம்செய்யப்பட்டுள்ளன. மேலும்,175தொல்லியல்மற்றும்வரலாறுசார்ந்த இடங்களின்2025ஒளிப்படங்களும்பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன.
- இம்மின்நூலகத்தில்'MadrasCourier','குடியரசு', 'திராவிடநாடு' போன்ற அரிய இதழ்களும் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன.

அரிய ஒலி, ஒளி, ஒளிப்பட மற்றும் பிற வரலாற்றுப் படங்கள் மின்னுருவாக்கம்

- 800மணிநேரங்கள்கொண்டஒலி/ஒளிகோப்புகள் மின்னுருவாக்கம் செய்யப்பட்டுள்ளன.
- 5,437ஒளிப்படங்கள்,நிலவரைபடங்கள்மற்றும் இதரவரலாற்றுஆவணங்கள்மின்னுருவாக்கம் செய்யப்பட்டுள்ளன.

உள்ளடக்கத் தமிழ் மின் நூலகம்

- PDF வடிவில் உள்ள 16,200 புத்தகங்கள் தேடுதல் வசதி கொண்டவையாக மாற்றப்பட்டுள்ளன.
- முதற்கட்டமாக, 14 இலட்சம் உருபட பக்கங்களை எழுத்துணரியாக (OCR) மாற்றும் பணியில் 12.85 இலட்சம் பக்கங்கள் எழுத்துருவாக மாற்றம் செய்யப்பட்டுள்ளன.
- மேலும், பிழைத்திருத்தம், படத்தலைப்பு உருவாக்கம் மற்றும் உள்ளடக்கப் பக்கங்களாக மாற்றம் செய்து doc/odt, epub,

daisy, kindle போன்ற கோப்புகளாக மாற்றும் பணியில் 1,30,000 பக்கங்களில் 20,916 பக்கங்கள் மாற்றம் செய்யப்பட்டுள்ளன.

- 'கப்பலோட்டிய தமிழன்' வ.உ. சிதம்பரனார் அவர்களின் 150ஆவது பிறந்தநாள் – நூல்கள், கையெழுத்துப் பிரதிகள் மின்மயமாக்கல்.
- இதுவரை, 127 நூல்கள், கையெழுத்துப்பிரதிகள், ஒளிப்படங்கள், ஆவணங்கள் மற்றும் பல்லூடக ஆவணங்கள் மின்னுருவாக்கப்பட்டுள்ளன.
- வ.உ. சிதம்பரனார் 150ஆவது பிறந்தநாள் சிறப்பு இணையப்பக்கம் உருவாக்கப்பட்டு, 18.11.2022 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் திறக்கப்பட்டது. (https://www.tamildigitallibrary.in/voc)

முனைவர் பட்ட ஆய்வுச் சுருக்கம் மற்றும் ஆய்வுத் தொகுப்பு இணையத்தில் வெளியிடுதல்

- 1,466ஆய்வாளர்களிடமிருந்துஆய்வுச்சுருக்கம் மற்றும் ஆய்வுத் தொகுப்பு மின்நகல்கள் பெறப்பட்டுசான்றிதழ்கள்வழங்கப்பட்டுள்ளன. இப்பணிகளை மேற்கொள்வதற்காக ஒரு இணையதளத்தினைஉருவாக்கநடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

ஆய்வு மற்றும் உருவாக்கம்

- தமிழ்இணையக்கல்விக்கழகம்கணினித்தமிழ்த் தொடர்பானஎண்ணற்றமென்பொருள்களை உருவாக்கிஇலவசமாகப்பொதுப்பயன்பாட்டிற்கு வழங்கிவருகிறது. அப்பணிகளைத்தொடர்ந்து தற்போது மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் 22.10.2021 அன்று 'கீழடி – விசைப்பலகை–(Keezhadi–Keyboard)'மற்றும் 'தமிழி – ஒருங்குறி மாற்றி (Tamizhi – Unicode Converter)' என்ற இரு மென்பொருட்களை உருவாக்கி வெளியிட்டுள்ளது.

கீழடி – விசைப்பலகை

இம்மென்பொருளின் அமைப்பானது,

- தமிழ்99 விசைப்பலகை (Tamil99)
- ஒலிபெயர்ப்பு விசைப்பலகை (Phonetic)
- பழையதட்டச்சுவிசைப்பலகை(OldTypewriter)

தமிழி – ஒருங்குறி மாற்றி

- இம்மென் பொருள் வானவில்–அவ்வையார், TAB, TAM போன்ற குறியாக்கத்தில் உருவான எழுத்துருக்களைஒருங்குறிக்குமாற்றவல்லது. இதுdoc,docx,xls,ppt,pptxபோன்றஅமைப்புகளில் உள்ள ஆவணங்களை மாற்றுகின்றது.

கணினித் தமிழுக்கான நிரலாக்கப் போட்டி

- தமிழ் இணையக்கல்விக்கழகம்மற்றும்Vellore Institute of Technology, Vellore இணைந்து தமிழ்க்கணினிக்கானநிரலாக்கப்போட்டியினை 19.12.2022 அன்று நடத்தி வெற்றிபெற்ற மாணவர்களுக்குரூ.1இலட்சம்பரிசுத்தொகை வழங்கப்பட்டது.

தமிழ் இலக்கியப் பதிப்பி

- இந்தஇலக்கியப்பதிப்பிதமிழ்இலக்கியங்களுக்கு சொல்லடைவுமற்றும்தொடரடைவுதொகுக்க உதவுகிறது

கல்வெட்டுப் படிப்பான்

- இம்மென்பொருள் 6ஆம் நூற்றாண்டு முதல் 10 நூற்றாண்டு வரையுள்ள காஞ்சிபுரம் மாவட்டகல்வெட்டுகளைத்தற்காலத்தமிழில் மாற்றுகிறது.

தமிழ் இணையக் கல்விக்கழகத்தின் பாடங்களுக்கான chatbot:

- இந்தchatbotஎளியகேள்வி–பதில்வடிவத்தைப் பயன்படுத்திதமிழ்இணையக்கல்விக்கழகத்தின் பாடங்களைக்கற்றுக்கொள்ளமாணவர்களுக்கு உதவுகிறது.

தமிழ்க் கற்றுணரி

- இவ்விளையாட்டுச்செயலிமூலம்தமிழ்வினைச் சொற்களை எளிதில் கற்க முடிகிறது.

கணினித் தமிழ் மென்பொருள் உருவாக்கம்

- கணினித் தமிழ் மென்பொருள் உருவாக்க ரூ.110.35இலட்சம்நிதிஅளிக்கப்பட்டுள்ளது. செயற்கை நுண்ணறிவுத் திறன் கொண்ட ஏழு மென்பொருள்கள் அடையாளம் காணப்பட்டு அவற்றில் தமிழ்ச் சொற்றொடர் பகுப்பி (Syntactic Parser for Tamil), மற்றும் தட்டச்சு செய்யப்பட்ட தமிழ்ச் சொற்களைச் சரியாகப் பிரித்து பத்தி அமைத்தல் (Hyphenation for Tamil) மற்றும் ஆகிய இரு மென்பொருள்கள் உருவாக்கப்பட்டுள்ளன. மேலும்5மென்பொருள்கள்உருவாக்கப்பட்டு வருகின்றன.

கணித்தமிழ்24 – பன்னாட்டுக் கருத்தரங்கம்

❖ முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் முன்னின்று நடத்திய தமிழ் இணையம் 99 மாநாடு நடைபெற்று, 25 ஆண்டு கால நீண்ட இடைவெளிக்குப் பிறகு, தமிழ் இணையக் கல்விக்கழகத்தால் கணித்தமிழ்24 – பன்னாட்டுக் கணினித் தமிழ் மாநாடு 2024 பிப்ரவரி 8–10 தேதிகளில் நந்தம்பாக்கத்தில் உள்ள சென்னை வர்த்தக மையத்தில் நடத்தப்பட்டது.

❖ இம்மாநாடு வளர்ந்து வரும் தொழில்நுட்பங்களில் குறிப்பாக இன்றைய செயற்கை நுண்ணறிவு யுகத்தில், தமிழ் மொழிக்கான இடம் குறித்து ஆராய 10 நாடுகளிலிருந்தும் மற்றும் இந்தியாவின் 8 மாநிலங்களிலிருந்தும் 50க்கும் மேற்பட்ட அறிஞர்களை ஒருங்கிணைத்து இந்த மூன்று நாள் மாநாட்டில் மொத்தம் 58 அமர்வுகள் நடத்தப்பட்டன. ஒவ்வொரு நாளும் மாணவர்கள், கணித்தமிழ் ஆர்வலர்கள் என சராசரியாக 1,800 பேர் கலந்து கொண்டு பயன்பெற்றனர். இம்மாநாட்டில் இயந்திரவழிக் கற்றல், செயற்கை நுண்ணறிவு, இயற்கை மொழிச் செயலாக்கம் மற்றும் பெருந்திரள் மொழி மாதிரிகள் உருவாக்குதல் ஆகியவற்றில் உள்ள சவால்கள் குறித்து விவாதிக்கப்பட்டது.

❖ மேலும், கணினித் தமிழில் ஆர்வமுள்ள மாணவர்கள், நிறுவனங்களை ஊக்குவிப்பதற்காக நிரலாக்கப் போட்டி (Hackathon) நடத்தப்பட்டது. இப்போட்டியில் வெற்றிபெற்ற மூன்று மாணவர்களுக்குப் பரிசளிக்கப்பட்டன. தொடர்ச்சியாக, தொழில்நுட்பம், இயந்திரவழிக் கற்றல், இயந்திர மொழிபெயர்ப்பு போன்ற தலைப்புகளை உள்ளடக்கிய நூற்றுக்கும் மேற்பட்ட ஆய்வுக்கட்டுரைகள் பெறப்பட்டு, வல்லுநர்களால் ஆய்வு செய்யப்பட்டன. இதில் சிறந்த 38 ஆய்வுக்கட்டுரைகள் தெரிவுசெய்யப்பட்டு 'கணிக்கோவை' என ஆய்வு மலராக வெளியிடப்பட்டது. இவ்வாய்வுக்கட்டுரையில் சிறந்த மூன்றினைத் தேர்வு செய்து அவைகளுக்குப் பரிசுகள் வழங்கப்பட்டன.

❖ கணினித் தமிழ் கடந்த 25 ஆண்டு காலமாக வளர்ந்து வந்த விதத்தினைத் தொகுத்து 'கணித்தொகை' என விழா மலராக அம்மாநாட்டில் வெளியிடப்பட்டது. தமிழுக்கான பெருந்திரள் மொழி மாதிரியை உருவாக்க AI சிங்கப்பூர் நிறுவனத்துடன் கொள்கை அளவிலான புரிந்துணர்வு ஒப்பந்தமும் கையெழுத்தானது. இந்த மாநாடு மாணவர்களுக்கும், தமிழ் ஆர்வலர்களுக்கும், தமிழ் மொழி ஊக்கத்திற்கும் மிகவும் பயனுள்ளதாக இருந்தது. தமிழுக்கான செயற்கை நுண்ணறிவுக் கருவிகளை உருவாக்க வேண்டும் என முயற்சித்து, கணித்தமிழ்24 – பன்னாட்டுக் கணினித்தமிழ் தொழில்நுட்ப மாநாட்டினை இந்தியாவிலேயே மொழித் தொழில்நுட்பத்திற்காக மாநாடு நடத்திய முதல் மாநிலம் தமிழ்நாடு ஆகும்.

மொழித் தொழில்நுட்பப் புத்தொழில் நிறுவனங்களுக்கு (Start–Ups) நிதியுதவி

❖ இந்த ஆண்டு வெற்றிகரமாக நடைபெற்ற கணித்தமிழ்24மாநாட்டில்உலகெங்கிலிருந்து தமிழறிஞர்கள், தொழில்நுட்ப வல்லுநர்கள் மற்றும் தகவல் தொழில்நுட்ப மற்றும் மின் வணிக நிறுவனங்களின் மூத்த நிர்வாகிகள் கலந்துக்கொண்டு வளர்ந்து வரும் தொழில்நுட்பங்களில் தமிழுக்கான இடம் குறித்து ஆக்கப்பூர்வமாக விவாதித்து பல செயல்திட்டங்களை உருவாக்கியுள்ளதன் அடிப்படையில்,தமிழ் மொழிசெழித்துவளரத் தேவையான இயந்திரவழிக் கற்றல் (Machine Learning) மற்றும் செயற்கை நுண்ணறிவு (Artifical Intelligence) அடிப்படையிலான இயற்கைமொழிச் செயலாக்கம் (Natural Language Processing) மற்றும் பெருந்திரள் மொழி மாதிரிகள் (Large Langauge Models) போன்ற புதிய தொழில்நுட்பங்களை உருவாக்கிடும்புத்தொழில்நிறுவனங்களுக்கு நிதியுதவி அளித்திட இந்த ஆண்டு 5 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. நிதி வழங்குவதற்காக மொழித் தொழில்நுட்ப புத்தொழில்நிறுவனங்களைஅடையாளம்காண நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

தமிழ்நாடு கண்ணாடி இழை வலையமைப்பு நிறுவனம் (TANFINET)

❖ தமிழ்நாட்டில் பாரத்நெட் திட்டத்தை செயல்படுத்த விரைந்து நடவடிக்கை.

❖ ஜூலை2024வரை,10,053கிராமபஞ்சாயத்துகள் (80%)கண்ணாடிஇழைவடம்(OFC)மூலம்அருகில் உள்ள வட்டார ஊராட்சி ஒன்றிய அலுவலக தலைமையிடத்துடன்இணைக்கப்பட்டுள்ளன.

தமிழ்நாடு தகவல் மற்றும் தகவல் தொடர்பு தொழில்நுட்பவியல் நிறுவனம் (ICTACT)

குளோபல் டெக்னாலஜி:ஃபோரம்

❖ தமிழ்நாடு தகவல் மற்றும் தகவல் தொடர்பு

தொழில்நுட்பவியல் நிறுவனம், தமிழக அரசின் தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறையுடன் இணைந்து ஆண்டுதோறும் குளோபல் டெக்னாலஜி ஃபோரம் (Global Technology Forum) என்ற மாநாட்டை நடத்தி வருகிறது. புதுமை மற்றும் தொழில்நுட்பம் குறித்த ஆராய்ச்சி நடவடிக்கைகளை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்ட இந்த மெய்நிகர் மாநாட்டில், பல தொழில்களில் பல்வேறு உலகளாவிய நிபுணர்களைக் கொண்டு முக்கிய அமர்வுகள், பயிற்சி அமர்வுகள் ஆகியவை இடம் பெரும்.

- குளோபல் டெக்னாலஜி ஃபோரம்–2020 மாநாடு ஐந்து நாட்களுக்கு நடத்தப்பட்டது, இதில் 51 முக்கிய பேச்சாளர்கள் மற்றும் 21 சர்வதேச பேச்சாளர்கள் பங்கேற்றனர். 10 ஆழ்நிலைத் தொழில்நுட்ப பயிற்சிகள் நடத்தப்பட்டன, வளர்ந்து வரும் தொழில்நுட்பங்களில் 300–க்கும் மேற்பட்ட தொழில்நுட்ப ஆராய்ச்சி விளக்கக் காட்சிகள் காண்பிக்கப்பட்டன.
- "நாளைய திறன்" – திட்ட அடிப்படையிலான அனுபவ கற்றல் – தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம், அண்ணா பல்கலைக்கழகம், தமிழ்நாடு ICT அகாடமி, நாஸ்காம், ஐபிஎம் உடன் இணைந்து தமிழ்நாடு அரசின் தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறையின் முன்முயற்சி.
- தமிழ்நாடு முழுவதும் உள்ள பொறியியல் கல்லூரிகளைச் சேர்ந்த 50,000 மாணவர்கள் புதுமையான அனுபவக் கற்றலைப் பெறுவதை நோக்கமாகக் கொண்ட ஒரு முதல் முன்முயற்சியாக "நாளைய திறன்" உள்ளது.
- இது மாணவர்களுக்கு நடைமுறை அனுபவங்களை வழங்கி, கோட்பாட்டையும் அறிவையும் நிகழ் உலக சூழ்நிலைகளுடன் இணைக்க உதவுகிறது. கற்றலுடன் கூடுதலாக பல்வேறு தொழில்துறை வல்லுநர்களிடமிருந்து வழிகாட்டுதல் மற்றும் சான்றிதழுடன் கூடிய மதிப்பீடு வழங்கப்படும்.
- தகவல் தொழில்நுட்பம் மற்றும் கணினி அறிவியல் மாணவர்களுக்கு வேலைவாய்ப்புக்கு தயராகும் நிலையில் அவர்களின் 6 வது செமஸ்டர் பட்டப்படிப்பில் வழங்கப்படும், இதற்கான மதிப்பீடுகளுடன் பல்கலைக்கழகக் மதிப்பீடுகள் சேர்க்கப்படும்.
- இந்த முயற்சி, தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் மூலம் நிதியளிக்கப்பட்டு, அண்ணா பல்கலைக்கழகம், நாஸ்காம் மற்றும் ஐபிஎம் ஆகியவற்றுடன் இணைந்து தமிழ்நாட்டின் ஐசிடி அகாடமி மூலம் செயல்படுத்தப்படும்.

இளைஞர் திறன் மேம்பாடு

- கல்லூரி மாணவர்களின் சுயமாக கற்கும் பழக்கத்தை வளர்ப்பதற்கும். முன்னணி தொழில்நுட்பங்களின் அடிப்படைகளை மாணவர்களேகற்கும்வகையிலும்"டெக்கத்தான் 2023" ஏற்பாடு செய்யப்பட்டது. இந்த முன்னெடுப்பில் 2,23,507 மாணவர்கள் பங்கேற்று 2,78,670 இணையவழி சான்றிதழ் பயிற்சிகளை முடித்துள்ளனர்.
- மாணவர்களிடையே படைப்பாற்றல் மற்றும் தொழில்நுட்பத் திறனை ஊக்குவிப்பதற்கு "மேக்–எ–தான்" என்னும் போட்டி நடத்தப்பட்டது. மாணவர்கள் தங்களது குறியீட்டுத் திறனை (coding skills) பயன்படுத்தி, சுகாதாரம், கல்வி, சுற்றுச்சூழல் போன்ற பல்வேறு களங்களில் உள்ள பிரச்சினைகளைத் தீர்க்க 484 மாணவர்கள் "மேக்–எ–தான்" இல் பங்கேற்றனர்.
- இளைஞர் தலைமைத்துவ உச்சிமாநாட்டின் ஒரு பகுதியாக, தமிழ்நாடு மாணவர்களுக்காக "இளைஞர் பேச்சு 2023" நடத்தப்பட்டது. இந்த மாநாடு மாணவர் சமூகத்தின் பொதுப் பேச்சுத்திறனை வளர்க்கவும், வெளிப்படுத்தவும் நடத்தப்பட்டது. சென்னை, கோவை, சேலம், திருச்சிராப்பள்ளி, கன்னியாகுமரி, மதுரை, புதுச்சேரி உள்ளிட்ட 7 மண்டலங்களில் "யூத்டாக்" நடைபெற்றது. பிராந்திய இறுதிப் போட்டியில் முதல் 100 மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். ஒவ்வொரு பிராந்தியத்தின் வெற்றியாளர்களும் இறுதிப் போட்டியில் பங்கேற்க அழைக்கப்பட்டனர். இந்நிகழ்வில் 13,813 மாணவர்கள் கலந்துகொண்டனர்.

தமிழ்நாடு தொழில்நுட்ப மையம் (iTNT Hub)

முன்னுரை

- தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறையின் கீழ் இயங்கும் தமிழ்நாடு தொழில்நுட்ப மையமானது (iTNT Hub), இந்திய அரசு, தமிழ்நாடு அரசு மற்றும்

பிரபல தொழில்துறையினர் ஆகியோரின் நிதியுதவியுடன், கம்பெனிகள் சட்டம், 2013 பிரிவு 8–இன் கீழ், 24 ஜூன் 2022 அன்று iTNT பவுண்டேஷன் என பதிவுசெய்யப்பட்ட நிறுவனமாகும்.

- ஆழ்நிலைத் தொழில்நுட்பம் மற்றும் வளர்ந்து வரும் தொழில்நுட்பம் ஆகியவற்றை வளர்க்கும் இந்தியாவின் முதல் புத்தாக்கத் தொழில்நுட்ப மையமான தமிழ்நாடு தொழில்நுட்ப மையமானது, "தமிழ்நாட்டில் புத்தாக்கம்" மற்றும் "எதிர்காலத்தை கட்டியெழுப்புதல்" ஆகியவை மூலம், உலகளவில் சிறந்த 10 கண்டுபிடிப்பு மையங்களில் ஒன்றாக தமிழ் நாட்டை உருவாக்குவதை தொலைநோக்காகக் கொண்டுள்ளது. மாநிலத்தின் அறிவுசார் சொத்து, அறிவு மற்றும் திறன் வலிமை ஆகியவற்றை முதலீட்டாகக் கொண்டு மேற்கண்டவற்றை எய்துவதை இம்மையம் குறிக்கோளாகக் கொண்டுள்ளது.

நோக்கங்கள்

- வளர்ந்துவரும் தொழில்நுட்பம் மற்றும் ஆழ்நிலைத் தொழில்நுட்பப் புலத்தில் புத்தாக்க புத்தொழில் முனைவோரைப் பேணுதல் மற்றும் ஆழ்நிலை தொழில்நுட்பப் பயன்பாடுகளை முடுக்கிவிடுவதில் முதன்மைக் கவனம் செலுத்தி, வளர் தொழில்காத்தல், முடுக்கிவிடுதல், உள்கட்டமைப்பு மற்றும் பிறதுணை சேவைகள் மூலம் மதிப்பை உருவாக்குதல்.
- பொதுக்கொள்கை மற்றும் ஆளுமை சார்ந்த சிக்கல்களில் ஆழ்நிலை தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவதற்கு அரசுக்கு உதவ புத்தொழில் முனைவோருக்கு வசதி செய்து கொடுத்தல்.
- புனைவு ஆய்வகம் (FabLab) முப்பரிமாண அச்சு (3D Printing) மற்றும் பல்வேறு வகையான IR 4.0 சாதனங்கள் போன்ற உயர்தொழில்நுட்ப உபகரணங்களை புத்தொழில் முனைவோருக்கும் கண்டுபிடிப்பாளருக்கும் வழங்குதல்.
- சேவைகளை வழங்குவதற்கும், பல்வேறு பங்குதாரர்களுக்கு இடையிலான தொடர்புகளை எளிதாக்குவதற்கும் ஏதுவாக ஒரு டிஜிட்டல் சந்தை அணுகல் இணையதளத்தை உருவாக்குதல்.
- பெருநிறுவனக் கூட்டாண்மை மற்றும் ஆதரவைப் பெறுவதற்கு ஏதுவாக வரையறுக்கப்பட்ட செயல்திட்டம் மற்றும் பொறுப்புகளை வழங்குதல்.

தொடக்கம்

- தமிழ்நாடு தொழில்நுட்ப மையமானது மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 15 மே 2023 அன்று தொடங்கிவைக்கப்பட்டது. இம்மையம், ஆழ்நிலை தொழில்நுட்பம் மற்றும் வளர்ந்துவரும் தொழில்நுட்பத்தில் கவனம் செலுத்தும், இந்தியாவின் முதல் புத்தாக்கத் தொழில்நுட்ப மையமாகும் .
- கண்டுபிடிப்புகளின் தொட்டிலாக விளங்கும் அண்ணா பல்கலைக்கழக வளாகத்தில், சர்.சி.வி.இராமன் அறிவியல் கட்டடம் மூன்றாவது தளம், அண்ணா பல்கலைக்கழக வளாகம், கோட்டூர்புரம், சென்னை – 600 025 என்ற முகவரியில் இது செயற்பட்டு வருகிறது.
- 30,000 சதுர அடியில் பரந்து விரிந்துள்ள இம்மையம், சுகாதாரப் பாதுகாப்பு, சீர்மிகு நகரங்கள், இன்னும் பிறவற்றில் செயற்கை நுண்ணறிவின் பயன்பாடு போன்று வளர்ந்துவரும் துறைகளில் மனிதவளத் திறனூட்டுதல், புத்தொழில் முனைவோரை ஊக்குவித்து ஆதரவளித்தல். மற்றும் செயற்கை நுண்ணறிவு சீர்மிகு மையத்திற்கான உட்கட்டமைப்பை உருவாக்குதல் ஆகியவற்றைக் குறிக்கோளாகக் கொண்டுள்ளது.
- இயங்குபடம், காட்சிவிளைவுகள், விளையாட்டு, சித்திரக் கதை (Animation, Visual effects, Gaming and Comics – AVGC) போன்றவற்றில் புதுமைவிரும்பிகளுக்குத் திறனூட்டுதல் மற்றும் அவர்களை ஊக்குவிப்பதற்கான AVGC–க்கான சீர்மிகு மையத்தை நிறுவிட iTNT மையத்தில் இடவசதி உள்ளது. வன்பொருள் புத்தொழில் முனைவோருக்கும், உற்பத்தி அடிப்படையிலான புத்தொழில் முனைவோருக்கும், தொழில் வடிவமைப்பு மற்றும் உற்பத்தி தொடர்பான சேவைகளை இங்கு அமையவுள்ள புனைவு ஆய்வகம் (FabLab) மற்றும் வடிவமைப்பகம் (Design Studio) வழங்கும்.

முயற்சிகள்

- படைப்புத் தொழில்நுட்பம் (Creative Tech), காலநிலைத் தொழில்நுட்பம் (Climate Tech), விண்வெளித் தொழில்நுட்பம் (SpaceTech), எந்திர மனிதவியல் (Robotics), சுகாதார தொழில்நுட்பம்

(Health Tech), உயர் மதிப்பு மென்பொருள் சேவை(SaaS)போன்றதுறைகளில்புத்தொழில் முனைவோர்உள்வளர்ச்சிக்கும்,மற்றும்வளர்ந்து வரும் தொழில்நுட்பங்களான செயற்கை நுண்ணறிவு (AI), இயந்திர வழிக் கற்றல் (ML), ஆழ்நிலை கற்றல் (DL), இயன்மொழி செயல்முறை(NLP),வளர்உண்மை(Augmented Reality) / மெய்நிகர் உண்மை (Virtual Reality) மற்றும்பொருட்களின்இணையம்(IoT)/பகிர்வுக் கணிமை (Edge Computing) ஆகியவற்றிலும் இம்மையம் கவனம் செலுத்துகிறது.

- புத்தொழில் முனைவோருக்கு ஆதரவளித்து தொழில்முனைவோரைஊக்குவிக்க,தொடக்க முகாம் (Boot Camp), தொழில் வளர்காப்பகம் (Incubation), துணிவுக்கூடம் (Venture Studio), பன்னாட்டு அரங்கம்,முடுக்ககம்(Asceleration) ஆகியமுயற்சிகளைதமிழ்நாடு தொழில்நுட்ப மையம் கொண்டுள்ளது.
- பெருநிறுவனப் புத்தாக்கம், புத்தாக்கத் தளம், வளர் மற்றும் ஆழ்நிலைத் தொழில்நுட்ப நிதி, புத்தாக்க சவால்கள் போன்ற முயற்சிகள், தொழில் – கல்வி – தொழில்முனைவு ஆகியவற்றை ஒன்றோடொன்று இணைப்பதை குறிக்கோளாகக் கொண்டு செயல்படுத்தப்படுகின்றன.

சாதனைகள்

மே 2023 முதல் ஏப்ரல் 2024 வரை

- புத்தாக்கவலையமைப்புக்காகஇணைக்கப்பட்ட ஆராய்ச்சியாளர்கள் 4,135
- பயனடைந்த தொழில்முனைவோர் 615
- புத்தொழில் நிறுவனங்களுக்கு ஆதரவு 87
- புத்தொழில் நிறுவனங்கள் வழிகாட்டுதல் 81
- தொழில் – கல்வி இணைப்புக்காக கல்லூரிகளுடன்கையெழுத்தானபுரிந்துணர்வு ஒப்பந்தங்கள் 51
- சமூக ஈடுபாடு 43
- ஆழ்நிலைத் தொழில்நுட்ப மற்றும் வளர்ந்து வரும் தொழில்நுட்ப முதலீட்டாளர்கள் இணைப்பு 40
- உற்பத்தி வெளியீடுகள் 07
- உலகளாவிய புத்தாக்க சுற்றுச்சூழல் நிறுவனங்களுடன் விருப்ப ஒப்பந்தம் 06

ஜிக்சா இயங்குதளம்

- புத்தாக்கமும் வாய்ப்புகளும் கூடுமிடமான JIGSAW (ஒருங்கிணைந்த புத்தொழில் முனைவு – கல்வி தொழில் முதலீட்டாளர் பணிக்கான கூட்டுப் புத்தாக்க நுழைவாயில்) இயங்குதளம், 24 பிப்ரவரி 2024 அன்று நடைபெற்ற "Umagine" நிகழ்வில்,மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டது.
- கல்வி, தொழில், ஆழ்நிலைத் தொழில்நுட்ப புத்தொழில் நிறுவனங்கள், துணிகர முதலீட்டாளர்கள் மற்றும் மாணவர்கள் ஆகியோரை பங்குதாரர்களாக உள்ளடக்கி, தொழில் – கல்வி இணைப்பு மற்றும் முன்னேற்றத்திற்கு ஜிக்சா (JIGSAW) வழிவகுப்பதுடன், புத்தொழில் முனைவோருக்கும் பெருநிறுவனங்களுக்கும் கீழ்க்கண்டவற்றை வழங்குகிறது:
- பங்குதாரர் பல்கலைக்கழகங்களிடமிருந்து பெறப்படும் ஆழ்நிலை தொழில்நுட்ப ஆராய்ச்சியாளர்கள் பற்றிய தரவுகள்.
- வளர்ந்துவரும் மற்றும் ஆழ்நிலைத் தொழில்நுட்ப முதலீட்டாளர்களுடன் இணைப்பு.
- தொழில் நிறுவன புத்தாக்க சவால்கள், உலகளாவிய வலையமைப்புகளை அணுகுதல்.
- அரசு நிதி மற்றும் பிரச்சனை அறிக்கைகளுடன் தொடர்புபடுத்துதல்.
- 2024 ஏப்ரல் நிலவரப்படி, JIGSAW இணையதளம் 4,135 செயல் ஆராய்ச்சியாளர்கள், 41 முதலீட்டாளர்கள் மற்றும் 172 புத்தொழில் நிறுவனங்கள் மற்றும் 11 பெருந்தொழில் நிறுவன ஈடுபாடுகளைக் கொண்டுள்ளது.

உலகளாவிய புத்தாக்க சுற்றுச்சூழல் நிறுவனங்களுடன் விருப்ப ஒப்பந்தம்

- மேற்கு ஆஸ்திரேலிய அரசு, மேற்கு சிட்னி பல்கலைக்கழகம், ஐக்கிய அரபு அமீரகம், சுவிட்சர்லாந்து உள்ளிட்ட ஆறு உலகளாவிய புத்தாக்க சுற்றுச்சூழல் நிறுவனங்களுடன் விருப்ப ஒப்பந்தத்தில் தமிழ்நாடு தொழில்நுட்ப மையம் கையெழுத்திட்டுள்ளது.

❖ ❖ ❖

சிறுபான்மையினர் நலன், வெளிநாடு வாழ் தமிழர் நலன், அகதிகள், வெளியேற்றப்பட்டவர்கள் மற்றும் வக்ஃப் வாரியம்



திரு. செஞ்சி கே.எஸ்.மஸ்தான் அவர்கள்
மாண்புமிகு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடுவாழ் தமிழர் நலத்துறை அமைச்சர்

சிறுபான்மையினர் நலன்

- சிறுபான்மையினர் விடுதி மாணவ / மாணவியருக்கு சிறுபான்மையினர் பண்டிகைகளுக்கு(புத்தபூர்ணிமா,மஹாவீர்ஜெயந்தி,பக்ரித்,ரம்ஜான்,கிறிஸ்துமஸ்) சிறப்பு உணவு வழங்கப்பட்டு வருகின்றன.
- சிறுபான்மையினர் வகுப்பைச் சார்ந்தவர்கள் பயன்பெறும் வகையில் 1,000 இலவச மின்மோட்டாருடன் கூடிய தையல் இயந்திரங்கள் ரூ.61.60 இலட்சம் செலவில் பயனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.
- சிறுபான்மையினர் அதிகமாகவசிக்கும் சென்னை,வேலூர்,விழுப்புரம்,திருநெல்வேலி மற்றும் கோயம்புத்தூர் ஆகிய 5 மாவட்டங்களில்,புதியபணியிடங்களுடன் மாவட்ட சிறுபான்மையினர் நல அலுவலகங்கள் ரூ.1.75 கோடிச் செலவில் தோற்றுவிக்கப்பட்டன.
- தேனி, கிருஷ்ணகிரி மற்றும் விழுப்புரம் ஆகிய 3 மாவட்டங்களில் தலா ஒரு முஸ்லிம் உதவிசங்கங்களும்,கரூர்,மதுரை மற்றும் தேனி ஆகிய 3 மாவட்டங்களில் தலா ஒரு கிறிஸ்துவ உதவி சங்கங்களும் கூடுதலாக துவங்கப்பட்டுள்ளது.
- உலமாக்கள் மற்றும் பணியாளர்கள் நலவாரியத்தில் உள்ள 10,583 உறுப்பினர்களுக்கு ரூ.5.43 கோடிச் செலவில் மிதிவண்டிகள் வழங்கப்பட்டன.



- இஸ்ரேலில் உள்ள ஜெருசலேமிற்கு புனிதப் பயணம் செல்வதற்கு நிதியுதவி வழங்கும் திட்டத்தின் கீழ், அருட்சகோதரிகள் கன்னியாஸ்திரிகளுக்கு வழங்கப்படும் மானியம் ரூ.37,000 இருந்து ரூ60,000ஆக ரூ.11.50இலட்சம்செலவில்உயர்த்தப்பட்டுள்ளது.
- தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் மூலம் 6,034 பயனாளிகளுக்கு ரூ.36.18 கோடி மதிப்பில் கடன்கள் வழங்கப்பட்டுள்ளது.
- பூந்தமல்லி, வேலூர், இராமநாதபுரம் மற்றும் கடலூர் ஆகிய இடங்களில், 4 வக்ஃப் சரக அலுவலகங்களுக்கு சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு ரூ.64 இலட்சம் நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டது. வேலூர், கடலூர் மற்றும் இராமநாதபுரம் வக்ஃப் சரக அலுவலகத்திற்கு சொந்தக்கட்டடம்கட்டப்பட்டுள்ளது.மீதமுள்ள பணிகள் நடைபெற்று வருகின்றது.
- தமிழ்நாட்டில் உள்ள வக்ஃப் சொத்துக்களைப் பாதுகாக்கும் பொருட்டு ட்ரோன்களைப் (Drone) பயன்படுத்தி G.P.S./G.I.S மேப்பிங் செய்யப்பட்டு வருகிறது.
- பள்ளி வாசல்கள், தர்காக்கள் மற்றும் இதர வக்ஃப் நிறுவனங்களை பழுது பார்ப்பதற்காகவும், புனரமைப்பதற்காகவும் ஆண்டுதோறும் வழங்கப்படும் மானியம் ரூ.6கோடியாகஉயர்த்திவழங்கப்பட்டு,77வக்ஃப் நிறுவனங்கள் பயனடைந்துள்ளன.
- கிறிஸ்துவ தேவாலயங்களில் பணிபுரியும் உபதேசியார்கள் மற்றும் பணியாளர்கள் நலனுக்காக நல வாரியம் அமைக்கப்பட்டுள்ளது.மேலும்உறுப்பினர்களைப் பதிவு செய்வது மற்றும் பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்குவது குறித்து விரிவான வழிகாட்டி நெறிமுறைகள் வெளியிடப்பட்டு, ரூ.75இலட்சம்நிதிஒதுக்கீடுசெய்யப்பட்டுள்ளது.
- கிறித்துவ தேவாலயங்களில் பணிபுரியும் உபதேசியார்கள் மற்றும் பணியாளர்கள் பணிச் சான்றிதழை பெறுவதற்கானவழிமுறைகளில் திருத்தம்செய்துஆணைவெளியிடப்பட்டுள்ளது.
- ஹஜ் புனிதப் பயணம் மேற்கொண்ட 1,649பயணாளிகளுக்குரூ.4.55கோடிசெலவில் நிதிஉதவி அளிக்கப்பட்டுள்ளது.

2022 –2023

- கிராமப்புற சிறுபான்மையின மாணவியர் இடைநிற்றல் இன்றி தொடர்ந்து கல்வி பயில, 3 முதல் 6 ஆம் வகுப்பு வரை பயிலும் சிறுபான்மையின மாணவியருக்கு ஊக்கத்தொகை வழங்கும் புதிய திட்டம் துவக்கப்பட்டு2022–2023(ம)2023–2024ஆகிய ஆண்டுகளுக்கு ரூ.4.83 கோடிச் செலவில் 76,723 மாணவியர்களுக்கு ஊக்கத்தொகை வழங்கப்பட்டது.
- தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் மூலம் 8,785 பயனாளிகளுக்கு ரூ.55.28 கோடி மதிப்பில் கடன்கள் வழங்கப்பட்டுள்ளது.



- உலமா ஓய்வூதியதாரர் இறந்த பிறகு, அவரின் குடும்பத்தினருக்கு "குடும்ப ஓய்வூதியம்" வழங்கப்படுகிறது.
- பிரதம மந்திரி ஜன் விகாஸ் கார்யக்ரம் திட்டத்தின்கீழ், ரூ.615.75 கோடி மதிப்பீட்டில் 10 மாவட்டங்களில் 62 பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. முதல் தவணையாக ரூ.307.03 கோடி ஒப்பளிக்கப்பட்டுள்ளது.
- 44 சிறுபான்மைக் கல்வி நிறுவனங்களுக்கு சிறுபான்மையினஅந்தஸ்துவழங்கப்பட்டுள்ளது. இணையவழி மூலம் இத்திட்டத்தினை செயல்படுத்த தனி இணையதளம் https://www.minoritystatus.tn.gov.in உருவாக்கப்பட்டு செயல்பாட்டில் உள்ளது. மேலும், கல்வி நிறுவனங்களுக்கு மதச் சார்பு சிறுபான்மையினர் அந்தஸ்து (Religious Minority Status) காலம் குறிப்பிடப்படாமல் நிரந்தர சான்றிதழ்கள் வழங்க ஆணையிடப்பட்டுள்ளது.
- "சிறுபான்மையினர் உரிமைகள் தின விழா" ஆண்டுதோறும்மாநிலஅளவில்கொண்டாடப்பட ரூ.2.50 இலட்சம் நிதி வழங்கப்பட்டது.
- தொன்மை வாய்ந்த தேவாலயங்களை புனரமைத்தல் திட்டத்தின் கீழ் ரூ.6 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கு முதல் தவணைத் தொகையாக ரூ.3 கோடி 4 தேவாலயங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.
- தமிழ்நாடு வக்ஃப் வாரியத்திற்கான ஆண்டு நிருவாகமானியம்ரூ.2.50கோடிவழங்கப்படுகிறது. வக்ஃப்நிறுவனங்களிடமிருந்துவசூலிக்கப்படும் சகாயத்தொகை விகிதத்திற்கு ஏற்ப வக்ஃப் வாரியத்திற்கு வழங்கப்படும் ஆண்டு நிர்வாக மானியத்தினை2022–2023ஆம்ஆண்டிலிருந்து உயர்த்தி வழங்க ஆணையிடப்பட்டுள்ளது.
- 3 புராதன தர்காக்களின் புனரமைத்தல் மற்றும் பழுது நீக்குதலுக்காக ரூ.6 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, நாகூர் தர்காவிற்கு ரூ.2 கோடி நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

2023–2024

- பொருளாதாரத்தில்பின்தங்கியசிறுபான்மையினர் வகுப்பைச் சார்ந்தவர்களின் பொருளாதார முன்னேற்றத்திற்காக2,500மின்மோட்டாருடன் கூடிய தையல் இயந்திரங்கள் ரூ.1.60 கோடி செலவில் வழங்கப்பட்டன.
- உலமாக்கள் மற்றும் பணியாளர்கள் நலவாரிய உறுப்பினர்களின் 6ஆம் வகுப்பு முதல் 9 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ,

மாணவியருக்குரூ.1,000கல்விஉதவித்தொகை வழங்கப்படுகிறது.

- உலமாக்கள் மற்றும் பணியாளர்கள் நல வாரியத்தில் பதிவு பெற்ற உறுப்பினர்களுக்கு இயற்கை மரணத்திற்கான உதவித்தொகை ரூ.20,000–இருந்து ரூ.30,000 ஆகவும் மற்றும் விபத்து மரணத்திற்கான உதவித்தொகை ரூ.1,00,000–இருந்து ரூ.1,25,000 ஆகவும் உயர்த்தப்பட்டுள்ளது.
- சென்னை மற்றும் கோயம்புத்தூர் ஆகிய மாவட்டங்களில் ரூ. 81.68 இலட்சம் செலவில் 2 புதிய சிறுபான்மையினர் கல்லூரி மாணவர் விடுதிகள்துவங்கஆணையிடப்பட்டுநடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.
- கபர்ஸ்தான் மற்றும் அடக்கஸ்தலங்களுக்கு ஒருகோடிரூபாய்செலவில்புதியதாகசுற்றுச்சுவர் மற்றும் புனரமைப்புப் பணிகள் மேற்கொள்ள ஆணையிடப்பட்டுபணிகள்மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.
- சொந்தக் கட்டடத்தில் இயங்கும் 9 சிறுபான்மையினர் விடுதிகளுக்கு ரூ.1கோடிமதிப்பீட்டில்சிறப்புப்பராமரிப்புமற்றும் பழுது பார்ப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.
- கோயம்புத்தூர்மற்றும்திருச்சிமாவட்டங்களில் கூடுதலாக தலா ஒரு முஸ்லீம் மகளிர் உதவி சங்கம் ரூ.2 இலட்சம் செலவில் புதியதாக துவங்கப்பட்டன.
- கல்லூரி மாணவர்களுக்கான பேச்சுப் போட்டிகள், தமிழ்நாடு மாநில சிறுபான்மையினர் நலஆணையம் மூலம் ஒரு கோடி ரூபாய் செலவில் நடத்தப்பட்டன.
- ரூ.3.04 இலட்சம் செலவில் அனைத்து மாவட்டங்களிலும் கொண்டாடப்படும் சிறுபான்மையினர் உரிமைகள் தினத்திற்கு வழங்கப்பட்டு வரும் தொகை ரூ.2,000 இருந்து ரூ.10,000ஆக உயர்த்தப்பட்டுள்ளது.
- தமிழ்நாடு வக்ஃப் வாரியத்திற்கு வக்ஃப் சொத்துக்களை அளவை செய்வதற்காகவும் மற்றும்11மண்டலஅலுவலகங்களுக்கு11கணினி மற்றும்கணினிஉபகரணங்கள் வாங்குவதற்கு ரூ.1.25 கோடி நிதிஒப்பளிப்பு வழங்கப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டன.
- தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் மூலம் இதுவரை 10,201 பயனாளிகளுக்கு ரூ.68.58 கோடி மதிப்பில் கடன்கள் வழங்கப்பட்டுள்ளது.
- ஹஜ் புனிதப் பயணம் மேற்கொண்ட 3,987 பயனாளிகளுக்கு ரூ.9.99 கோடி செலவில் நிதிஉதவி அளிக்கப்பட்டது.
- தமிழ்நாட்டைச் சார்ந்த அனைத்துப் பிரிவினரையும் உள்ளடக்கிய கிறித்துவர்கள் ஜெருசலேம்புனிதப்பயணம்மேற்கொள்வதற்காக நிதி உதவி வழங்கும் திட்டத்திற்கு வழிகாட்டி நெறிமுறைகளை மாற்றியமைத்து, இத்திட்டத்தினைசெயல்படுத்தரூ.2.33கோடி நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.
- கிறித்துவர்களுக்கான கல்லறைத் தோட்டங்கள் மற்றும் இஸ்லாமியர்களுக்கான கபர்ஸ்தான்கள் இல்லாத மாவட்ட தலைநகரங்களில் மாவட்ட நிர்வாகத்தின் மூலம் நிலம் கையகப்படுத்தி மாநகராட்சி/ நகராட்சி சார்பில் கல்லறைத் தோட்டங்கள் மற்றும் கபர்ஸ்தான்கள் அமைக்க ஆணையிடப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.
- 134 வக்ஃப் நிறுவனங்களின் புனரமைத்தல் மற்றும் பழுது நீக்குதலுக்காக ரூ.10 கோடி நிதிஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டன.
- தொன்மை வாய்ந்த தேவாலயங்களை புனரமைத்தல் திட்டத்திற்கு ரூ.10 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு, மதுரை புனித ஜார்ஜ் தேவாலயம் புனரமைப்பதற்காக ரூ.2 கோடி ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

அயலக தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத்துறை

- மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 06.05.2021 அன்று பதவி



ஏற்றதிலிருந்து தமிழகத்தில் உள்ள 105 முகாம்களில் 01.07.2024 தேதி நிலவரப்படி, வசிக்கும் 57,661 இலங்கைத் தமிழர் மற்றும் முகாம்களுக்கு வெளியே உள்ள 32,920 இலங்கை தமிழர்களுக்கும் நீடித்த மற்றும் உயர்த்தப்பட்ட நலத் திட்டங்கள் பின்வருமாறு செயல்படுத்தப்பட்டுள்ளது.

மாதாந்திர பணக்கொடை

- ரூ.21.29 கோடி கூடுதல் செலவினத்தில், மாதாந்திரப் பணக்கொடை குடும்பத் தலைவருக்கு ரூ.1,500 ஆகவும், ஒவ்வொரு கூடுதல் உறுப்பினருக்கும் (12 வயது, அதற்கு மேல்) ரூ.1,000 ஆகவும், சிறியவர்கள் (12 வயதிற்கு உட்பட்டவர்கள்) ரூ. 500 ஆகவும் உயர்வு.

துணிமணிகள்

- 2021–2022 ஆம் நிதியாண்டில் ரூ.4.52 கோடி செலவில் 57,600 நபர்களுக்கும், 2022–2023 ஆம் நிதியாண்டில் ரூ.6.34 கோடி செலவில் 58,396 நபர்களுக்கும் மற்றும் 2023–2024 ஆம் நிதியாண்டில் ரூ.5.43 கோடி செலவில் 58,211 நபர்களுக்கும் முகாம்வாழ் இலங்கைத் தமிழர்களுக்கும் இலவசமாக அரசு செலவில் துணிமணிகள் வழங்கப்பட்டுள்ளது.

பாத்திரங்கள்

- 2021 – 2022 ஆம் ஆண்டிற்கு 5 வகையான மற்றும் 8 எண்ணிக்கையிலான பாத்திரங்கள் ரூ.1,296/– வீதம் 18,849 குடும்பங்களுக்கு மொத்தம் ரூ.2,44,28,304/– விலையிலும், 2023–2024 ஆம் ஆண்டிற்கு ரூ.1,285/– வீதம் 19,498 குடும்பங்களுக்கு மொத்தம் ரூ.2,50,54,930/– விலையிலும் ஸ்டீல் அத்தாரிட்டி ஆப் இந்தியா நிறுவனத்தின் மூலம் முகாம்வாழ் இலங்கைத் தமிழர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

இலங்கைத் தமிழ் மாணவர்களுக்கு கல்வி உதவித்தொகை வழங்குதல்.

- 2021–2022 ஆம் ஆண்டிற்கு 1,504 கலை மற்றும் அறிவியல், பொறியியல் மற்றும் பி.எஸ். சிவிவசாயம் மற்றும் பட்டமேற் படிப்பு மாணவ / மாணவியர்களுக்கு ரூ.2,70,82,059/–ம், 2022–2023 ஆம் ஆண்டிற்கு 1825 மாணவ/ மாணவியர்களுக்கு ரூ.3,28,49,878/– கல்வி உதவித்தொகை வழங்கப்பட்டுள்ளது. 2023–2024 ஆம் ஆண்டிற்கு 1,945 மாணவ மாணவியர்களுக்கு ரூ.3,76,10,504/– கல்வி உதவித்தொகை வழங்கக்கோரி அரசுக்கு முன் மொழிவுகள் அனுப்பப்பட்டுள்ளது.
- மேலும், 2023 – 2024 ஆம் ஆண்டிற்கு 1,548 மாணவ மாணவியர்களுக்கு ரூ.1,93,14,000/– கல்வி உதவித்தொகை வழங்கிட நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

விலையில்லா அரிசித் திட்டம்

- முகாம் வாழ் இலங்கைத் தமிழர்களுக்கு அரிசி இலவசமாக வழங்கப்படுவதுடன், எண்ணெய், சர்க்கரை என அனைத்து அத்தியாவசியப் பொருட்களும் பொது விநியோகத் திட்டத்தின் கீழ் சலுகை விலையில் வழங்கப்பட்டு வருகின்றன.



விலையில்லா சமையல் எரிவாயு இணைப்பு மற்றும் மானிய விலையில் எரிவாயு உருளை வழங்குதல்

- மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பின்படி,2021–2022ஆம்ஆண்டில்,6481 இலங்கைத் தமிழ் குடும்பங்களுக்கு இலவச எரிவாயு இணைப்பு வழங்க ரூ.2.44 கோடி செலவிடப்பட்டுள்ளதுடன்,16,305குடும்பங்களுக்கு ரூ.1.31 கோடி மானியமாக வழங்கப்பட்டுள்ளது. 2022–2023ஆம்ஆண்டில்16,801குடும்பங்களுக்கு ரூ.3.36 கோடி எரிவாயு மானியமாக (400 * 5 சிலிண்டர்கள்)வழங்கப்பட்டுள்ளதுகடந்த2023–2024ஆம்நிதியாண்டில்17,229குடும்பங்களுக்கு ரூ.3.45 கோடி மானியமாக வழங்கப்பட்டது. 31.03.2024 வரை 6933 குடும்பங்களுக்கு சமையல்எரிவாயுஇணைப்புமற்றும்அடுப்புகள் வழங்கப்பட்டுள்ளன.

வீடுகள் கட்டுதல் மற்றும் அடிப்படை வசதிகள் மேம்படுத்துதல்

- அ) இலங்கைத் தமிழர்களுக்கான 7,469 வீடுகளை புதியதாக கட்டும் திட்டத்தின்கீழ், முதற்கட்டமாக 3,510 வீடுகள் கட்டுவதற்கு நிர்வாக ஒப்புதலும், ரூ.176.02 கோடி நிதி ஒதுக்கீடும் செய்து ஆணையிடப்பட்டு, அதன் தொடர்ச்சியாக, 19 மாவட்டங்களில் உள்ள 35 முகாம்களில் புதிய வீடுகள் கட்டப்பட்டு வருகிறது. இதில் முழுவதுமாக பணிகள் நிறைவுபெற்ற 2,448 புதிய வீடுகள் திறந்துவைக்கப்பட்டு பயனாளிகளுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள 1,062 வீடுகளில் 465 வீடுகள் முழுவதுமாக கட்டிமுடிக்கப்பட்டுள்ளது, 557 வீடுகள் 90 சதவிகித பணிகள் முடிவுற்றுள்ளது, 40 வீடுகள் மேற்கூரைவரை பணிகள் முடிவுற்றுள்ளது.
- இரண்டாம் கட்டமாக 3,959 வீடுகள் கட்டுவதற்கு நிர்வாக ஒப்புதலும், இதற்கான செலவீனத் தொகை ரூ.228,64,49,000/–ற்கு நிர்வாக ஒப்புதலும், ரூ.2,22,59,78,500/–ற்கு நிதி ஒப்பளிப்பு செய்துஆணையிடப்பட்டு,18 மாவட்டங்களில்உள்ள31முகாம்களில்3,959 புதியவீடுகள்கட்டுவதற்குஊரகவளர்ச்சிமற்றும் ஊராட்சித்துறைக்குஆணைகள்வழங்கப்பட்டு, 12மாவட்டங்களில் உள்ள 19 முகாம்களில் வீடுகள்கட்டும்பணிஆரம்பிக்கப்பட்டு,பணிகள் நடைபெற்று வருகிறது.
- ஆ) திண்டுக்கல் மாவட்டம், தோட்டனூத்து கிராமத்தில்தோட்டனூத்து,அடியனூத்துமற்றும் கோபால்பட்டி ஆகிய மூன்று முகாம்களை ஒருங்கிணைத்து 321 புதிய வீடுகள் கட்டிட ரூ.17,17,10,000/–செலவில்பணிகள்முடிக்கப்பட்டு, கடந்த14.09.2022அன்றுமாண்புமிகுதமிழ்நாடு முதலமைச்சர்அவர்களால்காணொலிவாயிலாக திறந்து வைக்கப்பட்டு, பயனாளிகளுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது.
- இ) இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாம்களில் உள்ள மின்வசதி, கழிப்பிட வசதி மற்றும் குடிநீர் வசதி போன்ற அடிப்படை வசதிகளை மேம்படுத்த முதற்கட்டமாக ரூ.10கோடி ஒதுக்கீடு செய்து 19 மாவட்டங்களில் உள்ள 48 முகாம்களுக்கு ரூ.9,79,55,196/– பிரித்து வழங்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது. தற்போது,இதர அடிப்படை வசதிகளை மேம்படுத்துவதற்காக ரூ.20 கோடி நிதி ஒதுக்கீடு செய்து 18 மாவட்டங்களில்



உள்ள 27 இலங்கைத் தமிழர் முகாம்களுக்கு ரூ.19,77,45,037/- செலவில்பணிகள் நடைபெற்று வருகிறது.

❖ ஈ) இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாம்களில் இதரஅடிப்படைவசதிகளைமேம்படுத்துவதற்காக வாழ்க்கைத் தர மேம்பாட்டு நிதியாக ரூ.5 கோடி நிதி ஒதுக்கீடுசெய்து 2021-2022 ஆம் நிதி ஆண்டில் 29 மாவட்டங்களில் உள்ள 106 முகாம்களுக்கு ரூ.4,99,96,870/- செலவில்பணிகள் நடைபெற்று வருகிறது. 2023-2024 ஆம்நிதி ஆண்டிற்கு வரவு செலவு திட்ட மதிப்பீட்டில் (B.E 2023-2024) நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டு, 28 மாவட்டங்களில் உள்ள 90 முகாம்களுக்குரூ.4,99,91,914/-ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது. இலங்கைத் தமிழர் வாழ்க்கைத் தர மேம்பாட்டு நிதியாக ரூ.5 கோடி நடப்பு 2024-2025ஆம் நிதி ஆண்டிற்கு வரவு செலவு திட்ட மதிப்பீட்டில்நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டு, 28 மாவட்டங்களில் உள்ள 87 முகாம்களுக்கு ரூ.2,82,58,135/- ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது.

மகளிர் சுயஉதவிக்குழு தொழிற்கூடம் அமைத்தல்

❖ இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாம்களில் மகளிர் சுயஉதவி குழுக்களுக்கான சுய தொழில் தொடங்குவதற்கு 10மாவட்டங்களில் உள்ள 10 முகாம்களுக்கு தொழிற்கூடங்கள் அமைப்பதற்கு ரூ.3 கோடி நிதி ஒதுக்கீடு செய்து ஆணைகள் வெளியிடப்பட்டு, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை ஆணையருக்குஆணைகள்வழங்கப்பட்டுள்ளது.

மகளிர் சுய உதவிக் குழு

❖ ஒவ்வொருமகளிர்சுயஉதவிகுழுவிற்கும்சுழல் நிதி மற்றும் சமூக மூலதன நிதியாக தொழில் நடத்துவதற்குஏற்கனவேஉள்ள321குழுக்களுக்கு ஒவ்வொருகுழுவிற்கும்கூடுதலாகரூ.75,000/- மற்றும்புதிதாக300குழுக்களுக்குரூ.1,25,000/- வழங்கும்பொருட்டுரூ.6,15,75,000/-2021-2022-ம் ஆண்டில் ஒதுக்கீடு செய்யப்பட்டது.

❖ புதிதாக தோற்றுவிக்கப்பட்ட 266 சுய உதவிக் குழுக்களுக்கு TNWDC மூலம் நிதி வெளியிடப்பட்டுள்ளது. மகளிர் மேம்பாட்டு நிறுவனம் மூலம் நிதி வழங்கும் பொருட்டு ரூ.6.16 கோடி மேற்படி நிறுவனத்திற்கு வழங்கப்பட்டுள்ளது.

❖ மேலும் புதிதாக தோற்றுவிக்கப்பட்ட 200 சுய உதவிக் குழுக்களுக்கு 1,25,000/–வீதம் ரூ.2,50,00,000/– நிதி ஒதுக்கீடு செய்து வழங்க அரசுக்கு முன்மொழிகள் அனுப்பப்பட்டுள்ளது.

முகாமில் வசிக்கும் இலங்கைத் தமிழர்களுக்கு கோவிட்–19 நிவாரண உதவியாக ரூ.4,000/– வழங்குதல்

❖ தமிழ்நாடு அரசின் கோவிட் நிவாரண உதவித் தொகை ரூ.4,000/–வீதம் முகாம்களில் வசிக்கும் 18,944 இலங்கைத் தமிழர் குடும்பங்களுக்கும் வழங்கப்பட்டது. இதற்காக, ரூ.7.58 கோடி செலவிடப்பட்டுள்ளது. மேலும், 14 விதமான மளிகைப் பொருட்கள் (ரூ.465/– விலையில்) அடங்கிய பைகள் முகாம்களில் வசிக்கும் 18,944 இலங்கைத் தமிழர் குடும்பங்களுக்கும் ரூ.88.08 இலட்சம் செலவில் அரசால் வழங்கப்பட்டுள்ளது.

திறன் மேம்பாட்டுப் பயிற்சி

❖ முகாம்வாழ் இலங்கைத் தமிழர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்திடவும், அவர்கள் தங்களது வேலைவாய்ப்புத் தகுதியினை உயர்த்திக்கொள்ள திறன் மேம்பாட்டு பயிற்சி 2,404 நபர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. 89 நபர்களுக்குமுன்கற்றல்பயிற்சியும்16நபர்களுக்கு டைட்டன்நிறுவனம்மூலம்கணினிபயிற்சியும் வழங்கபட்டுள்ளது.

நீண்டகால தீர்வுகளுக்கான ஆலோசனைக் குழு

❖ முகாமிற்குஉள்ளேயும்வெளியேயும்இலங்கைத் தமிழர்கள் எதிர்கொள்ளும் சவால்களுக்கு தீர்வுகளை ஆராய்வதற்கான ஆலோசனைக் குழு. குடியுரிமைக்கான சாத்தியக்கூறுகளை ஆராய்வதற்கும், இலங்கைத் தமிழர்கள் இலங்கைக்குத்திரும்புவதற்குஉதவுவதற்கும், தமிழ்நாடு அரசாங்கத்திற்கு ஒரு செயல் திட்டத்தை முன்மொழிவதற்கும் ஆலோசனைக் குழு அமைக்கப்பட்டு 3 கூட்டங்கள் நடைபெற்றுள்ளது. மேலும் துணை–குழு அமைக்கப்பட்டு 6 கூட்டங்கள் நடைபெற்றுள்ளது. குழுவின் இடைக்கால அறிக்கை 29.09.2023 அன்று மாண்புமிகுமுதலமைச்சரிடம்சமர்ப்பிக்கப்பட்டது. மேலும்கூட்டநடவடிக்கைகளின்அடிப்படையில் இலங்கைத் தமிழர்களுக்கான சட்ட விழிப்புணர்வு நிகழ்ச்சி 05.11.2023 அன்று கும்மிடிப்பூண்டி முகாமில் தொடங்கப்பட்டு வேலூர்,ராணிப்பேட்டை,மதுரை,திருச்சிஆகிய இடங்களில் நடைபெற்றது.

❖ மேற்படிகூட்டநடவடிக்கைகளின்அடிப்படையில் 8 பிரேரணைகள்அரசுக்குஅனுப்பப்பட்டு நடவடிக்கையில் உள்ளது.

இலங்கை மக்களுக்கு நிவாரண உதவிகள் வழங்குதல்

❖ இலங்கையில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி மற்றும் உணவு பொருட்கள் தட்டுபாட்டில் இன்னலுறும் மக்களுக்கு ரூ.132 கோடி மதிப்பிலான 40,000 டன் அரிசி, ரூ.15 கோடி மதிப்பிலான 500 டன் ஆவின் பால் பொருட்கள் மற்றும் ரூ.27 கோடி மதிப்பிலான 101 டன் உயிர் காக்கும் மருந்து பொருட்கள் அடங்கிய தொகுப்பு தமிழ்நாடு அரசின் சார்பில் இலங்கைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

பொருளாதார நெருக்கடி காரணமாக இலங்கையிலிருந்து வருகை

❖ இலங்கையில் ஏற்பட்ட கடும் பொருளாதார நெருக்கடி காரணமாக இலங்கைத் தமிழர்கள் தமிழ்நாட்டின் இராமேஸ்வரம் கடற்கரைக்கு வந்தடைந்தனர். 05.07.2024 வரை 319 நபர்கள் இராமநாதபுரம் மாவட்டம், மண்டபம் முகாமில் உணவு, தங்குமிடம் மற்றும் இதர அடிப்படை வசதிகள்வழங்கப்பட்டுதங்கவைக்கப்பட்டுள்ளனர்.

அயலகத் தமிழர் நலன்

அயலகத் தமிழர் நல வாரியம் அமைத்தல்

❖ மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், 06.10.2021 அன்று வெளியிட்ட அறிவிப்பில் புலம் பெயர்ந்து வெளிநாடுகளிலும், இந்தியாவின் மற்ற மாநிலங்களிலும் வாழும் தமிழர் நலன் காக்க தலைவரை உள்ளடக்கிய 15 உறுப்பினர்களைக் கொண்டு "அயலகத் தமிழர் நல வாரியம்" அமைத்து ஆணை.



- வெளிநாடு வாழ் தமிழர்களுக்காக "24x7 கட்டணமில்லா உதவி மையம்" தொடங்கப்பட்டு, அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத்துறை ஆணையரகத்தில் செயல்பட்டு வருகிறது.

வேர்களைத் தேடி

- தமிழ்பாரம்பரியத்தின்வேர்களுடன்தொடர்பைப் புதுப்பிக்கும் வகையில், ஒவ்வொரு ஆண்டும் வெளிநாட்டில் குடியேறிய இரண்டாம் தலைமுறையை சார்ந்த தமிழர்களில் 200 மாணவர்கள்தேர்வுசெய்யப்பட்டுதமிழ்நாட்டில் பண்பாட்டு பயண திட்டம் செயல்படுத்தப்படும்.
- இத்திட்டத்தின் முதற்கட்டமாக ஆஸ்திரேலியா, பிஜி, இலங்கை மற்றும் கனடா ஆகிய நாடுகளில் இருந்து 57 மாணவர்கள் தேர்வு செய்யப்பட்டு, 27.12.2023 முதல் 10.01.2024 வரை 15 நாட்களுக்கு தமிழ்நாட்டின் முக்கிய சுற்றுலா, வரலாற்று மற்றும் பண்பாட்டு சிறப்புமிக்க இடங்களுக்கு அழைத்துச் செல்லப்பட்டும், தமிழ்நாட்டின் கலை, பண்பாட்டு குறித்தும் விளக்கப்பட்டது.

எனது கிராமம்

- அயல்நாடுகளில் புலம்பெயர்ந்து வாழும் தமிழர்களின் பங்களிப்பினை கொண்டு தமிழ்நாட்டில் அவர்களது சொந்த ஊர்களை மேம்படுத்தும் "எனது கிராமம்" திட்டம்.இத்திட்டத்திற்காக இதுவரை 3 பயனாளிகளிடம் இருந்து ரூ.60 இலட்சம் நிதி பெறப்பட்டுள்ளது.

அயலகத் தமிழர் தினம்

- ஒவ்வொரு வருடமும் ஜனவரி–12ஆம் தேதி அயலகத்தமிழர் தினமாக கொண்டாடப்பட்டு வருகிறது. அயல்நாடுகளில் வசித்து வரும் அயலகத் தமிழர்களையும், சேவை ஆற்றிவரும் தமிழ்ச்சங்கங்களையும் ஒருங்கிணைக்கவும், அங்கீகரிக்கவும், ஊக்குவிக்கவும், தமிழ் இனத்தின் தொன்மை, பழம்பெருமை, கலை, இலக்கியம், பண்பாடு மற்றும் கலாச்சாரத்தை அடுத்த தலைமுறைக்கு கொண்டு செல்லும் விதமாகவும் இந்த விழா கொண்டாடப்பட்டு வருகிறது.
- 2022ஆம் ஆண்டில் "தமிழால் இணைவோம்"மற்றும்2023ஆம் ஆண்டில், "உலகெங்கும் தமிழ்" என்ற கருப்பொருளில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் கொண்டாடப்பட்டது.
- மூன்றாம் ஆண்டு "அயலகத் தமிழர் தினம் 2024" மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் 11.01.2024 மற்றும் 12.01.2024 ஆகிய இரு நாட்கள்"தமிழ் வெல்லும்" கருப்பொருளில் சென்னை



வர்த்தக மையத்தில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில், பல்வேறு நாடுகள் மற்றும் இந்தியாவின் பிற மாநிலங்களில் உள்ள 282 தமிழ்ச்சங்கங்களைச் சார்ந்த 1,200க்கும் மேற்பட்ட நபர்கள் கலந்து கொண்டனர்.

❖ முதல்முறையாக அறிவியல் தொழில்நுட்பம், தமிழ் இலக்கியம், மருத்துவம், கல்வி, சமூக மேம்பாடு, மகளிர், வணிகம், விளையாட்டு ஆகிய எட்டு பிரிவுகளில் சிறந்து விளங்கும் 13 அயலகத் தமிழர்களுக்கு "கணியன் பூங்குன்றனார் விருது" வழங்கப்பட்டது.

உக்ரைன் நாட்டிலிருந்து மாணவர்களை மீட்டெடுத்தல்

❖ தமிழ்நாட்டிலிருந்து உயர்கல்வி கற்பதற்காக உக்ரைன் நாட்டிற்கு சென்று, ரஷ்ய –உக்ரைன் போர்காரணமாக, அங்கு 2,000–த்திற்கும் மேற்பட்ட மாணவர்கள் சிக்கித் தவித்தனர். இவர்களில், 1,524 மாணவர்கள் அரசு செலவில் அழைத்து வரப்பட்டுள்ளனர்.

கம்போடியா, தாய்லாந்து – மியான்மர் எல்லையிலிருந்து தமிழர்களை மீட்டெடுத்தல்

❖ தமிழ்நாட்டைச் சேர்ந்த நபர்கள் உட்பட பல இந்தியர்கள், தகவல் தொழில்நுட்பம் சார்ந்த பணிகளில் பணியமர்த்துவதாகக் கூறி கம்போடியா, தாய்லாந்து – மியான்மர் எல்லைப்பகுதிகளுக்கு அழைத்துச் செல்லப்பட்டு சட்டவிரோத இணையதள வேலைகளைச் செய்ய கட்டாயப்படுத்தப்படுவதாகவும், துன்புறுத்தலுக்கு ஆளான 83 தமிழர்கள் கம்போடியா, தாய்லாந்து, மியான்மர் நாடுகளிலிருந்து மீட்கப்பட்டு, தமிழ்நாடு அரசின் செலவில் விமான பயண சீட்டுகள் ஏற்பாடு செய்யப்பட்டு தமிழ்நாட்டிற்கு அழைத்து வரப்பட்டுள்ளனர்.

உத்தரகாண்ட் மாநிலத்தில் ஹெலிகாப்டர் விபத்தில் உயிரிழந்த தமிழர்களின் உடல்களை மீட்டெடுத்தல்

❖ உத்தரகாண்ட் மாநிலத்தில் உள்ள கேதார்நாத் கோவிலுக்கு புனித யாத்திரை சென்ற தமிழ்நாட்டைச் சேர்ந்த மூவர் 18.10.2022 அன்று நடந்த ஹெலிகாப்டர் விபத்தில் உயிரிழந்தனர். இறந்தவர்களின் பூத உடல்கள் 20.10.2022 அன்று விமானங்கள் மூலம் சென்னை கொண்டு வரப்பட்டு உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

இஸ்ரேல் – பாலஸ்தீனம் போர்

❖ இஸ்ரேல், பாலஸ்தீனத்தின் இடையே ஏற்பட்ட போர் காரணமாக, இஸ்ரேல் நாட்டிற்கு கல்வி வேலைவாய்ப்பு போன்ற காரணங்களுக்காக சென்ற தமிழர்கள் அங்கு சிக்கிக் கொண்டனர். இந்நேர்வில் சுமார் 126 தமிழர்கள்



வெளியுறவுத்துறை அமைச்சகத்தின் ஒருங்கிணைப்புடன் பாதுகாப்பாக தமிழ்நாட்டிற்கு மீட்கப்பட்டுள்ளனர்.

அமர்நாத் புனித யாத்திரை சென்ற தமிழர்கள் சிக்கித் தவிப்பு – தாயகம் மீட்டல்

- ஜம்மு காஷ்மீர் மாநிலத்தில் உள்ள அமர்நாத் கோவிலுக்கு புனித யாத்திரை சென்ற தமிழ்நாட்டைச் சேர்ந்த 17 நபர்கள், தமிழ்நாடு திரும்பும் போது அமர்நாத் அருகே ஏற்பட்ட பனிச்சரிவு காரணமாக, ஸ்ரீநகருக்கான பாதை முற்றிலும் சேதமடைந்து அங்கேயே சிக்கிக்கொண்டனர். அவர்கள் அனைவரும் தமிழ்நாடு அரசின் மூலம் பயணச்சீட்டுகள் பெற்றுத்தரப்பட்டு 15.07.2023 அன்று இரயில் மூலம் சென்னை சென்ட்ரல் இரயில் நிலையம் அழைத்துவரப்பட்டு அவர்களது சொந்த ஊர்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டனர்.

குவைத் தீ விபத்து

- குவைத் நாட்டின் மங்காப் என்ற இடத்தில் தொழிலாளர்கள் தங்கியிருந்த கட்டிடத்தில், 12.06.2024 அன்று ஏற்பட்ட பயங்கர தீ விபத்தில் தமிழ்நாட்டைச் சேர்ந்த ஏழு நபர்கள் உயிரிழந்தார்கள்.
- உயிரிழந்த ஏழு தமிழர்களின் உடல்களும் தனி விமானம் மூலம் 14.06.2024 அன்று காலை கொச்சி விமான நிலையம் கொண்டுவரப்பட்டது.
- அரசு சார்பில் ஏழு வாகனங்கள் ஏற்பாடு செய்யப்பட்டு, பூத உடல்களை கொச்சி விமான நிலையத்திலிருந்து அவர்களது சொந்த ஊர்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டது,
- மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், உயிரிழந்த ஏழு தமிழர்களின் குடும்பத்தினருக்கும் தலா ரூ.5 இலட்சம் நிதியுதவி வழங்க உத்தரவிட்டுள்ளார்.

ஓய்வூதியத் திட்டம்:

- தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் 12.03.2023ஆம்நாளிட்டசெய்திவெளியீட்டின் படி,அயல்நாடுகளில்பணிக்குச் சென்றுஅங்கு எதிர்பாராதவிதமாக இறந்துவிடும் புலம்பெயர் தமிழர்நலவாரியஉறுப்பினரின்குடும்பத்திற்கு மாதஊதியம்ரூ.1,000/–வழங்குவதற்குஅரசால் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.



தமிழர்கள் மீட்பு

- கடந்த மூன்றாண்டுகளில் சூடான் 281, இந்தோனேசியா 3, உக்ரைன் 1,524, ஈரான் 6, குவைத் 34, ஓமன் 27, கம்போடியா, தாய்லாந்து & மியான்மர் 83. மலேசியா 7, இஸ்ரேல் 126, கத்தார் 12, வங்கதேசம் 220, அமர்நாத் (இந்தியா) 17, மணிப்பூர் (இந்தியா) 8, வாரணாசி (இந்தியா) 50 என மொத்தம் 2,398 தமிழர்கள் அயல்நாடு மற்றும் வெளி மாநிலங்களில் இருந்து அரசு செலவில் மீட்கப்பட்டுள்ளனர்,
- அயல்நாடுகளிலிருந்து 767 பூதவுடல்கள் கொண்டு வரப்பட்டு தமிழ்நாடு அரசின் இலவச அமரர் ஊர்தி சேவை மூலம் குடும்பத்தினரிடம் ஒப்படைக்கப்பட்டன.
- மேலும், சிறப்பு நேர்வாக, மருத்துவ காரணங்களுக்காக தாயகம் திரும்புதல் மற்றும் சவுதி அரேபியாவில் தீவிபத்தில் மற்றவர்களை காப்பாற்றி தங்கள் உயிரை மாய்த்த இருவர், போன்ற நேர்வுகளில் தலா ரூ.10 இலட்சம் முதலமைச்சர் நிவாரண நிதியில் இருந்து வழங்கப்பட்டது.

❖ ❖ ❖

> “இங்குள்ள தமிழர்களுக்கு எல்லாமுமாய் இந்த அரசு இருப்பதைப் போலவே அயலகத் தமிழர்களுக்கும் எல்லாமுமாக இந்த அரசு இருக்கும். தமிழர் பண்பாட்டை இன்றைய தலைமுறைக்கு அறிமுகம் செய்ய, தமிழ் காக்க, ஒன்றாக இணைந்து ஒருவருக்கொருவர் உதவியாக இருக்க அனைத்தையும் தமிழ்நாடு அரசு நிச்சயம் செய்யும்.”
>
> **மு.க.ஸ்டாலின்**
> மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்

பள்ளிக் கல்வித் துறை



திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி அவர்கள்

மாண்புமிகு பள்ளிக் கல்வித்துறை அமைச்சர்

இல்லம் தேடிக் கல்வி:

- பள்ளி செல்லும் மாணவர்களிடையே கற்றலில் ஏற்பட்ட பெருமளவு இடைவெளியை சரிசெய்யும் பொருட்டு "இல்லம் தேடிக் கல்வி" திட்டம் தொடங்கப்பட்டு, ரூ.590.27 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு 1.65 இலட்சம் தன்னார்வலர்கள் மூலம் 24 இலட்சம் மாணவர்கள் பயன்.
- கோடை விடுமுறை காலத்தில், குழந்தைகளிடையே வாசிப்பு பழக்கத்தை ஊக்கப்படுத்தும் வகையில் தமிழ் மற்றும் ஆங்கில கதைகள் அடங்கிய தொடர் வாசிப்பு (ரீடிங் மாரத்தான்') நடத்தப்பட்டது.
- மாணவர்களின் கற்பனைத்திறன், படைப்பாற்றல் திறன், சிந்திக்கும் திறன்களை வெளிக்கொணரும் விதமாக இல்லம் தேடிக் கல்வி மையங்களில் "குறும்படக் கொண்டாட்டம்" நடத்தப்பட்டது.

எண்ணும் எழுத்தும்:

- 1 முதல் 5 ஆம் வகுப்பு வரை படிக்கும் குழந்தைகளிடையே அடிப்படை கல்வியறிவு மற்றும் எண்ணறிவை மேம்படுத்தவும், ஒவ்வொரு குழந்தையும் 2025 ஆம் ஆண்டுக்குள் வாசித்தல், எழுதுதல் மற்றும் அடிப்படை



எண்கணித திறன்களை அடைவதை உறுதி செய்யவும் "எண்ணும் எழுத்தும்" திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

- 1முதல்5ஆம்வகுப்புபயிலும்குழந்தைகளுக்கு நிலை வாரியான பயிற்சி நூல்கள், ஆசிரியர்களுக்கு விரைவுத் துலங்கல் குறியீட்டுடன் கூடிய ஆசிரியர் கையேடுகள் போன்றவை அளிக்கப்பட்டுள்ளது.
- எண்ணும் எழுத்தும் திட்டத்தின் மூலம் 37,866 அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் 1 முதல் 5–ஆம் வகுப்பு வரை பயிலும் 22,26,925 மாணவர்கள் பயன்.
- அரசுப் பள்ளிகளில் 1 முதல் 12 ஆம் வகுப்பு வரை படிக்கும் மாணவர்களிடையே வாசிப்பு பழக்கத்தை ஏற்படுத்த ரூ.10கோடிச் செலவில் "வாசிப்பு இயக்கம்" திருச்சி மாவட்டம் துறையூர் ஒன்றியம் பொன்னுசங்கம்பட்டி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில் துவக்கி வைக்கப்பட்டது.
- வாசிப்பு இயக்கம் 11 மாவட்டங்களில் 11 ஒன்றியங்களில் தொடங்கப்பட்டு, 914 அரசு பள்ளிகளில் 4 ஆம் வகுப்பு முதல் 9 ஆம் வகுப்பு வரையுள்ள 66,618 மாணவர்கள் பயன்.
- குழந்தைகள் அணுகக்கூடிய மொழியில் புத்தகங்கள் நுழை, நட, ஓடு, பற நான்கு தனித்தனி வாசிப்பு நிலைகளாக வகைப்படுத்தப்பட்டு, 53 புத்தகங்கள் அச்சிடப்பட்டு அனைத்து அரசுப் பள்ளிகளுக்கும் முதற்கட்டமாக வழங்கப்பட்டு, இரண்டாம் கட்டமாக 70 புத்தகங்கள் அச்சிடப்பட்டு வழங்கப்பட்டு வருகின்றன.
- 1,692 தொலைதூர / அடர்ந்த காடு/ மலைக் குடியிருப்புகளில் உள்ள 27,707 மாணவர்கள் பள்ளிக்கு பாதுகாப்பாக சென்றுவர போக்குவரத்து/ பாதுகாவலர் வசதி மேற்கொள்ளப்பட்டுள்ளது.
- சிறந்த, சமத்துவ மற்றும் முற்போக்கு கல்விக்கான அளவுகோள்களை உறுதி செய்யும் வகையில் உண்டு உறைவிடப்பள்ளிகளாக "மாதிரிப் பள்ளிகள்". ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒரு பள்ளி வீதம் 38 மாதிரிப் பள்ளிகள் ரூ.352.42 கோடி செலவில் ஏற்படுத்தப்பட்டுள்ளன.
- 28 மாவட்டங்களில் மாவட்டத்திற்கு ஒரு பள்ளி வீதம், 28 பள்ளிகள் தகைசால் பள்ளிகளாக ரூ.100.82 கோடி செலவில் ஏற்படுத்தப்பட்டுள்ளது.
- நடமாடும் அறிவியல் ஆய்வகத் திட்டம் (வானவில் மன்றம்) ரூ.19 கோடி செலவில் 25 இலட்சம் மாணவர்கள் பயன்.
- ரூ.5.35 கோடி செலவில் மாணவர்களிடம் மறைந்து கிடக்கும் திறன்களை வெளிக்கொணரவும், அத்திறன்களைத் தொன்மையான பாரம்பரிய கலாச்சாரத்துடன் இணைக்கவும், பள்ளிகளில் கலை மற்றும் கலாச்சார வகுப்புகள்.



- 2022–2023ஆம்கல்வியாண்டுமுதல்பள்ளிகளில் 6முதல்12வகுப்புபயிலும்பள்ளிமாணவர்களுக்கு கலைத்திருவிழாபோட்டிகள்நடத்தப்பட்டு 206 விதமான போட்டிகள் பல்வேறு நிலைகளில் நடத்தப்பட்டு, 68.25 இலட்சம் மாணவர்கள் பங்குபெற்று 3,177 பேர் மாநில அளவில் வெற்றி பெற்றமாணவர்களுக்குகலையரசன்,கலையரசி விருதுகள்,சான்றிதழ்கள்மற்றும்சிறப்புப்பரிசுகள் வழங்கப்பட்டன.
- ரூ.72.18 இலட்சம் செலவில் அரசுப் பள்ளிகளில் 11 ஆம் வகுப்பு முடித்துள்ள மாணவர்களில் கல்வி, இலக்கியம், அறிவியல், வினாடி வினா போட்டிகளில் சிறந்து விளங்கிய 1,250 மாணவர்களை தேர்வு செய்து, நீலகிரி மாவட்டத்தில் சிறப்பு பயிற்சி முகாம்.
- ரூ.519.73 கோடி மதிப்பீட்டில் அரசு நடுநிலை, உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் 8,209 உயர் தொழில்நுட்ப ஆய்வகங்கள் (Hi–Tech lab) அமைக்கப்பட்டு வருகிறது.
- ரூ.455.32 கோடி செலவில் அரசு தொடக்கப் பள்ளிகளில் பயிலும்மாணவர்கள் பயனடையும் வகையில் 22,931 திறன்மிகு வகுப்பறைகள் (Smart Classroom) அமைக்கப்பட்டு வருகிறது.
- அனைத்து அரசு தொடக்க, நடுநிலை, உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் உள்ள பள்ளி மேலாண்மைக் குழுக்கள் மூலம் 100 Mbps அதிவேக இணைய இணைப்பை பெற நடவடிக்கை.
- அரசுப் பள்ளிகளில் பணிபுரிந்து வரும் 79,723 இடைநிலை ஆசிரியர்களுக்கு ரூ.101.48 கோடி செலவில் கைக்கணினிகள் (Tablet) வழங்கப்பட்டுள்ளன.
- அனைத்து அரசுப் பள்ளிகளிலும், 20 உறுப்பினர்களைக் கொண்ட பள்ளி மேலாண்மைக்குழு செயல்பட்டு வருகிறது. 7,40,000 உறுப்பினர்களுக்கும் பள்ளி மேலாண்மைக்குழு சார்ந்த பயிற்சி.
- ஒவ்வொரு மாதமும் நடைபெறும் பள்ளி மேலாண்மைக் குழு கூட்டத்தில் தேவைகள் கண்டறியப்பட்டு, நிறைவேற்றுவதற்கான திட்டமிடல் பள்ளி மேலாண்மைக்குழு (SMC) செயலி.



- 1 முதல் 5 ஆம் வகுப்பு வரை பயிலும் அறிவுசார் குறைபாடுள்ள மாற்றுத்திறன் கொண்ட மாணவர்களின் அடிப்படை எண்ணறிவு மற்றும் எழுத்தறிவுத் திறன்களை உறுதி செய்யும் வகையில் எளிமைப்படுத்தப்பட்ட மாணவர் பயிற்சி நூல் மற்றும் ஆசிரியர் கையேடு போன்ற கற்றல் கற்பித்தல் உபகரணங்கள் வடிவமைக்கப்பட்டு வழங்கப்பட்டுள்ளன.
- அரசுப் பள்ளிகளில் பயிலும் மாற்றுத்திறன் கொண்ட மாணவர்களை சிறப்பு பயிற்றுநர்கள் மூலம் அடையாளம் காணும் நலம் நாடி செயலி.
- இணைய வழி கற்றல் செயல்பாட்டின் போது மாணாக்கரின் பாதுகாப்பு மற்றும் பாலியல் வன்முறைகளில் இருந்து தற்காத்தலுக்கான வழிகாட்டு நெறிமுறைகள், வெளியீடு.
- பள்ளிக்கல்வித்துறையில் உள்ள அனைவருக்கும் துறைசார்தகவல்களை விரைந்து அனுப்புவதற்கும் கல்வி மேலாண்மை தகவல் முறைமையில் (EMIS) ஆசிரியர்கள், மாணாக்கர்கள் மற்றும் கல்வி அலுவலர்கள் பற்றிய முழுத்தகவல்களும் தொகுக்கப்பட்டுள்ளது.
- ஊராட்சி ஒன்றிய தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளில் கதை மையங்களை ஏற்படுத்தி 160 பள்ளிகளில் ரூ.121.75 இலட்சம் செலவில் புத்தக வடிவில் கதைகள்.
- பேராசிரியர் அன்பழகன் பள்ளி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், ரூ.1,887.76 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஊராட்சி ஒன்றிய தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளில் 3,374 வகுப்பறை கட்டடங்களும், உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் 227 வகுப்பறைக் கட்டடங்கள் திறக்கப்பட்டுள்ளது. மேலும், பள்ளிப் பராமரிப்பு பணிகளுக்கென ரூ.667.50 கோடி ஒதுக்கீடு.
- மாநகராட்சி, நகராட்சி, ஊரக மற்றும் மலைப் பகுதிகளில் உள்ள அனைத்து அரசு தொடக்கப் பள்ளிகளில் பயிலும் மாணவ / மாணவியருக்கு காலை உணவு வழங்கும் முன்னோடித் திட்டமாக முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம். 2024-2025 ஆம் கல்வியாண்டில் ஊரகப் பகுதிகளில் உள்ள அரசு உதவிபெறும் தொடக்கப் பள்ளிகளுக்கும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.
- அரசுப் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு பொது மாறுதல், பதவி உயர்வு மற்றும் பணி நிரவல் கலந்தாய்வு வழிகாட்டு முறைகள் வெளியிடப்பட்டு இணைய வழியில் EMIS மூலம் நடத்தப்பட்டு வருகின்றன.
- 4,989 இடைநிலை ஆசிரியர், 5,154 பட்டதாரி ஆசிரியர் மற்றும் 3,876 முதுகலை ஆசிரியர் பணியிடங்கள் என மொத்தம் 14,019 ஆசிரியர் தற்காலிக அடிப்படையில் பள்ளி மேலாண்மைக் குழுக்களின் மூலம் நியமனம்.
- 76 நடுநிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர்களுக்கு வட்டாரக் கல்வி அலுவலர்களாகப் பதவி உயர்வு.



- அனைத்து வட்டாரக் கல்வி அலுவலர்களுக்கும் நிருவாகப் பொறுப்புகள் மற்றும் நிருவாகத் திறன் மேம்பாட்டுப் பயிற்சி உண்டு உறைவிட பயிற்சியாக வழங்கப்பட்டு உள்ளது.
- பள்ளித் தலைமையாசிரியர்களுக்கு ஆண்டுதோறும் தலைமைத்துவ மேம்பாட்டுப் பயிற்சித் திட்டத்தை வடிவமைத்துச் செயல்படுத்தி வருகிறது.
- ரூ.10 கோடிச் செலவில் நடுநிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர்களுக்கு நிருவாகப் பொறுப்புகள் மற்றும் நிருவாகத் திறன் மேம்பாட்டுப் பயிற்சி.
- 4 தொடக்கப் பள்ளிகள் நடுநிலைப் பள்ளிகளாகவும், 6 உயர்நிலைப் பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாகவும் தரம் உயர்வு.
- நான் முதல்வன் திட்டத்தின் கீழ் 9–12 வகுப்பு பயிலும் மாணவர்களுக்கு உயர்கல்வி, தொழில் மற்றும் வேலை வாய்ப்பு குறித்து வழிகாட்டுதல்கள் வழங்கப்பட்டு, சுமார் 10 இலட்சம் மாணவர்கள் பயன்.
- கற்றல்–கற்பித்தல், ஆசிரியர் திறன் மேம்பாடு, தலைமைத்துவம், மாணவர் வளர்ச்சி என பன்முக வளர்ச்சியில் வெளிப்படுத்தும் சிறந்த 76 தொடக்க / நடுநிலை / உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளுக்கு சிறந்த பள்ளிகளுக்கான பேராசிரியர் அன்பழகன் விருது வழங்கப்பட்டுள்ளன.
- பள்ளிகளில் பராமரிக்கப்பட்டு வரும் பதிவேடுகளில் 45 பதிவேடுகள் கணினிமயமாக்கப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகிறது.
- மேல்நிலைப் பள்ளிகளில் தொழிற்கல்விப் பாடத்திட்டங்கள் NSQL சான்றிதழை செயல்படுத்தும் வகையில் மறு சீரமைக்கப்பட்டும், மேம்படுத்தப்பட்டும் உள்ளது.
- 11 ஆம் வகுப்பு மற்றும் 12 ஆம் வகுப்புக்கான சீரமைக்கப்பட்ட தொழிற்கல்வி பாடத்திட்டம் மற்றும் பாடப் புத்தகங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன.
- தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் மூலம் தொழிற்கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான திறன் மேம்பாட்டுப் பயிற்சி, நடத்தப்பட்டு சான்றிதழ்களும் வழங்கப்பட்டுள்ளன.
- 100 தலைமை ஆசிரியர்களுக்கு

ஆண்டுதோறும் அறிஞர் அண்ணா தலைமைத்துவ விருது, பாராட்டுச் சான்றிதழும், கேடயமும் ரூ.10 கோடி செலவில் வழங்கப்பட்டுள்ளன.

- தொடக்கவகுப்புமாணவர்களுக்கு "ஊஞ்சல்" இதழும், உயர்வகுப்பு மாணவர்களுக்கு "தேன்சிட்டு" இதழும்; ஆசிரியர்களுக்கான "கனவு ஆசிரியர்" என்ற மாதஇதழ், ரூ.7.15 கோடி மதிப்பீட்டில் வெளியிடப்பட்டுள்ளது.
- மாநிலத்தில் உள்ள அரசுப் பள்ளிகளின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்காக "நம்ம ஸ்கூல், நம்ம ஊர் பள்ளி" எனும் திட்டம்.
- அரசு மேல்நிலைப் பள்ளிகளில் 11 மற்றும் 12 ஆம் வகுப்புகளில் வசூலிக்கப்பட்டு வந்த கணினி அறிவியல் பாடப்பிரிவிற்கான சிறப்பு கட்டணம் ரூ.200/- இரத்து.
- தனியார்சுயநிதிபள்ளிகளில்தமிழ்வழியில்பயிலும் 47,661மாணவர்களுக்கும்கல்விஉபகரணங்கள், பாடநூல், நோட்டுப்புத்தகம் போன்றநலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டு வருகிறது.
- தமிழ் மொழி இலக்கியத் திறனறித் தேர்வு நடத்தப்பட்டு 1,500 மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு ஊக்கத்தொகையாக மாதம் ரூ.1,500வீதம் இரண்டு ஆண்டுகளுக்கு வழங்கப்படுகிறது.
- 10 மற்றும் 12 ஆம் வகுப்புகளுக்கான பொதுத் தேர்வுகள் நடத்தப்பட்டு, தேர்வு முடிவுகளும் ஒரே நாளில் 17.50 இலட்சம் மாணாக்கர்களுக்கு குறுஞ்செய்தியாகவும்/ இணையதளத்திலும் வெற்றிகரமாக வெளியிடப்பட்டது.
- பதினொன்றாம் வகுப்பு பயிலும் மாணாக்கர்களுக்கு "தமிழ்நாடு முதலமைச்சர் திறனாய்வுத் தேர்வு" 1,000 மாணாக்கர்கள் தெரிவு செய்யப்பட்டு ஊக்கத்தொகையாக மாதம் ரூ.1,000/- வீதம் இளநிலை பட்டப்படிப்பு வரை வழங்கப்படும்.
- 10, 11 மற்றும் 12 ஆம் வகுப்பு மாணவர்களின் மதிப்பெண் சான்றிதழ்களின் இரண்டாம்படி, சான்றிட்ட நகல் மற்றும் புலப்பெயர்ச்சி சான்றிதழ்கள் இணையவழியில் பெறும் வசதி தொடங்கி வைக்கப்பட்டுள்ளது.
- அரசுப் பள்ளிகளில் பணிபுரியும் தேர்ந்தெடுக்கப்பட்ட 1,000 பட்டதாரி ஆசிரியர்களுக்கு 6 நாட்கள் தொல்லியல் பயிற்சி வழங்கப்பட்டுள்ளது.
- பள்ளிக் கல்வியின் தரத்தை மேம்படுத்துவதற்காக ரூ.40 இலட்சம் செலவில் மாநில மதிப்பீட்டுப் புலம் உருவாக்கம்.
- மாநில மதிப்பீட்டுப் புலம் மூலம் 6,029 அரசுப் பள்ளிகளிலும் இணைய வழி வினாடி வினா.
- அனைத்து அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் 9 முதல் 12 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு மனநலம் மற்றும் வாழ்வியல் திறன் பயிற்சி. 2.5 இலட்சம் மாணவர்களும் 1.100 ஆசிரியர்களும் பயன்.
- பள்ளிக் கல்வித் துறையில் பணிபுரியும் 12,000 அலுவலர்களுக்கு நாட்டின் தலைசிறந்த கல்வியாளர்கள் மற்றும் வல்லுநர்கள் உதவியுடன் திறன் மேம்பாட்டுப் பயிற்சி.
- 1 முதல் 10 ஆம் வகுப்பு வரை கற்பிக்கும் 1,53,000 இடைநிலை மற்றும் பட்டதாரி ஆசிரியர்களுக்கு குறுவளமைய பயிற்சி.
- கல்வித் தொலைக்காட்சி மூலம் 1 முதல் 12ஆம் வகுப்பு வரை அனைத்துப் பாடங்களையும் காணொலிகளாக உருவாக்கி ஒளிபரப்பு.
- 5 உயர் தொழில்நுட்பப் படப்பதிவுக்கூடங்கள் ஒரு ஒலிப்பதிவுக்கூடம் மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்தில் உருவாக்கம்.



- முதுகலைப் பட்டதாரி ஆசிரியர் / உடற்கல்வி இயக்குநர் நிலை 1 / கணினி பயிற்றுநர் நிலை 1 பணியிடங்களுக்கான கணினி வழியாக போட்டித்தேர்வு நடத்தப்பட்டு, 3,087 முதுகலை ஆசிரியர்கள் பணிநியமனம்.
- 97 வட்டாரக் கல்வி அலுவலர் பணியிடங்களுக்கு தேர்வுகள் நடத்தப்பட்டு பணிநியமனம். 33 வட்டாரக் கல்வி அலுவலர் பணியிடங்களுக்கான, பணிநாடுநர்கள் தெரிவு.
- ஆசிரியர் தகுதித் தேர்வு தாள் 1–க்கான தேர்வுகள் இணையவழியில் நடத்தப்பட்டு, 21,543 தேர்வர்கள் தேர்ச்சி.
- தாள் 2–க்கான கணினி வழித் தேர்வுகள் நடத்தப்பட்டு, 15,430 தேர்வர்கள் தேர்ச்சி.
- ஆசிரியர் தேர்வு வாரியத்தினை மறுசீரமைக்கவும்,வலுப்படுத்தவும்தரம்மற்றும் செயல்பாடுகளை மேம்படுத்துவதற்காகவும் அமைக்கப்பட்ட குழுவின் பரிந்துரையின்படி, மறுசீரமைப்பு.
- பணிநாடுநர்களுக்குவிவரங்கள்எளிதாக அறியும் வகையில் ஆசிரியர் தேர்வு வாரியத்திற்கென டைனமிக் இணையதளம்.
- ஆசிரியர் தகுதித் தேர்வு சான்றிதழ்களின் மறுபிரதி சான்றிதழ்கள், 8,883 சான்றிதழ்கள் இணைய வழியில் வழங்கப்பட்டுள்ளன.
- 2,310 பட்டதாரி ஆசிரியர் / வட்டார வள மைய பயிற்றுநர் பணியிடங்களுக்குத் தேர்வு நடத்தப்பட்டு, தகுதியான பணிநாடுகர்கள் தெரிவு.
- ஆசிரியர் தேர்வு வாரிய மனுதாரர்களால் நேரில் வழங்கப்படும் மனு மற்றும் சந்தேகங்கள், தொலைபேசி வாயிலாக கோரப்படும் சந்தேகங்கள், தபால் மற்றும் மின்னஞ்சல் மூலம் பெறப்படும் மனுக்கள் மீது நடவடிக்கை மேற்கொள்ள துணை ஆட்சியர் தலைமையில் குறைதீர்க்கும் மையம் (Grievance Redressal Cell) மற்றும் தொலைபேசி தகவல் மையம் (Call Centre) செயல்பட்டு வருகிறது.
- திசைதோறும் திராவிடம் திட்டத்தின்கீழ், 13 நூல்கள், 5 மலையாள மொழிபெயர்ப்பு நூல்கள், 2 தெலுங்கு மொழிபெயர்ப்பு நூல்கள் மற்றும் இலக்கிய மொழிபெயர்ப்பு திருவிழாவில் 15 நூல்கள் வெளியிடப்பட்டுள்ளன.

- முத்தமிழறிஞர் மொழிபெயர்ப்புத் திட்டத்தின்கீழ், திராவிட அல்லது தென்னிந்திய குடும்ப மொழிகளின் ஒப்பிலக்கணம் –The Rev. R. Caldwell உலக தமிழாராய்ச்சி நிறுவனத்துடன் கூட்டு வெளியீடாக வெளியிடப்பட்டது. 5 மருத்துவ நூல்களுடன் உள்ளடக்கிய 44 நூல்களும், 2 ஒடிய மொழி நூல்கள் தமிழ் மொழிப் பெயர்ப்பிலும் வெளியிடப்பட்டுள்ளன. 2ஆவது சென்னை பன்னாட்டு புத்தகக் காட்சியில் 62 நூல்கள் வெளியிடப்பட்டுள்ளன.
- இளந்தளிர் இலக்கியத் திட்டத்தின்கீழ், 50 சிறார் நூல்கள் வெளியிடப்பட்டன. 2ஆவது சென்னை பன்னாட்டு புத்தகக் காட்சியில் 74 நூல்கள் வெளியிடப்பட்டுள்ளன.
- வ.உ.சி. எழுதிய நூல்களின் தொகுப்பை வ.உ.சி. பன்னூல் திரட்டு, வ.உ.சி. திருக்குறள் உரை என்று நான்கு தொகுதிகளாக வெளியிடப்பட்டுள்ளன.
- கலைக் களஞ்சியம் 10 தொகுதிகள் மற்றும் சிறார் களஞ்சியம் 10 தொகுப்புகள் வெளியிடப்பட்டுள்ளன.
- நாட்டுடமையாக்கப்பட்ட நூல்களின் வரிசையில்59நூல்கள்வெளியிடப்பட்டுள்ளன.
- நூற்றாண்டு காணும் ஆளுமைகளின் தொகுப்புகள் பேராசிரியர்.க.அன்பழகன், குழந்தை எழுத்தாளர் அழ.வள்ளியப்பா, தி.ஜானகிராமன், கி.ராஜநாராயணன் ஆகியோரின் தொகுப்புகள் வெளியிடப்பட்டுள்ளன.
- பெரியார் சிந்தனை முதல் தொகுதியில் 5 குறுநூல்கள் கொண்ட மலையாளம், மராத்தி, தெலுங்கு, உருது, ஆங்கிலம், பிரெஞ்சு மொழி, ஸ்பானிஷ் மொழி, அரபு மொழி, ரஷ்ய மொழி, ஜப்பானிய மொழி என மொத்தம் 10 மொழிபெயர்ப்பில் 2ஆவது சென்னை பன்னாட்டு புத்தகக் காட்சியில் வெளியிடப்பட்டன.
- நாட்டுடமையாக்கப்பட்ட மற்றும் அரிய நூல்கள் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டு 5 நூல்கள் மற்றும் உலக இலக்கியங்களின் எளிமைப்படுத்தப்பட்ட, குழந்தைகளுக்கான நூல் வரிசையில் சுமார் 14 நூல்கள் 2ஆவது சென்னை பன்னாட்டுப் புத்தகக் காட்சியில் வெளியிடப்பட்டன.
- பழ.அதியமான் எழுதிய வைக்கம் போராட்டம் என்ற நூல் மலையாளம் மற்றும் கன்னடத்தில் வெளியிடப்பட்டுள்ளன. தெலுங்கு மற்றும் ஆங்கில மொழிபெயர்ப்புப் பணி நடைபெற்று வருகிறது. 135 பக்கங்கள் கொண்ட சிறு தொகுப்பு நூல் வெளியிடப்பட்டது.
- தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம் தரைத் தளத்தில் பேராசிரியர் அன்பழகனார் நூல் விற்பனை மையம் திறப்பு.
- முற்றிலும் எழுத, படிக்கத் தெரியாத வயது வந்தோர்களுக்காக கற்போம் எழுதுவோம் திட்டம் அனைத்து மாவட்டங்களிலும் ரூ.7.19 கோடிச் செலவில் செயல்படுத்தப்பட்டு 3.19 இலட்சம் கற்போர்கள் பயனடைந்துள்ளனர்.
- புதிய அணுகுமுறைகளைக் கையாண்டு சிறப்பாகச் செயல்படுத்திய 114 சிறந்த கற்போர் மையங்களுக்கு பாராட்டுச்சான்றிதழ், கேடயம் மற்றும் பதக்கங்களை உள்ளடக்கிய "மாநில எழுத்தறிவு விருது".
- 15 வயதுக்கு மேற்பட்ட முற்றிலும் எழுதப் படிக்கத் தெரியாத 4.80 இலட்சம் நபர்களுக்கு புதிய பாரத எழுத்தறிவுத் திட்டம் அனைத்து மாவட்டங்களிலும் ரூ.9.83 கோடி செலவில் செயல்படுத்தப்பட்டு, 5.28 இலட்சம் நபர்கள் எழுத்தறிவு பெற்றுள்ளனர்.
- இராமநாதபுரம் மற்றும் விருதுநகர் ஆகிய மாவட்டங்களில் ரூ.6.23 கோடி செலவில் சிறப்பு எழுத்தறிவுத் திட்டம். 1,68,944 கற்போர்கள் பயன்.

- மத்திய/மாவட்ட சிறைச்சாலைகளில், 1,249 முற்றிலும் எழுதப்படிக்கத் தெரியாத சிறைவாசிகளுக்கு, ரூ.25 இலட்சம் செலவில், சிறைவாசிகளுக்கான சிறப்பு எழுத்தறிவுத் திட்டம்.
- மாவட்ட நூலக ஆணைக்குழுக்களில் பணியாற்றி மரணமடைந்த வாரிசுதாரர்கள் 27 நபர்களுக்கு கருணை அடிப்படையில் பணிநியமனம்.
- பொது நூலக இயக்ககம் மற்றும் மாவட்ட நூலக ஆணைக்குழுக்களில் பணியாற்றும் பணியாளர்களுக்கு பணிமாறுதல் கொள்கை வகுக்கப்பட்டு, பணியிட மாறுதல் வழங்கப்பட்டுள்ளன.
- பொது நூலகங்களுக்கு நாளிதழ்கள் மற்றும் பருவ இதழ்கள் கொள்முதல் செய்திட நிதி 6.5 சதவிகிதத்திலிருந்து 15 சதவிகிதமாக உயர்வு.
- அண்ணா நூற்றாண்டு நூலகம் மற்றும் மாவட்ட நூலக ஆணைக்குழுக்களில் ஊதியம் பெறும் பணியாளர்களுக்கு அரசுப் பணியாளர்களுக்கான சலுகைகள் மற்றும் பணப்பயன்கள் வழங்கிட ஆணை.
- சர்வதேச மாற்றுத்திறனாளிகள் தினமான டிசம்பர் 3 அன்று அண்ணா நூற்றாண்டு நூலகத்தில் உள்ள பணியிடங்களுக்கு 31 பார்வை மாற்றுத்திறனாளிகளுக்கு பணி நியமன ஆணை.
- பொது நூலக இயக்ககத்தின் மூலம் மின்நூலகம் (Digital Library) அமைக்கப்பட்டு, 29,000க்கு மேற்பட்ட நூல்கள் மற்றும் 2,54,694 அரிய ஓலைச் சுவடி பக்கங்கள் மின்னுருவாக்கம்.
- ஒருங்கிணைந்த நூற்பட்டி (Union Catalogue) https://tamilnadupubliclibraries.org என்ற இணையதளத்தின் மூலம் 28 இலட்சம் நூல்கள் பொது மக்கள் பயன்பாட்டிற்கு வழங்கப்பட உள்ளது.
- கிராமப்புறங்களில் மின் நூலக சேவை வழங்கும் வகையில், 500 நூலகங்களில் wi-fi இணைய வசதி.
- 38 மாவட்டங்களில் உள்ள 76 நூலகங்களில் 152 மெய்நிகர் தொழிற்நுட்ப கருவிகள் (Virtual Reality Library) ரூ.57.20 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ளது.
- "TN Talk" என்ற தனித்துவமான நிகழ்ச்சி ரூ.37.50 இலட்சம் செலவில் 25 நிகழ்ச்சிகள் நடத்திட திட்டமிடப்பட்டு, ஐந்து நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டுள்ளன.
- பொது நூலகங்களுக்கு நூல்கள் கொள்முதல் செய்தலில் ஒளிவு மறைவின்றி வெளிப்படைத் தன்மைக்கான நெறிமுறைகளை உருவாக்கப்பட்டு கொள்முதல் கொள்கை வெளியிடப்பட்டுள்ளது.
- பொது நூலகங்களுக்கு நாளிதழ்கள் / பருவ இதழ்களை கொள்முதல் செய்வது குறித்து ஆய்வு செய்ய குழு அமைக்கப்பட்டு, தேர்வு செய்யப்பட்ட நாளிதழ்கள் / பருவ இதழ்கள் மாவட்ட நூலகங்களுக்கு கொள்முதல்.
- 15 இலட்சம் வாசகர்கள் பயன்பெறும் வகையில் 2,500 நூலகங்களில் 12,500 தன்னார்வலர்களைக் கொண்டு ரூ.56.25 இலட்சம் செலவில் நூலக நண்பர்கள் என்ற புதிய திட்டம் திண்டுக்கல் மாவட்டத்தில் அறிமுகம்.
- புத்தக வாசிப்பை ஒரு மக்கள் இயக்கமாக ஊக்குவிக்க அனைத்து மாவட்டங்களிலும் புத்தகக் கண்காட்சிகள் நடத்தப்பட்டு வருகிறது.
- சென்னை, வைகை, காவேரி, பொருநை மற்றும் சிறுவாணி என்ற பெயரில் ஐந்து

இலக்கியத் திருவிழாக்கள் ரூ.93.50 இலட்சம் செலவிலும், இளைஞர் இலக்கியத் திருவிழாக்களும் நடத்தப்பட்டு வருகின்றன.

- ரூ.218.19 கோடி செலவில் 3,62,000 புத்தகங்களுடன் மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பெயரில் சர்வதேசத் தரத்திலான "கலைஞர் நூற்றாண்டு நூலகம்".
- அண்ணா நூற்றாண்டு நூலகம் ரூ.37.82 கோடி செலவில் புதுப்பிக்கும் பணி.
- 18 வயதிற்குட்பட்ட மூன்று சிறந்த இளம் எழுத்தாளர்களைத் தேர்வு செய்து பதக்கம், பாராட்டுச் சான்றிதழ் மற்றும் ரூ.25,000 ரொக்கப்பரிசு, கவிமணி விருது வழங்கப்பட்டு வருகிறது.
- அண்ணா நூற்றாண்டு நூலகத்தில் ரூ.40 இலட்சம் செலவில் "செந்தமிழ்ச் சிற்பிகள் அரங்கம்" அமைக்கப்பட்டு 180 தமிழ் எழுத்தாளர்களின் புகைப்படங்கள், கையெழுத்துப் பிரதிகள் மற்றும் படைப்புகள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.
- அண்ணா நூற்றாண்டு நூலகத்திற்கு ரூ.6.5 கோடி மதிப்பிலான புத்தகங்கள், மின்–புத்தகங்கள், மின்–பத்திரிகைகள் மற்றும் மின்ஆராய்ச்சி இதழ்கள் கொள்முதல்.
- இந்திய நூலகத் தந்தை முனைவர் எஸ்.ஆர்.அரங்கநாதன் அவர்களை நினைவு கூறும் வகையில் சீர்காழியில் ரூ.1.32 கோடி செலவில் ஓர் நூலகம் ஏற்படுத்தப்பட்டுள்ளது.
- செந்நாப் புலவர் ஆ.கார்மேகனார் அவர்களைப் போற்றும் வகையில் இராமநாதபுரம் மாவட்டம் அபிராமபுரத்தில் ரூ.40 இலட்சம் செலவில் புதிய நூலகக் கட்டடம் கட்டப்பட்டுள்ளது.
- பழம்பெரும் நூலகங்களுள் ஒன்றான கன்னிமாரா பொது நூலகக் கட்டடத்தின் பாரம்பரிய மதிப்பு மாறாத வகையில், ரூ.3.19 கோடி செலவில் கட்டமைப்புகள் வலுப்படுத்தப்பட்டுள்ளது.
- உலகளாவிய அறிவுப் பரிமாற்றத்தை நோக்கமாகக் கொண்டு, 2022–2023 ஆம் ஆண்டு முதல் சென்னை பன்னாட்டுப் புத்தகக் கண்காட்சி நடத்தப்பட்டு வருகிறது.
- 2024 ஜனவரி மாதத்தில் நடைபெற்ற சென்னை பன்னாட்டுப் புத்தகக் கண்காட்சியில் 40 நாடுகளிலிருந்து பதிப்பாளர்கள் பங்கேற்று 752 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள்.

❖ ❖ ❖

மாணவச்செல்வங்களே! பள்ளிப்பிள்ளைகளே! கல்லூரி மாணவ மாணவியரே!
நீங்கள் அனைவரும் உரக்கச் சொல்லிப் பாருங்கள்! 'நான் முதல்வன்',
நான் முதல்வன், நான் முதல்வன் என்று!
உங்களுக்குள் ஒரு சக்தி பிறக்கும். உங்களுக்குள் ஒரு நம்பிக்கை பிறக்கும்.
உங்களுக்குள் ஒரு தைரியம் பிறக்கும்.

மு.க.ஸ்டாலின்
மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்

சுற்றுச்சூழல், மாசுக் கட்டுப்பாடு மற்றும் முன்னாள் இராணுவத்தினர் நலன்



திரு. சிவ.வீ.மெய்யநாதன் அவர்கள்

மாண்புமிகு சுற்றுச்சூழல் - காலநிலை மாற்றத்துறை அமைச்சர்

சுற்றுச்சூழல் மற்றும் கால நிலை மாற்றத்துறை

- தமிழ்நாடு காலநிலை மாற்ற இயக்ககம் ரூ.500 கோடி மதிப்பில் கீழ்வரும் முன்னோடித் திட்டங்களால் தொடங்கப்பட்டது.
- நாட்டிலேயே முதன்முறையாக நமது மாநிலத்தில் காலநிலை மாற்ற தழுவல் மற்றும் தடுப்பு நடவடிக்கைகளுக்கு கொள்கை வழிகாட்ட மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையின் கீழ் பல்துறை வல்லுநர்கள், அரசு செயலர்கள் மற்றும் மாண்புமிகு அமைச்சர்களை உள்ளடக்கிய காலநிலை மாற்றத்திற்கான தமிழ்நாடு ஆட்சிமன்றக்குழு அமைக்கப்பட்டுள்ளது.
- தமிழ்நாட்டிலுள்ள 38 மாவட்டங்களிலும் கீழ்மட்ட அளவில் காலநிலை மாற்ற தழுவல் மற்றும் தடுப்பு நடவடிக்கைகளை ஒருங்கிணைக்க மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தலைமையில் மாவட்ட வன அலுவலர் அவர்களை கால நிலை அலுவலராகக் கொண்டு மாவட்ட காலநிலை மாற்ற இயக்கங்கள் உருவாக்கப்பட்டுள்ளன.
- மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் பசுமைப் புத்தாய்வுத் திட்டத்தின் கீழ் 40 பசுமைத் தோழர்கள் தேர்வு செய்யப்பட்டு, அனைத்து மாவட்டங்களிலும் மாவட்ட நிருவாகங்களுடன் இணைந்து சுற்றுச்சூழல் சார்ந்த செயல்பாடுகளை செயல்படுத்த நியமிக்கப்பட்டுள்ளனர்.



- மாவட்ட அளவிலான காலநிலை செயல்திட்டம் ஒன்றை உருவாக்குவதற்காக காலநிலை மாற்றத்திற்கான பங்குதாரர்கள் பயிற்சிப் பட்டறை இதுவரை 37 மாவட்டங்களில் நடத்தி முடிக்கப்பட்டுள்ளது.
- மாண்புமிகு சட்டப்பேரவை உறுப்பினர்களுக்கு காலநிலை மாற்றம் குறித்த திறன் வளர் பயிற்சிப் பட்டறை 09.10.2023 அன்று நடத்தப்பட்டது.
- பெருந்திரள் போக்குவரத்தினால் ஏற்படும் உமிழ்வுகளைக் குறைத்தல், சுற்றுச்சூழலுக்கு உகந்த தீர்வுகள் மூலம் கடலோர வாழ்விடங்களை மறுசீரமைத்தல், கழிவிலிருந்து ஆற்றல், கார்பன் செறிவூட்டத் திட்டம், நிலைத்த வாழ்விடம், காலநிலைக் கல்வியறிவு மற்றும் காலநிலைத் திறன்மிகு கிராமங்கள் போன்ற துறைகளில் அடிப்படைக் கள ஆய்வுகள் நடத்தப்பட்டு, அவற்றில் ஆறு ஆய்வுகளின் அறிக்கைகள் அரசிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.
- மதுரப்பாக்கம் காப்புக்காடுகளில் உள்ள மண்ணின் கரிம அளவை அதிகரிக்கவும், பசுமைப் பரப்பை அதிகரிக்கவும், பெருங்குடி குப்பைக் கிடங்கிலிருந்து கரிமச்செறிவு மிக்க உயிரகழ்வு (Bio Mining) செய்யப்பட்ட மண் இடப்பட்டு 6,000 உள்ளூர் ரக மரங்கள் நடப்பட்டுள்ளன.
- கட்டுமானத் தொழிலில் உள்ளோர் மற்றும் குடியிருப்புவாசிகளுக்கு நிலைத்த வாழ்விடம் மற்றும் கட்டடங்களில் ஆற்றல் சேமிப்பு முறைகள் குறித்த திறன் வளர் பயிற்சிப் பட்டறை கோயம்புத்தூர், சேலம் மற்றும் திருச்சிராப்பள்ளி ஆகிய மூன்று மாநகராட்சிகளில் நடத்தப்பட்டுள்ளது.
- காலநிலை மாற்றத்திற்கான முதல் சர்வதேச உச்சி மாநாடு மற்றும் தமிழ்நாடு காலநிலை மாற்ற இயக்க தொடக்க விழா நடத்தப்பட்டுள்ளது.
- செங்கல்பட்டு மாவட்டத்தில் உள்ள கோவளம் கடற்கரைக்கு நீலக்கொடி சான்றிதழ் பெறப்பட்டுள்ளது. இதனை தொடர்ந்து தமிழ்நாட்டிலுள்ள பிரதான கடற்கரைகளான சென்னையில் மெரினா, இராமநாதபுரத்தில் அரியமான், தூத்துக்குடியில் காயல்பட்டினம், திருநெல்வேலியில் கொடவிளை, நாகப்பட்டினத்தில் காமேஸ்வரம், புதுக்கோட்டையில் காட்டுமாவடி, கடலூரில் வெள்ளி கடற்கரை, விழுப்புரத்தில் மரக்காணம் ஆகியவற்றை ரூ.250 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்தி நீலக்கொடி சான்றிதழ் பெற நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.



- பொதுமக்கள் மத்தியில் காலநிலைக் கல்வியறிவை ஏற்படுத்தும் பொருட்டு பொது இடங்களில் (கோயம்பேடு பேருந்து நிலையம், பாண்டி பஜார், அண்ணா நகர் கோபுரப் பூங்கா மற்றும் கத்திப்பாரா) தெருக்கூத்து மூலமாகவும், சைக்கிள் பேரணி (அடையார்) மூலமாகவும் கல்லூரிகளில் (லயோலா மற்றுக் மாநிலக் கல்லூரி) பயிற்சிப் பட்டறைகள் மூலமாகவும் காலநிலை விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன.
- காலநிலை மாற்றத்தின் தாக்கங்கள் குறித்து மாணவர்களுக்கு கற்பிக்கவும், சுற்றுச்சூழல் குறித்தவிழிப்புணர்வைஏற்படுத்தவும்,காலநிலை பாடத்தொகுப்புகள்மற்றும்விளையாட்டுமூலம் கற்றல்போன்றதிட்டங்கள்உருவாக்கப்பட்டு வருகின்றன.
- 11 கிராமங்களை காலநிலைத் திறன்மிகு கிராமங்களாகமாற்றும்வகையில்அடிப்படைக் கள ஆய்வுகள் நடத்தப்பட்டு வருகின்றன.
- தமிழ்நாடு கடற்கரையோரங்களில் 110 கி.மீ. நீள அளவிற்கு அலையாத்தி மரங்களை நடவு செய்வதன் மூலம் இயற்கை சார்ந்த முறையில் உயிர்க்கேடயங்களை அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது.
- அன்னை வேளாங்கன்னி பேராலயம், நாகப்பட்டினம் மற்றும் மீனாட்சி அம்மன் கோவில், மதுரை ஆகிய வழிபாட்டுத் தலங்களை காலநிலை மீள்திறன் மற்றும் நிலைத்த சூழலுக்குகந்த நடைமுறைகளை உள்ளடக்கியவையாக மாற்றும் பொருட்டு விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு வருகிறது.
- நீலகிரி,கோயம்புத்தூர்மற்றும்இராஜபாளையம் ஆகிய ஊர்களில் கார்பன் சமநிலை பயிற்சிப் பட்டறைகள்நடத்தப்பட்டு,கார்பன்சமநிலையை அடைவதற்கான கார்பன் சமநிலை செயல் திட்டம் உருவாக்கும் பணிகள் தொடங்கப்பட்டுள்ளன.
- உயர் குறியீடு பெரும் நகரங்கள் அந்த ஆண்டுக்கான பசுமை தூதுவராக அறிவித்து ரூ.3 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது,
- 2022–2023ஆம்நிதியாண்டில்25பள்ளிகள் பசுமை பள்ளிகளாகத் தேர்வு செய்யப்பட்டு ரூ.5 கோடி நிதியுதவி அளிக்கப்பட்டது. 46 பள்ளிகள் தேர்வு செய்யப்பட்டு, பள்ளிக்கு தலாரூ.20இலட்சம்வீதம்ரூ.9.20கோடிநிதியுதவி 2023–2024ஆம்நிதியாண்டில்அளிக்கப்பட உள்ளது.

தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாட்டு வாரியம்

- சுற்றுச்சூழலை மேம்படுத்துவதற்கு நிருணயிக்கப்பட்ட தரத்தைவிட சிறப்பாக செயல்பட தொழிற்சாலைகளை ஊக்குவிப்பதற்காகவும் தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரியம் தொழிற்சாலைகளுக்கு பசுமை மதிப்பீடு செய்யும் திட்டத்தினை செயல்படுத்த முன்வந்துள்ளது.
- தமிழ்நாட்டின் பாரம்பரியமான சுற்றுச்சூழலுக்கு உகந்த மஞ்சள் பையின் பயன்பாட்டை மீட்டெடுக்க சுமார் 1,77,000 விழிப்புணர்வு பிரச்சாரங்கள் பள்ளி மாணவர்களுடன் நடத்தப்பட்டுள்ளன.
- மஞ்சப்பை பயன்பாட்டை பரவலாக்க தானியங்கி விற்பனை இயந்திரம் அனைத்து மாவட்டங்களையும் சென்றடைந்துள்ளது.
- மாநிலத்தில் 14 இடங்களில் நிகழ்நேர நீர் தரக் கண்காணிப்பு நிலையங்கள் நிறுவப்பட்டு வருகின்றன.
- மாநிலத்தில் 25 இடங்களில் தொடர்ச்சியான சுற்றுப்புற காற்று தர கண்காணிப்பு நிலையங்கள் நிறுவப்பட்டு வருகின்றன.
- வெளிப்படைத்தன்மை மற்றும் செயல்திறனை அதிகரிப்பதற்கு ஏதுவாக வாரியத்தால் ஒவ்வொரு மாதமும் 5ஆம் தேதி அன்று 'நேரடி கலந்தாய்வு அமர்வு' (Open House Session) நடத்தப்பட்டு வருகின்றது.
- தமிழ்நாட்டில் ஒரு முறை பயன்படுத்தி தூக்கி எறியப்படும் பிளாஸ்டிக் பொருட்களுக்கான சுற்றுச்சூழல் மாற்றுப் பொருட்களின் 800 உற்பத்தியாளர்கள் மற்றும் விநியோகிப்பவர்களின் தகவல் அடங்கிய தொகுப்பு தயாரிக்கப்பட்டு தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரியத்தின் வலைதளத்தில் வெளியிடப்பட்டுள்ளது.
- இதுவரை 129 தானியங்கி துணிப்பை விற்பனை இயந்திரங்கள், சந்தைகள், பொது கட்டட வளாகங்கள் மற்றும் வணிக வளாகங்கள் போன்ற இடங்களில் தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாட்டு வாரியம் நிறுவியுள்ளது. இவ்வியந்திரங்கள் மூலம் 78,000 துணிப் பைகள் விநியோகிக்கப்பட்டுள்ளது.
- மீண்டும் மஞ்சப்பை செயலியானது தொடங்கப்பட்டுள்ளது. புகைப்படங்களைப் பதிவேற்றி புகாரைப் பதிவு செய்வதற்கும் செயலியில் வழிவகை செய்யப்பட்டுள்ளது.



- தமிழ்நாட்டில் ஒருமுறை பயன்படுத்தி தூக்கி எறியப்படும் பிளாஸ்டிக் பொருட்கள் மீதான தடையை அமல்படுத்துவது தொடர்பான அனைத்து தகவல், புதுப்பிப்புகள் மற்றும் செய்திகளை வழங்குவதற்காக மீண்டும் மஞ்சப்பை இணையதளம் வாரியத்தால் தொடங்கப்பட்டது.
- ஒருமுறை பயன்படுத்தி தூக்கி எறியப்படும் பிளாஸ்டிக் பயன்படுத்துவதைத் தவிர்த்து சிறந்த முறையில் விழிப்புணர்வு ஏற்படுத்தும் 3 சிறந்த பள்ளிகள், 3 சிறந்த கல்லூரிகள் மற்றும் 3 சிறந்த வணிக வளாகங்களுக்கு வெகுமதி அளிக்கும் வகையில் மஞ்சப்பை விருதுகள் வழங்கப்பட்டது.
- மீண்டும் மஞ்சப்பை பிரச்சாரத்தை வலுப்படுத்தவும், பொதுமக்களுக்கு மஞ்சப்பை கிடைக்கச் செய்யவும், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தால் சென்னை உயர்நீதிமன்றத்தில் 5 மஞ்சப்பை விற்பனை இயந்திரங்கள் மற்றும் 2 தலைகீழ் விற்பனை இயந்திரங்களையும் மேலும் சென்னை உயர்நீதிமன்றத்தின் மதுரை கிளையில் 5 மஞ்சப்பை விற்பனை இயந்திரங்கள் மற்றும் ஒரு தலைகீழ் விற்பனை இயந்திரங்களை நிறுவியுள்ளது.
- சூரியசக்தியில் இயங்கும் கடலோரக் கழிவுகள் கண்காணிப்பு கியோஸ்க், மஞ்சப்பை விற்பனை இயந்திரம் மற்றும் தலைகீழ் விற்பனை இயந்திரம் ஆகியவை





சென்னை பெசன்ட்நகர் கடற்கரையில் நிறுவப்பட்டுள்ளன.

- சர்வதேச கடற்கரை தூய்மைப்படுத்தும் தினத்தையொட்டி நீலாங்கரை கடற்கரையில் மாநில அளவிலான கடலோர தூய்மைப்படுத்தல் மற்றும் விழிப்புணர்வு நிகழ்வு செப்டம்பர் 17, 2022 அன்று மாண்புமிகு சுற்றுச்சூழல் மற்றும் மாசுக்கட்டுப்பாட்டு அமைச்சரால் தொடங்கி வைக்கப்பட்டது.
- தமிழ்நாடு மீன் வலை முன்முயற்சிகள் (TNFI), மீன்வலைகளால் கடல் மாசுபடுவதைத் தடுப்பதற்கும், கைவிடப்பட்ட மீன் வலைகளுக்கான சேகரிப்பு மையங்களை நிறுவுவதன் மூலம் கடல் பல்லுயிர்களைப் பாதுகாப்பதற்கும், அவற்றை மறுசுழற்சி செய்வதற்கும் அவற்றை மீட்டெடுப்பதற்கும் மற்றும் சுழற்சி பொருளாதாரத் தீர்வுகளைச் செயல்படுத்துவதற்கும் வாரியத்தால் தொடங்கப்பட்ட ஒரு தனித்துவமான மற்றும் புதுமையான முயற்சியாகும்.
- சுழற்சி பொருளாதாரத்தில் கழிவு சேகரிப்பவர்களுக்கு, சென்னை பெருநகர மாநகராட்சியின் மண்டலம் 13 மற்றும் 14இல் முன்னோடித் திட்டம் தொடங்கப்பட்டுள்ளது.
- இணையவழி கழிவு பரிமாற்ற தளம் என்பது வட்டப் பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்காக பல்வேறு வகையான கழிவுகளின் பங்குதாரர்களை ஒன்றிணைக்கும் இணையதள அடிப்படையிலான பயன்பாடாகும்.
- தமிழ்நாட்டில் உள்ள தொழிற்சாலைகள் மூலம் நாட்டு மரங்களால் ஆன 1,000 குறுங்காடுகள் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.
- தமிழ்நாட்டின் தொழில்துறை பகுதிகளில் மண்ணின் தர வரைபடம் உருவாக்கப்பட்டு வருகிறது.
- ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு மையம் அமைத்தல்– பசுமைக் கட்டிடம்.
- கார்பன்–நியூட்ரல் கோயம்பேடு சந்தை வளாகம் – புதுப்பிக்கத்தக்க எரிசக்தி ஆதாரங்கள், பசுமையான இடங்கள், நிலையான பொருட்களின் பயன்பாடு, கார்பன் தடயங்களைக் குறைப்பதற்கான வழிகள், ஒருமுறை பயன்படுத்தும் பிளாஸ்டிக் தடையை அமல்படுத்துதல் மற்றும் சந்தை வளாகத்தின் முழு செயல்பாட்டிலும் சுற்றுச்சூழல் பொறுப்பை உறுதி செய்தல்.
- சுற்றுச்சூழல் பாதுகாப்பு முன்மாதிரியான பங்களிப்பைச் செய்த அமைப்பு / கல்வி நிறுவனங்கள், பள்ளிகள், கல்லூரிகள், குடியிருப்பு நலச் சங்கங்கள், தனிநபர்கள், உள்ளாட்சி அமைப்புகள், தொழிற்சாலைகளுக்கு 2021 முதல் 100 பசுமை சாம்பியன் முதன்மையாளர் விருதை வழங்குகிறது.
- "காலநிலை வீராங்கனைகள்" என்னும் காலநிலை கல்வியறிவு திட்டத்தின் முதற்கட்டமாக, 500 சுய உதவிக் குழுக்கள், சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றம் குறித்த இப்பசுமை விழிப்புணர்வுப் பிரச்சாரத்தை வழிநடத்தும். இந்த சுயஉதவிக் குழுக்களுக்கு இலவசமாக மின்சார ஆட்டோக்கள் வழங்கப்படும். இத்திட்டம் ரூ.26.25 கோடியில் செயல்படுத்தப்படும்.

முன்னாள் படைவீரர் நலன்

- திருநெல்வேலி மாவட்ட முன்னாள் படைவீரர்கள்மற்றும்அவர்தம்குடும்பத்தினரின் நலனுக்காக திருநெல்வேலி மாவட்டம், பாளையங்கோட்டையில் முன்னாள் படைவீரர்கள் மையத்துடன் கூடிய மாவட்ட முன்னாள்படைவீரர்நல அலுவலகம்ரூ.70.75 இலட்சம்செலவில்கட்டப்பட்டுகடந்த31.07.2021 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால்காணொளிமூலம்பயன்பாட்டிற்காக திறந்து வைக்கப்பட்டது.

- மதுரைமாவட்டத்தில்முன்னாள்படைவீரர்கள் மற்றும்அவர்தம்குடும்பத்தினரின்நலனுக்காக மதுரை இரயில்வேசந்திப்புஅருகில்முன்னாள் படைவீரர்கள் மையத்துடன் கூடிய மாவட்ட முன்னாள் படைவீரர் நல அலுவலகம் ரூ.86.35 இலட்சம் செலவில் கட்டப்பட்டு 31.07.2021 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்அவர்களினால்காணொளிமூலம் பயன்பாட்டிற்கு திறந்து வைக்கப்பட்டது.

- திருவண்ணாமலை மாவட்ட முன்னாள் படைவீரர்கள்மற்றும்அவர்தம்குடும்பத்தினரின் நலனுக்காக திருவண்ணாமலையிலிருந்து வேலூர் செல்லும் சாலையில் ரூ.3.03 கோடி செலவில்புதியபடைவீரர்மாளிகைகட்டப்பட்டு 09.07.2022 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால்நேரடியாகதிறந்து வைக்கப்பட்டது.

- 07.05.2021 முதல் 31.07.2024 வரையிலான காலத்தில் போர் மற்றும் போரையொத்த நடவடிக்கைகளில்உயிர்நீத்த17படைவீரர்களின் வாரிசுதாரர்களுக்குரூ.3.60கோடிகருணைத் தொகை கார்கில் நிவாரண நிதியிலிருந்து வழங்கப்பட்டது.

- படைவீரர் எண்.15139118Y Hav(லேட்)த/பெ. K.பழனி அவர்கள் இந்திய–சீனா எல்லையில் லடாக் பகுதியில் இந்திய மற்றும் சீன இராணுவத்திற்கு மிடையே ஏற்பட்ட மோதலின் போது கடந்த 16.06.2020 அன்று வீர மரணமடைந்தார். இப்படைவீரரின் வீரதீர செயலை பாராட்டி ஒன்றிய அரசின் உயரியவீரவிருதானவீர்சக்ரா(மரணத்திற்கு பின்) அறிவிக்கப்பட்டது. இவ்வீர விருது பெற்றமைக்காகதமிழ்நாடுஅரசின்பணமுடிப்பு ரூ.10,00,000/–(ரூபாய்பத்துஇலட்சம்மட்டும்) படைவீரரின் வாரிசுதாரருக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் கடந்த 15.12.2021 அன்று வழங்கப்பட்டது.

- முன்னாள்படைவீரர்களுக்குதமிழ்நாடுஅரசு பணிகளில்ஒதுக்கப்பட்டசிறப்புஇடஒதுக்கீட்டின் கீழ்'சி'பிரிவுபணியிடங்களில்677நபர்களுக்கும், 'டி ' பிரிவு பணியிடங்களில் 413 நபர்களுக்கும் 07.05.2021 முதல் 31.07.2024 வரையிலான காலத்தில்வேலைவாய்ப்புவழங்கப்பட்டுள்ளது.

- 07.05.2021 முதல் 31.07.2024 வரையிலான காலத்தில்போர்,போரையொத்தநடவடிக்கைகள், உள்நாட்டுபாதுகாப்புநடவடிக்கைகள்மற்றும் பணியின் போது மரணமுற்ற / ஊனமுற்ற படைவீரர்களின் 95 வாரிசுதாரர்களுக்கு தமிழ்நாடு அரசு துறைகளில் கருணை அடிப்படையில் பணி நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

- 07.05.2021 முதல் 31.07.2024 வரையிலான காலத்தில், முன்னாள் படைவீரர்கள் மற்றும் அவர்களைச் சார்ந்தவர்களுக்கு பல்வேறு மாதாந்திரநிதியுதவிகள்,மருத்துவநிதியுதவிகள் மற்றும் கல்வி உதவித் தொகை வழங்கிய வகையில்ரூ.135.57கோடிநலநிதிகளிலிருந்து செலவிடப்பட்டுள்ளது.இதன்மூலம்சுமார்55,648 முன்னாள் படைவீரர்கள் மற்றும் அவரைச் சார்ந்தோர்கள் பயன்பெற்றுள்ளனர்.

- 07.05.2021 முதல் 31.07.2024 வரையிலான காலத்தில், போர் மற்றும் போரையொத்த நடவடிக்கைகளில் வீரமரணம் அடைந்த படைவீரர்களின் குடும்பத்தினர் மற்றும் போரில் ஊனமுற்ற படைவீரர்களுக்கு வருடாந்திர பராமரிப்பு மானியம் ரூ.25,000/– வழங்கிய வகையில் ரூ.3.60 கோடி தொகுப்பு நிதியிலிருந்து செலவினம் செய்யப்பட்டு பின்னர் அரசிடமிருந்து மீளப்



பெறப்பட்டது. இத்திட்டத்தின் மூலம் 1416 பயனாளிகள் பயன் பெற்றுள்ளனர்.

- ❖ கருணைத் தொகை வழங்கும் திட்டம் 1971ம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டம் மூலமாக வழங்கப்படும் தொகையானது பல காலகட்டங்களில் உயர்த்தப்பட்டு, 2016ஆம் ஆண்டு முதல் போரில் வீரமரணமடைந்தோரின் வாரிசுதாரர்களுக்கு ரூ.20 இலட்சமும், இரண்டு கை அல்லது கால்களை இழந்தவர்கள் அல்லது முற்றிலும் கண் பார்வை இழந்தவர்களுக்கு ரூ.15 இலட்சமும், ஒரு கை அல்லது கால் மற்றும் ஒரு கண் பார்வை இழந்தவர்க்ளுக்கு ரூ.10 இலட்சமும் வழங்கப்பட்டு வந்தது. தற்போது மேற்படி கருணைத் தொகையினை அரசு ஆணை எண்.260 பொது(இராணுவம்)த்துறை நாள்:19.04.2023இன் படி இரண்டு மடங்காக உயர்த்தி ஆணையிடப்பட்டள்ளது.
- ❖ இராணுவத்தில் வீரதீர மற்றும் போற்றத்தக்க பணிபுரிந்தவர்களுக்கு ரூ.15 ஆயிரம் முதல் ரூ.25 இலட்சம் வரை வழங்கப்பட்டு வந்த பணமுடிப்பு தொகையினை அரசு ஆணை எண்.259 பொது(இராணுவம்)த்துறை நாள்:19.04.2023இன் படி நான்கு மடங்காக ரூ.60ஆயிரம்முதல்ரூ.1கோடி வரைஉயர்த்தி வழங்கி ஆணையிடப்பட்டள்ளது.
- ❖ வீட்டுவரி மீளப்பெறும் சலுகையானது போர் விதவையர், குடும்ப ஓய்வூதியம் பெறும் முன்னாள் படைவீரர்களின் விதவையர்,

வருடாந்திர பராமரிப்பு மானியம் பெறும் போரில் ஊனமுற்ற படைவீரர் மற்றும் வீரதீரச் செயலுக்கான வீர விருதுகள் பெற்ற முன்னாள் படைவீரர்கள் ஆகியோர்களுக்கு அவர்கள் வசிக்கும் வீட்டிற்காக செலுத்தும் வீட்டு வரியினை ஒரு வருடத்திற்கு (இரண்டு அரையாண்டு) அதிகபட்சம் ரூ.10,000/- (அல்லது) செலுத்தப்பட்ட அசல் தொகை இதில் எந்த தொகை குறைவோ அத்தொகையினை தமிழ்நாடு முன்னாள் படைவீரர் நல நிதியிலிருந்து ஈடு செய்து வழங்கப்படுவது நடைமுறையில் இருந்து வந்தது. தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் 2024-2025ஆம் ஆண்டிற்கான வரவு செலவு திட்ட மதிப்பீடு அறிக்கையில் வீட்டுவரித் தொகையினை மீளப்பெறும் திட்டத்தினை அனைத்து முன்னாள் படைவீரர்களுக்கும் நீட்டிப்பு செய்திட அறிவிக்கப்பட்டதை தொடர்ந்து அரசாணை எண்.169 பொது (முன்னாள் படைவீரர்)த் துறை, நாள் 27.02.2024இல் ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளது இதன்படி இதுவரை 87 பயனாளிகளுக்கு ரூ.1,09,500/- வழங்கப்பட்டுள்ளது.

❖ மாற்றுத்திறன் முன்னாள் படைவீரர்கள் மற்றும் அவரைச் சார்ந்தோர்களின் வாழ்க்கை நடைமுறையை சுலபமாக்கும் நோக்குடன் அவர்களின் அன்றாட தேவைகளை அவர்களே பூர்த்தி செய்திட தேவைக்கேற்ப இணைப்பு



சக்கரங்கள் பொருத்தப்பட்ட பிரத்யேக பெட்ரோல் ஸ்கூட்டர்/ சிறப்பு சக்கரநாற்காலிகள் இலவசமாக வழங்கிட அறிவிக்கப்பட்டுள்ளது.

❖ முன்னாள் படைவீரரின் மனைவி/ கைம்பெண் மற்றும் திருமணமாகாத மகள்கள் அரசு மற்றும் அரசு சார்ந்த நிறுவனங்களில் தையற்பயிற்சி சான்று பெற்றிருப்பின், அவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்குடன் அவர்களுக்கு இலவசமாக தையல் இயந்திரம் வழங்கிட அறிவிக்கப்பட்டுள்ளது.

❖ ❖ ❖

"இயற்கையைக் காப்போம், இயற்கையோடு இணைந்து இயைந்து காப்போம்.
இயற்கையைக் கெடுக்கும் பிளாஸ்டிக்குக்கு முற்றுப்புள்ளி வைப்போம்.
மஞ்சள்பை என்பதை யாரும் அவமானமாகக் கருத வேண்டிய அவசியமில்லை,
சுற்றுச்சூழலைக் காப்பவரின் அடையாளப் பைதான் இந்த மஞ்சள் பை.

மு.க.ஸ்டாலின்
மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்"

தொழிலாளர்கள் நலன், மக்கள் தொகை, வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி, மக்கள் தொகை கணக்கெடுப்பு, நகரம் மற்றும் ஊரக வேலைவாய்ப்பு



திரு. சி.வி. கணேசன் அவர்கள்
மாண்புமிகு தொழிலாளர் நலன்-திறன் மேம்பாட்டுத்துறை அமைச்சர்

தொழிலாளர் துறை

- 20 அமைப்புசாரா தொழிலாளர் நல வாரியங்களில் 16,00,499 தொழிலாளர்கள் புதியதாக பதிவு. 20 அமைப்புசாரா தொழிலாளர் நல வாரியங்களில் பதிவு பெற்ற 18,46,945 உறுப்பினர்களுக்கு ரூ.1,551 கோடி மதிப்பிலான பல்வேறு நலத்திட்ட உதவிகள்.
- 45 தொழில்களுக்கு குறைந்தபட்ச ஊதியம் மறுநிர்ணயம் செய்யப்பட்டுள்ளதன் மூலம் பல்வேறு தொழில்களில் பணிபுரியும் தொழிலாளர்கள் பயன்.
- உடலுழைப்புத் தொழிலாளர்கள் பயன்பெறும் வகையில் தமிழ்நாடு உப்பளத் தொழிலாளர்கள் நல வாரியம் மற்றும் தமிழ்நாடு இணையவழித் தற்சார்புத் (Gig Workers) தொழிலாளர்கள் நல வாரியமும் புதியதாக அமைப்பு.
- அமைப்புசாராத் தொழிலாளர் நல வாரியங்களில் பதிவு செய்துள்ள தொழிலாளர்களுக்கான ஓய்வூதியம் ரூ.1,000/- இருந்து ரூ.1,200/- ஆக உயர்வு.
- தமிழ்நாடு தொழிலாளர் நல வாரிய நலத்திட்டங்களின் மூலம் 26,649 தொழிலாளர்களுக்கு ரூ.14.99 கோடி அளவிலான பல்வேறு நலத்திட்ட உதவிகள்.
- திருவள்ளூர் மாவட்டம், பெரும்பாக்கம் கிராமத்தில் உள்ள மாவட்ட ஆட்சியர் பெருந்திட்ட வளாகத்தில் ரூ.2.40 கோடி செலவில் ஒருங்கிணைந்த தொழிலாளர் அலுவலக வளாகக் கட்டடம்.
- சமரச அலுவலர்களின் சமரச பேச்சு வார்த்தையின் மூலம் 41 நிறுவனங்களில் நடைபெற்ற வேலை நிறுத்தங்கள் விலக்கிக்கொள்ளப்பட்டு 13,825 தொழிலாளர்களின் உரிமை மற்றும் பணி பாதுகாக்கப்பட்டது.



- சுமூகமாகதீர்த்துவைக்கப்பட்ட2,930வழக்குகள் உள்ளிட்ட 7,145 தொழிற்தாவாக்கள் தீர்த்து வைக்கப்பட்டு பல்வேறு தொழிற்சாலைகள் சார்ந்த வேலை நிறுத்தங்கள் திரும்ப பெறப்பட்டுள்ளன.
- ரூ.1.71 கோடி உடனடி நிவாரணத் தொகை வழங்கப்பட்டதின்மூலம்669கொத்தடிமைத் தொழிலாளர்கள்,859குழந்தைத்தொழிலாளர்கள் மீட்கப்பட்டு,குழந்தைகள்நலக்குழுவினரிடமும், பெற்றோர்களிடமும் ஒப்படைப்பு.
- கடைகள்மற்றும்நிறுவனங்களில்அனைத்து பணியாளர்களும்அமருவதற்குஏதுவாகநிறுவன வளாகத்தில் இருக்கை வசதிகள் ஏற்படுத்தி தருதல் மற்றும் பணியாளர்களின் சுகாதாரம் மற்றும்பாதுகாப்பினைஉறுதிசெய்யும்வகையில் பாதுகாப்பான குடிநீர், கழிப்பிடம், ஓய்வு அறை மற்றும்உணவருந்தும்அறைமற்றும்முதலுதவி வசதிகள்ஆகியவற்றைஉறுதிசெய்யும்வகையில் 1947ஆம் ஆண்டைய தமிழ்நாடு கடைகள் மற்றும்நிறுவனங்கள்சட்டத்தில்திருத்தங்கள் செய்யப்பட்டுள்ளன.

தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்ககம்

- 1948ஆம் ஆண்டைய தொழிற்சாலைகள் சட்டத்தின் கீழ் 7,090 தொழிற்சாலைகள் புதியதாகப் பதிவு.
- 1996ஆம் ஆண்டைய கட்டடம் மற்றும் இதர கட்டுமானத் தொழிலாளர்கள் சட்டத்தின் கீழ் கட்டுமானப்பணிகளைமேற்கொள்ளும்5,019 புதிய நிறுவனங்கள் பதிவு.
- 76,341 தொழிற்சாலைப் பணியாளர்கள் பயனடையும் வகையில் 1,391 பாதுகாப்புப் பயிற்சி வகுப்புகள்.
- தீமற்றும்தொழிற்சாலைவிபத்துகளைத்தடுக்கும் பொருட்டு,தலைமைச்செயலாளர்தலைமையில் மாநிலஅளவிலானதீமற்றும்தொழிற்சாலைகள் பாதுகாப்புக்குழுமற்றும்மாவட்டஆட்சியர்களின் தலைமையிலான மாவட்ட அளவிலான தீ மற்றும்தொழிற்சாலைகள்பாதுகாப்புக்குழுக்கள் அமைப்பு.

வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை (வேலைவாய்ப்புப் பிரிவு)

- தன்னார்வப் பயிலும் வட்டங்களின், செலவினங்களுக்காகஅரசால்ரூ.10.08கோடி தொகை வழங்கப்பட்டு, கடந்த மூன்று ஆண்டுகளில் நடத்தப்பட்ட போட்டித் தேர்வுக்கானப் பயிற்சிகளில் பயிற்சி பெற்ற 5,138 நபர்கள் தேர்ச்சி பெற்று, அரசு மற்றும் பொதுத்துறைகளில் பணி நியமனம்.
- வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கான உதவித்தொகைதிட்டத்தின்கீழ்56,564பொதுப் பயனாளிகளுக்குரூ.86.57கோடியும்,14,420



மாற்றுத்திறனாளிபயனாளிகளுக்குரூ.36.92 இலட்சமும் உதவித்தொகை பெற்று பயன்.

- மாவட்டவேலைவாய்ப்புமற்றும்தொழில்நெறி வழிகாட்டும்மையங்களில்நடத்தப்படும்.தனியார் துறை வேலைவாய்ப்பு முகாம்கள் வாயிலாக 2,03,379 நபர்கள் பணியமர்த்தம்.
- கல்வி தொலைக்காட்சி மூலமாகப் பல்வேறு போட்டித் தேர்வுகளுக்கான இலவசப் பயிற்சி வகுப்புகள்ஒளிபரப்பப்படுகின்றன.கடந்தமூன்று ஆண்டுகளில்1,228மணிநேரப்பயிற்சிவகுப்புகள் ஒளிபரப்பு.



வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை (பயிற்சிப் பிரிவு)

- நெய்வேலி லிக்னைட் கார்ப்பரேஷன் நிறுவனத்தின்ஆதரவுடன்நெய்வேலியில்புதிய அரசினர் தொழிற்பயிற்சி நிலையம்.
- ரூ.9.6கோடிச்செலவில்சிவகங்கை,காரைக்குடி மற்றும் புள்ளம்பாடி (மகளிர்) ஆகிய மூன்று அரசினர்தொழிற்பயிற்சிநிலையங்களுக்கான விடுதிக் கட்டடங்கள்.
- 2023ஆம் ஆண்டு அரசினர் தொழிற்பயிற்சி நிலையங்களில் 94.58 சதவிகிதம் மாணவர் சேர்க்கையும், தனியார் தொழிற்பயிற்சி நிலையங்களில் 48.06 சதவிகிதம் மாணவர் சேர்க்கையும் நடைபெற்றுள்ளன.
- 2023ஆம் ஆண்டு அரசினர் தொழிற்பயிற்சி நிலையங்களில்81சதவிகிதம்மாணவர்களும், தனியார்தொழிற்பயிற்சிநிலையங்களில்62.38 சதவிகிதம்மாணவர்களும்வளாகநேர்காணல் மூலம் பணியமர்வு.
- மாவட்ட அளவில் திறன் பயிற்சி நடவடிக்கைகளை கண்காணித்திட தென்காசி,செங்கல்பட்டு,திருவாரூர்மற்றும் இராணிப்பேட்டை ஆகிய 4 மாவட்டங்களில் மாவட்டத் திறன் பயிற்சி அலுவலகங்கள்.



- மாறிவரும் தொழில்நுட்பத்திற்கு ஏற்றவாறு தனியார் முன்னணி நிறுவனங்களுடன் இணைந்து, தொழில் 4.0 தரத்திலான தொழிற்பிரிவுகள் ரூ.2,877.43 கோடி செலவில் 71 அரசினர் தொழிற்பயிற்சி நிலையங்களில் துவங்கப்பட்டு, 5,140 கூடுதல் இருக்கைகள் உருவாக்கப்பட்டு மாணவர்கள் பயிற்சி பெற்று வருகின்றனர்.

- 57 அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில், சீர் செய்ய இயலாத மற்றும் உபயோகமற்ற நிலையில் இருந்த இயந்திரங்கள், கருவிகள் மற்றும் தளவாடங்களை மாற்றி ரூ.20 கோடி செலவில் புதிய மற்றும் நவீன இயந்திரங்கள் மற்றும் தளவாடங்கள்.

- ரூ.97.55 கோடி செலவில் புதியதாக 11 இடங்களில் அரசு தொழிற்பயிற்சி நிலையங்கள் துவங்கப்பட்டு கூடுதலாக 1,104 மாணவர்கள் சேர்க்கைக்கு வழிவகை.

- மாணவர்கள் எளிதில் புரிந்து கொள்ளும் வகையில் ரூ.6.80 கோடி செலவில் தமிழில் பாடப்புத்தகங்கள் உருவாக்கப்பட்டு, அனைத்து மாணவர்களுக்கும் வழங்கப்பட்டு வருகின்றன.

மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் இயக்ககம் (தொழிலாளர் அரசு ஈட்டுறுதித் திட்டம்)

- 71,832 காப்பீட்டாளர்கள் மற்றும் அவர்களின் குடும்ப உறுப்பினர்கள் பயன்பெறும் வகையில் பல்வேறு மாவட்டங்களில் புதியதாக 19 தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகங்கள் துவங்கப்பட்டுள்ளன.

- ரூ.1.45 கோடி செலவில், அயனாவரம், மதுரை, சிவகாசி, சேலம், ஓசூர், திருச்சிராப்பள்ளி மற்றும் வேலூர் ஆகிய ஏழு இடங்களில் தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனைகளில் காப்பீட்டாளர்கள் மற்றும் அவர்களின் குடும்ப உறுப்பினர்கள் பயன்பெறும் வகையில், யோகா மற்றும் இயற்கை மருத்துவ சேவைகள்.

❖ ❖ ❖

பால்வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சி



திரு. த.மனோ தங்கராஜ் அவர்கள்
மாண்புமிகு பால்வளத்துறை அமைச்சர்

- 16.05.2021 முதல் அனைத்து வகையான ஆவின் பால் விற்பனை விலையை லிட்டர் ஒன்றுக்கு ரூ.3 குறைப்பு.
- ஆவின் பால் விற்பனை நாளொன்றுக்கு 3 இலட்சம் லிட்டர் அதிகரிப்பு
- ஆவின் பால் விற்பனை விலை லிட்டர் ஒன்றுக்கு ரூ.3 குறைப்பினால் ஆவின் பால் நுகர்வோர்களுக்கு ஆண்டு ஒன்றுக்கு ரூ.270 கோடி சேமிப்பு.
- 22.07.2022 அன்று ஆவின் நிறுவனம் 43.05 இலட்சம் லிட்டர் பாலை கொள்முதல் செய்து சாதனை.
- தமிழ்நாடு அரசின் 2022 ஆம் வருடத்திற்கான பொங்கல் பரிசுத் தொகுப்பில் ரூ.121 கோடி மதிப்புள்ள 2.16 கோடி 100 மி.லி. ஆவின் நெய் விநியோகம்.
- மில்க் கேக், மாம்பழம் & ஸ்ட்ராபெரி சுவைகளில் யோகர்ட், பாயாசம் மிக்ஸ், பால்புரத நூடுல்ஸ் மற்றும் டெய்ரி ஒயிட்னர் ஆகிய புதிய பால் பொருட்கள் 19.01.2022 தேதியில் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.
- நுகர்வோர்களின் ஐஸ்கிரீம் தேவையினைப் பூர்த்தி செய்யும் பொருட்டு மதுரையில் நாளொன்றுக்கு ஆயிரம் லிட்டர் உற்பத்தித்திறன் கொண்ட ஐஸ்கிரீம் தொழிற்சாலை தொடங்கி வைக்கப்பட்டுள்ளது.
- பத்து வகையான புதிய பால் பொருட்கள் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.
- 2022தீபாவளிப்பண்டிகையைமுன்னிட்டுஆவின்இனிப்புவகைகள்ரூ.116கோடிக்கு விற்பனை செய்து சாதனை.



- 4இலட்சம்பால்உற்பத்தியாளர்கள்பயன்பெறும் வகையில் பால் கொள்முதல் விலையை லிட்டருக்கு ரூ.3 உயர்த்தி 05.11.2022 முதல் பால் உற்பத்தியாளர்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது.
- இந்தியதேசியகூட்டுறவுபால்பண்ணைகளின் இணையம்(NCDFI) மூலம் 2021–2022ஆம் ஆண்டு ஆவின் நிறுவனத்தின் பால் மற்றும் பால் பொருட்களை மின்னணுவாயிலாக ரூ.590 கோடிக்கு பரிவர்த்தனை மேற்கொண்டதற்காகஆவின்நிறுவனத்திற்கு இந்தியஅளவில்இரண்டாமிடத்திற்கானவிருது.
- ஆவின் நிறுவனத்தில் 58 நபர்களுக்கு கருணை அடிப்படையிலான பணி நியமன ஆணைகள் வழங்கப்பட்டுள்ளது.
- ரூ.21.75 கோடிச் செலவில் 2,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட 4 மொத்த பால் குளிர்விப்பு நிலையங்களும் மற்றும் 5,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட 143 மொத்த பால் குளிர்விப்பு நிலையங்களும் நிறுவப்பட்டுள்ளன.
- ரூ.18.76 கோடி ரூபாய் செலவில் 866 தானியங்கி பால் சேகரிப்பு அலகுகளும், 350செயலாக்கதரவுபால்சேகரிப்புஅலகுகளும் மற்றும் 1,074 பால் பகுப்பாய்வுக் கருவிகள் நிறுவப்பட்டுள்ளன.
- ஈரோடு ஒன்றியத்தில் உள்ள கால்நடை தீவன தயாரிப்புத் திறனை நாள் ஒன்றுக்கு 150 மெட்ரிக் டன் என்ற அளவிலிருந்து நாள் ஒன்றுக்கு 300 மெட்ரிக் டன்னாக உயர்த்தப்பட்டுள்ளது.
- கிருஷ்ணகிரி ஒன்றியத்தில் புதியதாக நாள் ஒன்றுக்கு 12 மெட்ரிக் டன் உற்பத்தித் திறன் கொண்டதாதுஉப்புக்கலவைத்தொழிற்சாலை நிறுவப்பட்டுள்ளது.
- மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ்50பால்உற்பத்தியாளர்கூட்டுறவு சங்கங்களுக்கு சொந்தக் கட்டடங்கள்.
- ஆவின் பால் பொருட்கள் விற்பனையை அதிகரித்திடஏதுவாகபுதியதாக342பாலகங்கள் துவங்கப்பட்டுள்ளன.
- பால் உற்பத்தியாளர்களுக்கு தாமதமில்லாமல் பால் பணப் பட்டுவாடா நேரடியாக வங்கிக் கணக்கிற்கே செலுத்தப்பட்டு வருகிறது.
- மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்களின் பணியாளர்களுக்கு ரூ.53.45 இலட்சமும் மற்றும் இணையத்தின் பணியாளர்களுக்கு ரூ.24.19 இலட்சமும் உற்பத்தியுடன்இணைந்தஊக்கத்தொகையாக வழங்கப்பட்டுள்ளது.
- 1.39 இலட்சம் பால் உற்பத்தியாளர்களுக்கு ரூ.19.51 கோடி போனஸ் ஆகவும், ரூ.34.32 கோடி பங்கு ஈவுத்தொகையாகவும், ரூ.38.63 இலட்சம் ஆதரவு தள்ளுபடி வழங்கப்பட்டுள்ளது.
- நுகர்வோர்களுக்குஐஸ்கிரீம்விற்பனைசெய்யும் பொருட்டு நாளொன்றுக்கு 6,000 லிட்டர் உற்பத்தி திறன்கொண்ட புதிய ஐஸ் கிரீம் தொழிற்சாலைசேலத்தில்திறக்கப்பட்டுள்ளது.
- மாதவரம் பால் பண்ணையில் ரூ.8 கோடி மதிப்பீட்டில் மத்திய தரக்கட்டுப்பாட்டு ஆய்வகம் துவங்கப்பட்டுள்ளது.



- கள்ளக்குறிச்சி மற்றும் திருப்பத்தூர் மாவட்டங்களில் புதிய பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்கள் துவங்கப்பட்டுள்ளன.
- சேலம்மாவட்டத்தில்நாள்ஒன்றுக்குஏற்கெனவே உள்ள பால் பண்ணையின் பால் கையாளும் திறனை 7 இலட்சம் லிட்டராக விரிவாக்கம் செய்யவும் மற்றும் 30 மெட்ரிக்டன் பால் பவுடர் தயாரிக்கும் தொழிற்சாலை அமைக்கும் பணிகள்துவங்கப்பட்டுநடைபெற்றுவருகின்றன.
- தூத்துக்குடி மாவட்டத்தில் நாள் ஒன்றுக்கு 50,000லிட்டர்பால்கையாளும்திறனுடையபுதிய பால்பண்ணைஅமைக்கும்பணிகள்துவங்கப்பட்டு நடைபெற்று வருகின்றன.
- 500 ஏக்கர் பரப்பளவில் பசுந்தீவனம் உற்பத்தி செய்ய பயிற்சி மற்றும் தீவன விதைகள் பால் உற்பத்தியாளர்களுக்குஆவின்நிறுவனத்தால் வழங்கப்பட்டு500ஏக்கர்பரப்பளவில்பசுந்தீவனம் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது.
- ஆவின் நிறுவனம் சென்னை மாநகரில் அதிகபட்சமாகநாளொன்றுக்கு15.22இலட்சம் லிட்டர்விற்பனைசெய்துள்ளது.மேலும்மாவட்ட பால்கூட்டுறவுஒன்றியங்களில்அதிகபட்சமாக 16.37இலட்சம்லிட்டர்பால்விற்பனைசெய்தும் சாதனை படைத்துள்ளது. 2023–2024ஆம் ஆண்டில் நாளொன்றுக்கு அதிகபட்சமாக 31.37 இலட்சம் லிட்டர் பால் விற்பனை செய்யப்பட்டுள்ளது.
- மூலப்பொருள் மற்றும் உற்பத்தி செய்யப்பட்டகால்நடைதீவனத்தினைசேமித்து வைப்பதற்காக ரூ.2.14 கோடி மதிப்பீட்டில் மாவட்ட கூட்டுறவு ஒன்றியத்தின் செலவில் 1,500மெட்ரிக்டன்கூடுதலாகசேமிப்புக்கிடங்கு கட்டடம்,திருநெல்வேலிமாவட்டஒன்றியத்தில் மகளிர்பால்உற்பத்தியாளர்களைஊக்குவிக்கும் வகையில் மகளிருக்கு என தனியே நூலக வசதியுடன்,விடுதிமற்றும்ஆய்வகவசதியுடன் பயிற்சி நிலையம் ரூ.1.21 கோடி மதிப்பீட்டில், தருமபுரி மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்தில் NABARD நிதியுதவியுடன் ரூ.2.72 கோடி மதிப்பீட்டில் அலுவலகம் மற்றும் பால் கொள்முதல் பிரிவு கட்டடம்,ரூ.2.93கோடியில்திருவண்ணாமலை பால் பவுடர் ஆலையில் இணைய நிதி மூலம் 1,500மெட்ரிக்டன்பால்பவுடர்சேமிப்புகிடங்கு மற்றும் திருப்பூர் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்தில் NABARD நிதியுதவியுடன் ரூ.3 கோடி மதிப்பீட்டில் அலுவலகக்கட்டடம்திறந்துவைக்கப்பட்டுள்ளது.
- 2021ஆம் ஆண்டு பால் விற்பனையை ஒப்பிடும்போதுதற்போது2024ஆம்ஆண்டுசுமார் 23 சதவிகிதம் அதிகரித்துள்ளது.

❖ வாடிக்கையாளர்கள் ஆவின் பாலை ஒரே மாதிரியாக வாங்கி பயன்படுத்தும் வகையில் புதிய வடிவமைப்பிலான பால் பாக்கெட்டுகள் இணையம் மற்றும் ஒன்றியங்களில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

❖ பசுந்தீவன உற்பத்திக்குத் தேவையான தரமான தீவன விதைகள் ஆவின் நிறுவனம் மூலம் குறைந்த விலையில் பால் உற்பத்தியாளர்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது.

❖ பால் உற்பத்தியைப் பெருக்கும் பொருட்டு பால் உற்பத்தியாளர்கள் புதிய கறவைகள் வாங்குவதற்கு கறவை மாட்டுக் கடன் வசதி மற்றும் மூலதனக் கடன் வசதிகள் வங்கிகள் மூலம்பால்உற்பத்தியாளர்களுக்குவழங்கப்பட்டு வருகிறது.

❖ களவெளி செயல்திறன் பதிவுத் திட்டத்தின் மூலம் 120 சிறந்த மரபியல் திறன் உள்ள பொலிகாளை கன்றுகளை உற்பத்தி செய்யும் நோக்கோடு 62 பொலிகாளை கன்றுகள் தமிழ்நாட்டில் உள்ள பொலிகாளை பண்ணைகளுக்குஅனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

❖ ஊட்டியில்உள்ளபொலிகாளைபண்ணைக்கு ஒன்றிய அரசின் தரநிர்ணய முகமை A Grade இவ்வாண்டு (2023–2024) வழங்கியுள்ளது.

❖ பால்உற்பத்தியாளர்களின்இல்லத்திற்கேசென்று சங்கஅளவில்பணியாற்றும்கிராமநலஊழியர்கள் வாயிலாக 12.85 இலட்சம் செயற்கை முறை கருவூட்டல்கள் செய்யப்பட்டுள்ளது.

❖ செயற்கை முறை கருவூட்டல் வசதிகளை அதிகரிக்கும் வகையில் 313 நபர்களுக்கு செயற்கை முறை கருவூட்டல் பயிற்சிகள் மாவட்ட ஒன்றிய பயிற்சி நிலையங்கள் வாயிலாகவும், திறன் மேம்பாட்டு மையம், மாதவரம் மூலமாகவும் வழங்கப்பட்டுள்ளது.

❖ செயற்கைமுறைகருவூட்டல்நிலையங்களுக்கு தடையில்லாமல் திரவ நைட்ரஜன் வழங்கும் பொருட்டு 3,000 லிட்டர் கொள்ளளவு உள்ள 5 திரவ நைட்ரஜன் கொள்கலன்கள் நாமக்கல்,திருவண்ணாமலை,திருப்பூர் ஆகிய ஒன்றியங்களிலும், உறைவிந்து உற்பத்தி நிலையம், ஊட்டி மற்றும் எருமையின பொலிகாளை பண்ணை ஈரோட்டிலும் நிறுவப்பட்டுள்ளது.



❖ தேசிய கால்நடை இயக்கத்தின் (NLM) கீழ், தமிழ்நாடு கால்நடை அபிவிருத்தி முகமை மூலம்1.17இலட்சம்கறவைகளுக்கு50சதவிகித மானியத்துடன்கூடியபிரீமியம்சார்ந்தகால்நடை காப்பீட்டு வசதிகள் வழங்கப்பட்டது.

❖ கறவைகளின் சினை பிடிக்கும் திறனை அதிகரிக்க5,000கறவைகளுக்குசினைதருண ஒருங்கிணைத்தல்திட்டம்செயல்படுத்தப்பட்டது.

❖ இயற்கைஉரமேலாண்மைக்கானமுன்னோடி திட்டத்தின்கீழ்நீலகிரிஒன்றியத்தில்உள்ள120 மகளிர்பால்உற்பத்தியாளர்களுக்குசாணஎரிவாயு கலன்கள் வழங்கப்பட்டது.

❖ இராஷ்டிரிய கோகுல் மிஷன் திட்டத்தின்கீழ், பால் உற்பத்தியாளர்களுக்கு கறவைகளின் ஆரோக்கியம் மற்றும் இனப்பெருக்க மேலாண்மைகுறித்தவிழிப்புணர்வுஏற்படுத்தும் வகையில், 98 மலட்டுத் தன்மையை நீக்கும் முகாம்கள், 181 புத்தறிவு பயிற்சிகள் மற்றும் 47 கன்று பேரணிகள் நடத்தப்பட்டுள்ளது.

❖ மகளிர் பால் உற்பத்தியாளர்கள் மற்றும் மகளிர் சங்கப் பணியாளர்களின் பயிற்சித் தேவையை நிவர்த்தி செய்யும் பொருட்டு ஒன்றிய அரசின் இராஷ்டிரிய கோகுல் மிஷன் திட்டத்தின்கீழ், சேலம் மற்றும் திருநெல்வேலி பயிற்சி நிலையங்களில்பிரத்தியேகமானமகளிர்தங்கும் விடுதிகள் அமைக்கப்பட்டுள்ளது.

❖ ❖ ❖

தொழில்கள், தொழில் முதலீட்டு, ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை



முனைவர் டி.ஆர்.பி.ராஜா அவர்கள்

மாண்புமிகு தொழில் துறை அமைச்சர்

தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை

- இந்தியாவின் தொழில்மயமான மாநிலங்களில் தமிழ்நாடு முன்னணி மாநிலமாகவும்,முதலீட்டாளர்களின்தேர்வுக்குவிருப்பமுள்ளமாநிலமாகவும்,அதிக எண்ணிக்கையிலானதொழிற்சாலைகள்மற்றும்திறன்மிகுந்தபணியாளர்களைக் கொண்ட மாநிலமாகவும் விளங்குகிறது.
- 241திட்டங்களுக்கானபுரிந்துணர்வுஒப்பந்தங்கள்ரூ.2,97,196கோடிமுதலீடுகள்மற்றும் 4,15,282 நபர்களுக்கு வேலைவாய்ப்பு.
- உலக முதலீட்டாளர்கள் மாநாட்டில், முன்னெப்போதும் இல்லாத அளவில் ரூ.6,64,180கோடிஅளவிலானமுதலீடுகள்,14,54,712நபர்களுக்குநேரடிவேலைவாய்ப்பு உள்ளிட்டமொத்தம்26,90,657நபர்களுக்குவேலைவாய்ப்புகள்ஏற்படுத்தும்வகையில் 631 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்பட்டன.
- தமிழ்நாடுநிதிநுட்பக்கொள்கை2021,தமிழ்நாடுஏற்றுமதிமேம்பாட்டுக்கொள்கை 2021,தமிழ்நாடுஉயிர்அறிவியல்மேம்பாட்டுக்கொள்கை2022,தமிழ்நாடுஆராய்ச்சி மற்றும்மேம்பாட்டுக்கொள்கை2022,தமிழ்நாடுகாலணிமற்றும்தோல்பொருட்கள் கொள்கை2022,தமிழ்நாடுவிண்வெளி&பாதுகாப்புத்தொழில்கொள்கை2022, தமிழ்நாடுஎத்தனால்கலவைக்கொள்கை2023,தமிழ்நாடுசரக்குபோக்குவரத்துக் கொள்கைமற்றும்ஒருங்கிணைந்தசரக்குபோக்குவரத்துத்திட்டம்2023,தமிழ்நாடு நகரஎரிவாயுவிநியோககொள்கை2023மற்றும்தொழில்நுட்பஜவுளிகள்மற்றும் ஆடைகள்உற்பத்தியைஊக்குவிக்கும்சிறப்புதிட்டம்,தமிழ்நாடுகுறைக்கடத்திமற்றும் மேம்பட்டமின்னணுவியல்கொள்கை2024,தமிழ்நாடுபொது–தனியார்கூட்டாண்மைக் கொள்கை2024மற்றும்'தமிழ்நாடுவிஷன்$1ட்ரில்லியன்'ஆகியவைமாண்புமிகு முதலமைச்சர்அவர்களால்வெளியிடப்பட்டதுடன்,ஒற்றைச்சாளரஇணையம்2.0, ஒற்றைச் சாளர கைப்பேசி செயலி துவக்கம்.



- மே 2023 – மாநில தலைமைத்துவ விருது – உற்பத்தி–இந்தியாளரிசக்திசேமிப்புகூட்டமைப்பு (IESA) தொழில் சிறப்பு விருதுகளில் தமிழ்நாடு தொடர்ந்து இரண்டாவது ஆண்டாக மாநில தலைமைத்துவ விருதை வென்றுள்ளது.
- 8ஆவதுஉலகமுதலீட்டுமன்றத்தில்ஆற்றல் மாற்ற முதலீடுகளை அதிகரிப்பதில் சிறந்து விளங்குவதற்காக,ஐக்கியநாடுகள் வர்த்தகம் மற்றும் மேம்பாட்டுக்கான மாநாடு (UNCTAD) அமைப்பிடமிருந்து மதிப்புமிக்க ஐக்கிய நாடுகளின்ஊக்குவிப்புவிருது2023–ஐவழிகாட்டி நிறுவனம் பெற்றுள்ளது.
- வருடாந்திர முதலீட்டாளர்கள் சந்திப்பு 2022 மற்றும் 2023–இன்போது ஆசிய–ஒசியானா மண்டலத்திற்கான "சிறந்த முதலீட்டு நிறுவனத்திற்கான" விருது கடந்த இரண்டு ஆண்டுகளாக தமிழ்நாட்டின் வழிகாட்டி நிறுவனத்திற்கு வழங்கப்பட்டது.
- தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனம் (சிப்காட்) 561 தொழில் நிறுவனங்களுக்கு 4,647.44ஏக்கர்நிலம்,ஒதுக்கீடுசெய்துள்ளதோடு, ரூ.64,252.42 கோடி முதலீட்டினை ஈர்த்து 1,87,790நபர்களுக்குநேரடிமற்றும்மறைமுக வேலைவாய்ப்பினைஏற்படுத்தும்.இக்காலத்தில் 9,512ஏக்கர்நிலம்கையகப்படுத்தப்பட்டுசிப்காட் வசம் ஒப்படைப்பு.
- 45,000 ஏக்கர் அளவிலான நிலவங்கியினை, உருவாக்குவதற்காக,சிப்காட்நிறுவனம்சுமார் 40,839.33 ஏக்கர் நிலம் தெரிவு செய்துள்ளது. இதில்,24,929 ஏக்கர் நிலம் அரசின் நிருவாக அனுமதி பெற்றுள்ளது.
- ஓரகடத்தில்மருத்துவஉபகரணதொழிற்பூங்கா ஒன்றுசிப்காட்நிறுவனம்உருவாக்கிவருகிறது. அண்ணாபல்கலைக்கழகத்தைதொழில்நுட்பப் பங்குதாரராகநியமித்துஅதற்கானபுரிந்துணர்வு ஒப்பந்தம் சிப்காட் நிறுவனம் மற்றும் அண்ணா பல்கலைக் கழகத்திற்கிடையே கையெழுத்திடப்பட்டது. சிப்காட் நிறுவனம் 20 தொழில்நிறுவனங்களுக்கு39 ஏக்கர்நிலம், ஒதுக்கீடு செய்துள்ளதோடு, ரூ.167.02 கோடி முதலீட்டினை ஈர்த்து 1,157 நபர்களுக்கு வேலைவாய்ப்புகள்.
- சிப்காட்நிறுவனம்எறையூரில்தொழிற்பூங்கா ஒன்றினை உருவாக்கி வருகிறது. இப்பூங்காவிற்காக, தமிழ்நாடு வழிகாட்டி நிறுவனம், ஃபீனிக்ஸ் கோத்தாரி காலணி பூங்கா மற்றும் அதன் அங்கீகார நிறுவனங்களுடன்புரிந்துணர்வுஒப்பந்தங்கள் கையொப்பமிடப்பட்டன.
- ரூ.500 கோடி மதிப்பீட்டில் தொழில் பூங்காக்கள், தொழில் நிறுவனங்கள், புதிய கண்டுபிடிப்புகளுக்கானபுத்தாக்கமையங்கள், ஆராய்ச்சிமற்றும்மேம்பாட்டுநடவடிக்கைக்காக தொழில்சுற்றுச்சூழல்அமைப்புநிதிஉருவாக்கம்.
- பெருந்தொழில் நிறுவனங்களுக்கு அரசின் தொகுப்புஊக்கநிதியுதவிவழங்கும்தமிழ்நாடு அரசின் முகவாண்மை அமைப்பாகவும் செயல்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ்,



சிப்காட் நிறுவனம் ரூ.3,993.95 கோடியை 51பயனாளிநிறுவனங்களுக்குவழங்கியுள்ளது.

- சிப்காட்நிறுவனம்தூத்துக்குடியில்பன்னாட்டு அறைகலன் பூங்கா (International Furniture Park) ஒன்றினை அமைத்து, ரூ.2,800 கோடிக்கும் மேலான முதலீடுகளுக்கான 8 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையொப்பமிடப்பட்டு, சிப்காட் நிறுவனம்3 தொழில்நிறுவனங்களுக்கு126 ஏக்கர்நிலம்,ஒதுக்கீடுசெய்து, ரூ.1,861.88 கோடி முதலீட்டினை ஈர்த்து 4,369 நபர்களுக்கு வேலைவாய்ப்புகள்.
- ரூ.33.46கோடிமதிப்பீட்டில்திருப்பெரும்புதூர் மற்றும் ஓசூர் சிப்காட் தொழிற்பூங்காக்களில் புத்தாக்க மையங்கள்.
- மணப்பாறை, தேனி மற்றும் திண்டிவனம் தொழிற்பூங்காக்களில் தலா 150 ஏக்கர் பரப்பளவில்3உணவுப்பூங்காக்களைசிப்காட் நிறுவனம் நிறுவி வருகிறது. மணப்பாறை உணவுப்பூங்காவில்உட்கட்டமைப்புவசதிகள் முடிவடைந்துள்ளன. மேலும் மணப்பாறை உணவுப் பூங்காவில் ஒரு நிறுவனத்திற்கும், பொது பொறியியல் பூங்காவில் 3 நிறுவனங்களுக்கும்நிலஒதுக்கீட்டுஆணை வழங்கப்பட்டு, சிப்காட் நிறுவனம் மூன்று உணவுப் பூங்காக்களில் 102.5 ஏக்கர் நிலம், ஒதுக்கீடு செய்துள்ளதோடு,ரூ.223.48 கோடி முதலீட்டினை ஈர்த்து 1,385 நபர்களுக்கு வேலைவாய்ப்புகள்.
- தொழிற்சாலைகளின் தண்ணீர் தேவையை பூர்த்தி செய்யும் வகையில் முறையே தூத்துக்குடியில்60MLDகொள்ளவுகொண்ட கடல் நீர் சுத்திகரிப்பு மையம் ஒன்றினையும், ஓசூரில் 20 MLD கொள்ளவு கொண்ட TTRO





கழிவுநீர் சுத்திகரிப்பு ஆலையை உருவாக்க சிப்காட் நிறுவனம் நடவடிக்கை.

- தமிழ்நாடு தொழிலாளர் குடியிருப்பு நிறுவனம், பணிபுரியும் மகளிருக்காக, சிப்காட் சிறுசேரி தொழிற்பூங்காவில் 807 படுக்கைவசதிகளுடன் கூடிய ஒரு தங்கும் விடுதியை உருவாக்கி வருகிறது.
- மேலும், ரூ.157.98 கோடி மதிப்பீட்டில் சிப்காட் நிறுவனம் மற்றும் அதன் சிறப்பு நோக்க முகமை பெருந்துறை (மகளிர்), தூத்துக்குடி (மகளிர்), சூளகிரி (ஆடவர் மற்றும் மகளிர்), இருங்காட்டுக்கோட்டை (ஆடவர்), செய்யாறு (ஆடவர்), கங்கைகொண்டான் ஆகிய தொழிற்பூங்காக்களில் 4,081 படுக்கை எண்ணிக்கையில் பிரத்யேக தங்குமிடவசதிகளை ஏற்படுத்திவருகின்றன.
- இதற்கு முன்பாக, சிப்காட் நிறுவனம் மூன்று தங்கும் விடுதிகள் – (i) இருங்காட்டுக் கோட்டையில் மகளிர் தங்கும் விடுதி (330 நபர்கள்) (ii) திருப்பெரும்புதூரில் ஆடவர் தங்கும் விடுதி (400 நபர்கள்) (iii) திருப்பெரும்புதூரில் மகளிர் தங்கும் விடுதி (600 நபர்கள்) உருவாக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளன.
- ரூ.706.50 கோடி மதிப்பீட்டில் வல்லம்–வடகால் சிப்காட் தொழிற்பூங்காவில் திருவாளர்கள் ஃபாக்ஸ்கான் மற்றும் பிற நிறுவனங்களில் பணிபுரியும் 18,720 தொழிலாளர்கள் தங்குவதற்காக ஒரு ஒருங்கிணைந்த பணியாளர் விடுதி.
- சிப்காட் நிறுவனம், பனப்பாக்கம் தொழிற்பூங்காவில் 348 ஏக்கர் பரப்பளவில், (201 ஏக்கர் சிறப்பு பொருளாதார மண்டலம் உட்பட) மாபெரும் கால்வாய் மற்றும் துணைப் பொருட்கள் தொகுப்பு ஒன்றினை அமைத்து வருகின்றது.
- விருதுநகர் மாவட்டத்தில் ஜவுளி பூங்கா அமைத்திட சிப்காட் நிறுவனம் 1,052 ஏக்கர் நிலத்தினை இப்பூங்காவிற்காக ஒதுக்கியுள்ளது. இப்பூங்காவானது ஒன்றிய மற்றும் மாநில அரசுகளின் கூட்டுத்திட்டமாக, ரூ.2,000 கோடி மதிப்பீட்டில் ஒன்றிய அரசின் ரூ.500 கோடி மானியத்துடன் ஏற்படுத்தப்படும். இப்பூங்காவின் மூலம் சுமார் 2 இலட்சம் நபர்களுக்கு வேலைவாய்ப்புகள் உருவாக்கப்படும். இப்பூங்கா தென் மாவட்டங்களின் பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்தும்.
- கிருஷ்ணகிரி மாவட்டம், சூளகிரி சிப்காட் தொழிற்பூங்காவில் 210 ஏக்கர் பரப்பளவில் ரூ.300 கோடி திட்ட மதிப்பீட்டில் வருங்கால நகர்திறன் பூங்கா. இதுவரை, 45.50 ஏக்கர் நிலம் 7 தொழில் நிறுவனங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
- ஒன்றிய அரசின் மின்னணு மற்றும் தகவல் தொழில் நுட்ப அமைச்சகத்தின் (MEITY), மின்னணு தயாரிப்பு தொகுப்புகள் (EMC) 2.0 திட்டத்தின் கீழ், 474 ஏக்கர் நிலத்தில் ரூ.328.35 கோடி மானியத்துடன் மாநல்லூரிலும், 379 ஏக்கர் நிலத்தில் ரூ.220.78 கோடி மானியத்துடன் பிள்ளைப்பாக்கத்திலும் இம்மின்னணு தயாரிப்பு தொகுப்புகள் நிறுவப்படும்.
- தேசிய நெடுஞ்சாலை சரக்கு போக்குவரத்து மேலாண்மை நிறுவனம், சென்னை துறைமுகக் கழகம் மற்றும் தமிழ்நாடு

தொழில் வளர்ச்சி நிறுவனம் இடையே ரூ.1,424 கோடி முதலீட்டிற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம். மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களால், 26.05.2022 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் முன்னிலையில் அடிக்கல் நாட்டப்பட்டது.

- தமிழ்நாடு பாதுகாப்பு தொழில் துறை பெருவழித்தடத்தில் (TNDIC) பாதுகாப்புத்துறை சார்ந்த பொது நிறுவனங்கள் மற்றும் தனியார் தொழில் நிறுவனங்கள் மொத்தம் ரூ.24,878 கோடி வரை முதலீடு செய்ய உறுதி செய்துள்ளன. இதில் சுமார் ரூ.4,344 கோடி முதலீடுகள் ஈர்க்கப்பட்டுள்ளது. 5 ஆண்டுகளில் இந்தப் பாதுகாப்பு பெருவழித்தடம் கணிசமான முதலீடுகளை ஈர்ப்பதோடு, 10,000 நபர்களுக்கு நேரடியாகவும், 25,000 நபர்களுக்கு மறைமுகமாகவும் வேலைவாய்ப்பு.
- வான்வெளி மற்றும் பாதுகாப்பு தொழில் கொள்கையின் மூலம் ரூ.75,000 கோடி முதலீடு ஈர்க்கப்படுவதுடன் 1,00,000 நபர்களுக்கு நேரடி மற்றும் மறைமுக வேலைவாய்ப்பினை அடுத்த 10 ஆண்டுகளில் உருவாக்க முடியும். வளர்ந்துவரும் வான்வெளி மற்றும் பாதுகாப்புத் தொழில் துறையில், புத்தொழிலின் மையமாக தமிழ்நாட்டை உருவாக்குவதே இந்தக் கொள்கையின் முக்கிய நோக்கமாகும்.
- தமிழ்நாடு அரசு, மேம்பட்ட உற்பத்தியில் சிறந்து விளங்கும் திறன்மிகு மையங்களை (CoE) நிறுவியுள்ளது. டான்கேம் (Tamil Nadu Center of Excellence for Advanced Manufacturing), டான்சேம் (Tamil Nadu Smart and Advanced Manufacturing Centre), டாம்கோ (Tamil Nadu Advance Manufacturing Centre of Excellence) ஆகிய மூன்று திறன்மிகு மையங்களை Dassault Systemes, Siemens and GE Aviation ஆகிய தொழில் நிறுவனங்களுடன் இணைந்து நிறுவியுள்ளது. இந்த திறன்மிகு மையங்கள் மேம்பட்ட அதிநவீன உற்பத்தித் தொழில்நுட்பங்களான, சேர்க்கை உற்பத்தி, நான்காம் தலைமுறை தொழில் வளர்ச்சி (4.0), 3D வடிவமைப்பு, அச்சிடுதல், மெய்நிகர் மற்றும் ரோபாட்டிக்ஸ் போன்ற வசதிகளை தொழில்துறையினருக்கு (MSMEs) வழங்குகிறது.
- சென்னை மாவட்டம், ஆலந்தூர் வட்டம், நந்தம்பாக்கம் கிராமத்தில் 110 ஏக்கர்



நிலப்பரப்பில் "நிதிநுட்பநகரம்" ஒன்றை சுமார் ரூ.200 கோடி மதிப்பீட்டில் அமைப்பதற்கு டிட்கோ நிறுவனம் நடவடிக்கைகள் மேற்கொள்வதால் அதன் தொடர்ச்சியாக, இந்நிதிநுட்ப நகரம் திட்டத்தின் முதற்கட்டமாக அடிப்படை உட்கட்டமைப்பு பணிகளை 56 ஏக்கர் நிலப்பரப்பில், ரூ.82.87 கோடி மதிப்பீட்டில் (தொகுப்பு–I) தொடங்க மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அடிக்கல் நாட்டினார்கள். இந்நிதிநுட்ப நகரம், உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நிதி நிறுவனங்கள் மற்றும் நிதிநுட்ப நிறுவனங்கள் தங்கள் அலுவலகப் பிரிவுகளை அமைப்பதற்கு தேவையான அனைத்து உட்கட்டமைப்பு வசதிகளுடன் கூடிய மேம்படுத்தப்பட்ட நிலங்களை வழங்க வழிவகுக்கும்.

- நிதிநுட்ப நகரத் திட்டத்தின் ஒரு பகுதியாக, 5.6 இலட்சம் சதுர அடி கட்டடப் பரப்பளவில் ஒரு உயரமான கட்டடமாக அமைக்க சுமார் ரூ.234 கோடி மதிப்பீட்டில் "நிதிநுட்ப கோபுரம்" (Fintech Tower) என்ற அடுக்குமாடிக் கட்டடம். ரூ.154.55 கோடி மதிப்பீட்டில் (தொகுப்பு–I) இந்நிதிநுட்ப கோபுரம் திட்டத்தின் கட்டுமானப் பணிகள் தொடங்க மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அடிக்கல் நாட்டினார்கள்.
- தமிழ்நாட்டில் தகவல் தொழில்நுட்ப சூழலை விரிவுபடுத்தும் நோக்கத்துடன், விழுப்புரம், திருப்பூர், வேலூர், தஞ்சாவூர், தூத்துக்குடி, சேலம் மற்றும் காரைக்குடி ஆகிய இடங்களில் மினி டைடல் பூங்காக்களையும், மதுரை மற்றும் திருச்சிராப்பள்ளியில் டைடல்



பூங்காக்களையும், டைடல் பூங்கா நிறுவனம் நிறுவி வருகிறது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் விழுப்புரம் மினி டைடல் பூங்காவினை 17.02.2024 அன்று தொடங்கி வைத்தார்கள்.

❖ படித்த இளைஞர்கள், முதல் தலைமுறை தொழில் முனைவோராக உருவெடுக்க உதவுவதை குறிக்கோளாகக் கொண்ட மாநில அரசின் புதிய தொழில் முனைவோர் மற்றும் தொழில் நிறுவன மேம்பாட்டு (NEEDS) திட்டத்தை தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் நடைமுறைப்படுத்தியதன் மூலம் இத்திட்டத்தின்கீழ், 312 பயனீட்டாளர்களுக்கு, ரூ.266.04 கோடி அளவிற்கு கடன் அனுமதி.

❖ தமிழ்நாடு காகித நிறுவனம் மரக்கூழ் தயாரிக்க ஆலை விரிவாக்கத்திட்டம் அலகு–II (Unit–II) நிறுவி வருகிறது. இயந்திரங்கள் நிறுவும் பணிகள் நிறைவு பெற்று, மரக்கூழ் தயாரிக்கும் உற்பத்திக்கான பணிகள் துவக்கம்.



❖ தமிழ்நாடு சிமெண்ட்ஸ் நிறுவனம் (டான்செம்) ஆண்டு ஒன்றுக்கு 10 இலட்சம் மெ.டன் உற்பத்தித் திறன் கொண்ட புதிய நவீன சிமெண்ட் ஆலை ஒன்றை அரியலூரில் நிறுவியுள்ளது. அதன்மூலம் டான்செம் நிறுவனத்தின் மொத்த உற்பத்தித் திறன் ஆண்டு ஒன்றுக்கு 17 இலட்சம் மெ.டன்னாக உயர்ந்துள்ளது. புதிய ஆலை சீரான முறையில் இயக்கப்பட்டு 28.69 இலட்சம் மெ.டன் கிளிங்கர் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது.

❖ ஆலங்குளம் சிமெண்ட் ஆலை நிறுவிய முதல் ஆண்டிலேயே, ரூ.37.47 கோடி நிகர இலாபம் ஈட்டியுள்ளது.

❖ டான்செம் தனது புதிய ஆலையில் உற்பத்தி செய்யப்படும் சிமெண்ட்டை தனியார் சிமெண்ட் ஆலைகளின் சிமெண்ட் விலையை விட குறைவான விலையில் விற்பனை செய்வதற்காக "வலிமை" என்ற புதிய வகையினை அறிமுகப்படுத்தியுள்ளது. 22,18,357 மெ.டன் வலிமை சிமெண்ட் விற்பனை.

❖ செங்கல்பட்டு மாவட்டம், திருப்போரூர் பகுதியில் முதல் கட்டமாக 500 ஏக்கர் பரப்பளவில் இயந்திரத்தின் மூலமாக உப்பு உற்பத்தி மேற்கொள்ளத்தக்க வகையில் உப்பு தொழிற்சாலை.

❖ தமிழ்நாடு உப்பு நிறுவனம் அயோடின் கலந்த கல் உப்பு மற்றும் சுத்திகரிக்கப்பட்ட அயோடின் கலந்த தூள் உப்பு ஆகியவற்றை "நெய்தல் உப்பு" என்ற வணிகப் பெயரில் வெளிச்சந்தையில் அறிமுகம்.

❖ மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் உப்பளத் தொழிலாளர் குடும்பங்களுக்கு மழைக்கால நிவாரணமாக ரூ.5,000/– வழங்கும் திட்டத்தினை துவக்கி வைத்து, உப்பளத் தொழிலாளர் குடும்பங்களுக்கு மழைக்கால நிவாரணமாக 21,282 உப்பளத் தொழிலாளர் குடும்பங்களுக்கு ரூ.10.64 கோடி வழங்கப்பட்டுள்ளது.

❖ ❖ ❖

வனத்துறை



டாக்டர் **மா.மதிவேந்தன்** அவர்கள்
மாண்புமிகு வனத்துறை அமைச்சர்

வனத்துறை

வன விலங்கினப் பாதுகாப்பு

- தமிழ்நாட்டின் 5ஆவது யானைகள் காப்பகமாக, அகஸ்தியா மலை யானைகள் காப்பகத்தை 2022ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதத்தில் அரசு அறிவிக்கை செய்துள்ளது. 20 ஆண்டுகள் இடைவெளிக்குப்பின் இவ்வறிவிக்கை செய்யப்பட்டுள்ளது.
- கோழிகமுதி மற்றும் தெப்பக்காடு ஆகிய இரண்டு யானை முகாம்கள் ரூ.13 கோடி செலவில் மேம்படுத்தப்பட்டு வருகின்றன.
- நாட்டிலேயே அதிக ஆசிய யானைகள் வசிக்கும் மாநிலமாக தமிழ்நாடு இருக்கிறது. இத்தகைய விலைமதிப்பற்ற யானைகளின் உயிரினை மின் கசிவின் மூலம் இழக்காவண்ணம் பாதுகாக்க, 91 மாவூத் மற்றும் காவடியர்களுக்கு கலாச்சார பண்பாட்டு முறையில் வீடுகள் ரூ.9.1 கோடி செலவில் கட்டப்பட்டு வருகின்றன.
- சட்டத்திற்குப் புறம்பான மின் கம்பி / சூரிய ஒளி வேலிகளை முறைப்படுத்த 2022ஆம் ஆண்டு தமிழ்நாடு மின்வேலி விதிகளை அறிவிக்கை செய்துள்ளது.
- யானைகள் இறப்பு தணிக்கை முறை அமைக்கப்பட்டு, ஒவ்வொரு யானை இறப்பு குறித்து ஒளிவுமறைவின்றி துல்லியமாக தணிக்கை செய்ய வழிவகை செய்யப்பட்டு, இணையதளத்தின் மூலம் இத்தணிக்கை குறிப்புகள் தெரிவிக்கப்படுகின்றன.
- 2022இல், எடுக்கப்பட்ட யானைகள் கணக்கெடுப்பின் மூலம், 2017இல், 2,761 எண்ணிக்கையில் இருந்த யானைகள், 2022இல் 2,961 ஆக உயர்ந்துள்ளது.
- செயற்கை அறிவுத்திறன் கொண்ட தானியங்கி அறிவிப்பு முறை செயல்படுத்தப்பட்டு, அதன் மூலம், இரயிலில் நேரிடையாக மோதி விபத்துக்குள்ளாகும் யானைகள் இறப்பினைத் தடுப்பதற்கு வழிவகை செய்யப்பட்டுள்ளது. மதுக்கரையில் ரூ7.24 கோடி செலவில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.



தமிழ்நாட்டின் பாதுகாப்புத் திட்டங்கள்

கழுவேலி பறவைகள் சரணாலயம்

❖ விழுப்புரம்மாவட்டம்,மரக்காணம்மற்றும்வானூர் வட்டத்தில்,5151.6ஹெக்டேர்பரப்பில்கழுவேலி பறவைகள் சரணாலயம் அமைக்கப்பட்டு, தமிழ்நாட்டின் 16ஆவது பறவைகள் சரணாலயமாகஅறிவிக்கைசெய்யப்பட்டுள்ளது.

நஞ்சராயன் பறவைகள் சரணாலயம்

❖ திருப்பூர் மாவட்டத்தில் உள்ள நஞ்சராயன் குளம் பகுதியில் 125.86 ஹெக்டேர் பரப்பில் நஞ்சராயன் பறவைகள் சரணாலயம் அமைக்கப்பட்டு தமிழ்நாட்டின் 17ஆவது சரணாலயமாகஅறிவிக்கைசெய்யப்பட்டுள்ளது.

கடவூர் தேவாங்கு சரணாலயம்

❖ இந்தியாவின்முதல்தேவாங்குசரணாலயமாக, கடவூர்தேவாங்குசரணாலயத்தைஅறிவித்து 11,806 ஹெக்டேர் பரப்பளவில் திண்டுக்கல் மற்றும் கரூர் ஆகிய மாவட்டங்களில், அமைந்துள்ளது.

ஆலிவ் ரிட்லீஸ் ஆமைகள் பாதுகாப்பு

❖ சென்னையில் ஆமைகள் பாதுகாப்பு மற்றும் புனர்வாழ்வு மையம் ஒன்று ரூ.6.30 கோடி செலவில் அமைக்கப்பட்டு வருகிறது.

தென் காவிரி வனவிலங்கு சரணாலயம்

❖ கிருஷ்ணகிரிமற்றும்தர்மபுரிமாவட்டங்களை உள்ளடக்கி 68,640 ஹெக்டேர் பரப்பளவில், ஒரு புதிய தென் காவிரி வனவிலங்கு சரணாலயத்தை அறிவிக்கை செய்துள்ளது. 35வகைபாலூட்டிகள்/238வகைபறவைகள்/ மென்ஓடு ஆமைகள்/மென்ரோல்ஓட்டர்ஸ்/ சதுப்புமுதலைகள்/நான்குகொம்புமான்கள் ஆகியவற்றின் புகலிடமாக இருக்கிறது.

ராம்சார் தளங்கள் அறிவித்தல்

❖ பாயின்ட் காலிமியர் பறவைகள் சரணாலயம், சித்திரங்குடி பறவைகள் சரணாலயம், வேம்பனூர் நீர்நிலைப்பகுதி, சுசீந்திரம் – தேரூர் நீர்நிலைப்பகுதி, வடுவூர் பறவைகள் சரணாலயம்,உதயமார்த்தாண்டபுரம்பறவைகள் சரணாலயம், வெள்ளோடு பறவைகள் சரணாலயம்,பள்ளிக்கரணைசதுப்புநிலப்பகுதி, மன்னார் வளைகுடா கடல்சார் உயிர்க்கோள் காப்பகம், காஞ்சிரங்குளம் பறவைகள் சரணாலயம், பிச்சாவரம் அலையாத்திக் காடுகள், வேடந்தாங்கல் பறவைகள் சரணாலயம்,கரிக்கிலிபறவைகள்சரணாலயம், கூந்தன்குளம் பறவைகள் சரணாலயம், கரைவேட்டி பறவைகள் சரணாலயம் மற்றும் லாங்க்வுட்ஷோலாஆகிய16ராம்சார்தளங்களைக் கொண்டுள்ளது.

கடற்பசு பாதுகாப்புக் காப்பகம்

❖ தமிழ்நாடுஅரசுதஞ்சாவூர்மற்றும்புதுக்கோட்டை மாவட்டங்களின் கடலோரப் பகுதிகளை உள்ளடக்கியபாக்–விரிகுடாவில்448சதுரகிலோ மீட்டர்பரப்பளவில்இந்தியாவின்முதல்கடற்பசு பாதுகாப்புக் காப்பகத்தை அறிவித்துள்ளது.

❖ இந்தியாவில்தற்சமயம்சுமார்240கடற்பசுக்கள் மட்டுமே உள்ளன. அவற்றில் மிக அதிகமாக தமிழ்நாட்டில் காணப்படுகின்றன. எனவே, கடற்பசுவினையும்அவற்றின்வாழ்விடத்தையும் அழிவிலிருந்துபாதுகாக்கவேண்டியஅவசரத் தேவை உள்ளது.

கழுகுகளைப் பாதுகாக்க தமிழ்நாடு அரசின் முயற்சிகள்

❖ கழுகுகளின் எண்ணிக்கையை அதிகரிக்கச் செய்யும் நோக்கத்துடன், கழுகுகளைப் பாதுகாப்பதற்காகமாநிலஅளவிலானகுழுவை அமைத்துள்ளது.

நீலகிரி வரையாடு திட்டம்

❖ நீலகிரிவரையாடுதமிழ்நாட்டின்மாநிலவிலங்கு ஆகும்.இந்தியாவின்முதல்"நீலகிரிவரையாடு திட்டத்தை" தமிழ்நாடு அரசு நிறுவியது.



லாங்வுட் ஷோலா வனப்பகுதிக்கு "குயின்ஸ் காமன்வெல்த் கேனோபி" அங்கீகாரம்

- நீலகிரி மாவட்டம், கோத்தகிரியில் உள்ள லாங்வுட் ஷோலா வனப்பகுதிக்கு "குயின்ஸ் காமன்வெல்த் கேனோபி" அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.
- வனவிலங்குகள் மீட்பு மற்றும் மறுவாழ்வுப் பணிகளை சிறப்பாக மேற்கொள்ள களப் பணியாளர்களுக்கு பணியின் தேவைக்கேற்ப வடிவமைக்கப்பட்ட 35 சிறப்புமீட்புவாகனங்களை அரசு வழங்கியுள்ளது. வன விலங்குகளின் பாதுகாப்பிற்காக குற்றவியல் நுண்ணறிவு சேகரிப்பில் துறையின் செயல்பாடுகளை மேம்படுத்த ஐந்து மோப்ப நாய் பிரிவுகள் உருவாக்கப்பட்டுள்ளது.
- பவளப்பாறைகள் மற்றும் பிற கடல் வளங்கள் கடத்தப்படுவதைத் தடுக்க இந்தியாவின் முதல் மரைன் எலைட் படை இராமநாதபுரத்தில் செயல்படுத்தப்பட்டுள்ளது. கோவை மாவட்டம் பெத்திகுட்டையில் வனவிலங்குகளுக்கான விரிவான மீட்பு மற்றும் மறுவாழ்வு மையம் ரூ.19.50 கோடி செலவில் அமைக்கப்பட்டு வருகிறது.
- மனித–வனவிலங்கு மோதலைக் குறைக்கவும் மிகவும் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் வழங்கவும், அரசு ரூ.10 கோடியில் முதல் மூலதன நிதியை உருவாக்கியுள்ளது. 902 நபர்களுக்கு உயிரிழப்பு பெரிய மற்றும் சிறிய காயங்களுக்கு ரூ.14.43 கோடி இழப்பீடு வழங்கப்பட்டுள்ளது. உயிரிழப்பு/நிரந்தர காயங்களுக்கான இழப்பீட்டுத் தொகையை ரூ.5 இலட்சத்தில் இருந்து ரூ.10 இலட்சமாக அரசு உயர்த்தியுள்ளது.
- நபார்டு வங்கி நிதி உதவியுடன் தமிழ்நாட்டிலுள்ள தரம் குன்றிய காடுகளை மீட்டெடுப்பதற்கான திட்டத்திற்கு முதற்கட்டமாக ரூ.481.148 கோடி வழங்கப்பட்டுள்ளது,
- தேசிய அளவில் உள்ள 147 பெரிய உயிரியல் பூங்காக்களில், அறிஞர் அண்ணா உயிரியல் பூங்கா 82 சதவிகித மதிப்பீட்டுடன் முதலிடம் வகிக்கிறது.
- சென்னை, கோயம்புத்தூர், மதுரை மற்றும் இராமநாதபுரம் ஆகிய நான்கு மண்டலங்களில் தமிழ்நாடு வனம் மற்றும் வன உயிரினக் குற்றக் கட்டுப்பாட்டுத் தகவலகம் சென்னையை தலைமையிடமாகக் கொண்டு உருவாக்கப்பட்டுள்ளது.
- மதுரை மாவட்டத்திற்கு உட்பட்ட அரிட்டாபட்டி மற்றும் மீனாட்சிபுரம் ஆகிய கிராமங்களில் இருக்கும் 193.215 ஹெக்டேர் பரப்பளவுள்ள பகுதிகளை தமிழ்நாட்டின் முதல் பல்லுயிர் பாரம்பரிய தலமாக அறிவித்துள்ளது.
- செங்கல்பட்டு மாவட்டத்திலுள்ள கடம்பூர் கிராமத்தில் 137.65.0 ஹெக்டேர் பரப்பளவில் ரூ.300 கோடி மதிப்பீட்டில் தாவரவியல் பூங்கா அமைக்க நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டு விரிவான திட்ட அறிக்கை தயார் செய்ய ஒரு கோடி ரூபாய் விடுவிக்கப்பட்டுள்ளது.
- தமிழ்நாட்டில் வனப்படையினை நவீனமயமாக்கும் திட்டத்தை 2022 முதல் 2025ஆம் ஆண்டுவரை ரூ.52.83 கோடி செலவில் செயல்படுத்த அரசாணை வழங்கப்பட்டுள்ளது.



- வனத்துறையின் வீரர்கள் வனத்தீயினை கட்டுப்படுத்தும்போது உயிரிழக்க நேர்ந்தால் முதலமைச்சர் பொதுநிவாரணநிதியிலிருந்து அவர்களுக்குரூ.25இலட்சம்வழங்கஅரசாணை வழங்கப்பட்டுள்ளது.
- ஈரோடு சத்தியமங்கலம் புலிகள் காப்பகத்திற்கு புலிகளின் எண்ணிக்கை இரு மடங்காக உயர்த்தப்பட்டதற்கான சர்வதேச TX2 விருது பெறப்பட்டது.
- வன விலங்குகளுக்கான மாநில வாரியக் கூட்டத்தின்போது, ஆக்கிரமிப்பு அகற்றுதல் மற்றும் மறுசீரமைப்பு தொடர்பான கொள்கை வெளியிடப்பட்டது.
- காலநிலை மாற்றத்திற்கான "தமிழ்நாடு உயிர்ப்பன்மை பாதுகாப்பு மற்றும் பசுமையாக்குதல் திட்டம் (TBGPCCR)" எனும் புதிய திட்டத்தினை 2022–2023 முதல் 2029–2030வரையிலான8ஆண்டுகாலத்தில் ரூ.920.52 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்த அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது.
- களக்காடு முண்டந்துறைபுலிகள் காப்பகத்தில் (காக்காச்சி,அம்பாசமுத்திரம்சரகம்சிங்கம்பட்டி) உயிர்ப்பன்மை–ஆய்வகம்மற்றும்சூழல்பூங்கா ரூ.7 கோடி செலவில் ஏற்படுத்த அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது.
- தமிழ்நாட்டிலுள்ள100கிராமங்களில்,மரகதப் பூஞ்சோலைகள் என்ற பெயரில் 100 கிராமங்களில் பசுமை பூங்காக்கள் ரூ.25 கோடி மதிப்பீட்டில் உருவாக்க நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டு, 83 மரகதப் பூஞ்சோலைகள் உருவாக்க ரூ.19.77 கோடி விடுவிக்கப்பட்டுள்ளது.
- தெப்பக்காடு யானைகள் முகாமில் ஆதரவற்ற யானைக் குட்டிகளை வளர்ப்பதை அடிப்படையாகக் கொண்ட "எலி:பண்ட் விஸ்பரர்ஸ்" என்ற ஆவணப்படம், ஆவணக் குறும்படப் பிரிவின்கீழ், ஆஸ்கர் விருதை வென்றது.

தமிழ்நாடு வனத்தோட்டக் கழகம்

பழங்குடியினர் மேம்பாட்டுக்கான திட்டம்

- பத்துமுந்திரிதோட்டங்கள்மின்ஏலத்திலிருந்து விலக்கப்பட்டு, இருளர் பழங்குடியினர் சங்கத்திற்கு நேரடியாக ரூ.80.55 இலட்சம் ஒதுக்கப்பட்டது.
- மின் ஏலத்திலிருந்து15முந்திரிதோட்டங்கள் விலக்கப்பட்டு, இருளர் பழங்குடியினர் சங்கத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

பசுமை தமிழ்நாடு இயக்கம் (Green Tamil Nadu Mission)

- தமிழ்நாடு அரசு "பசுமைதமிழ்நாடுதிட்டத்தின்" கீழ்2030–2031ஆம்ஆண்டிற்குள்தமிழகத்தில் காடுகள் மற்றும் மரங்களின் பரப்பை 23.6 சதவிகிதத்திலிருந்து 33 சதவிகிதமாக அதிகரிக்க திட்டமிட்டுள்ளது.
- பசுமைதமிழ்நாடு இயக்கத்திற்குநாற்றாங்கால் வளர்ப்பு மற்றும் நாற்றுக்களை நடுதல் பணிகளுக்காக ரூ.25.90 கோடி வழங்கப்பட்டுள்ளது.

❖ ❖ ❖

ஆதிதிராவிடர் நலன், மலைவாழ் பழங்குடியினர்கள் மற்றும் கொத்தடிமைத் தொழிலாளர்கள் நலன்



திருமதி என்.கயல்விழி செல்வராஜ் அவர்கள்

மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர்

சமூக மேம்பாடு

- தன்னாட்சி அதிகாரத்துடன் செயல்படும் "தமிழ்நாடு மாநில ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல ஆணையம்" உருவாக்கப்பட்டுள்ளது.
- வன்கொடுமையால் பாதிக்கப்பட்டவர்களுக்கு வழக்கின் தன்மைக்கு ஏற்றவாறு, ரூ.85,000 முதல் ரூ.8.25 இலட்சம்வரை வழங்கப்பட்டுவந்த தீருதவித் தொகை குறைந்தபட்சமாக ஒரு இலட்சம் ரூபாயாகவும், அதிகபட்சமாக 12 இலட்சம் ரூபாயாகவும், உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது.
- குடும்பன், பள்ளன், தேவேந்திரகுலத்தான், கடையன், பண்ணாடி, காலாடி மற்றும் வாதிரியான் ஆகிய ஏழு சாதிகளையும் ஒன்றாக இணைத்து ஒரே பெயரில் "தேவேந்திரகுல வேளாளர்" என்று அழைக்க அரசாணை வெளியீடு.
- சமபந்திபோஜனம்எனும்பெயர்"சமபந்திவிருந்து"எனப்பெயர்மாற்றம்செய்யப்பட்டது.
- சாதி வேறுபாடுகளற்ற மயானங்களை பயன்பாட்டில் கொண்டிருக்கும் முன்மாதிரி சிற்றூர்களுக்கு ஊக்கத் தொகையாக, வளர்ச்சிப் பணிகளைச் செயல்படுத்த அரசு சார்பில் தலா ரூ.10 இலட்சம் வீதம் வழங்கப்படுகிறது.
- ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் கலை, இலக்கிய மேம்பாட்டுச் சங்கத்தின் மூலம்தேர்வுசெய்யப்படும்சிறந்தஎழுத்தாளர்களுக்குவழங்கப்படும்பரிசுத்தொகை ரூ.50,000 இருந்து ஒரு இலட்சம் ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது.
- "சமத்துவம் காண்போம்" என்கிற தலைப்பில் காவல் துறை, வருவாய்த்துறை அலுவலர்களுக்கும் வன்கொடுமையால் பாதிக்கப்பட்டோருக்கு விழிப்புணர்வுப் பயிற்சிகள் நடத்தப்பட்டு வருகிறது.

- அழிவின் விளிம்பில் உள்ள 6 பண்டைய பழங்குடியினரின் இனவரவியல் குறித்து ஆய்வு செய்திடவும், அவர்களது கலாச்சாரங்களை ஒலி / ஒளி ஆவணங்களாக ரூ.50 இலட்சம் செலவில் பதிவு செய்யப்பட்டுள்ளன.
- தமிழ்நாடு புதிரை வண்ணார் நல வாரியத்திற்குப் புத்துயிர் அளிக்க ரூ.10 கோடி வழங்கப்பட்டுள்ளது.
- சென்னை சமூகப் பணி கல்லூரியில் ரூ.2 கோடி மானியத்தில் சமூக நீதி மற்றும் சமத்துவ மையம் நிறுவ ஆணை.

கல்வி மேம்பாடு

- 2023 – 2024ஆம் ஆண்டு 12ஆம் வகுப்பு படித்த மாணவர்களுக்கு உயர்கல்வி வழிகாட்டுதல் நிகழ்ச்சி ஏப்ரல் மற்றும் மே மாதங்களில் நடைபெற்றது. இந்நிகழ்வில் 13,000 மாணவர்கள் கலந்துகொண்டனர். இந்நிகழ்ச்சியில் உயர்கல்வி மற்றும் கல்வி உதவித்தொகை பற்றிய விளக்க உரை, துண்டுப் பிரசுரம், கலை, அறிவியல் மற்றும் பிற தொழில்நுட்ப பிரிவுகள் பற்றி அறிவுறுத்தப்பட்டது.

பள்ளி மாணவர்களுக்கான தேர்ச்சி விகிதம் அதிகரிப்பு

- ஆதிதிராவிடர் நலப் பள்ளிகளில் 10ஆம் வகுப்பு பயின்ற மாணவர்களின் தேர்ச்சி மொத்த விழுக்காடு 85.40 ஆகும். இது சென்ற ஆண்டைக் காட்டிலும் 1.4 சதவிகிதம் அதிகரித்துள்ளது. மேலும், ஆதிதிராவிடர் நலப் பள்ளிகளில் 12ஆம் வகுப்பு பயின்ற மாணவர்களின் மொத்த தேர்ச்சி விழுக்காடு 91.15 ஆகும். இது சென்ற ஆண்டைக் காட்டிலும் 3.15 சதவிகிதம் அதிகரித்துள்ளது.
- பழங்குடியினர் நலப் பள்ளிகளில் 10ஆம் வகுப்பு பயின்ற மாணவர்களின் மொத்த தேர்ச்சி விழுக்காடு 92.45 ஆகும். இது சென்ற ஆண்டைக் காட்டிலும் 1.5 சதவிகிதம் அதிகரித்துள்ளது. மேலும், பழங்குடியினர் நலப் பள்ளிகளில் 12ஆம் வகுப்பு பயின்ற மாணவர்களின் மொத்த தேர்ச்சி விழுக்காடு 95.15 ஆகும். இது சென்ற ஆண்டைக் காட்டிலும் 0.3 சதவிகிதம் அதிகரித்துள்ளது.
- ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மாணவர்கள் உயர்கல்வியைப் பெறுவதற்கு அதிக வாய்ப்புகள் கிடைப்பதை உறுதி செய்யும் வகையில், வெளிநாட்டிற்குச் சென்று கல்வி கற்பதற்கான கல்வி உதவித் தொகைத் திட்டம் திருத்தி அமைக்கப்பட்டுள்ளது. மேலும், ஆண்டு வருமான உச்சவரம்பு ரூ.3 இலட்சத்திலிருந்து ரூ.8 இலட்சமாக உயர்த்தப்பட்டுள்ளது.
- முனைவர் பட்டப் படிப்புகளுக்கான கல்வி உதவித் தொகைத் திட்டம் வருடத்திற்கு ரூ.50,000லிருந்து ஒரு இலட்சம் ரூபாய் என்ற அளவில் உயர்த்தப்பட்டுள்ளது.
- மாநில அரசின் சிறப்பு போஸ்ட் மெட்ரிக் கல்வி உதவித் தொகை திட்டத்தின் கீழ் வழங்கப்படும் பராமரிப்புப்படி ஒன்றிய அரசு வழங்குவதற்கு இணையாக உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது.
- 150 ஆதிதிராவிடர் நலப் பள்ளிகளில் 480 புதிய வகுப்பறைகள் மற்றும் 15 அறிவியல் ஆய்வுக் கூடங்கள் அமைக்க ரூ.100 கோடி ஒதுக்கீடு.
- ரூ.21.09 கோடி மதிப்பீட்டில் 39 அரசு பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளிகளில் 65 கூடுதல் வகுப்பறைகள் மற்றும் சுற்றுச்சுவர்.
- ரூ.10.75 கோடி மதிப்பீட்டில் வேலூர் ஆதிதிராவிடர் முதுகலை கல்லூரி மாணவியர் விடுதி, விழுப்புரம் மாவட்டம், திண்டிவனம் மற்றும் சேலம் மாவட்டம், மரவனேரி ஆதிதிராவிடர் கல்லூரி மாணவர் விடுதிகளுக்கு புதிய கட்டடங்கள்.
- 13 ஆதிதிராவிடர் நல பள்ளிகளுக்கு ரூ.4 கோடி மதிப்பீட்டில் சுற்றுச் சுவர்.
- ரூ.4.50 கோடி மதிப்பீட்டில் 31 அரசு பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளிகளில் கழிப்பறைகள்.
- மதுரை, நாகப்பட்டினம், சிவகங்கை, திருச்சி, தருமபுரி, கரூர், நீலகிரி, கிருஷ்ணகிரி, இராமநாதபுரம் மற்றும் தஞ்சாவூர் ஆகிய மாவட்டங்களில் 19 புதிய விடுதிகளின் கட்டுமானப் பணிக்காக ரூ.20 கோடி ஒதுக்கீடு.
- ரூ.45.45 கோடி மதிப்பீட்டில் 10 ஆதிதிராவிடர் பள்ளி மாணாக்கர் விடுதிகளில் புதிய விடுதிக் கட்டடங்கள்.
- ரூ.28.35 கோடிச் செலவில் 5 ஆதிதிராவிட மாணாக்கர் கல்லூரி விடுதிகளுக்கு புதிய விடுதிக் கட்டடங்கள்.
- ரூ.10.58 கோடி மதிப்பீட்டில் 83 ஆதிதிராவிடர் நல மாணவியர் விடுதிகளுக்கு சுற்றுச்சுவர் .
- ரூ.9.24 கோடி மதிப்பீட்டில் 7 மாவட்டங்களில் உள்ள 88 அரசு பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளிகளுக்கு வைப்பறையுடன் கூடிய புதிய சமையலறைகள்.
- ரூ.5.70 கோடிச் செலவில் ஆதிதிராவிடர் நலப்பள்ளிகள் மற்றும் விடுதிகளுக்கு கழிவறை மற்றும் குளியலறைகள்.



- ரூ.45 கோடி மதிப்பீட்டில் எம்.சி. ராஜா விடுதி வளாகத்திற்குள் சுமார் 1,00,000 சதுர அடி பரப்பளவில் 10 தளங்களுடன் நவீன வசதிகளுடன் கூடிய மாணவர் விடுதி.
- ரூ.28 கோடி மதிப்பீட்டில் 4 ஆதிதிராவிடர் மாணாக்கர் விடுதிகளுக்கு புதிய விடுதிக் கட்டடங்கள்.
- ரூ.100 கோடி மதிப்பீட்டில் மதுரை, கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, நீலகிரியில் மாணவர்கள் பயன்பெறும் வகையில் நவீன வசதிகளுடன் நான்கு புதிய விடுதிக் கட்டடங்கள்.
- பள்ளி மாணவர் விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவ, மாணவிகளுக்குத் தற்போது மாதந்தோறும் உணவுக்காக வழங்கப்படும் தொகை ரூ.1,000லிருந்து, ரூ.1,400ஆகவும் கல்லூரி மாணவ, மாணவியருக்கு மாதம் ஒன்றுக்கு வழங்கப்படும் தொகை ரூ.1,100லிருந்து ரூ.1,500ஆகவும் உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது
- ஆதிதிராவிடர் விடுதி மாணாக்கருக்கு விழா நாட்களில் வழங்கப்பட்டு வரும் சிறப்பு உணவுக் கட்டணம் இரண்டு மடங்காக உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது.
- விடுதிகளில் பயிலும் மாணவர்களின் மாதாந்திர சில்லறைச் செலவினக் கட்டண உதவித் தொகை இரண்டு மடங்காக உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது.
- ரூ.2 கோடிச் செலவில் விருத்தாச்சலம், கள்ளக்குறிச்சி மற்றும் நாகப்பட்டினம் ஆகிய இடங்களில் மூன்று புதிய கல்லூரி மாணவியர் விடுதிகள் தொடங்கப்பட்டுள்ளன.
- ரூ.46 இலட்சம் மதிப்பீட்டில் 512 ஆதிதிராவிடர் நல விடுதிகளுக்கு மின் அரைப்பான்கள் வழங்கப்பட்டுள்ளது.
- ரூ.87 இலட்சம் மதிப்பீட்டில் 51 ஆதிதிராவிடர் நல மேல்நிலைப் பள்ளிகளில் உள்ள கணினி ஆய்வகங்களுக்கு இன்வர்ட்டர் (Inverter) வழங்கப்பட்டுள்ளது.
- ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலப்பள்ளிகளின் கல்வித் தரத்தை மேம்படுத்த ஆசிரியர்களுக்கான பயிற்சி வகுப்புகள், அறிவுத்திறன் வகுப்பு, கணினிப் பயிற்சி போன்றவை பள்ளிக் கல்வித் துறையின் வழிகாட்டுதலின்படி செயல்படுத்தப்பட்டு வருகிறது.
- ஆதிதிராவிடர் நலப் பள்ளிகள் மற்றும் பழங்குடியினர் நலப் பள்ளிகளில் ஸ்மார்ட் கிளாஸ் வகுப்பறைகளும் – அதற்கு தேவையான உட்கட்டமைப்பும் ஏற்படுத்திட அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.
- ரூ.16.26 கோடிச் செலவில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் கீழ் இயங்கும் 6 மேல்நிலைப் பள்ளிகளை மாதிரிப் பள்ளிகளாக தரம் உயர்த்திட அரசாணை.
- ரூ.7.46 கோடிச் செலவில் 305 ஆதிதிராவிடர் நலப்பள்ளிகளுக்கு தேவையான அறைகலன்கள் மற்றும் தளவாடப் பொருட்கள்.
- ரூ.50 இலட்சம் செலவில் 90 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல கல்லூரி மாணவியர் விடுதிகளில் கண்காணிப்புக் கேமராக்கள்.
- 22 விடுதிகளுக்கு ரூ.15 இலட்சம் செலவில் வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள்.
- ரூ.3.15 கோடி மதிப்பீட்டில் 126 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மேல்நிலைப் பள்ளிகளில் உள்ள அறிவியல் ஆய்வகங்களுக்கு ஆய்வு உபகரணங்கள்.
- ரூ.70 இலட்சம் மதிப்பீட்டில், புதியதாக 25 நூலகங்கள், 25 இணையவழி நூலகங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

- ஆதிதிராவிடர் நல விடுதிகளில் தொகுப்பூதியத்தில் பகுதி நேர தூய்மைப் பணியாளர்களாக குறைந்தபட்சம் மூன்று ஆண்டுகள் பணிமுடித்த 98 தூய்மைப் பணியாளர்களை முழு நேர தூய்மைப் பணியாளர்களாக மாற்றி சிறப்பு காலமுறை ஊதியம் நிருணயித்து ஆணை .
- ரூ.3,73,69,200 செலவில், சைதாப்பேட்டை எம்.சி.இராஜா கல்லூரி மாணவர் விடுதி வளாகத்திலும் மற்றும் வேப்பேரி கல்லூரி மாணவியர் விடுதி வளாகத்திலும் தலா ஒரு மையப்படுத்தப்பட்ட சமையல் கூடம் என இரண்டு மையப்படுத்தப்பட்ட சமையற்கூடங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.
- 1,331 ஆதிதிராவிடர் நல விடுதிகள் மற்றும் 160 பழங்குடியினர் நல விடுதிகளில் முறையே 1) இசை, இசை தகவல் தொழிற்நுட்பம், நாடகம், புகைப்படக்கலை மற்றும் கவின் மன்றம், 2) வாசித்தல் மற்றும் விவாதம் மன்றம், 3) சுற்றுச்சூழல் மன்றம் 4) சதுரங்கம் மற்றும் பிற விளையாட்டு மன்றம் ஆகிய நான்கு மன்றங்கள் அமைக்கப்பட்டுள்ளன.
- விடுதிகளில் ஏற்படும் சிறுபராமரிப்பு, பழுதுபார்ப்பு மற்றும் மாணாக்கரின் எதிர்பாரா மருத்துவ செலவினம் ஆகிய பணிகளை மேற்கொள்ள ரூ.7.50 கோடி நிதி ஒதுக்கீடு.
- அரசு சட்டக் கல்லூரியில் இறுதி ஆண்டு சட்டப்படிப்பு பயிலும் மாணாக்கருக்கு ரூ.10,000 உட்பயிற்சி (Internship) உதவித்தொகையாக வழங்கப்பட்டுள்ளது.
- ரூ.25 கோடி மதிப்பீட்டில், விடுதிகளில் சிறப்பு பராமரிப்புப் பணிகள் மற்றும் கண்காணிப்புக் கேமரா, பயோமெட்ரிக் வருகைப் பதிவு வசதிகள் மேற்கொள்ள ஆணை.
- ரூ.1 கோடிச் செலவில், விடுதிகளில் தங்கிக் கல்வி பயிலும் 10 மற்றும் 12ஆம் வகுப்பு மாணாக்கருக்கு சிறப்புப் பயிற்சிகள்.
- ரூ.10 கோடி மதிப்பீட்டில், கல்லூரி விடுதிகளில் நவீன வசதிகளுடன் கூடிய கற்றல் கற்பித்தல் அறை அமைக்கும் பணிகள்.

பொருளாதார மேம்பாடு

- ரூ.46.65 கோடிச் செலவில், 2,000 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின விவசாயிகளுக்கு துரித மின் இணைப்புத் திட்டத்தின் (Tatkal Scheme) கீழ் மின் இணைப்புப் பெற 90 சதவிகிதம் மானியம் வழங்கப்பட்டுள்ளது.
- 2,000 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின விவசாயிகளுக்கு நீர்ப்பாசனத்திற்கான பிவிசி குழாய்கள் (PVC Pipes) வாங்குவதற்காக தலா ரூ.15,000 வீதம் ரூ.3 கோடி மானியமாக வழங்கப்பட்டுள்ளது.
- 2,000 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின விவசாயிகளுக்கு புதிய மின்மோட்டார் வாங்க தலா ரூ.10,000 வீதம் ரூ.2 கோடி மானியமாக வழங்கப்பட்டுள்ளது.
- 7,500 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின விவசாயிகளுக்கு தோட்டக்கலை, வேளாண்காடுகள் (Agro forestry) நர்சரி செடிகள் மற்றும் வேளாண் இயந்திரங்கள் பராமரிப்பு மற்றும் பழுது நீக்கம் போன்ற பயிற்சிகள் ரூ.1.70 கோடிச் செலவில் வழங்கப்பட்டுள்ளது.
- ரூ.2 கோடிச் செலவில், 5,000 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினத்தைச் சேர்ந்த தொழில் முனைவோருக்கு தொழில் மேலாண்மை பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகிறது.
- பயிற்சி மற்றும் சான்றிதழ் பெற்ற பழங்குடியின பாரம்பரிய சமூக சுகாதார திறனாளர்களுக்கு (Traditional Tribal Healers) சுயமாக தொழில் துவங்க ரூ.50,000 வீதம் 100 நபர்களுக்கு மானியம் வழங்கப்பட்டுள்ளது.
- ரூ.50 இலட்சம் செலவில், தாட்கோ கோட்ட செயற்பொறியாளர் அலுவலகங்களுக்கு மொத்த அளவியல் கருவிகள் வழங்கப்பட்டுள்ளன.
- ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான பொருளாதார மேம்பாட்டுத் திட்டத்தின் ஆண்டு வருமான உச்ச வரம்பு ரூ.3 இலட்சமாக உயர்த்தப்பட்டுள்ளது.
- ரூ.1 கோடிச் செலவில், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் தொழில் முனைவோருக்காக தொழில்நுட்ப – பொருளாதார ஆய்வு மூலம் திட்ட அறிக்கை வங்கி ஏற்படுத்திட ஆணை.
- 10,000 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின இளநிலை மற்றும் முதுநிலைப் பட்ட மாணாக்கருக்கு வேலைவாய்ப்பு / போட்டித் தேர்வுகளை எதிர்கொள்ளத் தேவையான பயிற்சிகள் ரூ.10 கோடிச் செலவில் வழங்கிடவும், 2,000 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு ரூ.2.50 கோடிச் செலவில் மதிப்புக் கூட்டப்பட்ட தொழில் திட்டங்கள் தொடர்பான பயிற்சிகள் வழங்கவும் அரசாணை.
- ரூ.50 இலட்சம் செலவில், 500 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின கல்லூரி மாணாக்கர் மற்றும் 100 இளைஞர்களுக்கு நிதி சார்ந்த தொழில்களில் பயிற்சி.

- ரூ.10 கோடிச் செலவில், 200 நிலமற்ற ஆதிதிராவிட மற்றும் பழங்குடியின விவசாயத் தொழிலாளர்கள் நிலம் வாங்க மானியம் வழங்கப்பட்டுள்ளது.
- ரூ.7.50 கோடி மதிப்பீட்டில், 500 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு தாட்கோ பொருளாதார மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் கறவை மாடுகள் வாங்க ரூ.2.25 கோடி மானியம் வழங்கப்பட்டுள்ளது.
- ரூ.3 கோடி மதிப்பீட்டில், 100 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின தொழில் முனைவோருக்கு தமிழ்நாடு சிமெண்ட் கழகத்தின் விற்பனை முகவராக சிமெண்ட் விற்பனை நிலையம் அமைக்க ரூ.90 இலட்சம் மானியம் வழங்கப்பட்டுள்ளது.
- ரூ.1.50 கோடி மதிப்பீட்டில், 50 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினத் தொழில் முனைவோருக்கு ஆவின் பாலகம் அமைக்க ரூ.45 இலட்சம் மானியம் வழங்கப்பட்டுள்ளது.
- 40 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மகளிர் கூட்டுறவு பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கங்களை ரூ.40 இலட்சம் மதிப்பீட்டில் ஏற்படுத்திடவும், 1,000 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின விவசாயிகளுக்கு தீவனப்புல் வளர்க்க விதைத் தொகுப்பு மற்றும் புல்கறணைகள் ரூ.1 கோடிச் செலவில் வழங்கப்பட்டுள்ளது.
- ரூ.1.96 கோடி மதிப்பீட்டில், 13 மகாத்மா காந்தி தொழிலாளர்கள் ஒப்பந்தம் மற்றும் திறன் மேம்பாட்டு கூட்டுறவு சங்கங்கள் மூலம் சுகாதார அங்காடிகள் அமைக்கப்படுவதற்கு ரூ.98 இலட்சத்திற்கு மானியம் வழங்கி அரசாணை.
- மகளிரின் வாழ்வாதாரத்தை உயர்த்தவும், முன்னேற்றத்திற்கான அடிப்படை வருவாய் ஈட்டும் தொழில்களை மேற்கொள்ளவும், தற்போது தாட்கோ மூலம் வழங்கப்பட்டு வரும் ரூ.2.50 இலட்சம் மானியத் தொகை ரூ.6 இலட்சமாக உயர்த்தப்பட்டுள்ளது.
- பழங்குடியினரின் வாழ்வாதார மேம்பாட்டிற்காக வருவாய் ஈட்டும் திட்டங்கள் அரசு சாரா தொண்டு நிறுவனங்களுடன் இணைந்து ரூ.10 கோடிச் செலவில் மேற்கொள்ள ஆணை.
- மகளிர் கூட்டுறவு பால் உற்பத்தியாளர் சங்கங்களை ரூ.1.25 கோடிச் செலவில் நவீனப்படுத்திட ஆணை.
- தாட்கோ மூலம் தற்போது செயல்படுத்தப்பட்டு வரும் பல்வேறு பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்கள் ஒருங்கிணைக்கப்பட்டு முதலமைச்சரின் – ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் சமூக பொருளாதார மேம்பாட்டிற்கான தொழில் முனைவுத் திட்டம் என்ற பெயரில் திருத்தி அமைத்து செயல்படுத்தப்பட்டு வருகிறது.

உட்கட்டமைப்பு மேம்பாடு

- ரூ.19.38 கோடிச் செலவில், காஞ்சிபுரம் மாவட்டத்தில் வசிக்கும் வீடற்ற 443 இருளர் பழங்குடியினக் குடும்பங்களுக்கு வீடுகள் கட்டப்பட்டு பயனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.
- ஆதிதிராவிடர் குடியிருப்புகளில் ஆண்டுதோறும் அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்த ரூ.100 கோடி ஒதுக்கீடு.
- ரூ.24 கோடி மதிப்பீட்டில், 17 மாவட்டங்களில் உள்ள ஆதிதிராவிடர் குடியிருப்புகளில் 20 சமுதாயக் கூடங்கள்.
- 11 மாவட்டங்களில் உள்ள பழங்குடியினர் வசிக்கும் பகுதிகளில் ரூ.17 கோடிச் செலவில் அடிப்படை வசதிகளை ஏற்படுத்திட ஆணை.
- விளிம்பு நிலையில் இருக்கும் இருளர்கள் போன்ற பண்டைய பழங்குடியினருக்கு (Vulnerable Tribal Groups) மேலும், 1,094 புதிய வீடுகள் ரூ.50 கோடி மதிப்பீட்டில் கட்டித்தர அரசாணை.
- தமிழ்நாடு தூய்மைப் பணியாளர்கள் நல வாரியத்தில் பதிவு செய்துள்ள வீடற்ற 1,000 தூய்மைப் பணியாளர் உறுப்பினர்களுக்கு தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம் மூலம் கட்டப்படும். மேலும் பயனாளிகள் பங்களிப்புடன் கூடிய வீடுகள் வாங்க மானியம் வழங்கப்பட்டுள்ளது.
- திருப்பத்தூர் மற்றும் ஈரோடு மாவட்டங்களில் பழங்குடியினர் வசிக்கும் மலைப் பகுதியில் இணையதள இணைப்பு வசதி (Long Range Wireless Internet Connectivity) ஏற்படுத்திட ரூ.10 கோடி நிதி ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது.
- ஊரகப் பகுதிகள் மட்டுமல்லாது நகர்ப்புறப் பகுதிகளிலும் உள்ள ஆதிதிராவிடர் குடியிருப்புப் பகுதிகளில் உட்கட்டமைப்புகளை மேம்படுத்திட அயோத்திதாச பண்டிதர் குடியிருப்புகள் மேம்பாட்டுத் திட்டம் ஐந்தாண்டுகளில் ரூ.1,000 கோடிச் செலவில் செயல்படுத்த ஆணை.
- ரூ.1.07 கோடிச் செலவில், பணிபுரியும் மகளிருக்கான விடுதிகளை தமிழ்நாடு பணிபுரியும் மகளிருக்கான விடுதி நிறுவனம் (Tamil Nadu Working Women's Hostel Corporation) மூலம் மேம்படுத்திட ஆணை.
- ரூ.45 கோடிச் செலவில், வீடற்ற 1,500 பழங்குடியின குடும்பங்களுக்கு வீடுகள் கட்டித்தர ஆணை.

❖ ❖ ❖



தலைசிறந்த மூன்றாண்டு... தலைநிமிர்ந்த தமிழ்நாடு...

சிறப்பு வெளியீடு

ஆசிரியர் மற்றும் வெளியிடுபவர்:

மரு. இரா.வைத்திநாதன், இ.ஆ.ப.,

இயக்குநர்,

செய்தி மக்கள் தொடர்பு மற்றும்

அலுவலால் அரசு துணைச் செயலாளர்,

தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை,

தலைமைச் செயலகம்,

சென்னை – 600 009.

அச்சிட்டோர்:

தமிழரசு அச்சகம்

எண்.5, இராஜீவ் காந்தி சாலை, கானகம், தரமணி, சென்னை – 600 113.

தொலைபேசி : 044–22542224 / 22542221

மின்னஞ்சல்: ddpub.tamilarasu@tn.gov.in

இணையதளம்: www.tndipr.gov.in



தமிழரசு

செய்தி மக்கள் தொடர்புத் துறையின் வெளியீடு